நினைவு அலைகள்

1

டாக்டர் நெ.து.சுந்தரவடிவேலு

சாந்தா பதிப்பகம்

நினைவு அலைகள்

(தன் வரலாறு)

முதல் பாகம்

பத்மஸ்ரீ டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு

ஓய்வுபெற்ற தலைமைக் கல்வி ஆலோசகர், தமிழ்நாடு அரசு
முன்னாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்

சாந்தா பதிப்பகம்

13, ஸ்ரீ புரம், 2-ஆவது தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600014.
தொலைபேசி : 044 - 2811 5618, 2811 6018

முதல் பதிப்பு : டிசம்பர் 1983
இரண்டாம் பதிப்பு : 2004

உரிமைப் பதிவு ©

NINAIVU ALAIGAL

The autobiography of

Padma Shri Dr. N. D. Sundara Vadivelu, *D. Litt.*,

விலை : ரூ. 250/-

Typeset at: *Thaiyal Graphic Solutions*, Chennai - 14.

Printed at: *Sankar Printers Private Limited Chennai - 42.*

காணிக்கை

என்னைப் பெற்று, வளர்த்து, கல்வி கொடுத்து ஆளாக்கிய என் பெற்றோர்கள் திருமதி. சாரதாம்பாள், திரு. நெ. ச. துரைசாமி ஆகியோருக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

நெ. து. சுந்தரவடிவேலு

பதிப்புரை

இன்று நாம் மக்களாட்சி நடைபெறும் நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சாமானியனும் சாதனை படைக்கும் காலம் இது! சுதந்திரம் பெற்ற பின்னர் நவயுக பாரதம் எத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எந்த அடிப்படையில் நமக்கு இந்த வாழ்வு கிடைத்துள்ளது என்பதைச் சற்றே திரும்பிப் பார்த்தால், நாம் இனித் தொடரவேண்டிய பாதையும் செய்துமுடிக்கவேண்டிய சாதனைகளும் நம்முன் தோன்றலாம். இதற்கு வழிகாட்டியாக நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் பதிவுகளை உற்று நோக்கிக் கற்றறிய வேண்டும். இதற்குத் துணைபுரியும் வகையில் டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் 'நினைவு அலைகள்' என்னும் சுயசரிதை அமையும் என எண்ணி இந்நூலை மறுபதிப்பாகக் கொண்டு வரத் திட்டமிட்டோம்.

சுந்தர வடிவேலு அவர்கள், பள்ளியே இல்லாத ஒரு சிற்றூரில், விவசாயத்தைத் தொழிலாகக்கொண்ட குடும்பத்தில் பிறந்து, தந்தையாரின் வழிகாட்டுதலுடன் (சென்னைப்) பட்டினம் சென்று கல்லூரியில் கால் பதித்தார். அக்காலத்தில் கல்வியைக் கற்பதில் இருந்த சிரமங்கள் இன்றைக்கு இருப்பவர்களுக்குத் தெரியாது! தெரிய வாய்ப்பும் இல்லை. கற்றவர்கள் பெரும்பாலோர் பட்டங்களையும் பதவிகளையும் பெற்று ஆங்கில அரசுக்கு ஆலவட்டம் சுழற்றி வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்த காலம் அது! அக்காலத்தில் கல்வி கற்ற டாக்டர் நெ.து.சு. அவர்கள் தம் வாழ்க்கையை எப்படித் தொடங்கினார், தாம் வாழ்ந்த சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் எவ்வெவ்வாறெல்லாம் பணியாற்றினார் என்பதனை இந்த நூலில் தெளிவாகக் கூறியுள்ளார்.

கல்வி கற்ற காளைப் பருவத்திலேயே நெ.து.சு. அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்; அதில் காந்தியடிகளின் நெறியைப் பின்பற்றி நடக்க விருப்பம் கொண்டவர்; பிற்காலத்தில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி நடத்தி, தமிழ் சமுதாயத்திற்குச் 'சமூகநீதி'யைப் பெற்றுத்தரப் போராடிய தந்தை பெரியாரின் பாதையில் நடந்து சமுதாய விழிப்புணர்வுக்குப் பாடுபடவேண்டும் என்கிற எண்ணத்தை வளர்த்துக் கொண்டவர்.

கல்லூரிக் கல்வியை முடித்த காலத்திலேயே சமூக முன்னேற்றச் சிந்தனைகளில் ஈடுபாடுகொண்ட நெ.து.சு. 'தமிழ்நாடு' நாளிதழில் பணியாற்றத் தொடங்கி, பத்திரிகை ஆசிரியராகப் பெற்ற அனுபவம்

மிகுதி. அங்குப் பணியாற்றியபோது பணிவையும் பண்புடைமையையும் வளர்த்துக் கொண்டார். 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதை அங்கே பாடமாகக் கற்றார். 'அடங்கத் தெரிந்தவனுக்குத்தான் அடக்கத் தெரியும்' என்னும் விவேகானந்தரின் கொள்கையைப் பயின்றார். பின்னர் அரசுப் பணியைத் தேடிப் பெற்று, பஞ்சாயத்து அலுவலராகப் பணியாற்றினார். அப்போது தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களுக்கும் சென்று மக்கள் நிலையைக் கண்டார். 'நம் இனத்தை உயர்த்த வேண்டும்' என்கிற எண்ணத்தை அவரது ஆழ்மனத்தில் அழுந்தப் பதித்துக்கொள்ள இப்பணி உதவியது. பின்னர் 'பள்ளி இளந்துணை ஆய்வாளர்' பணியில் சேர்ந்தார். தமிழகத்தில் இளந் தலைமுறையினர் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தையும், ஊர்தோறும் பள்ளிகள் தேவை என்பதையும் உணர்ந்தார். இப்பணியில் இவர் பெற்ற பயிற்சியும் அனுபவமும் பிற்காலத்தில், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு இவர் கல்வி உலகில் சாதனை படைக்கத் துணைபுரிந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல், சமூக மாறுபாடுகளை எல்லாம் தம் வாழ்வோடு இணைத்து இந்த நூலில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இந்த நூல் எதிர்காலத்தில், தமிழகத்திலுள்ள மக்களுக்கு மட்டுமன்று, இந்திய நாட்டிலுள்ள இளந் தலைமுறையினருக்கு, ஏன் - உலக மக்களுக்கே சிறந்த வழிகாட்டல் நூலாக அமையும் தன்மை உடையது. இளைய சமுதாயத்தினர், குறிப்பாக ஆசிரிய சமுதாயத்தினர் இதனை ஒரே ஒருமுறை படித்தால், அவர்கள் கல்வித் துறையில் தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைத் தெளிவு புலப்படும்.

இவ்வகை எண்ணங்களால் தூண்டப் பெற்றமையால், நான் அவரோடு பழகிய நாள்களையும், கல்வித் துறையில் மட்டுமல்லாது கலை, கலாச்சாரத் துறைகளிலும் அவர் ஆற்றிய பணிகளையும் நினைவில் கொண்டு இந்நூலை மறுபதிப்பாகக் கொண்டுவர முனைந்தேன். எதிர்ப்பட்ட சிரமங்களுக்கு இடையே வெற்றி பெற்றேன்.

இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்கு உதவும் வகையில் மெய்ப்பு பார்த்து உதவிய பேராசிரியர் வி. கணபதி அவர்களுக்கும் சென்னை கிறித்துவக் கல்லூரி மேனிலைப்பள்ளியிலிருந்து ஓய்வு பெற்ற துணைத் தலைமை ஆசிரியர் பூ. ஜெயராமன் அவர்களுக்கும் இந்நூலை வெளியிடுவதற்குப் பெரிதும் துணை நின்ற நெ.து.சு. அவர்களின் குடும்பத்தினராகிய திரு. லெனின் துரைசாமி முதலானவர்களுக்கும் எம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் தொடர்ந்து அடுத்து வெளிவர இருக்கும் இரு பகுதிகளுக்கும் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்பளிக்கும் என உறுதியாக நம்புகின்றேன்.

ஆர். ராஜமோகன்

சாந்தா பதிப்பகம்

1983 - ஆம் ஆண்டு வெளியான முதற்பதிப்பிற்கு டாக்டர் நெ. து. சு. அவர்கள் எழுதிய முன்னுரை

உலகம் பழையது! இந்தியா பழம் பெரும் நாடு! தமிழகம் பழைய பகுதி. அதில் ஒரு சிற்றூர். பல நூற்றாண்டுகளாகப் பண்பட்ட அச் சிற்றூரின் பெயர் நெய்யாடு பாக்கம். நான் அவ்வூரில் பிறந்தேன். திண்ணைப் பள்ளிக் கூடமும் இல்லாத காலத்தில் வளர்ந்தேன்.

காலத்தின் எழுச்சி, என்னைக் கல்வியின்பால் செலுத்தியது. அக் காலக் குக்கிராம இளைஞர்கள், கனவு காண முடியாத உயர் மட்டத்திற்குக் கொண்டு சென்றது.

1933 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை (சிறப்பு)ப் பட்டம் (B.A. Hons) பெற்றேன். இப் பல்கலைக் கழகம் 1983 இல் என் தொண்டினைப் பாராட்டி 'இலக்கிய அறிஞர்' (D.Litt) என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்திற்று. இவை இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக! கருமமே கண்ணாயிருக்கத் தூண்டுவதாக!

சென்னை மாகாணக் கல்வித் துறையின் முதற் படியில் கால் எடுத்து வைத்தேன்; மாவட்டக் கல்வி அலுவலராக உயர்ந்தேன்; மாநகராட்சிக் கல்வி அலுவலராகப் பணி புரிந்தேன்; பொதுக்கல்வித் துணை இயக்குநரானேன். பிறகு சென்னை மாகாணப் பொதுக்கல்வி இயக்குநர், பொது நூலக இயக்குநர் மற்றும் அரசுத் தேர்வுகளின் ஆணையர் எனப் பதவி உயர்வு பெற்றேன்.

நான் துணை இயக்குநராக இருந்தபோது, இயக்குநராக இருந்த திரு. சதாசிவ ரெட்டியார், ஆப்பிரிக்காவிலுள்ள லைபீரிய நாட்டிற்கு யூனெஸ்கோ சார்பில், கல்வி இயக்குநராகப் பதவியேற்றுச் சென்றார்கள். அவர்கள் தன்னோடு, துணை இயக்குநராக வரும்படி என்னை அழைத்தார்கள். தாய் நாட்டுப் பற்று என்னை இங்கேயே நிறுத்திக் கொண்டது.

இயக்குநராக இருந்த பிறகு, தில்லியில் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தில் இணைக் கல்வி ஆலோசகராகப் பணி புரிந்தேன். அடுத்து, தமிழக அரசின் தலைமைக் கல்வி ஆலோசகர், மற்றும் கூடுதல்

செயலர், மற்றும் உயர் கல்வி, முதியோர் கல்வி, பொது நூலகங்கள் ஆகியவற்றின் இயக்குநராகத் தொண்டாற்றும் வாயப்புப் பெற்றேன்.

கல்வித் துறையின் கொடுமுடியாகக் கருதப்படும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணிபுரியும் பேறு பெற்றேன்.

என்னை, இப் பதவிகள் இலங்கை, பிரிட்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோவியத் நாடு, கிழக்கு ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஹாங்காங், மலேசியா, சிங்கப்பூர், இத்தாலி, கானா ஆகிய உலக நாடுகளைக் கண்டு வரச் செய்தன.

மனிதன் தனி ஆள் அல்ல; சமுதாயத்தின் சிறுதுளி. தனிமனித வளர்ச்சியும் தேய்வும் ஓரளவு அவன் கைகளில் உள்ளது; பெருமளவு, சமுதாயச் சூழல், காலத்தின் எழுச்சிகள்-உணர்வுகள், தொடர்பு கொள்ளும் மக்களின் தன்மை ஆகியவற்றால் முடிவு செய்யப்படு கின்றன.

'தொலைவிலிருந்து இயக்குதல்' வளர்ந்து வரும் புதிய செயல் முறையாம். ஞாயிறு அனைய காந்தியடிகளார், தந்தை பெரியார், மாமேதை லெனின் ஆகியோர் என்னை வெவ்வேறு வகையில் ஆளாக்கியுள்ளனர்.

நான் யார்? மொழியால் தமிழன்! நாட்டு வழி இந்தியன்! இன வழி மனித இனத்தவன்!

நான் நடந்து வந்த வாழ்க்கையாம் நெடுஞ்சாலையை எண்ணிப்பார்க்கிறேன். நினைவுகள், அலை அலையாக எழுகின்றன. பற்பல காட்சிகள் மின்னுகின்றன. பெற்ற எழுச்சிகள், இயைந்த வாய்ப்புகள், குறுக்கிட்ட நெருக்கடிகள், உதவி புரிந்த நல்லோர், பெற்ற சாதனைகள் ஆகியவை ஒளி விடுகின்றன. எத்தனை நல்லோர்! எவ்வளவு பாடுகள்! எவ்வளவு தியாகங்கள்!

இந் நினைவுகள், என்னைத் தன்னிலைப் படுத்துகின்றன. 'யான்', 'எனது' என்னும் செருக்கறுக்க உதவுகின்றன.

'நான், நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்! பல பெரியோர்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்! எண்ணற்ற எளியோர்க்கும் பெருமளவு கடன்பட்டிருக்கிறேன். அவர்களாலேயே நான் உயர்ந்தேன்' என்ற உணர்வு சுரக்கிறது. பழுத்த நெற்பயிரெனத் தலை வணங்குகிறேன்.

நீர்த்துளி, எப்போது பெருமை பெறுகிறது? எப்போது பெரும் பயன் விளைவிக்கிறது? கோடி கோடி நீர்த் துளிகளோடு இரண்டறக்

கலந்துவிடும்போது! குளமாகிறது, ஏரியாகிறது, கடலாகிறது, பெருங்கடலும் ஆகிறது! அந்நிலையில் பெருமையோடு பயனும் விளைவிக்கிறது!

அய்ந்து கோடி மக்களைக் கொண்ட தமிழ்ச் சமுதாயத்தில் நான் ஒரு சிறுதுளி. அதை என்றும் மறந்ததில்லை. எவரோடு பணியாற்ற வேண்டுமோ-எவரை இயக்க வேண்டுமோ-அவர்களோடு சேர்ந்து நின்று, அவர்களில ஒருவனாகவே செயல்பட்டு வந்துள்ளேன்.

தொண்டர்களில் ஒருவனமாக அவர்களுக்கு முன்னே நின்று துணிந்து வழிநடத்திச் செல்லும் வாய்ப்புகள் வந்த போதெல்லாம், செய்தற்கு அரிய செய்ய முயன்றேன். ஆதரித்தோர் எண்ணற்றோர்; உடன் வந்தார் ஏராளம்; கை கொடுத்தோர் கணக்கில் அடங்கார். அவர்கள் பல நிலையினர்; பல போக்கினர்.

என் வாழ்க்கையை நினைக்கும் போதெல்லாம், பெற்றோர், உற்றார், ஊராருக்கு அடுத்து எனக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்கள் நன்றியைப் பெறுகிறார்கள். அடுத்து, தமிழ்நாட்டு ஆசிரியப் பெரும்படை.

'தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்கு இணையில்லை' என்று இறும்பூது எய்தும் வகையில் என்னுடன் ஒத்துழைத்த நலப்பள்ளி ஆசிரியர்கள் செபஸ்டியான், முத்துசவரி முதல், பல்லாண்டுகாலம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் நண்பராக, வழிகாட்டியாக, ஞானத் தந்தையாக விளங்கிய மாஸ்டர் ராமுன்னி ஈறாகப் பல்லாயிரம், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தியாகப்படையாக அவதாரம் எடுத்து, பள்ளிப் பகல் உணவுத் திட்டத்தையும், சீருடை இயக்கத்தையும், பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தையும் செம்மையாக நடத்திக் காட்டி, வெற்றிமேல் வெற்றியைக் குவித்து, முதல் தொண்டனாம் என்னிடம் சேர்ப்பித்த தற்கு எப்படிப் போதிய அளவு நன்றிகூற இயலும்? அவர்கள் அப்படிச் செயல்பட உரிமை தந்த பள்ளி நிர்வாகிகளின் உதவியை நன்றியோடு நினைப்பதே, நெறி.

சாதி பாராமல், வருவாய் பாராமல் பள்ளியிறுதிவரை எல்லோர்க்கும் இலவசக் கல்வி அளிக்கும் அரசின் திட்டத்தை நிறைவேற்ற உதவிய, உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் நான் பட்டிருக்கிற நன்றிக் கடன் மிகப் பெரிதாகும்.

'பொதுமக்களின் உதவியோடு, ஏழை மாணவ மாணவியருக்கு மாநிலம் தழுவிய பகல் உணவுத் திட்டம், பொதுமக்களைக் கொண்டே, ஊர்ப் பள்ளிகளைச் சீரமைக்கும் பள்ளிச் சீரமைப்புத் திட்டம் ஆகியவற்றைப் புதிதாகப் புனைந்து, வெற்றிகரமாக நடத்திவந்த தற்காக' இந்திய அரசு, எனக்குப் 'பத்மஸ்ரீ' விருது அளித்ததே - அதை

உண்மையில், தமிழ் நாட்டு ஆசிரியர்களுக்காக என் கையில் அளித்ததாகவே நான் உணர்கிறேன்.

உலகப் புகழ்பெற்ற டாக்டர் ஆ. இலட்சுமணசுவாமி முதலியாரை அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியை நான் ஏற்க நேர்ந்தது. அந்நிலையில் அப் பல்கலைக் கழகப் பணியாளர்கள், எழுத்தர்கள், அலுவலர்கள், பேராசிரியர்கள், மாணாக்கர்கள் பேரவையினர், கல்வி மன்றத்தினர், ஆட்சிக் குழுவினர் ஆகிய அனைவருமே எனக்குத் துணை நின்றார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்த கல்லூரிகளின் நிர்வாகிகளும், முதல்வர்களும், பேராசிரியர்களும், மாணாக்கர்களும் கொடுத்த ஒத்துழைப்பு பெரிது. அவர்கள் அனைவருக்கும் நன்றியுடையேன்.

'முன்னர் எந்த ஆறு ஆண்டுகளிலும் சாதிக்காத அளவு சாதனைகளை நெ.து.சு. துணைவேந்தராக இருந்தபோது, சாதிக்க முடிந்தது' என்று அறிந்தோர் பாராட்டும் வகையில் என்னால் வினையாற்ற முடிந்ததற்கு அவர்களுடைய ஒத்துழைப்பும் உதவியும் காரணங்கள் ஆகும்.

சில இயக்கங்கள், பல பிரிவினர், என்னை வளர்த்துப் பயன்படும் தொண்டனாக்கியதோடு, சில பெரியவர்கள் எனக்குப் பெருந் துணையாக விளங்கினார்கள்.

முதலமைச்சர் மூதறிஞர் இராசாசி அவர்கள், நான் துணை இயக்குநராக இருந்தபோதே என்னை அடையாளம் கண்டு சுட்டிக் காட்டி, 'சுறுசுறுப்பும் சமாளிக்கும் திறமையும் நேர்மையும் உடையவர்' என்று மதிப்பிட்டார். அவ்வுதவி, ஞாலத்தின் பெரிதல்லவா? அந் நன்றியை மறக்க இயலாது.

முதலமைச்சர் காமராசர் அவர்கள், 'நெ.து.சு. இராசாசியின் நன்மதிப்பைப் பெற்றவராயிற்றே', என்று ஐயுறாமல், என்னை ஏழை பங்காளர்களில் ஒருவனாகக் கண்டுகொண்டார். என்னைப் பொதுக் கல்வி இயக்குநராக்கி, முழு உரிமை கொடுத்து ஊக்குவித்து, பெருமைக்குரியவனாக்கிவிட்டார். அவருக்கு நன்றி கூறச் சொற்களே இல்லை.

பல முக்கியமான நேரங்களில், தாமே முன்வந்து உதவிய பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நிறைய நன்றியுடையேன்.

இந்திய அரசின் கல்வி அமைச்சர் டாக்டர் சாக்ளாவின் பரிவான அழைப்பு, என்னை இந்திய அரசின், கல்வி அமைச்சகத்தில் இணைக் கல்வி ஆலோசகராகப் பணிபுரிய வைத்தது. அப் பெரியவருக்கும் கடப்பாடு உடையேன்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தில்லியிலிருந்த என்னை அழைத்து, தமிழக அரசின் தலைமைக் கல்வி ஆலோசகர் மற்றும் கூட்டுச் செயலராகவும், உயர்கல்வி, முதியோர் கல்வி, பொது நூலகங்கள் ஆகியவற்றின் இயக்குநராகவும் உயர்த்தினார். அப் பண்பாளருக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், என்னை இருமுறை, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக்கி மகிழ்ந்தார்கள். அந்நிலைக்கேற்ற உரிமையும் ஆதரவும் தாராளமாகத் தந்தார்கள். அவருக்கு என்றும் பசுமையான நன்றியுடையேன்.

முதலமைச்சர், டாக்டர், எம்.ஜி.இராமசந்திரன் அவர்கள், என்பால் தொடர்ந்து அன்பைப் பொழிந்து வருகிறார்கள். அவர் காட்டி வரும் அன்புக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

இத்தகைய பெரியவர்கள் வாயிலாக, சமுதாயம் பெரும் பொறுப்புகளையும் வாய்ப்புகளையும் உரிமைகளையும் வழங்கிற்று. அப் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் ஆகியோரின் பாராட்டைப் பெறும் நல்வாய்ப்புக் கிட்டிற்று.

'சென்னை மாகாணத்தைப் பின்பற்றி, ஊர்ப் பொதுமக்களின் உதவியைக் கொண்டு, பகல் உணவுத் திட்டத்தை, பள்ளிச் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி' பிரதமர் நேரு எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் நேர்முகக் கடிதம் எழுதினார் - இதைவிட ஒரு பெரிய, பாராட்டு ஏது? இந்தப் பாராட்டல்லவா, தமிழ் நாட்டுக் கல்வித் துறையையும் ஆசிரியர்களையும் தேனீக்கள்போல் செயல்பட வைத்தது.

'கிராம மக்களைக் கொண்டே, கிராமங்களைச் சீரமைக்கும் பணியில், காந்தி அடிகளாரும் நானும் இந் நூற்றாண்டின் முப்பதுகளில் ஈடுபட்டோம். அத்தகைய முயற்சியில் ஈடுபட்டுச் சென்னை மாநிலக் கல்வித் துறை வெற்றி பெற்றுள்ளது' என்று டாக்டர் இராசேந்திர பிரசாத், வேலூர் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் உலகறியப் போற்றினார். அதை நினைக்க, நினைக்க இனிக்கிறது!

குடியரசுத் தலைவர்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன், டாக்டர் வி.வி. கிரி ஆகியோரின் அன்பைப் பெற்றது, என் நல்வாய்ப்பாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளாக, 'இந்திய சோவியத் பண்பாட்டுக் கழகம்' என்னும் நாடு தழுவிய அமைப்பின், தமிழ் மாநிலக் குழுவிற்குத் தலைவனாக இயங்குகிறேன். இந்தியர்களுக்கும், சோவியத் மக்களுக்குமிடையில் நட்பை வளர்க்கும் பணியில், தமிழக

மக்கள் எனக்குக் கொடுக்கும் ஆதரவு பெரிது. அவர்கள் அனைவருக்கும் நன்றி.

அவ்வாதரவால் நான் நற்பணியாற்ற முடிந்தது. அது எனக்குச் 'சோவியத் நாடு நேரு விருதி'னைப் பெற்றுத்தந்தது.

என் வாழ்க்கைத் துணைவியாக விளங்கும் காந்தம்மா, என்னிலும் அதிகம் கல்வித் தகுதி பெற்றவர். எனினும், பதவிகளைத் தேடாமல், எனக்கு வாழ்க்கைத் துணைவியாக வாழ்வதையே, எல்லாமாகக் கருதுகிறார். எரிச்சல் கொண்டிருந்த என் சுற்றத்தாரை, தமது பொறுமையால், இன்சொலால், எனக்கு வேண்டியவர்களாக்கி விட்டார். எனக்கு வரும் சுமைகளைத் தாமும் தாங்குகிறார்; தொல்லைகளை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்கிறார். கருங்கக்கூறின், என் காரியம் யாவினும் கைகொடுத்து வருகிறார். என்னோடு சேர்ந்து, ஊர் ஊராக அலைந்து, பகல் உணவுத் திட்டத்தை ஊக்குவித்தார். மனையறங் காக்கும் காந்தம்மாவின் துணையே, என் வெற்றி வாழ்க்கையின் வித்தாகும்.

'பங்காளி'களாகச் செயல்படாமல், என் நிழலென இயங்கிவரும் என் தம்பியர் சிவானந்தம், நடராசன், திருநாவுக்கரசு ஆகிய மூவரும், எனக்கு இனியர்.

மிக இளம் வயதில், பொதுக்கல்வி இயக்குநரான நான், வெற்றிகரமாகச் செயல்பட, பல்லாயிரக் கணக்கான சாதாரணப் பொது மக்கள் முதல், ஆட்சிப் பொறுப்புகளில் விளங்கிய, விளங்கும் பெரியோர்கள்வரை ஆற்றிய உதவிகளை நன்றியுடன் உலகறியச் செய்வதே 'நினைவு அலைக'ளின் நோக்கமாகும். என்னைப் பற்றி மட்டும் எழுதுவதாயின், இருநூறு பக்கங்களில் முடித்திருக்கலாம். என்னுடைய காலத்து அரசியல், சமூகவியல், பொருளியல் ஆகியவற்றைக் காட்ட எழுதப்படுவதால் 'நினைவு அலைகள்' விரிந்து வளர்ந்து விட்டது.

'பிள்ளை இல்லாத' என்னுடைய மணிவிழாவினை 12-10-1972 அன்று சென்னையில் தந்தை பெரியார் எடுத்துப் பெருமைப் படுத்தினார். அது முதல் என் வரலாற்றை எழுதும்படி 'சத்ய கங்கை'யின் ஆசிரியரும் என் கெழுதகை நண்பருமான திரு. பகீரதன் நச்சரித்து வந்தார். நான் நழுவிக்கொண்டே இருந்தேன்.

'சமுதாயம் உங்களுக்கு அளித்த பட்டறிவை உங்கள் குடும்பச் சொத்தாக்கி விடலாமா? அதைச் சமுதாயத்திற்குத் திருப்பி ஒப்படைக்க வேண்டாமா?' என்று ஒரு முறை கேட்டது என்னைச் சிந்திக்க வைத்தது. 1977 சனவரியில் கும்பகோணம் நிகழ்ச்சியில் ஏற்பட்ட, 'தீ விபத்து அதிர்ச்சி' செயல்பட வைத்தது. 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் 15 முதல், 'சத்ய

கங்கை'யில் என் வரலாற்றினைத் தொடர்ந்து எழுதி வருகிறேன். என்னுடைய பல நூல்களுக்குத் தாயகம், 'சந்ய கங்கை'யாகும். அதன் ஆசிரியருக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் போதாது.

சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுவதில் தனிக்கவனம் காணும் வானதி திருநாவுக்கரசு, ஏற்கெனவே, எனது 'பேதை பேசுகிறான்' முதல் 'நினைவில் நிற்பவர்கள்' ஈறாக எட்டு நூல்களை வெளியிட்டு உதவியுள்ளார். அவர் 'நினைவு அலைகள்' என்ற இப்பெரு நூலின் முதல் பாகத்தை மிகச் சிறந்த முறையில் ஆர்வத்துடன் வெளியிட முன் வந்த உதவி மலையளவாம். அவர் தொடர்ந்து வெற்றிநடை போடும்படி மனமகிழ்ச்சியோடு உளமார வாழ்த்துகிறேன்.

தொடர் கட்டுரைகளாக வந்த 'நினைவு அலைக'ளைத் தொகுத்து, அதிகாரங்களாகப் பகுத்து, நூலாக்க உதவிய, திரு. தி.வை. மெய்கண்டார், உடன் பிறவாத் தம்பியெனத் துணை நிற்கிறார். என் குடும்பத்தார் படம் நீங்கலாக, ஏனைய படங்களில் வண்ணமலர்ச் சங்கம் வெளியிட்ட மிகப் பெரும்பாலானவற்றை அவர் திரட்டித் தந்துள்ளார். அவருக்கு என் உளமார்ந்த நன்றி.

படங்களை எனக்குக் கொடுத்துதவிய அன்பர்களுக்கு என் நன்றி.

இந் நூலை நல்ல வண்ணம் அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட் அச்சகம், கவிஞர். நா.ரா. நாச்சியப்பன் அவர்களுக்குப் பெரிதும் நன்றி.

அச்சுப்படிகளைத் திருத்தும் பணியினை உடனுக்குடன் நன்முறையில் செய்த சுசீந்திரம் வ. நீலகண்டன் அவர்கள் என் நன்றிக்குரியவர்.

அன்பர்களே, நீங்கள் பல்லாண்டுகளாக என்னை ஆதரித்து வருகிறீர்கள்.

என்னுடைய 72 ஆவது பிறந்த நாள் அன்பளிப்பாக வெளிவரும் 'நினைவு அலைகள்' உங்கள் சொத்து. இதன் தொடர்ச்சி உரிய நேரத்தில் வெளிவரும். நமது அரசியல், சமுதாய இயல் முதலியவற்றை அறிமுகம் செய்ய என் வாழ்க்கை வரலாற்று நூல் உதவுமானால் அது எனக்கு உள்ள நிறைவை வழங்கும். வழக்கம்போல் இந் நூலையும் ஆதரிப்பீர்களென்ற முழு நம்பிக்கையோடு நன்றி கூறுகிறேன்.

நெ.து. சுந்தரவடிவேலு

32, கிழக்குப் பூங்கா சாலை,
செனாய் நகர், சென்னை-600030
12-10-1983

உள்ளுறை

1.	அதிர்ச்சி அலைகள்	1
2.	நான் பிறந்த சிற்றூர்	16
3.	ஐந்து வயதில் கல்வி	29
4.	கிறித்துவ உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன்	41
5.	நெஞ்சில் பதிந்த நினைவுகள்	59
6.	கழுத்துக்கு மேலே கத்தியா?	65
7.	வெவ்வேறு சூழல்	67
8.	சாதி இழிவை உணர்ந்தேன்	74
9.	உடன் படித்த நண்பர்கள்	85
10.	வரலாறும் வளர்ச்சியும்	95
11.	திண்ணைப் பேச்சில் நீப்பிடித்தது	101
12.	ஆதிதிராவிடரின் இல்லப் பிரவேசம்	110
13.	காஞ்சி: மேலும் சில நினைவுகள்	118
14.	காஞ்சியில் காங்கிரசு மாநாடு (1925)	123
15.	அரசியலுக்குத் தடை	130
16.	படிப்பும் பயிற்சியும்	137
17.	என் கிணற்றுத் தவளை வாழ்க்கை	144
18.	புதிய முயற்சிகள்	153
19.	மனத்தைக் கவர்ந்த மாநிலக் கல்லூரி	162
20.	கல்லூரி வாழ்க்கைக்கு ஏற்பாடுகள்	172
21.	மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன்	179
22.	தமிழ் அய்யா கா.ரா. நமச்சிவாய முதலியார்	185
23.	ஆசிரியர் இலட்சுமிநாராயணன்	199
24.	கல்விச் சிந்தனைகள் முன்னும் பின்னும்	202
25.	கல்வி வளர்ச்சியின் படிகள்	209

அரசியலில் சேராதே 216
வனமலர்ச் சங்கம் 223
'பித்தன்' உதயம் 228
பித்தனின் கருத்தோட்டம் 233
பித்தனின் சமுதாயச் சிந்தனைகள் 239
பித்தனின் புதிய போக்கு 248
பித்தனின் இளைஞர்கள் 255
மறக்க முடியாத நாள்கள் 264
தாத்தாவின் மறைவு 273
முதல் சுயமரியாதை மாநாடு 280
மாநாட்டின் புரட்சிகரமான தீர்மானங்கள் 290
பொதுவாழ்க்கை 296
இந்திய விடுதலைப் போராட்டத்தில் என் பங்கு 302
குத்தூசி குருசாமி அறிமுகம் 310
பெரியாருடன் சந்திப்பு 319
ஈரோடு மாநாட்டின் முடிவுகள் 326
கோவையிலும் உதகையிலும் சில நாள்கள் 334
மேல் பட்டப் படிப்பு தொடர்ந்தது 345
தேர்தல் களத்தில்! 351
நோய்வாய்ப்பட்டேன் 357
மீண்டும் விக்டோரியா விடுதியில் 361
பேராசிரியர் கள்ளுக்காரன் 366
விடுதலைப் போரில் கலந்து கொள்வதா கூடாதா? 371
பேராசிரியர் பிராங்கோ 376
வேலையோ வேலை 384
வேலை தேடி வீண் அலைச்சல் 391
வேலை இல்லாக் கொடுமை 400
வேலையில் வகுப்புரிமை 404
தன்மான இயக்கத்தின் சாதனை 408
பொதுஉடைமையே என் குறிக்கோள் 412

56.	பத்திரிகையாளனானேன்	417
57.	அண்ணாவுடன் முதல் சந்திப்பு	425
58.	பதவி போயிற்று	429
59.	பஞ்சாயத்து அலுவலர் பதவி	432
60.	இவன் நல்ல பையன்	437
61.	உதவிப் பஞ்சாயத்து அலுவலர் ஆனேன்	442
62.	பண்புள்ள ஊராட்சித் தலைவர்கள்	447
63.	புயலுக்கு முன் அமைதி	454
64.	செய்யாத குற்றத்துக்கு விளக்கமா?	460
65.	தந்தையின் வெகுளி!	465
66.	மழையும் காய்ச்சலும்	471
67.	என் முதல் பொதுக்கூட்டச் சொற்பொழிவு	477
68.	பாரதப் புதல்வனின் புலம்பல்	482
69.	நான் செய்த தவறுகள்	489
70.	திறமைக்கும் நேர்மைக்கும் இங்கு இடமில்லை	493
71.	நீதிக்கட்சித் தலைவர் செ.தெ.நாயகம்	498
72.	தன் கையே தனக்கு உதவி	504
73.	இந்தியை எதிர்க்கவும் ஏற்கவும் தயங்கினேன்	509
74.	கட்டாய இந்தி எதிர்ப்புப் போர்	513
75.	உண்ணா நோன்பின் மதிப்பைக் காப்பாற்றினேன்	520
76.	பெரியார் சிறை புகுந்தார்	524
77.	எல். டி. பட்டம் பெற்றேன்	532
78.	எனக்கு உதவிய நல்லவர்கள்	535
79.	இரகசியம் காத்தேன்	541
80.	மாவட்டத் தலைவரின் மிரட்டல்	547
81.	நான் கொண்ட காதல்	554
82.	வேண்டப்படுபவன்	561
83.	காந்தத்தைச் சந்தித்தேன்	567
84.	இரண்டாவது உலகப் போர்	571
85.	திருவாரூர் மாநாட்டு முடிவுகள்	577

86. பெரியார் ஒப்புதல் பெற்றேன் 583
87. மாப்பிள்ளை அழைப்பு 589
88. சாதியற்ற மனிதனானேன்! 594
89. மாவட்ட அலுவலரின் உரை 602
90. பள்ளிகளின் நிலை 606
91. புயலாகப் பணிபுரிந்தேன் 614
92. நீதி எங்கே? 618
93. திடீர் மாற்றல் 623
94. தஞ்சைப் பயணம் 628
95. ஓராசிரியர் நலப்பள்ளி 633
96. ஆதிதிராவிடர்கள் அனுபவித்த கொடுமைகள் 638
97. ஆதிதிராவிடப் பள்ளியில் ஆண்டுவிழா 644
98. இல்லாத பள்ளி 648
99. நம்பிக்கைத் துரோகம் 656
100. தனிக்குடித்தனம் 661
101. என் கருத்தைப் பெரியார் ஏற்றார் 666
102. தன்னிறைவு வாழ்க்கை 673
103. காந்தம்மாவுக்கு வேலை கிடைத்தது 679
104. குஞ்சிதம் குருசாமி 685
105. முதியோர் கல்வி 692
106. எழுத்தறிவுத் திட்டம் 698
107. என் இலட்சியம் 702
108. சென்னைக்கு மாற்றல் 707
109. பேச்சாளனானேன் 714
110. பலரின் எரிச்சல் 721
111. மாவட்டக் கல்வி அலுவலருக்கான பேட்டி 726
112. என் மகிழ்ச்சிக்கு அளவேது? 730



சென்னைப் பல்கலைக் கழகம் D.Litt., பட்டம் அளித்தபோது
20-09-1983



சென்னைப் பல்கலைக் கழகம்

தந்தையார் நெ.ச. துரைசாமி



நெ.து.சு. பிறந்த வீடு

மாநிலக் கல்லூரி மாணவர்
நெ.து.சு.

பி.ஏ. (ஆனர்சு) பட்டம்
பெற்றபோது *(1933)*



சென்னை மாநிலக் கல்லூரி

மணமக்கள் :

நெ.து. சுந்தரவடிவேலு - காந்தம்மா

(15-10-1940)

குழந்தை திருவள்ளுவனோடு பெற்றோர்கள்

திருவள்ளுவன்



நெ.து. திருநாவுக்கரசு, நெ.து. சிவானந்தம்,
நெ.து.சு., நெ.து. நடராசன் சகோதரர்களுடன்
குத்தூசி குருசாமியும் உடனிருக்கிறார்

கோவிந்தன், நடராசன், நெ.து.சு., திருவள்ளுவன், கௌதமன்,
காந்தம்மா, சுப்பிரமணியம், தங்கம்மாள், வெங்கடேசம்மாள்,
மைத்துனர் புருடோத்தமன், ரஷ்யா

நெ.து.சு.வின் மாமா, மாமி
N.G. சுந்தர சேகரன் (தாய் மாமன்)
நாகரத்தினம்

மாமியின் பெற்றோர்
M.S. துரைசாமி முதலியார்
பாக்கியத்தம்மாள்

கற்பகம்மாள் [illegible]

1929 டிசம்பர் 8ல் அன்று ஈரோட்டில் நடைபெற்ற குருசாமி - குஞ்சிதம் சுயமரியாதைக் கலப்பு மணத்தின்போது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலம்

நிற்பவர்கள் :

திருவாளர்கள் ஈ.வெ. ராமசாமி, ஏ.வி. கருப்பண்ண செட்டியார், ஜே.எஸ். கண்ணப்பர், ஏ. சுப்பிரமணியம் பிள்ளை, [illegible] சாமியார், கே.வி. அழகிரிசாமி

உட்கார்ந்திருப்பவர்கள் :

திருவாளர்கள் வெங்கிடபதி முதலியார், பி.ஏ., பி.எல்., வி. முத்துரெத்தின கவுண்டர், எஸ். குருசாமி (மணமகன்)
திருமதி எஸ். குஞ்சிதம் (மணமகள்)
ஸ்ரீமதி எஸ். சகுந்தலா, வெங்கிடாசலம் பிள்ளை.

தரையில் :

திருவாளர்கள் [illegible] பாலசிங்கம், சாமி. சிதம்பரனார,
[illegible] முதலியார், ஸ்ரீமதி [illegible]த்தம்மாள்.



குருசாமி

குஞ்சிதம்

பெரியார் - நெ.து சு. உரையாடல்

காந்தம்மா · பெரியார் · நெ.து.சு.

வனமலர்ச் சங்கம்



இடமிருந்து வலம்

பின்புறம் நிற்போர் :

ரா.சி. கேசவராஜ், ஆ.கா. விவேகானந்தம், பொ.வே.தாஸ் பி.ஏ. (ஆனர்சு), இரா. சோமசுந்தரம், கு.சு. பழனிசாமி, மு. வேணுகோபால், மு.மு. ஆயணன்.

அடுத்த வரிசை :

அ. கனகசபாபதி, சங்கர சுப்பிரமணியம், ம.ப. பெரியசாமி, க. பழனியப்பன், வ.சு. ராமலிங்கம், வி. பாலசுப்பிரமணியம், சு. குருசாமி, பா.அ. மகாலிங்கம், சி. சுப்பிரமணியம், தி.அ. ராமகிருஷ்ணன்.

அமர்ந்திருப்போர் :

த.ப. சுப்பராயன், நா. சீனிவாசன், ல.கி. முத்துசாமி, ஆ. அழகிரிசாமி (தலைவர்) ச.கி. வையாபுரி, ஒ.வி. அளகேசன் க. கோதண்டராமன் பி.ஏ., பி.எல்., ரா. லட்சுமணன் பி.ஏ. (ஆனர்சு), கு.சு. பெரியசாமி.

தரையில் அமர்ந்திருப்போர் :

இரா. சுப்பிரமணியன், நெ.து. சுந்தரவடிவேலு.



பித்தன்

மலர் 1 | இதழ் 1

பித்தன்

1928 விபவ ஆண்டு கார்த்திகை
(நவம்பர் - டிசம்பர்) மாதம் வெளியான
'பித்தன் இதழின் முதல் பக்கம்



பித்தன்

ஒரு மாதப் பத்திரிகை

மானேஜர்,

பித்தன் விளம்பரம் (1929)



வனமலர்ச்சங்கம் அளித்த
வாழ்த்திதழ் (1929)

சு. கோதண்டராமன் - ருக்குமணிதேவி
தம்பதிகள்

நெ.து.சு.வின் ஆசிரியர்கள்

ரெவ்ரெண்ட் மெக்பீல்

பெலவரல் ஸ்டேதம் மாநிலக் கல்லூரி முதல்வர்

கா.ரா. நமச்சிவாய முதலியார்

S.E. அரங்கநாதம்

டாக்டர் கள்ளுக்காரன்

காந்தி அடிகள்

பெரியார்

லெனின்

நேரு

இராசேந்திர பிரசாத்

அம்பேத்கார்

வ.உ. சிதம்பரனார்



பாரதியார்

திரு.வி.க.



நீதிபதி கைலாசம்



ஓ.வி. அளகேசன்



பெ. தூரன்

சு. கோதண்டராமன்

மேயர் ராமசாமி

என். சின்னசாமி நாயுடு

சி.பி. தொரைபதி

பத்மலோசனி



சாத்தூர் சுப்பிரமணிய நாயனார்

சத்தியமூர்த்தி அய்யர்



சர்தார் வேதரத்தினம்

வரதராசுலு நாயுடு

முத்துரங்க முதலியார்

டி.கே.சி.

பி.வி. செரியன்

ம.பொ. சிவஞானம்

சி. சுப்பிரமணியம்


ராஜாஜி


காமராசர்


பக்தவத்சலம்

அண்ணா


கருணாநிதி

எம்.ஜி. இராமச்சந்திரன்


எம்.ஏ. மாணிக்கவேலர்

முத்தையா
செட்டியார்


நா. மகாலிங்கம்

சர்.பிட்டி. தியாகராயர்

டி.எம். நாயர்

பனகல் அரசர்

பி. சுப்பராயன்

ஏ.பி. பாத்ரோ

சர்.பி.டி. ராசன்

ஏ.டி. பன்னீர் செல்வம்

டபிள்யூ. பி.ஏ.
சௌந்தர பாண்டியன்

இரட்டைமலை
சீனிவாசன்

சி. நடேச
முதலியார்

எஸ். முத்தையா
முதலியார்

ஏ. இராமசாமி
முதலியார்

கைவல்ய
சாமியார்

ஜே.எஸ். கண்ணப்பர்

டி.ஏ.வி. நாதன்

செ.தெ. நாயகம்

அ.க. தங்கவேலர்

காஞ்சி
கல்யாணசுந்தரம்

மறைமலை
அடிகள்

பாரதிதாசன்

ஜி.டி. நாயுடு

இந்தி எதிர்ப்பு
வீரர் நடராசன்

பட்டுக்கோட்டை-
அழகிரிசாமி

ஸ்டாலின்
ஜெகதீசன்:

எஸ்.எஸ்.
அருணகிரி நாதர்
உண்ணாமுலை
அம்மையார்

அ. பொன்னம்பலனார்

நெடும்பலம்
சாமியப்ப
முதலியார்

சூணாம்பேடு
அருணாசல
முதலியார்

செங்கற்பட்டு
வேதாசல
முதலியார்

செங்கற்பட்டு
முத்தையா

கே. வேங்கடசாமி
நாயுடு

திருவொற்றியூர்
சண்முகம்

வா.தி. மாசிலாமணி
முதலியார்

எஸ்.வி. லிங்கம்

உமாமகேசுவரன்
பிள்ளை

என். சிவராஜ்



எம்.கே. ரெட்டி

எஸ். குமாரசாமி
பிள்ளை

சச்சிதானந்தம்
பிள்ளை

வி.கே. இராமசாமி
முதலியார்

சீரங்கம்
துரைசாமி

ஆல்பர்ட்
ஜேசுதாசன்

முத்துலிங்கா
ரெட்டியார்



முத்துமல்லா
ரெட்டியார்

முத்துலிங்க
முதலியார்

1. அதிர்ச்சி அலைகள்

1977-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள் 16ஆம் நாள் காணும் பொங்கல்.

அன்று நான் பல்லாண்டுகளாக வாழ்ந்து வரும் சென்னையில் இல்லை! பிறந்த நெய்யாடு பாக்கத்திலும் இல்லை! பின் எங்கே இருந்தேன்?

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகிய தஞ்சைத் தரணியில், தமிழ்நாட்டின் ஆக்ஸ்போர்டு என்று ஒரு காலத்தில் புகழ்பெற்று இருந்த கும்பகோணத்தில் இருந்தேன்!

ஏன்?

திரு ஏ. ஆர். இராமசாமி, அவர்களின் மணிவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் பொருட்டு!

அவர் யார்?

நண்பர் ஏ.ஆர். இராமசாமி, உழைப்பால் உயர்ந்தவர்; இனிய இயல்பினர்; பொதுநலத் தொண்டர்.

குடந்தை நகராட்சித் தலைவராக விளங்கியவர்; சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்; எல்லாக் கட்சியினரிடமும் இனிமையாகப் பழகுபவர்; தமிழ்நாட்டுக் கல்வி வளர்ச்சிக்குத் துணைநின்றவர்; நிற்பவர்.

விழா ஏற்பாடுகள் சிறப்பாக இருந்தன.

நான்கு தெருக்கள் கூடும் இடத்தில் அழகான மேடை அமைத்திருந்தார்கள். ஒரு தெருவை வண்டிகள் வருவதற்கு விட்டுவிட்டு, மற்ற மூன்று தெருக்களிலும் பந்தலமைத்து நாற்காலிகள் போட்டிருந்தார்கள். நாலாயிரம் நாற்காலிகள் நிரம்பி இருந்தன!

விழா மேடையில் காகிதப்பூ அலங்காரம் நிறைந்திருந்தது. மேடை நிகழ்ச்சிகளைப் புகைப்படம் பிடிப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, சக்திமிக்க மின் விளக்குகள் உயரத்தில் அமைத்திருந்தார்கள். அவ்விளக்குகள் காலை பத்து மணி முதல் நடுப்பகல் வரை - இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக எரிந்து நன்றாகச் சூடேறி இருந்தன.

அன்று காற்று வீசியபடியே இருந்தது. அதனால் மேடையில் தொங்கிக் கொண்டிருந்த காகிதத் தோரணங்கள் வேகமாக ஆடியபடியே இருந்தன. முற்பகல் நிகழ்ச்சி முடிய அரைமணி நேரம் இருக்கும்போது அவற்றிலொன்று சூடேறிய விளக்குக் கூட்டின்மேல்பட்டுத் தீப்பிடித்துக் கொண்டது. அந்தத் தீ முதலில் மேடைப் பந்தலைப் பிடித்து, காற்றின் கூட்டால் எல்லாப் பந்தலையும் விரைந்து பற்றிக் கொண்டது.

மக்கள் நாலாபுறமும் அஞ்சி ஓடிச் சிதறினர்.

ஒரு மணி நேரத்திற்குள் எல்லாப் பந்தல்களும் சாம்பலாயின.

எனினும் ஓர் உயிருக்கும் தீங்கோ, உடலுக்குக் காயமோ ஏற்படவில்லை.

மேடைக்கருகில் அமர்ந்திருந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட நர்சரிப் பள்ளிக் குழந்தைகளை விழாத் தொண்டர்கள் பதற்றமில்லாமல் பத்திரமாக வெளியே கொண்டுபோய் விட்டுக் காப்பாற்றினார்கள். குழந்தைகளிலும் ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை.

மேடையின் நடுவில் விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு கருப்பையா மூப்பனார் அமர்ந்திருந்தார். அவருக்கு வலப்புறம் முத்தமிழ்க்காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும், அவர்களுக்கு வலப்புறம் பூண்டி துளசி ஐயா வாண்டையாரும், அவருக்கு வலப்புறம் ஏ.ஆர். இராமசாமித் தம்பதிகளும் வீற்றிருந்தனர். திரு மூப்பனாருக்கு இடப்பக்க இருக்கையில் நான் அமர்ந்திருந்தேன். அதற்கு அடுத்துச் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் அமர்ந்திருந்தார். என்னுடைய இருக்கையில்தான் ம.பொ.சி அமர்ந்திருக்க வேண்டும். அவர் வேறு ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டு வரக் கால தாமதமாயிற்று. அதுவரை விழாத் தலைவருக்கு அடுத்த நாற்காலியைக் காலியாக வைத்திருக்க வேண்டாமென்று என்னை உட்கார வைத்தார்கள். சிலம்புச் செல்வர் வந்தபோது அவரை உட்கார வைக்க எழுந்து இடம் கொடுத்தேன். அவரோ, என்னைப் பிடித்து அழுத்திப் பழைய இடத்திலேயே உட்கார வைத்துவிட்டு எனக்கு இடப்புறம் அமர்ந்தார்.

தீப்பிடித்த காகிதத் தோரணம் அறுந்து என் காலடியில் விழுந்தது. அதைக் கண்ட அவையோர் கூச்சலிட்டனர்.

மேடையிலிருந்து அனைவரும் வெளியேறினோம்.

படிக்கட்டு வழியாக இறங்கியவர்கள் சிலர். மேடையிலிருந்த படியே குதித்தவர்கள் சிலர்.

எனினும் ஒருவருக்கும் சிறிது காயமும் ஏற்படவில்லை. அவ்வளவு பெரிய தீ விபத்தை நான் நேரில் கண்டதில்லை. எனவே, மிகப் பெரிய

பிற்பகல் இரண்டு மணி!

மஞ்சக்கொல்லை நண்பர் திரு. திருநாவுக்கரசு முதலியோர் வீட்டின் விருந்தை வயிறார உண்டு விட்டேன். முதல் நாள் இரவு இரயில் பயணத்தில் தூக்கம் கெட்டது; படுத்ததும் தூங்கி விடலாம் என்று நினைத்தேன்.

எனவே, இராமன்-இராமன் கம்பெனியின் விருந்தினர் இல்லத்திற்கு என்னைத் திரும்ப அழைத்து வந்த முதலியாரையும் கடலூர் நாராயணசாமி நாயுடுவையும் வெளியில் இருந்தபடியே விடை கொடுத்தனுப்பி விட்டேன்; மாடியேறிச் சென்றேன். ஜிப்பாவைக் கழற்றி வைத்தேன். மின் விசிறியைச் சுழல வைத்தேன். கட்டிலில் படுத்தேன்; தூங்க முயன்றேன்; கண்களை இறுக மூடிக் கொண்டேன். மனக்குரங்கு தாவிற்று; விரைந்து தாவிற்று; தொடர்ந்து தாவிற்று; என்ன பாடு படுத்திற்று!

'மேலே இருந்து அறுந்து எறியப்பட்ட காகித நெருப்பு மாலை, என் தாள் பணிந்ததே! வீழ்ந்த இடத்திலிருந்து ஒரு சென்டிமீட்டர் தள்ளி விழுந்திருந்தால்?

தரையில் புரண்டு கொண்டிருந்த என் இடுப்பு வேட்டியிலல்லவா விழுந்திருக்கும்?

காலடியில் கொழுந்து விட்டெரிந்த காகித மாலையைக் கண்டு எழுந்ததில், நொடிப்பொழுது தாமதித்திருந்தால்?

இரண்டாம் முறை பிய்த்து எறியப்பட்ட நெருப்பு மாலை, என் நாற்காலியில் வீழ்ந்ததற்குப் பதில் என் மேலல்லவா வீழ்ந்திருக்கும்?

தீ மாலை தோளில் விழுந்தால் என்ன? தாளில் விழுந்தால் என்ன? என் மீது பட்டுப் பற்றியெரிந்திருந்தால்தான் என்ன கெட்டுப் போகும்?

திரு ஏ. ஆர். இராமசாமி தமது மணிவிழாவில் கலந்து கொள்ளும்படி நேரில் அழைத்தார். அன்பிற்கு ஆட்பட்டு வந்தாய். உளமார ஊரறிய வாழ்த்தி விட்டாய். அதற்குப் பிறகு தானே தீ விபத்து. அது மட்டுமா?

உலகிலும் நீ வந்த வேலை முடிந்து விட்டதே! இன்னும் ஏன் இருக்க வேண்டும்? எவர் உன்னை எதிர்பார்த்து இருக்கிறார்கள்?'

நினைவுப் புதையல்

என் நினைவுச் சுழல் சுழன்றது!

எத்தனையோ எண்ணங்களை வெளிப்படுத்தியது.

கடந்தகால நிகழ்ச்சிகள் மின்னின. நான் உயிர் தப்பியது என் பட்டறிவைப் பலரோடும் பகிர்ந்து கொள்ளவோ என்று எண்ணத் தூண்டியது. நான் தப்பிப் பிழைத்ததற்கு நன்றிக் கடனாக என் பட்டறிவைப் பலரோடும் பகிர்ந்து கொள்வது கடமை என்ற உணர்ச்சி

மேலிட்டது. அதிர்ச்சியால் எழுந்த எண்ண அலைகளைப் பொதுச் சொத்தாகப் படைக்கிறேன்.

வீட்டிற்காக இருக்கத் தேவையில்லை. நாட்டிற்குத்தான் தேவையா? எந்தத் தொண்டு நீ இல்லாமல் சுணங்கி விடப் போகிறது?

உனக்கு உன் அனுபவம் பெரிது! ஊருக்கு எதற்கு அனுபவம்?

யாருடைய அனுபவம் ஊருக்குப் பயன்பட்டது, உன்னுடைய அனுபவம் ஊருக்குப் பயன்பட?

எந்தக் கொள்கைக்காக நீ இனியும் உயிர்வாழ வேண்டும்?

சாதி ஒழிப்பா? எழுபது ஆண்டுகள் வாழ்ந்தும் அப்பாவியாக இருக்கிறாயே! பிறப்பும் இறப்பும் அற்றதாயிற்றே சாதி.

நம் நீண்ட மரபாயிற்றே. நம் கலாச்சாரத்தின் அடிப்படையாயிற்றே. அதை ஒழித்துக் கட்டிவிடலாம் என்று இளைஞனாக இருந்தபோது மனப்பால் குடித்தாய். உனக்கு முன்னே வழிகாட்டிய தியாகிகளை நம்பி ஏமாறினாய்.

அவர்களைப் பின்பற்றி, கலப்புத் திருமணம் என்னும் நெருப்பாற்றில் குதிக்கச் சொன்னது யார்? எதிர் நீச்சல் போடச் சொன்னது யார்?

முப்பத்து மூன்றாம் ஆண்டில் இருபதாயிரம் ரூபாய்களுக்கு எத்தனை மதிப்பு! அவ்வளவு பணத்தையும் அழகிய பெண்ணையும் கொடுக்க முன்வந்தாரே உன் உறவினர் - செல்வர். என்ன குறை என்று தள்ளிவிட்டாய்? தெரிந்த பெண், நல்ல பெண். ஆயினும் வேண்டாமென்று மறுத்துவிட்டது, வாழத் தெரியாமை அல்லவா?

பருவக் கோளாறால் தவறிவிட்டால், தீட்டுக் கழித்துவிடலாம்.

வேண்டுமென்றே சாதி யொழிப்புக் கொள்கை என்னும் பொய்மான் வேட்டையாடச் சொன்னது யார்? உன் சாதியை ஒதுக்கிவிட்டு வேறு சாதிப் பெண்ணை மணந்தபிறகு-

''யானைக்கும் அடிசறுக்கும்! என்னமோ வேறு சாதியில் திருமணம் செய்து கொண்டாய்; அது பாட்டுக்கும் இருக்கட்டும். நம்ம சாதியில் உனக்குப் பிடித்தமான பெண்ணைப் பார்த்து முடித்து வைக்கிறோம். அதற்காவது ஒப்புக் கொள். இரண்டு குடும்பத்தைக் காப்பாற்றச் சொத்தா இல்லை!

''நம் உறவினர்களில் இவரைத் தெரியுமே! அவரைத் தெரியுமே! இவர்கள் மட்டுமா? இன்னும் எத்தனையோ பேர்கள், உலகத்தை ஒட்டித் தம் சாதியில் பெண்டாட்டியும், தம் விருப்பப்படி வேறு சாதியில் ஆசை நாயகியும் வைத்துக் கொண்டிருக்கிறார்களே!

''அவர்களை யார் என்ன தப்புச் சொல்கிறார்கள்! இது பழக்கமான பாதை. யாரும் குறை சொல்லாத வழி. அதனால் நடந்துவிட்டதை

விட்டுவிட வேண்டாம். இன்னொரு பெண்ணை நம்ம சாதியில் கட்டிக் கொள்ளத் தயங்கவும் வேண்டாம்'' என்று சித்தி மரணப் படுக்கையில் கிடந்தபடியே வேண்டினார்களே!

''நீ படிப்பதற்காகக் காஞ்சீபுரம் வந்து, குடித்தனம் கட்டி, உதவிய சித்தியின் நன்றியை மறந்து, மறுத்துவிட்டாயே! நன்றி காட்டுவதை விடவா பெரிது, கொள்கைப் பிடிப்பு?

தொலையட்டும். கலப்பு மணம் செய்து கொண்ட முற்போக்காளன் என்னும் வேடத்தின் மறைவிலே, உன் சாதிப் பையன்களாகப் பார்த்து உதவியிருக்கக் கூடாதா? உனக்குத்தான் தெரியவில்லை. மற்றவர்களைப் பார்த்தாவது கற்றுக் கொண்டிருக்கலாமே!

'ஆவதறிவார் அறிவுடையார்' என்பதைப் படித்தாயே! பலன் என்ன? உன்னைப் போலக் கலப்பு மணம் செய்து கொண்டவர்களில் எத்தனை பேர் நழுவுவதுதெரியாமல் நழுவி, தத்தம் சாதிகளின் காவலர்களாகி விட்டார்கள்! இரு சாதிச் செல்வாக்கையும் கொண்டு உயர்ந்து விட்டார்கள்!

எங்கோ இருந்த, முன்பின் தெரியாத, முத்தனையும் முனியனையும் தேடித் தேடி உதவி செய்தாயே!

புத்திசாலியாக இருந்திருந்தால், இருபது ஆண்டுகளுக்கு முன்பே, -

'நம் முதலியார் சாதிப் பையன்களுக்குத் தாராளமாக உதவுங்கள். துணிந்து செய்யுங்கள். நம் சாதி கைவிட்டு விடாது' என்று உன்பால் நல்லெண்ணம் உடைய, உன்னிலும் பெரிய பதவியில் இருந்த முதலியார் சொன்னபோதாவது, மெல்லத் திசை மாறியிருப்பாய்.

அடுத்தும் சிவப்பு விளக்குக் காட்டினார்களே!

வடிவேலு செய்த கெடுதி நமக்குத் தொல்லையாக வந்து விடிந்தது. அவன் ஊர் ஊராகச் சென்று, ஏழைப் பிள்ளைகளுக்குச் சோறுபோட வைத்தாலும் வைத்தான், இப்ப ஆடுமாடு மேய்க்கச் பசங்கள் கிடைக்கவில்லை.

''நம் ஊரும் அப்படியாகிவிட்டது. எங்கள் மாட்டை மேய்த்த பையனும் நின்றுவிட்டான். ஏண்டா என்றால் படிக்கப் போகிறேன் என்றான்.

''அதிலென்ன பலன்? தொடர்ந்து மாடு மேய். நாலு மரக்காலோடு மேலும் ஒரு மரக்கால் நெல் போட்டுத் தருகிறேன், என்று சொல்லிப் பார்த்தேன். முடியவே முடியாது என்றான். அந்தப் பயல்களுக்குப் புத்தி இப்ப வராது.

நம்ம பிள்ளையே நமக்குக் கொள்ளிக் கட்டையான பிறகு ஊரைக் குற்றஞ் சொல்ல என்ன வாய் இருக்கிறது?

போனது போகட்டும், இங்கேயும் அங்கேயும் நாலு பேர் இதையும் அதையும் சொல்லி, பகல் உணவுத் திட்டத்தைக் கண்டிக்கிறார்கள். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஒதுங்கிக் கொள்ளட்டும். மெல்ல மெல்ல அலுவலகத்தோடு நிற்கட்டும்.

''ஊர் சுற்றுவதை மெல்லக் குறைத்துக் கொள்ளட்டும். பகல் உணவுத் திட்டம் மேற்பார்வையில்லாத பயிர் போல, தானாகப் படுத்துவிடும்.

''அவனுக்குப் பழிபடர்வதற்குள், முன்னமே கூப்பிட்டாங்களே - பேசாமல் தில்லிக்கோ, வேறு நாட்டுக்கோ போய் விடட்டும். இங்கேயிருந்து கெட்டுப் போக வேண்டாம்.

''தூரத்துப் பச்சைக்கு மதிப்பு அதிகம். இவனும் தூர இருந்தால் ஏதோ பெரிதாக நினைத்துக் கொள்வார்கள். என்னவானாலும் நமக்குத் தொல்லையாக வரவேண்டாம். கண்டவர்களைப் படிக்க வைக்கப் பாடுபட வேண்டாம்.

''அரசு, பகல் உணவுத் திட்டத்தை நடத்தச் சொன்னால்தான் என்ன? நடத்துகிற மாதிரி நடிக்கத் தெரியாவிட்டால், பட்டினம் போய் இத்தனை படித்துப் பயன் என்ன?''

இப்படி உறவினர் தங்கவேலு முதலியார் சொன்னாரே! ஏன் கேட்கவில்லை? பிடிவாதமாக இங்கேயே இருந்து பட்டிதொட்டி யெல்லாம் சென்று 'எல்லோரும் படிப்போம். ஒன்றாகப் படிப்போம். நன்றாகப் படிப்போம்' என்று முழங்கி, தூங்குவோரைத் தட்டி எழுப்பச் சொன்னது யார்?

வயிறு இரைகிறது என்றால் சும்மா இருக்கலாமா? மேல் சாதிக்காரர்கள் இரைவதை ஏன் அலட்சியப்படுத்தினாய்? அதிலும் 'உன்சாதி'க்காரன் இரைச்சலை அலட்சியப்படுத்தியிருக்கக் கூடாதே. என்றைக்கும் அவர்கள் வைத்ததுதானே சட்டம். யார் வந்தாலும் போனாலும் முதலியார்களுக்குத்தானே செல்வாக்கு!

பல்லவன் பாராண்டாலும், சேக்கிழார் செங்கோல் செலுத்தினாலும், விஜயநகரத்தான் கொடிகட்டிப் பறந்தாலும், நவாப்பின் கைகளிலே நாடு சிக்கினாலும், பரங்கியர் ஆட்சியிலும் இவர்கள் செல்வாக்கிற்குக் குறையில்லையே!

ஏன்? காங்கிரசு ஆண்டாலும், தி.மு.க. ஆண்டாலும், வேறு யார் ஆண்டாலும் இவர்கள் வைத்ததே நீதி!

அறிவாளிக்கு ஒரு சொல்! உனக்கேன் இவர்களைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பது புரியவில்லை.

பத்தாண்டுகளுக்கு முன்புகூட உன்னை அழைத்தார்களே! தொண்டை மண்டல வேளாளர் சங்கம் என்று வைத்துக்கொண்டால் மற்ற சாதிக்காரன் பகைவரும்! சேக்கிழார் கல்விக் கழகம் என்னும்

அமைப்பின் கீழ்க் கூடுவோம். அதற்கு உடந்தையாக உள்ள பெரிய அதிகாரிகளின் பெயர்களையெல்லாம் நேரில் சொல்லி, உன்னை அழைத்தார்களே! அந்தக் கடைசி வாய்ப்பையும் இழந்துவிட்ட உன்னை என்ன சொல்லுவது? யானைகள் சும்மா இருக்குமா?

''கெட்டிக்காரனாக இருந்தால், 'சட்டி சுட்டது; கையும் விட்டது' என்று புதிய திட்டங்களை விட்டுவிட்டு, இருந்த இடத்தில் இருந்தபடியே, கல்வி வல்லுநராகத் தன்னை மட்டும் வளர்த்துக் கொண்டிருக்கலாமே.

இந்த நூலையும் அந்த நூலையும் கொண்டுவா; இதில் இதையும், அதில் அதையும் எடுத்து ஓர் அதிகாரமாக்கு' என்றால், அதை நிறைவேற்ற எத்தனை ஆசிரியர்கள் காத்துக் கிடந்தார்கள்! பிறர் உழைப்பைச் சுரண்டாதே, என்னும் வரட்டுத் தத்துவத்தால் வாய்ப்புகளை இழந்தாய்?

இப்படிப் பல அதிகாரங்களைச் சேர்த்த பிறகு, நூலாக வெளியிட்டிருந்தால், பணத்துக்குப் பணமும் குவிந்திருக்கும்; பெயரும் பெரிதாகி இருக்கும். இவற்றில் சிறிது சிந்தனை செலுத்தாமல், மேலும் பிடிவாதமாக சுழன்று சுழன்று, சீருடை வழங்க ஏற்பாடு செய்யச் சொன்னது யார்?

ஊராரை ஊக்குவித்து, பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தை ஏன் முடுக்கிவிட்டாய்?

தலைமுறை தலைமுறையாக வாழ்வு பெற்றவர்கள் வெறுக்கிறார்கள் என்பதை உணர்ந்த பிறகும்,

'எல்லோரும் வாழ்வோம், நன்றாக வாழ்வோம், ஒன்றாக வாழ்வோம்' என்று தமிழகமெங்கும் முழங்கச் செய்ததைக் காட்டிலும் முட்டாள்தனம் உண்டா?

அதிகார விலங்கை மாட்டிக் கொண்டவன் தொண்டனாக மாறுவதே பொருந்தாது. இலட்சக் கணக்கான ஆசிரியர்களையும் சமுதாய உணர்வுப் 'பேய்' பிடித்த தொண்டர்களாக்கியது எவ்வளவு பெரிய தவறு? அதற்காக உன்னைக் கழுவில் அல்லவா ஏற்றியிருக்க வேண்டும்?

காலம் இத்தனை குற்றங்களையும் மறந்தது; மன்னித்தது; துணைவேந்தராக்கியது. பிறகாவது புத்தியோடு நடந்திருக்கலாமே!

எந்தெந்தப் பெரியவர்கள் வீட்டுப் பிள்ளைகள் என்ன தேர்வு எழுதுகிறார்கள்? யாருடைய வினாத்தாள்களை எவரிடம் அனுப்பினால் பலிக்கும்படி சாடை காட்ட முடியும்? இப்படி முன்யோசனையோடு அப்படிப்பட்ட உதவிகளைச் செய்து, பெரியவர்களுக்கு நெருக்கமாகிய பிறகு, மளமள வென்று உயர்ந்த நண்பர்கள் பலரை உனக்குத் தெரியுமே!

'இன்னும் பத்து ஆண்டுகள் தப்புத் தண்டாவில் மாட்டிக் கொள்ளாமல் காலந்தள்ள வேண்டுமே' என்ற கவலையால், அச்சத்தால், முன்னர் நெறியாளனாக இருந்தபோது பிடிவாதமாக இருந்தது புரிகிறது.

அந்தியத்தில் கூடத் துணிச்சல் வரவில்லையே! காலமாற்றத்திற்கு ஏற்றாற்போல் வளைந்து கொடுக்கத் தெரியாவிட்டால் வாழ்வதெப்படி?

''நீயாக வலிந்துபோய் பெரியவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு உதவ வில்லை. போகட்டும். அந்த முட்டாள்தனத்தை மறந்து விடுவோம். தேடிவந்து கேட்ட பெரியவர்களுக்காவது உதவியிருக்கலாம். பச்சையாக உதவ வெட்கமாயிருந்தால் குறிப்புக் காட்டிவிட்டு இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று நடித்து இருக்கலாம். உன்னை நாடிவந்த அசகாய சூரர்கள், தேர்ச்சியை வாங்குவதோடு உனக்கும் ஏதாவது வாங்கிக் கொடுத்திருப்பார்களே! பணம் வேண்டாமென்றால், பதவியாவது பெற்றுக் கொடுத்திருப்பார்கள்.

பெரியவர்கள் சினந்து இருக்கிறார்கள் என்பது தெரிந்ததும் அவர்களிடம் போய்த் தணிக்கத் தயங்கினாயே! இராசாசி மண்டப விழாவில் மிரட்டினதைப் பொருட்படுத்தாதது குற்றம்.

பொறுப்பானவர்கள் தூது வந்து காதைக் கடித்தார்கள். உன்னுடன் இருந்தவர்கள் கோடு காட்டினார்கள். அப்புறமாவது ஓர் 'டாக்டர்' பட்டம் கொடுத்திருக்கக் கூடாதா?

ஒன்று என்ன? தாரளமாகவே பலருக்கு டாக்டர் பட்டம் வழங்கி, வள்ளலாகியிருக்கலாமே. பந்தியில் உனக்கும் ஒரு டாக்டர் பட்டம் வந்திருக்குமே! என்ன கருமித்தனம்! சரியாகச் சொன்னார், 'சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு கருமிப் பல்கலைக்கழகம்' என்று!

பெரியவர்கள் வீட்டுப் பிள்ளைகளைப் பார்த்து உதவவில்லை. அவர்களை மதித்துப் பட்டங்கள் வழங்கவில்லை. இத்தனையும் போதாதென்று, பெரிய இடத்துப் பரிந்துரைகளைத் தள்ளிவிட்டு, மிதி ரிக்ஷா ஓட்டிக் கொண்டிருந்த, பதவி வேண்டுமென்று கூடக் கேட்காத, ஓர் ஏழை ஆதிதிராவிடப் பட்டதாரியைத் தேடி, வேலை கொடுக்கச் சொன்னது யார்?

ஒருவரைப் பிடிக்காவிட்டால் அதை உள்ளத்தின் ஆழத்தில் மறைத்துவிட்டு, வெளியே கூடுதலாகவே, நடிப்பவர்களையே பெரியவர்கள் விரும்புகிறார்கள் என்பதை மணிவிழா வயதிலும் கற்றுக் கொள்ளாத நீ, இனி எதைக் கற்றுக் கொள்ளப் போகிறாய்? எதைச் செய்யப் போகிறாய்?

உன்னைப்போல், 'பத்தியம் இருக்க' ஆள் இல்லை என்று எண்ணி ஏமாறியது போதும்!

நம் மக்கள், மண்ணாலான சமுதாயமல்ல, ஒட்டி வாழ்வதற்கு! நாம் அனைவரும் மணற்பெருவெளி. ஒருவரோடு ஒருவர் ஒட்டமாட்டோம். நாம் யார் பேச்சையும் கேட்கப் போவதில்லை.

காந்தி பேச்சைக் கேட்டோமா? அவர் பேச்சு சூடுபிடித்துப் பொதுமக்களின் கவனம் சமுதாயக் கொடுமைகள் பக்கம் திரும்பியதும் அவரைச் சுட்டுக் கொன்று விட்டோம்.

ஏழைப் பங்காளரையாவது நாலு பேர் பின்பற்றினோமா? 'கறுப்புக் காந்தி' என்று அன்போடு அழைத்த வடநாட்டவரா, அவரைத் தோற்கடித்து இழிவுபடுத்தினார்கள்? 'பச்சைத் தமிழர்கள்' என்று வெளியே பசப்பிக் கொண்டு,

'இந்த ஏழை ஒழிந்து தொலைந்து போகட்டும். நம் செல்வப் பெருக்கிற்கே வேட்டு வைத்து விடுவார் போல் இருக்கிறதே! இனியும் இவரைப் பசுமையாக, செல்வாக்கோடு விட்டு வைக்கக் கூடாது' என்று தமிழ் முழக்கிகள் அல்லவா அவரைத் தோற்கடித்து அவமானப்படுத்தி மகிழ்ந்தார்கள்?

'சாத்திரச் சழக்கிலே கோத்திரச் சண்டையிலே சிக்கிச் சீரழிதல் அழகு அல்லவே' என்று வள்ளலார் கசிந்து உருகிப் பாடினார். கேட்பாரில்லை; 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்று நொந்து போனாரே.

'சாதி என்பது கற்பனை; அதை அழிப்பதே என் பணி' என்று அரை நூற்றாண்டுக் காலம் ஓயாமல் சுழன்று சுழன்று பேசி, மீண்டும் மீண்டும் எழுதி, பெரியார் ஈ.வெ.ரா. போராடினாரே குலைந்ததா சாதி?

களர் நிலமாகிய நம் சமுதாயத்தில் பெரியாரின் ஐம்பதாண்டு பெருமழைக்குப் பிறகும் கொண்டை கட்டியார், தொடை தட்டியார், வீரக் கொடியார், கார்காத்தார், ஆற்காட்டார், மறவர், அம்பலக்காரர், அருந்ததியர் என்று பிரிந்து பிரிந்துதானே நிற்கிறார்கள்.

ஒட்டிய தமிழ்ச் சமுதாயத்தின் முளைகளைக் காணோமே! இவர்கள் இணைந்த இந்தியர்களாக உயர்வது எப்போது?

'யாவரும் கேளிர்' என்று மெய்யாகவே நம்பி நடக்கும் மனிதர்களாக வளர்ந்து வைரம் பாய்ந்து நிற்பது என்றைக்கு?

எத்தனையோ பெரியவர்கள் முயன்று முடிக்க இயலாத ஒன்றில் தலையிட உனக்கு எத்தனை கொழுப்பு?

மாபெருந் தியாகிகளின் வாழ்நாள் தொண்டே, விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது! நீயோ சம்பளக்காரனாக இருந்தாய்! இன்றைய நிலையில், அது சாதி இழிவிலும் கொடியது.

மணப்பந்தலில் மட்டும் சிறிதுநேரம் பூணூல் அணிவது போல், எப்போதாவது ஒரிருமுறை ஏதாவது ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து

இருக்கவும் தவறிவிட்டாய். எந்தக் கட்சியிலும் எந்த நாளும் உறுப்பினராக இல்லாமல் இருந்தது சிறப்பா?

ஆட வேண்டிய ஆட்டமெல்லாம் ஆடிவிட்டு, பின்னால் 'பக்தனாக' மாறியவர்களை நாம் மகான்களாக ஏற்றுக் கொள்ளவில்லையா?

வேலையை விட்டவுடனாகிலும் ஏதாவது ஒரு கட்சியில் ஏன் சேரவில்லை? ஒரு முறைக்கு மூன்றுமுறை தெளிவாகவே, உன் அன்பர் உலகன் ஆலோசனை கூறினாரே!

மறைந்தவரைப் புகழ்ந்தால் இருப்பவர்கள் பொறுப்பார்களா? மறைந்துவிட்ட பிறகு அறிஞர் அண்ணாவைப் போற்றியதால், பெரிய இடங்களில் பொங்கிய சினத்தை நீ அறிவாயே!

ஏழைபங்காளர் காமராசர் மறைந்த பிறகு அவரைப் பற்றி நூல் எழுதலாமா? அவரைத் 'தலைவருள் மாணிக்கம்' என்று அழைக்கலாமா? அப்புறம் குட்டித் தலைவர்கள் உன்னிடம் நேசம் காட்டுவார்களா?

சென்றதினி மீளாது! புதிதாக வாழ்வதற்கு நீ இளைஞன் அல்லனே! உன்னால் ஆன சிறியவை செய்து விட்டாய். அணில் வேலை முடிந்தது. அடுத்து வெளியேறுவதே நல்லது. சோற்றுக்குச் செலவாக, பாரதத் தாய்க்குச் சுமையாக இருப்பதால் ஆவதென்ன?

இன்று காலை நடந்த விழாத் தீயில் சிக்கி மறைந்திருந்தால் சிலருடைய சினமாகிலும் வேறுபக்கம் திரும்பியிருக்கும். யார் யாரோ உன்னைத் தமக்குப் போட்டியென்று எண்ணித் தூக்கத்தை இழப்பது நின்றிருக்கும்.

இந்தத் தினைத்துணை உதவியும் செய்வதற்கும் வாய்ப்பு தவறிவிட்டதே. சல்லி பெறாத இவ்வேடிக்கை வாழ்க்கை இன்னும் எத்துணை நாளைக்கு!

என் குரங்குமனம் இப்படியெல்லாம் என்னைத் தூக்கி எறிந்து கொண்டிருந்தது. நல்ல வேளையாக,

ஐயா, என்ன பலகாரம் வாங்கிவர? அய்யர், வேண்டியதை வாங்கித் தரச் சொல்லியிருக்கிறார்'' என்று திருவாளர் காசிராமன் அவர்களின் பெட்ரோல் கிடங்கில் வேலை செய்யும் இளைஞர் அன்புடன் இடைமறித்தார்.

''வெறும் காப்பி மட்டும் போதும் தம்பி! நான் மாலையில் எதுவும் உண்பதில்லை'' என்றேன்.

''அய்யர் சொல்லியிருக்கிறார். காப்பியோடு கொஞ்சமாக ஏதாவது பலகாரமும் வாங்கி வருகிறேன்'' என்று குழைந்தார் இளைஞர்.

வழக்கம் போல் அடம்பிடித்தேன். காப்பி மட்டும் கொண்டுவரும்படி கூறி இளைஞரை அனுப்பினேன். படுக்கையில் புரண்டேன். மனக்குரங்கு மீண்டும் தாவிற்கு, அதிர்ச்சி சும்மா விடுமா?

இப்போது மட்டுமா தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று?

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பும் யாரோ செய்யாமற் செய்த உதவியால் நீ உயிர் பிழைத்தாய்!

அரியலூரில் கவிழ்ந்த விரைவு இரயிலில் அல்லவா முதலில் இடம் பிடித்திருந்தாய்? அவ்வண்டியில் போயிருந்தால் அன்றே முடிந்திருக்கும் உன் கதை. ஒரே மகன், அருமைச் செல்வன், இரக்கத்தின் திருவுருவம் ஆகிய திருவள்ளுவனை இழந்து அனாதையாகத் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. அரியலூரில் நொடியில் மறைந்திருப்பாய்.

ஆளுநர் ஸ்ரீபிரகாசாவிற்குச் சென்னை மாநகரப் பெருமக்கள் பிரிவுபசார விழாவிற்கு ஏற்பாடு செய்தார்கள். அதிற் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, திருநெல்வேலி மாவட்ட நிகழ்ச்சிகளை மூன்று நான்கு நாள்கள் முன்னதாக நகர்த்தினாய்.

முன்னர் திட்டமிட்ட இரயிலில் சென்று கவிழாமல், வேறு இரயிலில் சென்று, உயிரோடு திரும்பிவிட்டாய். இதிலே உன் திறமை எங்கே இருந்தது? ஏதோ ஒரு 'சாக்கு' உன்னைக் காப்பாற்றியது. அதனால்,

உன் தந்தையை இழந்து தவிக்கையில், 'மூத்த மகனானாலும் வேறு சாதியில் திருமணம் செய்து கொண்டவன் எரியூட்டக்கூடாது' என்று மூத்த உறவினர் தடுத்ததற்கு எதிர்க்குரல் எழுப்பாமல் அக்கொடுமையைப் பொறுத்துக் கொள்ளும் அவல அனுபவம் உன்னை அணைத்துக் கொண்டது.

''பொதுக்கல்வி இயக்குநரான பிறகு வந்த ஆபத்து இருக்கட்டும். வாழ்க்கையின் தொடக்கத்தில் மலைபோல் வந்த ஆபத்து பனிபோல் போனதும் நினைவிலிருக்கட்டும்.

பொன்னேரியில் கல்வித்துறையின் சிறு தொண்டனாக - கீழ்நிலைப் பள்ளித் துணை ஆய்வாளனாக - இருந்தபோது, உன் திறமையாலா ஆரணியாற்று வெள்ளத்தில் ஆற்றோடு போகாமல் உயிர் பிழைத்தாய்?

முன்னே இருந்த ஆய்வாளர், இரண்டு மூன்று மாதங்களாகத் தணிக்கை செய்யாமல் பாக்கிவிட்ட பள்ளிகளையும் ஒரே திங்களில் தணிக்கை செய்துவிட வேண்டுமென்ற வெறியில், அனுப்பம்பட்டு தொடக்கப் பள்ளியிலிருந்து மாலை ஐந்துமணிக்குக் காட்டூரை நோக்கி நடந்தது மறந்து போயிற்றா?

கொட்டும் மழையில் ஆரணியாற்றைக் கடக்கும்போது, இடுப்பளவு வெள்ளத்தில் நடக்கும்போது, சட்டென்று பள்ளத்தில் விழவும் கழுத்தளவு தண்ணீரின் ஓட்டத்தைச் சமாளிக்க முடியாமல்

திண்டாடினாயே! உன்னோடு வந்த கடைநிலை ஊழியர் - இருளர் - கையைப்பிடித்துக் காப்பாற்றிக் கரைசேர்த்ததால் அல்லவா இன்றும் உயிரோடு இருக்கிறாய்?

உயிருக்கு ஆபத்து வந்த மூன்று முறையும் உன் சிந்தனையில்லா மலே, உன் முயற்சியில்லாமலே, நீ காப்பாற்றப் பட்டிருக்கிறாய்.

'முன்னர் நமது இச்சையினாற் பிறந்தோம் இல்லை! முதல் இறுதி இடை நமது வசத்தல் இல்லை' என்பதை இப்போதாவது ஏற்றுக்கொள் என்று என் எண்ணம் மின்னும் வேளை, சிவபூசையில் கரடி புகுந்தாற்போல்,

''ஆறிப் போகும் முன் சாப்பிட்டு விடுங்கள் ஐயா'' என்று சொல்லிக் கொண்டே காப்பியை வைத்தார் இளைஞர்.

ஒரே மூச்சில் குடித்து முடித்தேன். சிந்தனையைத் தட்டிவிட விரும்பவில்லை. எனவே, கையில் கொண்டுவந்த 'புல்வெளியில் குடிசை' என்னும் இரஷ்ஷிய நாவலின் ஆங்கில ஆக்கத்தைப் படிப்பதில் மூழ்கினேன். காலஞ்சென்றது தெரியவில்லை.

நன்றி மறவாத காசிராமன்

''உங்களைத் தனியாக விட்டுவிடும்படி ஆகிவிட்டதே என்று வருந்துகிறேன்; மன்னித்துக் கொள்ளுங்கள். காபி, பலகாரம் சாப்பிட்டீர்களா?'' என்று கேட்டபடியே, திருவாளர் காசிராமன் உள்ளே வந்தார்.

திரு. காசிராமன், 'ராமன் - ராமன்' நிறுவனத்தின் அதிபர்; கும்பகோணம் நகராட்சியின் முன்னாள் தலைவர்; முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்; காங்கிரஸ் இயக்கத்தின் பெரும்புள்ளிகளில் ஒருவர். அவரோடு நான் நெருக்கமாயிருந்ததில்லை. அவரை அடிக்கடி பார்த்ததுமில்லை.

நான் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியில் இருந்து விலகிய சில மாதங்களுக்குப் பிறகு, கும்பகோணத்தில், ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு எழும்பூரில் இரயில் ஏறினேன். பெட்டிக்குள் என் அறையில் காலடி எடுத்துவைத்தேன். அந்நொடி,

''ஐயா, நான்தான் காசிராமன்; என்னைத் தங்களுக்கு நெருக்கமாகப் பரிச்சயம் இல்லை. காலஞ்சென்ற என் தந்தை தங்களுக்கு வேண்டியவராம். அவரே சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

''தங்களைப் பற்றி எப்போதுமே பெருமையாகப் பேசுவார். தங்கள் உதவியால்தான் கும்பகோணம் சரசுவதி பெண்கள் உயர்நிலைப் பள்ளி வந்ததாம். ஐயா எவ்வளவு தூரம் பயணம்?'' என்று மிகுந்த பணிவோடும் கனிவோடும் விசாரித்தார்.

கும்பகோணம் போவதாகச் சொன்னேன். கலந்துகொள்ள இருக்கும் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டேன். தாமும் அதில் பங்குகொள்வதாகக் கூறினார்.

பயணத்தின்போது, எவ்வித அழுத்தலும் இல்லாமல் கலகலப்பாகப் பேசிக் கொண்டு வந்தார்.

இரயில் மாயூரத்தில் நின்றது. ''அதிகாலை, எழுந்து, கதவைத் திறந்ததில் உங்கள் தூக்கம் கலைந்ததோ என்னவோ! பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே கீழே இறங்கினார்.

'விடியுமுன்பே விழித்து எழுந்து, காலைக் கடன்களை முடித்து விட்டுக் குளித்த பிறகு, ஜபம் செய்து முடித்துக் கொண்டு அன்றைய வேலைக்கு ஆயத்தமாகிவிட்டாரோ?' என்று எண்ணியபோது, நாணம் என்னைக் கௌவிக் கொண்டது.

கைவல்ய சாமியார் அறிவுரை

இந்து சமய அறிவில் ஆழ்ந்த புலமையும், சிந்தனையில் பகுத்தறிவும், சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலம்முதல் அதன் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவருமாக விளங்கிய 'கைவல்ய சாமியார்' என்னும் பட்டறிவாளரை 1942 ஆம் ஆண்டே காணும் வாய்ப்புக் கிட்டியது.

கோவையில் விஞ்ஞான மேதையாக - பொறியியல் சித்தராக விளங்கிய அற்புத மனிதராம் திரு. ஜி.டி. நாயுடு, சர். ஏ. இராமசுவாமி முதலியோருக்குத் தேனீர் விருந்தளித்தார்.

நான் அப்பொழுது, கோவையில் பயிற்சி பெறும் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்தேன். எனக்கும் அழைப்பு வந்தது.

நெடுநாள் 'திராவிடன்' என்ற நாளிதழின் ஆசிரியராக அரும்பணியாற்றிவிட்டு அப்போது, ஜி.டி. நாயுடுவோடு தங்கி இருந்த திரு. ஜனகசங்கர கண்ணப்பர் என்னை அழைத்துக் கொண்டுபோய், கைவல்ய சாமியாரிடம் அறிமுகப்படுத்தினார்.

''திரு சா. குருசாமியின் சகலர்; இந்த மாவட்டக் கல்வி அதிகாரி'' என்று அறிமுகப்படுத்தினார்.

சாமியார் என்னை முகமலர்ந்து வரவேற்றார். அவர் உரிமையோடு எனக்குக் கூறிய அறிவுரையை உங்களோடு பங்கிட்டுக் கொள்ளுகிறேன்.

''இ[illegible] ஆண்டுகளாக, கோழி கூவுதற்கு முன்பே எழுந்து, குளித்து, பொழுது விடியும்போதே, வேலை பார்க்க ஆயத்தமாகிவிடும் [illegible] நாட்களில், நீ வேலை செய்து தாக்குப் பிடிக்க வேண்டும். இதை நினைவில் வைத்துக்கொண்டு சுறுசுறுப்பாக உழை'' என்று [illegible] கூறினார்.

முன்னேறத் துடிக்கும் எல்லாச் சமுதாயத்திற்கும் பொருத்தமான நல்வழியல்லவா அது?

'வைகறைத் துயில் எழு' என்பதை வெறும் பழமொழியாகக் கொள்ளக் கூடாது; வாழ்க்கை நெறியாகவே கொள்ள வேண்டும்.

இதைச் சுயமரியாதை இயக்கச் சாமியார், நினைவுபடுத்தினார்.

அது, திருவாளர் காசிராமனின் ஆயத்தத்தைக் கண்டபோது, என்னுடைய நெஞ்சில் உறுத்திற்று.

மாயூரம் சந்திப்பில் கீழே இறங்கிப் போன திரு. காசிராமன் காப்பியோடு வந்தார். எனக்குக் கொடுத்தார். அப்புறமே நான் ஆயத்தமானேன்.

கும்பகோணம் வந்தடைந்தேன். இரயில் நிலையத்தை நெருங்கும்போது, ''யார் தங்களை அழைத்துப் போக வருவார்?'' என்று நண்பர் கேட்டார்.

''இறங்கிய பிறகே தெரியும்.''

''பரவாயில்லை; நான் தங்களோடு காத்திருக்கிறேன். அழைத்துப் போக வேண்டியவர்கள் வந்தால் சரி, இல்லாவிட்டால், நானே அழைத்துக் கொண்டு போகிறேன். எங்கள் விருந்தினர் இல்லத்தில் தங்கலாம். அப்புறம் நான் உரியவர்களுக்குத் தகவல் கொடுக்கிறேன்'' என்று திட்டம் தீட்டினார்

இரயில் நின்றதும் போர்ட்டரை அழைத்தார். என் பெட்டி படுக்கையைக் கொடுத்தார். அப்புறம் தம்முடையவற்றைக் கொடுத்தார். இறங்கி, என்னோடு நின்று கொண்டிருந்தார்.

என்னை வரவேற்க வந்த நண்பர்கள் மற்றோர் கோடியிலிருந்து இரண்டு மூன்று நிமிடங்களில் வந்து சேர்ந்தனர். அப்போதும் அவர்களிடம் என்னை ஒப்படைக்கவில்லை. எல்லோருமாக வெளியே சென்றோம்.

எனக்காக இந்திய சோவியத் கலாச்சாரக் கழகப் புரவலர் திரு. அப்துல் ரசாக் அவர்களுடைய பெரிய கார் காத்திருப்பதைத் தெரிந்து கொண்டார்.

என்னை அதில் ஏற்றி அனுப்பிய பிறகே திரு. காசிராமன் தம் கார் ஏறி வீட்டுக்குச் சென்றார்.

அன்று மாலை நடந்த பாசிச எதிர்ப்புக் கூட்டத்தில் திரு. காசிராமன் பேசினார். கடைசியாக நான் பேசினேன். என் பேச்சைப் பொறுமையாகக் கேட்டார். என்னை வழியனுப்பி வைத்த பிறகே வீட்டிற்குப் போனார்.

''சாதாரணமாக, தாம் பேசி முடிந்ததும் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் காசிராமன் போய்விடுவார். உங்கள் பேச்சைக் கேட்க வேண்டுமென்பதற்காக இன்று காத்திருந்தார்.

''என்.டி.எஸ். பேசியது நன்றாயிருந்தது என்று எங்களிடம் பாராட்டினார்'' என்பதாக என்னுடன் காரில் வந்த உள்ளூர்த் தோழர்கள் கூறினார்கள்.

உழைப்பால் உயர்ந்த ஏ. ஆர். ஆர்.

சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, தொடக்கத்தில் இதையும் அதையும் தொடங்கி விட்டுவிட்டு, பிறகு ஏ.ஆர்.ஆர். சீவல் தொழிலை நிறுவி, அதை இயந்திர மயமாக்கி, வெற்றி பெற்றவர் திரு. ஏ.ஆர். இராமசாமி.

உழைப்பால் உயர்ந்த அவர், பழகுதற்கு இனியவர். அகந்தை அற்றவர். செல்லும் வழியெல்லாம் உதவி செய்பவர். நல்ல பொதுத் தொண்டர். காழ்ப்புணர்ச்சி இல்லாதவர். பல கட்சியினரிடமும் மதிப்பைப் பெற்றவர். கும்பகோணம் மாநகராட்சியின் தலைவராக விளங்கியவர்; ஐந்தாண்டுகள் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தொண்டாற்றியவர்.

தமிழ் நாட்டில் நிகழ்ந்த அற்புதங்களாகிய பள்ளிக்கூடப் பகல் உணவுத் திட்டம், இலவசச் சீருடை வழங்கல், பள்ளிச் சீரமைப்பு ஆகியவற்றில் ஆதரவாக நின்றவர். கும்பகோணத்தில் அரசினர் பெண்கள் கல்லூரி அமைவதற்குத் துணைபுரிந்தவர்.

அப்போது,அப்போது செய்த அறங்களோடு நிற்காமல், நான்கு ஆண்டுகளுக்குமுன் அறக்கட்டளை ஒன்றை நிறுவியவர். அதன் வழி நர்சரிப் பள்ளி ஒன்றைத் தொடங்கி நன்முறையில் நடத்தி வருபவர்.

'அறத்தான் வருவதே இன்பம்' என்பதை உணர்ந்து வாழ்ந்து வரும் திருவாளர் ஏ.ஆர். இராமசாமிக்கு 11-1-77 அன்று மணிவிழா.

கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டினை நினைவுகூர்ந்து அவருக்கு நன்றியும் வாழ்த்தும் கூறுவது கடமை என்று கருதினேன்.

எனவே, அவரது அன்பு நிறைந்த அழைப்பை ஏற்று அவருடைய மணிவிழாவில் பங்குகொண்டேன்.

அப்போதுதான், என்னையே குறிவைத்து எய்ததுபோல் பற்றி எரியும் காகிதப் பூமாலைகள் இரண்டுமுறை என்மேல் பாய்ந்தன.

திருவாளர் ஏ. ஆர். இராமசாமியின் மணிவிழாவிற்குச் சென்றபோது, திருவாளர்கள் மஞ்சக்கொல்லை திருநாவுக்கரசு முதலியார், கடலூர் நாராயணசாமி நாயுடு ஆகியோருடன் திரு. காசிராமனும் புகைவண்டி நிலையத்திற்கு வந்து என்னை அன்போடு உபசரித்து அழைத்துக் கொண்டு போனார்.

தம் விருந்தினர் இல்லத்தில் என்னை அன்போடு கவனித்துக் கொண்ட திரு. காசிராமன், மாலைப் பொழுது அங்கே வந்தார்.

நெடுநேரம் துணையிருந்து, உரையாடி, ஏக்கம் பிறக்காதபடி பார்த்துக் கொண்டார்.

இரவு இரயில் நிலையத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். நான் புறப்படும்வரை - இரவு பதினோரு மணிவரை - காத்திருந்து வழியனுப்பி வைத்தார். அவர் பண்பு என் உள்ளத்தை உருக்கியது. பொது நன்மையின் பொருட்டுத் தன் தந்தைக்கு நான் ஆற்றிய உதவியை - பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அனுமதித்ததை - நினைத்து, எத்தனை பரிவோடு நடந்து கொண்டார், திருவாளர் காசிராமன்.

பலமுறை நன்மை பெற்றிருந்தும், வெற்றாளான பிறகு, கண்டும் காணாமற் போகும் பலருக்கிடையில், திரு. காசிராமன் போன்றவர் களோடு பழகுவது புண்ணினை ஆற்றுகிறது.

'உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து'

என்னும் திருக்குறளின் முழுப்பொருளை உணரத்தான் மூன்று முறை உயிர் தப்பினேன் போலும் என்று நினைத்தவாறு இரயில் வண்டியில் படுத்தேன்.

நான் நாட்டுப்புறத்தில் பிறந்து, இயற்கையின் மடியில் ஓடி ஆடி வளர்ந்தது முதல், என் கதை நினைவில் ஓடி விரியத் தலைப்பட்டது.

2. நான் பிறந்த சிற்றூர்

நான் பிறந்தபொழுது, எவருக்கும் வேண்டாதவன் அல்லன். அப்போது ஊராரும் சுற்றத்தாரும் மிக மகிழ்ந்ததாகவே கேள்வி.

'இன்னும் பிள்ளை இல்லையே' என்று ஏங்கிப் புனிதபுரிகளைச் சுற்றிவரும்படி, என் பெற்றோர்களுக்குத் தொல்லை கொடுக்கு மளவிற்குத் தாமதிக்கவில்லை.

'இவ்வளவு விரைவில் பிள்ளையா?' என்று பேசும்படியும் பிறக்கவில்லை. இயற்கையாகவே காலா காலத்தில் பிறந்தேன். தாய்க்கு ஆபத்து விளைவிக்காமலேயே பிறந்தேன்.

எந்த மருத்துவ மனையில் பிறந்தேன்? பிறந்தது மருத்துவ மனையில் அல்ல. மருத்துவ மனைகளை அறியாத காலத்தில் பிறந்தேன். வீட்டிலே பிள்ளைப்பேறு.

நாட்டுப்புறப் பழக்க உரிமை மட்டும் பெற்ற, எந்தப் படிப்பும் அறியாத, மருத்துவச்சியே என் தொப்பூழ் கொடியை அறுத்தார். என் தம்பிகள் நால்வரும் அப்படியே தொல்லை தராமல் பிறந்தார்கள்.

வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் சின்னஞ்சிறு வயது முதல் வீட்டு வேலைகளில் பங்கு கொண்டவர், என் தாயார். அந்தக்

காலத்தில் பரவலான பழக்கம் அது. அத்தகைய உடல் உழைப்பில் பழகியவர்களுக்குப் பிள்ளைப்பேறு எளிதாகும்.

நான் பிறந்த ஊர் எது? நெய்யாடுபாக்கம் என்னும் ஊர். செய்யாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊர். காஞ்சிக்குத் தென்கிழக்கே, எட்டுக் கல் தொலைவில் உள்ள ஊர். வாலாஜாபாத் என்றழைக்கப்படும் சிவபுரத்தின் நேர் தெற்கே, நான்கு கல் தொலைவில் இருக்கும் சின்னஞ்சிறிய ஊர்.

என் ஊர் பழமையான சிற்றூராம். சோழன் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்படும் பெருமை பெற்றிருக்கிறதாம்.

ஊரின் கீழ்க்கோடியில் உள்ள சிவன் கோயில் சோழர் காலக் கோயில் என்பது அறிஞர் கருத்து. என் ஊருக்கு ஒரு முறை வருகை புரிந்த திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் அவர்கள் கூற்றும் அப்படியே.

''தங்கள் ஊரின் பெயர் நெய்யாடு பாக்கம். நெய்யாடி வாக்கம் என்பதே சரியான பெயர். இனி அப்படியே குறிப்பிடுங்கள்'' என்று டாக்டர் இராசமாணிக்கனார் எனக்கு எழுதியிருந்தார்.

உழைக்கப் பிறந்த டாக்டர் இராசமாணிக்கனார், முறையாகத் தமிழைக் கற்று, புலவராகி, உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து, முதிர்ச்சி பெற்றவர்.

இந்த இனிய நண்பர், டாக்டர் இராசமாணிக்கனார். ஓய்ந்த நேரத்தில், தாமே முயன்று படித்து, சென்னைப் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றவர்.

பின்னர், கல்லூரிகளில் தமிழ் அய்யாவாகச் சீரிய தொண்டாற்றும் வாய்ப்புகளைப் பெற்று உயர்ந்தவர்.

கல்லூரி மாணவர்களுக்குத் திறமையாகக் கற்றுக் கொடுத்ததோடு ஆய்வுகளிலும் ஈடுபட்டார். கல்வெட்டு ஆய்வுகளில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார்.

தமது ஆய்வின் கனியாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுச் சிறந்தார்.

பின்னர், இவர்தம் வாழ்நாளின் இறுதியில் சில ஆண்டுகள் இவருடைய அரும்பணி சென்னைப் பல்கலைக்கழகத்திற்கே கிடைத்தது.

அன்றைய சென்னைப் பல்கலைக் கழகம், பாடங்கற்பிக்கும் கழகம் அன்று. அக்காலத்தில் எவரும் முழுநேர ஆய்வுக்கு வருவது அருமை. தேவை பற்றி அல்லாது, இடங்களை நிரப்ப வேண்டுமென்பதற்காகவே, பலரை ஆசிரியப் பதவிகளில் வைத்திருந்த காலம் அது.

எனவே டாக்டர் இராசமாணிக்கனார் வேலை செய்யாது பதவியில் ஒட்டிக்கொண்டு இருந்திருந்தால் யாரும் குறை சொல்லியிருக்க மாட்டார்கள்.

இவரோ பிழைக்கப் பிறந்தவர் அல்லர்; உழைக்கப் பிறந்தவர். தமிழ்த் தொண்டாற்ற வாழ்ந்தவர். நேரமிருந்ததால் வாய்ப்பினைப் பயன் படுத்தினார்.

'பத்துப்பாட்டு' என்னும் பண்டை இலக்கியத்திற்கு உரை எழுதினார். பாடுபட்டு எழுதினார். பாடுபட்டு எழுதிய விரிவுரையை வெளியிட வேண்டி, அதைச் சென்னைப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்தார், இந்த அப்பாவி மனிதர்.

பல்கலைக் கழகத்தின் நேரத்தில் சொந்த வேலையைக் கவனித்திருக்கலாம். எழுதிவிட்டதை, வெளியார் வழியாக, வெளியிட்டிருந்தால் ஏதோ நாலு பணம் கிடைத்திருக்கும்.

அதை அறியாது, பல்கலைக் கழகத்திடம் தம் உரையைக் கொடுத்து விட்டார். பல்கலைக்கழகம் காவல் கழகமாகச் செயலாற்றியது. டாக்டர் பட்டங்களுக்காக அனுப்பப்படும் ஆய்வுரைகளை ஏற்றுக்கொண்ட பிறகு, பாதுகாப்பாகப் பூட்டி வைத்துவிட்டு அவற்றை வெளியிட முன்வராது.

இராசமாணிக்கனார் எழுதியதை யாரும் காணாதபடி பூட்டி வைத்துவிட்டது. வெளிவராது என்பது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்ததோ இல்லையோ, எனக்குத் தெரியாது. பதவியில் இருக்கும்போதே மாரடைப்பால் மாண்டார் என்பது மட்டும் எல்லாருக்கும் தெரிந்ததே.

தம்மை வளர்த்துக் கொள்ளப் பாடுபட்டதைப் போல் தமிழ்ச் சமுதாயத்தை வளர்க்கவும் பாடுபட்டார். எதிர் நீச்சலில், தம் முயற்சியால் தமிழ் இலக்கியக் கடலில் நீந்திக் கரைசேர்ந்த, காக்கை பிடிக்கத் தெரியாத உண்மைத் தமிழரை ரீடராகவே மாளவிட்டது நம் சமுதாயத்திற்குக் களங்கம்.

பத்துப் பாட்டு உரை

அவர் மறைந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர், என்னை எப்படியோ சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக உயர்த்திவிட்டார், டாக்டர் கலைஞர் கருணாநிதி.

பத்துப் பாட்டு உரை, எங்கோ ஓரிடத்தில் பூட்டி வைக்கப்பட்டிருப்பதை நானே, தற்செயலாகக் கண்டுகொண்டேன். வெளியிடத் துணிந்தேன். பெரிய நூலாக வெளிவந்தது. அவ்வெளியீட்டைப் பல செய்தித் தாள்கள் எடை போட்டன.

''டாக்டர் உ.வே. சாமிநாத அய்யருக்குப் பிறகு பத்துப் பாட்டைப் பற்றி அதே தரத்தில் எழுதப்பட்ட நூல்'' என்று ஓர் ஆங்கில ஏடு பாராட்டியது.

''தமது குருநாதர் சாமிநாத அய்யர் காணாத கருத்தினை, டாக்டர் இராசமாணிக்கனார் எடுத்துக் காட்டியிருப்பது கவனிக்கத்தக்க ஒன்றாகும்'' என்று மற்றோர் செய்தித்தாள் பாராட்டியது.

கற்றோர் பலரும் போற்றும் அந்நூலை வெளியிட ஆணையிட்டதனால் தமிழ் இலக்கியக் கடலுக்குள் புதியதோர் காவிரியைக் கலக்கும் பேற்றினை நான் பெற்றேன்.

தமிழ்ப் பேரொளி ஒன்றை - டாக்டர் இராசமாணிக்கனாரின் எவரெஸ்ட் போன்ற நூலை - உலகறியச் செய்ய வாய்த்தது, என் நற்பேறு.

தமிழுக்கு மட்டுமன்றித் தமிழருக்கும் தொண்டாற்றிய தமிழறிஞருக்கு அஞ்சலி செலுத்திவிட்டுத் தொடருகிறேன்.

நெய்யாடி வாக்கம்

எங்கள் ஊரின் மேற்குக் கோடியில் ஒரு சிவன் கோயிலும், கிழக்குக் கோடியில் மற்றொரு சிவன் கோயிலும் உள்ளன. ஊர் நடுவில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. மூன்று கோயில்களிலும் சிறியது அதுவே.

மூன்று கோயில்களிலும் பூசை உண்டு. சிவன் கோயில்களில் பூசை செய்யும் குருக்களே பெருமாள்கோவில் பூசைக்கும் உரியவர்கள். அக்கோயிலுக்கு என்று தனியாகப் பட்டர் இல்லை.

இவை போக, ஒரு தருமராசா கோயிலும், மூன்று அம்மன் கோயில்களும் உண்டு. முந்தியது கலனாகிவிட்டது. மற்றவை இன்றும் இயங்குகின்றன. இந்நான்கிலும் பூசை செய்வோர், குருக்கள் அல்லாதவர்கள்; வன்னியரும் ஆதிதிராவிடரும்.

கோயில் பூசைக்கென்றே நெடுங்காலமாக, எங்கள் சிற்றூரில் இரு குருக்கள் குடும்பங்கள் உள்ளன.

பூசைமுறை ஓராண்டு ஒரு குடும்பத்திற்கும், அடுத்தாண்டு மற்றொரு குடும்பத்திற்கும் வரும்.

அதற்காகச் சிறிய மானியம் இருந்தது. அதைக்கொண்டு அமைதியாக, நிறைவாக, வாழ்ந்த குருக்கள் குடும்பங்களே என் நினைவுக்கு வருகின்றன.

குருக்கள் குடும்பங்கள் போக, தெலுங்கு அய்யர் குடும்பம் ஒன்று இருந்தது. 'கோளவேட்டு' அய்யர், என்று அழைக்கப்பட்ட அவர், குருக்கள் வீடுகளுக்கு எதிரில் தம் சொந்த வீட்டில் குடியிருந்தார்.

அவருக்குக் கொஞ்சம் நிலமும் இருந்தது. அதோடு சில ஆண்டுகள், மளிகைக் கடை வைத்திருந்தது நினைவுக்கு வருகிறது. அக்குடும்பமும் எல்லாரோடும் நன்றாகப் பழகியது.

நான் பிறந்த தெருவில், இந்த மூன்று வீடுகள் தவிர மற்றயவை எல்லாம் எங்கள் உறவினர் வீடுகள்.

பெருமாள் கோயில் பூசைமுறை வரும் ஆண்டில். அக்குருக்களுக்குச் சிவன் கோயில் பூசை வராது.

என் அப்பாவின் அப்பாவிற்கு மூன்று சகோதரர்கள். எனவே பங்காளிகள் வீடு நான்கு. தாத்தாவிற்கு இரு சகோதரிகள். அவர்களும் உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டார்கள். அவர்கள் வீடுகள் இரண்டும் எதிரில் இருந்தன.

என் தாய் வீடும் அவ்வூரிலேயே. தாயின் மாமாவினுடைய வீடு ஒன்று. ஆக எட்டு வீடுகள் என் உறவினர் வீடுகள். பதினொரு வீடுகளைக் கொண்ட எங்கள் தெரு, அந்தக் கிராம நிலைக்கு அகலமானதே.

என்னுடைய பிள்ளைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் தெருவில் குழி பள்ளங்கள் நிறைய இருக்கும்.

ஒவ்வொரு வீட்டுக்காரரும் அவ்வீட்டுக்கு எதிரில் உள்ள தெருவைச் சாணி பூசி மெழுகி வைத்துக் கொள்வார்கள். எங்கள் தெரு தூய்மையாக இருக்கும்.

ஒவ்வொரு வீட்டுக்கும் புறக்கடைத் தோட்டம் உண்டு; அதில் குடிநீர்க் கிணறும் தனியே உண்டு.

மற்றொரு தெரு வன்னியத் தெரு. அதில் ஒரு தச்சர் குடும்பம், இரு சலவைத் தொழிலாளி குடும்பங்கள், இரு நாவிதர் குடும்பங்கள், ஒரு முஸ்லீம் குடும்பம் போக மற்ற முப்பது, நாற்பது வீடுகள் வன்னியர்களின் வீடுகள். அவர்கள் பயிர்த்தொழில் ஒன்றையே நம்பி வாழ்ந்தார்கள்.

ஆதி திராவிடர்கள் ஊருக்குக் கிழக்கே ஒரே குடியிருப்பாக வாழ்ந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒரே சாதி. எனவே அவர்களுக்குள் உட்சாதிச் சண்டை இல்லை. பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலிகள்.

இயற்கை வளம் பெற்ற கிராமம்

என் பிள்ளைப் பருவ நெய்யாடி வாக்கம் மரங்கள் சூழ்ந்த ஊர். அநேகமாக எல்லா வீட்டுப் புறக்கடையிலும் சில பல தென்னை மரங்கள் இருந்தன; காய்த்தன; ஊர்த் தேவைகளுக்கும் அதிகமாகக் காய்த்தன.

அக்கம் பக்கத்து ஊர்க்காரர்கள் திருமணம், திருவிழாத் தேவைகளுக்கான தேங்காய்களை வாங்கிப்போக எங்கள் ஊருக்கு வருவார்கள்.

ஊர் நீளமாக அமைந்திருந்தது. நீண்ட ஆற்றோரமெல்லாம் பனைமரங்கள் அடர்ந்து இருந்தன; காய்த்து, நுங்கை வழங்கின. பதனீர் இறக்குவது அவ்வளவாகப் பழக்கமில்லை. ஆனால் கள் இறக்குவது உண்டு.

ஊரில் இலுப்பை மரங்கள், அரசமரங்கள், ஆலமரங்கள், நாவல் மரங்கள் இருந்தன. ஊப்பாத்திப் புதர்கள் நிறைய இருந்தன. அதன் பழங்கள் ஏழைகளுக்கு விருந்து. நாங்கள் மட்டும் அதை உண்ணக்கூடாது என்பார்கள். ஏனோ தெரியாது.

மரங்கள் அடர்ந்து செழித்து இருந்ததால், அடுத்த கரையில் இருக்கும் இளையனார் வேலூரின் வீடுகள் எல்லாம் கண்ணில் படுவது அருமை.

இயற்கை வளம் பல்லாண்டு காப்பாற்றப்பட்டது. சென்ற சில ஆண்டுகளாக அந்த வளம் பட்டுப் போய்க் கொண்டு இருக்கிறது. சமுதாயத்தில் எத்தனையோ நலிவுகளைக் கண்டு, மாற்றேதும் செய்ய முடியாது புழுங்குவதைப்போல, நாடு தழுவிய இக் கெடுதியைக் கண்டு கண்ணீர்த் துளிகளைச் சிந்த மட்டுமே முடிகிறது. மரம் வளர்ப்பதைப் பற்றிப் பதவியிலிருந்தபோதே சொல்லிச் சொல்லித் தோற்றுவிட்டேன்.

எங்கள் ஊருக்கு ஏரி ஒன்று உண்டு. செய்யாற்றிலிருந்து வரும் வாய்க்கால் ஒன்று அதை நிரப்பும். மழைக் காலமாகிய அக்டோபர் நவம்பர் மாதங்களில் செய்யாற்றில் வெள்ளம் ஓடும். சில நாள்கள் முழு ஆறும் நிறைந்து நுங்கும் நுரையுமாக ஓடுவதுண்டு.

மழைக்கால வெள்ளம் தொடங்கியதும் ஊரிலிருந்து நாற்பது ஆள்கள் சென்று, ஆங்காங்கே, தூர்ந்துள்ள ஆற்றங்காலை, தலைமடையிலிருந்து வெட்டிச் செப்பனிடுவார்கள்.

இது நான்கு ஐந்து நாள் வேலை. இக் குடி மராமத்து வேலைக்கு நிலமுடைய அனைவரும் ஆள் அனுப்ப வேண்டும்.

நாற்பது ஆள்களை, நிலப் பரப்பிற்கு ஏற்பப் பிரித்து விடுவார்கள். ஒவ்வொருவர் பங்கிற்கான ஆள்களை அனுப்புவதில் சுணக்கம் இராது.

மூன்று நான்கு நாள்களில் ஏரி நிரம்பிவிடும். நிரம்பிய ஏரி ஒரு போகப் பாய்ச்சலுக்குப் போதும். இரண்டாம் போகத்திற்குக்கூட முப்பது நாள்களுக்குத் தாராளமாகப் பாயும்.

மற்ற நாள்கள் கிணற்றில் இருந்து இறைப்பார்கள். அக்காலத்தில் மாடுகட்டி, கவலையால் இறைப்பார்கள். சில வேளை ஏற்ற இறைப்பும் உண்டு. இப்படிப் பெரும்பாலான நிலத்தில் இருபோகப் பயிர் உண்டு.

எங்கள் தெருவில் எல்லா வீடுகளிலும் கறவை மாடுகள் இருந்தன. அத்தனையும் நாட்டுப் பசுக்கள் அல்லது நாட்டு எருமைகள். அவை குறைவாகப் பால் கொடுக்கும்.

ஆனாலும் ஐம்பது ஆண்டுகள் முன்வரை எங்கள் உறவினர் வீடுகளில் அன்றாடச் செலவிற்குப் பாலோ, தயிரோ, மோரோ, நெய்யோ விலைக்கு வாங்கியதாக நினைவில்லை.

தாராளமாக நெய் கிடைத்ததால், 'நெய்யாடு பாக்கம்' என்னும் பெயர் பொருத்தமே என்று சொல்லிக் கொள்ளுவோம்.

தன்நிறைவு பெற்ற நெய்யாடிவாக்கம்

நெய்யாடி வாக்கத்தின் தேவை முழுமைக்கும் எள்ளும் வேர்க்கடலையும் உள்ளூரில் விளைந்தன.

அவற்றை உள்ளூர் செக்கிலோ, அடுத்துள்ள காவாந்தண்டலம், இளையனார் வேலூர், வயலக்காவூர் ஆகிய ஊர்களில் ஆடிய செக்குகளிலோ எண்ணெய் ஆக்கிக் கொள்வார்கள்.

வீட்டுக்கு எண்ணெயும் மாட்டுக்குப் புண்ணாக்கும் எளிதில் கிடைத்தன. மாடுகள் குடம் நிறையக் கறக்காவிட்டாலும், பெரும் செம்பு நிறையக் கறந்தன.

பால்வளம் இருந்த ஊரிலே மக்கள் வளம் இருந்தது இயற்கை.

உரிய பருவத்தில் வீட்டுக்கு வீடு காய்கறித் தோட்டம் செழித்திருக்கும்.

'ஆடிப்பட்டம் தேடிவிதை' என்பது பழமொழி. அதை, நாட்டுப் புறங்கள் பெரும்பாலும் பின்பற்றின.

ஏரி நிறைந்தன்ன செல்வராயினும், எத்தனை ஊர்ப்பெரிய தனங்களாய் இருப்பினும் ஆடி மாதம் ஊருக்குத் திரும்பிவந்து வீட்டுத் தோட்டத்தில், புடலம், பீர்க்கை, வெண்டை, பாகல், அவரை ஆகிய விதைகளை ஊன்றுவதைக் கடமையாகக் கொண்டிருந்தார்கள் அக்காலத்து மக்கள். அதில் தவறுவது பழிப்பிற்கு உரியதாகக் கருதப்பட்டது.

வீடு உடையவர்கள் புறக்கடையில் தோட்டம் போட்டு, மூன்று நான்கு திங்களுக்குச் சந்தைக்குச் செல்லாமல், பசுமையாகவே சத்துள்ள காய்கறிகளை உண்டு வாழ்ந்தால், மற்றவர்கள் என்ன செய்வார்கள்?

வாய்க்கால் கரைகளில், மூலைமுடுக்குகளில், சின்னஞ்சிறு மண்குடிசைகளில் வாழ்ந்தோரும் காய்கறி உற்பத்திக்குத் தங்கள் எளிய பங்கை ஆற்றினார்கள். தங்கள் குடிசைகளின் பக்கத்தில் சாண் சதுர நிலத்திலாயினும் அதில் குழி தோண்டி, சுரை, பரங்கி, பூசணி விதைகளைப் புதைத்து வளர்த்து வந்தார்கள்.

அவை முளைத்து, கொடியாகப் படரும்போது, அவற்றைக் குடிசைகளின்மேல் ஏற்றி விட்டார்கள்.

அவை படர்ந்து, பூத்து, காய்த்தன; குடிசைகளின் மேலும் காய்த்தன.

ஏழைகளும் சுமையாக இராமல், நாட்டின் உணவு உற்பத்திற்குத் துணையாகி நின்றார்கள்.

இலட்சக்கணக்கான வீட்டுப் புறக்கடைகளிலும் பல இலட்சம் குடிசைகளிலும் காய்கறிகள் உற்பத்தியானதால் வறுமையின் நெருக்கடியையும் அன்னியன் சுரண்டலையும் அன்று ஓரளவு சமாளிக்க முடிந்தது.

எந்தக் குடிசைமேல் காய்த்தாலும், பரங்கிக்காயும் சுரைக்காயும் பூசணிக்காயும் பலருக்கும் சொந்தம்.

குடிசைக்காரரே சமைத்துச் சாப்பிடமாட்டார். பங்காளிகளுக்குப் பங்கு போடுவதோடு நிற்கமாட்டார். வேண்டியவர்கள் பலருக்கும் முதல் காய்ப்பைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

'வாழில் எல்லோரும் வாழ்வோம்' என்று அக்கால மக்கள் முழங்காவிட்டாலும், எல்லோரும் எல்லோருக்குமாக என்னும் அளவிற்கு உயராவிட்டாலும், ஊர்தோறும் 'பலரும் பலருக்காக' என்னும் பண்பின் முளை ஆண்டுதோறும் தலைநீட்டின.

கிராமத் தன்னிறைவின் சிறப்பை மக்கள் மறந்துவிட்டது அவலமாகும்.

பெரும்பாடின்றி, ஐம்பது அறுபது இலட்சம் குடிசைகளிலும் வீடுகளிலுமாக, கூடைகூடையாகக் காய்க்க வைத்ததைக் கைநழுவ விட்டுவிட்டு, எல்லாவற்றிற்கும் சந்தைக்குச் செல்லும் போக்குப் புதிராகிவிட்டது, நல்லதல்ல.

காந்தியடிகள், சிற்றூர் தன்னிறைவை மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதை, அது வெறும் துறவியின் உளறல் என்று அலட்சியப் படுத்துதல் நல்லதல்ல.

'இரண்டு எருமைகளும் நான்கு முருங்கைகளும் உடையவனை எந்தப் பஞ்சமும் ஒன்றும் செய்யாது' என்பது பட்டறிவில் முளைத்த பொருள் நிறைந்த பழமொழியாகும்.

அக்காலத்தில் எங்கள் ஊரில் அநேகமாக எல்லா வீடுகளிலும் இலுப்பெண்ணெய் விளக்குகளே எரியும். இதுவும் உள்ளூரிலேயே கிடைத்தது. ஊரில் சில இலுப்பை மரங்கள் இருந்தன.

பச்சை மரத்தை வெட்டினால் பாவம் என்பது அக்கால மக்களின் கருத்து. பச்சை மரங்களைத் தோலுரிக்கும் வீரர்கள் அக்காலத்தில் மிகக் குறைவு.

ஆகவே மரங்கள் நெடுநாள் இருந்தன: நிழல் தந்தன; உரத்திற்கு உதவின; காய்த்தன.

கிராமங்களில் மண்ணெண்ணெய் விளக்கு

என்னுடைய எட்டாம் வயதில் எங்கள் ஊரில் மண்ணெண்ணெய் விளக்குகள் மின்னின.

முதலில் 'காடை' விளக்குகளே அறிமுகம் ஆயின. அடுத்து அரிக்கன்லாந்தர் வந்தது. இப்போது, பல்லாண்டுகளாக மின் விளக்குகள் எரிகின்றன. வீடுகளில் மட்டுமா? இல்லை; தெருக்களிலும் மின் விளக்குகள் எரிகின்றன. இறைப்பிற்கும் மின் ஆற்றல் பெருமளவு பயன்படுகிறது.

'மின்னாற்றல்' என்னும் சொல், என்னுள்ளே வரலாற்றுக் கண்ணோட்டத்தை ஏற்றி வைக்கிறது. புரட்சிகளை நினைவு படுத்துகிறது.

என் நினைவில் எழும் புரட்சிகள் இரண்டு. ஒன்று இரஷ்யப் புரட்சி. மற்றொன்று காந்திய வழியில் நம் நாட்டில் நடந்த காந்தியப் புரட்சி.

கிளர்ச்சிக் கோலம் பூணாத ஆக்க இயக்கங்களும் மக்கள் வாழ்வை வளப்படுத்தியுள்ளன.

'சோவியத் ஆட்சிமுறையும் மின்சாரமும் ஊர்தோறும் நிலைத்துவிட்டால், சமதர்மம் தழைத்துவிடும்' என்று சோவியத் நாட்டின் தந்தை, மாமேதை லெனின் பறைசாற்றினார்.

முந்தியது முடிந்தாலும் பிந்தியது கைகூடுமா என்று சோவியத் நாட்டின் பால் நல்லெண்ணம் உடைய ஆங்கில எழுத்தாளர், எச்.ஜி.வெல்ஸ் ஐயப்பட்டார். அதை 'கிரெம்ளின் கோட்டையில் கனவுலகுவாசி அமர்ந்திருக்கிறார்' என்று நயமாக வெளிப்படுத்தினார்.

ஊர்தோறும் மின்னொளி என்பது வெறும் கனவாக நின்றதா? இல்லை. சோவியத்நாடு முழுவதும் மின்னொளி ஒளிவிடுகிறது.

உயர் எண்ணங்கள் ஊறும் உத்தமர் ஒருவர் திண்மையான உள்ளமும் பெற்றுவிட்டால், செயற்கரிய செய்ய முடியும் என்பதை லெனின் மெய்ப்பித்துக் காட்டினார்.

சோவியத் ஆட்சியின் எழுச்சி, எங்கெங்கோ எதிரொலித்தது. இந்திய விடுதலை உணர்வைத் தூண்டியது; பிற விளைவுகளையும் கண்டது.

இந்தியத் தொழிலாளர் இயக்கம் தழைத்தது. கிராம இராச்சியம் முளைத்தது; இவற்றைவிட விரைவாக, மின்னொளி நாட்டுப்புறங்களி லெல்லாம் வேகமாக ஊடுருவியது.

இந்த நூற்றாண்டின் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தமிழ்நாட்டின் மின்சாரத்துறை நம் இந்தியாவின் முழுக் கவனத்தையும் கவர்ந்து ஈர்த்தது. அது, பல பெரிய இடத்துப் பொறாமையையும் பயங்கரமாகப் பீச்சிற்று.

மின் வளர்ச்சியின் பொற்காலத் தலைவர்

ஒன்றே சொல்லி நன்றே முடிக்கும் ஏழைபங்காளர், சாதனையாளர், கர்மவீரர் காமராசரின் தொலைநோக்கும் சொற்செட்டும், வினைக்குரிய வரை வினையாளராக விடும் பண்பும், திரு அப்பாதுரை என்னும் வல்லாரை முழுமையாகச் செயல்பட விட்டது.

மின்சாரத் துறையின் தலைமைப் பொறியாளராகத் திரு அப்பாதுரை இயங்கிய காலம், தமிழ்நாட்டின் மின்வளர்ச்சியின் பொற்காலம் ஆகும்.

புற ஒளி தரும் மின்விளக்குகளும் அக ஒளி வழங்கும் கல்விச் சாலைகளும், போட்டி போட்டுக்கொண்டு சிற்றூரைத் தேடிச்சென்று செயல்பட்ட காலத்தைப் பொற்காலம் என்று அழைக்க நாண முடியுமா?

திரு. அப்பாதுரையார் தொழில் வல்லார் மட்டுமல்லர்; தொண்டின் திரு உருவம். எறும்பின் சுறுசுறுப்பையும் மிஞ்சிச் செயல்படக் கூடியவர்.

குளுகுளு அறையில் உட்கார்ந்தபடியே, 'இதைச் செய் அதைச் செய்' என்று ஆணையிட்டு விட்டு, செம்மையாக நடந்தால், தனக்குப் பெருமை சேர்த்துக்கொண்டு, தவறாகிவிட்டால் பிறர்மேல் பழியும் போட்டுவிட்டுத், தப்பித்துக் கொள்ளும் பெரிய அதிகாரிகள் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர். நல்ல நாணயமான ஊழியர்.

'எங்கள் தலைமைப் பொறியர், காலை எட்டு மணிக்கே, எத்தனை தூரத்தில், எந்த மின்நிலையத்தையோ மின்கம்பத்தையோ சோதித்துக் கொண்டிருப்பாரே!சரியாகப் பொருத்தப்பட்டு இருக்கிறதா என்று தணிக்கை செய்ய வேண்டியிருந்தால் அவரே மேலே ஏறித் தணிக்கை செய்துவிடுவார். அவர் இருக்கும்வரை, கண்ணிலே விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டே வேலை செய்வோம்' என்று மின்சார வாரிய அலுவலர்கள், பூரிப்போடும், பெருமையோடும், மனநிறைவோடும் பேசுவதைப் பலமுறை கேட்டு மகிழ்ந்தவன் நான்.

பிறநாட்டு அழைப்புகளை ஒதுக்கி, தமிழ்நாட்டோடு திரு அப்பாதுரையார் முடங்கியதால் அவருக்கு நல்லதோ கெட்டதோ, யான் அறியேன்.

தன்னேரில்லாத தமிழ் மேதையொருவரை உலகம் உணர்ந்து பாராட்டும் வாய்ப்பினை, நாம் இழந்து விட்டோம். அது கசப்பான உண்மையே.

காந்தி விரும்பிய இராம இராச்சியம்

மாநிலம் தழுவிய மின்வளர்ச்சி என் நாற்பதாம் வயதில் தொடங்கிற்று. எனவே, சிறுவன் சுந்தரவடிவேலுக்கு எத்தகைய தெரு விளக்கும் இல்லாத நெய்யாடி வாக்கமும் பிற சிற்றூர்களுமே தெரியும். அக்கால நாட்டுப்புறம் பல்வகை இருளிலும் மூழ்கிக் கிடந்தது.

பிற்காலத்தில் மிக நல்ல திசைகளில் மாற்றங் கண்டோம்.

காந்தியடிகள் விரும்பிய இராம இராச்சியங்கள், விடுதலையின் விளைவாகத் தோன்றின. மக்கள் ஆட்சிக்குப் புற அமைப்புகள் உருவாயின.

உணர்வுகளும் மறுமலர்ச்சி பெற்று, மக்கள் அனைவருக்கும் தொண்டு செய்யும் தன்மை பெற்றால் நன்றாயிருக்கும்.

சிற்றூர் ஆட்சிகளில்கூட, ஆளின் தன்மையைப் பார்ப்பதைவிட, பணக்கட்டையும் ஜனக்கட்டையும் கவனிக்கும் போக்குத் தொடரும் வரை, ஊராட்சி மன்றங்களால் பெற வேண்டிய பொதுத் தொண்டுப் பயிற்சியும், பொது உணர்வுச் சமுதாயக் கண்ணோட்டமும் தழைக்கா.

கல்வியின் தேவையை உணராத மக்கள்

இப்போது என்னுடைய கதைக்குத் திரும்பட்டுமா?

நான் சிறுவனாக இருந்தபொழுது நெய்யாடிவாக்கத்தில் தொடக்கப் பள்ளிக்கூடமும் கிடையாது.

தன்னாட்சியின் கீழ் அகப்பட்டுக் கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் கல்விக் கண்களைக் கொடுப்பதைத் தன்னுடைய கடமைகளில் ஒன்றாகக் கருதவில்லை, அன்றைய ஆங்கில ஆட்சி.

'நான்காவது வரையிலாவது, நாட்டில் உள்ளோர் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க வழிவகை செய்ய வேண்டும்' என்று கட்டளையிடும் மசோதா ஒன்றை, நாட்டுப் பற்றாளராகவும் கல்வியின் புரவலராகவும் விளங்கிய கோபால கிருஷ்ணகோகலே என்ற அறிஞர், இந்தியச் சட்டமன்றத்தில் கொண்டுவந்தார். அது சட்டமாக வில்லை.

ஏன்?

அன்னிய ஆட்சித்துறை எதிர்த்தது. 'இது இயலாது' என்றது. நான்காம் வகுப்புவரை பாடஞ் சொல்லிக் கொடுக்கவும் இசைய வில்லை.

நாம் அன்னிய ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று, கால் நூற்றாண்டு ஆனபோதிலும் ஆட்சிகளோடு கருத்து வேற்றுமை கொள்ளும் உரிமை சான்றோர்களுக்கே இல்லை. ஆங்கில ஆட்சியில் அரசை எதிர்த்து ஒட்டளிக்க யாருக்காவது முடியுமா?

சுதந்திர இந்தியாவில் ஆகாதவர்களைக் கொடுமைப்படுத்த 'தேசத்துரோகம்' என்னும் மயக்குச்சொல் பயன்படுவதுபோல், ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த இந்தியாவில் 'இராஜத் துரோகம்' என்று குற்றம் சாட்டிவிட்டு, எவ்வளவு சித்திரவதைக்கு ஆளாக்கினாலும் அதைத் தட்டிக் கேட்க அப்போது நாதியில்லை.

எனவே, அன்றைய அரசின் பகைக்கு அஞ்சி, கோகலேயின் மசோதாவைத் தள்ளிவிட்டது இந்தியச் சட்டமன்றம்.

அதனால் ஏற்பட்ட விளைவு?

இலட்சக்கணக்கான சிற்றூர்களில் இக்காலத் தொடக்கப் பள்ளிகளும் இல்லை. இருள் சூழ்ந்த இலட்சக்கணக்கான ஊர்களில் ஒன்றாக இருந்தது நெய்யாடிவாக்கமும்.

முற்காலத்தில் கல்விச் சுனைகளைப் பெற்று விளங்கிய காஞ்சிபுர வட்டத்தையும் கல்லாமை கௌவிக் கொண்டிருந்தது. கல்விச் சாலைகள் இல்லாமையைவிடக் கொடுமை, கல்வியின் தேவையைச் சிறிதும் உணராது மக்கள் மறந்திருந்த மாக்கள் நிலை.

எங்கள் குடும்பம்

எங்கள் செய்யாற்றின் வடகரையில், இரண்டு கல் தொலைவில், காவாந்தண்டலத்தில் சிறிய தொடக்கப் பள்ளி ஒன்று இருந்தது. அதன் தொலைவு படிப்புக்குத் தடையாக இருந்தது.

ஆண்டிற்கு எண்பது நாள். சிறுவர்கள் கடக்க முடியாத அளவு வெள்ளம் குறுக்கிடும். எனவே, எங்களூரார் திண்ணைப் பள்ளிக் கூடத்தையே நம்ப வேண்டியிருந்தது.

என் முன்னோர்களில் ஆண்கள் மட்டும், திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு பெற்றிருந்தார்கள். பிறகு தன் முயற்சியால் படிப்பையும் அறிவையும் வளர்த்துக் கொண்டார்கள்.

எனக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் யாரும் எழுத்தறிவும் பெற்றதில்லை.

மூத்த உறவினர்கள் அனைவரும் வேளாண்மையில் ஈடுபட்டிருந் தார்கள். சிறிய பாட்டனார் இராமசாமி ஒருவர் மட்டும் ஊரைவிட்டு வந்து, சென்னை - கல்கத்தா இரயில் பாதை அமைத்தபோது, 'கண்ட்ராக்டராக' நெல்லூரில் தொழில்புரிந்தார். நான் பிறந்தபோது அவரும் தொழிலை முடித்துக்கொண்டு நெய்யாடிவாக்கத்தில்தான் குடியிருந்தார்.

என் நேர் பாட்டனார் பெயர் சண்முகம்; பாட்டியின் பெயர் நாகம்மாள்.

பாட்டி மாகறலில் பிறந்தவர். எங்களூரில் வாழ்க்கைப்பட்டார்; பதினொரு குழந்தைகளைப் பெற்றார். ஒன்பது பேர் குழந்தைப் பருவத்திலும் சின்னஞ்சிறு வயதிலும் மறைந்தார்கள்; இருவர் வளர்ந்தார்கள்.

அவர்களில் ஒருவர் என் தந்தை. அவர் பெயர் துரைசாமி!

அவருடைய அக்கா ஒருவர் திருமணமாகும்வரை இருந்தார்.

அவருக்குப் பால்யத்தில் திருமணம். ஆற்பாக்கத்தில் குடிபுகுந்தார். அங்கே அம்மை நோயில் மாண்டார். பதினொரு பேர்களில் கடைசியில் என் தந்தை மட்டுமே தப்பினார்.

''பதினொன்று பெற்று, பத்தையும் தூக்கிக் கொடுத்துவிட்டு 'ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு' என்று, உங்கள் அப்பாவை மட்டும் வைத்திருக்கிறேன்'' என்று என் அருமைப் பாட்டியார் பல முறை என்னிடம் அங்கலாய்த்தது உண்டு.

அந்த ஒன்றுகூடப் பேரனுக்கு நிலைக்காது, என்பதைப் பாட்டி, அப்போது கனவில்கூட நினைத்திருக்க மாட்டார்.

என் தாயார் பெயர் சாரதாம்பாள். அவரோடு பிறந்தவர்கள் அண்ணன் ஒருவர், தம்பி ஒருவர், தங்கை ஒருவர். அந்த அண்ணன் சேலத்தில் உறவினர் வீட்டில் தங்கி, உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது, காலரா நோயால் திடீரென்று மாண்டார்.

அம்மாவிற்குத் திருமணம் ஆவதற்கு முன்பே, அவருடைய அருமைத் தந்தையாரும் இறந்து விட்டார்.

மூன்று குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு, பாட்டி பாக்கியத்தம்மாளின் மேல் வீழ்ந்தது.

அவர்கள் திறமைசாலி; ஊரில் மற்றவர்களைவிட அதிக நிலமுடையவர்.

பயிரையும் சமாளித்துக்கொண்டு குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டிய நிலை. நிலம், ஊரில் மட்டுமல்ல, ஆறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மாகறலிலும் இருந்தது.

மூத்த மகளுக்கு மாப்பிள்ளை தேடினார். நற்குணம், நல்லொழுக்கம், அதே நேரத்தில் திறமை, சுறுசுறுப்பு இத்தனையுமுடைய என் தந்தைக்கு மணஞ் செய்து வைத்தார்.

என் தந்தை வழிப் பாட்டனாரைவிடத் தாய் வழிப் பாட்டனாருக்குச் சொத்து அதிகம். தாய் வழிப் பாட்டனார் கோவிந்தர். சொத்தைப் பராமரிக்க வயது வந்த ஆண்பிள்ளை தேவைப்பட்டது.

எனவே, என் தந்தை, மாமியார் வீட்டிற்குக் குடி வந்து விட்டார். அவ்வீட்டுப் பயிரையும் குடும்பத்தையும் வளர்க்கும் பெரிய பொறுப்பை மேற்கொண்டு உழைத்தார்.

என் பிறப்பும் ஆரம்பப் படிப்பும்

நான் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு அக்டோபர் 12, புரட்டாசித் திங்கள், கடைசி சனிக்கிழமை மாலைப் பொழுது, சுவாதித் திருநாளில் சுகமாகப் பிறந்தேன்.

தாயாருக்கு ஆபத்து விளைவிக்காமலேயே பிறந்து விட்டேன். எனக்குப் பின் தம்பிகள் நால்வர் பிறந்தனர்.

கடைசித் தம்பி முருகேசன் பிறந்ததுமுதல் மெலிந்திருந்து, நான்காவது வயதில் மறைந்தான்.

எங்களோடு பெண் ஒன்றும் பிறக்காதது எனக்குக் குறை.

என் தாய்மாமன் சுந்தரசேகரர் காஞ்சிபுரத்தில் உயர்நிலைப் பள்ளிக்குப் படிக்கச் சென்றார்.

இந்நூற்றாண்டின் முப்பதுகள்வரை, சரளைக்கல் போட்ட பாட்டை ஏதும் எங்கள் ஊருக்கு வராது. கப்பிகூடப் போடாத நாட்டு வண்டிப் பாதையில்தான், எத்திசைச் சென்றாலும் பயணம்.

எங்கள் மாமாவின் படிப்பிற்காக, கிராமத்தை விட்டுக் காஞ்சிபுரத்தில் குடித்தனம் கட்ட நேரிட்டது.

என் சிறிய தாயார், திருபுவனத்து அம்மாள் - அவருக்கு அப்பொழுது பதினொரு, பன்னிரண்டு வயது - காஞ்சிபுரத்தில் இருந்து குடித்தனம் கட்டி, சமைத்துப் போட்டு, என் மாமா படிப்பதற்கு உதவினார்.

மாமாவைப் போலவே, என் சிறிய பாட்டனார் பிள்ளைகள் மூவரும் காஞ்சியில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கு வந்தார்கள்.

அவர்கள் மூத்த சகோதரிகள், அவர்களுக்காக அடுத்தடுத்துக் காஞ்சிபுரத்தில் குடித்தனம் வைத்தார்கள்.

3. ஐந்து வயதில் கல்வி

எனக்கு ஐந்து வயது நிரம்பியதும் எழுத்தறிவிக்கத் தொடங்கினார்கள்.

தொடக்க விழா ஆடம்பரமாக இருந்தது. விழாவிற்காக, எனக்கு முழு வெல்வெட் கால்சட்டையும், வெல்வெட் மூடு கோட்டும் தைத்தார்கள். சென்னைக்குச் சென்று தைத்து வந்தார்கள்.

விழாவன்று மேற்கே உள்ள சிவன் கோயிலுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். சாமி கும்பிட்ட பிறகு, வெல்வெட்டு உறைக்குள் என்னை புகுத்தி விட்டார்கள். அலங்கரிக்கப்பட்ட பல்லாக்கில் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். நாதசுர இசையும் உண்டு.

எங்கள் தெருவில், பெருமாள் கோயில் முன்புள்ள திறந்த வெளியில் கொட்டகை போட்டிருந்தார்கள்.

அழைக்கப்பட்ட உறவினர்களும் அன்பர்களும் கண்காணிக்க 'அரிநமோத்து சித்தம்' என்று சொல்லி, மணல்மேல் 'அ' என்ற எழுத்தை எழுத வைத்தார்கள்.

என் விரலைப் பிடித்து எழுத இயக்கிய குருநாதரின் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை.

காஞ்சிபுரம் ஞானப்பிரகாச மடத்திற்கு நாங்கள் சீடர்கள். இந்த மடம் மிகத் தொன்மையான மடம். ஆதிகாலம் முதல், இதன் சீடர்கள் யாழ்ப்பாணத்திலும் இருந்து வந்தனர்.

எங்கள் உறவினர்கள் வீடுகளில் நடக்கும் நல்ல நிகழ்ச்சிகளின் போது, மடத்திற்குக் குறிப்பிட்ட தொகையைக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். செலுத்தும் முறை தவறிப்போய்ப் பல்லாண்டுகளாகி விட்டன.

ஆனால், நான் எழுதப் பழகிய காலத்தில், இந்த நடைமுறை இருந்தது. குரு ஆணைப்படி, மடத்திலுள்ள சீடர் ஒருவர் வந்திருந்து வாழ்த்தினார்.

ஏறத்தாழ ஈராண்டுகள் உள்ளூரிலேயே இருந்து எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டேன்.

எங்களுக்கு எதிர்க்கரையிலுள்ள இளையனார் வேலூரிலிருந்து கதிர்வேல் வாத்தியார் வந்து, திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திவந்தார்.

ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் நாள்களில் அவரது வருகை தடைப்பட்டு விடும்.

தாத்தாவின் அன்பும் ஆசிரியரின் திகைப்பும்

என் உறவினர்கள் - ஆண்கள் - அனைவரும் நாள்தோறும் கழனியைச் சுற்றிப் பார்த்து வருவார்கள். பயிர் வேலையைப் பார்த்துவிட்டு, பகல் உணவுக்குமுன் குளிப்பார்கள்.

என் வயது உறவினர்கள், மூன்று நான்கு பேர்கள் என்னுடன் சேர்ந்து படித்து வந்தார்கள்.

வீடுகளில் பிள்ளையார் பூசை செய்துவிட்டு உண்பார்கள். எல்லா வீடுகளிலும் வீட்டுப் பொறுப்பு பெண்ணரசிகளுடையது. அவர்கள் வீட்டு வேலைகளுக்குச் சுணங்கமாட்டார்கள்.

என் தந்தை வழிப் பாட்டனார், தம் நிலத்தை மட்டும் சுற்றிப் பார்ப்பதோடு நிற்கமாட்டார். மற்றவர்கள் நிலத்தையும் சுற்றிவிட்டே வருவார்.

ஒவ்வொருவரையும் பார்த்து, யார் பயிரில் என்ன சிறப்பு, என்ன குறை, மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும், என்பனவற்றை அவர்களுக்கு விவரமாக எடுத்துச் சொல்லுவார்.

ஊர் முழுவதும் பசுமையாக இருக்க வேண்டுமென்பது அவர் ஆவல். ஒரு நூற்றாண்டுக்கு முந்திப் பிறந்துவிட்ட தவறை, அவர் உணரவில்லை.

எனவே, சில வேளை நிலத்துக்கு உடையவர்கள், அலட்சிய மாகவோ, அகந்தையோடோ பதில் சொன்னாலும் அதைப் பொருட் படுத்தாமல், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நன்னெறியைப் பின்பற்றுவார்.

யாருடைய பாராட்டையும் நன்றியையும் எதிர்பார்க்க மாட்டார். எவருடைய ஏளனத்தையும் சிறிதும் பொருட்படுத்தமாட்டார்.

என் பாட்டனார் சண்முகம் வயல்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, குளிப்பதற்காக ஆற்றுக்குப் போவார். குளித்துவிட்டுத் திரும்புகையில் பெருமாள் கோயிலில் கும்பிட்டுவிட்டு, வீடு திரும்புவார். ஆற்றுக்குப் போகும் வழி நான் படித்த திண்ணைப் பள்ளிக்கூடத்தை அடுத்து இருந்தது.

அவர் குளிக்கப் போகும்போது நான் பள்ளியை விட்டு, அவர் பின்னால் ஓடிப்போய்க் கற்கண்டு அல்லது வெல்லம் வாங்க, அவரிடம் அரையணா கேட்பது வழக்கம்.

செல்லப் பேரனாகிய எனக்குக் காசு கொடுக்க மறுக்க மாட்டார்.

அவர் கொடுக்கும் அரையணாவைக் கொண்டு பக்கத்து மளிகைக் கடையில் வெல்லமோ பனங்கற்கண்டோ வாங்குவேன். இதைப் பள்ளிக்குக் கொண்டு போவேன். நாலு பேரும் தின்போம்.

ஒருநாள், தாத்தா குளிக்கப் போவதைக் கண்ட நான், குதித்தோடினேன். பணம் கேட்டு நச்சரித்தேன்.

காசு கையில் இல்லையோ என்னவோ? என்னை விரட்டி விட்டார்.

திரும்பி வந்து, ஆசிரியர்மேல் பாய்ந்தார். ''பையனைப் படிக்க விட்டால் அவனை என் பின்னால் ஓடவிட்டுவிட்டு, என்ன செய்து கொண்டிருக்கிறாய்? அடக்க முடியவில்லையானால் பாடஞ் சொல்ல வேண்டாம். வேறு யாரையாவது பார்த்துக்கொள்ளுகிறோம்'' என்று முழங்கினார்.

ஆசிரியர் என்ன செய்வார்? வாய் திறக்கவில்லை.

தாத்தா அப்படி நகர்ந்ததும் ஆசிரியர், என்னை அடிக்கப் பிரம்பை ஓங்கினார். அதுவரையில் நான் யாரிடமும் அடிபட்டதில்லை. செல்லப் பிள்ளை அடிபட ஒப்புமா?

நான், சட்டென்று பிரம்பைப் பிடுங்கினேன். அதை ஆசிரியர் எதிர்பார்க்கவில்லை. அந்நேரம்வரை அடக்கமான மாணவன். எனவே ஆசிரியர் திகைத்துப் போனார்.

நல்ல மாட்டுக்கு ஓர் அடி

ஆசிரியர் கையில் இருந்த பிரம்பு, இமைப்பொழுதில் என் கைக்குள் சிக்கிக் கொண்டதால் ஏற்பட்ட திகைப்பில் இருந்து ஆசிரியர் மீள்வதற்கு முன், நான் பிரம்பை ஆட்டி, அவரை மிரட்டினேன்; ஆனால் வாய் பேசவில்லை.

அடுத்த நொடியில் பிரம்பைக் கீழே போட்டுவிட்டு ஓடினேன்; ஓடினேன் தலைதெறிக்க ஓடினேன்.

குளிக்கச் சென்ற என் தாத்தா, தம் வீட்டிற்குத் திரும்பி வருவதற்கு முன்பே நான் என் தாய் வீட்டிற்குச் சென்றேன். கதறி அழுதேன். என் மேல் ஓரடியும் விழவில்லை யென்பதைத் தாயார் தெரிந்து கொண்டார்.

செல்லப் பிள்ளையாகிய என்னைக் கண்டிப்பதா? எனக்காக, என் தாத்தாவோடு சண்டைக்குப் போவதா? ஆசிரியருக்கு, மிரட்டக்கூட உரிமை இல்லையென்று அவரைக் கடிந்து கொள்வதா? இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை என்பார்களே, அந்நிலைக்குத் தள்ளிவிட்டேன் என் பெற்றோர்களை.

அவர்கள் எது சரி, எது தப்பு என்று முடிவு சொல்லவில்லை. 'ஒவ்வொன்றிலும் சரி தப்பு சொல்லத் தேவையில்லை' என்னும் வாழ்வியல் தெளிவு, என் பெற்றோர்களிடம் இருந்தது. எப்படியோ என்னை அமைதிப்படுத்தினார்கள்.

அடுத்த சில நாள்கள் பள்ளிக்கூடம் இல்லை, ஆசிரியர் கதிர்வேலு நெய்யாடிவாக்கம் கிராமத்திற்குள் கால் எடுத்து வைக்கவில்லை.

என் தந்தை 'உம்' என்று இருந்தார். வீட்டில் மற்றவர்களும் என் படிப்பைப் பற்றிப் பேச்சு மூச்சு விடவில்லை.

சில நாள்களுக்குப் பிறகு மீண்டும் திண்ணைப் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. ஆசிரியர் அங்கிருந்தபடியே, சகமாணவன் ஒருவனை என் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அவன் என்னைப் பள்ளிக்கு அழைத்தான்.

''உன் முரட்டுத்தனம் அவர் வெகுளியைப் பற்றவைத்து விட்டது.

''நம் ஊரில் யாருக்கும் பாடஞ்சொல்ல மாட்டேன், என்று சொல்லிவிட்டு நின்று விட்டார்.

''யார் யாரையோ கொண்டு சொல்ல வைத்தோம். கதிர்வேலுவின் பெருந்தன்மை, நடந்ததை எல்லாம் மறந்துவிட்டார். மறுபடியும் பள்ளிக்கூடம் நடத்த இசைந்தார்.

''இனியாவது அடங்கிநட. இல்லாவிட்டால் அப்புறம் பாடஞ் சொல்ல அக்கம் பக்கத்தில் எவரும் கிடைக்கமாட்டார். பிறகு ஊரிலேயே, குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருக்க வேண்டியதுதான்'' என்று இடித்து அனுப்பினார், என் தந்தை.

தந்தை என்னைக் கடிந்து கொண்டது, அதுவே முதன்முறை.

'திரும்பத் திரும்ப அடித்தால், குதிரையும் கழுதையாகிவிடும்' என்பது நாட்டு வழக்கு.

அந்த உண்மையை உணர்ந்ததால் போலும், என்னை ஏழு வயது வரையில் கடிந்து கொள்ளாமலேயே வளர்த்தார்.

நல்ல மாட்டுக்கு ஓர் அடி! நல்ல மனிதனுக்கு ஒரு சொல்!

தந்தை முதன்முறை இடித்துரைத்த பிறகு, குறிப்பிடத்தக்க தவறு ஒன்றையும் நான் செய்யவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடம் தொடர்ந்து நடந்தது.

காஞ்சி யாத்திரை

சில திங்கள் சென்றன. 'மாமா சுந்தரசேகரரோடு, வடிவேலுவும் காஞ்சிபுரம் சென்று படிக்கட்டும்'

இது பாட்டி, அம்மா, அப்பா ஆகிய மூவரும் செய்த முடிவு.

ஏற்கெனவே என் மாமா, காஞ்சியில் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார்.

காஞ்சியில் பள்ளிக்கூடங்கள் தொடங்கும் பருவம் வந்தது. ஒரு நாள் விடியற்காலை, நான்கு மணிக்கு இரட்டை மாட்டு வண்டியில் புறப்பட்டோம். தூக்க மயக்கத்தில் நான் வண்டியேறினேன். என்னுடன் என் தந்தை, மாமா, சித்தி ஆகிய மூவரும் வந்தனர்.

மூன்று ஆறுகளையும், ஒரு மடுவையும் கடந்து நாட்டுப் பாதையில் சேற்றிலும் சகதியிலும் சென்று காஞ்சிபுரத்தை நாங்கள் அடைந்தோம். அப்போது காலை மணி எட்டு.

அந்தக் காலப் பயணம் எவ்வளவு தொல்லையானது என்பதை இதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

காஞ்சிபுரத்தில் என் மாமா, ஒரு பெரிய வீட்டின் பின்பகுதியில் இரண்டு அறைகள் வாடகைக்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.

சாதியின் கவுரவம்

வீட்டுக்குரியவர் வைத்தியர் வேலுமுதலியார். அவர் குடும்பத்தோடு முன்பாதி வீட்டில் குடியிருந்தார்.

பின் பாதியில் ஒரு பாதி எங்களுக்கு. மற்றொரு குடும்பமும் பின் கட்டில் குடியிருந்து வந்தது.

மூன்று குடும்பங்களும் சுத்தமான சைவக் குடும்பங்கள்.

அன்னிய பதார்த்தம் - அதாவது முட்டை, மீன், கறி சாப்பிடாதவர்களா என்று விசாரித்துத் தெரிந்துகொண்டே, வீட்டில் குடியிருக்க வாடகைக்கு விடுவார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை. என் உறவினர்கள் அனைவரும் மரக்கறி உணவினர். எங்களுக்கு வீடு கொடுத்த வேலு முதலியாரும் அவரது சுற்றத்தாரும் அதே தாவர உணவுப் பழக்கத்தை உடையவர்கள். அருகில் குடியிருந்த மற்றொரு குடும்பமும் அன்னிய பதார்த்தத்தை அண்டாதவர்கள்.

மூவருக்கும் - ஆண்களுக்கு மட்டுமே - ஒட்டியுள்ள சாதிப்பட்டம் 'முதலியார்' என்பதாகும்.

இருப்பினும் நாட்டு மரபுப்படி மூவரும் மூன்று பிரிவினர்கள்.

நாங்கள் மாகறல், ஆற்பாக்கம் வகையறா. வேலு முதலியார் கவாந்தண்டலம் வகையறா. மற்றவர் கடம்பத்தூர் வகையறா.

இம்மூவரும் உண்ணல், உறவு கொள்ளுதல் ஆகிய இரண்டிலும் தனித் தனியே இருந்து வந்தவர்கள்.

'வகையறா' என்பது அன்னியச் சொல். 'சாதி'யென்பதும் தழூவல்; இரண்டும் தேவையற்றவை; ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவை; மக்கள் இனநேயத்தைச் சிதைப்பவை. இவை என் பிள்ளைப் பருவத்தில் எனக்குப் புலப்படவில்லை.

வெயில் காய்வதைப் போல, மழை நனைவிப்பதைப் போல. தனித்தனிச் சாதி என்பதை இயற்கையாக ஏற்றுக் கொண்டேன்.

''சரியானபடி பார்த்தால், நாம் அய்யர் சமைத்த உணவைக்கூட உண்ணக்கூடாது.

''கொண்டை கட்டி வேளாளராகிய நாம், சிவபெருமானின் சடைமுடி யிலிருந்து தோன்றியவர்கள். நம் முன்னோர்களுக்கு இது தெரியும்.

''அவர்கள் அய்யர், அய்யங்கார் வீடுகளில்கூட உண்ணாமல் வாழ்ந்தார்கள். இப்ப காலம் கெட்டுப் போச்சு. அய்யர் கடையிலே சாப்பிடுகிறோம்.

''ஆனால் அடுத்த பகுதியில் குடியிருக்கும் வேலுமுதலியார் வீட்டில் செய்ததை உண்ணாதே. அப்படியே கடம்பத்தூரார் வீட்டில் கொடுப்பதையும் தின்னாதே'' என்று என் பாட்டி சொன்னது நினைவிருக்கிறது.

''சரி'' என்று ஒப்புக் கொண்டேன். ஈராண்டு அக்கட்டுப்பாட்டினை மதித்தேன். பிறகு குலைந்துவிட்டது.

'அய்யர் உயர்ந்தவர்' என்று அவர்கள் நினைக்க, 'நாங்கள் அதிலும் உயர்ந்தவர்கள்' என்று என் முன்னோர்கள் கருத, காவாந்தண்டலம்

வகையறாவும், கடம்பத்தூர் வகையறாவும் அப்படியே நினைத்தார்கள்! அவர்கள் தனித்தனி.

முற்காலத்தில் எங்களைச் சமபந்தியில் வைத்து உண்ண மாட்டார்கள். எங்கள் வீடுகளில் உண்ண மாட்டார்கள். எல்லோரிடமும் இல்லா விட்டாலும், இளைஞர்கள் இடையிலாகிலும், இன்று ஒருவர் வீட்டில் ஒருவர் உண்ணும் பழக்கம் வந்துவிட்டது. ஆனால் கொள்வினை கொடுப்பினைத் தொடர்பு மட்டும் இன்றும் கிடையாது.

ஒரே மாவட்டத்தில், சில இடங்களில் அக்கம் பக்கத்து ஊர்களில் குடியிருக்கும் ஒரே நிலைத் தூய்மையுடைய சைவ முதலியார்கள், மூன்று பிரிவினர்களாகத் தனித் தனியாக இருப்பதை நினைத்தால், இன்று எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

என்னைக் கவர்ந்த திருவிழாக்கள்

சமுதாயத்தின் பிரிவினைப் போக்கு இருக்கட்டும். வீட்டின் அமைப்பைப் பற்றிச் சொல்கிறேன்.

எங்கள் வீடு, நெல்லுக்காரத் தெருவில், தென்னண்டை வாடையில், மேற்குப் பாதியில், மண்டபத்திற்கு மூன்றாவது வீடாக இருந்தது.

அதை அடுத்துப் பஜனைக்கூடம் ஒன்று இருந்தது. பல நாள்களில் பஜனையோடு பூஜையும் நடக்கும். பிரசாதமும் கிடைக்கும். மார்கழித் திங்களில் நாள்தோறும் மூன்றையும் பெறலாம்.

நானோ இரண்டை மட்டுமே பெறுவேன். அரைத் தூக்கத்தில் பஜனைப் பாட்டுக்களைக் கேட்பேன். எல்லோரையும் போல் வழிபடுவேன்.

வெண்பொங்கலோ, சுண்டலோ, பிற பிரசாதங்களோ, வழங்கத் தொடங்கியதும், முன்னே இருந்த நான் எப்படியோ பின்னே போய்விடுவேன்.

சிறுவனாக இருந்தபொழுதே, கையேந்தி நிற்பதற்கு என் மனம் ஒப்பாது. இடித்துத் தள்ளுகிற மற்றவர்களுக்கு இடம் விட்டு விட்டு அங்கிருந்து நழுவி விடுவேன்.

என் வீட்டில் குடியிருக்கும் மற்றவர்கள், பஜனை மடத்தில் தங்கள் பங்கைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தால், நான் வெறுங் கையனாக இருப்பதைக் காண்பார்கள்.

என்னோடு பங்கிட்டுத் தின்பதற்கு முன்வருவார்கள். அவர்கள் நட்பை இழக்கக்கூடாது என்பதற்காக மிகச் சிறிதளவு மட்டுமே அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வேன்.

'பிழைக்கத் தெரியாத பிள்ளை' என்று அக்கம் பக்கத்துப் பெரியவர்கள் என்னைச் சுட்டிக் காட்டிப் பேசிக் கொண்டது நினைவிருக்கிறது.

நான் ஏழாம் வயதில்தான் முதன்முதல், காஞ்சிபுரத்தைப் போன்ற பெரிய நகரமொன்றைக் கண்டேன்.

அது பேருந்து வண்டிகள் ஓடாத காலம். அன்றைய காஞ்சி, கார்களைக் காணாத காஞ்சி.

மாட்டுவண்டி, மிதிவண்டி, குதிரைவண்டி ஆகியவற்றை மட்டுமே கொண்ட காஞ்சிக்கு வந்தேன்.

அதுவரையில் குதிரை வண்டிகளையோ, ஈர் உருளிகளையோ நான் கண்டதில்லை. அந்தப் புதுமைகள் என்னைக் கவர்ந்தன.

அவற்றிலிருந்து விடுபட்டு எப்பக்கம் திரும்பினாலும், வானுயர் கோபுரங்கள் தென்பட்டன. அகன்ற, தேரோடும் தெருக்களில் நாள் தோறும் திருவிழா ஊர்வலங்களைக் கண்டேன்.

முற்காலத்தில் திருவிழாக்களை ஏற்பாடு செய்த பக்தர்களிடம், முனைப்புக் குறைவாகவும் விட்டுக் கொடுக்கும் நல்லியல்பும் அதிக மாகவும் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் ஒரே காலகட்டத்தில், இரு பெரும் கோயில் திருவிழா நிகழ்வதில்லை. ஒரு விழா முடிந்ததும் மற்றொரு கோயில் விழா என்ற முறையில் நடக்கும்.

திருவிழா ஊர்வலங்கள், வாணவேடிக்கைகள், அலங்காரங்கள், கடை கண்ணிகள் ஆகியவை என் சிறு வயதில் என்னை ஈர்த்தன.

வெகுநாள், காஞ்சிபுரம் வரலாற்றுச் சிறப்புடைய, இந்தியப் பெரும் நகரங்களில் ஒன்று என்பதை அறியேன்.

தமிழ்நாட்டின் சிறப்பு மிக்க வரலாற்றில், பின்னர் அது வழங்கவிருக்கும் நிகழ்ச்சிகளை அன்று நான் எப்படிக் கற்பனை செய்வேன்.

வேத மதத்தையும், சமண சமயத்தையும், பௌத்த அறத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக வளர்த்த 'சீலமூர்' இது என்பதை நெடுநாள்களுக்குப் பின்னரே படித்தறிந்தேன்.

பல்லவர் தலைநகராக விளங்கிய இந்நகரம், யுவான் சுவாங் என்னும் சீனப் பயணியை ஈர்த்த தலைநகரம் என்பதையும் பிற்காலத்தில் தானறிந்தேன்.

'தொன்மையும் சீலமும் செறிந்த காஞ்சி' என்பதை அறியாத பருவத்தில், அதன் புற அழகு என்னைக் கவர்ந்தது.

எங்கள் நெல்லுக்காரத் தெருவின் இருமருங்கிலும் உயர்ந்து முதிர்ந்த வேப்பமரங்கள் நிழல் தந்ததோடு அழகூட்டின.

இருமருங்கிலும் உள்ள பெருமரங்கள் கைநீட்டி, ஒன்றை ஒன்று கைகுலுக்குவதுபோல் காட்சியளித்தன.

இத்தகைய இயற்கை இன்பங்களைப் பல்வேறு இடங்களிலும் கண்டு திளைத்ததாலோ என்னவோ, அக்காலப் பெரியவர்களாகிய

திரு.வி.க., இராஜாஜி, பெரியார் போன்றவர்கள், கொள்கைகளில் எதிர் எதிர் வரிசைகளில் நிற்க நேரிட்டபோதும், மனித அன்பு அறாதவர்களாக, நல்ல நண்பர்களாகக் கடைசிவரை வாழ்ந்தார்கள். இந்தப் பண்பு வாழையடி வாழையாக வளர வேண்டாமா?

காஞ்சியில் நான் கண்ட புதுமைகள், விழாக்கோலங்கள், கிடைத்த தின்பண்டங்கள் ஆகியவை, அப்பா அம்மாவை மறந்து இருக்க எனக்கு உதவின.

என் வகுப்பு ஆசிரியர்

நான் குடியிருந்த வீட்டிற்குச் சில வீடுகளுக்கு அப்பால் தேவல்ல இராமசாமி அய்யர் செகண்டரி பள்ளி நடந்து வந்தது. அது பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் இயங்கி வந்தது. இன்றும் சிறப்பாக நடக்கிறது. ஆனால் இடம் மாறியுள்ளது.

டி.ஆர். பள்ளியென்று சுருக்கமாக அழைக்கப்படும் புகழ்பெற்ற அந்தப் பள்ளியில் சேர்ந்தேன்.

என்னை எடை போட்டுப் பார்த்தார்கள். மூன்றாம் வகுப்பிற்குத் தகுதி என்று முடிவு செய்தார்கள். அதில் சேர்ந்தேன்.

நாட்டுப்புறப் பள்ளியிலிருந்து நகரப் பள்ளிக்கு மாறியதால், கீழ் வகுப்பிற்குத் தள்ளாத காலம் அது.

அன்று நடுநிலைப் பள்ளிவரை, பாடத்திற்கு ஓர் ஆசிரியர் என்று இல்லை. ஒரு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்ற முறையே இருந்து வந்தது.

என் வகுப்பு ஆசிரியரின் பெயர் திரு. வைத்தியநாதசாமி அய்யர். அவரது உயரம் ஆறடிக்கு மேல்; நிறம் மாநிறம்; சிடு சிடுப்பு இல்லாத தோற்றம்.

அவர் தூய வெள்ளைப் பஞ்சகச்சம், நீண்ட கறுப்பு மூடு கோட்டு, தும்பை மலர் வெண்மையுடைய உயரமான தலைப்பாகை ஆகியவற் றோடு வகுப்புக்கு வருவார். அவருடைய தோற்றப் பொலிவு எங்களைக் கவர்ந்தது.

ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்ததும், பூட்டி வைத்துள்ள மேசையைத் திறப்பார்; நீண்ட பிரம்பை எடுத்து மேசையின் மேல் வைப்பார். அப்புறம் மாணவர்கள் வருகைப் பதிவை முடிப்பார். பிறகு பாடங்களை நடத்துவார்.

இருவேளையும் பள்ளி உண்டு. இடைவேளையில் எல்லாரும் வீட்டுக்குப் பறந்து செல்வோம். உண்டுவிட்டுத் திரும்பி வருவோம்.

பள்ளிக்கூடப் புறக்கடையில் சிறிது திறந்தவெளி ஒன்று இருந்தது. அங்கே 'டிரில்' நடக்கும். பரந்த விளையாட்டுத் திடல் இல்லாமை ஒரு குறை.

மூன்றாம் வகுப்பில் முப்பத்தைந்து மாணவர்கள் இருந்தோம்; மாணவியர் இல்லை. பெண்களுக்குத் தனிப் பள்ளி இருந்தது. எங்களில் ஐவர் மட்டும் வெளியூர்களில் இருந்து வந்தவர்கள்; மற்றவர்கள் காஞ்சிபுரத்துக்காரர்கள்.

நகரின் நிலைமை ஊட்டிய திகைப்பு, பள்ளி கூடத்தின் ஒழுங்கு, வகுப்பு அறை கண்டிப்பு முதலியவை எங்கள் ஐவருக்கும் புதிது.

தம் தம் ஊரில் நாங்கள் ஐவரும் பெரிய இடத்துப் பிள்ளைகள். காஞ்சியில், இந்தப் பள்ளியில் அப்படியில்லை. பலரில் சிலர், அவ்வளவே!

அழமாட்டாத குறையாகப் பல்லைக் கடித்துக்கொண்டு எப்படியோ வகுப்பில் இருந்து வந்தோம்.

'வடிவேலுவை ஆளாக்கும் முயற்சியில், தேவைப்பட்டால், கண்கள் இரண்டையும் விட்டுவிட்டு, உடம்பை யெல்லாம் தோலுரித்தாலும் பரவாயில்லை' என்று என்னைப் பள்ளியில் சேர்க்கும்போது, என் தந்தை கூறியது நினைவில் நின்று, என்னை அச்சுறுத்திக் கொண்டே இருந்தது.

படிப்பில் மனம் ஒன்றாமையாலும், அச்சத்தாலும் எனக்குப் பாடம் ஏறவில்லை. என்னுடன் வந்திருந்த மற்ற நால்வரும் என்னுடைய நிலையில்தான் இருந்தார்கள்.

மூன்று வாரங்கள்வரை ஆசிரியர் பொறுத்துப் பார்த்தார். மூன்றாம் வாரம், வெள்ளிக்கிழமை, கடைசிப் பாடப் பிரிவின்போது, ஆசிரியர் எங்கள் ஐவரையும் தனித்தனியே பெயர் சொல்லி அழைத்தார்.

நல்ல பிரம்படி கிடைக்கும் என்று எண்ணி, நடுக்கத்தோடு நின்றோம்.

அடி கிடைக்கவில்லை, பின் என்ன கிடைத்தது? அழைப்புக் கிடைத்தது? எதற்கு? பொறுத்துக் கேளுங்கள்!

வைத்தியநாதசாமி அய்யரின் கருணை

''நீங்கள் சனிக்கிழமை எண்ணெய் தேய்த்து முழுகுவது உண்டா?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''ஆம் சார்!'' என்றோம்.

''சரி. சீக்கிரம் மூழ்கிவிட்டு, ஒன்பது மணிக்கெல்லாம் ஏகாம்ப ரேசுவரர் கீழண்டை மாடவீதியில் உள்ள என் வீட்டிற்கு வந்து சேருங்கள். வரும்போது, புத்தகம், பலகை, பலப்பம் இவற்றைக் கொண்டு வாருங்கள். பழைய பாடங்களைத் தனியாக மீண்டும் கற்றுக் கொடுக்கிறேன்'' என்று அவராகவே ஆணையிட்டார்.

ஆசிரியருக்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறு வழி இல்லை. ஆயினும் சனிக்கிழமை விடுமுறையை இழந்து விடுகிறோமே என்ற கவலை பிறந்தது. 'இச்சனி பல நாள் தொடருமோ' என்ற அச்சம் எழுந்தது. மனக்குறையோடு ஐவருமாகச் சேர்ந்து போனோம். வழியில் கச்சாலேசுவரரையும் குமரனையும் கும்பிட்டுக் கேட்டுக் கொண்டோம்.

'பல சனிக்கிழமைகள் இந்தப் புதிய தொல்லை தொடரக் கூடாது' என்று வேண்டிக் கொண்டோம்.

எங்கள் தேர்ச்சிக்குத்தானே உதவுகிறார் என்பதை உணராத சிறுபிள்ளைப் பருவத்தில் இருந்தோம்.

அடம்பிடிக்கும் உபாயம் நல்லதென்று எங்களுக்குத் தோன்றிற்று. வேண்டுமென்றே, தவறாகப் படிப்பது, தவறாக எழுதுவது, தவறாகக் கணக்குப் போடுவதென்று, எங்களுக்குள் முடிவு செய்தோம். அப்படியே நடந்தோம். பிழைகள் ஏராளமாக மலிந்தன. கணக்குகள் தவறின.

பகல் உணவு வேளை வந்தது. ஆசிரியரின் மனைவி, வெளியே வந்து,

''சாப்பாடு போட்டிருக்கிறோம். சாப்பிட வாருங்கள்'' என்றார்.

அய்யர் உள்ளே சென்றார். உண்டபிறகு, களைப்புத்தீர உறங்குவார் என்று எதிர்பார்த்தோம். ஆசிரியருக்கு அப்போது வயது அறுபதை நெருங்கிக் கொண்டிருந்தது.

எனவே பெரியவர் எங்களை வீட்டிற்கு அனுப்பிவிடுவார் என்று நினைத்தோம். குதித்தோடப் பக்குவப்படுத்திக் கொண்டோம்.

நினைத்தது நடக்கவில்லை. ஆசிரியர் உணவருந்தினார். உடனே திண்ணைக்குத் திரும்பி வந்தார்; சாய்மணையில் சாய்ந்து கொண்டார்.

''எல்லாவற்றையும் அப்படி அப்படியே வைத்துவிட்டுப் போங்கள். உங்களுக்கும் சாப்பாடு பரிமாறி இருக்கிறது. உள்ளே போய் சாப்பிட்டு விட்டு வாருங்கள். மீண்டும் படிக்கலாம். இரவுக்குள் சரியாக வராவிட்டால் இரவும் இங்கேயே இருங்கள், இராச் சாப்பாடும் இங்கேயே. ஐந்து பேரும் புரள, திண்ணை பெரிதாகவே இருக்கிறது'' என்றார்.

''வீட்டில் கொடுக்கும் செல்லம் ஆசிரியர் வீட்டில் கிடைக்குமா? நம் பாச்சா இவரிடம் பலிக்காது. இரவு இங்கே தங்க வேண்டாம். பேசாமல் ஒழுங்காகப் படிப்போம்.'' - கைகளைக் கழுவும்போது, இப்படி மெல்லப் பேசிக் கொண்டோம்.

கூடத்தில் மணக்கும் உணவு பரிமாறப்பட்டது; நடையில் அல்ல. உணவு சுவையாக இருந்தது. மிக அன்போடும் பரிமாறப்பட்டது. மனமார மென்று உண்டோம்; உண்டு வந்ததும் படிக்கத்

தொடங்கினோம். இருட்டுவதற்கு முன் ஒரு வாரப் பாடத்தை முடித்து விட்டோம். வீட்டுக்குப் போகவிட்டார். மகிழ்ச்சியோடு வீடு திரும்பினோம். வழியில் மீண்டும் கும்பிட்டுவிட்டு வீடு சேர்ந்தோம்.

தனிப் பாடமுறை அடுத்த இரு சனிக்கிழமைகளில் தொடர்ந்தது. ஆனால், திரும்பப் படிப்பதை, பகல் உணவுக்கு முன்பே முடித்துவிட்டு, வீட்டுக்கு வந்து விட்டோம்.

காலத்தினால் செய்த உதவி

கடைசி சனிக்கிழமை. நாங்கள் வீடு திரும்பப் புறப்பட்டபோது ''பயல்களா!, நீங்கள் இப்போது வேர்ப் பிடித்து விட்டீர்கள். இனிமேல் நன்றாகப் படித்துவிடுவீர்கள். ஆனால், எப்போதாவது என் உதவி தேவைப்பட்டால் தயங்கி நிற்காதீர்கள். போகலாமா என்று யோசிக்காதீர்கள். உங்கள் வீடு மாதிரி வாருங்கள். நான் இருக்கிறேன் சொல்லிக் கொடுக்க'' என்று கனிவாகச் சொல்லியனுப்பினார். கல்வி மருத்துவர், வைத்தியநாத சாமி அய்யர். அப்புறம்?

'நம் வைத்திநாதசாமி அய்யர் இருக்க நமக்கேன் பயம்' என்று தெம்போடு படித்தோம். பின்னர் அவரிடம் தனிப்பாடங் கேட்கத் தேவை ஏற்படவில்லை. ஐவர் கல்வியும் நன்கு பச்சை கட்டிற்று. ஐவரும் வகுப்பில் தேர்ச்சி பெற்றோம்.

'வாங்கும் சம்பளத்திற்கு வகுப்பறையில் பாடஞ் சொல்லுதல். மக்கள் தொண்டாகத் தனிப்பாடம்' என்ற நல்ல உயரிய கோட்பாட்டோடு, என் ஆசிரியர் பணியாற்றியதால், நான் கல்வியில் வேர் ஊன்றி நன்கு வளர வழி ஏற்பட்டது.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்னும் குறள் அன்று எனக்குத் தெரியாது! பின்னர் கற்றேன்.

பல்லாண்டுகளுக்குப் பிறகு இந்தக் குறளின் ஆழ்ந்த பொருளை உணர்கிறேன். அதை இன்னும் எண்ணி எண்ணி மகிழ்கிறேன். வளர்க வைத்தியநாதசாமியின் நல்ல மரபு.

அப்படித் தனிப் பாடம் சொல்லிக் கொடுத்ததற்கு ஊதியம் ஏதும் அவர் கேட்கவில்லை. நாங்களும் அவருக்கு உண்மையில் ஒன்றும் கொடுக்கவில்லை.

'உண்டால் அம்ம இவ்வுலகம்.... பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்னும் புறநானூற்றுச் செய்யுள், எத்துணையைப் பொதிந்து வைத்துள்ளது.

இது மேடையில் ஒலிக்கிறது; எழுத்தில் மின்னுகிறது; உள்ளத்தில் ஊன்றி விட்டால்....? அல்லல் ஏது?

இதைப் படித்த நம்மில் பாதிப் பேராகிலும் காஞ்சிபுரம் வைத்தியநாதசாமி அய்யர் போன்று ஊக்க வைத்தியராக மாறினால் உலகம் இத்துணை அல்லல் படாதே!

வைத்தியநாதசாமி அய்யர், 'காலத்தாற் செய்த உதவியால்' மூன்றாம் வகுப்பை முதல் முறையில் தேறியதுபோல், பின்னர் எல்லா வகுப்புகளிலும் ஆண்டுக்கு ஆண்டு தேர்ச்சி பெற்றேன்.

நான்காம் வகுப்பு முடியும்வரை 'தேவல்ல இராமசுவாமி அய்யர் நடுநிலைப் பள்ளி'யில் படித்த நான், ஐந்தாம் வகுப்பிற்கு 'யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளி'க்குப் போனேன்.

இன்றும் அப்பள்ளி நற்பணியாற்றி வருகிறது. ஆனால், பெயர் மாற்றம் பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக, 'ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளி' என்னும் பெயரில் நிலவுகிறது.

முதலில் சேர்ந்த பள்ளியோ வீட்டுக்கு அருகில், அதே வாடையில் தெருவில் இறங்காமலே நடந்து போகலாம். ஆனால் போய்ச் சேர்ந்த உயிர்நிலைப் பள்ளியோ, சற்றுத் தூரத்தில் இருந்தது. அதை அடையக் காலையில், வண்டிகள் நிறைந்த நெல்லு மண்டித் தெரு வழியாகப் போக வேண்டும். சிறியவனாகிய எனக்கு அது ஆபத்தானது. இருப்பினும் அங்கே போவானேன்? இருந்த இடத்தில் இடர்ப்பாடா? நெய்யாடிவாக்கத்தில் நடந்ததுபோல், நடக்கக்கூடாத எதுவும் நடந்துவிட்டதா?

4. கிறித்துவ உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன்

தேவல்ல இராமசாமி அய்யர் நடுநிலைப் பள்ளியில் ஈராண்டு படித்தேன்; எவ்வித இடையூறும் எழவில்லை. நானும் பிழையேதும் செய்யவில்லை.

ஆயினும் தொலைவில் உள்ள வேறு பள்ளிக்கு மாறிவிட நேர்ந்தது. அந்தக் கதையைக் கேளுங்கள்.

அப்போது, யூ.எப்.சி.எம் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. ஞானாதிக்கம் என்பவர்.

அவர் திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். மிடுக்கான மேனாட்டு உடையில் கச்சிதமாகப் பள்ளிக்குச் செல்வார்.

திரு. ஞானாதிக்கம் நான் படித்த நடுநிலைப் பள்ளிக்கு நான்காம் வீட்டில் குடியிருந்து வந்தார்.

காலையில் தம் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும்போதும் மாலையில் வீடு திரும்பும்போதும் என் வீட்டைத் தாண்டியே செல்ல வேண்டும்.

அப்படிச் செல்கையில் அவர் என்னைப் பார்த்தது உண்டாம். என்ன காரணத்தாலோ அவருக்கு என்னை மிகவும் பிடித்து விட்டது.

'உயர்நிலை வகுப்புகளுக்கு வந்தால் மூன்றாண்டே இருப்பான். இப்போதே நம் பள்ளிக்கு வந்துவிட்டால், ஏழாண்டுகள் இருப்பான், அவ்வளவு நீண்ட காலத்தில் இச்சிறுவனைச் சரியானபடி ஆளாக்கி விடலாம்.' இப்படி ஓடியது அவருடைய சிந்தனை.

நான் பள்ளிக்கூடப் படிப்பு பெற்ற காலத்தில், கிறுத்துவப் பள்ளிகளில், கிறுத்துவம் ஏட்டோடு நிற்கவில்லை. மக்கள் தொண்டாகச் செயல்பட்டது. கிறுத்துவத்தைச் சாராத பொது மக்களுக்குத் தொண்டாக மணம் வீசியது.

'பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறாயோ, அப்படியே நீ பிறரிடமும் நடப்பாயாக' என்னும் ஏசுவின் அருள் மொழியை நடைமுறைப்படுத்த முயன்றனர் அக்காலக் கிறுத்துவ ஆசிரியர்கள்.

'உன்னைப் போலப் பிறரையும் நேசிப்பாயாக' என்ற ஏசுநாதரின் கட்டளையை நிறைவேற்றுவதிலேயே முனைப்பாக இருந்தார்கள்.

இவ்வுணர்வுகள் பொங்கி வழிந்ததால், நாலு சமயத்தவரையும் தேடிப் பிடித்து, ஆளாக்கினார்கள். எல்லாச் சாதியாரையும் நாடி ஆளாக்கினார்கள்.

திரு. ஞானாதிக்கம் என்னைத் தம்முடைய பள்ளிக்குக் கொண்டு போக விரும்பினார்; கிறுத்துவனாக்கலாம் என்னும் எண்ணத்தால் அல்ல.

தம்முடைய அவ்விருப்பத்தை, ஏற்கெனவே அப்பள்ளியில் படித்து வந்த என் தாய் மாமன் திரு. சுந்தரசேகரிடம் தெரிவித்தார்.

அவர், அதை என் தந்தையிடம் கூறினார். அவ்வளவு பெரியவர் கேட்பதை மறுக்க மனமில்லாமல், என் தந்தை, பள்ளி மாற்றத்திற்கு உடன்பட்டார்.

என் சாதி அகந்தையின் கூர் மழுங்கிற்று

1921 இல் சேர்ந்து ஐந்தாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்புவரை ஒரே யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளியில் படித்தேன்.

ஒடுகாலாக நேரிடாததே - ஒரே சூழலில் கற்று வளர்ந்ததே - எவருக்கும் நல் வாய்ப்பாக அமையும். என்னுடைய வாய்ப்போ வேறொரு நன்மையையும் நல்கிற்று.

'பெரிய சாதி' சூழலில் பிறந்து, 'பெரிய வீட்டு'ப் பிள்ளையாக வளர்ந்த எனக்கு, அதுவரை, பல சமய, பல சாதி மாணவர்களோடு பழகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

தேவல்ல இராமசாமி பள்ளியிலும் நான் படித்தபோது, இந்துக்கள் மட்டுமே இருந்தார்கள். 'மேட்டுக் குடியினரே' மாணவர்கள்.

இக்கிறுத்துவப் பள்ளியில்தான் என்னுடன் சேர்ந்து பல சாதி மாணவர்கள் படித்தார்கள். கிறுத்துவர்கள், இஸ்லாமியர்கள், சமணர்கள் ஆகியோர் என் சகாக்கள் ஆனார்கள்.

இது, என் சாதி அகந்தையைக் கூர்மழுங்கச் செய்தது. சமயப் பொறையை முளைக்க வைத்தது.

எவருடைய சாதியையும் சமயத்தையும் பொருட்படுத்தாமல், அவரவருடைய மனிதத் தன்மையைக் கொண்டு மதிப்பிடும் போக்கினைக் கருக்கொள்ளச் செய்தது.

இவற்றிலும் மேலான ஓர் 'அருளை'க் காணும் பேறு எனக்குக் கிட்டிற்று.

பிற பள்ளிகளில் படித்திருந்தால் அப்பட்டறிவு கிட்டியிராது. அப்பட்டறிவு கிட்டியிராவிட்டால், நான் நல்லவனாகி இருக்க மாட்டேன்.

மானுடப் பெருங்கடலைச் சேர்ந்த பல்லாயிரம் கோடி துளிகளிலே நானும் ஒருவனாக இருந்திருப்பேன்.

எண்ணற்றவர்களைப் போல் வெகுளி, வஞ்சினம், பழி வாங்குதல் ஆகிய கொடிய சூறாவளிகளில், நானும் சிக்கிச் சீரழிந்திருப்பேன்.

அப்படிப் பாழாக்காமல் என்னைக் காப்பாற்றியது ஒரு நிகழ்ச்சி. பொறை தோய்ந்த அந்த நிகழ்ச்சி, என்னில் கலந்துவிட்டது. என்னைப் புதியவனாக்கி விட்டது. அது, அரை நூற்றாண்டுக் காலமாக எனக்குக் கைவிளக்காகப் பயன்பட்டு வருகிறது. நல்வழி காட்டி நடத்தி வருகிறது.

அந்த 'அற்புத' நிகழ்ச்சி என்ன? அது வெளியிட்ட அழியாத பேரொளிதான் என்ன?

அதைக் காட்டுமுன், மற்ற ஆசிரியர்களை அறிமுகப்படுத்தி விடுகிறேன்.

ஆசிரியர் சமாதானம்

உச்சி விளக்கோடு நிற்கலாமா? அதற்குத் துணையாக விளங்கும் அத்தனை மாடி விளக்குகளையும் காட்டினால் மட்டுமே முழுமை பெறும்.

அந்த நாள்களை நினைக்கும்போது என்னுள் இன்ப நினைப்புகளே ஊறுகின்றன. ஐந்தாம் வகுப்பு முதல் பள்ளியிறுதிவரை எனக்கு ஆசிரியர்களாக விளங்கிய அனைவருக்கும் என்னைப் பிடிக்கும்.

எனக்கும் எல்லாரையும் பிடிக்கும். எவரும் என் பேரில் எரிச்சல் கொள்ளவில்லை. அது அவர்களுடைய பண்பாட்டின் அடையாளம்.

அந்தச் சில ஆசிரியர்களுக்குச் செல்வமாகிய அப்பண்பாடு, எல்லாருக்கும் சொத்தாகும். எப்போது? தக்கார் கை பட்டால்; திறமையுள்ள தட்டார் கைபட்ட பொன் அழகிய அணிகலன்களாவது போன்று.

திரு. சமாதானம் என்பவர் என்னுடைய ஐந்தாம் வகுப்பு ஆசிரியர். சிலருக்கே பெயர்ப் பொருத்தம் உண்டு. அது அவருக்கு மிக மிகப் பொருத்தமான பெயர்.

அவர் யாரிடமும் கோபப்பட்டதை நான் கண்டதில்லை.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னையில் அவரைக் காணும் பேறு கிட்டிற்று. அன்றும், இளமையில் கண்ட அதே அமைதி நிலவும் திருமுகத்தைக் கண்டேன்.

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தபோது, அவர் பயிற்சி பெறாத சாதாரண ஆசிரியர்.

நான் முதல் படிவத்திற்குப் போனபோது, அவர் ஈராண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு, ஆசிரியப் பயிற்சி பெறப் போகிறார் என்று கேள்விப்பட்டேன்.

என்னை வியப்பும் ஏக்கமும் கௌவிக்கொண்டன. இவ்வளவு நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுப்பவருக்கு யார் பயிற்சி கொடுக்க முடியும், என்று எண்ணி வியப்புற்றேன்.

இவரைப் பார்த்து மகிழும் பேறு போய்விடுகிறதே என்று மனத்திற்குள்ளாகவே ஏங்கினேன்.

பசுமலையில் ஆசிரியப் பயிற்சிபெற்ற பிறகு, திரு. சமாதானம் அதே உயர்நிலைப் பள்ளிக்குத் திரும்பி வந்தார். அறுபது வயதுவரை அமைதியாகப் பணியாற்றினார். ஓய்வு பெற்ற பிறகு தாம்பரத்தில் குடியேறினார்.

சாரண ஆசிரியர் அரங்கநாதம்

திரு. அரங்கநாதன் என்பவர் எனக்கு வகுப்பு எடுத்த 'செகண்டரி' நிலை ஆசிரியர். அவர் சாரணீய ஆசிரியரும் ஆவார். அவர்தான் என்னைச் சாரண இயக்கத்தில் சேர்த்தார்.

அவருடைய ஊக்கத்தால் 'டெண்டர்புட்டு', 'இரண்டாம் வகுப்பு சாரணன்' தேர்வுகளில் வெற்றி பெற்றேன்.

அவர் நடத்திய சாரணப் பயிற்சி என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவரோடு இரண்டு மூன்று சாரணப் பாசறைகளுக்கு, மிகுந்த மகிழ்ச்சியோடு போனேன்.

ஒரு முறை, அவர் தலைமையில், 'சாரணக்குழு' பழைய சீவரம் சென்றது. அக்குழுவில் நானும் இருந்தேன்.

சென்றவர்களில், என்னுடன் படித்த சுப்பராவ் என்னும் நண்பரும் நானும் மட்டும் சைவ உணவினர்.

எல்லாரும் திருமுக்கூடலில், பாலாற்றில் குளித்து விளையாடிக் கொண்டிருந்தோம்.

எங்கள் இருவரையும் கிண்டல் செய்ய வேண்டுமென்று, இரண் டொரு சகாக்களுக்குத் தோன்றிற்று.

தங்கள் துண்டுகளைப் போட்டு மீன்களைப் பிடித்தார்கள். அத்தனையும் பொடிசுகள். அவற்றைத் தண்ணீர் நிறைந்த புட்டியில் போட்டு மறைத்துக்கொண்டு வந்தார்கள்.

நாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பினோம். சமையல் நடந்து கொண்டிருந்தது. நண்பர்கள் புட்டியிலுள்ள மீன்களைக் காட்டி, அவற்றைச் சமைக்கப் போவதாகவும், பரிமாறப் போவதாகவும் சொன்னார்கள்.

நாங்கள் இருவரும் திடுக்கிட்டோம். எங்களுக்கு என்னவோ செய்தது. வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது.

'மரக்கறி உணவே உண்போம் என்று அடம் பிடிப்பவர்களுக்குச் சாரண இயக்கத்தில் இடமில்லை' என்று சிறு பிள்ளைகள் மிரட்டினார்கள்.

'உண்ணாமல், பட்டினியாகவே இருப்போம்' என்று நாங்கள் இருவரும் மிரட்டினோம்.

அந்த நிலையில் சாரண ஆசிரியர் திரு. அரங்கநாதம் தலையிட்டார். 'விளையாட்டுக்குச் சொன்னதை மெய்யாகவே எண்ணி வேதனைப்பட வேண்டாம்' என்று கூறி எங்களைத் தேற்றினார்.

'கிண்டலை, யார் எவ்வளவு தூரம் தாங்குவார்கள் என்று உணர்ந்து, கிண்டல் செய்வதற்குத் தெரிந்து கொண்டால் மட்டுமே, நட்பு கெடாதிருக்கும்' என்பதை மற்றவர்களுக்கு இனிமையாக எடுத்து உரைத்து, எங்களை அமைதிப்படுத்தினார்.

இந்த நல்ல சாரண ஆசிரியரின் மகன் திரு. விட்டோபாபு கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் உதவி இயக்குநராக உயர்ந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

ஜப்பானில் பெரிய பூகம்பம் 1926 இல் ஏற்பட்டது. அழிவு அதிகம்.

ஜப்பானியர்களுக்கு உதவி செய்வதற்காக, நம் நாடு முழுவதும் நிதி திரட்டப்பட்டது. எங்கள் பள்ளியிலும் நிதி திரட்டினோம்.

எங்கள் பள்ளியில் நான் திரட்டிய நிதியே அதிகப்படியானது என்று அறிவிக்கப் பட்டபோது பரவசமானேன்.

இன்னும் சில ஆசிரியர்கள்

திரு. செல்லய்யா என்பவர் மற்றோர் ஆசிரியர். கெட்டிக்காரர்; நல்லவர். திருவாளர்கள் பிரகாசம், தேவசகாயம், பாக்கியநாதன், பொன்னையா, சேஷாத்திரி அய்யங்கார், சங்கர அய்யர் ஆகியோர் எனக்கு உயர்நிலை வகுப்புகளில் பாடஞ் சொல்லியவர்கள்.

என் தமிழ் ஆசிரியர் பெயர் திருவாளர் நரசிம்மாச்சாரியார். இவர்கள் அனைவரும் கண்டிப்பையும் மெய்யான அன்பையும் சொத்தாகக் கொண்டவர்கள். 'கட்டுப்பாடு, கல்வியின் உயிர்நாடி' என்பதை அவர்களிடம் கல்லாமல் கற்றோம்.

தலைமை ஆசிரியர் ஞானாதிக்கம்

தலைமையாசிரியர் திரு. ஞானாதிக்கம், உதவித் தலைமையாசிரியர் திரு. பொன்னையா ஆகிய இருவரும் ஒழுங்கு காப்பதில் மற்றவர் களுக்கு முன் மாதிரிகளாக விளங்கினார்கள்.

வேண்டித் தம் பள்ளிக்கு என்னை அழைத்த தலைமை ஆசிரியர், எனக்கு எவ்விதத் தனிச் சலுகையும் காட்டவில்லை. மற்றவர்களிடம் காட்டிய கண்டிப்பையே என்னிடமும் காட்டினார்.

மாணவர்கள் நேரம் தவறாமல் வரவேண்டுமென்பதில், திரு. ஞானாதிக்கம், 'நெருப்பாக' இருந்தார்.

பள்ளியில் தொடக்க மணி அடித்ததும், அவர், நுழைவாயிலில் வந்து நின்று விடுவார். நேரங்கழித்து நுழைபவர்களுக்குப் பிரம்படி கிடைக்கும்.

அந்த உயர்நிலைப் பள்ளியில் ஏழாண்டுகளில், ஒரே ஒருமுறை மட்டுமே, நான் மணி அடித்தபின் உள்ளே சென்றேன்.

தலைமை ஆசிரியர் சினத்தோடும் பிரம்போடும் நிற்பதைக் கண்டேன். என்னைக் கண்டதும் பிரம்பை ஓங்கினார். நான் நடுநடுங்கிப் போனேன். ஆனால்? அவருடைய பிரம்பு என் கைமேல் வீழ்ந்தபோது வலிக்கவில்லை.

கடிது ஒச்சி, மெல்ல எறியும் கலையில் வல்லவர், எங்கள் தலைமையாசிரியர் என்பதை அன்று அறிந்து கொண்டேன். அப்போக்கு என்னுடையதாகி விட்டது.

திரு. ஞானாதிக்கம் கற்றுக் கொடுத்த போக்கு, என் நீண்ட காலத் தொண்டின்போது, நான் யார் வயிற்றிலும், என் முதுகிலும் கூட, ஓங்கி அடிக்காதபடி, என்னைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்திக் காத்து வந்தது.

பலரிடம் வேலை வாங்க வேண்டிய நிலைக்கு உயர்ந்துவிட்ட அனைவரும் இப்பாடத்தை மனத்தில் கொள்ளுதல் அவர்களுக்கும் நல்லது; அவரோடு பணி புரிவோருக்கும் உதவி.

எத்தனையோ வித்தைகளைக் கற்றும், மெல்ல எறிய மட்டும் கற்றுக் கொள்ளாததால், மக்களைத் தேவைக்கு அதிகமாகத் துன்புறுத்தி, அவ்வேழைகள் பொழிந்த கண்ணீர் வெள்ளத்தில் சிக்கித் திண்டாடிய சிலரை, பிற்காலத்தில் நான் காண நேர்ந்தது.

'கடிதுஒச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்'

எதை எதையோ எட்டிப் பிடிக்க வேண்டுமென்று நினைப்போர், இக்குறளை நாள்தோறும், மும்முறை நினைவுபடுத்திக் கொள்வார்களாக.

என் உயர்நிலைப் பள்ளியில் ஆண்டு விழாக்கள் சிறப்பாக நடக்கும். விழாக் கூட்டங்களில் எல்லா மாணவர்களுக்கும் இடம் கொடுக்க இயல்வதில்லை.

எனவே, பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கும், பரிசு பெறுபவர்களுக்கும் மட்டுமே இடம் கொடுப்பார்கள்.

நான், ஒவ்வொரு வகுப்பிலும் படிப்பில் பரிசுகள் பெறுவேன். எனவே, எல்லா ஆண்டுகளிலும் விழாக்களில் கலந்து கொண்டேன்.

விழாவின்போது, தலைமையாசிரியரும், பிற பட்டதாரி ஆசிரியர்களும் தத்தம் பட்டத்திற்குரிய சிறப்பு கௌனில் வருவது வழக்கம்.

பிற்காலத்தில், அந்த 'கௌன்' ஊர்வலத்தில், நானும் பத்தொன்பது ஆண்டுகள் நடக்க நேரிடும் என்று யாரும் கனவு காணவில்லை.

ஓர் ஆண்டு விழாவிற்கு, அப்போது நடைபெற்ற இரட்டை ஆட்சியில் கல்வி அமைச்சராக விளங்கிய திரு ஏ.பி. பாத்ரோ தலைமை தாங்கினார்.

தலைமையாசிரியர் திரு. ஞானாதிக்கம், தம் வரவேற்பு உரையில் அப்போதைய அரசின் கல்விக் கொள்கையை எடைபோட்டு மாறுபட்ட தமது கருத்துகளைக் கூறினார்.

அவற்றைக் கேட்டுவிட்டு, திரு பாத்ரோ சங்கடப்படவில்லை. முகம் சுளிக்கவில்லை; சலித்துக் கொள்ளவில்லை; வெகுளவும் இல்லை. மாறாக, தம் உரையில், அவற்றை மதித்துக் குறிப்பிட்டார்.

'பல கோணங்களிலிருந்து, கல்வி கோட்பாடுகளையும் அமைப்பு களையும் ஆய வேண்டும். ஆசிரியர்களும் பள்ளிகளை நடத்துபவர்களும் அப்படி ஆய்ந்து பார்த்து, கருத்துகளைச் சொன்னால், பொது மக்களுக்கு நன்மையான கல்வியைக் கொடுக்க வழி பிறக்கும்.

நாங்கள் மாற்றுக் கருத்துகளைக் கண்டு மருளமாட்டோம்; துணிந்து கூறி உதவுங்கள்' என்று அன்புடன் வேண்டிக் கொண்டார்.

அரசியல் உரிமை இல்லாத காலத்திலேயே பேச்சுரிமை வழங்கிய அமைச்சரை, விழாவிற்கு வந்திருந்த பலர் பாராட்டக் கேட்டேன்.

அவரோடு அரசியலில் கருத்து மாறுபாடு கொண்டிருந்தவர்களும் அவருடைய உயர்ந்த பண்பாட்டை மிகவும் வியந்து பாராட்டினார்கள்.

தாளாளர் ரெவரெண்ட் மெக்லீன்

எங்கள் பள்ளியின் தாளாளரைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேனே! அவர் தங்கமானவர்; சொல்லும் செயலும் ஒன்றானவர். அவர் பெயர் ரெவரெண்ட் மெக்லீன் என்பதாகும்.

அவர் ஸ்காட்லாந்தில் பிறந்து வளர்ந்தவர். கிறுத்துவ சமயப் போதகராகக் காஞ்சிபுரத்தில் தொண்டாற்றி வந்தார். அவரே எங்கள் யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளியின் தாளாளர்.

அவர் ஆறாம் படிவத்துக்கு 'பைபிள்' பாடம் நடத்துவார். நான் அவரிடம் பைபிள் பாடம் கற்றவன்.

'என்ன? அக்காலக் கிறுத்துவப்பள்ளியில், இந்துப் பையன்களும் கிறுத்துவ வேதம் படிக்க வேண்டுமா?' என்று மலைக்காதீர்கள். அப்படியொன்றும் கட்டாயமில்லை.

'வேத பாடம்' அல்லது 'ஒழுக்க பாடம்' என்பது பாடமுறை. கிறுத்துவ மாணவ மாணவிகள் வேத பாடமே படிக்க வேண்டும். இந்து, இஸ்லாமிய மாணவர்களுக்கோ 'ஒழுக்க பாடம்.'

நான் இப்பள்ளியில் சேர்ந்தபோது, ''உங்களுக்காக ஒழுக்க பாடம் நடத்துகிறோம்''. 'வேத வகுப்பு' நீங்கள் நுழையக் கூடாத இடம் அல்ல.

''கிறுத்துவர் அல்லாதவரும், விரும்பினால் அதைப் படிக்கலாம்; அந்த உரிமை உண்டு. ஆகவே உங்கள் விருப்பப்படி எந்தப் பாடத்தைப் படிப்பதென்று முடிவு செய்யுங்கள்,'' என்று அறிவிக்கப்பட்டது.

பைபிள் படித்தேன்

''எனக்கு ஒன்றும் புரியவில்லை''. அதை என் தந்தையிடம் கூறினேன்.

''கிறுத்துவ வேதத்தைப் படிப்பதால் நீ ஒன்றும் கிறுத்துவனாக மதம் மாறிவிடப் போவதில்லை. நீ, பிறிதொரு சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லதே. ஒழுக்கப் பாடத்திற்குப் பதில், 'பைபிள்' பாடத்தையே எடுத்துப்படி'' என்றார்.

என் தந்தை அவ்வளவு உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது எதனால்?

முன்பு அவை எப்படியிருந்திருப்பினும் நான் மாணவனாக இருந்த காலத்தில் கிறுத்துவப் பள்ளிகள் எல்லாருடைய நம்பிக்கைக்கும் உரியனவாகவே நடந்து வந்தன.

அந்தக் காலக் கிறுத்துவ ஆசிரியர்கள், கிறுத்துவ மாணவர்களை மட்டும் ஊக்குவிப்பவர்களாகச் செயல்படவில்லை. எல்லாரையும் ஆதரித்தார்கள்.

அகப்பட்டதையெல்லாம் கிறுத்துவமயமாக்கும் கிறுத்துவ அருளுக்குப் புறம்பான முனைப்பில் அவர்கள் அப்போது செயல் படவில்லை.

மற்றப் பள்ளிகளில் ஆதரிக்கப்படாதவர்களுக்கெல்லாம் தக்க சரணாலயங்களாக, கிறுத்துவ கல்விக் கூடங்கள் சிறப்பாக இயங்கின.

கிறுத்துவர்களுக்குச் சலுகையும் பிற சமயத்தவருக்குத் தொல்லையும் கொடுக்க அக்காலக் கிறுத்துவ ஆசிரியர்கள் முனைந்ததில்லை. எனவே நாட்டுப்புறத்தாரும் கிறுத்துவக் கல்விக்கூடங்களை நம்பினார்கள்.

செய்வன திருந்தச் செய்தல் என் தந்தையின் இயல்பு. என் தாயும் அரைகுறை ஈடுபாட்டை அறியாதவர். அப்படியிருக்க அவ்வியல்பு என்னை மட்டும் விட்டுவிடுமா?

படித்த பைபிளை, ஒப்புக்காகப் படிக்காமல், ஆர்வத்தோடு படித்தேன். புதிய ஏற்பாட்டினைக் கீழ் வகுப்புகளில் தமிழில் படித்தேன். மேல் வகுப்புகளில் ஆங்கிலத்தில் கற்றேன்.

வேத பாடத்தில் ஒவ்வோர் ஆண்டும் முதல் பரிசையோ இரண்டாம் பரிசையோ தட்டிக்கொள்ளுவேன்.

கிறுத்துவ வேதத்தைப் படிக்க நேரிட்டதை, தாம் பெற்ற நற்பேறாகக் கருதினார், தமிழ்த்தென்றல், திரு.வி. கலியாணசுந்தரனார்.

பல்துறைத் தொண்டில் தோய்ந்திருந்த தமிழ்ப் பெரியார், அப்படிக் கருதியது மிகைபடக் கூறியதல்ல.

இதை நான் என்னுடைய எளிய வாழ்க்கையில் உணர்கிறேன். நான் பைபிளைப் படித்ததைப் பற்றி மகிழ்கிறேன். பெருமைப்படுகிறேன். அப்பாடம், இன்றும் சறுக்கு நிலத்தில் உதவும் ஊன்றுகோலாக எனக்குப் பயன்பட்டு வருகிறது.

பசுமையான உள்ளம் உடைய இளமைப்பருவத்தில் ஏசுநாதரின் அருமையான மலைப் பொழிவையும் பிற அறவுரைகளையும் கேட்பது, கேடில் விழுச்செல்வமாகும்.

வைதீகர்களிடம் கண்ட சமரச உணர்வு

எனக்கு நான்காம் படிவத்தில் கணக்குப் பாடம் கற்பித்த திரு. சேஷாத்திரி அய்யங்கார் வீர வைணவர்; உயரமானவர். எலுமிச்சம் பழம்

நிறத்தினர். தோற்றப் பொலிவுடையவர். பாடஞ் சொல்லுவதிலும் வல்லவர். எல்லா மாணவர்களிடமும் அன்பாக நடந்து கொண்டார்.

திரு. அய்யங்கார் மேலண்டை இராஜ வீதியில் கச்சாலீஸ்வரர் கோயிலுக்கு அருகில் குடியிருந்தார்.

எல்லாப் பிரம்மோற்சவங்களின் போதும் வாண வேடிக்கைகள் உண்டு. கச்சாலீசுவரர் கோயிலுக்கு முன், உயர்ந்த பந்தலின்கீழ் சுவாமியை 'மண்டகப்படி' செய்வார்கள். அவ்விடத்தில் வாண வேடிக்கைகள் நடந்தபிறகு, மீண்டும் புறப்பாடு.

ஊர்வலம் அய்யங்கார் வீட்டைத் தாண்டியே செல்லவேண்டும். விழாக் காலங்களில், அவர் வீட்டுத் திண்ணைக்கு நானும் நண்பர்களும் செல்வோம்.

கணக்கு அய்யாவும் எங்களோடு சேர்ந்து வாணவேடிக்கைகளைப் பார்ப்பார். சிவனுடைய ஊர்வலமாக இருந்தால், வாண வேடிக்கை முடிந்ததும் வீட்டுக்குள் போய்விடுவார். ஊர்வலம் வீட்டைத் தாண்டிய பிறகே வெளியே மெதுவாகத் தலைநீட்டுவார்.

வீர வைணவர், சிவன் முகத்தில் விழிக்கக் கூடாதென்னும் மரபை அவரிடமே தெரிந்துகொண்டேன்.

எங்களுக்குள் சைவ வைணவப் பகை கிடையாது. என்னுடைய நெருக்கமான உறவினர்களில் சிலர் சைவர்களாகவும் சிலர் வைணவர்களாகவும் இருப்பார்கள்.

என் தந்தையின் கொடி வழி திருநீறு பூசுவோர்; தாயின் முன்னோர்களோ நாமதாரிகள்.

எங்கள் உறவுக் குடும்பம் ஒன்றிற்கு, காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயிலில், 'அருகு' தீவட்டி பிடிக்கும் உரிமை உண்டு.

அதாவது, மூலவருக்குப் பக்கத்தில் நின்று தீவட்டி பிடிக்கும் உரிமை அக்குடும்ப ஆண்களுக்கு உரியதாகும்.

சிவன் முகத்தைக்கூடக் காணக்கூடாத வைதீகரான கணக்கு ஆசிரியர், மாணவர்களிடம் சைவன் வைணவன் என்றோ இந்து, பிற சமயத்தவன் என்றோ வேற்றுமை காட்டியதில்லை. அவரிடம் பார்ப்பனர், அல்லாதார் வேற்றுமை உணர்வு மின்னியதைக்கூட நாங்கள் கண்டதில்லை.

புறத்தே வைதீகர்களாகக் காட்சியளித்த பலரிடம் ஊடுருவியிருந்த சமத்துவ, மனித உணர்வினை, வெளியே முற்போக்காளர்களாக நடித்துக் கொண்டிருக்கும் பலரிடம் நான் காணாது ஏமாறியது பிற்காலத்தில்.

சைக்கிள் விடக் கற்றுக்கொண்டேன்

பதின்மூன்று வயது முதல் சில ஆண்டுகள்வரை எனக்குச் சைக்கிள் விடுவதில் மோகம். வாடகை வண்டிகளைக் கொண்டு, சைக்கிள் விடக் கற்றுக் கொண்டேன்.

என் நண்பர் ஒருவர் புதிய பி.எஸ்.ஏ. சைக்கிள் வாங்கினார். சில தடவை நானும் அவரும் மாறி மாறி விட்டுப் பார்த்தோம். ஒரு தடவை, அவர் சைக்கிள்விட, நான் அவர் பின்னால் நின்றுகொண்டு பயணம் செய்தேன். வேகமாக ஓர் மூலையில் திரும்பும்போது பின் சக்கர உருளையின்மேல் வைத்திருந்த என் இடதுகால் நழுவிற்று. நொடியில், சமாளிப்பதாக, நினைத்துக்கொண்டு, காலைத் தூக்கி வைத்தேன். இடது கணுக்கால் சக்கரக் கம்பிகளுக்கிடையில் சிக்கியது. பொத்தென்று இருவரும் வீழ்ந்தோம்.

என் காலில் இருந்து இரத்தம் வடிந்தது. கணுக்காலில் சதை பிய்த்துக் கொண்டது; எலும்பு தெரிந்தது. அங்கே ஏற்பட்ட வடு, என்னுடைய ஆள் அடையாளங்களில் ஒன்றாக நிலைத்துள்ளது.

அடிபட்ட நான், கிறுத்துவ மருத்துவ சாலைக்கு மாட்டு வண்டியில் சென்றேன்; கட்டுப் போட்டுக்கொண்டு, அதே வண்டியில் வீடு திரும்பினேன். ஒரு வாரத்திற்குமேல் நான் பள்ளிக்குப் போகவில்லை.

புண் ஆறினதும் பள்ளிக்குச் சென்றேன். கணக்கு வகுப்பு வந்தது. திரு. சேஷாத்திரி அய்யங்கார் வந்தார். நான் மீண்டும் வகுப்புக்கு வந்திருப்பதைக் கவனித்தார்.

வெகுளாமல், இனிமையாக, 'உன் உடம்பிற்கு என்ன' என்று கேட்டார்.

நடந்ததைச் சொன்னேன்.

அய்யங்கார் வெகுண்டாரா? கிண்டல் செய்தாரா?

வால் பிடிக்க வேண்டாம்!

என்னுடைய கணக்கு ஆசிரியர், திரு. சேஷாத்திரி அய்யங்கார், எவ்விதப் படபடப்பும் இல்லாமல், மிக அமைதியாகக் கூறிய அறிவுரை:

''வேலு, நீயாக எதையும் ஓட்டு; அதில் தவறினாலும் பரவாயில்லை. பிறருக்கு வால்பிடிக்கும் போக்கு மட்டும் எப்போதும் வேண்டாம்.''

இந்தக் கருத்துரை, உலகம் அறியாத என் பிஞ்சு உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது. வால் பிடிக்காமை என் இயல்பாகி விட்டது.

இளமையில் உருவான இயல்பு மாற மறுக்கிறது. 'காலம் மாறிவிட்டது. என்ன தெரியும் எனபதைவிட, யாரைத் தெரியும்

என்பதே கவனத்திற்குரியது. சான்றோரைவிடத் தொடர்ந்தோரையே விரும்பும் காலம் இது' என்று உலகம் உணர்த்தினாலும், வால் பிடிக்கா இயல்பினை என்னால் விடமுடியவில்லை.

பிற்காலத்தில் இதனால் நான் பட்டபாடு கொஞ்சமல்ல. இன்று படும்பாடும் சிறிதல்ல. இந்தப் பாடும் சேர்ந்ததுதானே வாழ்க்கை.

பிற சொற்களைக் கலக்காதீர்!

என் உயர்நிலைப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர் திரு. பொன்னையா ஆவார். அவர் தலைமை ஆசிரியரைவிடக் கண்டிப்பானவர் என்று பெயர் எடுத்தவர். அது எவ்வளவு தூரம் உண்மையோ! நான் நேரில் உணரும் வாய்ப்பு கிட்டவில்லை.

திரு. பொன்னையாவிடம் நான் ஆங்கிலம் படித்தேன். நன்றாகச் சொல்லிக் கொடுத்தார். ஆனால் ஒரு தொல்லை, ஆங்கில வகுப்பில் ஆங்கிலத்தில்தான் பதில் சொல்ல வேண்டும்; தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

இவ்விதி எங்களிடையே ஆங்கிலத்தில் பேசும் பழக்கத்தை வளர்த்தது.

வாய் நிறைந்த கொழுக்கட்டையை விழுங்கத் திண்டாடும் குழந்தைகளின் நிலையில் நாங்கள் தவித்தோம்.

தமிழிலேயே பேசும் என்னைப் போன்றவர்களை 'தமிழ் வெறியர்கள்' என்று வன்மையாகக் குற்றஞ்சாட்டுவதை என் காதுகள் பல்லாண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறது.

ஆனால், திரு. பொன்னையாவை யாரும் 'ஆங்கிலப் பித்தன்' என்று குறை கூறவில்லை. கூறாததே நீதி.

உப்புக் கேட்டால் அதோடு சிறிது சர்க்கரையும் சேர்த்துக் கொடுப் பார்களா? சர்க்கரை, உப்பைவிட அதிக விலையானது என்பதற் காகவும் அதை உப்போடு கலந்துபெற, நம் அறிவு ஒப்புவதில்லை அல்லவா?

'உப்பு உப்பாகவும், சீனி சீனியாகவும் தனித்தே இருக்கட்டும்' என்பது எப்படிப் பொருள் வெறியாகும்.

அப்படியே, 'ஆங்கிலத்தை ஆங்கிலமாகவே பேசுவதுபோல் தமிழைத் தமிழாகவே பேசுங்கள்; எழுதுங்கள்; எவ்வளவு மதிப்பானதாயினும் பிறசொற்களைக் கலக்காதீர்கள்' என்று சொல்லும் போது மட்டும், ஏனோ நடுநிலைமையை இழந்து விடுகிறார்கள்?

அழுக்காறு இல்லாத ஆசிரியர்கள்

உயர்நிலை வகுப்புகளில் எனக்கு வரலாற்றுப் பாடம் சொல்லிக் கொடுத்தவர்கள் இருவர். திரு. கு. பிரகாசம் என்பவர் மூத்தவர்; திரு. தேவசகாயம் என்பவர் அடுத்தவர்.

இருவருமே இனிய இயல்பினர். எல்லோரும் அவர்களுடைய வகுப்புகளை விரும்புவார்கள்.

திரு. கு. பிரகாசம், பின்னர், அரக்கோணம் கிறுத்துவ உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமையாசிரியர் ஆனார். நல்ல பணியாற்றினார்.

ஆனால் அந்தக் காலத்தில் 'ஆசிரியர் விருது' முறை முளைக்க வில்லை. எனவே, எல்லோரையும் போலவே ஒய்வு பெறும் வயதில் ஓய்வு பெற்றார்.

திரு. தேவசகாயம், காஞ்சியை விட்டுவிட்டுத் திண்டுக்கல்லுக்குச் சென்றார். அங்கே தூயமேரி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பணிபுரிந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் மதுரை மாவட்டக் கல்வி அலுவலன் ஆனேன். அந்நிலையில், அப்பள்ளியின் ஆய்வுக்காகச் சென்றேன். என் நல்லாசிரியரைக் கண்டு மகிழ்ந்தேன்.

தம் மாணவன், தம்மினும் சிறந்த பொறுப்பிற்கு உயர்ந்துள்ளதைக் கண்டு அவர் மனம் பூரித்துப் போனார். அவரிடம் அழுக்காற்றின் இழை சிறிதும் ஓடவில்லை.

நான் கணக்கையும் பௌதிகத்தையும் விருப்ப பாடமாகப் படித்தேன்.

திரு. சேஷாத்திரி அய்யங்காருக்குப் பிறகு திரு. பாக்கியநாதன், எனக்குக் கணக்குப் பாடம் கற்பித்தார்.

இவரையும் மாணவர்களுக்குப் பிடிக்கும். மிகப் பொறுமையோடு சொல்லிக் கொடுப்பார்; என்றைக்கும் சிடுசிடுக்க மாட்டார். அன்பும் பண்பாடும் மேற்கூறிய மூவரிடமும் மிளிர்ந்தன.

எங்கள் தமிழ் அய்யா திரு. நரசிம்மாச்சாரியார். அவர் வைதீக வைணவர். இக்காலத் தமிழ் அய்யாக்களைப்போல - ஏன், ஆசிரியர்களைப் போல - கண்ட உடையில் வரமாட்டார்.

'சரக்கு மிடுக்கா? செட்டியார் மிடுக்கா?' என்பது பழமொழி.

கல்வி வணிகர்களுக்கு இரண்டு மிடுக்கும் தேவை. அக்கால ஆசிரியர்களுக்கு யாரும் கைநிறையச் சம்பளம் கொடுக்கவில்லை. இழுபறி வாழ்க்கையே பல ஆசிரியர்களுடையது.

ஆயினும், 'தோழனோடும் ஏழமை பேசேல்' என்னும் நல்வழியை அவர்கள் பின்பற்றினார்கள். தங்களுக்குள்ள வறுமையை ஊரறியப் பறைசாற்றி, மாணவர்கள் முன், தங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்ளவில்லை.

தாங்களே மதிப்பைக் குறைத்துக் கொண்டு, பின்னர் மேடைதோறும் தங்களை 'மதிப்பாரில்லையே' என்று ஒப்பாரி வைக்கவில்லை.

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்பதை உணர்ந்து, எல்லா ஆசிரியர்களும் மதிப்பான உடையில் பள்ளிக்கு வந்தனர்.

என் தமிழ் ஆசிரியர் திரு. நரசிம்மாச்சாரியார், கீழ்ப்பாய்ச்சு வைத்துக் கட்டிய வேட்டியோடும், மூடு கோட்டோடும், உயர்ந்த தலைப்பாகை யோடும் பள்ளிக்கு வருவார். இதில் எதுவும் அழுக்குப் படிந்திராது. அவர் நெற்றியைத் திருமண் அலங்கரிக்கும்.

அவருடைய தமிழ்ப் பாடம் எனக்குப் பிடிக்கும். என் நெஞ்சில் தமிழ்ப் பற்றினை முதலில் விதைத்த பெருமை அவரையே சாரும்.

தமிழ் ஆசிரியர் திரு. நரசிம்மாசாரியாரும் மாணவர்களிடம் சாதிப் பாகுபாடு காட்டியது இல்லை.

மறக்க முடியாத 'குட்டு' ஒன்றினை நான் அவரிடம் பெற்றேன். அவருடைய வகுப்பு ஒன்றில், செய்யுள் ஒப்புவித்தலில் நான் தடுமாறினேன். தமிழ் அய்யாவுக்கு வெகுளி பொங்கவில்லை; அவரைச் சோகம் கௌவியது. அவர் என்னைப் பார்த்து,

''நீ என்ன சாதி?'' என்று கேட்டார்.

அப்பள்ளியில், சாதியைக் கேட்ட நிகழ்ச்சி, அப்போதுதான் நிகழ்ந்தது. நான் திடுக்கிட்டேன்.

''தெரியாது'' என்று சொன்னேன்.

''உனக்குத் தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும், சொல்லட்டுமா?''

" உன் அப்பா அம்மா முதலியார் சாதி. நீயோ ஒட்ட சாதி, இருந்தாலும் பரவாயில்லை.

''பள்ளி முடிந்ததும் என் அறைக்கு வா, தவறிய செய்யுள்களை என் முன் மனப்பாடஞ் செய். நீ சரியாக ஒப்புவித்த பிறகே, நான் வீட்டுக்குப் போவேன்'' என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து பாடம் நடத்தினார்.

திரு.நரசிம்மாச்சாரியார் பயன்படுத்திய சொல், இக்காலத்திற்கு ஏற்காதது. இக்காலத்திலும் பலருக்குச் சினத்தை மூட்டியிருக்கும். என்னைப் பொறுத்தமட்டில் என் உள்ளத்தில் தைக்கவில்லை, ஏன்?

இவ்வசவைப் பெறும்போது நான் புதிய மனிதனாகிவிட்டேன். 'முதலியார் உயர்ந்த சாதி' என்ற உணர்வினை அடியோடு உதிர்த்துவிட்டேன்.

ஒன்றை மேலென்று ஏற்றுக்கொள்ளாதபோது, மற்றொன்றைக் கீழ் என்று கருதும் இழிந்த போக்கிற்கு இடமேது?

ஞானிகள், பொன்னையும் ஓட்டையும் ஒப்பாகவே கருதுவார் களாம். சாதியைப் பொறுத்தமட்டில், அப்போதே - ஐம்பதாண்டு களுக்கு முன்னே - நான் அந்நிலைக்குச் சமைந்துவிட்டேன்.

சாதிபற்றி மேலென்றும் கீழென்றும் மதிப்பிடுவதை விட்டு விட்டேன்.

எனவே, என்னை 'ஒட்டன்' என்று ஆசிரியர் கூறியதைக் கேட்டு நான் புண்படவில்லை. மேலும் தமிழாசிரியரின் குரலில் எந்தவித ஏளனமோ, கண்டனமோ, கடுமையோ ஒலிக்கவில்லை.

எனவே, அவர் அடைமொழியை அலட்சியப்படுத்திவிட்டேன். அவர் ஆணைப்படி நடந்தேன்.

மாலையில், அவர்முன் இருந்து மனப்பாடஞ் செய்தேன். சரியாக ஒப்புவித்துவிட்டு, வீடு திரும்பினேன்.

சாதி உணர்வு இல்லாத ஆசிரியர்கள்

வடமொழி சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆசிரியர் பெயர் திரு. சாஸ்திரியார். வடமொழி வகுப்பில் பார்ப்பனர்களே சேரலாம் என்பது அன்றைய நடைமுறை. உருது மொழியும் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

நான் படித்த காலத்தில் பத்தாம், பதினோராம் வகுப்புகளில் ஒவ்வொருவரும் இரு விருப்ப பாடங்களைக் கட்டாயம் கற்க வேண்டும்.

திரு. சங்கர அய்யர் என்பவர் எனக்குப் பௌதிகம் கற்றுக் கொடுத்தார். அவரும் சாதிச் சார்பு இல்லாமல் எல்லோரிடமும் நன்றாகப் பழகினார். அன்போடு கற்றுக் கொடுத்தார்.

அவருடைய அசாதாரண பழக்கம் ஒன்று, எங்களுக்கு நகைப் பூட்டும். அதை அவர் ஒருபோதும் உணரவில்லை.

அது என்ன பழக்கம்?

அவர் நின்றுகொண்டே பாடஞ் சொல்லும்போதே, பின்னால் திரும்பித் திரும்பிப் பார்ப்பார். அதைப் பார்த்து எங்களுக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக்கொள்ள, நாங்கள் பட்டபாடு பெரிது.

தலைமை எழுத்தர் திரு. தேவராசனையும் எந்த மாணவரும் மறக்க முடியாது. அவருக்கும் நன்மதிப்பு இருந்தது. தனக்கென்று வீடு வாசலும் இருந்தன.

அவரும் அன்பாகப் பழகுவார். அவருடைய மகன், கா. தே. தி. அரசு பள்ளியில் என் நண்பர்.

பிறகு பொதுத் தொண்டில் ஈடுபட்டுத் திராவிடர் கழகத்தின் வாயிலாக நாடறிந்த C.D.T. அரசாக விளங்கியபோதும் எனக்கு மிக நல்ல நண்பராகவே இருந்தார்.

அன்பு பொழியும் முழு நிலவு

நான் படித்தபோது, ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள், பல சமயத்தினர்; பல சாதியினர்.

யாரால் நடத்தப்படுகிறதோ, அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே வேலை என்னும் குறுகிய பார்வையை அன்றையப் பள்ளி நிர்வாகிகளிடமும் மற்றவர்களிடமும் காணவில்லை.

கையில் சிக்கிய பொது அமைப்பில் தன் சமயத்தவரை, தன் சாதியினரைக் கொண்டு நிரப்ப நோன்பிருக்கும் கிறுத்துவர்களை என் இளமைப் பருவத்தில் நான் கண்டதில்லை.

எல்லோரையும் ஏற்று எல்லோரையும் வாழ வைத்த என் உயர்நிலைப்பள்ளியைப் பற்றி எனக்கு முழுநிறைவு.

எந்த ஆசிரியர் இடத்திலும் வேறொருவர் இருக்கக் கூடாதா என்று எண்ண நேர்ந்ததில்லை. ஆசிரியர்களுக்குத் திறமை வேண்டும். அதே நேரத்தில் அன்பு பொழியும் முழு நிலவுகளாக அவர்கள் விளங்க வேண்டும். சமதை நோக்கும் இன்றியமையாதது.

மாணவர்கள் அனைவரிடமும் சாதி மதங்களைப் பாராமல், அன்போடும் இனிமையோடும் பழகும் மிக உயர்ந்த பண்பும் வேண்டும்.

இவை என்னுடைய பள்ளி ஆசிரியர்களிடம் நிரம்பி இருந்தன.

இன்னா செய்தவர்க்கும் இனியவே செய்தவர்

பண்புச் சுடர்களாகிய என் ஆசிரியர்களை வழி நடத்தியவர் ஒப்பற்ற சான்றோர். அவர், அருள்திரு மெக்லீன்; ஏசுநாதரின் அறவுரைகளை மக்களிடையே பரப்ப வந்த சமயகுருவாகவே பலரும் அவரை அறிவர்.

ஏசுநாதரின் அருள் உரைகளைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகிய சீலராகவே அவரை நான் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எப்போது, எங்குக் கிட்டிற்று? பள்ளியிலா? வெளியிலா?

பள்ளியில் அல்ல; பள்ளிக்கு அப்பால் உள்ள பரந்த உலகத்தில்.

கோயில்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் திருவிழாக்களுக்குக் குறைவில்லை என்பதை முன்னரே குறித்துள்ளேன்.

திருவிழா நாள்களில் சான்றோர் மெக்லீன், நாற்சந்திகளில் நின்று கம்பீரமாகக் கிறுத்துவப் பிரசாரம் செய்வார். நல்ல தமிழில் பேசுவார்.

''ஏன் பிறந்தார் ஏசுநாதர்? என்ன போதித்தார் ஏசுநாதர்? கர்த்தரின் கட்டளைகள் எத்தகைய மாண்புடையன?'' இவற்றை விளக்குவார். மக்கள் மொழியில், மக்கள் நிலைக்குப் பேசுவார்.

அவர் பேச்சில் பிற சமயப் பழிப்பு சேராது; கிறுத்துவின் நன் மொழிகளை நினைவுபடுத்துவார்; விளக்கவுரை ஆற்றுவார். வாழ்விக்க வந்தவரைச்சிலுவையில் அறைந்து கொன்று மகிழ்ந்த

கொடுமையினை, அவர் நம் தாய்த் தமிழில் சொல்லும்போது கேட்போர் கண்கள் குளமாகும்.

ஒரு மாலைப்பொழுது இப்படி அருளாளர் மெக்லீன் பேசிக் கொண்டிருந்தார். பேசிய இடம் இரட்டை மண்டப மூலை. அம்மூலை என் வீட்டிற்கு அருகில் இருந்தது. ஆகவே நானும் அங்குச் சென்றேன். பேச்சில் மெய் மறந்து நின்றேன். கூட்டம் பெரிதல்ல; பத்துப் பன்னிரண்டு பேர்களே இருந்தனர். அதில் நான்கு ஐந்து பேர்கள் சிறுவர்கள்.

அப்பொடியன்கள் சில மணித்துளிகள்வரை பொறுமையாகப் பேச்சைக் கேட்டார்கள், அப்புறம்? மெல்லக் குனிந்தார்கள் கைகள் மண்ணை வாரின; நொடியில் வீசினர். மெக்லீனின் முகத்தை நோக்கிப் பாய்ந்தது மண்.

பெரியவர்கள் யாரும் அதைக் கண்டு கொதிப்படையவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெரிய ஞானிகள் போலும்.

இளைஞனாகிய எனக்கு வெகுளி பொங்கிற்று. 'சிறுமை கண்டு பொங்குவது, பிழைக்கத் தெரியாமை' என்று அப்போது எவரும், எனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை.

எனவே கொந்தளிக்கும் கோபத்தோடு, பையன்கள் இருவருடைய கைகளைப் பிடித்தேன். அவர்களை நான் ஏதும் செய்யாதிருக்க முடியுமா என்று சிந்திக்கவும் நேரமில்லை.

மறுநொடி, குறிப்புமொழி பேசிற்று. திரு. மெக்லீன், அவர்களை விட்டுவிடும்படி குறிப்பால் உணர்த்தினார். அவர் கட்டளையை மீற விரும்பவில்லை. இருவரையும் விட்டுவிட்டேன்.

சமய உரை தொடர்ந்தது. அவர் பதற்றம் ஏதும் இல்லாமல் பேசினார்.

முடிவில் 'தந்தையே! அவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். ஆகவே அவர்களை மன்னியுங்கள்' என்று வேண்டினார்.

இது ஏசுநாதரின் பிரார்த்தனை; இதை நான் பைபிள் பாடத்தில் பலமுறை படித்திருக்கிறேன்.

அவ்வேண்டுதலை, பொருத்தமாக, திரு மெக்லீன் தனதாக்கிக் கொண்டது என் உள்ளத்தை உருக்கிற்று.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்பினர் ஒருவரை நேருக்கு நேர் கண்டு மகிழும் பேறு கிட்டிற்று.

பின்னர் என் வாழ்க்கை நெடுகிலும், ஒருவர் மாற்றி ஒருவர் முதுகில் குத்திய போதெல்லாம் அருளாளர் மெக்லீன் என் மனக்கண்ணில் தோன்றுவார். இந்நிகழ்ச்சி நிழலாடும்.

ஏகுவின் வேண்டுதலை வாயும் முணுமுணுக்கும். வெகுண்டு, பழி வாங்கும் பாதையில் காலெடுத்து வைக்காமல், என்னைக் காத்து வந்துள்ளேன்.

மாலை முழுதும் விளையாட்டு

நான் படித்த யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளியைப் பற்றி எனக்குக் குறையே இல்லையா? உண்டு. குறையில்லாத அமைப்பு ஏது? குறைபட்டுக் கொள்ளாத மனிதன் எவன்?

என்னுடைய உயர்நிலைப் பள்ளிக்குப் போதுமான விளையாட்டுத் திடல் கிடையாது. எனவே,விளையாட்டுகளில் எல்லோரும் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்பு இல்லை.

உடற்பயிற்சிக்கு மட்டும் போதுமான இடம் இருந்தது. எல்லோரும் நன்முறையில், தவறாமல், உடற்பயிற்சி பெற்றோம். நானும் அந்த நன்மையைப் பெற்றேன்.

பிற உடற்பயிற்சி, விளையாட்டிற்கு ஈடாக மெய்மறந்த விளை யாட்டுகளால் விளையும் மகிழ்ச்சியே தனியானவை. உலகத்தை மறந்து, சூழ்நிலையைச் சிந்தியாமல், சிறிய பெரிய பந்தொன்றையே கண்ணிலும் கருத்திலும் கொண்டு, அதையே உதைத்து, அல்லது அடித்துத் தள்ளுவதில் ஈடுபடுதல் வெறும் பொழுதுபோக்கல்ல; நல்ல பயிற்சி; பின்னர் வாழவேண்டிய வாழ்க்கைக்கு உதவும் பயிற்சி.

பெரியது ஒன்றிலே ஈடுபட்டு, முனைந்து நிற்கும்போது, மற்றவர்களை, சூழ்ந்திருப்பவற்றை - எவ்வளவு கவர்ச்சியுடையன வாயினும், சிந்தையிற் கொள்ளாத பக்குவத்தை, பந்தய விளையாட்டுகள் ஊட்டுகின்றன.

இளமையிற் பெறும் அம் மனப்போக்கு நெடுநாள் துணைநிற்கும்.

எங்கோ இருக்கிற பந்தை என்ன விரைவில், எதுவரை தள்ளி, யாரிடம் ஒப்புவித்தால் வெற்றி பெறலாம் என்னும் நுட்பமறிந்து ஆடுவதல்லவா அரிய விளையாட்டுக் கலை?

அந்தக் கலைநுட்பத்தை மறந்து தன் முன்னே, நெளிந்து குழைந்து நிற்பதனாலேயே, பகைவரிடம் பந்தை ஒப்புவித்தால் பெற்றதை இழக்க நேரிடும். தோல்வியைத் தழுவ நேரிடும்.

விளையாட்டிற்குப் பிறகு அமைதியாக இருந்து ஆழ்ந்து சிந்திப் போர்க்கு இந்த உண்மை புலனாகும்.

ஒரே வேளை அறியாமல் எதிராளியிடம் ஒப்படைத்து விட்டாலும் அடுத்த ஆட்டங்களில் அத் தவற்றினை விழிப்பாகத் தவிர்ப்பார்கள்.

விளையாட்டுகள் மனத்திற்கு மகிழ்ச்சியும் உடலுக்கு உரமும் தந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுவன.

உயர்நிலைப் பள்ளியில் இவற்றிற்கு வாய்ப்புகளை இழந்ததால் கல்லூரியிலும் நான் வாய்ப்பின்றி வாடநேர்ந்தது.

கல்விக்கூடங்கள், அமைப்பு முறைக்காக மட்டுமல்லாது மெய்யாகவே, விளையாட்டு வாய்ப்புகளைத் தாராளமாக வழங்க வேண்டும். அவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும்படி, படிப்பாரை ஊக்குவிக்க வேண்டும்.

'விளையாட்டுத்தானே' என்று அலட்சியப்படுத்தாமல் மாணவர்களும் மாணவியரும் படிக்கும் பருவத்தே விளையாட்டுகளில் பங்குகொள்ள வேண்டும்.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னால், உலகப் போட்டிகளில் ஈடுபடுவதற்காக இப்போதிருந்தே கடும் பயிற்சி பெறும் சோவியத் நாட்டின் காளையரையும் கன்னியரையும் பற்றி நிறையப் படிக்கிறோம்.

உலகப் போட்டிகளில் அதிகப்படியான பரிசுகளைப் பெற்று, முதல் இடத்தில் சோவியத் நாடு நிற்பதைக் கண்டு வியக்கிறோம்.

அந்த வெற்றி வீரர்கள் வெறும் கோயில் காளைகள் அல்லர். கடுமையான விளையாட்டுப் பயிற்சிகளுக்கு ஆட்படும் அவர்கள் கடுமையான உழைப்பிலும் உவந்து ஈடுபடுவதை உலகறியும்.

உலகப் போட்டிகளில் அநேகப் பரிசுகளைத் தட்டிக்கொண்டு வரப் பயன்பட்ட அதே மனப்போக்கும் பழக்கமுமே புதியதோர் உலகைச் செய்யவும் அவர்களுக்கு உதவிற்று; உதவுகிறது.

எனவே இளைஞர்கள் 'மாலை முழுதும் விளையாட்டு' என்று வழக்கப்படுத்திக் கொள்வது நல்லது.

5. நெஞ்சில் பதிந்த நினைவுகள்

உடலை வளர்த்தேன்

என் உயர்நிலைப் பள்ளியில் விளையாடும் வசதி குறைவு. அதனால் பாதிக்கப்பட்டவன் நான்.

ஆயினும் நான் உடலோம்பலைப் புறக்கணிக்கவில்லை. உடற்பயிற்சி வகுப்புகளுக்கு மட்டம் போட்டதில்லை.

இயற்கையில், உயரம் குறைந்தவன் நான்; அதைப் போக்கிக் கொள்ள முயன்றதில்லை.

என் குட்டையான உடம்பு மெலிந்த ஒன்றாகவும் இருந்தது.

அதில் வலிமை சேர்க்க முயன்றேன். ஓரளவு வெற்றியும் பெற்றேன்.

பன்னிரண்டாம் வயது முதல் சில ஆண்டுகள்வரை, வீட்டிலேயே, விடியற்காலையில் தண்டால், தோப்புக்கரணம் முதலிய பயிற்சிகளை மேற்கொண்டேன். உடலை வளர்த்தேன்.

ஆண் பெண் இருபாலரும் உடலோம்ப வேண்டும். இது மிகமிக இன்றியமையாக் கடமை.

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்: திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்' என்பது திருமூலர் திருமந்திரம். இது அந்தக் காலத்தில் என் காதில் விழவில்லை.

'காயமே இது பொய்யடா', என்பதை மட்டுமே, பண்டாரங்களிடமிருந்து கேட்டேன்.

எனினும் உடல் வளர்ச்சியில் இயற்கையான நாட்டம் எழுந்தது.

பச்சைக் கொண்டைக்கடலையை இரவில், தண்ணீரில் ஊறவைத்துக் காலை உடற் பயிற்சிக்குப்பின் உண்பேன்.

காளைப் பருவத்தின் தொடக்கப் பருவத்தில், ஈராண்டு காலம், காஞ்சிபுரத்திலிருந்த நத்தப்பேட்டை வரை இருப்புப் பாதையோரம் நான்கு கல் தொலைவு மாலை நேரத்தில் நடந்து வருவது வழக்கம்.

நடைப் பழக்கத்தை எனக்கு ஊட்டியவர், திரு. குழந்தைவேலு முதலியார் என்பவர்.

என் வழிகாட்டிகளில் ஒருவர்

நாடகச் செம்மல், பம்மல் சம்பந்த முதலியாரின் உறவினராகிய இவர், காஞ்சிக்குத் துணை ஆவணப் பதிவாளராக வந்தார். நான் குடியிருந்த வீட்டின் மற்றோர் பகுதியில் குடியிருந்தார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப்பட்டம் பெற்றவர். அதற்கு மேலும் அதிகமான ஆங்கிலப் புலமை பெற்றிருந்தார்.

முதலியார், டிக்கன்ஸ், ஸ்காட், ஷெல்லி, கீட்ஸ் ஆகியோருடைய ஆங்கில இலக்கியத்தில் மூழ்கி எழுந்தவர்; உரையாடலுக்குச் சிறந்தவர்.

பட்டம் பெற்ற அதிகாரியாகிய இவர், பள்ளி மாணவனாகிய என்னைப் புறக்கணிக்கவில்லை. தன் தம்பியைப் போல் நடத்தினார்.

நாள்தோறும் உலாவச் செல்லும்போது, என்னையும் உடன் அழைத்துக் கொண்டு போவார்.

மேற்கூறிய ஆங்கில நூல்களிலிருந்து சுவையான பகுதிகளை உரைநடை உட்பட - ஒப்புவித்துக்கொண்டே வருவார். மகிழ்ந்து கேட்பேன்; உணர்ந்து ஏற்கத் தவறிவிட்டேன்.

தன்னிடமிருந்த மூலநூல்களைக் கொடுத்துப் படிக்கும்படி என்னைத் தூண்டுவார்.

அந்த வாய்ப்பினை நான், இன்னும் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

காலம் அருமையானது; வாய்ப்போ மிகமிக அரியது. இவை கிடைக்கும்போது, வீணாக்கக் கூடாது. 'இன்று கற்கும் கல்வி நாளை பயன்படுமா' என்று கேட்டுக் கோட்டை விடாதீர்கள்.

என்றைக்கோ ஓர் நாள், இருபது ஆண்டுகளுக்குப் பிறகோ, முப்பது ஆண்டுகளுக்குப் பிறகோ, அந்தக் கல்வி, முன்னின்று கற்றவரைக் காக்கும்; ஊக்கும்; வளர்க்கும்.

எனவே, வாய்ப்புக் கிடைக்கும்போது சிக்கெனப் பிடித்தல் நல்லது.

தமிழோ, ஆங்கிலமோ, பிறமொழியோ எதுவாயினும் அதைக் கற்றுக் கொள்ளத் தவறிவிடாதீர்கள்.

எம்மொழிப் புலமை பெற்றாலும் செல்வழி நல்வழியாக அமையலாம்.

விருந்தோம்பல் உள்ள குடும்பம்

எனக்குப் படிப்பார்வத்தை ஊட்டியவர்களில் திரு. குழந்தைவேலு முதலியாரும் ஒருவர்.

காஞ்சியிலிருந்து பல்லாவரம், வேலூர் முதலிய ஊர்களுக்கு மாறுதலான பிறகும் என்னுடன் தொடர்பு கொண்டு, எனக்கு ஊக்கமூட்டிய நல்லவர் திரு. முதலியார்.

'நம் முதலியாரா?' என்று கேட்க அவருக்குத் தெரியாது.

அந்நல்லார் காஞ்சிக்கு வந்தபோது புதுமாப்பிள்ளை.

மைசூர் இராச்சியத்தில் பெரிய மருத்துவப் பதவியில் இருந்தவருடைய அருமை மகளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றிருந்தார்.

அம்மையாரின் தாய் வீட்டிலிருந்து அடிக்கடி தின்பண்டங்கள் வரும். வீட்டில் சுடும் பலகாரங்களுக்கும் குறைவில்லை. அக் குடும்பம் விருந்தோம்பலுக்குப் பெயர் போனது.

எனவே எனக்கு நாள்தோறும் ருசியான தின்பண்டங்கள் கிடைக்கும்.

திருமதி குழந்தைவேலுவும் என்னைத் தம்பியாகவே நடத்தினார்.

மணவூர் அம்மாவின் விளக்கெண்ணெய் தோசை

முதலில் சித்தியும் பின்னர் பாட்டியும் எனக்காகக் குடித்தனம் கட்டி, நான் படிக்க உதவினார்கள்.

நடுவில் ஓராண்டு என் பாட்டி, நெய்யாடு பாக்கத்தில் தங்கும்படி நேர்ந்தது. அப்போது காஞ்சிபுரத்தில் ஓட்டல் உணவு வசதி வரவில்லை.

'மணவூர்' அம்மா என்னும் வயது முதிர்ந்த விதவை சாப்பாட்டுக் கடை வைத்து நடத்தி வந்தார். அவர் சைவர் என்று கேள்விப்பட்டோம்.

அவரிடம் இருவேளைச் சாப்பாட்டிற்கும் காலைப் பலகாரத்திற்கும் பணங்கொடுத்துவிட்டு, ஐந்தாறு பேர்கள் சாப்பிட்டு வந்தோம்.

எளிய சாப்பாடானாலும் வீட்டுச் சாப்பாடு; உபசாரச் சாப்பாடு.

ஒரு ஞாயிற்றுக் கிழமை, காலைச் சிற்றுண்டிக்கு, தோசையும் மோர்க் குழம்பு வடையும் கொடுத்தார்.

வழக்கம்போல், தோசை மெதுவாகவும் சுவையாகவும் இருந்தது.

வடையோ வாயிற் போட்டதும் கரைந்துவிடும் அளவு மிக மெதுவாக இருந்தது. ஆயினும் அதில் என்னவோ சற்றுக் கசப்பு இருந்தது.

அதைச் சொன்னபோது எப்படிக் கசக்கும்? நாக்கில் கோளாறு என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

எப்படியோ இரண்டு வடைகளை விழுங்கிவிட்டேன். வீடு சென்றேன்.

ஒரு மணியில் வயிற்றுப் போக்கு கண்டது. பலமுறை போயிற்று. மறுநாள் வடை சாப்பிட்ட அத்தனை பேரும் அதே புகார் கூறினார்கள்.

அம்மையார் விளக்கங் கூறினார்; விளக்கம் என்ன?

சமையலுக்கு நல்லெண்ணெய் வைத்திருந்த அலமாரியில், ஒரு புட்டியில் நல்ல விளக்கெண்ணெயும் வைத்து இருந்தார்.

நல்லெண்ணெயை ஊற்றி வடை சுடத் தொடங்கியபோது வாணலியில் இன்னும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றினால் நல்லது என்று தோன்றியதாம்.

அலமாரியிலுள்ள நல்லெண்ணெய் கொஞ்சம் ஊற்றும்படி சிற்றாளிடம் கூறிவிட்டு ஒருவருக்குத் தோசை பரிமாறுவதற்குப் போய்விட்டார்.

சிற்றாள் தெரியாமல் விளக்கெண்ணெய் கொஞ்சம் ஊற்றி விட்டார்.

இதை அறியாத அம்மையார் எங்களுக்கு விளக்கெண்ணெய் வடை சுட்டுத் தந்தார்கள்.

அந்த ஒரு முறை மட்டுமே விளக்கெண்ணெய் சாப்பிட்டேன்; அப்புறம் சாப்பிட்டதில்லை.

தோசைகளும் மோர்க் குழம்பு வடைகளும்

இந்த நூற்றாண்டின் இருபதின் தொடக்கத்தில் காஞ்சியில் ஓட்டல்கள் பல இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக முளைத்த காப்பி ஓட்டல்கள் மிகச் சிலவே.

அங்கே இருவேளையும் 'காப்பி' கிடைக்கும். பகல், மாலை இருவேளை இரண்டு மூன்று பலகாரங்கள் கிடைக்கலாம்; சாப்பாடு கிடைக்காது.

உணவுச் சாலைகள் குறைவேயொழிய பலகாரக் கடைகளுக்குக் குறைவில்லை.

அந்தக் கடைகளில் இட்லி, தோசை, வடை ஆகியவை மலிவாகக் கிடைக்கும்; இடையில் அப்படிப்பட்ட பலகாரக்கடை ஒன்று இருந்தது.

அந்தக் கடை, தோசைக்கும் மோர்க் குழம்பு வடைக்கும் பேர் போனது.

தோசை சுடச் சுடக் கிடைக்கும். அது போல் கரைந்து போகும்.

காலணாவிற்கு ஓர் தோசை. அரையணாவிற்கு அருமையான மூன்று மோர்க் குழம்பு வடைகள்.

இரண்டு தோசைகளும் மூன்று மோர்க்குழம்பு வடைகளும் தின்றால் வயிறு நிரம்பிவிடும்.

இப்பலகாரங்களைத் தட்டுகளில் பரிமாறுவதில்லை; தாமரை இலைகளில் பரிமாறுவார்கள்.

வைத்து உண்ண மேசை கிடையாது. பெஞ்சுகளின் மேல் உட்கார்ந்து கையில் வைத்துக்கொண்டு உண்போம்.

நெருக்கடியான நேரங்களில் நின்றபடியே உண்ணவும் நேரிடும்.

பெரும்பாலான பலகாரக் கடைகளில் 'தனியா' காப்பியே கிடைக்கும். ஒரு குவளை காப்பி காலணா.

மாலை நேரத்தில் காலணாவிற்குக் கொண்டைக்கடலை சுண்டல் கிடைக்கும், காலணாவிற்கு இரண்டு முறுக்கு கிடைக்கும். மசால் வடையும் அதே விலை; கமகமவென்று மணக்கும்.

'நெய் பார்ப்பான்' கடையும் என் இலட்சியமும்

சிறியவனாக இருந்தபோது, காலையில் பழைய சோறு உண்டு விட்டுப் பள்ளிக்குச் சென்று வந்த நான், பன்னிரண்டாம் வயதிலிருந்து பலகாரக்காரனாகி விட்டேன்.

நெல்லுமண்டித் தெரு, அய்யர் பலகாரக் கடையில் வாங்கி உண்ட பலகாரங்களைப் போன்ற சுவையான, மணமானவற்றைப் பின்னர் உண்டதாக நினைக்கவில்லை.

நான் குடியிருந்த நெல்லுக்காரத் தெருவிலேயே பல்லாண்டு ஒரு மிட்டாய்க்கடை இருந்தது.

காஞ்சிபுரம் பூராவும் அந்த 'நெய்பார்ப்பான்'கடை விளம்பரமானது.

அது மாலை, இருட்டும் வேளையில்தான் திறக்கும்.

'ஜாங்கிரி', 'லாடு', 'பால்கோவா' இப்படியாகப் பத்து வகை இனிப்புகள் நெய்யில் செய்தவை கிடைக்கும்.

சிறு காராபூந்தி, பெருங் காராபூந்தி, முறுமுறு பகோடா ஆகிய மூன்று கார வகைகள் மட்டுமே விற்பார்.

காரப் பலகாரத்திற்குக் குறைந்தது ஓர் அணா வேண்டும்.

இரண்டணாவிற்குக் குறைந்த விலையில் இனிப்பு கிடையாது.

சிறுவனாக இருந்தபோது அக்கடையின் பலகாரங்களைச் சாப்பிடுவது ஓர் இலட்சியம். எப்படியும் வாரத்தில் மூன்று நான்கு நாள்கள் எனக்கு அந்த இலட்சியம் கைகூடும்.

கோயில் பிரசாதங்கள்

பலகாரக் கடைகள்போல, தெரு ஓரங்களில் பலர் இட்லி, தோசை சுட்டு விற்றார்கள்.

வெளியூர்களிலிருந்து வண்டி ஓட்டி வருவோர்க்குத் தெரு ஓர விற்பனையே வரப்பிரசாதம்.

பெரிய கோயில்களின் மடப்பள்ளிகளில், சோற்றுப்பட்டைகள் விற்பார்கள்.

பெருமாள் கோயிலில் புளியோதரையும் ததியோனமும் வாங்கலாம்.

மற்றக் கோயில்களில் பொங்கல், சாம்பார் சோறு, தயிர்ச் சோறு ஆகியவை கிடைக்கும்.

திருவிழாக் காலங்களில் சர்க்கரைப் பொங்கல், அதிரசம் முதலிய பலகாரங்களும் கிடைக்கும். ஆனால் நீண்ட வரிசையில் நிற்கநேரிடும்.

என் பாட்டனாருக்குச் சாப்பாட்டுச் சுவை அதிகம்; பக்தியும் உண்டு.

மாதத்திற்கு ஒரு முறையாகிலும் காஞ்சிக்கு வந்து, ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களில் தரிசனம் செய்துவிட்டு, பிரசாதங்கள் வாங்கிக்கொண்டு வருவார்.

அவர் அடிக்கடி வரவேண்டுமென்று அப்போது வேண்டிக் கொள்வேன்.

ஓட்டல்களிலும் பலகாரக் கடைகளிலும் பார்ப்பனர்களுக்குத் தனியிடம்.

அந்தக் காலத்தில் ஆதிதிராவிடர்கள் பலகாரக் கடைகளில் நுழையக் கூடாது என்பது கடுமையான விதி.

மற்றப் பார்ப்பனரல்லாதார் தனியாக இருந்து உண்போம்.

அநேகப் பலகாரக் கடைகளில், நீரோ, தனியாத் தண்ணீரோ குடிக்கும் போது குவளை, உதட்டில் தவறியும் படக்கூடாது. அவ்வளவு உயர்த்திக் கவனமாகக் குடிக்கவேண்டும்.

6. கழுத்துக்கு மேலே கத்தியா?

ஆமணக்கு இலை மருத்துவம்

மாணவப் பருவத்தில் நான் நோய் நொடிக்கு ஆளானதில்லை என்று சொல்லலாம்.

துப்புரவான வீடு, துப்புரவான உணவு, ஒழுங்கான வாழ்க்கை, உடற்பயிற்சி ஆகியவை அதற்கு உதவின.

ஆயினும் சிறுவனாக ஆறாம் வகுப்பில் படிக்கும்போது எனது வலப்பக்கத்துக் கீழ்த்தாடையில் கட்டி ஒன்று வந்தது.

ஆமணக்கு இலையை வாட்டி விளக்கெண்ணெய் தடவி, கட்டியின் மேல் போட்டு வந்தார், என் பாட்டி.

சில நாள்களில் கட்டி உடைந்தது; சீழ் வந்தது; ஆமணக்கு இலை மருத்துவம் தொடர்ந்தது.

கட்டி பாதியளவு குறைந்தபின் இரண்டாவது துவாரம் ஒன்று புதிதாகத் தோன்றியது. அதன் வழியாகச் சீழ் வடியத்தொடங்கியது.

அந்த நிலையில், கிறித்துவ மருத்துவ மனைக்கு அழைத்துப் போனார்கள்.

அங்குள்ள மருத்துவர் கட்டியைச் சோதித்தார், அறுவை மருத்துவம் செய்து கொள்ள வேண்டுமென்றார்.

திகில் அடைந்தேன்; 'என் தந்தைக்கும் அதே நிலை.

நண்பர் ஒருவரின் யோசனைப்படி, என்னுடைய தந்தை, என்னைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார்.

சென்னையில் தொண்டைமண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராகப் பணிபுரிந்த திரு. எஸ்.எஸ். அருணகிரி உதவியை நாடினோம்.

''கழுத்துக்கு மேற்பட்ட நோய்களில் வல்லுநர் டாக்டர் சங்கரநாராயணப் பிள்ளை. அவரிடம் போவோம்'' என்று சொல்லி, என்னை அவரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

பிராட்வேயில் இருந்த அவர் மருத்துவ மனைக்குப் போனேன்.

என்னைப் படுக்க வைத்தார். என் கைகளையும் கால்களையும் தம் ஆட்களைக் கொண்டு பிடித்துக் கொள்ளச் செய்தார்.

கட்டிக்குள் ஓர் ஊசியைச் செலுத்தி இழுத்தார். நான் பெருங் கூச்சலிட்டேன். பெரிய அறுவை சிகிச்சை தேவை என்றார்.

என் முகம் வெளுத்தது. அதைப் பார்த்த என் தந்தை, பின்னால் வருவதாகச் சொல்லிவிட்டு வெளியேறினார்.

கட்டணம் ரூபாய் பதினைந்தைக் கொடுத்துவிட்டே வந்தோம். அதற்கு மேல் சென்னையில் அலையாமல் காஞ்சிக்குத் திரும்பினோம்.

மறக்க முடியாத டாக்டர்

காஞ்சியில் தனியாக மருத்துவமனை நடத்தி வந்த டாக்டர் ப.சு. சீனிவாசன் கெட்டிக்காரர் என்று சென்னையில் கேள்விப்பட்டோம். ஆகவே காஞ்சிக்குப் போனதும் அவரிடம் சென்றோம்.

நோய்க் கதையைக் கேட்டுவிட்டு, என் வாயைத் திறக்கச் சொன்னார். பற்களைக் கூர்ந்து பார்த்தார்.

கீழ்க் கடைவாய்ப் பல் சொத்தை. அதனால் வந்தது இக்கட்டி. அந்தப் பல்லை எடுத்துவிட்டால், இரண்டொரு நாள்களில் கட்டி, அதுவாகக் குணமாகிவிடும். வேறு மருந்து தேவை இல்லை, என்றார்.

பல்லைப் பிடுங்க வேண்டும் என்றதும் நான் பதறினேன்.

''வலிக்கும் என்று பயப்படுகிறாயா? நான் கொறடாவால் திருகியே எடுப்பேன். அப்போது அதிகம் வலிக்கும்.

''ஆனால் சென்னைக்கு இட்டுச் செல்லுங்கள். எழும்பூர் இரயில் நிலையத்திற்கு எதிரில் 'கென்னத் தெரு' என்ற தெரு இருக்கிறது. அங்கே பல் வைத்தியம் மட்டும் பார்க்கும் வெள்ளைக்காரர் ஒருவர் இருக்கிறார்.

''அவரிடம் போனால், வலிக்காமல் மருந்து போட்டு எடுத்து விடுவார். இதோ இருக்கிற பட்டினந்தானே! போய்விட்டு வாருங்கள். அவர் பல்லை எடுக்கும்போது 'எறும்பு கடிக்கிற மாதிரி' கூட இராது'' என்று சொன்னார்.

''நல்லதுங்க! இதற்கு எவ்வளவு பீஸ்'' என்றார் என் தந்தையார்.

''ஒன்றும் வேண்டாமே! நான் ஒன்றும் செய்யவில்லையே'' என்று சொல்லிக்கொண்டே, கட்டியை மெல்லத் துடைத்து, பொடி மருந்து தூவி, ஒட்டுப்போட்டார்.

மூன்று ரூபாய்களை அவர் மேசையில் வைத்துவிட்டுத் திரும்பினோம்.

அடுத்த நாள் மீண்டும் சென்னைக்குச் சென்றோம்.

என் அங்க அடையாளமான தாடைக்கட்டி

பண்டிதர் அருணகிரிநாதர் எங்களை எழும்பூர் பல் மருத்துவரிடம் அழைத்துக் கொண்டு போனார். மருத்துவரிடம் நடந்ததைச் சொன்னோம்.

அவ்வயதில் எனக்குப் பெரிய குடுமி உண்டு. அதை நீளமாகப் பின்னி, சுத்தமாக வைத்திருந்தேன்.

அதைப் பாராட்டிக்கொண்டே, ஏதோ தடவினார்; நொடியில் பல்லைப் பிடுங்கி விட்டார்.

அந்நொடி முள் குத்துவதுபோல் இருந்தது.

மருந்து நீரால் வாய் கொப்பளித்தேன். பல் இருந்த இடத்தில் மருந்திட்டு அனுப்பிவிட்டார்.

''கட்டிக்கு மருந்து வேண்டாம்'' என்று ஆலோசனை கூறினார்.

எவ்வளவு கட்டணம்? ஐந்து ரூபாய்களே! அதைக் கொடுத்து விட்டு நிறைவோடு வெளியேறினோம்.

சில நாள்களில் கட்டி கரைந்தது. புண் முழுமையாகக் குணமாகி விட்டது.

'எளிதாகத் தீர்க்க வேண்டியதைப் பெரிதாக்கி, சிக்கலாக்கி, சங்கடப்படுவோர், சங்கடப்படுத்துவோர் பலர் உண்டு. எங்கோ ஒருவரே, எளிதாக நோய் போக்க வல்லவர்' என்பதை அப்போது உணர்ந்தேன்.

கழுத்துக்குமேல் மருத்துவர்கள் கத்திவைப்பதற்கு எளிதாக ஒப்புக் கொண்டு விடக்கூடாது. டாக்டர் சங்கர நாராயணப் பிள்ளை சொன்னபடி அறுவை மருத்துவத்துக்கு ஆட்பட்டிருந்தால் எவ்வளவு பெரிய வேதனைக்கு ஆளாகி இருப்பேனோ? அந்தக் கட்டிக்கு மூலமாகிய சொத்தைப் பல்லை எடுக்காமல் விட்டுவிட்டு, கட்டியை அறுத்துத்தான் எப்படிக் குணமாக்கி இருக்க முடியும்?

7. வெவ்வேறு சூழல்

தன்னம்பிக்கையும் தன்மானமும்

தன்னம்பிக்கை வளர்ச்சியின் வேர்; ஆணிவேரும் ஆகும்.

தன்மானமும் தேவை. இதுவே மனித வாழ்விற்கு மூச்சு.

தன்மானம் அற்றவர், நரியாகப் புழுவாகப் பூச்சியாகப் பதுங்கி, நெளிந்து, ஒளிந்து, எப்படியோ பிழைப்பார். அத்தகைய வாழ்வு வாழ்வாகாது.

எப்போது பார்த்தாலும் கூனிக்குறுகி, எல்லோர் முன்பும் அஞ்சி, ஒடுங்கி, உயிரோடிருக்கும் பிழைப்பு பரிதாபத்திற்குரியது; வெறுக்கத் தக்கது; ஒதுக்கத்தக்கது.

முனைப்பெல்லாம் தன்மானமாகாது. மெய்யான தன்மான உணர்வு, பிறருடைய தன்மான உணர்வை மதிக்கும். எல்லோரையும் ஓர் நிலையாகக் கருதும்.

பிறப்பில் தன்னிலும் உயர்ந்தோர் என்று எவரையும் ஏற்காது. தன்னிலும் தாழ்ந்தோர் என்று யாரையும் தள்ளாது; ஒதுக்காது.

இத்தகைய உணர்வு எல்லோர் சிந்தனையிலும் கலந்துவிட வேண்டும்; வாழ்க்கையின் உயிர்நாடியாகி ஒன்றிவிட வேண்டும்.

தன்மான உணர்ச்சி, வெறும் முனைப்பாகக் குத்தக்கூடாது. செருக்கு முள்ளாகத் தைக்கக் கூடாது.

செருக்கு பொல்லாதது; சொல்லாமல் அழிப்பது; கொல்லாமல் கொல்வது. செருக்கு யாருக்கும் பொருந்தாது.

நஞ்சனைய செருக்கு பலவிதம். ஆளுக்கு ஆள் காட்டிக் கொள்ளும் செருக்கை அறிவோம்.

கல்வியால் கொப்பளிக்கும் செருக்கு ஒரு நோய்; பொருட் செல்வத்தால் எழும் செருக்கும் ஒரு நோய்; செல்வாக்கால் பீறிடும் செருக்கும் அத்தகையதே.

ஆளுக்கு ஆள் செருக்கைக் காட்டுதல், பல சமுதாயங்களில் தலைகாட்டும் பயங்கர நோய்.

சமுதாயத்திலுள்ள பற்பல பிரிவுகளுக்கிடையே இடிக்கும் செருக்கும் உலகப் பொதுவுடைமை.

சாதிச் செருக்கு

நம் சமுதாயத்திற்கே தனி உடைமையாகிவிட்ட தனிவகைச் செருக்கு ஒன்று உண்டு. அது எது?

அது சாதிச் செருக்கு.

சாதிச் செருக்கு என்று புகுந்தது? எப்படி வளர்ந்தது?

தொல் கலைவாணர்களும் அறுதியிட்டுக் கூறமுடியாத அளவு ஆயுளையுடையது, சாதிச் செருக்கு.

ஊனில், உயிரில், உணர்வில் கலந்து, வாழையடி வாழையாகத் தொடர்வது, சாதி ஏற்றத்தாழ்வு உணர்வு.

நீக்கமற நிறைந்துள்ள இவ்வுணர்வைப் பொறுத்தமட்டில், நான், 'ஞானி'களின் நிலையை எட்டிவிட்டேன்; பள்ளிப் பருவத்திலேயே எட்டிவிட்டேன் என்று எழுதினேன்.

இக்கூற்று, அகந்தையின் வெளிப்பாடோ, கற்பனையோ, கதையோ என்று ஐயுறக்கூடும்.

எப்போதோ ஒருமுறை நிகழும் அற்புதத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்று திகைக்கக்கூடும்!

என் கூற்று, அகந்தையின் புது உருவமல்ல; கற்பனையில் பிறந்த கதையல்ல; அற்புதக் கலப்பல்ல; இயற்கையாக முளைத்து; தானாக வளர்ந்தது.

சமநிலை உணர்வு என்னில் இயற்கையாக முளைத்தது. காட்டில் முளைத்த வேங்கை மரமாக, ஒடிக்கப்படாமல், வெட்டப்படாமல், வளர்ந்தது.

அந்த அனுபவத்தைப் பகிர்ந்தளிக்க முயலுகிறேன்.

கருவிலே திரு

'கருவில் திருவுடையார்' என்பது உலக வழக்கு. 'விளையும் பயிர் முளையிலே' என்பது உழவர் வழக்கு.

'கருவில் திருவுடையார்' என்று பலரைச் சுட்டிக்காட்டுகிறோமா? இல்லை. சிலரையாவது காட்டுகிறோமா? அதுவும் இல்லை.

எப்போதோ ஒரு முறை, யாரோ ஒரு பெரியவரை வியத்தல் பற்றி இப்படி அடையாளம் காட்டுகிறோம்.

'கருவில் திருஉடையார்' என்பதற்கு மரபுப் பொருள் ஒன்று.

புராணீகரின் பொருளைப் பலமுறை கேட்கிறோம். எத்தனையோ தலைமுறைகளாகக் கேட்கிறோம்.

'நம்மாலே ஆவதொன்றும் இல்லை' என்னும் கவலைப் போக்கை மேலோங்க விட்டுவிடுகிறோம்.

'திருஉடைமை' எப்போதோ கிடைக்கும் பிச்சையல்ல. பல கோடியில் ஒருவருக்கே கிட்டும் பரிசல்ல. பலரும் அடையக்கூடியதே திருவுடைமை. வீடுதோறும் ஒளிவிடக்கூடியதே இது. தெரிந்த முயற்சியால் பெறுவது இது.

முயற்சியே திருவினையாக்கும். செயல்கள், முயற்சியின் பாற்பட்டவை என்று சொல்லத் தேவையில்லை. எண்ணுதலும் முயற்சியின்பாற்பட்டதாகும். எண்ணம் நுண்ணியது; மிகமிக நுண்ணியது; ஆயினும் வலியது. மின்னலையின் ஆற்றலை ஒப்பது.

முன்னர் நினைவுபடுத்திய உலக வழக்கும் உழவர் வழக்கும் உயிரியல் உளவியல் உண்மைகளை மிகமிக நுட்பமாகக் காட்டுவன.

குழந்தையே குமரனாகிறான். குமரனே, துணைவனாகிறான்; குடும்பத் தலைவனாகிறான்; சமுதாயத்தின் நாடியாக நரம்பாகச் செயல்படுகிறான்.

ஊர்த் தலைவனாக, நாட்டுத் தலைவனாக, வளர்கிறான்.

பெரிய மரத்தின் கப்பும் கிளையும் இலையும் பட்டையும் பூவும் கனியும் சிறு விதையில் அடங்கிக் கிடக்கிறது.

அதைப்போல், கால நீட்டத்தில் எதை எதையோ சாதிக்கப் போகும் மக்களின் நுண்மாண் நுழைபுலம், செயற்கரிய செய்யும் ஆற்றல், பிறர்க்கென வாழும் நற்பண்பு, கைம்மாறு வேண்டாக் கடப்பாடு ஆகியவை கருவிலேயே உறங்கியுள்ளன.

சூழ்நிலையும் குழந்தை வளர்ச்சியும்

விதை முளைக்க ஏற்ற மண்ணும் சூழலும் தேவை. முளைத்த செடி செழித்து வளர, பாதுகாப்பும் பராமரிப்பும் வேண்டும்.

ஒளியின் ஏற்றக் குறைவு, ஈர வேறுபாடு, வெப்ப தட்பம், தாவரத்தின் வளர்ச்சியை இயக்குகின்றன.

பிற்கால மனிதனின் கூறுகள் அனைத்தும் கருவுற்றபோதே உயிர்பெற்று விடுகின்றன.

சிசு, தாயின் வயிற்றில் தவங்கிடக்கும்போதே இயல்புகளை, போக்குகளைப் பெறுகின்றது.

பிறந்தபிறகு, அவை துளிர்விடுகின்றன. சிறு பிராயத்தில் வளரும் சூழல், ஆற்றல் மிக்கது. கூடும் தோழர்களும் இயல்புகளையும் போக்குகளையும் வளர்க்கவோ, மாற்றவோ, நசுக்கவோ, பயன்படுகிறார்கள்.

பிறந்து ஐந்து வயதானபிறகே, பையனோ, பெண்ணோ - அறிவு பெறத் தொடங்குவதாகக் கருதவேண்டாம்.

இங்கும் அங்கும் நடமாடத் தெரியும்வரை, குழந்தைகள் மரக்கட்டைகள் அல்லர். மழலை பேசும்வரையும்கூட, அவர்கள் கட்டைகள் அல்லர்.

பிறந்தபோதே, குழந்தை காணத் தொடங்குகிறது. காட்சியே அறிவின் தொடக்கம்.

அம்மாவை அடையாளம் கண்டு கொள்ளல் ஒரு நிலை; அத்தையை, அப்பாவை அடையாளம் காண்டல், சற்று வளர்ந்த நிலை.

பலரை அடையாளம் காணுதல் தொடர்ந்து வளரும் நிலை.

கேட்கத் தொடங்கும் குழந்தைக்கு முதலில் அம்மாவின் குரலே தெரியும். மெல்ல, மெல்லப் பலரின் குரலைத் தெரிந்து கொள்கிறது.

அம்மாவின் அன்புக் குரலுக்கும் வெறுப்புக் குரலுக்கும் வேறுபாட்டை உணரத் தொடங்குகிறது.

இப்படிக் குரல்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கி, சொற்களின் உச்சரிப்பின் வேறுபாடுகளை உணர்ந்து, அறிவில் வளர்கிறது.

எனவே சின்னஞ்சிறு வயதில்குழந்தை பெறும் சூழலும் நட்பும் வாய்ப்புகளும் வளர்ச்சிக்கு, பெரும் வளர்ச்சிக்குத் துணையாகலாம்; அல்லது மட்டியாக்கக் காரணமாகலாம்.

காந்தியம் பேசும் சிறுவன்

என் வீட்டில், மூன்று வயதுப் பையன் ஒருவன் வளர்கிறான். அவன் அன்றாடம் காலையிலேயே செய்தித் தாள்களைப் பார்க்கிறான். அவற்றில் பல படங்களைக் காண்கிறான். நாள்தோறும் ஒவ்வொரு படத்தையும் எனக்குக் காட்டுகிறான். இவற்றை விளக்கும்படி கேட்கிறான்.

'விக்ராண்ட்' கப்பலைக் கண்டான். அதன்மேல் ஒரு உண்மையில் பக்கம், விமானம் இருப்பதைப் பார்த்தான்.

''மீனம்பாக்கத்தில் இருப்பது, கப்பல்மேல் இருக்குமா?'' என்றான்.

''பக்கத்தில் நிற்கும் அம்மா யார்?'' என்றான்.

''ஆளுநரின் மனைவி'' என்றேன்.

''பக்கத்தில் இருப்பவர் ஆளுநரா?'' என்பது அடுத்த கேள்வி.

''ஆம்'' என்பது என் பதில்.

''அருகில் வெள்ளை உடையில் உயர்ந்து நிற்பவர் யார்?'' என்று அறிய இவன் துடித்தான்.

''விக்ராண்டின் தலைவன்'' என்று கேள்விப்பட்டதும், அவர் கையில் நீளமாக வைத்திருப்பதைக் காட்டி, ''அது என்ன?'' என்று அறிந்துகொள்ள விரும்பினான்.

''வாள்'' என்று கேள்விப்பட்டதும், ''அதைக் கொண்டு வெட்டு வாரா?'' என்று பதற்றத்தோடு கேட்டான்.

''சண்டை வந்தால், பகைவன் நேரே கொல்ல வந்தால், வெட்டுவார்; தன்னைக் காப்பாற்றிக் கொள்ள'' என்ற பதிலைக் கேட்டான்.

''சண்டை வராதிருக்கட்டும்! ஒருத்தரை ஒருத்தர் வெட்டா திருக்கட்டும்'' என்று காந்தியம் பேசிவிட்டான்.

காந்தியம் என்னும் பெயர் அவனுக்குத் தெரியாது. அவ்வுணர்வோ, சிறுவனிடம் இயல்பாக எழுந்தது.

ஆந்தை எப்படி இருக்குமென்று அவனுக்குத் தெரியாது. சேவலுக்கும் கோழிக்கும் வேறுபாடு தெரியாது. எந்தத் தழை ஆட்டுக்குப் பிடித்தது? அவன் அறியான். பொன் வண்டு பார்த்ததில்லை. மரவட்டை தெரியாது.

ஏழைக்குழந்தையின் உலகம்

அதே நேரத்தில், என் வீட்டிற்கு எதிரில் ஒரு நிகழ்ச்சி. வயதானவர் ஒருவர், தொரட்டால், தெருமரத்தின் கிளைகளை ஒடிக்கிறார்.

பக்கத்தில் மூன்று வயது சிறுமி, கிளை விழவிழ, விரைந்து எடுத்துக் கொண்டு ஓடுகிறாள். வாத்து ஓடுவதுபோல் குடுகுடு என்று ஓடுகிறாள்; நொடியில் திரும்பிவிட்டாள்.

அடுத்து, ஒடிந்து வீழ்ந்த மற்றொரு கிளையை எடுத்துக்கொண்டு ஓடினாள். சிறுமி நொடியில் திரும்புவதைக் கண்டு வியந்தேன்.

அவள் ஓடிய பக்கம் திரும்பினேன். கண்டது என்ன? அவளுடைய அண்ணன் - நான்கு வயது இருக்கும் - நடு வழியில் கிளைகளைப் பெற்றுக் கொண்டான். ஓடினான்.

சிறிது தூரத்தில் நின்ற தன் அண்ணனிடம் கொடுத்துவிட்டுத் திரும்பவும் பறந்து வந்தாள்.

இப்படி பத்துப் பதினைந்து கிளைகளை, அப்பனும் மூன்று குழந்தைகளுமாக ஒடித்துக்கொண்டு போனார்கள்.

இது, நான் அடிக்கடி காணும் காட்சி.

ஏழைக் குழந்தைகள் ஆடுகளோடு வளர்கிறார்கள். அவைகளைப் பற்றி நிறையத் தெரியும். கோழி அடைகாப்பது அவர்களுக்குப் புரியும். நொடியில் புரியும். பொன் வண்டோடு விளையாடும். மரவட்டைக்கு அஞ்சாது.

ஏழையின் உலகமும் அவனுடைய குழந்தைகளின் உலகமும் வேறு.

என் உறவினர்களுடைய உலகம் வேறொன்று.

இரண்டையும் ஒன்றாகச் சோதித்து, தகுதியை அளவிடப் போகிறது நம்முடைய சமுதாயம்.

வாழ்வும் வளமும் சிலருக்கு; வறுமையும் அறியாமையும் பலருக்கு; செய்யத் தகாதனவற்றைச் செய்தே வாழும் நிலை பலருக்கு.

எத்தனை காலம் நீள்வன இவை? இது போகட்டும்.

தாயும் குழந்தையும்

குழந்தை கருவில் இருக்கும்போதே, தாய் கவனமாக இருக்க வேண்டும்.

தாய் உண்ணும் உணவு, குழந்தைக்கு வலிவூட்டக்கூடும் அல்லது மெலிவிக்கக்கூடும்.

உணவுக்கேற்ற இயல்பு என்பது இயற்கைப் பொதுவிதி.எனவே தாயின் உணவு குழந்தையின் இயல்பைப் பாதிக்கும்.

உண்ணும் உணவு மட்டுமல்ல குழந்தையை உருவாக்குவது! எண்ணும் எண்ணமும் குழந்தையின் இயல்பிற்கும் பண்பிற்கும் போக்கிற்கும் காரணமாகும்.

சூலுற்றிருக்கும்போது, போராட வேண்டிய நிலைக்கு, அலற வேண்டிய நிலைக்கு, கதறவேண்டிய நிலைக்கு, ஏங்கி ஏங்கித் தவிக்கும் நிலைக்குத் தாயைத் தள்ளக்கூடாது.

கருவில் உள்ள குழந்தையுள் அவ்வுணர்வுகள் பதியும். மாறாக கருவுற்றிருக்கும்போது நிறைவோடு, மகிழ்ச்சியோடு, நம்பிக்கையோடு இருக்கும் தாய், பெற்றெடுக்கும் குழந்தை நிறைவோடு வாழ்க்கையைத் தொடங்கும்.

கருவுற்ற காலத்தில் எண்ணுவதெல்லாம் உயர்ந்த எண்ணங்களாக, மிகத் தூய்மையான எண்ணங்களாக, நன்மையான எண்ணங்களாக இருப்பின், குழந்தைக்குள் இவை விதை கொள்ளும்.

இதைச் சொல்லவே, நம் முன்னோர் 'கருவிலே திரு'வை நாடினார்கள். இதை மக்கள் முயற்சியால் பெறவேண்டும். சமுதாயம் இதற்குத் துணைநிற்க வேண்டும்.

கருவுற்ற பெண்ணின் குடும்பத்தார், அவளை மகிழ்ச்சியோடும், நற்சிந்தனையோடும் வைத்திருக்க வேண்டும். அதற்கு உதவும் பொருட்டே, சில சடங்குகளை நுழைத்தார்கள். காலப் போக்கில் இவை பயனற்ற மூடப் பழக்கங்களாக மாறிவிட்டன.

முன்னர் எத்தனை நியாயமாகக் குற்றங் கண்டிருந்தாலும், கருவுற்ற காலத்திலாகிலும் மாமிகள், மருமகளைக் குறை காண்பதையும் இடித்துரைப்பதையும் புண்படுத்துவதையும் விட்டுவிடுதல் சிறந்தது.

தாயாகப் போகிறவள், மனம் புண்பட்டால் குழந்தையும் புண்பட்ட உள்ளத்தோடு பிறக்கும். காலத்தின் முதிர்ச்சியில் புண்ணெல்லாம் கக்கும்.

உற்றார் உறவினர்களும், சூலுற்றவர் மனம் நோகாதபடியும், பெரியதை, நல்லதை, சிறந்ததையே எந்நேரமும் நினைக்கும்படியுமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

குழந்தையின் பால பருவம்

குழந்தையின் பால பருவம் மிக முக்கியமானது. அப்பருவத்தில் அச்சமூட்டுதல் கோழையாக்கும். மிரட்டுதல், முரடனை வளர்ப்பதாக முடியும்.

உரிமைக் காற்றில், ஆதரவு வெயிலில் குழந்தைகளை வளர விடவேண்டும். கூடி விளையாட, தோழமையோடு வாழ, குழந்தை களுக்கு வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும்.

பரந்த உள்ளமும் விரிந்த சிந்தனையும் வானத்திலிருந்து திடீரென வீழ்பவையல்ல! இவை, நிலம் வெடித்து வெளியாகா.

ஒவ்வொரு குடும்பமும் பொறுமையோடு, முன் யோசனையோடு, தக்க அறிவோடு, அணைத்து அணைத்து மேற்கூறியவற்றைப் பயிரிட வேண்டும்.

என்னைக் கருவுற்றிருந்த காலத்தில், என் தாய் எதற்கும் குறை பட்டதாகவோ, புண்பட்டதாகவோ, நொந்து கொண்டதாகவோ நான் கேள்விப்படவில்லை. வயிற்றிலே சரியான சூழலிலே வளர்ந்திருப்பேன் என்று ஊகிக்கிறேன். பிறந்த பிறகு?

மூத்த பிள்ளை; செல்லப் பிள்ளை; உறவினர்களில் பெரிய வீட்டுப் பேரன். எல்லார் அன்பையும் முழுவதுமாகப் பெற்றவன்.

8. சாதி இழிவை உணர்ந்தேன்

என் கிராமத்துச் சூழல்

ஊராரோ புறநானூற்றுக் காலத்தை நினைவுபடுத்தியவர்கள்; சான்றோர்கள்; அடிதடிக்குப் போகாதவர்கள்; குத்துவெட்டைக் காணாதவர்கள்; உருட்டும் புரட்டும் அறியாதவர்கள். உறவினர்கள் மட்டுமல்ல; ஊரார் அனைவருமே அப்படி.

வேளாளர் தெருவில், அவர்கள் வீட்டுக்கு அடுத்துக் குடியிருக்க வேண்டியிருக்கிறதே என்று எங்கள் ஊர் குருக்கள் குடும்பங்கள் முணுமுணுத்ததில்லை. எங்கள் உறவினரும் யாரையும் கட்டிவைத்து அடித்து வஞ்சம் தீர்த்துக் கொண்டதில்லை.

தனித்தெருவில் குடியிருப்பதைப் பற்றி அக்காலத்தில் எங்களூர் குடியானவர்கள் புண்படவில்லை. ஆதிதிராவிடர்கள் தனியாக ஒதுங்கி வாழ்வதைப்பற்றி வேதனைப்படவில்லை.

அவரவர் நிலையை அவரவர் ஏற்றுக்கொண்டு இருந்தார்கள்.

ஆகவே, என் சிறு வயதில் சாதி ஏற்றத்தாழ்வு கொடுமையானது, அநீதியானது என்று எண்ணவோ, சிந்திக்கவோ நேரவில்லை.

சில பிரிவினரைத் தொடக்கூடாது என்று பெரியவர்கள் நடந்து கொண்டார்கள். நானும் சிந்தியாமலே நடந்து கொண்டேன்.

சிலவேளை, நெய்யாடு பாக்கத்திலிருந்து வாலாஜாபாத்வரை யாராவது ஓர் ஆள் என்னைத் தூக்கிக்கொண்டு போக நேரிடும்.

வாலாஜாபாத்தில், நான் கட்டியிருந்த வேட்டியையும் போட்டிருந்த சொக்காயையும் அந்த ஆள் கழற்றி, ஆற்றங்காலில் நனைத்துவிட்டு,

கைப்பெட்டியில் இருந்த 'தீட்டுப் படாத' உடையை எடுத்து என்னை அணிந்து கொள்ளச் செய்வார்.

அதிலும் ஏதும் தவறு இருப்பதாக அவ்வயதில் தோன்றவில்லை.

ஆகவே, அதைப் பற்றி முணுமுணுக்கவும் இல்லை.

உயர்நிலைப் பள்ளியில் எங்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஓர் அய்யங்காரை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர், வெளியே உள்ள தெருக் குழாயில் இருந்து, பானைகளில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வருவார்.

பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனிக் குவளைகளிலும் மற்றவர்களுக்கு வேறு குவளைகளிலும் ஊற்றுவார்.

இரு பிரிவினருமே எச்சில்படாமல் குடிப்போம்.

அப்படியிருக்க இரு பிரிவு ஏன்? தனித்தனி குவளைகள் ஏன்? இக்கேள்விகள் என்னில் எழவில்லை.

எங்களூர்த் திருவிழா

பதினோராம் வயதுவரை உள்ளது உள்ளபடியே ஏற்றுக் கொண்டேன். அவ்வயதில் ஏற்பட்ட ஓர் அதிர்ச்சி, என்னிடம் சாதி பற்றிய சிந்தனையைத் தூண்டிவிட்டது.

எங்கள் ஊர்க் கோயில்களில் உற்சவ மூர்த்திகள் இல்லை.

அடுத்துள்ள இளையனார் வேலூரில் பாலசுப்ரமணியர் கோயில் உள்ளது. அதில் உற்சவமூர்த்தி உண்டு.

அக்கோயிலில் கோடை காலத்தில் பிரம்மோற்சவம் நடக்கும்.

எட்டாம் நாள் சூரசம்ஹாரம்; சுப்ரமணியர் குதிரை வாகனத்தில் ஏறி உலா வருவார்.

காலையில் பல்லக்கில் வந்து, எங்கள் ஊர் மேற்குக் கோடியில் உள்ள சிவன் கோவிலில் இறங்குவார்.

இரவு, அங்கிருந்து அலங்காரத்தோடு, குதிரை வாகனத்தில் உலா வருவார். இரு தெருக்களைக் கடந்து ஆற்றில் இறங்குவார். இங்கு சூரனை வெல்வார். அக்காட்சியைக் காண அக்கம் பக்கத்திலிருந்து பெருங்கூட்டம் கூடும்.

வாலாஜாபாத்திலிருந்து வளையல் கடைகள், புத்தகக் கடைகள், சோப்பு - சீப்புக் கடைகள் ஆகியவை வந்து, ஆற்றில் கூடாரம் அடிப்பது உண்டு.

வாலாஜாபாத்திலிருந்து, சத்திரத்து அய்யர் மிட்டாய் வரும். இருவகை இனிப்பு, மூன்று வகைக் கார வகைகளைக் கொண்டு வருவார்.

சாதி பற்றி எண்ணத் தூண்டிய நிகழ்ச்சி

என்னுடைய பதினோராவது வயதில் இது நடந்தது. குதிரை வாகனத்தன்று, மாலை ஏழு மணி அளவில், என் தாயார் என்னை அழைத்துக் கொண்டு ஆற்றுக்குச் சென்றார்.

சாமி வருவதற்கு முன்பு, கூட்டம் சேர்வதற்கு முன்பு எனக்குத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்பது அவருடைய எண்ணம். நாங்கள் போனபோது மிட்டாய்க் கடையில் கூட்டமில்லை.

தட்டுகளில் உள்ளதைக் காட்டி, எனக்கு என்ன வேண்டும் என்று என் தாயார் கேட்டார்.

நான், எட்டி நின்று காட்டவில்லை; தொட்டுக் காட்டினேன். சர்க்கரைப் பாகு பூசிய இனிப்பு 'சேவு' வேண்டுமென்று அதைத் தொட்டுவிட்டேன்.

நொடியில் சத்திரத்து அய்யர் உருத்ரமூர்த்தியாகி விட்டார். கண்கள் கனல் கக்கின. நான் தொட்டதால் பண்டங்கள் தீட்டுப்பட்டு விட்டதாம், அதை அவன் எப்படித் தொட முடியும் என்று குதித்தார். மடமடவென்று சுடுசொற்களைக் கொட்டினார்.

''சாமி, அறியாத பிள்ளை தப்புச் செய்துவிட்டது, மன்னித்து விடுங்கள்; உங்களுக்கு நஷ்டம் வேண்டாம். அவ்வளவையும் நானே, விலைகொடுத்து வாங்கிக் கொள்கிறேன்'' என்று பணிவோடு அமைதிப்படுத்த முயன்றார், என் அன்னையார்.

அது எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் ஆயிற்று. அய்யருடைய சொற்களில் மேலும் அனல் வீசியது.

என் தாய் அதுவரை, யாரிடமும் அத்தகைய சுடுசொற்களைக் கேட்டதில்லை. எனவே, பதறினார். நானும் துடித்தேன். நெருப்பிலே போட்டு வாட்டுவதுபோல் இருந்தது. என்ன பரிகாரம் என்பதும் தெரியவில்லை.

அவ்வேளை, யாரோ ஒருவர், மிட்டாய்க் கடையை நெருங்கினார். திரும்பிப் பார்த்தேன். எங்கள் ஊர்க் குடியானவர் மிட்டாய் வாங்குவதற்கு வந்தார்.

மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்

''ஏன்யா! இன்னா நெனச்சிக்கிட்டு பேசெறெ! நானும் கேட்டுக்கிட்டுதான் நிக்கிறேன். பெரியம்மா, பணிவா பேசப் பேச, நீ என்னமோ மேலே மேலே போறியே!

''நாலு காசு சம்பாதிக்க, ஊரை விட்டு ஊர் வந்திருக்கே! அதை மறந்திட்டே! வாய்க்கு வந்தபடி உளர்றே! என்னா திமிரு உனக்கு!

''அந்தப் புள்ளையப் பாரு! அவர் வேட்டியை விடவா உன் வேட்டி வெளுத்திருக்குது? அவர் சொக்காய்க்கு என்ன? தும்ப மலராட்டம் இருக்கு. உன் துண்டு, வேர்வை நாற்றம் அடிக்குது - அப்படியிருந்தும் நீ ஒஸ்தி! இல்லே....?

''அவர் தொட்டுட்டதாலே, என்ன ஆயிட்டுது? இப்படி குதியாய்க் குதிக்கிறே! கொதிக்கிற எண்ணெயிலே விழுந்த பணியாரமா நீ?

''ஏதோ, வானமே இடிந்து விழுந்த மாதிரி பதற்றியே!

''எல்லாத்தையும் வாங்கிக்கிறேன்னா, 'மடி நெறய பணம் வெச்சிருக்கியா' ன்னு யாரைப் பாத்துக் கேட்கிறே?

''பதினைந்து ரூபாய்க்கு மேலேயா உன் பலகாரம் போகும். இவங்களுக்கு இது என்ன பெரிய பணம்?

''மாதம் பதினைந்து ரூபாய் கொடுத்து உன்னையே சமையல்காரராக, வைத்துக்கொள்ள அவங்களுக்குச் சொத்து இருக்கு, தெரியுமா?

''எங்க பெரிய முதலியார் நினைச்சா, அப்புறம் நீ, சீவரம் போய்ச்சேர மாட்டே! பத்திரம்! அடங்கிப் பேசு; பிழைச்சிப் போகலாம்,''

இப்படி, மடமடவென்று, பனிக்கட்டி மழையாகப் பெய்தார், அக்குடியானவர். குரலோ, சிங்க முழக்கம்.

நல்ல வேளை, கொலை செய்யச் சதி செய்ததாக அந்தக் குடியனாவர் மீது அய்யர் வழக்குப் போடவில்லை.

எதிரிலிருப்பவரை ஏக வசனத்தில் அழைப்பது, பண்பாட்டுக் குறைவு. என் அம்மா, சிறுவர் சிறுமியரைத் தவிர யாரையும் 'நீ' என்று ஒருமையில் தாழ்த்திப் பேசமாட்டார்.

எனவே, குடியனாவர் சத்திரத்து அய்யரைப் பலமுறை 'நீ' என்றழைத்ததைக் கேட்டு என் தாயின் முகம் வாடிற்று. ஆனால், ஏகவசனமும் சிங்க முழக்கமும் அய்யரை நிதானப்படுத்திற்று. கடைசி மிரட்டல் நொடியில் வேலை செய்தது.

அம்மிரட்டலைக் கேட்டதும் அய்யரின் முகம் வெளுத்தது. இமைப்பொழுதில், சமாளித்துக் கொண்டு,

''ஐயா! எந்தப் பெரிய முதலியார் வீடு இவங்க! அதைச் சொல்லைய்யா. உனக்குப் புண்ணியமாக இருக்கும்'' என்று கெஞ்சினார்.

''ஊரிலே, அவர் பேர் சொல்லமாட்டோம். இருந்தாலும், இந்த வேளை சொல்லாமே முடியாது. கோபப்படாதீங்க அம்மா. 'துரைசாமி' முதலியார்'ன்னு பெயர் உடையவர், ஒருத்தர்தான் இந்த ஊரிலே இருக்கிறார்.

''அவர் சீவரம் சந்தைக்கு வந்தா, உன் சத்திரத்துக்கு வருவார். உயரமா, உச்சிக் குடுமியோடே இருப்பார். மேலே தும்பைப்பூ போன்ற துண்டு மட்டும்தான் போட்டு வருவார்....'' எங்களூர்க்காரரின் பேச்சை இடைமறித்தார் அய்யர்.

''ஐயா, என் போராத வேளை! அவர் மகா தர்மிஷ்டராச்சே! என்ன தங்கமான குணம்! அவங்க ஆசாரம் யாருக்கு வரும்?

''அம்மாதான், வீட்டுக்காரர் பேரைச் சொல்லமாட்டாங்க! ஏன் அப்பா, நீ ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது? இவ்வளவுக்கு வீணாகப் பேச்சு வளர்ந்திருக்காதே!

''போனது போகட்டும்மா. தெரியாமே பேசிட்டேன். இதோடு விட்டு விடுங்கம்மா. இன்றைக்கு நான் புறப்பட்டு வந்த வேளை அப்படி!

''நானே வந்து, வேணுமானாலும் முதலியாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். சரிதானா அம்மா!'' என்று குழைந்தார் அய்யர்.

பிறப்பில் உயர்வு தாழ்வு இருக்கலாமா?

எங்களுக்கு வேண்டிய தின்பண்டங்களை அந்த அய்யரிடமே வாங்கிக்கொண்டு வீடு திரும்பினோம்.

என் மனம் வாடியிருந்தது; பண்டத்தை நாடவில்லை. மறுநாள் உண்பதாகச் சொன்னேன். தாயார் அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்தார். உள்ளத்தில் ஏக்கம்; பெரிய குழப்பம்.

பல மணித்துளிகளுக்குப் பிறகு, என்னிடம் சிறிது தெளிவு பிறந்தது, சிந்தனை வேகமாக ஓடிற்று.

'குளித்துவிட்டு வெள்ளை உடை உடுத்திக் கொண்டுதானே சென்றேன். அழுக்காகவா இருந்தேன்? தலையைக் கூட ஒழுங்காக வாரிக் கொண்டிருந்தேனே. கையிலும் அழுக்கில்லை. கையால் தொடவில்லையே? விரலின் நுனியால் அல்லவா தொட்டேன்.

'அதுவா தீட்டு? விரல் முனையில் நஞ்சா இருந்தது? எதற்காக இவ்வளவு கடுஞ் சொற்கள்! அறியாமற் செய்த சிறு பிழைக்கு என் தாய் எத்தனை கடுஞ்சொற்களைக் கேட்பது? என்னால் அல்லவா வசைச்சொல்; அம்மாவுக்கு இந்த அவமானம்?

'சாதித் திமிர் எப்படியெல்லாம் ஆணவத்துடன் குதிக்கிறது?

'தூய்மையிலும், செல்வத்திலும் சத்திரத்து அய்யருக்கு மிஞ்சியிருந்தும் இப்படிச் சின்னத்தனப்படுவானேன்? அய்யர் உயர்ந்த சாதி; நாம் சின்ன சாதி என்னும் வழக்கத்தாலா?

'பிறவி, உயர்வு தாழ்வு முறை இருப்பதால் அல்லவா, கண்டவரிடம் அவமானப்பட வேண்டியிருக்கிறது.

'சாதி முறை மாறினால் என்ன குடி முழுகிப் போகும்?

'ஏன் இதைப் பற்றி நம் பெரியவர்கள் நினைக்கவில்லை? நினைத்து, முயன்று கைவிட்டு விட்டார்களா?' இப்படிச் சுற்றி வந்தது என் சிந்தனை.

பாலசுப்பிரமணியர், குதிரை வாகனத்தில் வந்தார். எங்கள் தெருவில் வீட்டுக்கு வீடு தீபாராதனை நடந்தது.

எங்கள் மாமாவின் வீட்டில் சுவாமிக்குப் பட்டுசார்த்துவார்கள். ஆகவே, பல மணித்துளிகள் அங்கே தங்க நேரிடும். நான்கு பக்கங்களிலும் முட்டுக் கால்கள் கொடுத்து, வாகனத்தை மாமா வீட்டு வாசலில் நிறுத்தி வைப்பார்கள்.

வீட்டைச் சேர்ந்த ஒவ்வொருவரும் உற்சவமூர்த்திக்கு அருகில் சென்று, முன்னே நின்று கும்பிடுவது வழக்கம். எல்லோரும் தரிசனம் செய்து பிரசாதம் பெற்றுக்கொண்ட பிறகே, அங்கிருந்து சுவாமி புறப்படும்.

வழக்கம்போல, அவ்வாண்டும் மாமாவின் வீட்டண்டை நின்றது. பட்டு சார்த்துமுறை நடந்தது. ஆண்கள், அருகில் சென்றார்கள்; வணங்கினார்கள்; திருநீற்றைப் பெற்றுப் பக்தியோடு அணிந்து கொண்டார்கள்.

பின்னர்ப் பெண்மணிகள், ஒருவர் பின் ஒருவராகச் சென்றார்கள். அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு நானும் தண்டுகளுக்கிடையில் நுழைந்தேன்.

முன்னே பக்கத்துக்கு அறுவர்; பின்னே பக்கத்துக்கு அறுவர்; ஆக இருபத்து நான்கு பேர்கள், பாலசுப்ரமணியரைத் தூக்கி வந்தார்கள்.

வாகனத்தின்மேல் மூர்த்தி இருக்க, பக்கத்தில் இரு குருக்கள் குடைபிடித்துக் கொண்டிருந்தார்கள். தீபாராதனை செய்ய இருவர் உட்கார்ந்து வந்தனர்.

வாகனத்தைத் தூக்கி வந்தவர்களைக் கவனித்துக்கொண்டே நடந்தேன். அவர்களுக்குப் பெயர் 'பணி செய்வோர்'. அவர்கள் தனிச் சாதியாம். அவர்களுடைய தோள்கள் காய்த்துத் தழும்பேறியிருந்தன.

'ஐயோ பாவம்! எவ்வளவு சுமை! எப்படி வலிக்கும்' என்று எண்ணினேன். அந்த ஏக்கத்தில் நடுவே நடக்காமல், பணி செய்வார் ஒருவர்மேல் பட்டு விடுவேனோ என்று அஞ்சும் அளவிற்கு ஒரு பக்கம் ஒதுங்கினேன்.

வாகனம் தூக்கிகளில் ஒருவர்,

''நகர்ந்துக்குங்கோ! சின்ன முதலியார்மேல் பட்டுடாதிங்க'' என்று மற்றப் பணி செய்வோர்களைப் பார்த்து எச்சரித்தது காதில் வீழ்ந்தது.

பழக்கத்தால் மாடுகளும் செக்கைச் சுற்றும்; நானும் பழைய பழக்கக் கொடுமையால் நொடியில் யார் மேலும் படாது, மிகக் கவனமாக நடுவே வந்துவிட்டேன்.

எனக்கும் திருநீறு கிடைத்தது. அதைப் பூசிக் கொண்டேன். எல்லோரும் வழிவிட்டு விலகி வந்தபிறகு, சுப்பிரமணியரைத் தூக்கிச் சென்றார்கள்.

நான், சூரசம்மார வேடிக்கையைப் பார்ப்பதற்குச் செல்லவில்லை. வீட்டோடு நின்று விட்டேன்.

படுக்கையில் படுத்தேன். தூக்கம் வந்தால் தானே! நெடுநேரம் புரண்டேன். அய்யரின் சுடுசொற்கள் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாகத் தைத்தது. அந்த வேதனையோடு தூங்க முடியுமா?

நான் அய்யர் செய்ததைத் தொட்டுவிட்டதால், அவர் தீட்டாகி விடுவதாகக் கோபிக்கிறார். அவர் உயர்ந்தவர் என்று ஒப்புக்கொள்ள என் மனம் மறுக்கிறது. ஆனால்,

சாமியை நம் வீட்டுக்கே கொண்டு வரும் பணி செய்வோர்களை நாம் தொடுகிறோமா? நாம் மேல் சாதியாக நினைக்கிறோம். அதனால் அவர்கள் நம்மைத் தொடக்கூடாது என்பது நாட்டு வழக்கு.

நான் அய்யருக்குச் சமமாக மதிக்கப்பட விரும்புகிறேன். அது அதோடு நிற்கலாமா? அந்த நியாயம் எல்லாருக்கும்தானே பொது. சில சாதிக்காரர்களை நான் சின்ன சாதியாக நினைத்தால், அய்யர் எங்களைக் கீழ்ச் சாதியாக நினைக்கிறார். அய்யரைப் பார்த்து எந்த வாயால் சமத்துவம் கோருவது?

பிறர் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று நினைக்கிறாயோ, அப்படி, நீ பிறரை நடத்தினால் அல்லவா யோக்கியன்?

'ஆமாம்! அய்யரை உயர்ந்தவராக ஏற்கமாட்டேன். அதே நீதிப்படி, பணி செய்வோரை, வன்னியரை, ஆதிதிராவிடரை மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதமாட்டேன்.

'நான், எவரையும் தாழ்ந்தவர்களாகக் கருதமாட்டேன்.

'நான், எவரையும் தாழ்ந்தவராக நடத்தாதபோதே, மற்றவர் எவரையும் உயர்ந்தவராகக் கருத மறுக்கும் உரிமை எனக்கு உண்டு.

'அதை ஊருக்குச் சொன்னால் கேட்பார்களா? மற்றவர்களைத் திருத்துவதற்குமுன் உன்னையல்லவா திருத்திக் கொள்ள வேண்டும். சரி என் நடத்தையால் அந்த உரிமையைப் பெறுவேன்?' என்று முடிவு செய்தேன்.

சின்னப் பையனாகிய நான் 'எப்படி? எங்கே தொடங்குவது?' என்பதைப் பற்றியும் நெடுநேரம் சிந்தித்தேன்.

'அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு, வழக்கத்திற்கு மாறாக நடப்பதா? சொல்லாமல் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஒத்திகை பார்ப்பதா? கண்டுபிடித்துவிட்டால் சும்மா விடுவார்களா?'

இப்படியெல்லாம் மூளையை வருத்திக் கொண்டிருந்தேன். எப்படியோ என்னையறியாமலே தூங்கிவிட்டேன்.

தீண்டாமை ஒழித்தேன்

பொழுது விடிந்ததும் எழுந்தேன். வழக்கம்போல், புழக்கடைப் பக்கம் போகவில்லை. நேரே வீட்டையொட்டியுள்ள தொழுவத்திற்குள் சென்றேன்.

பசு மாடுகளை அவிழ்த்து விட்டிருப்பதைக் கண்டேன். தொழுவத்தில் இருந்த சாணத்தைத் திரட்டிக் கொண்டிருந்தான் ஒரு சிறுவ்ன். எனக்கு இரண்டொரு வயது மூத்த பையன்.

பளிச்சென்று யோசனை மின்னிற்று. வீட்டிற்கும் தொழுவத்திற்கும் இடையில் இருந்த வாசற் கதவை மூடினேன். வேலை செய்து கொண்டிருந்த சிறுவனிடம் விரைந்தேன். அவன் அதை உணர்வதற்கு முன் அவனைக் கைகளால் தொட்டேன். தேள் கொட்டியதுபோல் குதித்து ஓடினான் அவன்.

''ஐயோ சாமி, வாணாம். இது வழக்கம் இல்லை. ஆண்டைக்கோ அம்மாவுக்கோ தெரிந்தால் என்னை இங்கே சேர்க்கமாட்டாங்க. அப்புறம் எப்படிப் பிழைப்பேன்? என் வயிற்றிலே மண்ணைப் போட்டுடாதீங்க சாமி. உங்களைக் கை எடுத்துக் கும்பிடுகிறேன்'' என்று நடுக்கத்தோடு மெல்லிய குரலில் வேண்டினான்.

நான், என் கைகளால் வாயைப் பொத்தி, சாடை காட்டினேன்.

''இன்னிக்கு மட்டுமல்ல. மறுபடியும் இப்படிச் செய்வேன். ஆனால் யாரிடமும் பேச்சுமூச்சு விடாதே; கிணற்றிலே கல்லு போட்டதுபோல் இருக்கட்டும்; நான் இருக்கிறேன்; உனக்கு ஒன்றும் கெடுதி வராமல் பார்த்துக் கொள்வேன்.

''யாருக்கும் தெரியாமல் உனக்குப் பலகாரம் கொண்டுவந்து கொடுப்பேன். இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்று வாயை மூடிக்கொண்டு இரு'' என்று கட்டளையிட்டேன்.

'திருடனைத் தேள் கொட்டியது போன்ற நிலை; சொன்னால், சின்னய்யாவை மட்டுமா கோபிப்பார்கள். அவரை அடிக்காவிட்டாலும் என்னை அடிப்பார்களே! தடிக் கழுதை உனக்கு எங்கே போயிற்று புத்தி என்று என் அப்பா அம்மாவும் உதைப்பார்களே.

'நடந்தது தெரிந்தா, யார் வீட்டில் வேலைக்கு வைத்துக் கொள்வார்கள்?

'சொல்லாமல் போனாலும் தலைக்குத் தீங்கு வரலாம். ஆனால் அது பின்னால் என்றைக்கோ அல்லவா வரப்போகிறது?

'நடக்கக் கூடாது; நடந்துவிட்டது. அதை, இப்பவே நாலு பேருக்குச் சொல்லித் தொல்லைப் படுவானேன். தள்ளினவரை தள்ளட்டும்' என்று நினைத்து, அவன் சும்மா இருந்துவிட்டான். தன் வேலையில் முனைந்துவிட்டான். நான் வீட்டிற்குள் போய்விட்டேன்.

சாதி உணர்வை எதிர்த்துப் புரட்சி

கோடை விடுமுறையின்போது நான் ஊரில் இருந்த நாளெல்லாம் தவறாமல் வேலைக்காரச் சிறுவனைத் தொடுவேன்; சில நாள்கள் இரண்டு மூன்று முறைகூடத் தொடுவேன்.

ஆனால் மற்றவர்களுக்குத் தெரியாது. சொன்னபடி, எனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களை அச் சிறுவனுக்கும் பங்கிட்டுக் கொடுப்பேன்.

அவருடைய பெயர் தெரிய வேண்டுமல்லவா? 'கொசப்பட்டான்' என்பது அவருடைய பெயர். திகைக்காதீர்கள்; நல்ல பெயர் வைக்கவும் தெரியாத அளவிற்கு அறியாமையில் நம்முடன் பிறந்து, நமக்காக உழைத்து மாயும் ஆதிதிராவிடர்களை ஆழ்த்தித் தாழ்த்தி வைத்துள்ளோம். இந்த அவலம் தொலையாதா?

பள்ளிக்கூடம் திறந்தபோது காஞ்சிக்குச் சென்றேன். முன்பெல்லாம் செய்ததுபோல் இரயிலில், மற்றவர்கள் மேல் படாமல் ஒதுங்கி உட்காரவில்லை. சேர்ந்து உட்கார்ந்தேன்.

முதல் இரண்டொரு ஆண்டுகள் பள்ளியில் இருந்து வந்ததும், 'தீட்டுப்பட்ட' என் உடையைக் களைந்து, நனைத்துவிட்டு, தீட்டுப்படாத உடையைப் போட்டுக் கொள்வேன்.

பலகாரக் கடை நிகழ்ச்சிக்குப் பிறகு, அப்படிச் செய்வதற்கு மறுத்தேன். பாட்டி சண்டை போடுவார். நான் அதைச் சட்டை செய்யமாட்டேன். அப்பாவிடம் சொல்லிப் பார்த்தார். அதனாலும் பயன் இல்லை.

''நான் பண்ணின கர்மம்; இப்படி, இந்த வயதில், தீட்டோடு வீட்டுக்குள் வந்தாலும் சும்மாப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. உள்ளே உட்கார வைத்துச் சோறுபோட வேண்டியிருக்கிறது!

''நல்லதுக்கு இல்லை, இதெல்லாம். ஆடித்தான் அடங்கும். ஆனால் இந்தக் கண்றாவியை எல்லாம் பார்க்காமே, பொட்டுனு போய்விடக் கூடாதா? அவன் ஏனோ என்னை அழைத்துப் போக மறந்துவிட்டான்?

''இப்ப போனா, பூவும் பொட்டோடும் போவேன். எந்தத் தீட்டும் இல்லாமல் ஆசாரமாப் போவேன். சித்திரபுத்திரா, என் கணக்கை முடித்துவிடேன்'' என்று என்னுடைய பாட்டி ஆற்றாமையால் அங்கலாய்ப்பார்.

நான் சிலையாக இருப்பேன். நாங்கள் காஞ்சிபுரத்தில் குடியிருந்த வீட்டிற்கு அருகில், எதிர் வாடையில் கோயில் கொண்டிருந்த சித்திரபுரத்திரனும் என்னைப் போலவே சும்மா இருந்தார்.

பாட்டியும் மேலும் பல்லாண்டு உயிரோடு இருந்தார். பிறகு பூவும் பொட்டும் இல்லாமல் போனார்.

நான் தொடக்கத்தில் எங்கள் சாதியார், பார்ப்பனர்கள் ஆகியோர் வீட்டுப் பலகாரங்கள் கிடைக்கும்போது மட்டும் உண்பேன்.

மற்றவர்கள் கைப்பட்ட தின்பண்டங்கள் தீண்டத்தகாதவை என்று என் மூத்தோர் சொன்ன சொல்லை அப்படியே நம்பினேன். சிலர் வீட்டுப் பண்டங்களை உண்ணக்கூடாது என்னும் மரபை யாரும் வெளிப்படையாக எதிர்ககாத காலம் அது.

ஆனால் சத்திரத்து அய்யர் கொடுத்த பயங்கர அதிர்ச்சி, என்னை அடியோடு மாற்றிவிட்டது.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, 'சைவ' உணவா என்பதை மட்டுமே கவனிப்பேன். யார் வீட்டது என்பதைப் பொருட்படுத்துவதே இல்லை.

கண்டவர்கள் வீட்டு, வடையும் முறுக்கும் தோசையும் இட்லியும் சாப்பிடத் தொடங்கினேன். ஆனால் விளம்பரப் படுத்திக்கொள்ள வில்லை.

எத்தனையோ திங்கள் இது என் பாட்டிக்குத் தெரியாமல் இருந்தது. ஒருமுறை எப்படியோ அவர் காதுக்கு எட்டிவிட்டது. என்னை நேருக்கு நேர் நிறுத்திக் கேட்டார்.

''ஆம்'' என்று ஒப்புக் கொண்டேன்.

அவர் பட்ட வேதனை புலனாயிற்று. அவரிடம் எனக்கு ஆசை அதிகம். அதற்காகவும் என் போக்கை மாற்றிக்கொள்ள மனம் ஒப்பவில்லை.

நட்புச் செல்வம் பெருகியது

மீண்டும் 'சாதி'க்காரனாக மாற முயலவே இல்லை. பாட்டி ஏங்கினார்கள், கெஞ்சினார்கள்; சிலவேளை சபித்தார்கள். பலன் இல்லை.

நான் பிடிவாதத்தால் அப்படி நடந்துகொண்டேனா? இல்லை.

என் பிள்ளைப் பருவ வெள்ளை உள்ளத்திற்குச் சாதி உணர்வு ஏற்கவில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச என் நெஞ்சம் விரும்பவில்லை.

மற்றவர்கள்மேல் பழியைப் போட்டுவிட்டு நான் தப்பித்துக் கொள்வதற்கு இசையவில்லை.

மரபுக் குகைக்குள் பதுங்கிக் கொள்ள மனம் இடம் கொடுக்கவில்லை. என்னைப் பொறுத்த மட்டில் சாதி வேற்றுமையை எதிலும் பாராட்டு வதில்லை என்ற எண்ணம் எழும்பியது. உண்மையாக நடப்பது என் குடியின் இயல்பு.

ஆகவே, பாட்டியைப் புண்படுத்தினாலும், கிறுத்தவர்கள் தொட்டதை, முஸ்லிம்கள் தொட்டதை, நாட்டு வழக்கப்படி எங்களுக்குக் கீழ் என்று அவர்களே ஒப்புக் கொள்ளுபவர்கள் கையாலே கொடுப்பதை உண்பது அநேகமாக அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. நண்பர்கள் நிறைந்தவனுக்கு உண்பதற்குப் பஞ்சமா?

செல்வத்தில் சிறந்த செல்வம் நட்புச் செல்வம். மெய்யான நட்பு வளர்க்கும்; காக்கும்; உதவும்; உரிமையோடு இடிக்கும். அதனால் குறைகள் குறையும். பிழைகள் சிறுக்கும். எனவே நட்பைப் பெற முயல வேண்டும்.

தோழமை பல முனைகளில் பலரோடு வாய்த்து விடுமானால் அது அரியபேறே. எனக்கு இளமையில் அப்பேறு நிறைய உண்டு.

ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் என்னோடு படித்த நண்பர்கள் இன்றும் நண்பர்களாக இருக்கிறார்கள். என்னளவு உயராவிட்டாலும் அதற்காக என்மீது அழுக்காறு கொள்ளாமல் இருக்கிறார்கள்; தன்னம்பிக்கை இழந்து விலகிப் போகாமலும் உள்ளனர்; தூற்றியும் அறியார்.

அது மட்டுமா? என்னை எக்காலத்திலும் தங்கள் தனிப்பட்ட நன்மைக்கோ, வேண்டியர்களுக்குச் சலுகைக்கோ பயன்படுத்த முயலாமல், நண்பர்களாகத் தொடர்கிறார்கள்.

'ஒன்றும் கருதியன்று, அவர் உளம் சென்று பாய்ந்து சேருதல்' என்று மனோன்மணியம் மெய்க்காதலர் நிலையைக் காட்டுகிறது.

அது என் அக்காலத் தோழர்களுக்கு முழுமையாகப் பொருந்தும்.

என் இளமைப் பருவத்தை வளமாக்கி, என்னோடு படித்து, என்னோடு ஆடி, என்னுடன் சேர்ந்து சிலவேளை உண்டு, என்னையும் பலவேளை உண்பித்த நல்ல தோழர்கள், பிறருக்கும் வாய்ப்பார்களாக என்று உளமார விழைவதல்லால் நான் வேறென்ன செய்யவல்லேன்.

அந்த நல்ல பள்ளித் தோழர்களைப் பார்ப்போம்.

9. உடன் படித்த நண்பர்கள்

பள்ளி நண்பர்கள்

எல்லோருடைய இயல்பும் ஒன்றாயிருப்பதில்லை. ஒவ்வொரு வருக்கு ஒவ்வோர் இயல்பு அமைகிறது. முயற்சியால் இயல்பை மாற்ற இயலும்: ஒதுங்கி நிற்றல் என் இயல்பு. இதை மாற்றிக் கொள்ளத் தவறிவிட்டேன்.

இளமையிலும் எனக்குக் கூச்சம் அதிகம். இன்னும் அப்படியே இருப்பினும் இளமைப் பருவந்தொட்டு எனக்கு நட்புச் செல்வம் உண்டு.

என்னோடு படித்த எவரோடும் நான் முரண்டிக் கொண்டதில்லை. எவரையும் பகைத்துக் கொள்ளவில்லை.

ஆயினும் சக மாணவர்கள் அத்தனை பேரையும் நண்பர்கள் என்று சொன்னால் அது பொய்யாகும். சிலரே நெருக்கமான நண்பர்கள்.

அவர்களுடைய நட்பு எனக்குப் பலவகையில் உதவிற்று. சிலர் போட்டி உணர்வைக் கிளறினார்கள். சிலர் சமத்துவச் சிந்தனையைத் தூண்டினார்கள்.

என் நண்பர்கள் ஒரே சமயத்தவரா? இல்லை. ஒரே சாதியினரா? இல்லை. பொருள் நிலையில் ஒன்றா? இல்லை.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறுத்தவர்கள் ஆகியோர் எனக்கு மிகவும் வேண்டியவர்களாக இருந்தார்கள்.

பல சாதி மாணவர்களும் எனக்கு நெருக்கம். செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளும் சாதாரண வீட்டுப் பிள்ளைகளும ஒன்றாகவே என்னோடு பழகினார்கள்.

ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் வடமொழி ஆசிரியராக இருந்த திரு. சாஸ்த்திரியாரின் மகன் சு. இராமசாமி எனக்கு நெருக்கமானவர்; சுப்பாராவ் என்பவர் மற்றோர் நண்பர்.

இவர்கள் ஆறாம் வகுப்பிலிருந்தே நண்பர்கள். மோசஸ் மாசிலாமணி, பால் சுந்தரராஜ் என்பவர்களும் அப்படியே. அப்துல் வகாப் என்பவர் பிறிதொரு நண்பர். இவர் கால்பந்தாட்டத்தில் மிகவும் கெட்டிக்காரர்.

அப்துல்சத்தார், பார்த்தசாரதி, மற்றொரு இஸ்லாமிய இளைஞர் ஆகிய மூவரும் வாலாஜாபாத் கிறித்துவ நடுநிலைப் பள்ளிக்கூடத்தில் எட்டாவதைப் படித்து முடித்தவர்கள்.

மேல் வகுப்புகளுக்கு, காஞ்சிபுரம் வந்தார்கள். நாள்தோறும் புகைவண்டியில் காலையில் வந்து மாலையில் திரும்புவார்கள்.

அதற்காகச் சீசன் பயணச் சீட்டு பெற்றிருந்தார்கள். மூவரும் எனக்கு நண்பர்கள்.

பசவலிங்கப்பா என்பவர் என்னுடன் படித்த நண்பர், கிருஷ்ணசாமி என்னும் ஒருவரும் அப்படியே.

என்னுடன் படித்த தங்கவேலு, கதிர்வேலு இருவரும் எனக்கு மிகவும் வேண்டியவர்கள். திருநாவுக்கரசு, வாசுதேவன், வரதராஜுலு என்பவர்களும் எனக்குத் தோழர்கள். வி.கே. இராஜகோபாலன் உயர்நிலை வகுப்புகளிலே என்னுடன் படித்த அன்பர். இன்றுவரை நெருக்கமாகவும் அதே நேரத்தில் எட்டியும் இருக்கும் நண்பர்.

இராமசாமி, சுப்பாராவ், வி.கே. இராஜகோபாலன் ஆகிய மூவரும் பார்ப்பனர்கள். இவர்களுடைய குடும்பச் சூழல் கல்வி மணங்கொண்டது.

மோசசும் பாலும் கிறுத்துவர்கள் என்று சொல்லத் தேவையில்லை. இவர்கள் வீடுகளிலும் கல்வி ஒளி உண்டு.

சத்தாரும் வகாப்பும் இஸ்லாமியர்கள் என்பது பெயர்களிலேயே வெளிச்சம்.

பசவலிங்கப்பா, வீரசைவர்; இலிங்கம் கட்டி. கிருஷ்ணசாமி கருணீகர். தங்கவேலு குலாலர். கதிர்வேலு பொற்கொல்லர். பார்த்தசாரதி, வாசுதேவன், திருநாவுக்கரசு ஆகிய மூவரும் நாட்டு வழக்குப்படி வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலியார்கள்.

பல பிரிவினர்களோடு நட்போடு பழக நேர்ந்தது. என் சாதி நெடியைப் பெருமளவு மாற்றிவிட்டது.

இராமசாமியும் சுப்பாராவும் காமாட்சி அம்மன் கோயிலுக்கு அருகில் குடியிருந்தார்கள். அவர்கள் பள்ளிக்குச் செல்லும்போது, வழியில் குடியிருந்த என்னையும் அழைத்துக் கொண்டு போவார்கள். வாசுதேவனும் பல நாள் என்னோடு வருவார்.

முன்னிருவரோடு படிப்பில் போட்டி போட்டு வந்தேன். என்னை மிஞ்சிவிடுவார்களோ என்று நான் அஞ்சும் அளவிற்கு வாசுதேவனும் பார்த்தசாரதியும் கெட்டிக்காரர்களா இருந்தார்கள்.

நாள்தோறும் பயணஞ் செய்து வந்து அலுத்து விட்டதால், பார்த்தசாரதி இயற்கை அறிவுக்கு ஏற்ப எட்ட வேண்டிய உயரத்தை எட்டவில்லை என்பது என்னுடைய மதிப்பீடு.

பள்ளி இறுதிக்கு வந்தபோது, இராமசாமியும் நானுமே முதலிடத்திற்குப் போட்டியிட்டோம்.

பார்ப்பன நண்பர்களும் கிறுத்துவ நண்பர்களும் கல்விச் சூழலிலிருந்து வருகையில், இஸ்லாமிய நண்பர்களும்

பார்ப்பனரல்லாத தோழர்களும் மரபு வழிக் கல்விக்கு அப்பால் போகாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தற்குறிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அல்லர் ஆயினும் கல்வி மணம் அப்போதுதான் கலந்தது. இக் 'கால்கட்டு ஓரளவு வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைந்தது.

ஆதி திராவிட மாணவர்கள் படிக்கவில்லை.

நாங்கள் எல்லோரும் நடுத்தரக் குடும்பத்தவர்கள்; ஏழ்மை யென்னும் நாசினி எங்களை வாட்டாமையால் ஏதோ படித்துச் சமாளிக்க முடிந்தது.

அந்தக் காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் என்னுடன் ஆதிதிராவிட மாணவர்கள் படிக்கவில்லை.

காஞ்சிபுரம் போன்ற பெரிய நகரத்தில்கூட உயர்நிலைப் பள்ளிக்கு வருமளவு ஆதிதிராவிடர்களிடையே கல்வி பரவவில்லை. உணர்வும் ஏற்படவில்லை. உதவியும் கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் சம்பளச் சலுகை இல்லை.

இது நான் பள்ளி இறுதிப் படிப்பை முடித்த 1928 லும் இருந்த அவல நிலை.

எனவே, ஆதிதிராவிடர்களின் ஆற்றலையும் உணர்வையும் தெரிந்து கொள்வதற்குக் கல்லூரிப் பருவம் வரையில் காத்திருக்க வேண்டிய தாயிற்று. சோற்றுக்கே தாளம் போட்டுக் கொண்டிருந்த அவர்கள் எப்படிப் படிக்க முன் வருவார்கள்.

நண்பர்களின் வளர்ச்சி

என்னுடைய நண்பர்கள் வளர்ச்சியையும் காட்டுவது முறை.

இராமசாமி, பள்ளி இறுதித் தேர்வில் எங்கள் பள்ளியின் முதல் மாணவராகத் தேறினார். கீழ் வகுப்புகளில் முதலிடத்துக்குப் பெரும்பாலும் நானும் அவரும்தான் போட்டியிடுவோம்.

சென்னைக் கிறுத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். இண்டர்மீடியட்டும் இளங்கலைப் படிப்பும் அக்கல்லூரியிலே பெற்றார். கணக்கில் பி.ஏ. பட்டம் பெற்றபின் ஆசிரியப் பயிற்சி பெற்றார்.

திருவள்ளூரில் கிறுத்துவ உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியராகப் பணிபுரிந்து உரியகாலத்தில் ஓய்வு பெற்றார்.

வாய்ப்புகள், பதவிகள், பெருமைகள் குறைந்திருந்த காலகட்டத்தில் அவர் நல்லாசிரியராக விளங்கினார்.

இருபது ஆண்டுகள் கழித்துப் பிறந்திருந்தால்? அவருடைய மதிநுட்பம் அவரை வேறு உயர்நிலைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கும். விருதுகளையும் பெற்றுத் தந்திருக்கும்.

பள்ளிப்படிப்பை முடித்த பிறகு சுப்பாராவுக்கும் எனக்கும் இருந்த தொடர்பு அற்றுப் போய்விட்டது.

மோசசும் பாலும் தொழில்களில் உயர்ந்த ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார்கள். நல்லபடி ஓய்வு பெற்றார்கள்.

பிந்தியவர் மதுரை, தல்லாகுளம் அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராக உயர்ந்து, விளங்கி ஓய்வு பெற்றார்.

வாசுதேவனும் பார்த்தசாரதியும் பள்ளி இறுதியோடு படிப்பை முடித்துக் கொண்டார்கள். குடும்ப வாணிகத்திற்குச் சென்று விட்டார்கள். அவர்களோடு சில ஆண்டுகள் வரையில் மட்டுமே தொடர்பு நீடித்தது.

வகாப்பைப் பற்றிய தகவல் தொடரவில்லை. சத்தார் வாலாஜாபாத்தில் வணிகரானார். செல்வம் சேர்த்தார்; தேசிய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். பல்லாண்டுகள் அவ்வூரில் காங்கிரசின் பெரும் புள்ளியாகச் சிறப்புடன் விளங்கினார்; ஊராட்சித் தலைவராக விளங்கியதாகவும் நினைவு.

சிலரைப்போல, பொதுத்தொண்டைத் தேன் கூடாக்கிக் கொள்ளாதவர் சத்தார். எனவே செல்வம் மெல்ல மெல்லக் கரைந்தது. கடைசி காலத்தில் பணமுடை என்னும் சித்திரவதைக்கு ஆளானார். இவர் இன்று இல்லை.

வாலாஜாபாத்திலிருந்து மற்றோர் இளைஞன் வந்தாரல்லவா? அந்த நண்பரின் பெயரை மறந்துவிட்டதை எண்ணி வெட்கப்படுகிறேன். காஞ்சீபுரத்தில் படிப்பை முடித்தபிறகு அவரோடும் பல்லாண்டு தொடர்பு அற்றுப் போயிருந்தது.

பின்னர் கல்வித்துறைத் தொண்டனாக வாலாஜாபாத்தில் 'அப்பா' திரு வா. தி. மாசிலாமணி முதலியார் நடத்தி வந்த இந்துமத பாடசாலையையும் வள்ளலார் இல்லத்தையும் காணும் பேறு வாய்த்தது.

நாதி அற்றவர்களை ஆண்மையுடையவர்களாக, அறிவு மிக்கவர்களாக, முறை தெரிந்தவர்களாக, நன்மக்களாக உருவாக்கும் அற்புத அமைப்பு மட்டுமா கண்டேன்?

கல்விப் பணியைச் சமூகப் பணியாக நடத்தி வந்த நல்லாசிரியர்கள், ஊடே என் இஸ்லாமிய நண்பரையும் கண்டேன். இவர் தையல் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அன்றலர்ந்த தாமரையாக இவர் தோன்றினார்.

முன்னேறிய நாட்டிலோ, சமுதாயத்திலோ இவர் பிறந்திருந்தால் மேலும் வளர்ந்திருப்பாரே என்று எண்ணி, என்னுள் அழுதேன்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் தங்கவேலு, தாமே தொழில் செய்து வாழும் பொருட்டுச் சென்னை சூளைப்பகுதிக்குச் சென்று விட்டார்.

கிருஷ்ணசாமி என்ன ஆனார்? தொடக்கப்பள்ளி ஆசிரியரானார். குற்றங்காண முடியாதபடி, நற்பணி ஆற்றி ஓய்வு பெற்றார்.

எங்கள் இளமைக்காலம் வாய்ப்புகள் வறண்டு இருந்த காலம். பள்ளிப்படிப்போ, எங்கோ நெடுந்தூரம் தேடிச் செல்ல வேண்டிய, சில குட்டைகளில் மட்டுமே இருந்தது; ஊர்தோறும் சென்றுபாயும் நீரோடையாக அது இல்லை. கல்லூரிப் படிப்போ எட்டாத வெகுதொலைவில் இருந்தது.

எவரோ ஒருவரே சமாளிக்கக் கூடிய செலவு மிகுந்ததாக இருந்தது; ஆகவே சிலர் கல்லூரிக் கல்வியை நாடவில்லை.

கா. கதிர்வேலும் பள்ளி இறுதியோடு படிப்பை நிறுத்திக் கொண்டார். ஆசிரியப் பயிற்சி பெற்றார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆணைக்குழுவில் ஆசிரியராகச் சேர்ந்தார். சில உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

உடன் பணி புரிந்தவர்களின் மதிப்பிற்குரியவராக விளங்கினார். நேர்மைக்கும் நாணயத்திற்கும் கடமை உணர்விற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார். முற்போக்கான கொள்கைகள், அளந்து பேசுதல், கொள்கையில் நழுவாமை, உள்ள உறுதி இவருடைய தனி இயல்புகள்.

திருநாவுக்கரசு என்ன ஆனார்? கா. தே. தி. அரசு என்னும் பெயரில் சென்னையில், சில ஆண்டுகள், திராவிடக் கழக முன்னணியாளர்களில் ஒருவராக விளங்கினார். தந்தை பெரியாருக்கு நெருக்கமாக இருந்தவர்களில் ஒருவராக ஒளிவிட்டார். பின்னர் அண்ணாவுக்கு நெருக்கமானவர். எனக்கு வேண்டிய இவரும் இல்லை.

முன்னர் குறிப்பிட்ட அனைவரும் எனக்கு நெருக்கமானவர்கள். ஆயினும் சிறியவனாக இருந்த நான், அவர்கள் வீடுகளுக்குச் சென்றதில்லை.

மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்

ஆயினும் இராமசாமி வீட்டிற்கு விடுமுறை நாள்களில் செல்வேன். சிலவேளை அவர் வீட்டுத் திண்ணையில் இருவரும் சேர்ந்து பாடங்களைப் படிப்போம். அவர் வீடு சிறிய வீடு; தனிக்குடித்தனம்.

சிலவேளை, அவர்கள் வீட்டில் தின்பண்டங்கள் கிடைக்கும். இருவருமே திண்ணைமேலிருந்து தின்போம். வீட்டுக்குள் அழைத்துக் கொடுக்காதது குற்றமாகத் தோன்றவில்லை.

மேல் வகுப்புகளுக்கு வந்த பிறகு, என்னை அறியாமலே என் சிந்தனை மாறிவிட்டது. கூடியவரையில் வெளி இடங்களில் தின்பதைக் குறைத்துக் கொண்டு விட்டேன்.

எதற்கும் விலக்கு உண்டு. நானே ஏற்படுத்திக்கொண்ட கட்டுப்பாடும் ஓரிடத்தில் தளர்ந்தது.

எங்கே?

என் நண்பர் வி.கே. இராஜகோபாலன் வீட்டில். ஏன்?

வி.கே. இராஜகோபாலனின் தந்தையார் சென்னை மாநிலக் கல்லூரியில் கணக்கு ஆசிரியராக இருந்தவர். நான் இராஜகோபாலனோடு நண்பராகும் நிலையில் அவர் தன் அருமைத் தந்தையை இழந்து இருந்தார்.

விதவைத் தாய் இவரையும் இவருடைய அண்ணன்கள் இருவரையும் பொறுப்புடன் பராமரித்து, மிகுந்த கவனத்துடன் படிக்கவும் வைத்துக் கொண்டு இருந்தார்.

இராஜகோபால் சூட்டிகையானவர். கலகலவென்று பேசுவார். அதனால், இவரை எனக்கு அதிகம் பிடித்தது.

இராஜகோபாலன் வீடு, எங்கள் வீட்டிற்குத் தொலைவில் இருந்தது. சின்ன காஞ்சிபுரம் யதோத்காரி தெருவில் குடியிருந்தார்கள்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அங்குச் செல்வேன். அவரோடு சேர்ந்து படிப்பதும் உண்டு. இராஜகோபாலனின் தாயார் விருந்தோம்புவதில் மிகச் சிறந்தவர். முதன்முறை நான் சென்றபோதே அதைக் கண்டவன்.

இராஜகோபால் என்னைத் தம்முடைய தாயாருக்கு அறிமுகப் படுத்தினார். என்னைப் பற்றி முன்னரே சொல்லியிருந்தாராம்.

ஒன்றாகப் படித்தோம்; ஒன்றாக எதை எதையோ பேசி மகிழ்ந்தோம். வீடு திரும்புவதற்கு எழுந்தேன்.

''எவ்வளவு தூரத்தில் இருந்து வந்திருக்கிறாய்! எவ்வளவு தூரம் போகணும்! ஒன்றும் சாப்பிடாமல் வெறும் வயிற்றுடன் எப்படிப் போவது?

''உங்க வீட்டிற்கு வேண்டியவர்கள் வந்தால், சும்மா அனுப்புவீர்களா? உன் கூட்டாளியோடு கொஞ்சம் சாப்பிட்டு விட்டுப் போ'' என்று அன்புடன் ஆணையிட்டார்கள்.

என் சிந்தனை சிறகடித்தது. 'அது சரி! இந்த வயதுப் பையன்களைத் திண்ணையில் வைத்துச் சாப்பாடு போடமாட்டார்கள். ஆயினும் நடையில் வைத்துப் போட்டாலும் இழிவுதானே. ஒரு வாய்ச்

சோற்றுக்காகவா அந்த இழிவைப் பொறுத்துக் கொள்ள' என்று குழம்பினேன்.

''வடிவேலு! வா, கூடத்தில் பரிமாறியுள்ள சாப்பாடு ஆறிப்போகும். ஒருவாய் சாப்பிடு, என்ன பிரமாதம்?'' என்று கனிவோடு கூப்பிட்டார்கள். அந்த அன்னையின் அன்புக் கட்டளையை மீற மனம் இல்லை.

இராஜகோபாலனும் நானும் கைகளைக் கழுவிக்கொண்டோம்; கூடத்திற்குச் சென்றோம்; மணைகளில் அமர்ந்தோம். முன்னே வாழை இலைகள், அவற்றில் புளியோதரை, ததியோனம் பரிமாயிருப்பதைக் கண்டோம். உண்ணத் தொடங்கினோம். என்ன அருமையான சுவை! நல்ல மனநிலையில் இருந்திருந்தால், அதை ஒரு கைபார்த்திருப்பேன். அன்றோ?

சாப்பிட உட்கார்ந்த பிறகும் மனத்துக்குள் ஒரு தவிப்பு, ஏக்கம், ஏன்?

'சாப்பிட்ட பிறகு நான்தானே இலையை எடுத்துக் கொண்டுபோய்த் தெருவில் எறிந்துவிட்டு வரவேண்டும்? இதுவரையில் இந்த வேலை செய்ததில்லையே? 'பையன்' அதைச் செய்வது குறைவு என்றல்லவா வீட்டில் எல்லோரும் சொல்லிவைத்திருக்கிறார்கள்! வயிற்றுச் சோற்றுக்காக இழிவான வேலையைச் செய்வதா?

'நான் சாப்பிட்ட இலையை எடுக்க, இங்கே வேலைக்காரியைக் காணோம். இப்படியே எச்சில் இலையை மாலை வரை விட்டு வைக்க எப்படி ஒப்புக் கொள்வார்கள்' இப்படியெல்லாம் கற்பனை செய்து கொண்டு ஏங்கினேன்.

அமுதமாயிருந்த அன்னம் தொண்டைக்குள் போவதே துன்பமாயிருந்தது. எப்படியோ உண்டு முடித்தேன். எனக்கு முன்பே இராஜகோபால் முடித்துவிட்டார். அதைக் கண்டதும், அவருடைய தாயார்,

''கோபால்! எழுந்திருக்காதே! உன் கூட்டாளி சாப்பிட்டு முடித்ததும் அவன் இலையையும் நீயே எடுத்துக் கொண்டுபோய்ப் போட்டுவிடு'' என்று கட்டளையிட்டார்.

'என் எச்சில் இலையை நண்பர் இராஜகோபால் எடுக்கலாமென்றால் நானே எடுப்பதில் இழிவு இல்லை' என்பது பளிச்சென்று தெரிந்தது.

உணவை முடித்ததும் என் இலையை நானே எடுத்தேன்.

வடிவேலு! இது உங்க வீடுபோல, உங்கள் வீட்டில் நீ சாப்பிட்ட இலையை எடுக்க மாட்டாய். அதனால் இங்கும் நீ எடுக்கக்கூடாது.

''வீட்டில் உன் அம்மா எடுப்பாள். இங்கே நான் எடுப்பதே முறை. ஆனாலும் எங்கள் தெருவார் பொறித்துக் கொட்டி விடுவார்கள். ஊர்

வாயில் படும் நிலையில் நான் இல்லை. இராஜகோபாலை உன் தம்பியாக நினைத்துக் கொள். அவனே உன் இலையையும் எடுக்கட்டும்'' என்று இராஜகோபாலின் அன்னையார் வற்புறுத்தினார்.

சோம்பேறியாகிய நானும் ஒப்புக் கொண்டேன். இப்போது நினைத்துப் பார்க்கையில் வெட்கமாயிருக்கிறது.

அவரவர் வேலையை அவரவரே செய்து கொள்வதில் இழிவு இல்லை; பிறருக்குச் சுமையாக இருப்பதே பழி. பிந்தியதற்கே வெட்கப்படவேண்டும்.

இவற்றை உணராத சிறுபிள்ளைத்தனத்தால், நண்பர், நான் உண்ட இலையை எடுத்தெறிய ஒப்புக் கொண்டேன். அதுவே பழக்கமாகிவிட்டது.

இராஜகோபால் வீட்டில் நான் உண்டபோது எல்லாம், என் எச்சில் இலையையும் என்னுடைய நண்பர் இராஜகோபாலே எடுத்து வந்தார்.

நான் கல்லூரி மாணவனானபோது இக்குடும்பம் சென்னையில் குடியேறிவிட்டது. இரண்டொரு மாதங்களுக்கு ஒருமுறை இவர்கள் வீட்டுக்குச் செல்வேன்: உண்பேன்; என் இலையை எடுக்க விடமாட்டார்கள்.

இராஜகோபாலனின் அன்னையார் உயிரோடிருந்த காலமெல்லாம் இப்படி நடந்தது. அப்புறம் நான் நாடோடியாகி விட்டேன். இக்குடும்பத்தை நினைத்தால் புல்லரிக்கிறது.

இராஜகோபாலனின் அண்ணன்கள் இருவரும் வெளிநாட்டு மண்ணெண்ணெய்க் கம்பெனிகளில் அலுவலர்களானார்கள். பெரும் பதவிகளுக்கு நல்ல ஊதியத்துடன் உயர்ந்தார்கள்.

இராஜகோபால் பள்ளி இறுதித் தேர்வுக்குப்பின் அச்சுத் தொழிலில் பயிற்சி பெற்றார். சென்னை அரசு அச்சகத்தில் பணிபுரிந்தார். பின்னர், இந்து நாளிதழ் அச்சகத்திற்கு மாறினார். அங்கு அமைதியாகப் பணிபுரிந்த பின்னர் உரிய காலத்தில் ஓய்வு பெற்றார்.

இந்திய சமுதாயம் வளமானதாக இருந்திருக்குமேயானால் இவரைப் போன்ற நல்லவர்கள் தொழில் மேதைகளாக உதவியிருக்கும்.

நம் நோயாளி சமுதாயத்தில், 'இருப்பவனு'க்குத்தானே மேலும் மேலும் வாய்ப்புகள்; இல்லாதவர்களுக்கு ஒடுக்கந்தானே, காத்திருக்கிறது.

ஏழ்மையின் கோர தாண்டவம்

என்னோடு படித்து, பலவகையாக வளர்ந்த நண்பர்களைப் பற்றிச் சொன்னேன். ஒரே ஒரு நண்பரை நினைக்கும்போது இன்னும் கண்ணீர் பொங்குகிறது; வெந்நீராகிறது.

நான் ஆறாவது வகுப்பில் படிக்கும்போது, முருகேசன் என்னும் சிறுவன் வந்து சேர்ந்தான். அவன் எலும்பும் தோலுமாக இருந்தான்.

சிலவேளை அவனுடைய சொக்காயும் பொத்தல்கள் உடையதாக இருக்கும். அந்த ஏழை முருகேசனுக்குத்தான் படிப்பின்மேல் எத்தனை ஆர்வம்.

முருகேசன் ஏழை மட்டுமா? படிக்காத குடும்பத்தில் பிறந்தவன். அதோடு பால்மணம் மாறாப் பருவத்தே தந்தையை இழந்த சிறுவன்.

தாய் அன்றாடம் கூலி வேலை செய்து சிறுவனுக்கு அரை வயிறு சோறு போட்டார். தன் வயிற்றை வாயைக் கட்டி, எப்போதோ, கையிலே கிடைத்த நாலு காசைச் சொப்பிலே சேர்த்து வைத்தார். அதைக் கொண்டு தன் ஒரே மைந்தனுக்குச் சம்பளம் கட்டி வந்தார்.

அந்தப் பொல்லாத காலத்தில் ஆறாம் வகுப்பிற்கே எல்லோரும் சம்பளம் கட்ட வேண்டும். அப்போது யாருக்கும் இலவசக் கல்வி இல்லை. தான் உண்ணா நோன்பிருந்து பையனையும் அரைப் பட்டினி போட்டு, என் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்திருந்தார்.

ஒடிந்து விடுவதுபோல் சுப்பலாயிருந்த பையனும் படிப்பில் ஆர்வம் கொண்டிருந்தான். படிப்பதற்காக நாள்தோறும் நத்தப்பேட்டையில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தூரம் நடந்தே வருவான். நடந்தே திரும்புவான். வேறு வழி?

முருகேசன் கையில் காசு இல்லை. வழியில் வண்டிகள் ஓடா, அக்கால ஏழை மாணவர்களுக்கு நடையே வழி.

அடிமை இந்தியாவில், கல்வி வாய்ப்பே குறைவு; அதுவும் காசு உள்ளவர்களுக்கு மட்டுமே எட்டும். அதற்குப் பணம் கண்டுபிடிக்கும் ஏழைகள் பட்டினியாக நலிவதைவிட வேறு மாற்றுக் கிடையாது.

மெலிந்த முருகேசன் நெடுந்தொலைவு நடந்து வந்த மெய் வருத்தம் பாராமல் பசி நோக்காது கல்வியின்பால் கருத்தாக இருந்தான். நல்ல மதிப்பெண்கள் பெற்றான். நானும் அவனும் ஒன்றாகச் சேர்ந்து கணக்குப் போட்டுப் பழகுவோம்.

ஒருநாள், இடைவேளை தொடங்கும் நேரம், என் தந்தை பள்ளியண்டை வந்தார். முருகேசன் என் கூட்டாளி என்பதை உணர்ந்தார். அவனோடு பேச்சுக் கொடுத்தார். அவன் மதிநுட்பம் விளங்கிற்று. அவனுக்குப் பகல் உணவு இல்லை என்பதும் தெரிந்தது.

நெடுந்தூரம் நடந்து, பட்டினியாகப் படித்தும் நிறைய மதிப்பெண் பெறும் முருகேசன்மேல் என் தந்தைக்கு பற்று ஏற்பட்டது.

அவனுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்தார். முருகேசனுக்கு என்று ஓர் தொகையைக் குறிப்பிட்டு, அதனை என் வழியாகக் கொடுத்து வந்தார். மகிழ்ச்சியோடு அவனும் படித்து வந்தான். எனக்கும் நிறைவு.

உலாவுதல் தென்றலின் இயற்கை; ஒளி கொடுத்தல் ஞாயிற்றின் கடமை. குளிர்வித்தல் தண்ணீரின் பொறுப்பு. உதவுதல் மனிதனின் கடமை.

தென்றலோ, ஞாயிறோ, நீரோ தான் கடமை புரிந்ததைப் பறைசாற்றுவதில்லை; சாற்றினால் இழிவு.

மனிதனும் மற்றோர் மனிதனுக்கு உதவி செய்ய நேர்ந்து விட்டால் அதைச் சொல்லிக் காட்டுவது கீழ்மை. அதை உணர்ந்திருந்தும் இப்போது யான் என் செய்கிறேன்?

நாட்டின் நலிவையும் ஏழைகளின் அல்லலையும் இன்றைய தலைமுறைக்குச் சுட்டிக்காட்டவும், பிச்சைபோட்டுத் தீர்வதல்ல சமுதாய வறுமை; தலைகீழான, துணிச்சலான மாற்றத்தால் மட்டுமே, எல்லோரும் வாழமுடியும் என்பதைக் காட்டவுமே, செய்ததைச் சொல்லிக் காட்டும் தாழ்நிலைக்கு என்னை ஆட்படுத்திக் கொள்ளுகிறேன்.

பொங்கல் விடுமுறை வந்தது; அதற்குப்பின் பள்ளிக்கூடம் திறந்தபோது முருகேசன் வரவில்லை. 'நாளை வருவான், நாளை வருவான்' என்று எதிர்பார்த்து ஏங்கினேன். ஏன் வரவில்லையென்று தெரிந்துகொள்ளவும் முடியவில்லை. நத்தப்பேட்டைக்கு அக்கம்பக்கத்திலிருந்து எவராகிலும் வந்தால் அல்லவா கேட்டறிய முடியும்?

முருகேசனைக் காணாது பலநாள் ஏங்கினேன். பேரிடி வீழ்ந்தது; 'இனி வரவே மாட்டான்' என்று செய்தி எட்டிற்று. இரக்கமற்ற மக்கள் சமுதாயத்தை விட்டே மறைந்துவிட்டான் என்பது செய்தி. பொய்யாக இருக்காதா என்று நான் ஏங்கினேன். முருகேசனுக்கு உடம்பெல்லாம் சிரங்கு கண்டதாம். காய்ச்சலும் வளர்ந்ததாம். அவன் ஏழைத்தாய் மருந்திற்கு எங்கே போவார்? இரக்கமுடைய யாரோ மந்திரித்தார். ஆனால் பலன் இல்லை மறைந்துவிட்டான்.

இளமையில் கணவனை இழந்து, ஒரே குழந்தையை நம்பி, அவனுக்காகவே வாழ்ந்த முருகேசனின் தாய் அவன் பிரிவால் என்ன பாடுபட்டிருப்பார்? எப்படித் தவித்திருப்பார்? எண்ணவும் கூடவில்லை.

நொந்துபோன, ஆகாயக் கோட்டையிலேயே மூழ்கியுள்ள நம் சமுதாயத்தில், இத்தகைய தாய்களின் வேதனைகளுக்கு மருந்து ஏது?

ஏழ்மையே! நீ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எத்தனை எத்தனை பச்சைக் குழந்தைகளை விழுங்கி ஏப்பம் விடுகிறாய்! எத்தனை எத்தனை. பால் மணம் மாறாச் சிறுவர் சிறுமியர் உனக்குப் பலியாகி வருகின்றனர்!

கொடிய ஏழ்மையே! நீ பறித்துப் பறித்து விழுங்கும் பள்ளிக் குருத்துகளுக்குத்தான் கணக்குண்டா?

உனக்கோ பசி அடங்கப் போவதில்லை. இந்த இரக்கமற்ற சமுதாயத்திற்காவது புத்தி வரவேண்டாமா?

வறுமை தனியார் சிக்கல் அல்ல. சமுதாய நோய்; சமுதாய அமைப்பில் உள்ள தவறு; பெருந்தவறு; சமுதாயம் முழுவதும் சேர்ந்து விரட்ட வேண்டிய கொடிய நோய்; ஒத்தடங்கள், தூக்க மாத்திரைகள் பலிக்காது.

வறுமையை வேரடி மண்ணோடு களைந்து எறியும் துணிவு கொள்ள வேண்டாமா? அப்படித் துணிவு கொண்டால் அந்த வேளையே, ஏழ்மைக்குச் சிரங்கு காணும்; ஏழ்மைக்குச் சன்னி பிறக்கும்; கோடி கோடி முருகேசன்களை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் இல்லாமை நோய் இனி இல்லாமல் ஒழியும்.

'எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில் யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்' என்று பாரதி பாடியதை உள்ளத்தில் கொள்வோம்.

10. வரலாறும் வளர்ச்சியும்

திரு அருட்பா செய்த புரட்சி

தானே நேரடியாகப் பெறும் பட்டறிவு ஒருவரை ஆளாக்க உதவும். குடும்பச் சூழலையும் அதன் சிந்தனைப் போக்கையும் வளர்க்கவும் உதவக்கூடும்; தேய்க்கவும் உதவக்கூடும்.

தனித்தனிக் குடும்பங்களின் சிந்தனைப் போக்கு எதனால் உருவாகின்றது? வழி வழி வந்த போக்கால் ஆற்றுப்படுகிறது. நடுவில் சேரும் கருத்தோடைகளும் கருத்தாறுகளும் சிந்தனைப் போக்குகளை மாற்றுவதுண்டு.

முழங்காதபடி செய்துவிட்ட கருத்துகளும் வீண் போவதில்லை. அவற்றின் வேலையை நுண்மையாகச் செய்து முடித்து விடுகிறது.

வள்ளலாரைப் பற்றி இன்று பலரும் பேசக் கேட்கிறோம். அடிகளார் பல இடங்களிலும் பேசப்படுகிறார். அவர் தூல உடலோடு நடமாடிய காலத்தில் அவரைப் படாதபாடு படுத்திற்று சமுதாயத்தின் பழமைப் பற்று.

சென்ற நூற்றாண்டில் தோன்றிப் புலமை பெற்று, துறவு உள்ளம் பெற்று, உயிரிரக்கப் பெருஞ்சுரடாக விளங்கினார் இராமலிங்க அடிகளார்.

கந்தகோட்டப் பெருமானையும் தணிகைநாதனையும் ஒற்றி யூரனையும் தில்லை நடராஜனையும் பாடியபோது பொறுத்துக் கொண்டது பழைய மரபு.

அடிகளார் ஆறாந் திருமுறையைப் பாடிய காலை அதைச் சமுதாயத்தால் பொறுக்க முடியவில்லை.

சாதி ஏற்றத் தாழ்வு உணர்வில், பல தலைமுறைகளாக உழன்று ஊறிப்போன நம் சமுதாய மக்கள்.

'சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே!'

என்று 'புனிதகுலம் பெறுமாறு புகலல்' (5566) பகுதியில் வள்ளலார் பாடியதைக் கேட்டு அதிர்ச்சி யடைந்திருப்பார்கள்.

பழமையை உடும்புபோல் பற்றியுள்ள மக்களுக்கு அடியாரின்

'சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே'

எனும் 'அனுபவ மாலை'யும், (5805)

'இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு

என்னும் 'திருவருட் பெருமை'யும் (4654) வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமைந்திருக்கும்.

சாதி வேலிகளைப் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாதுகாத்து வரும் சமுதாயம், அடியாரின்

'நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார்
இலைநீ விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே'

என்னும் 'அருள் விளக்க மாலை'யோ, (4174)

'எங்குலம் எம்மினம் என்பதொண் ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ் சோதி'

என்னும் 'அருட்பெருஞ் சோதி அகவலை'யோ (அடி: 219,220) செரிக்க முடியுமா?

முடியாது.

சாதி சமயச் சழக்கை விட்டேன்' என்று அருளிய வள்ளலாரைத் தாக்க, பழமை தலையெடுத்தது; ஆறுமுக நாவலர் என்ற உருவில் வழக்காடிற்று.

'இராமலிங்கர் பாடல்கள் அருட்பா அல்ல, மருட்பா' என்று எழுதி எழுதிப் புழுதி வாரியிறைத்து மகிழ்ந்தது. சிந்தனையைத் தூண்டுவதை விட நிந்தனையை வளர்ப்பதில் வெற்றிகண்டது.

வெகுளியும் பகைமையும் எல்லாருக்குமே பொல்லாதன.

தமிழன் வெகுளியோ பகையோ கொண்டு விட்டால், அவன் செய்யும் அநீதிக்கு அளவு ஏது?

கைவீசி நடக்கவும் நடுங்கிய அடக்கத்தின் திருஉருவை, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' இரக்கமே உயிராகிய அடிகளாரை, வழக்கு மன்றத்திற்கு இழுத்துப் பழிக்க முயன்றது கொடிய பழமை.

நடுநிலைமையில் இருந்து, உண்மை காண்பதைவிட, குழுச் சண்டைகளிலேயே அதிக மகிழ்வு காணும் மக்களும் தூற்றல் புழுதியால், வள்ளலாரின் ஒளியைச் சில காலம் மறைப்பதில், வெற்றி கண்டார்கள்.

அணுகுண்டு வெடித்தால், நெடும்பரப்பில் வாழும், கணக்கில் அடங்கா உயிர்களை நொடியில் அழிக்கும். அதோடு நிற்குமா? நில்லாது?

அதனுடைய கதிரியக்கம் பரவி, எங்கோ, கருவில் இருக்கும், சிசுக்களையெல்லாம் பாதிக்குமாம்.

வள்ளலாரின் சமத்துவப் பாக்கள் ஒரு வகையில் அணுகுண்டிற்கு ஒப்பாக வேலை செய்துள்ளன.

'அருட்பா' - 'மருட்பா' போராட்டமும் வழக்கும் நாட்டார் காதுகளில் பட்டன. மரபு வழி வாழ்த்துகளையும் புதுவழி - சன்மார்க்க வழிப் பாடல்களையும் பொதுமக்கள் கேட்டார்கள். முந்தியவற்றை ஊரறியப் பாடினர். பிந்தியவை வெளியில் தெரியாமல் செயல்பட்டன.

நெடுங்காலமாக ஏற்றுக் கொண்டிருந்த சாதி முறை, அதிலுள்ள உயர்வு தாழ்வு பற்றிச் சாதாரண குடிமக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். மறு பரிசீலனை செய்தார்கள்.

முன்னே வந்து மாற்றத்திற்குக் குரல்கொடுக்க முடியாத பலரிடம் தங்கள் மனத்தில், 'சாதியும் சமயமும் தவிர்த்தல் தவறு அல்ல' என்னும் எண்ணம் கருக்கொண்டது.

அத்தகைய எண்ணம் கருக்கொண்ட ஒரு பெரியவர், எங்கள் ஊர் ஆற்றின் எதிர்க்கரையில் இருக்கும் இளையனார் வேலூரில் வாழ்ந்தார்.

எனக்குப் புத்தி தெரிவதற்கு முன்னரே சமாதியடைந்தார்.

அவர் உரிய காலத்தே இல்லறம் மேற்கொண்டார். அந்தியத்தில் துறவறம் மேற்கொண்டு, 'நல்சாமியார்' என்ற பெயரில் வாழ்ந்தார்.

அவரோடு என் தந்தை நெருங்கிப் பழகியவர். நல்சாமியார், வள்ளலாரிடமிருந்து சாதி, சமயச் சழக்கு தவிர்த்தலைக் கற்றுக் கொண்டவர்.

'சாதிவேற்றுமை தீங்கானது' என்று என் தந்தைக்குச் சொல்லிக் கொடுத்தார். அது அவருடைய சாதி நினைப்பை மறக்கச் செய்தது.

சாதிகளை எதிர்த்து முழங்காவிட்டாலும் சாதிகளைக் காப்பதில் அவர் ஆர்வம் கொள்ளவில்லை. அக்கால நாட்டுநடப்பு சாதியுணர்வை மேலும் மறக்கத் துணையாயிற்று.

இந்திய மன்னர்களின் ஒற்றுமை இன்மையும் ஆங்கில அரசின் உதயமும்

முற்கால இந்திய மன்னர்கள், தங்கள் ஆட்சிக்குட்பட்ட மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளிப்பதில் செலவிட்ட சிந்தனையை, நேரத்தை, பொருளைவிட, பக்கத்து நாட்டின்மேல் படையெடுத்து, முடிந்தால் முழுமையும் முடியாதபோது பகுதியையும் பறித்துக் கொள்வதிலேயே நாட்டம் செலுத்தி வந்தார்கள்.

மொழிப் பற்றோ, இனப்பற்றோ நாடு பிடிக்கும் தீமைக்குத் தடைகளாக அமையவில்லை.

பண்டைக் காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் யார்?

தமிழர்களே.

அவர்கள் தாய்மொழி எது? தமிழே!

ஆயினும் அவர்களிடையே ஓயாத சண்டை; அடுத்தடுத்துப் போரிட்டு நலிந்தார்கள்; மக்களைச் சாகடித்தார்கள்.

பாண்டியன் புகழ் அதிகமானால் சேரனும் சோழனும் கூட்டுச் சேர்ந்து, பாண்டியனைத் தோற்கடிப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

சேரனுடைய புகழ் பரவியதும், பாண்டியனும் சோழனும் சேர்ந்து சதி செய்தார்கள். சேரனைத் தாக்கித் தோற்கடித்தார்கள்.

உடன்பிறப்புகளுக்கிடையே நிகழ்ந்த போர்கள், இந்திய அரசுகளை வலுவற்றதாக்கிற்று; ஒற்றுமை ஒடிந்த, காழ்ப்பு மிகுந்த கபோதிக் கூட்டமாக்கிற்று.

சில நூறு மன்னர்கள் பங்கு போட்டுக்கொண்டு இந்தியாவை ஆண்டதால் அன்னியர்கள் எளிதில் நம் நாட்டுக்குள் புக முடிந்தது.

சோப்பும் சீப்பும் விற்க வந்த ஆங்கிலேயரிடம் இந்திய மன்னர்கள் மாறி மாறித் தஞ்சமடைந்தார்கள்.

அவர்களுக்கு உதவுகிற தோரணையில் இந்திய நாட்டையே அடிமைப்படுத்தி ஆண்டார்கள்.

மன்னர்களுக்கு அடிமைப்பட்டுப் பழகிவிட்ட பொதுமக்களுடைய மனத்திற்கு, ஆங்கில அரசுக்கு அடிமைப்படுவது இழிவாகத் தோன்றவில்லை; வெறுக்கத்தக்கதாகத் தோன்றவில்லை.

'இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' என்னும் சலிப்பில் கிடந்தார்கள்.

ஆங்கில ஆட்சி அதிகாரம் பண்ணியதோடு நிறைவு கொள்ள வில்லை.

பின் என்ன செய்தது?

இந்தியப் பொருளாதாரத்தை, தொழில்களை அடியோடு நசுக்கியது; பல்வேறு வழிகளில் இந்திய சமுதாயத்தைச் சுரண்டியது. ஆட்சியும் பொருளும் பொல்லாத போதைப் பொருள்கள் அல்லவா? எத்தனை காலம் ஆங்கிலேயர்களுக்கு அகந்தை ஏறாமல் இருக்கும்?

நம் நாட்டு மக்களை இழிவாக நடத்தத் தொடங்கினார்கள்; பெரும் பதவிகளுக்கு நம்மை இலாயக்கற்றவர்களாகக் கருதினார்கள்.

ஆங்கிலேயர், தங்கள் நாட்டுக் கல்வி முறையை இந்தியாவில் புகுத்தினார்கள். அரசு அலுவல்களின் கீழ்த்தட்டுகளுக்கு, பத்தாயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இங்கிலாந்திலிருந்து ஆட்களைக் கொண்டு வருவதைவிட இந்தியர்களையே ஆயத்தஞ் செய்வது ஆதாயமாகும் என்று எண்ணினார்கள்; அப்படியே இருந்தது.

மெக்காலே பிரபு இந்தியாவில் நுழைத்த மேனாட்டுக் கல்வி முறை அரசு ஊழியர்களை மலிவாகப் பெறுவதற்குத் துணையாக நின்றது.

கால் நூற்றாண்டிற்குப்பின், 'அரசின் பெரிய பதவிகளைப் பெறுவதற்கும் இந்தியர்கள் தகுதியானவர்களே' என்னும் எண்ணம் முளைத்தது.

காங்கிரசின் தோற்றம்

ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்படும் பதவிகள் இந்தியர்களுக்குக் கிடைக்கவும் வழி செய்ய வேண்டும். 'இந்திய ஆட்சி அணி' என்னும் பதவிகள் இந்தியர்களுக்கும் கிடைக்கவேண்டும். அதற்கான தேர்வு இங்கிலாந்தில் மட்டும் நடப்பது சரியல்ல. அதே நேரத்தில் இந்தியாவில் நடத்தப்பட வேண்டும். இத்தகைய கோரிக்கைகள், முதலில் காட்டுக் கூச்சல்களாகக் கிளம்பின.

பிறகு 'அனைத்திந்திய காங்கிரசு' என்னும் அமைப்பு தோன்றியது.

அதன் வாயிலாக, 'பதவிப் பங்கு' கோரப்பட்டது.

அனைத்திந்திய காங்கிரசின் தொடக்க காலம், அரசியல் தன்னாட்சி கோரும் காலமாக இல்லை. இது குறையல்ல.

பெரும் பரப்பை வளைத்துக் கொள்ளப் போகும் ஆலமரமும் மற்றச் செடிகளைப் போலவே, அடக்கமாக, இரண்டு இலையோடுதான் முளைக்கும்.

காலம் செல்லச் செல்லவே, செடியாக வளர்ந்து, மரமாகக் கிளைத்து நாலா பக்கங்களிலும் விழுதுவிட்டு, பெருமரமாகக் காட்சியளிக்கும்.

அனைத்து இந்திய காங்கிரசும் இப்படியே வளர்ந்தது. தோன்றிச் சில ஆண்டுகள் கழிந்த பிறகே, இயக்கம் சூடு பிடித்தது; கோரிக்கைகள் விரிந்தன. தன்னாட்சி உரிமைக்குப் போராடும் இயக்கமாக வளர்ந்து, ஒற்றுமையுடன் வீறுகொண்டது.

அப்படி வீறுகொள்ளும் நிலையில், அண்ணல் காந்தியடிகளின் தலைமை தேசிய காங்கிரசிற்குக் கிடைத்தது. காந்தியடிகளின் வழி நடத்தலில் இது பொது மக்கள் இயக்கமாக மலர்ந்தது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கு வழங்கப்படும் நாட்டு மொழிகளில் அரசியல் அறிவு வழங்கப்பட்டது. அரசியல் மேடைகளில் தாய்மொழி மணம் வீசிற்று. தாய் மொழிச் செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

நாட்டுக் கல்வி மட்டும் பெற்றவர்களும், தாய்மொழி இதழ்களின் மூலம் உலகில் அரசியல் தெளிவினைப் பெறத் தொடங்கினார்கள்.

இந்தியாவிலுள்ள அரசுப் பதவிகளில் இந்தியர்களும் அமர வேண்டும் என்பதற்கான முயற்சிகள் வெற்றி பெறத் தொடங்கின. அதைக் கண்ட பொதுமக்கள், 'தத்தம் பிள்ளைகளும் அப்பதவிகளுக்கு வரவேண்டும்; உயர்படிப்பும் பட்டங்களும் அவை கொடுக்கும் பல நிலைப் பதவிகளும் மேட்டுக் குடிகளிடமே முடங்கிவிடக் கூடாது; அவை கடைகோடியில் இருப்போர்க்கும் எட்ட வேண்டும்' என எண்ணினர்.

போட்டியும் காழ்ப்பும் வளராதிருக்கும் பொருட்டு 'இந்திய ஆட்சி அணியைச் சேர்ந்த பதவிகளில் இத்தனை விழுக்காடு இந்தியர்களுக்கென்று ஒதுக்குவதைப்போல, இந்தியர்களிடையிலும் ஆதிதிராவிடர்களுக்கு இவ்வளவு, இஸ்லாமியர்களுக்கு இவ்வளவு, பார்ப்பனர்களுக்கு இவ்வளவு, மற்றவர்களுக்கு இவ்வளவு என்று ஒரு பங்கீட்டை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்ற கருத்துகள் ஆங்காங்கே கிளம்பின.

சில ஆண்டுகளில் நம் வகுப்புகளுக்கிடையில் சரியான பங்கீடு கோரும் இயக்கம் ஒன்று சென்னை மாகாணத்தில் முளைத்தது.

அதன் பெயர் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்'. அதையே 'நீதிக்கட்சி' என்றும் அழைத்தனர்.

சாதிகள் உள்ளவரை சாதிகளின் பெரும்பிரிவு அடிப்படையில் அரசின் கீழ் உள்ள எல்லாப் பதவிகளையும் பங்கிட்டுத் தரவேண்டு மென்பது புதிய கட்சியின் குறிக்கோள்.

அதன் வேர்கள் அன்றைய சென்னை மாநிலத்தைச் சேர்ந்த தமிழகம், ஆந்திரம், மலையாளம், தென்கன்னடப் பகுதிகளுக்குப் பரவின.

ஒரு காலகட்டத்தில் அன்றைய பம்பாய் மாகாணத்தின் தென்பகுதிக்கும் மத்திய மாகாணத்திற்கும் பரவின.

நான் சிறுவனாக இருந்தகாலை நம் சென்னை மாநிலத்தில், இந்திய தேசிய காங்கிரசும் நீதிக்கட்சியும் பொதுமக்கள் ஆதரவைப் பெறப் போட்டியிட்டன. இரு சார்பிலும் எண்ணற்ற மேடைப் பேச்சுகள் எழுச்சியூட்டின.

11. திண்ணைப் பேச்சில் தீப்பிடித்தது

நாளிதழ்கள் செய்த தொண்டு

'சுதேச மித்திரன்' என்ற நாளிதழ், காங்கிரசின் கொள்கையை நாட்டு மக்கள் முன்வைத்தது. நீதிக்கட்சி நடத்திய 'திராவிடர்கள்' என்ற தமிழ் நாளிதழ், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காக ஆதரவு திரட்டியது.

இரு நாளிதழ்களும் இந்த நூற்றாண்டின் இருபதுகளில் எங்கள் ஊருக்கு வந்துகொண்டிருந்தன. அவை நாட்டு நடப்பைக் காட்டின. பொதுச் சிக்கல்களை நாடறியச் செய்தன.

அரசியல், சமூகவியல் பற்றிய சிந்தனைகள் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

எதிரும் புதிருமான கொள்கைகள், திட்டங்கள், மக்களின் விழிப்பை சிந்தனையைத் தூண்டின.

அக்காலத்தில் நாட்டுப் புறங்களில் நாள்தோறும் அஞ்சல் வராது. வாரத்திற்கு ஒரு நாளோ, பெரிய சிற்றூர்களாயின் இரண்டு மூன்று நாள்களோ அஞ்சல் கிடைக்கும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் சினிமாவை அறியாது; அன்று வானொலி கிடையாது.

எனவே, வாரத்திற்கு ஒரு நாள், அத்தனை நாளிதழ்களிலும் மொத்தமாக வரும் நாள், ஏதாவது ஒரு திண்ணையிலோ, ஊர்க் கோடியில் உள்ள அரச மரத்தடி மன்றத்திலோ கூடி, செய்திகளைப் படிப்பார்கள். அவை பற்றிக் கலந்துரையாடுவார்கள்.

அக்காலத்தில், அரசியல் கட்சி வீறாப்பு முற்றி இல்லை. பல வேளை, செய்திகளை மதிப்பிடும்போது, காரசாரமான பேச்சு இடம் பெறாது. பட்டிமன்றம், பொழுதுபோக்குப் போலவே, பெரும்பாலும் அமையும்.

மூன்று நான்கு பெரியவர்கள் எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, ஒரு வாரத்தின் சுதேசமித்திரனையும் திராவிடனையும் படித்துக் கொண்டிருந்தார்கள். செய்திகள், போட்டி உரையாடலுக்குப் பொருட்டாயின.

வெளியான செய்தி ஒன்றைக் குறிப்பிட்டு, பாராட்டினார் ஒருவர். அதை ஆதரித்தார் என் தந்தையார்.

மற்றொருவர், ''தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் மட்டுமே தெரியும்''.

''இந்தப் புதுப்போக்குகள் கேட்பதற்கும் படிப்பதற்குமே நன்றாயிருக்கும். நடைமுறைக்குச் சரியாக வராது.

எங்கோ நடந்தால், இங்கிருந்து புகழ்ந்து கொண்டிருக்கலாம். நம் ஊருக்கு வந்துவிட்டால் தெரியும்; அது எவ்வளவு கெடுதி என்று.

''நாலு பேர் அறிய இதைப் படிக்காதீர்கள்; பரப்பாதீர்கள்; வீண் தொல்லையை விலைக்கு வாங்குவானேன்.

''காலம் காலமாக வரும் பழக்கங்கள் நம்ம பெரியவர்கள் வகுத்ததாயிற்றே! அவர்கள், தெரியாமலா, எது எங்கே நிற்கணும் என்று முறைப்படுத்தி இருக்கிறார்கள்.

''வெள்ளைக்காரனோடே சண்டைபோட நிறையப் பேர் வேண்டுமென்பதற்காக, யார் யாரையோ சேர்த்துக்கொள்ள முடியுமா? சேர்த்துத் தொலைத்தாலும், வெளியே பொதுக்கூட்டத்தோடு நிறுத்திவிட்டு வரவேண்டும். சிறுபிள்ளைத்தனமாக நடக்கக்கூடாது'' என்று ஒரு பெரியவர், பழமைக்காக வாதாடினார்.

அவர் சொல்லில் கடுமையில்லை. ஆயினும் குரலில் முகத்தில் வெகுளி பளிச்சிட்டது. கடைசியில் அது ஒரு அறைகூவலில் முடிந்தது.

அது என்ன அறைகூவல்?

விநாச காலே விபரீத புத்தி

நெய்யாடு பாக்கத்தில் எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு அரட்டையடித்தது, அறைகூவலாக உருவெடுத்தது. அது எப்படி?

அங்கிருந்தவர்களில் ஒருவர்,

''நம் இந்திய மன்னர்கள் காட்டரசர்கள் போல! இவர்கள் இட்டதே சட்டம். இவர்களை, ஏன் என்று கேட்க யாரும் இல்லை.

''சீமையிலே இருக்கிற வெள்ளைக்கார அரசனைக்கூட பாராளுமன்றம் தட்டிக் கேட்கும். நம் வேந்தர்களுக்கு அந்தக் கட்டுப்பாடும் இல்லை.

''அதனால் அப்போதைக்கப்போது, இவர்கள் எதை எதையோ செய்து தொலைக்கிறார்கள். அதைப் பார்த்து, நாமும் அவர்களைப் பின்பற்ற முடியுமா? பின்பற்ற முயன்றால் நாடு நாசமாகப் போய்விடும்.

''ஆத்திரத்தில் சொல்லவில்லை. சாபமிடவில்லை. நெஞ்சில் பட்டதைச் சொல்லுகிறேன். உப்புத் தின்றால் தண்ணீர் குடிக்கணும். ஒவ்வொரு நடவடிக்கைக்கும் விளைவு உண்டு.

''இப்ப, பாருங்க. அங்கே எங்கேயோ, வடக்கே, 'பகோடா' இல்லை, 'பரோடா' என்று ஒரு சுதேச சமஸ்தானம் இருக்கிறதாம். அங்கே, எல்லாரும் நாலாவது வரையில் கட்டாயமாகப் படிக்கணுமாம். அப்படிக் கட்டளையிடப் போகிறார்களாம். அதற்கு ஆகும் செலவோ வரிப்பணத்திலே இருந்தாம். அப்புறம் வரி ஏறும். நல்லதற்கா இது?

''விநாச காலே விபரீத புத்தி' என்று தெரியாமலா சொன்னார்கள்? பள்ளு, பறை பதினெட்டுச் சாதியர்களும் படித்து விட்டால், அப்புறம் உழுவது யார்? பயிரிடுவது யார்? சுடுவது யார்? புதைப்பது யார்? ஊரெல்லாம் நாறிப் போகாதா நாறி!

''அங்கே ஒருத்தனுக்குக் கிறுக்குப் பிடித்த மாதிரி, இங்கே, திருவனந்தபுரத்திலே ஒருத்தனுக்குப் புத்தி கெட்டுப் போச்சு! சன்னதித் தெருவில் தீண்டாதவர்களும் நடக்கலாமாம். இப்படி ஒரு கட்டளை. இதை அந்தப் பத்மனாப சாமியே கேட்கணும். தக்க கூலி தரணும்.

''அவன் அவன் நிற்க வேண்டிய இடத்தில் நின்றால்தான், ஒழுங்கு மரியாதை இருக்கும். அதைவிட்டுவிட்டு, எவன் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் நடமாடலாம் என்று விட்டுவிட்டால், அதோடு நிற்குமா? அப்புறம் நம் வீட்டுத் திண்ணை மேலேயே உட்காரலாம் என்பானுக!

''வரன்முறை இல்லாமல் போய்விட்டால், அப்புறம் நாமும் எங்காவது தலைமறைவாக காசி இராமேஸ்வரத்திற்கு ஓடிப்போக வேண்டியதுதான்.

''அப்படியே ஓடநேர்ந்தால் எனக்கு அது ஒன்றும் பிரமாதமில்லை. அங்கேயும், எங்கேயும் இந்தப் பூணூலுக்கு மரியாதை உண்டு. அதைக் காட்டியே பிழைத்துக் கொள்ளலாம். உங்களை நினைத்தால்தான் கவலையாயிருக்கிறது.

''எப்படி இருந்தவர்கள் நீங்கள், சோழ மன்னனுக்கு அமைச்சராக இருந்த சேக்கிழார் எங்கே? அவர் வழி வந்த நீங்க எங்கே?

''ஆதி பல்லவன் காலத்தில் நீங்கதானே, வரதராசர் பெருமாள் கருவறையில் தீவட்டி பிடித்தவர்கள். ஆண்டவன் ஏனோ இப்படிச் சோதிக்கிறான். இன்னக்கி நிலை தாழ்ந்து போச்சி என்பதால், கண்டவனோடு சேர்ந்து, இருக்கிற மரியாதையையும் கெடுத்துக் கொள்ளலாமா?

''என்னமோ! துரைசாமி! நான் ஒளிக்காமல் சொல்லிவிட்டேன் நீயே மெல்ல யோசித்துப்பார்.

''எதுவும் தானே வந்து தொலையும்போது வந்து தொலையட்டும். நாமா வரவழைத்துக் கொள்ள வேண்டாம்?

''வழக்கம்போல ஆதிதிராவிடர்கள் ஊருக்குப் பின்புறம் ஆற்றோரமே போகட்டும். என்ன பல்லக்கிலா போகிறான்கள், ஒத்தடிப்பாதை போதாது என்பதற்கு?

''மற்றது எப்படிப் போனாலும் நம் தெரு வழியாகப் போக விட்டால் கள்ளுக்கடையிலிருந்து போகும்போது ஆற்றோரம் போடுகிற அசிங்கமான வாய்ச்சண்டை, கைச்சண்டை எல்லாம் நம் வீட்டு முன்பே வந்து விடும்.

''இருக்கிறது இருக்கிறபடியே இருக்கட்டும். நாம் கண்மூடின பிறகு, எப்படியோ போகட்டும். அது ஆண்டவன் விட்டவழி, அது நம் கையில் இல்லை.

''என்ன ஊமையாக இருக்கிறாயே துரைசாமி? நான் சொல்வதை ஒப்புக் கொள்கிறாய் அப்படித்தானே!'' என்றார் ஒரு பழமைப் பாதுகாவலர்.

மழை வரும் பின்னே மின்னல் வரும் முன்னே!

''பெரியவர்கள் மனம் புண்படும் மாதிரியில் குறுக்குச் சால் ஓட்ட வேண்டாம் என்று நினைத்தேன். அதனால் சும்மா இருந்தேன். எனக்கு என்னவோ, திருவிதாங்கூர் அரசர் செய்ததே சரி என்று தோன்றுகிறது.

''நாம் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

''பொறுப்பு, கவலை, சுமை ஏதும் இல்லாமல் துள்ளித் திரியும் பிள்ளைப் பருவம் என்றும் இருந்தால், நன்றாக இருக்கும் என்று நான் எண்ணுவது உண்டு. உங்களுக்கு எப்படியோ?

''எல்லாரும் அப்படியே விரும்பினாலும் அதற்காக எத்தனை வேண்டுதல்கள் செய்து கொண்டாலும் அது பலிக்குமா?

''பாருங்களேன்! எத்தனையோ யுகத்துக்கு ஒரே ஒரு மார்க்கண்டேயன் மட்டுமே 'என்றும் பதினாறாக இருந்தான்' என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். எவ்வளவு காலமோ கழிந்தும் இரண்டாவது மார்க்கண்டேயன் வரவில்லையே!

''அப்படியென்றால் நாம் என்ன என்ன செய்யவேண்டும்? எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். ஆவது அறிவார் அறிவுடையார்! அடுத்து என்ன, அடுத்து என்ன என்பதை முன்கூட்டியே எதிர்பார்த்து, அவற்றைச் சமாளிக்க ஆயத்தமாகி விடுவதே அறிவு.

''பிள்ளை, காளையாவது உறுதி. இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கற்கவேண்டியவற்றைக் கற்பதற்கு ஏற்பாடு செய்வதே அறிவோடு கூடிய செயல்.

''அப்போதைக்கப்போதே சொல்லி வைத்தேன்' என்பார்கள். அதைப் போல் காளையானதும் திருமணம் தேவை; அதற்கேற்ற பெண் இங்கிருக்கிறாளா, அங்கிருக்கிறாளா என்று முன்னதாகவே, காதும் காதும் வைத்ததுபோல், கேட்டறிந்து வைத்திருத்தல் உதவி....''

துரைசாமியின் பேச்சில் குறுக்கிட்டார், மன்றத்தார் ஒருவர்.

''என்னப்பா, எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறாய்! நம் தெருவில் ஆதிதிராவிடர்கள் நடக்கலாமா? கூடாதா? நேரான கேள்வி. நேரா பதில் சொல்லிவிடு'' என்று மடக்கினார் அந்த நண்பர்.

''வள்ளுவராக இருந்தால் சுருக்கமாகச் சொல்லத் தெரியும். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இந்தக் கேள்விக்குப் பதிலை, நாம் எல்லோரும் சேர்ந்து கண்டுபிடிப்போம்.

''வந்தபின் பதைப்பதற்குப் பதில் வருமுன் காப்பது நல்லது. என்ன வரும்? யானைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே.

''மழை வரும் பின்னே; மின்னல் வரும் முன்னே; இடியும் வரும் முன்னே.

''இடியும் மின்னலும் ஆறேழு ஆண்டுகளாக நம்முன் நிற்கின்றன. மழை கொட்டும் வரை, மணல் மேட்டிலேயே கிடக்கப் போகிறோமா?

''ஆதி திராவிடர்கள் திரண்டு வந்து, மிரட்டும்வரையில் ஏன் காத்திருக்கணும்? நாமே பார்த்து, அழைத்து, துணையாக நின்று உதவுவோம். அப்படிச் செய்தால், பழையபடியே நம் பிள்ளைகாலத்திலும் அண்ணன் தம்பிகளைப்போல ஒற்றுமையாக இருப்பார்கள்...''

மீண்டும் பேச்சு இடை மறிக்கப்பட்டது.

''என்னப்பா! பெரிதாக மிரட்டுகிறாயே. ஆறேழு ஆண்டுகளாக இடிக்குதாம்: மின்னுதாம்! இத்தனை காலமாக அது என்ன இடி, மழை? ஆதிதிராவிடர்கள் திரண்டு வந்து விடுவார்களாம். வந்துவிடுவார்களா?

''நம் தெருவே நடந்தால் அவர்களுக்குச் சோறு வந்துடுமா? சோற்றுக்கு இல்லாத பயல்கள் நம்மை எதிர்ப்பான்கள் என்று நடுங்குகிறாயே. வெளியே காட்டாதே உன் நடுக்கத்தை!'' என்று முத்தாய்ப்பு வைத்தார் ஒருவர்.

டி.எம். நாயர் இட்ட தீ!

''நான் மிரட்டவில்லை. நடந்ததைச் சொல்லுகிறேன். எங்கேயோ! எப்போதோ நடந்ததாக, யாரோ சொன்னதைச் சொல்லவில்லை.

''இந்தப் பத்திரிகைகளிலே வந்ததையே சொல்லுகிறேன்.

''அங்கே சன்னதி தெருவில், தாழ்த்தப்பட்டவர்கள் நடக்க உரிமை கேட்பதற்கு முன்பே, நம் சென்னைப்பட்டினத்தில் நடந்ததைக் கேளுங்கள்.

''1917ஆம் ஆண்டு சென்னை எழும்பூர் ஏரியில், ஆதிதிராவிடர்கள் கூட்டம் போட்டார்களாம். சொல்ல முடியாத பெரிய கூட்டமாம். தலைமை தாங்கியவர் எம்.சி. இராஜா என்பவராம். இரட்டைமலை சீனிவாசன் என்பவர் பேச்சாளராம். இரண்டு பேரும் பட்டினத்தில் பரவலாகத் தெரிந்த ஆதிதிராவிடத் தலைவர்களாம்.

''அதுபோக, நம் ஊருக்கு நாலு கல்லில் இருக்கும் அங்கம்பாக்கத்தில் இருந்து சென்னைக்குப்போன மதுரைப் பிள்ளை என்பவர், அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களில் முக்கியமானவராம். அந்தக் காற்று நம் ஊருக்குத் திரும்பலாம். இப்ப, எது நடக்காது?

''எழும்பூர் ஏரிக் கூட்டத்தில் என்ன பேசினார்கள்? தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று பேசினார்கள். டாக்டர் டி.எம். நாயர் என்பவர் நீதிக்கட்சியை நிறுவிய தலைவர்களில் ஒருவர். அவர் சொன்னாராம்:

'ஆதிதிராவிடர்களாகிய நீங்கள், எவ்வளவு வறுமையில் வாடினாலும் பல்லைக் கடித்துக் கொண்டு உங்கள் பையன்களைப் படிக்க வைத்துப் பட்டதாரிகளாக்கி விடுங்கள்.

''உங்கள் இளைஞர்கள் பட்டதாரிகளாகி ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களாக, போலீஸ் இன்ஸ்பெக்டர்களாக, தாசில்தாரர்களாக வரட்டும்.

'அப்பதவிகளோடு, அவர்கள் எந்த அய்யர் வீட்டில் நுழைந்தாலும், எந்தப் பெரிய சாதிக்காரன் வீட்டில் நுழைந்தாலும், அவ்வீட்டுக்காரர் களுக்கு 'நீ வெளியே நில்' என்று சொல்லும் துணிச்சல் வராது.

'நீங்கள் படித்து, பட்டம் பெற்று, அரசின் பதவிகளில் நிரம்பினால் மட்டுமே தீண்டாமை ஒழியும். வாயை வயிற்றைக் கட்டியாவது படிக்க வைத்து விடுங்கள்.

'படித்த ஆதிதிராவிடர்கள் எல்லோருக்கும் ஆங்கிலேய ஆட்சி வேலை கொடுக்கும். எனவே படிப்பு, படிப்பு என்று கருத்தாய் இருங்கள்' என்று முழங்கினாராம்.

''பிட்டி தியாகராய செட்டியார் பட்டம் பெற்ற மாதிரி, டாக்டர் டி.எம். நாயர் பட்டம் பெற்றது மாதிரி, டாக்டர் சி. நடேச முதலியார் பட்டம் பெற்றது மாதிரி, ஏ. இராமசாமி முதலியார் மாதிரி, ஏன், நம்ம செய்யூர் முத்தய்ய முதலியார், மண்ணூர் கிருஷ்ணசாமி ரெட்டியார் பட்டம் பெற்றது மாதிரி ஆதிதிராவிட இளைஞர்களும் பெறலாம் என்று அந்தக் கூட்டத்தில் பேசினார்களாம்'' என்றார் என் தந்தை.

''பேச்சுத்தானே. குடிப்பதை விட்டுவிட்டு, பணத்தை மீத்து வைத்துப் படிக்க வைக்கட்டும், அப்புறம் பேசலாம்'' என்றார் ஒருவர்.

என் தந்தை பேச்சைத் தொடர்ந்தார்.

''நீண்ட காலமாக ஆதிதிராவிடர்களை அமுழ்த்தி வைத்திருந்தோம்; அமுழ்த்தி வருகிறோம். இப்ப அவர்களுக்கு நல்ல காலம் வந்து விட்டது.

''திராவிடனில் வந்ததைச் சொல்லுகிறேன். முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, தாழ்த்தப்பட்டவர்களின் பாதுகாப்பிற்காகப் 'பறையன்' என்னும் பெயரில் பத்திரிகையைத் தொடங்கி விட்டார்கள். அதன் வழியாக விழிப்பை உண்டாக்கினார்கள்.

''அதனால், நமக்கு அருகில் இருக்கும் மலையாங் குளத்தில், ஆதிதிராவிடர்களுக்குத்தான் ஆரம்பப் பள்ளிக்கூடம் திறக்க முதலில் உத்தரவு ஆயிற்று.

''அதைப் பார்த்துப் பதறிப்போய், சாதி இந்துக்களுக்கும் பள்ளிக்கூடம் வேண்டும் என்று அந்த ஊரார் பின்னால்தான் கேட்கத் தொடங்கினார்கள்.

''எது எப்படியானாலும் ஆண், பெண் இரண்டு சாதியைத் தவிர வேறு சாதி இல்லை என்பதே சரி. தாழ்த்தப்பட்டோர் இழந்த மனிதத் தன்மைக்காக, போராட, வரிந்து கட்டுவதற்கு முன், நாமே அதிலுள்ள நீதியை உணர்ந்து, பாதிவழி சென்று, வரவேற்கிறதே சரி.

''ஏழு ஆண்டுகளுக்கு முன்னே, பட்டினத்திலே 'யாரோ ஒரு நாயர் முழங்கினால் என்ன? அது காட்டுக் கூச்சலே' என்று எல்லோரும் சும்மா இருந்தார்கள். அந்த முழக்கம் எப்படி வேலை செய்தது பார்த்தீர்களா?

''வக்கீல் பட்டம் பெற்ற தாழ்த்தப்பட்டோர் சிலர், திருவாங்கூரைச் சேர்ந்த 'வைக்கம்' என்னும் ஊரில் கோயில் தெருவில் நடக்கும் உரிமை கேட்டார்கள்.

''அந்தத் தெருவில்தான் 'கோர்ட்டு கச்சேரி' இருந்தது. அத்தெருவில் நடக்கக்கூடாதென்றால் அந்தக் கச்சேரிக்குச் சென்று வழக்காட முடியாது. அதாவது படிப்பை வைத்துத் தொழில் நடத்த முடியாது.''

வைக்கம் போராட்டம்

''டாக்டர் டி.எம். நாயர் சென்னையில் விட்ட பாணம் வைக்கத்தில் வீழ்ந்து வேலை செய்தது.

''அந்தத் தெருவில் தாழ்த்தப்பட்டோர் நடப்பது வழக்கத்திற்கு மாறானது என்று 'மேல்சாதி' இந்துக்கள் தடுத்தார்கள்.

''அதை எதிர்த்து, காந்தி பாணத்தை விட்டார்கள். அந்தக் கேரளத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப், அய்யப்பன், நீலகண்டன், நம்பூதிரி போன்ற காங்கிரஸ் முன்னணியினர் சத்தியாக்கிரகம் செய்தார்கள். அதில் ஈடுபட்ட பத்தொன்பது பேர்களையும் ஒரேயடியாகக் கைது செய்தார்கள். அவர்களைத் தொடர்ந்து போராட அங்கே ஆள் இல்லை.

''எங்களுக்கு ஆட்சியைக் கொடு என்று கிளர்ச்சி செய்தால், பத்துப் பேராவது துணிந்து வருவான்; சொந்தக்காரர்களையே எதிர்த்துக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சமத்துவம் கொடுக்க முயன்றால், இரண்டு பேர்கூடத் துணிந்து வரமாட்டார்கள்.

''அதோடு உள்நாட்டு அரசனையும் உள்ளூர் மக்களையும் எதிர்த்துக் கொண்டு வருவார்களா? எவனும் வரவில்லை.

''வைக்கம் போராட்டம் முதல் முயற்சியிலேயே நின்றுவிடும்போல் தோன்றிற்று.

''வைக்கம் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியவர்களின் சார்பில் திரு நீலகண்டன் நம்பூதிரி, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் முன்னணியில் இருந்த ஈ.வெ.ராமசாமிக்கு அழைப்பு அனுப்பினார். வைக்கம் போராட்டப் பொறுப்பை ஈ.வெ. ராமசாமி ஏற்று நடத்த வேண்டுமென்று அன்போடும், நம்பிக்கையோடும் அழைத்தார்கள்.

ஈ.வெ.ரா.வும் வைக்கத்திற்குச் சென்றார். போராட்டப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவரோ, திருவாங்கூர் மன்னருக்கு ஏற்கெனவே நண்பர். அந்தத் தொடர்பை வைத்து, அவருக்குச் சகல மரியாதையும் செய்து, 'தாஜா' செய்ய அரசர் முயன்றார்.

ஈ.வெ.ரா.விடம் அது பலிக்குமா? போலீஸ் ஆணையை மீறினார்; கைது செய்யப்பட்டார். தண்டிக்கப்பட்டார். ஈ.வெ.ரா. சிறைக்குச் சென்றார்.

''தண்டனை முடிந்து வெளியே வந்ததும் மறுபடியும் போராட்டத்தில் ஈடுபட்டார்; மீண்டும் சிறைத்தண்டனை.

''ஆமாம் அப்பா, ஈ.வெ.ரா. மனைவி நாகம்மாளும் பெண் தொண்டர்களோடு அங்குச் சென்று கலந்துகொண்டதையும் நினைவுபடுத்திக்கொள்'' என்றார் ஒருவர்.

''மெய்தான்; இந்தியாவிற்கே வழிகாட்டியாக நம் தமிழ்க்குடும்பம் ஒன்று - ஈ.வெ.ரா. குடும்பம் - செயல்பட்டுத் தீண்டாமை ஒழிப்பிற்குப் போராடிற்று. இது நமக்கு தமிழ் நாட்டுக்கு எவ்வளவு பெருமை.

வைக்கம் போராட்டம் கடைசியில் வெற்றிபெற்றது. 'தாழ்த்தப்பட்டோரும் தடுக்கப்பட்டிருந்த தெருவழியே நடக்கலாம்' என்று அரசர் ஆணையிட்ட பிறகே போராட்டம் ஓய்ந்தது.

தீண்டாமை ஒழிப்பின் முதற் களத்தில் வெற்றி கிடைத்தது; இதோடு நிற்காது.

நம் காலத்திலோ, நம் பிள்ளைகள் காலத்திலோ எல்லோரும் கோயிலுக்குள் போகும் நிலை வந்துவிடும்.

''இதை இப்போதே தொலைநோக்கோடு உணர்ந்து தீண்டாமையை மெல்ல மெல்ல விட்டு விடுவோம். ஆதி திராவிடர்கள் முதலில் நம் தெரு வழியே நடக்கட்டும். அதற்கு வழி விடுவோம்'' என்று என் தந்தை துரைசாமி கூறினார்.

தீண்டாமைக்கு என் தந்தை அடித்த சாவுமணி

உறவினர் ஒருவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவர் சினத்தோடு,

''பொதுத் தெருவில் நடக்க விடுவது இருக்கட்டும்; உன் வீட்டிற்குள் ஆதிதிராவிடரை நுழையவிட்டுவிட முடியுமா? அதைச் செய்துவிட்டு அப்புறம் ஊருக்கு உபதேசம் பண்ணு'' என்று கொக்கரித்தார்.

''பொதுச் சொத்தில் உரிமை கொண்டாடுவது வேறு; தனியார் உடைமையில் உரிமை கொண்டாடுவது வேறு; தனியார் உடைமையில் உரிமை கொண்டாடுவது வேறு என்று காரணங் காட்டி நான் தப்பித்துக் கொள்ள மாட்டேன். நாளையே என் வீட்டுக்குள் ஆதிதிராவிடர் ஒருவரை போகச் சொல்லுகிறேன். அப்புறம் நானே உடன் இருந்து, நம் தெரு வழியே நெடுகிலும் ஆதிதிராவிடர் நடந்து செல்ல வைக்கிறேன்'' என்று அறைகூவலை ஏற்றுக் கொண்டார் என் தந்தையார்.

திண்ணையின்மேல் கூடியிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். பேச்சு இவ்வளவிற்கு முற்றிவிடுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

பொழுது போக்குவதற்காக வாரத்திற்கு ஒரு நாள் கூடி, ஏதோ திண்ணைப் பேச்சுப் பேசப்போக அது இப்படியா முடியணும்?

''துரைசாமி, நம் பக்கத்து ஆற்காடு இராமசாமி முதலியார் என்பது தெரிந்ததுதானே. பேச்சிலே விட்டுக் கொடுப்பாரா? அவரைப் போய் வாதத்துக்கு இழுக்கலாமா? அது கிடக்கட்டும்.

''விளையாட்டு வினையாகிவிட வேண்டாம். கிணறு வெட்ட பூதம் கிளம்ப வேண்டாம். பேச்சு வாக்கிலே வந்ததை அப்படியே மறந்துவிடுங்கள்.

''யார் வீட்டிலும் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய வேண்டாம். தெருவேயும் போகவேண்டாம். இப்படியே காலம் ஓடும் வரைக்கும் ஓடட்டும். நாமா வம்பை விலைகொடுத்து வாங்க வேண்டாம்'' என்று பெரியார் ஒருவர் அமைதிப்படுத்த முயன்றார்.

நேரமாகிவிட்டது என்று எல்லோரும் நழுவி விட்டார்கள்.

என் தந்தையோ திண்ணையில் உட்கார்ந்தபடியே நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

அறைகூவல் எப்படி முடிந்தது? அடுத்துக் கவனிப்போம்.

12. ஆதிதிராவிடரின் இல்லப் பிரவேசம்

குருக்களின் தூது

ஊரைத் திருத்துவதற்கு முன்பு தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். முதலில் என் வீட்டினுள் தாழ்த்தப்பட்டவரை வரவிட வேண்டும்; அப்படிச் செய்த பிறகு ஊரின் பொதுத் தெருவில் ஆதிதிராவிடரை நடக்க வைத்தால் வெற்றி பெறுவோம். இப்படி முடிவு செய்தார் என் தந்தை.

எங்கள் நிலத்தில் பயிர் வேலை செய்யும் ஆதிதிராவிடர் ஒருவரை அடுத்த நாள் வீட்டிற்குள் வரும்படி அழைத்தார். அதுவரை வீட்டை ஒட்டியுள்ள மாட்டுத் தொழுவத்தோடு நின்றே பழகியவர் அவர். எனவே தயங்கினார். தந்தை விடவில்லை. தந்தையின் வற்புறுத்தலால், அவர் வீட்டிற்குள் வந்தார். தாழ்வாரத்தில் நின்றார். நெருப்பில் நிற்பவர்போல் அவர் முகக்குறி இருந்தது. நொடியில் அங்கிருந்து திரும்பிப் போய் விட்டார்.

இந்தச் செய்தி நொடியில், காட்டுத் தீ போலப் பரவிவிட்டது. ஆளுக்கு ஒருவகையில் சபித்தார்கள். எதிர்பாராத இந்த அதிர்ச்சியிலிருந்து என் உறவினர்கள் விடுபட நேரமாயிற்று. அதிர்ச்சி அகன்றதும் சிந்தனை வேலை செய்தது. தூது அனுப்ப முடிவு செய்தார்கள். அதை நிறைவேற்றினார்கள்.

உள்ளூர்க் குருக்கள் ஒருவர் என் தந்தையிடம் தூது வந்தார். வந்த திரு. சுப்ரமணியக் குருக்கள், என் தந்தைக்கு மிகவும் வேண்டியவர்; அநேகமாக அதே வயதினர். அவர், எதையும் இதமாகச் சொல்லக் கூடியவர்.

என் தந்தையைத் தேடி வந்தவர், எதை எதையோ பேசினார். நெடு நேரம் இருவருக்கும் பிடித்தவைபற்றிப் பேச்சு இனிமையாக வளர்ந்தது. கடைசியில் தாம் வந்த தூதுச் செய்தியை மெல்ல வெளியிட்டார்.

''எல்லாரும் மனிதர்கள்தானே. எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும் ஒருவருடைய மானத்திற்கு அறைகூவல் விடுவது தவறு.

''யானைக்கும் அடி சறுக்கும்.

''இது பொய்யல்ல என்பதை நேற்று கண்டோம். யாரும் வேண்டுமென்று உங்களுக்குச் சவால்விடவில்லை. பேச்சோட்டம் அந்நிலைக்குத் தள்ளிவிட்டது. உங்களுக்கு வேண்டியவரே கெட்ட எண்ணம் ஏதுமின்றியே, உங்களைச் சண்டைக்கு இழுத்து விட்டார்.

''தன்மானத்தை விற்றுவிடு என்று நாங்கள் சொல்லுவோமா? அதனால்தான் நேற்றுக் கண்டிப்போடு சொல்லவும் இல்லை. அதைப்பற்றி வாக்குறுதி கேட்கவும் இல்லை.

''உங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள அவர் அறைகூவலை ஏற்றுக்கொண்டீர். ஆதிதிராவிடரை வீட்டுக்குள் நுழையச் செய்து விட்டீர். அதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று சொல்லி உம்முடைய ஆத்திரத்தை மூட்ட விரும்பவில்லை.

''நான் மட்டுமல்ல, என்னைத் தூது அனுப்பிய உம் உறவினர்கள் அத்தனை பேரும் நடந்ததை கனவுபோல எண்ணி மறந்துவிடச் சித்தமாய் இருக்கிறார்கள்.

''நீங்கள் உங்கள் உறுதியைக் காட்டிவிட்டீர்கள். அதோடு முடியட்டும். நாலு நாள் ஆனால், எல்லோரும் மறந்து போவார்கள். அவர்களும் வந்து உரிமை கேட்கப் போவதில்லை.

''சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுக்கக் கூடாது என்பார்கள். அதைப் போல, எவனோ அறைகூவல்விட, நீங்கள் ஏன் தொல்லையை விலைக்கு வாங்க வேண்டும்? உடனடியாகக்கூட பதில் வேண்டாம். பொறுத்து, சிந்தித்துச் சொன்னால் போதும்.

''எங்கள் ஏகோபித்த வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். ஒருமுறை நடந்தது. மறுமுறை நடக்க வேண்டாம். அவ்வளவே! நடந்ததற்குச் சமாதானம் கேட்கவில்லை. இரு சாரார் மானமும் காப்பாற்றப்படும்; அமைதி தொடரும்.

''என்ன இருந்தாலும் அவர்கள் உறவினர்கள் ஆகப்போவதில்லை. எம் உறவினர்கள் அத்தனை பேரும் உம்மோடு நெருக்கமாக இருப்பவர்களே; உம்மிடம் மதிப்பாக நடப்பவர்களே!

''இதற்கு மேல் பன்னிப் பன்னிப் பேசத் தேவையில்லை. அவர் களைப்பார்த்து, 'சொல்லி யனுப்பியதைச் சொல்லிவிட்டேன்; அவர்

யோசித்துப்பதில் சொல்லுவார்' என்று சொல்லலாமா? அந்த உத்தரவோடு நான் வரட்டுமா?'' என்று கூறியபடியே திரு. சுப்ரமணியக் குருக்கள் எழுந்தார்.

மனிதத் தன்மையை இழக்க மாட்டேன்

என் தந்தையார் அவரைப் பார்த்து, ''போகலாம், உட்காருங்கள். ஏற்கெனவே நன்றாகச் சிந்தித்தேன். அதன் பிறகே முடிவுக்கு வந்தேன். அப்படியே செய்து முடித்தேன்.

''என் வீட்டில் ஆதிதிராவிடர்கள் தொடர்ந்து நுழைவார்கள். மற்றவர்கள் வீட்டிலும் நுழையும்படி அவர்களுடைய ஆட்களைத் தூண்டிவிடுவதாக இருந்தால், அவர்கள் எதிர்ப்புக்கும் வேதனைக்கும் பொருள் உண்டு.

''என் வீட்டில் நாணயமான யாரோ, நேர்மையான முறையில் நுழைந்தால் இவர்கள் வெகுளுவதில் பொருளில்லை, தேவை யில்லாமல் தங்கள் மனத்தை வீணாகப் புண்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள்.

''தீட்டுப்பட்டு விட்ட என் வீட்டுத் திண்ணைக்கு வர அவர்கள் மனம் ஒப்பவில்லை யென்றால் வேறொருவர் வீட்டுத் திண்ணையில் எல்லாரும் கூடுவோம்; செய்திகளைப் படிப்போம்.

''நீங்கள் எதிர்பார்த்திருக்கிறபடி நடக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. தேவைப்படும் போதெல்லாம் ஆதிதிராவிடர் என் வீட்டுக்குள் வருவார். அதை மாற்றிக் கொள்வதற்கு இல்லை.

''உங்களைப் புண்படுத்த இதைச் செய்யவில்லை. என் மனிதத் தன்மையை, சமத்துவ உணர்வை - நான் மதிக்கிறேன். அதைக் காப்பாற்றிக் கொள்ளவே இதைச் செய்தேன்; இனியும் தொடர்ந்து செய்வேன்.

''இதை மட்டும் விளக்கிச் சொல்லுங்கள். அவர்கள் மேல் எனக்கு வெறுப்பு இல்லை. அவர்கள் என் மேல் வெறுப்புக் கொண்டு, தங்களை வாட்டிக் கொள்ள வேண்டாம்'' என்றார்.

மறைமுகமான அறைகூவல்

இதைக் கேட்ட குருக்கள் முகத்தைச் சோகம் கவ்விற்று. கண்கள் கலங்கின; உதடுகள் துடித்தன; பேச்சு வரவில்லை. மூச்சுத் திணறிக் கொண்டே,

''நான் உங்களுக்கு எவ்வளவு வேண்டியவன் என்பதை நினைவுபடுத்தணுமா? புராணகாலத்திலும் சரி, இப்பவும் சரி, விளையாட்டே வினையாக முடிந்து விடுகிறது. அவர்களுக்கும் உம்பேரில் காழ்ப்பு இல்லை. பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வந்த

குலப்பெருமையை இழந்துவிடக் கூடாது என்பதே அவர்களின் கவலை. அது குலமானம். அது உங்களுக்குப் புரியும்.

''முள் தைத்த மாதிரி ஏதோ நடந்து விட்டது. அதை எளிதாக அப்படியே பிடுங்கி எறிந்துவிட்டால் போகிறது. அதற்குப் பதில் அதோடு நடந்தால், அது ஆழப் பதிந்துவிடும்; அதில் சீழ்பிடிக்கும்; நஞ்சாகும், அதனால் எவ்வளவு கெடுதலாகுமோ தெரியாது!

''நீங்கள் பிடிவாதம் காட்ட, அவர்களும் உங்களவர்தானே; அவர்கள் மறுபக்கம் பிடிவாதம் காட்டினால், எங்கே போய் முடியும் என்று நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

''அங்கே இங்கே நடந்த மாதிரி, சாதிக்கட்டுப்பாடு செய்யலாமா வென்று நினைக்கிற அளவு, அவர்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளலாமா?

''அவர்கள் இப்படிச் சொல்லி அனுப்பினார்கள் என்று நினைத்து விடாதீர்கள் நானாகச் சொல்லுகிறேன். அவ்வளவே; பொறுத்துக் கொள்ளுங்கள். பொறுத்தார் பூமியாள்வார்'' என்றார் சுப்ரமணியக் குருக்கள்.

''பூமியாளும் அவா எனக்கு இல்லை. உண்மையான மனிதனாக இந்தப் பூமியில் வாழ்ந்தால் போதும்.

''உறவினர் 'சாதி விலக்கம்'' செய்தால் என்ன? இவர்கள் சிலரே! அவர்களோ -- ஆதிதிராவிடர்களோ - பலர். அவர்களோடு மிகுந்த மகிழ்ச்சியுடன் சேர்ந்து கொள்கிறேன்.

''வீட்டில் பெண் குழந்தை இருந்தால் தொல்லை; எவனும் கட்டிக் கொள்ளமாட்டான் என்று அஞ்ச வேண்டும். இருப்பது பையன்கள்; எப்படியோ பிழைத்துக் கொள்வார்கள்.

''நான் மாற்று அறைகூவல் விடுவதாக நினைக்க வேண்டாம். நான் முன்வைத்த காலைப் பின்வைக்க முடியாது. அவ்வளவே! இதை அவர்களுக்கு இதமாகவே சொல்லலாம்.

''அப்புறம் நடப்பது நடக்கட்டும். எல்லாம் நம் கையில் இல்லை'' என்று பதில் கூறி அனுப்பினார்.

மக்களின் முணுமுணுப்பு

குருக்கள் தூது வெற்றிபெறவில்லை. ஆனால் போரும் மூளவில்லை. உறவினர்கள் அதோடு விட்டுவிட்டார்கள் .சில வாரங்கள் எங்கள் வீட்டுத் திண்ணையில் கூடுவது நின்றது.

செய்தித்தாள்களை, தனித்தனியாகக் கேட்டு அனுப்புவார்கள்; வாங்கிப் படிப்பார்கள். திண்ணைப் பேச்சுக்கள் இல்லாமலே காலம் ஓடிற்று.

ஆதிதிராவிடர் நுழைவு, சடங்காக மாறவில்லை. தேவைப் படும்போது மற்றவர்கள்போல் வீட்டுக்குள் வரும் அளவில் செயல்பட்டது.

சில நாள்களுக்குப் பிறகு என் தந்தை, வாலாஜாபாத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. இரட்டை மாட்டு வண்டி கட்டப்பட்டது. அதற்கு முன்பு, குடியானவர் யாராவது வண்டியை ஓட்டி வருவதே வழக்கம். இம்முறை வண்டி ஓட்டத் தெரிந்த ஆதிதிராவிடர் ஒருவரிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

''குருக்கள் வீட்டண்டை வந்ததும் நான் இறங்கி, ஆற்றோரமுள்ள நடைபாதையில் புகுந்து, வன்னியத் தெருவின் தொடக்கத்தில் வந்து காத்துக் கொண்டிருக்கிறேன்.

''குருக்கள் வீட்டண்டை மட்டும் வண்டியை நீங்கள் சமாளித்துக் கொள்ளுங்கள். நம் எருதுகள் சாதுவானவை. பழக்கப்பட்டவை; சமாளிக்கணும் என்பதே இல்லை'' என்று ஆதிதிராவிட வண்டிக்காரர் சொன்னார்.

என் தந்தை இதை ஒப்புக் கொள்ளவில்லை. வண்டிக்காரர் தமக்குள்ளே என்ன நினைத்தாரோ! பாவமென்று கருதியிருந்தாலும் வியப்பில்லை. எனினும் தலைமுறை தலைமுறையாக 'ஆண்டை'யின் சொல்லுக்கு அடங்கி நடந்துவந்த இரத்தத்தில் வந்தவர் அல்லவா? எனவே எங்கள் மாட்டு வண்டியைக் குருக்கள் தெருவே, அவர் ஓட்டிக்கொண்டு போனார். இது ஒருநாள் கூத்தல்ல. பல நாள் தொடர்ந்தது. வண்டியோட்டி வண்டியில் உட்கார்ந்தே ஓட்டிச் செல்வார்.

இதைப்பற்றி முணுமுணுப்பு முளைத்தது. ஊரில் இரண்டு பேர் கூடினால், இந்த அக்கிரமத்தைப் பற்றிப் பேசாமல் போகமாட்டார்கள்.

வீட்டுக்கு வீடு, வயலுக்கு வயல், களத்துமேட்டுக்குக் களத்துமேடு, இதைக் கண்டித்துப் பேசி ஆறுதல் அடைந்தார்கள். வேறு வகையாக அது ஏன் பொங்கி வெடிக்கவில்லை!

ஒழுக்கமே உருவான தந்தை

'சான்றோர் உடைத்துத் தொண்டை நாடு' என்பது ஆன்றோர் வாக்கு. எங்கள் ஊர்க்காரர்கள் - எல்லாச் சாதியினரும் - அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கியதும்தான் முதற் காரணம்.

ஊராருக்கு என் தந்தையிடம் இருந்த மதிப்பும் மகத்தான நல்லெண்ணமும் மற்றோர் காரணம்.

மதிநுட்பம், சுறுசுறுப்பு, நியாய உணர்வு, உதவும் மனப்போக்கு, ஒழுக்கம் ஆகியவற்றிற்காக அக்கம் பக்கத்து ஊராரும் என் தந்தையைப் பெரிதும் போற்றி மதித்தார்கள்.

அன்றைய நாட்டுப்புறச் சூழ்நிலையில் என் தந்தை குறிப்பிடத்தக்க ஒரு பணக்காரர். ஆயினும் பணக்காரருக்கு உரிய செருக்கோ, தீய ஒழுக்கங்களோ, அவரைஅண்டியது இல்லை.

நூலாடையன்றிப் பிற ஆடையை அணியாதவர். கையில் சிறு மோதிரமும் அணியாதவர்.

இடுப்பில் ஓர் வேட்டியும், தோளில் ஓர் துண்டும் மட்டுமே அவருடைய உடை. எங்கே சென்றாலும் அதே எளிய உடைதான்.

வெற்றிலை பாக்கு, பொடி ஏதும் பயன்படுத்தியதில்லை. இவற்றிற்கெல்லாம் சிகரமாக விளங்கியது அவருடைய கடுமையான ஒழுக்கம்.

தங்கை உறவினர்களாகிய வயது வந்த பெண்களையும் ஏறெடுத்துப் பார்க்காத சாது என்று பெயர் எடுத்தவர்.

அவ்வளவு நல்லவர்க்கு இப்படியொரு 'கிறுக்கு'ப் பிடித்து விட்டதே என்று எல்லோரும் திகைத்தார்கள். யாரும் வஞ்சம் தீர்க்க நினைக்கவில்லை.

இல்லையெனாது உதவிய தாய்

என் தாயும் அக்கம் பக்கத்திலெல்லாம் நல்ல பெயர் எடுத்தவர்.

இல்லையென்று வந்தவர்களுக்கு எல்லாம் 'இல்லை'யெனாது உதவியர். செருக்கே இல்லாதவர். எல்லோரிடமும் மரியாதையோடு நடந்தவர்.

எவரும் என் தாயிடம் குறை கண்டதில்லை. சுற்றுப்புற ஊர்ப்பெண்கள், சிறு வயதில் என்னைப் பார்த்தால்,

''ஏன் அப்பா, சாரதா மகனா நீ'' என்றே அன்புடன் கேட்பார்கள். அவ்வளவு புகழ் பெற்றவர்.

என் தாயாருக்கு வெற்றிலை பாக்குப் போடும் பழக்கம்கூடக் கிடையாது. செல்வர் வீட்டு மகளாயினும், செல்வர் மனைவியாயினும் படாடோபமோ, ஆடம்பரமோ அறியாதவர். வெளிச்சம் போடாதவர். எனவே எவருடைய பொறாமையையும் எழுப்பாதவர்.

எங்கள் குடும்பத்திடம் மற்றவர்கள் கொண்டிருந்த நன்மதிப்பு. இச்சிறு புரட்சிக்குத் துணையாயிற்று.

காலத்தின் போக்கும் நெடுநாள் காத்துக்கிடந்த இச்சீர்திருத்தத்திற்கு உதவியாயிற்று.

இந்திய உரிமை அலை எழுந்தது!

எண்ணங்கள் நுண்ணியவை; கண்ணுக்குத் தெரியாதவை. ஆயினும் அவை ஆற்றல் மிக்கவை.

எங்கோ நெடுந்தொலைவில் கடல் அலை எழுகிறது; வீசி மோதுகிறது. அம்மோதல் மற்றோர் அலையை எழுப்புகிறது. அதன் வாழ்வும் குறுகியதே. அதுவும் மோதி மடிகிறது, மெய்யான வீரனைப் போல.

இப்படியே அலைச்சங்கிலி நீள்கிறது. கடைசி வளையம் கரையில் மோதுகிறது. அம்மோதல் அடியோடு வீண் என்று சொல்ல முடியாது.

பலபோது, கடல் அரிப்பாக மாறுவதைக் காண்கிறோம்.

இந்தியர்களுக்கும் அரசுப் பதவிகள் வேண்டும் என்னும் அலை முதலில் எழுந்தது. சட்டமன்றங்களில் இடம் கேட்டு அலைகள் வீசின.

சில அலைகளுக்குப் பிறகு இந்தியர்க்கும் ஆட்சியில் பொறுப்பு வேண்டும் என்னும் அலை எழுந்தது.

இந்தியர்களுக்குச் சட்டமன்றத்திலும் ஆட்சி அவையிலும் இடம் கேட்கப்போய், இந்தியர்களுக்குள் வெவ்வேறு பிரிவினருக்கும் தனித்தனிப் பங்கு தேவை என்னும் அலைகள் எழுந்தன.

இஸ்லாமியர்களுக்கும் தாழ்த்தப்பட்டோர்க்கும் தனித் தொகுதிகளும் உரிய பங்கும் கோரும் பேரலைகள் பொங்கி எழுந்து மோதின.

எந்த அலையும் வீண்போகவில்லை. அவை அடிமைத்தனத்தை எடுத்த எடுப்பில் அடியோடு விழுங்காவிடினும் மாகாணச் சட்டமன்றத்திற்கும், இந்தியச் சட்டமன்றத்திற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை வந்தது. குறித்த அளவு வரி செலுத்து வோருக்குத்தான் வாக்குரிமை கொடுத்தனர்.

நாலு சாதி மக்களையும் அண்டவேண்டிய நிலை இதனால் உருவாயிற்று. இந்திய உரிமை அலையே மற்றவர்கள் உரிமை அலையையும் பெற்றெடுத்தது.

பின்னர் மாகாண ஆட்சியில் இரட்டை ஆட்சிமுறை என்பது உருவாயிற்று. அது என்ன?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்கள் சிலர் மாகாணங்களில் அமைச்சர்கள் ஆவார்கள்.

இவர்களிடம் உள்ளாட்சித்துறை, ஆவணப் பதிவு, கூட்டுறவு த்துறை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மக்கள் உடல்நலம், மருத்துவம், சாலைகள், கல்வி போன்றவை ஒப்படைக்கப்படும்.

இவர்கள்போக, ஆங்கிலேய ஆளுநர், சில நிர்வாக அவை உறுப்பினர்களை நியமிப்பார். பிந்தியவர்களே, நிதி, சட்டம் - ஒழுங்கு, காவல்துறை போன்றவைகளுக்குப் பொறுப்பு.

பொது மக்களின் நம்பிக்கைக்கு உரிய அமைச்சர்களும் ஆள்வோரின் நம்பிக்கைக்குரிய நிர்வாக உறுப்பினர்களும் சேர்ந்து மாகாணத்தைப் பரிபாலிப்பார்கள்.

முழு உரிமையில்லாத, கட்டுகள் மிகுந்த இரட்டையாட்சி முறையைக்கூட சென்னை மாகாணத்தில், நீதிக்கட்சி திறம்பட நடத்திக்காட்டிற்று.

ஓரளவு பொதுமக்களின் நலன் வளர்க்கும் சட்டங்களை நிறைவேற்றி, திட்டங்களைச் செயல்படுத்த முடிந்தது.

வட்ட ஆட்சிக்குழு, மாவட்ட ஆட்சிக்குழு ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உறுப்பினர்கள் ஆனார்கள். இவற்றிற்கான தேர்தல்களில் 'தாழ்த்தப்பட்டோ'ருக்கும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் எங்கள் மாகறல் தொகுதி இரட்டை உறுப்பினர் தொகுதி. அதாவது எங்கள் பகுதியிலிருந்து வட்ட ஆட்சிக்குழுவிற்கு தாலூக்காபோக பகுதியிலிருந்து இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்டோர் பிரிவைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.

எங்கள் நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிட்டு வந்த திரு. பெரியகுப்பன் ஆதிதிராவிட உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். என் மாமா திரு. சுந்தரசேகரன் பொதுஉறுப்பினராக வெற்றிபெற்றார்.

நாடு முழுவதும் எழுந்த நாட்டுரிமைப் பேரலையும் அது எழுப்பிய வகுப்புரிமைச் சிற்றலைகளும், காலத்தின் கட்டளைகளாகும்.

தீண்டாமை தளர்வதற்குத் தேர்தல் முறையும், அதில் - சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோருக்கும் இடம் ஒதுக்கும் முறையும் ஓரளவு உதவின.

ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொது அமைப்புகளில் இடம் கிடைக்கிறது. இது அவர்கள் படும் கொடுமைகளை உலகறியச் செய்வதற்கு வாய்ப்பாகிறது. அவர்கள் கோரிக்கைகளுக்குச் சட்டபூர்வமான அரங்கம் கிடைக்கிறது. தொடக்கத்தில் எப்படியோ? இருப்பினும், கால ஓட்டத்தில் ஆதிதிராவிடர்கள் மற்ற உறுப்பினர்களோடு மன்றங்களில் சமமாக அமர்ந்து செயல்படும் நிலையை உருவாக்கியுள்ளது.

அந்த நெம்புகோலைக் கொண்டு, சாதி அமைப்பைப் புரட்டிப் போட்டு இருக்கவேண்டும். இதுவரை அப்படி நடக்கவில்லை. காரணம் பல.

பதவிகளைப் பொது வாய்ப்புகளாகவே பயன்படுத்தும் துடிப்பும் புரட்சிப் போக்கும் உள்ள தலைவர்கள் -அருகியது பெருங் காரணமாகும்.

பிற்காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில், இரண்டுங் கெட்டான் பருவத்தினராகிய மாணவர்களை அரசியல் சண்டைகளுக்குத் தள்ளிவிடும் போக்கு வளர்ந்தது. அப்போக்கினை நோக்கும் போதெல்லாம் என் மாணவப் பருவகாலத்தை எண்ணி ஏங்குவதுண்டு. பண்ணையார்களின் பங்காளிச் சண்டைகளுக்கு அவர்களின் பண்ணையாள்கள் முற்காலத்தில் பயன்பட்டார்கள். இக்காலத்தில் அரசியல் பண்ணையார்களின் சண்டைகளுக்குச் சிப்பாய்களாக அதே பண்ணையாள் பிரிவைச் சேர்ந்த ஏழை மாணவர்கள்தான் பயன்படுகிறார்கள். இப்படிப்பட்ட தற்கொலையிலிருந்த அவர்களைத் தடுத்தாட் கொள்வதற்கு எவரும் இல்லையே என்றெண்ணிப் பலமுறை கண்ணீர் வடித்திருக்கிறேன்.

13. காஞ்சி: மேலும் சில நினைவுகள்

நாங்கள் விளையாடிய பக்தி விளையாட்டுகள்

பல்வேறு காரணங்களால் இளமைப் பருவத்தே சாதி உணர்வு மரத்துப் போனவனாக மாறிவிட்டேன்.

எனவே, என் தமிழாசிரியர் திரு. நரசிம்மாச்சாரியார், என்னை 'ஒட்டன்' என்று அழைத்ததைப் பற்றிச் சிறிதும் புண்படவில்லை. அதற்குப் பின்னரும் வழக்கம்போல் படிப்பில் ஆர்வத்தோடு ஈடுபட்டேன்.

பள்ளி மாணவனாக இருந்தபோது நானும் என் உறவுப் பையன்கள் சிலரும் சேர்ந்து பக்தியைக் காட்டும் விளையாட்டுகளில் ஈடுபடுவோம்.

திருவிழாவின்போது, பித்தளைப் பிள்ளையார், இராமன் முதலிய சிலைகளை வாங்கினோம். அவற்றிற்கு விழா எடுப்பதே எங்கள் விளையாட்டு.

விடுமுறை நாள்களில் நெய்யாடுபாக்கத்திற்குச் செல்வோம். அங்குச் சிலைகளுக்கு விழா எடுத்து விளையாட நிறைய வாய்ப்புக் கிடைக்கும்.

வீட்டுப் புறக்கடையிலுள்ள மலர்களை, பூக்குடலையில் கொண்டுவந்து சேர்ப்பது எங்களில் ஒருவருடைய முறையாக இருக்கும்.

படைப்பதற்குப் பொங்கல் செய்வது மற்றொரு பையனின் பொறுப்பு.

நீராட்டி அலங்கரித்து ஆராதனை செய்வது மூன்றாமவர் பொறுப்பு.

பொறுப்புகள் அப்போதைக்கப்போது மாறும். எனக்கு மூன்று பொறுப்புகளும் அடிக்கடி கிடைத்தன. அப்போது, பொங்கல் சமைக்கக் கற்றுக்கொண்டேன்.

இத்திறமை பிற்காலத்தில் சாரண இயக்கத்தில் சமையல் தேர்வில் வெற்றிபெற எனக்கு உதவிற்று.

காஞ்சியில் பேருந்து தலை காட்டிற்று

இன்றைய காஞ்சிபுரத்தில், பகல் முழுவதும் இரவில் சிலமணி நேரம் வரை பேருந்து வண்டிகள், சரக்குப் பேருந்துகள், கார்கள் ஆகியவற்றின் அலறல் காதுகளைத் துளைக்கின்றன.

என் மாணவப் பருவக் காஞ்சியில், இந்தத் தொல்லைகள் இல்லை. அன்று இருந்த வண்டி வசதிகள் எவை?

நான் காஞ்சிக்கு முதன் முதலாகச் சென்றபோது, நகரத்தில், மூவரிடமே கார் வண்டிகள் இருந்தன.

என் பள்ளிக்கூடத் தாளாளர் - ரெவெரெண்ட் மெக்ளீன், கிறுத்துவ மருத்துவ மனையின் தலைவர் டாக்டர் ஹார்டி, தனியார் துறை மருத்துவர் டாக்டர் பி.எஸ். சீனிவாசன் ஆகிய மூவரே, கார் வைத்திருந்தார்கள்.

அவை, பெருமைக்காக அல்ல. தங்கள் தொழிலை விரைந்து செய்ய அவர்களுக்குக் 'கார்' தேவைப்பட்டது.

அப்போதைய கார்கள், இப்போது உள்ள கார்கள்போல, தாழ்ந்திருக்கவில்லை. 'உயர்ந்த'வர்களுக்காகச் செய்யப்பட்ட அக்கார்களும் உயரமாகவே அமைக்கப்பட்டிருந்தன.

தரைக்கும் காரின் அடிப்பாகத்திற்கும் மத்தியில் உள்ள இடைவெளி தாராளமாக இருந்தது.

கார்கள் அருமையாக இருந்த அன்று, தெருவில் கார் சத்தம் கேட்டால் போதும், பலரும் - பெரியவர்களும் வீட்டுக்குள்ளிருந்து ஓடி வருவார்கள்; வியப்போடு வேடிக்கை பார்ப்பார்கள்.

அவற்றின் பின்னால் ஓடிப் பார்ப்பதில் சிறுவர்களுக்குத் தனிக் குதூகலம்; தெருப் புழுதி அவர்கள் தலையில்தான்; அதைப் பொருட்படுத்தமாட்டார்கள்.

நான் கீழ் வகுப்புகளில் படித்தபோது பேருந்து வண்டிகள் உண்டா?

இல்லை.

அன்று காஞ்சிபுரத்திலிருந்து எந்த ஊருக்கும் பேருந்துகள் ஓடவில்லை.

நான் மேல் வகுப்புகளில் படிக்கும்போது, மெதுவாகப் பேருந்து தலைகாட்டிற்று. சென்னைக்குப் பேருந்து போகத் தொடங்கியது.

அப்போது காஞ்சிபுரத்தில் இருந்து சென்னைக்கு, பேருந்துக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? முக்கால் ரூபாய்.

பேருந்துகளில் ஏறப் பலர் அஞ்சியதுண்டு. துணிந்து ஏறியவர்களில் பலருக்குத் தலைசுற்றும்;வழியில் வாந்தி எடுத்தும் அவதிப் படுவார்கள்.

பேருந்து ஓட்டிகள், சிலவேளை, 'வண்டியை மரத்தில் மோதிக் கவிழ்த்து விடுவேன்' என்று, பயணிகளை மிரட்டும் பொருட்டுச் சொன்னதைப் பலமுறை என் காதுகள் கேட்டதுண்டு. பிற்காலத்தில் சொல்லாமலே செய்யும் பெரியவர்களாகி விட்டார்கள்.

சென்னைக்கு அடுத்த வேலூருக்குப் பேருந்து ஓடத் தொடங்கியது. இதுவும் ஊர் முழுவதும் பரவலாகப் பேசப்பட்ட செய்தி. அவ்வண்டி நேரத்தில் வந்தது; போயிற்று.

என் உறவினரும் என்பால் அன்பு பொழிந்தவருமான திரு. எம். எஸ். துரைசாமி முதலியார் என்பவர், வேலூரில் தரகுமண்டி வைத்திருந்தார். அத்துடன் லேவாதேவித் தொழிலும் நடத்தி வ்ந்தார்.

திரு. எம்.எஸ். துரைசாமி முதலியார், வணிகம்பற்றிக் காஞ்சிபுரத்திற்கு அ்டிக்கடி வருவார். அவர் காஞ்சிக்கு வந்ததும் எனக்கு உடனே தகவல் வரும். போய்ப் பார்த்தால், தின்பண்டங்களோ காசோ கிடைக்கும்.

அவர் காஞ்சி வருகையை எதிர்பார்த்த எனக்கு, வேலூர் பேருந்தின் மேல் நோட்டம் அதிகம்.

முதலில் காலையில் ஒரு வண்டி வரும். அதுவே மாலை திரும்பும். இரண்டொரு ஆண்டுகளில் கூடுதல் வண்டிகள் போட்டார்கள்.

வேலூர் பேருந்து வண்டியில், கணேசர் சோடா 'கலர்' வந்து இறங்கும். அவை காஞ்சிபுரத்தில் சில கடைகளில் மட்டும் கிடைக்கும்.

அந்தச் சோடாவுக்கு 'பவர்' அதிகம்; அதனால் அதற்குக் கிராக்கி. 'கலர்'களில் எனக்குப் பிடித்தது பன்னீர்க் கலர்.

உறவினர்கள் கொடுத்த காசெல்லாம் பலகாரங்கள் தின்பதிலும் சோடா கலர் குடிப்பதிலும் செலவழியும்.

அன்று நூல் விற்பனை நிலையங்கள் கிடையா. எனவே நூல் வாங்கிப் படிப்பதற்கு அன்று வாய்ப்பு இல்லை.

பெரும்பாலானவர்கள், மாட்டு வண்டியையே நம்பி இருந்தனர். குதிரை வண்டிகள் சிலவே; ஒற்றை மாட்டு வண்டிகள் நிறைய.

நகரசபைத் தலைவர்கூட, குதிரை வண்டியிலேயே வருவார் போவார். அந்த நாளில் அதை யாரும் குறைவாகக் கருதியதில்லை.

வசதி படைத்த பணக்காரர்கள்கூட, கார் வாங்காத காலம் அது.

புதுக் காரின் விலையே மூவாயிரம் ரூபாய்தான்! பவுன் பதினைந்து ரூபாய் விற்ற காலம் அது. அவ்வளவு பணத்தைக் கார் வாங்குவதில் முடக்கவே செல்வர்கள் அஞ்சிய காலம் அது.

நெஞ்சு பொறுக்குதில்லையே

காஞ்சிபுரத்தில் ராஜ வீதிகள் கருங்கல் சரளையால் ஆனவை. தெருக்களின் மூலைகளில் தண்ணீர்க் குழாய்கள் இருக்கும். தெருவின் இருமருங்கும் மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும்.

அதிலும் நெல்லுக்காரத் தெரு, ஓங்கி வளர்ந்த வேப்ப மரங்களுக்குப் பெயர் போனது. பருவ காலத்தில் வேப்பம் பழம் பொறுக்குவதில் பலத்த போட்டியைக் காணலாம்.

தெருக்களில் சாணி பொறுக்குவதிலும் பெரும்போட்டி; அடிக்கடி வாய்ச் சண்டைகளைக் காணலாம். அப்போது கொப்பளிக்கும் சொற்களைக் காது கொடுத்துக் கேட்க முடியாது.

பள்ளிக்கூடம் போகும் வயதுடைய சிறுவர் சிறுமிகளும் தெருக்களில் சாணி பொறுக்குவதில் ஈடுபட்டிருந்த கொடுமை என்னை மிகவும் வாட்டிற்று. படித்து முன்னுக்கு வரவேண்டியவர்கள், சாணி பொறுக்கி வீணாகிறார்களே என்று எண்ணி அடிக்கடி ஏங்குவேன்.

அடி தடிகளை மக்களுக்குள் கண்டதில்லை. அந்தோ! அவை தெரு நாய்களின்மேல் வீழ்ந்ததைக் கண்டு மனம் பதறியுள்ளேன்.

நகராட்சியினர், நாய்களை ஒழிப்பதற்கு அந்தக் காலத்தில் கையாண்ட முறை மிகக் கொடுமையானது; காட்டுமிராண்டித் தனமானது.

ஆண்டுக்கு இருமுறை நாய் வேட்டை நடக்கும். சில துணிந்த கட்டைகளை (மனிதர்களை), நாயடிப் போர்களாகக் கூலிக்கு அமர்த்துவார்கள்.

அவர்கள் பெரிய தடிகளைத் தங்கள் பின்னால் மறைத்து வைத்துக்கொண்டு, தெருக்களில் நடமாடுவார்கள்.

நாயைக் கண்டதும், தடியால் ஓங்கி, மண்டையில் அடிப்பார்கள். முதல் அடியில் நாய் விழாவிட்டால், துரத்தி இரண்டாம் அடியும் கொடுப்பார்கள். கத்திக்கொண்டே, குருதி கொட்டக் கொட்டத் தரையில் விழும்.

அந்நாயின் பின் கால்களைப் பிடித்து இழுத்துத் தெருவோரத்தில் போட்டுவிட்டு, அடுத்த நாயைத் தேடிக் கொல்லப்போவார்கள்.

குப்பை வண்டிகள் வரும். அரை உயிரோடு ஊசலாடிக் கொண்டிருக்கும் நாய்களையும் செத்தவற்றையும் அந்த வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு போவார்கள்.

இந்தக் கோரக் காட்சிகளைக் கண்டு சிறுவர்கள் பதறுவார்கள். பெரியவர்கள், எதையும் பொருட்படுத்தாது மிருகங்களாகப் போவார்கள். மனிதன் மிருகமாக மாறி, நெடுங்காலமாகி விட்டதை இந்தக் காட்சி நினைவூட்டும். அக்கோரத்தை நினைத்தால், இன்றும் என் நெஞ்சம் பதறுகிறது.

திருவிழாக்களும் தெருக்கூத்துகளும்

காஞ்சிபுரம், கோயில் விழாக்களுக்குப் பேர்போனது. எங்கள் வீட்டில் இருந்தபடியே எல்லா உலாக்களையும் கண்டு மகிழலாம்.

வரதராசப் பெருமாள் கருடசேவை, தேரேற்றம், ஏகாம்பரநாதர் திருக்கல்யாணம் ஆகியவற்றைப் பார்க்க அதற்குரிய இடங்களுக்குச் செல்வேன்.

பெரும்பாலும் என் பாட்டி என்னை அழைத்துக்கொண்டு போவார். மக்கள் கூட்டத்தின் நெரிசலில் மிதிபட்டுப் போகாமல் வந்து சேர்வது பெரும்பாடு! எப்படியோ பிழைத்து வந்தேன்!

என் இளமைக்கால கோயில் குளங்களை நினைத்தால் வறட்சி நினைவுக்கு வருவதில்லை. ஏன்? எப்போதும் குளங்கள் நிறைந் திருக்கும். ஆனால் பச்சைப் பசேலென்று பாசி படராத ஒரு கோயில் குளத்தையும் கண்டதாக எனக்கு நினைவு இல்லை.

நான் காஞ்சியில் படித்தபோது சினிமாக்கள் இல்லை. அதனால் காசு தேடத் தேவையில்லை.

கச்சாலீசுவரர் கோயிலுக்கு அருகில் தகர நாடகக் கொட்டகையும் மஞ்சள்நீர்க் கால்வாய்க் கரையில் ஒரு தகர நாடகக் கொட்டகையும் இருந்தன. அவற்றிலும் பல நாள்கள் நாடகம் நடப்பதில்லை.

தெருக் கூத்துகள் மட்டும் நிறைய நடக்கும். என் பாட்டி பலவற்றிற்குப் போய் வருவார்கள்.

தெருக் கூத்து எனக்கு அவ்வளவு பிடிக்காது. சிலமுறை மட்டுமே என் பாட்டியுடன் சென்றிருக்கிறேன்.

ஒருமுறை, எங்கள் ஊர்ச் சலவைத் தொழிலாளி, ராஜு, பாரதப் போரில் நடிப்பதாகக் கேள்விப்பட்டேன். என் பாட்டியோடு சென்றேன்.

மேடையிலே அவர் குதித்த குதி பிரமாதம். கைதட்டல்கள் அடிக்கடி எழுந்தன. அவர்,

தேரைவிட்டுக் கீழே குதித்தான் சல்லி ராசன்!
மோரைவிட்டுக் கூழைக் கரைத்தான் சல்லிராசன்!

என்று பாடி, பாராட்டைக் கொள்ளை கொண்டது என் நினைவில் இருக்கிறது.

ஆசிய ஜோதி நாடகம்

ஒருமுறை சென்னைத் தலைமைச் செயலகத்தில் பணிபுரிவோர் சிலர், மயிலாப்பூர் இராமகிருஷ்ண இல்லத்திற்கு நிதி திரட்டும் பொருட்டுக் காஞ்சியில் நாடகம் நடத்தினார்கள்.

அப்போது என் தந்தை மணியக்காரர். எனவே அவர் குறிப்பிட்ட அளவு நுழைவுச் சீட்டுகள் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வேறு வழியில்லை. அவரும் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொள்ள நேர்ந்தது.

அதை எனக்கு அனுப்பிவைத்தார். நான் அந்நாடகத்தைப் பார்த்தேன். அதன் பெயர் 'ஆசிய ஜோதி'. அது புத்தரைப் பற்றிய நாடகம். கதை அமைப்பும் உரையாடலும் நடிப்பும் நெஞ்சை அள்ளின.

14. காஞ்சியில் காங்கிரசு மாநாடு (1925)

காஞ்சிபுரத்தில் அரசியல் சூறாவளி வீசாத காலத்தில் நான் படித்தேன். எனவே கவனச்சிதைவு குறைவு.

காஞ்சியில் இந்திய விடுதலை இயக்கத்தில் மிக ஈடுபாடுடைய சில பெரியவர்கள் இருந்தார்கள். நீதிக்கட்சியின் தூண்கள் சிலர் இருந்தனர்.

இரு இயக்கங்களும் இந்நூற்றாண்டின் இருபதின் தொடக்கத்தில் காஞ்சியில் பொதுமக்கள் இயக்கமாகவில்லை. இவற்றால் அன்றைய இளைஞர்கள் கவரப்பட்டு, அவர்கள் படிப்பு வீணாகவில்லை என்றால் மிகை ஆகாது.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரசு மாநாடு காஞ்சிபுரத்தில் கூடிற்று. தமிழ்த் தென்றல் திரு.வி.க. தலைமை தாங்கினார். இதற்கு நகர் முழுவதும் நல்ல விளம்பரம்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அதுவரை கோயில் திருவிழாக்களை மட்டுமே கண்டிருந்த காஞ்சிபுரம் 1925 நவம்பரில் புதியதொரு திருவிழாவினையும் கண்டது.

தெருக்களில் வரவேற்பு வளைவுகள் எழுந்தன. பசுந்தோரணங்கள் அசைந்தாடின. தெருவோரங்கள் செப்பனிடப்பட்டன.

'தமிழ்த் தென்றலே வருக! வருக!' என்று பல இடங்களில் வரவேற்புகள் எழுந்து முழங்கின.

'நவசக்தி ஆசிரியரே! வருக! வருக!' என்னும் வரவேற்புகள் ஓங்கி உயர்ந்து பறந்தன.

இவை யாருக்கு?

திரு. வி. கலியாணசுந்தரனாருக்கு!

திரு. வி. க. தமிழறிஞர், இவர் இந்நூற்றாண்டுவரை வளர்ந்து வந்துள்ள அரசியல், பொருளியல், சமூக இயல் கோட்பாடுகளை, தமிழில் சொல்லவும் எழுதவும் முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டிய தமிழ்நாட்டுத் தலைவர்களான ராஜாஜி, பெரியார், டாக்டர் வரதராஜுலு முதலியவர்களுக்கு முன்னோடி.

தமிழர்களிடையே நாட்டுப் பற்றினையும் உரிமை யுணர்வினையும் வளர்த்த உத்தமத் தலைவர்களில் ஒருவர்.

நம் நாட்டில் தொழிலாளர் இயக்கத்தை நடத்துவதில் இன்னல் பல ஏற்ற இணையற்ற தியாகி.

ஒழுங்கான ஊதியம் கொடுத்துவந்த அமைதியான ஆசிரியர் பணியினை உதறிவிட்டு, பொதுத்தொண்டு என்னும் காட்டாற்று வெள்ளத்தில் குதித்து நீந்தி, மோதி, ஆள்வோரின் சீற்றத்திற்கும் ஆளப்படுவோரின் அலட்சியத்திற்கும் ஆளான சாதுக்களில் சிறந்த சாது, திரு. வி. க. ஆவார்.

இவர் தன்னையோ, தன் குடும்பத்தையோ வளப்படுத்திக் கொள்ளாத நல்ல பொதுத் தொண்டர் ஆவார்.

இந்த நல்லார், ஆழ்ந்த சமயப் பற்றாளர்; பல சமயக் கோட்பாடு களுக்கு இடையே, ஒருமைப்பாட்டைக் காண முயன்ற சன்மார்க்கர்.

தீந்தமிழில் பல நூல்களை எழுதி வெளியிட்டு, தமிழ்த் தாயைச் சிறப்புச் செய்தவர் திரு.வி.க.

இவர் எழுதிய பல நூல்களில் 'சைவத்தின் சமரசம்' என்னும் சிறு நூல் ஒன்றாகும். அரை ரூபாய் விலையில் வெளியான அந்நூலை, முதல் பதிப்பிலேயே ஆவலுடன் வாங்கிப் படித்து மகிழ்ந்து இருந்தேன்.

எனவே, இதன் ஆசிரியர், தமிழ்த் தென்றல் திரு.வி.க. வைக் கண்குளிரக் காணவேண்டும் என்ற எண்ணம் என்னுள் இயற்கையாக எழுந்தது. அவர் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற அவாவும் மேலிட்டது.

இதற்கு வழியுண்டா?

அரசியல் மாநாட்டில், உயர்நிலைப் பள்ளி மாணவர்களை நுழையவிடுவார்களா? இக் கேள்விகள் மின்னின.

அப்போது என்னுடன் படித்து வந்த திரு. தா. கதிர்வேல் தமிழ்ப் பற்றாளர்; நாட்டு நடப்புகளையும் உன்னிப்பாகக் கூர்ந்து கவனித்து வந்தவர்.

அவர், என்னுடைய கேள்விகளுக்கான பதில்களைக் கண்டு பிடித்தார். இளைஞர்களும் மாநாட்டுக்குள் செல்லலாம்; பார்வையாளர் களாக மட்டும் கலந்து கொள்ளலாம்; பார்வையாளர்களுக்கு நுழைவுக்

கட்டணம் எட்டணா. இந்தத் தகவல்களை அன்பர் கதிர்வேல் திரட்டிக் கொண்டு வந்தார்.

இருவருக்குமே அன்று, எட்டணா பெரிய தொகையல்ல. அதோடு, திரு.வி.க.வின் வார இதழாகிய 'நவசக்தி' என் தந்தைக்கு வந்துகொண்டிருந்தது. எனவே, திரு.வி.க. தலைமை தாங்கும் மாநாட்டுக்குப் போவதைப் பற்றி என் அப்பா குறைபட மாட்டார் என்றும் எண்ணினேன்.

நானும் கதிர்வேலுவும் ஆளுக்கு எட்டணா கொடுத்துப் பார்வை யாளர் நுழைவுச் சீட்டினைப் பெற்றோம். மாநாட்டிற்குச் சென்றோம். பார்வையாளர்களுக்குக் கடைக் கோடியில் இடம் ஒதுக்கியிருந்தார்கள்.

அன்று ஒலி பெருக்கி வசதி இல்லை, எனவே, மேடைப் பேச்சு காதில் விழுமா என்று கவலைப்பட்டோம்.

'நாம் இருவரும் குட்டையானவர்கள். தொலைவில் இருந்தால் மட்டுமே, மேடையில் இருப்பவர்கள் நமக்குத் தெரிவார்கள்' என்று நாங்களே ஆறுதல் சொல்லிக் கொண்டோம்.

மாகாண அரசியல் மாநாடு தொடங்கிற்று. 'சாது' முதலியார் திரு.வி.க. தலைமை தாங்கினார். அவருடைய இனிய செந்தமிழ் உரை எங்களுக்கு எட்டவில்லை. காரணம்: ஒலி பெருக்கி இல்லாத பெருங்குறை.

முன்னர் ஒருவர் ஆற்றிய வரவேற்புரையும் காற்றிலே பறந்தது. எங்களிடம் வரவில்லை. யாருடைய பேச்சையும் கேட்க முடியாமல், இமை கொட்டாது மேடையை மட்டும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தோம்.

மேடையில் வீசிய புயல்

திடீரென மேடையின் மேல் இடி முழக்கம்! பேசுவோரின் பேச்சைப் பலரும் ஒரே நேரத்தில் இடைமறித்தல்.

பேச்சு! அமளி! தொடர்ந்து சிலர் வெளியேறுதல்! இவற்றைக் கண்டோம்.

எடுப்பான தோற்றம், பரந்த நெற்றி, அடர்ந்தமுடி, அடர்ந்த மீசை, சுடர்விடும் விழிகள், முழங்கும் குரல், இடுப்பில் முரட்டுக் கதர், மேலே அதே கதர்ச் சொக்காய். அதற்கு மேல் கதர்ப் போர்வை.

இந்தக் கோலத்தில் இருந்த இத்தனையும் உடைய பெரியவர் ஒருவர் மேடையில் இடியென முழங்கிவிட்டு, தம்முடன் சிலரை அழைத்துக்கொண்டு, வெளிநடப்புச் செய்ததை நாங்கள் காண முடிந்தது.

'அப்படி வெளிநடப்புச் செய்தவர்கள் யார்? எதுபற்றி இவ்வளவு மோதல்?' என்று அருகில் அமர்ந்திருந்த பெரியவரைக் கேட்டோம். அவருக்கும் தெரியவில்லை. கருத்துக்கும் காதுக்கும் வேலை இல்லாமல் பொம்மைகளாக உட்கார்ந்து இருந்தோம். பிறகு,

கதிர்வேலுவும் நானும் வெளியே வந்தோம். மாநாட்டுக் கொட்டகை வளைவிற்குள் ஆங்காங்கே, சிறு சிறு கூட்டங்கள். கதர் உடை அணிந்திருந்த பெரியவர்கள் நான்கைந்து பேர்களாக நின்றுகொண்டு, உணர்ச்சி வயப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இங்கும் அங்கும் நின்று, உரையாடல்களுக்குச் செவி சாய்த்தோம்.

காங்கிரசைக் கட்டி வளர்த்த ஈ.வெ. ரா.

''மாநாட்டுத் தலைவராகிய திரு.வி.க. விற்கு எவ்வளவு சிறப்பாக வரவேற்பு வளைவுகள் போட்டோமோ அவ்வளவு சிறப்பாக அல்லவா, ஈ.வெ.ரா.வுக்கும் வரவேற்பு வளைவுகளை நாட்டினோம். 'வைக்கம் வீரரே வருக, வருக' என்று ஒப்புக்காகவா சொன்னோம்? உண்மையாகவே ஈ.வெ.ரா., வைக்கம் வீரர்தான். அதற்காக எவ்வளவு விலை கேட்பது?'' என்றார் ஒருவர்.

''அப்படி என்ன விலை கேட்கிறார்? தனக்காகப் பதவிகளுக்குப் போராடவில்லை. தமிழ் மாகாண காங்கிரசின் உயர் பதவிகளாகிய செயலாளர், தலைமைப் பதவிகளை நாம்தானே அவரைத் தேடிக் கொடுத்தோம்.

''அப்பதவிகளை, நாயக்கர் பெற்றதால், அவருக்கென்ன, இல்லாத புகழ் வந்துவிட்டது?

''காங்கிரசு தமிழ் மக்களிடம் இவ்வளவு வேகமாகப் பரவியிருப் பதற்குக் காரணம், ஈ.வெ.ரா. தானே! அவருடைய தொண்டு மகத்தானது.

''சுதந்திரத்திற்காக ஈ.வெ.ரா. ஆற்றிய தொண்டு உண்மையும் வாய்மையும் மெய்மையுஞ் செறிந்ததாகும்.

''சீமானாக வாழ்ந்த அவர், காந்தியடிகளின் தலைமையை ஏற்றுப் பிறகு எளிமையில் நின்று தொண்டாற்றுகிறார். பட்டி தொட்டி யெல்லாம் தம் தோளில் கதர் மூட்டையைச் சுமந்து கொண்டு சென்று விற்று, அதைப் பரப்பியவராயிற்றே!

''ஆனாலும் சில ஆண்டுகளாகவே, காங்கிரசு மேடைகளிலேயே வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று மிகத் தீவிரமாகப் போராடிக் கொண்டிருக்கிறார். இந்தக் கருத்து அவரை ஆட்கொண்டு விட்டது.

''அவர் தாட்சண்யத்திற்காகவும் கொள்கையை விடமாட்டார்; பதவிகள் கொடுத்தும் அவரை வயப்படுத்த முடியாது. அஞ்சாமையும் சுறுசுறுப்பும் அவருடைய இயல்பு.

''அப்படியென்றால், வகுப்புரிமைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளலாம் என்கிறீரா ஓய்'' என்று ஒருவர் மிகவும் கோபப்பட்டார்.

''எள்ளு என்பதற்குள் எண்ணெய் என்று சொல்ல வேண்டாம்.''

''காங்கிரசைக் கட்டி வளர்த்த ஈ.வெ.ரா. வைப் போன்றவர்கள் வெளியே இருப்பது நல்லது அல்ல என்றே நான் கவலைப்படுகிறேன். எப்படியாவது அவரைக் காங்கிரசுக்கு உள்ளேயே வைத்திருக்க வேண்டும்.

''தஞ்சாவூரில் 1921இல் நடந்த மாகாண மாநாட்டிலேயே இதை நாயக்கர் கொண்டு வந்தார். அப்போது சி.ஆர். எவ்வளவு சாதுர்யமாகச் சமாளித்தார் என்பது உங்களுக்கு நினைவில் வருகிறதா?'' என்று கேட்டார்.

'நல்லா நினைவுக்கு வருகிறது. 'இது தீர்மான ரூபமாக வரவேண்டாம். கொள்கையாக வைத்துக் கொள்வோம்' என்று சொல்லியல்லவா நிலைமையைச் சமாளித்தார்! சி.ஆர். மூளையே மூளை!'' என்றார் ஒருவர்.

''அப்படி ஏதாவது சொல்லி, செய்து, இப்போதும் சமாளித்திருக்க வேண்டும். போதாத வேளை, 'டெக்னிகல் பாய்ன்டில்' மறைந்து கொண்டோம். ஈ.வெ.ரா. வைப் போன்றவர்களை ஏதோ சாக்கில் மூக்குடைத்து, வெளியேற்றுவது முட்டாள்தனம். இப்பவும் சி.ஆர். போன்றவர் தலையிட்டால், வழி கண்டுபிடித்து விடுவார். ஈசுவரன் விடப் போகிற வழி எப்படி இருக்கிறதோ!'' என்று கவலைப்பட்டார்.

வகுப்புரிமைத் தீர்மானம்

அடுத்த குழுவில் பேசியவர்கள், ''பொல்லாத பரந்த ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நாம் போராடுகிறோம் என்பதை எப்படி மறக்கலாம். அதற்கு ஒருமித்த சிந்தனை பலமாவது வேண்டும். 'ஒற்றுமையே வலிமை' என்பதைத் தியாகிகளாகிய நாமே நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

''நோயை நான் தேடிக் கொள்ளவில்லை; எனக்குந் தெரியாமல் எப்படியோ வந்துவிட்டது. அதைப்பற்றிக் கவலைப்படாமல், 'இதையும் அதையும் சம்பாதிப்பதில் ஈடுபடுவோம்' என்று காசநோய்க்காரன் முனைந்தால், எப்படி இருக்கும்? அதைப் போன்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுவிட்டோம்.

''சாதிப் பிரிவுகளை நாம் ஏற்படுத்தவில்லை. இவற்றை நம் முன்னோர் எப்போது ஏற்படுத்தினார்கள்? என்பவை முக்கியமல்ல. பயபக்தியோடு அதை எல்லோரும் ஏற்றுக்கொண்ட காலம் வரையில் சரி.

''இப்போது பலரும் குமுறுகிறார்களே. இந்த நிலையிலே, எல்லோருமாகச் சேர்ந்து ஒரே அணியாக இருந்து வெள்ளைக்கார ஆட்சியை விரட்டுவதற்கு, சாதிவேற்றுமை அல்லவா தடையாக இருக்கிறது.

''சாதி ஒழிப்பு ஐந்து பத்து ஆண்டுகளில் வெற்றி பெறாது. ஐந்தாறு தலைமுறைகளிலாவது வெற்றி பெறுமா என்பதும் ஐயப்பாடே. அவ்வளவு காலம் நீடிக்கப் போகிற நோய், சமுதாயத்தையே கவிழ்த்துவிடக் கூடாதே''

மற்றொருவர் தலையிடுகிறார்.

''அதைத்தானே ஈரோட்டார் சொல்லுகிறார். நோய் தீரும் மட்டும் மருந்தை உண்டு கொண்டே இருப்பது போல், வகுப்புகள் உள்ளவரை வகுப்புரிமைக் கொள்கை செயல்படுவதே நல்லது என்கிறார்.

''சாதிகள் உள்ளவரை எல்லாச் சாதியாருக்கும் 'சுகுரான' பங்கு இல்லாவிட்டாலும், மொத்தத்தில் நியாயமான பங்கு கொடுப்பதே நீதி. நீதியோ இல்லையோ! புதிய உணர்வை வளர்ப்பதற்கு அது துணையாகும். எல்லாருக்கும் பங்குபோட்டு வேலை கொடுப்பார்கள் என்னும் நம்பிக்கை தழைத்துவிட்டால், அப்புறம் 'நாமிருக்கும் நாடு நமதே' என்பதும் நாட்டுப் பற்றும் பொதுமக்களிடம் வெகுவாக ஓங்கி வளர்ந்துவிடும்.

''ஈ.வெ.ரா. கொண்டு வந்த வகுப்புரிமைத் தீர்மானத்தை விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தில் தோற்கடித்தது குறுகிய பார்வை. அதைச் சாக்காகக் காட்டி, பொது மாநாட்டில் கிளப்பவிடாது தடுத்தது பிடிவாதம்; எனக்கு என்னவோ இன்று நடந்த போக்குப் பிடிக்கவில்லை''

இக்குழுவில், மற்றொருவர் எடைபோட்டுப் பேசினார்.

''அப்படியென்ன ஈ.வெ.ரா. திடீரெனக் குண்டு போட்டு விட்டார். 1920இல் நடந்த திருநெல்வேலி மாநாட்டின்போதே இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். விஷயாலோசனைக் குழுவில் அது நிறைவேறி விட்டது. மாநாட்டுத் தலைவர் எஸ். சீனிவாச அய்யங்கார் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மாநாட்டில் அனுமதிக்க மறுத்துவிட்டார். ஓட்டுக்கு விட்டிருந்தால் அப்போதே நிறை வேறியிருக்கும்.

''தஞ்சாவூர் மாகாண மாநாட்டில் 1921 இல் மீண்டும் கொண்டு வந்தார். சி.ஆர். ஆனதால், கெட்டிக்காரத்தனமாக, கொள்கையாக வைத்துக் கொள்ளுவோ மென்று சமாளித்துவிட்டார்.

''திருப்பூரில் 1922 இல் நடந்த மாகாண மாநாட்டிலும் ஈ.வெ.ரா. விடவில்லை. மறுபடியும் 1923 இல் சேலம் மாநாட்டில், அவர் இதைக் கொண்டு வந்தார். அடுத்த ஆண்டு திருவண்ணாமலையில், ஈ.வெ.ரா.வின் தீர்மானத்தைத் தோற்கடித்தோம். இப்பவும் வந்தது. சண்டையை முற்றவிட்டு விட்டோம்'' என்றார்.

நான்காமவர், பேச்சை உற்சாகத்துடன் தொடர்ந்தார்.

''எனக்கு, திருவண்ணாமலை மாநாட்டில், ஈ.வெ.ரா. ஆற்றிய தலைமை உரையின் சிறு பகுதி மனப்பாடஞ் செய்ததுபோல் நினைவிலிருக்கிறது.

''ஒரு மதத்தைச் சேர்ந்த இவர்களுக்குள் (பிராமணர் - பிராமணர் அல்லாதாருக்குள்) வேற்றுமையுணர்வு தோன்றுவானேன்? வேற்றுமைக்கு அடிப்படையான காரணங்கள் இருத்தல் வேண்டும். அக்காரணங்களை உணர்ந்து ஒற்றுமைக்கு உழைக்கத் தேச பக்தர்கள் முயலவேண்டும்.

''காங்கிரசுவாதியாயிருந்த டாக்டர் நாயர், 'திடீரென ஒரு கட்சியைத் தோற்றுவிக்கக் காரணங்களாய் நின்றவைகள் எவையோ, அவை இன்னும் நிற்கின்றனவா, இல்லையா?' என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக.

''அக்காரணங்கள் அழிந்து விட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவை தமிழ்நாட்டில் ஊர்ந்து கொண்டிருக்கும்வரை, தமிழ்நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார் ஒற்றுமை நிலவுதல் அரிதே.

''தேச சேவையில் ஈடுபட்டுத் தமிழ்நாடு காங்கிரசில் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே நான் இங்கே பேசுகிறேன்'' என்று ஈ.வெ.ரா. பேசினது இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

புண்ணை மூடி வைத்து அழுகவிட வேண்டாம்

'பங்காளிச் சண்டை வரக்கூடாது. அதைப் போன்ற நோய் வேறொன்றும் இல்லை. வந்துவிட்டால், நல்லபடி, சமாதானமாக, ஓர் உடன்படிக்கைக்கு வந்துவிடுவதே அறிவுடைமை; அதுவே நீளத்தில் நன்மை பயப்பது. அப்படிச் செய்துவிட்டால், பெரிய பெரிய நடவடிக்கைகளுக்குப் போதிய நாட்டமும் நேரமும் முயற்சியும் செலுத்தலாம்'' என்றார்.

''பிராமணர், பிராமணர் அல்லாதார் பிரிவினை இல்லையென்பது, உடலில் உள்ள புண்ணை மூடிவைத்து அழுகவிடுவதற்கு ஒப்பாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து, உடல் நலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்ற முயல்வதே அறிவாளர்கள் கடமை.

'பொது மக்களில் உள்ள பல பிரிவினர்களுக்கும் நியாயமான பங்குகொடுக்க விரும்பாதவர்களின் கைகளில் காங்கிரசு சிக்கிக்கொண்டு விட்டது. அதில் தொடர்ந்து தொண்டாற்றுவது சமுதாய நீதிக்கு இடையூறாகும் என்று முழங்கிவிட்டு, ஈ.வெ.ரா., எஸ்.இராமநாதன் போன்றோரை மாநாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளியது, நல்லதற்கல்ல.

''ஏதோ சில ஆயிரம் பதவிகள் மட்டுமே உள்ளபோதே, சில பதவிகளை மட்டுமே இழக்கும் சூழ்நிலையிலேயே, பெருமளவு சரியாகப் பங்கு போடுவதைப் பற்றிப் பேசவே மாட்டோமென்பவர்கள் நாளை, இலட்சக்கணக்கான பதவிகள் உருவாகில் நியாயமாகப் பங்கிட்டுப் பதினாயிரக்கணக்கானவைகளை இழக்க ஒப்புக்கொள்வார்களா என்று எண்ணிப் பொதுமக்கள் வீணாக மிரளக்கூடும்.''

''நம்மோடு, தோள் சேர்த்துப் போராட வேண்டியவர்கள், எட்டி நின்று வேடிக்கை பார்ப்பார்கள். ஏன்? குறுக்கே நின்று தடுப்பவர்களாக மாறினால், அவர்களை மட்டுமே, சதிகாரர்களாக, தேசத்துரோகிகளாகக் குற்றஞ்சாட்ட முடியாது'' என்று ஐந்தாம் தொண்டர், முடிவு சொன்னார்.

அதோடு, அவர்கள் கலைந்தார்கள். நாங்களும் கலைந்தோம்.

அறிஞர்களுக்கே, தியாகிகளுக்கே, வழி கண்டுபிடிக்க முடியாமையையும், ஒற்றுமையைக் கட்டிக் காக்க முடியாததையும் கண்டு, கதிர்வேலுவும் நானும் திகைப்போடு திரும்பினோம்.

அடுத்த நாள் நாங்கள் மாநாட்டிற்குச் செல்லவில்லை.

15. அரசியலுக்குத் தடை

குடியரசு பத்திரிகையின் உதயம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற, தமிழ்நாடு மாகாண அரசியல் மாநாடு தமிழ்நாட்டுப் பொது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க திருப்பு முனையாக அமைந்தது.

நல்ல திருப்பு முனையா, தீய திருப்பு முனையா என்பது பற்றி, நெடுங்காலம், கருத்து வேறுபாடுகள் நிலவும்.

ஆயினும், அது ஒரு பெரிய திருப்புமுனை என்பதை மட்டும் எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

முதல் நாள் அந்த மாநாட்டிற்குச் சென்ற நான், அடுத்த நாள் செல்லவில்லை. வழக்கம்போல், படிப்பில் ஆழ்ந்து ஈடுபட்டேன்.

பள்ளிக்கூடத்தில் வைத்துள்ள பாட நூல்களைமட்டும் படிக்கவில்லை. பல்துறை நூல்களையும் உற்சாகமாகப் படிக்கத் தொடங்கினேன்.

என் தந்தை, 'நவசக்தி' வார இதழை வரவழைத்து வந்தார். காஞ்சி மாநாட்டிற்குப் பிறகு ஈ.வெ.ரா நடத்தி வந்த 'குடியரசு' வார இதழையும் வரவழைக்க ஆரம்பித்தார்.

குடியரசு 2-5-1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தொடக்க விழாவில் 'குடியரசு' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தை ஈ.வெ.ரா. தெளிவுபடுத்துகிறார்.

''மற்றப் பத்திரிகைபோல இல்லாமல், மனத்தில் பட்டதைத் தைரியமாய்ப் பொது ஜனங்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

''உயர்வு தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து, அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளரவேண்டும்'' என்றார்.

இதை மக்களுக்கு விளக்கவே குடியரசு ஆரம்பிக்கப்பட்டது.

''அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி அரும்பசி யெவர்க்கு மாற்றி
மனத்துள்ளே பேதா பேதம் வஞ்சகம் பொய்களவு சூது
சினத்தையும் தவிர்ப்பா யாகில்செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான உபதேசம் ஆகுந்தானே''

என்னும் புதுப்பாட்டைத் தலைப்பில் தாங்கி, 'குடி அரசு' உலா வந்தது.

இதைத் தொடங்கி வைத்தவர் யார்? சிறந்த தமிழறிஞரும் திருப்பாதிரிப் புலியூர் திருமடத்தின் தலைவராக விளங்கியவருமான 'சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி' என்னும் 'ஞானியார் சுவாமிகள்'தான் குடியரசைத் தொடங்கி வைத்தார்.

ஆழ்ந்த தமிழ்ப்புலமை பெற்றிருந்த ஞானியார் சுவாமிகள் நல்ல சொற்கொண்டலாக விளங்கினார்கள். அவரிடம் சைவ சமணக் கோட்பாடுகளையும் தமிழையும் கற்றுக்கொண்டு நன்னிலைக்கு வந்த அறிஞர்களும் பெரியோர்களும் பலராவர்.

ஞானியார் சுவாமிகள், 'குடியரசு' இதழைத் தொடங்கி வைத்தபோது,

''நமது நாட்டில் உயர்வு, தாழ்வு என்ற ஆணவம் மிகுந்திருக்கிறது. சமத்துவம் என்ற உணர்ச்சி எங்கும் பரவவேண்டும். 'குடிஅரசு'வின் கருத்தும் அதுவேயென நான் அறிந்துகொண்டேன். சமயத்தில் இருக்கும் கேட்டை முதலில் அழிக்க வேண்டும். இவை 'குடிஅரசின்' முதல் கொள்கையாய் விளங்கவேண்டும். இப் பத்திரிகையில் ஸ்ரீமான் நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு'' என்று முழங்கினார்.

இந்த முழக்கம், அப்பெரியவரிடம் பற்று வைத்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களிடங்கூடப் போதிய ஆற்றல் மிக்க சாதியொழிப்பு உணர்ச்சியை வளர்க்கவில்லையே என்று நான் பல முறை ஏங்கியது உண்டு.

தலைப்புப் பாடலாக அமைந்த 'குடியரசு'வின் சமத்துவக் கொள்கை என்னுள், எளிதாக நுழைந்து இரண்டறக் கலந்து விட்டது.

அன்று முதல் இன்றுவரை, அதிற்கண்ட கருத்துகளே என்னை இயக்கி வருகின்றன.

அப்பாடல் என்னை ஆட்கொண்டிரா விட்டால், ஞானியார் சுவாமிகள் சுட்டிக் காட்டிய சாதி ஆணவத்தின் உருவமாக நான் வளர்ந்திருப்பேன்; எப்போதும் துருவாசராக வெகுண்டிருப்பேன்.

பார்ப்பனர் அல்லாத சங்கங்கள்

காஞ்சி மாநாட்டில் எழுந்த கருத்து மோதல், பார்ப்பனர் அல்லாதார் இயக்கமாக முளைத்த 'நீதிக் கட்சி'க்கு நல்ல பயனளிக்கும் எருவாக ஆயிற்று.

பல நகரங்களில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கங்கள் தோன்றின. காஞ்சியிலும் ஒரு கிளை முளைத்தது. என் பள்ளியில் படித்த, எனக்கு மூத்தவர்களில் சிலர் அதை மிகுந்த உற்சாகத்துடன் உருவாக்கினார்கள்.

திருவாளர்கள் இ. கனகசபாபதி, பா. துரைசுவாமி, தக்கோலம் செல்லப்பா, திருமங்கலம் அய்யவார் நாயுடு, என் மாமா நெ.கோ. சுந்தரசேகரன் ஆகியோர் அம்முயற்சியில் முன்னணியில் நின்றவர்களில் சிலராவர்.

பின்னர், முந்திய இருவரும் வேலைக்குப் போய்விட்டார்கள். முந்தியவர் திருத்தணி உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக ஓய்வு பெற்றார். அடுத்தவர், வடாற்காடு மாவட்ட ஆணைக்குழுவின் செயலாளராகப் பல்லாண்டு பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

திரு. துரைசுவாமி, இந்திய அரசின் எரிபொருள் அமைச்சராக இருந்த மாண்புமிகு பா. இராமச்சந்திரனுக்கு அண்ணார்.

மற்ற மூவரும் சொந்த நிலபுலன்களைக் கவனித்துக்கொண்டு வீட்டுப் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு, பொதுவாழ்வில் ஈடுபட்டிருந் தார்கள்.

இம்மூவரில் தக்கோலம் செல்லப்பா என்பவர் நீதிக்கட்சியும் சுயமரியாதை மேடைகளும் விரும்பி அழைத்த பேச்சாளர்களில் ஒருவராக வளர்ந்தார்.

கடைசி இருவரும் செங்கற்பட்டு மாவட்டத்தில், வட்ட ஆணைக்குழு, மாவட்ட ஆணைக்குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர் களாகித் தீவிரமாகப் பொதுத் தொண்டு புரிந்தார்கள்.

இருவருமே ஊரை அடித்துத் தம் உலையில் போட்டுக் கொள்ளாதவர்கள். தங்கள் சாதிக்காரர்களுக்கே பரிந்துரை என்னும் இக்கால நோய்க்கு ஆளாகாத பொதுத் தொண்டர்களாக விளங்கினார்கள். என்னைப் போன்றவர்களுக்கு இது வியப்பானதல்ல. ஏன்?

முப்பெரும் தலைவர்கள்

அவர்கள் ஏற்றுக்கொண்ட தலைமையின் சிறந்த மரபு அத்தகையது. நீதிக்கட்சியின் தாயும் தந்தையுமாக விளங்கியவர்கள் பிட்டி. தியாகராயச் செட்டியாரும் டாக்டர் டி.எம். நாயரும், அத்தையாக விளங்கியவர் டாக்டர் நடேச முதலியார்.

முந்தியவருடைய தாய்மொழி தெலுங்கு. பிந்தியவருடைய தாய் மொழி மலையாளம், டாக்டர் நடேச முதலியாரின் தாய் மொழி தமிழ். மூவருமே அறிஞர்கள்; தனி வாழ்க்கையில் பெருமைக்குரியவர்கள்; நாதியற்ற மக்களுக்கு உழைக்க வந்ததால், செல்லாக் காசும் கைம்மாறு பெறாதவர்கள்.

டாக்டர் நடேசர் ஏழைகளின் மருத்துவர். முதல் இருவரும், தங்கள் சொந்தப் பிழைப்பைப் பெரிதாகக் கருதியிருந்தால், இந்தியாவின் பெரிய புள்ளிகளில் இருவராக வளர்ந்திருப்பார்கள்.

தத்தம் மதிப்பையே உணராத தமிழ் மக்கள், தங்கள் தலைவர்களின் மதிப்பைப் போதிய அளவு அன்றும் உணரவில்லை; இன்றும் உணரவில்லை; நாளையும் உணர்வார்களா என்பது பெரிய கேள்விக் குறி. அது கிடக்கட்டும்.

தியாகராயர், அந்தக் காலக் கோடீசுவரர்; பட்டதாரி; பெரும் வணிகர்; மாபெரும் வள்ளல்.

தொடக்கத்தில் தியாகராயரும் டாக்டர் நாயரும் பொது வாழ்க்கையில் நண்பர்கள் அல்லர்; மாறாக ஒருவருக்கு ஒருவர் கடுமையாகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

எப்போதோ ஏற்றங் கொண்டவர்கள். என்றைக்கும் 'எல்லாமும் எங்களுக்கே' என்னும் போக்கில் சிறிதும் வளைந்து கொடுக்காத, நம் சமுதாயத் தண்டவாளப்போக்கு, இருவருடைய உணர்ச்சிகளையும் தூண்டி, பாமர மக்களை உயர்த்தும் பணியில் ஒன்றுபடவைத்தது.

வள்ளலாகிய அந்தக் கோடீசுவரர் - தியாகராயர் - தம் சொத்தைப் பொதுத்தொண்டில் கரைத்துவிட்டார். அந்த வெள்ளுடை வேந்தர், பொருள் தியாகத்தை மட்டுமா செய்தார்? அதிலும் அரிதாகிய பதவித் துறவையும் செய்து காட்டி உயர்ந்தார்.

சென்னை மாகாணச் சட்ட அவைக்கு 1920 இல் நீதிக் கட்சி பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அக்கட்சியின் தலைவராகிய தியாகராயரை, அமைச்சரவையை அமைக்கும்படி, முறைப்படி, ஆளுநர் கேட்டுக்கொண்டார். பதவி வெறியால், கட்சியைத் தோற்றுவித்தவர் அல்லரே, பிட்டி. தியாகராயச் செட்டியார்.

நீதிக்கட்சி ஆட்சியில் கல்வி

அம் மாபெரும் தியாகி, தாம் கட்சித் தலைவராக மட்டும் இருந்துகொண்டு, தம்முடைய நம்பிக்கைக்குரிய மூவரைக் கொண்ட அமைச்சரவையை அமைக்கச் செய்தார்.

இருமுறை, அதாவது ஆறு ஆண்டு காலம் - நீதிக்கட்சி அமைச்சர் அவை தொடர்ந்து நடந்தது.

இந்தியத் தலைவர்களில் ஒருவரான கோபாலகிருஷ்ண கோகலே இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியச் சட்டமன்றத்தில், 'நான்காவது வகுப்பு வரை இந்நாட்டுப் பையன்களுக்கும் பெண்களுக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டும்' என்னும் மசோதாவைக் கொண்டு வந்தார். அப்போது நம்மை ஆண்ட ஆங்கில ஆட்சி அதை எதிர்த்தது. எனவே, மசோதா சட்டமாகவில்லை.

கோகலேயின் கருத்தினைச் செயல்படவைக்கும் சட்டமொன்றை இயற்றிய பெருமை அவருடைய இயக்கத்தைச் சேராத அன்றைய நீதிக்கட்சியின் அமைச்சரவைக்கு உண்டு.

'சென்னை மாகாண தொடக்கக் கல்விச் சட்டம்' என்று அதற்குப் பெயர். அது, உள்ளாட்சி மன்றங்கள், தொடக்கக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்குவதற்கு அவைகளுக்கு அதிகாரம் கொடுத்தது.

'சென்னை மாநகராட்சி' உட்படச் சில நகர மன்றங்களும் 'சைதாப்பேட்டை வட்ட ஆணைக்குழு' போன்ற சில வட்ட ஆட்சி மன்றங்களும் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி வெள்ளையன் ஆட்சிக்காலத்திலேயே, கட்டாய இலவசக் கல்வியை நடை முறைப்படுத்துவதில் முன்னணியில் நின்றன.

இந்து அறநிலையச் சட்டமும் நீதிக் கட்சி அமைச்சரவை நிறைவேற்றிய சட்டங்களில் ஒன்றாகும்.

தியாகராயர், டாக்டர் நடேச முதலியார் ஆகியோரின் தன்னலமற்ற பொதுத்தொண்டு, நாட்டுப்புற இளைஞர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

அக்கவர்ச்சியே, காஞ்சியில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் முளைப்பதற்குத் தூண்டுகோலாக அமைந்தது.

எனது ஏக்கம்

தலைமைச் சங்கம் சென்னையில் இருந்தது. அச்சங்கத்தில் நானும் சேர்ந்து பணியாற்ற விரும்பினேன். என் தந்தையின் அனுமதியைக் கோரினேன். அவர் மறுத்துவிட்டார்.

என் மாமாவிற்கு உரிமை கொடுத்துவிட்டு, அவர் வீட்டிலேயே வளர்ந்து கொண்டிருந்த எனக்கு அதை மறுத்ததைப் பற்றிப் பல நாள் மனம் புழுங்கினேன். வெகு நாள்களுக்குப் பிறகுதான் உண்மை விளங்கிற்று.

என் மாமா, படிப்பை முடித்த பிறகு, வேலைக்குப் போவதில்லை என்பது முடிவாகிவிட்டது. ஒரே பிள்ளையாக இருந்த அவர், தம் சொத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறார். அதோடு, வட்ட, மாவட்ட ஆணைக்குழுக்களில் உறுப்பினராகிப் பொதுத்தொண்டு ஆற்றுவதாகத் திட்டம். எனவே, பொதுச் சங்கங்களில் சேர்ந்து, பயிற்சி பெறுவதே, அவருக்குப் பொருத்தம்.

எனக்குப் பெரியவர்கள் முடிவு செய்திருந்த வழி வேறு. நான், நான்கு பிள்ளைகளில் ஒருவன்; அவர்களில் மூத்தவன். கிளர்ச்சிகளுக்கு முந்தாதவன். எனவே, நான் பொது வாழ்க்கையில் குதிப்பது நல்லது அல்ல.

கல்லூரிக்குச் சென்று, படித்துப் பட்டம் பெறவேண்டும். பிறகு அரசின் அலுவலில் சேரவேண்டும். நல்ல ஊழியஞ் செய்வதன்மூலம் நான் பொதுத் தொண்டாற்ற வேண்டுமென்று, என் மாமாவும் தந்தையும் முடிவு செய்திருந்தார்கள்.

இது எனக்கும் பிடித்திருந்தது. ஆகவே, பெரியவர்கள் விருப்பப்படி, படிப்பில் ஒருமனப்பட்டிருந்தேன்.

வீட்டிற்கு வரும் கட்சிப் பத்திரிகைகளையும் 'கலா நிலையம்' போன்ற இலக்கிய முன்னோடி சஞ்சிகைகளையும் விரும்பிப் படிக்க நான் முழு உரிமை பெற்று இருந்தேன்.

'இதைப் படி; அதைத் தொடாதே' போன்ற ஆணைகளை என் வீட்டில் கேள்விப்படவில்லை. எனவே, துப்பறியும் தமிழ் நாவல்கள் மேலும் என் நாட்டஞ் சென்றது.

ஆசிரியர் மணி, பண்டிதர் எஸ்.எஸ். அருணிகிரிநாதர், ரங்கராஜு, கோதைநாயகி ஆகியோரின் நாவல்கள் என் கைக்கு எட்டின. எப்படி?

எங்களூர் பெற்ற முதல் படித்த பெண்மணி

நான் மேல் படிவங்களில் படித்துக் கொண்டிருக்கையில், பள்ளிப் படிப்பை முடித்த என் மாமா நெ.கோ. சுந்தரசேகரனுக்குத் திருமணம் ஆயிற்று. அவருடைய மனைவியின் பெயர் திருமதி நாகரத்தினம் என்பதாகும்.

அவர் வேலூரில், வணிகராகவும் பாங்கராகவும் இருந்த திரு எம். துரைசுவாமி முதலியாரின் மூத்த மகள். அந்நகரத்திலேயே வளர்ந்து, உயர்நிலைப் பள்ளியிலும் படித்தவர்; மிகமிகச் செல்லமாக வளர்க்கப்பட்டவர். வந்த இடத்திலும் செல்லமாகப் போற்றப்பட்டவர்.

நாட்டுப்புறத்தில் வாழ்க்கைப்பட்ட அவருக்குப் பொழுதுபோவது கடினமாக இருக்குமென்று எண்ணிய பெற்றோரும் உறவினர்களும் வருவோர் போவோரிடம் நாவல்களைக் கொடுத்து அனுப்புவார்கள். மாமி படித்த பிறகு, நான் படிப்பேன்.

வேலூரிலிருந்து, நெய்யாடுபாக்கத்திற்கு, முதன் முதலாக, குலோப் ஜாமூன், ஜாங்கிரி, பால்கோவா, பாதுஷா போன்ற இனிப்புகளையும் உப்பேறியையும் (உருளைக் கிழங்கு 'சிப்ஸ்') அறிமுகப்படுத்திய அந்த அம்மையார், நாவல் படிக்கும் பழக்கத்தையும் அறிமுகப்படுத்தினார்.

எங்களூரில் முந்திய தலைமுறைப் பெண்களுக்குப் ப்டிப்பே இல்லை. என் மாமி காலத்தில் தொடங்கியது. இன்று எல்லார் வீடுகளுக்கும் பரவியுள்ளது.

நாவல்களைப் படித்தது, என்னை நாவல் ஆசிரியனாக ஆக்கா விட்டாலும், விரைந்து படிக்கும் ஆற்றலை வளர்க்கத் துணையாயிற்று.

மற்றோர் பொழுதுபோக்கு அக்காலகட்டத்தில் நுழைந்தது.

ஒரே அளவான எழுத்து அட்டைக் குவியலில் இருந்து, எழுத்துகளைப் பொறுக்கியெடுத்து, சொற்களை ஆக்கும் விளையாட்டு அறிமுகமாயிற்று.

இதுவும் எங்களுருக்கு வேலூரில் இருந்து இறக்குமதியாயிற்று.

முதலில் தமிழ் எழுத்துகளைக் கொண்டு, நானும் என் மாமியும் போட்டி போடுவோம். பின்னர், ஆங்கிலச் சொற்களை ஆக்கும் விளையாட்டில் போட்டியிட்டோம்.

இப்போட்டிகள், விடுமுறைக் காலங்களைப் போக்க உதவியதோடு, தமிழிலும் ஆங்கிலத்திலும் சொல் வளத்தையும் பெருக்கின.

என் தமிழ், ஆங்கில அறிவு வளரப் பெரிதும் உதவின.

16. படிப்பும் பயிற்சியும்

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு பெரும் ஆலமரம்

கல்வி, ஓர் வழி. எதற்கு? ஆள் வளர்ச்சிக்கு. 'ஆள் வளர்ச்சி' என்னும் போது, உடல் வளர்ச்சியை மட்டுமா குறிப்பிடுகிறோம்? இல்லை; அதற்கு மேலும் கருத்தில் கொள்கிறோம்.

சின்னஞ் சிறிய விதை. அப் பொடி விதையில், ஓர் ஆலமரமே உறங்கிக் கிடக்கிறது. எத்தனை பெரிய அடிமரம்; எவ்வளவு பரப்பை மூடும் பட்டை; எண்ணற்ற இலைகள்; அவற்றைத் தாங்கும் கிளைகள், கப்புகள்; இத்தனையும் சிறு வித்தில் ஒளிந்து கொண்டிருக்கின்றன.

விழத் தகுந்த இடத்தில் வீழ்ந்தால், விதை முளைக்கும்; முளைத்த இடத்தில் ஈரம் வேண்டும்; ஈரத்தோடு சூடும் வேண்டும்; சூட்டோடு ஒளியும் தேவை. ஒளியோடு நல்ல காற்றும் கலந்ததா? மகிழ்ச்சி; நன்றாக வளரும்.

இத்தனையும் இருந்தும் காவல் இல்லையேல்? கண்டவை செடியை மேய்ந்துவிடலாம்; குறும்பர் கிள்ளிவிடலாம்;ஒடித்து விடலாம். நல்ல பாதுகாப்பான இடத்திலேயே ஆலஞ்செடி வளர்ந்து மரமாகிறது.

மரமான பிறகு? ஆடும் மாடும் மேய்ந்தாலும் அது பட்டுப் போகாது. பொழுது போகாத குறும்பர்கள் ஒடித்தாலும் காய்ந்து விடாது.

ஒவ்வோர் குழந்தையையும் பெரும் ஆலமரத்திற்கு ஒப்பிடலாம். உலகம் அறியாப் பச்சைக் குழந்தைகளிடம் புதைந்து கிடப்பவை, பலப்பல. அறிவு, காத்துக் கிடக்கும். வானமளந்தது அனைத்தையும் அளக்கும் பேரறிவு முளைத்து ஓங்கி வளரக் காத்திருக்கும். பேரறிவு எல்லார்க்கும் எட்டுமா? ஆம். நன்றாக எட்டும். வானென விரியும் அறிவு, வளரத் துடிக்கும்.

சிறுவர் சிறுமியர்களிடம் முளைக்க உந்தும் ஆற்றல்கள் எத்தனையோ! ஆற்றல் வளர்ச்சி முதலில், தனியாளுக்கு நன்மை. அதோடு முடிந்ததா கதை? இல்லை. தனி மனிதனோ, மாதோ பெறும் ஆற்றல், ஊருக்கு, நாட்டுக்கு, மக்கள் சமுதாயம் முழுமைக்குமே பயன்படக்கூடும்.

தனி மகன் பெறும் ஆற்றலின் வீச்சும், அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்த சமுதாயமும் பலனின் அளவை முடிவு செய்யும்.

சாதுவான மோகன்தாஸ் கரம்சந்த், மக்கள் தலைவராக, புது முறைப் போராட்டத் தலைவராக வளர்ந்ததால், அவருக்கா நன்மை? இல்லை. அவர் குடும்பத்திற்கா ஆதாயம்? இல்லை.

பின் யாருக்கு நன்மை? இந்திய மக்கள் அனைவருக்கும் நன்மை. அது மேலும் மேலும் விரிந்ததே!

கொலைக் கருவிகளை ஏந்தாமலே, நாடு தன்னாட்சி உரிமையைப் பெற முடியும் என்பதை அண்ணல் காந்தி மெய்ப்பித்தார். இது பல நாட்டின் எழுச்சிக்கு, உரிமைப்போருக்கு, உதவும் சுதந்திரக் காற்றாக அமைந்தது.

எனவே, ஆற்றல்களை வளர்ப்பது, அவற்றைப் பெற்றுள்ள தனிமனிதர்களின் முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும், தனியாளின் அறிவும் ஆற்றல் பெருக்கமுமே துணை.

கல்வியின் ஒரு கூறு. பயில்வோரின் ஆற்றல்களை வளர்ப்பதாகும்.

இதற்கு வழிசெய்யும் கல்விமுறையே சரியான கல்வி முறை.

முற்காலத்துக் கல்வி முறை

மனிதன் அறிவை, ஆற்றலை மட்டும் பெற்று இருக்கவில்லை. உள்ளமும் உணர்வும் கொண்டவன். இவையும் வளர்க்கப்பட வேண்டும்; செம்மைப்பட வேண்டும். எவ்வழியில்?

தனித்தனி முனைப்போடு இருக்கவா? இல்லை. ஒன்றியிருக்க, நான்கு பேர்களோடு கூடியிருக்க, கூடித்தொழில் புரிய, எல்லோரும் எல்லோருடைய நலன்களையும் வளர்க்கும் வகையில் உலகியல் ஈடுபாடுகளில் பங்குகொள்ள, இப்படிப் பண்படுத்துவது, கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

மனிதனின் மூன்று கூறுகளையும் இணைத்து வளர்த்தால், கல்வி முயற்சி வெற்றி பெறுகிறது. அதில், எந்த அளவிற்குக் குறைபடுகிறதோ, அந்த அளவிற்குக் கல்விமுறை, தோல்வியைத் தழுவிக் கொள்ளுகிறது.

வெறும் அறிவைக் கூர்மைப்படுத்துவதாயின், கல்விக் கூடத்திற்குச் செல்லத் தேவையிராது. சிறந்த நல்லாசிரியர் ஒருவரை அண்டி, அவரோடு இருந்து, அவர் இப்போதும் அப்போதும் உதிர்க்கும் அறிவு முத்துகளைத் திரட்டி வைத்துக்கொண்டு சிறந்த அறிவாளியாகி விடலாம்.

முற்காலத்தில், இளவரசர்களும் மேட்டுக் குடிமக்களும் கல்வி கற்ற முறை இதுவே.

முற்காலத் தமிழ் ஞாயிறுகள், கல்வி கற்றது தமிழ்க் கல்லூரிகளில் அல்ல. புலவர் ஏறு ஒருவரிடம் புலமைப் பசியுடைய ஒருவரோ இருவரோ பாடங்கேட்டு அறிஞர்கள் ஆனார்கள்.

ஆற்றல்களை வளர்ப்பதற்கு 'ஆளுக்கு ஆள்' 'ஆளுக்கு நான்கு ஆள்' என்னும் முறை போதும். இவ்வகையில்தான், ஸ்தபதிகள் உருவானார்கள்; சித்த மருத்துவர்கள் உருவானார்கள்; பொற் கொல்லர்கள் உருவானார்கள்; இசை வாணர்கள் வளர்ந்தார்கள்.

பலரையும் சேர்த்து ஒரு வகுப்பாக்கி, கற்பிக்கும் முறையில் சிக்காமலே, அறிவை ஆற்றலைப் பெற்றுவிடக் கூடும். ஆனால் மற்றொரு கூறு எப்படி வளரும்? உள்ளமும் உணர்வும் நல்வழி வளர வேண்டுமே! இணைந்திருக்கும் முறையில் பக்குவப்பட வேண்டுமே!

''நானே எல்லாம்; நான் விரும்பியபடியே ஆட ஒப்பினால் மட்டுமே கூடித் தொழில் புரிவேன்; அப்படிச் சேர்ந்து பாடுபடுகையிலும் என் கெட்டிக்காரத்தனத்திற்கேற்ப எடுத்துக் கொள்வேன்'' என்னும் தன்னலக் கண்ணோட்டமும் போக்கும் அழியவேண்டும்.

அதற்கு ஏற்ற வழி என்ன?

சான்றோர் ஒருவரிடம் பழகிப் பண்படுவது, ஓரளவே வெற்றி பெறும்.

பரந்த சமுதாயத்தில் கலந்து பழக, கலந்து பணிபுரிய தேவைப்படும் அளவு பக்குவத்தைக் குருசீடர் மரபு விரிவாக வளர்க்காது. பலவகை, பலநிலைத் தோழர்களோடு, சேர்ந்து படிக்கும் முறையே அதை வளர்க்கும்.

புதிய சமுதாயக் கல்விமுறை

எங்கோ ஒருவரிடம் இப்பக்குவம் இருத்தல், இன்றைய தேவைக்குப் போதாது. முடிந்தால் எல்லோரிடமும், முடியாதபோது, பெரும்பாலோரிடமாகிலும் வருங்கால வாழ்க்கை முறையான, பொருந்தி வாழ்தல், அகந்தையை அகற்றி வாழ்தல், துணையாகி வாழ்தல் ஆகியவற்றைப் பலரும் கூடிப் படிக்கும் கல்விக் கூடங்களில் மட்டுமே பெறமுடியும்.

'குடிமக்கள் சொன்னபடி குடியாட்சி' என்பது இந்நூற்றாண்டின் வாழ்க்கை முறை; இதுவே, வருங்கால வாழ்க்கை முறையும் ஆகும்.

இதற்கு இளைய தலைமுறையினை ஆயத்தஞ் செய்வதில் கல்விக்கூடங்கள் நாட்டஞ் செலுத்தவேண்டும்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது, அறிவு நரம்புகளை வளர்க்கும் பணி செம்மையாகவே நடந்தது. எனக்கு நல்லாசிரியர்களாக வாய்த்தவர்களின் ஆர்வமிக்க தொண்டு இதற்குக் காரணம். அது மட்டுமா?

அதைவிட ஆழமான காரணம் ஒன்றிருந்தது. அது என்ன?

நாங்கள் பெறும் கல்வி, 'தேர்வுகளில் தேர்ச்சி பெறவும் உதவுவதோடு, வாழ்க்கையில் வெற்றி பெறவும் உதவவேண்டும்' என்பதை அக்காலக் கல்வியாளர்கள் உணர்ந்திருந்தார்கள்.

வாழ்க்கைக்கு உதவ வேண்டுமானால், பள்ளியில் வளர்த்துவிடும் அறிவு நாட்டம், பள்ளியை விட்டதும் பட்டுப் போகக்கூடாது. ஆசிரியரின் மேற்பார்வையில் இருக்கும் மட்டும், தோழமை உணர்வோடு இருந்துவிட்டு, படிப்பை முடித்ததும் தலைவிரித்தாடும் போக்கு இருப்பது 'கல்வி பயன்படவில்லை' என்பதற்குச் சான்று.

கட்டுப்பட்ட படிப்பை முடித்த பிறகும் - வாழ்நாள் முழுவதும் - தொடர்ந்து படிப்பதற்கு ஆர்வம் இருக்குமானால், பெற்றது நல்ல கல்வி என்று மதிப்பிடலாம்.

என் தலைமுறையினர் பலருக்கு ஓரளவாவது தொடர்படிப் பின்மேல் நாட்டம் இருப்பதற்குக் காரணம். அளவுக்கு மீறிய பாடத் திணிப்பால் நாங்கள் திண்டாடவில்லை என்பதாகும். பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திற்கு அப்பால் நாங்கள் விரும்பியவற்றைப் படிக்க வேண்டிய நேரம் இருந்தது.

நான் படித்த காலத்தில் கல்விச் சூழ்நிலை

இக்கால வாழ்க்கை, எல்லாச் சமுதாயங்களிலும் விரைந்து, மாறி வருகிறது. இம்மாற்றமும் விரைவும் குறையாது. இவற்றைச் சமாளிக்கும் அறிவைத் தேட முனைந்தால், அதுவும் ஏழெட்டு ஆண்டுகளுக்கு ஓர்முறை இரட்டிப்பாவதைக் காண்கிறோம்.

வாழ்நாளைப் பார்த்தால் நீள்வது தெரிகிறது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியனுடைய சராசரி வயது, பதினேழாக இருந்தது. இன்றோ? ஐம்பத்திரண்டாக உள்ளது. வருங்காலத்தில் எண்பத்தி ரண்டாக வளரும்.

இந்நிலையில், மாணவருடைய நெடிய வாழ்நாள் முழுமைக்கும் வேண்டிய அறிவினை, கல்வி நிலையங்களை விட்டு வெளியேறு வதற்கு முன்பே, கொடுத்துவிட முடியுமா? முடியாது என்று அக்காலக் கல்வியாளர்கள் கருதினார்கள்.

பள்ளிக்கூடங்கள், பெரும் அளவிற்கு அறிமுகக் கூடங்களாகவே, இயங்க முடியும். கல்லூரிகளும் எல்லாவற்றையும் வழங்கி, முதிர்ந்த அறிஞர்களை உருவாக்கி அனுப்பும் அறிவுக்கூடங்களாகி விட முடியாது.

பல்வகை அறிவினோடு தொடர்புபடுத்துவதிலும் அவற்றை நாடும் போக்கினை வளர்ப்பதிலும் கல்வி நிலையங்கள் வெற்றிபெற்றால் போதும்.

நிலத்திலே நாற்றை ஊன்றுவதுபோல், கல்வி நிலையங்கள் அறிவு நாற்றுகளை, ஆற்றல் கன்றுகளை, சீல விதைகளை மாணவர்களிடம் விதைப்பதை மட்டுமே செய்யமுடியும்.

நாற்றையோ, கன்றையோ, விதையையோ நெருக்கமாக நட்டாலும், ஊன்றினாலும், தூவினாலும் நன்மைக்குப் பதில் தீமையே விளையும்.

எனவே கல்வி நிலையங்கள், எல்லாவற்றையும் கற்றுக் கொடுப்பதோ, திணிப்பதோ, நல்லதல்ல. அக்காலத்தில் நெருக்கத் திணிப்பு இல்லை.

அக்காலத்தில் பெற்றோர் சங்கத்தைப் பார்ப்பது அரிது. ஆனால் கல்வி நிலையங்கள் பெற்றோர் ஒத்துழைப்பை, ஆதரவைப் பெறுவது சாதாரணம்.

கல்வி நிலையங்களின் நன்முயற்சிகளுக்குத் தோள் கொடுக்க வேண்டியவை, குடும்பமும் சமுதாயமும்.

அக்காலத்தில் பல குடும்பங்கள், கல்வியை நாடவில்லை; பிள்ளைகளைப் படிக்க வைக்கவில்லை; தொடக்கப் பள்ளிக்கும் அனுப்பவில்லை.

ஆயினும், பிள்ளைகளைப் படிக்க வைத்த குடும்பங்களோ, ஆசிரியர்களை மதித்தன; மதிக்கக் கற்றுக் கொடுத்தன; ஆசிரியர்களின் முயற்சிக்கு ஆதரவு தந்தன; மாணவர்களின் கவனத்தைக் கல்வியின்பால் திருப்பிவிட்டன.

கல்வியைப் பொருட்டாக மதித்த பெற்றோர்களிடம் அக்காலத்தில் அக்கறை அதிகம்; அலட்சியம் அருமை.

இக்காலத்தில் படிக்க வைப்பது நாகரிகமாகிவிட்டது; நல்ல போக்கே. ஆனால், அக்கறை குறைந்து, அலட்சியம் வளர்ந்து வருகிறது.

பொதுமக்களுக்குச் செல்வம் தேட, ஊர்ப் பெரியதனத்தைப் பார்க்க நேரம் இருக்கிறது. பிள்ளைகளை வளர்க்க நேரம் இல்லை.

பாடத் திட்டத்தில் இது வேண்டாம்; அது வேண்டாம் என்பதைப் பற்றிப் பொதுக் கிளர்ச்சிகள் இல்லாக் காலம் நான் படித்த காலம்.

எனவே, கல்வி முயற்சியில் எல்லோரும் ஈடுபடாமல், சிலரே ஈடுபட்டாலும் அன்று கல்விக்கு உதவியான சூழ்நிலை அதிகம் இருந்தது.

என் மாணவப் பருவ சமுதாயத்தில், கவனச் சிதைவுக்கு வாய்ப்புகள் குறைவு. கோயில் திருவிழாக்கள் மட்டுமே படிப்பிலிருந்த நாட்டத்தை வேறு பக்கம் திருப்பும்.

அன்று பல நகரங்களில் ஓடும் படமும் இல்லை; பேசும் படமுமில்லை. அவற்றின்மேல் வெறியேற்படும் சூழ்நிலையும் இல்லை.

அன்று அரசியல் இயக்கங்கள் இருந்தன. இந்திய விடுதலைப் போராட்டம் சூடு பிடிக்கத் தொடங்கிற்று.

நீதிக் கட்சி படிக்கத் தூண்டிற்று. ஊரார் வீட்டுப் பிள்ளையை விட்டு ஆழம் பார்த்த பெரியவர்களைக் காண்டல் அரிது. ஆங்கில ஆட்சியின் கல்வி நிலையங்களுக்குப் போக வேண்டாம் என்று, காந்தியடிகள் அறிவுரை பகர்ந்தது உண்மை. ஆயினும் ஏதோ சாக்குகளைக் காட்டி, கல்வி நிலையங்களை மூடவைக்கும் அடாவடி அரசியல் அன்று இல்லை. அநேகமாக விதை நெல்களாகிய மாணவர்கள், மாணவர் களாகவே இயங்கினார்கள்.

குடும்பங்களின் மகத்தான பொறுப்பு

கற்க வேண்டிய கலைகள் பல, அத்தனையும் கற்றுக்கொடுப்பதற்குக் கல்வி நிலையங்கள் முயல்வதைவிடக் குடும்பங்கள் அவைகளில் சிலவற்றுக்குப் பொறுப்பேற்றல், நம்முடைய சூழ்நிலைக்கு, மிகவும் நல்லது.

எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டும். என் இளமைப்பருவத்தில் எந்தக் கல்வி நிலையத்திலும் இதற்கான ஏற்பாடு இல்லை. ஆனால் என்ன? வீட்டில் கற்றுக் கொடுத்தார்கள்.

என்னிலும் மூத்த என் மாமா, ஏற்கெனவே, நீச்சல் கற்றிருந்தார்; மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் அளவு திறமை பெற்றிருந்தார். எனக்கு நீச்சல் கற்றுத்தரும் பொறுப்பை, என் தந்தை அவரிடம் ஒப்படைத்தார்.

அவரும் இரண்டொரு பண்ணையாள்களும் இருந்து எனக்கு, கிணற்றில் நீச்சலடிக்கக் கற்றுக் கொடுத்தார்கள்.

எங்கள் தோப்பிலுள்ள இறவைக் கிணற்றிற்குப் படிக்கட்டுகள் உண்டு. எங்கள் ஆட்கள், முதலில் இறங்கி, தண்ணீரில் மிதந்தார்கள், அடுத்து என் மாமா, தண்ணீர் தொடும் படிவரை இறங்கி நின்றுகொண்டார். பிறகு என்னை இறங்கச் சொன்னார்.

எப்படியோ மெல்ல இறங்கினேன். சற்று நடுக்கமே. மாமா நின்று கொண்டிருந்த படிக்கட்டிற்குச் சென்றதும் என் இடுப்பில் உறுதியான நீண்ட வேட்டியைக் கட்டிப் பிடித்துக் கொண்டார். சட்டென்று நீரில் தள்ளிவிட்டார்.

'தத்தகா புத்தகா' என்று தவித்தேன். ஆட்கள், கைகளையும் கால்களையும் இயக்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தார்கள். ஒருமுறை கிணற்றைச் சுற்றி வந்தேன். அச்சம் ஓரளவு அகன்றது. படிக்கட்டில் சிறிது நேரம் ஓய்வு எடுத்தேன்; பிறகு மிதந்தேன்; என்னைக் கட்டியுள்ள வேட்டி மாமாவின் கையில் பத்திரமாக இருந்தது.

பலநாள் இப்படிப் பயிற்சி பெற்றபின் துணிவு வந்தது. கட்டிப்பிடிக்கும் வேட்டியின்றியே, நீந்தி வந்தேன். பல சுற்றுச் சுற்றினேன். இப்போது நடுக்கமோ களைப்போ இல்லை.

பிறகு நானே, யாருடைய காவலும் இன்றி நீந்தப் போவேன். பல்லாண்டுகள், விடுமுறைக் காலங்களில், நீந்தலே என் பொழுது போக்காயிற்று.

என் தந்தைக்குச் சீட்டாட்டம் தெரியும். ஆனால் ஆடமாட்டார்.

மாமா, மாணவப் பருவத்திற்குப் பின்னர் சீட்டு ஆடக் கற்றுக் கொண்டார். சிலவேளை ஆடுவார். காசு வைத்து யாரும் சீட்டு ஆடுவதில்லை.

இளைஞர்களாகிய எங்களைச் சீட்டாடும் இடத்தை அண்டவிட மாட்டார்கள். நான் படிப்பை முடித்த பின்னரும் சீட்டாடக் கற்றுக் கொள்ளவில்லை. அந்தப் பொல்லாத நோய் பிடிக்காததைப் பற்றி எனக்கு மகிழ்ச்சி.

வெற்றிலை போடும் பழக்கம் வீட்டில் எவருக்கும் இல்லை. எனவே, அதன் மேல் நான் நாட்டஞ் செலுத்தவில்லை. புகை பிடிப்போர் யாரும் எங்கள் தெருவில் இல்லை. எனவே அதுவும் தெரியாது வளர்ந்தேன்.

பொறுப்பேற்கும் இயல்பும் எல்லோரிடமும் வளர்க்கப்பட வேண்டும். 'படிக்கிற பிள்ளைகளுக்கு ஒரு வேலையும் இடக்கூடாது' என்று பல குடும்பங்கள், பிள்ளைகளை வெறும் பொம்மைகளாக வளர்ப்பதுண்டு. என் தந்தை அப்படிச் செய்யவில்லை.

காஞ்சிபுரத்திலிருந்து ஊருக்குச் சென்றால், ஏதாவதொரு பொறுப்பைக் கொடுப்பார். கழனிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருதல் முதல் ஒப்படியைக் கண்காணிக்கும் வரையில் பலவித வேலைகள் எனக்கு இளமையிலேயே பழக்கமாகிவிட்டன.

17. என் கிணற்றுத் தவளை வாழ்க்கை

என்னுடைய பள்ளிப் பருவத்தின் வாழ்க்கை, ஒரு குறுநில வாழ்க்கையாக அமைந்திருந்தது.

அக்காலத்தில் நான் என் ஊருண்டு காஞ்சிபுரம் உண்டு என்று வாழ்ந்தேன். காஞ்சிபுரம் வரும் வழியில் வாலாஜாபாத்திற்குள் நுழைய நேரிடும்.

சாரணர் குழுவில் ஒருவனாகப் பழையசீவரம் சென்றுள்ளேன். அப்பருவத்தில் செங்கற்பட்டிற்கோ, மாமல்லபுரத்திற்கோ, திருக்கழுக் குன்றத்திற்கோ நான் சென்றதில்லை.

விடுமுறைகளின் போது, கோயில் திருவிழாக்களையோ, உறவினர்கள் வீட்டுத் திருமணங்களையோ காண்பதற்காக, மாகறல் என்ற பெரும் சிற்றூருக்குப் பலமுறையும், ஆற்பாக்கம் என்னும் ஊருக்குச் சில முறையும் சென்று வந்திருக்கிறேன்.

மேற்படிக் காரணங்களுக்காக, என்னூருக்கு எதிரில் உள்ள இளையனார் வேலூருக்குப் போயிருக்கிறேன்.

மளிகைக்கடையில் அஸ்கா சர்க்கரை, ரவை, திராட்சை, முந்திரி ஆகியவை வாங்கவும் இளையனார் வேலூருக்குச் சில முறை சென்றதுண்டு.

என்னூருக்குக் கிழக்கே உள்ள வயலக்காவூரும் எனக்குத் தெரியும். இந்த ஊர்களுக்குச் செல்லும்போதும் இங்கும் அங்கும் ஓடி ஆடிப் பார்த்ததில்லை. எதற்காகப் போகிறேனோ அதை மட்டும் கவனித்துக் கொண்டு திரும்பிவிடுவேன்.

திருவிழா, திருமணங்களுக்குச் செல்லும்போது, தனியாகப் போனதாகவே நினைவில்லை. என் வீட்டுப் பெரியவர்களோடு சேர்ந்தே போயிருப்பேன். தனிப் பயணம் என்பதை அறியாமலேயே வளர்ந்துவிட்டேன்.

ஒரு வகையில், என் இளமைக்கால வாழ்க்கை, கிணற்றுத் தவளை வாழ்க்கையாகவே இருந்தது.

என் தந்தையாரும் என் சிற்றப்பா ஒருவரும் வரவழைத்த 'திராவிடன்', 'சுதேசமித்திரன்' நாளிதழ்கள் என்னை உலகோடு தொடர்புபடுத்தின.

என் தந்தை வரவழைத்த 'நவசக்தி', 'குடியரசு' வார இதழ்கள், என் சிந்தனைகளைச் சிற்றூர்களுக்கு அப்பால் வெளி உலகுக்குத் திருப்பிற்று.

திரு. சேஷாசலம் அய்யர் என்பவர் நடத்திய 'கலா நிலையம்' என்னும் சஞ்சிகை எனக்குத் தமிழ் இலக்கியத் தொடர்பினை ஏற்படுத்தியது.

மறைமலையடிகளார் நடத்திய 'ஞானசாகரம்' என்னும் 'அறிவுக் கடலை'யும் என் தந்தை சில ஆண்டுகள் வாங்கி வந்தார். இதுவும் என் அறிவு விரியச் சிறந்த வழியாயிற்று.

பல ஊர் பார்த்திருந்தால்

இன்று ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பாதுகாப்பான, குறுகிய வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறேன். என்ன எண்ணங்கள் எழுகின்றன?

பாதுகாத்து வளர்த்ததற்கு 'நன்றியுணர்வு' முதலில் தோன்றுகிறது. ஆயினும், பல வெளி ஊர்களுக்குத் தனியாக அனுப்பாவிட்டாலும் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டியிருந்தால், இன்னும் அதிகத் துணிவு, அதைவிடக் கொடுத்ததை மட்டும் செம்மையாகச் செய்து முடிக்கும் இப்போதைய போக்கிற்குப் பதில் நானே முன்வந்து, பல பொதுப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் துடிப்பினையும் பெற்றிருப்பேனே என்னும் ஏக்கமும் பிறக்கிறது.

இந்த ஏக்கத்தை ஏன் பதிவு செய்கிறேன்? யாரையும் குறை கூற அல்ல; அழுமூஞ்சிப் போக்கைப் பரப்ப அல்ல. நான் பெற்றதிலும் அதிக இன்பத்தை, வளரும் சமுதாயம் பெறவேண்டும் என்னும் அவாவால்; யான் பெறாத வாய்ப்புகளை இக்கால இளைஞர்களும் வருங்கால இளவரசுகளும் பெற்று, முழு ஆளுமை பெறட்டும் என்னும் விழைவால் எனக்குக் கிட்டாததைச் சுட்டிக் காட்டுகிறேன்.

கல்விச் சுற்றுலாக்கள்

காலம் மாறியுள்ளது. எனக்கும் தெரிகிறது. சென்ற சில ஆண்டுகளாகக், கல்விக் கூடங்களே, கல்விச் சுற்றுலாவிற்கு ஏற்பாடுகள் செய்கின்றன.

தனித்தனியே இல்லாவிட்டாலும், குழுக்களாகவாகிலும் பல மாணவர்கள் மாநிலத்தையும் சில வேளை நாட்டையும், மிக அண்மைக் காலத்தில் சில கல்லூரி மாணவிகள் வெளிநாடுகளையும் சுற்றிப் பார்த்து வந்தது, இப்போது நினைவிற்கு வருகிறது.

கல்வியை வகுப்பறைகளில் மட்டும் பெறுவதில்லை, பாடங்களைக் கவனமாகக் கேட்டு, மனத்தில் இருத்துவது மட்டுமே கல்வியல்ல. சோதனைக் கூடங்களில் அறிவியல் சோதனைகளை வெற்றிகரமாகச் செய்து காட்டுவதும் கல்வியின் கூறே ஒழிய முழுமையல்ல. விளையாட்டுத் திடல்களிலும் கல்வியைப் பெறுகிறோம்.

வகுப்பறையிலும் சோதனைக் கூடங்களிலும் பெறமுடியாத கல்விக் கூறுகளைக் கல்விச் சுற்றுலா கொடுக்கிறது. அது கூட்டுணர்ச்சி வளரத் துணை; பொறுப்புணர்ச்சி வளரத் துணை; குழுவை முழுமையாகக் கவனித்து அழைத்துப் போய், திரும்ப அழைத்துவரும் பயிற்சிக்கு ஒத்திகையாகும்.

எதற்கு? பிற்காலத்தில் தன் தலைமையில், இயக்கத்தில் செயல்படும் பலரையும் ஒருமையாகப் பார்த்து, காத்து, எவருக்கும் தீங்கு வராமல் அரவணைத்து எவரும் விடுபட்டுப் போகாதபடி பார்த்து முன்னேறும் நடவடிக்கைக்கு ஒத்திகை.

என்னுடைய பட்டறிவு, பெற்றோர்க்கு எதைச் சொல்லத் துடிக்கிறது? வாய்ப்புகளை வழங்குங்கள்; தாராளமாக வழங்குங்கள்; உங்கள் பொருள் நிலை இடம் கொடுக்கும் அளவு ஏராளமாக வாய்ப்புகளை வழங்குங்கள்.

உங்கள் குழந்தைகள் நீங்கள் நினைப்பதைவிட அதிக அறிவுடையவர்கள்; ஆற்றல் உடையவர்கள்; குணக்குன்றுகள்; நல்லுணர்வாளர்கள்.

எத்தனையோ சிறப்புகள் அவர்களிடம் கருவுற்றிருக்கின்றன. உரிய காலத்தில் இயற்கையாக வெளிவரும். எனவே வாய்ப்புகளைத் தாருங்கள். சூழ்நிலை செம்மையாக இருக்கட்டும்.

உங்கள் பையன்களையும் பெண்களையும் பூச்சி பூச்சி என்று பூட்டி வைத்துக் கொள்ளாதீர்கள். குழந்தைப் பருவத்திலேதான் பூட்டி வைக்கிறீர்கள்.

அவர்கள் வளர்ந்து, உங்களைப் போன்று பொறுப்பேற்கும் நிலைக்கு வரும்போது, பல வேளை உங்களைவிட அதிக, பெரிய, சிக்கலான, பொறுப்புகளை ஏற்கப்போகும்போது, நீங்களா அடிக்கடி உதவப் போகிறீர்கள்?

அவர்களே, தங்கள் ஊக்கத்தால், சுறுசுறுப்பால், விழிப்பால், புன்முறுவலால், சிலவேளை சுட்டெரிக்கும் பார்வையால், கூட்டிச் செயல்பட வைக்கும் திறமையால், பெரும் பெரும் பொறுப்புகளைச் சமாளிக்க நேரிடலாம்;

நம்முடைய நெடிய வாழ்க்கையில் தேள்களும் தென்படும்; பாம்புகளும் காட்சியளிக்கும்; காட்டுப் பன்றிகளும் வழிமறித்து ஓடும்; இத்தனையையும் சமாளித்தே ஆகவேண்டும்.

ஓரத்தே படுத்துறங்கும் தேளையும் பாம்பையும் அப்படியே விட்டு விட்டுச் செல்வதே அறிவுடைமையாகும் நேரங்களும் உண்டு; கொன்று விட்டே அடுத்த அடி எடுத்து வைக்கவேண்டிய நெருக்கடிகளும் உண்டு.

இரண்டையும் பிரித்து உணர்ந்து, சமயோசிதமாக நடக்கும் இயல்பும் வாழ்க்கைக்குத் தேவை. இதையும் வளர்க்கக் கை கொடுப்பது சுற்றுலாக்கள். கல்விச் சுற்றுலாவை, வெறும் பொழுது போக்கும் உலாவாக ஆக்கிவிட வேண்டாம்.

காட்சி இன்பம் மட்டுமே, கல்விச் சுற்றுலாவின் நோக்கமல்ல. கருத்து ஊறலும் நோக்கமாகும். அப்படியானால் போகும் இடங்கள் பற்றிய அடிப்படைச் செய்திகளை, வரலாற்று வெளிச்சங்களை, தகவல்களை, முன்கூட்டியே தெரிந்து கொள்ளுதல் நல்லது.

ஆற்று மணலைக்கொண்டு, குழந்தைகள் எத்தனை உருவங்களை உருவாக்குகிறார்கள்? மனித உருவங்கள், மிருக உருவங்கள், வீடுகள், கோயில்கள், இப்படிப் பலப்பல, சிறுவர் சிறுமியரின் கற்பனைகளில் மின்னுகின்றன; அவர்களுடைய கை விரல்கள் அவற்றை உருவாக்கிக் காட்டுகின்றன; நாம் பார்த்து மகிழ்கிறோம்.

இதிலும் அதிலும் சிறு சிறு மாற்றங்களைச் செய்யச் சொல்லி, மகிழ்கிறோம். பிள்ளைகளுக்கு அளிக்கும் முழு உரிமையே அவர்களுடைய சீரிய கற்பனைகளை, நல்ல கைத்திறன்களை வளர்க்கும் வழியாகும். உரிமையே உயிர்; சாதனைக்கு வேர்.

இதே போல், சுற்றுலா செல்லும் மாணவர்கள், காட்சிகளிலிருந்து பெறும் கருத்துகளை உண்மையாக வெளியிட உரிமை கொடுக்க வேண்டும்; வெளியிடும்படி ஊக்குவிக்க வேண்டும். அத்தனையும் தெளிந்த கருத்தாகவே இருக்குமென்று மயங்க வேண்டாம்.

ஊறிப் பொங்கும் சுனை நீரை, பக்குவப் படுத்திப் பயன்படுத்துதல் எளிது. தேங்கிக் கிடக்கும் சேற்று நீரை, பயன்படுமாறு பக்குவப்படுத்தல் எளிதல்ல.

கருத்துகள் ஊறட்டும்; புதுமையாக ஊறட்டும். பழமையான நம் கருத்துகளில் பாசி படர்ந்தவை இருக்கலாம். அந்தப் பாசியின் பசுமையும் நமக்கு இனியதாகத் தோன்றலாம்.

எனவே கல்வியாளர்கள், சுற்றுலாவைச் சிறந்த காட்சிகளைக் காணும் வாய்ப்புகளாகவும், புதுப்புதுக் கருத்துகள் ஊறும் சுனைகளாகவும் மாற்றுவதற்கு முயல்வார்களாக.

முதல் தூரப் பயணம்

சில ஊர்களோடு அடங்கிக் கிடந்த எனக்குப், பத்து, பதினோராவது வகுப்புகளில் படிக்குங்காலை, பெருநகரம் ஒன்றிற்குச் சென்று அங்கே தங்கும் வாய்ப்புகள் கிடைத்தன.

என் மாமாவின் மாமனாரான திரு. எம்.எஸ். துரைசாமி முதலியார், என் தந்தைக்கு மிகவும் வேண்டியவர். வேலூரில் பெருவாழ்வு

வாழ்ந்தவர். நகரமன்றத்தில் பல்லாண்டுகள் உறுப்பினர்; ஒரு முறை அதன் துணைத் தலைவராகவும் இருந்தவர்.

கோடை விடுமுறையின்போது, என்னை வேலூருக்கு அனுப்பி வைக்கும்படி, என் அப்பாவிடம் சொன்னார். அவரும் அப்படியே செய்தார்.

அடுத்தடுத்து இரு கோடை விடுமுறைகளின்போது, வேலூர் சென்றேன். ஒவ்வோர் முறையும் இரண்டு மூன்று வாரங்கள் அவர் வீட்டில் தங்கியிருந்தேன். மிகச் செல்லமாகக் கவனித்துக் கொண்டார்.

அவர் மனைவி, திருமதி. பாக்கியம்மாள் என்னைத் தன் பிள்ளைகளில் ஒருவராகவே கருதினார். பரிவையும் பாசத்தையும் காட்டினார்.

பிற்காலத்தில், கசந்துகொள்ளக் காரணம் ஏற்பட்டபோதும் கசந்துகொள்ளவில்லை. பழைய பாசத்தோடும் பரிவோடும் வாழ்நாள் முழுவதும் என்னை அன்புடன் நடத்தினார்.

'யார்மேலும் தவறில்லை. எதுஎது எப்படி நடக்கவேண்டுமோ' அப்படித்தான் நடக்கும்' என்று தன்னையும் பிறரையும் தேற்றினார்; குறையாத அன்போடு இருந்தார்.

முதலியார் மண்டிக்கடைக்குக், காலை, மாலை இரு வேளையும் செல் வார். என்னையும் ஒரு நாள் அழைத்துக்கொண்டு போய்க் காட்டினார்.

மண்டி நெரிசலும் நடமாட்டமும் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எனவே எப்போதோ ஒரு முறை, மரியாதைக்காக அவர் மண்டியண்டை, மாலையில் தலை காட்டுவேன்.

துரைசாமி முதலியாரின் அண்ணார் மகன்கள் நால்வர். அவர்களில் மூத்த இருவராகிய சுப்பிரமணிய முதலியாரும், சண்முக முதலியாரும் தம் சிறிய தந்தையாரோடு வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் காலமெலாம் என்னிடம் அன்பு கொண்டிருந்தார்கள். 'உன்னோடு ஐவரானோம்' என்பதுபோல இருந்தார்கள். அத்தனை வாஞ்சை. அவ்விருவரின் தம்பிகளாகிய திரு. சம்பந்தமூர்த்தி, திருநாவுக்கரசு ஆகியவர்களோடு நான் பெரும் பொழுதைக் கழிப்பேன். அவர்கள் என்னிடம் காட்டிய அன்பிற்கு அளவேது? அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு போய்க் கோட்டையைக் காட்டினார்கள்.

வேலூர்க் கோட்டை வெளிதான் எங்களுடைய மாலை நேரத்தைப் போக்கும் இடமாயிருந்தது.

பல நாள், அக்கோட்டையைச் சுற்றி நடந்திருக்கிறோம். அது நல்ல உடற்பயிற்சியாக இருந்தது.

மூர்த்தியில்லாக் கோயிலை முதன் முறையாக நான் வேலூர்க் கோட்டைக்குள் கண்டேன். தண்ணீர் இல்லாத பாலாறு, எனக்கு ஏற்கெனவே பழக்கமானதே. 'ஓடாத பாலாறு, என்றும் எங்கும் சுரக்கும் பாலாறு' என்பதும் எனக்கு ஏற்கெனவே தெரியும்.

எனவே, வேலூர் பாலாறு எவ்விதக் கிளர்ச்சியும் கொடுக்கவில்லை. கோட்டையும் அதைச் சுற்றியிருந்த ஆழமான அகழியும் நான் முன்னர்க் காணாத புதுமைகள். அவை எனக்கு வியப்பையும் திகைப்பையும் ஊட்டின.

இப்படியொரு கோட்டை கட்டவேண்டுமென்ற பேரவா எழவில்லை. கோட்டை கட்டி வாழ்ந்த நாம், நாட்டை இழந்து அடிமைகளாய் நிற்கிறோமே என்ற சோகம் பிறந்தது.

'ஒற்றுமையின்மை, பொறாமை, இன அழிவுப்போக்கு, வந்தவனுக்கு இடம் கொடுத்துவிட்டது' என்று என் தோழர்கள் கூறக் கேட்டேன்.

அவர்கள் இருவரும் வேலூர் ஊரிஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள். அன்று, அந்தக் கல்லூரியை, அமெரிக்கக் கிறுத்துவர்கள் நடத்தி வந்தார்கள். அவர்கள் ஆங்கில ஆட்சிக்குப் பின்பலமாக நிற்கவில்லை.

எனவே, இந்திய விடுதலையைப் பற்றிச் சிந்திக்கவும் பேசவும் அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு உரிமை இருந்தது.

மலைமீது காற்றும் மழையும்

ஒரு முறை, திரு. சம்பந்தமூர்த்தியும் திருநாவுக்கரசும் என்னைக் கூட்டிக்கொண்டு, வேலூரை ஒட்டிக் கிழக்கில் உள்ள மலைமீது ஏறினார்கள். அங்குக் கட்டப்பட்டுள்ள கோட்டையைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தோம்.

நாங்கள் மலை உச்சிக்குச் சென்றபோது பளிச்சென்று நல்ல வெளிச்சம். மேகங்கள் எங்கும் தென்படவில்லை. கோட்டையையும், அங்கிருந்து நான்கு பக்க மலைத்தொடர்க் காட்சிகளையும் கண்டு, மெல்ல இன்புற்றோம்.

இதையும் அதையும் ஒருவருக்கொருவர் காட்டி மகிழ்ந்த பின்னர், மீண்டும் மீண்டும் வரவேண்டுமென்று முடிவு செய்து கொண்டோம்.

ஓரிடத்தில் உட்கார்ந்து கையில் கொண்டுவந்திருந்த தின்பண்டங்களைச் சுவைக்கத் தொடங்கினோம்.

சட்டென்று இருண்டது; வானத்தைப் பார்த்தோம். கருமேகங்கள் படையெடுத்தன. வானத்தை மூடின. எங்களை நோக்கி விரைந்து எழுந்து வந்துகொண்டிருந்தன. காற்றும் சீறியது. விரைந்து எழுந்து

நடந்தோம். பத்துப் பதினைந்து அடிகள் இறங்கியிருப்போம். இருட்டில் வழி தவறிவிட்டது.

தமிழனுடைய பொறாமைச் சூறாவளியைப் போல், காற்றும் மழையும் போட்டியிட்டுச் சீறின. சிறுவர்களாகிய நாங்கள், காற்றோடும் மழையோடும் எப்போதும் போட்டியிட்டதில்லை. இனியும் எப்போதும் போட்டிபோட முடியாது என்பது யாருக்குத் தெரியாது? அதுவரை, மரபுப் பண்பாட்டை மீறியவர்களும் அல்லர். ஆயினும் எங்கள் மேல் ஏன் இத்தனை சீற்றம்?

தமிழன்தான், எங்கோ, தன் பாட்டிற்குப் போய்க் கொண்டிருக்கிறவனை, தன்னிலும் எளியவனை, தன்னிலும் அதிக வேதனையில் ஏக்கத்தில் உள்ளவனை, என்றும் தன்னோடு போட்டிபோட முடியாத ஒருவனைக் கண்டு பொறாமைப்பட்டுத் தன்னையும் சிதைத்துக்கொண்டு, தன் இன்பத்தையும் அழித்துக்கொண்டு பாழாகிப் போகிறான். அதே போக்குதான் காற்றிற்கும் மழைக்கும். முழுவதும் பொழிந்த பிறகே ஓய்ந்தன.

முக்கால் மணி நேரத்தில் ஏறிய அம்மலையில் இருந்து உருண்டு வீழாமல், அடிபடாமல், கைகால்களில் குருதி கொட்டாமல், மலை அடிவாரத்திற்கு இறங்கி வந்துசேர, மூன்று மணி நேரம் பிடித்தது.

அம்மூன்று மணிகளும் நான் பட்ட பாட்டிலும், என் தோழர்கள் பட்ட பாடு சொல்லுந் தரத்தது அன்று.

அவர்கள், தங்கள் உயிர்களைவிட, என் உயிரையே பெரிதெனப் போற்றினார்கள். ஆளுக்கொரு பக்கம் இருந்து, கைத்தாங்கலாக, யானை ஆய்ந்து பார்த்து அடிவைப்பது போல மெல்ல, மிக மெல்ல, பார்த்துப் பார்த்து என்னை இறக்கிவந்தார்கள்.

அவர்கள் பேருதவியால், பாதுகாப்பால், நடுக்கமும் குளிரும் தவிர பிறிதொரு தீங்கையும் துய்க்காது வீடு வந்து சேர்ந்தேன்.

'வீட்டிலுள்ளோரும் சீறுவார்களோ' என்ற அச்சத்தோடு நுழைந்தோம். அவர்கள் அனைவருமே சராசரித் தமிழனிலும் உயர்ந்தவர்கள்; சீறவில்லை; சீராட்டி, ஆறுதல் கூறினார்கள்.

அன்பும் தியாகமும்

திரு. துரைசாமி முதலியார், நான் முதல் முறை வேலூருக்குச் சென்ற போது, மறு நாளே, என்னைத் தம் குதிரை வண்டியில் அழைத்துக் கொண்டு போய், அவருக்கு வாடிக்கையான மிட்டாய்க்கடை அய்யருக்கு அறிமுகப்படுத்தினார்.

நான், எப்போது வந்தாலும், எவ்வளவிற்குச் சாப்பிட்டாலும், தம் கணக்கில் எழுதிக்கொண்டு, கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

சில நாள் வரை, நான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதைக் கேள்விப்பட்டார். வெட்கப்பட வேண்டாமென்று கனிவோடு கூறினார்.

இருந்தும், ஒவ்வொரு திங்களிலும் இரண்டொரு நாள்களுக்கு மேல் கடைப்பண்டம் உண்ணவில்லை. உற்றார் பொருளையே உண்ண அவாவாமல் வளர்ந்ததால் பிற்காலத்தில் ஊரார் சூட்டிய மாலைகளையும் பொன்னாடைகளையும் ஆங்காங்கே ஏலம் போட்டு, அவ்வூர்ப் பகலுணவிற்குக் கொடுத்துவிட்டு, நடையைக் கட்டுவது எளிதாகவும் இயல்பாகவும் இருந்தது.

'தனக்கல்லவே; ஊர்க் குழந்தைகளுக்குத்தானே ஏலப்பணம்' என்பதை உணர்ந்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்தையும் பொருட்படுத்தாது சிலவேளை சக்திக்கு மேற்பட்டு, போட்டி போட்டு, மாலைகளைக்கூட ஐந்துக்கும் பத்துக்கும் ஏன் ஐம்பதுக்கும் - மதிப்பிருந்த அக்கால ரூபாய்க் கணக்கு - ஏலம் எடுத்துக் கொண்டார்கள். அந்தத் தியாகங்களை எப்படிப் போற்ற!

கன்னையா கம்பெனியின் தசாவதார நாடகம்

என் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிப்பதற்கு முன்பே, மற்றொரு பெருநகரையும் பார்க்கும் வாய்ப்பு திடீரெனக் கிட்டிற்று.

இம்முறை என் தந்தைக்கும் தெரியாது வெளியூர் சென்றேன்.

வேறு வழியின்றி, தவறான ஆணைகளை நிறைவேற்றிவிட்டு, இழிவுக்கு ஆளாகும் இக்கால அதிகாரிகள் சிலருடைய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

நான் பதினோராவது வகுப்பு படித்துக் கொண்டிருக்கையில் 'சென்னை மாநகரில் கன்னய்யா கம்பெனியார் நாடகமாடிக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அந்நாடகக் குழு புகழ் பெற்றிருந்தது. அவர்கள் 'தசாவதாரம்' நாடகத்தை நடிக்கப் போகும் செய்தி, காஞ்சிபுரத்திலும் விளம்பரமாயிற்று.

என் அத்தை உறவினர் ஒருவர் - விதவை - காஞ்சியில் குடியிருந்து தம் ஒரே மகனைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தார். இந்திய விதவைகள் நினைக்கக் கூடியது என்ன? 'மறுமைக்கு நன்மை' ஒன்றையே.

எனவே, அவருக்கு அளவிற்கு மீறிய பக்தி உண்டு. தசாவதாரத்தைக் கண்டால், போகும் வழிக்குத் துணையாகும் என்று அவருக்குத் தோன்றியது.

வேறு இரண்டொரு விதவை உறவினர்களிடம் கூறினார். எல்லோரும் உடனே சென்னைக்குச் சென்று, தசாவதார நாடகத்தைப்

பார்த்து, மோட்சத்திற்கு நுழைவுச்சீட்டுப் பெற்றுவிட்டே, மறுவேலை பார்ப்பது என்று முடிவு செய்தார்கள். அவர்களோடு அவர்கள் பிள்ளைகளும் பெண்களும் சேர்ந்து புறப்பட்டார்கள்.

அடுத்த நாள் காலை சென்னைக்கு இரயில் ஏறவேண்டும். முன் நாள் இரவு ஏழு மணிக்கு, என் பாட்டிக்குச் செய்தி எட்டிற்று.

அப்போது அவர் சுமங்கலி; வயதானவர். இருப்பினும் அவருக்கும் மோட்சம் தேவை. அதற்கு எளிதான வழி, உள்ளது உள்ளபடியே தோன்றும் தசாவதாரத்தைக் கண்குளிரக் காண்பது.

'இவ்வரிய வாய்ப்பினை இழக்கக்கூடாது. இப்போது தவறினால் பிறகு யாரும் இட்டுக்கொண்டு போய்க் காட்டமாட்டார்கள்' என்று நினைத்தார்.

ஆகவே, உறவினர்களோடு சென்று பார்க்க விரும்பினார் பாட்டி. அப்பாவைக் கேட்காமல் போகக்கூடாதென்று தடை சொன்னேன்.

''உனக்கு அப்பா, எனக்குப் பிள்ளைதானே. புண்ணிய காரியத்திற்குப் போனதற்காக வீட்டைவிட்டு விரட்டிவிடமாட்டான். நான் உன் அப்பாவிடம் சொல்லிக் கொள்ளுகிறேன். நீ வா. நாலு நாள் பாடத்தை, வந்த பிறகு சேர்த்துப் படித்துக் கொள்ளலாம்.

''நீ வராவிட்டால், சோறு போட இங்கே உறவினர் யாரும் இல்லை. எந்த ஓட்டலும் இல்லை. பயப்படாமல் வா'' என்று ஆணையிட்டார். அதுவரை, 'பாட்டியா? அப்பாவா? யார் பேச்சைக் கேட்பது' என்ற போட்டி, எடை எனக்கு ஏற்பட்டதில்லை. வேறு வழியின்றிப் பாட்டியின் ஆணையை ஒப்புக் கொண்டேன்.

அக்கம் பக்கத்தில் கடன் வாங்கிக் கொண்டு, இரயில் ஏறிச் சென்னைக்குச் சென்றோம். இரண்டு ஒற்றை மாட்டு வண்டிகளில் எழும்பூரில் இருந்து, சிந்தாதிரிப்பேட்டை சாமிநாய்க்கன் தெருவுக்குச் சென்றோம்.

என் அத்தையின் கணவர் திரு. நாராயணசாமி முதலியார். 'பிரேசர் அன்ட் ராஸ்' என்னும் கணக்கு பார்க்கும் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அவர் வீட்டில் தங்கினோம்.

நாடகத்திற்கு நுழைவுச் சீட்டு வாங்கவும் 'உயிர்க்காலேஜ்', 'செத்த காலேஜ்', 'மீன் காலேஜ்' பழைய 'கலங்கரை விளக்கு' ஆகியவற்றைக் காணவும் ஏற்பாடு செய்து உதவி செய்தார்.

தசாவ தாரத்தைப் பார்த்தோம். அத்தகைய கவர்ச்சியான நாடகத்தை நாங்கள் அதற்கு முன் பார்த்ததில்லை. அத்தனை சோடனை! அத்தனை பளபளப்பு! பொருத்தமான நடிப்பு! உருக்கமான அவையோர். ஆகா! என் உறவினர்களும் அவையோரும் எத்தனை தரம் 'அவதாரங்களை'க் கண்டு, கன்னங்களில் போட்டுக் கொண்டார்கள்!

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த என்னையும் கன்னத்தில் அடித்துக் கொள்ளச் சீண்டினார்கள். பயனில்லை. பேசாமல் இருந்துவிட்டேன்.

ஐம்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆயினும் இன்றும் நம் மக்கள் அப்படியே நாடகப் பாத்திரங்களுக்குக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் பக்தர்களாக இருக்கிறார்கள். வாழ்க அவர்கள்! நான் மட்டும் என்னவாம்? அப்படியே தானே இருக்கிறேன்.

18. புதிய முயற்சிகள்

மேடை ஏறினேன்

நான் பதினோராவது வகுப்பில் படிக்கையில், எங்கள் உயர்நிலைப் பள்ளியில், தமிழ்மன்றம் முளைத்தது. தொடக்கத்தில் மேல் வகுப்பு மாணவர்களே உறுப்பினர்கள். அப்போது, மன்றப் பதவிகளுக்குப் போட்டியோ, தேர்வோ கிடையாது.

உயர்மட்ட வகுப்பில், படிப்பில் முதல் இடத்திற்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்த என்னைப் பேசவோ, பாடவோ வேண்டும் என்றார்கள்.

அதுவரை நான் மேடை ஏறியதில்லை; அவையில் பேசியது இல்லை. ஆசிரியருக்குக் கட்டுப்பட்டிருந்த பழக்கம்; தட்டிக் கழிக்க முடியவில்லை.

தமிழ் அய்யாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தலையாட்டினேன்.

முதல் கூட்டம் வந்தது. அதில் நான் பேசவேண்டும்; இல்லையென்றால் பாடவேண்டும் என்றார்கள். இரண்டும் எனக்குத் தெரியாது.

ஆசிரியர் என் பரிதாப நிலைக்குப் பச்சாதாபப்பட்டார். 'மனப் பாடம் செய்துள்ள ஏதாவதொரு பாட்டை ஒப்புவி' என்று ஆலோசனை கூறினார்.

உள்ளத்தை உரப்படுத்திக் கொண்டேன்; மேடையேறினேன்; மூச்சுவிடாமல் ஒப்புவித்தேன். எதை?

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
    ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
    அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்

நெடுநாளி ருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர்எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக் குழறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையைஅருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

இது எனக்குப் பிடித்தமான பாட்டு, என்னுள் கலந்துவிட்ட பாட்டு.

இப்பாடலை, நானே தேடிப் படித்தேன் இல்லை. என் தமிழ்ப் பாட நூலிலே இடம் பெற்றிருந்தது; மனப்பாடப் பகுதியாகவும் வந்தது.

எனவே, அதை மனப்பாடஞ் செய்திருந்தேன். மனப்பாடஞ் செய்வதில் எனக்கு ஆர்வம் உண்டு. ஆற்றல் உண்டா? வளர்த்துக் கொண்டேன்.

வளர்த்துக் கொள்ள முடியுமா? முடியும். சிலராலா? இல்லை; பலராலும்.

அப்படியா என்று திகைக்கத் தேவையில்லை.

தமிழ் மண்ணிலே, வாழையும் பலாவும் மாவும் இயற்கையாக வளரும். அதுபோல், தமிழ் மக்கள் அனைவருக்கும் மனப்பாடஞ் செய்யும் ஆற்றலும் இயற்கையாக உண்டு.

பல தலைமுறைகளாகப் படித்து வருபவர்களுக்கு மட்டுமல்ல. பல தலைமுறைகளாகத் தற்குறிகளாகவே, தாழ்ந்துவிட்டவர்களிடமும் அவ்வாற்றல் நீறுபூத்த நெருப்பாக உள்ளது.

எழுபது வயதிற்கு மேற்பட்ட பழைய கால ஆதிதிராவிடப் பெரியவரை அண்டுங்கள். படிக்காத அப்பாட்டனாரும், அரிச்சந்திரன் கதையும் நல்லதங்காள் கதையும் சத்தியவான் சாவித்திரி கதையும் பாடல்களாகவே, ஒப்புவிப்பதைக் காணலாம்.

அவை, காது வழிக் கேட்டுக்கேட்டு அறிவில் பதிந்துவிட்டன. இளமையில் பதிந்து முதுமையிலும் ஒளிவிடுகின்றன.

ஒருமுறை மனப்பாடம் பண்ணிவிட்டால் நூறுமுறை ஒப்புவித்தாலும் மறப்பதில்லை. மனப்பாடத்தால் நன்மையும் உண்டா? உண்டு.

சிறந்தவை மனப்பாடஞ் செய்தல், வாழ்க்கைக்கு ஊன்றுகோல்.

தமிழ் மன்ற மாணவர்களுக்கு மேற்படி தாயுமானவர் பாடல் பழக்கமானது. எனவே, நான் ஒப்புவிக்கும்போது, அவர்கள் உள்ளம் சிறகடித்துப் பறக்கவில்லை; மாறாக அப்பாடலில் ஒன்றிவிட்டது.

பேச்சு மூச்சுவிடாமல் கேட்டார்கள். அப்பாடலை முடித்ததும் கையொலி பெரிதாக இருந்தது.

கைகால்கள் தந்தி அடித்ததையும், உடலெல்லாம் வியர்த்ததையும் நொடிப்பொழுது மறந்துவிட்டேன்.

'மற்றோர் பாடல்' என்னும் ஒலியைக் கேட்டு, நினைவு பெற்றேன். தயங்கவில்லை; தொடங்கிவிட்டேன்; பாட இல்லை; ஒப்புவிக்கத் தொடங்கினேன்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
    கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாங்
    கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத் தைந்துலோகத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
    விண்ணவரை ஏவல்கொளலாஞ்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
    சரீரத்தி னும்புகுதலாஞ்
சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
    தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
    திறமரிது சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
    தேசோமயானந்தமே!

என்னும் மற்றோர் தாயுமானவர் பாடலை ஒரே மூச்சாக ஒப்புவித்த பிறகே, ஓய்ந்தேன்.

அப்போதும் கையொலி பெரிதாக இருந்தது. இப்பாடலும் பாட நூலில் மனப்பாடப் பகுதியில் சேர்ந்தது.

கேட்டிருந்தால், தாயுமானவருடைய பாடல்களில் மேலும் சிலவற்றை ஒப்புவித்திருப்பேன்.

அமுதத்தையும் அளவிற்குமேல் உண்ணலாகாதே! எனவே மற்ற நிகழ்ச்சிகளுக்கு மாறினோம்.

வகுப்பறைப் பாடங்களைப் போன்றே, மன்ற நடவடிக்கைகள் தேவையானவை. நாட்டஞ் செலுத்த வேண்டியவை.

கூடிய வரையில் எல்லா மாணவர்களும் ஏதாவதொரு புறப்பாட நடவடிக்கையில் பழக்கப்படும் அளவிற்கு, இவற்றிற்கு நேரமும் கவனமும் பொருளும் செலவிடும் நன்னாளும் எந்நாளோ?

நான், இளமைப் பருவத்தில், அடர்ந்து நீண்ட முடியுடையவன்; அதைத் துப்புரவாக வைத்துக்கொள்வது பெரும்பாடு.

எங்கிருந்தோ ஈரும் பேனும் சேர்ந்துவிடும். முடியைக் கத்தரித்துக் கொண்டு, கிராப் தலையனாக விரும்பினேன்.

தந்தையிடம் கூறினேன். அவர் உடன்பட்டார்; ஆனால்? அவர் அம்மா, - என் பாட்டி - உடன்படவில்லை.

அக்கால நாட்டுப்புறங்களில், கிராப்புத் தலை, கிறுத்தவர்களின் சின்னம் என்னும் மூடநம்பிக்கை யொன்று இருந்தது. அது என் பாட்டியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

'கிராப் வைத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழையவிட மாட்டேன்' என்றார். தான் எனக்குச் சமைத்துப் போட முடியாதென்று மிரட்டினார். சமையலுக்கு மாற்றாள் இல்லை. எனவே மிரட்டலைப் பொருட்படுத்த நேர்ந்தது.

பாதிக் கிணறு தாண்டும் வழியைக் கூறினார், என் தந்தை.

'வழக்கம்போல், முடியின் முன் பாதியை மழித்துக்கொள். பின் பாதியை நீளமாக வைத்திருப்பதற்குப் பதில் கத்தரித்துக் கொள்' என்பது.

இது சுதேசிய வழி. இந்த 'இந்தியன் கிராப்'புக்குப் பாட்டி தடை சொல்லவில்லை.

மனிதன் மேற்கொள்ளும் மாற்றம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிக்கலைக் கிளப்பும். தலையில் ஈரும் பேனும் சேராதிருக்கும் பொருட்டு இந்தியன் கிராபிற்கு மாறியபோது, முக்கியமான ஒன்றை மறந்துவிட்டேன்.

நெய்யாடு பாக்கம் மருத்துவர், பழைய காலத்து ஆள். அவருக்குக் கிராப் செய்யத் தெரியாது. இந்தியன் கிராப்பும் வராது. மரபுவழி மழித்தலே தெரியும்.

நீண்ட கோடை விடுமுறையின்போது என் தலையை அவரிடம் நீட்டினேன். 'எனக்கு இந்த வேலை தெரியாது சாமி' என்றார்.

''ஒன்றும் பெரிய காரியம் அல்ல. மெல்ல இரண்டு முறை செய்தால் பழகிப் போகும்,'' என்று யாரோ மூத்தவர் அவருக்குத் தைரியம் சொன்னார். இதை அவரால் மறுக்க முடியவில்லை.

கத்தரிக்கோல் என் தலைமுடியில் நடனமாடியது. முடிவில் கைக் கண்ணாடியைக் காட்டினார். எனக்கு அடக்க முடியாத அழுகை வந்தது.

அழுது பயன் என்ன என்பது விளங்கவில்லை. அலுக்கும்வரை அழுதேன். அப்புறம் அவரிடம் தலை நீட்டவில்லை.

கோடையில் திங்கள்தோறும் 'கிராப்' வெட்டிக்கொள்ள காஞ்சி புரத்திற்கு யாத்திரை போனேன்.

கல்லூரியில் சேர்ந்த பிறகும் கோடையில் இதே நிலை. கிராப் கூலியோடு பயணப் பணமும் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

உள்ளூரில் கிராப் வெட்ட ஆள் இல்லாததால் நான் துன்பப்பட்டேன். அதுபோல், உள்ளூரில் பொறியியல் நுட்பம் தெரிந்தவர்கள் இல்லாமையால் என் தந்தையின் பயிர்த்தொழில் மிகவும் இடர்ப்பட்டது.

கவலை இறைப்பும் மோட்டார் இறைப்பும்

எங்களூரில் இயற்கையாகக் கிடைக்கும் ஏரிப் பாய்ச்சல் ஒரு போகப் பயிருக்குப் போதும். பாதி வயல்களில் இரண்டாம் போகம் பயிர் இடுவது உண்டு. 'கவலை' இறைப்பை நம்பிப் பயிரிட்டு வருவார்கள்.

கவலைக்கு வேண்டிய காளைகளை வாலாஜாபாத் வாரச் சந்தையில் வாங்கி வருவார்கள். அக்காலத்தில் கால்நடை மருத்துவம் பரவவில்லை. பசுக்கள், எருதுகள், எருமைகள் திடீர் திடீரெனச் செத்து மடியும். மருந்து கிடையாது. வேண்டுதல் பலிக்காது.

எண்ணெய் மோட்டார் வாங்கி வந்து பூட்டி இறைத்தால் இந்தத் தொல்லையும் இழப்பும் இராது என்று பலர் யோசனை சொல்லுவதும் உண்டு. சில ஆண்டுகள் பேச்சிலே ஓடின.

கடைசியில் என் தந்தையாரின் மேற்பார்வையில் நடந்த மாமாவின் வயல்களுக்கு ஒரு மோட்டார் வாங்கி வந்தார். சென்னையில் இருந்து வந்த 'நிபுணர்' அதைக் கிணற்றில் பொருத்தினார். குழாய்களையும் அவரே இருந்து பொருத்திக் கொடுத்தார்; மோட்டாரை ஓடவைத்துச் சரிபார்த்தார்.

அதை ஓட்டும் வித்தை உள்ளூரில் எவருக்கும் தெரியாது. கற்றுக் கொள்ள முன் வருவோரும் இல்லை.

எனவே சென்னையிலிருந்து பயிற்சி பெற்ற ஒருவரை அழைத்து வந்தார். தாராளமாகவே சம்பளம் கொடுத்தார்; மாமா வீட்டிலேயே சாப்பாடு.

என்னதான் இருந்தாலும் பட்டினம் ஆகுமா நெய்யாடு பாக்கம்?

'பீடி குடிக்க, மறைவாகப் போக வேண்டியிருக்கிறது; பேச்சுத் துணை இல்லை; ஒட்டு ஒட்டென்று எப்படி எவ்வளவு நேரம் கையையும் காலையும் மடக்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பது?'' என்று குறைபட்டுக்கொண்டு, டிரைவர், சென்னைக்குப் போய் விட்டார்.

மாற்றாள் கண்டு பிடிக்கச் சென்னைக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இடையில் மூன்று நான்கு நாள்கள் பயிர் வாடிப்போயிற்று. எதையும் தாங்கும் இதயங்கொண்ட மனிதனல்லவே பயிர்.

முன்னர் இடையறாது ஈரம் இருந்த வயல்கள், மோட்டார் தடைப்பட்டுக் காய்ந்து காய்ந்து ஈரம் பெற்றன. ஆதாயம் குறைந்தது; ஆள் கண்டு பிடிக்கும் தொல்லையும் வளர்ந்தது. ஆகவே, பழையபடி கவலை இறைப்புக்கு மாறும் நெருக்கடி ஏற்பட்டது.

நம்முடைய பயிர்த்தொழில் நவீனமாக வேண்டும்; உரிய ஏற்பாடுகளை முன்னதாகவே செய்துகொள்ள வேண்டும்; பொறிகளை இயக்கவும் பழுது பார்க்கவும் உள்ளூரில் இல்லாவிட்டால் அக்கம்பக்கத்து ஊர் ஆள்களையாவது பயிற்றுவித்துக் கொள்ளா விட்டால், குறிக்கோள் நிறைவேறாது. இதை அன்றைய அனுபவம் தெளிவுபடுத்தி இருக்கிறது.

தன் கையே தனக்கு உதவி

சில ஆண்டுகளுக்குப் பின், ஊரில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் சிலர் வளர்ந்து வந்தபின் மீண்டும் எண்ணெய் மோட்டார் இறவை வந்தது; அது நிலைத்தது, பின்னர் மின்பொறி இறவையாகத் தொடர்கிறது.

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன் எங்கள் ஊரில், உழுவதற்கு மாடுகளும் ஆள்களும் போதிய அளவு கிடைக்கவில்லை. நேரத்தில் எல்லா வயல்களையும் உழுது பயிரிட முடியவில்லை.

பெரும்பகுதி நிலம் என்னுடைய உறவினர்களிடம் இருந்தது. அவர்கள் கூடிப் பேசினார்கள். டிராக்டர் ஒன்று வாங்கி உழ எண்ணினார்கள்.

இரண்டு மூன்று பேர்கள் புறப்பட்டுச் சென்னைக்கு வந்தார்கள். டிராக்டர்களைப் பார்த்து, விலை பராமரிப்புச் செலவு முதலியவற்றைத் தெரிந்து கொண்டார்கள்.

முதலில் எண்ணியதை உறுதிப்படுத்திக் கொண்டு என்னிடம் வந்தார்கள்.

ஊரில் என்னுடைய குடும்ப நிலம் தந்தை இறந்த பின்னும் பாகப்பிரிவினையின்றிக் கூட்டாகப் பயிரிடப்படுகிறது.

எனக்கு நேர் இளையதம்பி சிவானந்தம் அதைப் பார்த்துக் கொள்ளுகிறார்; அவரும் உடன் வந்தார்.

ஊர்ப் பொதுவில் ஓர் டிராக்டர் வாங்கிப் பயன்படுத்தத் திட்டமிட்டு உள்ளதாகச் சொல்லி அதன் விலையில் எங்கள் பங்குக்கு உரிய பணத்தைப் போடும்படியும் கேட்டார்கள்.

கூட்டுப் பயிர், இயந்திரத்தால் உழுதல், இவை என்னுடைய நெடுநாளை ஆசை. அவர்கள் எண்ணத்தைக் கேட்டுப் பூரித்தேன். மகிழ்ச்சியிலும் தெளிவை இழக்கவில்லை. இயந்திர இறவை நினைவுக்கு வந்தது.

டிராக்டர் வாங்குவதை ஆதரித்தேன். அதை இயக்க வெளியூரிலிருந்து வரும் சம்பளக்காரரை நம்பியிருப்பது ஆபத்து. உள்ளூரில் எத்தனையோ இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இருவருக்காவது இயக்கவும் பழுது பார்க்கவும் கற்றுக் கொடுக்க வேண்டியது இன்றியமையாதது என்று குழந்தைகளுக்குப் பாடஞ் சொல்லுவது போல் விளக்கினேன்.

ஏழெட்டு வீட்டார் முதல் போட்டு வாங்கும் பொறியைப் பாதுகாக்க, யாராகிலும் ஒருவர், ஆண்டு தோறுமாகிலும் பொறுப்பேற்க வேண்டும்.

வேலை நேரம், உழுத பரப்பு, எண்ணெய்ச் செலவு, சம்பளம் பிற செலவினங்கள் ஆகியவற்றை நாள்தோறும் முறையாகக் கணக்கு எழுதி, பதில் சொல்லும் பொறுப்பை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வயதில் முதியவர் இளையவர் என்று பாராமல், பருவத்திற்கு பரும் பங்குதாரர்களைக் கூட்டிவைத்து கணக்கைக் காட்டி ஒப்புதல் பெற மனப்பக்குவம் பெற்றவர்கள் சிலராவது தேவை. இப்படி விவரமாகச் சுட்டிக் காட்டினேன்.

ஏற்றுக் கொண்டார்கள். இதை இதை இவர் இவர் பார்த்துக் கொள்ளுவார் என்று குறிப்பிட்டார்கள்.

இளைய தலைமுறை ஆயிற்றே! துப்பாக்கி வயிற்றுப் பீரங்கிகளாக இருக்கட்டுமே! செம்மையாகச் செயல்படமாட்டார்களென்று அவநம்பிக்கை கொள்வானேன்!

இப்படி எதிர்பார்த்து 'டிராக்டர்' வாங்கப் பங்குப் பணம் போடும்படி ஒப்புதல் கொடுத்தேன்.

மகிழ்ச்சியோடு சென்றார்கள். உழும் பொறியை வாங்கினார்கள். பெருமையோடு திரும்பினார்கள். பட்டினத்து ஓட்டியோடு நிறைவு கொண்டார்கள்.

உள்ளூர்க்காரர் எவரையும் பயிற்றுவிக்கவில்லை. முதல் பருவம் நாலூர்க்காரர்களும் போற்றுமளவு பொறி திறமையாகச் செயல்பட்டது.

அடுத்த பருவத்தில் - இரண்டொரு நாள்களில் பழுதேற்பட்டது. பட்டினத்து ஓட்டி, பழுதுபார்ப்பவரைத் தேடிப்போனார்.

சில நாள்கள் காத்திருந்தபின் அவரைத் தேடி ஊர் விவசாயிகள் போனார்கள்; கிடைக்கவில்லை.

கம்பெனியில் உதவி கோரினார்கள். வாக்குறுதி கிடைத்தது. பழுது பார்க்கும் ஆள் வருவதற்குள், பருவம் ஓடிவிட்டது.

பழையபடி மாட்டைக் கட்டிக் கொஞ்சம் உழுது பயிரிட்டுக் கொண்டார்கள்.

பழுது பார்க்க வந்த நிபுணர் டிராக்டரைச் சென்னைக்கு அனுப்பினால்தான் செப்பனிட்டுத்தர இயலும் என்று கையை விரித்துவிட்டார்.

முதல்முறை மோட்டார் இறைவைபோல் ஆகிவிட்டது டிராக்டர் உழவு.

பழைய டிராக்டராக விற்கப்பட்டது. இழப்பு சில ஆயிரம்.

குறை எங்கே? புதிய முறைக்குத் தேவையானவர்களை உள்ளூரிலேயே உருவாக்கிக் கொள்ளாமை, குறை.

நாடு, பலவகையில் தொழில் மயமாகி வருகிறது. விஞ்ஞானம், வீடுதோறும் குடிசைதோறும் வந்துவிட்டது.

அதை இயக்க, செப்பனிட, எங்கோ உள்ளவர்களை நம்பியிருத்தல் தேவைக்கு உதவாது; உடனடியாக உதவாது என்பதை நாடு இன்றும் போதிய அளவு உணரவில்லை.

தொழிற் பள்ளிகளில், சென்ற நூற்றாண்டையே நினைத்துக் கொண்டு, எதையோ சொல்லிக் கொடுக்கிறோம்.

இன்றைய தேவைகளுக்குப் பயிற்சி கொடுப்பதில்லை.

பயிற்சி பெறுவோரும் வாழையடி வாழையாக, யாரிடமோ கைகட்டிப் பிழைத்தவர்கள்; தாமே முயன்று பாடுபட்டு முன்னுக்கு வரும் போக்கு அவர்கள் குருதியில் இல்லை.

எனவே ஒருபால், பல பக்கம், பலவகைப் பொறிகள் நாள்கணக்கில் பழுதுபார்க்கப் படாததால், வேலை கெடுகிறது. மற்றோர்பால் அவ்வேலைகளைக் கற்றுக் கொள்ளாமையால், தொழில் பயிற்சி பெற்றவர்களும் மனுப்போட மட்டுமே கற்றவர்களாகத் தேங்குகின்றார்கள்.

நாட்டுப்புற வேலைகளைச் செய்து வளம் பெருக்குகிறவர்களாக மாறியிருந்தால் அவர்களும் வாழ்ந்திருப்பார்கள், நாடும் வாழ்ந்திருக்கும்.

ஊருக்குச் சொல்ல நான் யார்?

மேல் படிப்புக்கு எதிர்ப்பு

என் படிப்பிற்குச் செல்வோம். பள்ளியிறுதிப் படிப்பை முடித்தபின் என்ன செய்ய?

இக்கேள்வி எழுவது இயற்கை. என்னைக் கல்லூரிக்கு அனுப்பி மேலும் படிக்க வைக்க வேண்டுமென்பது என் தந்தையின் விருப்பம்.

திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பிற்குமேல் போகாத அவருக்கு இந்த எண்ணம் எப்படி எழுந்தது?

பார்ப்பனரல்லாதவர்களும் பட்டம் பெற்று, பதவிக்குப் போட்டியிட வேண்டுமென்று, நீதிக்கட்சி கோடுகாட்டிற்று. அது எங்கள் தந்தைக்கு எட்டிற்று. அது மட்டுமா?

ஒரு காலத்தில் எங்கள் பக்கத்துக் காவல்துறை ஆய்வராகத் திரு. துடிசைக்கிழார் சிதம்பர முதலியார் என்பவர் பணிபுரிந்தார்.

அவர், கோவை மாவட்டத் துடியலூரைச் சேர்ந்தவர். நல்ல தமிழ்ப் புலமை பெற்றவர்; சைவ சமயத் தொண்டர்.

காவல்துறையில் பணிபுரியினும் நேர்மைக்கும் நாணயத்திற்கும் இனிமைக்கும் ஒழுங்கிற்கும் பெயர் பெற்றவர். என் தந்தைக்கு நண்பரானார்.

அவர் என் அப்பாவிற்கு அன்பளிப்பாகத் தந்த 'துடிசைப் புராணம்' அவருடைய அலமாரியில் நெடுநாளிருந்தது.

துடிசைக்கிழார் என் தந்தையின் நெஞ்சில், இக்காலக் கல்வியின்பால் பற்றுதலை ஏற்றிவிட்டார்.

பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் அதைத் தூண்டிக் கொண்டே இருந்தார்.

இளையனார் வேலூரில் தூரத்து உறவினர் - ஒருவர் - திரு. சடகோபன் - பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தார். வேலூர் துரைசாமி முதலியார் அண்ணன் மக்கள் இருவரும் கல்லூரிப் படிப்பு படித்துக் கொண்டிருந்தார்கள்.

அதோடு என் தந்தைக்கு வேண்டியவர் ஒருவர் வாலாஜாபாத்தில் இருந்தார். அவர் பெயர் திரு. கன்னிவேலு செட்டியார். அவரை அடிக்கடிக் காண்பது உண்டு. அவர் செல்வர்; அவருடைய தம்பியாகிய திரு. எம்.டி. இராஜு, ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்துவிட்டு, கல்லூரியில் சேர்ந்திருந்தார். அதுவும் தூண்டுதலாக அமைந்தது.

அத்தனை தூண்டுதல்களும் என் உயர்கல்விக்கு ஆதரவாக நின்றன. ஒரே ஒரு எதிர்ப்பு.

என் அப்பாவின் அப்பா, நான் மேல் படிப்பிற்குப் போவதை விரும்பவில்லை. அவர் பழைய தலைமுறையல்லவா?

மேலும் இளையனார் வேலூரில் ஒருவர் எட்டாவது முடித்து விட்டு வெளியூரில் அஞ்சல்துறையில் சேர்ந்தார். அவர் சம்பள உயர்வு பெற்று அப்போது மாதம் நூற்று ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தார்.

அக்கால நூற்று ஐம்பது ரூபாய்கள் இன்றைய ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்களுக்கு ஒப்பானவை.

எட்டாவதற்கே அவ்வளவு பெரிய சம்பளம் கிடைத்தால் பதினோராவது தேறிய எனக்கு 'அதிர்ஷ்டம்' மட்டும் இருந்தால் பல நூறு சம்பளம் தாராளமாகக் கிடைக்கும்.

வீணாக, மேலும் மேலும் படிக்க வைக்க வேண்டாம். அதனால் பணச் செலவு மட்டுமா? பட்டினம் போனால் கெட்டுப் போவான் என்பது ஊர் வழக்கு.

இவற்றை எடுத்துக்காட்டி, என்னை உயர்நிலைப்பள்ளியோடு நிறுத்திவிடும்படி தாத்தா கூறினார். மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார்.

இவ்வழக்குகள் தீரும் மட்டும் தேர்வுகள் காத்திருக்குமா? உரிய காலத்தில் வந்தன; பொதுத் தேர்வுகள் என்னை மிரட்டவில்லை. எங்கள் பள்ளியில் எழுதாமல், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளிக்குச் சென்று எழுத நேர்ந்ததும் அச்சமூட்டவில்லை.

'வகுப்பில் கவனமாகக் கேட்டோம். வீட்டில் பொறுப்பாகப் படித்தோம். பாடங்களுக்கு அப்பால் கேட்கப் போவது இல்லை. அப்புறம் அச்சம் எதற்கு' என்னும் நம்பிக்கையோடு என் நண்பர்களும் நானும் தேர்வுகளை எழுதினோம்.

கேள்வித் தாளை முழுவதும் படித்து முடிப்போம். அப்புறமே எழுதவேண்டிய கேள்விகளைத் தேர்ந்தெடுப்போம். அமைதியாக, படபடப்பின்றி எழுதி வந்தோம். ஒவ்வொரு நாளும் நிறைவோடு வெளியேறினோம்.

பொதுக் கணக்குத்தான் எளிதாகத் தோன்றிற்று. நூற்றுக்கு நூறு வாங்குவேன் என்னும் பூரிப்பு; என்னை அறியாமலேயே மகிழ்ச்சி வயப்பட்டேன்; களிப்பும் தீங்கானதல்லவா?

வெளியே வந்து மற்றவர்களோடு ஒப்பிடுகையில், கடைசிக் கணக்கில் வழி சரியாக இருந்தும் முடிவு தவறாகிவிட்டது தெரிந்தது.

19. மனத்தைக் கவர்ந்த மாநிலக் கல்லூரி

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்தது

'பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறுவேன்; நிறைய மதிப்பெண்கள் பெறுவேன். பொதுக்கணக்கில் நூற்றுக்கு நூறு பெறாவிட்டாலும் தொண்ணூறுக்குமேல் பெறுவேன்'.

இப்படி என்னை எடைபோட்டார்கள், என் வகுப்பு மாணவர்கள்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்க இருந்த எங்கள் அனைவரையும் புகைப்படம் பிடிக்க ஏற்பாடு செய்தார்கள்.

தலைமை ஆசிரியர் ஞானாதிக்கமும் பிற ஆசிரியர்களான திருவாளர்கள் பொன்னையா, சங்கர அய்யர், பாக்கியநாதன், பிரகாசம், நரசிம்மாச்சாரியார் ஆகியோரும் உடன் அமர்ந்தனர்.

அப்போதுதான், நான் முதன்முதலாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். 'இந்தியன் கிராப்'பை மறைக்க, ஒரு துண்டால் தலைப்பாகை கட்டிக்கொண்டதாக நினைவு.

அக்கால கட்டத்தில் நம் பொதுமக்களிடையே ஒரு மூடநம்பிக்கை ஊடுருவி இருந்தது. அது என்ன?

புகைப்படம் எடுத்துக் கொள்வோருக்கு ஆயுள் குறையும்' என்பது பரவலான கருத்து.

அக்கருத்து இன்று மலைவாழ் காட்டுமக்களிடம் ஒருகால் இருக்கலாம்!

அடிக்கடி புகைப்படத்தில் வீழ்வது, சாவினை விரைந்து நாடுவதென்று, இக்கால நாட்டு மக்கள் நினைப்பதில்லை.

காலத்தின் மாற்றம் - நல்மாற்றம் - அப்பொய்யைத் துடைத்து விட்டது.

என்னை ஆளாக்கிய காஞ்சிபுரம் யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளி, சென்னைக் கிறுத்துவக் கல்லூரியின் நிர்வாகத்தினால் நடத்தப்பட்டு வந்தது. யூ.எப்.சி.எம். உயர்நிலைப் பள்ளி கிறுத்துவக் கல்லூரியின் கிளையாகவே கருதப்பட்டது.

எனவே, கல்வியாண்டின் முடிவில் உயர்நிலைப்பள்ளி அலுவலகமே கிறுத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான மனுக்களை வரவழைத்து, பள்ளியிறுதி மாணவர்களுக்கு வழங்கியது.

நானும் ஒரு மனுவைப் பெற்றேன்; நிறைவு செய்தேன். உரிய கட்டணத்தோடு, பள்ளியின் அலுவலகத்தில் மனுவைக் கொடுத்தேன்.

அந்த அலுவலகமே மனுக்களைத் திரட்டிக் கல்லூரிக்கு அனுப்பிற்று.

சில வாரங்களுக்குப் பின் தேர்வின் முடிவுகள் வெளியாயின.

மதிப்பெண்களைக் காட்டும் சான்று இதழ்கள் - இல்லை நூல்கள் - வந்து சேர்ந்தன.

அக்காலத்தில், பள்ளியிறுதித் தேர்வின் முடிவுகள் செய்தித் தாள்களில் வெளியானதாக நினைவில்லை.

மாணவர்களாகிய நாங்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று முடிவுகளையும் மதிப்பெண் ஏடுகளையும் பெற்றோம்.

நான், தேர்ச்சி பெற்றேன்; மதிப்பு எண்ஏடுகளையும் கொடுத்தார்கள். பொதுக்கணக்கில், நூற்றுக்கு எண்பத்தெட்டு மதிப்பெண்களே கிடைத்தன.

இதில் ஏமாற்றம். தனிக் கணக்கில் எழுபத்து எட்டு வந்தது. பௌதிகத்தில் எழுபத்தைந்து.

மதிப்பெண்கள் கைக்கு வந்ததும், கிறுத்துவக் கல்லூரிக்கு மனுப்போட்டிருந்தவர்களின் மதிப்பெண்களின் பட்டியலைப் பள்ளியிலிருந்தே அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள்.

அப்பள்ளியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள எனக்குக் கல்லூரியில் இடம் கிடைப்பது உறுதி; வீடு தேடிச் சேர்க்கைக் கடிதம் வரும் என்று அலுவலகத்தில் கேள்விப்பட்டேன்.

எங்களூர் அஞ்சல் நிலையமும் கல்லூரி சேர்க்கைக் கடிதமும்

அந்த நம்பிக்கையோடு நெய்யாடுபாக்கம் திரும்பினேன். ஆயினும்,

எனக்கு முந்திய ஆண்டில் தேறிய வாலாஜாபாத் எம்.டி. ராஜு என்பவர் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்தார்.

மாநிலக் கல்லூரியின் சூழலும் விடுதியின் உணவும் ராஜுவுக்கு மிகவும் பிடித்திருந்தன.

அவர், தன் அண்ணார் திரு. கன்னிவேலு செட்டியார் மூலம் என்னையும் அக்கல்லூரியிலும் விடுதியிலும் சேரும்படி தூண்டிக் கொண்டு இருந்தார். 'இதுவா? அதுவா?' என்ற குழப்பம் எங்களிடம் தலை நீட்டிற்று.

''பிறகு முடிவுசெய்து கொள்வோம். இப்போதைக்கு மாநிலக் கல்லூரிக்கும் விக்டோரியா விடுதிக்கும் மனுப்போட்டு வை. நாலு ரூபாய் போனால் போகட்டும்'' என்று என் தந்தை கட்டளையிட்டார். அப்படியே செய்துவிட்டுக் காத்திருந்தேன்.

அக்காலத்தில் எங்களூரில் அஞ்சல்நிலையம் இல்லை. அடுத்த ஊராகிய காவாந்தண்டலத்தில் இருந்தது.

பகுதிநேர அஞ்சல் அலுவலர் வேலை பார்த்தவர் என் தந்தைக்கு மிகவும் வேண்டியவர். நாள்தோறும் வாலாஜாபாத்திலிருந்து அவர் கால் நடையாகவே அஞ்சல் கட்டைக் கொண்டு வந்து சேர்ப்பார்.

அவர் வந்துசேர, பகல் பன்னிரண்டு மணி ஆகும். பிற்பகல் காவாந்தண்டலத்திலிருந்து அஞ்சல் கட்டைத் தூக்கிக்கொண்டு வாலாஜாபாத்திற்கு நடந்து செல்வார்.

கல்லூரி சேர்க்கைக் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோடை விடுமுறையின்போது நாள்தோறும், ஓர் ஆளை காவாந்தண்டலம் அஞ்சல் நிலையத்திற்கு அனுப்புவோம்.

'கட்டு உடைக்கிற' வேளைக்குப் போனால் மட்டுமே, அஞ்சல் நிலைய நண்பர். எங்களுக்கு வரும் கடிதங்களை உடனுக்குடன் கொடுக்க முடியும்.

உடைத்து, 'பட்டுவாடா' செய்யாமல் கட்டிவிட்டால், எங்கள் ஊருக்கு முறைவரும் நாள் வரை காத்திருக்க வேண்டும். அம்முறையோ வாரத்திற்கு ஒரு தரமே வரும்.

ஒரு வாரம் காத்திருந்தால், இடம் போய்விடலாமென்ற அச்சத்தில், நாள்தோறும் ஓர் ஆளை, வேகா வெயிலில் காவாந்தண்டலத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தது.

பாதிதூரம் ஆற்று மணலாக இருந்ததால் போகும் ஆள், செருப்பணிந்தும் போக இயலாது. வெறுங்காலோடு கொதி மணல் மேல் நடக்க வைத்த கொடுமையை நினைத்தால், இன்றும் நெஞ்சம் வேதனைப்படுகிறது. அன்று அது ஏனோ உறுத்தவில்லை.

பல நாள்களுக்குப் பிறகு எதிர்பார்த்த கடிதம் வந்து சேர்ந்தது.

சென்னைக் கிறுத்துவக் கல்லூரியில் 'இண்டர்மீடியட்' வகுப்பில் முதல் பிரிவில் இடம் ஒதுக்கியிருப்பதாக அது அறிவித்தது.

'கெய்த்னஸ் ஹால்' என்னும் மாணவர் விடுதியிலும் இடம் போட்டிருப்பதாக அக்கடிதம் சொல்லிற்று.

இவ்விரண்டைக் காட்டிலும் இனிய செய்தியும் அதில் இருந்தது.

அது என்ன?

தேர்வில் காஞ்சிபுரம் கிறுத்துவ உயர்நிலைப் பள்ளியில் நான் இரண்டாம் இடத்தைப் பிடித்து இருந்ததைப் பாராட்டி, எனக்கு இலவசக் கல்வி அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அது மட்டுமா? விடுதிச் செலவுக்காக உதவித்தொகை கிடைக்கும். எவ்வளவு என்று சேரும்போது அறிவிக்கப்படும். இத்தகவலும் கிடைத்தது.

இலவசக் கல்வியும் என் பாட்டனார் கவலையும்

இலவசக் கல்வி, உதவித் தொகை முதலியன அக்காலத்தில் நாங்கள் கேள்விப்படாதவை. அப்படிப்பட்டவை என்னைத் தேடி வருகின்றன என்று கேள்விப்பட்டபோது எனக்குத் தலைகால் தெரியவில்லை; ஒரே குதூகலம்.

என்னை நாடி வந்த இலவசக் கல்வி எல்லோர்க்கும் கிடைக்கட்டும் என்று எண்ணக்கூட அன்று துணிவில்லை; துணிவில்லாதபோது தெளிவு ஏது?

இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு, ஏழைபங்காளராகிய காமராசர் முதல் அமைச்சராவார்; சாதி, வருவாய், வேற்றுமை பாராட்டாமல், எல்லோருக்கும் உயர்நிலைப்பள்ளி முடிய 'இலவசக் கல்வி' கொடுக்கும் கல்விமடையைத் தாராளமாகத் திறந்து விடுவார்.

கர்மவீரர் காமராசர் வளர்த்த இலவசக் கல்வியின் நிறைவு விழாவை ஆணையிடும் முதல் அமைச்சராக திரு. மீ. பக்தவத்சலம் விளங்குவார்.

இப்பெரிய கல்வி வளர்ச்சிக் காதையில் எனக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்று கனவு காணவும் தெரியாது.

என்னுடைய சாதகத்தைப் பார்த்த கெட்டிக்காரர்களில் எவரும், ஓய்வு பெறும்போது, தாசில்தார் ஆகியே ஓய்வு பெறுவார்' என்பதற்குமேல் சொல்லத் துணியவில்லை.

ஏன்? அன்றைய இந்தியப் பட்டிக்காட்டான், தாசில்தார் ஆக எண்ணுவதே பேரவாவாகக் கருதப்படும்.

அக்காலத்தில் மிக அருமையாக இருந்த இலவசக் கல்வியும் உதவித்தொகையும் கையில் வருவதற்கு முன்பே, மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். என் பெற்றோரும் மகிழ்ச்சி கொண்டனர். என் மாமாவும் அவர் அன்னையும் பூரித்தனர்.

அப்பாவைப் பெற்ற பாட்டனாருக்கு மட்டும், 'பட்டினத்திற்கு அனுப்பிவிடுகிறோமே' என்ற கவலை; 'கெட்டுப்போய் விடுவானோ' என்ற அச்சம்.

ஆருடக்காரர்கள், என் சீலத்தைப் பற்றி ஊமையாக இருந்து விட்டார்கள் போலும். தேவையில்லாத அச்சமும் கவலையும் பாட்டனாரைப் பற்றின.

மீண்டும் சென்னைப் பயணம்

சென்னைக் கிறுத்துவக் கல்லூரியில் சேர்த்துவிட, என்னை அழைத்துக்கொண்டு, என் தந்தையும் மாமாவும் சென்னைக்குக் கிளம்பினார்கள்.

விடியற்காலை மூன்று மணிக்கே குளித்துவிட்டு, மூவரும் இரட்டை மாட்டு வண்டியில் புறப்பட்டோம்.

செய்யாறு, பாலாறு, குண்டுமடுவு, தம்மனூர் மடுவு ஆகியவற்றைக் கடந்து வாலாஜாபாத் புகைவண்டி நிலையத்தை அடைந்தபோது, பொலபொலவென்று பொழுது விடிந்துவிட்டது.

எட்டுக் கிலோ மீட்டர் கடந்துவர மூன்று மணியானதைப் பற்றிக் கூடக் குறை தோன்றவில்லை. வழியில் வண்டி குடை சாயாமல் வந்து சேர்ந்த மகிழ்ச்சியோடு சென்னைக்கு இரயில் ஏறினோம்.

பாட்டியோடு, தசாவதாரம் பார்க்கச் சென்னைக்குச் சென்றபோது, என்னை அச்சம் ஆட்கொண்டிருந்தது. இரயிலில் நெரிசலும் அதிகம். ஆகவே அதிகம் வேடிக்கை பார்க்கவில்லை.

தந்தையோடு சென்றது, புரை தீர்ந்த பயணமாகத் தோன்றிற்று. வழிநெடுகிலும் வேடிக்கை பார்ப்பதில் மூழ்கியிருந்தேன்.

செங்கற்பட்டு சந்திப்பிற்கு முன்பு, ஆத்தூர் மடுவைக்கண்டு மலைத்துப் போனேன். அவ்வளவு ஆழமான மடுவை அதுவரை நான் கண்டதில்லை.

அத்திசைப்பு மாறுவதற்குள் சந்திப்பு வந்துவிட்டது. 'குளவாய்' ஏரி கண்ணுக்கெட்டும் மட்டும் பரந்து கிடந்தது.

அவ்வளவு பெரிய ஏரியையும் நான் முன்னர்க் கண்டதில்லை.

அதைக் கண்டபோது அச்சம் கௌவிற்று. ஏரி என்ன, மேலே வந்தா விழுங்கிவிடப் போகிறது! இது, முதல் முறை கண்டபோது புரிய வில்லை.

செங்கற்பட்டு சந்திப்பில் காத்திருக்கையில் பழைய நினைவு மின்னிற்று. நான் சிறு பையனாக இருந்தபோது, என் குலதெய்வமான முருகப் பெருமானுக்கு முடி காணிக்கை கொடுக்கத் திருத்தணிக்கு அப்பாவோடும் பாட்டியோடும் போய் வந்தேன்.

அரக்கோணம் சந்திப்பில் வேலூர் துரைசாமி முதலியாரைக் கண்டோம். அவர் என் கையில் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்து வாழ்த்தினார்.

கூடுவாஞ்சேரியில், நீர்மோர் விற்பனை பலமாக இருந்ததைக் கண்டேன்.

இடிபடாமல், எதையும் இழக்காமல் பாதுகாப்பாக, சென்னை எழும்பூர் சென்றடைந்தோம்.

அருகில் ஓடிய 'டிராம்' வண்டியில் ஏறினோம். மேலே துண்டு மட்டும் போட்டுக் கொண்டிருந்த என் தந்தையைப் பார்த்து, 'உடம்பை மூடிக் கொள்ளுங்கள்' என்று நடத்துநர் கூறினார்.

அதில் அதிகாரம் தொனிக்கவில்லை.

அக்காலத்தில், பேருந்திலோ, டிராமிலோ பயணஞ் செய்வோர், உடம்பை மூடிக் கொள்ள வேண்டுமென்பது மரபு. அதன்படி நடந்தார், என் தந்தை.

ஆசிரியமணி பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர்

பூக்கடையண்டை இறங்கி, தங்கசாலைக்கு அருகில் குடியிருந்த பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் வீட்டிற்குச் சென்றோம்.

இவர், அப்போது டி.டி.வி. உயர்நிலைப்பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக வேலை பார்த்து வந்தார். தமிழ்ப் புலமையோடு, பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் பெற்றிருந்தார்.

நீதிக்கட்சியின் தொடக்க காலந்தொட்டு, அதை வளர்க்கத் தொண்டு ஆற்றிய உத்தமர்.

அக்கட்சியின் கொள்கையைப் பரப்பும் பொருட்டு, கைம்மாறு கருதாது, பொதுக்கூட்டங்களில் பேசி வந்தார்.

'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில நாள் இதழின் ஆசிரியராக விளங்கிய ஆ. இராமசுவாமி முதலியாரோடு அடிக்கடி பயணஞ் செய்து அவருடைய ஆங்கிலப் பேச்சுகளைத் தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்தவர்.

1938 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரில், தம் அருமை வாழ்க்கைத் துணைவியாராகிய உண்ணாமுலை அம்மையார் பங்குகொண்டு, சிறைக்குச் செல்வதற்கு உடன்பட்ட தியாகி.

ஒல்லும் வகையெல்லாம் பார்ப்பனரல்லாதாருக்கு உதவி செய்வதையே வாழ்க்கை முறையாகக் கொண்டவர்.

தமிழ்க்கடல் கா. நமச்சிவாய முதலியாருக்கு மிகவும் வேண்டியவர். அவரைப் போன்றே ஆங்கில நூல்களையும் தொடர்ந்து படித்து வந்தார்.

அக்காலத் தமிழ்ப் பண்டிதர் உலகில் முற்போக்கு, சீர்திருத்தக் கருத்துகளுக்காகக் குரல் கொடுத்த சிலரில் ஒருவராகிய எஸ்.எஸ். அருணகிரி நாதர், விருந்தோம்பலில் சிறந்தவர்.

நாணயத்திற்கும் நேர்மைக்கும் பெயர் பெற்றவர்; சுறுசுறுப்பே உருவானவர். சிறுவர்க்கான எண்ணற்ற நூல்களை, புதினங்களை எழுதி, தமிழ்த் தொண்டாற்றியவர்.

பிற்காலத்தில், அறிஞர் அண்ணாவின் உற்ற நண்பராக விளங்கியவர். அறிஞர் அண்ணாவும் திரு டி. செங்கல்வராயனும் பெத்துநாயக்கன் பேட்டைத் தொகுதியில் மாநகராட்சிக்குப் போட்டியிட்டகாலை, அண்ணாவின் குரலாக, பற்பல மேடைகளில் முழங்கினார்.

அறிஞர் அண்ணாவின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானார்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே', என்று வாழ்ந்த ஆசிரியமணி, பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் பல்லாண்டு காலம் பார்ப்பனரல்லா தவர்களுக்குச் சிறப்பாக உதவி வந்தவர்.

ஆயினும் பார்ப்பனரிடம் பகைமை பாராட்டாதவர். எவருக்கும் உதவி செய்வதையன்றி, ஊறுவிளைவிப்பதை அறியாத அறவோர்.

தமது பொதுத் தொண்டிற்கு ஈடாக,தமக்கோ தம் இரு பிள்ளைகளுக்கோ, குடும்பத்திற்கோ, எவ்வுதவியும் பெற்றவர் அல்லர்.

அத்தகைய, பிறர்க்கென முயலுநர் செறிந்திருந்தால், உட்சாதி உணர்வற்ற பார்ப்பனரல்லாதார் முன்னணியில் இருந்ததால், நாட்டுப்புற மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பின்தங்கிய மக்களும் முன்னர் முனைந்து தழைத்து ஓங்க முடிந்தது.

பலருக்கும் நிழல் தந்த, திரு அருணகிரிநாதர், எங்கள் மூவருக்கும் சிற்றுண்டி அளித்தார்.

பிறகு, சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எதிரில் நடந்துவந்த கிறுத்துவக் கல்லூரியை நோக்கி எங்களை அழைத்துக் கொண்டு போனார்.

கிறுத்துவக் கல்லூரியா? மாநிலக் கல்லூரியா?

முதலில் 'கெய்த்னஸ் ஹாலு'க்குச் சென்றோம். அவ்விடுதியில் அல்லவா எனக்கு இடம் ஒதுக்கியிருந்தார்கள்?

'கெய்த்னஸ் ஹால்' கல்லூரிக்கு அருகில் இருந்தது. இது வசதியாகத் தோன்றிற்று. அது மூன்று மாடிக் கட்டடம். எவ்வளவு உயர்ந்த கட்டடத்தில் வாழப்போகிறோம்? மகிழ்ச்சியுணர்வோடு உள்ளே நுழைந்தோம். மகிழ்ச்சி மங்கிவிட்டது. ஏன்?

பட்டப்பகல் வெட்ட வெளிச்சத்தில் தரை மட்டத்தில் இருட்டு. மின் விளக்கொளியும் போதவில்லை.

புதிதாகச் சேர்வோர்க்குத் தரைமட்ட அறைகளோ, முதல் மாடி அறைகளோ கிடைக்கும் என்று கேள்விப்பட்டோம்.

முதல் மாடிக்குச் சென்று பார்த்தோம். ஏதோ குகைக்குள் சிக்கிக் கொண்ட உணர்ச்சி எங்கள் நால்வரையும் தாக்கிற்று.

ஜூன் திங்களிலேயே பகலில் இவ்வளவு இருட்டாக இருக்கிறதே! மழைக்காலத்தில் எப்படியிருக்குமோ!

காஞ்சியில் நான்கு குடித்தனத்தில் ஒன்றாகக் குடியிருந்தாலும் வெளிச்சத்திற்கும் காற்றுக்கும் பஞ்சமில்லை. இந்தக் 'கிடங்கில்' எப்படி வாழ்வது?

அதுவரை இருட்டின்றி வாழ்ந்துவிட்ட எனக்குச் சோகம் பொங்கிற்று.

பெரியவர்கள் மூவரும் என் நிலையைப் புரிந்துகொண்டார்கள். நான் 'கெய்த்னஸ் ஹாலி'ல் தாக்குப் பிடிக்க மாட்டேன் என்பதை உணர்ந்தார்கள். கலந்து ஆலோசித்தார்கள்.

விக்டோரியா விடுதியில் இருந்து பதில் இல்லை. மாநிலக் கல்லூரியில் சேருவதற்கு இடங்கிடைக்குமா என்றும் தெரியவில்லை.

''கிறுத்துவக் கல்லூரிக்குப் போவதை ஒத்திவைப்போம். திருவல்லிக்கேணிக்குப் போய் மாநிலக் கல்லூரியில் இடம் கிடைக்குமா என்று விசாரிப்போம்.

''இடம் கிடைக்கலாமென்று தெரிந்தால் பக்கத்திலுள்ள விக்டோரியா விடுதியைப் பார்ப்போம்.

''இரண்டும் பொருந்தினால் நன்றாகப் போய்விடும். இல்லையென்றால் மேற்கொண்டு யோசிப்போம்.

''இப்போதைக்குக் கிறுத்துவக் கல்லூரி இடத்தை விட்டுவிட வேண்டாம்'' இது முடிவு.

மாநிலக் கல்லூரி

இம்முடிவைக் கேட்டதும் பூரித்தேன். மூவரும் என்னை அழைத்துக் கொண்டு திருவல்லிக்கேணிக்குச் சென்றார்கள்.

அப்போது பேருந்தில் போனோம். அன்று அரசால் நடத்தப்பட்ட பேருந்துகள் இல்லை. தனியார் நடத்திய பேருந்துகளே இருந்தன.

பாரிமுனையில் இருந்து திருவல்லிக்கேணி முனைவரை செல்வதற்குள் பலமுறை நிறுத்தி நிறுத்திப் பயணிகளைத் தேடுவதில் நிறையத் தாமதஞ் செய்தனர்.

சலிப்போடு விக்டோரியா விடுதிக்கு அடுத்த பாலத்தண்டை இறங்கினோம்.

நடந்து சென்று மாநிலக் கல்லூரிக்குள் நுழைந்தோம்.

கல்லூரி வளைவு பூராவும் சிறு சிறு கூட்டங்கள். இளைஞர்களாகவே சிலர்; பெரியவர்களோடு வந்த இளைஞர்கள் பலர் இங்கும் அங்கும்; கட்டடத்திற்குள் நுழைந்தோம். அடுத்தடுத்துக் காத்திருப்போர் குழுக்கள்.

எவரும் உரத்துப் பேசவில்லை. எவரும் மிரட்டவில்லை.

'ஏன் இங்கே கூட்டம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? கலைந்து போங்கள்' என்று வீணாகக் கெடுபிடி பண்ணவும் யாருமில்லை.

கல்லூரி அலுவலகத்தில் உள்ளோர் பூசாரிகள்போல் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அண்டிக் கேட்கவே பலருக்கு நா எழவில்லை. மிடுக்கான மேனாட்டு உடையில் இருந்த இரண்டொருவர் தலைமை எழுத்தரை - அன்று அதுவே அலுவலகத்தில் பெரிய பதவி - நெருங்கி இடம் கிடைப்பதைப் பற்றிக் கேட்டார்கள்.

'முதல்வர் முடிவு செய்ததும் தாமதம் இல்லாமல் கடிதம் அனுப்புவோம். இடம் கிடைத்தவர்களுக்கு மட்டுமே கடிதம் வரும். கடிதம் வராவிட்டால் இடம் இல்லை என்று பொருள்' என்று குளுமையாகப் பதில் கிடைத்தது.

மாநிலக் கல்லூரியின் மாடியிலிருந்து சாளரத்தின் வழியே பார்த்தேன். வங்காள விரிகுடா பரந்து கிடந்தது. அலை எழுந்து

முழங்கிற்று. காற்றில் குளுமை இருந்தது. கவர்ச்சியான காட்சியைக் கண்டேன். இவ்வளவு பெரிய கடலுக்குப் பக்கத்தில் இருக்கலாமா? இப்படியொரு அச்சம்.

இரண்டு மணி நேரத்திற்கு மேல், கல்லூரிக்குள் நடையாக நடந்தோம். யாரும் கல்லூரி முதல்வரைப் பேட்டி காணவில்லை. அவரைக் காண முடியுமா முடியாதா என்று எவருக்கும் உறுதியாகத் தெரியவில்லை.

மற்றவர்கள் மதிப்பு எண்களைக் கேட்டறிவதில் மட்டும் குறைவில்லை. ஏதோ, தாங்களே சேர்க்கைக்குப் பொறுப்புபோல் ஒவ்வொருவரும் மற்றவர்கள் மதிப்பெண்களைக் கண்டு பிடித்துக் கொண்டார்கள்.

சிலவேளை, 'இந்த மதிப்பெண்ணுக்கு எப்படிங்க இடம் கிடைக்கும். இப்ப நாலு சாதிக்கும் பிரித்துக் கொடுக்கப் போகிறார்களாம்.

'இவ்வளவு குறைந்த எண்களுக்கு யாரையாவது பிடித்து நெருக்கினால் ஒருகால் பலிக்கலாம்' என்று வெளியார் மதிப்பிட்டுக் கொண்டிருந்ததும் என் காதில் வீழ்ந்தது.

என் மதிப்பெண்களைப் பார்த்து, யாரும் அப்படிச் சொல்லவில்லை. கிடைக்குமென்று எனக்கு நம்பிக்கை யூட்டியவர்களும் இல்லை.

இரண்டுங் கெட்டானாக இரண்டு மணிகள் காத்திருந்தோம்.

அதற்கு மேல் பயனில்லை என்று முடிவுசெய்து கொண்டோம்.

நம்பிக்கையும் பாராட்டும்

வெளியேற முயன்றபோது, தலைப்பாகையோடு கூடிய ஒருவர், புன்னகையோடு ஓர் அறையில் இருந்து வேகமாக வெளியே வந்தார்.

திரு. அருணகிரிநாதரும் அவரைப் போன்ற வெள்ளைத் தலைப்பாகை அணிந்திருந்தார். ஒரே தலைப்பாகைக் கவர்ச்சியோ என்னவோ?

பண்டிதர் அவரிடம் விரைந்தார். என்னுடைய மதிப்பெண்களைக் காட்டினார். இடம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டா என்று கேட்டார்.

புதியவர், அக்கல்லூரி ஆசிரியர் என்று தம்மை முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''இவருக்கு இடம் கிடைப்பது உறுதி; முதல் பட்டியலில் தவறிவிட்டாலும் இரண்டாம் பட்டியலில் நிச்சயம் கிடைத்து விடும். அமைதியாக வீட்டுக்குப் போங்கள்.

''பத்து நாளைக்குள் நல்ல முடிவு தெரியவில்லையென்றால் என்னை வந்து பாருங்கள். என் பெயர் கேதாரி ராவ்'' என்று சொன்னார்.

அவர் சொல்லில் உறுதி ஒலித்தது; உண்மையில் இனிமை மின்னிற்று.

திரு. அருணகிரிநாதர் அவரிடம் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் அறிமுகப்படுத்தினார்.

என்னைத் தட்டிக் கொடுத்த கேதாரி ராவ் 'பால் வடியும் முகம்' என்று பரிவுடன் பாராட்டினார்.

அருணகிரிநாதர் பக்கம் திரும்பி,

'கள்ளம் கபடம் அறியாத மக்கள்' என்று என் அப்பாவையும் மாமாவையும் மதிப்பிட்டார்.

நன்னம்பிக்கையோடும் பாராட்டோடும் மாநிலக் கல்லூரியை விட்டு வந்தோம். இன்னும் இடம் கிடைக்கவில்லையே என்ற கவலையை மறந்து பேருந்து நிலையத்திற்கு நடந்தோம்.

20. கல்லூரி வாழ்க்கைக்கு ஏற்பாடுகள்

திருவல்லிக்கேணி, பைகிராப்ட்ஸ் சாலையும் வேங்கடரங்கம் பிள்ளைத் தெருவும் கூடும் இடம் பேருந்து நிலையமாக இருந்தது.

நாங்கள் அதை நெருங்கியபோது, அங்கே பேருந்து இல்லை. உயர்ந்து வளர்ந்திருந்த ஆலமரங்களின் நிழலில் காத்திருந்தோம்.

எப்போதோ, எவரோ வைத்தது எங்களுக்குப் பயன்பட்டது. எத்தனை எத்தனை ஆண்டுகளாகவோ எண்ணற்றவர்களுக்கு நிழல் கொடுக்கிறது; மனிதனும் அப்படியிருந்தால்?

மனக்குரங்கு தாவிற்று. சிந்தனை பின்னோக்கிப் பறந்தது.

தொடக்கப் பள்ளியும் இல்லாத பட்டிக்காடு; சாலையில்லாப் பட்டிக்காடு; எழுத்தறியாத, ஆனால் பண்பு நிறைந்த தாய்; அவருடைய மடியில் வளர்தல்.

திண்ணைப் பள்ளிக்குமேல் செல்லாவிட்டாலும் தானே முயன்று, உலகியல் அறிவு பெற்ற சான்றாண்மையும் வினைத் திட்பமும் உடைய தந்தை; அவருடைய நீண்ட தொலைநோக்கு.

படாடோபமான எழுத்தறிவித்தல்; எனக்கு எட்டிய உயர்நிலைப்பள்ளிப் படிப்பு; பைபிளைக் கற்றுப் பண்பட்ட நிலை; சாதி அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெறியப் பெற்ற வாய்ப்புகள்.

என் கல்வி முன்னேற்றத்திற்குத் துணைநின்ற ஆசிரியர்கள்; பெற்ற பரிசுகள்; பள்ளி இறுதித் தேர்வில் நான் பள்ளியின் இரண்டாம் இடத்தைப் பெற்றது; இத்தனையும் நிழற்படம்போல் சிந்தையில் ஓடின.

கல்லூரி மாணவனாகப் போகிறேன் என்ற மகிழ்ச்சி ஒருபால்; பள்ளிப் பருவத்தைப்போல் கல்லூரிப் பருவமும் வாழ்க்கைப் பருவமும் அமைய வேண்டுமென்னும் அவா ஓர்பால் போட்டி யிட்டன, அவ்வேளை.

''இவ்வளவு தூரம் வந்ததுதான் வந்தோம். இதோ நம் எதிரில் இருக்கும் விக்டோரியா மாணவர் விடுதிக்குச் செல்வோம். வடிவேலுக்கு விடுதியில் இடம் கிடைக்குமா என்பதையும் கண்டு கொள்வோம்'' என்று என் தந்தை கூறினார்.

பண்டிதர் அருணிகிரிநாதர் எங்களை அழைத்துக்கொண்டு விடுதிக்குள் நுழைந்தார். அலுவலக அறையைத் தேடிப்போனோம்.

தலைமை எழுத்தர் திருவேங்கடாச்சாரி, வைதீகக் கோலத்தில் காட்சியளித்தார். எதற்காக வந்தோம் என்பதை அவரிடம் சொன்னோம்.

''எல்லாம் 'துரை' விருப்பம். அவர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ? எனக்கு எப்படித் தெரியும்?

''கல்லூரியில் இடம் கிடைத்ததும் துரையைப் பாருங்கள். இடம் கிடைத்தால் எனக்கும் மகிழ்ச்சி'' என்று தேன் சொட்டப் பேசினார்.

விடுதிக் காப்பாளரை விடுமுறை நாள்களில் காலையில் பத்து மணி முதல் பன்னிரண்டு மணிக்குள் பார்க்கலாம். இதைத் தெரிந்துகொண்டு வந்தோம்.

இதற்கிடையில் பண்டிதருக்கு ஒரு கருத்து உதித்தது. டாக்டர் சி. நடேசமுதலியாரிடம் பரிந்துரை பெற்றால், என் சேர்க்கை உறுதியாகும் என்று நினைத்தார். அதுவரை, பரிந்துரை வாங்கும் பழக்கம் எங்களுக்குத் தெரியாது.

பண்டிதரின் கருத்தை ஏற்றுக் கொண்டோம். திருவல்லிக்கேணி, பெரிய தெருவில் வாழ்ந்து வந்த டாக்டர் சி. நடேச முதலியாரை அன்றே அணுக முடிவு செய்தோம். ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு டாக்டர் வீட்டிற்குச் சென்றோம்.

அவருடைய மருத்துவத்தை நாடி வந்த பலர் இருந்தனர். கல்லூரிகளில் சேர்வதற்காகக் கல்லூரி முதல்வர்களுக்குப் பரிந்துரை வாங்க வந்தவர்களும் பலர் உட்கார்ந்திருந்தனர்.

அண்டி வந்தவர்கள் அனைவருக்கும் மறுக்காது பரிந்துரை வழங்கும் வள்ளலாக டாக்டர் சி. நடேசனார் விளங்கினார். அக்கால ஏழை நோயாளிகளுக்கு அவரே புகலிடம்.

மருந்துச் சீட்டோ பரிந்துரைக் கடிதமோ பெற்றுக்கொண்டு போகாதவரே இல்லை. சிலருக்கு மருந்து வாங்கப் பணமும் கொடுத்து அனுப்பினார். இப்படியும் ஒரு டாக்டர் இருந்தார்!

தியாகராயரின் நேர்மை

டாக்டர் நடேசனாருடைய நீதிக்கட்சியோடு, பண்டித அருணகிரி நாதரும் தொடர்பு கொண்டிருந்தார்.

எனவே இருவருடைய உரையாடலும் நெருக்கமாய் இருந்தது. நேய பாவத்துடன் இருந்தது; கலகலப்பாக இருந்தது.

''தியாகராயர் எப்போதும் அணிந்திருந்த வெள்ளுடை போன்றே அவருடைய உள்ளமும் வெண்மையாயிருந்தது. பொதுத்தொண்டும் தலைமைப் பதவியும் செய்தற்கரிய செய்வதற்கு வாய்ப்பு. நீதிக்கட்சி அமைச்சரவை அமைக்க நேர்ந்தபோது, சர் தியாகராயர் 'முதல்' அமைச்சர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். தம்முடைய தோழர்களைக் கொண்டு அமைச்சரவை நிறுவச் செய்தார். தியாகராயச் செட்டியாரின் தியாகம் பெரிது; பிறருக்குச் சிறந்த எடுத்துக் காட்டானது.

''உள்ள உறுதிக்கு மட்டும் குறைவா? 1921இல் வேல்ஸ் இளவரசர், சென்னைக்கு வந்தபோது, செட்டியார் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்தார். மாநகராட்சியின் சார்பில் இளவரசரை வரவேற்க வேண்டியது அவருடைய பொறுப்பு. அச்சடங்கின்போது, கறுப்பு உடை அணிந்திருக்க வேண்டுமென்பது மரபு. அம்மரபைத் தியாகராயச் செட்டியாருக்கு அரசின் சார்பில் நினைவு படுத்தினார்கள். ''என்றும் போல் அன்றும் தூய வெள்ளுடையில் மட்டுமே வர முடியும். அதை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் வேறொருவரைக் கொண்டு வரவேற்க ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அரசு இறங்கி வந்தது; தியாகராயர் வெள்ளுடையில் வர இசைந்தது.

''திரு.வி.க.வும் தியாகராயச் செட்டியாரும் அரசியலில் இரு கோடிகளில் இருந்தார்கள். காங்கிரசு இயக்கத்தைப் பரப்புவதில் திரு.வி.க. முன்னணியில் நின்றார். பார்ப்பனரல்லாதாருக்கு உரிய பங்கைக் கொடுங்கள் என்று போராடிய நீதிக்கட்சி திரு.வி.க. வுக்கு கசந்தது. தொடக்கத்தில் நீதிக்கட்சியைத் தாக்கும் பீரங்கிகளில் முக்கியமானவராத் திரு.வி.க. விளங்கினார்.

''அவர் சென்னையில் தொழிலாளர் இயக்கத்தை உருவாக்கிப் போராட்ட உணர்வினை ஊட்டி வந்தார். சென்னையில் வெள்ளை யருக்குச் சொந்தமான ஆலையில் வேலை நிறுத்தம்; கதவடைப்பு. இரண்டொரு நாள்களாகவா வேலைநிறுத்தம்? ஆறு மாதங்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடந்தது. அரசு வெகுண்டது. கடுமையான அடக்குமுறையைக் கையாள முடிவு செய்தது.

''ஆளுநர் வெல்லிங்டன் தொழிலாளர் தலைவராகிய திரு.வி.க. வை நாடு கடத்த முடிவு செய்தார். அவ்வாணையில் கையெழுத்தும்

இட்டார். ராயப்பேட்டை முனிவரை நாடு கடத்துகையில் கலவரம் ஏதும் நடந்தால், அதை நேரடியாகச் சமாளிப்பதற்காக உதகமண்டலத்தில் இருந்த வெல்லிங்டன் பிரபு சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னை முழுவதும் திரு.வி.க.வை நாடு கடத்தப் போகிறார்களென்பதே பேச்சு.

''அரசியலில் திரு.வி.க.வுக்கு நேர் எதிர் அணியில் இருந்த சர் தியாகராயச் செட்டியாருக்கு இச்செய்தி எட்டிற்று. வீரமும் அன்பும் பெருந்தன்மையும் திரண்டு உருவானவர் அல்லவா தியாகராயர்? வாளா இருப்பாரா? 'நம் கட்சி வளரவிடாமல் தடுக்கும் இச்சொல்லேருழவர் தொலையட்டும்; அது நம் கட்சிக்கு ஆதாயமாகட்டும்' என்று எண்ணி மகிழும் மனம் படைத்த சிறியோரா அவர்?

''நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர், 'திரு.வி.க.வை நாடு' கடத்தக்கூடாது. நாடு கடத்தினால், நீதிக்கட்சி அமைச்சர்கள் பதவிகளை உதறிவிட்டு வெளியேறி விடுவார்கள்' என்று ஆளுநர் வெல்லிங்டனிடம் அழுத்தந்திருத்தமாக எச்சரித்தார். தியாகராயச் செட்டியார் குணம் ஆளுநர் அறிந்தது தானே!

''காங்கிரசு இயக்க முதலியாரை நர்டு கடத்துவது நீதிக்கட்சித் தலைவரின் தலையீட்டால் கைவிடப்பட்டது.

''தியாகராயர் மறைவு நமக்குப் பெரும் இழப்பு.''

மேலே கண்டது, டாக்டர் சி. நடேசனாருக்கும் பண்டித அருணகிரி நாதருக்கும் இடையே அன்று நடந்த உரையாடலின் சுருக்கமாகும்.

டாக்டர் சி. நடேசனார்

டாக்டர் சி. நடேசனார்தான் சென்னையில் திருவல்லிக்கேணியில் முதன்முதல் திராவிடர் சங்கம் நிறுவியவர். அதன் வாயிலாக பார்ப்பனர் அல்லாத மாணவர்களை ஊக்கப்படுத்திக் கல்வியின்பால் நாட்டத்தை ஒருமுகப்படுத்தியவர். ஒருவகையில் இவரை நீதிக்கட்சியின் முன்னோடி எனலாம். டாக்டர் நாயரும் பிட்டி தியாகராயச் செட்டியாரும் இணைந்து நீதிக்கட்சியைத் தொடங்கியபோது இக்கருத்தில் மூத்தவர் யார் என்று தம்மையும் பிறரையும் குழப்பிக் கொண்டிராமல், அக்கட்சியில் இணைந்து வாழ்நாள் முழுவதும் ஆர்வத்தோடு பாடுபட்டார். அத்தகைய பொதுநலப் பெருந் தொண்டரை - பெருமகனாரைக் கண்ட பேற்றினை எண்ணும்போதெல்லாம் உவகை பொங்குகிறது.

டாக்டர் சி. நடேசனாரின் ஒரே மகன் கல்லூரி மாணவப் பருவத்தில் திடீரென இயற்கை எய்தினார். பின்னாலே எனக்கு வரப்போகிற துன்பம், அவருக்கு வந்தபோது அதிர்ச்சி அடைந்து கண்ணீர் வடித்த எண்ணற்றோரில் நானும் ஒருவன்.

என் மனப்போராட்டம்

உரையாடலுக்குப் பின், எனக்காக ஓர் பரிந்துரைக் கடிதத்தை டாக்டர் நடேசனார் எழுதினார். நாட்டுப்புற இளைஞர்களை அதிகம் ஊக்குவிக்க வேண்டும். அதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. எனவே, தவறாமல், எனக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று அழுத்தமாகப் பரிந்துரைத்தார்.

சென்னை மாநிலக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் பைசன் என்பவருக்கு எழுதிய அக்கடிதத்தை ஒட்டி, கல்லூரி அலுவலகத்தில் சேர்த்தோம். பிறகு அருணகிரிநாதர் வீட்டிற்கு வந்தோம்.

'பரிந்துரை கொண்டுவந்ததைப் பற்றி முதல்வர் வெகுளுவாரோ? அதனால் தானாகக் கிடைக்கக்கூடிய இடம்கூடக் கை தவறிவிடுமோ? தவறிப்போனால் இருக்கவே இருக்கிறது கிறுத்துவக் கல்லூரி இடம்', இப்படி எண்ணி எண்ணி, இரவில் நெடுநேரம் விழித்திருந்தேன். இத்தகைய அனுபவம் புதிது. ஒன்றும் புரியாத நிலை. எப்படியோ இரவு கழிந்தது.

விக்டோரியா விடுதிக் காப்பாளரின் கருணை

அடுத்த நாள் காலை, பத்து மணிக்கு முன்பே, விக்டோரியா விடுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சின்மேல் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தோம்.

காப்பாளர் அறைக்கு வந்தார்; மணியடித்தார். வெளியே நின்று கொண்டிருந்த ஆள் விரைந்து உள்ளே சென்றார்; அடுத்த நொடி வெளியே வந்தார். எங்களைப் பார்த்து, உள்ளே செல்லும்படி சாடை காட்டினார். நால்வரும் அறைக்குள் சென்றோம்.

அறையின் நடுவில் சாதாரண நாற்காலியில், பெரிய மேசைக்குப் பின்னால், வழுக்கைத் தலையர் தென்பட்டார். ஆறடிக்கு மேற்பட்ட உயரம்; ஒளிவிடும் கண்கள்; அமைதியான முகம். இவற்றையுடைய ஒரு பெரியவரைக் கண்டோம். வந்த காரணத்தைச் சொன்னோம்.

''மாநிலக் கல்லூரியில் சேர்ந்தாயிற்றா? பணம் கட்டியிருந்தால் இரசீது எங்கே?'' என்று கேட்டார்.

இடத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கும் நிலையைச் சொன்னார், பண்டிதர் அருணகிரிநாதர்.

பேச்சுக்கிடையில், என் மதிப்பெண்களைக் குறித்திருந்த சீட்டொன்றை அப்பெரியவரிடம் நீட்டினார். இவ்வளவு வாங்கிவனுக்கு இடம் கிடைக்குமாவென்று அவரை மெல்ல கேட்டார்.

''இதற்குக் கிடைக்காவிட்டால் எதற்குக் கிடைக்கும்? கல்லூரியில் இடம் கிடைப்பது உறுதி. அதில் சேர்ந்ததும், விடுதிக் காப்புப்

பணத்தோடு வாருங்கள். விடுதியில் சேர்த்துக் கொள்ளுகிறேன். இவன் வருவான் என்று எதிர்பார்த்து, ஓர் இடம் ஒதுக்கி வைத்திருக்கிறேன்'' என்று கூறியபடியே, என்னைப் பற்றிய தகவல்களை ஒரு குறிப்புச் சுவடியில் எழுதிக்கொண்டார்; எங்களுக்குத் தெம்பு வந்தது.

''ஐயா! பையனைப் பாருங்கள் எவ்வளவு சிறிய தோற்றம். இவன் எங்காவது ஓட்டலில் தனியே தங்கிப் படிக்க முடியுமா? சென்னைப் பட்டினத்திற்கே புதிது. விடுதிக் காப்புப் பணம் இப்போது கையில் இருக்கிறது. இதைக் கட்டிவிட்டுப் போகிறோம். இடம் கிடைக்காவிட்டால், திரும்பப் பெற்றுக் கொள்கிறோம்.

''கிராமத்திற்குத் திரும்பக் கொண்டு போனால் எப்படிச் செலவாகிவிடும் என்று சொல்ல முடியாது. பணம் கரைந்து போனால் படிப்பு பாழாகி விடும். இங்கே இருந்தால், இரும்புப் பெட்டியில் இருப்பதுபோல'' என்று அருணகிரிநாதர் கூறினார்.

காப்பாளரும் ஆங்கிலப் பேராசிரியருமான திரு. எஸ். ஈ. அரங்க நாதம் என்னைப் பார்த்தார், சிரித்துக்கொண்டே,

''இவன் குழந்தை மாதிரி இருக்கிறான். வெளியில் எங்கும் விட்டு வைப்பது நல்லதல்ல. இவ்விடுதி, கல்லூரிக்கு அருகில் இருப்பதால், பாதுகாப்பாக இருப்பான். க்காப்புப் பணத்தைக் கட்டிவிட்டுப் போங்கள்'' என்று ஆணையிட்டார். அப்படியே செய்தோம், அடுத்து?

சூட்டும் கோட்டும் தைத்தோம்

துணிக்கடைக்குச் சென்றோம். கல்லூரிக்கு என்ன உடையில் செல்வது? உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றதுபோல், இடுப்பில் வெள்ளை வேட்டியும் உடம்பில் சாதாரண வெள்ளைச் சொக்காயும் அணிந்து போவதா?

மேனாட்டு உடையாகிய சூட்டும் கோட்டும் போட்டுக் கொண்டு போவதா? மூடு கோட்டா? திறந்த கோட்டா? திறந்த கோட்டாயின் 'டை' கட்டிக்கொள்ள வேண்டுமே?

அதைக் கற்றுக்கொள்வது எப்படி? யாரிடம்? கால்களில் 'பூட்ஸ்' அணிந்ததே இல்லையே! நாள் முழுவதும் கால்களைக் கட்டிப்போட்டுக் கொண்டால் வலிக்காதா? பூட்ஸ் காலோடு நடக்கப் பழக வேண்டாமா?

கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்தோம்; என்ன முடிவு?

மாநிலக் கல்லூரியில் சுதேசி உணர்வு நிரம்பிய சில மாணவர்கள் மட்டுமே கதர் உடையில் - இந்திய உடையில் வருவார்கள். பெரும்பாலோர் மேனாட்டு உடையில் வருவார்கள். இரண்டில் ஒன்றை அணிவது நல்லது.

பெரும்பாலோருடைய உடையாகிய சூட்டும் கோட்டும் அணிந்தே நான் கல்லூரிக்குச் செல்லவேண்டும். பண்டிதர் எனக்கு 'டை' கட்டக் கற்றுக் கொடுப்பார். பூட்ஸ் அணிவதும் நான்கு நாள்களுக்குப் பிறகு பழகிவிடும். காலுறை அணிந்துகொண்டால் 'பூட்ஸ்' காலைக் கடிக்காது. இப்படி முடிவு செய்துகொண்டு துணிக்கடைக்குச் சென்றோம்.

உயர்நிலைப் பள்ளி மாணவனாயிருந்தபோது எனக்கு வண்ண உடை பிடிக்காது. மேலும் கீழும் வெள்ளாடையே உடுத்துவேன். கல்லூரிப் பருவத்திலும் அப்படியே உடுத்த விரும்பினேன்.

அதைக் கேட்ட கடைக்காரர், அருமையான வெள்ளைத்துணி இருக்கிறது என்று சொல்லியபடியே, 'சாடின்' என்னும் பளபளப்பான வெள்ளைத் துணிக் கட்டை விரித்துப் போட்டார். அது வழவழப் பாகவும் இருந்தது. எனக்குத் துணி நோட்டம் தெரியாது. பெரியவர்கள் விருப்பத்திற்குத் துணி வாங்குவதை விட்டு விட்டேன்.

நான்கு சூட்டுகளுக்கு வேண்டிய அளவு துணியை வாங்கினார்கள். 'ஷர்ட்'டிற்காக, பளபளக்கும் வெள்ளை 'டிவில்'லைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆறு ஷர்ட்டுகளுக்குத் துணி வாங்கினார்கள். இரண்டு துணிகளும் பிரிட்டனிலிருந்து இறக்குமதியானவை.

நல்ல தையல்காரரைத் துணிக்கடைக்காரரே அறிமுகப்படுத்தினார். சூட்டுசெட்டு ஒன்றுக்கு ஆறு ரூபாய் கூலி; ஷர்ட்டுக்குப் பத்தணா கூலி; இதில் பேரம் ஏதும் இல்லை. குறித்த நாளில் உடைகளெல்லாம் தயாராக இருக்கும் என்னும் உத்தரவாதத்தைத் துணிக்கடைக்காரரே கொடுத்தார்.

சூட்டையும் ஷர்ட்டையும் தைக்கச் சொல்லி, துணியைக் கொடுத்துவிட்டு வெளியேற முயன்றோம்.

''இளைஞர் அருமையான சூட்டுபோட்டுக்கொண்டு, 'இந்தியன்' கிராப்போடு' போவது நன்றாயிராது. நான் சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதீர்கள். தலை இப்படி இருப்பதைப் பார்த்து மாணவர்கள் சிரிப்பார்கள்.

''மேனாட்டுக் குல்லாய் (Hat) போட்டால், வகுப்பில், அதை எடுத்து விட்டே உட்கார வேண்டும். அப்போதும் சிரிப்பார்கள். முழு கிராப்பாகும் வரை 'தொப்பி' போட்டுக் கொள்ளுதல் நல்லது. வகுப்பில் அதைக் கழற்றத் தேவையில்லை'' என்று துணிக்கடை முதலாளி கூறினார்.

அதுவே சரி என்று பெரியவர்கள் முடிவு செய்தார்கள். எனக்கு மறுப்பு சொல்லத் தோன்றவில்லை.

நான் தொப்பி போட்டுக் கொண்டு கல்லூரிக்குப் போவதென்று முடிவு செய்தாலும் உடனடியாகத் தொப்பி வாங்கவில்லை.

கல்லூரியில் இடம் கிடைத்த பிறகு, வாங்கிக் கொள்ளலாமென்று நெய்யாடு பாக்கத்திற்குத் திரும்பிவிட்டோம். சில நாள்கள் காத்திருந்தேன்.

21. மாநிலக் கல்லூரியில் சேர்ந்தேன்

கல்லூரியிலும் விடுதியிலும் சேர்ந்தேன்

மாநிலக் கல்லூரியில் இடம் கிடைத்தது. சேர்க்கை அட்டை வந்தது.

பழையபடி, என் தந்தையும் மாமாவும் என்னை அழைத்துக் கொண்டு சென்னைக்குச் சென்றார்கள்.

பண்டிதர் அருணகிரிநாதர் எங்களை மாநிலக் கல்லூரிக்கு இட்டுச் சென்றார்; சம்பளத்தைக் கட்டினார்.

மாநிலக் கல்லூரி என்பது அக்காலத்தில் சாதாரண மக்களுக்கு அநேகமாக எட்டாத இடம். பெரிய வீட்டுப்பிள்ளைகள் கற்குமிடம். பெரிய அதிகாரிகளையும், வழக்குரைஞர்களையும் வளர்க்கும் இடம்.

அன்றைய மாநிலக் கல்லூரி நான்கு தென்னிந்திய மொழியாளர்கள் கற்கும் கூடமாக விளங்கியது.

மேலோர் படித்த அந்த மாநிலக் கல்லூரியில் நாட்டுப்புறச் சூழலில் வளர்ந்த முதல் தலைமுறைப் படிப்பாளியாகிய நான் சேர்ந்தேன்.

விக்டோரியா விடுதிக்குச் சென்றோம். கல்லூரிச் சேர்க்கை அட்டையையும் சம்பள இரசீதையும் விடுதி அலுவலகத்தில் காட்டினோம்; விடுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

இரண்டாம் மாடியில் இரண்டு பேர்கள் தங்கும் அறையில் எனக்கு இடம் கிடைத்தது. தெலுங்குப் பார்ப்பனர் என்னுடன் இருந்தார்.

அவர் பெயர் நினைவிற்கு வரவில்லை. அவர், தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருக்கும் இயல்பினர். அவர் கணக்கு (சிறப்பு) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

நான் 'கணக்கு, பௌதிகம், வேதியியல்' ஆகிய மூன்றினை விருப்பப் பாடங்களாக எடுத்திருந்தேன். ஒரே வேளை, அவர், என் கணக்குப் பாடங்களுக்கு உதவி செய்திருக்கிறார்.

கல்லூரி இடமும் விடுதி இடமும் பெற்ற பிறகு, தைக்கக் கொடுத்திருந்த சூட்டையும் சட்டையையும் வாங்கிக் கொண்டோம். அடுத்து?

தொப்பியும் இஸ்லாமியரின் வாழ்த்தும்

தொப்பி வாங்கும் வேலை

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் பெரிய மசூதிக்கு எதிரில் தொப்பிக்கடைகள் இருந்தன.

மூன்று நான்கு கடைகளுக்குள் நுழைந்து பார்த்தோம். குஞ்சம் வைத்த தொப்பிகளே இருந்தன. அவ்வகைத் தொப்பி எங்களுக்குப் பிடிக்கவில்லை.

கடைசியாக ஒரு கடையில், குஞ்சம் இல்லாத கறுப்புத் தொப்பி இருந்தது. என் தலைக்குப் பொருத்தமாகவும் இருந்தது. அதை மடித்து வைத்துக் கொள்ளலாம். எனவே, குல்லாயொன்றை வாங்கிக் கொண்டேன்.

அந்தக் கடைக்காரர், ஓர் இஸ்லாமியர்; வயது முதிர்ந்தவர். நாங்கள் தேர்ந்தெடுத்த குல்லாவை நேரே பெட்டியில் வைத்துக் கொடுக்கவில்லை.

கடையின் ஒரு மூலைக்குச் சென்றார்; மண்டியிட்டுத் தொழுதார்; ஓதிக்கொடுத்தார்; ஓதிய வலிமையோடு என் தலையில் வைத்து வாழ்த்தினார்.

பிறகு, பெட்டியில் வைத்துக் கொடுத்தார். கொடுக்கும்போது,

'கல்லூரியில் நன்றாகத் தேற வேண்டும். பெரிய பெரிய வேலைக்கு வரவேண்டும். வாழ்க்கையில் நன்றாக இருக்க வேண்டும். அதற்கு அல்லா, அருள்புரிவார்' என்று மனமார வாழ்த்திக் கொடுத்தார்.

நானோ இந்து; அவரோ இஸ்லாமியர். அவர் தொழிலோ வாணிகம். இருப்பினும் வேறு சமயத்தவனாகிய நான் முன்னுக்கு வரவேண்டும் என்று ஆர்வத்தோடு, வழிபட்டு, வாழ்த்தியது எங்கள் உள்ளங்களைத் தொட்டது.

அன்று, நாட்டில் படித்த கூட்டத்தாரில், பலர் இந்துக்கள், முஸ்லிம்கள் என்று எதிர் அணிகளைத் திரட்டிக் கொண்டிருந்தார்கள்; சொற்போர் நிகழ்த்தி, பொதுமக்களின் மனிதத் தன்மையைச் சேறாக்கிக் கொண்டிருந்தார்கள்.

தத்தம் உயர்விற்காகவும் பதவிக்காகவும் இரு தரப்புப் பெரியவர்களும் கசப்பைப் பயிரிட முனைந்தபோதும் சாதாரண மக்கள் அந்தச் சேற்றில் சிக்கிக் கொள்ளவில்லை.

'வாழ்வோம்; வாழவிடுவோம். வளர்வோம்; வளர்ப்போம்' என்னும் நெறியைச் சாதாரண மக்கள் பின்பற்றியதற்கு இந்நிகழ்ச்சி சான்றாக இருந்தது.

நெஞ்சை நெகிழ வைத்த இந்நிகழ்ச்சி இன்றும் பசுமையாக என்னுள் இருந்து, வகுப்பு வாதக் காற்றிலிருந்து என்னைக் கவனமாகக் காத்து வருகிறது.

கல்லூரியில் முதல் நாள்

விடுதி அறையின் தரை, கடப்பைக் கல்லால் ஆனது. குளிர்காலத்தில் அத்தரையின் மேல் படுப்பது, நோய்க்கு இடம் ஆகும் என்று பெரியவர்கள் நினைத்தார்கள்.

எனவே, மடிப்புக் கட்டில் ஒன்று வாங்கிக் கொடுத்தார்கள். மெத்தை இல்லை. சமுக்காளம் வாங்கிக்கொண்டேன். தலையணையோடு, துப்பட்டியொன்றும் வாங்கிக்கொண்டேன்.

சோப்பு, சீப்பு, கண்ணாடி, பல்பசை, பல்குச்சி ஆகிய சில்லறைப் பொருள்களை வாங்கினேன்.

இத்தனையும் வைக்க, தகரப்பெட்டியும் பூட்டும் வாங்கப்பட்டன.

உரிய நாளில் விடுதிக்குக் குடியேறினேன். அப்போது, அப்பாவும் மாமாவும் விருந்தாளிகளாக வந்திருந்தார்கள்.

அடுத்த நாள் கல்லூரி தொடங்கிற்று. முன்பின் பழக்கமில்லாத மேல்நாட்டு உடையில் முதன்முதல் கல்லூரிக்குச் சென்றேன்.

உடையும் புதிது. காலணியும் புதுவகை. விடுதியிலிருந்து கல்லூரிக்குப் போகும்போது, என்நடை என் வசம் இல்லை. நான் ஒன்று நினைக்க பூட்ஸ் கால் வேறொரு பக்கம் இழுக்கும். சறுக்கி வீழ்ந்துவிடுவேனோ என்று அஞ்சினேன். அச்சம் பல நாள் தொடர்ந்தது.

எனக்கு மேல் வகுப்பில் படித்து வந்த திரு எம்.டி.இராசு என்னைக் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். பொது அறிவுப் பலகையிடம் இட்டுக் கொண்டு போனார்.

அன்று என் பிரிவிற்கு என்னென்ன பாடங்கள் நடக்குமென்பதைச் சுட்டிக் காட்டினார். முதல் பாடம் நடக்கும் வகுப்பிற்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கே விட்டுவிட்டு, தம் வகுப்பிற்குச் சென்றார்.

ஆங்கிலப் பேராசிரியர் அரங்கநாதன்

அது ஆங்கில வகுப்பு. உயர்ந்த விரிந்த மேடையில் ஆசிரியருக்கு நாற்காலி இருந்தது. மாணவர்கள் 'காலரி'யில் அமர்வோம். முன்னே வந்து நிற்பதில் எனக்குக் கூச்சம் அதிகம்.

எனவே நான்காவது வரிசையில், முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டேன். கூத்தாட்டு அவையில் கூடுவது போல், தனித்தனியேயும், இணை இணையாகவும் சகமாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். அத்தனை பேர்களும் ஆண்கள்.

மணி பத்தடிக்கத் தொடங்கிற்று. பத்தாவது மணி அடித்து முடியும்போது, 'நெடுமால்' ஒருவர், வகுப்பிற்குள் நுழைந்தார். பொத்தானைக் கொண்டு இயக்கியதுபோல், வகுப்பு முழுவதும் எழுந்து நின்றது.

பேராசிரியர் மேடை ஏறி, நாற்காலியில் அமர்ந்தார். ஆ! 'எவ்வளவு உயரமானவர்! முகத்திலேதான் எத்தனை நம்பிக்கை!

வருகைப்பட்டியல் அவருக்கு முன்னிருந்த மேசையின் மேல் இருந்தது. அதைத் திறந்தார். மாணவர்களை, அகரவரிசையில் அழைத்தார்; எழுந்து நின்று 'உள்ளேன் அய்யா' என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னோம்.

வருகைப்பதிவு முடிந்ததும் பாடத்தைத் தொடங்கினார். என்ன பாடம்? ஆங்கிலத்தில், 'சிறு செய்யுள்கள்' பாடம்; எப்படிக் கற்பித்தார்?

கணீரென்ற குரலில், ஒரு செய்யுளை ஓசை நயத்தோடு படித்தார். அவர் வாயைப் பார்த்தபடியே அசையாமல் உட்கார்ந்து இருந்தோம்.

படிக்கும்போது அவருடைய குரலில், தக்க இடங்களில் ஏற்ற இறக்கம் வெளிப்பட்டன; துள்ளோட்டம் கேட்ட இடங்கள் இருந்தன. ஏக்கப் பெருமூச்சு விடுவதுபோல் தோன்றிய இடங்களும் இருந்தன.

இரண்டாம் முறையும் அதே செய்யுளைப் படித்துக் காட்டினார். சலிப்புத் தட்டவில்லை. பிறகு?

அச்செய்யுளைப் பற்றிச் சில கேள்விகள் கேட்டார். சிலர் பதில் கூறினர். பலர் கேள்வியறிவோடு நின்றனர்.

அச்செய்யுளின் உயிர்நாடிகளை மாணவர்களைக் கொண்டே அடையாளங்காட்டச் செய்தார். இரண்டொன்றை அவரே காட்டினார்.

மூன்றாம் முறையும் செய்யுளைப் படிக்க வேண்டிய மேல் கீழ் ஒலிகளோடு படித்துக் காட்டினார். அவர் படித்த முறையிலே, செய்யுளின் கருப்பொருள் விளங்கிற்று. ஆங்கிலச் செய்யுளையும் சுவைக்க முடிந்தது.

பேராசிரியர் செய்யுளைப் படித்த சுவையில் வகுப்பு முழுவதும் மெய்மறந்து கிடந்தது.

மொழியறிவை வளர்ப்பதைக் காட்டிலும் ஓசை நயத்தையும், சொல் நயத்தையும், பொருள் சிறப்பையும் வளர்ப்பதற்கே, செய்யுள்கள் என்பது அப்பேராசிரியர், திரு. எஸ்.ஈ. அரங்கநாதனுடைய கருத்தாகும்.

அவருடைய செய்யுள் வகுப்புகள் அனைத்தும் பெரிதும் இரசனை வகுப்புகளாகவே தோன்றின. பாட வகுப்பாகத் தோன்றவில்லை.

தேர்வுக்கு எது முக்கியம் என்று தேடும் முயற்சியில் நாங்கள் அலைந்து கொண்டிருக்கவில்லை.

செய்யுளைச் சொற்களாகப் பிரித்துப் பார்ப்பதில் அதிக நாட்டம் இல்லை; இலக்கணப் பாடங்களாகவும் அவர் அவற்றைப் பயன்படுத்தவில்லை.

பேராசிரியர் எஸ்.ஈ. அரங்கநாதன் செய்யுள் நடத்திய முறை எங்களுக்குப் பிடித்திருந்தது; புதுமையாக இருந்தது.

ரசிகமணி டி.கே.சி.

பல மாதங்களுக்குப் பின்னர் ரசிகமணி டி.கே. சிதம்பரநாதர் எங்கள் கல்லூரிக்கு வந்து பேசினார்.

அவர் பேராசிரியர் அரங்கநாதனின் பாணியைப் பின்பற்றியதைக் கண்டேன்.

கம்பராமாயணத்தில் நான்கு பாட்டுகளை மட்டும் எடுத்துக் கொண்டு, பாடி, பாட்டைச் சுவைக்கும் வகையைக் காட்டினார். அவற்றை மீண்டும் மீண்டும் பாடிச் சொக்க வைத்தார்.

‘எந்தக் கவிஞன் பேரிலாகிலும் காழ்ப்பு இருந்தால், அவனுடைய செய்யுள்களில் சிலவற்றைப் பாடமாக வைத்து விடுங்கள். தேர்வுக்கான பகுதியாகவும் போட்டுவிடுங்கள்; அப்புறம் யாரும் அப்பாடல்களைத் தொடமாட்டார்கள்' என்று திரு டி.கே.சி. அடிக்கடி சொல்லுவார்.

பேராசிரியர் அரங்காதன் செய்யுள் கற்பித்ததைக் கேட்டிருந்தால், இப்படிக் குற்றஞ் சாட்டியிரார்.

பௌதிக வகுப்பு

ஆங்கில வகுப்பு முடிந்ததும், கல்லூரியின் மாடியில், வடகோடியில் இருந்த பௌதிக வகுப்பிற்குச் செல்ல வேண்டியிருந்தது.

கல்லூரித் தரை வழவழவென்றிருந்தது. புது பூட்ஸ் காலோடு நடந்த எனக்கு எங்கே சறுக்கிவிடுமோ என்ற அச்சம் மிக அதிகமாயிற்று. ‘உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு' மெல்ல நடந்தேன். விழாமல் போய்ச் சேர்ந்தேன்.

திருவாளர் கணபதி சுப்ரமணிய அய்யர் வகுப்பெடுத்தார். குறிப்பிடத்தக்க சிறப்போ, குறையோ இல்லை.

மேசைமேல் சில ஆய்வுக் கருவிகளை வைத்து, சோதனை செய்து காட்டினார். விழிப்பாகப் பார்த்தோம்; விடாமல் எழுதிக் கொண்டோம்.

அடுத்து? மணி அடித்தது.

தமிழ் வகுப்பு

மூன்றாவது காலப்பிரிவில், நாங்கள் தமிழ் வகுப்பிற்குச் செல்ல வேண்டும்.

தமிழ் வகுப்பு நடக்கும் அறை தெற்குக் கோடியில் இருந்தது. தரைமட்ட அறையில் நடந்தது.

தமிழ் வகுப்பிற்குச் சென்று அமர்ந்தோம். இரண்டொரு நொடிகளில், ஓசைப் படாமல், ஆனால் கம்பீரமாக ஒரு பெரியவர் உள்ளே நுழைந்தார்.

அவரது தோற்றத்தைக் கண்டதும், நாங்கள் சட்டென்று எழுந்து நின்றோம். எங்களை உட்காரச் சொல்லி, பின் அவரும் நாற்காலியில் அமர்ந்தார்.

தலையில் தூய தலைப்பாகை; சரிகைப்பட்டை மின்னும் தலைப்பாகை. முகத்தைப் பார்த்தோம். நிறைவான தோற்றம்.

பரந்த நெற்றி; அதில் சந்தனப்பொட்டு, கண்களோ அமைதியைப் பொழிந்தன; கத்தரித்து விடப்பட்ட கவர்ச்சியான மீசை கவனத்தை ஈர்த்தது.

உயரம்? நடுத்தரத்திற்கு மேல். கழுத்திலே 'டை' காட்சியளித்தது. அவர் மேல்நாட்டுப் பாணியில் சிறப்பாக உடை உடுத்தியிருந்தார்.

அவருடைய கால்சட்டையும் மேல் சொக்காயும் மடிப்புக் கலையாதிருந்தன. அன்று கண்டதைப் போலவே, என்றும் அவை கசங்காதிருக்கக் கண்டேன். அவருடைய அகநிலை கசங்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதைப் போன்று அவர் உடை இருந்தது.

தமிழ்ப் பாடம் சொல்லத் தொடங்கினார், அப்பெரியவர். அப்போதுதான் அவர், மாநிலக் கல்லூரியின் தமிழ் அய்யா, என்று தெரிந்து கொண்டோம். அவர் பெயர் கா.ரா. நமச்சிவாய முதலியார் என்பதாகும்.

இதை மேல் வகுப்பு மாணவர்களிடமிருந்து பின்னர் தெரிந்து கொண்டோம்.

22. தமிழ் அய்யா
கா.ரா. நமச்சிவாய முதலியார்

மேனாட்டுப் பாணியில் தோற்றம் அளித்த, தமிழ் அய்யா எவரையும் அதற்குமுன் நாங்கள் பார்த்ததில்லை. எங்கள் காலத்துத் தமிழ்ப் பண்டிதர்கள், 'ஆள்பாதி; ஆடைபாதி' என்பதை உணர்ந்து இருந்தார்கள்.

எனவே, குடும்ப நிலை எப்படியிருந்தாலும், கல்விக்கூடங்களுக்குச் செல்லும்போது, மற்றவர்கள் சிரிக்கும் அல்லது பரிதாபப்படும் நிலையில் போக மாட்டார்கள்.

எனினும் நமச்சிவாயர் அளவு மிடுக்கான உடை, எங்களை வியப்பில் ஆழ்த்திற்று. எனவே, அவரைப் பற்றிப் பின்னர் விசாரித்தோம்.

அன்றைய மாநிலக் கல்லூரியில் சில பேராசிரியர்களே 'கார் வைத்திருந்தார்கள். அதிலே ஒருவர், திரு. நமச்சிவாயர். நமச்சிவாயருடைய 'காரே' சிறந்த கார் என்று மற்றப் பேராசிரியர்கள் வியந்து சொல்லுவார்களாம்.

விலை உயர்ந்த காரும், விலையும் பராமரிப்புச் செலவும் மிகுந்த உடையும் கொண்டிருந்த நமச்சிவாயர் பேராசிரியரா? இல்லை. தமிழ்ப் பண்டிதர்.

அன்னியனிடம் நாடு அடிமைப்பட்டிருந்தபோது, கல்லூரிகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது ஆகியவற்றிற்குப் பேராசிரியர் பதவி இல்லை; துணைப் பேராசிரியர் பதவியும் இல்லை; வெறும் 'பண்டிதர்' பதவிகளே இருந்தன.

சம்பளம், எல்லா ஆசிரியர்களிலும் மிகமிகக் குறைந்தது. மாதச் சம்பள விகிதம் ரூபாய் 85 இல் தொடர்ந்து 150 இல் முடியும்.

கட்டைச் சம்பளம் வாங்கியபோதும் அவர் சிறியவராகக் காட்சி அளிக்கவில்லை. தோற்றப் பொலிவிற்கு இல்லாத பணம் வேறு எதற்குப் பயன்பட்டும் நன்மை இல்லை. இப்படி எண்ணினார் போலும் நமச்சிவாயர்.

உழைப்பால் உயர்ந்தவர் நமச்சிவாயர்

நமச்சிவாயர் பிறவிச் செல்வரா? இல்லை மிகமிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்.

வாழ்க்கையைச் சென்னைத் தண்டையார் பேட்டை தொடக்கப்பள்ளி ஆசிரியராகத் தொடங்கினார். பணிபுரிந்து கொண்டே தமிழைக் கற்றார்.

மயிலை மகாவித்வான் சண்முகம்பிள்ளை இடம் பதின்மூன்று ஆண்டுகள் முறையாக இலக்கணம் இலக்கியங்களைக் கற்றுத் தேறினார்.

இத்தனை நெடுங்காலம், சென்னையின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நடந்து சென்று தமிழ் கற்ற உறுதிப்பாடு பலருக்கும் வந்தால் மிகவும் நன்றாயிருக்கும்.

பின்னர், புனித சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், வடசென்னை நார்த் விக் பெண்கள் பள்ளியிலும், வேப்பேரி புனித பால் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகத் தொண்டாற்றினார்.

மேரி இராணி பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி நமச்சிவாயர் விரும்பி அழைக்கப்பட்டார்.

அக்கல்லூரியைத் தொடங்கியபோது,அதற்கு எதிர்ப்பு எழுந்தது. பெண்களுக்கு உயர்கல்வி எதற்கு என்று பலர் எதிர்த்தனர்.

பழமை விரும்பிகள் எழுப்பிய எதிர்ப்புப் புழுதிக்கிடையில், தொடங்கும் கல்லூரியில், சென்னை நகரில் பலருக்கும் தெரிந்த நமச்சிவாயர், ஆசிரியராவது எதிர்ப்பைக் குறைக்க உதவும் என்று எண்ணியது அரசு.

எனவே, பதவி அவரைத் தேடிச் சென்றது; ஆயினும் கட்டைச் சம்பளமே.

பின் எப்படிப் பணம் சேர்ந்தது? 'கார்' வாங்க முடிந்தது?

நேர்மையான வழியில்தான் வருவாய் மிகுந்தது. ஊர் அறிய, முறையாகவே நிறையச் சம்பாதித்தார்.

அது என்ன வழி?

அறியாமை அடிமைப்படுத்தும்

கொடிது, கொடிது வறுமை கொடிது. அதைப் போலவே கொடிது கொடிது அடிமை கொடிது.

அடிமைத்தனம் எங்கோ தொடங்கும்; எப்படியோ தொடங்கும்; ஆரவாரமின்றித் தொடங்கும்; பெரும் நன்மை போன்றே தோன்றும்.

ஏமாறினால்? ஏற்றுக் கொண்டால்? எங்கெங்கோ பரவும்; ஆளையே மாய்க்கும்; நாட்டையே நடைப்பிணமாக்கும்.

பெரிய உடம்பில், சின்னஞ்சிறு காயம். இவ்வளவு தானே என்று இருந்துவிட்டால்? சீழ்பிடிக்கும்.

அது காயம் பட்ட இடத்தோடு நிற்காது. நமக்குத் தெரியாமலே உடம்பில் ஊடுருவி விடும்.

கையையோ காலையோ வெட்டி எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளும். சிலவேளைகளில் உயிரையே கொள்ளை கொண்டுவிடும்.

புண் எங்கே ஏற்பட்டாலும் உடம்பிற்கும் உயிருக்கும் ஊறு விளைவிக்கும்.

அதே போல், அடிமைப்படுதல், எத்துறையில் தொடங்கினாலும் அதோடு கட்டுப்பட்டிராது.

எனவே, விடுதலைக் கவிஞர் பாரதியார், உரிமையின் சிறப்பைப் பாடுகையில்,

'நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணிலாத
பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்

என்று பாடினார்.

இந்திய நாடு பல நூறு அரசுகளாகப் பிரிந்து கிடந்ததால்,

அவ்வரசுகள், குடிமக்களின் நலத்தைக் கருதாமல் தத்தம் பரப்பையும் அதிகாரத்தையுமே முன்னிலைப் படுத்திக்கொண்டு இருந்ததால்,

அழுக்காற்றின் உந்துதலால், அடுத்தடுத்துப் போராடி நலிந்ததால்,

உடன் பிறப்பையும் காட்டிக் கொடுக்க, முதுகில் குத்தக் கூசாத போக்கால்,

எங்கிருந்தோ, சோப்பையும் சீப்பையும் காட்டிக்கொண்டு அவற்றை விற்க வந்த ஆங்கிலேயருக்கு,

நாட்டை இழந்தோம்; ஆட்சியுரிமையை இழந்தோம்; அரசியல் அடிமைத் தனத்தை ஏற்றோம்.

ஆங்கிலேயர் வந்தது விற்கவே; புதுப்புதுப் பொருள்களை விற்கவே.

முடிந்தது எப்படி?

அவர்கள் கைகளில் இந்தியாவின் ஆட்சி சிக்கிக்கொண்டது.

இன்றைய தலைமுறையினரும் வருங்காலத் தலைமுறையினரும் இதிலிருந்து நல்லதோர் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்நாள் முழுவதும் மறவாத பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும்.

அப்பாடம் எது?

மற்றவர்களுக்கு வாணிகத்திற்கு இடம் கொடுத்தால் என்ன?

நமக்குத் தேவையான தொழில்களில் முதலீடு செய்ய, பிற நாட்டுப் பெரும் நிறுவனங்களுக்கு உரிமை தந்தால் என்ன என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

அப்படி ஏமாறத் தொடங்கினால், வெளிநாட்டு ஆதிக்கமே நம் இந்தியாவில் செலாவணியாகும்.

இந்தியத் தன்னாட்சி உரிமை என்பது கானல் நீராகிவிடும்.

இப்பாடத்தையே முந்தைய வரலாறு நமக்குக் கற்பிக்கிறது.

ஆட்சி உரிமையைப் பறித்த ஆங்கிலேயர் அதோடு நிற்கவில்லை,

ஆதாயம் தேடியல்லவா நீண்ட நெடுந்தூரம் வந்தார்கள்?

எனவே, இந்தியத் தொழில்களைத் திட்டமிட்டு நலிய வைத்தார்கள்; தங்கள் தொழில்களை வளர்த்தார்கள். பெரும் வாணிகத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அதற்கு மேலும் ஊடுருவினார்கள். எதுவரையில்?

தொடக்கப்பள்ளிகளுக்கான தமிழ்ப் பாட நூல்களைக் கூட ஓர் ஆங்கிலேயரே எழுதி வெளியிட்டு, பொருள் திரட்டிக்கொண்டிருந்தார். அதற்குக் கூடத் தமிழ்ப் புலவர்களுக்கு இடமில்லை.

அவ்வளவிற்கு அழுத்தி வைத்திருந்தார்கள், ஆங்கிலேயர்கள்.

ஆங்கிலேயரிடம் இருந்து தமிழ்ப்பாடநூலுக்கு விடுதலை

ஆங்கிலேயர் கையிலிருந்த தமிழ்ப் பாட நூல் கோட்டையை முதன் முதல் துணிந்து தாக்க முனைந்தவர், நல்லாசிரியர் நமச்சிவாயர் ஆவார்.

தொடக்கப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாடநூல்களை எழுதினார். கல்வி இயலின் அடிப்படையில் எழுதினார்.

கற்பிக்க வேண்டிய சொற்களை முறைப்படுத்த வேண்டும்.

அந்த முறை என்ன?

எளியன; எளிமை அல்லாதன; சற்றுக் கடினமானவை; கடினமானவை; அரியவை. இப்படிச் சொல் தொகுப்பை முறைப்படுத்திக் கொண்டு, எளிய சொற்களோடு தொடங்கி, அரிய சொற்கள் வரை, பாடங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து நகர்ந்து வளர வேண்டும்.

வயதிற்கேற்ற கதைகளும் கருத்துகளும் பாடங்களும் படங்களும் இடம்பெற வேண்டும். கல்வி இயலின் அடிப்படை இவை.

இவற்றை மனத்தில் கொண்டு, நன்முறையில் பாடநூல்களை எழுதினார்.

பின்னர், மேல் வகுப்புகளுக்கும் நூல்கள் எழுதினார்.

காலநீட்டத்தில் கல்லூரி நூல்கள் எழுதி வெற்றி பெற்றார்.

அக்காலத்தில், பள்ளிப்பாட நூல்கள் அரசுடைமை ஆகவில்லை. எனவே தனியார் முயற்சி பலன் கொடுத்தது.

நமச்சிவாயருடைய பாடநூல்களுக்கு இணையான நூல்கள் தமிழ்நாட்டில் இன்னும் வரவே இல்லை.

'சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப் போல நானுமே
உழைத்திடவே வேணுமே'

என்னும் 'பாட்டு,தமிழகத்தில் எந்தக் குழந்தைக்குப் புரியாது.

இப்படி அவருடைய நூல்களைப் படித்து வளர்ந்த பெரியவர் ஒருவர் இந்தியாவின் நடுவர்களில் ஒருவராக உயர்ந்த பெரியவர் நீதிபதி அழகிரிசாமி - என்னிடம் நேரில் பாராட்டினார்.

அத்துணை சிறப்புடைய நமச்சிவாயரின் நூல்களைப் பள்ளிகள் பயன்படுத்தியதில் வியப்பில்லை.

மேலும் மேலும் பல பள்ளிகளில் அவை நுழைந்ததும் இயற்கை.

வெளியீட்டாளரும் ஒழுங்காகக் கணக்கைக் கொடுத்தார்கள்; பணத்தையும் கொடுத்தார்கள்.

இப்படி, முறைப்படி, ஊரறியக் கூடிய வகையில் நமச்சிவாயருக்குச் செல்வம் சேர்ந்தது.

நமச்சிவாயர் பாடநூல் எழுத முயன்றதில் என்ன குற்றம்? ஒன்றுமில்லை. அதுவே அவருடைய கடமை என்றாலும் பொருந்தும்.

பொதுக் கடமையைச் செய்ய முன் வருவோர்க்கே தொல்லையும் கைகோத்து வரும். நமச்சிவாயர் எழுதிய பாடநூல்கள் வெளியான போது, தொல்லை - இல்லை, இரு தொல்லைகள் உடன்பிறந்தன.

ஏற்கெனவே தமிழ்ப் பாடநூல்களை எழுதிப் பிழைத்து வந்த ஆங்கிலேயருக்கு இச்செய்தி எட்டிற்று.

தன்னலம் முன்னே நிற்கும்போது நீதி மறைந்துவிடும்.

தமிழ்ப்பாட நூல்களை, தமிழர் ஒருவர் எழுதுவதே முறை, என்ற நீதி அவருக்குத் தெரியவில்லை.

தன் வயிற்றுப் பிழைப்பிற்கு மண் விழுமே என்று அஞ்சிய ஆங்கிலேயர், போர் தொடுத்தார்; இருமுனைப் போர் தொடுத்தார்.

நமச்சிவாயர் எழுதிய பாடநூல்களை 'பாடநூல் குழு' ஏற்காதபடி செய்ய நெருக்கினார்.

நமச்சிவாயர் தமிழாசிரியராகப் பணிபுரிந்த புனித பவுல் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தை நெருக்கினார். அவரைப் பள்ளியில் இருந்து வேலைநீக்கம் செய்யச் சொன்னார்.

முந்தியது பலிக்கவில்லை. நமச்சிவாயரின் நூல்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன.

பிந்திய முயற்சி வெற்றிபெறுவதுபோல் தோன்றிற்று. அடுத்த கல்வியாண்டிலிருந்து நமச்சிவாயரின் பணி தேவையில்லை என்று அவருக்கு அறிவிப்புக் கொடுத்தார்கள்.

இச்செய்தி, எப்படியோ மாணவர்களுக்கு எட்டிவிட்டது. திடீர் வேலைநிறுத்தம் நடந்தது. ஆம்; யாரும் தூண்டிவிடாதபோதே, வேலைநிறுத்தம் வெடித்தது.

நிர்வாகம் உண்மையை உணர்ந்தது. 'நமச்சிவாயர் இனிய இயல்பினர்; எல்லோரையும் நேசிப்பவர்; எனவே, எல்லாச் சமய, எல்லாச் சாதி மாணவர்களின் நல்லெண்ணத்தையும் அன்பையும் கவர்ந்தவர்' என்பது பளிச்சென்று தெரிந்தது.

வீண் பெருமை பாராட்டாமல், வேலை நீக்க அறிவிப்பை மாற்றிவிட்டார்கள். தொடர்ந்து பணிபுரியும்படி நமச்சிவாயருக்கு ஆணை கொடுத்தார்கள்.

கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஆனார்

நமச்சிவாயர், அதே பள்ளியில் தொடர்ந்து சில ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர், மேரி இராணிக் கல்லூரிக்குத் தமிழ்ப் பண்டிதர் ஆனார்.

மேரி இராணிக் கல்லூரி 1914ஆம் ஆண்டு சென்னை மாநில அரசால் தொடங்கப்பட்டது.

அதுவரை, சென்னையில் பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரி இல்லை.

அக்காலத்தில் சென்னை நகரில் நடந்து வந்த மூன்று ஆண்கள் கல்லூரியிலும் பெண்கள் சேருவது அரிது.

செல்வர் வீட்டுச் சாற்றில் மிதக்கும் கொத்தமல்லி இலைகளாக மிகச் சிலரே கல்லூரியில் சேர்ந்தனர்.

பெண்களுக்கென்று தனிக் கல்லூரி தொடங்கினால் ஏராளமான பெண்கள் உயர்கல்வி பெற முன்வரக்கூடும் என்று அரசு கருதிற்று. கல்லூரியைத் தொடங்க முடிவு எடுத்தது.

அப்பப்பா! இதற்குத்தான் எத்துணை எதிர்ப்பு! என்ன சாக்கு? பழக்கம், வழக்கம், மரபு, பண்பாடு என்பவை பழமை விரும்பிகளின் கைகண்ட அம்புகளாகும்.

பெண்கள் கல்லூரிப் படிப்புப் படிப்பது நம் நெடிய பழக்க வழக்கத்திற்குப் பகை, காலத்தை வென்று வரும் நம் மரபிற்கு

மாறானது; பாரோர் புகழும் பண்பாட்டினை அழிக்கக் கூடியது, என்று கடுமையான எதிர்ப்புக் கணைகளைத் தொடுத்தார்கள்.

நிலநடுக்கம் ஏற்பட்டதுபோல நடுங்கினார்கள்; அலறினார்கள்; 'ஆசிரியர் கடிதங்கள்' தீட்டினார்கள். இடம் இல்லாச் சங்கங்களின் சார்பிலும் கண்டனங்கள் கிளம்பின.

''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? அவர்கள் (ஆங்கிலேயர்) காட்டுமிராண்டிகளாக இருந்தபோதே நாம் நாகரிகத்தின் கொடுமுடியில் இருந்தவர்களாயிற்றே!

''நம் முன்னோர் வகுத்த வழிக்கு மேலாக, இவர்கள் எப்படிச் சிறந்த வழியைக் காட்ட முடியும்? பெண்களுக்குப் படிப்பெதற்கு?

''குடும்பந்தானே கண்கண்ட சொர்க்கம். குடும்பக்கலை கற்கவா கல்லூரிக்குப் போக வேண்டும்?

''பாட்டிக்குத் தெரியாத வீட்டு மருத்துவம் எவருக்குத் தெரியும்? அத்தைக்குத் தெரியாத சமையலா மற்றவர்களுக்குத் தெரியும்?

''அழும் பிள்ளைக்குத் தாலாட்டக் கற்றுக் கொள்ளக் கல்லூரி தேவையா?

''வாழ்க்கைக்கு வேண்டிய இவற்றையெல்லாம் வீட்டிலிருந்து பாட்டியிடம் அத்தையிடம் மூத்தாளிடம் கற்றுக் கொள்வதே நல்லது.

கல்லூரிக்குச் செல்வது தேவையற்றது; தீங்கானது; வீணானது; எங்கெங்கோ, என்னென்ன தவறுகளுக்கோ ஆளாக்கக்கூடியது.

''எங்கள் பண்பாட்டிற்குப் பகையான இம்முயற்சி, எங்கள் பண்புள்ளங்களைப் புண்படுத்துவதாகும்.

''எங்கள் சமயங்களில், மரபுகளில் தலையிடுவதில்லை என்று மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் வாக்குறுதி அளித்திருப்பதையும் மாநில அரசுக்கு நினைவுபடுத்துகிறோம்.'

இப்படி, மேரி இராணிக் கல்லூரியின் தொடக்கத்திற்கு எதிர்ப்புக் கிளம்பின.

வைதீகப் பூசாரிகளிடம் இருந்தல்ல. நவீன கல்வி கற்றவர்களிடமிருந்து - பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடமிருந்து - கண்டனங்கள் முழங்கின.

இன்றைக்கும் சமூகச் சீர்திருத்தத்திற்கு நம் கோயில் குருக்களைவிட, முற்போக்கு முழங்கிகள் அன்றோ வேர்ப்புழுக்களாக வேலை செய்கிறார்கள்? அது கிடக்கட்டும்.

திட்டமிட்டபடி மேரி இராணிக் கல்லூரி தொடங்கப்பட்டது. சென்னை நகரிலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் நற்பெயர் பெற்ற பண்டிதர் நமச்சிவாயரை, கல்லூரியின் தமிழ் ஆசிரியராகப் பெறுவது

பொதுமக்களின் ஆதரவைத் திரட்ட உதவும் என்று அன்னிய ஆட்சி நினைத்தது.

நமச்சிவாயரை அழைத்தது; பாடம் சொல்ல உடன்பட்டார். அவர் பணிபுரிந்தது, நம்பிக்கையை வளர்த்தது. வெற்றியோடும் மதிப்போடும் நல்ல பெயரோடும் தொடர்ந்து பணிபுரிந்தார். பிறகு?

சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதர் பதவி காலியாயிற்று. நமச்சிவாயர் அப்பதவிக்கு மாற்றப்பட்டார். அது என்னுடைய நற்பேறாயிற்று.

தமிழ்ப் பண்பாட்டோடு வாழ்ந்து காட்டியவர்

செல்வத்தின் பயன் ஈதலே. தற்குறிகள் நிறைந்த நம் நாட்டில் இதைப் படித்தவர் சிலரே; உணர்ந்தவர்கள் அவர்களிலும் சிலரே; செயல்படுத்தியவர்கள் மிகச் சிலரே; அதையே வாழ்க்கை நெறியாக்கிக் கொண்டவர்கள் மிக மிகச் சிலரே.

மிகமிகச் சிலரில் ஒருவராக நமச்சிவாயர் விளங்கினார்.

நமச்சிவாயரின் வாழ்நாளில் அவரளவு பொருள் ஈட்டிய ஆசிரியர் எவரும் இல்லை; அவரளவு பலருக்கும் வாரி வழங்கி வாழவைத்த ஆசிரியரும் யாரும் இல்லை.

நமச்சிவாயரின் மூத்த மகன் திரு. தணிகைவேல், கல்லூரியில் என்னுடன் ஒரே வகுப்பில் படித்தார். நான் எடுத்த விருப்ப பாடங்களையே எடுத்திருந்தார்.

எனக்கு நண்பரானார். நெருங்கிய நண்பரானார்; இன்றும் தொலைவிலிருந்து பார்த்து மகிழ்கிற நண்பரானார்.

தணிகைவேலைப் பார்ப்பதற்காக அடிக்கடி நான், அவருடைய 'கடலகம்' என்ற பங்களாவிற்குச் செல்வதுண்டு.

எப்போது சென்றாலும் நமச்சிவாயரிடம் உதவிநாடி வந்த பண்டிதரையும் பிறரையும் காண்பதுண்டு.

வந்தவர்களுக்கு விருந்தோம்புவதில், 'கடலகம்' சிறந்து விளங்கியது.

எந்நேரம் யார் போனாலும் தவசிப்பிள்ளை விரைந்து வந்து, 'காப்பியா, தேனீரா, பாலா, மோரா? எது கொண்டு வரட்டும்' என்று விசாரித்துக் கொண்ட பிறகே, நமச்சிவாயரிடம் விருந்தினர் வருகையை அறிவிப்பார்.

நானும் பலமுறை விருந்தோம்பலைத் துய்த்தது உண்டு.

நமச்சிவாயர் பாடஞ்சொன்ன முறை எங்களுக்குப் பிடித்திருந்தது; அமைதியாக, பொறுமையாக, தெளிவாகப் பாடம் நடத்துவார்.

ஐயங்களைக் கிளப்பினால், எரிச்சல் கொள்ளமாட்டார். குழந்தைக்குச் சொல்லுவதுபோல், மெதுவாகத் தெளிவாக விளக்குவார்.

சொல்லிலே, கடுமை, கீழ்மை தலை காட்டியதில்லை.

'பூட்ஸ்' காலோடு அவர் நடக்கையில் ஒலி எழுப்பி அடுத்துள்ள வகுப்புகளைக் கலைக்கக் கூடாதென்பதற்காக, காலணியின் அடிப்பாகத்தில் இரப்பர் பொருத்தியிருந்தார்.

யாரையும் தொந்தரவு செய்ய விரும்பாத நமச்சிவாயருக்கு நாங்களும் தொந்தரவு கொடுத்ததில்லை.

கல்லூரிப் பாட நேரம் ஒரு மணி. ஆனால் நமச்சிவாயரோ அவ்வளவு நேரம் பாடஞ் சொல்வதில்லை. நாற்பத்தைந்து அல்லது ஐம்பது மணித் துளிகளோடு நிறுத்திவிடுவார்.

இயலாமையால் அல்ல; மடியினால் அல்ல. பின் எதனால்?

பல்கலைக்கழகம் குறித்துக் கொடுத்துள்ள பாடங்களோடு முடிந்து விடவில்லை உலக வாழ்வு என்பதை நினைவுபடுத்துவதுபோல் இருந்தது, நமச்சிவாயரின் நடவடிக்கை எப்படி?

பாட நேரத்தின் கடைசிப் பத்துப் பதினைந்து மணித்துளிகளைப் பொது அறிவிற்கு ஒதுக்கிவிடுவார்.

அவராகப் பொதுஅறிவுப் பாடம் நடத்துவாரா? இல்லை.

மாணவர்கள் பொதுக் கேள்விகளைக் கேட்கலாம், நமச்சிவாயர் அவற்றிற்குப் பதில் சொல்லுவார்.

ஒரே ஒரு வரம்பு கட்டிக் கொண்டிருந்தார். அவ்வரம்பு எது?

மாநிலக் கல்லூரி, அரசுக் கல்லூரி; அக்காலம் விடுதலைப் போராட்ட காலம்.

எனவே வகுப்பறையில் அரசியல் பற்றிய கேள்வி பதில்கள் வேண்டாம் என்பது அவ்வரம்பு.

அதை மாணவர்களும் மதித்தார்கள்.

பொதுக்கேள்வி நேரம் சுருக்கமாக இருந்தாலும் சுவையாக இருந்தது.

எங்களுக்குப் பல துறைத் தகவல்கள் கிடைத்தன.

தமிழ்க் கவிதைகளுக்கு ஒப்பான பிறமொழிக் கவிதைகளைத் தெரிந்து கொள்ளவும் அனுபவிக்கவும் முடிந்தது.

சங்க இலக்கியங்களில் வரும் செடி கொடி மரப் பெயர்களுக்குத் தாவரவியலார் வழங்கும் சொற்களைக் கூடக் கற்றுக் கொள்வோம்.

ஒருநாள், மாணவர் ஒருவர், நமச்சிவாயரை எரிச்சலூட்ட முயன்றார். பலிக்கவில்லை. மாறாக, பண்டிதரின் பரந்த படிப்பு வெளியாயிற்று. வாழ்க்கை முறை ஒன்று எங்கள் அறிவில் மின்னிற்று. எப்படி?

ஆத்திகமும் நாத்திகமும்

தமிழ் வகுப்பில், பொது அறிவு நேரத்தில், என் நண்பர் ஒருவர் எழுந்து நின்றார். தங்கு தடையின்றி நான்கு நீண்ட தமிழ்ச் சொற்றொடர்களை ஒப்புவித்தார். ஒப்புவித்துவிட்டு,

''ஐயா! இவ்வாதம் சரியில்லையா? இதை ஏற்றுக் கொள்வதற்கு தயக்கம் ஏன்?'' என்று கேட்டார், அம்மாணவர்.

நல்லாசிரியர் நமச்சிவாயர் வாதத்தையும் கேள்வியையும் அமைதியாகக் கேட்டார்; மனம் கோணவில்லை; முகம் சுளிக்கவில்லை. கேள்வி முடிந்ததும்,

''உட்காரு அம்மா'' என்ற இனிய குரலில் கட்டளையிட்டார்.

கேள்வி கேட்டது பெண் அல்ல; ஆண் மகன்; நன்றாக வளர்ந்த ஆண் மகன், அவரை 'அம்மா' என்று அழைத்தது மேரி இராணிக் கல்லூரிப் பழக்கத்தால் அல்ல. இது, அந்தக்கால சென்னைப்பட்டினத்துப் பழக்கம்.

அக்காலத்தில், சென்னையில் வாழ்ந்தோர், எவரையும் கனிவோடு அழைக்க எண்ணினால் 'அம்மா' என்றே அழைப்பார்கள். அந்தப் பழக்கப்படி நமச்சிவாயர் மாணவரைச் செல்லமாக 'அம்மா' என்று அழைத்தார். மாணவர், ஆசிரியரின் ஆணைப்படி அமர்ந்தார்.

நமச்சிவாயரும் உரைநடையில், ஐந்தாறு சொற்றொடர்களை ஒப்புவித்தார். மாணவர் கூறியதற்குப் போட்டியாக அல்ல; பதிலாக அல்ல; தொடர்பாக; அதே போக்கில் அமைந்தவற்றைக் கூறினார். கூறிவிட்டு,

''இராமசாமி! நீ ஒப்புவித்தது, கர்னல் இங்கர்சால் என்னும் அமெரிக்க நாத்திகரின் ஆங்கில உரையின் சிறு பகுதி. நான் கூறியதும் அதே உரையின் சிறு பகுதி; நீ கூறியதன் தொடர்பகுதி.

''இந்தக் கடவுள் மறுப்பு உரை, நெடுநாள்களுக்கு முன்னர் ஆங்கில நூல் வடிவில் வெளிவந்தது. அதில் ஒரு பகுதியைத் தமிழ்ப்படுத்தி, இவ்வாரக் 'குடியரசு' வெளியிட்டுள்ளது.

''அதைப் படித்துவிட்டு, சில சொற்றொடர்களை மட்டும் மனப்பாடஞ் செய்து ஒப்புவித்தாய். நானும் அவ்விதழைப் படித்தேன்; உன்னிலும் அதிகமாகச் சில சொற்றொடர்களை நினைவில் வைத்துக் கொண்டு, இப்போது உனக்குச் சொன்னேன்.

''இங்கர்சாலின் கருத்துகளை அடக்கிய இந்நூல், சென்னை கன்னிமாரா நூல்நிலையத்தில் இருக்கிறது. மூல நூலையே எடுத்துப்படி.

''ஒரு முறை படிப்பதோடு நின்றுவிடாதே. மூன்று நான்கு முறை படி. படித்தபின், சிந்தித்துப்பார்; ஆழ்ந்து சிந்தித்துப்பார். திரும்பத் திரும்ப படித்த பிறகு, ஆழ்ந்து சிந்தித்துக் கடவுள் இல்லை என்னும் முடிவிற்கு நீ வந்தால், அதன்படியே நடந்துகொள்.

''கடவுள் நம்பிக்கையோ, மறுப்போ உன்னுடைய ஆழ்ந்த மதிப்பிற்குரிய உணர்வாக இருக்கவேண்டும். அது மற்றவர்களைப் பார்த்துக் காப்பியடிக்கக் கூடிய ஒன்றல்ல.

''ஆழ்ந்த கல்வியும் சிந்தனையும் உன்னை உண்மையாக நாத்திகனாக்கினால், வெட்கப்படத் தேவையில்லை.

''ஒரே ஒரு எச்சரிக்கை, வாழ்க்கை நெடு வழியில் எப்போதாவது கடவுள் நம்பிக்கை என்னும் ஊன்றுகோல் உனக்குத் தேவைப்பட்டால், அதைத் தேடிக்கொள்ளவும் கூசவேண்டாம்:

''உணர்வும் நம்பிக்கையும் உலகம் மெச்ச அல்ல; உனக்குத் துணையாக. எம் முடிவிற்கு வருவதானாலும் நுனிப்புல் மேய்ச்சலால் விளைய வேண்டாம்.

''என்னைப் பொறுத்தமட்டில், கடவுள் நம்பிக்கை என்னும் உணர்வில் ஐம்பது ஆண்டு காலம் வளர்ந்தபிறகே இங்கர்சாலின் நூலைப் படிக்க நேர்ந்தது.

''இங்கர்சாலை வெறுக்க என் அறிவு இடம் கொடுக்கவில்லை; அவரை ஏற்க உணர்வு அஞ்சுகிறது.

''நம்பிக்கையென்னும் கடைக்காலின்மேல் என் வாழ்க்கை கட்டப்பட்டுவிட்டது. அறிவின் ஆணைப்படி அதைப் பெயர்த்துக் கொண்டால், இதுவரை இருந்த அளவு நல்லவனாக இருப்பேனா என்று ஐயப்படுகிறேன். நல்லவனாக இருப்பதே என் வாழ்க்கை லட்சியம்.

''என் கடவுள் நம்பிக்கை அதற்குத் தடையாகாதபடி, சமரச உணர்வோடு வாழ்ந்து வருகிறேன்.

''அதற்காக நீ கடவுள் நம்பிக்கைக் காரனாக இரு என்று வற்புறுத்த மாட்டேன். இது பெரிய விஷயம். புனிதமான விஷயம்; மென்மையானதும்கூட. இதில் ஒவ்வொருவரும் தாமே முடிவு செய்வதே நல்லது'' என்று நீண்ட விளக்கம் தந்தார். வகுப்பிலுள்ளோர் திகைத்துப் போனோம்.

கேள்வி கேட்ட மாணவர் எஸ். ராமசாமி, யார்? வைணவர்; அதை மறைக்காமல், நெற்றியில் மெல்லிய சிவப்புக் கோட்டோடு கல்லூரிக்கு வந்தவர்; தமிழில் ஆர்வம் உள்ளவர்; சுறுசுறுப்பான இளைஞர்; போக்கிரி அல்ல.

திருத்தணிகை வேலனின் பக்தர்

நமச்சிவாயரோ, சைவப்பற்றுள்ள தமிழர், மேனாட்டு உடையில் மிடுக்காக வந்தபோதிலும் நெற்றியில் சந்தனப்பொட்டு இன்றி வெளியே செல்லார்.

அது மட்டுமா? திங்கள் தோறும், தவறாது, கிருத்திகையன்று திருத்தணிகை சென்று, தணிகைவேலனைப் பக்தியுடன் வழிபட்டு வந்தவர்.

தம்முடைய முதல் மகனுக்குத் தணிகைவேல் என்றும், இளைய மகனுக்குத் தணிகைமணியென்றும் பெயர் இட்டு அழைத்து, தணிகையை நாள்தோறும், பலமுறை நினைவுபடுத்திக் கொண்டு இருந்தவர்.

இயல்பின் வெளிப்பாடோ, வழிபாட்டின் விளைவோ நமச்சிவாயர் பொறுமை மலையாகவே காட்சியளித்து வந்தார்.

அத்தகைய நல்லவரை, 'நல்ல பிள்ளை'யாகிய மாணவர் இராமசாமி எரிச்சல் ஊட்ட முயன்றார்.

சிவபக்தர் முன்பு நாத்தழும்பேறிய நாத்திகத்தைச் சொல்லி அவரைச் சிவக்கச் செய்ய முயன்றார்.

'நல்ல பிள்ளை'யின் வம்புக்கிழுக்கும் போக்கு முரண்பாடாகத் தோன்றுகிறதா? இது பருவக்கோளாறு.

மாணவப் பருவம் செங்காய்ப் பருவம்

கல்லூரி மாணவப் பருவம், குழந்தைப் பருவமுமல்ல; பொறுப்பான முதிர்ந்த பருவமுமல்ல; செங்காயாகத் துடிக்கும் வாலிபப் பருவம்.

குழந்தைப் பருவத்தில் எளிதாக, விருப்பம்போல் உருவாக்கலாம். முதிர்ந்த பருவத்தில் தெளிவான உருவம் அமைந்து விடுகிறது.

செங்காய்ப் பருவமோ, இரண்டுங்கெட்டான் பருவம்.

அப்பருவத்தில், கருத்தோட்டம் ஆற்றுப்படுகைக்குள் அடங்கி ஓடாது; புதுப்புது ஓடைகளில் புகத்துடிக்கும்; பலவேளை வெற்றியும் பெறும்.

காட்டாற்று விரைவோடு ஓடும் அப்பருவ சிந்தனைகளைத் தடுக்க முயல்வது அறியாமை; அது பலிக்காது.

மிரட்டி உருட்டி, அடக்கி ஒடுக்கி, சிந்தனை உரிமையைப் புதைக்க நினைப்பது வீண் முயற்சி.

தடைபோட்டு மடக்க முடியாத இளமைப்பருவ எண்ணங்களை, கண்ட பக்கம் ஓடி அழிக்க, அழிய விடலாமா? ஆகாது

'சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'

என்கிறது திருக்குறள். தடுக்கவும் கூடாது; எங்கெங்கெல்லாமோ ஓடும்படி விட்டுவிடவும் கூடாது.

பின் என்னதான் செய்வது? நல்லாறு படுத்த வேண்டும். சிந்தனை ஓட்டத்தை மெல்ல, நயமாகத் திருப்ப வேண்டும்.

திருக்குறள் கூறும் இந்நல்லுரையை நல்லாசிரியர் நமச்சிவாயர் கற்றார், அதற்குத்தக நின்றார்.

நல்லாசிரியரின் பணி

உயிரற்ற மண்ணை விருப்பம்போல் பிசைந்து, அதைக் கொண்டு, வேண்டிய அளவில், விரும்பிய வடிவில் கல்லறுப்பது அல்ல ஆசிரியரின் பணி; ஆளாக்குவது அவருடைய பணி.

உயிருள்ள மனிதக் குழந்தையை, சிறுவனை, சிறுமியை இளைஞனை, கன்னியைச் சிறப்புள்ள ஆணாகப் பெண்ணாக உருவாக்குவது ஆசிரியர்களின் தலையாய கடமை.

இதில் வெற்றிபெற, அறிவுபெறுதல் மட்டும் போதாது, தன்னேரில்லாத புலமை பெறுதல் மட்டும் போதாது; தொழில்நுட்பம் அறிதல் மட்டும் வெற்றியைத் தராது.

விழிப்பாக, மெய்யாக உழைப்பதும் வெற்றி மேடையில் நிறுத்தாது.

அவரவர் பண்பறிந்து ஆளாக்க வேண்டும். அச்சம் கொள்ளாமல், ஆத்திரப்படாமல், மென்மையைக் கையாள வேண்டியவரிடம் கையாள வேண்டிய வேளையில் மென்மையைக் கையாளவும், உறுதியைக் கையாள வேண்டிய சில போது சிலரிடம் உறுதியைக் காட்டவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியரின் வெற்றிக்கு இதுவே பெருங்காரணம்.

இதைச் சொல்லிக்கொடுக்க அமைப்புகளோ முறைகளோ உருவாகாத காலத்து ஆசிரியர்களில் பலரும் தாமே முயன்று ஆளாக்கும் நுட்பங்களைக் கற்றுக்கொண்டிருந்தார்கள்; கையாண்டார்கள்; வெற்றியும் பெற்றார்கள்.

கல்லூரி மாணவர்களின் துடிப்பான போக்கும் தீவிரமான கருத்துகளும் 'நியூட்ரான்' குண்டுகள் அல்ல; பீரங்கிவெடிகள் அல்ல; சற்றே சுடும் சட்டிகள். அவ்வளவே!

அவற்றைத் தாங்க முடியாது, 'சட்டி சுட்டதடா கையும் விட்டதடா' என்று சட்டென்று கீழே போட்டுவிட்டால் எதிர்கால சாதனையாளர்களில் பலர், காலத்திற்கு முந்திச் சுக்குநூறாக உடைந்து போய்விடுவார்கள்.

அவ்விழப்பால், அவர்களைவிட அவர்கள் குடும்பங்களைவிட சமுதாயமே பெரிதும் பாதிக்கப்படும்.

மேயர் இராமசாமி

நல்லாசிரியர் நமச்சிவாயர், இராமசாமியை நசுக்கி வைக்காமல் நல்வழிப்படுத்தியதால், அவர் வளர்ந்தார்.

குடும்பத்தில் ஏற்பட்ட சூழ்நிலைமாற்றத்தால், இன்டர்மீடியட் டோடு, கல்லூரிப் படிப்பை நிறுத்த நேர்ந்தது.

ஆயினும் தொழில்துறையில் வளர்ந்தார்; பொதுவாழ்வில் சென்னை நகர ஷெரீபாக வந்தார்; சென்னை மாநகர் ஆட்சியின் மேயராக உயர்ந்தார்.

அலுவலர்களும் உறுப்பினர்களும் மதிக்குமளவு நற்பணி யாற்றினார்.

அண்ணாமலை பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகி நல்ல முறையில் கல்வித்தொண்டு ஆற்றினார்.

எந்த நிலையிலும் பொது அமைப்புகளில் இருந்து எதையும் எடுத்துக் கொண்டு போகவில்லை. பொதுத்தொண்டைக் காசு பணமாக்கிக் கொள்ளாமலே வாழ்ந்து மறைந்தார்.

தமிழ்ப் பண்டிதர் நமச்சிவாயர், தமிழை மட்டும் படிக்கவில்லை; அறிவுப் பெருக்கத்திற்காக ஆங்கிலத்தையும் ஆழ்ந்து படித்தார்.

அப்படிப் படிக்கையிலும் தம் சமய உணர்விற்கு ஆதரவானவற்றை மட்டும் படித்துவிட்டு, பிறவற்றை வேண்டாமென்று ஒதுக்கிவிடவில்லை.

ஆழ்ந்த ஆத்திகராகிய அவர், நாத்திக வாதத்தில் சுடர்விட்ட சிறந்த நூலையும் ஊன்றிப் படித்தார்.

சிக்கினவர்களிடம் எல்லாம், சமயம் வாய்க்கும் போதெல்லாம் தம்முடைய கருத்துக்களைத் திணிக்காமல், ஒவ்வொருவருடைய சிந்தனையையும் மதித்தார்; அதைத் தூண்டி வளர்த்தார்.

இவரைப் பலரும் பின்பற்றினால் மிகவும் நன்றாயிருக்கும்.

23. ஆசிரியர் இலட்சுமிநாராயணன்

எனக்கு வேதியியல் கற்பித்தவர் திரு. இலட்சுமிநாராயணன் என்பவர். அவர் இளைஞர்; ஓராண்டிற்கு முன்புதான், பி.எஸ்சி. (சிறப்பு) பட்டம் பெற்றார்.

உடனே, வேதியியல் சொற்பொழிவாளராக, அதுவும் மாநிலக் கல்லூரிக்கே நியமிக்கப்பட்டார். அது மிகவும் பொருத்தமான நியமனம்.

வேதியியல் பற்றி ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த திரு. இலட்சுமி நாராயணன், உழைப்பிலும் ஊன்றியிருந்தார்.

தாம் வேலைக்குப் புதிது என்பதை மறக்கவில்லை; அதை நினைத்து, அஞ்சவில்லை. பின் என் செய்தார்?

வகுப்புக்கு வருமுன் நடத்த வேண்டிய பாடத்தைப்பற்றி முழுமையாக எண்ணித் திட்டமிடுவார். போதிய குறிப்புகளோடு வருவார்.

சோதனைகளை எங்கள் முன் நடத்திக் காட்டுவார். கரும்பலகையில் சோதனை அமைப்புப் படங்களைச் செம்மையாக வரைந்து விளக்குவார்.

வகுப்பில் 'வால்தனம்' தலைகாட்டும். புரியாத குரல் ஏதாவதொரு மூலையில் இருந்து கேட்கும். சிலவேளை, காகித அம்புகள் 'சர்' 'சர்' என்று பாயும்.

அப்போதெல்லாம் அவர், படம் வரைவதை, சோதனை செய்வதைச் சில நொடிகள் நிறுத்துவார்.

கண்களாலேயே வகுப்பைச் சுட்டெரிப்பார். ஆனால் வெகுண்டு, சொற்களைக் கொட்ட மாட்டார்; மேலிடத்திற்குப் புகார் செய்ய மாட்டார். பொறுமையால் எங்களை வென்றார்.

நாங்களாகவே, ஆய்வுக்கூடங்களில் சோதனைகள் நடத்த வேண்டிய வேளை வரும். அப்போது அவர் எங்களை அணைத்து வழிகாட்டுவார்.

'குறும்புக்காரர்களையும் அலட்சியப்படுத்த மாட்டார். வகுப்பறையில் சில மாணவர்களிடம் முளைத்த குறும்பு, ஆய்வுக்கூடத்தில் ஆசிரியரின் பாச மழையில் மூழ்கி நசித்தது.

வேதியியல் பாடத்திட்டத்தில் கந்தக அமிலம் உற்பத்தி செய்வது சேர்க்கப்பட்டிருந்தது.

அதைப் பொருத்தமான கருவிகளைக் கொண்டு சோதனை வழியாகச் சிறப்பாகச் செய்து விளக்கிக் காட்டினார்,

கந்தக அமிலத்தை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கே எங்களை அழைத்துக் கொண்டுபோய்க் காட்ட விரும்பினார்.

அத்தகைய தொழிற்சாலை இராணிப்பேட்டையில் இருந்தது. பாரி கம்பெனியாரின் நிர்வாகத்தில் இருந்தது. அந்நிர்வாகத்தோடு தொடர்பு கொண்டார். பிரயாணத்துக்குத் திட்டமிட்டார்.

இராணிப்பேட்டை பயணம்

ஒரு சனிக்கிழமை, எங்கள் வகுப்பு முழுவதையும் இராணிப் பேட்டைக்கு அழைத்துக்கொண்டு போனார். எங்களுக்காக இரயிலில் தனிப்பெட்டி ஒன்றும் ஏற்பாடு செய்தார்.

அதிகாலை சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்பட்டோம். இராணிப்பேட்டையை அடைந்தபோது, பகல் பத்து மணிபோல் இருக்கும்.

திரு. இலட்சுமிநாராயணனும் அவரோடு வந்த இரு விளக்குநர் களும் எங்களோடு இருந்து தொழிற்சாலையில் பகுதிகளைக் காட்டினார்கள். பெருமளவில் கந்தக அமிலம் உற்பத்தி செய்வதை நேரில் பார்த்தோம்.

தொழிற்சாலை வளவுக்குள் போர் போராக எலும்புத் துண்டுகளைச் சேர்த்து வைத்திருந்தார்கள்.

தாவர உணவுக்காரர்களாகிய எனக்கும் மற்றும் சிலருக்கும் அது குமட்டலைக் கொடுத்தது.

எதற்காகக் குவித்து வைத்திருக்கிறார்களென்று கேட்டறிந்தோம்.

வெள்ளைச் சர்க்கரை உற்பத்தியில் ஒரு கட்டத்தில் எலும்புத் துண்டுகளைக் கொண்டு அழுக்குகளை எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

மாமிசம் வயிற்றுக்குள் திணிக்கப்பட்டது போன்ற ஒரு துயரமான வேதனை எங்களைக் கௌவிற்று.

ஏதேதோ பழகிப் போகிறதல்லவா? இதுவும் பின்னர்ப் பழகிப் போய்விட்டது. இப்போது சர்க்கரையைச் சுத்தப்படுத்துவதற்கு எலும்புத் துண்டுகளைக் கொண்டு செய்யும் முறை இல்லை. சர்க்கரையை விஞ்ஞானபூர்வமாகவே சுத்தப்படுத்திவிடுகிறார்கள்.

இராணிப்பேட்டையிலேயே பகல் உணவை முடித்துவிட்டு, பிற்பகல் இரயில் ஏறி மாலை முடியும் வேளை சென்னைக்குத் திரும்பினோம்.

திரும்புகையில், பாட்டுகள் பீறிட்டன. சில இனிமையாக இருந்தன. வேறு சில கத்தலாகக் கேட்டன. எதிலும் கொச்சை இல்லை.

திரு. இலட்சுமிநாராயணனும் இரண்டொரு பாட்டு, இசையோடு பாடி மகிழ்வித்ததாக நினைவு.

திரு. ஆர். சோமசுந்தரம் என்பவரும் இசை ஞானத்தோடு இனிமையாகப் பாடினார். கேட்போர் கூட்டத்தில் ஒருவனாக நான் இருந்தேன்.

இக்கல்விச் சுற்றுலாவின்போது, எங்கள் ஆசிரியரின் நல்லியல்பினை நன்றாகப் புரிந்துகொண்டோம்.

கண்டிப்பாக இருக்க வேண்டிய நேரங்களில் கண்களாலேயே கண்டிப்பைப் பொழிந்தாலும், சிரிக்க வேண்டிய நேரங்களில் எங்களோடு சேர்ந்து சிரித்தார். உச்சாங்கிளையில் ஏறி நிற்காமல், மாணவர்களோடு தோழமையோடு பழகினார்; பாட்டும் பாடினார். கண்டிப்போடு போட்டியிட்டது அவரது பண்பு கலந்த கனிவு.

ஆம். கசப்பு மருந்தைத் தவிர்க்க முடியாத வேளையில் தேனில் குழைத்துக் கொடுப்பதில்லையா? அதைப்போல் இவ்வாசிரியர் கண்டிப்பையும் கனிவையும் குழைத்துக் கொடுத்தார். எங்களை வளர்த்தார்; தானும் வளர்ந்தார்.

புகழுடன் விளங்கிய வேதியியல் ஆசிரியர்

படிப்படியாகப் பதவி உயர்வுபெற்று, அரசினர்க் கல்லூரி முதல்வர் ஆனார்.

அந்நிலையில் நற்பணியாற்றியபின் அரசிடமிருந்து ஓய்வுபெற்றார்.

ஆனால், திருச்சி சீதாலட்சுமி பெண்கள் கல்லூரியில் வேதியியல் மேற்பட்ட வகுப்பை உருவாக்குவதற்கு அழைக்கப்பட்டார். அங்குப் பேராசிரியராக இருந்து தம் அனுபவத்தையும் ஆற்றலையும் பயன்படுத்திச் செம்மையாக அமைத்துத் தந்தார்.

அவருடைய மாணவனாக இருந்த நான், அவருடைய கல்வித் துறையில் அவரினும் மேல் பதவிகள் வகிக்க நேர்ந்தது. பல நிலைகளிலும் வெவ்வேறு கல்லூரிகளில் அவரைக் கண்டு மகிழ்ந்தேன். அவர் என்னிலும் மகிழ்ந்தார்; பொறாமைப்படவில்லை; தன்னிடம் படித்தவன் என்று கூறிக்கொண்டு உரிமை கொண்டாடவுமில்லை; அலட்சியப்படுத்தவும் இல்லை.

> 'இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
> ஒளியோடு ஒழுகப் படும்'

என்று கூறுகிறது பொதுமறையாம் திருவள்ளுவரின் திருக்குறள்.

இக் குறளைப் போற்றிப் புகழைச் சேர்த்துக் கொள்ளாவிடினும் அதைப் பின்பற்றி, வாழ்வாங்கு வாழ்ந்து புகழ் பெற்றார் என்னுடைய வேதியியல் ஆசிரியர் இலட்சுமிநாராயணன்.

24. கல்விச் சிந்தனைகள் முன்னும் பின்னும்

மனமெனும் குரங்கு

'மனமெனும் பேய்க்குரங்கு' இது முன்னோர் முடிவு.

இது எவ்வளவு உண்மை?

குரங்கால் சும்மா இருக்க முடியாது; கிளைக்குக் கிளை தாவும்; மேலும் கீழும் பாயும்; ஓயாத குறும்பு, குரங்கின் இயல்பு; பசிக்கு இரை தேடித் தாவினால் பொருள் உண்டு; விரட்டுவோருக்கு அஞ்சி உச்சாங் கிளைக்குப் பாய்ந்தால் புரியும். பசியும் இல்லை, விரட்டுவோரும் இல்லை; கருத்தைக் கவரும் பெண் குரங்கும் இல்லை; ஆயினும் ஓயாது அலைகிறது குரங்கு.

மனமும் அப்படியே அலைகிறது. இங்கே இருக்கும் மனம் எங்கெங்கோ பாய்ந்து சுற்றி அலைந்து வருகிறது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிச் சோர்வுறுகிறது.

உணவை வேளைக்கு வேளை தேடவேண்டிய நெருக்கடியில் உள்ளவர்களின் மனம் அலைவது புரியக்கூடியது. எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான நிலையைக் கண்டுவிட, கோட்டைகள் கோடி கட்டுவதும் வியப்புக்குரியதல்ல; குறையும் அல்ல. வாழ்நாள் முழுவதும் உண்பதற்கும் உடுத்துவதற்கும் போதியவற்றைப் பெற்றவர்கள் மனமாகிலும் சும்மா இருக்கிறதா? இல்லை. அதுவும் நொடிக்கு நொடி எந்தெந்தக் கோடிக்கோ பறந்து பதறுகிறது.

சோலையில் ஓடி விளையாடினால் சரி. சாக்கடையில் வீழ்ந்து வீழ்ந்து தத்தளிக்கிறது. ஒரு சாக்கடையில் வீழ்ந்து தப்பிய பிறகும் தெளிவும் பெறுவதில்லை. மீண்டும் மீண்டும் அதே தவற்றில் தோய்கிறது. கீழ்மை மட்டுமல்ல, மனத்தின் திருவிளையாடல்.

சிறப்பு, சான்றாண்மை ஆகியவைகூட மனத்தின் அறுவடைகள் இவற்றின் கொடி முடிகளைச் சிலபோது, சிலபேர்களுடைய மனங்கள் எட்டிப் பிடிக்கின்றன. மிக உயர்ந்ததை, எய்திய பிறகாகிலும் அதே உயரத்தில் ஊன்றி நின்றுவிடுகிறதா? இல்லை.

பொத்தென்று படுபாதாளத்தில் வீழ்ந்துவிடுகிறது.

ஆன்றோர்க்கே 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்' கைவராதபோது, இந்தக் கலை எனக்கு மட்டும் எப்படிக் கைவரும்?

நானும் மற்றவர்களைப்போல் மனத்தின் திருவிளையாடல்களில் சிக்கிச் சிக்கித் தவிக்கிறேன்.

நல்ல வேளையாக, அது என்னை எந்தச் சாக்கடையிலும் தள்ளி மூழ்க வைத்துக் களியாட்டம் போடுவதில்லை. சென்ற காலச் சிறப்புகளை எண்ணி ஏங்க வைப்பதுண்டு.

'வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுகிறோமே' என்று நாட்டிலுள்ள வளர்முக வாய்ப்புக் கூறுகளை நினைந்து நினைந்து, பல சமயங்கள் சோகத்தில் ஆழ்வதுண்டு.

மரம் உயிரோடிருக்கும் மட்டும் வசந்தத்தின் துளிர்களையும் மலர்களையும் நிச்சயம் காண்போம் என்னும் நம்பிக்கைக்கு இடமுண்டு.

நம் சமுதாயம் வாழும் வரை, மக்களே முன் வந்து மலர்ந்து மணம் பரப்பி, கைகொடுத்துச் சமுதாயத்தை உயர்த்திவிடுவார்கள் என்னும் நம்பிக்கை, அவா என்னுள் அடிக்கடி எழுந்து அமைதிப்படுத்துவதுண்டு.

விக்டோரியா விடுதி ஆண்டுவிழா

அண்மையில் ஒரு நிகழ்ச்சி. அவ்வேளை மின்னலினும் விரைந்து என் சிந்தனைகள் மின்னின; ஒலியினும் விரைவாகப் பறந்தன. அதைப் பங்கிட்டுக் கொள்வது என் கடமை.

1978ஆம் ஆண்டு மார்ச் மூன்றாம் நாள் சென்னை விக்டோரியா மாணவர் விடுதியின் ஆண்டுவிழா. 1928 ஜூலைத் திங்களில் பதினாறு வயதுப் பையனாக அவ்விடுதியில் சேர்ந்தேன். அதன் பொன் விழாவைக் கொண்டாடுவதுபோல் - அதை அறியாமலே - என்னை இவ்வாண்டு நிறைவு விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அழைத்தார்கள். நானும் ஏற்றுக் கொண்டேன்.

அன்று மாலை வழக்கம்போல் உண்டாட்டு. அது முடிந்ததும் மாநிலக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன், விடுதிக் காப்பாளர் பேராசிரியர் சரவணன், மாணவத் தலைவர்கள் ஆகியோரோடு என்னை மேடை ஏறச் செய்தார்கள். மாணவப் பருவத்தில் பெஞ்சின்மேல் நிற்காததற்குத் தண்டனையோ?

விழா தொடங்கிற்று. ஆண்டறிக்கை படிக்கப்பட்டது. அதில் இவ்விடுதி எப்படித் தோன்றிற்று என்பது தொட்டுக் காட்டப்பட்டது. செவி கூர்மை ஆயிற்று.

சென்னை மாநிலக் கல்லூரியில் 1884 ஆம் ஆண்டு முதல் 1893ஆம் ஆண்டுவரை பூண்டி அரங்கநாத முதலியார் என்பவர் பேராசிரியராக விளங்கினார்.

அவர் கணக்குப் பாடமும் தத்துவப் பாடமும் கற்பித்து வந்தார். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்றார்.

மாணவர்கள் நெஞ்சிலும் நிலையாக இடம் பெற்றிருந்தார்.

மறைந்த இப்பேராசிரியரின் அருந்தொண்டை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்க, சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில் கூடிய பொதுமக்கள் முடிவு

செய்தார்கள். மாணவர் விடுதியே அவருக்குப் பொருத்தமான நினைவுச் சின்னம் என்று முடிவெடுத்தார்கள்.

அக்கால ஆளுநரின் நிர்வாக சபையில் நிதிப் பொறுப்பேற்றிருந்த திரு. பிலிப்ஸ் என்பவர் தலைமையில் ஒரு செயற்குழு அமைக்கப் பட்டது.

திரு. ஸ்டுவர்ட் என்ற வெள்ளையரும் திரு. வீரராகவாச்சாரியார் என்ற தமிழரும் செயலாளர்களாக இருந்தனர். அக்காலத்திலேயே ரூபா 75000 நிதி திரண்டது. விக்டோரியா மாணவர் விடுதி உயர்ந்து எழும்பிற்று.

இச்செய்தியை என் காதுகள் கேட்டன. முற்காலத் தமிழர்கள் நன்றி பாராட்டத் தெரிந்தவர்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே!

இக்காலத் தமிழரும் நன்றியுடையவர்கள்!

சிந்தனையோ பறந்து சென்றது. 4-12-77 அன்றைய மாலைக்குப் பாய்ந்தது.

சென்னை இராஜாஜி மண்டப மேடைக்குச் சென்றது.

ஆம்; அன்று தமிழகக் கல்வித்துறையின் நூற்றைம்பதாவது ஆண்டுவிழா என்ற பெயரில் நடந்த விழாவை நினைத்துக் கொண்டது.

இன்றையக் கல்வி அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகத்தின் அறவுணர்வின் விளைவாக என்னைப் போன்ற ஓய்வு பெற்ற இயக்குநர்களுக்கும் - பழஞ் சோறுகளுக்கும் - இடம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தது.

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று அறிஞர் அண்ணா கற்றுத்தந்த பாடத்தை நடைமுறைப்படுத்த முயலும் பண்பினை எண்ணிப் பாராட்டிற்று.

'கல்வித் துறையில்', இணையில்லாத சிறப்பான பணியாற்றித் தமக்கெனத் தனியிடம் பிடித்துக் கொண்டவர் நெ.து. சுந்தரவடிவேலு' என்று தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு மனோகரன் மனம்விட்டுப் பாராட்டியது நினைவில் மின்னித் தெம்பு ஊட்டியது.

'பள்ளிக்குச் செல்லும் எல்லா மாணவ மாணவிகளும் கட்டாயமாகச் சீருடையில் செல்ல வேண்டும்.

'அது ஏழை பணக்காரர் என்னும் வேற்றுமை உணர்ச்சியைக் குறைக்க உதவும். சீருடை இயக்கத்தை நான் தொடக்கத்தில் இருந்து ஆதரிப்பவன்.

'பல ஆண்டுகளுக்கு முன்பே நான் நடத்தி வந்த இராஜேஸ்வரி பள்ளிக்கு அப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிர மணியத்தையும் இயக்குநர் நெ.து. சுந்தரவடிவேலுவையும் அழைத்துச் சீருடை வழங்க ஏற்பாடு செய்தேன்' என்று விழாத் தலைமையேற்ற

மக்கள் திலகம் மாண்புமிகு முதல் அமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் மனந்திறந்து பெருந்தன்மையோடு கூறியது நினைவிற்கு வந்தது; மெய்சிலிர்த்தது; புல்லரித்தது. நன்றிப் பெருக்கால் என்னையும் அறியாமல் என் தலை தாழ்ந்தது.

அக்காலத் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியின் சிறப்பைப் பாராட்டப் பெரியார் இல்லாவிட்டாலும், காமராஜ் இல்லாவிடினும், அறிஞர் அண்ணா அகன்றுவிட்டாலும், மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் இருக்கிறார்.

இவர் ஆட்சிக் காலத்திலாவது, மீண்டும் சீருடை இயக்கம் தழைத்து, நாடு முழுவதும் பரவி எல்லோரும் பள்ளிக்குச் செல்லவும், எல்லா நாள்களும் செல்லவும், எல்லோரும் நல்ல மதிப்பெண் பெற்றே தேர்ச்சி பெறவுமான நன்னிலை உருவாகிவிடலாம் என்னும் நம்பிக்கை பொங்கிற்று.

தமிழுக்கு அமுதென்று பேர்

அதோ யாரையோ பெயர் சொல்லி அழைப்பது காதில் வீழ்ந்தது. சிந்தனை மேடைக்கு வந்தது. கண்கள் மேடைப்படிகளை நோக்கின.

வளர்ந்த வாலிபர், கார்வண்ணன், பெருமிதத்தோடு படியேறி வருகிறார்.

விடுதியிலிருந்து விலகிப் போவோர் சார்பில் வாழ்த்துகள் கூற அவர் வருகிறார் என்று விடுதிக் காப்பாளர் டாக்டர் சரவணன் சொன்னார்.

பெயர் என்ன என்று வினவினேன்.

'காமராஜர்'

புனிதர் பெயரல்லவா? ஏழைபங்காளர் பெயரல்லவா? கோடி கோடியைத் திரட்டிச் செலவழித்த போதிலும் ஒரு காசும் தனக்கென்று ஒதுக்கிக் கொள்ளாத சான்றோர் பெயர் அல்லவா?

எனவேதான் அப்பெயர் என் காதில் வீழ்ந்தபோது, சிந்தனை வெளியில் சுழன்று கொண்டிருந்த நான், அக்கணத்திலேயே பொத்தென்று கீழே வீழ்ந்தேன் என்பது புலனாயிற்று.

மாணவர் காமராஜ், ஒலிபெருக்கியின் முன் நின்றார். தமிழ் மழை பெய்தார்.

பருவகாலக் குற்றால அருவியெனப் பொழிந்தார். அவர் வெண்கலக் குரல் அவையோரைக் கவர்ந்தது.

கம்பன் காட்டிய இரண்டு காட்சிகளை அவையோருக்குக் காட்டினார்.

கடமை பற்றி, இராமன் முடிசூட்டிக்கொள்ள ஒப்பியதையும் பின்னர்க் கட்டுப்பாட்டைக் காக்கக் கானகம் செல்ல உடன்பட்டதையும்

இருவேறு நிலைகளிலும் முகங்கோணாமல் அன்றலர்ந்த தாமரையாகக் காட்சியளித்ததையும் அழகுபட விரித்துரைத்தார்.

வாழ்த்துரை அனுமன் வால் போன்று நீளுமோ என்று அஞ்சிய வேளை, இந்நூற்றாண்டிற்குப் பாய்ந்தார். புதுவைக் குயில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின்,

'தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என்று வரும் பாடலை முனை முறியாமல், உணர்ச்சி கெடாமல் பாடிப் பரவசப்படுத்தி முடித்தார்.

மகிழ்ச்சிக் கடலில் நீந்திய நான் மாணவர் காமராஜ், தமிழைத் தனிப்பாடமாக எடுத்துப் படிக்கிறாரோ என்று ஐயப்பட்டேன்.

அடுத்து அமர்ந்திருந்த கல்லூரி முதல்வர் திரு. ஜா. இராமச்சந்திரனிடம் அதை வெளியிட்டேன்.

அவ்விளைஞர் பொருளாதார முதுநிலை வகுப்பில் இரண்டாம் ஆண்டில் படிப்பதாக அறிவித்தார். படிப்பது பொருளியல்; மொழியோ தமிழ்.

மக்கள் இனத்திடம் மறைந்துகிடக்கும் திறமைகள் பலப்பல. அவர்கள் வளர வாய்ப்புகளும் வரம்பற்றன. ஏற்ற சூழ்நிலை உருவாகிவிட்டால்? 'எங்கெங்குக் காணிலும் ஆற்றலடா' என்று தலைநிமிர்ந்து பாடலாம்.

பொருளாதார மாணவராகிய காமராஜின் கணீரென்ற தமிழ்ப்பேச்சு வன்மை என்னைக் கவர்ந்தது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் விக்டோரியா விடுதி

இதே விடுதியில் நான் தங்கியிருந்தபோது, விடுதி விழாக்களில் எம்மொழி முழங்கும்? ஆங்கிலமே முழங்கும். தமிழ் முழங்காது.

அன்று தமிழ் மாணவர்கள் இல்லையா? இருந்தோம். எங்களுக்குத் தமிழ்ப்பற்று இல்லையா? இருந்தது. ஆயினும் ஏன் நீறு பூத்த நெருப்பாக இருந்தது? அன்றையச் சூழ்நிலை அப்படி.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்த இளைஞர்கள் யார்?

தென்னகத்து நான்கு மொழிகளுக்கும் உரியவர்கள்; தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் ஆகிய நான்கு மொழிக் காரர்களுமிருந்தார்கள்.

இரண்டொரு ஒரியா மொழிக்காரர்களும் சில உருது மொழிக்காரர்களும் தங்கியிருந்தனர். அன்றைய விக்டோரியா மாணவர் விடுதியில் தமிழர் சிறுபான்மையோர்.

ஏனையோர் எண்ணிக்கை பெரிது. எனவே விடுதி நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆங்கில மொழிவழி நடந்தன.

தமிழ் முழங்கும் இக்கால விடுதியின் நிலை என்ன? விடுதியில் தங்கியுள்ளோர் அநேகமாக எல்லோருமே தமிழர்கள்.

இந்தியா விடுதலை பெற்று, மொழிவழி மாநிலங்களை அமைத்துக் கொண்டதன் விளைவு, விக்டோரியா விடுதி, தமிழர் விடுதியாகிவிட்டது.

இதை அறிந்து மேலும் ஆய்ந்தேன்.

நான் தங்கியிருந்த காலத்தில் எல்லோருமே தங்கள் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு விடுதியில் இருந்தார்கள். எவருக்கும் அரசிடமிருந்து உதவிப் பணம் கிடையாது.

நிறைய மதிப்பெண்கள் பெற்ற திறமைசாலிகள் என்ற சாக்கிலும் எவரும் உதவிப் பணம் பெறவில்லை.

தலைமுறை தலைமுறைகளாக அழுத்தி வைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர்கள் என்று சொல்லியும் எவருக்கும் விடுதிப்பணம் கொடுக்கவில்லை.

எனவே சொந்தத்தில் வசதி பெற்றவர்களே, கல்லூரிக்கு வந்தார்கள்; விடுதிகளில் தங்கினார்கள்.

ஒரே வேளை, யாரோ ஒரு செல்வர், வள்ளலாகி, நிதியுதவி செய்ய, அதைக்கொண்டு கல்லூரியில் சேர்ந்திருந்தவர்கள் சிலரே ஆவார்.

என் கால விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்தவர்களில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பழங்குடி இளைஞர் எவரும் இல்லை.

சாதிப்பட்டியல்படி பின் தங்கியவர்களாகிய சிலர் இருந்தனர். அவர்கள் சாதியில் பின்தங்கியிருப்பினும் பண வசதியில் முன்னேறியிருந்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள்.

கல்லூரி மாணவர் சமுதாயத்தின் நிலை எப்படி?

மூன்றே மூன்று ஆதிதிராவிட மாணவர்கள்

அன்று, சென்னை மாநிலக் கல்லூரியில் மூன்றே மூன்று ஆதிதிராவிட மாணவர்கள் பயின்றார்கள்.

ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் படித்த பெரிய கல்லூரியில் ஆதிதிராவிட மாணவர்கள் எண்ணிக்கை மூன்றே மூன்றுதான். எவ்வளவு பெரிய சமுதாயக் கொடுமை!

இம்மூன்று ஆதிதிராவிட மாணவர்கள் ஏழைகளா? இல்லை. ஆதிதிராவிட சாதியில் பிறந்துவிட்ட, பணமுடை இல்லாத குடும்பத்தவர்கள். ஒருவர், ஆதிதிராவிட மக்களின் காவலர்களில்

ஒருவராக விளங்கிய திவான்பகதூர் இரட்டைமலை சீனிவாசனுடைய பேரனாகிய திரு. பரமேசுவரன்.

இவர் பட்டம் பெற்றபின், வேலையை நாடிப் போகவில்லை. பாட்டனாரைப் போலப் பொதுத்தொண்டில் மூழ்கினார். காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து, தொண்டாற்றி, உரிமை பெற்ற இந்தியாவில் சென்னை மாநிலத்தில் அமைச்சராக விளங்கினார்.

அவருடைய அகால மறைவு, பழங்குடி மக்களுக்குப் பேரிழப்பாகும்.

திரு. பாலசுந்தரம் என்பவர் இன்னொரு ஆதிதிராவிட மாணவர். இவரும் சென்னைவாசி. இவர், பட்டம் பெற்று அரசுப் பணியில் சேர்ந்து, ஐ.ஏ.எஸ். ஆகி, பல பொறுப்புள்ள பதவிகளில் சிறந்து விளங்கி, தமிழ்நாட்டுப் பணியாளர்கள் பொறுக்குக் குழுவில் உறுப்பினராகி ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற சில திங்களில் இவர் மறைந்துவிட்டார். இது கைதூக்கி விடப்பட வேண்டிய பழங்குடி மக்களுக்குப் பேரிடியாகும்.

திரு. தனசிங் என்பவர் மூன்றாவது ஆதிதிராவிட மாணவர். இவர் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

அம் மாவட்ட ஆதிதிராவிடர்களுக்குத் தலைவராக நற்பணி ஆற்றியபின், காங்கிரசு அமைச்சரவையில் அமைச்சராக விளங்கிய திரு. முனுசாமிப்பிள்ளைக்கு நெருங்கிய உறவினர் தனசிங்.

பின்தங்கிய வகுப்பு மாணவர்களும் நூற்றுக்குள் அடங்குவர்.

தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் பின்தள்ளப்பட்டவர் களாயினும் அக்கால மாணவர்கள், அரசின் உதவிப்பணத்தை எதிர்பார்த்துப் படிக்கவில்லை.

தங்கள் செலவில் படித்தார்கள். எங்கள் காலத்துக் கல்லூரிப் படிப்பு மேட்டுக் குடிகளுக்கும் பணம் படைத்தவர்களுக்கும் மட்டுமே கிட்டும்.

இக்காலத்தில்? விக்டோரியா விடுதி விழாவின்போது, விடுதிக் காப்பாளரைக் கேட்டேன்.

''எவ்வளவு பேர்கள் அரசின் உதவிப் பணத்தால் விடுதியில் தங்கிப் படிப்பவர்கள்?'' இது என் கேள்வி.

''நூற்றுக்கு எண்பது பேர்கள் போல உதவிப்பணத்தை நம்பி, இங்கே இருக்கிறார்கள். தங்கள் பணத்தைச் செலவிட்டுத் தங்குபவர்கள் சிலரே.''

அந்த எண்பது பேர்கள், பழங்குடி மக்கள் உதவித் தொகையோ, பின் தள்ளப்பட்டவர்களுக்கான உதவிப் பணமோ பெறுகிறார்கள். எத்தகைய சமூகப் புரட்சி!

25. கல்வி வளர்ச்சியின் படிகள்

இரட்டை ஆட்சியில் ஏற்பட்ட நன்மை

அன்னிய ஆட்சிக் காலத்தில், செல்வர்கள் வீட்டுக் காளைகள், பெரிய அதிகாரிகள் வீட்டுச் செல்வங்கள் நிறைந்திருந்த விக்டோரியா மாணவர் விடுதியில் 'இப்போது, சமுதாயத்தின் அடித்தட்டுகளில் இருந்தவர்களின் பிள்ளைகளே குவிந்திருக்கிறார்கள்' என்னும் தேன் வந்து என் காதுகளில் பாய்ந்தது. அதே நொடி என் எண்ணம் பறந்து ஓடியது. பிழைக்கத் தெரியாத மனம்!

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்! அப்போது நான்காம் வகுப்பு வரையிலாவது, இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்கும் வகையில் சட்டமியற்ற, நாட்டுப்பற்றுள்ள அறிஞர் கோபாலகிருஷ்ண கோகலே எடுத்துக் கொண்ட முயற்சிகள்; 'அது முடியாது' என்று ஆங்கில ஆட்சி எதிர்த்தது; சட்டம் வராமல் போனது; இத்தனையும் மின்னின.

அடுத்து?

வேறு வழியின்றி, ஆங்கிலேயன் இந்திய மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறையைப் புகுத்தியது. நிதிப்பொறுப்பைத் தங்கள் கைகளில் வைத்துக் கொண்டு, பழிக்கு ஆளாகும் பொறுப்புகளை மட்டும் இந்திய அமைச்சர்களிடம் விட்டது.

உரலுக்கு ஒருபக்கம் இடி; மத்தளத்துக்கு இருபக்கம் இடி. இரட்டை ஆட்சியின் கீழ் செயல்பட்ட அமைச்சர்களுக்கு இருபக்கமும் இடி.

'தேசத் துரோகிகள்' என்று ஒரு பக்கம் இடி. 'இதையும் அதையும் செய்யப் பணம் இல்லை' என்று ஆங்கில நிர்வாக சபை உறுப்பினரின் இடி.

இரண்டிற்கும் இடையிலும், சர்க்கஸில் உயரக் கம்பியின்மேல் நடப்பது போல் நடந்து, சில முற்போக்கு முறைகளைத் தொடங்கியது.

பனகல் அரசரின் தலைமையிலான நீதிக்கட்சி மந்திரி சபையில், கல்வி அமைச்சர் பாத்ரோ, சென்னை மாநிலத் தொடக்கக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றி, கோபாலகிருஷ்ண கோகலேயின் தோல்விக்கு ஈடுசெய்தது!

கல்வி வெள்ளம் மடை திறந்து எல்லாப் பக்கமும் பாய்ந்து விடுமென்று அஞ்சி, படிப்பிற்கு முந்திக் கொண்டோர் தூற்றித் தூற்றிப் பொசுக்கியது!

டாக்டர் சுப்பராயன், அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டமியற்றி, புதியதொரு பல்லைக்கழகத்தை நிறுவியது. இவை திரைப்படக் காட்சிகள்போல் ஓடின.

காங்கிரஸ் ஆட்சி வளர்த்த கல்வி

முதல் அமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைமையில் திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்து, சென்னை மாநிலத்தில் பல பேரூர்களில், முதியோர் எழுத்தறிவு நிலையங்கள், முதியோர் கல்லூரிகள் ஆகியவற்றைத் தோற்றுவித்தார்.

அவினாசிலிங்கனார் பதவி விலகியதுமே, முதியோர் கல்வி அலட்சியப்படுத்தப்பட்டுப் பொசுக்கப்பட்டது;

பல்லாயிரக்கணக்கான ஊர்களுக்குத் தொடக்கப் பள்ளியும் இல்லாத நிலையில் நாம் அரசியல் உரிமை பெற்றது;

உரிமை பெற்ற பிறகும் மக்கள் கல்வியை வளர்க்காதது;

பெய்யெனப் பெய்யும் மழையாகக் காமராசர் 'முதல் அமைச்சர்' பொறுப்பேற்றது! அந்தப் பெருந்தலைவர் காலத்தில் பள்ளியில்லாச் சிற்றூர் இல்லை, உயர்நிலைப் பள்ளியில்லாப் பேரூர் இல்லை என்னும் அளவிற்குக் கல்வி நிலையங்கள் பெருகியது;

ஊரார் ஒத்துழைப்போடு பதினைந்து இலட்சம் சிறுவர் சிறுமியருக்குப் பகல் உணவு போடச் செய்தது;

ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் பேர்களுக்கு, நன்கொடை வழியாகச் சீருடை வழங்கியது;

தமிழ்நாட்டு ஆசிரியர் பட்டாளம் தியாகப் பட்டாளமாக மாறி, மேற்பார்வைப் படிப்பைக் கூடுதல் ஊதியம் இல்லாமல், நடத்தியது;

ஞானத் தந்தை திட்டத்தைச் செயல்படுத்தியது;

முதல்வர் பக்தவத்சலம் மதுரைப் பல்கலைக்கழகத்தை நிறுவியது;

இவையும் தொடர்ந்து ஓடி மறைந்தன.

தி.மு.க. ஆட்சியில்

முதலமைச்சர் அண்ணா ஐந்தாண்டுகளில் எல்லா முதியவர்களுக்கும் எழுதப்படிக்கக் கற்றுத்தர முடிவு செய்து, ஐந்நூறு ஊர்களில் முதியோர் கல்வி மையம் தொடங்க நிதி ஒதுக்கியது;

அவை எதிர்பார்த்ததைவிட வெற்றிகரமாக நடந்தது;

கலைஞர் கருணாநிதி புகுமுக வகுப்பிற்கும் இலவசக் கல்வியை நீட்டியது;

இத்தனைப் பழங்கதைகளும், இணைத்த ஊமை நிழற்படமாக என் மனத்திரையில் ஓடின.

இன்று தமிழ்நாட்டின் கல்லூரி மாணவர் சமுதாய நிலையில் ஏற்பட்டிருக்கும் தலைகீழ் மாற்றத்திற்குப் பலரும் பலவும் உதவினர்.

ஆற்றுப் பெருக்கு சில நாள்கள் ஓடினால் போதும். இரு கரைகளிலும் வழிநெடுகிலும் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துவிடும்.

அரசியல் விடுதலை உணர்வு வெள்ளம்போல் பெருகியது. தன்னாட்சியைப் பெற்றுத் தந்ததோடு நிற்கவில்லை. பிற உரிமை உணர்வுகள் சுரக்கவும் உதவியது. ஏழை எளியவர்களுக்கும் கல்வி உரிமை - உயர் கல்வி உரிமை - உண்டு என்னும் உணர்வைப் பெருக்கிப் பொங்க வைத்தது.

தந்தை பெரியார் நீண்ட, இடையறாத பொதுத் தொண்டால் தூங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பினார். ஊர் ஊராக நாடிச் சென்று குட்டிக் குட்டி விழிக்க வைத்தார்.

பெரியார் 'ஆழ உழுது' பண்படுத்தி வைத்தபிறகு, கர்மவீரர் காமராசர் கல்விப் பயிரைத் தமிழ்நாடு முழுவதிலும் செழிப்பாக வளர்த்தார்.

பல பெரியவர்கள் பட்ட பாட்டால், உயர்கல்விகூட ஏழைகளுக்குத் தாராளமாக எட்டிவிட்டது.

குதிரையைக் குளத்தருகே கொண்டு போய் நிறுத்தலாம். நிறுத்தியவர் குடித்தால் குதிரைக்குத் தாகம் தீருமா? குதிரையல்லவா குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்?

'மேற்படிப்பு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு எட்டுமா? பின்தங்கியவர்களை வளர்க்குமா?' என்னும் கேள்விகள், இன்றும் கேட்கின்றன.

மேடையில் கேட்பதைவிட, கூடத்தில், திண்ணையில், தேன் சுரக்கக் கேட்கிறார்கள்.

இப்படிக் கேட்பவர்களைத் திட்டிப் பயன் என்ன? ஒன்றுமில்லை. மாறாக, அந்தக் கேள்விகளை அறைகூவல்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். செம்மையாகக் கற்று நன்றாகத் தேர்ச்சி பெற்றுப் பதில் உரைக்க வேண்டும்.

தரமாகத் தேர்ச்சி பெறுவதன் மூலம், தங்களுக்கும் மேற்படிப்பு எளிது என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

எல்லாச் சாதியாரும் கல்வியில் உயரலாம்

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, சாதிக்கும் படிப்பிற்கும் தொடர்பு இல்லை; ஒதுக்கப்பட்ட சாதியில் பிறந்துவிட்ட போதிலும், மேல்சாதிக்காரர்களைப் பின்னடையச் செய்துவிட்டு, முதற் பரிசுகளைத் தட்டிக் கொண்டு போக முடியும்.

'எம்மாம் பெரிது' என்று வியக்கும் பேரறிஞர் பட்டங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எட்டாதவை அல்ல; கிட்டக்கூடியவைகளே, என்பதை மேதை அம்பேத்கார் உலகறியச் செய்துவிட்டார். சட்டப்படிப்பு ஆதிதிராவிடர்களுக்கு எட்டும் என்பதை திரு. சிவராஜ் மெய்ப்பித்துக் காட்டினார்.

பரமேசுவரனும், பாலசுந்தரமும், புஷ்பராஜூம், தனசிங்கும் எளிதாகத் தேர்ச்சி பெற்றுக் காட்டிய பிறகும் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தயங்குவானேன்? தவறுவானேன்? இழிவை ஏற்றுக் கொள்வானேன்? பொறியியல் விற்பன்னர் ஆகமுடியும் என்று பிச்சுமணி போன்றவர்கள் விளக்கிவிட்டார்கள். இனியும் மலைப்பு ஏன்?

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'

இது பொய்யாமொழி; பொதுநெறி. எனக்கும் பொருந்தும்; மற்றவர்களுக்கும் பொருந்தும்; மனிதர்கள் எல்லோருக்கும் பொருந்தும்.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதை நினைவில் நிறுத்தினால்,

'ஒன்றே செய்க; அதுவும் நன்றே செய்க' என்று மணிக்கு மணி நினைவுபடுத்திக் கொண்டால்,

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்று வேளைக்கு வேளை கேட்டுக் கொண்டால்,

முயலையும் வெல்ல முடியும்; ஆமை இடையறாது, சோம்பாது முயன்றால் என்று உணர்ந்தால்,

'கல்விக் கன்னி, பொறாமைக் கன்னி, வேறொன்றை நோக்கினாலே, கல்வி சுணங்கும்' என்னும் தெளிவு ஏற்பட்டு விட்டால்,

'போகிற போக்கிலே, பெறமுடியாது தரமான கல்வியை; ஒரு மனப்பட்டுக் கற்கும்போது பல்வகைக் கல்வியும் எளிதாகும்' என்பதைத் தெரிந்து முயன்று நடந்தால்,

தாழ்த்தப்பட்டவர்களும் பின்தங்கியவர்களும் 'ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால் என்னும் நிலையில் சிக்கிக் கொள்வார்களா?

'நம் கல்விக்குச் சில மணி; பிறர் சண்டைக்குப் பல மணி' செலவிட்டுவிட்டு, ஏமாறுவார்களா? மற்றவர்களைப்போல், கருமமே கண்ணாயிருப்பார்களே! ஒருமனப்பட்டுப் படிப்பார்களே!

'படியுங்கள்! படியுங்கள்! மேலும் படியுங்கள்! என்பதை வாழ்க்கை நெறியாக்கிக் கொள்வார்களே!

இப்படி என் சிந்தனை சுழலும்போது.

இரத்தத்தில் கலந்த அடிமைப் புத்தி

'பழக்கம் கொடியது பார்; பாறையாயினும் கோழி கிழிக்கும்' என்னும் மின்னல் வெட்டிற்று.

தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் கவனத்தைச் சிதைக்கும் கொடிய பழக்கம் எது? அவர்களின் கல்விக்கு வேர்ப்புழுவாகச் செயல்படும் தீய பழக்கம் எது?

அடியாட்களாகச் செயல்படும் பொல்லாத பழக்கம். மற்றவர்களுக்கு அடியாட்களாகச் சென்று, உறவினர் மண்டைகளை உடைத்துக் கொண்டு, அல்லல் படும் அவலப் பழக்கம்.

புகைதலும் பகைத்தலும் நமக்குப் புதிதல்ல; நம்மை மிஞ்சப் போட்டியிடுவோர் மேல புகைதல், மன்னிக்கக்கூடிய வலிவின்மை,

தன் வரையில் அடங்கி வாழும் பங்காளியின் மேலும் பாய்ந்து பிடுங்குதல் மானுடத்தின் காய்ச்சல்; தமிழர்களின் தனியுடைமை.

எனவே, தலைமுறை தலைமுறைகளாக, அண்ணன் மிராசுதாரும் தம்பி மிராசுதாரும் கொடும் பகைவர்களாக இயங்குவார்கள்.

ஒருவரை ஒருவர் கவிழ்க்க, விழுங்கச் சதி செய்வார்கள்; திட்டந் தீட்டுவார்கள்; அவர்களுக்குச் சூழ்ச்சி சொல்ல, 'கெட்டிக்காரர்'கள் சேர்வார்கள்.

கடைசியில் அண்ணனுக்கும் தம்பிக்கும் சண்டை மூளும். ஆனால்,

அண்ணனும் திண்ணையை விட்டு இறங்க மாட்டார்; தம்பியும் திண்ணையைவிட்டு விலக மாட்டார். இருவர் மேலும் அடி விழாது; தூசி படியாது.

இருவரையும் முடுக்கிவிடும் கெட்டிக்காரர்கள் நிலையும் அதுவாகவே இருக்கும். இவர்கள் உடம்பு நோகாமல் சண்டை யிடுவார்கள். ஆனால்?

இருதரப்புப் பண்ணை ஆள்களுக்கும் ஆணை பறக்கும். எத்தனையோ நூறு ஆண்டுகளாகக் கீழ்ப்படிந்தே வந்தவர்கள் ஆயிற்றே அவர்கள்!

நொடியில் எதிர் எதிர் அணிகளாக நிற்பார்கள். கம்பும் கழியும் கத்தியும் கடப்பாரையும் பிடித்து நிற்பார்கள்; சவால் விடுவார்கள், பாய்வார்கள்; மோதுவார்கள்; உடைப்பார்கள்.

மண்டையோ, கையோ, காலோ உடைய வீழ்வார்கள். ஏழைபங்காளிகள், தம் கண்ணையோ, காதையோ, கையையோ இழப்பார்கள்.

எந்த அணியினர் செத்தாலும் தனிச்சுடுகாடே. மிராசுதார்கள் செத்தால் சுடும் சுடுகாட்டிற்கு மற்ற எந்த வீரரையும் கொண்டு போக முடியாது.

பண்ணையார்கள் சண்டைக்குப் பண்ணையாள்கள் அடிபட்டு உதைபட்டு, அவதிப்படும் பழக்கம், தாழ்த்தப்பட்டவர்கள் பிறவிநோயாகத் தொடர்கிறது.

அது சும்மா இருக்குமா? வேறு நிலைக்கு மாறியும் வெளிப் படுகிறது.

எவர் எவர் வாழ்விற்காகவோ இவர்கள் எதிர்காலம் பலியிடப் படுகிறது.

கட்சி அரசியல் பண்ணையார்கள்

தன்னாட்சி பெற்ற பிறகு நிலப் பண்ணையார்களைக் கட்டுப்படுத்திவிட்டோம். பலரை, கடைநிலை ஊழியர்களின் நிலைக்குத் தள்ளிவிட்டோம். அவர்களுக்குப் பதில்புதிய பண்ணையார்களை வளர்த்துவிட்டோம்.

அன்று நிலப் பண்ணையார்கள் இட்டது சட்டம்; எவ்வளவு சிறிய குறைக்கும் - குற்றத்திற்கல்ல - பண்ணையாட்களைக் கட்டி வைத்து அடிக்கலாம்; அது எழுதாச் சட்டம்; இதற்குத் துணை, அடிபடுகிறவர் களின் உறவினர்களே!

தங்கள் கால் வயிற்றுக் கஞ்சிக்காக, பங்காளிகளைத் துன்பப்படுத்த உடந்தையாக இருந்தார்கள். இன்று?

அரசியல் பண்ணையார்கள் ஏராளம். நாளைக்கொரு கட்சி முளைக்கும்; ஆளுக்கொரு கட்சி தோன்றும்.

அக்கட்சிகளின் பெரியவர்கள் புதிய பண்ணையார்கள். ஒரு நாள் ஒற்றுமையாக இருந்தாலும் அவர்கள் தலைகள் வெடித்துப் போகும்.

எனவே, உப்புப் புளிக்கு உதவாத சிறு மாறுபாடுகளுக்காகவும் கிளர்ச்சிகள், போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் வெடிக்கும். வெடித்தால்?

பெரியவர்கள் நெற்றியில், சந்தனப்பொட்டு அளவுகூட அழுக்குப்படியாது. முள் தைக்கும் அளவு தொல்லையும் வராது. கட்சித் தொண்டர்களே முன்னே தள்ளிவிடப் படுவார்கள்.

ஊர்வலங்கள், முழக்கங்கள், தடைமீறல், தடியடிகளைத் தாங்குதல் ஆகிய தியாகங்களுக்காக அல்லவா தொண்டர்கள் பிறந்திருக்கிறார்கள்?

முந்திய தலைமுறை வரையில், நிலப்பண்ணையாரின் செல்வாக் கிற்காக, பெருமைக்காக, பண்ணையாட்கள் பலியானது போல,

இத்தலைமுறையில் அரசியல் கட்சிப் பண்ணையார்களின் செல்வாக்கிற்காக, பெருமைக்காக, தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய

சாதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் பலியாகிறார்கள்; படிப்பைப் பாழாக்கிக் கொள்ளுகிறார்கள்.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில், மாணவர் அணிகளில் உற்சாகத்துடன் முன்னே நின்றவர்கள், மேல் சாதி மாணவர்கள்.

இன்று அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். தங்கள் வளர்ச்சியில் கருத்தூன்றிக் கற்கிறார்கள்.

என்று தணியும் அடிமையில் மோகம்!

தாழ்த்தப்பட்டவர்களும் பின்தங்கியவர்களும் பிஞ்சிலே பழுக்க வேண்டுமா? அரசியல் கட்சிகளின் அடியாட்களாகச் செயல்பட வேண்டுமா? மேற்படிப்பைக் கோட்டை விடவேண்டுமா?

இவர்களைக் காப்பாற்றக் கருதி, அடிமட்டத்திலே கிடந்தவர்களை மேல் மட்டத்திற்கு வரும்படி வழிவிட எண்ணி, அறிஞர் அண்ணா, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போதே,

'ஆசிரியர்களையும் மாணவர்களையும் தீவிர அரசியல் ஈடுபாட்டில் தள்ளி விடுவதில்லை என்னும் பெரிய மனித உடன்படிக்கையை, சென்னைச் சட்டமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்வோம்' என்று முன்மொழிந்து, ஒருமனதாக ஒப்புக் கொள்ளச் செய்தார்.

அண்ணா, முதல் அமைச்சரான பிறகு இதை நிறைவேற்றியிருந்தால்,, 'தமது ஆட்சியின் வசதிக்கு இந்த முறை' என்று உள் எண்ணம் கற்பிக்கக்கூடும்.

மாணவர்களைக் கிளர்ச்சிக்குப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தபோது, இந்நிலையை உருவாக்கியது, தாழ்த்தப்பட்டோரின் கல்வி வளர்ச்சியில் அண்ணா கொண்டிருந்த எல்லையிலா நல்லெண்ணத்தால், இடையில் முறிந்த பத்திய நிலையை மீண்டும் உருவாக்க அறிஞர் அண்ணா விழைந்தார்.

இதைக் கருத்தில் கொண்டு, கல்வியின்மேல் கருத்தாயிருந்தால் இன்றைய நன்னிலை தொடரும்.

இப்படி அறுபது ஆண்டு காலத்தை வட்டமிட்டது நினைப்பு.

26. அரசியலில் சேராதே

மாணவர்களும் அரசியலும்

மாணவர்கள் தீவிர அரசியலில் ஈடுபடக் கூடாது.

இது சந்தர்ப்பவாதமல்ல. ஒரு சாராரின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று.

இது அச்சத்தில் முளைத்ததல்ல; கோழைத்தனத்தால் முளைத்த கோரையல்ல; தெளிவில் வளர்த்த தென்னை.

வீரத்தின் முனைப்பால் விவேகத்தை இழந்துவிடக் கூடாது.

'மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்வதோடு நிற்பது நல்லது' என்னும் கொள்கை, இந்த அடிப்படையில் வளர்ந்தது.

அறிஞர் அண்ணா, மாணவப் பருவத்தில் பின்பற்றிய இக்கொள்கை, அவருடைய தலைமைத் தகுதிக்குத் தடையாக நிற்கவில்லை; மாறாகத் துணை நின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் ஓட்டங்களை, சூழல்களை அவர் மாணவப் பருவத்தே கற்றுத் தெளிந்தார்.

அத்தெளிவு, மக்கள் இயக்கத்தை எளிதாக நடத்திச் செல்ல அவருக்குத் துணை நின்றது.

பிஞ்சிலே பழுப்பதுபோல், மாணவப் பருவத்தே, எவருக்காகிலும் கொடி தூக்கித் திரிந்திருப்பாரேயானால், பேரறிஞராக உருவாகியிருக்க மாட்டார்.

புறநானூறு போதிக்கும் பாடம்

பண்டைத் தமிழ்நாட்டு நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது.

போர் முரசு கொட்டிற்று. வீட்டிற்கு ஒருவராக வேல் எடுத்து வேங்கையெனப் புறப்பட்டனர். ஆண் மக்கள், அலை அலையாகப் போர்க்களம் நோக்கிச் சென்றார்கள்.

கயமை தொன்மையானது. சொல்லத் தகாத பொய்யொன்றைச் சொல்லி வைத்தாள், பொறாமைக்காரி ஒருத்தி. கேட்கத் தகாத சொல்லொன்று தமிழ்த் தாயின் செவியில் வீழ்ந்தது.

'என் மகனா? முதுகில் புண்பட்டு மடிந்தானா? அத்தகைய கோழைக்கா நான் பால் கொடுத்தேன். இது மெய்யாயின் என் மார்பை அறுத்தெறிவேன்' என்று சூளுரைத்துக் கிளம்பினாள் வீரத் தமிழ்த்தாய்.

போர்க்களத்தில் கண்டது என்ன? மைந்தனின் வீர முடிவு.

எந்நிலையில்?

புறமுதுகிட்டு ஓடும் நிலையிலா? இல்லவே இல்லை.

மார்பிலே வேல் தாங்கி வீழ்ந்தான் வீரப்பயல். தேறினாள்; மகிழ்ந்தாள்.

இவ்வீரக் கதையை எத்தனை முறை கேட்டோம்! எத்தனை சொல்லின் செல்வர்கள் கூறக் கேட்டு நிமிர்ந்தோம்! அச்செய்தியை ஊடுருவிப் பார்ப்போம்.

பால் மணம் மாறாப் பாலகன், போருக்குச் சென்றது எப்போது? வீட்டில் மூத்தவர்கள் இருந்தபோதா? இல்லை.

மூத்தவர்கள் வரிசைப்படி போராடி மாய்ந்த பிறகே, பாலகனுக்கு அண்ணன் எவரும் இல்லை என்னும் நிலை வந்தபோதே, தாய் தட்டிக் கொடுத்துப் போர்க்களம் அனுப்பினாள்.

இதுவே முறை. இதுவே விவேகம்.

இந்த விவேகம், அந்தப் புறநானூற்றுப் பாடலில் இழையோடியிருப்பதை மறத்தல் ஆகாது; மறுத்தல் ஆகாது.

பொறுப்புணர்ந்த தலைவர்

அப்போதுதான் சேர்த்து எடுத்த ஈர நெல்லை விதைப்பது தவறு. அதைப் போன்றதே பள்ளி, கல்லூரி மாணவர்களை அரசியலில் விதைப்பதும்.

இளவட்டங்கள், அறிவிலும் ஆற்றலிலும் முற்றிக் கனிந்து, ஒன்றுக்குப் பத்தாகப் பயன்படவேண்டியவர்கள்.

அப்படியிருக்க, ஆத்திரத்தில், இவர்களை ஊர் வம்புகளில் தள்ளிவிடுவது இளைஞர்களுக்கும் இழப்பு; அவர்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் இழப்பு.

இக்கொள்கையையே பெரியார் பொதுமக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்; மூதறிஞர் இராஜாஜி ஆதரித்தார்.

இதையே என் தந்தை எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

கொள்கைப் பிடிப்புள்ள என் தந்தை

என் தந்தைக்கு அரசியல் ஈடுபாடு நிறைய. ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் அவர் சுழன்று சுழன்று வேலை செய்வார். 1920, 23, 26 ஆண்டுகளில் நடந்த சென்னை சட்டமன்றத் தேர்தல்களில், திரு. ஆ. இராமசாமி முதலியார் எங்கள் மாவட்டத்தில் வேட்பாளர்.

எங்கள் பகுதியாகிய மாகறல் பிர்க்காவில் இராமசாமி முதலியாருக்கு வாக்குத் திரட்டும் பொறுப்பை என்னுடைய தந்தையார் ஏற்றிருந்தார்.

அதில் எவ்வளவு வெற்றிகரமாகச் செயல்பட்டார்?

அப் பிர்க்காவில் பதிவான ஆயிரம் வாக்குகளில், தொள்ளாயிரத்துச் சில்லறை வாக்குகள் திரு இராமசாமி முதலியாருக்குப் பதிவாயின.

பார்ப்பன வாக்காளர்களில் சிலர், என் தந்தையின் தொடர்பால் ஆற்காடு முதலியாருக்கு வாக்களித்தார்கள்.

நாற்பத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சர். ஆ. இராமசாமி முதலியாராக, அப் பெரியவரை, பாரிசில் யுனெஸ்கோ அலுவலகத்தில் காண நேர்ந்தது. வணங்கினேன். என் பெயரைச் சொல்லி நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

'உன்னையும் தெரியும்; உன் தந்தையையும் தெரியும். நான் சட்டமன்றத் தேர்தலுக்கு மாகறல் தொகுதியில் நின்றபோது உங்கள் உறவினர்களில் ஒருவராகிய திரு பேட்டை முத்துரங்க முதலியார் என்னை எதிர்த்து நின்றார்.

'உன் தந்தையும் அவர் உறவினர்களும் போரூர் முதலியார்களும் உறவைவிடக் கொள்கையே பெரிது என்று கருதி என்னையே ஆதரித்தார்கள்.

'சாதி உணர்வு கொள்ளாமல் கொள்கை உணர்வோடு செயல்பட்ட அவர்களை எப்படி மறக்க முடியும்?

'தந்தை வழி மகன் என்பதும் எனக்குத் தெரியுமே' என்று சர். இராமசாமி முதலியார் கூறியபோது, நான் மெய்மறந்து நின்றது வியப்பில்லை.

மூன்றாவது பொதுத் தேர்தலில் இராமசாமி முதலியார் தோற்றார். ஆயினும் கால ஓட்டத்தில் உலகம் உவக்கும் உயரத்திற்கு வாழ்க்கையில் உயர்ந்தார். அவ்வளர்ச்சியின் இரகசியத்தை அன்று தெரிந்து கொண்டேன். அது என்ன? நன்றி மறவாமை. நன்றி மறவாமை.

மாணவர்களுக்கு அரசியல் கூடாது

அக்காலத்தில், மூன்றாவது பொதுத் தேர்தலின்போது, திரு. ஆ. இராமசாமி முதலியார், எங்கள் பக்கத்திற்குத் தேர்தல் பிரசாரம் செய்ய வந்தார்.

எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் காவாந்தண்டலம் கிராமத்திற்கு வந்து பேசினார்.

அது ஒலிபெருக்கி இல்லாத காலம்; முதலியாரின் ஆங்கிலச் சொற்பொழிவை திரு எஸ்.எஸ். அருணகிரிநாதர் அவர்கள் தமிழாக்கஞ் செய்தார்.

அக்கூட்டத்திற்குச் சென்று, திரு இராமசாமி முதலியாரின் ஆங்கிலச் சொற்பொழிவைக் கேட்க விரும்பினேன்; தந்தையிடம் கூறினேன்.

கூட்டத்தை ஏற்பாடு செய்தது என் தந்தை. அவருக்கும் முதலியார் மேல் அளவற்ற காதல். சொந்த இரட்டை மாட்டு வண்டியில் தாவாந்தண்டலம் சென்று வந்தார்.

வண்டியில் எனக்கும் இடம் இருந்தது. எனினும் என் தந்தை என்னை அழைத்துப் போக மறுத்துவிட்டார்.

அப்போது, நான் ஒன்பதாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அவ்வயதில் தேர்தல் கூட்டத்திற்கு வந்தால் பேச்சுக் கேட்பதில் சுவை அதிகமாகி விடுமென்று என் தந்தை கருதினார்.

அரசியல் காட்டாற்றில் அவ்வயதில் சிக்கக்கூடாதென்று அஞ்சினார். பேச்சுக் கேட்பதில் சுவைமிகுந்தால், கல்வி பாழாகும் என்று என் தந்தை நினைத்தார்.

ஆகவே, என்னை வெவ்வேறு அரசியல் கட்சிப் பத்திரிகைகளைப் படிக்கத் தூண்டினாலும், தேர்தல் களத்தில் நாட்டஞ் செலுத்தக் கூடாதென்று நெறிப்படுத்தினார்.

என் தந்தை போதித்த பாடம்

என்னைக் கல்லூரியில் சேர்த்தபோது என் தந்தை பின்வரும் அறிவுரையை என்னிடம் கூறினார்.

''கன்னிப் பயிருக்குக் கவனம் அதிகம் தேவை. கல்லூரிக் கல்வி நமக்குக் கன்னிப் பயிர். கருத்தைக் கண்ட பக்கம் சிதறவிடாதே. படிப்பின்மேல் மட்டும் நாட்டஞ் செலுத்து.

''வகுப்பில் கற்றுக் கொள்ளாவிட்டால், வெளியில் கற்க முடியாது. உற்றார் யாரும் பட்டம் பெற்றதில்லை; ஆகவே உன் உதவிக்கு வரமுடியாது.

''விடுதி நண்பர்கள் எப்படியிருப்பார்களோ! இன்றைய உலகம் போட்டி நிறைந்த உலகம்.

''ஆகவே, நண்பர்கள், தங்கள் தங்கள் படிப்பையே கவனித்தால், குறைபட முடியாது. ஊர்ப் பெருந்தனங்களைவிடப் படிப்பு இப்போதைக்குப் பெரிது. இதை மறக்காதே.''

தந்தையின் அறிவுரையை மறக்கவில்லை. வகுப்பறையில் உள்ள வரையில் சிந்தையை அடக்கி, பாடத்தின்பால் செலுத்தினேன். எனவே, பாடங்கள், பெரும்பாலும் எளிதில் புரிந்தன.

சிலவேளை, வீட்டுப்பணி கொடுப்பார்கள். அதை - சிறப்பாகச் சிறப்புக் கணிதத்தைச் செய்யும்போது, எனக்கு உதவி தேவைப்பட்டது; தாராளமாக உதவியும் கிடைத்தது.

நண்பர்களின் திருக்கூட்டம்

கோவையிலிருந்து திரு என். சின்னசாமி, திரு இராமகிருஷ்ணன் என்ற இருவர் மாநிலக் கல்லூரியில் பி.ஏ. ஆனர்ஸ் (கணக்கு) படிக்க வந்தார்கள்.

இருவரும் கோவையிலேயே இண்டர்மீடியட் வகுப்பை முடித்தவர்கள். அன்று கோவையில் வெறும் பட்டப் படிப்பிற்கும் வாய்ப்பில்லை.

அன்று அரசினர் கல்லூரி மட்டுமே கோவைநகரில் இருந்தது. அதுவும் இரண்டாம் நிலைக் கல்லூரி.

எனவே, மேற்படிப்பிற்குச் சென்னைக்கோ, திருச்சிக்கோ, மதுரைக்கோ செல்ல வேண்டும்.

இவ்விருவரும் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார்கள்.

அந்தக் காலத்தில் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் கணக்கு ஆனர்ஸ் படிப்பது அரிது; வியப்புக்குரியது.

சாதாரணக் குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள், அரிய அப்படிப்பினை மேற்கொண்டதால் பலருடைய பாராட்டுக்கும் பாத்திரமானவர்கள்.

இருவரும் எளிதாகப் பழகும் இயல்பினர்கள்; கள்ளங்கபடமில்லாதவர்கள்; வீட்டுக் கணக்குப் பயிற்சிக்கு, இவர்கள் இருவருடைய உதவியையும் அடிக்கடிப் பெற்றிருக்கிறேன்.

'தம்பி உள்ளான் படைக்கஞ்சான், அண்ணன் உள்ளான் கற்க அஞ்சான்' என்பது போல் இருந்தது என் நிலை.

'போட்டி நிறைந்த கல்வி உலகில், தாங்கள் படித்து முன்னேறுவதிலேயே முனைப்பாயிருப்பார்கள்' என்று என் தந்தை அஞ்சியது வீண்.

மாணவப் பருவத்தில் நான் பெற்ற செல்வங்களில் எல்லாம் தலையாய செல்வம் நட்புச் செல்வம் ஆகும்.

நான் கல்லூரியில் கால் எடுத்து வைக்கும்போது, நான்கு அடி ஏழு அங்குல உயரமே இருந்தேன். கிட்டத் தட்ட அதே உயரம் உள்ள இரண்டொருவரும் என் வகுப்பிலிருந்தார்கள்.

எனினும் என்னையே எல்லோரும் 'பொடி' என்று அழைக்கத் தொடங்கினார்கள். கல்லூரியிலும் விடுதியிலும் இப்படிக் கிண்டலாக அழைப்பார்கள்.

இது சில நாள்கள் எரிச்சல் ஊட்டியது. வேறு வழியின்றிப் பொறுத்துக் கொண்டது நல்லதாயிற்று.

பலருடைய கிண்டலையும் ஏற்றுக் கொண்ட நான், பலருக்கு மிகவும் வேண்டியவனாகிவிட்டேன்.

என் நண்பர்களும் அவர்கள் வாழ்க்கையும்

விக்டோரியா விடுதியில் ஏற்கெனவே ஓராண்டு தங்கியிருந்த வாலாஜாபாத் எம்.டி. இராஜுவும் அவருடைய வகுப்பு மாணவர் ஒழலூர் சிவசங்கரனும் விரைவில் நண்பர்கள் ஆனார்கள்.

உதகையிலிருந்து வந்து என் வகுப்பில் சேர்ந்த திரு பி.கே. லிங்காகௌடர் என் நெருங்கிய நண்பரானார்.

இவர் படிப்பிற்குப் பின்னர் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார். சென்னைச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

நான் கல்வி இயக்குநராகித் தொடக்கப்பள்ளியில் பகல் உணவு, சீருடை ஆகியவற்றைச் செயல்படுத்த முயன்றபோது, எனக்குப் பெருந்துணை புரிந்தார். பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தவும் நிறைய உதவினார்.

அதே உதகையிலிருந்து வந்த என். லிங்கம் என்பவர் விடுதியில் எனக்கு அன்பர் ஆனார். இவருடைய கிராப் எப்போதும் கலையாது. அவ்வளவு அக்கரையோடு சீவுவார்.

இவர் வழக்கறிஞரானார். உதகை நகராட்சியின் தலைவராக உயர்ந்து நற்பணியாற்றினார். மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராகவும் விளங்கி, பொது நூலக வளர்ச்சிக்குத் துணை நின்றார்.

உதகையில் அரசினர் கலைக் கல்லூரி நிறுவ முன் வந்து துணை நின்றவர்களில் மேற்கூறிய இரு நண்பர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

மாணவப் பருவத்தே ஏற்பட்ட நட்பு முப்பது ஆண்டுகளுக்குப்பின் நிறையப் பலன் கொடுத்தது. எனக்கல்ல; நான் மேற்கொண்ட பொதுத் தொண்டிற்கு.

கோவையின் பெருந்தொழில் அதிபர்களில் ஒருவராக இன்று விளங்கும் திரு ஆர். வேங்கடசாமி என் வகுப்பு மாணவர். என்னோடு விடுதியில் இருந்தவர். எனக்கு நல்ல நண்பர்.

அதேபோல் அவருடைய உறவினர் திரு துரைசாமி நாயுடுவும் என் சகமாணவர். எனக்கு வேண்டியவர்.

காந்தியிடம் பற்றுக் கொண்ட மாணவர்கள்

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஓ.வி. அளகேசன் என் வகுப்பில் என் பிரிவில் முதல் குரூப்பில் சேர்ந்தார்; இருவரும் விக்டோரியா விடுதியில் இருந்தோம். நெருக்கமான நண்பர்களாக இருந்தோம்.

அவர் படிப்பில் சூடம். கல்லூரிக்கு வரும்போதே மகாத்மா காந்தியிடம் பற்றுக் கொண்டவர்.

கறவை மாடுகளின் கன்றுகளைக் கொன்றுவிட்டு, அத்தோல் உறையில் வைக்கோலை அடைத்து வைத்து, பசுக்களையும் எருமைகளையும் ஏமாற்றிப் பால் கறப்பது அக்காலச் சென்னையின் தனிச் சிறப்பு.

இக்கொடுமையைக் காணச் சகியாத அளகேசன் விடுதியில் பால் அருந்துவதை விட்டுவிட்டார். அவ்வளவு இளகிய மனத்தினராக இருந்தார்.

நான் கல்லூரியிலும் விடுதியிலும் சேர்ந்தபோது, திரு. சி. சுப்பிரமணியம் பி.ஏ. வகுப்பிற்காக மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். என்னோடு விக்டோரியா விடுதியில் இருந்தார்.

எனக்கு ஈராண்டு மூத்தவராகிய அவரிடம் நான் அடக்கத்தோடு பழகத் தொடங்கினேன்.

அவர், இளையன் என்று என்னை அலட்சியப்படுத்தவில்லை. என்னை அன்பனாகவே ஏற்றுக் கொண்டார்.

திண்டுக்கல் பி.வி. தாஸ், கோவில்பட்டி நா. சீனிவாசன், சத்தியமங்கலம் வையாபுரி ஆகியோர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கும் மேல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அனைவரும் ஒரே திருக்கூட்டம்; காந்தியவாதிகள்.

திரு.பெரியசாமித் தூரன், இன்டர் மீடியட்டில் இரண்டாம் வகுப்பில் இருக்கையில் நான் சேர்ந்தேன்.

இவரும் விக்டோரியா விடுதியில் இருந்தார். என்னைத் தம்பியாக அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

திரு.கு.சு. பெரியசாமி என் வகுப்பு மாணவர். இனிய நண்பர்.

திரு.ஆயண்ணன் என்னும் மற்றொருவர் என்னோடு ஒரே வகுப்பில் படித்தார். இருவரும் ஈரோடு வட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

திருவாளர்கள் இராமலிங்கம், விவேகானந்தம், வேணுகோபால் என்பவர்களும் என்னோடு படித்தார்கள். என்னோடு விடுதியில் தங்கியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் ஒரே குழு.

அதிலும் எனக்கு மூத்தவர்களாகிய திருவாளர்கள் தாஸ், சீனிவாசன், சி. சுப்பிரமணியம், பெரியசாமித் தூரன் ஆகியவர்களின் நிழல்போல இருப்பேன்.

அவர்கள் திருக்கூட்டத்தில் நான் சேரும்போது, அவர்கள் அனைவரும் கதர் அணிபவர்கள். நான் அன்னியத் துணியை அணிந்தவன்.

என் உடையை மாற்றிக் கொள்ளும்படி அவர்கள் என்னைக் கட்டாயப்படுத்தவில்லை. அவர்களோடு மிக நெருக்கமாக இருப்பதற்கு அது தேவை என்று சாடையும் காட்டவில்லை.

நான் 'குடியரசு'க்காரன்

'நான் அப்போது பெரியாரின் 'குடியரசு' வார இதழை வாங்கிப் படிப்பவன். அதுவும் காந்தியவாதிகளாகிய அவர்களுடைய நட்புக்கும் அன்பிற்கும் அடைக்குந் தாழாக அமையவில்லை. என்னே அவர்கள் பெருந்தன்மை!

திரு. சி.டி. நாயகத்தின் நெருங்கிய உறவினராகிய திரு.கமலசாமி என்பார் திரு. சி. சுப்பிரமணியத்தின் வகுப்பில் படித்து வந்தார். அவர் மட்டும் என்னிடம் 'குடியரசு'க்காரன் என்னும் அடிப்படையில் நட்புக் கொண்டார்.

இவர் பின்னர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக உயர்ந்தார். தமிழ் இசை இயக்கத்திற்குச் சிறப்பாகத் தொண்டாற்றினார்.

முன்னே குறிப்பிட்ட திரு. சின்னசாமியும் இராமகிருஷ்ணனும் குடியரசைப் படிக்கத் தவறமாட்டார்கள்.

நான் இரண்டாம் ஆண்டு விடுதியில் தங்கியிருந்தபோது, திரு அ. அளகிரிசாமி விடுதிக்கு வந்து சேர்ந்தார். மாநிலக் கல்லூரியில் வரலாற்றுப் பாட ஆனர்ஸ் வகுப்பில் சேர்ந்தார்.

மேற்கூறிய திருக்கூட்டத்தில் முக்கியமானவரானார். அவரும் காந்தியவாதி; கதர் அணிபவராகவே அறிமுகமானவர்.

இவர்கள் அனைவரும் எனக்கு ஊக்க மூட்டும், நம்பிக்கை யூட்டும் நண்பர்களாக விளங்கினார்கள்; விளங்குகிறார்கள்.

27. வனமலர்ச் சங்கம்

கங்கையும் யமுனையும் பிரம்மபுத்திராவும் கோதாவரியும் மகாநதியும் நர்மதையும் கிருஷ்ணாவும் காவிரியும் புகழ்பெற்ற ஆறுகள்.

இவை எத்தனையோ இலட்சம் ஏக்கர்களை வளப்படுத்துகின்றன.

பாலாறும் வைகையும் சில இலட்சம் ஏக்கர்களுக்குப் பாயலாம்.

இவை மட்டுமா மக்களை வாழ்விப்பவை?

நூற்றுக்கணக்கான சிற்றோடைகளும் சில ஆயிரம் ஏக்கர் பயிர்களுக்கு உதவுகின்றன.

சவ்வாது மலையிலே பிறந்து, கிழக்கே ஓடி, திருமுக்கூடலில் பாலாற்றோடு இரண்டறக் கலந்துவிடும் எங்கள் சேயாறுமே தன்னளவிற்கு, விளம்பரமில்லாத தொண்டாற்றி வருகிறது.

பத்தாண்டுகளாகவா? இல்லை. அதற்கு மேலும். நூறாண்டு களாகவா? இல்லை! பல நூறு ஆண்டுகளாக.

பல்லவன் காலத்தில் பணிபுரிந்தது; வளப்படுத்திற்று. சோழன் காலத்தில் பயிர்களைக் காத்தது.

எத்தனை தொன்மையானதானாலும் எவ்வளவு சிறப்புகளைப் பெற்றதானாலும் மக்கள் இனத்தோடு, இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்னும் சீரிய பாடத்தைக் கற்பிக்கவே, அடக்கமாக ஓடிக்கொண்டிருக்கிறது 'சேயாறு'; அதாவது செய்யாறு.

பொதுத்தொண்டிலும், கங்கைக்கும் காவிரிக்கும் ஒப்பான பேரியக்கங்களுக்கு இடமிருப்பது போலவே, சேயாறு போன்ற சிறிய இயக்கங்களுக்கும் இடமுண்டு.

அத்தகைய நல்ல இயக்கமொன்று, என்னுடைய கல்லூரி மாணவப் பருவத்தில் செயல்பட்டு வந்தது.

அதன் பெயர் என்ன?

வனமலர்ச் சங்கம்.

அவ்விதம் பெயரிடக் காரணம் என்ன?

'கானகத்திலுள்ள மலர் தன் வாசனையாலல்லாது பிறருக்குத் தெரியாதது போல, இச்சங்கமும் காரியத்தால்தான் தெரியவரும்' என்பதால்!

இதன் முதல் தலைவர் யார்?

திரு. சு. கோதண்டராமன். அவராலேயே இந்தப் பெயர் முன்மொழி யப்பட்டது.

சங்கம் எப்படி இயக்கமாயிற்று?

நான்கைந்து பேரூர்களில் விழுதுவிட்டுச் செயல்பட்டு இயக்கமாயிற்று.

அது எங்கே முளைத்தது?

திருச்சிராப்பள்ளியில் முளைத்தது.

என்று முளைத்தது? 6-7-1924 அன்று தொடங்கப் பெற்றது.

இளைஞர்கள், வ. அழகப்பன், சு. கோதண்டராமன், ரா. இலக்குமணன், அ. மகாலிங்கம், சிதம்பரம் ஆகியோர் கூடி வனமலர்ச் சங்கத்தைக் கண்டனர்.

நல்ல சிந்தனைகள் நான்கு திக்குகளிலும் தோன்றுவதுண்டு; பலரிடம் தோன்றுவதுண்டு.

மதுரையில் 10-2-1925ஆம் நாள் சில இளைஞர்கள் கூடி வனமலர்ச் சங்கம் என்னும் அதே பெயரில் மற்றொரு சங்கம் அமைத்தார்கள்.

இரண்டும் இணைந்தால் இயக்கமாகுமே என்னும் எண்ணம் எழுந்தது.

தன்னலம் தழைக்காத இளமைப்பருவம் அல்லவா? இரு சங்கத்தவரும் மதுரையிற் கூடினர். இதை முதல் ஆண்டு விழா என்று அழைத்தனர்.

25,26-4-1926 நாள்களில் கலந்து பேசி இரண்டையும் கிளைகளாக்க முடிவு செய்தார்கள். எழுவர் அடங்கிய மையச் செயற்குழுவை ஏற்படுத்தினார்கள்.

'சர்வாதிகாரம்' என்னும் சொல்லைக் கண்டு அவ்விளைஞர்கள் அஞ்சவில்லை போலும். எழுவர் கொண்ட செயற்குழுவிற்குச் 'சர்வாதிகாரக் கமிட்டி' என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

கோபிச்செட்டிப் பாளையத்தில் 10-6-1927இல் ஒரு கிளையை நிறுவினர். 31-12-1927இல் சென்னையில் கிளைத்தது. 8-1-1928இல் முசிரியில் கிளைவிட்டது. 20-8-1928இல் கொடுமுடி கிளையைக் கொண்டது.

சங்கத்தின் நோக்கம்

வனமலர்ச் சங்கத்தின் நோக்கம் என்ன? 'பொது ஜன நன்மைக்கு உழைப்பதே' உழைக்கும் வழிகளையும் திட்டவட்டமாக எழுதியிருந்தார்கள். வழிகள் எவை? பட்டியலைப் பாருங்கள்.

அ. மக்கள் சமரசம்.

ஆ. தமிழ் மொழி பேணலும் அதற்கு வழி காணலும்.

இ. கிராம அபிவிருத்தி.

உறுப்பினராகத் தகுதிகள் என்ன?

'பதினான்கு வயதிற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். சங்கத்தின் நோக்கத்தை ஒப்புக் கொள்ளுதல்; சங்க விதிகளுக்குக் கட்டுப்பட உறுதியளித்தல்' ஆகிய மூன்றாம். ஆண் பெண் இருபாலரும் உறுப்பினர் ஆகலாம்.

சந்தா உண்டா? உண்டு. எவ்வளவு? ஆண்டுக்கு நான்கு ரூபாய்கள். அக்கால நான்கு ரூபாய்கள் சிறு தொகையல்ல; ஒரு மூட்டை நெல்லின் விலை.

இளவட்டங்கள் இவ்வளவு செலுத்தி வனமலர்ச் சங்கத்தில் சேர்ந்தார்கள். எதை எண்ணி? பதவியையா? பட்டத்தையா? புகழையா? செல்வாக்கையா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

இளமைக்கு இயற்கையாகிய இலட்சியத் துடிப்பு; அரியதை, பெரியதை, பொதுமக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்னும் அவா - அவ்விளைஞர்களை உந்தின; மேலும் மேலும் உந்தின.

கள்ளங் கபடமில்லாத வெள்ளை உள்ளம் படைத்த இளைஞர்கள் பலர், தன்னலம் மறந்து, பொதுநலத்தை நினைத்துத் தொண்டாற்ற முன் வந்தார்கள்.

திங்கள் தோறும் கூடி, நாட்டுத்தொண்டு பற்றித் திட்டம் தீட்டினார்கள். ஆண்டு மாநாடுகள் நடத்தி, நாட்டின் நலிவையும் உயர்வையும் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

'பொதுஜன நன்மை' என்னும் பெயரில் அவர்கள் வளர்த்த உணர்வென்ன? விடுதலை உணர்வு.

'ஒவ்வொரு நாடும் தன்னாட்சி பெற வேண்டும்' என்னும் உணர்வை வளர்த்தது, வனமலர்ச் சங்கம்.

இலட்சியப் பிடிப்புள்ள இளைஞர்கள்

உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளுக்கு அப்பால் நின்று, இந்திய விடுதலையைக் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டார்கள்.

ஏற்றத்தாழ்வை வளர்க்கும் சாதி வேற்றுமை, வனமலர்ச் சங்கத்திற்கு உடன்பாடன்று.

'மக்கள் அனைவரும் சமம்' என்னும் நிலையை உருவாக்கச் சங்கக் காளையர் முயன்றனர். எப்படி உருவாக்குவது?

எல்லாரோடும் கலந்து உண்ணல்; கலப்புத் திருமணம் செய்து கொள்ளல்; இவ்வழிகளில் சமத்துவத்தை அடைய அமைதியாகப் பணி புரிந்தது, வனமலர்ச் சங்கம்.

எல்லாம் தமிழில்

உயர்நிலைப் பள்ளிகளிலும் தமக்குரிய இடத்தை முழுமையாகப் பெறாத காலகட்டத்தில், 'சின்னப்பிள்ளை'கள் பலர் தமிழ்மொழியைப் பேண முன்வந்தனர்; தமிழிலேயே பேசினர்; தமிழிலேயே கடிதத் தொடர்பு கொண்டனர். தமிழ் மொழி எல்லா நிலைகளிலும் ஆட்சிக்கு வரவேண்டுமென்று பேசினர்; விழைந்தனர்.

நாட்டுப்புறங்களே இந்தியாவின் நாடி நரம்புகள். அவற்றின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்.

விடுமுறை நாள்களில் சிற்றூர்களில் கூட்டம் போட்டுப் பொது அறிவுத் தொண்டு செய்ய முயன்றார்கள், வனமலர்ச் சங்கத்தார்.

ஆண்டில் பெரும்பகுதி, வேலையின்றிக் குந்திக்கிடப்பவர்கள், நாட்டுப்புற மக்கள். அவர்களுக்கு வேலை கொடுத்து, வாழ்வளிக்க முயன்றது கதர் இயக்கம்.

சங்க விதியாக இல்லாவிட்டாலும் சங்க உறுப்பினர்களில் பெரும் பாலோர் கதர் அணியத் தலைப்பட்டனர்.

இந்திய விடுதலையே குறிக்கோள்

வனமலர்ச் சங்கம் எந்தக் கட்சியைச் சார்ந்தது? எக் கட்சியையும் சாராதது. கட்சிச் சூழல்களுக்கு அப்பால் நின்று, இந்திய விடுதலைக்கும் மக்கள் சமத்துவத்திற்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சங்கம் பாடுபட்டது.

பெரியசாமித் தூரன் வனமலர்ச் சங்கத்தின் தேனீக்களில் ஒருவர். சி. சுப்பிரமணியம் சங்கத்திற்குக் கணக்குத் தணிக்கையாளர். என் நண்பர்கள் பலர் உறுப்பினர்கள். அவர்கள் என்னை உறுப்பினர் ஆகும்படி தூண்டினார்கள்.

வனமலர்ச் சங்கத்தில் சேர்ந்தேன்

சங்கத்தைப் பற்றிய தகவல்களை எழுதி, அதில் சேர விடை கொடுக்கும்படி என் தந்தைக்குக் கடிதம் எழுதினேன். மறுப்பு பதிலே வரும் என்று அஞ்சினேன். ஏன்?

அதற்குமுன், சென்னை பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தில் சேருவதற்கு ஒப்புதல் கேட்டு எழுதியிருந்தேன்.

அதற்கான தூண்டுதல் எப்படி வந்தது? நீதிக்கட்சியின் ஆங்கில நாளிதழில் பிழை திருத்துவோராகப் பணிபுரிந்த திரு. சமது என்பவர் என் விடுதிக்கு வந்தார். எட்டணாவிற்கு, இளைஞர் சங்கச் சார்பாக வெளியிட்ட நாள்குறிப்பை விற்றார். சங்கத்தில் சேர்க்க வலை வீசினார். எனக்குச் சபலம் வந்தது.

'படிக்கப்போன நான், படிப்பிலேயே கருத்தாயிருக்கவேண்டும். அரசியல் தொடர்புடைய சங்கத்தில் சேர்ந்து, கவனத்தைச் சிதைத்துக் கொள்ள வேண்டாம்' என்று தந்தையார் எழுதிவிட்டார். அதே கதி நேரிடும் என்று எதிர்பார்த்தேன்.

என் தந்தை, வனமலர்ச் சங்க நண்பர்கள் சிலரை விடுதியில் பார்த்ததுண்டு. அவர்கள்மேல் நல்ல நம்பிக்கை.

எனவே, வனமலர்ச் சங்கத்தில் நான் சேர ஒப்புக் கொண்டார். 'படிப்பிற்கு இடையூறு இன்றி ஈடுபடு' என்று விழிப்பூட்டினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க வனமலர்ச் சங்கம்

அறுபதாண்டுகளுக்கு முன், சமுதாயச் சீர்திருத்த இயக்கம் எதுவும் தோன்றுவதற்கு முன், இளைஞர்களின் இதயத்தில் மலர்ந்தது வனமலர்ச் சங்கம். முற்போக்கான சிந்தனைகளை விரித்தது; சமத்துவ மணமும் தமிழ் மணமும் வீசியது. கலப்பு மணக் கொள்கையை அன்றே

பரப்பிய துணிச்சல் மிகப் பெரிது. கொள்கையைப் பரப்பியது மட்டுமன்று; சொன்னபடி செய்து காட்டியவர்களை வளர்த்த பெருமை வனமலர்ச் சங்கத்துக்குரியதாகும்.

சு. கோதாண்டராமன் - ருக்குமணிதேவி, பி.வி. தாஸ் - ஜானகி, சி. சுப்பிரமணியம் - சகுந்தலா, அழகிரிசாமி - அம்சா, நெ.து. சுந்தர வடிவேலு - காந்தம்மாள் ஆகிய தம்பதிகள் வனமலர்ச் சங்கத் தொண்டின் பயன். அவர்கள் தொடங்கிய சாதிக் கலப்பு அடுத்த தலைமுறையிலும் தொடர்வது பற்றிக் கொள்ளை மகிழ்ச்சி.

கருத்துக்கு மட்டுமல்லாது - செயலுக்குமே, தமிழ்நாட்டின் சமுதாய மாற்றத்திற்குப் பாடுபட்ட இயக்கங்களையும் எடுத்த முயற்சிகளையும் ஆய்வோர், வனமலர்ச் சங்கப் பணியினைக் கணக்கிலெடுக்கும் போதுதான் ஆய்வு முழுமை பெறும்.

இந்திய மொழிகளிலே தமிழில்தான் முதன் முதலாகக் கலைக்களஞ்சியம் வெளிவந்தது. அதைத் தொடக்க, காலம் முதல் தொண்டாற்றி வெற்றிகரமாக நிறைவேற்றிய சாதனையாளர் பெரியசாமித் தூரன் ஆவார். அதுபோக, பல்துறை தமிழிலக்கியங்களை உருவாக்கி 'பத்மபூஷன்' பெற்ற பெருமைக்குரியவர், அவர். அவரைப் பயிற்றுவித்த களம் வனமலர்ச் சங்க வெளியீடான 'பித்தன்' இதழ் என்பது பெருமைக்குரியது.

விளையும் பயிர் முளையிலே

அதே போன்று, வனமலர்ச் சங்கத்தின் கண்டிப்பான கணக்கு ஆய்வராய் விளங்கிய திரு. சி. சுப்பிரமணியம் பிற்காலத்தில் சென்னை மாகாண நிதி அமைச்சராகவும், இந்திய நாட்டின் நிதி அமைச்சராகவும் உயர்ந்து அரும்பணியாற்றினார். பொதுப் பொறுப்பின் பால பாடத்தைக் கற்றுத் தந்த வனமலர்ச் சங்கம் அதனால் பெருமை பெறுகிறது.

28. 'பித்தன்' உதயம்

வனமலர்ச் சங்கத் தொண்டிற்கென்று திங்கள் இதழ் ஒன்றைத் தொடங்கினார்கள்.

முதலில் 'சைக்லோஸ்டைல்' இதழாக வெளிவந்தது.

சில திங்களுக்குப் பின்னர் அச்சு இதழாக வெளிவரத் தொடங்கிற்று.

எப்போது வெளிவந்தது?

சங்கம் தொடங்கிய நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1928 (டிசம்பர்) கார்த்திகைத் திங்களில்.

அவ்விதழுக்குப் பெயரென்ன?

அதன் பெயர் 'பித்தன்.'

அதிர்ச்சி அடையாதீர்கள். சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், பொதுவாக இளைஞர்கள், கற்பனை உலகில் மிதக்கவில்லை. மாறாக, இந்தியச் சமுதாய நிலையை நன்கு உணர்ந்து இருந்தார்கள்.

பித்தன் – பெயர்க் காரணம்

எங்கோ காட்டிலே பூத்த பூவைப்போல, தங்கள் சங்கமும் தமிழ்ச் சமுதாயத்தால் பொருட்படுத்தப்படாது ஒதுக்கப்படலாம் என்பதை உணர்ந்தார்கள்.

சூடிக்கொள்ள எவரும் இல்லாத காட்டிலும், அரும்பும் மலராகத் தவறாது.

கவனிப்பார் இல்லாவிட்டாலும், சமுதாயத் தொண்டாற்றுவது பண்பு நிறைந்த மக்கள் கடமை.

இதை உணர்ந்தே, தங்கள் அமைப்பிற்கு 'வனமலர்ச் சங்கம்' என்று பெயர் சூட்டினார்கள்.

தமிழுக்கு அமுதென்று பேர்' என்று மேடையில் முழங்காத அக்காலத்தில், தமிழைப் பேண, தமிழில் பேச, தமிழில் எழுத முனைகிற இளவட்டங்களைப் பற்றி நம் சமுதாயத்தின் மதிப்பீடு என்ன?

'பித்தர்கள்' என்பதே. இதையும் உணர்ந்தவர்கள் வனமலர்ச் சங்கத்தார்.

உலகத்தின் அலட்சியத்தையும் தூற்றலையும் துணிவோடு ஏற்றுக் கொண்டார்கள்.

சங்கத்தைக் காட்டுப் பூவாக ஏற்றுக் கொண்டதைப் போல், திங்கள் இதழைப் 'பித்தனா'க அழைக்கச் சுணங்கவில்லை.

'பித்தன்' மலரின் முதல் இதழ் 1928 (டிசம்பர் மாதம்) விபவ ஆண்டு, கார்த்திகைத் திங்களில் வெளிவந்தது.

'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்னும் குறிக்கோளைத் தாங்கி மலர்ந்தது.

திரு. கா. மு. இராமசாமியை ஆசிரியராகக் கொண்டு, திரு. ம.ப. பெரியசாமியால், வனமலர்ச் சங்கத்திற்காக வெளியிடப்பட்டது.

எங்கே அச்சிடப்பட்டது? தொடக்கத்தில் இராயப்பேட்டை சாது அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது.

பித்தனின் தரம் என்ன? உயர்வானது. பெரியசாமித் தூரன், சு. கோதண்டராமன், சா. குருசாமி, வ. அழகப்பன், ஓ.வி. அளகேசன்

முதலியோர் பித்தனுக்கு எழுதினார்கள். இவர்களுக்கெல்லாம் மூத்தவராகிய ச.து.சுப்பிரமணிய யோகி தொடர்ந்து பித்தனுக்கு எழுதி வந்தார்.

திரு. தா. சீனிவாசன் 1917 அக்டோபரில் இரஷிய நாட்டில் நிகழ்ந்த - உலகத்தை உலுக்கிய - பெரும் புரட்சியைப் பற்றியும் சோவியத் ஆட்சி முறையைப் பற்றியும் தொடர் கட்டுரைகள் எழுதினார்.

'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்பார்கள். அதைப் போல், இளைஞர்கள் நடத்திய, மக்கள் கவனத்தைக் கவராத, 'பித்தன்' புகழும் எட்ட வேண்டிய இடங்களுக்கு எட்டியது.

எனவே, பித்தனின் இரண்டாவது மலரின் நான்காம் இதழில், அப்போது மாத இதழாக நடந்து வந்த 'ஆனந்த விகடன்' விளம்பரஞ் செய்தது.

'ஆனந்த விகடன் ஒரு நூதன மாதப் பத்திரிகை. 12,000 சந்தாதாரர்களையுடையது. ஐந்தாம் ஆண்டு பிறந்துவிட்டது. மாதிரி பிரதி இனாம்' என்ற விளம்பரத்தைப் பித்தன் தாங்கி வந்தது.

ஒரு கால கட்டத்தில், 'ஆனந்த விகடன்' பெரியார் திரு. ஈ.வெ. ராமசாமியின் கட்டுரைகளைக் கேட்டு வாங்கிப் போட்டு வளர்ந்தது, இப்போது நினைவிற்கு வருகிறது.

பெரியார் – திரு.வி.க. ஆதரவு

'பித்தன்' கட்சிச் சார்பற்ற இதழ். எனவே, அக்கால கட்டத்தில் எதிர் எதிர் அணிகளில் பணிபுரிந்த இரு பெரியவர்களின் ஆதரவைப் பெற்றது.

திரு. ஈ.வெ.ரா. தமது 'குடியரசு' வார இதழில் நான்கு வாரங்கள் 'பித்தனை' விளம்பரப்படுத்தினார். அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

திரு.வி.க.வும் தமது 'நவசக்தி' வார இதழில் நான்கு வாரங்கள் 'பித்தன்' விளம்பரத்தை வெளியிட்டார். அவரும் உரிய கட்டணத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

பித்தனுக்கு என்று தனிச் சந்தா வசூலிக்கவில்லை. வனமலர்ச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசம்.

அவர்கள் செலுத்திய ஆண்டு சந்தா நான்கைக் கொண்டே பித்தனை நடத்தினோம். அந்நிலையில் பெரியாரும் இராயப்பேட்டை முனிவரும் புரிந்த உதவி பெரிதாகும்.

பித்தனின் தொண்டு ச.து.சு. யோகியின் விடுதலை முரசு

எவ்வளவு திறமையாகக் கட்சிகளில் சிக்காமல் நடு வழியே நடந்தாலும், 'உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்' ஏற்படுவது இயற்கை.

உள்ளதைச் சொல்லவே பித்தனைத் தொடங்கினார்கள். அதில் வெளியான உண்மை உணர்வுகள், எரிச்சல் ஊட்டாமல் இருக்குமா?

''ஒருவர்க்கடிமை யொருவரென்ற
　உறுதி ஒழியவே
உலகமீதில் யாவருக்கு
　மொருமை பொழிகவே
திருவும் கீர்த்தி கல்வி
　யாவும் சேர்ந்து வ்ருகவே
தெய்வமாதர் தங்களுக்கு
　அறிவு பெருகவே''

என்று ச.து. சுப்பிரமணியம் பித்தனில் விடுதலை முரசு கொட்டினார். இவ்வரிகள் எழுச்சி ஊட்டின.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

பிரஞ்சு பாலபாடம் கூடப் பித்தன் எழுத்தாளர்க்கு ஆயுதம்.

பிரஞ்சு பாலபாடம் என்ன சொல்லிற்று?

'ஒரு நாட்டின் மக்கள் யாவரும் சகோதரர்களே'

'பசியையும் தாகத்தையும் பனியையும் தாய்நாட்டிற்காகத் தாங்குவதற்குத் தயாராயிருப்பீர்களாக'

மேற்கூறிய இரு கூற்றுகளும் பிரஞ்சு பாலபாடத்தில் இருந்தவை. இவற்றைத் தேடிப் பிடித்துப் பித்தனில் வெளியிட்டால் அதிகார வர்க்கத்தின் கடைக்கண் பார்வை அதன்மேல் விழாதா?

இந்தியக் கைத்தொழில் அழிவு

இந்தியக் கைத்தொழில்கள் ஆங்கில ஆட்சியால் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. அதைக்கண்டு சில ஆங்கிலேயர்கள் குமுறினர். அதில் ஒருவர் 'பிரடரிக் ஷோர்' என்பவர். ஆங்கில ஆட்சியில் இந்தியப் பொருளாதாரத்திற் கேற்பட்ட நலிவு பற்றிப் பிரடரிக் ஷோர் எழுதினார்.

'இந்தியக் கைத்தொழில் அழிவு' என்னும் தலைப்பில் பித்தன் வெளியிட்ட தொடர் கட்டுரையின் சிறுபகுதி இதோ:

'இந்திய இயற்கைப் பொருள்கள், பிறந்த இடத்திலேயே பறிமுதல்

சிறிது காலத்தில், வயிற்றுக்கு வேண்டிச் சிறிது தானியமும் அதைச் சமைக்க மட்பாண்டங்களையும் உடுத்தக் கொஞ்சம் மட்டித் துணியுமே உண்டாக்க இந்தியர்களால் முடியும்.'

விடுதலை உணர்வு

விடுதலை உணர்வு மாந்தர் இனம் முழுவதும் இழையோடும் அடிப்படை உணர்வாகும். அவ்வுணர்வை 'அழென் ழக்கே' என்னும் பிரஞ்சுக்காரர் உயிர்த் துடிப்போடு வெளியிட்டார்.

எங்கோ பால பாடத்திலும் அறிஞர்களின் நூல்களிலும் பதிந்து கிடந்தவற்றை எடுத்துப் போட்டுப் 'பித்தன்' மக்களுக்கு உணர்ச்சி ஊட்டியது.

''நாடு அன்னியர் வசம் ஸ்திரமாய்ப் போய்விடுமானால், பிறகு நாடாவது, குடும்பமாவது? உயிரை வேண்டுமென்றால் வைத்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் நாட்டுக்காவது தனி மனிதனுக்காவது ஒளியிருக்குமா? புகழிருக்குமா? கெளரவமிருக்குமா?

தெருவில் திரியும் நாயானது அடிமை நாட்டு மனிதர்களைவிட எண்ணிறந்த மடங்கு மேலல்லவா?

'பிறகு என்றென்றைக்கும் நம் நாட்டில், நாட்டான் கை கீழ், அன்னியன் கை மேல் என்றாய்விடாதா? என்ற அவருடைய உணர்ச்சி மிக்க சொற்களைப் பதியவைத்தது, ஓர் இதழ்.

இது இளம் உள்ளங்களில் உரிமை வேட்கையை எழுப்பாமல் போகுமா? ஒவ்வோர் வகை உரிமைக்கும் போராடத் தங்களைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் காளையர்களை உருவாக்கத் தவறுமா?

பிரான்சு மக்களாகிய முப்பத்தேழு இலட்சம் பேர்களும் ஒரே பிரான்சுக் குடும்பமாகும்.

அவர்கள் யாவருக்கும் ஒரே சரித்திரம், ஒரே களிப்பு, ஒரே நோக்கம்.

'தங்கள் தாய் நாட்டின் வீழ்ச்சியில் அவர்கள் துன்பமுறுவர்; அதன் வாழ்வில் இன்பமடைவர். நல்லதாயினும் சரி, கெட்டதாயினும் சரி, நாட்டுக்காக அதனை ஏற்றுக் கொள்வர்' என்று ஒரு பிரான்சு பாலபாடம் கூறுகிறது.

பிரான்சு பாட புத்தகத்தில் ஒரு பாடல் பின் வருமாறு:

'மகனாயிருந்தெமக்கு மகிழ்வு செய்; ஆனால் யாவினும் முக்கியம் யாதெனின் எவற்றிலும் பெரிதே இன்பப் பிரான்ஸிடை நீ கொள்ளும் அன்பு.'

இப்படிப்பட்டவற்றை வெளியிட்டு விடுதலை உணர்வையும் தாய்நாட்டுப் பற்றையும் வளர்த்தது, வனமலர்ச் சங்கத்தின் 'பித்தன்.

பித்தன் முப்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை உருவாக்கியது. அதில் வெளியான கவிதைகளும் சிறுகதைகளும் கட்டுரைகளும் படிக்கத் தெரிந்த அனைவருடைய கவனத்தையும் கவர்ந்தது.

29. பித்தனின் கருத்தோட்டம்

இளைஞர் மாநாடும் பித்தனும்

'பித்தன்' பொதுநலக் கொள்கைகளைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு அணுகவில்லை. தனக்கென்று நடுவழியொன்றைப் பின்பற்றியது.

சென்னையில் 1929 இன் தொடக்கத்தில் இரு இளைஞர் மாநாடுகள் நடந்தன. திரு. பிரகாசம் தலைமையில் கூடிய இளைஞர் மாநாட்டில்,

'தேச பக்தியுள்ள ஒவ்வோர் இளைஞரும் சைமன் கமிஷன் பகிஷ்காரம் சரிவர நிறைவேறத் தன்னாலான உதவி செய்ய வேண்டும்.

'காங்கிரசின் இவ்வருஷத்திய சமூக ஆக்க வேலைத் திட்டங்களை இம்மாநாடு ஒப்புக் கொள்கிறது.

'பூர்ண சுயராஜ்யமே இம்மாநாட்டின் நோக்கம். தாய்நாட்டின் விடுதலைக்காக வாலிபர் அனைவரும் முனைந்து பாடுபடவேண்டு மென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது' என்று முடிவுகள் செய்யப் பட்டன.

இவற்றை வெளியிட்ட பித்தன், திரு. ஆ. இராமசாமி முதலியார் தலைமையில் சென்னையில் கூடிய மற்றோர் இளைஞர் மாநாட்டு முடிவுகளையும் வெளியிட்டு, தமது கருத்தை வெளியிட்டது.

முடிவுகள் என்ன? பித்தனின் கருத்துகள் எவை?

மகிழ்ச்சியும் வருத்தமும்

1. வாலிபர்கள், சாதி, மத, நிற வேற்றுமைகளை ஒப்புக் கொள்ளாமல், அவைகளின் இருப்பையே மறந்தவர்களாக, வாழவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

2. மாணவர் விடுதிகளில் வகுப்புப் பிரிவுச் சாப்பாடு கூடாது.

3. கலப்பு உணவு விடுதிகளிலேயே மாணவர்கள் சேர வேண்டும்.

4. வகுப்பு வேற்றுமைகளை மாணவர் விடுதி அதிகாரிகள் நீக்கிவிட வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

ஆற்காடு இராமசாமி முதலியார் தலைமையில் கூடிய இளைஞர் மாநாடு மேற்கூறிய நான்கு முடிவுகளை மேற்கொண்டது. பித்தனுக்கு இவை நான்கும் உடன்பாடானவை.

பித்தன் இவற்றை வெளியிட்டதோடு நிற்கவில்லை. திரு. முதலியார், தமது தலைமையுரையில் மாணவர்கள் அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று சொன்னதையும் வெளியிட்டது. 'ஈடுபடாக் கொள்கை'யை வற்புறுத்திய இராமசாமி முதலியார் தலைமையில் நடந்த அம்மாநாடு, சைமன் கமிஷனுக்கு நல்வரவு கூறுவதாக முடிவு செய்தது. அதையும் வெளியிட்டு 'அறிவுரைக்கும் முடிவுகளுக்கும்' இடையே உள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டியது. 'சைமன் கமிஷனை வரவேற்பது அரசியல் விஷயம் அல்லவா?' என்று கேட்டது.

'சமுதாயச் சீர்திருத்தம் ஒருவர் கொடுக்கும் பொருளல்ல. அதிலும் சைமன் கமிஷனுக்கு நல்வரவு கூறினதால், நாம் முன்னேறிவிடுவோமென்று எண்ணுவது மிகவும் தவறு' என்று 'பித்தன்' கருத்தை வெளியிட்டது.

திரு. பிரகாசம் தலைமையில் கூடிய இளைஞர் மாநாடும் திரு. ஆ. இராமசாமி முதலியார் தலைமையேற்ற இளைஞர் மாநாடும் செய்யத் தவறிய ஒன்றைச் சுட்டிக்காட்டி, 'பித்தன்' தமது வருத்தத்தைத் தெரிவித்தது. பித்தனின் கூற்றைப் படியுங்கள்.

'இரண்டு மகாநாட்டாரும் தேசியச் சாமான்களையே வாங்கி, தேசியக் கைத்தொழிலை ஆதரிக்க வேண்டுமென்று ஒருவிதத் தீர்மானமும் நிறைவேற்றவில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.'

தேசிய காங்கிரஸ், நீதிக்கட்சி ஆகிய இரு கட்சி மாநாடுகளையும் துணிச்சலாகக் குற்றஞ் சாட்டியது அன்றைய 'பித்தன்'. அன்னியன் ஆண்டபோது, நம்மிடையே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முடிந்தது. தன்னாட்சி உரிமை பெற்ற இந்தியாவில் அந்த உரிமை துருப்பிடித்து விட்டது. இக்காலத்து இளைஞர்கள் அப்படித் துணிந்தால், தொலைந்தார்கள், கால்களைத் தொட்டுக் கும்பிடப் பக்குவப் படுத்திக் கொள்ளும் வரை, தலைமறைவாக இருந்தே தீரவேண்டும்.

கல்வி வளர்ச்சியைத் தடுப்பதா?

'பித்தன்' அன்னிய அரசாங்க நிர்வாகத்தைப் பற்றிய குறையைச் சுட்டிக் காட்டவும் தயங்கவில்லை.

1927-28 க்கு ஆன பொதுக்கல்வி இயக்குநரின் அறிக்கையின் சுருக்கத்தை வெளியிட்டு, பித்தன் தன் கருத்தைத் தெரிவித்தது.

'போன ஆண்டு சென்னை இராஜதானியில் 53,838 பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவைகளில் 25,23,188 பிள்ளைகள் படித்தார்கள். இவ்வாண்டு பள்ளிகளின் தொகை 50,260. இதில் படிப்பவர்கள் 26,60,672.

இராஜதானியில் கல்வி கற்றவர்கள் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 6.2 பேர். இதில் ஆண் 100க்கு 9.9தும் பெண் 100க்கு 2.8ம் ஆகும். ஓராண்டில் மாணவர்களின் தொகை 1000க்கு இரண்டுதான் அதிகமாகியிருக்கிறது.

'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்பார்கள். 'ஐம்பதுக்கு மூன்று என்றால் என் செய்வது?' என்று பித்தன் மிகவும் வேதனைப்பட்டது.

1926-27ஆம் ஆண்டில் இருந்த பள்ளிகளில் 3578 பள்ளிகள் அடுத்த ஆண்டுகளில் இல்லை என்று பொதுக்கல்வி இயக்ககமே பறைசாற்று கிறது. கல்வியை வளர்க்க வேண்டிய கல்வித்துறை, கல்வியை முடக்கும் மற்றும் குறைக்கும் துறையாகச் செயல்பட்டிருக்கிறது.

1927-28ஆம் ஆண்டு புதிய அமைச்சரவையின் முதலாண்டு. எப்போது அமைச்சரவை மாறினாலும், **மாறும்பொழுதில், கல்வித்துறையினர், கல்வி வெள்ளத்தைத் தடுப்பதிலேயே முனைதல், தமிழ்நாட்டின் பொல்லாத மரபு. அதன் தொடக்க விழா ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே திகழ்ந்தது. நிற்க,**

பித்தனும் மதுவிலக்கும்

'குடியைத் தடுக்கவும் தடை' என்ற தலைப்பில் பித்தன் தனது கருத்தை எழுதியதைப் படியுங்கள்.

'சென்னை இராஜதானியில் இருபது வருஷத்தில் குடியை அறவே ஒழித்துவிட வேண்டுமென்ற தீர்மானம் சென்னைச் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தையும் துரைத்தனம் கடலில் தூக்கி எறிந்துவிட்டது. குடியை ஒழித்தால் இராஜாங்கத்திற்கு வரும்படி குறைந்துவிடுமாம்.

'அமெரிக்காவில் குடியால் ஏராளமாய் வரும்படி வந்தது. அப்படியிருந்தும் அவ்வரசாங்கத்தார், குடியைத் தொலைக்க வேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தினர். அதனால் அவ்வருஷம் குடியால் வரும் வரிப்பணத்தில் பத்து இலட்சம் பவுன் குறைந்து விட்டது. ஆனால் அதே வருஷத்தில் மொத்த வருவாயில் முந்தின வருஷத்தைவிட 25 இலட்சம் பவுன் அதிகமாயிருந்தது.

'குடியை நிறுத்துவதால் அரசாங்கத்தின் வரும்படி குறைந்து விடுமென்பது இனிமேல் பலிக்காது' என்று பித்தன், சான்றுகளுடன் கூறியது.

அந்தப் பித்தனின் குரல் வீண்போகவில்லை. மூதறிஞர் இராஜாஜி சென்னை மாநிலப் பிரதமரானபோது, மதுவிலக்குத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். பல்லாண்டு நடைமுறையில் இருந்தது.

பல இடங்களில், கள்ளச்சாராயம் காய்ச்சுவது குடிசைத் தொழிலாயிற்று. குட்டி அரசியல்வாதிகளின் பாதுகாப்பில், அதிகாரிகளின் பாராமுகக் கருணையால் கள்ள மது விற்பனை, பலவிடங்களுக்கும் பரவிற்று.

'மதுவிலக்குக் கொள்கை தோல்வி; அதனால் வருவாய் போயிற்று; கள்ள மது பெருகிற்று; குற்றங்கள் பெருகின; ஊழல்கள் மிகுந்தன.

'அதை நடைமுறைப்படுத்த முடியாது. பேசாமல், மதுவிலக்கை நீக்கிவிட்டால் அரசுக்குப் பணம் குவியும்; நிதிப் பற்றாக்குறை போகும்; வளர்ச்சித் திட்டங்களைத் தாராளமாகத் திட்டலாம் இப்படி அடிக்கடி ஆலோசனைகள் ஒலிப்பதுண்டு. அதைக் கேட்டுப் பொதுமக்கள் மயங்குவதுண்டு. ஏன், அறிஞர்களும் குழம்புவதுண்டு.

மதுவிலக்கும் கள்ள மதுவும்

இது பற்றிய என் கருத்து: மது விலக்குக் கொள்கையில் பலாபலன் என்ன? காய்தல் உவத்தல் இன்றி எடைபோட வேண்டும்.

கள்ளுக்கடைகள் திறந்திருந்த காலத்து நிலையும், கள்ளுக்கடைகளை மூடிய பிறகு உருவான நிலையும் தெரிந்தால் மதிப்பீடு எளிதாகும்.

என்னுடைய ஆயுளில் ஏறத்தாழ முதல் முப்பதாண்டு காலம் கள்ளுக்கடைகள் ஆட்சி செய்த காலம். சாராயம் விற்ற காலம். அயல்நாட்டு மது வகைகளைக் குடிப்பதே பெரிய மனிதருக்கு அடையாளம், கவுரவம் என்று கருதப்பட்ட காலம். பிந்திய நாற்பதாண்டு காலம் இடையில் ஓராண்டு காலமும் பின்னர் மூன்றாண்டு காலமும் நீங்கலாக-மதுவிலக்கு காலம்.

மதுக்கடைகள் நடத்தும் உரிமையை ஏலத்தில் விட்டுக் கோடி கோடி ரூபாய்களை அரசு சம்பாதித்த முற்காலத்தில், திருட்டுக் கள் இறக்கியது கொஞ்சமல்ல; கள்ளச் சாராயம் காய்ச்சி விற்றதும் பெருமளவே.

மதுவிலக்கைக் கொண்டு வந்ததால், கள்ளக் காய்ச்சல் வந்தது என்பது தெரியாத பேச்சு. கள்ள மது அன்றும் பரவலாக இருந்தது. அன்றும் காவல் அதிகாரிகளின் பாராமுகத்தால், அவர்களுக்குக் கொடுத்த மாமூலால், திருட்டுக்கள்ளும் சாராயமும் நல்ல ஆதாயம் தந்தன. இன்றும் தருகின்றன.

அன்று ஆண்டுக்குச் சில ஆயிரம் இலாபம் சம்பாதித்தவர்கள், இன்று, கள்ள மதுவால் இலட்சக்கணக்கில் திரட்டிக்கொள்ள முடிகிறது. அப்படித் திரட்டியவர்களை, பெரிய மனிதர்களாக எங்கும் ஏற்றுக்கொள்ளும் அளவு வைத்திருக்கிறோம். இலட்சக் கணக்கில் சேர்த்த கள்ளுக்கடை 'கண்ட்ராக்டர்'களைக்கூட, அக்காலச் சமுதாயம்,

தாழ்த்தியே பார்த்தது. இப்போது, எல்லாத் துறைகளிலும் எல்லாப் பகுதிகளிலும் மக்களின் (த) திராசைப் பொய்த் திராசாக்கி விட்டோம். கள்ளமது விற்போனுக்குப் பணம் மட்டுமல்ல, கனவு கூடக் காணமுடியாத 'மவுசும்' வந்துவிட்டது.

மதுவிலக்கு இருக்கும்போது, நடமாடும் கள்ள மது, மதுவிலக்கை எடுத்துவிட்டால் நின்றுவிடும் என்பது சரியல்ல. இடைக் காலத்தில், மதுவை விற்க விட்டபோது, கள்ள மது நின்றதா? இல்லை, குறைந்ததா? இல்லை.

'முடிந்தால், யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டுமானாலும் குவித்து வைத்துக் கொள்ளலாம்' என்னும் பொருளியல் முறை செங்கோல் செலுத்தும்வரை கள்ள வாணிபம், கள்ளிலும் நடக்கும். எனவே, கள்ள மதுவை ஒழிக்க, மது விலக்கை நீக்குவது சரியல்ல.

கொள்கை வெளியிலிருந்து, மண்படும் நிலத்திற்கு வருவோம். மதுவிலக்கு நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, ஏழை மக்களின் நிலை என்ன?

குடிகாரர்கள் நடத்திய கொடுமை

அப்போது பெரும்பாலான ஏழை எளிய மக்கள் குடிகாரர்கள். அவர்கள் போதையிலிருந்தபோது சும்மாக் கிடந்தார்களா? இல்லை. அநேகமாக நூற்றுக்குத் தொண்ணூறு ஏழைக் குடும்பப் பெண்கள் அன்றாடம் அடி உதைபட்டார்கள். தள்ளாத பாட்டிகளுக்கும் உதை; குடிகாரனை மனிதனாக மதிக்கும் மனைவிமார்களுக்கும் உதை; பச்சைக் குழந்தைகளும் அடி உதையிலிருந்து தப்பவில்லை. இக்கொடுமை ஒவ்வோர் இரவும் பட்ட நரகவேதனை. அன்றைய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழைகளின் பொல்லாத சொத்து; தாலிகூட அடகுக் கடைக்குப் போய்விடும்; அதையும் உதைத்தே, கழற்றிக்கொண்டே போவான், குடிகாரக் கணவன். இவை நான் கேள்வியால் தெரிந்து கொண்டதல்ல. நாட்டுப்புறங்களில் நேரடியாகத் தொடர்ந்து பார்த்த பரிதாபங்கள். அலுவல் பார்த்த நாற்பது ஆண்டுகளில் முப்பத்தைந்து ஆண்டுகளின் பெரும்பகுதியைச் சிற்றூர்கள் தொடர்பில் செலவிட்டுப் பெற்ற பட்டறிவையே பகிர்ந்து கொள்ளுகிறேன்.

ஏன், திருவல்லிக்கேணி குப்பங்களில், இருசப்பக் கிராமணித் தெரு மூலையில் பார்த்துப் பதறிய காட்சிகள்.

மதுவிலக்கு நடைமுறைக்கு வந்த பிறகு, நாட்டில் மதுகுடிப் பழக்கத்தைப் புதிதாகக் கற்றுக் கொண்டவர்கள் மிக மிகச் சிலரே.

ஏற்கெனவே குடியில் மூழ்கியிருந்தவர்கள், பழக்கக் கொடுமையால், கள்ள மதுவைத் தேடிச் சென்றார்கள்; திருட்டுத்தனமாகக் குடித்தார்கள்.

ஆனால், அந்தக்காலக் குடியர்களைப் போல, தெருவில் போவோர் வருவோரை வலுச்சண்டைக்கு இழுப்பதில்லை. வீட்டிலிருக்கும் பெண் பிள்ளைகளை அடித்து உதைத்து அலறவைப்பதில்லை. கதறும் கூச்சல் கேட்டால், பிடிபட நேரிடும் என்பதைத் திருட்டுக் குடிகாரர்கள் மறப்பதில்லை. எனவே, இரண்டாம் பேருக்குத் தெரியாமல், குடிசைகளில் முடங்கி விடுவார்கள். விழித்து எழும்போது, போதை தெளிந்திருக்கும்.

மதுவிலக்கு செய்த நன்மை

மதுவிலக்கு நடைமுறைக் காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்குலம், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பின் தள்ளப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஏழைப் பெண்குலம் அடி உதையிலிருந்து நீடித்த விடுதலை பெற்றிருந்தது. அது மட்டுமா?

நாட்டுப்புறத்து, குடிசை வாழ்வோர் இல்லங்களிலும் உலோகத் தட்டுமுட்டுச் சாமான்கள் சேர்ந்தன. வீட்டில் சண்டை சச்சரவு, அடிஉதை, கூச்சல் குழப்பங்கள் பெருமளவு குறைந்துவிட்டன. அமைதி வளர வளர, அக்கறையும் கவனமும் பெருகின. தாழ்த்தப்பட்ட பையன்களும் பெண்களும் பள்ளிப் படிப்பில் ஒளிவிட முடிந்தது.

மதுவிலக்கு செயல்படத் தொடங்கிய பிறகே, நாட்டுப்புறங்களில் அஞ்சல் நிலையச் சேமிப்பு வங்கிகளும் பிற வங்கிகளும் தலைநீட்ட நீட்ட, நிலமில்லாத தாழ்த்தப்பட்டோரில் பலர் - ஊருக்குப் பலர் - கூலியில் சிறு பகுதியைச் சேர்த்து வைக்க முன் வந்தனர். சொந்தத்தில் நிலம் வாங்கியுள்ளார்கள்.

கொடுமைக்குள்ளாகியுள்ள தாழ்த்தப்பட்டவர்களை அணைத்து, அடிக்கடி நல்வழிப்படுத்துவோர், ஊக்கப்படுத்துவோர் அருகினாலும் மதுவிலக்கு என்னும் சஞ்சீவி அவர்களில் எண்ணற்றவர்களை மனிதர்களாக்கிவிட்டது.

மீண்டும் மது வந்ததால் ஏற்பட்ட தீமை

சில ஆண்டுகளுக்கு முன்பு, மது விலக்கை எடுத்தது நினைவிலிருக்கிறதா? அப்போது நான் தமிழ்நாட்டின் ஊர் சுற்றிகளில் ஒருவனாக இருந்தேன். சின்னஞ்சிறு ஊர்களில்கூட, அடகுக் கடைகள் காளான்களைப்போல் முளைத்ததைக் கண்டேன்.

அக்கடைகளில் எவர்சில்வர் சாப்பாட்டுத் தட்டுகள், குவளைகள், பிற பாத்திரங்களை ஆண்கள் அடகு வைப்பதைக் கண்டு பலவேளை

வேதனைப்பட்டேன். மெல்ல மெல்லச் சேர்த்தவற்றில் பெரும் பாலானவை ஒரு சில மாதங்களில் அடகுக் கடைகளில் அடைக்கலம் புகுந்தன. இது எங்கோ இரண்டோர் இடங்களில் ஏற்பட்ட தீங்குகள் அல்ல. பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைப் பாழாக்கிய பரிதாப நிகழ்ச்சிகள்.

எனவே, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காக, மதுவிலக்கை எடுக்க வேண்டாம். கள்ளுக்கடைகள் வழியாக வருவாய் அதிகமாகும் என்பது உறுதி.

ஆனால் பண்டங்களை வாங்குவது படுத்துவிடும். விற்பனை வரி வழியாகப் பெறும் நிதி குறைந்துவிடும்.

அரசு, நிதிப் பெருக்கத்தை மட்டும் பெரிதாகக் கருதக்கூடாது.

முப்பதாண்டுகளுக்கு மேலாக, மதுவிலக்கு நடைமுறையில் இருந்ததன் நேரடிப் பலன் - நல்ல பலன் - பல்லாயிரக்கணக்கான ஆதிதிராவிடர்கள் சொந்தத்தில் நிலம் வாங்க முடிந்தது.

இலட்சக்கணக்கான ஆதிதிராவிட, வன்னிய மாணவ - மாணவிகள் படிப்பில் பல்கலைக்கழகப் படிப்பையும் நெருங்கி முன்னேறி வருவதும் மதுவிலக்கின் நன்மை.

கள்ளுக்கடை வருமானால், அவர்கள் வாழும் குடிசை தோறும் சண்டை சச்சரவு, தெருதோறும் குத்துவெட்டு, மாலைதோறும் வசையும் கூச்சலும் அடியும் உதையும் தாண்டவமாடும். ஏழைப் பிள்ளைகள் அந்நிலையில் படிக்க முடியுமா? முன்னேற முடியுமா?

அரசு, மனிதர்களைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும், அவர்கள் பெருமளவு மனிதர்களாகவே இருக்க உதவுவதற்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டும். அப்படி இயங்கும் ஆட்சியே கருணையுள்ள ஆட்சி; நல்லாட்சி.

30. பித்தனின் சமுதாயச் சிந்தனைகள்

குழந்தைத் திருமணக் கொடுமைகள்

மக்கள் மாட்டுள்ள உயர்வு தாழ்வு, சாதி வேற்றுமை, சமயவேற்றுமை, பெண் அடிமை இவைகளைக் கடிந்து, சமரசம் கொள்வது இதன் முதல் நோக்கம்' என்று வெளிப்படையாகப் 'பித்தன்' முதல் இதழில் அறிவித்தது.

வனமலர்ச் சங்கம் என்றும் குறிக்கோளில் வழுவவில்லை. பொதுமக்களுக்குக் கேடானவை, எவ்வளவு தொன்மையானவையாக

இருப்பினும் அவற்றைக் கடியத் தவறவில்லை; எவ்வளவு புனிதமான மரபாகக் கருதப்பட்டாலும் அதைக் கண்டிக்க முன் வந்தது.

நம் இந்திய நாடு பழம்பெரும்நாடு, இதன் சிறப்புகள் சில; குறைகளுக்குக் குறைவில்லை. குறைகளைச் சுட்டிக் காட்டிக் களையத் தூண்டுவது, நாட்டுப் பற்றுடையோரின் கடமையாகும்.

'அறியாமை மிகுந்த நம் சமுதாயம் அலறித் தூற்றுமே' என்று அஞ்சி, ஊமையாக இருப்போர் கோழைகள், நாட்டுப்பற்று அற்றவர்கள். ஊர் முழுவதும் பகைப்பதையும் பொருட்படுத்தாது, சமுதாய மாற்றத்திற்காகத் தெளிவாகக் குரல் கொடுப்போரே, மனிதர்கள்.

உலகில் வேறு எங்கும் காணமுடியாத சாதி வேற்றுமைகள், அவற்றின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள், அவை பெற்றெடுக்கும் அடக்குமுறைகள் இந்தியாவின் பெருநோய்கள்.

அதே போன்று, குழந்தைத் திருமணங்களும் குழந்தை விதவைகளும் இந்தியாவில் மட்டுமே காணும் பயங்கரக் கொடுமைகள்.'

பித்தன் முதல் மலரின் ஐந்தாவது இதழ், விபவ ஆண்டு பங்குனித் திங்களில் விரிந்தது. அது தாங்கிவந்த வேதனைப் புள்ளிவிவரங்களைப் பாருங்கள்.

'1921 ஆம் ஆண்டின் கணக்குப்படி நமது நாட்டில் இருக்கும் இளம் விதவைகளின் தொகையைக் கீழே தருகிறோம்.

வயது	விதவையர் தொகை
1 ஆண்டு	*497*
1-2 ஆண்டு	*494*
2-3 ஆண்டு	*1257*
3-4 ஆண்டு	*2837*
4-5 ஆண்டு	*6707*
5 ஆண்டு	*11892*
5-10 ஆண்டு	*85037*
10-15 ஆண்டு	*232147*
15-20 ஆண்டு	*1,74,20,820*

'மேலே குறிக்கப்பட்டுள்ள விதவையர் எண்ணிக்கை எந்தக் கல் மனத்தையும் கரைக்குமன்றோ? இந்தச் சிறு பெண்கள் உள்ளத்தில் நமக்குள் தோன்றும் எண்ணங்கள் உதயமாகின்றன. அவர்களுக்கும் ஆசையுளது. அவர்களை ஏன் மொக்கிலேயே வாடவிடவேண்டும்?

'திருமணம் என்னும் பீடத்தில் இவர்கள் பலியிடப்பட்டனர். 10 வயதுக்கு உட்பட்டவர்களை விதவை என்று எண்ணுவது பெருங் கொடுமையல்லவா?

'அப்படியிருக்க, இச்சிறு களங்கமற்ற இளங்கொடிகளை, சமுதாயக் கட்டுப்பாட்டில், வாட்டிக் கொல்லுதலும் தருமமோ? என்னே உயரிய இந்து மதத்திலுள்ள சில பெற்றோர்களின் அநியாயம்!' என்று ஓர் அன்பர் எழுதியதைப் பித்தன் வெளியிட்டது.

உள்ளம் உருக்கும் அக்கட்டுரையை முழுக்கப் படியுங்கள்.

உள்ளம் இருந்தால் உணர்ந்து, திருத்த முன் வாருங்கள்.

குழந்தை விதவைகள்

'பச்சைக் குழந்தைகள், குருவிகள் போல் கள்ளமின்றித் திரிந்து, பறந்து வரும் பறவைகள்! மல்லிகை மலர் போல் சிரித்துக் களிப்பூட்டும் ஊற்றுகள். ஓர் உயிருக்கும் இன்னோர் உயிருக்கும் வித்தியாசமே தெரியாத கள்ளமில்லாத பிள்ளைகள்.

'இவர்களுக்கு விளையாட்டே உலகம். குதித்துக் குதித்துச் செல்லும் சிட்டுக் குருவியைப் பார்த்துப் புன்னகை புரிவதே வேலை. இவர்களைப் பிடித்து இருத்திக் கல்யாணம் என்று வயதானவர்கள் செய்கிறார்களே!

'இது யாருக்காக? பெரியவர்கள் மண நாடகம் பார்த்துக் களிக்கவா? அல்லது இயற்கையின் ஒளியாகிய சின்னஞ்சிறுவர்களின் வாழ்க்கை நலத்தைக் கோரியா?

'எப்படியோ, பலபேர் முன்னிலையில் கல்யாணம் என்ற ஒன்றை நடத்திவிடுகிறார்கள். குழந்தைகள் - காதலர்கள் - இருவருக்கும் இது கஷ்டமான விளையாட்டே ஒழிய வேறில்லை.

'இப்பொழுது, ஏதோ காரணத்தால் புருஷக் குழந்தை இறந்துவிட்டால், மனைவியாகிய மற்றொரு குழந்தை, பெண் குழந்தை விதவையாகிவிடுமாம். ஒன்றும் அறியாப் பெண்ணை, விதவையென்றும் சொல்லலாமா?'

பித்தனின் இச்சிந்தனைப் போக்கு தொடர்ந்தது.

'கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே இங்கு வேரில் பழுத்த பலா' என்று பாரதிதாசன், விதவைகளின் வேதனைப் பிழைப்பை அப்படியே படம் பிடித்துக் காட்டினார்.

'காதல் சுரக்கும் நெஞ்சினிலே - கெட்ட கைம்மையைத் தூர்க்காதீர்' என்று புரட்சிக் கட்டளை பிறப்பித்தார்.

இவை சில ஆண்டுகள் சுயமரியாதை இயக்க மேடைகளில் கம்பீரமாகப் பாடப்பட்டது உண்டு.

எனினும் விதவைகளுக்கு மறுவாழ்வு என்பது தமிழ் நாட்டில் ஊமையன் கண்ட கனவாகவே இருக்கின்றது.

குழந்தை மணங்களாவது நிறுத்தப்பட்டதா? இல்லையே.

சாரதா சட்டம்

திருமண வயது ஆணுக்குப் பதினாறுக்கும் பெண்ணிற்குப் பதினான்கிற்கும் குறையாமல் இருக்கவேண்டுமென்று, பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சட்டம் இந்திய சட்டசபையில் ஹரிவிலாஸ் சாரதா என்பவரால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

வனமலர்ச் சங்கம் நடத்திய பித்தன், சாரதா சட்டத்தை ஆதரித்தது.

நாட்டின் வைதீகர்கள் எதிர்த்தார்கள். அவர்களின் முன்னணியில் பெரும் பட்டதாரிகள், தேசியவாதிகள் காட்சியளித்தது வேதனைக்குரிய ஒன்றாகும். அரசியலில் தீவிரவாதியாக இருப்பதாலேயே அவர்கள் பிற துறைகளில் முற்போக்காளர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்து ஏமாறக்கூடாது.

திருமண வயது பற்றிய மேற்படி சட்டம் நிறைவேறிய பிறகும், நாட்டில் நாலா பக்கங்களிலும் குழந்தை மணங்கள் நடந்து வந்தன. அடியோடு தடுத்து நிறுத்த நாதியில்லை.

அண்மைக்காலத்தில், வரவேற்கத்தக்க வகையில், திருமண வயது இருபாலார்க்கும் உயர்த்தப்பட்டது. அத்தகைய முற்போக்குச் சட்டம் ஏட்டில் இருக்கிறது; நடைமுறையில் இல்லை.

நல்ல சட்டங்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டிய பொதுமக்களிடம் விழிப்பை, உணர்வை இதுவரை போதிய அளவு வளர்த்தோம் இல்லை. எனவே சமூகச் சட்டமீறல்களும் குழந்தை மணக் கொடுமைகளும் தட்டிக் கேட்பாரின்றி, வெறியாட்டம் போடுகின்றன.

பத்தாயிரம் குழந்தைகளுக்குத் திருமணம்

சில வாரங்களுக்கு முன்பு மகாராட்டிர மாநிலத்தில் இருந்து வந்த செய்தி, நினைக்க முடியாத, மன்னிக்க முடியாத, குழந்தை மணக் கொடுமையினை உலகிற்குப் பறைசாற்றுகிறது.

நல்ல நாள் பார்த்துத் திருமணம் செய்தல் என்னும் மூடப் பழக்கம், வாழையடி வாழையாக, நம்மிடையே தொடர்ந்து வருகிறது.

நல்ல நாள் என்னும் நம்பிக்கைக்கு இடம் கொடுத்துவிட்டால், 'மிக நல்ல நாள்' தேடுவது இயல்பாகிவிடுகிறது.

அப்படிப்பட்ட மிகப் புனித நாள் ஒன்று 1978 ஏப்ரல் 10ஆம் நாள் வந்ததாம். 'மகா ஒளியுடைய அந்நாளில், மராட்டிய மாநிலத்தில் மாவார் பகுதியில் மட்டும், பத்தாயிரம் பச்சைக் குழந்தைகளுக்குத் திருமணம் முடித்து வைத்தார்களாம்.

திருமண வேளை, குழந்தை மணமக்கள், பெற்றோர்களின் மடிகளில் தூங்கிக் கொண்டிருந்தார்களாம்.

குழந்தை மணத்தைத் தடுக்க அல்லவா சட்டம் இருக்கிறது?

அது என்ன ஆயிற்று? யாரும் பதில் கூறமாட்டார்கள்.

அப் பத்தாயிரம் குழந்தைகளின் தாய் தந்தையர்களுக்குப் பெற்றோர் என்னும் பெயர் பொருந்துமா? கசாப்புக் கடைக்காரன்கூட ஒரே வெட்டில் உயிரைப் போக்கி விடுகிறான்.

இக்கயவர்களோ, பச்சைக் குழந்தைகளை வாழ்நாள் முழுவதற்கும் சித்திரவதைக் குழியில் தள்ளுகிறார்கள்.

சமயக் குரவர்களோ அருளுக்காகக் காத்துக்கிடப்பவர்கள். இக்கொடுமைகளைப் பற்றிக் காது கொடுத்துக் கேட்கப் போவதில்லை.

அரசியல்வாதிக்கு ஓட்டுச்சீட்டு ஒன்றே குறி. அதை இழக்கக் கூடாதென்ற கவலையில், பேசா நோன்பு இருப்பார்கள்.

அனைத்திந்திய பெண்கள் சங்கம் என்ன செய்கிறது? மெல்ல எப்போதோ கூடி, அருமையான கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுவது உறுதி. 'பெட்டைப் புலம்பலும்' முடியாத பெருநிலை இன்றைய நிலை.

துருக்கியின் நல்வாய்ப்பு, கமால்பாட்சா தோன்றினார். இந்நூற்றாண்டின் முதல் வரை (தொடக்கம் வரை) ஐரோப்பாவின் நோயாளியாகக் கிடந்த துருக்கியை வலிமையுடைய நாடாக மாற்றிவிட்டார். துருக்கிய சமுதாயத்தை, நாகரிக மக்கள் சமுதாயமாக மாற்றி விட்டார். சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த கமால், செயற்கரிய செய்தார். இங்கே ஒரு கமால்பாட்சா தோன்றுவாரா? எப்போது தோன்றுவார்?

'சாதி உயர்வு தாழ்வு, குழந்தை மணம், பெண்ணடிமை ஆகியவற்றை அடியோடு ஒழிக்கக்கூடிய கமால்பாட்சாவின் இந்தியப் பதிப்பு எப்போது?' என்று எண்ணி ஏங்குவதே நம்முடைய வேலையாகிவிட்டது.

ஆளுக்கொரு காட்டுப் பூண்டையாவது, கல்லி எறிய முனைந்தால் இந்தியச் சமுதாயம் எண்ணற்ற கொடுமைகளில் நெளிந்து கொண்டிராது?

பாரதியார் பாடலும் நாட்டுப்பற்றும்

நான் கல்லூரியின் தொடக்க நிலை மாணவனாக இருந்தபோது, பாரதியாரின் தேசியக் கவிதைகளை அரசு பறிமுதல் செய்திருந்தது. அப்பாடல்களைப் பாடுவது, படிப்பது குற்றம்.

நான் வாழ்க்கையின் முதற்குற்றத்தை அப்போதே செய்தேன். நாட்டுப்பற்று மிகுந்த பெரியசாமித் தூரன், குட்டப்பாளையம் கு.சு. பெரியசாமி, ஆர். சோமசுந்தரம் ஆகியோரிடமிருந்து, நான் பாரதியின்

'விடுதலை'ப் பாடல்களைக் கேட்டேன். அவற்றில் நெஞ்சைப் பறிகொடுத்தேன்.

பாரதியாரின், 'சுதந்திர தேவியின் துதி', 'சுதந்திரப் பெருமை', 'சுதந்திர தாகம்', 'பாரத சமுதாயம்', 'தமிழ்' ஆகிய பாடல்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன; அவற்றை மனப்பாடம் செய்ய விரும்பினேன்.

எங்கள் விடுதிக்கு எதிரிலேயே பைகிராப்ட்ஸ் சாலையில் 'காதி பந்தர்' - கதர்க்கடை நடந்தது. அங்கே, பறிமுதல் செய்யப்பட்ட 'தேசிய கீதங்கள்' இரகசியமாகக் கிடைத்தன.

அந்நூலை வாங்கினேன். விடுதி அறையில் ஒளித்து வைத்துக் கொண்டு படித்தேன்; பல பாடல்களை மனப்பாடம் செய்தேன். என்னை அறியாமலே, எனக்கு நானே பேருதவி செய்து கொண்டேன். பாரதியாரின் பாடல்களை மனப்பாடம் செய்தது, என்னுள் நாட்டுப்பற்றை முளைக்க வைத்தது. மேலும் பறிமுதல் செய்யப்பட்ட காலத்தில் - இளமைப்பருவத்தில் - ஒளித்து வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்ததால், பாரதி பாடல்கள் என் நெஞ்சில் ஆழப்பதிந்துவிட்டன.

இன்றும், நாள்தோறும் மின்னி, என்னை வழிநடத்துகின்றன. ஆட்சியில் உள்ளோர், பறிமுதல் செய்யும் கருத்துகளில் பல, பொது மக்களுக்கு உண்மையில் நன்மையானவை, தேவையானவை என்பதற்குச் சான்றாவனபறிமுதல் செய்யப்பட்ட பாரதியின் தேசிய கவிதைகள் .

பெரியாரும் திருக்குறளும்

இவ்வேளை பிறிதொன்று நினைவுக்கு வருகிறது. என்னுடைய மாணவப் பருவத்தில் தாய்மொழியாம் தமிழ், பெஞ்சின் ஓரத்தில் ஓரளவு உட்கார்ந்திருந்தது. திருக்குறளின் அருமையும் பெருமையும் கல்வியாளருக்கே தெரியாது. எனவே திருக்குறளில் சில எப்போதோ ஒரு முறை, பாட நூலில் இடம்பெறும். பிற்காலம் போல், எல்லா வகுப்புப் பாடங்களிலும் திருக்குறள் சேர்க்கப்படவில்லை.

கல்வி நிலையங்களில் கற்காத திருக்குறளை எனக்கும் பல நூறாயிரவருக்கும் ஆழப்பதிய வைத்தவர், ஐந்தாம் வகுப்புகூடத் தேர்ச்சி பெறாத பெரியார் ஈ. வெ. ரா. அவர்களே. இந்நூற்றாண்டின் முப்பதுகளின் கடைசி ஆண்டுகளில், பொதுமேடைதோறும் திருக்குறட் பாக்கள் இரண்டு மூன்றை ஒப்புவித்து, சாதாரண மக்களுக்கும் நம்முடைய அரிய கருவூலத்தைக் காட்டியவர் பெரியார் அவர்களே.

அதனால் பொது மக்களிடையே திருக்குறளைப் படிக்கும் பழக்கம், ஐப்பசி மழைபோல் பெருகிற்று. நானும் அம்மழையில் நனைந்தேன். திருக்குறட் பாக்களை அடுத்தடுத்துப் படித்தேன்.

முதல் இரண்டு பால்களின் பாக்கள் பல, என் உணர்வில் இரண்டறக் கலந்தன. குழம்பிய போதெல்லாம் தெளிவுபடுத்தின; சோர்ந்த வேளைதோறும் தெம்பூட்டி நிமிர்த்தின; பச்சை விளக்கு காட்ட வேண்டிய இடங்களில் பச்சை விளக்கையும் சிவப்பு ஒளி காட்ட வேண்டிய இடங்களில் சிவப்பு ஒளியையும் காட்டி என்னை வழி நடத்துகின்றன.

விரைவு இரயில் வண்டிகள் நமக்குத் தெரியும். அவை விரைந்து செல்ல, வளைந்து கொடுக்காத, சரியாத, உறுதியான, ஒரே சீரான தண்டவாளங்கள் முதல் தேவை. அவற்றைப் போதிய விரைவில் உந்தும் ஆற்றலும் தேவை.

திருக்குறள் என் வாழ்க்கைக்குத் தண்டவாளங்களாக அமைந்தன. இன்றும் அப்படியே செயல்படுகின்றன. பாரதியின் பாடல்கள் உந்தாற்றலாகச் செயல்பட்டு என்னை முடுக்குகின்றன.

இளமைப் பருவம் தாண்டிய பிறகு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடல்கள் பலவும் என்னை இயக்கத் தொடங்கின. இன்னும் இயக்குகின்றன; நாளையும் இயக்கும்.

'நிகழ்ச்சி நிரல்' காட்டியானேன்.

கல்லூரியில் சேர்ந்த பிறகு புதிய பழக்கமொன்றைக் கற்றுக் கொண்டேன். அது என்ன? ஆங்கில நாளிதழ், வார இதழ், திங்கள் இதழ் ஆகியவற்றை நாள்தோறும் படித்தல்.

உயர்நிலைப்பள்ளிப் பருவத்தே பெரும்பாலும் தமிழ் இதழ்களைப் படிக்கவே வாய்ப்பு இருந்தது. விக்டோரியா மாணவர் விடுதியின் படிப்பகத்திற்கு அன்று சென்னையிலிருந்து வெளியான எல்லா ஆங்கிலச் செய்தித்தாள்களும் வந்தன. சில, உள்நாட்டு, வெளிநாட்டு, ஆங்கிலப் பருவ இதழ்களும் கிடைத்தன.

இவற்றை - குறிப்பாக நாளிதழ்களைத் தவறாது படிக்கும் பழக்கம் என்னுள் வளர்ந்தது. செய்திகளைப் படிப்பதோடு நிற்க மாட்டேன். எல்லாச் செய்தித் தாள்களிலும் 'இன்று நடப்பவை', 'நாளை நடப்பவை' என்னும் நிகழ்ச்சி அறிவிப்புப் பகுதியை விடாமல் படிப்பேன். எனக்குப் பிடிக்காத நிகழ்ச்சிகளையும் கவனத்தில் வைத்திருப்பேன்.

நீதிபதி இராமேசன் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றி எங்கே பேசுகிறார்; சி.பி. சுப்பையா எங்கே அரசியல் முழக்கம் செய்கிறார்;

சிங்காரவேலர் எங்கே பொதுஉடைமை முறை உரையாற்றுகிறார். நீதிக்கட்சிக் கூட்டம் எங்கே? திரு.வி.க. பேசும் கூட்டம் எங்கே? பாகவதர்கள் காலட்சேபங்கள் எங்கெங்கே? ஈ.வெ.ரா. வின் கூட்டங்கள் எங்கே? இசை மழை எங்கே?

இப்படி எந்நிகழ்ச்சி பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினாலும், நண்பர்கள் என்னைக் கேட்பார்கள். நிகழ்ச்சி நிரல் நாள் காட்டியாக நான் இருந்தேன்.

பல கூட்டங்களுக்கு நானும் போவேன். அவை, சிலவேளை, எதிரும் புதிருமான கூட்டங்களாகவும் இருக்கக்கூடும். இருப்பினும் கூட்டத்திற்குச் சென்றால், தள்ள முடியாத வேலை இருந்தாலொழிய கடைசிவரை இருந்து கேட்பது என் போக்கு.

இதனால் என்னை 'முற்றுப்புள்ளி' என்று நண்பர்கள் வேடிக்கையாகக் குறிப்பதுண்டு. அக்காலத்தில் ஊமையாக இருந்து கடைசிவரை பேச்சுகளைக் கேட்பது வீண் போகவில்லை. பேச்சுகளின் தரத்தையும் பலனையும் மதிப்பிட அப்போக்கு உதவிற்று.

பல பேச்சாளர்கள் வித்தை காட்டி வியக்க வைப்பார்கள். சிலரே கருத்தைச் சொல்லிப் புரிய வைப்பார்கள். இரண்டுங்கெட்டான்களும் உண்டு.

என்னை உருவாக்கிய சொற்பொழிவுகள்

என்னுடைய கல்லூரிப் பருவத்திலேயே திரு.வி.க., பெரியார் ஈ.வெ.ரா., பட்டுக்கோட்டை அழகிரிசாமி, குத்தூசி குருசாமியார், பூவாளூர் பொன்னம்பலனார் முதலியோரின் பேச்சுகளைக் கேட்கும் வாய்ப்புகள் பெற்றேன்.

திரு.வி.க.வின் துள்ளுநடை என்னை ஈர்க்கும. அந்நடையைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்பியதுண்டு. என் எழுத்தில் ஓரளவு அந்நடையின் சாயலைக் காணும் நண்பர்கள் உண்டு.

பெரியாரின் பேச்சு என்னை எப்போதும் சொக்க வைக்கும். அதில் வியப்பென்ன? கல்கி கிருஷ்ணமூர்த்தி, வ.ரா. போன்றவர்களையே சொக்க வைத்த பேச்சுகள் ஆயிற்றே. ஆனந்தவிகடனில் கல்கி, பெரியாரைப் பற்றி எழுதியதின் சுருக்கம் இதோ.

'சாதாரணமாக இவருடைய பிரசங்கங்கள் மூன்று மணி நேரத்திற்குக் குறைவது கிடையாது. எவ்வளவுதான் நீட்டினாலும் இவருடைய பேச்சில் அலுப்புத் தோன்றுவது கிடையாது. அவ்வளவு ஏன்? தமிழ்நாட்டில் ராமசாமியாரின் பிரசங்கம் ஒன்றை மட்டுந்தான் என்னால் மூன்று மணி நேரம் உட்கார்ந்து கேட்க முடியும் என்று தயங்காமல் கூறுவேன்.'

அவர் (ராமசாமி) உலகானுபவம் என்னும் கலாசாலையில் கற்றுணர்ந்த பேராசிரியர் என்பதில் சந்தேகமில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பழமொழிகளும் உபமானங்களும் கதைகளும் கற்பனைகளும் கிடைக்கின்றனவோ நான் அறியேன்.

'மக்களின் மனத்தைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை அவர் நன்கறிவார்.

'பாமர ஜனங்களை வசப்படுத்தும் ஆற்றல் தமிழ்நாட்டில் வேறெவரையும்விட அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதிலிருந்து அவருடைய பிரசங்கம், படித்தவர்களுக்கு ரசிக்காது என்று முடிவு செய்தல் பெருந்தவறாகும். முழுதும் படித்துத் தேர்ந்த பி.ஏ. பட்டதாரிகளுங்கூட, அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள், அவருடைய வாதத் திறமை அபாரமானது.' இவ்வளவு சிறப்பு வாய்ந்த பெரியாரின் பேச்சுப் பாணியை எவரால் பின்பற்ற இயலும்?

கல்லூரிப் படிப்பை முடித்த பிறகே, அறிஞர் அண்ணாவின், தமிழ் மற்றும் ஆங்கிலச் சொற்பொழிவுகளைக் கேட்டு மயங்கும் வாய்ப்புகள் கிடைத்தன. ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப் பிறகே, கர்மவீரர் காமராசரின் பேச்சுகளைக் கேட்கும் பேறு பெற்றேன்.

என்னுடைய அலுவலுக்குப், பேச்சுக்கலை தேவைப்பட்டது. கேட்டுக் கேட்டுப், பெற்ற பட்டறிவு கைகொடுத்தது. சொன்மாரியைக் காட்டிலும் கருத்துகளை விளக்கும் பாணி, அதிகப் பயனுள்ளது என்று உணர்ந்தேன்.

காமராசரின் பேச்சில் சொல் நயம் சொட்டாது; கவிதை மணம் கமழாது. எனினும் மக்களை ஈர்க்கும்.

எதனால்? ஏற்கவோ, மறுக்கவோ வேண்டிய கருத்து மணிகள் அவர் பேச்சில் கிடைப்பதால்.

'எதை நினைத்து எதைச் சொன்னார்' என்று குழம்பும்படி காமராசர் பேசியதில்லை. அப்பாணியைப் பின்பற்றுவதற்கு நான் முயன்றேன்.

அதில், நான் வெற்றி பெற்ற அளவிற்கு, பொதுமக்களைக் கல்வித் தொண்டில் ஈடுபடுத்தும் பேரியக்கங்களை நடத்துவதிலும் நல்ல வெற்றி பெற்றேன்.

31. பித்தனின் புதிய போக்கு

பித்தனிடம் 'பித்து'க் கொண்டார் இராஜாஜி

'பித்தனைப் பற்றி என் அபிப்பிராயம் என்ன? காரணம் சொல்ல முடியாது. அது வெளிவந்தது முதல் அதன் மேல் மோகங் கொண்டுவிட்டேன். இவ்வளவு மட்டுமே சொல்லலாம்.'

இப்படிப், 'பித்தனி'டம் பித்துக் கொண்டவர் எவர்? திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

ஏன் பித்துக் கொண்டார்?

காரணம் அவருக்கே தெரியவில்லை. அதுதானே காதல்!

புதிய போக்குகள்; புரட்சிச் சிந்தனைகள்

மாணவர்களால் நடத்தப்பட்ட முதல் தமிழ் இதழ் என்பது மட்டுமல்ல அதன் சிறப்பு. இன்றைக்குக் கேட்டாலும் பலர் அதிர்ச்சியடையக்கூடிய. பல முற்போக்குக் கருத்துகள், 'பித்தன்' வாயிலாக வெளிவந்தன.

'பித்தன்' முதல் மலரின் ஆறாவது இதழ் சுக்கில ஆண்டு சித்திரைத் திங்களில் வெளியாயிற்று. அது புத்தாண்டு வாழ்த்துப் பாடலோடு தொடங்கிற்று. ச.து. சுப்பிரமணியம் பாடிய அப்பாடலின் பகுதியைப் படியுங்கள்.

'சாதிச் சேற்றில்
சமயத்தின் குப்பையில்
சாத்திரக் கந்தற்
கூளத்தில் பண்டிதர்
நீதிப் பொய்யினில்
வைதிகக் கூச்சலில்
நீண்ட நாள்கள்
கழித்தனம் வீணிலே'

வள்ளலார் வரிகளோ என்று மயங்குகிறீர்களா; தொடர்ந்து படிப்போம்.

'கண்ணிருட்சியும்
வாயில் வறட்சியும்
காதடைப்பும்
கடுவெம்பசியினால்
உண்ணிகழ்ந் தெம்
மனிதர் வருந்திட
உணர்விலாது
பலதினம் போக்கினோம்'

இப்படி இடித்துரைத்த ச.து.சு.

'போன நாட்கு
    வருந்துதல் பேதமை
புன்மைதீரப் பெருஞ்
    செயல் ஆற்றுவோம்
கானத்தோடு
    நற்பூவின் சிரிப்பொடும்
காலைச் சோதிக்
    கதிரவன் தோன்றினான்'

என்று நமக்கு நம்பிக்கையூட்டுகிறார். தொடர்ந்து,

'பூக்கள் பூத்தன
    புள்ளினம் பாடின
புன்னகை யொளிப்
    பூவெங்கு மோங்கின
தேக்கு ஞானத்
    திடமும் வலிமையும்
சேர்ந்த வின்பச்
    சுதந்திரம் காணுவோம்.'

என்று பாடும்போது, நாமும் ஒப்பித் தலையாட்டுவோம்.

அன்னியர் துணிக்கு எதிர்ப்பு

துருக்கி நாட்டு வாலிபர்கள் பரதேசித் துணிகளை வாங்குவதில்லையென்று சத்தியம் பண்ணியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி,

'பாரத புத்திரர்களாகிய நாம், நம்மால் இயன்றவரை துருக்கி நாட்டு வாலிபர்களைப் பின்பற்ற முயலலாம். இதுதான் உண்மை வேலை' என்று பித்தன் அறிவுரை கூறிற்று.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய இளைஞர்களுக்குக் கூறிய இவ்வுரையில் இன்னும் உயிர் இருக்கிறது.

லஜபதிராயின் அறிவுரை

லாலா லஜபதிராய் என்னும் பெரியவர், விடுதலைப் போராட்ட வீரர்களின் முன்னணியில் இருந்த முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்.

'பாஞ்சால சிங்கம்' என்று பெருமிதத்தோடு அனைவராலும் அழைக்கப்பட்டவர். அவர் முற்போக்குச் சிந்தனையாளர். அம் மாவீரர், அந்நிய ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது தடியடி பட்டு, துன்புற்று மறைந்தார்.

அந்த அரிமாவின் 'என் வாழ்க்கைக் காதை'யிலிருந்து ஒரு பகுதியைப் பித்தன் வெளியிட்டு, மாணவர்களிடம் நற்சாட்சியை உருவாக்கிற்று.

'நாம் இன்னும் வெகுநாள்வரை சுதந்திரத்துக்காகப் போராட வேண்டியிருக்குமென்றே நம்புகிறேன். ஆகையால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சந்ததியாரும், தங்களுடைய முன்னோர்களுடைய தவறுகளை உணர வேண்டும்.

'அந்நிய ஆட்சிக்கு விரோதமாகப் போராடுவது சூது விளையாட்டை ஒத்ததாகும். புதிது புதிதான நிலைகளுக்கு எதிர்ப்பட வேண்டி யிருக்கும். முன்கூட்டித் தயாரித்து வைத்திருந்த யோசனைகளை யெல்லாம் அடிக்கடி கைவிட வேண்டியிருக்கும். வறுமையை முன் யோசனை யினால் விலக்கிவிட முடியாது.

'சர்வதேச சதுரங்கப் போர்டில் ஒரு விஷயம் முடிவு செய்யப்படுமுன், எத்தனையோ தலைமுறைகள் கடந்துவிடக்கூடும். ஆனால் ஒவ்வொரு சந்ததியாரும் தமக்கு முன்னிருந்தவர்கள் என்னென்ன தந்திரங்களை உபயோகித்தார்கள் என்றும் அவர்கள் எவ்வளவு வெற்றி பெற்றார்கள் என்பதையும் அறிந்து கொள்வது உசிதமாகும்' என்று லஜபதிராய் புலப்படுத்தினார்.

'பித்தன்' வழியாகத் தமிழுலகம் இத்தெளிவைப் பெற்றது.

கல்வியில் மெக்சிகோ வழிகாட்டுகிறது

'பித்தன்' தேனீயாகச் செயல்பட்டது. அக்கால மெக்சிகோவின் கல்வி முறை பற்றி ஹென்றிஜொன்னாட் என்பவர் இந்துவில் எழுதியிருந்தார்.

அதன் சுருக்கத்தைப் 'பித்தன்' வெளியிட்டுத் தமிழர்களுக்குக் கண்ணைத் திறந்தது. திறந்ததும் மூடி உறங்கிவிட்டோம். இப்போதாவது அதைத் தெரிந்து கொள்வோம்.

'ஆசிரியன் தன் மாணாக்கனுக்குப் புகட்ட வேண்டியது, கல்வி மட்டுமல்ல; தான் கற்ற கல்வியைத் தன் வாழ்க்கையில் பயன்படுத்தி, அதன்படி ஒழுக வேண்டும் என்னும் உண்மையே.

'வாழ்க்கை என்றால் நிலத்தைப் பயிரிட்டுத் தன் பொருளாதாரத் தையும் சமுதாயத்தையும் சீர்படுத்திக் கொள்வதையே குறிக்கும். எனவே, அந்தப் பள்ளிக்கூடத்தின் முக்கிய வேலை இவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதேயாகும்.

'பள்ளிக்கூடத்திற்கு மேஜை நாற்காலிகள் அவசியம் எனில், அவற்றை மாணாக்கர்களே செய்கிறார்கள். அவர்கள் சிறியவர்களா யிருந்தால், பெரியவர்கள் உதவி செய்கிறார்கள்.

''மாணாக்கர்கள் எழுதுவதற்கு மை அவசியம். இதற்கு அவர்கள் உலாவப் போகும்போது வழியிலுள்ள சில மரத்தின் காய்களைக் கொண்டு மை செய்து கொள்கிறார்கள்.

'அந்தக் காய்களைப் பறிக்கும்போது தங்கள் கைகள் அழுக்காகி விடுகின்றன. அவ்வழுக்கைப் போக்க சவுக்காரம் (சோப்) அவசியம். எனவே, பல பள்ளிக்கூடங்களில் சவுக்காரம் செய்யும் தொழிலும் கற்பிக்கப்படுகிறது.

'ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு சேவிங்ஸ் பாங்கியும் கூட்டுறவு சங்கமும் இருக்கின்றன.

'எல்லா மாணாக்கர்களும் தம் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பொருள் சேர்க்கத் தினந்தோறும் தோட்ட வேலை முதலிய சிறு வேலைகளைச் செய்கின்றனர்.

'தம் சொற்பச் சம்பளத்தில் இருந்து ஆசிரியர்களும் பள்ளிக்கூட நிதிக்கு உதவுகிறார்கள். எளிய பள்ளிக்கூடமாயிருந்தால் மாணாக்கர் களின் பெற்றோர்கள் பள்ளிக்கூடத்துக்கு வேண்டுவனவற்றை உதவுகிறார்கள்.'

'பயனுள்ள செயல்வழிக் கல்வி' என்னும் வார்தா கல்விமுறை உருப்பெறுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரே மெக்சிகோ நாட்டில் அக்கருத்து உருப்பெற்றது; செயல்பட்டது.

வெறும் ஏட்டுப்படிப்பு கல்வியாகாது. இது சத்து நீங்கிய சக்கையாகும். பயனுள்ள உற்பத்திச் செயல்பாடே சத்தாகும். அந்தச் சத்தினைச் சேர்க்க முயன்ற 'ஆதாரக் கல்வி'யில் வைதீக மனப்போக்கு நுழைந்தது: ஆட்சி செய்தது; எரிச்சல் ஊட்டிற்று; கல்வி மடாதிபதிகளை உருவாக்க முயன்றது; முறிந்தது.

சமயக் கட்டுப்பாடுகள், சமயங்களின் உயிர்களைப் பறித்தது போன்று 'நூற்பு நூற்பு' என்ற வைதீகப் போக்கு நல்ல ஆதாரக் க்ல்வியைக் கழுத்தை முறித்துக் கொன்று விட்டது.

என் இதயத்தில் வீழ்ந்த விதை

'செயல் வழிக்கல்வி' என்பது இயற்கையோடு இணைந்த நல்ல கல்வி முறையாகும். செயல்களை, நடைமுறைகளைச் சூழ்நிலைக் கேற்ப மாற்றியமைத்துக் கொண்டு, எல்லா நிலைகளிலும் எல்லோர்க்கும் செயல்பாட்டினில், கைவேலைகளில், எளிய தொழில்களில் பயிற்சி கொடுக்கும்போதே, இந்தியக் கல்வி பயனுள்ளதாக மாறும்.

ஆண்டைக்கு மாடு மேய்த்து, வழிப்போக்கருக்குச் சுமை தூக்கிப் பாழாகிப் போகும் பிள்ளைகளுக்கு, பள்ளிகளிலே ஆதாயமான

வேலைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்; முயன்றால் இதை வெற்றிகரமாகச் செய்யவும் முடியும்.

இப்படிச் சிந்திக்க யார் உள்ளார். காந்தியைச் சுட்டுவீழ்த்தி விட்டோம். சுற்றியிருந்த அணுக்கத் தொண்டர்கள் பெரியவர்களாகி விட்டார்கள். பொதுமக்களுக்காகக் குரல் கொடுக்க எவர் பிறப்பாரோ?

மெக்சிகோ நாட்டுப் பெற்றோர்கள் பள்ளிகளின் தேவைகளுக்கு உதவியது போல, தமிழ் நாட்டுப் பெற்றோர்களும் நம் பள்ளிகளுக்குத் தாராளமாக உதவி, சீரமைக்க வேண்டும்.

இக்கருத்து என் நெஞ்சின் ஆழத்தில் எனக்கும் தெரியாமல் புதைந்து கிடந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு அக்கருத்து முத்து வெளி வந்தது. பள்ளிச் சீரமைப்பு இயக்கமாக வளர்ந்தது.

பத்தாண்டுக் காலம் பல்லாயிரக் கணக்கான பள்ளிகளை, பொது மக்களின் உதவிகளுடன் சீராக்க முடிந்தது.

தன்னுதவியில் தமிழ்ச் சமுதாயம் மெக்சிகோ நாட்டுச் சமுதாயத்திற்கு இளைத்ததல்ல என்பது மெய்யாயிற்று.

பொது மக்களுக்கான எந்த நடவடிக்கையும் திட்டமும், பொது மக்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறும்பொதே வெற்றி பெறும். ஒத்துழைப்பும் ஆதரவும் அவர்கள் அத்தகைய திட்டங்களைப் புரிந்துகொள்வதிலிருந்து மலரும். பள்ளிச் சீரமைப்பு இயக்கம் புரிதலைப் பரப்பிற்று.

பள்ளிச் சீரமைப்பு இயக்கம் முழுமையாகத் தொடர்ந்திருந்தால், தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்கள் கவர்ச்சி நிலையங்களாக விளங்கா விட்டாலும், இருந்து கற்பதற்கேற்ற இடங்களாக மாறியிருக்கும். ஆனால் கல்விப் பொறுப்பு யானைகளின் கைகளில் சிக்கிச் சீரழிந்தது.

தமிழ்நாட்டில் புதிய பல்கலைக்கழகம்

அண்ணாமலை பல்கலைக்கழகம் 1929 இல் இருந்து நடக்கிறது. அப்பல்கலைக் கழகத்தை நிறுவியதைப் பாராட்டி வரவேற்றுப் பித்தன் எழுதிற்று. அதே நேரத்தில் குறைபட்டுக் கொண்டது. பாராட்டும் குறையும் பாருங்கள்.

'இப்பல்கலைக் கழகம் தமிழ்நாட்டிற்குப் பெரும்பயன் விளை விக்கும். அதில் தேசிய மணம் கமழும். தமிழ்த்தாய், மூவேந்தர் முடிமீதேறிச் செருக்குற்று இருந்த நிலையை மீண்டும் அடைவாள் என்று எண்ணி இறும்பூது எய்திக் கொண்டிருந்தோம்; இருக்கிறோம்.

'ஆனால் அதன் வைஸ்சான்ஸ்லர் தேர்வுகளே, எம் இறும்பூதின் சிண்டைப் பிடித்துச் சிறிது ஆட்டிவிட்டன. இன்னும் பார்ப்போம். ஆம்; இன்னும் பார்ப்போம்.'

மாநிலக் கல்லூரியில் எனக்கு ஆங்கிலக் கவிதைகளைப் பயிற்றுவித்த பேராசிரியர் திரு. எஸ்.இ. அரங்கநாதன்தான் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

'ஆங்கிலப் பேராசிரியர் தலைமையில் தொடங்கும் புதிய பல்கலைக்கழகம் தமிழுக்குப் போதிய தொண்டாற்றுமா?' என்று பலரும் ஐயப்பட்டனர்.

அதனால்தான் 'இனியும் பார்ப்போம்' என்று பித்தன் பொறுத்திருக்கச் சொல்லிற்று.

வங்காளத்தில் கல்விப் புரட்சி

கல்கத்தாவில் இருந்து வெளியான 'மாடர்ன் ரெவ்யூ' என்ற ஆங்கில மாத இதழில் வெளியான குறிப்பினைப் பித்தன் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திற்று. அத்தகவல் என்ன?

'தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முன்னேற்றச் சங்கம் ஒன்று 1907 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. படிப்பைப் பரப்புவதே இதன் முக்கிய வேலை. 1928-29 இல் இச்சங்கம் 242 பள்ளிக்கூடங்களை நடத்தி வந்தது. இப்பள்ளிக்கூடங்களில் 12907 ஆண் பிள்ளைகளும் 4711 பெண் பிள்ளைகளும் கல்வி பயின்று வந்தனர்.

'இந்தப் பள்ளிக்கூடங்களை நிர்வகிப்பதில் இச்சங்கத்தார் ரூ.63616 செலவழித்திருக்கின்றார்கள். துரைத்தனத்தார் உதவியது ரூ. 9210 மட்டுமே ஆகும். மீதித்தொகை முழுவதும் பிள்ளைகளுடைய சம்பளத்திலிருந்தும் நன்கொடையிலிருந்தும் சேர்க்கப்பட்டது. இது வங்காளத்தில் நடந்த அருமையான நற்றொண்டு. ஆங்கில அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்குப் போதிய அளவு உதவவில்லை என்பது தெரிகிறதல்லவா?'

'இத்தகவலை வெளியிட்ட 'பித்தன்' தமிழ்நாட்டில் கல்வி பெருக நமது தோசாபிமானிகள் யார்தான் பள்ளிக்கூடங்களை நடத்த முன் வந்திருக்கின்றனர்? எல்லாம் வாசா கைங்கரியமாகவே இருக்கின்றது. உண்மைத் தொண்டைக் காணோம்' என்று துணிந்து எழுதிற்று.

இளமைக்கே உரியதல்லவா துணிச்சல். இதுவாகிலும் பெருகியிருந்தால் எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு 'தாழ்த்தப்பட்டோர்' என்னும் நிலை, பழங்கதையாகிப் போயிருக்குமே!

திருமணத்தில் சிக்கனம்

'யங் இந்தியா' 26-9-1929 நாள் இதழில் காந்தியடிகளார் எழுதியதின் ஒரு பகுதியைப் பித்தன் வெளியிட்டது. வேளைக்கு வேளை நம்மவர் காதுகளில் ஒலிக்க வேண்டிய அந்நல்லுரையைக் காது கொடுத்துக் கேட்போம்.

'மூத்தோர்களைவிட இளைஞர்களே, கல்யாண விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் விவாகம் செய்து கொள்ளவும் முக்கியமாகப் படிக்கும் பொழுது விவாகம் செய்து கொள்ளவும் மறுக்க வேண்டும். எப்படியாவது கல்யாணச் செலவுகளைச் சுருக்க முற்பட வேண்டும்.

'மதச் சடங்குகளுக்குப் பத்து ரூபாய்க்கு மேல் செலவழிக்கக் கூடாது. இச்சடங்குகளைத் தவிர மற்றவையெல்லாம் அநாவசிய மென்று கருதி ஒதுக்கப்படல் வேண்டும்.

'நாட்டிலுள்ள படித்த இளைஞர்கள்' முக்கியமாகப் பணக்காரப் பிள்ளைகள், தங்கள் காரணமாகச் செய்யப்படும் அநாவசியச் செலவு களை நிறுத்த உறுதிகொண்டால் தேசத்தின் பணம் வீணே செலவாகாது.'

சஞ்சீவியான கருத்து; இதைக் காந்தியவாதிகளும் செயல் படுத்தவில்லை; பெரியாரைப் பின்பற்றுபவர்களும் பின் பற்றவில்லை. இரு சாராரும் வெகுளுவார்கள். என் செய்ய? எப்போது மாற்றம்? எப்போது வாழ்வு?

பித்தனில் சிறுகதை

'தொழுவம் காத்த நாய்' என்னும் தலைப்பில் சிறுகதை ஒன்றைப் 'பித்தன்' சுக்கில ஆண்டு ஆடித் திங்களில் வெளியிட்டது. அக்கதை நம் சமுதாயத்தின் அவல நிலையைக் கிண்டல் செய்கிறது; கசப்பான உண்மையை, இலக்கியச் சுவையோடு வெளியிடுகிறது.

குத்தூசி குருசாமியின் கட்டுரைச் சாயல் அதில் முளைவிட்டிருந்தது. அந்நாளிலேயே - 1929லேயே - நெஞ்சில் தைக்க வைக்கும் எழுத்தாளராக விளங்கிய குத்தூசி குருசாமியார் அதை எழுதவில்லை என்பதை நான் அறிவேன்.

மாட்டுத் தொழுவத்தில் புல்லின்மேல் படுத்திருந்த நாய், உழுதுவிட்டுக் களைத்து வந்த மாடு புல்லைத் தின்னாதபடி தடுக்கிறது.

நாய்க்கும் எருதுக்கும் இடையே உரையாடல் நிகழ்வதாகக் கற்பனை. அதிலே சில பகுதிகளைத் தருகிறேன்.

நாய் : இறைவரால் புனிதமடையும் கோயில் சண்டாளரால் அசுத்தமடைந்துவிடுமா?

எருது : அசுத்தமடையாது.

நாய் : பின் ஏன் அவர்களைக் கோயிலுக்குள் நுழையவிடுவதில்லை?

எருது : வேறு இரகசியமான காரணங்கள் இருக்கலாம்.

நாய் : அதே இரகசியமான காரணங்களால்தான் உன்னையும் தொழுவத்துக்குள் விட மறுக்கிறேன்.

மற்றோர் பகுதி:-

நாய் : உழைப்பதற்கே உங்களைப் படைத்தார்; பிழைப்பதற்கே எங்களைப் படைத்தார்.

எருது : ஐயரே, ஒரு சந்தேகம் கேட்கிறேன். கோபித்துக் கொள்ளா தீர்கள். படைத்தது எதற்காகவிருந்தாலும் உங்கள் மனமே உங்களை வாட்டவில்லையா?

நாய் : எதற்காக வாட்டும்? தாறுமாறாய்ச் செய்தால் தொழில் கெடாதா? இன்று முதலிலிருந்து நீ வேண்டுமானால் குரைக்கிறாயா?

எருது : இல்லை யில்லை. நீர்தான் எஜமானரோடு, நீரும் எஜமானர் என்று நினைப்பீர். எந்த மேடையிலும் ஏறுவீர், பிறகு வேண்டியபடி யெல்லாம் குரைப்பீர். எனக்கு மேடையிலேறும் வழக்கமும் இல்லை. அடங்கியிருப்பதே எனக்கு இயல்பு.

நாய் : நீ மூடனாக இருப்பதாகக் கருதினேன். நீ துஷ்டனாகவும் இருக்கிறாய். கலியின் கொடுமையால் கண்டபடி பேசுகிறாய்.

இந்தக் கதையின் முடிவு என்ன? 'சௌகர்யத்திற்காக வேதம் படைத்து, நாகரிகம் படைத்த நாய்களோடு மன்றாடுவதைப் பார்க்கிலும் வேற்றுநாடுகளுக்குச் சென்றுவிடுவதே நமக்குச் சௌகரியம்' என்று கூறி எருது எழுந்து சென்று விட்டது.

எண்ணற்ற தமிழர் முற்காலத்தில் திக்குத் தெரியாத பல நாடுகளுக்குக் கூலிகளாகக் குடியேற நேர்ந்தது எதனால்? நம் சமுதாயக் கொடுமையால்; அது பெற்று எடுத்த பயங்கர வறுமையின் இழிவால்.

இவற்றைத் துணிச்சலாக, ஐம்பது ஆண்டுகளுக்குமுன் படம் பிடித்துக் காட்டிய எழுத்தாளரும், அதை வெளியிட்ட 'பித்தன்' ஆசிரியர் குழுவினரும், அன்றும் இந்து சமயப் பக்தர்கள்; இன்றும் இந்து சமயக் காவலர்கள். அன்றும் இன்றும் வகுப்புப் பகையை அண்டவிடாதவர்கள் என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

32. பித்தனின் இளைஞர்கள்

பெரியவர்களைக் கவர்பவை, பொது மக்களைக் கவர்தல் அரிது.

நம்மைப் போன்று அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் சமுதாயங் களில் பொதுமக்கள் சிந்தை முழுவதும் பிழைப்பைப் பற்றியே.

எவ்விதப் புறக் கவர்ச்சியும் இல்லாத 'பித்தன்', உள்ளுணர்வுச் சிறப்பு மட்டுமே கொண்டிருந்த பித்தன், இராஜாஜியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது வியப்பல்ல.

பொதுமக்களிடம் அது ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது.

வனமலர்ச் சங்கத்தின் எல்லாக் கிளைகளிலுமாக நூற்றைம்பது உறுப்பினர்கள் இருந்தார்கள்.

இவர்கள் நீங்கலாகப் பணங்கட்டிப் பித்தனை வரவழைத்தவர்கள், முந்நூறு பேர்கள் ஆவார்கள்.

மொத்தம் நானூற்று ஐம்பது ஆதரவாளர்கள் என்பது அக்காலத்திற்குப் பெரிய ஆதரவு.

பித்தனிடம் பித்துக் கொள்வதற்கும் காரணம் வேண்டுமே. பித்தனுடைய தமிழ் உணர்வு, நாட்டுப்பற்று ஆகியவை மட்டும் காரணமல்ல. பழமைப் பூச்சாண்டிகளுக்கு அஞ்சாத முற்போக்குக் கருத்துகளைத் தாங்கி வந்ததும் காரணமாகும்.

இதோ ஓர் எடுத்துக்காட்டு

'தற்காலம் பெண்கள் அறிவிலும் வீரத்திலும் சிறந்து விளங்காமையே நாட்டின் தாழ்மைக்கு அறிகுறியாகும்.

'நமது நாட்டில் பெண்களை மிகவும் தாழ்மையாய் நடத்தி வருகின்றனர். அதை நாம் கண்டிக்க வேண்டும்.

'மேலும் அவர்களுக்குச் சம உரிமை ஈதல் மிகவும் அத்தியாவசியம். பால்ய விவாகம் ஓங்க ஒட்டாது தடுத்தலும், விதவா விவாகத்தை ஆதரிப்பதும் நமது முதற்கடனாகக் கொள்ள வேண்டும்.

'தாயறிவு மகனறிவு ஆகுமாதலின் அவர்களை அறிவிற் சிறந்தவராக்க முயல வேண்டும்.'

-இப்படி, திரு. சுப்பையன் என்பவர், திருச்சிக் கிளையில் சுக்கிலவர்ண்டு ஆடித் திங்கள் இருபதாம் நாள் பேச, அதைப் பித்தன் வெளியிட்டது.

இன்றைக்கும் தங்களுக்குக் கிடைக்கும் பாராட்டு குறைந்துவிடும் என்று அஞ்சி, இவ்விஷயங்களைத் தொடாமல் நாகரிகமாக விலகிப்போகும் 'பெரியவர்'கள் உள்ளார்கள்.

'பித்தனின்' இளைஞர்களோ துணிந்து பேசினார்கள். ஐம்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே, முற்போக்குச் சிந்தனையை வெளி யிட்டார்கள்.

சொல்லுதல் யார்க்கும் எளிதாம்; செய்தல் அரிதாம். அரிய செயலையும் செய்து காட்டினார், வனமலர்ச் சங்க அண்ணன் ஒருவர்.

கலப்பு மணத்தை ஆதரித்த காந்தியவாதி

மயிலாப்பூரில் சிறந்த வழக்கறிஞராக விளங்கிய, திரு. சு. கோதண்டராமன், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு பொல்லாதவராக - புரட்சிக்காரராக இருந்தார் தெரியுமா?

வழிவழிச் சைவக் குடும்பத்தில் பிறந்த திரு. சு. கோதண்டராமன் கலப்பு மணம் செய்துகொண்டார்.

சைவத் திருமடங்களின் பட்டத்திற்குரிய மற்றொரு சைவ சாதியிலா? இல்லை. பின் யாரை?

இராஜபுத்திர வகுப்பைச் சேர்ந்த செல்வி ருக்குமணி தேவியை, வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார்.

மடங்களுக்குரிய சைவர்களுக்கிடையே கூட, இன்னும் கலப்புமணம் அரிதாக உள்ளது.

இப்படிப்பட்ட கற்பாறைத் தமிழ்ச் சமுதாயத்தில், ஐம்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்பே, ஓர் இளைஞர் துணிந்து முன்வந்து, என்னைப் போன்றவர்களுக்கு நல்வழி காட்டினார்.

மௌனப் புரட்சி செய்த அவரை எண்ணுந்தோறும் உள்ளம் பூரிக்கிறது. அரிமாக்களின் கூட்டத்தில் வாழ்ந்த உணர்வு சுரக்கிறது.

வணமலர்ச் சங்கம் பாராட்டு

'வழக்குரைஞர் திரு. சு. கோதண்டராமன் ஏதோ செய்து விட்டார்; நாம் கண்டுங் காணாது இருப்போம்.' என்று அவருடைய நண்பர்கள் இருக்கவில்லை. திருப்பரங்குன்றத்தில் அவர் செய்துகொண்ட கலப்புத் திருமணத்தைப் பாராட்டிச் சென்னையில் அவர்களுக்கு 'உண்டாட்டு' ஏற்பாடு செய்தார்கள். உண்டாட்டு என்னும் சொல்லே அன்று பயன்படுத்தப்பட்டது.

உண்டாட்டில் நண்பர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களோடு மாப்பிள்ளையின் தந்தையார் சாத்தூர் திரு. சுப்பிரமணிய நாயனார் சேர்ந்தார். அதுவே பாராட்டுக்குரியது.

அதோடு நிற்காமல் மணமக்களைப் பாராட்டிப் பேசினார். என்ன கூறினார்?

'பெற்றோர்கள் இளங்காதலர்களின் போக்குக்குத் தடை செய்யக்கூடாது. அது அதிகக் கெடுதியை விளைவிக்கும்.

'நான் கலப்பு மணம் செய்து கொள்வது எனது பெற்றோராலும், மற்றோராலும் தடை செய்யப்பட்டது.

'ஆகவே எனது குமாரன் கலப்பு மணம் செய்துகொள்ள விழைந்தபோது நான் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் விடையளித்தேன்.'

இப்படி ஆதரவு தந்த சாத்தூர் சுப்பிரமணிய நாயனார் ஊர்பேர் தெரியாத மனிதர் அல்லர். அக்காலத்தில் பாண்டிய மண்டலத்தில் புகழ் பெற்றிருந்தவர்.

வழக்குரைஞர் தொழிலை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தபோது, காந்தியடிகளாரிடம் நெஞ்சைப் பறிகொடுத்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டார். வழக்காடும் தொழிலை விட்டுவிட்டார். நாட்டுத் தொண்டில் குதித்து விட்டார். 1921 இல் ஓராண்டு காலம் சிறைத்தண்டனை பெற்றார். இவருடன் இவர் மூத்த மகன் சண்முகசுந்தரமும் சிறை சென்றார். அக்காலத்தில், வடக்கே மோதிலாலும் நேருவும், தந்தையும் மகனுமாகச் சிறை சென்ற நிகழ்ச்சிக்கு இணையாகத் தெற்கே உள்ளவர்கள் இந்நிகழ்ச்சியைப் பேசிப் பெருமைப் பட்டனர். காமராசர் அரசியலில் சத்தியமூர்த்தியைத் தலைவராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு, இவரைத்தான் தலைவராகக் கொண்டு செயல்பட்டார். எனினும் இவரோ இவர் மகனோ அதைச் சொல்லி எதுவும் சம்பாதித்துக் கொள்ளவில்லை. முதல் தலைமுறைக் காந்தியவாதிகள் பலருக்குள்ள தனிச்சிறப்பு இது எனலாம்.

நேர்ந்து விட்டதற்குக் காரணம் கூறும் தன்மையில் செயல்படாத, கொள்கைக்கு உண்மையான மனிதராக விளங்கும் திரு. கோதண்டராமன், உண்டாட்டின் இறுதியில்,

'இத்தகைய கலப்பு மணங்கள் நமக்குள் சர்வ சாதாரணமாக நடைபெற வேண்டும். கலப்பு மணம் நடப்பதில் நமக்கு ஒருவித ஆச்சரியமும் தோன்றக்கூடாது' என்றார். இதைச் சொல்லி அரை நூற்றாண்டுக்கும் மேலாகிவிட்டது.

கோதண்டராமனின் தம்பி கிருஷ்ணன், கமலா என்னும் விதவையைத் திருமணம் செய்து மேலும் புரட்சி செய்தார் என்பதையும், அதற்குச் சாத்தூர் சுப்பிரமணிய நாயனார் இசைவளித்து வாழ்த்தினார் என்பதையும், இத்திருமணம் மிக எளிய முறையில் பதிவுத் திருமணமாக நடைபெற்றது என்பதையும் இங்கேயே குறிப்பிட விரும்புகிறேன்.

வனமலர்ச் சங்கம் அளித்த வாழ்த்துப் பத்திரம்!
திருவாளர் சு. கோதண்டராமன் பி.ஏ.பி.எல்.
அவர்களுக்கும்
ஸ்ரீமதி ருக்குமணி தேவியவர்களுக்கும் நடந்த
கலப்புத் திருமணத்தை முன்னிட்டு
வனமலர்ச் சங்கத்தாரால் வாசித்துக் கொடுக்கப்பட்ட

வாழ்த்துப் பத்திரம்

மாண்புமிக்க மணமக்காள்!

தங்கள், இல்வாழ்க்கை என்றென்றைக்கும் இன்பவாழ்க்கையாகுக! நம் நாட்டின் தற்கால நிலையில் உண்மைக் காதல் மணத்திற்கு இன்னல்கள் பல இருந்தும் அவைகளையெல்லாம் ஒரு சிறிதும் பொருட்படுத்தாது மிக்க தைரியத்துடன் முன் வந்து காதல் மணத்தைக் கைக்கொண்ட தாங்கள் இயற்கை யன்னையின் இன்பத்தை இடையறாது பருகுவீர்களாக!

மதிமிகு மங்கையர் திலகமே!

பெண்களின் சுதந்திர உணர்ச்சியற்ற நம் நாட்டில் தங்களைப் போன்ற வீரப் பெண்ணணங்குகள் தோன்றல் அவசியம். உண்மைக் காதலிதென இளைஞர்களுக்கு எடுத்துணர்த்திய உங்கள் வீரச் செய்கை எங்களால் உணர வேண்டியதென்பதை யாம் மறப்போ மல்லேம்.

அன்புசால் ஐயா!

'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிலக்காய், பெருங்குடி மரபிற் பிறந்து, தேசப் பணியைச் சிரமேற் கொண்டுழைத்த ஓர் உத்தமரது குமாரராய்த் தலைசிறந்து விளங்கும் தங்களது அன்பு மகனின் மணத்தினை ஆர்வத்தோடு வாழ்த்தும் இச்சந்தர்ப்பம் எங்கட்குக் கிடைத்தமை பற்றி மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம். 'செயற்கரிய செய்வர் பெரியார்' என்னும் நீதிக்கிணங்க, ஓர் அரும்பெரும் காரியத்தைச் செய்திருக் கிறீர்கள். இத்தகைய மணங்கள் சர்வ சாதாரணமாக வரும் நாள்கள் எந்நாள்களோ என்று அதிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அத்தகைய மணங்களுக்குத் தாங்கள் ஓர் முன் மாதிரியாக இருந்ததைப் பற்றி நாங்கள் தங்களை முழுமனத்துடன் வாழ்த்துகின்றோம். மேலும் 'மக்கள் சமரசம்' என்ற நம் சங்க நோக்கத்தை இம்மணத்தின் மூலமாய்ச் செய்கையில், முதலில், நிறைவேற்றியவரும் தாங்களே! அன்பர் நீவிர் வாழ்க!

தாய் மொழிப் பற்றும், சர்வ சமய அன்பும், சகோதரப் பான்மையும், சுயேச்சை இன்பமும், பரந்த நோக்கமும், விரிந்த அறிவும் கொண்ட தாங்கள் பொதுஜன நன்மைக்கு என்றும் உழைப்பீர்களென்ற முழு நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றோம்.

வனமலர்ச் சங்கத்தார்

- சு. கோதண்டராமன் - ருக்குமணிதேவி திருமணம் 1929 சூன் மாதத்தில் நடைபெற்றது.

சாதிக் கொடிகளைக் கத்தரிப்போம்

எப்போதோ, எங்கோ ஓரிருவர் கலப்புமணம் செய்துகொண்டிருந்த தற்குப் பதில், பல விடங்களில் பலரும் கலப்பு மணம் செய்து கொள்ளும் நல்ல சூழ்நிலையைச் சுயமரியாதை இயக்கம் தொடக்க காலத்தில் உருவாக்கியது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு திறந்து விடப்பட்ட சமத்துவ நீரோடை காலப் போக்கில், பேராறாகி, வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் என்று மாணவப் பருவத்தில் எதிர்பார்த்தேன்.

ஓடை சிற்றாறாகியதைக் கண்டு மகிழ்ந்தேன். எதிர்பாராத அளவுக்குப் பேராறாகும் நாள் எந்நாளோ என்று இன்றும் ஏக்கப் பெருமூச்சு விடுகிறேன்.

'இந்தியர்' என்னும் உணர்வு நம்மில் இரண்டறக் கலந்து விட்டதா? இல்லை.

வெளிச்சம் போடவேண்டிய நேரங்களில் பூசிக்கொள்ளும் மேல் பூச்சை ஒப்பவே, 'இந்தியர்' என்று, வெளிச்சம் போட்டுக் கொள்கிறோம்.

தொலையட்டும், தமிழர் என்னும் உணர்வாகிலும் நம் மூச்சாகிவிட்டதா?

அதுவும் 'பவுடர் பளபளப்பாக'வே இருக்கிறது. ஏன்?

சாதி உணர்வு கரைந்தபாடில்லை. 'நாட்டுப்பற்று', 'இனப்பற்று', 'மொழிப்பற்று' என்று கொதிப்பேற முழங்கிவிட்டு, அத்திரைகளின் மறைவில், உட்சாதிப் பற்றை வளர்ப்பது, ஆதாயமாக இருக்கிறது.

அரசியல்வாதிகள் ஒரு பக்கம் சாதிவெறியை - வெளிப்படையாக இல்லாவிடினும் மறைமுகமாக - நெய்யூற்றி வளர்ப்பது ஆயிரந்தேள்கள் கொட்டுவதுபோல் குடைகிறது.

அரசியல்வாதிகளைப் போன்று பல பெரிய அதிகாரிகளும் உட்சாதிப் பிரிவுகளைப் பாதுகாக்கவே பிறவி எடுத்ததாகக் கருதுகிறார்கள். தமிழர் நலனுக்காகப் பதவியில் இருப்போர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 'தன் சாதி' அலுவலர்களாகச் செயல்படுவோர் எண்ணிக்கை பெருகி வருகிறது. இவை நல்ல அறிகுறிகள் அல்ல.

இரண்டாயிரம் ஆண்டுக் காட்டையும் அழித்துவிடலாம்; இருபதாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்புள்ள காட்டையும் கழனியாக்கி விடலாம்.

எப்போது?

போதிய எண்ணிக்கையினர் பாடுபட்டால்; போதிய காலம் பாடுபட்டால். 'யாருக்கு மணிமுடி? யாருக்கு விருது? என்பதை எண்ணிச் சோராமல், தொடர்ந்து ஆர்வத்தோடு முயன்றால்; தெரிந்த கருவிகளையெல்லாம் கொண்டு நிலத்தைத் திருத்தினால்.

இத்தலைமுறை இளைஞர்களுக்கு இவற்றைச் சொல்லுவார் யாருமில்லை.

'ஒரே வீச்சில், ஒரே குண்டில், காடு முழுவதையும் அழிக்க முடியும். அந்தக் குண்டை உருவாக்க முடியும்; அதில் முனைந்துள்ளோம்; அதைப்பற்றி மட்டுமே பேசுங்கள். வேறொன்றையும் சிந்திக்காதீர்கள்; உரைக்காதீர்கள்' என்பது ஒரு போக்கு.

போர்க்களத்தில் இருந்தால் இது பொருத்தம். இன்றோ?

கண் எதிரே தடுக்கி விழுபவனைத் தூக்கி நிறுத்தாமல், வீழாத நிலையைக் காட்ட ஓடுவதுபோல் ஆகும்.

சிந்தனையோட்டமும் செயல்துடிப்பும் உள்ள இளைஞர்கள் இப்போக்கால் ஈர்க்கப்படுகிறார்கள். கூட்டம் சிறியது.

பெரிய கூட்டம் எது? இரண்டும் கெட்டான் கூட்டம். தமக்கு அப்பால் எவ்வித இலட்சியமும் இல்லாத இக்கூட்டம், 'நடப்பது நடக்கட்டும்' என்று காற்றடித்த பக்கம் சாய்கிறது.

மற்றோர் பிரிவு உண்டு. இப்பிரிவு இளைஞர்கள், இலட்சியவாதி களைப் போன்று சிறிய எண்ணிக்கையினர் அல்லர்; மிதக்கும் கூட்டத்தைப் போன்று ஏராளமானவர்களும் அல்லர்.

நம் பொது வாழ்க்கை முன்னணியினரும் எழுத்துலகத் தாரகைகளும் அள்ளி வீசும் கொச்சைகளை, கவர்ச்சிகளை, எச்சில்களை வாங்கிக் கொள்ளக் காத்து இருப்போர்.

மெய்யான இலட்சியவாதிகளாக உள்ள இளைஞர்கள், நிலாவுக்குத் தாவிச் செல்லக்கூடிய நுட்பப் பொறியை உருவாக்கி அனுப்புவதற்கு ஆயிரம் ஆயிரம் 'சின்னச் சின்ன', 'புகழ் ஈட்டித் தராத', வேலைகள் நடந்தாக வேண்டுமென்பதை உணர்தல் நல்லது.

பெரிய, நல்ல இலட்சியத்தை நோக்கி விரைவதற்கும் உறுதியான அடித்தளம் வேண்டும். வழியில் மண்டிக்கிடக்கும் நச்சுக்கொடிகளை அழித்துக்கொண்டே நடக்கவேண்டிய நிலைகள் இருக்கும்.

அவை அனைத்தையும் தாண்டியபடியே தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணாமல், கத்தரித்துக்கொண்டு முன்னேற ஆயத்தமாக வேண்டும்.

சாதிக்கொடிகளைக் கத்தரித்தல், புது உலகச் சிறு வழிக்குத் துணை என்பதை மட்டும் நினைவுறுத்தி, வலியுறுத்தி, மேலே செல்லுகிறேன்

திரு. கோதண்டராமனின் திருமணம் எழுப்பிய எண்ண அலைகள் நெடுந்தூரம் தள்ளிக்கொண்டு வந்து ஒதுக்கிவிட்டது. மீண்டும் மாநிலக் கல்லூரிக்குப் போவோம்.

ஆண்மை நிறைந்த மாணவர்கள்

'பித்தன்' வட்டத்தைச் சேர்ந்த நாங்கள் 'இளந்துறவிகள்' என்றோ, தூக்குமேடைக்குச் செல்லத் துடிக்கும் பகவத்சிங்குகள் என்றோ, வெள்ளைக் கைதிகளை நடத்தும் முறைவேறு, இந்தியக் கைதிகளை நடத்தும் முறைவேறு என்னும் இனவேற்றுமை முறையை எதிர்த்துப் பட்டினி கிடந்த யதீந்திர தாஸ்கள் என்றோ தவறாக மதிப்பிட்டு விடாதீர்கள்.

நாங்கள் முற்போக்குக் கருத்துடைய உண்மையான இளைஞர்கள். உள்ளத்தில் பட்டதைப் பட்டபடியே எழுதியவர்கள்; பேசியவர்கள்; சமயம் வாய்த்தபோது செயல்படுத்தியவர்கள். மற்றபடி மற்ற மாணவர்களைப் போலவே நாக்குச் சுவை பெற்றிருந்தோம்.

எந்த ஓட்டலில் என்ன பலகாரம் தனிச் சிறப்புடையது? அது என்றென்றைக்குக் கிடைக்கும் என்பது தெரியும். பலவேளை, சிற்றுண்டி தின்பதில் ஒரு கை பார்த்திருக்கிறோம்.

பொழுதுபோக்கு

'இரும்பு வாராவதி'யிலிருந்து, சாந்தோம் முனைவரை, மாலை தோறும் உலாவி வருவது எங்கள் பொழுதுபோக்கு. அவ்வேளை நாங்கள் பெற்றது உடற்பயிற்சி மட்டுமல்ல. வகை வகையான ஆண்கள் பெண்கள் எங்கள் கண்களைக் கவர்வார்கள்.

அன்றைய சென்னைக் கடற்கரையில், இப்போதுள்ள கார் நெரிசல் இல்லை. இருப்பினும் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரை நீளத்தில் கார்கள் நிற்கும். இடையிடையே 'கோச்' வண்டிகள் இடம் பிடித்துக் கொள்ளும்.

பெரிய மனிதர்களுடைய கார்களின் எண்களை நினைவில் வைத்திருப்பதில் எங்களுக்குள் போட்டி ஏற்படும். இதில் என் சாதனை சிறப்பாயிருக்கும். பாரிஸ்டர் எத்திராஜ் எம்எஸ் 100 எண்ணுள்ள 'ரோல்ஸ்ராயில்' வருவார். 'புன்னகைக் குறும்பர்' என்பது நாங்கள் அவருக்கு இட்ட குறும்புப் பெயர். அவரைக் கடற்கரையில் காணாது நாங்கள் விடுதி திரும்புவது அரிது. அவரைக் காண்பதில் எங்களுக்குப் பூரிப்பு. தமிழர், சிறந்த வழக்கறிஞராக இருப்பதில் பூரிப்பு.

எழுப்பும் ஒலியிலிருந்து இன்ன 'கார்' வருகிறது என்று சொல்வதில் போட்டி இருக்கும். இவ்விளையாட்டிலும் நான் சோடையல்ல.

அந்தக் காலத்திலும் 'அழகி'களுக்குப் பஞ்சமில்லை. அவர்கள் கடற்கரையில் உலா வருவதுண்டு.

எங்கள் குழுவைச் சேர்ந்த யாரும் எந்தக் கடற்கரைக் கன்னியின் பின்னாலும் போய் ஏங்கவில்லை.

காமம் கௌவும் இளமைப் பருவம், கொள்கை வேரூன்றும் பருவமும் ஆகும்.

பிந்தியது எங்களிடம் அதிகம் முளைத்துவிட்டது. அதோடு போட்டியிட்டுக் கொண்டு முன்னது - காமம் - வளர முடியவில்லை.

கல்லூரி நாள்களில் முதல் இரண்டாண்டு காலம், நான் 'டென்னிஸ்' ஆடும் பயிற்சி பெற்றிருந்தேன். உயர்நிலைப்பள்ளிப் பருவத்தில் ஆடும் வாய்ப்புப் பெற்றவர்கள், கல்லூரி ஆட்டக் குழுவில் சேர முடிந்தது.

அந்த வாய்ப்பைப் பெறாத என்னைப் போன்ற 'கற்றுக்குட்டி'கள் விக்டோரியா மாணவர் விடுதி டென்னிஸ் குழுவில் சேர்ந்து பயிற்சி பெற்றோம்.

பல காரணங்களால் இப்பயிற்சி இரண்டாண்டுகளுக்குமேல் தொடரவில்லை. டென்னிஸ் ஆடத் தனிக் கட்டணம் செலுத்த வேண்டும். அது ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டே சென்றது. அது ஒரு காரணம்.

'பிங்பாங்' ஆடுவதில் விருப்பம் காட்டினேன்; நன்றாகவும் திறமை பெற்றேன். ஆண்டுகள் உருள உருள, இதிலும் ஈடுபாடு குறைந்தது.

ஆண்டின் தொடக்கத்தில் புதிய மாணவர்களைக் 'கோட்டா' செய்யும் பழக்கம் என் கல்லூரிக் காலத்திலும் இருந்து வந்தது.

முதல் இரண்டு மூன்று ஞாயிறுகளில் காலை முதல் நடுப்பகல் வரை, போவோர் வருவோர்மேல் சாயம் கலந்த தண்ணீரை ஊற்றும் குறும்பில் மூத்த மாணவர்கள் ஈடுபடுவார்கள்.

எப்போதும் யாரிடமும் வன்முறை தலைகாட்டாது. வெட்கப்படும் வகையில் நடக்கமாட்டார்கள்.

இத்தகைய குறும்பு விளையாட்டுகளால் நான் அதிகம் பாதிக்கப்படவில்லை. ஏன்? விடுதியில் இருந்த மூன்று நான்கு பொடியன்களில் நான் ஒருவன்.

வலிய மாணவர்கள், தங்களை ஒத்த வலியுடையவர்களிடமே அதிகம் குறும்பு காட்டுவார்கள்.

'மெலியோரைப் பாதிப்பது கோழைத்தனம்' பாதுகாப்பது ஆண்மை என்ற கருத்தோடு அக்கால மூத்த மாணவர்கள் இயங்கினார்கள்.

33. மறக்க முடியாத நாள்கள்

விடுதியில் என் அன்றாட வாழ்க்கை

காலை ஐந்து மணிக்கே எழுந்துவிடுவேன். அதிகாலையில் படிக்க வேண்டிய பாடங்களைப் படிப்பேன். வீட்டுக் கணக்குகளைப் போடுவேன். பிறகு வெந்நீரில் குளியல். நாள்தோறும் தலைமூழ்கு வேன். வாரத்திற்கு இரு நாள்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பேன்.

காலை எட்டரை மணிக்கே, பகல் உணவு போடுவார்கள். நான் மரக்கறி உணவுக்காரன். மரக்கறி சாப்பாடும் பலமானது. பருப்பு, குழம்பு, சாறு, தயிர், அப்பளம், இருவகை காய்கறிகள் ஆகியவை அன்றாட உணவுப் பட்டியல்.

அளவுச் சாப்பாடு நாங்கள் அறியாதது; எதுவும் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். அதிகம் உண்டாலும் கொஞ்சம் சாப்பிட்டாலும் எல்லாருக்கும் ஒரே கட்டணம்.

மொத்தச் செலவைச் சமமாகப் பங்கிட்டு வசூலிப்பார்கள்.

பண்டிகைகளின்போது வடை, பாயசம், இனிப்புகள் புகுந்து விடும்.

மொத்தத்தில் அவ்வளவு சுவையான பக்குவமாகச் சமைக்கப்பட்ட உணவைப் பிற்காலத்தில் சிலபோதே உண்டேன் என்றால் அது மிகையல்ல.

குறிப்பாக, அன்றைய விக்டோரியா விடுதியில், மாத்வ ராவ்கள் செய்து போட்ட, மரக்கறி 'குருமா'வைப்போல் பின்னர் சாப்பிட்டதில்லை. நேரில் கறந்து வாங்கி, சிவக்கக் காய்ச்சி, அளவோடு உறைகுத்திய பசுந்தயிரை ஐந்தாண்டு காலம் உண்டோம்.

அதற்கு இணை அதுவே. அதுவும் வேண்டிய மட்டும் கிடைத்தது.

நடுப்பகல் அளவு, கட்டுப்பாடு இல்லாமல் நல்ல சிற்றுண்டியும் காபியும் கொடுப்பார்கள்.

வாரத்திற்கு இரு நாள்கள் இனிப்பும் கிடைக்கும். இரவு சாப்பாட்டில் பருப்பு இராது. துவையல் உண்டு.

இரவில் தயிருக்குப் பதில் மோரைப் பரிமாறுவார்கள். இவ்வளவு நல்ல சாப்பாட்டிற்கு மாதம் எவ்வளவு கொடுத்தோம்?

விருந்தினர் செலவு தந்தையார் ஆதரவு

விக்டோரியா மாணவர் விடுதியில், இருவேளைச் சாப்பாடு, ஒரு வேளைச் சிற்றுண்டிக்குப் பதினேழு - பதினெட்டு ரூபாய்கள் ஆகும்.

பண்டிகை விருந்து இருப்பின், இரண்டொரு ரூபாய் கூடுதல் ஆகும்.

வாடகை ஆறு ரூபாய்! சிப்பந்திச் செலவு, மின் கட்டணம் ஆகியவை மாதம் எட்டு ரூபாய் ஆகும்.

மொத்தத்தில் மாதத்திற்கு முப்பத்திரண்டு - முப்பத்தி மூன்று ரூபாய்கள் செலவாகும். இதைத்தவிரக் கைச்செலவிற்குப் பத்து ரூபாய்கள்.

சாப்பாட்டிற்கும் சிற்றுண்டிக்கும் விருந்தினர்களை அழைக்கலாம். சிற்றுண்டிக்கு நாலணா; சாப்பாட்டிற்கு ஆறு அணா. பண்டிகைகளின்போது நடக்கும் விருந்துகளுக்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டும்.

என் விருந்தாளிகள் எண்ணிக்கை மெல்ல மெல்லப் பெருகிற்று. பண்டிதர் எஸ்.எஸ். அருணகிரிநாதர், பண்டிதர் மணி திருநாவுக்கரசு முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் ஆகியோர், விடுதி விருந்துகளுக்கு வந்து என்னைச் சிறப்பித்தார்கள்.

அக்காலத்தில் எம்.ஏ. பட்டம் பெறாத தமிழாசிரியராக இருந்த திரு. ஏ.சி. செட்டியார் ஒரு முறை அவருடைய நெருங்கிய நண்பரும் என் வழிகாட்டியுமாக இருந்த எஸ்.எஸ். அருணகிரிநாதரோடு விருந்திற்கு வந்து பெருமைப்படுத்தினார்.

இவர்களுடைய தொடர்பு என் தமிழ்ப்பற்றிற்கு எருவாயிற்று.

திங்கள்தோறும் நான் செலுத்திய விருந்தாளிக் கட்டணம் அதிகமாகிக் கொண்டே இருந்ததால், விடுதிக் காப்பாளருக்கு அச்சமும் ஏற்பட்டது.

அதிகப்படியான விருந்தாளிகளை அழைக்கிறேனென்று என் தந்தைக்கு எழுதினார். தந்தை என்னைக் காண விடுதிக்கு வந்தார்.

யார் யார் விருந்தாளிகளாக வந்தார்கள் என்பதைத் தெரிந்துகொண்டார். நண்பர்கள் - நல்லவர்களே - விருந்தாளிகளாக வந்ததைப் புரிந்துகொண்டார்.

அழைப்புகளைக் குறைத்துக் கொள்ளச் சொல்லவில்லை. மாறாக, 'நட்புச் செல்வம் பெறற்கரியது; பலவகையினரோடும் நட்பை வளர்த்துக்கொள். உண்டால் தின்றால்தான் உறவு. தாராள விருந்தோம்பல் குற்றமல்ல; கெடுதல் செய்யாத செலவு' என்று கூறி என்னை ஊக்கப்படுத்தினார்.

என் தந்தை விடுதிக்காப்பாளரைக் கண்டார். நான் எத்தனை விருந்தாளிகளை அழைத்தாலும் அனுமதிக்கும்படி சொல்லிவிட்டார்.

அப்புறம் கேட்பானேன்?

சிறப்பு விருந்துகளுக்கு ஆறு நண்பர்கள் வரை அழைப்பேன். எனது தற்பெருமையைத் தள்ளிவிடுங்கள்.

என் விடுதிக் காப்பாளர்கள்

நான், இரு விடுதிக் காப்பாளர்களின் பாதுகாப்பில் இருந்தேன். விடுதியில் சேர்ந்தபோது, திரு. எஸ்.ஈ. அரங்கநாதம் காப்பாளராக இருந்தார்.

அவருடைய பெயரைக் கண்டு ஏமாற வேண்டாம். அவர் இந்துவல்ல; கிறுத்துவர்; தோற்றத்தில் நெடுமால்; தன்மையில் மிக நல்லவர்.

நான் விடுதியில் சேர்ந்த ஆண்டு முழுவதும்கூட, அவர் காப்பாளராக இருக்கவில்லை. ஏன்? மாணவர்களாகிய நாங்கள் விரட்டிவிட்டோமா? இல்லை.

அக்காலத்தில் மாணவர்களும் அதிகப்படியாக, கருமமே கண்ணாயிருந்தார்கள். பேராசிரியர்களும் கொதிதாளும் தானியங்களாக இருந்தார்கள்.

திரு. எஸ். ஈ. அரங்கநாதம் காப்பாளராக இருந்தபோது நடந்த நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது.

மேல் வகுப்பு மாணவர்களின் தலைவர்கள் ஒரு கோரிக்கை மனுவை ஆயத்தஞ் செய்தார்கள்.

விடுதியில் உடற்பயிற்சிக்காக மூடு அரங்கம் கட்ட வேண்டும் என்பது மாணவர்களின் கோரிக்கை.

பலரையும் சேர்த்துக்கொண்டு பேட்டி காணச் சென்றார்கள். அக்கோரிக்கை மனுவைக் கொடுத்தார்கள்.

காப்பாளர் மனுவை, ஓரெழுத்தும் விடாமல் படித்தார்.

''எஃகு போன்ற உடலை உருவாக்கிக் கொள்ள, உங்கள் பருவமே ஏற்றது. நீங்கள் உடற்பயிற்சி அரங்கம் கேட்பதைப் பற்றி நான் மகிழ்கிறேன். விடுதியின் ஆட்சிக்குழுவின்முன் இதை வைக்கிறேன்'' என்று இனிமையாகப் பதில் கூறி அனுப்பினார்.

பல நாள்கள் சென்றன. மாணவத் தலைவர்களுக்கு அழைப்பு வந்தது.

மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பேட்டி கண்டார்கள்.

''உங்கள் மனுவைப் பற்றிப் பலமுறை சிந்தித்தேன். ஐயமொன்று அடுத்தடுத்து வந்தது. உங்களைக் கேட்டால், தெளிவு பிறக்கும் என்று நினைத்தேன்.எனவே சொல்லியனுப்பினேன்.

''உங்கள் வயதில் பல்வேறு அவாக்கள் போட்டி போடுவது இயற்கை. நன்றாக உடற்பயிற்சி செய்து உடல் உரம்பெற நினைப்பது புரிகிறது.

''அதே நேரத்தில் மற்ற விடுதிகளில் இருப்போருக்கு இல்லாத தனி வசதியொன்று விக்டோரியா விடுதியில் தங்குவோருக்கு இருக்கிறது.

''வெளியே பத்தடி நடந்தால் கடற்கரை. சென்னைக் கடற்கரை நீண்டது; உலகத்தில் இரண்டாவது சிறப்புடையது என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

''இயற்கை அழகோடு மக்கள் அழகையும் மாலை நேரங்களில் கண்டு மகிழ வாய்ப்புண்டு. உங்களில் பலர் வெளியூர்களில் வேலை செய்ய நேரிடலாம். அவர்கள், சென்னைக் கடலோரம் உலாவி, பலரையும் கண்டு மகிழும் வாய்ப்பைப் பின்னால் பெற இயலாது. உடற்பயிற்சியை அநேகமாக எங்கும் பெறலாம்.

''விடுதியில் உள் அரங்கத்தில் முடங்கி விடுவதா? மாலைதோறும் கடற்கரைக் காட்சிகளில் திளைப்பதா? இரண்டில் எதற்கு முன்னுரிமை கொடுக்க விரும்புகிறீர்கள்?

''உடன் உறைவோரையும் கலந்துகொண்டு வந்து சொல்லுங்கள். உங்கள் விருப்பத்தையொட்டி சிந்திக்கிறோம்'' இப்படி இதமாகக் கூறினார், காப்பாளர் அரங்கநாதம்.

மாணவத் தலைவர்கள், வெள்ளைக் கொடி காட்டி விட்டார்கள். மாலை நேரங்களில் கடலோரம் சுற்றி வந்து வெளிச்சம் போடுவதையே விரும்புவதாக அறிவித்து விட்டு வந்தார்கள்.

நாங்களும் அவ்விதமே கருதினோம். பூசல் பூக்கவில்லை.

சில திங்கள்களுக்குப் பிறகு, திரு. எஸ்.ஈ. அரங்கநாதத்தைப் புதிதாக அமைக்கப்பட்ட, அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு முதல் துணைவேந்தராக நியமித்தார்கள்.

அப்பொறுப்பை ஏற்பதற்காக அவர் மாநிலக் கல்லூரியையும் விக்டோரியா விடுதியையும் விட்டுச் சென்றார். அரங்கநாதம் முதல் துணைவேந்தராக இருந்து, அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குச் சரியான அடித்தளம் அமைத்துத் தந்தார்.

விக்டோரியா மாணவர் விடுதிக் காப்பாளர் பொறுப்பை மாநிலக் கல்லூரி அரசியல் பேராசிரியர் திரு. பிராங்கோ ஏற்றுக் கொண்டார்.

இவரும் கிறுத்துவர். இவருடைய காப்பில் நான்கு ஆண்டுகள் விக்டோரியா விடுதியில் இருந்தேன். அவர் கால நிகழ்ச்சிகள் பின்னர் எழுதுகிறேன்.

சைமன் குழுவும் மாணவர் வேலை நிறுத்தமும்

நான் கல்லூரியில் முதல் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கையில், நம் நாட்டை கலக்கிய அரசியல் நிகழ்ச்சியொன்று நடந்தது.

தொலைதூரத்தில் உள்ள அலகாபாத் நகரில் பண்டித ஜவகர்லால் நேரு கைது செய்யப்பட்டார்?

என்ன குற்றத்திற்காக?

சைமன் குழுவை எதிர்க்கும் இந்தியர்களின் ஊர்வலமொன்றைத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். சைமன் குழுவைப் பற்றிச் சில சொற்கள்.

ஆங்கிலேயர் நம்மை ஆண்டபோது, சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் அனைத்திந்திய காங்கிரசு தோன்றியது.

அரசின் பெரும் பதவிகளில் இந்தியருக்கும் இடம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முளைத்த அவ்வியக்கம் வளர்ந்தது. தன்னாட்சி உரிமை கேட்கும் இயக்கமாக வளர்ந்தது.

உரிமைக்குரலில் சூடேறிற்று. அவ்வேளை அண்ணல் காந்தியார் காங்கிரசில் சேர்ந்தார். இயக்கம் அவருடைய தலைமையில் நடந்தது.

நெடுநாள், படித்த சிலருடைய இயக்கமாக இருந்த காங்கிரசு, காந்தியடிகளாரின் தலைமையில் பொதுமக்கள் இயக்கமாக மாறிற்று.

உரிமைக்குரல் கணீரென்று ஒலித்தது. எல்லாப் பக்கங்களிலும் ஒலித்தது. அலட்சியப்படுத்தும் நிலையைத் தாண்டி விட்டதை ஆங்கிலேய ஆட்சியுணர்ந்தது.

இந்தியர்களுக்கு எந்த அளவு அரசியல் உரிமை கொடுக்கலாம் என்று பலரையும் விசாரித்தறிய, சைமன் பிரபு என்பவரின் தலைமையில் குழு ஒன்றை ஆங்கில அரசு நியமித்தது.

காந்தியடிகள், எதிர்ப்புச் சூறாவளியைக் கிளப்பினார். ''இந்தியர்களின் அரசியல் உரிமையைப் பறித்தது அநீதி; அதைத் திருப்பித் தரலாமா என்று முழுக்க - முழுக்க ஆங்கிலேயரைக் கொண்டு விசாரிப்பது இந்தியர்களுக்கு மிகப்பெரிய அவமானம்.

''எனவே சைமன் குழுவோடு ஒத்துழைக்காதீர்கள். நாட்டு மக்களின் வெறுப்பை வெளிக்காட்டுங்கள்'' என்று காந்தி அடிகள் கட்டளையிட்டார்.

இக்கட்டளைக்கேற்ப சைமன் குழு, அலகாபாத்திற்குச் சென்ற வேளை, எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடையாளமான எதிர்ப்பு ஊர்வலத்தை, பண்டித ஜவகர்லால் நேரு நடத்தினார். அதற்காகக் கைதானார்.

அச்செய்தி சென்னைக்கு எட்டிற்று. ஆண்கள் கலைக் கல்லூரிகள் மூன்று.

மாநிலக் கல்லூரி இப்போதுள்ள இடத்திலேயே இருந்தது. கிறுத்துவக் கல்லூரி, உயர்நீதிமன்றத்திற்கு எதிரில் இருந்தது. பிறகே தாம்பரத்திற்குக் குடிசென்றது.

பச்சையப்பன் கல்லூரியோ இன்றைய சுபாஷ் சந்திரபோஸ் சாலையில், தொலைபேசி மையத்திற்கு எதிரில் நடந்து வந்தது.

மூன்று கல்லூரி மாணவத் தலைவர்களும் இரவோடு இரவு திட்டந்தீட்டிச் செயலில் இறங்கினார்கள்.

மறுநாள், வழக்கம்போல் கல்லூரிக்குச் சென்றோம். எல்லா வாயில்களிலும் தொண்டர்கள் நின்றிருந்தார்கள்.

கல்லூரிக்குச் செல்லாமல் வேலை நிறுத்தஞ் செய்யும்படி வேண்டினார்கள். விளைவு?

பெரும்பாலானோர் திரும்பிவிட்டார்கள். மொத்தத்தில் நூற்றுக்கு நாற்பது பேர்கள் போல, கல்லூரி வகுப்புகளுக்குச் சென்றார்கள்.

வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் ஊர்வலஞ் செல்லவில்லை. வழியில் குழப்பம் விளைவிக்கவில்லை. அமைதியாகப் போய்விட்டார்கள்.

காந்தி அடிகளின் அன்புக் கட்டளை

மாணவத் தலைவர்கள் என்ன செய்தார்கள்? காந்தி அடிகளுக்குத் தந்தி கொடுத்தார்கள்.

சென்னையில் கல்லூரி மாணவர்களின் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்ததாகத் தகவல் கொடுத்தார்கள்.

ஜவகர்லாலை நிபந்தனையின்றி விடுவிக்கும்வரை வேலை நிறுத்தத்தைத் தொடர, அண்ணலின் வாழ்த்துகளைக் கோரினார்கள். அண்ணலின் பதில் விரைந்து வந்தது. என்ன பதில்?

'அரசியல் கைதிகளைப்பற்றி மாணவர்கள் பதற வேண்டாம். அவ்விவகாரத்தை அரசியல் இயக்கங்களிடம் விட்டுவிடுங்கள்' என்பதே பதில்.

மாணவத் தலைவர்கள் காந்தியடிகள் கட்டளையை ஏற்றுக் கொண்டார்கள். வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டார்கள். கல்லூரிகள் வழக்கம்போல் இயங்கின.

நான் எந்தப் பிரிவில் இருந்தேன்? வகுப்பிற்குச் சென்ற சிறுபான்மைப் பிரிவில் இருந்தேன்.

நெருங்கிய நண்பர்களில் பெரும்பாலோர் வேலை நிறுத்தஞ் செய்தார்கள். எனினும் என் உள்ளம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, மனச்சான்றின்படி நடந்தேன்.

வேலை நிறுத்த நாளன்று, வகுப்பிற்குச் சென்ற மாணவர்கள்மீது மற்றவர்கள் சினங்கொள்ளவில்லை. அவர்களுக்குத் 'துரோகி' பட்டங்கட்டவில்லை; வன்முறையை நினைக்கவேயில்லை.

எனவே, இருசாராரிடமும் கசப்பு உண்டாகவில்லை; கிண்டல் தோன்றவில்லை. சென்றவர்களை, செல்லாதவர்கள் அவமதிக்காததால், சென்றவர்களும் வெற்றி வீரர்களாகக் காட்டிக் கொள்ளவில்லை. முன்பிருந்த நட்பும் நல்லெண்ணமும் தொடர்ந்து நீடித்தன.

சென்னையில் ஒருநாள் நடந்த மாணவர் வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தியவர்களில் ஒருவர் திரு. தாவூத் அலி மிர்சா என்பவர் ஆவார். அவர் எனக்கு மேல்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய தம்பி, இபசித் அலி மிர்சா என் வகுப்பு மாணவர். திரு. தாவூத் அலி மிர்சா பல்லாண்டுகளுக்குப் பிறகு, இந்திய இராச்சிய அவைக்கு, தமிழ் நாட்டின் உறுப்பினர்களில் ஒருவராக அனுப்பப்பட்டார்.

அக்கால கட்டத்தில் நான் பொதுக்கல்வி இயக்குநன்.

அந்நிலையில் நான் தில்லிக்குச் சென்றபோது, என்னைத் தம் இல்லத்திற்கு அழைத்து, நல்ல மரக்கறி விருந்து கொடுத்து அனுப்பினார். அவருடைய நட்பு தொடர்கிறது.

சாதியும் அரசியலும் இல்லாத மாணவர் பேரவை

சென்னை மாநிலக் கல்லூரியில் மாணவர் பேரவை உண்டு. ஆண்டு தோறும் அதற்குத் தேர்தல்கள் நடக்கும்; போட்டிகளுக்கும் குறைவில்லை.

போட்டியிடுவோர் யார்? பெரிய வீட்டுப் பிள்ளைகள்; மிடுக்கான உடை; எடுப்பான பேச்சு கொண்டவர்கள்.

அக்காலத்திலும் தேர்தல் சுவரொட்டிகளுக்குக் குறைவில்லை. ஆனால், அரசியல் கட்சிகளின் அடிப்படையில் எவரும் போட்டியிடவில்லை.

போட்டியிட்டோருக்கு அரசியல் கருத்துகள் இல்லையா? உண்டு.

தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட்ட திரு. ஏ.வி. பாத்ரோவை 'நீதிக்கட்சிக்காரர்' என்றே மதித்தனர்.

ஏன்? அவருடைய தந்தை நீதிக்கட்சி ஆட்சியில் கல்வி அமைச்சராக விளங்கியவர் அல்லவா?

தந்தையின் கட்சியை மறுக்கும் தனயனாக ஏ.வி. பாத்ரோ இருக்கவில்லை.

இந்த பாத்ரோவே, இந்தியக் காவல் துறையில் சேர்ந்து, பிற்காலத்தில் சென்னை மாநகரில் காவல் ஆணையராகச் சிறப்புடன் விளங்கினார்.

ஏ.வி. பாத்ரோ எனக்கு மூத்தவர். இவருடைய உறவினர் திரு. சாம்பமூர்த்தி என்பவர் என்னுடன் படித்தார். அவரும் ஒருமுறை பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாணவர் மன்றப் பொறுப்புகளைத் திறம்பட நடத்துவாரா என்பதைக் கருதியே வாக்களிப்போம்.

இல்லாவிட்டால், அன்றையச் சூழ்நிலையில், பாத்ரோவோ, சாம்பமூர்த்தியோ, சக்கரவர்த்தியோ பேரவைத் தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்க முடியாது.

கல்லூரித் தேர்வுகளில் அரசியல் கட்சிகளின் பேரால் ஆதரவு திரட்டாதது போலவே, சாதி சமயங்களின் பேரால் ஆதரவு திரட்டுவதும் இல்லை.

ஒருமைப்பாட்டைப் பற்றி ஓயாது ஒப்பாரி வைக்கும் இந்தக் காலத்தில், திறமையைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதில் சாதியைக் காட்டி, ஆதரவு திரட்டுவது மூச்சாகிவிட்டது.

இதற்கு யார் பொறுப்பு? இளைஞர் உலகமா? இல்லை.

மூத்தோர் உலகம்.

தனித்தனியாகப் பிரிந்து வாழும் சாதிப்பெரியவர்கள் கோணலாக நடந்தால் கோபம் வராது. ஏன்? அவர்கள் நடத்தையில் புரட்டு இல்லை.

'அனைத்துலக ஒற்றுமை', 'எல்லோரும் ஓர் குலம்; ஓர் இனம்' என்று முழங்கி, எழுதி, சூதுவாதறியாத அப்பாவி மக்களை மயக்கிவிட்டு, திரைமறைவில் சாதித் தீயை வளர்ப்போர், இந்தியப் பொது வாழ்க்கையை ஆக்கிரமித்துள்ள மூத்தோர்.

இந்தியா, தன்னாட்சி பெற்றபின், பெரிய இடங்களில் சாதிப் பாசம் ஒன்றே மூச்சாக உள்ளது.

அது கிடக்கட்டும். பழங்கணக்கைப் பார்த்துப் பசியாறுவோம். வாருங்கள்.

பேச்சுக் கலையை வளர்த்த பேரவை

வகுப்பறைகளில் வளர்க்க முடியாத பேச்சுக் கலையை வளர்ப்பதற்குத் துணை நிற்பவை மாணவர் பேரவைகள்.

எனவே, சிறந்த பேச்சாளர்களை அழைத்துப் பேச வைப்பார்கள்.

'நான் உள்ளவரை இவரைக் கூப்பிடமாட்டேன்' என்னும் ஆதிக்கப் போக்கு அன்று குறைவு.

எனவே, திரு. ஆர்க்காடு இராமசாமி முதலியாரை அழைத்துப் பேச வைத்த மாணவர் தலைவர், திரு. சத்தியமூர்த்தியையும் அழைத்துப் பேச வைத்தார்.

திருமதி. மோனா என்ஸ்மனை அழைக்கும் பேரவை, திருமதி ருக்மணி லஷ்மி பதியை அழைக்கத் தயங்காது.

பல சிறந்த பேச்சாளர்களின் பேச்சுகளைக் கேட்க வாய்த்தது. எனக்குப் பிற்காலத்தில் உதவியாயிற்று.

மாணவர் பேரவை சார்பில், சென்னைக் கல்லூரி மாணவர் களிடையே பேச்சுப்போட்டி நடப்பதுண்டு.

நான் இண்டர்மீடியட்டில் படிக்கும்போது நடந்த நிகழ்ச்சியொன்று நினைவிற்கு வருகிறது.

அனைத்துக் கல்லூரிப் பேச்சுப்போட்டியானதால், இலயோலா, பச்சையப்பன், கிறுத்துவக் கல்லூரி மாணவர்கள் பலர் வேடிக்கை பார்க்க வந்திருந்தனர்.

போட்டி சூடு பிடித்தது. அச்சூடு அவையோரையும் தாக்கிற்று.

எனக்கு அடுத்து ஒரு மாணவர் அமர்ந்திருந்தார். அவர் என் அன்பர், இலயோலாக் கல்லூரி மாணவர். பெரிய வீட்டுப் பிள்ளை.

தன் ஊரில் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் பெற்ற குடும்பமாகத் திகழ்ந்தது, அவருடைய குடும்பம்.

பேச்சாளர் ஒருவரின் கருத்தும் பேச்சுப் போக்கும் அந்த அன்பருக்கு ஆத்திரமூட்டின. ஆனால் அவருக்கு முன் இருந்தவர் வெளிப்படையாகப் பேச்சாளரை ஆமோதித்தார். அமர்ந்திருந்த இடத்தைவிட்டுக் குதித்தெழுந்தார் என் அன்பர். தன் முன்னே இருந்தவரை ஓங்கி அறைய முயன்றார்.

இமைப் பொழுதில், என் ஆண்மை பொங்கிற்று. நான் 'பொடியன்' என்பதை மறந்துவிட்டேன். அடாது செய்வதைத் தடுக்கத் தலையிட்டேன்.

வாட்டசாட்டமான என் அன்பரின் கைகளைச் சட்டென்று பற்றினேன். இழுத்து உட்கார வைத்தேன்.

சில மணித்துளிகள், அவருடைய வலிய கைகளை என் பிடியிலிருந்து விடாமல் பிடித்திருந்தேன். பாண்டிநாட்டு அன்பர் அமைதி பெற்றார்.

பேச்சுப்போட்டி முடிந்து கலைந்தோம். அப்போது அவருக்குப் 'பொடியன்' அறிவுரை கூறினேன்.

''பேச்சுரிமை புனிதமானது. கருத்துரிமையும் அதைப் போன்றதே. வன்முறையால் அவற்றைத் தடுக்க முயலக்கூடாது. அவ்வாறு நடப்பது அறிவுடையோர்க்கு அடையாளமாகாது.

''கல்லூரிவரை வந்துவிட்ட நாம், பிடிக்காத கருத்தைக் கேட்டு வெகுளுவதும் அத்தகைய கருத்தை ஆதரிப்போரை அடிக்கப் போவதும் காட்டுமிராண்டித்தனம்'' என்று அவருக்குச் சுட்டிக்காட்டினேன்.

காந்தியவாதியான அவரும் அதைப் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார்.

என் மாணவப் பருவத்திலும் இளமைக் குறும்புகள் இருந்தன. பேச்சாளர்களை, சிலவேளை கிண்டல் செய்வோரும் இருந்தனர்.

ஆயினும் விளையாட்டுகள் வரம்பு மீறிப்போகா; வன்முறைகளாக, நாணத்தக்க நடத்தைகளாகக் கோரக் காட்சிகளோடு ஒருபோதும் உருவெடுத்தது இல்லை. ஏன் அப்படி?

வழிவழி படிக்கும் பெரிய இடத்துப் பிள்ளைகளைப் பார்த்து அவர்களைப் போன்ற நாகரிகத்தோடு நடக்க வேண்டுமென்று முயன்றோம்.

எங்கள் நாட்டுப்புறத்துக் கரடுமுரடுகளைக் கல்லூரிகளில் காட்ட அஞ்சினோம்.

எனவே, கல்லூரிகள் பண்படுத்தும், முறைப்படுத்தும், ஒழுங்கு படுத்தும், ஒளிவிடச் செய்யும் இடங்களாயின.

34. தாத்தாவின் மறைவு

வேதனைப்படுத்திய அவலக் கனவு

நான் கல்லூரியில் முதலாண்டு படிக்கையில் வேதனையான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

வகுப்பறைகளில் இருக்கும்போது என் சிந்தையை ஒருமுகப்படுத்துவேன்; நடக்கும் பாடத்தில் செலுத்துவேன்.

எனவே, சாதாரண அறிவுபடைத்த என்னாலும் கணக்கு, விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை எளிதில் ஈர்த்துக் கொள்ள முடிந்தது.

சில வாரங்களில் பாடங்கள், தேர்வுகள் பற்றிய அச்சம் அகன்று விட்டது. சினிமா பார்க்கும் பழக்கமும் இல்லை.

ஆகவே பெரும்பாலும் இரவு ஒன்பது மணிக்கே உறங்கி விடுவேன். விடியற்காலை ஐந்து மணிவரை அயர்ந்து உறங்குவேன்.

ஓரிரவு ஒன்பது மணிக்குப் படுக்கையில் படுத்தேன். கண்களை மூடினேன். சரியான உறக்கம் வரவில்லை.

அவலக் காட்சியொன்று தோன்றி என்னை வேதனைப்படுத்தியது. அதை மறக்க முயன்றேன்; முடியவில்லை.

ஆறுதல் பெற முயன்றேன்; தோற்றேன்.

பத்து மணித்துளிகள் தூங்காது தவித்தேன். தாளிட்டிருந்த அறையின் கதவைத் தட்டும் ஒலி கேட்டது. மின்விளக்கைப் போட்டேன். கதவைத் திறந்தேன். திடுக்கிட்டேன்.

யாரைக் கண்டேன்? என்னுடைய ஊரைச் சேர்ந்த ஒருவரைக் கண்டேன். அவர் என்னைப் பார்க்க, முன்னர் வந்ததில்லை; அப்போதுதான் முதன்முறையாக வந்திருக்கிறார்.

ஏதோ அசாதாரணமான நிகழ்ச்சி நடந்திருக்குமென்று அஞ்சினேன்.

''வாங்க சித்தப்பா. ஊரில் தாத்தா எப்படியிருக்கிறார்?'' என்று பதற்றத்தோடு கேட்டேன்.

சித்தப்பா முறையாகிய மாணிக்கம், நாற்காலியில் உட்கார்ந்தபடியே, ''நான் ஊருக்குப்போய் நாளாயிற்று. மளிகைக்கடைச் சாமான் வாங்க கொத்தவால் சாவடிக்கு வந்தேன். 'போகிறது போகிறாய், வடிவேலுவைப் பார்த்துவிட்டு வா' என்று அண்ணன் சொன்னார். அதனால் திடீரென வந்தேன்.

''நேரமாகிவிட்டதால் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்து விட்டேன். காலையில் ஆறு மணி வண்டிக்குப் போகப்போகிறேன். அதுவரை இங்கே படுத்திருக்கலாமா?'' என்ற கேள்வியோடு தம் பதிலை முடித்தார்.

என் கட்டிலிருந்து சமக்காளத்தை வாங்கித் தரையில் விரித்தார். ஒரு தலையணையைப் பெற்றுக்கொண்டு படுத்தார். விளக்கை அணைத்துவிட்டு நானும் படுத்தேன்.

''ஊருக்கு வா வடிவேலு! ஊருக்கு வந்து நாளாகிறதாமே! காலையில் என்னோடு வா. அடுத்த நாள் காலையில் திரும்பி வந்து விடலாம். ஒருநாள் விடுமுறை போதும்'' என்றார் என் சித்தப்பா.

''என்னிடம் ஒளிக்காதீர்கள் சித்தப்பா. தாத்தா இறந்து போய் விட்டார். அதைச் சட்டென்று சொன்னால் அதிர்ச்சியடைவேனென்று எண்ணி, மெல்ல மெல்ல வெளியிடுகிறீர்கள். அப்படித்தானே'' என்று மடக்கினேன்.

''எனக்குத் தெரிய அப்படியொன்றும் இல்லை. அவருக்கு எண்பத்திரண்டு வயது ஆகிவிட்டது. உன்னைப் பார்க்க விரும்புவதாக வருவோர் போவோர் எல்லோரும் சொல்லுவார்கள். அதனால் நானாகவே உன்னை ஊருக்கு அழைக்கிறேன்'' என்றார்.

''இல்லை இல்லை. பத்து நிமிடங்களுக்குமுன் தாத்தாவின் சவம் என் கண்முன் தோன்றிற்று. அவர் இறந்திருக்க வேண்டும். நீங்கள் மறைத்துப் பேசுகிறீர்கள்'' என்றேன்.

''சவம் கனவில் தோன்றுவது நல்ல அறிகுறி. தாத்தா பல்லாண்டு வாழ்வாரென்று பொருள்'' என்று விளக்கஞ் சொன்னார். உறங்கிவிட்டேன்.

எல்லாரும் சமம் என்று எண்ணிய தாத்தா

விடியற்காலை எழுந்தோம். சித்தப்பாவோடு எழும்பூர் சென்றேன். வாலாஜாபாத்திற்கு இரயில் ஏறினோம்.

பாலூர் புகை வண்டி நிலையத்தைத் தாண்டியபோது, சித்தப்பா மெல்லச் செய்தியை அவிழ்த்தார்.

''தாத்தாவின் உடல்நிலை நன்றாக இல்லை. வயது ஆகிவிட்டதே! எப்படியிருக்குமோ என்று நினைத்து உன்னை அழைத்துவர என்னை அனுப்பினார்கள்'' என்றார்.

பல்லைக் கடித்துக்கொண்டு அவருடன் பயணம் செய்தேன். வாலாஜாபாத்தில் இறங்கினோம்.

வழி நெடுகச் சேறும் தண்ணீரும். எனவே, வாடகைக்கு வரும் ஒற்றை மாட்டு வண்டிக்காரர்களும் எங்கள் ஊருக்கு வர மறுத்து விட்டார்கள்.

சித்தப்பாவும் நானும் நான்கு கல் தொலைவு நடந்தே சென்றோம்.

இளையனார் வேலூரைத் தாண்டிச் செய்யாற்றில் இறங்கும்போது, ''தாத்தா இறந்துவிட்டார்போல் தோன்றுகிறது'' என்றார்.

முதல் நாள் விழிப்புக் கனவில் அதைக் கண்டது என் நினைவுக்கு வந்தது. நான் எதிர்பார்த்தது நடந்து விட்டது என்பதை உணர்ந்தேன்.

ஊருக்குள் நுழைந்தேன். மூச்சுப் பேச்சில்லாத தாத்தாவைக் கண்டேன். கண்ணீர் மழை பெய்தது.

என்னைச் செல்லமாக வளர்த்தவர்; மாலை நேரங்களில் கட்டாயப்படுத்தி வெந்நீரில் குளிக்க வைத்தவர். பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, கைநிறைய வீட்டு நெய்யைப் பெய்து உண்ணும்படி வற்புறுத்தியவர். திங்கள்தோறும் காஞ்சிபுரத்திற்கு வந்து, என்னை அழைத்துக்கொண்டு கோயில்களுக்குச் சென்றவர். கோயில் பிரசாதங்களை வாங்கி உண்ணச் செய்தவர். காசு பணம் அடிக்கடி கொடுத்தவர். இப்படிப்பட்ட அருமைத் தாத்தாவிடம் யாருக்குத்தான் பற்று இராது?

என் தாத்தா பெரியவர். எதில்? வயதில்; குணத்தில்; வாழ்க்கை முறையில்.

எண்பத்திரண்டாம் வயதில் இறப்பதற்கு இரு நாள்களுக்கு முன்பு வாலாஜாபாத்திற்கு நடந்து சென்றார். இரயில் ஏறிக் காஞ்சிக்குச் சென்றார். கோயில்களில் கும்பிட்டார். மாலையில் திரும்பி வந்தார்.

ஒரே நாளில் அந்த வயதில் எட்டுக்கல் நடந்தார். இருப்பினும் களைத்துப் படுக்கவில்லை.

அடுத்த இரு நாள்களும் வழக்கமான வாழ்க்கை. பிற்பகல் நான்கு மணிபோல், திண்ணையில் உட்கார்ந்து நண்பரோடு பேசிக் கொண்டிருந்தார்.

அமைதியான பேச்சு; அதற்கிடையில் அப்படியே சாய்ந்தார். நண்பர் பதற்றத்தோடு நிமிர்த்தினார். மூச்சு நின்றுவிட்டது.

தாத்தா சண்முகம் மறையும்போது, எடுக்கப்பிடிக்கச் சொல்லி யாருக்கும் தொல்லை கொடுக்கவில்லை.

தாத்தாவின் வாழ்வு எளிதாக இருந்ததுபோல், முடிவும் எளிதாக இருந்தது.

அதிதிகள் அகாலத்தில் வந்தாலும் தம் வீட்டில் உணவு இல்லா விட்டால், உறவினர்கள் வீட்டிற்குள் உரிமையோடு நுழைந்து, அங்கு இருக்கும் உணவைக்கொண்டு வந்து பரிமாறிய தாத்தாவை இழந்தால் எளிதில் ஆறுதல் ஆகுமா?

'திட்டுக்குத் திட்டு, அடிக்கு அடி' என்னும் கொள்கையை ஒதுக்கிவிட்டு, எல்லாரையும் பொறுத்து, எல்லார்க்கும் இயன்ற உதவிகளைச் செய்த தாத்தாவின் குருதி, என்னுள்ளும் அப்படியே இயங்கவேண்டுமென்னும் அவா, துக்கத்தோடு போட்டி போட்டுக் கொண்டு பொங்கிற்று.

என் தந்தையார் செய்த புரட்சி

நம் வாழ்க்கை முறையில் எத்தனையோ பழக்கங்கள், எப்படியோ புகுந்துவிடுகின்றன. அவற்றில் பலவற்றிற்கு ஏன், எதற்கு என்று நம்மால் விளக்கம் சொல்லமுடிவதில்லை.

எப்போதோ, ஏதோ ஒரு சூழ்நிலையில் உருவான பழக்கங்கள் காலம் மாறி, சூழ்நிலைகள் அடியோடு மாறிய பிறகும் விடாப்பிடியாகத் தொடர்வதைக் காண்கிறோம்.

அத்தகைய பழக்கங்களில் ஒன்று நினைவிற்கு வருகிறது.

இந்துக்களாகிய நாம், இறந்தவர்களை இடுகாட்டிற்கோ சுடுகாட்டிற்கோ எடுத்துச் செல்கையில், இறந்தவர்களின் பேரப்பிள்ளை களைக் கொண்டு, நெய்ப்பந்தம் பிடிக்க வைக்கிறோம்.

நல்ல உணவுப்பொருள் பாழாகிப் போவதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. அது தேவையில்லை என்பதை உணர்ந்தவர்கள் கூட, ஊராருக்கும் உறவினருக்கும் அஞ்சி, இச்சடங்கைத் தடுப்பதில்லை.

என் பாட்டனார் இறந்தபோது, பேரப்பிள்ளைகளாகிய நாங்கள் நெய்ப்பந்தம் பிடிக்கவில்லை.

நெய்யைப் பாழாக்கும் அப்பழக்கத்தை வெட்டிவிட்டார் என் தந்தை.

இயற்கையின் வெளிச்சத்திலேயே தாத்தா போய்ச் சேர்ந்தார். அப்புறம்?

பதினாறாம் நாள் வந்தது. 'காரியம்' செய்ய வேண்டும். என் தந்தை என்ன செய்தார்? காரியஞ் செய்தார். எப்படி?

ஞானப்பிரகாச மடம் மனம் மாறியது

எங்களுக்கென்று தனி மடம் உண்டு. அது காஞ்சியில் உள்ளது. ஞானப்பிரகாச மடம் என்று பெயர்.

இப்போது இருப்பவர் இருநூற்று முப்பத்தொன்பதாவது பட்டம். அவ்வளவு தொன்மையானது அம்மடம்.

அம்மடத்திற்குக் கோரிக்கை விடுத்தார். 'காரியம்' செய்யக்கூடிய ஒருவரை அனுப்பி வைக்குமாறு கோரினார், கோரிக்கை பலித்தது.

மடத்திலிருந்து ஒருவர் வந்தார், காரியத்திற்கு முன் நாள் மாலை வந்து சேர்ந்தார். சிறிது நேரம் களைப்பாறினார்.

பிறகு?

தாமே சமைத்து உண்ணப் போவதாகவும், அதற்கான ஏற்பாடுகளைத் தனியே தமக்குச் செய்து கொடுக்கும்படியும் என் தந்தையைக் கேட்டார். தந்தை வெகுண்டார்.

''தான் செய்த நல்ல செயல்களால் சொர்க்கத்தில் இடம் பிடித்துக் கொள்ள முடியாத என் அப்பாவிற்கு, நான் செய்யும் 'காரிய'த்தால் இடம் பிடித்துக் கொடுத்துவிடலாம் என்னும் நம்பிக்கையால் உங்களை அழைக்கவில்லை.

''எங்கள் குடும்பங்களுக்குப் பரம்பரையாகப் புரோகிதம் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு எனக்கு எவ்விதப் பகையும் இல்லை. அவர்களே எனக்கு மிகவும் வேண்டியவர்கள்.

''அப்படியிருந்தும் இந்தக் காரியத்துக்கு உங்களை அழைத்ததற்கு ஒரே ஒரு காரணந்தான். அது என்ன?

''நம்மில் சிலர் உயர்ந்த சாதி என்பதை நான் ஒப்புக் கொள்வதில்லை. நம்மில் தாழ்ந்த சாதி என்று யாரையும் நான் கருதுவதில்லை.

''சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டே, 'பெரிய சாதி'ப் புரோகிதரை விலக்கிவிட முடிவு செய்தேன்.

''நீங்கள், எங்களோடு உடனிருந்து உண்ணமுடியாத பெரிய சாதி என்று காட்டிக்கொள்ள முயல்வீர்கள் என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது.

''முன்னரே தெரிந்திருந்தால் தங்களுக்கு இவ்வளவு தொல்லை கொடுத்திருக்க மாட்டேன்.

''இப்போதும் ஏதும் மூழ்கிவிடவில்லை. தாங்கள் எதிர்பார்ப்பதைவிடத் தாராளமாகவே தங்களுக்குப் பணம் கொடுக்கிறேன். வண்டி வசதி செய்து கொடுக்கிறேன். நீங்கள், 'காரியத்தை' நடத்திக்கொடுக்க வேண்டாம். வந்தபடியே சென்று வாருங்கள்'' என்று என் தந்தை கூறினார்.

மடத்தில் இருந்து வந்தவர், இதை எதிர்பார்க்கவில்லை. ஒரே சாதிக்கு உள்ளே பல உட்பிரிவுகள்; கீழ்நாட்டார், மேல்நாட்டாரை மட்டமாக நினைத்தல், நடுநாட்டார் இரு பிரிவினரையும் இளக்காரமாக எண்ணுதல். இப்போக்குகள், நான் பிறந்த சாதிக்குள் புதிதல்ல. இதை மாற்ற முடியுமென்று எவருக்கும் நம்பிக்கை பிறந்ததில்லை; எனவே எவரும் முயன்றதில்லை.

சென்ற ஈராண்டுகளில், கொண்டைகட்டி வேளாளர் சமுதாயப் பெரியவர்கள் வீட்டில் கலப்புத் திருமணங்கள் நடக்குமென்று ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் யாரும் கனவுகூடக் கண்டிருக்க முடியாது.

சாதிப் பாறையைப் பிளந்தது யார்?

புனிதர்கள் அல்லர்; அறிவு மேதைகள் அல்லர்; செல்வர்கள் அல்லர்; அரசியல் தலைவர்கள் அல்லர்.

பின் யார்?

பெரியார் ஈ.வெ. ராமசாமியே.

பட்டிக்காடுகளிலுள்ள சாதாரணப் படிப்பே படித்தவர்களும் பெரியார் வழிக்கு வந்தார்கள்.

பெரியார் வெற்றிகரமாக நடத்திய வைக்கம் சத்தியாக்கிரகம் எங்கள் ஊரில் எதிரொலித்ததை முன்னரே எழுதியிருந்தேன். அதன் வளர்ச்சியாகப் பிறவிப் புரோகித மறுப்பு முளைத்தது.

கல்வி மணம் இல்லாத எங்கள் பக்கத்திலேயே, ஓர் உறவினர் திருமணத்தைப் புரோகிதரின்றி, என் தந்தையே நடத்தி வைத்தார். அம்மணமக்கள் பிள்ளை குட்டிகள் பெற்றெடுத்து எவ்விதக் குறையும் இல்லாமல் வாழ்ந்தனர்.

என் அப்பாவின் அதிர்ச்சி மருத்துவம் பலன் கொடுத்தது. மடத்திலிருந்து வந்தவர், இறங்கி வந்தார். எங்களோடு இருந்து உண்ண உடன்பட்டார். அப்படியே செய்தார். எனவே, மறுநாள் காலை, 'காரிய'த்தை நடத்திவைத்தார்.

''மோட்சத்திற்கு அனுப்புவதில் நம்பிக்கையில்லாத நீ, ஏன் 'காரியஞ்' செய்ய முன் வருகிறாய்?'' என்று நண்பர் ஒருவர், என் அப்பாவைக் கேட்டார்.

''உறவினர்கள் வீடுகளில், இதற்கு என்றும் அதற்கு என்றும் பலமுறை விருந்து உண்டிருக்கிறேன். அவர்களுக்குப் பதில் விருந்து கொடுக்கவேண்டாமா? அதற்கு இது ஒரு சாக்கு. பின்னால் இதுவும் நின்றுவிடும்'' என்று பதில் அளித்தார்.

ஆயிரம் பிறை கண்ட தன் அப்பாவின் நினைவாக என் அப்பா கொடுத்த விருந்து நல்ல விருந்து; பெரும் விருந்து; ஆயிரம் பேர்களுக்கு வடை பாயசத்தோடு விருந்து; நெய் ஒழுகப் பிடித்த பெரிய லட்டும் போட்டார்.

ஆனால் அப்புறம் திதி கொடுத்ததில்லை. 'திதி', 'திவசம்' எங்கள் வீட்டில் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே மறைந்துவிட்டன.

வழிவழி வந்த விநாயகர் பூசையில் மாறுதல்

வீட்டில், வழி வழி வந்த பிள்ளையார் இருந்தார். நான் சிறுவனாக இருந்த காலத்தில், என் தந்தை நாள்தோறும் பிள்ளையாரைக் குளிப்பாட்டுவார். மலர் இட்டு வணங்குவார்.

காஞ்சிபுரம் திருவிழாவிற்குச் சென்றபோது, நல்ல உலோக மாடம் ஒன்றை, என் தாயார் வாங்கி வந்தார்.

என் வாலிபப் பருவத்தில், தந்தை பிள்ளையார் பூசையைக் கைவிட்டார்.

ஆனால் என் தாயார் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தந்தையார் அதில் குறுக்கிடவில்லை.

திங்களுக்கு மூன்று நாள் இயற்கை குறுக்கிடும். அக்கம் பக்கத்துப் பிள்ளைகளில் ஒருவர் வந்து, எங்கள் பிள்ளையாருக்குச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டுப் போவார்.

இந்த மாற்றத்தைப் படிக்கிற அன்பர்களில் பலர், எரிச்சல்படக் கூடும். அதைத் தவிர்க்கவும் இவ்வளவு புரட்சிகரமான உண்மையை ஒளிக்க என் உள்ளம் உடன்படவில்லை.

நெடுநாள் வேரூன்றிப்போன கொடுமைகளை, உபதேசத்தால் தொலைத்ததாக வரலாறு இல்லை.

சிலவேளை, தலைகீழாகப் புரட்டிப் போட்டால் மட்டுமே தீமை ஒழியும்.

அப்படிப்பட்ட புரட்சியின்போது, காப்பாற்றியிருக்கலாம் என்று பலர் கருதக்கூடிய சில அழிந்து போவதும் உண்டு. அதற்காகப் பழைய கொடுமைகளைச் சமுதாயம் பொறுத்துக்கொண்டு இருக்கக்கூடாது.

'பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று அமைதிப்படுத்துவது சமுதாய ஏணியின் இரண்டாவது மூன்றாவது படிகளில் நிற்கும் நான் பிறந்த சாதிக்கு வசதியாக இருக்கலாம்.

சமுதாயத்தில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர்களுக்கு மேற்பட்டவர்கள் ஏணியின் கீழ்ப்படிக்கட்டுகளில் குழுமி, குமைந்து கொண்டிருக்கிறார்களே. அவர்களுக்கு அது எப்படி மருந்தாகும்? எப்படி நீதி வழங்கும்.

35. முதல் சுயமரியாதை மாநாடு

தமிழ்நாடு காங்கிரசு தலைவர் ஈ.வெ. ராமசாமி

தந்தை பெரியார் அண்மைக் காலம்வரை நம்மோடு வாழ்ந்தவர். சும்மா இருந்தவர் அல்லர்.

தான் உண்டு, தன் சொத்து உண்டு என்று நிம்மதியாக இருந்த வேடிக்கை மனிதர் அல்லர்.

கோடிக்கணக்கான ஏழை எளியவர்களின் போற்றுதலைப் பெற்றவர். சிலருடைய தூற்றலுக்கும் ஆளானவர்.

எச் சமுதாயத்திலும் சீரிய சிந்தனையாளர்களிடம் இயற்கையாக எழுகிற அரசியல் விடுதலை உணர்ச்சியைப் பெற்றவர். சொந்த நலன்களை நொடியில் துறந்தவர். இந்திய தேசிய காங்கிரசைத் தமிழகத்தில் வளர்த்தவர்.

அவரே எதிர்த்துப் போர் தொடுத்த காலத்தில், சட்டென்று அழிக்க முடியாத அளவு உறுதியாக, வளமாகக் காந்தியத்தைத் தமிழகத்தில் ஓங்கித் தழைக்கச் செய்தவர் ஈ.வெ.ராமசாமி பெரியார் என்பது மிகையல்ல.

ஒத்துழையாமை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதரைப் பரப்புதல் ஆகிய நான்கு திட்டங்களை மெய்யாக, முழுமூச்சோடு. செயல்படுத்தியவர் அக்காலத் தமிழ்நாடு காங்கிரசு தலைவர், ஈ.வெ. ராமசாமி.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதில், பெரும்பொருள் இழப்பிற்கு ஆளானார். இன்னல்களுக்கும் சிறைத் தண்டனைகளுக்கும் ஆளானார்.

அது மட்டுமா?

இன்றைக்கும் எல்லோரும் நினைத்துப் பார்க்க முடியாத புரட்சியை ஐம்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே செய்து காட்டியவர், காங்கிரஸ் தலைவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி.

தம் குடும்பமே, பொது வாழ்க்கையில் பொதுக் கிளர்ச்சிகளில் பங்குகொள்ளச் செய்தவர் பெரியார்.

பாசமும் பற்றும் இயற்கை. செயற்கரிய செய்த பெரியவர்கள் இவற்றைக் கடந்தவர்களாக விளங்குகிறார்கள்.

தாம் கண்ணாகக் காத்து வளர்த்த காங்கிரசை அதன் தொண்டிலே பெற்ற பெரும்புகழை, அதன் தொண்டிற்காகத் திரட்டியிருந்த செல்வாக்கை ஒருசேர உதறிவிட்டு, காங்கிரசில் இருந்து வெளியேறியவர் ஈ.வெ.ரா.

பிள்ளைப் பருவத்திற்குத் தைத்த சொக்காய், வாலிபப் பருவத்திற்குச் சரியாக இராது. வேறு வழியின்றி, அதை ஒதுக்கிவிட வேண்டியதே. அந்த நிலையில் இருந்தார் பெரியார்.

'காங்கிரசு, அரசியல் விடுதலையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. சமுதாயச் சிக்கல்களை ஆயவும் ஆயத்தமாக இல்லை. எனவே, விரிந்த தொண்டிற்கு இவ்வமைப்பு உதவாது'.

இந்த முடிவுக்கு வந்த ஈ.வெ.ரா. 'பொதுத் தொண்டு விலை' வணிகராக நடந்து கொள்ளவில்லை. தியாகியாக நடந்து கொண்டார்.

சுயமரியாதை இயக்கத் தந்தை பெரியார்

காங்கிரசை விட்டு வெளியேறிப் புதிய, புரட்சிகரமான சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

சமுதாயத்திலுள்ள பல்வகைக் கேடுகளையும் ஒரே நேரத்தில் தாக்கினார்.

ஈராயிரம் ஆண்டுகளாக நிலைபெற்றுள்ளவை என்று தெரிந்தும் தயங்காது, மலைக்காது சாடினார்.

சாதி ஏற்றத்தாழ்வைச் சாடினார். கலப்பு மணத்தை ஆதரித்தார்; புரோகித மறுப்பு மணத்தை ஊக்குவித்தார். விதவை மறுமணத்திற்குத் துணை நின்றார். பொட்டுக்கட்டும் முறையை ஒழிக்க உதவினார்.

சமபந்தி முறையை வாழ்க்கை முறையாக்கினார். சாதிப் பெயர்களைப் போட்டுக் கொள்வதைக் கண்டித்தார்.

பழமை விரும்பிகள் மிரண்டனர்; முறைத்தனர்; முழங்கினர்; பண்டைச் சாத்திரங்களைப் பழமைப் பழக்கங்களைக் குறுக்கே போட்டனர்.

'அவை புனிதமானவை அல்லவா? காக்கப்பட வேண்டியவை அல்லவா?' என்று அறை கூவல் விட்டனர்.

ஈ.வெ.ரா. சளைக்கவில்லை. சமய சாத்திரங்களை ஆய்ந்தார். புரட்சிப் பார்வையோடு ஆய்ந்தார். மனித சமத்துவ நோக்கோடு ஆய்ந்தார்.

மனிதனை மனிதனாக மதிப்பதற்குத் தடையாக இருக்கும் எதுவும் ஏற்பதற்குரியது அல்ல என்று, தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் முழங்கினார்.

சொல்லடியும் கல்லடியும் பருவமழையாகக் கிடைத்தன. சளைத்தார் இல்லை.

மாயூரம் எஸ். இராமநாதன், பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, சாமி சிதம்பரனார், பூவாளூர் பொன்னம்பலனார், மாயூரம் எஸ்.வி. லிங்கம், குத்தூசி குருசாமி முதலிய போர் வீரர்கள் அன்று இருக்க ஈ.வெ. ராமசாமிக்குக் குறையேது.

மறைமலை அடிகள் அறிவுரை

எதிர்ப்புச் சூறாவளிக்கிடையில், தன்மான இயக்கம் ஓங்கித் தழைத்தது.

பொது மக்களிடையே இருந்த சமயநம்பிக்கை ஆட்டம் கண்டது.

சென்னையிலிருந்த சைவப்பெரியார்கள் சிலர் கலக்கமுற்றனர்.

பிறநாடுகளில், மனித சமத்துவமும் மத நம்பிக்கைகளும் ஒன்றோடொன்று போராடுவதை விட்டுவிடவில்லையா?

மத நம்பிக்கை, மனிதச் சமத்துவத்தை ஏற்றுக்கொண்டு, சம வாழ்வு வாழ்கிறதே. அதைப்போல இங்கேயும் மதம், மனிதர்களைக் கீழ்ச் சாதியாக்காமல் இருப்பதற்கு வழி சொல்ல வேண்டிய பெரியவர்கள், பதற்றத்தால், வேறேதோ செய்தார்கள்.

பல்லாவரம் முனிவர் என்று புகழ்பெற்ற மறைமலை அடிகளாரிடம் சென்றார்கள். முறையிட்டார்கள்.

'நாயக்கர் வளர்க்கும் நாத்திகத்தை மடக்கி, ஒழிக்க வரிந்து கட்டிக் கொண்டு வாருங்கள்; இயக்கம் காணுங்கள்; பம்பரம் போன்று சுழன்று பணிபுரியக் காத்திருக்கிறோம். தன்மான இயக்கத்தை எதிர்த்துப் போராட வரந்தாருங்கள்' என்று வேண்டினார்கள்.

முனிவர் பொறுமையாகக் கேட்டார். அமைதியாகப் பதில் அளித்தார். அறிவு ஒளிரும் பதில் கூறினார்.

'நம் சமுதாயம், சாதி ஏற்றத்தாழ்வு போன்ற பல தீமைகளின், கொடுமைகளின் நிலைக்களமாகிவிட்டது. இவை ஒழிக்கப் படவேண்டும்.

'சாதாரண முயற்சியால் இவை ஒழியா. தன்மான இயக்கத்தின் புயலும் பெரு மழையுமே இவற்றை அடியோடு அடித்துக்கொண்டு போகும். அத்தொண்டு இன்றையத் தேவை.

'அதற்குப் பிறகு, சமய உணர்வு மீண்டும் முளைக்கும். அவ்வுணர்வு நல் உணர்வாக, மக்களை மக்கள் அடிமைப்படுத்த உதவாத உணர்வாக ஒளிவிடும். ஆகவே, சற்றே விலகி நிற்போம்.'

மறைமலை அடிகளாரின் அறிவுரையை நாமும் நினைவுபடுத்திக் கொள்வது நாட்டுக்கு நல்லது.

முதல் சுயமரியாதை மாநாடு

என் பாட்டனாரின் மறைவிற்குப் பிறகு நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, செங்கற்பட்டில் நடந்த மாகாண சுயமரியாதை மாநாடாகும்.

அதுவே முதல் சுயமரியாதை மாநாடு.

அது *1929* ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், பதினேழு பதினெட்டு ஆகிய இரு நாள்களும் நடந்தது.

அந்த மாநாட்டுக்கு முன்பே, நான் என் மன உணர்வில் தீவிர சுயமரியாதைக்காரன் ஆகிவிட்டேன்.

எனவே அம் மாநாட்டிற்குச் சென்றேன். பிரதிநிதியாகவே சென்றேன். இரு நாள்களும் இருந்தேன். அக்கறையோடு கலந்து கொண்டேன்.

முதல் சுயமரியாதை மாநாட்டை நடத்தியவர்களைப் பற்றிச் சில சொற்கள்.

அதன் வரவேற்புக் குழுத் தலைவர், மன்னூர் கிருஷ்ணசாமி ரெட்டியார்; 'எம்.கே. ரெட்டி' என்று சுருக்கமாக அவரை அழைப்பார்கள்.

அவர் ஒரு பட்டதாரி; செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தின் தலைவர்; மிகத் திறமையான தலைவர்.

அக்காலத்தில், தமிழகத்தின், செங்கற்பட்டு, கோவை, சேலம், மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கழகங்கள் நிர்வாகத் திறமைக்குப் புகழ் பெற்று விளங்கின.

செங்கற்பட்டு நகரில் மாநாட்டிற்குப் பொறுப்பேற்றவர் யார்?

மேலமையூர் அப்பாசாமி முதலியார். அவர் புகழ்பெற்ற அரிசி வணிகர்.

அவருடைய அண்ணன் மகன் மே. வேதாசலம். இவர் அப்பாசாமி முதலியாருக்கு வலக்கரமாக இருந்து பம்பரம்போல் செயல்பட்டார்.

திரு. வேதாசலம், பிற்காலத்தில் செங்கற்பட்டு நகராட்சிக்குத் தலைவரானார்; தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் நகராட்சித் தலைவராக இருந்து நற்பணியாற்றினார்.

அக்கால நகராட்சித் தலைவர்களுக்கு 'வண்டிப் படி' உண்டு; அது ஒன்றும் பெருந்தொகையல்ல; திங்களுக்கு எழுபத்தைந்து ரூபாய்கள்.

செல்வராகிய திரு. வேதாசலம், அத்தொகையைத் தனிக்கணக்கிற் போட்டு, சேர்த்து வைக்கச் செய்தார்.

இருபத்தைந்து ஆண்டுகளில் தொடர் வட்டியோடு அச்சேமிப்பு பெருந்தொகை ஆயிற்று.

அச்சேமிப்பு, இன்றைய செங்கற்பட்டு நகராட்சி அலுவலகக் கட்டிடத்தைக் கட்ட உதவிற்று.

மாநாட்டின் தலைவர் யார்?

பட்டிவீரன்பட்டி திரு டபிள்யூ பி.ஏ. சௌந்தரபாண்டியன்.

இவர் செல்வர்; செருக்கில்லாத செல்வர்; தோட்ட முதலாளி; தொழிலாளிகளை அரவணைத்துக் கொண்டிருந்த முதலாளி. வாழ்நாள் முழுவதும் சுயமரியாதைக்காரராகவே வாழ்ந்த கொள்கை உறுதியுடைய தீரர்.

சுயமரியாதை இயக்கம் சமதர்ம இயக்கமாகத் தழைத்தபோதும், கசப்புக் கொள்ளாமல் தன்மான இயக்கத் தூண்களில் ஒருவராக விளங்கினார்.

பொதுத் தொண்டிற்குத் தன்னுடைய உழைப்பை, ஆதரவைக் கொடுத்ததோடு பொருளையும் தாராளமாகக் கொடுத்தவர் சௌந்தரபாண்டியன்.

பண்பாளரான சௌந்தரபாண்டியன் பிற்காலத்தில், மதுரை மாவட்டக் கழகத் தலைவராக விளங்கியபோது, நான் அம்மாவட்டத்தின் கல்வி அலுவலராக இருக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

அப்போது கட்டாயக் கல்வியை, தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்களில் நடைமுறைப் படுத்துவதில் அப்பெரியார் எனக்குத் துணை நின்றார்.

செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டில் இந்த இலட்சிய வாதியைத் தொலைவில் இருந்தே கண்டேன். உறுதியான உரையினைக் கேட்டேன்.

முதல் சுயமரியாதை மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் யார்?

டாக்டர் சுப்பராயன்.

அப்போது, அவர் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சர்.

சேலம் மாவட்டத்தில் நிலக்கிழார் பரம்பரையில் தோன்றிய அவர், இங்கிலாந்து சென்று படித்து, பாரிஸ்டர் பட்டம் பெற்றார். காங்கிரசுவாதியாக, பொதுத்தொண்டு ஆற்றினார்.

அவருடைய அமைச்சரவையே வகுப்புரிமை ஆணையைப் பிறப்பித்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பது முதல் இருபது ஆண்டுகளுக்குமேல், அம்முறை செயல்பட்டது.

வகுப்பு அடிப்படையில் இடஒதுக்கீடு முறை இல்லையேல், என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கானவர்கள், அரச அலுவல் ஏணிகளின் கீழ்ப் படிகளிலேயே தேங்கியிருப்போம்.

மாநாட்டின் உயிர்

செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாட்டின் மூளை, நாடி நரம்பு, எல்லாம் பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆவார்.

அவருடைய இயக்கத்தின் உயிர்த்துடிப்புகளான மாயூரம் எஸ். இராமநாதன், மாயூரம் நடராசன், குத்தூசி குருசாமி, பட்டுக்கோட்டை அழகிரிசாமி, எஸ்.வி. லிங்கம், பூவாளூர் பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார் ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஏத்தாப்பூர் ஏ.எஸ். அருணாசலம், சொ. முருகப்பா, கோவை சி.ஏ. அய்யாமுத்து, நாகை என்.பி. காளியப்பன், ச.ம.சி. பரமசிவம், கோவை ஏ.ஆர். சிவானந்தம், அருப்புக் கோட்டை கருப்பையா, சித்தக்காடு இராமையா, திருமதி மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் ஆகியோரும் சுயமரியாதை மாநாட்டில் பங்கு கொண்டார்கள்.

நீதிக்கட்சித் தலைவர்களான திருவாளர்கள் ஏ. இராமசாமி முதலியார், என்.ஆர். சாமியப்ப முதலியார், ஏ.டி. பன்னீர்செல்வம், பி.டி. இராஜன், ஜே.எஸ். கண்ணப்பர் முதலானோர் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள்.

அந்த மாநட்டின் கருத்து அருவிக்கு அழைத்துப் போவதற்கு முன், அதன் அமைப்பைப் பற்றிய சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.

அம்மாநாட்டில் கலந்துகொண்ட பெரியோர்களில் பலர் சென்னையில் இருந்து சென்றார்கள். நெடுஞ்சாலை வழியாகச் சென்றோர் ஆயிரக்கணக்கில்.

அப்போது, சென்னை கன்னியாகுமரி நெடுஞ்சாலை, இப்போதிருப்பதைக் காட்டிலும் பசுமை அடர்ந்ததாக இருந்தது. வழி நெடுகிலும் நெடுமரங்கள் கைகோத்து நிற்பது போன்று மிக நெருக்கமாகக் காட்சி அளித்தன.

தாம்பரத்தைத் தாண்டி, இரும்புலியூர் 'இரயில்வே கேட்'டிலிருந்து செங்கற்பட்டுவரை இன்றைக்கிருப்பதைக் காட்டிலும் இரண்டு மூன்று பங்கு தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்து காய்த்துக் குலுங்கி நின்றன.

அத்தனை மரங்களும் உடலின் நடுவில் வெள்ளைச் சுண்ணாம்புப் பூச்சும் செம்மண் பூச்சும் பெற்று அலங்காரமாக நின்றன. அக்காட்சியே அழகிய காட்சி.

அதுவரையில் அப்படிப்பட்ட பதினெட்டு மைல்கள் நீண்ட அழகிய காட்சியை மக்கள் கண்டதில்லை.

வழிநெடுகிலும் வரவேற்பு வளைவுகளுக்குக் குறைவில்லை.

மாநாட்டுப் பந்தல், அக்காலகட்டத்திற்கு மிகப் பெரியது; பத்தாயிரம் பேர்களுக்கு மேல் தாராளமாக உட்காருவதற்கு இடம் அளித்தது.

ஊக்க ஒலிகளும் வரவேற்பு முழக்கங்களும் கொண்ட அட்டைகள் தூண்தோறும் கம்பீரமாகத் தொங்கின.

அந்த மாநாடு மெய்யாகவே பொதுமக்கள் மாநாடாக விளங்கிற்று.

அதில் பெரும் பட்டதாரிகள் இருந்தார்கள். பொது வாழ்க்கையில் செல்வாக்குடைய பெரும்புள்ளிகள் இருந்தார்கள். செல்வர்கள் இருந்தார்கள்.

ஆனால் பொதுமக்களே, செல்வங் காணாத பெருமக்களே, பள்ளிப்படிப்பையும் முழுமையாகப் பெறாத நாட்டு மக்களே, சொக்காய் போட்டுப் பழகாத மக்களே ஏராளம், ஏராளம்.

தமிழ்நாட்டு மூலை முடுக்குகளில் இருந்து ஆர்வத்துடன் குழுமிய அவர்கள் தமிழக வரலாற்றின் திருப்புமுனையை, புதுத்திசையை முடிவு செய்தார்கள்.

ஆங்கிலேயனும் பொறாமைப்படும் அளவு ஆங்கிலத்தில் அபாரமான நாவன்மை படைத்த ஏ. இராமசாமி முதலியார் போன்றோரின் சில ஆங்கிலப் பேச்சுகளையும் கேட்டோம்.

எண்ணற்ற உள்ளக் குமுறல்களை, உண்மை உணர்வின் வெடிப்புகளை, எரிமலைகளை, தாய்த் தமிழ்ப் பேச்சுகளின் வழியாகக் கேட்டோம்.

அவற்றைக் கேட்டபின் என்ன முடிவுக்கு வந்தோம்?

ஒரு முடிவை அல்ல; முப்பத்தினான்கு முடிவுகளை மேற் கொண்டோம்.

அம் முடிவுகளில் சில போர் முழக்கங்களாக ஒலித்தன; இன்றும் கணீர் என்று ஒலித்துக் கொண்டிருக்கின்றன; இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு ஒலிக்கத் தேவையிருக்குமோ?

எனக்கு ஆரூடம் சொல்லத் தெரியாது; அதில் நம்பிக்கையும் இல்லை.

நம் சமுதாயம் மாற வேண்டிய அளவிற்கு அடியோடு மாறும்வரை அப்போர் முழக்கங்கள் குன்றாமல் ஓங்கி ஒலிக்கும என்பது மட்டும் உறுதி.

எதனால் இவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறேன்?

எம்.ஜி.ஆர் எடுத்த நூற்றாண்டு விழா

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து எட்டாம் ஆண்டு செப்டம்பர் பதினேழு, பதினெட்டாம் நாள்கள் ஈரோட்டில் நடந்த நிகழ்ச்சிகள், 'பழைய உணர்வுகள் பட்டுப்போகவில்லை; தன்மான இயக்கம் எந்தெந்தத் தீமைகளை ஒழிக்க நினைத்துத் தோன்றியதோ, அவை இன்றும் வெவ்வேறு நிலை உயிர்ப்போடு இருக்கின்றன.

'ஆனால் அவற்றை வேரடி மண்ணோடு களைந்து எடுத்த பிறகே, செங்கற்பட்டில் தொடங்கிய மக்கள் போர் முழக்கங்கள் நிற்கும்' என்பதைக் காட்டின.

அந்த அறப்போர் முழக்கங்கள் வாழையடி வாழையாகத் தொடர்வதை நேருக்கு நேர் கண்டேன்.

அந்நிகழ்ச்சிகள் என்ன?

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமியின் நூற்றாண்டுபிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் இரு நாள்களும் காலை முதல் நள்ளிரவுவரை நிகழ்ச்சிகளை அடுத்து நிகழ்ச்சி என்று தொடர்ந்தன.

அவை வெறும் திருவிழா நிகழ்ச்சிகளா? இல்லவே இல்லை. நம் எதிர்கால வரலாற்றை உருவாக்கும் அடிப்படை.

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமியின் நூற்றாண்டுவிழா தனிச்சிறப்பு உடையதாகும். அரசே இத்தகைய விழாவெடுத்தல் அருமை. ஓராண்டு முழுவதும் விழா வெடுத்தல் அதனினும் அருமை. மாநிலம் முழுவதும் விழா வெடுப்பது தனிச்சிறப்பாகும்.

இவ்விழா நல்விழா; தொண்டிற்கு நன்றி சொல்லும் நல்விழா, அறுபது ஆண்டு காலம், நலிந்தோருக்கும் தாழ்ந்தோருக்கும் புரிந்த புரட்சித் தொண்டிற்கு எடுக்கும் பெருவிழா.

உலகப் பெரியாருக்கு இத்தகைய பெருவிழா எடுத்து முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தமிழர் நெஞ்சங்களில் இடம் பெற்றுள்ளார்.

மாநாடுகள், பெருங்கூட்டங்கள், பிறந்த நாள்கள் ஆகியவற்றை நான் காணாதவன் அல்லன். ஐம்பது ஆண்டுகளாகக் கண்டு வருபவன்.

இவற்றில் பெரியனவற்றையும் சிறியனவற்றையும் கண்டறியும் வாய்ப்புகளை நிறையப் பெற்றவன்.

அன்று, செங்கற்பட்டில் பத்தாயிரம் பேர்கள், மாநில முதல் சுயமரியாதை மாநாட்டில் உற்சாகத்துடன் கூடியது மிகப்பெரிய கூட்டம்.

இப்போது, நூற்றாண்டு விழாவில் ஈரோட்டில் கூடியவர்கள் சில நூறாயிரவர்கள். இத்தனை பெரிய கூட்டம் எதற்குக் கூடினார்கள்? நன்றிகாட்ட!

இவர்கள் அனைவரும் தன்மான இயக்கத்தவர்களா? இல்லை. அதில் இருந்து கிளைத்த அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களா? அவர்களும் ஏராளமாக இருந்தார்கள். முந்திக் கிளைத்த தி.மு.க.வினரும் இருந்தார்கள். இவர்கள் ஒட்டுமொத்தத்தைவிடப் பொதுமக்கள் தொகையே மிகப்பெரிது.

எத்தனை திருநீற்றுப் பூச்சுக்காரர்கள்? எத்தனை நாமம் அணிந்தவர்கள்? எத்தனை சமயப்பற்றாளர்கள்? அத்தனை பக்தர்களுட மணிக்கணக்காக இருந்து சிறப்பிப்பானேன்?

இடை இடையே, பேச்சாளர்களும் கவிஞர்களும் பெரியா பாணியில் அதிர்ச்சி மருத்துவம் செய்ததற்கும் முகஞ்சுளிக்காமல் அமர்ந்திருந்ததேன்?

நன்றிப்பெருக்கே அவர்களைக் குழுமச் செய்தது. அதுவே அவர்களை நெடுநேரம் கேட்கச் செய்தது.

'சாதிகள் தொலைய வேண்டும்; ஒற்றுமை பெருக வேண்டும் என்பதைக் கேட்டு அவர்கள் மிரளவில்லை.

பெரியாரின் பெருங்குரல் வழியாகக் கேட்டுக்கேட்டு, அதை ஏற்கப் பக்குவப்பட்டு விட்டார்கள்.

நெடுநேரம் உட்கார்ந்திருந்த கால்கள் மரத்துப் போகும் அவ்வளவே. அதற்கு மேல் நலிவு இல்லை. ஆனாலும் அடி எடுத்து வைக்கத் தயங்கும்.

அதேபோல் எண்ணற்றவர்கள் சாதிப்பிரிவு தேவையில்லை என்பதைக் கேட்டு அதிர்ச்சியடைவதில்லை.

ஆனால் தாங்கள் முன்வந்து, அதைத் தட்டிவிட முடியாத நிலையிலுள்ளார்கள்.

அவர்கள் சாதிப் பிரிவுகளைத் தாக்குவதைப் பற்றிக் கோபப்படவில்லை. அவற்றிற்கு வேர்களாக உள்ள மரபுகள் நம்பிக்கைகள் - சமய நம்பிக்கை உட்பட - முதலியவற்றைத் தாக்கும் ஒலிகள், அவர்களை உலுக்கவில்லை.

தன்மான இயக்கப் போர் முழக்கங்கள் தன்னலக் கூச்சல்கள் அல்ல; பிரிவு நலக் கூக்குரல்கள் அல்ல; ஆதிக்கத்தைக் காத்துக்கொள்ள எழுப்பும் அலறல்கள் அல்ல; மக்கள் சமுதாயம் முழுவதையும் ஒன்றாக, நன்றாக வாழவைக்கும் உயிர் ஒலிகள்; சமத்துவ ஒலிகள்; சமதர்ம ஒலிகள் ஆகும்.

முதல் சுயமரியாதை மாநாட்டுப் பிரதிநிதியான நான் தமிழக அரசு நடத்திய பெரியார் நூற்றாண்டு விழாவிலும் பங்குகொள்ள வாய்த்ததை எண்ணி மகிழ்கிறேன்.

செங்கற்பட்டு மாநாட்டின் முடிவுகள்

இப்போது வரலாற்றைப் படைத்த செங்கற்பட்டு மாநாட்டிற்குச் செல்வோம். அதன் முடிவுகளைக் கேட்போம்.

'மக்கள் பிறவியினால் உயர்வு தாழ்வு உண்டென்ற கொள்கையை இம்மாநாடு அடியோடு மறுப்பதுடன் அதை ஆதரிக்கும் மதம், வேதம்

சாத்திரம், புராணங்களையெல்லாம், பொதுஜனங்கள் பின்பற்ற கூடாதென்றும்,

'வருணாசிரமமென்ற கொடுமையான கட்டுப்பாட்டையும் சமுதாய முறையில் காணப்படும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் பஞ்சமர் முதலிய ஆட்சேபகரமான பிரிவுகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும்,

'மனித நாகரிகத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமை என்பதை ஒழித்து எல்லாப் பொது ரஸ்தாக்கள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், முதலிய பொது ஸ்தாபனங்களைத் தட்டுத் தடங்கலின்றி அனுபவிக்கச் சகல ஜனங்களுக்கும் சமஉரிமை கொடுக்கவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

'இதற்காக அரசாங்கச் சட்டம் அவசியம் என்று கருதுகிறபடியால், சட்டசபை பிரதிநிதிகளும் சர்க்காரும் தக்க ஏற்பாடு செய்து பொதுஜன முயற்சிக்கு உதவி புரிய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது' என்பது மற்றோர் முடிவு ஆகும்.

இக்கருத்துகளின் வெளிப்பாடுகள், மற்ற இரு முடிவுகளாக வந்தன.

'மக்கள் தங்கள் பெயர்களோடு ஜாதி அல்லது வகுப்பைக் காட்டுவதற்காகச் சேர்க்கப்படும் பட்டங்களை விட்டுவிட வேண்டு மென்று இம்மாநாடு பொதுஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

சாதி அல்லது சமயப் பிரிவுகளைக் காட்டும் குறிகளை யாரும் அணிந்து கொள்ளக்கூடாது என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

சாதிப் பட்டங்களை விட்டுவிட்டால் ஆள்களை அடையாளம் காட்டுவது எப்படி? இப்படிக் கேட்டவர்களோ அந்த நாளில் மிகப் புகழ்பெற்றவர்கள்.

பொதுமக்களோ அஞ்சவில்லை. சாதி வால்களை வெட்டக் கோரும் முடிவுக்குப் பேராதரவு தந்தார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, 'தாழ்த்தப்பட்டோர்' உள்ளூர் தொடக்கப் பள்ளிக்குச் செல்வதில்லை. ஏன்?

பண்ணையார் சினத்திற்கு அஞ்சிப் பெரிய சிற்றூர்களில் ஆதிதிராவிடச் சிறுவர்கள் சிலர் வருவார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களோடு கலந்து உட்கார முடியாது. எல்லாரோடும் சேர்ந்து தொட்டு விளையாடக் கூடாது.

எனவே, பாடசாலைகளில் தட்டுத்தடங்கலின்றி எல்லோரும் சேர்வது பற்றிய முடிவு தேவைப்பட்டது.

இன்றையக் கல்விக்கூடங்கள், பொதுக்கூடங்கள்; எல்லாச் சாதியாரும் கலந்து படிக்கும் இடங்களாகும்.

இம்மாற்றத்திற்காக, தன்மான இயக்கத் தந்தை பெரியாரும் அவ்வியக்கத் தொண்டர்களும் கேட்ட ஏச்சும் பேச்சும் கொஞ்சமல்ல.

அன்று அவர்கள் பெற்ற ஆதரவு தினையளவு; சமாளித்த எதிர்ப்புகள் மலையளவாகும்.

36. மாநாட்டின் புரட்சிகரமான தீர்மானங்கள்

புரட்சிகரத் தீர்மானங்கள்

செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாடு தமிழ்நாட்டுச் சிந்தனைப் போக்கில், குறிப்பிடத்தக்க திருப்புமுனையாக அமைந்தது.

மெய்யான பொதுமக்களின் பிரதிநிதிகள், பத்தாயிரம் பேர்கள் கூடி, சில முடிவுகளை மேற்கொண்டார்கள்.

அம்முடிவுகளைச் செயல்படுத்தியிருந்தால், தமிழ்ச் சமுதாயம் எவ்வளவோ முன்னேறியிருக்கும்.

குழந்தை மண எதிர்ப்பு

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை நமது நாட்டில் திருமணத்திற்கு, உற்ற வயது என்பதே கிடையாது.

கூவத் தெரியாத குயில் குஞ்சுகள் போன்ற சின்னஞ்சிறு குழந்தைகளுக்கும் திருமணஞ் செய்து வைத்துவிடுவார்கள்; பெற்றோர் மடிகளில் உறங்கிக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமிகளுக்குத் திருமணம் என்பது சொல்லொ ணாக் கொடுமை.

இக்கொடுமையை எதிர்த்துத், தென்னகத்தில், தன்மான இயக்கம் முதல் குரல் எழுப்பிற்று.

இக்கொடிய பழக்கத்தை எதிர்த்து பெரியார் ஈ.வெ.ரா.வும் அவருடைய இயக்கத்தவர்களும் எண்ணற்ற மேடைகளில் முழங்கினார்கள்.

பழமை விரும்பிகளின் கண்மூடித்தனமான பேச்சுக்கு ஆளானார்கள்.

சமுதாயத்தில் எதிர்நீச்சல் போடத் துணிந்த சுயமரியாதை மாநாடு, 'பெண்களின் கலியாண வயது 16 க்கு மேற்பட்டிருக்க வேண்டும் என்றும், மனைவி புருஷன் இருவரில் ஒருவருக்கொருவர் ஒத்துவாழ இஷ்டமில்லாதபோது தம்முடைய கலியாண ஒப்பந்தத்தை ரத்து செய்துகொண்டு பிரிந்துபோக உரிமையிருக்க வேண்டும் என்றும்'' இம்மாநாடு முடிவு செய்தது.

திருமணத்திற்கு ஒப்பந்தம் என்னும் சொல்லை அப்போதே பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். திருமணத்தை எங்கோ யாரோ முடிவு செய்து அனுப்பி இருப்பதாகப், பகுத்தறிவு வாதிகள் ஒப்புக் கொள்வதில்லை.

அது 'வாழ்க்கைத்துணை உடன்படிக்கை' என்பதே அவர்கள் முடிவு.

'கல்யாணம் செய்துகொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் ஜாதிமத பேதமின்றித் தங்கள் மனைவி புருடர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பூர்ண உரிமையளிக்கப்பட வேண்டுமென்றும்,

'அதற்கேற்றவாறு, கல்யாணச் சடங்குகள் திருத்தப்பட வேண்டும் என்றும், கல்யாணம் முதலிய சடங்குகள் சொற்பப்பணச் செலவில் நடத்தப்பட வேண்டுமென்றும் எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு நாளைக்கு மேலாவது ஒரு விருந்துக்கு மேலாவது நடத்தக் கூடாதென்றும் தீர்மானிக்கிறது.'

இம்முடிவு செயல்பட்டது; தொடக்ககாலத் தன்மான இயக்கத்தின் சார்பில், பலப்பல கலப்புத் திருமணங்கள் நடந்தன. இரண்டொரு விதவைத் திருமணங்களும் நிகழ்ந்தன.

காரைக்குடி மரகதவல்லி - முருகப்பா, மஞ்சுளாபாய் - சண்முகம், சிவகாமி - சிதம்பரனார், நீலாவதி - இராமசுப்பிரமணியம், சுந்தரி - அழகப்பா, குஞ்சிதம் - குருசாமி ஆகியோர் கலப்பு மணம் செய்து கொண்டவர்களில் சிலராவர்.

குற்றாலச் சாரல், குற்றாலத்துக்கு அப்பாலும் தாக்குவதுபோல் கலப்புத் திருமணங்கள் சில தன்மான இயக்கத்திற்கு அப்பாலும் நடந்தன.

தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அத்தகைய திருமணம் செய்துகொண்ட முன்னோடிகளில் குறிப்பிடத்தக்க ஒருவர்.

எல்லாச் சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை

'கடவுள் இல்லை; இல்லவே இல்லை' என்று இன்று முழங்கும் திராவிடக் கழகத்தின் தாயகமாகிய தன்மான இயக்கம், அன்று, கடவுள் நம்பிக்கை பற்றி என்ன கருத்தைச் சொல்லிற்று? இதோ செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டு முடிவுகளில் ஒன்று.

'கடவுள் என்பதின் பேரால் கோவில்களிலாவது அல்லது வேறு இடங்களிலாவது ஒரு பைசாவாவது, ஒரு பைசா பெறும்படியான சாமானாவது செலவழிக்கக்கூடாதென்றும்,

'வணங்குகிறவனுக்கும் வணங்கப்படுபவனுக்கும் மத்தியில் தரகனாவது வடபாஷையாவது இருக்கக்கூடாதென்றும் இம்மாநாடு கருதுகிறது.' மேலும்

'இனிமேல், புதிதாய்க் கோயில்கள் கட்டக்கூடாதென்றும் இப்போதிருக்கிற கோவில், மடம், சத்திரம், வேதபாடசாலை முதலியவைக்காக விட்டிருக்கும் சொத்துகளைக் கைத்தொழில், வியாபாரம், ஆராய்ச்சி முதலிய கல்விகளுக்காகவும் கைத்தொழிலுக் காகவும் செலவழிக்க முயற்சி செய்ய வேண்டுமாய்ப் பொது ஜனங்களை இம்மாநாடு அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

'கோவில்களில் உற்சவங்கள் முதலியவை கொண்டாடுவதை நிறுத்திக் கொண்டு அவற்றிற்குப் பதிலாக, பொது ஜன அறிவு வளர்ச்சி, ஆரோக்கிய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி முதலியன சம்பந்தமான பொருட்காட்சிகளை நடத்தி மக்களுக்கு அறிவும் செல்வமும் ஏற்படச் செய்ய வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.'

அக்காலத் தமிழில் பிறமொழிச் சொற்கள் ஏராளமாகக் கலந்திருந்ததைக் காண்கிறோம்.

பிற்காலத்தில், தமிழ் தூய்மை பெறுவதற்கு, தன்மான இயக்க எழுத்தாளர்களும் துணை நின்றிருக்கிறார்கள்.

தாய்த்தமிழில் வழிபாடு என்பதை, இயக்க ரீதியாக முன்வைத்துப் போராடியது, தந்தை பெரியாரின் தன்மான இயக்கமே. அதுவும் இன்றைக்கு ஐம்பத்துஐந்து ஆண்டுகளுக்கு முன்பே.

இன்று, அர்ச்சகர் உரிமை எல்லாச் சாதியினருக்கும் வேண்டுமென்று திராவிடக் கழகம் போராடுகிறது. முன்னர்த் தொடக்கத்தில், தரகர் அற்ற வழிபாட்டையே முன்னிறுத்தியது.

காசிக்குச் சென்று வழிபடுவோர், விசுவநாதருக்குப் புனலும் பூவும் இட்டு நேரே வழிபடலாம்.

எப்படியோ தமிழகத்தில், வழிபாட்டிலும் தரகர்கள் புக விட்டுவிட்டார்கள், நம்முன்னோர்கள்.

தரகர் வழி நெருங்கும்போக்கு, தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் இரண்டறக் கலந்துவிட்டது; நீக்கமற நிறைந்து விட்டது. ஊழல் நோயாகப் பரவிவிட்டது.

பூசாரி வழிபாடு, நெடுநாளைக்குத் தொடரும் என்பதால், அப்பூசாரித் தொழிலிலும் எல்லோருக்கும் உரிய பங்கு தேவை என்று தந்தை பெரியார் குரல் எழுப்பினார். அதற்காகக் கிளர்ச்சி செய்ய நாள் குறிப்பிட்டார்.

எல்லாருக்கும் கல்வி

கண்ணுடையார் என்பவர் எவர்? கற்றோரே. மற்றோர்? முகத்திரண்டு புண் உடையோர்.

கல்வி, கல்லாமை ஆகிய இரு அதிகாரங்களின் வழியாகக் கல்வியின் தேவையை, பெருமையை அழுத்தி வலியுறுத்தினார் திருவள்ளுவர்.

கற்பாறை மேல் பெய்த மழை நீராக ஓடிவிட்டது, அக்குறட்பாக்கள்.

தமிழர்களில் நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மேல், எழுத்தறிவு பெறாதவர்களாகவே இருந்தார்கள்.

பெண்கள் நிலை மேலும் மோசம். இந்நிலையில், செங்கற்பட்டுச் சுயமரியாதை மாநாடு கல்வி பற்றி நான்கு முடிவுகளை மேற்கொண்டது.

அவற்றிலே ஒன்று, ஆழமான சமூகநீதி உணர்விலிருந்து முளைத்ததாகும்.

'மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்குச் சமமாகக் கல்வி அடைகிற வரையிலும் தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுகிற வகுப்பினரின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் புத்தகம், உண்டி, உடை முதலியவற்றை இலவசமாக அளிக்க வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.'

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கொடுமைக்கு ஆளான அப்பிரிவினருக்கு நீதி கோரி முடிவெடுத்த மக்கள் இயக்கம், தந்தை பெரியாரின் தன்மான இயக்கமே ஆகும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பிறகுப் அதே சமூக நீதி உணர்வுடைய ஏழைபங்காளர் காமராசர், தமிழ்நாட்டின் முதல் அமைச்சரானார். தமிழ்நாட்டுக் கல்வியின் பொற்காலத்தைத் தொடங்கிவைத்தார்.

எல்லா ஏழைகளுக்கும் இலவச உணவு, உடை, பாடநூல்கள் கிடைக்க வழிவகை செய்தார்.

அந்த அமைதிப் புரட்சியின் முன்னோடும் பிள்ளையாக இருக்கும் பேற்றினை நான் பெற்றேன்.

நம் சமுதாய அநீதியின் அடையாளமாக இருக்கும் தாழ்த்தப்பட்ட வர்கள், சென்ற ஐம்பது ஆண்டுகளில் எவ்வளவோ முன்னேறியுள்ளார்கள்.

ஊராட்சி மன்றம் முதல் உயர்நீதி மன்றம் வரை இடம் பிடித்துள்ளார்கள்.

எல்லா நிலைக் கல்வியிலும் இடம் பெற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய தாகும்.

அப்படி வளர்ந்தவர்கள், வளரவேண்டியவர்களுக்கு ஆலோசகர் களாக, ஆதரவாளர்களாக, வழிகாட்டிகளாக, நண்பர்களாகச் செயல்பட வேண்டாமா?

தங்கள் பிரிவைச் சார்ந்த மாணவ மாணவிகளின்பால் அக்கறை காட்டி, தொடர்பு கொண்டு, 'கருமமே கண்ணாயிருக்க' கல்வியிலேயே கருத்தாயிருக்க நெறிப்படுத்த வேண்டாமா?

நெறிப்படுத்தும் பெரியோர் இல்லாமையால், சமுதாய ஏணியின் கீழ்ப்படிக்கட்டுகளில் உள்ள மாணவர் எடுப்பார் கைப்பிள்ளைகளாகச் செயல்படுகிறார்கள்.

அரசியல் மிராசுதார்களின் அடியாட்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். துன்பப்பட்டு வருகிறார்கள்.

படிப்பைக் கோட்டைவிட்டுவிடுகிறார்கள். இப்படிப் பாழாகலாமா?

'கல்லைக் குத்துவானேன்; கையை நோவானேன்' என்னும் பொறுப்பற்ற போக்கு, வளரும் பிரிவுகளின் முன்னோடிகளுக்கு ஆகாது.

சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் பெரிய தியாகம் செய்யத் தேவையில்லை.

ஓரளவு நேரத்தை ஒதுக்கி, இளைஞர்களுக்கு நல்வழி காட்டுவது அவர்கள் தலையாய கடமையாகும்.

'பள்ளிக்குப் போகத்தக்க சிறுவர் சிறுமியர்களுக்கு ஆரம்பக் கட்டாயக் கல்வி மாத்திரம் பொதுநிதியில் இருந்து போதிக்கப்பட வேண்டும்' என்பது மாநாட்டின் மற்றோர் முடிவு.

இன்றைய நிலையில், இது குறுகிய கண்ணோட்டமே.

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையில் இது புரட்சிகரமான முடிவு.

பள்ளிக்கூடங்களே இல்லாத பல்லாயிரம் ஊர்களும், மழைக்குக் கூடப் பள்ளியில் ஒதுங்காத பல இலட்சம் மக்களும் இருந்த கால கட்டத்தில் இது முற்போக்கு முடிவு.

கல்விக்கூடங்களில் பாடங்களை எம்மொழிகளில் கற்பிக்க?

'கல்வி ஸ்தாபனங்களிலே தாய்பாஷையும் பொதுப்பாஷையாக அரசாங்க பாஷையும் தவிர மற்ற பாஷை படிப்புக்காகப் பொதுப் பணத்தை உபயோகிக்கக்கூடாது' என்று செங்கற்பட்டு மாநாடு முடிவு செய்தது.

'உயர்தரக் கல்விக்குப் பொதுநிதிகளைச் செலவழிக்கக்கூடா தென்றும், அப்படிச் செலவழிக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால் வகுப்புவாரி விகிதப்படி மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்த முதல் சுயமரியாதை மாநாடு முடிவு செய்தது.

இந்த முடிவில் இரண்டு பகுதிகள் உள்ளன.

முதற்பகுதி இன்றைக்கு ஓரளவு பொருந்தாது. இரண்டாம் பகுதி இன்றைக்கும் பொருந்தும்.

வெவ்வேறு வகுப்புகளைக் கொண்ட சமுதாயத்தில் வகுப்புரிமை எல்லாத் துறைகளிலும் செயல்படுவதே நீதி.

தொழிலாளர் நலனை மறவாத தன்மான இயக்கம்

சமுதாய மாற்றத்தில் ஆர்வம்கொண்ட சுயமரியாதை இயக்கமோ அதன் தந்தையாகிய பெரியாரோ, தொழிலாளர் நலனை மறந்ததில்லை.

1927-28 ஆம் ஆண்டுகளில் நடந்த தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் போராட்டங்களில் தலைவர் பெரியார் அவர்கள் நேரடியாகப் பங்கு கொண்டார்; சிறைப்பட்டார்.

தொழிலாளர் இயக்கத்திற்கு ஆதரவான முடிவுகளைச் சுயமரியாதை மாநாடு நிறைவேற்றியதில் வியப்பில்லை.

அந்தக் காலத்தில் தென்னிந்திய இரயில்வே நாட்டுடைமை ஆகவில்லை. ஆங்கிலேய முதலாளிகளின் நிறுவனமாகத் தனித்து இயங்கிற்று.

அன்று நம்மை ஆண்டவர்களும் ஆங்கிலேயர். ஆகவே, அவர்கள், நடுநிலைமை வகிப்பதற்குப் பதில், ஆங்கிலேயக் கம்பெனிக்குத் துணை நின்றார்கள்.

'தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் அரசாங்கத்தார் நடுநிலைமை வகிக்காததற்காக அவர்களைக் கண்டிப்பதுடன் அநியாயமாகத் துன்பப்பட நேர்ந்த தொழிலாளர்களிடம் இம்மாநாடு அனுதாபம் காட்டுகிறது' என்று முடிவு செய்தது.

அன்னிய ஆட்சியைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை என்பதை மாநாடு காட்டிக்கொண்டது.

ஊதியக் கொள்கைக்கு வழிகாட்டும் மற்றோர் முடிவையும் காண்போம்.

'நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழிலாளர்களுடைய முன்னேற்றம் அவசியமானபடியால் அவரவர்களின் வேலைக்குத் தகுந்தபடியும் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய அளவு கூலி கொடுப்பதோடு,

'ஒவ்வொரு தொழிலிலும் கிடைக்கும் லாபத்தில் அந்தந்தத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான பங்கு கொடுக்க வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.'

'சமூக முன்னேற்றத்திற்கும் சமூக விடுதலைக்கும் சுயமரியாதை இயக்கக் கர்த்தாவாகிய பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் ஆற்றியுள்ள பெரும்பணிக்கு நன்றி பாராட்டுவதுடன் அவர்கள் இவ்வியக்கத்தில்

தலைமை வகித்து நடத்துவதில் அவர்கள்பால் மக்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது' என்ற முடிவோடு மாநாடு இனிது கலைந்தது.

அம்மாநாட்டில் இருநாள்களும் முழுநேரமும் உற்சாகத்துடன் கலந்துகொண்டேன். கருத்துகளைக் கேட்டேன்; உணர்வுகளைப் பெற்றேன்.

அன்று, தந்தை பெரியார்பால் நான் கொண்ட நம்பிக்கை இன்றும் இம்மியளவும் மாறவில்லை.

37. பொதுவாழ்க்கை

எம்.எல்.சி ஆகியும் பூட்சு தைத்தார்

ஒரு விடுமுறை நாள். விக்டோரியா மாணவர் விடுதித் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருந்தேன்.

இடுப்பில் தார்பாய்ச்சிய கிளாஸ்கோ மல் வேட்டி. உடம்பில் மூடு 'கோட்டு'. தலையில் தும்பைப்பூ வெள்ளைத் தலைப்பாகை. இந்தக் கோலத்தில் இருந்த முதியவர் ஒருவர் என்னை நெருங்கினார்.

''தங்களிடம் சில மணித்துளி பேசலாமா?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார். ''சரி'' என்றேன்.

''தங்கள் அறைக்குப் போகலாமா? தனியாகப் பேச விரும்புகிறேன்'' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அறைக்குள் நுழைந்தேன். முதியவர் பின் தொடர்ந்தார். உட்காரச் சொன்னேன். மறுத்துக்கொண்டே, தன் கையில் இருந்த வெள்ளைத் துணிப்பையை அவிழ்த்தார்.

ஒன்றன்பின் ஒன்றாக, நான்கு அட்டைப் பெட்டிகளை எடுத்து வெளியே வைத்தார். எனக்கு ஏதும் விளங்கவில்லை.

தன் சட்டைப் பைக்குள் இருந்து அட்டைத்துண்டு ஒன்றை எடுத்தார். பணிவோடு என்னிடம் கொடுத்தார்.

நொடியில் படித்தேன். யார் இவர்? குருசாமி, எம்.எல்.சி, பல்லாவரம் என்பது விளங்கிற்று.

''சட்டமன்ற உறுப்பினரா? உட்காருங்கள்'' என்றேன். அப்போதும் அவர் உட்கார இசையவில்லை.

''நான் ஆளுநரால் நியமிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினன். நான், அருந்ததிய சாதியைச் சேர்ந்தவன். அச்சாதி, பழங்குடி மக்களின் சாதிகளில் ஒன்று. அச்சாதியின் பிரதிநிதியாக நான் சட்டமன்றத்தில் இருக்கிறேன்.

''இந்த நியமனம் அண்மையில் கிடைத்தது. ஐந்து ஆண்டுக்குப் பிறகு இன்னொருவருக்குப் போகும். இதை நம்பி, சொந்தத் தொழிலை விட்டுவிட்டால், அப்புறம் யார் யாரோ இடும்பிச்சைக்கு ஏங்கிக்கிடக்க நேரிடும். மனச்சாட்சிக்கு மாறாக, எந்தெந்தக் கட்சிக்கோ கொடி தூக்கும்படி ஆகும்.

''அதனால், முன்னர் செய்து வந்த தொழிலையே தொடர்ந்து செய்கிறேன்.''

எனக்குப் பொறுமையில்லை, ''என்ன தொழில்?'' என்று சற்றுத் துடிப்போடு கேட்டுவிட்டேன்.

''இதோ பாருங்கள்,'' என்று கூறியபடியே அட்டைப்பெட்டி ஒன்றைத் திறந்தார். கண்டேன். எதை? பளபளக்கும் காலணியை - பூட்சை.

''இது கறுப்பு; பழுப்பு நிற பூட்சு இதோ'' என்று சொல்லிக் கொண்டே மற்றோர் அட்டைப்பெட்டியைத் திறந்து காட்டினார். அப்படியே நான்கு இணை பூட்சுகளையும் காட்டியபின்,

''நான் பல ஆண்டுகளாகவே, தோலை வாங்கிக்கொண்டு போய்ச் சொந்தத்தில் தைக்கிறேன். பெரிய மனிதர்களுடைய பங்களாக்களுக்குக் கொண்டு போய் விற்கிறேன். இந்தியர்கள் பங்களாக்களுக்கு மட்டுமல்ல; வெள்ளைக்காரர் பங்களாக்களுக்குமே.

''ஆங்கிலம் பேசத் தெரிவதால், ஆங்கிலேயரிடம் விற்பனை செய்ய முடிகிறது. அப்படிப்பட்ட ஒரு வெள்ளைக்கார வாடிக்கைக்காரரே, என்னைப் பற்றி ஆளுநருக்குச் சொல்லியிருக்கிறார். அது பலித்தது. எனக்கு நியமனம் கிடைத்தது.

''அரசனை நம்பி, கணவனைக் கைவிடலாமா? தொழில் இருந்தால், என்றைக்கும் நம் காலில் நிற்கலாம்.

''உங்கள் கால் அளவை எடுத்துக்கொண்டு போகிறேன். நன்றாக பூட்சை தைத்துக்கொண்டு வருகிறேன். பிடித்தால் காசு கொடுங்கள். பிடிக்காவிட்டால் எடுத்துக்கொண்டு போய்விடுகிறேன். விலை ஒன்றும் அதிகம் இல்லை. ஐந்து ரூபாய்களே! இந்த இரட்டைத் தோல் வகை ஏழரை ரூபாய்கள்'' என்று ஆங்கிலத்தில் பேசினார்.

பொதுவாழ்க்கையைப் பிழைப்பாகக் கொள்ளாமல், தொண்டாக மட்டும் மேற்கொண்ட, அவரிடம் எனக்கு மதிப்பு ஏற்பட்டது. உடனடித் தேவையில்லாதிருந்தும் ஓர் இணை பூட்சுக்கு அளவு கொடுத்தேன். குறிப்பிட்ட காலத்தில் கொண்டு வந்து கொடுத்தார். அப்போதும் உட்கார மறுத்துவிட்டார்.

''வயதானவன் சொல்லுகிறேன். வருத்தப்படாதீர்கள். நான் உங்களை நாடிவருவது, சட்டமன்ற உறுப்பினனாக அல்ல; சிறு

வணிகனாக. அப்படி வரும்போது, உட்கார்ந்து விற்க மாட்டேன். எதற்கும் வரம்பு வைத்துக்கொள்ள வேண்டும். இதை இறுமாப்பு என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள்,''

இந்த மரபு, பட்டுப்போய் பல்லாண்டுகள் ஆயின. முப்பத்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நான் சோவியத் நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது. அங்கே கண்டேன், திரு. குருசாமியின் போக்கை.

உள்ளாட்சி மன்றத்திற்கோ, குடியாட்சி மன்றத்திற்கோ, நாடாளுமன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுப் பண்ணைக் குடியானவர் என்ன செய்வார்? பண்ணைத் தொழிலை விட்டு விடுவாரா? மன்றத்தொழிலையே பிழைப்பாக மாற்றிக் கொள்வாரா? கையூட்டை எதிர்பார்க்கும் நிலைக்கு ஆளாக்கிக் கொள்வாரா? இல்லை; இல்லை; இல்லை.

மன்றக்கூட்டங்கள், குழுக்கூட்டங்கள் நடக்கும்போது மட்டும் வேலைக்கு வரமாட்டார். மற்ற நாள்களில் பழைய பணியில் ஈடுபடுவார்.

தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், வேலை செய்யும் மன்ற உறுப்பினர்களும் அப்படியே நடப்பார்கள்.

வேலைகளும் கெடாமல், ஆட்சி மன்றங்களில் பொதுமக்களின் உண்மையான குரல்களும் ஒலிக்க வகைசெய்துள்ள சோவியத் ஆட்சிமுறை, அது கிடக்கட்டும்.

அடிமை விரும்பிகளும் சுதந்திர வேட்கையுள்ளவர்களும்

என் கதைக்கு வருவோம். நான் கல்லூரி மாணவனாக இருந்த காலம் இந்திய விடுதலைப் போரொன்று உருவான காலம். காந்தியடிகளார், உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு மக்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்.

என்னுடைய நண்பர்களில் பெரும்பாலோர், விடுதலை இயக்கத்தின்பால் பற்றுடையவர்கள்.

அன்றுள்ள சாதி வெறி நிலையில், 'ஆங்கிலேயர் வெளியேறக்கூடாது' என்னும் கருத்துடைய இரண்டொருவர் எனக்கு மிக நெருக்கமானவர்.

அதிலே ஒருவர், ஒரு மாவட்டத் துணைத்தண்டல் நாயகத்தின் மகன். அவர் என் வகுப்பு மாணவர்; பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். என்னிடம் ஒளிக்காமல் பேசுவார்.

அவர், உப்புச் சத்தியாகிரகம் வெற்றி பெறாது என்று அறுதியிட்டுக் கூறினார். அக்கூற்றுக்கு ஆதரவாக என்ன சொன்னார் தெரியுமா?

அன்று மாநில, மைய அரசுகளில் பல நிலைகளில் பணிபுரிவோரின் மொத்த எண்ணிக்கையைச் சொன்னார். மலைப்பான எண்ணிக்கை; எத்தனையோ இலட்சம். அத்தனை பேரும் ஆங்கில ஆட்சிக்கு 'விசுவாசி'கள் என்றார்.

அன்னிய ஆட்சியை எதிர்க்கும் காந்தியடிகளைப் பின்பற்றுவோர் எண்ணிக்கையைக் குறிப்பிட்டார்.

பிந்தியதிலும் முந்தியது பலமடங்கு அதிகம் என்று காட்டினார். காந்தியத் தொண்டர்கள் அத்தனை பேரும் போரில் குதிக்க மாட்டார்கள்.

'அவர்களோ சிலர். நாமோ, ஆங்கிலேயரை ஆதரிக்கிற நாமோ, பலர். ஆகவே வெள்ளையன் வெளியேறுகிற ஆபத்து இல்லை' என்று விளக்கினார் நண்பர் இராமமூர்த்தி.

ஆயினும் நான் மெள்ள மெள்ள, விடுதலை இயக்கத்தின்பால் சாய்ந்தேன். வாங்கும் புதிய உடைகள் கதர் உடைகளாயின. ஆனால் பழைய வெளிநாட்டு ஆலைத் துணிகளைக் கொளுத்தவில்லை. முழுக்க முழுக்கக் கதர் உடையில் இல்லாமையால், ஆங்கில அரசாங்க ஒற்றர் எவருடைய தனிக் கண்ணோட்டமும் என் மேல் விழவில்லை. என் படிப்பும் இடையறாது தொடர்ந்தது.

தண்டி யாத்திரைக்கு ஓ.வி. அளகேசன்

உப்புச் சத்தியாகிரகம் தொடங்கும் நாள் நெருங்கிற்று. என் நண்பர்கள் சிலரிடையே பதைபதைப்பு;குசுகுசு வென்ற பேச்சுகள்.

எந்த இரகசியத்தையும் துருவுகிற பழக்கம் எனக்குக் கிடையாது. இந்த வயதிலும் வரவில்லை. எனவே, அப்பேச்சுகளைப் பற்றி உளவு பார்க்கவில்லை.

ஒரு நாள் மாலை மயங்கும் வேளை. அன்பர் ஓ.வி. அளகேசன் என் அறைக்கு வந்தார்.

'நான் போய் வருகிறேன். ஆண்டவன் புண்ணியத்தில் நன்றாகத் திரும்பி வந்தால் பார்ப்போம்.

''என் பெட்டியையும் படுக்கையையும் கொண்டுபோய்த் தெரிந்தவர் ஒருவர் வீட்டில் ஒப்படைக்கணும். அப்புறம் இரயில் பிடித்துப் போகணும். போய் வரட்டுமா?'' என்று சொல்லிக் கொண்டே, என் கைகளைப் பாசத்துடன் பிடித்துக் குலுக்கினார்.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''தேர்வுகள் நெருங்குகின்றன; இன்னும் சில நாள்களில் வந்து விடும். நீயோ நல்ல மதிப்பெண்கள் வாங்கிக்கொண்டு வருகிறாய். முதல்வகுப்பில் நிறைய மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெறுவாய்.

அப்படியிருக்க, இப்போது எங்கே போகிறாய்? தேர்வுகளைப் பற்றி உனக்கு அச்சம் ஏதும் இருக்கக் காரணமில்லையே'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மற்றொரு நண்பர் அங்கு வந்து சேர்ந்தார்.

''ரிக்ஷா வண்டிக்காரன் அவசரப்படுகிறான். உனக்கும் நேரமாகிறது. வழியில் வேறொரு வீட்டிற்கும் செல்ல வேண்டியிருக்கிறது. தாமதம் செய்யாதே; புறப்படு; வெற்றியோடு திரும்பி வா'' என்று சொல்லியபடியே அன்பர் ஓ.வி. அளகேசனை அழைத்துக் கொண்டு போனார்.

அவர்களோடு நானும் சென்றேன். ரிக்ஷா ஏறிப் போகும்வரையில் நின்று கொண்டிருந்தேன்.

அளகேசன் புறப்பட்டுச் சென்றதும், நான் என் அறைக்குச் செல்லவில்லை. மற்ற நெருக்கமான காந்திய நண்பர்களை நாடிச் சென்றேன். என்னுடைய திகைப்பையும் குழப்பத்தையும் அவர்களுக்குச் சொன்னேன்.

''அளகேசன் எனக்கும் நண்பராயிற்றே! அவர் ஏன் தேர்வுகள் எழுதாமல் புறப்பட்டுப் போய்விட்டார்? என்னிடம் ஒளிக்கும் இரகசியம் என்ன?'' என்று நண்பர்களைக் கேட்டேன்.

ஒருவரும் சரியான பதில் கூறவில்லை. 'தெரியாது' என்றார் ஒருவர்; 'மற்றவர்களைக் கேட்டுப் பார்ப்போம்' என்றார் மற்றொருவர்.

ஏறத்தாழ, இரண்டு மணிநேரம் என்னை அலைக்கழித்தார்கள். பிறகு, மெல்லச் செய்தியைச் சொன்னார்கள். என்ன செய்தி?

காந்தியடிகளின் தலைமையில் அவருடைய தொண்டர்கள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டிக்குச் செல்லப் போகிறார்கள். அங்குப் போய்ச் சேர்ந்தபின், உப்புக் காய்ச்சுவார்கள்.

தனியார் உப்புக் காய்ச்சக்கூடாதென்பது சட்டம். அச்சட்டத்தை மீறுவதன் வாயிலாக, அன்னிய ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கப் போகிறார், காந்தியடிகள்.

இவை எனக்குத் தெரிந்த செய்திகள்.

''இவற்றிற்கும் அளகேசன், மாணவர் விடுதியைவிட்டுப் போவதற்கும் தொடர்பு என்ன?'' என்று படபடப்போடு கேட்டேன்.

''தண்டி யாத்திரை செல்லும் காந்திய அணியில் அளகேசன் சே(விரும்புகிறார். அவர்கள் சபர்மதியைவிட்டுப் புறப்படுவதற்கு முன் அங்குப் போய்ச் சேரத் துடிக்கிறார்.

''இன்றிரவு, பம்பாய் விரைவு வண்டியில் புறப்பட்டால் நேரத்தில் போய்ச் சேர்ந்து விடுவார்.''

''இது, முன்கூட்டியே நாலு பேருக்குத் தெரிந்தால், இடைஞ்சல் வரக்கூடும். போலீசுக்காரர்கள், எந்தச் சாக்கிலாவது அளகேசனை நிறுத்தி வைத்துவிடக்கூடும்.

''தண்டி யாத்திரையில் போய்ச் சேர்வது என்னும் முடிவில் அளகேசன் உறுதியாக இருக்கிறார்.

''அப்புறம் காதும் காதும் வைத்தாற்போல், அது பலிக்க ஏற்பாடு செய்வது நண்பர்கள் கடமையல்லவா? அதனால் விடுதியைவிட்டுப் புறப்படும்வரை நாலு பேர்களுக்குத் தெரியாமல் வைத்திருந்தோம்'' என்ற தகவல்களைத் தெரிந்துகொண்டேன். உள்ளம் அமைதி அடையவில்லை.

''அளகேசனுக்குப் பதினெட்டு வயதாகிவிட்டது. நல்லது கெட்டதை முடிவுசெய்ய வேண்டியது அவரே. நாம் கவலைப்படத் தேவையில்லை. இருப்பினும் தண்டி யாத்திரையில், ஆசிரமத்தில், தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்கள் மட்டுமே வரலாம் என்று காந்திஜி அறிவித்திருக்கிறாரே!

''கடைசி நேரத்தில் போய்ச்சேருகிற சத்தியாக்கிரகப் பயிற்சி பெறாத அளகேசனை எப்படிச் சேர்த்துக்கொள்வார்? 'மாட்டேனென்று' சொல்லிவிட்டால், வீண் அலைச்சல்; பணச்செலவு; தேவையில்லாமல் தேர்வுகளை இழத்தல்;இத்தனையும் சேர்ந்து, அளகேசனுக்குள், எரிச்சலையும் ஆற்றாமையையும் வளர்க்காதா!'' என்று மடக்கினேன்.

''இப்பப் பேசிப் பயன் என்ன? அரக்கோணம் தாண்டிப் போயிருப்பான். என்ன நடக்கிறதென்று பொறுத்து இருந்து பார்ப்போம்'' என்று மட்டுமே நண்பர்களால் கூற முடிந்தது.

'அளகேசன் நடவடிக்கை சரியா? நண்பன் என்ற முறையில் நான் மேலும் அதிக விழிப்போடு, நடவடிக்கைகளை வேவு பார்த்திருக்க வேண்டுமா?

''இது முன்னர் தெரிந்திருந்தால்தான் என்னால் தடுத்திருக்க முடியுமா? அவர்கள் வீட்டுக்காவது விவரத்தை எழுதிப்போட்டு இருக்கலாம்.

'சரி! அவர் செய்தது சரியென்றால், இனி நான் என்ன செய்யவேண்டும்?

'பேசாமல் படித்துக் கொண்டிருப்பதா? படிப்பை விட்டுவிட்டால், பெற்றோர்க்கு நம்பிக்கைத் துரோகமல்லவா? சத்தியாக்கிரகம். சண்டித்தனம் என்று ஈ.வெ.ரா. சொல்வது தப்பா?'

இப்படியெல்லாம், தேவையில்லாமல் என்னை நானே குழப்பிக் கொண்டேன்; அன்று இரவு தூக்கத்தை இழந்து அல்லல்பட்டேன்.

38. இந்திய விடுதலைப் போராட்டத்தில் என் பங்கு

ஓரிரவு முழுவதும் தூங்காமல் குழம்பிய பிறகு ஒரு முடிவுக்கு வந்தேன். என்ன முடிவு?

'சோப்பையும் சீப்பையும் விற்றுப்பிழைக்க வந்த அன்னியர், இந்தியாவை ஆள்வதைப் பார்த்துக் கொண்டிருப்பது தவறு; மிகப்பெரிய தவறு.

'இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபடுவது எல்லோருடைய கடமையுமாகும். எம்முறையில் பாடுபடுவது? பலவகைகளில் உதவலாம்.

'போருக்குப் பலவகையினருடைய உதவி தேவை, அதைப் போல, இந்திய விடுதலைப் போராட்டத்திலும் பலவகையினருக்கும் பங்கு உண்டு.

'போராட்ட களத்தில் நிற்பதற்குப் பயிற்சி பெற்ற வீரர்கள் தேவை. அவர்களுக்குப் பின்னணியாகப் பல தொண்டுகளைச் செய்யும் தொண்டர்கள் தேவை.

'விழுப்புண் ஏற்கக் களத்தில் நிற்காத, விளம்பரம் பெறாத உழவரும், பண்டங்களை ஏற்றிச் செல்வோரும் போரின் வெற்றிக்குத் துணை நிற்கிறார்கள். அவர்களுடைய மெய்த்தொண்டும் ஆர்வமும் ஆதரவும் போரின் வெற்றிக்கான சூழலை உருவாக்குகின்றன. நான், அணில்போல தொண்டாற்றுவதென்று முடிவு செய்தேன்.

'விடுதலைப் போராட்டம் தலைசாய்ந்த கதிர்களை விரைந்து அறுத்துக் களத்துமேட்டில் சேர்க்கும் பணியல்ல. மாறாக, காடு வெட்டி, கழனியாக்கி, உழுது, புதுப்பயிர் இடுவது போன்று அரும்பாடு கொள்வது. இது பல்லாண்டுகளுக்குப் பிறகே பலன் கொடுக்கும்.

'இதற்கு முன்னணி தேவைப்படுவதுபோல், நீண்ட தொடர் அணியும் பின்னணியும் தேவை. நேரடியாகப் போராட்டத்தில் குதிக்கும் உந்துதலைப் பெறாத நானும் என்னாலான நாட்டுத் தொண்டைப் புரிய உறுதிபூண்டேன்.

'ஈ.வெ.ரா. பெரியார் அவர்களின் எதிர்ப்பைத் தள்ளிவிடலாமா?

'அரசியல் விடுதலை ஆள்வோர் மாற்றத்தோடு நின்றுவிடக் கூடாது. அது நாட்டிலுள்ள அனைவருக்கும் நன்மை பயக்க வேண்டும்; கடையரும் கடைத்தேற வழி செய்ய வேண்டும்.

'சமுதாய நீதிக்கும் எல்லார்க்கும் வாழ்வளிப்பதற்கும் பயன்படாத அரசியல் விடுதலை' கன்று ஈன முடியாத- மலட்டுப் பசுவிற்கு ஒப்பாகும்.

'வழக்குப் பிறந்தால் நீதி பிறக்கலாம். பொது மக்களுக்கு நீதி கிடைக்க, எவராவது வழக்காட வேண்டும். நம் நாட்டில் அரசியல் உரிமைக்காக வழக்காடக் காந்தியடிகளார் இருக்கிறார்.

'ஒட்டாத பல சாதிகளாகக் கிடக்கும் நம் சமுதாயம், கலப்புச் சமுதாயமாக எத்தனையோ தலைமுறைகள் பிடிக்கலாம். அதுவரை, பல வகுப்புகளுக்கும் உரிமை கேட்டு - பதவிகள் கேட்டு - வழக்காட ஈ.வெ.ரா. பெரியார் இருக்கிறார். பிந்திய வழக்கும் தேவை.

'நாடு எல்லோருக்கும் பொது உடைமை. அதன் வளமும் வளர்ச்சியும் சாதாரண மக்களுக்கும் பயன்பட வேண்டும்.

'வகுப்புவாரி உரிமையை ஏற்றுக் கொள்ளாத காலத்தின் நிலை என்ன?

'சமுதாயத்தின் பெரும்பாலோர், வெறும் கூலிகள்; விலகி நின்று, குனிந்து,கும்பிட்டுப் பல்லிளிக்கும் பாமரர்கள்.

'தோட்டி வேலையும் வெட்டியான் வேலையும் ஆதிதிராவிடர் களுக்கு. 'பங்கா இழுக்கும் வேலையும் அலுவலகங்களைப் பெருக்கும் வேலையும் காவல் காக்கும் வேலையும் மறத்தமிழருக்கு; படையோச்சிய வீரப் பரம்பரைக்கு.

'ஆட்சிச் சக்கரங்களும் அலுவலகச் சாவிகளும் மேட்டுக் குடியினர்களுக்கு மட்டுமே. ஆணையிடும் இடங்கள், ஆலோசனை கூறும் அலுவல்கள், நெறிமுறை காட்டும் பொறுப்புகள், மதிப்பிற்குரிய பதவிகள், செல்வாக்குடைய இடங்கள் ஆகியவை தமிழர்களுக்கு எட்டாக் கனிகளாக இருப்பது சரியல்ல.

'மேற்கூறிய அரசு அலுவல்கள், பதவிகள், பொதுமக்களுக்குத் தொண்டு புரியவே. அவ்விடங்களைப் பிடித்துக் கொள்வோர், பொதுமக்களிடையே இருந்து வரும்போது பொதுமக்கள்பால் இயற்கையான பற்றும் பாசமும் கொள்ளக்கூடும். பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் பணிகளில், மக்கள் படும் தொல்லைகளை மக்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றவர்களே பயனுள்ள வகையில் செயல்பட முடியும்.

'இந்த அடிப்படை உணர்வு சரியாக இல்லாவிடில், எத்தனை மதிநுட்பம், ஊக்கம், நேர்மை உடையவர்களானாலும் அந்த அதிகாரிகளால் மக்களுக்குப் பெரும்பயன் விளையாது.

'எனவே, பட்டிக்காட்டானும் பாட்டாளி மக்களும் அரசின் பொத்தான்களை விசைகளை இயக்கும் நிலை உருவாகும்போதே சமுதாயம் முழுவதும் முன்னேறக்கூடும். இக்கோணத்திலிருந்து பார்த்தால், பெரியாரின் வழக்கும் தேவையானதே.'

விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு

'வகுப்புவாரி உரிமைக்கு உறுதியளிக்க மறுக்கும் தன்னாட்சி, மக்களுக்கான ஆட்சியாக இராது. பெரியாரின் எதிர்ப்பு முழக்கம் ஓர் சிவப்பு விளக்கு. அதை எச்சரிக்கையாக - தேவையான எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில், அது இந்திய விடுதலை இயக்கத்தைத் தடுக்கக் கூடாது. விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுப்பதே என் கடமை.

'தன்னாட்சி - சுதந்திரம் - என்பது குறிக்கோள். எல்லோரும் இல்லாவிட்டாலும் பெரும்பாலோர் விடுதலைப் போருக்கு ஆதரவு கொடுத்தால், எளிதில் குறிக்கோளை அடையலாம். வகுப்புவாரி உரிமையை ஏற்றுக்கொள்ள மறுப்பதால், பெரும்பாலான அடித்தள மக்கள், விடுதலை இயக்கத்திலிருந்து விலகி நிற்கிறார்கள். அதைக் கண்டு நானும் விலகி நின்று வேடிக்கை பார்ப்பது சரியல்ல.

'எனவேதான் இந்திய விடுதலைக்கு எதிராக நினைப்பதோ பேசுவதோ இல்லை.' இப்படிப்பட்ட முடிவுக்கு வந்தேன்.

விடுதலை வீரர் அம்பிகைபாகன்

இம்முடிவின் உறுதியை மதிப்பிடும் நிலை சில நாள்களில் உருவாயிற்று. இந்திய தேசிய காங்கிரசு, அப்போது மேற்கொண்ட போராட்டத்தை ஆதரிக்கும் துண்டு வெளியீடுகள் மறைவாகப் பரப்பப்பட்டன.

அவ்வெளியீட்டின் பெரிய கட்டு ஒன்று, மறைவாக விக்டோரியா மாணவர் விடுதிக்குள் நுழைந்தது.

கதர் அணியும் இந்திய மாணவர்களைக் காவல் துறையினர் கண்காணித்து வந்தனர். அவர்களிடம் அகப்படாமல் வெளியீட்டுக் கட்டை ஒளித்து வைப்பது எப்படி என்று சிந்தித்தார்கள்.

இலங்கை மாணவர் ஒருவர் அறையில் ஒளித்து வைப்பது கெட்டிக்காரத்தனமாகத் தோன்றிற்று.

அவர் பெயர் என்ன?

திரு அம்பிகைபாகன் என்பது பெயர். அவர் யாழ்ப்பாணத் தமிழர். என்னுடன் ஒரே வகுப்பில் படித்தவர். வெளி நாட்டவராயினும் இந்திய விடுதலையின்பால் நாட்டமுடையவர். காந்தியடிகளின் கட்டளையை மேற்கொண்டு, கதரே அணிந்து வந்தார்.

அவர் அறையில் வெளியீட்டுக் கட்டு பதுங்கிற்று. சில நாள்களுக்குப் பிறகு அவரும் காவல் துறையினர் கண்காணிப்பில் இருப்பதாகத் தோன்றிற்று.

வெளியீட்டை வேறிடத்தில் ஒளிக்க வேண்டிய நிலை வந்தது. நண்பர்கள் என்னை அணுகினார்கள். ஏன்?

நான் கல்லூரிகளில் சேர்ந்த பிறகு வாங்கிய வேட்டி, துண்டுகள், கதர் ஆக இருந்தன. இருப்பினும் முன்னரே வாங்கியுள்ள வெளிநாட்டு ஆலை உடைகளையும் அணிவதுண்டு.

எனவே, என்மேல் காவல்துறையின் நாட்டம் விழ நாளாகும். அதற்குள் வெளியீடுகளை வழங்கிவிடலாம் என்று அன்பர்கள் கருதினார்கள்.

என் இசைவோடு போராட்ட வெளியீடுகள், என் அறைக்குள் குடி புகுந்தன. அங்கிருந்து சிற்சில படிகளாக வெளியேறின. சில நாள்களில் வெளியீடுகள், எல்லாம் தீர்ந்து விட்டன.

காலத்தினாற் செய்த சிறு உதவி, எனக்கு நிறைவைத் தந்தது. இப்போது நினைவு கூர்ந்து பார்க்கையில், அச்சில நாள்களில் நான் காவல்துறை யிடம் சிக்கிக் கொண்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்னும் எண்ணம் பீறிட்டு வருகிறது. என் வாழ்க்கை எத்திசையில் திரும்பியிருக்குமோ?

அளகேசன் கல்லூரிப் படிப்பைத் துறந்தார்

காந்தியடிகளின் தலைமையில் தண்டிவரை நடந்து சென்று, உப்புக் காய்ச்சும் போரில் பங்குபெறத் துடித்துக்கொண்டு சென்ற திரு. அளகேசன் சில நாள்களில் சென்னைக்குத் திரும்பி வந்தார். ஏன்?

சபர்மதி ஆசிரமத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே, காந்தியடிகள் தலைமை தாங்கிய போராட்ட அணியில் சேர்ந்து தண்டிக்கு செல்லலாம் என்பது விதி. அவ்விதிக்கு விலக்கு அளிக்க மறுத்து விட்டார்கள்.

அதனால், அளகேசன் அந்த அணியில் இடம் பெறவில்லை. இருப்பினும் மனந்தளரவில்லை; மனம் மாறவில்லை; வெறுப்புக் கொள்ளவில்லை.

சென்னைக்குத் திரும்பி வந்த அளகேசன், கல்லூரிக்குத் திரும்பி வரவில்லை; தேர்வு எழுதவில்லை. நாட்டுக்குத் தொண்டாற்றவே சென்று விட்டார்.

வேதாரண்யத்தில் விடுதலைப் போர்

இந்திய விடுதலைப் போராட்டத்தில், தென்னிந்திய மக்களும் தங்களுக்குரிய பங்கை ஏற்கத் தயங்கவில்லை.

'காந்தியடிகள் தலைமையில், 1919 இல் ஆரம்பமான புதுப் போராட்டத்தின் முன்னணியில் தென்னிந்திய மாகாணங்களும்

முன்வரத் தயங்கவில்லை.....ஒத்துழையாமைப் போராட்டத்துக்கு ஆக்கமளித்தது தென்னாட்டவர் தந்த ஆதரவே எனலாம். நம்மவர் ஆதரவு இல்லாவிட்டால் போராட்டத்தை நடத்த`காங்கிரசே முன் வந்திருக்குமா என்பது சந்தேகமே' என்று மூதறிஞர் இராஜாஜி 1935 இல் 'இந்து'வில் எழுதினார். 1930 இல் நடந்த உப்புச் சத்தியாகிரகத்திற்கும் இது பொருந்தும்.

காந்தியடிகளின் தலைமையில் வடக்கே தண்டியில் உப்புக் காய்ச்சும் புதுமுறைப் போராட்டம் நடந்தது போன்றே, தமிழ்நாட்டில், திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் சட்டத்தை மீறி உப்பு எடுக்கும் போராட்டம் நடந்தது.

போராட்டக் களம் எங்கே? வேதாரண்யத்தில் சைவத்துதி இலக்கியங்களில் 'திருமறைக்காடு' என்று அழைக்கப்படும் அதே ஊரில் விடுதலைப் போர்க்களம் அமைந்தது.

இந்தச் சத்தியாக்கிரகம், நம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பான அதிகாரமாக அமைந்தது.

'திருச்சியில் இருந்து நடந்துவரும் நூற்றுவர் அணிக்குப் பொதுமக்கள், உணவு, உறையுள் முதலிய எவ்வித உதவியும் செய்யக்கூடாது' என்று பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரிகள் கெடுபிடிகள் செய்தார்கள். பொதுமக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

நீண்ட கடற்கரையையுடைய தமிழ்நாட்டில், பல உப்பளங்களையுடைய தமிழ்நாட்டில், திருமறைக்காடு என்னும் சிற்றூரைத் தேர்ந்தெடுப்பானேன்? காரணங்கள் பலவாக இருக்கலாம். அவற்றில் மிகமிக முக்கியமான ஒன்றைக் குறிப்பது என் கடமை.

முதலில், காந்தியப் போராட்ட முறை பற்றிச் சில சொற்கள். 'கத்தியின்றி ரத்தமின்றி' நடக்கும் போர்முறை, உலகிற்குப் புதிது. அன்றுவரை பழக்கப்பட்ட முறைகளுக்கு நேர்மாறானது.

நம் அனைவருடைய குருதியிலும் வாழையடி வாழையாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் போக்கு என்ன?

'உதைக்கு உதை; குத்துக்குக் குத்து; வெட்டுக்கு வெட்டு; பழிக்குப் பழி' இதுவே நம்மில் இரண்டறக் கலந்துவரும். இயல்பு, இவ்வியல்புக்கு முரணானது, காந்தியப் போர் முறை.

தன்னை வருத்திக் கொள்ளல், பிறர்க்கு இன்னாசெய்யாமை, பகைவரையும் திருப்பித்தாக்காத அருளுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் உருவானது, காந்தியப் போராட்டமுறை.

வழிவழி வரும் பழிவாங்கும் போக்கைத் தடுத்தாண்டு செயல்பட, மலையளவு உறுதி தேவை. அது காளான் அல்ல; பாடுபட்டுப் பயிரிடப்படுவது.

காந்தியப் போராட்ட முறைக்கேற்ற புற, அகநிலைகள், வேதாரண்யம் என்று அழைக்கப்படும் திருமறைக்காட்டைச் சுற்றிப் போதிய அளவு பயிராக்கப்பட்டிருந்தன. பயிரிட உதவிய பல நாட்டுப் பற்றாளர்களின் முன்னே நிற்பவர் எவர்? திரு. வேதரத்தினம் பிள்ளை.

சர்தார் வேதரத்தினம்

இந்திய விடுதலை இயக்கத்தின் குறுமுனியாக விளங்கிய திரு. வேதரத்தினம், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' பட்டியலில் இடம் பெற்றவர்.

இவர் விடுதலை உணர்வின், வீரத்தின் திருஉருவாக விளங்கினார்; தியாகத் திரட்சியாக வாழ்ந்த இந்நல்லார் இளமையிலேயே இந்திய உரிமைப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டார்.

காந்தியடிகளின் ஒத்துழையாமை, கதர் அணிதல் முதலிய திட்டங்களை உளமார ஏற்றுக் கொண்டார்.

திரு. வேதரத்தினம் அவர்களுடைய தந்தையார், திருமறைக்காட்டில் பெரிய துணி வணிகராக இருந்தார்.

அன்னியத் துணி விலக்கல் திட்டத்தை காந்தி அடிகள் நாட்டு மக்கள் முன் வைத்தபோது, அவர், அன்னியத் துணிக் கடையை மூடிவிட்டார்.

அதனால் 'முதல்' இழப்பும் தொழில் இழப்பும் ஒன்று சேர்ந்தன. கதர் வணிகம் இழப்புகளை ஈடுசெய்யவில்லை.

அக்கால விடுதலை வீரர்கள் பலருடைய குடும்பங்களைப் போன்று திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்களின் குடும்பமும் நாட்டுத் தொண்டிற்காக இன்னல் பல ஏற்க நேர்ந்தது.

முணு முணுப்பின்றி, குடும்பம் முழுவதுமே கதர் அணிந்தது; எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வழிகாட்டிற்று.

திரு. வேதரத்தினம் தன் சிந்தனை, உழைப்பு, நேரம், முயற்சி ஆகிய அனைத்தையும் பாரதப் பெருநாட்டின் விடுதலை இயக்கத்திற்கே காணிக்கையாக்கி விட்டார்.

சுழன்று சுழன்று, பொதுமக்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தார். காந்திய வழியைப் பின்பற்றும் உறுதிபெற்ற பலரையும் உருவாக்கினார்.

திரு. பிள்ளை அவர்களின் உண்மையான நாட்டுப்பற்றும் தன்னலங்கலவாத பொதுத்தொண்டும் கூட்டமைப்புத் திறனும் வேதாரண்யப் பகுதியை விடுதலை இயக்கத்திற்குப் பொருத்தமான களமாக்கியிருந்தது.

வரலாற்றுச் சிறப்புடைய வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகத்திற்காக, திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் ஆற்றிய தொண்டு பெரிது; எடுத்துக்காட்டானது. எவ்வளவு சிறப்பானது?

அனைத்திந்திய காங்கிரசு இயக்கம் இவருக்கே 'சர்தார்' என்னும் பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தது.

இந்தியாவில் அச்சிறப்பினைப் பெற்ற பெரியவர்கள் எவர்?

ஒருவர், வட இந்தியாவில், பர்டோலியியில் வரிகொடா இயக்கத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய எஃகு மனிதர் வல்லபாய் படேல் ஆவர்.

அடுத்து நம் தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு. வேதரத்தினம் பிள்ளை அவர்களுக்கே 'சர்தார்' என்னும் சிறப்பினை அளித்தார்கள். 1931ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் மாநாட்டில் பெருமைக்குரிய இப்பட்டத்தை வழங்கினார்கள்.

நாட்டுப்பற்றிலும் தொண்டாற்றும் திறனிலும் தலைசிறந்த வடநாட்டுத் தலைவருக்கு ஒப்பானவர்கள் தமிழர்களாகிய நம்மிடையே ஒவ்வோர் தலைமுறையிலும் தோன்றி உள்ளார்கள். இதை எண்ணித் தலைநிமிர்ந்து நிற்பதோடு, நாட்டின், உலகின் முற்போக்கு இயக்கங்களோடு, தமிழ் இளைஞர்கள் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். புதிய 'சர்தார்'களாக உருவாக வேண்டும்.

விடுதலை பெற்ற இந்தியாவிலும் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களை அறியும் வாய்ப்பைப் பெற்றேன். அவர் ஆக்கபூர்வமான பொதுத்தொண்டாற்றினார். சட்டமன்ற உறுப்பினராக இருந்து நன்னெறி காட்டியதோடு, கல்வி வளர்ச்சிக்குத் துணை நின்றார்; அதற்கு உரமாகிய, பகல் உணவுத் திட்டத்தைப் பரப்புவதில் பங்கேற்றார்.

'ஊர் வளர்ச்சி ஊரார் பொறுப்பில்' என்னும் கொள்கையின் அடிப்படையில் எழுந்த பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தையும் சீருடை இயக்கத்தையும் வளர்த்தார். அதோடு,

தாய் தந்தையரை இழந்த பெண்களுக்காக அருள் இல்லம் ஒன்றை அமைத்தார். உணவும் உடையும் உறையுளும் அளித்து அனாதைப் பெண்களைக் காப்பாற்றுவதோடு, அவர்களுக்குக் கல்வியும் கொடுத்து, நல்ல குடிமக்களாக உருவாக்கினார்.

அவரால் தோற்றுவிக்கப்பட்ட 'கஸ்தூரிபா கன்யா குருகுலம்' ஏறத்தாழ அறுநூறு பெண்களுக்கு இல்லமாக, கல்வி நிலையமாக, தொழில் பயிற்றுவிக்கும் சாலையாக இன்றும் சிறப்பாக இயங்கிவருகிறது.

வேலைப்பழக்கமும் தொழிற் பயிற்சியும் கல்வியின் பிரிக்க முடியாத கூறுகள். இதை உணர்ந்து, அச்சுப்பயிற்சியும் பிற கைவேலைகளும் கற்றுக் கொடுக்கும் அந்தக் கஸ்தூரிபா கன்யா குருகுலம் நம் ஆதரவுக்கு உரியதாகும்.

வைராக்கியத்தோடு எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு, அதைத் திறம்பட நடத்தும் அவருடைய மகன் அப்பாகுட்டியை எத்தனை பாராட்டினாலும் தகும்.

தாயுமானவர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கு வைராக்கியம் முதலாக இருப்பது வியப்பல்ல.

நாம் முப்பதுக்குத் திரும்புவோம்.

தீரர் ஆயண்ணன்

வேதாரண்யத்தில் நடந்த போராட்டத்திலாவது கலந்து கொள்ளலாம் என்றுதிரு. அளகேசன் திரும்பி வந்தார். அதுவும் முடியாமற் போய்விட்டது.

ஏன்? சென்னைக்குத் திரும்பியதும் அளகேசனுடைய உடல்நலம் கெட்டுவிட்டது. பலநாள் வீட்டோடு தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருப்பினும் அளகேசனுடைய ஆர்வம் குறையவில்லை. உடல்நலம் பெற்றதும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாய்ப் பங்கு கொண்டார்.

அப்போது, பல நகரங்களில், பொதுக்கூட்டம் கூடக் கூடாதென்று 144ஆவது பிரிவின் கீழ் தடை செய்திருந்தார்கள். திரு. அளகேசனும் திரு. ஆயண்ணன் என்னும் மற்றொரு நண்பரும் திருச்சிக்குச் சென்றார்கள்; தடையுத்தரவை மீறினார்கள்; கைது செய்யப்பட்டார்கள்; சிறைத்தண்டனை பெற்றார்கள்.

திரு. ஆயண்ணன் என்னோடும் அளகேசனோடும் கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்து வந்தார்.

அவர் நாட்டுப்பற்றை மூச்சாகக் கொண்ட இளைஞர்களில் ஒருவர். எப்போதும் கதர் அணிபவர்.

அன்னிய ஆட்சிக்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், 1930ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் நடைபெற்ற இண்டர்மீடியட் தேர்வுகளை எழுதாமல் ஊருக்குத் திரும்பிவிட்டார்.

சில காலம் காத்திருந்து, அளகேசனோடு சேர்ந்து திருச்சியில் போராட்டத்தில் இறங்கினார்.

அவருடைய நாட்டுத் தொண்டை கைம்மாறு கருதா மாரிக்குத்தான் ஒப்பிடத் தோன்றுகிறது.

தியாகி ஆயண்ணன், தியாகத் தழும்பைக் காட்டி எந்தச் சலுகையும் பதவியும் பெற முயலவில்லை.

நாட்டுக்கு ஆற்ற வேண்டிய அரும் பெருந்தொண்டை ஆற்றிவிட்டுச் சொந்த வேளாண்மைக்குத் திரும்பி விட்டார்.

இப்போது ஈரோட்டை அடுத்த மொடக்குறிச்சியில் திரு. ஆயண்ணன் திருப்தியுடன் வாழ்கிறார்.

39. குத்தூசி குருசாமி அறிமுகம்

நான் பெற்ற நட்புச் செல்வம்

முன்னரே குறிப்பிட்டபடி எனக்கு நட்புச் செல்வம் நிறைய உண்டு.

மூத்த மாணவர்களைக் கண்டு வியந்து விலகிப் போவதில்லை. இளையவர்கள் என்று இகழ்ந்து நான் ஒதுக்குவதும் இல்லை. இப்போது விதியிலிருந்து ஒருமுறை விலகிவிட்டேன்.

நான் இண்டர்மீடியட் வகுப்பில் படிக்கையில் என்னுடன் ஆர். சோமசுந்தரம் என்பவர் படித்து வந்தார். அவர், சர். பி.டி. இராசன் அவர்களுடைய அக்காள் மகன்.

ஒரு சமயம் விடுதியில் அவர் அறை எனக்கு அடுத்து இருந்தது.

அவரைத் தேடி, ஒரு விடுமுறை நாளன்று, மாலைப்பொழுதில் அரும்பு மீசையும் இல்லாத, பால்வடியும் முகங்கொண்ட ஒரு சிறுவர் வந்தார்.

அவர் எலுமிச்சம் பழத்தை ஒத்த நிறத்தில் இருந்தார்.

சோமசுந்தரத்தின் அறை பூட்டிக் கிடந்தது. வந்த சிறுவர் என்னிடம் கேட்க, என் அறைக்குள் நுழைந்தார்.

நான் படுத்தபடியே, வார இதழ் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். வந்தவரை வரவேற்கவில்லை. சட்டை செய்யாமல், படுத்தபடியே 'சோமு எங்குச் சென்றிருக்கிறார்; எப்போது வருவார்' என்று தெரியாதென்று பதில் கூறினேன். யார் என்று கேட்கவில்லை.

நான் சொன்ன தோரணையில், காத்திருக்கலாமா என்று கேட்கவும் அவருக்குத் துணிவில்லை. உடனே வெளியேறி விட்டார். அவர் உள்ளம் எவ்வளவு புண்பட்டதோ?

திரு. சோமசுந்தரம் அறைக்குத் திரும்பியதும் அவரைச் சிறுவர் தேடி வந்ததைப் பற்றிச் சொன்னேன். வந்தவரின் தோற்றத்தை விவரித்தேன். 'பார்ப்பனப் பையன் போல் தோன்றிற்று' என்று சொன்னேன்.

சோமு வீழ்ந்து வீழ்ந்து சிரித்தார். ''பார்ப்பனப் பிள்ளையானால், தான் யார் என்பதைச் சொல்லிவிட்டே போயிருப்பார்; இவர் யாரும் அல்ல; உனக்கு ஏற்கெனவே நண்பரான திரு டி.ஜி. பாலசுப்பிரமணியத்தின் தம்பி. உயர்நிலைப்பள்ளி மாணவர். டி.ஜி. சீனிவாசன் என்று பெயர்'' என்றார்.

திரு டி.ஜி. பாலசுப்ரமணியம், திரு மீ. பக்தவத்சலத்திற்கும் திரு பி.டி. இராசனுக்கும் மைத்துனர். பின்னர் ஓ.வி. அளகேசனுக்கும் மைத்துனர் ஆனார். என்னுள் சொல்ல முடியாத வெட்கமும் வேதனையும் பொங்கிப் போட்டியிட்டன.

சில நாள்களுக்குப் பிறகு, சீனிவாசன் மீண்டும் சோமுவைத் தேடி வந்தார். சோமு அப்போது அறையில் இருந்தார். சோமு வந்தவரை அழைத்துக்கொண்டு என் அறைக்கு வந்தார்; எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

முன்னே, முகந்திரிந்து நோக்கியதற்கு ஈடுசெய்தேன். பரிவோடு வரவேற்றேன்; பாசத்தோடு பழகினேன்.

அதுமுதல் எவரிடமும் முனைப்போடு நடந்து கொள்வதில்லை என்று உறுதி பூண்டேன்; அதில் இருந்து இதுவரை தளர்ந்ததாக நினைவு இல்லை.

திரு. சீனிவாசன், திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள் வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்.

திரு. ப.சு. கைலாசம், சீனிவாசனின் நண்பர்; வகுப்பு மாணவர். மயிலாப்பூரில், இராமகிருஷ்ண மடத்திற்கு அருகில் ஒரு பங்களாவில் குடியிருந்தார்.

சீனிவாசனால் அவரும் எனக்கு அறிமுகமானார்; நல்ல நண்பரானார்; மிக நெருங்கியவரானார்.

திரு. கைலாசம் உயர்நீதிமன்ற நீதிபதி ஆன பிறகே நான் விலகி இருக்கத் தொடங்கினேன்.

அதுவரை என்னைக் கிண்டல் செய்யும் நண்பர்கள்.

'நெ.து.சு.வை எங்கே தேட? கைலாசத்தில், வைகுண்டத்தில், பூலோகத்தில் துரௌபதி கோயிலில் தேடினால் கிடைக்கலாம்' என்பார்கள்.

கைலாசம் என்பது சீனிவாசனின் வீட்டை, துரௌபதி கோயில் என்பது பி.ஏ. சிறப்பு வகுப்பில் என்னுடன் சேர்ந்து மிக நெருக்கமாகிய திரு. தொரைபதியின் வீட்டைக் குறிக்கும்.

மாணவர்கள் மட்டுமல்ல என் நண்பர்கள் வெளியாரிடமும் எனக்கு நட்பு உண்டு.

திரு. பெரியசாமித் தூரன், திரு. கு.சு. பெரியசாமி ஆகியவர்களுக்கு மிகவும் வேண்டியவர் ச.து. சுப்பிரமணிய யோகி.

அவர் எங்கள் 'பித்தனு'க்குப் பல சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அவர், சாதியொழிப்பிற்கு உடன்பாடானவர். அவர் அடிக்கடி எங்கள் விடுதிக்கு வருவார்; மேற்கூறிய நண்பர்களோடு தங்குவார்.

அவரைத் தேடி அவருடைய நண்பர் ஈரோடு கீர்த்திவாசும் சிலபோது அங்கு வருவது உண்டு.

அவர் தொடக்கத்தில் காங்கிரசில் தொண்டாற்றியவர். பெரியாரின் 'கோயில் நுழைவு'க் கொள்கைக்கு மிக உடன்பாடானவர்.

ஒரு முறை அவரைத் தேடிச் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களில் முன்னோடியான மாயூரம் எஸ்.வி. லிங்கம் வந்தார்.

அவர் கலகலப்பானவர். பெரியசாமிகளின் அறைகளைத் தேடிக்கொண்டிருந்த அவர், விடுதியின் தாழ்வாரத்தில் என்னைக் கண்டார்.

வழி கேட்கும்போது, தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அதோடு, தம்முடன் வந்த இளைஞர் ஒருவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

இளைஞர் குத்தூசி குருசாமி

அவர் பெயரைக் கேட்டதும் எனக்கு மட்டிலா மகிழ்ச்சி.

ஏன்? அவரோடு அதுவரை நேரில் பழகவில்லை. எனினும் உணர்வால் நட்பு கொண்டிருந்தேன். அவருடைய எழுத்துகளைப் படித்துள்ளேன். அவை எனக்குப் பிடிக்கும். அவர் யார்?

அவர் திரு. எஸ். குருசாமி. அவர்கள் கண்கள் ஒளிபொழிந்தன. முகமோ கவர்ச்சியாக இருந்தது. பேச்சில் இனிமையும் உண்மையும் கலந்திருந்தன. எவரும் கண்டதும் நட்புக் கொள்வார்கள். அத்தகைய பண்பு அவரிடம் இருந்தது.

எனக்கு அறிமுகமாகும்போது திரு. எஸ். குருசாமி ஆயிரக்கணக்கான மற்ற இளைஞர்களைப் போன்றவர் அல்லர்; விளம்பரமான இளைஞர்; பெரியார் ஈ.வெ.ரா.வுக்கு மிகவும் வேண்டியவர்; அவருடைய குடியரசு வார இதழில், துணை ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

இளைஞர் குருசாமி, தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமைபெற்று இருந்தார். அதோடு இரு மொழிகளிலும் நன்றாகப் பேசவும் எழுதவும் வன்மை பெற்றிருந்தார். எப்போது? 1929 திலேயே; இளமைப் பருவத்திலேயே.

திரு. குருசாமி தஞ்சைத் தரணியில் பிறந்தவர்; சேக்கிழார் மரபைச் சேர்ந்தவர். அடக்கமான சமயப்பணி ஆற்றி வந்த தந்தை திரு சாமிநாதர், இவரை நல்ல சைவப்பற்றோடு வளர்த்து வந்தார். ஒழுங்கிலும், ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் உருவாக்கிவந்தார்.

திரு. குருசாமி அப்படிப்பட்ட தந்தையைச் சிறு வயதிலேயே இழந்து விட்டார். சில ஆண்டுகளில் தாயையும் பறிகொடுத்தார்.

சிறுவர் குருசாமிக்குத் தங்கைகள் இருவர். மூவரையும் அவர்களுடைய அத்தை எடுத்து அன்புடன் வளர்த்தார்கள்; கல்வி கொடுத்தார்கள்.

திருவாரூர் கழக உயர்நிலைப்பள்ளியில் படித்துத் தேர்ச்சி பெற்ற திரு. குருசாமி திருச்சி தேசியக் கல்லூரியில் சேர்ந்தார். திரு. சாரனாதனிடமும் திரு. இராம அய்யரிடமும் படித்தார்.

தம்முடைய ஆங்கிலப் புலமைக்கும் ஆற்றலுக்கும் இவ்விரு ஆங்கிலப் பேராசிரியர்களே வேர்கள் என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார் திரு. குருசாமி.

பேராசிரியர் இராம அய்யர், ஐம்பதுகளிலும் சென்னைக்கு வந்தால் தம்முடைய பழைய மாணவர் குருசாமியை வந்து பார்ப்பது உண்டு.

இருவரிடையே இருந்த பாசமும் பரிவும் மற்றவர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின.

தேர்வு முறைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது என்ன? அறிஞர்களுக்குத் தோல்விப் பட்டயம் வழங்கும். இரண்டுங் கெட்டான்கள் பலருக்குத் தன் வெற்றி மாலையைச் சூட்டும்.

இலக்கியத்திற்காக உலகப் பரிசு பெற்ற சர்ச்சில், பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்பில் தோல்வி முத்திரை குத்தப்பட்டவர்.

கணித மேதை இராமானுசத்தைப் 'பெயில் ஆக்கிய பெருமை, கும்பகோணம் அரசினர் கல்லூரிக்கு உண்டு.

திரு. குருசாமியும் பி.ஏ. தேர்வில் ஒரு பகுதியில் முதன்முறை தவறிவிட்டார்.

சைவப் பற்றுடையவராக, நீறு பூசிய நெற்றியராகத் தேசியக் கல்லூரியில் அடியெடுத்து வைத்த குருசாமியார், பழுத்த காங்கிரசு வாதியாக விளங்கினார். கதர் மயமாகக் காட்சியளித்தார். மணிபர்ஸ்கூடக் கதரால் ஆனது.

இப்படியிருக்கையில் பூவாளூர் திரு. அ. பொன்னம்பலனார் என்பவர் திரு. குருசாமிக்கு நண்பர் ஆனார்.

திரு. அ. பொன்னம்பலனார் சைவ உலகில் சுடர்விட்டுப் பின்னர் பெரியாரிடம் சேர்ந்தவர். அவர் வழியாகச் சுயமரியாதை இயக்கத்தின் வார இதழாகிய குடியரசைப் படிக்கத் தொடங்கினார் திரு. குத்தூசி குருசாமி; தொடர்ந்து படித்தார். சுயமரியாதைக்காரராகி விட்டார்.

1928இல் பி.ஏ. தேர்வு எழுதி முடித்த திரு. குருசாமியை திரு. அ. பொன்னம்பலனார், ஈரோட்டிற்கு அழைத்துச் சென்றார்; பெரியார் ஈ.வெ.ராவிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. குருசாமி, சுயமரியாதை இயக்கத்திற்குக் கிடைத்த நல்ல 'புதையல்' என்பதைப் பெரியார் சில மணித்துளிகளில் உணர்ந்து விட்டார். தம்முடைய 'குடிஅரசு' இதழில் துணை ஆசிரியராக அமர்த்திக் கொண்டார்.

திரு. குருசாமிக்கு, புகைபிடித்தல், பொடிபோடுதல் முதலிய தீய பழக்கம் ஏதும் கிடையாது.

எப்படிப்பட்டவர்களையெல்லாமோ பொறுத்துக்கொண்டு இயக்கத்தை நடத்திய பெரியாருக்கு எந்தத் தீய பழக்கமும் இல்லாத திரு. குருசாமி, செல்லப்பிள்ளையாகிவிட்டார்.

தன்மான இயக்கத் தந்தை பெரியாரின் முதல் தளபதியாகிவிட்ட திரு. குருசாமிக்கு, பெரியார் முன்னின்று திருமண ஏற்பாட்டைச் செய்து முடித்து வைத்தார். திரு. குருசாமி கலப்புத் திருமணந்தான் ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லியிருந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் முதல் கலப்புத் திருமணம்

திருவாரூர் சுப்பிரமணியம் என்பவர், சென்னையில் பிடில் ஆசிரியராக வாழ்ந்து வந்தார். பெரிய வித்வான்களுக்குப் பிடில் வாசித்து வந்த அவர், மரபுப்படி வைதீகர். வாழ்க்கை முறையிலே முற்போக்காளர்.

அவர், டாக்டர் யூ. ராமராவ், அவருடைய மகன் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் - இவர் பிற்காலத்தில் சென்னை மேயராகவும், அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் விளங்கியவர் - பம்மல் சம்பந்த முதலியார் ஆகிய பெரியோர்களுக்குக் குடும்ப நண்பர்.

படித்தோர் உறவு, திரு. சுப்பிரமணியத்திற்குப் படிப்பில் ஆர்வம் ஊட்டியது. தாய்மொழி தமிழோடு தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய மொழிகளை நன்கு கற்றிருந்தார்.

அவருடைய உருது உச்சரிப்பை உருதைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் பாராட்டியதை நான் புலமுறை கேட்டு வியந்துள்ளேன்.

திரு. சுப்பிரமணியத்திற்கு முதலில் மூன்று பெண்களும் கடைசியாக ஒரு மகனும் பிறந்தார்.

அவர், அறுபது ஆண்டுகளுக்கு முன்பே தன்மான இயக்கம் ஊசிபோட்டு ஊக்குவிப்பதற்கு முன்பே, தன்னுடைய பெண்களையும் பட்டப் படிப்பில் படிக்க வைத்தார்.

மூத்த மகள் செல்வி குஞ்சிதம் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் கடைசி ஆண்டில் படித்துக் கொண்டிருந்தார்.

அப்போது பெரியாரும் சில தோழர்களும், பெண் பார்க்க வந்தார்கள். திரு. சுப்பிரமணியம் வீட்டில் இருந்த வைதீகச் சூழலைக் கண்டவர்கள், 'இது கூடிவராது' என்றும் நினைத்தார்களாம்.

பெரியார் மலைக்கவில்லை; திரு. குருசாமியின் மனம் மாற்றும் ஆற்றலைப் பற்றியும் அவநம்பிக்கை கொள்ளவில்லை. எனவே குஞ்சிதம்-குருசாமி திருமணத்தை ஏற்பாடு செய்தார்.

புரோகிதமில்லாத சீர்திருத்தத்திற்குப் பெண் வீட்டாரை இணங்க வைத்தார்.

திருமணம், பெரியார் பொறுப்பில், ஈரோட்டில் வெகு சிறப்பாக நடந்தது.

அத்திருமணத்தில் எவ்விதச் சடங்கும் இல்லை. பெரியாருக்குத் தாட்சணியப்பட்டு, திரு. குருசாமி, செல்வி குஞ்சிதத்திற்குத் தாலி அணிவித்தார்.

திரு. குருசாமி, திருமதி குஞ்சிதத்தை முழுக்க முழுக்க தன்மான உணர்வு உடையவராக்கிவிட்டார்

'ஆண்கள் பெண்களுக்குத் தாலி கட்டுவது பெண்களை அடிமைப்படுத்துவதன் அடையாளம்' என்பது தன்மான இயக்கத்தின் முடிவு.

அக்கருத்தினை மேடை தோறும் திரு. குருசாமி முழங்குவார். அதைக் கேட்ட திருமதி குஞ்சிதம் குருசாமி சில ஆண்டுகளுக்குள் தாலியைக் கழற்றி வைத்துவிட்டார். அது மட்டுமா?

பெண்கள், நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்வது, இந்து சமயச் சார்புடைய பழக்கம். சமயச் சார்பற்ற பகுத்தறிவாளர்கள் நெற்றியில் அத்தகைய குறியிட்டுக் கொள்ளக்கூடாது. இதுவும் தன்மான இயக்கச் சாரல்.

திருமதி குஞ்சிதம் அம்மையார் சில ஆண்டுகள் நெற்றியில் பொட்டு இட்டுக் கொள்ளும் பழக்கத்தையும் விட்டுவிட்டார்.

குஞ்சிதம் குருசாமி தம்பதிகள் காலமெல்லாம் தூய்மையான நாத்திகர்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

எழுத்தால் என்னைக் கவர்ந்திருந்த திரு. குருசாமி கலப்புத் திருமணம் செய்து கொண்டதனாலும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்.

தொண்டை மண்டல கொண்டைகட்டி வேளாளர்களில், ஊரறிய முதன் முதலாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர் சா. குருசாமியே ஆவார்.

குஞ்சிதம் குருசாமி திருமணம் 1929 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் நடைபெற்றது.

இம்முன்னோடி நிகழ்ச்சி, புதிய திருப்பம். பல கலப்புத் திருமணங்களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

நெருப்பு ஆற்றில் வாழ்நாள் முழுவதும் எதிர்நீச்சல்

சமுதாயப் புரட்சி, மற்ற புரட்சிகளைக் காட்டிலும் ஆபத்தானது.

அரசியல் புரட்சியாளனுக்குத் தூக்குமேடை காத்திருக்கும். நொடிப் பொழுதில் வதை முடிந்துவிடும்.

பொருளியல் புரட்சியாளனுக்கும் அத்தகைய கைம்மாறே காத்திருக்கும்.

சமுதாயப் புரட்சியாளர் பாடோ வாழ்நாள் முழுவதும் தொடர் வேதனை; தொல்லை; சித்திரவதை ஆகியவற்றை அணைத்துக் கொள்வதாகும்.

தண்டிக்கப்பட்டுப் புறப்பாட்டுக்கு உரியவர்களாக மாட்டார். அகப்பாட்டுக்குக் கருப்பொருளாக்க அனைவரும் அஞ்சும் சமுதாயம், சுட்டெரிப்பதுபோல் பார்க்கும்; உற்றார் உறவினர் உறுமுவர். நண்பர்கள் பின்னால் நகைப்பர். சட்டமோ கழுதை.

'புரோகிதம் இல்லாத கலப்புத் திருமணங்கள் சட்டப்படி செல்லாது' என்பது அக்கால நெறி.

அத்தனையும் அறிந்தும், மோகத்திற்குச் சமாதானம் காணாமலும், தெரிந்தே, வேண்டுமென்றே ஏற்பாடு செய்யப்படும் கலப்பு மணங்களைத் துணிந்து ஏற்றுக்கொண்ட சுயமரியாதை இயக்க முன்னோடிகள் நெருப்பாற்றில் குதித்தபோதிலும் ஒருங்கு இணைந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்குவதில், அரிய பணி புரிந்துள்ளனர்.

அவர்களில் முதல்வரை - திரு. குருசாமியை - அறிமுகப்படுத்திய போது, நான் பரவசமானேன். அந்த அறிமுகம் எப்படித் தழைத்தது என்பதை உரிய இடங்களில் குறிப்பேன்.

பொறியியல் படிப்பு வேண்டாம்

நான், இண்டர்மீடியட்டு வகுப்பை முடிக்கும் தருவாயில், அடுத்து என்ன படிப்பது என்னும் கேள்வி முளைத்தது.

என்னுடைய உறவினர்களாகிய திரு. எம்.ஏ. சம்பந்தமூர்த்தியும் அவரது தம்பி எம்.ஏ திருநாவுக்கரசும் அப்போது கிண்டி பொறியியல் கல்லூரியில் பி.இ. பட்டத்திற்குப் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தார்கள்.

அவர்கள் அழைப்பின் பேரில், நான் அடிக்கடி அங்குச் செல்வதுண்டு. பொறியியல் கல்லூரியில் சேரும்படி அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

என்னுடைய தந்தையின் விருப்பம் என்ன? நான் பொறியியல் பட்டம் பெறவேண்டுமென்பது.

அதற்கு வேண்டிய கணக்கு, பௌதிகம், வேதியியல் ஆகியவற்றை விருப்பப் பாடமாக எடுத்திருந்தேன். அவற்றில் நன்றாகத் தேர்ச்சி பெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது.

'இடம் பெறுவதும் எளிதாகும், தேர்ச்சி பெறவும் தடையிராது, படித்த பிறகு நல்ல வேலை. ஆகவே பொறியியல் படிப்பே உனக்கு நல்லது' என்று என்னுடைய தந்தையும் தாய் மாமாவும் விரும்பினார்கள்.

அக்காலக் கட்டத்தில் என் தந்தை பயிர்த்தொழிலோடு துணைத் தொழில்களும் நடத்தி வந்தார்.

நானும் என் தம்பிகள் மூவரும் வெளியூர்களில் இருந்து படிக்க வேண்டிய நிலை வந்தது. அத்தனை பேருக்கும் சம்பளம் கட்ட வேண்டும். சாப்பாட்டுச் செலவுக்கும், உடைக்கும் பணம் கண்டுபிடிக்க வேண்டும்.

பயிர்த்தொழில், அன்றும் இன்றும் சூதாட்டம். ஓராண்டு விளைந்தால் அடுத்த ஆண்டு காய்ச்சலாலோ வெள்ளத்தாலோ பாழாகிவிடும்.

'வறட்டுக் கூச்சல்களை மட்டும் அறிந்தவர்களே நாட்டை ஆட்டிப் படைப்பவர்கள். அவர்களுக்கோ வேளாண்மையில் உள்ள தொல்லைகளின், இழப்புகள் முழுதும் தெரியாது.

மேலெழுந்தவாறே நூலறிவு மட்டுமே கொண்ட அவர்கள் ஆட்டிவைக்கிறபடி ஆடுகிறது நாடு.

அதனால், மற்றவர்கள் நன்றாகப் பருத்து ஊதியுள்ள தன்னாட்சி இந்தியாவில், பயிர் இடுவோர் மட்டும் தேய்ந்து கொண்டே வருகிறார்கள்.

இந்நூற்றாண்டின் முப்பதுகளில் பயிர்ப் பொருள்களின் விலைகள் மளமளவென்று சரிந்தன.

ஆகவே குடும்பத் தொழிலால், நால்வரையும் கல்லூரிவரை படிக்க வைப்பது மிகவும் கடினம் என்பதை என் தந்தை நன்கு உணர்ந்தார்.

உள்ளூரோடு சிறு அளவில், அறுவடைக் காலத்தில் தானியங்களை வாங்கி வைத்திருந்து காய்ந்த காலத்தில் விற்பது துணைத்தொழில்.

இதிலும் பெரும் முதல் போட்டாரென்று கூற முடியாது. ஆண்டுக்கு மூன்று நான்கு ஆயிரக்கணக்கில் மட்டுமே முதலீடு செய்தார்கள்.

இத்துணைத் தொழிலும் ஆண்டுதோறும் ஆதாயம் கொடுக்கவில்லை. இருப்பினும் பயிர்த்தொழிலைக் காட்டிலும் இதில் அதிகப் பணப்புழக்கம் இருந்தது. அது எங்களுடைய உடனடிச் செலவுகளுக்குக் கை கொடுத்தது.

மற்றோர் துணைத்தொழில் எது? 'காண்டிராக்ட்' வேலை. அக்கம்பக்கத்தில் போடும் சிற்றூர் சாலைகள், ஏரி பழுதுபார்த்தல், சிறு பாலங்கள் கட்டல், ஆகியவற்றை 'காண்டிராக்ட்' எடுப்பார். அவற்றில் கிடைக்கும் சிறு ஆதாயங்களும் உதவின.

அதுவரை யாரிடமும் போய் நிற்காத என் தந்தையார், எப்படியோ இந்தத் தொழிலைச் சமாளித்தார். யாரும் குற்றம் சொல்ல முடியாதபடி உண்மையான வேலை செய்தார். யாருக்கு எந்த மரியாதை கொடுக்க

வேண்டுமோ அதைக் கொடுத்தார். எனவே எல்லாரோடும் 'ராசி'யாக இருந்தார்.

ஒரு முறை, விடுமுறையின் போது, நெய்யாடுபாக்கம் சென்றிருந்தேன். என் தந்தை என்னிடம் ஒரு பொறுப்பைக் கொடுத்தார். காஞ்சிபுரம் சென்று சிறு பாசன மேற்பார்வையாளரிடம் ஓர் ஒட்டிய கடிதத்தைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.

அப்படியே செய்தேன். மேற்பார்வையாளர், கனிவோடு வரவேற்றார். கடிதத்தை உடைத்தார்.

உள்ளே இருந்தது என்ன? செய்தியல்ல. சில நோட்டுகள்.

அவற்றை எண்ணிப் பார்த்தார், பெட்டியில் வைத்துப் பூட்டினார்.

''உங்க அப்பா எப்பவும் கறார். தம்படி குறையாது கொடுத்தனுப்பியது சரியாக இருக்கிறது என்று சொல்லு'' என்று விடைகொடுத்தனுப்பினார்.

அது என்னவென்று அப்போது எனக்கு விளங்கவில்லை. அப்போது நான் உலகியல் அறியாதவன். திகைப்போடு ஊர் திரும்பினேன். நான் கொடுத்துவிட்டு வந்த பணத்தைப் பற்றிக் கேட்டேன்.

''அதுவா? ஏரி வேலைக்குச் சேர வேண்டிய பணம், போன வாரம் வந்தது. அதில் மேற்பார்வையாளருக்குச் சேரவேண்டிய மாமூலைக் கொடுத்தனுப்பினேன். இந்த மேற்பார்வையாளர் மாமூலாகிய பத்து விழுக்காட்டுக்குமேல் கொடுத்தாலும் வாங்க மாட்டார். மற்றவர்களைப் போல், பணம் கைக்கு வந்த பிறகே, பில்லில் கையெழுத்து இடுவேனென்று சொல்லவும் மாட்டார். இவர் மிக நல்லவர்'' என்றார்.

'மாமூல்' என்னும் சொல் என்னுடைய பலநாள் தூக்கத்தைக் கலைத்தது. 'மாமூல்' வாங்கும் பொறியியல் துறையில் அடியெடுத்து வைக்கக்கூடாது என்னும் வெறி ஊறிற்று.

இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை அப்போது நான் அறியவில்லை. பொறியியல் படிப்புக்குப் போவதில்லை என்று முடிவு செய்தேன்.

40. பெரியாருடன் சந்திப்பு

பல்கலைக் கழகத் தேர்வுக்கு அஞ்சவில்லை

அன்பர் ஓ.வி. அளகேசன், படிப்பை விட்டுவிட்டு, தண்டி யாத்திரையில் கலந்து கொள்ளப் புறப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியை இரண்டொரு நாள்களில் சமாளித்து விட்டேன்.

முன்னர்க் குறிப்பிட்டதுபோல், மாணவனாக இருந்து கொண்டே படிப்பிற்கு இடையூறு இல்லாமல், அணில் அளவு தொண்டை, விடுதலை இயக்கத்திற்கு ஆற்றினேன்.

அதோடு தேர்வுக்கு ஆயத்தமாவதில் மூழ்கிவிட்டேன். முறையாகப் படித்து வந்தேன். ஆனால் விடிய விடியக் கண் விழித்துப் படிக்கவில்லை.

ஏன்? சோம்பலா? இல்லை.

விடிய விடியப் படிக்கத் தேவையேற்படவில்லை. அப்படியென்ன அதிகப்படியான அறிஞனா? இல்லை.

நான் முதல் தலைமுறையாக உயர் கல்வியில் காலெடுத்து வைத்தேன். ஆகவே மற்றவர்களைக் காட்டிலும் அதிக அக்கறையோடு படித்தால் தான் தேர்ச்சி பெற முடியுமென்பதை என் தந்தை உணர்த்தியிருந்தார்.

தந்தையின் அறிவுரை என் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதிந்து இருந்தது.

வகுப்பறையில் பாடங் கேட்கும்போது, கவனத்தைப் பாடத்தின் மேல் குவிப்பேன்; சிந்தனையைச் சிதறவிட மாட்டேன். மனம் ஒன்றிக் கேட்ட பாடங்கள் எளிதாகப் பதிந்தன.

விடுதி அறையில் மறுபடியும் சிலமுறை புரட்டிப் பார்த்தேன்; படித்தவை நினைவில் நின்றன.

எனவே, தேர்வு பற்றி என்னிடம் எவ்வித அச்சமும் தோன்றவில்லை. தேர்வு நாள்களின்போது எவ்விதப் பதற்றமும் இன்றி எழுதி முடித்தேன்.

கோடை விடுமுறை

விடுமுறை வந்தது. ஊருக்குச் சென்றேன். இழுபறியாகச் சில நாள்கள் சென்றன. இளநீரும் நுங்கும் மாம்பழமும் பலாச்சுளையும் வேண்டிய அளவு தாராளமாகக் கிடைத்தன.

என் நண்பர், திரு. கா.ந. தணிகைவேல் என்னோடு இண்டர்மீடியட் தேர்வு எழுதினார். தந்தை திரு. கா.ரா. நமச்சிவாயரோடு உதகைக்குச் சென்றார்.

ஒவ்வோர் ஆண்டும் கோடை காலத்தில், பண்டிதர் நமச்சிவாய முதலியார் உதகைமண்டலம் சென்று தங்குவார். அவரைச் சூழ்ந்து பண்டிதர்கள் குழாம் ஒன்று அங்கு இருக்கும்.

நமச்சிவாயருக்கு உதகையில் இரு பங்களாக்கள் இருந்தன. கோடை காலத்தில் இரண்டும் நிரம்பியிருக்கும். அத்தனை விருந்தினர்கள் வந்து தங்குவார்கள். செலவு முழுவதும் பண்டிதர் நமச்சிவாயருடையது என்று சொல்லத் தேவையில்லை.

திரு. தணிகைவேல், என்னை, உதகைமண்டலத்துக்கு வந்து தங்கும்படி அழைத்துக் கடிதம் ஒன்று எழுதினார். மற்றொரு நண்பராகிய திரு. தி.அ. இராமகிருஷ்ணன் அவர்களும் உதகையிலிருந்து என்னை அங்கு வந்துபோக அழைத்திருந்தார்.

இரு கடிதங்களையும் என் தந்தைக்குக் காட்டினேன். போகச் சொன்னார். பத்துப் பதினைந்து நாள்களில் திரும்பி வந்துவிடும்படி ஆணையிட்டார்.

என்று புறப்படுவது, எப்பொழுது திரும்புவது என்பதைப் பற்றி என் அப்பா, என் மாமா சந்திரசேகரோடு கலந்து பேசினார்.

''போகிறதுதான் போகிறான். ஈரோட்டு மாநாட்டையும் பார்க்கிற மாதிரி போகட்டும்'' என்று மாமா என் அப்பாவுக்கு ஆலோசனை கூறினார்.

ஈரோட்டு மாநாடு எது? 1930ஆம் ஆண்டு மே திங்கள் பத்து, பதினோராம் நாள்களில் நடந்த மாநில இரண்டாவது சுயமரியாதை மாநாடு ஆகும்.

அந்த மாநாட்டிற்குத் திரு. எம்.ஆர். ஜெயகர் என்னும் அறிஞர் தலைமை தாங்கினார். திரு. ஆர்.கே. சண்முகம் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். பெரியார் திரு. ஈ.வெ.ரா.வே உயிர்நாடி.

அம் மாநாட்டையொட்டி மாதர் மாநாடு, திருமதி. டாக்டர் முத்துலட்சுமி தலைமையில் ஏற்பாடு ஆயிற்று.

சுயமரியாதை வாலிபர் மாநாடு நாகர்கோவில் திரு. சிதம்பரம் பி.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் நடந்தது.

மதுவிலக்கு மாநாடும் நடந்தது. அதற்குத் தலைவர், சிவகங்கை வழக்கறிஞர் இராமச்சந்திரன் சேர்வை ஆவார்.

அவர் இராமநாதபுரம் மாவட்ட மதுவிலக்குப் பிரசாரக் குழுவின் தலைவராக இருந்தார்; முதிர்ந்த சுயமரியாதைக்காரர்.

ஈரோடு சுயமரியாதை மாநாட்டை ஒட்டி, மற்றோர் மாநாடும் வெகுசிறப்பாக நடந்தது. அது என்ன?

பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான்கள் மாநாடு ஆகும். அம்மாநாடு ஏன் தேவைப்பட்டது?

பார்ப்பனரல்லாத இசைக்கலைஞர்களுக்கு இருந்த இழிநிலை

அக்காலத்தில், காஞ்சிபுரம் நாயனாப்பிள்ளை, மதுரை பொன்னு சாமிப்பிள்ளை போன்ற வாய்ப்பாட்டு வல்லுநர்களுக்கும், திருவாவடு துறை இராஜரத்தினம், வீருசாமிப் பிள்ளை போன்ற நாயனக்காரர் களுக்கும் அதிக கிராக்கி.

ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்து அவர்களை அழைப்பார்கள். அவர்களுடைய பாடல்களையும் வாசிப்புகளையும் மெய்மறந்து சுவைப்பார்கள்.

ஆனால் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டார்கள். அவர்களை மட்டமானவர்களாகவே நடத்துவார்கள். அதுவும் நாயனம் வாசிப்போரை அதிகம் இழிவுபடுத்தினார்க்ள்.

அக்காலத்தில் நாயனக்காரர்கள் எவ்வளவு திறமைசாலிகளானாலும் உடம்பின்மேல் சொக்காய் போட்டுக் கொண்டு வாசிக்கக்கூடாது. வெறும் மார்பின் மேல் துண்டு போட்டுக் கொண்டும் வாசிக்கக்கூடாது. துண்டை இடுப்பிலே செருகிக் கொள்ள வேண்டும்.

வியர்வை கொட்டும்போது வேண்டுமானால் அதை எடுத்துத் துடைத்துக் கொள்ளலாம். மறுபடியும் இடுப்பில் செருகிக் கொள்ள வேண்டும்.

அந்த விபரீத அகந்தையை வித்வான்களால் எதிர்க்க முடியவில்லை. பிற கொடுமைகளைத் தாங்கிக் கொண்டதுபோல, இதையும் பொறுத்துக் கொண்டு காலத்தை ஓட்டினார்கள்.

பெரியார் ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலத்தில் ஒரு முறை, கானாடுகாத்தான் என்ற ஊருக்குச் சென்றிருந்தார். அவரோடு பட்டுக்கோட்டை திரு. கே.வி. அழகிரிசாமியும் சென்றிருந்தார். பிந்தியவருக்கு நாயனப் பித்து.

இவர்கள் இருவரும் கானாடு காத்தானில் இருந்தபோது ஒரு செல்வர் வீட்டுத் திருமணத்தில் திரு. சிவக்கொழுந்து என்னும் புகழ்பெற்ற இசைஞர் நாயனம் வாசித்தார். அதைக் கேட்க, திரு. அழகிரிசாமி சென்றார்.

வித்வான், அடிக்கடி துண்டை எடுப்பதையும் துடைத்துக் கொள்வதையும் செருகிக் கொள்வதையும் கண்டார். மனம் பதறினார்.

துண்டை மேலே போட்டுக்கொண்டு வாசிக்கலாமே என்றார். கூடாது என்றார்கள் செல்வர்கள்.

வாதம் முற்றிற்று, பிடிவாதம் வளர்ந்தது. வாசிப்புக்கு இடையூறானது.

அப்போது அவ்வூரில் இருந்த திரு. அழகிரிசாமியின் குருநாதர் பெரியார் ஈ.வெ.ரா. இடம் தூது அனுப்பினார்கள். தோழரை அடக்கச் சொன்னார்கள். பெரியார் ஈ.வெ.ரா. இதற்கு ஒப்பவில்லை.

தன்மான இயக்கம் கண்ட முதல் வெற்றி

வேறு வழியின்றி, வித்வான் சிவக்கொழுந்து, மேலே துண்டு போட்டுக்கொண்டு வாசிக்க இசைவு தந்தார்கள், பெரியவர்கள். பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் வெற்றி, தன்மான இயக்கத்தின் வெற்றியாகும்.

பார்ப்பனரல்லாத இசைக் கலைஞர்களும் மற்றவர்களைப்போல் மதிக்கப்படவேண்டும் என்பது ஈ.வெ.ராமசாமிப் பெரியார் கண்ட தன்மான இயக்கத்தின் கொள்கை விழுதுகளில் ஒன்று.

வாய் திறக்க முடியாத அக்கலைஞர்களுக்காகப் போராட வீறுகொண்ட இயக்கமொன்று இருப்பதை உலகம் அறியச் செய்ய வேண்டுமே!

அதற்காகவே ஈரோட்டில் நடந்த இரண்டாவது சுயமரியாதை மாநாட்டோடு, பார்ப்பனரல்லாத இசைவாணர்கள் மாநாட்டையும் பெரியார் ஏற்பாடு செய்தார்.

மாநாட்டிற்குச் சில வாரங்கள் முன்னதாக, தமிழ்நாட்டில் வாய்ப்பாட்டு, நாயனம், மிருதங்கம், வீணை, பிடில், கதை சொல்லல் முதலிய கலைகளில் ஒளிவிட்ட பார்ப்பனரல்லாத இசைவாணர்கள், இசைவாணிகள் பட்டியலை முகவரியோடு குடிஅரசில் வெளியிட்டார். அவர்களை ஆதரிக்க வேண்டும் என்பது ஈ.வெ.ரா. வின் விருப்பம்.

அப்பட்டியலில் 36 வாய்ப்பாட்டுக்காரர்களும் 36 மிருதங்கம் வாசிப்போரும் இருந்தார்கள். நாயனத்தில் சிறந்து விளங்கிய பதினாறு பேர்கள் பட்டியலில் இருந்தார்கள். கதை சொல்லுவோர் - காலட்சேபம் நடத்தல் ஆகிய கலைஞர்கள் பத்துப் பேர்கள்.

தமிழ்ச் சமுதாயத்தில் இன்று ஓரளவு மானத்தோடும் மதிப்போடும் வாழ்கிற எல்லாப் பிரிவினருமே, சமுதாயப் புரட்சி இயக்கமாகிய தன்மான இயக்கத்திற்கும் அதன் தொடக்ககால தியாகிகளுக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். நிற்க,

உதகைப் பயணமும் ஈரோட்டு மாநாடும்

ஈரோடு மாநாட்டுக்குப் போய்விட்டு, அங்கு இருந்து கோவைக்குச் சென்று இரண்டொரு நாள் தங்கியபின், நான் உதகைக்குச் சென்றுவரத் திட்டம் போட்டார், என் தந்தை. அதற்கான பணத்திற்கும் ஏற்பாடு செய்தார்.

அதுவரை நான் கம்பளியைத் தொட்டதில்லை. குளிர்காலத்தில்கூட, பருத்தித் துப்பட்டியால் போர்த்துக் கொள்வேன். அதற்குமேல் தேவைப்படவில்லை. உதகைக் குளிருக்குத் துப்பட்டி போதாது.

எனவே ஒரு கம்பளி 'ஸ்வெட்டரும்' ஒரு கம்பளி சால்வையும் வாங்கிக் கொண்டேன். கம்பளி சால்வை விலை ஆறேகால் ரூபாய்கள்; ஸ்வெட்டர் விலை நினைவில் இல்லை.

போதிய ஆயத்தத்தோடு புறப்பட்டுச் சென்றேன். *10-5-1930* அன்று விடியற்காலை ஈரோட்டுப் புகைவண்டி நிலையத்தில் இறங்கியபோது, மழை கொட்டிக் கொண்டிருந்தது. தெருவெல்லாம் வெள்ளக்காடு.

ஆயினும் மாநாட்டுத் தொண்டர்கள் காத்திருந்தார்கள். அவர்கள் என்னைத் தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். காலைக் கடன்களை முடித்துக்கொண்டேன். எட்டு மணிபோல் அருகில் இருந்த சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று உண்டுவிட்டு வெளியே வந்தேன்.

எங்கள் நெய்யாடு பாக்கத்திற்கு எதிர்க் கரையிலுள்ள இளையனார் வேலூரைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரைக் கண்டேன். அவரும் சிற்றுண்டிக்காக வந்து கொண்டிருந்தார்.

நான் உண்ட இடத்தில் இட்லி, தோசை நன்றாக இருந்தன என்று சொல்லி அவரை அழைத்தேன். தான் பார்ப்பன ஓட்டலில் சாப்பிடுவதில்லை என்று சொல்லிவிட்டு, வேறு ஓட்டலைத் தேடினார். தாவர உணவு ஓட்டலில்லை.

''காலை வேளைதானே! மிலிடரி ஓட்டலிலும் தோசை கிடைக்கும்'' என்று சொல்லிக்கொண்டு, மிலிடரி ஓட்டலுக்குச் சென்றார். அவருடன் துணையாக நானும் சென்றேன்.

தோசை கேட்டார். பரிமாறுபவர் இரண்டு பெரிய தோசைகளைக் கொண்டு வந்தார். அவற்றின் மேல் ஊற்றியிருந்த குழம்பு என்ன குழம்பு என்று திரு. கோவிந்தசாமி கேட்டார். கறிக்குழம்பு என்ற பதில் கிடைத்தது.

''இதை நகர்த்திவை. குழம்பு இல்லாமல் இரு தோசைகளைத் தனியாகக் கொண்டுவா'' என்று ஆணையிட்டார். அப்படியே வரவும் அவற்றை உண்டார். ஆனால் முந்தியதற்கும் காசு கொடுக்க நேரிட்டது.

இரண்டாவது சுயமரியாதை மாநாடு

மாநாட்டின் முதல் நாள் காலையும் மழை பெய்தது. எனவே பிற்பகலே மாநாடு தொடங்கியது. திரு. ஆர்.கே. சண்முகம் அவர்களுடைய வரவேற்புரையும், தலைவர் திரு. எம்.ஆர். ஜெயகர் அவர்களது தலைமை உரையும் சமுதாயச் சீரமைப்பாளருக்கு எழுச்சியூட்டின; ஊக்கத்தைப் பெருக்கின.

'யார்? எந்த சாதி? யார் சமையல்காரர்கள்' என்பதைப் பற்றி விசாரிக்காமல் மாநாட்டுப் பிரதிநிதிகள் சமபந்தி உணவு அருந்தினார்கள்.

மாநாட்டில் ஏற்கெனவே அறிமுகமான திரு. எஸ்.வி. லிங்கத்தையும் திரு. சு. குருசாமியையும் கண்டேன். அவர்களோடு பூவாளூர் அ. பொன்னம்பலனார் இருந்தார்.

அவர் பேச்சை 'போட்மெயில்' பேச்சு என்பார்கள். ஏன்? அவ்வளவு விரைவாகப் பேசுவார். பேச்சுகளில் தமிழ் மணம் கமழும்; பகுத்தறிவு ஒளி வீசும். மூட நம்பிக்கைகளைக் குருட்டுப் பழக்க வழக்கங்களை இடியெனத் தாக்குவார்.

இயக்க முன்னோடிகள் பண்பு

தொடக்க கால தன்மான இயக்க முன் வரிசைப் பேச்சாளர்களுக்கு இறுமாப்பு கிடையாது. அவர்கள், தங்கள் மாநாடுகளுக்கு வருகிறவர்களுக்கு நீண்ட நேசக்கரங்களை நீட்டுவார்கள். வந்தவர்களை அணைத்துக் கொண்டு, தங்கள் இயக்கத்தவர்களாக்கிக் கொள்ளும் துடிப்பு இருக்கும்.

பகுத்தறிவு கொப்பளித்த அளவு, மக்கள்பால் பாசமும் சமத்துவ நேசமும் பொங்கிய தலைவரும் தொண்டர்களும் இருந்ததால் வெவ்வேறு வகையினரும் நிலையினரும் தன்மான இயக்கத்தை மொய்த்துக் கொண்டனர்.

அறிஞர் சண்முகம் முதல், நான்காவதோடு நின்றுவிட்ட நாராயணன் வரை, தன்மான இயக்கத்தில் பங்கு பெறுவதைப் பெருமையாகக் கருதினார்கள். பி.எஸ்.ஜி. கங்காநாயுடு போன்ற செல்வச் சீமான்கள் சிலர் வந்து ஊக்குவித்த அப்புரட்சி இயக்கத்தில், அழுக்கு வேட்டிக்காரர்கள், ஆயிரக்கணக்கில் பங்குகொள்ளத் தயங்கவில்லை.

பெரியாருடன் என் முதல் சந்திப்பு

இரண்டாம் நாள் பகல் உணவிற்கு என்னைப் பெரியாரின் மாடி வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். திருவாளர்கள் லிங்கமும் பொன்னம்பலனாரும் என்னைப் பெரியாரிடம் அறிமுகப்படுத்தி

னார்கள். பொடியனாக இருந்த என் கையையும் பிடித்துப் பெரியார் குலுக்கினார்.

''இவ்வளவு பற்றோடு மாநாட்டிற்கு வந்ததற்குச் சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்'' என்றார் பெரியார். அவருக்கே உரிய பரிவோடு வரவேற்றார்.

உணவு அருந்தும்போது பெரியார் ஈ.வெ.ரா. வே முன்னின்று எங்களைக் கவனித்துக் கொண்டார்.

எரிமலையென மேடைகளில் காட்சியளித்த ஈ.வெ.ரா. பந்தி விசாரிப்பில் எத்தனை குழைவை வெளிப்படுத்தினார்.

ஒவ்வோர் இலையையும் விழிப்பாகக் கவனித்தார். யார் இலையில் எது தீர்ந்துவிட்டது என்பதைக் குறித்துக்கொண்டு அவர்களுக்கு அந்தப் பண்டத்தைப் பரிமாறச் செய்வார்.

ஈ.வெ.ரா.வின் உபசரிப்பு அவர்கள் குடும்பத்தின் பொதுச் சொத்து. அவருடைய அண்ணன் ஈ.வெ. கிருஷ்ணசாமியும் அவர் செல்வன் சம்பத்தும் அப்படியே விளங்கினார்கள்.

இமயமலையளவு புரட்சிச் சிந்தனையும் இந்துமாக் கடலளவு பாசமும் ஒருங்கு இணைந்த ஒரு உத்தமப் பெரியாராக விளங்கினார். ஈ.வெ.ரா., அவர் தமிழர்களிடையே ஏன் பிறந்தார்?

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

ஈரோட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில், வருணாச்சிரமக் கொள்கையையும் சாதிப் பிரிவினையையும், பிறவியினால், ஏற்றத்தாழ்வு ஏற்படுத்தும் கொள்கையையும் மறுத்து அக்கொள்கைகளுக்கு ஆதரவான வேத புராணங்களின் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஏற்றத்தாழ்வு ஒழிப்புப் பணி இன்றும் தேவைப்படுகிறது.

சாதிப் பட்டப்பெயர்களை விட்டுவிட வேண்டும் என்னும் முடிவு செங்கற்பட்டு மாநாட்டிலேயே எடுக்கப்பட்டது. அம்முடிவு மீண்டும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

'தீண்டாமை என்னும் கொடுமை மனித தர்மத்திற்கு விரோதமென்று இம்மநாடு கருதுவதுடன் மக்களில் எந்த வகுப்பாருக்கும் பொது உரிமைகளை மறுக்கும் பழக்கவழக்கங்களை உடனே ஒழிக்க வேண்டும் என்றும், பொதுச்சாலைகள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோவில்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் சகலருக்கும் சம உரிமை வழங்க வேண்டுமென்றும் இம்மாநாடு முடிவு செய்கிறது' என்பது மற்றோர் முடிவு.

இந்நூற்றாண்டின் இருபதுகளிலும் முப்பதுகளிலும் சுயமரியாதைச் சுடர் ஈ.வெ.ரா.வும் அவருடைய இயக்கத்தவரும் பங்கு கொள்ளாத ஆதிதிராவிட மாநாடோ, சிறப்பு நிகழ்ச்சியோ தமிழகத்தில் இல்லை. கொச்சியும் திருவிதாங்கூரும் ஈ.வெ.ரா.வைப் பயன்படுத்திக் கொண்டன.

பெருந்துறைக்கு அருகில் உள்ள புதிய ஆதிதிராவிட குடியிருப்பில் நிகழ்ந்த வாலிபர் சங்க ஆண்டு விழாவிற்குச் செல்ல, ஈ.வெ.ரா. அவர்கள் ஒற்றை மாட்டு வண்டியில் பத்துக் கல் பயணம் செய்ய நேர்ந்தது. என்னே ஈ.வெ.ரா.வின் தொண்டு உள்ளம்!

குடியிருப்புகளில் இருந்தவர்களுக்கு மெய்யான காவலராக, நண்பராக, தோழராகப் பெரியார் விளங்கியது போலவே, மற்ற தன்மான இயக்கத்தவர்களும் விளங்கினார்கள்.

முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேறியது போன்றே ஈரோட்டு மாநாட்டில் பூசாரி மறுப்பு முடிவு எடுக்கப்பட்டது.

வணங்குவோருக்கும் வணங்கப்படுவதற்கும் மத்தியில் தரகரையோ, பூசாரியையோ ஏற்படுத்துவது சுயமரியாதைக்கு விரோதம் என்றும், தெய்வ வணக்கத்திற்குப் பணச் செலவு அனாவசியமென்றும் இம்மாநாடு கருதுகிறது.

பூசாரிகளுக்குத் தற்காலம் விடப்பட்டிருக்கும் மானியங்களை ரத்து செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு கருதுகிறது.

1930ஆம் ஆண்டிலும் தன்மான இயக்கம், கடவுள் மறுப்பு இயக்கமாக உருக்கொள்ளவில்லை.

41. ஈரோடு மாநாட்டின் முடிவுகள்

பெண்களுக்குச் சம உரிமை வேண்டும்

ஈரோட்டில் நடந்த இரண்டாவது மாநில சுயமரியாதை மாநாடு, தன்மான இயக்கத்தின் கொடுமுடியாகும் என்று சொல்லலாம். அம்மாநாட்டில் நிறைவேறிய முடிவுகளில் ஒன்று.

'பெண்களின் திருமண வயதைப் பதினாறு ஆகவும், ஆண்களின் வயதைப் பத்தொன்பதாகவும் சட்டப்படி வரையறுக்க வேண்டுமென்றும் இந்த மகாநாடு வற்புறுத்துகிறது' என்பதாகும்.

இத்தகைய முடிவு ஏன் தேவைப்பட்டது? நாட்டில் குழந்தை மணங்கள் பெருகியதால், குழந்தை விதவைத் தன்மை மண்டியதால்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, பெரிய இந்துக் கோயில்களில் பொம்மலாட்டம் நடக்கும்.

அத்தகைய பொம்மைக் கூத்து வெளியிலும் பரவிற்று. ஊர்தோறும், தெருதோறும் ஒருவகைப் பொம்மைக்கூத்து மிகத் தாராளமாக நடந்தது. எவ்வகைப் பொம்மைக் கூத்து?

பெரியவர்கள் சின்னஞ்சிறுவர்களையும் சிறுமிகளையும் மணவறையில் உட்காரவைத்து, வேடிக்கைகாட்டி, அவர்களுக்கு மணம் முடித்து மகிழும் பொம்மைக்கூத்து, அக்கால, இந்துச் சமுதாயத்தின் உயிர்மூச்சாக இருந்தது.

இதைத் தடுக்க வேண்டுமென்று முற்போக்குச் சிந்தனையாளர் சிலர், வாய்ப்புக் கிட்டியபோது பேசினர்; எழுதினர்.

அறியாமையிருளில் சிக்கியிருந்த நம் சமுதாயத்தில் முற்போக்குச் சிந்தனையாளர்களில் எழுத்துகளைப் படித்தவர் ஆயிரத்தில் ஒருவரும் இல்லை.

அக்காலப் பேச்சாளர்கள், அரங்குகளில், படிப்பாளர்கள் நடுவில் மட்டுமே பேசினார்கள். எனவே முற்போக்குக் கருத்துகள் பொதுமக்கள் காதுகளில் படவில்லை.

வடக்கே, அரிவிலாஸ் சாரதா என்பவர், இந்தியச் சட்டமன்றத்தில், குழந்தை மணத்தைத் தடுக்கும் சட்டமொன்றைக் கொண்டு வந்தார்.

படிக்காத பொதுமக்களும் வைதீகப் புரோகிதர்களும் எதிர்த்தார்கள்.

அதைவிடக் கொடுமை, பட்டதாரிகள் பலர் - பொதுவாழ்க்கையில் முன்னணியில் இருந்தோர் பலர், வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்தார்கள்.

தென்னகத்தைப் பொறுத்த மட்டில் குழந்தை மணத்தடுப்பை, பொதுமக்கள் இயக்கமாக்கிய பெருமை பெரியார் ஈ.வெ.ராமசாமிக்கும் அவர் கண்ட தன்மான இயக்கத்திற்கும் சேரும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சாதியைச் சேர்ந்த இந்து, மற்றோர் சாதியைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து கொள்வது சட்டப்படி செல்லாது.

எனவே, அத்தகைய திருமணங்களுக்கு வழிவிடும் புதிய திருமணச் சட்டம் ஒன்று தேவைப்பட்டது.

'சிவில் திருமணச் சட்டமொன்றை இயற்றும்படி' ஈரோட்டுத் தன்மான மாநாடு கேட்டுக் கொண்டது.

திருமணங்களும் மற்றச் சடங்குகளும், குறைந்த நேரத்திலும் குறைந்த பணச் செலவிலும் நடத்தப்பட வேண்டுமென்றும், திருமணச் சடங்கு எக்காரணம் பற்றியும் ஒரு நாளுக்கு மேற்படக் கூடாதென்றும் மாநாடு வற்புறுத்திற்று.

சமய நம்பிக்கைக்கு - சமயப் பழக்கங்களுக்கு எதிர்ப்பாக இராத இதையாகிலும் தமிழர்கள் செயல்படுத்தியிருந்தால், வறுமைக்

கோட்டுக்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் முதல் இடத்தைப் பிடித்து இராது. பெரியாரின் பெருந்தொண்டு, அருந்தொண்டு கடலில் பெய்த மழை!

தகுதியான இந்துமத விவாக ரத்துச் சட்டமொன்று, இயற்ற வேண்டுமென்று ஈரோடு மாநாடு இந்திய அரசினைக் கேட்டுக் கொண்டது.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமென்பது தன்மான இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும்.

பெண்ணுரிமைக்காகப் பெரியார் ஈ.வெ.ரா. வாழ்நாள் முழுவதும் இடையறாது தொண்டாற்றினார்.

'சினிமாக்களுக்கும் கோயில்களுக்கும் பெண்களைத் தனியாக அனுப்பத் தயங்காத ஆண்கள், தங்கள் வீட்டுப் பெண்களைப் பொதுக்கூட்டங்களுக்கும் . மாநாடுகளுக்கும் அழைத்துவரத் தயங்குவானேன்?' என்று தந்தை பெரியார் உரிமையோடு இடித்துரைப்பார்.

பெரியார் விரும்பிய நிலை, இனிதான் உருவாக வேண்டும். ஆண் பெண் சமத்துவத்திற்குச் செயல் வடிவம் கொடுக்காவிட்டாலும் பல ஆயிரக்கணக்கில் கூடி, உணர்வால் ஆதரித்தோம், ஈரோட்டு மாநாட்டில்.

'ஆண்களைப் போன்று பெண்களுக்கும் சொத்துரிமை, வாரிசு பாத்தியம் ஆகியவைகளில் சமஉரிமை இருக்க வேண்டுமென்றும் எந்தத் தொழிலிலும் ஈடுபடவும், அதைக் கையாளவும் சமஉரிமை இருக்கவேண்டுமென்றும், குறிப்பாகத் தொடக்கக் கல்வி ஆசிரியர்களாகப் பெண்களை அதிகமாக நியமிக்க வேண்டுமென்றும்' ஒருமனதாக, பெருத்த ஆரவாரத்துடன் முடிவு செய்யப்பட்டது.

'இந்நாட்டு மக்களின் வறுமையைப் போக்கி, அவர்களுடைய பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தக் குடியை ஒழிக்க வேண்டுவது தேவையென, இம்மாநாடு கருதுவதுடன் பூர்ண மதுவிலக்கைக் கொண்டுவர அரசும் மக்களும் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இந்த மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.'

இது ஈரோட்டு மாநாட்டு முடிவுகளில் ஒன்று. இதை நிறைவேற்றிய பல்லாயிரவர்களில் ஒருவனாக நானும் இருந்ததைப் பற்றி மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்.

மதுவைத் தொடாத தன்மான இயக்கத்தவர்களில் நானும் ஒருவன் என்பதால் மட்டுமல்ல. தொடக்க கால, தன்மான இயக்கத்தவர்களில், விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர, மற்றவர்கள் மதுவைத் தொடாதவர்கள்.

'விபச்சாரத் தடை மசோதா ஒன்று கொண்டு வந்து நிறைவேற்றிய தற்கு இம்மாநாடு சென்னைச் சட்டசபையைப் பாராட்டுவதுடன், அச்சட்டத்தை உடனே அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அரசினர் தாராளமாக மான்யங்கள் அனுமதித்து, பெண்கள் பாதுகாப்பு விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது?

இது ஓர் முடிவு. எவ்வளவு தொலைநோக்கோடு பாதுகாப்பு விடுதிகளை ஏற்படுத்தச் சொல்லியுள்ளார்கள்.

நம்மவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சாலை, குளம், கிணறு, கோயில் முதலியவைகளில் சமஉரிமை இல்லாமை யைச் சுட்டிக்காட்டி, அவ்விடங்களில் சுயமரியாதையை நிலைநாட்ட சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று முடிவு செய்தது. அதற்காக ஒரு குழுவையும் நியமித்தது, ஈரோட்டு மாநாடு.

மேற்படி சத்தியாகிரகத்தை ஈரோட்டில் தொடர்ந்து நடத்த முடிவெடுத்தது. அதோடு இளைஞர்களைச் சத்தியாகிரகத்திற்கு ஆயத்தமாகும்படிக் கேட்டுக் கொண்டது.

'எந்தப் பொதுக்கூட்டங்களிலும் தொடக்கத்திலாவது முடிவிலாவது ராஜ வணக்கம், கடவுள் வணக்கம், தலைவர்கள் வணக்கம் ஆகியவை செய்யும் காரியத்தை விட்டுவிட வேண்டுமென்று, இளைஞர் மாநாடு முடிவு செய்தது.

1930 இல் வெள்ளையன் ஆண்டான் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ஆங்கில அரசனுக்கு வாழ்த்துப் பாடக்கூடாது என்று முடிவு செய்த சுயமரியாதைக்காரர்கள் அன்னிய அடிமைகளா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

முதியோர் கல்வியைப் பரப்புவோம்

ஏழை மக்களுக்கு இராப்பள்ளி ஏற்படுத்திக் கல்வியைப் போதிப்பதுடன், நமது இயக்க நோக்கங்களையும் போதிப்பது என்பது இளைஞர் மாநாட்டு முடிவுகளில் ஒன்று. அந்தோ! செயல்படாத முடிவுகளில் இதுவும் ஒன்று!

பாரதத்தின் தந்தை காந்தியடிகளார், எல்லோரும் - முதியவர்களும் - கற்கவேண்டுமென்று விரும்பினார். பெரும்பாலானோர், தற்குறிகளாக இருக்கும் 'அவமானத்தையும் பாவத்தையும்' துடைக்கத் துடித்தார்.

தமது ஆக்கத்திட்டங்கள் பதினான்கில், எழுத்தறிவுத் தொண்டைச் சேர்த்தார். இருப்பினும் இத்திட்டம் சூடுபிடிக்கவில்லை. முதியோர் எழுத்தறிவு இயக்கம் பரவவில்லை.

பெரியார் ஈ.வெ.ரா. தள்ளாத வயதிலும் மக்களின் தற்குறித் தன்மையைக் கண்டு, மிகவேதனையும் வெட்கமும் பட்டு, நாடறியக்

கதறினார். ஓராண்டில் தமிழ்மக்கள் எல்லார்க்கும் எழுத்தறிவு கொடுக்கச் சொல்லி இரங்கி வேண்டினார். நடக்கவில்லை.

ஈரோட்டு உணர்வினைப் பெற்றிருந்த பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானபோது ஐந்தாண்டுகளில் எல்லாத் தமிழர்களுக்கும் எழுத்தறிவு புகட்டிவிட உறுதி பூண்டிருந்தார். நாற்றங்கால் விட்டார். பயிர் இடுவதற்கு முன்பு மறைந்தார். எழுத்தறிவு பயிர் ஆகவில்லை.

தன்மான இயக்கம், பொதுமக்கள் நலனுக்கான பலவற்றையும் சிந்தித்தது; துணிந்து சொல்லிற்று; செயல்படுத்துவோர் இல்லாமை, இயக்கத்தின் குறையாகி விடுமா? நம் தவறு அல்லவா?

'அடுத்த மக்கள் எண்ணிக்கைக் கணக்கெடுக்கையிலும் பிறப்பு இறப்பு கணக்கிலும் மதம், சாதி, பட்டம் ஆகிய பெயர்களைக் கொடுக்கக்கூடா'தென்றும் இளைஞர் மாநாடு கேட்டுக் கொண்டது.

அதை மதித்து, பல இலட்சக்கணக்கானவர்கள் - முதியவர்களும் - குடிக்கணக்கின்போது, சமயம், சாதியற்றவர்களாக அறிவித்தார்கள். அதில் அடியேனும் ஒருவன்.

நல்லதும் கெட்டதும் கலந்ததே சமுதாயம். நல்லதாக முளைப்பது காலநீளத்தில் கெடுதலாக மாறுவதுண்டு. இன்று பகல், புதுச்சோறாக மணம் வீசுவது, மூன்றாம் நாள் பகல், ஊசிப் போன சோறாகவல்லவா நாறும்? அந்நிலையில் அதைக் கொட்டிப் புதைத்துவிடுவது அல்லவா அறிவுடைமை?

சாதி வேற்றுமை, அவற்றின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வு, பெண் அடிமை ஆகியவை புதைக்கப்பட வேண்டிய தீமைகள்; நம்மிடையே இன்றும் மண்டிக்கிடக்கின்றன.

பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் இழிவு தொலைந்தது

இக்கொடுமைகளுக்கெல்லாம் கொடிய பழக்கம் ஒன்று நம் சமுதாயத்தில் பரவி நிலைத்திருந்தது. அப்பழக்கமே அநீதி; சித்திரவதை; தீமை; வழிவழித் தீமை; ஆகவே அருவருக்கத்தக்கது. அதைச் சமயத்தோடு இணைக்கும்போது, இரண்டும் தொடக்கூடாதவை, அவ்வளவு தீய பழக்கம் என்ன?

நம் சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் வீடுகளில் பிறக்கும் பெண்களுக்கு யாதும் அறியமுடியாத சிறு பருவத்தே, 'பொட்டுக்கட்டி' தேவர்க்கு அடியார்களாக விட்டுவிடுவது.

அப்பெண்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. காசு கொடுத்தவனுக்கெல்லாம் பெண்டாக வேண்டும். வாழ்நாள் முழுவதும் கோயில் தொண்டு செய்வதாகப் பெயர்.

தேர் திருவிழாக் காலங்களில் நடனம் ஆடி, இசை பாடி, தொண்(செய்யவேண்டும். இறைவன் தொண்டிற்கு என்று சில பெண்கை ஒதுக்கி வைத்தல் என்னும் இயற்கைக்கு மாறான கோட்பாட்டால் நாட்டில் கூடாஒழுக்கம் பரவிற்று.

பிறவியிலேயே பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இழிவுக்குட விரும்பாச் சேர்க்கைக்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் தள்ளப்பட்டன.

இக்கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்தவர்களில், டாக்ட முத்துலெட்சுமி ரெட்டி என்பவர் தலையாய தமிழர். அவர், சென்னை சட்டமன்றத்திற்குத் துணைத்தலைவர் ஆனார்.

திருமதி. முத்துலெட்சுமி ரெட்டியார், பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டமொன்று கொண்டு வந்தார். அதற்குப் பல பக்கங்களிலிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பிற்று.

அரசியல் விடுதலை மேடைகளில் முன்னணியில் இருந்தவர்கள் சிலர், பொட்டுக் கட்டுவதைப் பற்றி நாணித் தலைகுனிவதற்குப் பதில், 'பொட்டுக் கட்டுதல்' தொடர வேண்டுமென்று வாதாடினர்; முழங்கினர்.

தந்தை பெரியாரும் அவரது இயக்கமும் தீவிர பிரசாரம் செய்து, ஆதரவு திரட்டியதால், பொட்டுக்கட்டும் இழிவு பழங்கதையாகி விட்டது. ஈரோட்டு இளைஞர் மாநாடு இதுபற்றி எடுத்த முடிவைப் பாருங்கள்.

'எதிர்கால வாழ்க்கையை உணர்ந்து கொள்ள முடியாத சிறுமிகளை, கடவுளின் பேரால் பொட்டுக்கட்டிப் பொருளுக்காக நிர்ப்பந்தக் காதலில் ஈடுபடுத்தும் அநாகரிகமான பழக்கத்தை ஒழிக்க, இளைஞர்களும் முன் வருவதோடு, பொட்டுகளை அறுத்தெறிந்து விட்டு முன்வரும் சகோதரிகளை ஆதரித்துத் திருமணம் செய்துகொள்ள இளைஞர்கள் தைரியமாக முன்வரவேண்டுமென்று மாநாடு முடிவு செய்கிறது.'

கர்ப்பத் தடை

கர்ப்பத் தடை பற்றி எல்லோரும் கவனம் செலுத்துமாறு அம்மாநாடு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது. சீரிய கருத்தினை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட்டு நடைமுறைப்படுத்த முயன்ற, தன்மான இயக்கத்தவர், ஏற்ற பழி கொஞ்சமல்ல.

இலவசக் கல்வி

மாதர் மாநாட்டில் முதல் முடிவு என்ன தெரியுமா? 'ஆண் பெண் என்னும் இருபாலருக்கும் கட்டாய இலவசப் படிப்பு, சீக்கிரம் கொடுக்க வேண்டுமெனவும் பெண் பாலரைக் குறைந்தது பதினாறு வயது

வரையிலாவது பள்ளிக் கூடங்களுக்குச் செல்லவிட வேண்டும் எனவும் தாய் மொழியிலேயே அவர்களுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டுமெனவும் இம்மாநாடு முடிவு செய்கிறது' என்பதாகும்.

பதினாறு வயது வரையில் என்றால் பதினோராவது வகுப்பு முடிய என்று பொருள். பெண்கள், உயர்நிலைப்பள்ளி வரையிலாவது படிக்க வேண்டும். ஏன்? பெண் படித்தால் குடும்பமே படித்த பலன். எனவே பெண் கல்வியை இவ்வளவு வற்புறுத்தினார்கள்.

குழந்தை மணத்தைத் தடுக்கும் சாரதா சட்டத்தை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்ததோடு பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்க இந்தியச் சட்டசபையில் திரு. ஜெயகர் கொண்டு வந்திருக்கும் மசோதாவையும் சென்னைச் சட்டசபையில் டாக்டர் முத்துலெட்சுமி கொண்டு வந்திருக்கும் மசோதாவையும் ஆதரிப்பதாக முடிவு செய்தது.

ஆண் பெண் சமவுரிமையை வலியுறுத்தல், 'சமூகத் தொண்டில் பெண்கள் பெருமளவு பங்குகொள்ளும்படி வேண்டுதல், பெண்களைச் சட்டசபைக்கும் நகரமன்றங்களுக்கும் தேர்ந்து எடுக்க வேண்டுதல்.' தேவதாசிகளை, திருமணம் முதலியவைகளுக்கு அழைக்காமல் இருத்தல், குடியொழிப்பு ஆகியவற்றை ஆதரித்து மாதர் மாநாட்டில் முடிவு செய்தார்கள்.

அப்புதுமைப் பெண்கள் வாழி, அவர் புரட்சிக் கருத்துகள் வெல்க.

பாசி பிடித்துப் போன, நம் சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்குத் தேவையான புரட்சிகரமான கருத்துகளை, காலத்திற்கு முந்தி, பிரசாரம் செய்ததால், தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வும் அவருடைய இயக்கத் தோழர்களும் ஏற்ற, ஏற்றுக் கொண்டிருக்கும் பழியும் எதிர்ப்பும் அம்மா, பெரிது!

சென்னை மாகாண மாதர் மாநாடு

இப்போது, மற்றோர் நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. ஈரோட்டுச் சுயமரியாதை மாநாட்டிற்கு ஆறு திங்களுக்கு முன்னர், சென்னையில் ஒரு மாகாண மாதர் மாநாடு, நடந்தது.

அது சுயமரியாதை இயக்கத்தவர் மாநாடு அல்ல. பின் என்ன? சென்னை மாகாண மாதர் மாநாடு.

விலிங்டன் மாதர் கிளப்பில் நடந்த அம்மாநாட்டுக்கு எவர் தலைவர்? திருமதி எஸ். சீனிவாச அய்யங்கார் ஆவார். அனைத்திந்திய காங்கிரசு தலைவராக இருந்த திரு. எஸ். சீனிவாச அய்யங்காரின் மனைவியார், அம்மாநாட்டிற்குத் தலைமை ஏற்றார்கள்.

டாக்டர் திருமதி முத்துலெட்சுமிரெட்டி, அவருடைய தங்கை - அப்போது செல்வி நல்லமுத்து, திருமதி ருக்குமணி லட்சுமிபதி, திருமதி கசின்ஸ் ஆகியோர் இந்த மாநாட்டில் சிறப்பாகப் பங்குகொண்டார்கள்.

அம் மாநாட்டில் திருமண வயதைப் பற்றி என்ன முடிவு செய்தார்கள்? பெண்களுக்குத் திருமண வயது குறைந்தது பதினாறு; ஆண்களுக்குத் திருமண வயது இருபத்தொன்று. இப்படிச் சட்டம் செய்யவேண்டுமென்று, மாநாடு பரிந்துரைத்தது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை, படிப்புரிமை போன்றவற்றில் சம உரிமை வேண்டுமென்றும் அம்மாதர் மாநாடு முடிவு செய்தது.

விவாகரத்து உரிமை வேண்டுமென்பது முடிவெடுக்க, முன்மொழிந்தபோது, பேச்சுகள் காரசாரமாயின.

மாநாட்டுத் தலைவர் திருமதி எஸ். சீனிவாச அய்யங்கார், வெகுண்டெழுந்து வெளியேறிவிட்டார்.

பிறகு, திருமதி கசின்ஸ் தலைமையில் மாநாடு தொடர்ந்து நடந்தது. கடைசியில் விவாகரத்து உரிமை வேண்டும் என முடிவு செய்தார்கள். 'வேண்டாம்' என்றவர்களைப்போல, இரண்டு மடங்கு மாதர்கள், உரிமை கோருதலுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

அம்மாநாட்டின் முன்னணியிலிருந்து, இவ்வுரிமைக்குப் போராடிய எவரும் யான் அறிந்த மட்டில், விவாகரத்து செய்து கொள்ளவில்லை.

சீர்திருத்தவாதிகளில் பலர், மற்றவர்கள் துன்பங்களைத் துடைக்கப் போய், பழமை விரும்பிகளின் பழிச்சொற்களையும், யாருடைய நலத்துக்காகப் போராடுகிறார்களோ அவர்களுடைய புரியாமையால் வெடிக்கும் தாக்குதல்களையும் தாங்க நேரிடுவதே, மக்கள் இனத்தின் வரலாறாக உள்ளது.

சென்னையில், பெரிய வீட்டு மாதர் திலகங்கள் கூடி, ஏற்ற முடிவுகளைப் பற்றிப் பழிக்காதவர்கள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி அதே முடிவுகளைச் செய்யும்போது, பதறுவானேன்? அலறுவானேன்? திரித்து உரைப்பானேன்? கண்டனக் கணைகளைப் பொழிவானேன்? வீண் பழிகளைச் சுமத்திச் சுமத்தி வேண்டாத வெறுப்பை வளர்ப்பானேன்?

முந்தியது, பெரிய இடத்து மாது சிரோன்மணிகளின் பொழுது போக்கு; அறிவு மின்னல்களின் அடையாளம்; அதைச் செயல்படுத்த அவர்கள், இயக்கம் நடத்தப் போவதில்லை.

பொதுமக்கள் இயக்கமாக உரு எடுத்த தன்மான இயக்கத்தின் முடிவுகளோ தமிழகத்தின் மூலைமுடுக்கெங்கும் தாக்கும், ஆயிரம்

ஆண்டு அநீதிகளைத் தவிடு பொடியாக்கும் அணுகுண்டுகளாகச் செயல்படும்.

இதைப் புரிந்துகொண்டவர்கள் இருட்டடிப்பு, திரித்துக் கூறல், மிகைப்படுத்தல், தூற்றல் மாரி ஆகிய எதிர்ப்புக் கணைகள் அனைத்தையும் பொழிந்தார்கள். பொழிந்துகொண்டும் இருக்கிறார்கள். இது எதிர்பார்த்ததே!

ஆனால் சமுதாய ஏணியின் கீழ்ப்படிகளில் உள்ளவர்கள் இன்னும் விழிப்புப் பெறாதது வேதனையே!

42. கோவையிலும் உதகையிலும் சில நாள்கள்

நண்பர் சின்னசாமி

தன்மான இயக்கத்தின் எவரெஸ்டாக விளங்கிய இரண்டாவது மாநில சுயமரியாதை மாநாட்டில், பிரதிநிதியாகக் கலந்து கொண்டபின் கோவைக்குப் பயணமானேன்.

புகைவண்டியில் சென்றேன். அப்போது, கோவை புகைவண்டி நிலையம் ஒரு சந்திப்பாக இல்லை. வெறும் நிலையமாகவே இருந்தது.

புகைவண்டி நிலையத்திற்கு அருகில் காவல்துறையினர் வீடுகள்.

கல்லூரியில் எனக்கு ஈராண்டு மூத்தவராகவும் விக்டோரியா மாணவர் விடுதியில் எனக்குக் கணக்குப் பாடம் சொலித் தந்தவராகவும் விளங்கிய நண்பர் திரு. நா. சின்னசாமி, காவல்துறையினர் 'லைனில்' குடியிருந்தார்.

ஏன்? அவர் தந்தை காவல் துறையில் வேலை பார்த்தார்.

திரு. நாராயணசாமி, எளிய வேலையில் இருப்பினும் பெரிய தொலைநோக்கு உடையவர். தமது, சொற்ப ஊதியத்தில், செட்டாக, வாழ்ந்ததோடு, தமது ஒரே மைந்தரை, கல்லூரிப் படிப்பிற்கும் அனுப்பி வைத்தார்.

திரு. சின்னசாமி பொறுப்பான பிள்ளை; வசதி குறைந்த சிறிய வீட்டில் குடியிருந்த போதிலும் மிகுந்த அக்கரையோடு படித்தார்; நல்ல மதிப்பெண்கள் எண்கள் பெற்றார்.

முதல் தலைமுறைப் படிப்பாளியும் முதல் தரமான மதிப்பெண்கள் பெற முடியுமென்று மெய்ப்பித்தார்.

இக்கால இளைஞர்களுக்கு இதைச் சுட்டிக்காட்ட ஆள் இல்லை.

கோவை அரசினர் கல்லூரியில் இண்டர்மீடியட்டை முடித்த பிறகு சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்து பி.ஏ. (சிறப்பு) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

நான், அக்காலம்முதல், கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்த சிலரில் திரு. சின்னசாமியும் ஒருவர். அவர் என்னைக் கோவைக்கு வரும்படி அன்புடன் அழைத்திருந்தார்.

எனவே, உதகமண்டலத்திற்குச் செல்லும் வழியில், சில நாள்கள் கோவைய்யில் தங்கினேன்.

திரு. சின்னசாமியோடு இருந்தேன்

அன்றே செல்வர் வீட்டுப் பிள்ளையாகவும் இன்று பல கோடிகளுக்கு அதிபராகவும் விளங்கும் திரு. இரா. வேங்கடசாமி, என் வகுப்பு மாணவர். எனக்கு நெருங்கிய நண்பர். அவரும் என்னை அழைத்திருந்தார்.

ஆயினும் சாதாரண வீட்டில் தங்குவதிலேயே என் நாட்டம் சென்றது.

திரு. சின்னசாமியோடு நான் தங்கிய சில நாள்கள் மறக்க முடியாதவை. எங்கள் வீட்டில் இருப்பது போன்றே உணர்ந்தேன்.

திரு. சின்னசாமியின் பெற்றோர்களும் கனிவோடு விருந்தோம்பினர். அவர்களுக்கு நான் முன்போ பின்போ செய்தது ஒன்றும் இல்லை. அவர்களுக்குக் கடன்பட்டிருக்கிறேன்.

திரு. சின்னசாமி என்னை அழைத்துக் கொண்டு போய், கோவையின் பல பகுதிகளைக் காட்டினார்.

திரு. வேங்கடசாமிக்கு உரிய இராமகிருஷ்ணா நூற்பு ஆலையையும் பார்த்தேன். அப்போதுதான் ஆலையொன்றை நான் முதன்முறையாகக் கண்டேன்.

பிற்காலத்தில் நாங்கள் மனிதர்களாவோம்; பலர் எங்களை அழைத்து, பல ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் காட்டி மகிழ்வர் என்பது எங்களுக்கு அப்போது தெரியாது.

நாணயமும் நேர்மையும் எங்கள் குருதியில் ஓடின

மேற்கொண்ட எதையும் பொறுப்போடு செய்து முடிக்க வேண்டும் என்னும் கடமை உணர்வைப் பெற்றோரிடம் இருந்து பெற்று இருந்தோம்.

நாணயம், நேர்மை எங்களுக்குத் தெரியாமலே, எங்கள் குருதியில் ஓடிக்கொண்டிருந்தன.

பணக்காரர்களோடு நெருங்கிப் பழகிய போதிலும் அவர்களைக் கண்டு அழுக்காறு கொள்ளவில்லை. அவர்களைப்போல் ஆக வேண்டும் என்னும் அவாவிலும் சிக்கித் தவிக்கவில்லை.

'பிழைக்கத் தெரியாத' நாங்களும் வளர்ந்தோம். வாய்ப்புகள் இல்லாத காலத்தில் பட்டம் பெற்ற போதிலும் உள்ளம் உடையாமல் இருந்தோம்.

எங்கோ முளைத்து வளர்ந்து சராசரி மனிதரைக் காட்டிலும் அதிகப்படியான தொண்டாற்றிவிட்டோம்.

திரு. சின்னசாமி, பட்டம் பெற்றபின் ஆசிரியத் தொழிலில் நாட்டங் கொண்டார். சைதை, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார்; எல்.டி. பட்டம் பெற்றார். அக்காலத்தில் பள்ளிகள் குறைவு. அவற்றில் சேரும் பிள்ளைகளும் மிகக்குறைவு.

எனவே, புதிய வேலைகள் எங்கோ ஒன்றிரண்டு இருப்பினும் கணக்கில் சிறப்புப் பட்டம் பெற்றிருந்ததால், திரு. சின்னசாமிக்கு அன்றைய கோவை மாவட்டக் கழகத்தின் உயர்நிலைப் பள்ளியில் வேலை கிடைத்தது.

உதவி ஆசிரியராக நல்ல பெயர் எடுத்தார். சில ஆண்டுகளில் தகுதியினால் தலைமை ஆசிரியர் ஆனார்.

தொடக்க காலத்தில் திரு. சின்னசாமி என்புருக்கி நோய்க்கு ஆளானார். மருத்துவம் எங்கே? தாம்பரம் சானிடோரிய மருத்துவமனையில்.

அங்கே, அவர் அநேக திங்கள் தங்க நேர்ந்தது. அப்போது நான் அங்குச் சென்று, அவரைப் பார்த்துவிட்டு வருவேன். நெடுநேரம் உரையாடுவேன்.

நான் முதன்முறை அச் சிகிச்சையகத்திற்குச் சென்று வந்ததை அறிந்த அன்பர் ஒருவர், 'அப்பா, அது (இருமல்) ஒட்டுநோய்; பொல்லாத நோய். நீ அங்குச் சென்று ஒட்டிக்கொண்டு வந்து விடாதே' என்று அச்சுறுத்தினார்.

நான் அதைப் பொருட்படுத்தவில்லை. பலமுறை சென்று நண்பருடன் உரையாடிவிட்டு வந்துள்ளேன்.

திரு. சின்னசாமி, உடல் நலிந்திருந்தபோதும், உள்ளம் சிறிதும் தளரவில்லை; வீணாகப் பொருமவில்லை; ஏக்கப் பெருமூச்சு விடவும் இல்லை.

நோய்வாய்ப்பட்ட உடல் திரும்ப நலம் பெறுவதற்கு மருத்துவத்துடன் உள்ளத் தெம்பும் துணை.

இதை உணர்ந்த நண்பர் சின்னசாமி, மருத்துவ மனையிலும் மனம் குலையாது நம்பிக்கையோடு இருந்தார்.

இவை அவரைக் காப்பாற்றின. உடல்நலம் பெற்ற திரு. சின்னசாமி ஊருக்குச் சென்றார்.

ஆசிரியப் பணியை மீண்டும் மேற்கொண்டார். ஒழுங்கை, கட்டுப்பாட்டை, கல்வியை வளர்ப்பதில் உழைத்துப் பெயர் பெற்று விளங்கினார்.

நான், மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது என்னைப் பாராட்டிக் கடிதம் எழுதினார்.

நன்றி தெரிவித்துப் பதில் எழுதிய நான் திரு. சின்னசாமிக்கு ஓர் வேண்டுகோள் விடுத்தேன். அது என்ன?

பொதுக்கல்வி, கணக்கு, அறிவியல் பாடங்களைக் கற்பித்தல் பற்றிய நூல்கள், அவருடைய கவனத்திற்கு வரும்போது, என் கவனத்திற்கும் கொண்டு வரும்படி வேண்டிக்கொண்டேன். அப்படியே செய்தார்.

கோவை தொழிலதிபர்கள் திருவாளர்கள் ஜி.கே. சுந்தரம் குடும்பத்தினர் பிற்காலத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவினார்கள்.

மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக ஒளிவிட்டுக் கொண்டிருந்த திரு. சின்னசாமியைத் தங்கள் 'மணி உயிர்நிலைப்பள்ளி'யின் தலைமையாசிரியராகத் தட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். புதிய பள்ளிக்குப் புதையல் கிடைத்தது.

திரு. சின்னசாமி தொடக்க நாள் முதல் மணி உயர்நிலைப் பள்ளியை மணியான பள்ளியாக உருவாக்கினார்.

ஆசிரியர்களைச் சென்ற நூற்றாண்டின் கிறுத்துவத் தொண்டர்களைப்போலத் தொண்டாற்றச் செய்தார்.

பெற்றோரும் மற்றோரும் மெச்சிப் புகழும் எண்ணற்ற பையன்களையும் பெண்களையும் உருவாக்கி அனுப்பினார்.

திறமையும் பெருமையும் வளர்ந்தபோதிலும் காட்சிக்கு எளியராக, கடுஞ்சொல் இலராகத் தொண்டாற்றினார்.

நல்லாசிரியர் விருது பெற்றார்

'ஆள் பாதி; ஆடை பாதி' என்பது, பொருள் பொதிந்த பழமொழி. உயர்ந்த தோற்றமுடையவர், திரு. சின்னசாமி.

வீட்டிலோ, வெளியிலோ, சொந்த வேலையில் ஈடுபடும்போது, எளிய உடையிலேயே அவரைக் காண முடியும். ஆடம்பரம் அவர் அறியாதது.

ஆயினும் பள்ளிக்கோ, பள்ளி வேலையாகவோ, ஆசிரியக் குழுக் கூட்டங்களுக்கோ செல்லும்போது, பொலிவான உடையிலே போவார்.

அழுக்கில்லாத, மடிப்புக் கலையாத, உடைக்கவர்ச்சி, ஆசிரியர்களுக்கு மிகமிகத் தேவை. பிஞ்சு உள்ளங்களில் முதலில், மதிப்பை ஏற்படுத்துவது ஆசிரியரின் தோற்றமே.

கல்லூரி மாணவர்களும் 'தொள தொள' உடையினரை மதிக்கமாட்டார்கள். இது கல்வி உளவியலின் அரிச்சுவடி.

குறைந்த ஊதியமே பெற்ற முற்கால ஆசிரிய சமுதாயம் இதை நன்கு உணர்ந்து கல்வி நிலையங்களுக்கு மிடுக்கான உடையில் வந்தது.

கைநிறையச் சம்பளம் பெறும் ஆசிரியர்கள்கூட இக்காலத்தில் 'பஞ்ச உடை'யில் வந்து மாணவர்கள் மத்தியில் மதிப்பை இழக்கிறார்கள்.

உள்ளத்திலே வறுமை உணர்வைக் குத்திக்கொண்ட இவர்கள் எத்தனை சேர்த்து வைத்தும் பயன் என்ன?

பிறப்பை மட்டுமே பாராட்டும் படுகுழியில் கிடந்த இந்திய சமுதாயம் தொண்டைப் பாராட்டத் தலைப்பட்டது.

இந்திய அரசு சிறந்த, நீண்ட பணி புரிந்த நல்லாசிரியர்களுக்கு விருது வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது.

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் 'நல்லாசிரியர்' விருது கொடுத்துப் பாராட்டுவது அத்திட்டமாகும்.

அத்திட்டத்தின் கீழ், சின்னசாமி, முதல் அணியிலேயே விருது பெற்றார். அதுவும் இவரை இறுமாப்புக் கொள்ளச் செய்யவில்லை.

அதைவிடக் குறிப்பிடத்தக்க செய்தி, கோவை மாவட்ட ஆசிரிய சமுதாயம் முழுவதுமே திரு. சின்னசாமிக்குக் கிடைத்த விருதைப் பற்றிப் பூரித்தது.

பதவிகளுக்குப் போட்டியிடத் தெரியாத 'நல்லாசிரியர்' சின்னசாமி, அம்மாவட்டத்தில் எண்ணற்ற ஆசிரியர்களுக்கு நண்பராக, வழிகாட்டியாக, ஞானத் தந்தையாக விளங்கினார்.

எனவே, ஒவ்வோர் ஆசிரியரும் தமக்குக் கிடைத்த 'நல்லாசிரியர்' விருதாகவே கருதிப் பரவசப்பட்டார்கள்.

'ஆனந்த விகடன்' விருதுபெற்ற ஆசிரியர்களைப் பற்றித் தொடர்ந்து கட்டுரை எழுத முன் வந்தது. என்னை அணுகிற்று. விருது பெற்றவர் சிலர், பெறாதவர்கள் பலர்.

பல ஆசிரியமணிகளை விருது பெறாதவர்களையும் ஆனந்த விகடனுக்கு அடையாளம் காட்டினேன். அவ்வார இதழ், தகவல்களைத் திரட்டி வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

அக்காலத்தில ஆசிரியர் பற்றாக்குறை. இருப்பினும் விருது பெற்றதற்காக திரு. சின்னசாமிக்கு வேலை நீடிப்புக் கிடையாது. திரு. சின்னசாமி உரிய காலத்தில் ஓய்வுபெற்றார்.

பழைய சமுதாயம், சிலவேளை உளுத்துப்போன சமுதாயமாக இருப்பது உண்டு. நம் சமுதாயம் அநீதிகளின் தொகுப்பு என்பது என் மதிப்பீடு.

பலருடைய மனம் புண்படுமே என்பதற்காகவும் இம் மதிப்பீட்டைப் பதிவு செய்யாமல், நழுவ நான் விரும்பவில்லை.

சமுதாய அநீதிகளுக்கு எத்தனையோ அடையாளங்களை என்னால் காட்டமுடியும். இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புவது பொது அநீதிகளை அல்ல.

ஓய்வு பெற்ற எல்லாருக்கும் பென்சனைச் சமமாக்க வேண்டும்

குறிப்பிட்ட ஒரு குறையை மட்டுமே காட்ட விரும்புகிறேன்.

திரு. சின்னசாமிக்கு முந்திய தலைமுறை ஆசிரியர்களுக்குச் சம்பளம் கட்டை, ஓய்வு ஊதியம் கிடையாது.

ஏழைபங்காளர், காமராசர் முதல் அமைச்சரான முதல் ஆண்டிலேயே எல்லாத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓய்வு ஊதியம் கொடுக்க ஆணையிட்டார்.

பின்னர், அதை உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்தினார். அடுத்த சில ஆண்டுகளில் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் இந்த நன்மை நீட்டப்பட்டது.

இவ்வாணைகள் அநீதியை ஒழித்தன என்று மனமகிழ்ந்தார் காமராசர்.

காலநீட்டம் அதைத் துளிர்க்க வைத்தது. எப்படி? 1-4-70 க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு 'பென்சன்' விழுக்காடு கட்டை; ஓய்வு ஊதியத்திற்கு மூன்றாண்டு சம்பளத்தின் சராசரி பார்க்க வேண்டும்; ஓய்வு ஊதியத்தின் உச்சவரம்பு தாழ்வானது.

மேற்கூறிய தேதிக்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு ஆண்டுச் சம்பளத்தின், சராசரியின் அடிப்படையில் 'பென்சன்' விழுக்காடு அதிகம்; உச்சவரம்பு உயரம்; அரசு ஊழியர்களாக இருந்தால் இதோடு 'கிராசுவடி'யும் அதிகம். 1978இல் பிறப்பித்த ஆணை இவற்றை இன்னும் தாராளமாக்கிற்று; மகிழ்ச்சியே.

முன்னே பிறந்து விட்ட குறை, முன்னே ஊழியம் பார்த்த குறை, கட்டைச்சம்பளத்தை உயர்த்தக் கோரிக் கிளர்ச்சி செய்யாத குறைக்காக,

முன்னே ஓய்வு பெற்றவர்களின் பென்சன், பழைய குறைந்த நிலையிலேயே, பற்றாக்குறையாக இருப்பது சரியல்ல.

அப்போதைக்கப்போது, பென்சன் விழுக்காட்டை, அதன் அளவை உயர்த்தியபோது, முன்னரே ஓய்வு பெற்றவர்களின் பென்சனை மறுபரிசீலனை செய்ய வேண்டியது நீதி.

புதுக் கணக்குப்படி, பென்சன் தொகையை முடிவுசெய்து, பழைய பாக்கியைத் தராமல், புதிய ஆணை பிறப்பித்த நாள் முதல், அதிக பென்சன் கொடுத்தல்தான் முறை.

இப்படிச் செய்வதால், குடிமுழுகிப் போகாது. பென்சன் உயர்வுபெறும் பழைய ஊழியர்கள் காயகற்பம் உண்டவர்கள் அல்ல; நெடுநாள் பென்சன் வாங்கிக் கொண்டு வாழப்போவதில்லை.

இந்த அநீதியை எண்ணி, எண்ணி ஏங்குவோர் பல கிழவர்கள். சொல்லிச் சொல்லி, வழி தெரியாமல் அமைதி பெறுவோர் சில கிழவர்கள்.

உண்மை உழைப்புக்குக் குட்டை பென்சனா?

குட்டைப் பென்சனில் ஓய்வு பெற்றவர், சின்னசாமி. பின்னர் ஓய்வு பெற்றவர், பணிக்காலம் **குறை**வாக இருந்தும் அதிக பென்சன் பெறுகிறார்கள்.

இதை எண்ணி, எண்ணித் தன்னை வாட்டி வதைத்துக் கொள்ள வில்லை. தன்னை மறந்து, தொடர்ந்து, பொதுத்தொண்டு ஆற்றுகிறார்.

மணி உயர்நிலைப்பள்ளியின் தாளாளராகவும், கோவை குப்புசாமி நாயுடு மருத்துவ மனையின் செயலராகவும் பணிபுரிந்து கொண்டிருக் கிறார்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் நன்னெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதால், எழுபது வயது இளைஞராக வாழ்கிறார்.

திரு. சின்னசாமியின் தந்தை, பெரியவர் நாராயணசாமி தொண்ணூற்று ஐந்து வயதுவரை நன்றாக வாழ்ந்தார்.

மைந்தர் சின்னசாமி விசுவேசுவரய்யாவைப் போன்று நூறாண்டு நல்வாழ்வு வாழட்டும்.

சின்னசாமியின் பெருந்தொண்டு, அவருக்குப் பயன்படுவதில்லை; குடும்பத்திற்குள் முடங்கி விடுவதில்லை; பரந்த வெளி உலகத்திற்கே பயன்படுகிறது.

திரு. சின்னசாமியின் வாழ்நாள் வளர வளர, மக்கள் அறிவும் நல்வாழ்வும் ஊக்கமும் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

திரு. சின்னசாமியின் மணிவிழாவில் அவருக்குப் பொன்னாடை போர்த்தும் பேற்றினைக் கோவை நண்பர்கள் எனக்கு அன்புடன் அளித்தார்கள். அப்போது நான் கூறியபடி,

''எனக்குக் கணக்குப்பாடம் சொல்லிக்கொடுத்து உதவிய, என் நெருங்கிய நண்பர் திரு. சின்னசாமி என்னோடு கொண்டிருந்த நட்புறவை, தனக்காக என்றும் பயன்படுத்தியதில்லை; தமக்கு எவ்விதச் சலுகையும் தேடிக்கொண்டது இல்லை; வேண்டியவர்களுக்காகவும் என்னை நெருங்கியதில்லை. அது மட்டுமா? எப்போதும் எவரைப் பற்றியும் என்னிடம் கோள் சொன்னதில்லை''.

கோவை நண்பர் திரு நா. சின்னசாமியின் கதையை இத்தோடு விட்டு, என் கதைக்குத் திரும்புவோம்.

கோவை நகரைப் பார்த்தபிறகு, உதகமண்டலத்திற்குப் புறப்பட்டேன். கோவையில் இருந்து நீலகிரி விரைவு வண்டியில் பயணம் ஆனேன். மூன்றாம் வகுப்புப் பயணமே.

எழில் கொஞ்சும் நீலகிரி

நான் முதன் முறை 1930இல் கண்ட நீலகிரி, இன்றைய நீலகிரியில் இருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது.

மேட்டுப் பாளையத்திலேயே மலையின் குளுமை வரவேற்றது. மலையேற ஏறக் குளுமை அதிகமாயிற்று.

மேட்டுப்பாளையத்திலிருந்து நீலகிரி அடிவாரத்துக்குச் செல்லும் நெடுஞ்சாலையோரங்களில் வானளாவ வளர்ந்திருந்த மரங்கள் கைகோர்த்துப் பந்தலிட்டாற்போல் காட்சியளித்தன.

இப்போதிருப்பதுபோல், இரு பக்கங்களிலும் கண்ணுக்கு எட்டும் தொலைவு வரை பாக்கு மரங்கள் பசுமையூட்டின.

மலைத்தொடரின் நிலை என்ன? பசுமை, பசுமை. எப்பக்கம் திரும்பினும் பசுமை. வகை வகையான இலைகள்; வண்ணப் பூக்கள், இயற்கையின் ஆட்சியைக் கண்டேன்.

'இவ்வளவு உயரமான மரங்களா! இவ்வளவு பருமனான மரங்களா!' என்று எண்ணி வியந்தேன்.

சுரண்ட வந்த ஆங்கில ஆட்சி, நீலகிரியின் இயற்கை வளத்தைப் பொறுப்போடு பாதுகாத்து வந்தது. ஓட்டை எண்ணி நாட்டைப் பாழாக்கவில்லை.

அக்காலத்திலும் நீலகிரியில் தேயிலை, காப்பித் தோட்டங்கள் இருந்தன. இந்திய மன்னர்களின், ஆங்கில அதிகாரிகளின், பாதிரிமார் களின், ஆங்கிலக் 'கறுப்புத் துரை'களின் பங்களாக்கள் இருந்தன.

அவற்றிற்குத் தேவையான குறைந்த அளவிற்கே, இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்டினார்கள்.

நூற்றாண்டுக் காடுகளை மூன்று திங்களில் அழித்த பெருமையை அன்னிய ஆட்சி தேடிக்கொள்ளவில்லை.

காடு திருத்தி நாடாக்குவது இன்றியமையாதது. ஆனால் காடே இல்லையெனில் நாடே இராது. நாடு முழுவதும் பாலையாகிவிடும்.

நாட்டின் எல்லைகளைக் காப்பது எவ்வளவு முன்னுரிமை பெறவேண்டியதோ அவ்வளவு முன்னுரிமை பெறவேண்டியவை, காட்டு வளத்தையும் சூழலையும் காப்பதுமாகும்.

நெடும் பரப்பு மரங்கள் செறிந்திருந்தால் குளுமை மிகும். மழை பெய்யும்; கொட்டும் மழை நீர் விரைந்தோடிவிடாது; பெருவெள்ள மாகிப் பாழாக்காது. கோடிக்கணக்கான கிளைகள் தாங்கி, வேர்கள் தடுத்து அனுப்புவதால் விரைவு குறையும்.

ஆனால் உழைப்பவர்களைத் தள்ளி வைத்துப் பாழாகிப் போவதுபோல், வாழ வைக்கும் நடவடிக்கைகளையும் ஒதுக்கி வைத்துக் கெட்டுப்போகிறோம்.

அக்கால நீலகிரியில் மரங்கள் எந்த அளவிற்குச் செறிந்திருந்தன?

ஒரு குன்றின் மீதுள்ள பங்களா வெளியில் நின்றுகொண்டு தொலை வில் உள்ள குன்றைப் பார்த்தால் இடையிலுள்ள பங்களாக்கள் கண்ணில் படா. அவற்றை மறைக்கும் அளவு மரம் செடி கொடிகள் செறிந்திருந்தன.

அன்னிய ஆட்சி, பாதுகாத்து நம்மிடம் விட்டுவிட்டுப் போன அக்காடுகளை, சோலைகளை மளமளவென்று வெட்டி அழிப்பதில் வேகமாகப் போட்டியிட்டோம்.

தன்னாட்சியின் கை கண்ட பலன், பசுமை நிறைந்த நீலகிரி மொட்டை மலையாக மாறியதே.

பொறுப்பில்லாமல் போட்டி போட்டு மரங்களை வெட்டி வீழ்த்தியதன் கொடிய விளைவை 1978ஆம் ஆண்டின் இறுதியில் கண்டோம். நிலச்சரிவுகள் அடுத்தடுத்து ஏற்பட்டன.

மிச்சமுள்ள நீலகிரியின் இயற்கை வளங்களையாவது காப்பாற்றக் கற்றுக் கொண்டால் நல்லது.

கொடைக்கானல், ஏற்காடு, நீலகிரி ஆகிய மலைகளின் மரவளத் தையும் அழிக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

உதகையில் நாலு நாள்கள்

இயற்கையின் எழில் கொஞ்சும் நீலகிரியில், மூன்று சக்கர இரயிலில் மெல்லப் பயணம் செய்தேன்.

எங்கே இறங்குவது என்ற கேள்வி என்னுள் எழுந்தது.

ஈரோடு, கோவை நகரங்களுக்குச் சென்றுவிட்டு உதகைக்குப் போனதால், திரு. தணிகைவேலுக்கு முன்கூட்டித் தகவல் கொடுக்க இயலவில்லை.

தணிகை என் நண்பர். ஆயினும் அவர் அப்பா, என் ஆசிரியர் ஆயிற்றே. முன் அறிவிப்பு இன்றித் திடுதிப்பென அவர் வீட்டிற்குச் சென்று பெட்டி பேழைகளோடு நிற்கக் கூசினேன்.

என் வகுப்பிலும் விக்டோரியா மாணவர் விடுதியிலும் எனக்கு நெருக்கமாயிருந்த நண்பர், தி.அ. இராமகிருஷ்ணன் என்பவர், கோடை விடுமுறையைக் கழிக்க நீலகிரி வந்திருந்தார். அவர் முகவரி என்னிடம் இருந்தது.

முதலில் அவர் இல்லத்திற்குச் செல்ல முடிவு செய்தேன்.

'பொன்குன்று' இரயில் நிலையத்தில் இறங்கினேன்.

படுக்கையையும் பெட்டியையும் ஓர் ஆளிடம் கொடுத்தேன்.

நான் குறிப்பிட்ட முகவரிக்கு அந்த ஆள் என்னை அழைத்துக் கொண்டு போனார்.... அவர் பின்னே நடந்தேன்.

நண்பரின் வீடு உயர்ந்த மேட்டில் இருந்தது. மேடு ஏறும் போது மூச்சு திணறியது.

சும்மா நடந்த என் பாடே அப்படியென்றால், சுமையையும் தூக்கிக் கொண்டு, குன்றேறிய ஆளின் நிலை எப்படி இருந்திருக்குமென்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்.

திரு. இராமகிருஷ்ணன் வீட்டை அடைந்தபோது, அவருடைய தந்தை திரு. அருணாசல முதலியாரும் அங்கிருந்தார். அவர் எனக்குப் பழக்கமானவர்; ஆர்வத்தோடு வரவேற்றார். விரைந்து சாப்பாடு போடச் செய்தார்.

அன்று மாலை, திரு. இராமகிருஷ்ணன் என்னை உதகைக்கு அழைத்துச் சென்றார். முதலில் திரு. தணிகை வீட்டிற்குச் சென்றோம்; அவரைக் கண்டோம்.

நான் யார் வீட்டில் தங்குவதென்பதைப் பற்றி அவர்கள் விவாதித்தார்கள்.

திரு. தணிகையின் விருந்தாளியாக, 'சைவ' ஓட்டலில் தங்கினேன்; உடுப்பிக்காரர்கள் நடத்திய ஓட்டல்; தூய்மையாக வைத்திருந்தார்கள்.

காலையும் மாலையும் திரு. தணிகையும் திரு. இராமகிருஷ்ணனும் வந்து என்னை அழைத்துக் கொண்டு போய் எனக்குப் பல இடங்களைக் காட்டினார்கள்.

உதகையின் குளுமையும் இயற்கைக் காட்சிகளும் நட்புறவும் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

மீண்டும் கனவு

மூன்று நான்கு நாள்கள் இன்பமாகக் கழிந்தன. பிறகு, இரவில் கனாக்கண்டேன்; துடித்து எழுந்தேன்; விடியலுக்காகக் காத்திருந்தேன்.

திரு. தணிகைவேலோடு தொடர்பு கொண்டேன். அன்றே ஊருக்குத் திரும்ப விரும்புவதாகக் கூறினேன். காரணத்தைச் சொல்லவில்லை.

எப்படியும் அன்றைய சென்னை இரயிலில் இடம்பிடித்துத் தர வேண்டினேன். அப்படியே செய்தார்.

பத்து நாள்கள் தங்குவதற்குப் பதில் நான்கு நாள்களோடு என்னுடைய உதகைப் பயணம் முடிந்துவிட்டது.

அரக்கோணத்தில் இரயில் மாறி, வாலாஜாபாத் வந்தடைந்தேன்.

அங்கிருந்து நெய்யாடுபாக்கத்திற்கு வாடகை ஒற்றை மாட்டுவண்டியை ஏற்பாடு செய்துகொண்டேன். மேடும் பள்ளமும் கடந்து, ஊர் போய்ச் சேர இரண்டு மணிகள் ஆயின.

என் கனவும் அதன் முடிவும்

நான், திடீரெனத் திரும்பிவிட்டதைப் பற்றி எல்லோரும் கலவரப்பட்டார்கள்.

உதகைக் குளிர் பிடிக்கவில்லை என்று அமைதியாகக் கூறிவிட்டேன்.

என் தந்தையிடம் மட்டும் தனியாக உண்மையைக் கூறினேன். அது என்ன?

என் தாயாரைப் பெற்ற பாட்டி இறந்துவிட்டார்கள் என்று கனவில் சேதி கேட்டுத் திடுக்கிட்டேன். அப்புறம் உதகையில் இருப்புக் கொள்ளவில்லை. எனவே, விரைவில் திரும்பிவிட்டேன் என்று தந்தையிடம் கூறினேன்.

நான் வீணாகக் கவலைப்பட்டேன் என்பது என் தந்தையின் முடிவு. ஏன்?

என் பாட்டிக்கு எவ்விதக் குறிப்பிட்ட நோயும் இல்லை; நான் வெளியூர் சென்றிருந்த பத்து நாள்களில், பாட்டியின் உடல்நலத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

கெட்ட கனவை மறந்துவிடவும் வேறு யாரிடமும் பேச்சு மூச்சு விட வேண்டாம் என்றும் தந்தை கட்டளையிட்டார். அப்படியே இருந்தேன். கவலையை மறந்தும் இருந்தேன்.

ஆனால், நாலைந்து நாள்களுக்குப் பிறகு, என் அருமைப் பாட்டியார், நொடியில் கண் மூடிவிட்டார்கள். நான் அஞ்சியது நடந்துவிட்டது. என் செய்ய?

நான் அந்தப் பாட்டிக்கு மிகவும் வேண்டியவன்; ஆகவே எனக்கு அதிர்ச்சி அதிகம். காலம் நகர்ந்தது.

43. மேல் பட்டப்படிப்பு தொடர்ந்தது

முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன்

இண்டர்மீடியட் தேர்வு முடிவுகள் வெளியாயின. முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். மட்டற்ற மகிழ்ச்சி.

மதிப்பெண்கள் வந்தபோது மேலும் மகிழ்ச்சி. ஏன்? கணக்கிலும் பௌதிகத்திலும் அக்காலநிலைக்குத் தாராளமாக மதிப்பெண்கள் பெற்றிருந்தேன்.

ஏற்கெனவே பொறியியற் கல்லூரியில் சேர்வதில்லை என்ற என் முடிவை என் தந்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அப்படியானால் எதில் சேருவது?

கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்கியவர்கள் இருந்தார்கள். அத்தனை பேர்களையும் பி.ஏ. கணக்குச் சிறப்பில் சேர்க்கப் போதுமான இடங்களில்லை. ஆகவே அதற்கு முயல்வதில் பயனில்லை.

பௌதிகத்தில் இடம் குறைவே. மாநிலக் கல்லூரியில் ஆறே இடம். முதல் ஆறில் என் மதிப்பெண் இருக்குமா என்பது கேள்விக்குறி.

ஆயினும் மதிப்பெண் பெற்ற சிலர் பொறியியல் படிக்கச் சென்றுவிடக்கூடும். அப்படியானால் எனக்கு இடம் கிடைக்க வாய்ப்பிருக்கலாம்.

இந்த அடிப்படையில் பௌதிகம் (சிறப்புப்) பாடத்திற்கும் பொருளியல் (சிறப்புப்) பாடத்திற்கும் மனுச்செய்தேன்.

நான் அதே கல்லூரி மாணவன்; முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவன். எனவே எனக்கு முன் உரிமை இருக்குமென்று கருதினேன்.

அந்த நம்பிக்கையாலும் பாட்டியை இழந்த துக்கத்திலிருந்து மீளமுடியாமையாலும் கல்லூரியில் இடம் வாங்கச் சென்னைக்குச் செல்லவில்லை.

ஊரோடு இருந்து, வழிமேல் விழிவைத்து அஞ்சலுக்காகக் காத்து இருந்தேன்.

நான் எதிர்பார்த்தது வரவில்லை. நண்பர் தி.அ.இராமகிருஷ்ண னிடம் இருந்து கடிதம் வந்தது. அதில் செய்தியும் இருந்தது. என்ன செய்தி?

பி.ஏ. பொருளியல் சிறப்பு வகுப்பில் அவர் சேர்க்கப்பட்டு விட்டார். சில நாள்களுக்கு முன்பு தகவல் வந்ததாம். உடனே சம்பளத்தைக் கட்டிக் கல்லூரியில் சேர்ந்து விட்டாராம்.

இரண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்ற தமக்கே இடம் கிடைத்திருக்கையில், அதைவிட நிறைய மதிப்பெண்கள் பெற்ற எனக்கு இடம் கிடைத்திருக்கும் என்று நம்புவதாகவும் எழுதியிருந்தார்.

தாம் பல பாடங்களிலும் பெற்ற மதிப்பெண்களையும் எழுதியிருந்தார்.

சென்னையில் தாம் சில நாள்கள்வரை தங்கிவிட்டு, பிறகு ஊருக்குச் சென்று, கல்லூரி திறப்பதற்கு முந்திய நாள் வரப்போவதாக எழுதியிருந்தார். இதை என் தந்தையிடம் காட்டினேன்.

நான் சென்னைக்குச் சென்று இது பற்றிக் கேட்டுவர வேண்டுமென்று ஆணையிட்டார். அப்படியே சென்றேன்.

தக்காரின் பரிந்துரை

திரு. இராமகிருஷ்ணனைக் கண்டுபிடித்துக் கேட்டேன். அவர் எதையும் என்னிடம் ஒளிக்கவில்லை.

தம் தந்தை, பிரபல வழக்கறிஞர் திரு. வி.எல். எதிராசை நண்பர் ஒருவர் வழியாகப் பிடித்தார்.

அவர் அப்போதைய மாநிலக் கல்லூரி முதல்வர் திரு. நெவெரல் ஸ்டேதத்திற்கு நெருங்கிய நண்பர்.

எனவே, திரு. எதிராசின் பரிந்துரை பலித்தது. சாதாரண மதிப்பெண் பெற்றிருந்த தமக்குச் சிறப்பு வகுப்பில் இடம் கிடைத்தது என்றார்.

அது மட்டுமல்ல; எங்கள் இருவருக்குமே நல்ல நண்பராகிய, திரு. சொக்கலிங்கத்திற்கும் இடம் கிடைத்து விட்டது. அவருடைய மதிப்பெண்களும் என் மதிப்பெண்களை எட்டா.

காலம் தாழ்த்தாது உடனே தக்கார் பரிந்துரையைத் தேடிக் கொண்டு வந்தால், எனக்கும் மாநிலக் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று இராமகிருஷ்ணன் ஆலோசனை கூறினார்.

நெய்யாடு பாக்கத்திற்குத் திரும்பிச் சென்றேன். கேட்டதைச் சொன்னேன்.

என் அம்மான் திரு. சுந்தரசேகரன் என் தந்தையையும் என்னையும் அழைத்துக் கொண்டு, செங்கற்பட்டிற்குச் சென்றார். மேலமையூர் வேதாசல முதலியாரைக் கண்டார்.

இருவரும் உண்மையான நண்பர்கள். செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிக் குழுவில் ஒரே உறுப்பினர்கள்.

எனக்கு எப்படியும் இடம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று என் மாமா கேட்டதும் திரு. வேதாசலம் அரைமணியில் காரில் சென்னைக்குப் புறப்பட்டார். எங்களை அழைத்துக் கொண்டு போனார்.

கார் சென்னையில், அப்போதைய மலைச்சாலையில் காஸ்மாபாலிடன் கிளப்பிற்குக் கிழக்கே உள்ள கட்டடத்திற்குள் நுழைந்து நின்றது.

எவரை எதிர்பார்த்து, எங்களை அங்கு அழைத்துச் சென்றாரோ அவர் அங்கிருந்தார். இத்தகவலைக் கார் நின்ற நொடியில், திரு. வேதாசல முதலியார் தெரிந்துகொண்டார்.

''பாதி வெற்றி! முதலியாரைப் பிடித்துவிட்டோம். மற்ற பாதி அவர் வழியாக'' என்று சொல்லிக்கொண்டே படியேறிச் சென்றார். நாங்கள் அவரைப் பின்தொடர்ந்தோம்.

இராமசாமி முதலியார் செய்த உதவி

மாடியில் யாரைக் கண்டோம்? 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில நாளிதழின் ஆசிரியரான திரு. ஆ. இராமசாமி முதலியாரைக் கண்டோம்.

அவர் கலகலப்பாகவே வரவேற்றார். எல்லோருக்கும் இருக்கை கொடுத்தார்.

பிறகு, திரு. வேதாசல முதலியார், என் தந்தையையும் அம்மானையும் திரு ஆ. இராமசாமி முதலியாருக்கு அறிமுகம் செய்தார்.

''இவர்களையா எனக்குத் தெரியாது! என்னைத் தெரியாத போதே, என்னை எதிர்த்து அவர்கள் சாதியைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுவதையும் பொருட்படுத்தாது, சட்டமன்றத் தேர்தலில், மாகறல் பிர்க்காவில் நூற்றுக்கு, தொண்ணூறு விழுக்காட்டிற்கு மேல் வாக்குப் பெற்றுத் தந்தவர்கள் ஆயிற்றே. நம் கொள்கையில் உறுதியாக நிற்பவர்களாயிற்றே'' என்று திரு. ஆ. இராமசாமி முதலியார் பளிச்சென்று கூறினார்.

''சுந்தரவடிவேலுக்கு மாநிலக் கல்லூரியில் பொருளியல் சிறப்பு வகுப்பில் இடம் கிடைக்கத் தவறிவிட்டது; இதைவிடக் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற இருவருக்கு இடம் கொடுத்து விட்டார்கள். எப்படியும் இவருக்கு இடம் பிடித்துக் கொடுக்க வேண்டும். அதற்காகவே இவர்களை இவ்வளவு தூரம் அழைத்து வந்திருக்கிறேன்'' என்று திரு. வேதாசலம் கூறினார்.

அடுத்த நொடியே ஆசிரியர் திரு. ஆற்காட்டு இராமசாமி முதலியார் ''பொருளியல் பாடத்திற்கு மாநிலக் கல்லூரியைவிட, லயோலாக் கல்லூரி நல்லது. என் நண்பர், சங்கைக் குரிய பேஸ்னாக் அவர்களோடு இப்போதே தொலைபேசியில் பேசி, இடம் வாங்கித் தருகிறேன். அங்கே போகிறாயா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

நான் திகைத்தேன். என் முகம் வாடியது. அதைக் கண்ட திரு. வேதாசலம் எனக்காக அவரே, பதில் சொன்னார்.

என்ன பதில்?

''இவனுக்கு ஒரு பெண் பிடித்திருக்கிறது. அதை முடித்து வையுங்கள், என்று கேட்க வந்தால், இன்னொரு பெண் நன்றாயிருப்பாள் என்று சொல்கிறீர்களே'' என்று பதில் உரைத்தார்.

திரு. ஆ. இராமசாமி முதலியார் ஆத்திரங் கொள்ளவில்லை. மாறாக, சிரித்துக் கொண்டே,

''நமக்கு வேண்டியவர்கள் ஆயிற்றே என்று மாற்று ஆலோசனை கூறினேன். அதை இதோடு விட்டுவிடுவோம். மாநிலக் கல்லூரி முதல்வருக்கே பரிந்துரை கொடுக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு போய்க் கொடுங்கள். அவர் சொல்லும் பதிலையும் என்னிடம் வந்து சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுத் தம்முடைய சுருக்கெழுத்தாளரைக் கூப்பிட்டு திரு. ஸ்டேதத்திற்கு ஒரு கடிதத்தை உரைத்தார்.

சுருக்கு எழுத்தாளர், அதைத் தட்டெழுத்தில் பதிந்து கொண்டு வந்தார். அதைப் படித்துப் பார்த்துவிட்டு, கையெழுத்திட்டுக் கொடுத்தார். எனக்கு வெற்றி கிட்டட்டுமென்று அன்புடன் வாழ்த்தியும் அனுப்பினார்.

கல்லூரி முதல்வர் முகம் சிவந்தது!

திரு. வேதாசலம், எங்களைத் தம் காரில் மாநிலக்கல்லூரிக்கு அழைத்துப் போனார். முதல்வர் அப்போது அங்கு இல்லை. மீண்டும் போனோம்.

எனக்கு மட்டும் பேட்டி கிடைத்தது. உட்கார ஆசனமும் கிடைத்தது. திரு. ஆ. இராமசாமி முதலியாரின் கடிதத்தை திரு. ஸ்டேதத்திடம் கொடுத்தேன். பொறுமையாகக் கடைசிவரை படித்தார். ஆனால் முகம் சிவந்தது.

''நீ பெற்றுள்ள மதிப்பெண்களுக்கு, பொருளியல் சிறப்பு வகுப்பில் இடங்கிடைத்திருக்க வேண்டும். நீ மனுவைப் பூர்த்தி செய்கையில் ஏதாவது தவறு இழைத்துவிட்டாய் போலும். இல்லையென்றால் இந்த மதிப்பெண்ணுக்கு எப்படி இடங்கொடாமல் தள்ளியிருப்பேன்'' என்று மடக்கினார்.

நான் பதற்றம் அடையவில்லை. நான் தவறு செய்திருக்க முடியாது என்று உறுதியாக நம்பினேன். பிறர், தவறு செய்திருந்தால், அதைச் சுட்டிக்காட்டிப் பெறப்போவது ஒன்றுமில்லை என்றும் கருதினேன். எனவே,

''தயவுசெய்து என் மனுவை எடுத்துப் பாருங்கள். நான் தவறு செய்திருந்தால், இவ்வாண்டு எனக்கு இடம் கொடுக்காதீர்கள். அடுத்த ஆண்டு வந்து நிற்கிறேன்'' என்றேன்.

பதிவு செய்வோர் செய்த தவறு

''நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு என்னை வந்து பார். அதற்குள் உன் மனுவை எடுத்துப் பார்த்து வைக்கிறேன். உன் பிழையால், உனக்கு இடம் கிடைக்காமற் போயிருந்தால், என்னைத் தொந்தரவு செய்யாதே; கொடுப்பதை எடுத்துக்கொள்'' என்று திரு. ஸ்டேதம் என்னிடம் கூறினார்.

ஒப்புக்கொண்டு வெளியேறினேன். திரு. வேதாசலம் இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். எங்கள் மூவரையும் சென்னையில் விட்டுவிட்டு, அவர் செங்கற்பட்டிற்குத் திரும்பிச் சென்றார்.

மறுநாள், மூவரும் மாநிலக் கல்லூரிக்குச் சென்றோம். குறித்த நேரத்தில் பேட்டி கிடைத்தது. என்னை நாற்காலயில் உட்கார வைத்துவிட்டு,

''உன் மனுவைப் பார்த்தேன். நீ சரியாக எழுதியுள்ளாய். அலுவலகத்தில் பதியும்போது, உன் பெயரை பௌதிகம் சிறப்புப் பட்டியலில் சேர்த்துவிட்டார்கள். எனவே, உன்னை பி.எஸ்.ஸி பட்டப் படிப்பிற்குத் தேர்ந்தெடுத்துள்ளேன். இன்னும் ஒரு மணியில் அறிவிப்புப் பலகையில் உன் பெயரைக் காணலாம். சம்பளப் பணத்தைக் கொண்டுவந்திருந்தால், உடனே கட்டிவிட்டுச் சேர்ந்துகொள்'' என்று கல்லூரி முதல்வர் திரு. ஸ்டேதம், மளமளவென்று ஆங்கிலத்தில் கூறினார். அவர் பேசி முடித்ததும்,

''ஐயா! மன்னிக்கக் கோருகிறேன். நான் வேண்டுவது, சிறப்புப் படிப்பு; சாதாரணப் படிப்பு எனக்கு வேண்டாம். பௌதிகத்தில் இடம் கொடுப்பது கடினம்; என்னைக் காட்டிலும் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள், அப்பிரிவுக்கு மனு செய்திருக்கக்கூடும். ஆகவே, பொருளியல் சிறப்பு வகுப்பில் என்னைச்சேர்த்துக் கொள்ளும்படி கோருகிறேன். அதற்குப் போதுமான மதிப்பு எண்களை நான் பெற்றிருக்கிறேன்'' என்று கூறி வேண்டினேன்.

''ஆம், பொருளியல் சிறப்புப் பிரிவிற்கு உன் மதிப்பெண்கள் போதும். ஆனாலும் நீ காலந்தாழ்த்தி வந்துவிட்டாய். பன்னிரண்டு இடங்களும் நிரம்பிவிட்டன. இனி நான் என்ன செய்ய முடியும்?'' என்றார் திரு. ஸ்டேதம்.

அந்தக் கால கட்டத்தில், விதிமுறைகளைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே நான்,

''அய்யா! நான் நாட்டுப்புறத்தில் குடியிருப்பவன். எங்கள் ஊருக்கு வாரத்திற்கு ஒரு முறையே அஞ்சல் வரும். காலந்தாழ்த்தி வந்ததற்கு அதுவே காரணம். தயவு செய்து, என்னைப் பொருளியல் சிறப்பு வகுப்பில் பதின்மூன்றாவது மாணவனாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சில நாள்கள்வரை பொறுத்திருக்கச் சொன்னால் பொறுத்திருக்கிறேன்'' என்றேன்.

''உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. வகுப்பு இடங்களை நானாக அதிகப்படுத்திவிட முடியாது. நீ, இப்போதைக்கு, பி.எஸ்.ஸி. (பௌதிக) வகுப்பிற்குச் சம்பளம் கட்டிவிடு. பின்னர் முடியுமானால், உன்னைப் பொருளியல் (சிறப்பு) வகுப்பிற்கு மாற்றித் தருகிறேன்'' என்றார் கல்லூரி முதல்வர்.

''கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். இன்றைக்கே சம்பளம் கட்டிவிடுகிறேன். தயவுசெய்து, கல்லூரி திறக்கும்போதாகிலும் மாற்றிக் கொடுங்கள். இல்லாவிடில் ஓராண்டு காலத்தை வீணாக்கிவிட்டு, மீண்டும் மனுச் செய்துவிட்டு, தங்களுக்குத் தொல்லை கொடுக்க நேரிடும். ஏனென்றால், எனக்குச் சிறப்பு (ஆனர்ஸ்) படிப்பு மட்டுமே பிடிக்கிறது; இல்லாவிட்டால், பொறியியல் கல்லூரிக்குப் போயிருப்பேன்'' என்று கூறி வேண்டினேன்.

''ஆம் நீ முயன்றிருந்தால், உனக்குப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கும். இப்போது, என்னாலான உதவிசெய்ய முயல்கிறேன்'' என்றார் கல்லூரித் தலைவர்.

நான் நன்றி சொல்லிவிட்டு, விடைபெற்றுக் கொண்டேன். கீழ் தளத்திற்கு வந்து காத்திருந்தேன்.

பி.எஸ்.ஸி (பௌதிகப்) பட்டியல் ஒட்டப்பட்டது. உடனே அலுவலகத்தில் சம்பளத்தைச் செலுத்தினேன். பிறகு ஊருக்குத் திரும்பினேன்.

பதின்மூன்றாவது மாணவனாகச் சேர்ந்தேன்

கல்லூரி திறப்பதற்கு முதல் நாள் சென்னைக்கு வந்தேன். கல்லூரி முதல்வரைக் கண்டேன். என்னைப் பொருளியல் சிறப்பு வகுப்புக்கு மாற்றும்படி ஒரு சீட்டில் எழுதிக்கொடுத்தார்.

அதை அலுவலகத்தில் சேர்த்தேன்; கூடுதலாகக் கட்ட வேண்டிய சம்பளத்தைக் கட்டினேன்.

அந்த வகுப்பில் பதின்மூன்றாம் மாணவனாகச் சேர்ந்தேன்.

கல்லூரி முதல்வர், கூடுதலாக ஓர் இடம் கேட்டு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதி, சிறப்பு அனுமதி பெற்றாராம். அவ்விடத்தில் நான் சேர்க்கப்பட்டேன், என்று அலுவலகத்தில் கேள்விப்பட்டேன்.

'பதின்மூன்று நல்ல எண்ணல்ல. இன்னும் யாராவது, தொல்லைப்படுத்தி, பதினான்காக்கிவிடட்டும்', என்று பேச்சுவாக்கில் சொன்னார், ஓர் எழுத்தர். ஆனால் பதினான்காம் ஆள் சேரவில்லை.

பொருளியல் சிறப்பு வகுப்புகளில் மற்ற வகுப்புகளைப்போல நாள்தோறும் அய்ந்து மணிகள் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை.

நாளைக்குச் சராசரி இரண்டு மணிகள் வகுப்பு நடக்கும். மற்ற நேரம் ஊர் சுற்றித் திரிவதற்காகவா? இல்லை.

சிறப்பு வகுப்பில் சேர்வோர், வகுப்பு அறைகளில் பாடம் கேட்பதைவிட, அதிகமாகத் தாமே முயன்று, பலநூல்களைக் கற்கவேண்டும். மாணவர்களைச் சொந்தக் கால்களில் நிற்கப் பழக்குவதே குறிக்கோள்.

என் வகுப்பு மாணவர்கள் பலபேர், இந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்ப நடந்துகொண்டார்களென்று கூறலாம்.

என் வகுப்பில் சேர்ந்தவர்களில், இருவர் ஏற்கெனவே என் நண்பர்கள்.

அவர்கள் திருவாளர்கள் சொக்கலிங்கமும் இராமகிருஷ்ணனும் என்று நினைவுபடுத்துகிறேன்.

மற்றவர்கள், வெவ்வேறு கல்லூரிகளிலிருந்து வந்தவர்கள். ஒரிசாவில் உள்ள பெர்ஆம்பூரிலிருந்து செல்வி மனோரமா என்பவர் சேர்ந்திருந்தார். மேலும் செல்வி சாரதா என்னும் மாணவியும், செல்வி மெக்லியட் என்னும் ஆங்கிலோ இந்திய மாணவியும் அவ்வகுப்பில் படித்தார்கள்.

திரு. அகாஇலாலி என்பவர் பெங்களூரிலிருந்து வந்து சேர்ந்தார். திரு. பவானி சங்கர் என்பவரும் பெங்களூரில், இண்டர்மீடியட் படித்துவிட்டு, நான் படித்த சிறப்பு வகுப்பில் சேர்ந்தார்.

திரு. வாசுதேவன், திரு. கிருஷ்ணமூர்த்திராவ், திரு. நாராயணராவ் ஆகியோர் சகமாணவர்கள். மற்றும் இருவர் பெயர்கள் நினைவில் இல்லை.

44. தேர்தல் களத்தில்!

இலாலியின் முடிவை மாற்றினேன்

திரு. அகாஇலாலி, வெள்ளைவெளேரென்று இருப்பார். நல்ல உயரம்; ஒத்தை நாடி உடம்பு. நன்றாகச் செதுக்கியது போன்ற மூக்கு, விழிகள்.

அவர் விக்டோரியா மாணவர் விடுதியில் சேர்ந்தார். ஆண்டின் தொடக்கம்; எல்லா விடுதிகளிலும் 'கிண்டல் பருவம்'; விக்டோரியா விடுதியில் திரு. இலாலியை 'லீலாவதி' என்று அழைத்துக் கிண்டல் செய்ய முனைந்தார்கள்.

திரு. இலாலி அதுவரை செல்லமாக வளர்ந்தவர். பெங்களூரில் படித்த வரையில் அவரை யாரும் கேலி செய்திருக்க மாட்டார்கள். ஏன்? மைசூர் திவானாயிருந்த முகமது இஸ்மெயிலுக்கு நெருங்கிய உறவினர் திரு. இலாலி.

ஆகவே, மற்றவர்கள் தம்மை மதிப்புக்குறைவாக நடத்தியதை, இரண்டொரு நாள்கள் பொறுத்துக் கொள்வதே அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது.

அவர் வகுப்பு மாணவர்களில் நானே பொடியன். விடுதியில் மூன்றாவது ஆண்டு தங்குபவன்.

எனவே, ஓர் இரவு இலாலி என் விடுதி அறைக்கு வந்தார். மனம் திறந்து, கண்கலங்கப் பேசினார்.

''என்னால் அக் கிண்டலைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை; ஆயினும் தாக்கிப் பேசும் இயல்பு எனக்கு இல்லை. எனவே, சென்னையில் படிப்பதை விட்டுவிட்டு, திரும்ப பெங்களூருக்கே சென்று படிக்கத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்று என்னிடம் விரிவாகக் கூறினார்.

நான் பொறுமையை இழக்காமல் கேட்டேன். பிறகு ஆறுதல் கூறினேன்; மேலும் பேசினேன். என்னைக்கூடப் 'பொடி பொடி' என்று எங்குப் பார்த்தாலும் கிண்டல் செய்ததைச் சொன்னேன்.

''சிறப்பு வகுப்பிற்கு வந்த பிறகும் சிற்சிலபோது, அப்படியே அழைப்பது என் நெஞ்சில் குத்துகிறது. ஆயினும், பிறர்க்கஞ்சி ஓடுவது கோழைத்தனம்.

''அப்படியிருக்க, இலாலி, கோழைகளின் வழியைப் பின்பற்றக்கூடாது; கிண்டல்களைத் தாங்கிக்கொண்டு, கருமத்தின்மேல் கண்ணாயிருப்பதே தனித்தன்மை. சிரித்தவர்கள் போற்றும் நிலைவரும்; அதுவரை பொறுமையாக இரு. கடமையின்மேல் கருத்தாயிரு'' இப்படிக் கூறி ஊக்கப்படுத்தினேன்.

என்னுடைய முயற்சி பலித்தது. அவர் தொடர்ந்து சென்னையில் படித்தார்.

இலாலியின் புகழும் எனது சங்கடமும்

இலாலிக்கு ஏற்கெனவே மேடைப் பேச்சில் பழக்கமுண்டு.

மாநிலக்கல்லூரி மாணவர் பேரவையில் பேசத் தலைப்பட்டார்.

அவருக்கு ஆங்கிலம் ஆற்றொழுக்கா வந்தது. அதோடு பேசும் பொருள் பற்றி முன் கூட்டியே சிந்தித்து, படித்துக் குறிப்பு எடுத்துக்கொண்டு பேசும் பொறுப்புணர்ச்சி இருந்தது.

எனவே, இரண்டு மூன்று கூட்டங்களிலேயே, அக்கல்லூரியில், குறிப்பிடத்தக்க பேச்சாளர்களில் ஒருவர் என்னும் புகழைப் பெற்றுவிட்டார்.

திரு. இலாலியின் புகழ் எனக்குச் சங்கடமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. மாநிலக் கல்லூரி மாணவர் பேரவைப் பொறுப்பாளர் பதவிகளுக்குத் தேர்தல் நடந்தது.

திரு. இலாலி செயலாளர் பதவிக்குப் போட்டியிட விரும்பினார். என் ஆதரவை வேண்டினார்.

திரு. இலாலி என் நண்பர் என்பதோடு மற்ற எல்லா வகையிலும் அப்பதவிக்குத் தகுதி படைத்தவர். எனவே, நான் நொடியும் தயங்கவில்லை. அவருக்காக, வாக்குதேட உடன்பட்டேன்.

என் நிலை என்ன?

மாநிலக் கல்லூரியில், என்னுடைய இரண்டாம் ஆண்டு முதல், மாணவர்களிடம் வாக்குகளைச் சேர்க்கும் கலை, எனக்குப் பழக்கமாகிவிட்டது. யாரை விட்டும் பதுங்கிப் போகாத, என் அக்கால இயல்பு எனக்கு உதவிற்று.

இரண்டு நாள்களுக்குப் பிறகு, மற்றொரு பழைய நண்பர் என்னை அணுகினார். தாம் கல்லூரித் தேர்தலில் போட்டியிடப் போவதாகச் சொல்லி, வாக்குச் சேகரிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டார்.

இலாலி எனக்கு அறிமுகமாவதற்கு முன்பே, இவர் எனக்கு வேண்டியவர். நான் ஏற்கெனவே இலாலிக்கு வாக்குக்கொடுத்து விட்டதைப் பதிலாகக் கூறினேன். இருவரில், தாமே எனக்கு நீண்டநாள் நண்பர் என்பதைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தினார்.

அதற்காகவும் நான் சொன்ன சொல்லைத் தவற முடியாது என்றேன். தேர்தல் காய்ச்சல் கண்டுவிட்டால், ஏதேதோ உளற நேரிடும். அந்நிலை என்னுடைய பழைய நண்பருக்கு ஏற்பட்டது.

சொன்ன சொல்லைக் காப்பாற்றினேன்

''என்ன இருந்தாலும் அவர் மைசூர்க்காரர். முஸ்லீம். அப்படியிருக்க நீ போய் அவருக்கு வேலை செய்யலாமா? வாக்குக் கொடுத்ததற்காக உன் வாக்குச்சீட்டை வேண்டுமானால், அவருக்குக் கொடு; எவரிடமும் அவருக்கு ஆதரவாகப் பேசாதே. இந்த அளவு உதவியைச் செய்'' என்று வேண்டினார்.

அவருடைய வாதமே அவருக்குப் பகையாகிவிட்டது.

'செயலாளர் பதவிக்குப் பேச்சுத் திறன்', அவை அஞ்சாமை, பல பெரியவர்களைக் கண்டு பேசி, கல்லூரிக் கூட்டத்திற்கு அழைத்துவரும்

செயல்திறன், பொறுப்புணர்ச்சி, நேர்மை ஆகியவை கவனிக்கப்பட வேண்டும்.

'இலாலிக்கு இத்தனையும் இருக்கிறது. அவர் இஸ்லாமியர் என்பதும், மைசூர்க்காரர் என்பதும் பொருத்தம் அற்றவை. பிந்திய நிலை, அவருடைய பதவிப் பணியைப் பாதிக்காது.'

என் நெஞ்சில், இப்படிப்படவே பளிச்சென்று அதைச் சொல்லிவிட்டேன். என்னிடம் இருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாமென்று, திட்டவட்டமாகக் கூறிவிட்டேன்.

என் பழைய நண்பர் குப்புசாமிக்கு மிகப் பெரிய ஏமாற்றம்.

''போயும் போயும் உன்னிடம் அவற்றைச் சொன்னேனே! நீதான் எல்லோரும் ஒன்று என்பதை மெய்யாக நம்புகிறவனாயிற்றே'' என்று சலிப்போடு சொல்லிவிட்டு, விடைபெற்றார்.

என் ஆர்வம் பெருகிற்று. இலாலிக்கு ஆதரவாகத் தேர்தல் களத்தில் குதித்தேன். சுழன்று சுழன்று பணியாற்றினேன். தேர்தல் நடந்தது. முடிவு அறிவிக்கப்பட்டது.

என் ஆதரவு பெற்ற திரு. இலாலி, தாராளமான பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்டார். என் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையுண்டோ? இலாலிக்கு வாக்களித்ததைப் பற்றி, யாரும் குறைபட்டுக் கொள்ள நேரிடவில்லை. அவ்வளவு திறமையாக அவர் செயல்பட்டார்.

அதைவிடச் சிறப்பு, எல்லோரிடமும் இனிமையாக நடந்து கொண்டார். போட்டி இட்டவர்களோடும் பகையுணர்ச்சியைப் பெருக்கிக்கொள்ளவில்லை.

என் நேர்மைக்கு ஏற்பட்ட சோதனை

தோற்ற திரு. குப்புசாமி, எனக்குப் பகையாகிவிட்டாரா? இல்லை. நண்பராகவே தொடர்ந்து இருந்தார்.

வாழ்க்கையோட்டம் அவரை எங்கெங்கோ கொண்டு போயிற்று. பட்டதாரியான பின் திரு. குப்புசாமி, சிற்சில பதவிகளில் இருந்துவிட்டு, இந்திய அரசில் சேர்ந்தார்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நான் சென்னை மாநிலத்தின் பொதுக்கல்வி இயக்குநராக, தில்லிக்குச் செல்லும் பேறு பெற்றேன். நண்பர் குப்புசாமியைக் கண்டேன். பழைய பாசத்தோடு நடந்து கொண்டார்.

அடுத்தடுத்து, பலமுறை தில்லியில் அவரைக் கண்டேன்; அளவளாவினேன். அவர், கலகலப்பான பேர்வழி. திரு. குப்புசாமி

எதிர்பாராமல் ஒருமுறை அவர் நெஞ்சில் ஏற்பட்ட வடுவை எனக்குக் காட்டிவிட்டார். என்ன வடுவை?

மாநிலக் கல்லூரித் தேர்தலில் நான் திரு. குப்புசாமிக்கு ஆதரவு கொடுக்காததை உடன் இருந்த நண்பர்களுக்குக் குத்தலாகச் சுட்டிக்காட்டினார்.

அது என்னைச் சுட்டது.

தேர்தல் என்பது தனிப்பட்ட நட்பின் நன்றியின் வெளிப்பாடாக மட்டும் இருந்தால், பொதுநலன் பாதிக்கப்படலாம். யாருக்கு வாக்களிப்பது என்பதை வள்ளுவர் வழியில் முடிவு செய்ய வேண்டும். வள்ளுவர் வழி என்ன?

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்பதாகும் அல்லவா?

அரசியல் முதிர்ச்சியின் அடையாளம் எது? தேர்தல்களின்போது, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவைத்துவிட்டு, குறிப்பிட்ட காலகட்டத்தில் எவ்வெப் பணிகள் ஆற்றப்பட வேண்டும்; அதை ஆற்றக்கூடிய திறமை உடையவர்கள் எவர் எவர்?

அப்படி ஆற்றும்போது, மாறுபட்டவர்களையும் அரவணைத்து அமைதிப்படுத்தி முன்னேறுவார்களா?

மாறுபட்டவர்களைப் பகைவர்களாகவே மாற்றி, அமைதியைக் குலைப்பார்களா? இவற்றைக் கணக்கில் கொண்டு வாக்களித்தல் வாக்காளர்களின் தெளிவான அரசியல் முதிர்ச்சியைக் காட்டும்.

எடுத்துக்காட்டொன்று நினைவிற்கு வருகிறது. இரண்டாவது உலகப் போர் மூண்ட பிறகே பிரிட்டன், ஆட்சித் தலைமையைச் சர்ச்சிலிடம் ஒப்படைத்தது. சர்ச்சில் பிரிட்டனுக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.

அடுத்து வந்த பொதுத் தேர்தலில் சர்ச்சிலின் கட்சியைப் பிரிட்டன் ஆளவிட வில்லை. ஏன்? 'போராடச் சர்ச்சில் அமைதிப் பணிக்கு அட்லி' என்பது பிரிட்டானியர்கள் எடுத்த முடிவு.

நான் கல்லூரி மாணவப் பருவத்தில் தேர்தலில் இலாலிக்கு வேலை செய்தது சரி என்பதில் எனக்குத் தெளிவு இருந்தது. திரு. குப்புசாமி சுட்டிக்காட்டியபோதும் எனக்குக் குழப்பம் சிறிதும் ஏற்படவில்லை? ஆனால்?

திரு. குப்புசாமி அய்யர் எத்தனை எத்தனை பெரியவர்களிடம் எப்படி எப்படிச் சொன்னாரோ? அதற்காக நான் எவ்வளவு விலை கொடுக்க நேரிடுமோ? இப்படி ஐயங்கள் ஏற்பட்டன!

'மனச்சான்றுப்படி நடந்தோம்; வந்ததை ஏற்றுக் கொள்வோம். குற்றம் புரியாமலே பழிக்கு ஆளானாலும் ஓடி ஒளியத் தேவையில்லை' என்று என்னைத் தேற்றிக் கொண்டேன்.

படிப்பும் விளையாட்டும்

நான் மாணவனாக இருந்தபோது சிறப்புப் பாடம் படிப்போர், ஓரளவு ஆங்கிலமும் படிக்க வேண்டும்; அது உரைநடைப் பகுதியே.

திரு. வேங்கடாசலம் என்பவர் ஆங்கிலப் பாடம் எடுப்பார் பொறுமையாகச் சொல்லிக் கொடுப்பார்.

முதலாண்டில் பொருளியல் பாடங்கற்றுக் கொடுத்தவர் திரு. வேங்கடாச்சாரி. அவர் புதுப்புது நூல்களைப் படிப்பார். அவற்றிலிருந்து தகவல்களைச் சேகரிப்பார்; அவற்றைத் தம்முடைய பழைய குறிப்பு நூலில் எழுதிக்கொண்டு வருவார். அதை வைத்துக் கொண்டே பாடஞ் சொல்லுவார்.

முறை பழையது. குறிப்பு நூல் பழையது. ஆனால் செய்திகள் புள்ளிவிவரங்கள் புதியன.

எனவே, அவரது பேச்சில் சிறிது தடுமாற்றம் இருந்ததை நாங்கள் பொருட்படுத்தவில்லை.

முதலாண்டிலேயே இந்திய வரலாறு ஒரு பாடம். அதைப் பேராசிரியர் அரங்காச்சாரி கையாளுவார். பேச்சு மடமடவென்று ஓடும். அந்த ஓட்டத்தில் குறிப்பு எடுக்க முடியாது, திண்டாடுவோம். வரலாற்றுப் பாடத்தில் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்த பேராசிரியர் அரங்காச்சாரி எங்கள் எல்லார் மதிப்பையும் பெற்றிருந்தார்.

படிப்பது போக, விளையாட்டைப் பற்றிச் சில சொற்கள்:

விக்டோரியா மாணவர் விடுதியில் ஈராண்டு 'டென்னிஸ்' ஆடி, ஓரளவு திறமை பெற்றேன்.

ஆயினும் சிறப்புப் படிப்பிற்காக வெளியில் இருந்து வந்தவர்கள் பலர், டென்னிஸில் சேரப் போட்டியிட்டார்கள்; திறமை அடிப்படையில் சேர்ந்தார்கள். எனக்கு இடம் கிடைக்கவில்லை.

ஆகவே வேறுவகை உடற் பயிற்சியில் அதிகம் ஈடுபட்டேன்.

மாலையில் கடற்கரையில் இரும்பு வாராவதி முதல் சாந்தோம் முனைவரை நடப்பது, நாள் தவறாத உடற் பயிற்சி. அதோடு, மேசை டென்னிஸ் கற்றுக் கொண்டேன். அதிலே, சராசரி மாணவரைக் காட்டிலும் அதிகம் திறமை பெற்று விளங்கினேன்.

உண்ணும் போட்டியில் முதல் பரிசு

நான் விக்டோரியா விடுதியிலிருந்தபோது, மூன்று உணவுப் பிரிவுகள் இருந்தன. மாமிசப் பிரிவு ஒன்று; காய்கறி உணவுப் பிரிவுகள் இரண்டு. அவற்றில் ஒன்று பார்ப்பனருக்கு; மற்றொன்று பார்ப்பனரல்லாதாருக்கு.

பார்ப்பனரல்லாதார், காய்கறி உணவுப் பிரிவிற்கு ஓர் ஆண்டு, என் நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய தேர்தலுக்கு நான் உதவி செய்துள்ளேன். 'அவர் அடிக்கடி 'லட்டு'தான் போடுகிறார்; புதுப்புது இனிப்புப் பண்டங்கள் போடவில்லை' என்று நண்பர்கள் என்னிடம் புகார் செய்தார்கள். அதை அவருக்கு அறிவித்தேன். அதைப் பொருட்படுத்தாமல்,

'பொடியன்! நீ எவ்வளவு சாப்பிட்டு விடப்போகிறாய்? நீ சும்மா இரு' என்று பதிலளித்தார். அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டேன்.

ஒரு விடுமுறை நாள், நானும் பாலசுப்பிரமணியமும் சிற்றுண்டிப் போட்டியில் ஈடுபட்டோம். பன்னிரண்டாவது குலாப்ஜானை உண்டதும் அவர் வாந்தி எடுத்தார். நான் பதின்மூன்றை விழுங்கி வெற்றி பெற்றேன். அப்புறம் உண்பதில் போட்டி இட்டதில்லை.

45. நோய்வாய்ப்பட்டேன்

என் காய்ச்சலும் விடுதி டாக்டரும்

பொருளியல் சிறப்பு வகுப்பில் நான் படிக்கையில், இரண்டாம் பருவத்தில் எனக்குக் காய்ச்சல் கண்டது. விடுதியின் மருத்துவர் டாக்டர் நாராயணசாமி முதலியார் அழைக்கப்பட்டார். அவர் என்னைச் சோதித்தார்.

கலவை மருந்து ஒன்றை எழுதிக் கொடுத்தார்; படுக்கையில் ஓய்வாக இருக்க ஆணையிட்டார்.

மருந்து வேலை செய்யவில்லை. காய்ச்சல் குறையவில்லை. அதிகமாக இருந்தது. அச்சம் தலைதூக்கியது.

மூன்றாம் நாள், என்னைப் பார்க்க வந்த மருத்துவரிடம் என்னுடைய கவலையைத் தெரிவித்தேன்.

''இன்ன காய்ச்சல் என்று இன்னும் விளங்கவில்லை; ஆனாலும் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. முன்பு 'ஏ' கலவை கொடுத்தேன். அதில் பலன் இல்லை. இப்போ 'பி' கலவை கொடுக்கப் போகிறேன்.

இதுவும் குணப்படுத்தாவிட்டால், 'சி' கலவை கொடுத்துப் பார்க்கிறேன். நீ கவலைப்படாதே! விரைவில் குணமாகிவிடும்'' என்று டாக்டர் நாராயணசாமி தேற்றினார்.

மூன்று கலவை மருந்துகளையும் சாப்பிட்டுப் பார்த்தாயிற்று. காய்ச்சல் குறைந்தபாடில்லை. உடம்பு இளைத்து விட்டது; படிப்புப் போய்விட்டது.

ஊரிலிருந்து என் தந்தையும் மாமாவும் வந்துசேர்ந்தார்கள். விடுதி மருத்துவரால் இன்ன காய்ச்சல் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே என்று வருந்தினார்கள். எனக்கு வீட்டு நினைப்பு வந்துவிட்டது.

'நல்லது. நாட்டு மருந்து கேட்கக்கூடும். இளையனார் வேலூரில் சித்த மருத்துவர், நடேசர் இருக்கிறார். அவரிடம் மருந்து சாப்பிடலாம். விடுதியில் வேளா வேளைக்குப் பத்திய உணவு கொடுப்பதும் கடினம்' என்று கூறி என்னை நெய்யாடுபாக்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

நாட்டு வைத்தியம்

நாட்டு மருந்து சாப்பிட்டேன். இரண்டு மூன்று நாள்களில் காய்ச்சல் ஓரளவு தணிந்தது; ஆனால் முழுவதும் தணியவில்லை.

சில நாள்களில் மீண்டும் கொதிக்கும் காய்ச்சல். காஞ்சிபுரத்திலிருந்து நாட்டு மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தார்கள். அவர் மருந்தும் குணப்படுத்தவில்லை. பத்து நாள்கள் கழிந்தன.

'சென்னையில் டாக்டர் குருசாமி முதலியார் என்னும் மருத்துவ மேதை இருக்கிறார், அவரிடம் காட்டுங்கள். எமன் வாயில் போன உயிரைக்கூட மீட்டுவிடக்கூடிய திறமை உடையவர் அவர்,' என்று யாரோ, என் தந்தைக்கு ஆலோசனை கூறினார்களாம். அதை என்னிடம் தெரிவித்தார்.

விடுதியில் நோயால் துன்பப்பட்டபோது, வீட்டை நாடிற்று என் மனம். வீட்டுக் கவனிப்பு பத்து நாள்களில் திகட்டிவிட்டது. எப்படியாவது குணம் பெறத் துடித்தது உள்ளம். எனவே, டாக்டர் குருசாமியிடம் காட்டி மருந்து சாப்பிட உடன்பட்டேன்.

சென்னையிலுள்ள நண்பர் திரு. ப.ச. கைலாசத்துக்குக் கடிதம் எழுதினேன். நான் சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்கு வந்து சேரும் நாளையும் நேரத்தையும் அறிவித்தேன். அங்கிருந்து நேரே டாக்டர் குருசாமி வீட்டுக்குப் போக விரும்புவதால், அவர் காரை புகைவண்டி நிலையத்துக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொண்டேன்.

டாக்டர் குருசாமியிடம் ஆங்கில வைத்தியம்

குறிப்பிட்ட நாள், விடியற்காலை மூன்று மணிக்கு இரட்டை மாட்டு வண்டியில் நெய்யாடுபாக்கத்தை விட்டுப் புறப்பட்டேன். அப்பாவும் மாமாவும் உடன் வந்தார்கள். விடியும் வேளை வாலாஜாபாத் புகைவண்டி நிலையத்தைச் சேர்ந்தோம்.

மூவருக்கும் முதல் வகுப்புப் பயணச்சீட்டைப் பெற்றார் என் தந்தை.

புகைவண்டி உரிய நேரத்தில் வந்தது. வண்டியேறினோம். ஒரே திகைப்பு! அதுவரை நான் முதல் வகுப்பு வண்டியுள் நுழைந்ததில்லை. மெத்தையின் மென்மை, கண்ணாடியின் பொலிவு; முகங் கழுவும் தொட்டியின் பளபளப்பு, இவை என்னை வியப்பில் ஆழ்த்தின.

மாட்டு வண்டிப் பயணத்தில் ஏற்பட்ட களைப்பில், சைதாப்பேட்டை வரும் வரையில் தூங்கிவிட்டேன்.

எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் நண்பர் ப.ச. கைலாசம் கார், எனக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அதில் ஏறி, டாக்டர் குருசாமி பங்களாவிற்குச் சென்றோம்.

நுழைவாயிலிலிருந்து நீண்ட வரிசை. பலர் காத்துக் கொண்டிருந்தார்கள். நானும் வரிசையில் நின்றேன். தந்தையும் மாமாவும் உடன் இருந்து என்னைத் தாங்கிக் கொண்டார்கள்.

முன்னே நின்ற பெரியவர் ஒருவர், திரும்பிப் பார்த்தபோது, என்னைப் பார்த்தார். அறிமுகம் இல்லாத அவர், என்மேல் பரிவு கொண்டார். அடுத்து இருந்தவர்களிடம் பேசி, என்னைச் சில இடம் முன்னே நகரச் செய்தார். எனவே, என் முறை விரைவில் வந்தது.

பங்களாவின் முன் அறைக்குள் நோயாளியாகிய நான் மட்டும் நுழைந்தேன். உயர்ந்த ஒல்லியான மனிதர் ஒருவர், சாளரத்தின் மேல் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னே ஒரு நாற்காலி இருந்தது. என்னைக் கண்டதும் நாற்காலியைக் காட்டினார். அதில் உட்காரும்படி ஊமைச்சாடை காட்டினார்; கீழ்ப்படிந்தேன்.

டாக்டர் குருசாமி, நாக்கை நீட்டச் சொன்னார். நீட்டினேன். நொடியில் பார்த்து முடித்துவிட்டார். கண்களைத் திறந்து பார்த்தார். அடுத்த நொடி சீட்டெழுதிக் கொடுத்தார்.

''போய் இந்த மருந்தை வாங்கிச் சாப்பிடு,'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் காத்துக் கொண்டிருப்பவரைக் கைகாட்டி அழைத்தார்.

எனக்குப் பெரிய ஏமாற்றம். இரு நொடிகளில் நோயை எப்படிக் கண்டு பிடித்துவிட்டார் என்று ஐயப்பட்டேன். எனவே, படக்கென்று,

''அய்யா! என்ன காய்ச்சலுங்க?'' என்று கேட்டேன்.

டாக்டர் குருசாமி, எள்ளுங்கொள்ளும் பொரிந்ததுபோல் வெகுண்டார்.

''ஏன்? நீயே பெரிய டாக்டராகிவிடக் கேட்கிறாயா?'' என்று சினத்தோடு என்னை மடக்கினார்.

சிறிதும் அச்சமறியாப் பருவத்தில் இருந்த நான், ''இல்லீங்க அய்யா! விக்டோரியா விடுதி டாக்டர் நாராயணசாமி என்ன காய்ச்சல் என்று கண்டுபிடிக்க முடியாது என்று கைவிட்டுவிட்டார். எனக்கு ஒரே பயமாக இருக்கிறதுங்க'' என்று மெல்லிய குரலில் சொன்னேன்.

''அப்படியா? கவலைப்படாதே, உன் 'ஸ்பிலின்' பெருத்திருக்கிறது. நான் கொடுத்த மருந்தை மூன்று நாள் சாப்பிட்டால் சரியாகிவிடும். நன்றாகவும் நடமாடுவாய். நான்காம் நாள் வா, டானிக் கொடுக்கிறேன். உடம்பில் பழைய வலிமை வந்துவிடும்'' என்று ஆறுதல் கூறிவிட்டு அடுத்தவரைக் கூப்பிட்டார்.

'டாக்டர் குருசாமி காசு பணம் வாங்க மாட்டார். அவர் கண்பார்வையில் படாத இடத்தில், ஒரு தாம்பாளம் இருக்கும். நோயாளிகள் விரும்பினால், அதில் பணம் போட்டுவிட்டுப் போகலாம். இப்படிச் சேரும் பணத்தை அவர் அறத்திற்குச் செலவிட்டு விடுகிறார்' என்று எனக்குச் சொன்ன நண்பர், மற்றொன்றும் வேடிக்கையாகச் சொன்னார்;

'தாம்பாளத்தில் பணத்தைப் போடுவது போல நடித்து, அதில் உள்ள பணத்தை மெல்ல எடுத்துக் கொண்டாலும் கேட்பாரில்லை' என்பது வேடிக்கையாகச் சொன்னது.

நோய் நீங்கியது

அன்று டாக்டர் குருசாமி வீட்டுத் தாம்பாளத்தில் காணிக்கை போட்டுவிட்டு வெளியே வந்தேன். அப்போது?

டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்துச் சீட்டைப் பார்த்தேன். அதன் தலைப்பில், வேப்பேரியிலிருந்த மருந்துக் கடையின் முகவரி இருந்தது. வேறு கடையிலும் அம்மருந்தை வாங்கிக் கொள்ளலாம் என்பது எங்கள் மூவருக்கும் தெரியாது. அவ்வளவு நாட்டுப்புறம்!

கார் ஏறி, தொலைவில் இருந்த மருந்துக் கடைக்குச் சென்றோம். மருந்தை வாங்கிக்கொண்டு விடுதிக்குச் சென்றோம். மாமாவும் அப்பாவும் என்னோடு தங்கினார்கள். காலா காலத்தில் மருந்தைக் குடித்தேன். இரண்டாம் நாள் நடுப்பகல் வெப்பம் தணிந்துவிட்டது.

நான்காம் நாள் அதிகாலை, ப.ச. கைலாசம் கார் வந்தது. என்னை டாக்டர் குருசாமி பங்களாவிற்கு அழைத்துச் சென்றது. டாக்டர் குருசாமிக்கு மகிழ்ச்சி. 'டானிக்' எழுதிக் கொடுத்தார். மருந்துக் கடைக்குச் சென்று அதை வாங்கிக்கொண்டு விடுதிக்குத் திரும்பினோம். அடுத்த நாள் பகல் வரை காய்ச்சல் வரவில்லை. மனநிறைவோடு உறவினர்கள் ஊர் திரும்பினார்கள்.

46. மீண்டும் விக்டோரியா விடுதியில்

விக்டோரியா விடுதிக்கு மகளிர் வரக்கூடாது

நான் சில நாள்கள் விடுதியில் ஓய்வு எடுத்துக் கொண்டேன். அப்போது விடுதி ஊழியர்களும் சமையற்காரர்களும் என்னைக் கருத்தோடு கவனித்துக் கொண்டார்கள். பிறகு?

வழக்கப்படி, கல்லூரிக்கு ஒழுங்காகச் சென்றேன். தவறிப் போன பாடங்களை விடுதியில் கற்றுக் கொண்டேன்.

ஆண்டின் இறுதியில் விடுதி விழா நடக்கும். அப்போது வெளியிலுள்ள நண்பர்களை விருந்தாளியாக அழைப்பது உண்டு. முதல் ஆண்டின் இறுதி விழாவின்போது எங்கள் வகுப்பில் படித்த மாணவிகளை விருந்தாளிகளாக அழைக்க எண்ணினோம். திரு.இலாலி, இரண்டொரு வகுப்பு நண்பர்களோடும் பேசினார். தனித்தனியாக அழைப்பதற்குப் பதில் விடுதியிலுள்ள பொருளியல் சிறப்பு முதல் வகுப்பு மாணவர் சார்பில் மூன்று மாணவியர்களை அழைப்பதே முறையென்று முடிவு செய்தார்கள்.

அதுவரையில் எங்கள் விடுதி விழாவிற்குப் பெண்களை அழைக்கும் உரிமை இல்லை. எனவே, நாங்கள் நால்வர் விடுதிக்காப்பாளரை அணுகினோம். எங்கள் எண்ணத்தைக் கேட்டதும் உறுதியாக மறுத்துவிட்டார்.

நாங்கள் கிளர்ச்சி செய்ய நினைக்கவில்லை; அடங்கிப் போனோம்.

பல்கலைக்கழகத் தேர்வு வந்தது. ஆங்கிலத்தில் எழுதும் தேர்வினை எழுதிவிட்டு ஊருக்குச் சென்றேன்.

அன்றைய விக்டோரியா விடுதி விதிப்படி, ஒருவர் தொடர்ந்து மூன்று கல்வி ஆண்டுகளுக்குமேல் தங்கக்கூடாது. நான் இண்டர்மீடியட்டில் ஈராண்டும், சிறப்பு வகுப்பில் ஓராண்டும் ஆக மூன்று ஆண்டுகள் தங்கிவிட்டேன். அடுத்துள்ள ஈராண்டுகள் எங்கே தங்குவது? இக் கேள்வி பிறந்தது. இத்தகைய நிலைக்கு வந்த

மாணவர்கள், அடைக்கலம் புகும் இடம் வெங்கடேசுவரா விடுதி ஆகும்.

விக்டோரியா விடுதி விதிமுறைகளில் விலக்கு பெறப் பரிந்துரை

அவ்விடுதி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையின் தெற்குக் கோடியில் உள்ளது.

அக்காலத்தில் அக்கோடி, டிராம் வண்டிகளின் இறுதி நிலையமாக இருந்தது. விடியற்காலம் முதல் இரவு பத்துமணிவரை டிராம் வண்டிகளின் ஓலம் விடுதி மாணவர்களின் காதுகளைக் கிழிக்கும். மக்கள் கூட்டமும் அதிகம், படிப்பதற்கான அமைதிச் சூழ்நிலை இராது.

ஒருமுறை என் தந்தை, மாமா, நான் ஆகிய மூவரும் வெங்கடேசுவரா விடுதிக்குச் சென்று நோட்டம் பார்த்தோம். அவ்விடுதியை நான் விரும்பவில்லை. அவர்களுக்கும் அது பிடிக்கவில்லை. எனவே, விக்டோரியா விடுதியிலேயே நான் எப்படியாவது தொடர்ந்து தங்க வேண்டுமென்று பெரியவர்கள் நினைத்தார்கள். பலருக்கும் உதவியாளராக விளங்கிய செங்கற்பட்டு திரு. மே. வேதாசலத்தை அணுகினோம்.

விவரத்தைப் பொறுமையாகக் கேட்டபின், சில நாள்கள் கழித்து மறுபடியும் வந்து பார்க்கும்படி, திரு. வேதாசலம் சொல்லி யனுப்பினார்.

அப்படியே, திரு. வேதாசலத்தை மீண்டும் கண்டோம். அவர் ஏற்கெனவே இதுபற்றி நடவடிக்கை எடுத்திருந்தார்.

அப்போது செங்கற்பட்டில், பள்ளி ஆய்வாளராக இருந்தவர் திரு. வேதாசலத்திற்கு வேண்டியவராம். அவரிடம் நெ.து.சு. தொடர்ந்து விக்டோரியா விடுதியில் தங்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறினாராம்.

ஆய்வாளர் அதற்கான வழி காண முனைந்தார். பொதுக்கல்வி இயக்குநர் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டார். அலுவலகத்தில் உள்ளவர்களில் எவர் பேச்சு விக்டோரியா விடுதிக்காவலரிடம் எடுபடுமோ அவரோடு பேசி, ஏற்பாடு செய்து விட்டாராம்.

என்ன ஏற்பாடு?

வெங்கடேசுவரா விடுதியில் சேர்ந்தேன்

''விக்டோரியா விடுதியில் தொடர்ந்து மூன்றாண்டுகள் மட்டுமே தங்கலாம் என்னும் விதிக்குக் கட்டுப்பட்டு, அங்கு இருந்து விலகிவிட வேண்டும்.

''வெங்கடேசுவரா விடுதியில் சேர வேண்டும். அங்கு மூன்று திங்கள் தங்கியபின் விக்டோரியா விடுதிக்கு மனுப்போட வேண்டும்.

''இடைவெளிக்குப்பின் மீண்டும் சேருவது பற்றி விதிமுறைகள் ஊமையாக உள்ளன; சேரக்கூடாதென்று சொல்லவில்லை. ஆகவே சேர்க்கலாம். சில திங்கள் வெளியே இருந்துவிட்டால் மறுபடியும் புதிதாகச் சேர்க்க முடியும். இதுவரை அப்படி நடக்கவில்லை என்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். உனக்கு அந்த உதவி கிடைக்கும். அதற்கு ஏற்பாடு செய்து விட்டேன்'' இப்படிப் பதில் கிடைத்தது.

''ஆய்வாளர் இராமையாவுக்கு நல்ல தொடர்பு உண்டு. இயக்குநர் அலுவலகத்தில் எவரிடம் சொல்ல வேண்டுமோ அவரிடம் சொல்லியே ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

''பொதுக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் நினைத்தால் நடக்காததும், திரு. நாராயணசாமி அய்யர் நினைத்தால் நடக்கும்.

''அவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவார். திறமையும் நேர்மையும் உடைய அவர் பேச்சை நம்பி, இப்போதைக்கு வெங்கடேசுவரா விடுதியில் தைரியமாகச் சேர்ந்துவிடு.

''பின்னர் நினைவுபடுத்துங்கள். ஆய்வாளர் இராமையா தொடர்ந்து செய்ய வேண்டியதைச் செய்வார்'' இப்படி மேலமையூர் திரு. வேதாசலம் கூறினார்.

மனத்திற்குப் பிடிக்காவிட்டாலும் வாக்குறுதியில் முழு நம்பிக்கை ஏற்படாவிட்டாலும் வேறுவழியின்றி, வெங்கடேசுவரா விடுதியில் சேர்ந்தேன். இரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள மாநிலக் கல்லூரிக்கு நடந்து செல்லும் தொல்லையைத் தாங்கிக் கொண்டேன்.

வெங்கடேசுவரா விடுதியில் சில புதிய நண்பர்கள் கிடைத்தார்கள். திரு. அனவரதமும், திரு. சிவஞானமும் நினைவிற்கு வருகிறார்கள்.

இருவரும் பிற்காலத்தில் அரசு ஊழியத்தில் சேர்ந்தார்கள்.

மாவட்ட நீதிபதியாக ஒருவரும், அதே நிலை அலுவலராக ஒருவரும் உயர்ந்ததாக நினைவு.

அழுக்குப் படியாத, மடிப்புக் கலையாத உடையோடு எப்போதும் காட்சியளித்த அவர்களை, உடையில் பின்பற்ற நான் முயன்றது உண்டு.

என்னால் ஏற்றுக்கொள்ள முடியாத தலைகீழ்ச் செல்வாக்கு

மூன்று திங்கள் கழிந்தன. குறுகிய கால விடுமுறை வந்தது. விடுதிமாற்ற முயற்சி முளைத்தது.

ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாடு பலித்தது. அதன்படி, விக்டோரியா விடுதிக் காப்பாளர் பேராசிரியர் பிராங்கோவைக் கண்டு அவரிடம் மனுக் கொடுத்தேன்.

ஏழெட்டுத் திங்களுக்கு முன், நான் பல நாள்கள் காய்ச்சலால் அவதிப்பட்டதால் உடல் வலுவை இழந்து இருக்கிறேன். திரும்பிப் பழைய நிலைக்கு வர நாளாகும்.

அந்நிலையில் நாள்தோறும் நான்கு கிலோமீட்டர் போல் நடந்து அலுத்துவிட்டால் பல்கலைக்கழகத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற இயலாது. சிறப்புப் பாடத்தை எடுத்துக் கொண்டு, குறைந்த மதிப்பெண் பெறுவது தோல்வியைவிடத் தீங்கானது. அது எனக்கு எதிர்காலம் முழுவதும் தொடரும் தொல்லையாகிவிடும்.

ஆகவே, எனக்கு விதிவிலக்கு அளித்து, மீண்டும் என்னை விக்டோரியா விடுதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டார், பேராசிரியர் பிராங்கோ.

அவர் சென்னை மாநிலக் கல்லூரியில் எனக்கு 'அரசியல்' கற்றுக் கொடுத்தவர். நல்ல பெயர் உடையவர்.

பொதுக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் சீனியர் மேற்பார்வையாளரின் பரிந்துரையை அவரால் தட்ட முடியவில்லை.

அக்கால அலுவலகங்களில் எவர் வைத்தது சட்டம் என்பதற்கு இது அடையாளம். இந்நிலை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. இதனால் நான் நன்மை அடைந்தேன்.

இருப்பினும் தலைகீழ்ச் செல்வாக்கு உடைய இந்நிலையை இன்றும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நம் சமுதாயத்தில் உள்ள சாதி ஏற்றத்தாழ்வு முறையால் எனக்கு அதிகத் தொல்லை இல்லை. ஓரளவு எனக்கு நன்மையானதே. எப்படி?

பிறவியில் என்னைவிடப் பெரிய சாதி என்று உரிமை கொண்டாடக் கூடியது ஒரே சாதிதான். அது பார்ப்பன சாதியே.

பழக்கக் கொடுமையால் என்னிலும் தாழ்ந்தவர்கள் என்பதை மறுத்துப் போராடாதவர்கள், நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்குமேல்.

மனத்தால் பலரைக் குறைவாக மதிப்பிடும் வாய்ப்பிருந்தும், நான் சாதியை உடைக்கும் பணியில் முனைப்பாயிருந்து பலருக்கு வேண்டப் படாதவனாகிறேன். பெரியார் என்னும் பகுத்தறிவுச் சுடரின் கதிரியக்கம் என் குருதியின் கலப்பையே மாற்றிவிட்டது.

அதேபோல், 'அதிகாரிகளே ஆணையிடும் உரிமையும் பொறுப்பும் உடையவர்களாக இருக்கவேண்டும். அவர்களிடம் பணிபுரியும் அலுவலர்களின் தயவில் மற்ற அதிகாரிகளும் அலுவலர்களும் வாழும்

நிலை சரியல்ல' என்னும் கருத்தொன்று 1930 திலேயே என் உள்ளத்தில் முளைத்துவிட்டது. அது வளர்ந்து தழைத்துவிட்டது.

பிற்காலத்தில் என்னுடைய பெயரில், கண்டவர்கள் நிர்வாகம் செய்யும் நிலைக்குச் சிறிதும் இடங்கொடாமை என்னுடைய முத்திரை ஆகிவிட்டது.

அவரவர் நிலைக்கு அவரவர் அடங்கிவிட வேண்டிய சூழ்நிலை உருவானது.

ருசி கண்ட பூனைகள் எங்கெங்கோ தாவின. விளைவைப் பின்னர் விவரமாகத் தெரிவிக்கிறேன்.

பண்பாட்டைப் பயின்றோம்

விக்டோரியா விடுதியில் மீண்டும் சேர்ந்தபிறகு, வாழ்க்கை வழக்கம் போல் ஓடிற்று. நூறு மீட்டர் நடந்தால் கல்லூரி. அங்கிருந்து இருபது மீட்டர் நடந்தால் 'மீன் காலேஜ்' சிற்றுண்டிச் சாலை; அங்கே நாலணாவிற்கு நாலு 'டீ'.

வகுப்புகளுக்கிடையே ஓய்வு நேரம் கிடைத்தால் அச் சிற்றுண்டிச் சாலைக்குச் செல்வோம். பீங்கான் குடுவை அளவு தேனீர் கேட்போம். நான்கு கோப்பைகள் வரும்.

ஆளுக்கொரு கோப்பைத் தேனீர் ஊற்றிக் கொள்வோம். சிறுகச் சிறுக உறிஞ்சியபடியே வகுப்பில் படித்த பாடங்களைப் பற்றி விவாதிப் போம்; புது நூல்களில் வந்துள்ள கருத்துகளை அலசிப் பார்ப்போம்.

தேனீர் குடிக்கும் சாக்கில், முக்கால் மணிபோல், அறிவைத் தீட்டுவோம்.

சிலவேளை உரையாடல் காரசாரமாகிவிடும். இருப்பினும், எவரும் வெகுண்டு வெளியேறியதில்லை; 'முகத்தில் விழிப்பதில்லை' என்னும் சூளுரையை எப்போதும் எவரும் எடுத்ததில்லை.

எங்கள் நண்பர்களில், பல நிலைப் பண்பாளர்கள் இருந்தார்கள் என்று சொல்லலாம்.

கல்லூரிக்கு வந்த நாங்கள் செய்திகளை, தகவல்களை, கருத்துகளைத் திரட்டுவது முதற் கடமை என்பதில் உறுதியாக இருந்தோம்.

இப்பணிக்குச் சமமாக மற்றொன்றையும் கருதினோம். அது என்ன? பண்பாட்டை, பல திறப்பட்டாரோடு கலந்து வாழ்வதைக் கற்றுக் கொள்வதிலும் ஆர்வம் காட்டினோம்.

எங்கள் கல்லூரிப் பருவத்தில் தேர்தலுக்குக் குறைவில்லை. போட்டிகள் சூடுபிடிக்கத் தவறியதில்லை.

ஆனால் வன்முறை, நினைப்பில்கூடத் தலைகாட்டியது இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன், இந்திய நாடாளுமன்றப் பேரவைத் தலைவராக இருந்த திரு. கே. சதானந்த எக்டே, என்னுடன் படித்தவர். மாநிலக் கல்லூரி மாணவர் பேரவைக்குச் செயலாளர் ஆனவர். அத்தேர்தலில் நான் எக்டேக்குத் துணையாக நின்று உதவும்படி வாய்த்தது.

நிலைக்கு ஏற்ற நினைப்புத் தேவை; அதற்கேற்ற செயல்பாடும் தேவை.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி காற்பகுதியில், அடிதடியில் குதிப்பவர் எவராயினும், பண்பாட்டின் பாலபாடமும் அறியாதவர்.

எவ்வளவு ஆத்திரமூட்டும் நிலையிருப்பினும் மாணவர்கள், 'ஒரு கை பார்த்துவிடக்' குதிப்பது தவறு; பெருந்தவறு.

சமத்துவபுரிக்கு விரைகிற காரை நெடுஞ்சாலையில் தென்பட்ட சிறிய ஆணியைப் பொறுக்குவதற்காகப் பின்பக்கம் ஓட்டுவதாகும்.

மாநிலக் கல்லூரியில் நாங்கள் படித்த பொருளியல் சிறப்புப் பாட வரிசை பற்றிச் சில சொற்கள்.

நிலக் குவியல், நீராவிப் பொறிகள் கண்டுபிடித்தல், தொழிற்புரட்சி, மலை மலையான உற்பத்தி, இலாபப் பெருக்கம், முதல் குவியல், முதலாளித்துவம் - அதன் துணை விளைவுகள்.

அவற்றைப் போக்கக்கூடிய சோசியலிசம், அடுத்து கம்யூனிசம் ஆகிய 'காண்டங்களை'க் கொண்டிருந்தது எங்கள் பாடத்திட்டம்.

47. பேராசிரியர் கள்ளுக்காரன்

அறியாமையும் அனுபவமும்

பேராசிரியர் கள்ளுக்காரன் - இயற்பெயரே அதுதான். எங்களுக்குப் பொருளியல் வகுப்பு எடுப்பார். அவர் நல்ல அறிஞர். புதுப்புது நூல்களைக் கற்றுக் கொண்டிருந்தவர்.

சிரியன் கிறித்துவர்

''ஆயிரக்கணக்கான ஆள்கள் நாள்கணக்கில் பாடுபட்டு உற்பத்தி செய்யும்போது உற்பத்தியான பொருள்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. அவற்றின் விலையோ மிகவும் அதிகமாக இருந்தது.

''இயந்திரங்களின் உதவியால் ஒரே நாளில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நிறைய உற்பத்தி செய்ய முடிந்ததால், குறைந்த விலைக்கு விற்க முடிந்தது.

தொழில் புரட்சியின் விளைவாக முன்னர் பெருஞ்செல்வர்களே நினைக்கக்கூடிய பொருள்களை, சாதாரண மக்களும் வாங்கக் கூடிய நிலை உருவாகியது. இது தொழில் புரட்சியால் விளைந்த நன்மை. இது முதலாளித்துவத்தால் பராமரிக்கப்படுகிறது.'' இப்படிப் பாடத் திட்டத்தில் குறித்துள்ளபடி விளக்கினார்.

அவ்வேளை, எனக்கு அடுத்து உட்கார்ந்திருந்த மாணவர், சட்டென்று குதித்தெழுந்து நின்றார். பேராசிரியர், தம் பேச்சை நிறுத்தினார்.

''முதலாளித்துவ 'ராஸ்கல்'களாகிய நீங்கள் சொல்லக்கூடியது இவ்வளவுதானா?'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கனல் கக்கக் கேட்டார், மாணவர்.

வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரும் திடுக்கிட்டுப் போனோம். அக்கால மாநிலக் கல்லூரிக்குத் தனிச்சிறப்பு உண்டு. அது என்ன? கீழ்த் தரமான சொற்களோ, நடவடிக்கைகளோ அங்கே எந்த நிலையிலும் தலைகாட்டா. 'ராஸ்கல்' என்ற சொல் எங்களை அதிர்ச்சியடைச் செய்தது.

நாங்கள் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், பேராசிரியர் கள்ளுக்காரன், குறிப்பிட்ட மாணவரை அமரும்படி கையால் குறிப்புக் காட்டினார். மாணவர் படபடப்போடு அமர்ந்தார். என் கையைப் பிடித்துக் கொண்டார். அவருக்கு வியர்த்துக் கொட்டியது.

''இளம் சோசியலிஸ்டுகளாகிய நீங்கள், பொறுப்புகளுக்கு வரும்போது, இதைவிட நல்ல நடவடிக்கைகளைக் காட்டுவீர்கள் என்று நம்புகிறேன்'' என்று பேராசிரியர்,.கிண்டல் கலவாது, வெகுளி புகாது, அமைதியாக ஆருடம் கூறினார்; கூறிவிட்டுப் பாடத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

என் நண்பருக்கு இருக்கை கொள்ளவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்துக் கொண்டிருந்தது. கடைசியில் வகுப்பு முடிந்தது. அனைவரும் வகுப்பு அறையிலிருந்து கலைந்து சென்றோம். அடுத்த மணி எங்களுக்கு ஓய்வு நேரம்.

உணர்ச்சி வயப்பட்டுச் சொல்லக்கூடாத வார்த்தையைச் சொல்லிவிட்ட என் நண்பர், என்னைத் துணைக்கு அழைத்துக்கொண்டு பேராசிரியர் கள்ளுக்காரன் அறைக்குப் போனார். நாங்கள் பேராசிரியர் அறைக்குள் நுழைந்ததும் எப்போதும்போல, புன்முறுவலோடு எங்களை வரவேற்றார். வழக்கம்போல, எதிரிலுள்ள நாற்காலிகளைக் காட்டி உட்காரச் சொன்னார்.

''பரவாயில்லை அய்யா'' என்ற நாங்கள் சொன்னோம்.

''உட்கார்ந்தால்தான் பேசலாம்'' என்று பேராசிரியர் ஆணைக்குக் கட்டுப்பட்டு அமர்ந்தபின் தழதழத்த குரலில், ''வினாடி ஆத்திரத்தில்

எப்படியோ பேசிவிட்டேன்; மன்னித்தருள்க என்று வேண்டிக் கொள்வதற்கு வந்துள்ளேன்'' என்று நண்பர் கூறினார்.

பளிச்சென்று, ஆனால் அமைதியாக ''நான் அதை மறந்துவிட்டேனே! இப்போது ஏன் நினைவுபடுத்துகிறீர்கள்?'' என்று பேராசிரியர் சொன்னார்.

''மெய்யாகவே வருந்துகிறேன்'' என்று மாணவர் சொல்ல,

''மெய்யாகவே மறந்து விட்டேன்'' என்று பேராசிரியர் சொல்ல, எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்துவிட்டது.

ஏற்கெனவே பேராசிரியரிடம் போகுமுன், பேசித் திட்டமிட்டபடி, ''அய்யா! எங்களுக்குத் தங்கள் நேரடிப் பார்வையிலுள்ள நூல்கள் இரண்டொன்று வேண்டும். இப்போது தர இயலுமா? பின்னர் வந்து பெற்றுக் கொள்ளலாமா?'' என்று இருவருமே பேராசிரியரைக் கேட்டோம்.

பேராசிரியர் அலமாரியைத் திறந்தார். சில நூல்களை எடுத்து மேசையின்மேல் போட்டார். எந்தெந்த நூலில் எந்தெந்தப் பகுதி சிறப்பாயிருக்கும் என்று சுட்டிக்காட்டினார். ஆளுக்கு ஒரு நூலைக் கடன் வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறினோம்.

பேராசிரியர் மெய்யாகவே மன்னித்து மறந்துவிட்டாரா? காலம் வரும்வரை நல்லவர்போல் நடித்து, காலம் வந்ததும் பழிவாங்கி விடுவாரா? இக்கேள்விகள் என் நண்பரைக் குடைந்தன. எனக்கும் அதே அய்யப்பாடு. எப்படித் தெளிவுபடுத்திக் கொள்வது?

பேராசிரியரின் பெருந்தன்மை

நண்பரும் நானும் கலந்து ஆலோசித்தோம். பேராசிரியரை ஆழம் பார்க்க முடிவு செய்தோம்; திட்டமிட்டோம். திட்டமென்ன?

வாரந்தோறும் இருவரும் சேர்ந்து, பேராசிரியரிடம் போவது; அவருடைய நேரடிப்பார்வையில் இருந்த நூலகத்திலிருந்து நூல்களைக் கடன் கேட்பது.

இப்படித் தொடர்ந்து செய்தால், அவர் உள்ளத்தின் ஆழத்தில் இருப்பது, ஒரு நாள் வெளிப்படக்கூடும்; நெஞ்சின் புண் ஆறாதிருக்கு மானால் எப்படி மருந்து இடுவதென்று சிந்திப்போம். இப்படித் திட்டம் தீட்டினோம்.

திட்டத்தின்படி, இருவரும் வாரந்தோறும் பேராசிரியரைக் கண்டோம். நூல்களை இரவல் பெற்றோம்; திருப்பித் தந்தோம். பல வாரங்கள் ஓடின. வடுவின் சாயலும் தென்படவில்லை. வகுப்பறைப் பாடங்களின்போதும் எக்காரணம் பற்றியும் பேச்சில் எரிச்சல் மின்னவில்லை. இவ்வளவு 'பெரிய மனிதரா?' நம் பேராசிசரியர்,

என்று வியப்பிலும் இடையிடையே அவநம்பிக்கையிலும் காலங்கழித்தோம்.

தேர்வுகள் வந்தன. அவற்றையும் முடித்தோம். பொருளியல் பிரிவு மாணவர்கள் விடைபெறும் விழா, தேர்வுக்கு முன்னரே நடந்துவிட்டது. கடைசித் தேர்வு அன்று மாலை, எங்களுக்குப் பாடமெடுத்த பேராசிரியர் கள், வழியனுப்புத் தேனீர் விருந்தளித்தார்கள். இது நெடுநாளைய மரபு.

வழியனுப்புத் தேனீர் விருந்திலும் பேராசிரியர் கள்ளுக்காரன் எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசியதைப் போன்றே, என் நண்பரிடமும் கலகலப்பாகவே கலந்துரையாடினார்.

தேர்வின் முடிவுகள் வந்தன.

என் நண்பர், எதிர்பார்த்த தரத்தில் தேர்ச்சி பெற்றார். பேராசிரியர் கள்ளுக்காரன், பழிவாங்கும் உணர்வோடு மதிப்பீட்டில் தலையிட வில்லை என்பது புலனாயிற்று.

ஒவ்வொருவரும், நடத்தை பற்றிய சான்றிதழைப் பெறும்பொருட்டு, பேராசிரியர்களிடம் சென்றோம்; அவற்றைப் பெற்றோம்.

கடுஞ்சொற்களைப் பயன்படுத்திய மாணவருக்கும் சான்றிதழ் கொடுத்தார், பேராசிரியர் கள்ளுக்காரன்; கறைபடுத்தாத சான்றிதழைக் கொடுத்தார்.

'மன்னித்து அருளிய இப்பேராசிரியர் அல்லவா உண்மையான கிறுத்துவர்' என்னும் நினைவோடு கல்லூரி உலகை விட்டு வெளியேறினோம்.

ஆண்டுகள் உருண்டன; அலைச்சல்கள் இடைப்பட்டன; வசந்தமும் வந்தது; வாழ்வும் முளைத்தது. பதவிகளும் வந்தன; உயர்வுகளைப் பெற்றோம்.

ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்குப்பின், பொதுக்கல்வி இயக்குநர் என்னும் நிலையில், நான் அண்டை மாநிலத்தில் கூடிய அனைத்திந்திய கல்விக் கூட்டத்திற்குச் செல்ல நேர்ந்தது.

அம்மாநில அரசின், விருந்தினர் விடுதியில் தங்கினேன். அங்கே குறிப்பு ஒன்று எனக்காகக் காத்து இருந்தது.

நண்பரின் நன்றி உணர்வு

'ராஸ்கல்' புகழ் நண்பர். அம்மாநில உயர்நீதிமன்ற நடுவராகப் புகழுடன் இருந்தார். அவர் என்னை விருந்திற்கு அழைக்கும் குறிப்பு அது. அதைப் பார்த்த நான், அந்த நண்பரோடு, தொலைபேசியில்

தொடர்பு கொண்டேன். விருந்திற்கு நாளும் நேரமும் முடிவு செய்து கொண்டோம்.

குறிப்பிட்ட நேரத்திற்கு நடுவருடைய பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தேன். விருந்திற்குமுன், பழைய கால நினைவுகளை அசைபோட்டோம். பேச்சுவாக்கில், அவருடைய விரைவான உயர்வைக் குறிப்பிட்டுப் பாராட்டினேன். உடனே, என் நண்பர்,

''வேலு!அன்றைக்குப் பேராசிரியர் கள்ளுக்காரன் மட்டும், நான் பாடநேரத்தில் பயன்படுத்திய கடுஞ்சொற்களைக் கல்லூரி முதல்வரிடம் சொல்லியிருந்தால், 'பொது உடைமைக்காரன்', 'அடங்காப்பிடாரி' என்ற பட்டம் சூட்டி, சீட்டுக் கிழித்திருப்பார். அக்காலத்தில் அப்படி நீக்கப்பட்ட மாணவரை மற்ற எந்தக் கல்லூரியும் சேர்த்துக் கொண்டு இராது; அப்போது அதற்காக வழக்கு மன்றமும் செல்ல முடியாது. எனவே, கிளர்ச்சிக்காரனாக, எங்கெங்கே சிக்கியிருப்பேனோ! எங்கெங்கு உருண்டிருப்பேனோ? பேராசிரியர் என்னை மன்னித்தது, நல்ல திருப்புமுனையாக அமைந்தது. அப்புறம் பொறுப்போடு மட்டுமல்லாது, கட்டுப்பாடோடும், கடமை உணர்வோடும் படித்தேன்; நடந்தேன்.

''அந்தக் கட்டுப்பாடு என் அரசியல் வாழ்க்கைக்கும் பயன்பட்டது. சொல்ல வேண்டியதை அஞ்சாமல் சொன்னபோதும், எரிச்சல் ஊட்டாதபடி சொல்லக் கற்றுக் கொண்டேன். எனவே, வழக்கறிஞராகவும் வெற்றி. நாடாளுமன்ற உறுப்பினராகவும் வெற்றி.

''அது எனக்கு நல்வாழ்வைத் தந்தது; பதவி உயர்வுக்கு உதவிற்று. இன்று நான் உயர்நீதிமன்ற நடுவரானதுக்கு நம் பேராசிரியர் கள்ளுக்காரனுடைய பெருந்தன்மைக்கே நன்றி சொல்ல வேண்டும். அவர் மட்டும் பழிவாங்குபவராக இருந்திருந்தால், நான் எங்கே அலைந்து கொண்டிருப்பேனோ?'' என்று கல்லூரி நண்பர் கூறியபோது, இருவர் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

'உதவிவரைத்து அன்றுஉதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து'.

எனும் குறள் என் நினைவிற்கு வந்தது.

எத்தனை தோள்களைக் கொடுத்தாலும் தமிழ்ச் சமுதாயம் மீண்டும் மீண்டும் கீழே வீழ்வதற்கும், அதே நேரத்தில் கன்னடியரும், தெலுங்கரும், பிறரும் ஒரு கை கொடுத்தாலே அதைக்கொண்டு அவர்கள் முன்னேறி விடுவதற்கும் காரணம் புரியாமல் இருந்த எனக்கு, அப்போதே தெளிவு ஏற்பட்டது.

'நன்றியுணர்வு என்னும் சால்பினைப் பெற்றவர்களை நிறையக் கொண்ட சமுதாயத்தில், உதவுவோரும் பெருகுவார்கள். ஒருவர் இல்லாத நேரம் மற்றொருவர் முன்வந்து உதவுவார்.

மாறாக, தினையளவு உதவியைப் பெறத் தவறிய வேளை, செய்த மலையளவு உதவியையும் மறந்துவிடும் தீயோர் நிறைந்த சமுதாயத்தில், உதவிசெய்ய முன்வருவோர் அரிதாவர்.' இத்தெளிவு விருந்திற்கு முன்னரே வந்தது.

மாநிலக்கல்லூரி வாழ்க்கைக்கு திரும்புவோம். பேராசிரியர் கள்ளுக்காரன், தேர்வுகளில் புதுமை புகுத்த முயன்றார். டிசம்பரில் ஒரு பாடத்திற்கு, மரபுவழி எழுத்துத் தேர்வைக் கொடுத்தார்.

மற்றொன்றுக்கு நூல்களை வைத்துக்கொண்டு, அவற்றைப் பார்த்துப் பதில் எழுதும் முறையைக் கொடுத்தார்.

மூன்றாவது தேர்வு முழுக்க முழுக்க வாய்மொழித் தேர்வாக நடந்தது.

இந்தப் புதிய சோதனையில் நான் பெற்ற நிலை என்ன?

மூன்றிலும் தேர்ச்சி. ஆனால்?

நினைவில் வைத்து எழுதும் தேர்வில்தான் நான் அதிக மதிப்பெண்கள் பெற்றேன். பார்த்து எழுதுவதில், முந்தியதிலும் சில எண்கள் குறைவாகவே பெற்றேன். வாய்மொழித் தேர்வில் இன்னும சில எண்கள் குறைந்துவிட்டன. இருப்பினும், கடைசி ஆள் அல்ல; நடுநிலையில் இருக்குமளவு மதிப்பெண்கள் பெற்றேன்.

48. விடுதலைப் போரில் கலந்து கொள்வதா, கூடாதா?

கருத்துப் போர்

நான் பொருளியல் சிறப்பு வகுப்பில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டில் வாதப்போர் ஒன்று சிறிதுகாலம் நடந்தது.

அது, 'இந்திய விடுதலைப் போராட்டத்தில், தன்மான இயக்கத்தவர் கள் பங்குகொள்ளலாமா, கூடாதா?' என்பதைப் பற்றிய கருத்துப்போர்.

தந்தை பெரியாரும் மிகப் பெரும்பாலோரும் காந்தியடிகளின் உப்புக் காய்ச்சும் போராட்டம் போன்றவற்றில் தன்மான இயக்கத்தவர்கள் பங்குகொள்ளக்கூடாதென்று கருதினார்கள்.

'வகுப்புரிமையைக் கொள்கை அளவிலும் ஏற்றுக் கொள்ள மறுக்கும் காங்கிரசுக்கு ஆதரவாக இருப்பது, கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்வதற்கு ஒப்பாகும்' என்று அவர்கள் கருதினார்கள்.

'சூடு பிடித்துள்ள விடுதலை இயக்கத்திலிருந்து தனிமைப் பட்டிருந்தால், காங்கிரசு முழுக்க முழுக்க சென்னை சத்தியமூர்த்தி அய்யர், தஞ்சை பந்துலு அய்யர், மட்டப்பாறை வெங்கட்ராம அய்யர், திருச்சி டி.எஸ்.எஸ். இராஜன் அய்யங்கார் போன்றவர்களின் ஆதிக்கத்தில் சிக்கிவிடும். நமக்குரிய பங்கைக் கேட்பதில் வலுவிழந்து நிற்போம்.

'எனவே, விருப்பமுள்ள தன்மான இயக்கத்தவர்கள், காங்கிரசின் போராட்டத் திட்டங்களில் எதிலாகிலும் பங்குகொள்ள விடப்பட வேண்டும்' இது இயக்கத்தினர் சிலருடைய கருத்து.

நீதிக்கட்சியின் தமிழ் நாளிதழாகிய திராவிடனில் இதுபற்றி இருதரப்புக் கட்டுரைகள் வந்தன.

நானும் முதன்முறை கட்டுரை ஒன்றை எழுதத் துணிந்தேன். அதைத் திராவிடன் வெளியிட்டது.

பெரியாரின் சமதர்ம ஒளி என்னுள் பிறவியில் வந்த சாதி உணர்வைச் சுட்டெரித்து விட்டது.

அதன் விளைவாக 1930ஆம் ஆண்டின் குடிக்கணக்கின்போது, நான் சாதி, சமயம் இல்லாதவன் என்று என்னைப் பற்றித் தெரிவித்து விட்டேன்.

அதே நேரத்தில், வனமலர்ச் சங்கத் தொடர்பு, அதன் முன்னணியில் நின்ற பெரியசாமித் தூரன் எல்.கே. முத்துசாமி, கு.சு. பெரியசாமி, பி. ஆயண்ணன், சி.சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோரின் நெருக்கம், என்னை விடுதலை வேட்கையாளனாக உருவாக்கியது.

எனவே, விடுதலைப் போராட்டம் சூடுபிடித்து இருப்பதாக நினைத்துக் கொண்டேன்.

விடுதலைக்குப் பின்னும் பார்ப்பனர் அல்லாதார் வகுப்புரிமைக்குக் கடுமையாகப் போராடவேண்டியிருக்கும்.

'இருப்பினும் அப்போது 1930, 31, 32 ஆண்டுகளில் நடந்து வந்த விடுதலைப் போராட்டங்களில், முடிந்தால் பங்குகொள்ள வேண்டும்; முடியாவிட்டால், பிறவகை ஆதரவு கொடுக்க வேண்டும். என்னவானாலும் காந்தியப் போராட்டங்களுக்கு எதிர்ப்பாக நிற்றல் ஆகாது' இப்படிப் பொருள்பட, நான் 'சர்தார்' என்ற புனைபெயரில் எழுதிய கட்டுரையைத் திராவிடன் வெளியிட்டது.

அது எண்ண அலைகளை மக்களிடம் எழுப்பிற்றோ இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் கருத்து, காங்கிரசை ஆதரிக்கும் கருத்து, தன்மான இயக்கத்தில் முளையிலேயே அடியோடு பட்டுப் போயிற்று.

என்னைப் பொறுத்தமட்டில், முழுக்க முழுக்க கதர் அணிவதோடு, என் நாட்டுப்பற்றைக் கட்டுப்படுத்தினேன்.

அன்னத்தின் முத்துமாலை

பகுத்தறிவு வெளியீட்டுக் கழகம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு இலண்டனில் பல்லாண்டுகளாக இயங்கிவருகிறது.

அது திங்கள்தோறும் ஆங்கில இதழ் ஒன்றை வெளியிடுகிறது.

என் கல்லூரிப் பருவத்தில் இரண்டொரு ஆண்டுகள் அதற்குப் பணம் கட்டி, வாங்கிப் படித்தேன்.

அதில் 'ஆனுடைய மாலை' என்னும் சிறுகதை வெளியாயிற்று. ஆன்' என்னும் மாது தன்னிடமுள்ள முத்துமாலை தன் மூதாதையருக்குப் பன்னெடுங்காலமாக உரியது என்றும், அதைப் போன்ற சிறந்தது ஒன்று இப்போது கிடைக்காதென்றும் அதன் விலையை மதிப்பிடவே முடியாதென்றும் நம்பி வந்தாள்.

அதைப்பற்றி அய்யப்பாடு கிளம்பினாலே அவள் மனம் நோகும்; பதறுவாள்; கண்ணீர் வடிப்பாள்.

ஒருநாள் முத்து வணிகர் ஒருவரே ஆனுக்கு அறிமுகமாகிறார். அவர், ஆனின் குடும்பத்தினரின் மாலையைக் கண்டதும் அது செயற்கை முத்து. மட்டமானது. அண்மைக் காலத்தது என்று எளிதில் புலப்படுத்துகிறார்.

ஆனுக்கு அதிர்ச்சி; மயக்கம்; பிறகு தெளிவு. இப்படி முடியும் அக்கதையை 'அன்னத்தின் முத்துமாலை' என்னும் பெயரில் தமிழாக்கம் செய்திருந்தேன். இந்தச் சிறுகதை 'பாரதி'யில் வெளியானதாக நினைவு.

தமிழ் அன்பர்கள் மாநாடு

'பாரதி' மற்றோர் நினைவை எழுப்புகிறது. 1933 ஆம் ஆண்டு சென்னையில் அப்போதைய சீனக் கடைத்தெருவில், பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில், தமிழ் அன்பர்கள் மாநாடு நடந்தது.

சென்னையில் கொடி கட்டிப் பறந்த திரு கே.வி. கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன், பி.என். அப்புசாமி அய்யர் முதலியோர் இம்மாநாட்டைக் கூட்டினார்கள்.

அப்போதைய கல்வி அமைச்சர், திரு சு. குமாரசாமி ரெட்டியாரைப் பங்குகொள்ள அழைத்தார்கள்.

இப்பெரியவர்கள் தங்களைத் தமிழர்கள் என்று அழைத்துக் கொள்ள விரும்பவில்லை. 'தமிழ் அன்பர்'களாகக் கூறிக் கொள்ளவே உடன்பட்டார்கள்.

தமிழ் தெரிந்த ஆங்கிலேயர்களைப் போல இவர்கள் தங்களுக்குப் பட்டம் சூட்டிக்கொண்டது, தங்களைத் தமிழ்ப் பொதுமக்களிடமிருந்து வேறுபடுத்திக் கொள்வதாகத் தோற்றமளித்தது.

பிற மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழாக்கம் செய்யவும், பல துறைகளில் புதுத் தமிழ் நூல்களை எழுதி வெளியிடவும், அம் மாநாட்டில் திட்டம் தீட்டப் போவதாக அறிவித்திருந்தனர்.

அதற்கான பொறுப்பு முழுவதையும் தாங்கள் குறிப்பிடும் சிறு குழுவிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும் என்பது அவர்கள் விருப்பம்.

செலவுக்கான முழுப் பணத்தையும் தங்களிடம் கொடுக்குமாறு அரசை வலியுறுத்தி வேண்டிக் கொள்வது, அவர்களுடைய நோக்கம்.

அக்குழுவில், பெரிய மனிதர்கள், பலர்- பெரும்பாலும் பார்ப் பனர்களே - இடம் பெற்றிருப்பதாகவும், பொதுமக்களிடம் தொடர் புடைய தமிழ் அறிஞர்கள் எவரும் இல்லை என்றும் குமுறல் எழுந்தது.

அம்மாநாட்டிற்கு நான் ஒரு பிரதிநிதியாகச் சென்றேன். பச்சையப்பன் மண்டபம் நிறைந்து வழிந்தது.

தன்மான இயக்கத்தைச் சேர்ந்த பலர் அங்கு இருப்பதைக் கண்டேன். திரு சா.குருசாமி, திரு பூவாளூர் பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார் போன்ற பலர் இருந்தார்கள்.

கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. அது இந்துசமய வாழ்த்து. 'மற்ற சமய வாழ்த்து ஏன் பாடவில்லை? தமிழ் எல்லாச் சமயத்தவர்க்கும் உரியது' என்று சிலர் முழங்கினார்கள்.

தொடக்கமே, கருத்து மோதலாக இருந்தது. மாநாட்டின் நடவடிக்கை நினைத்ததற்கு மாறாக நடந்தது.

அம்மாநாட்டில், திரு சா. குருசாமி - பிற்காலத்தில் 'குத்தூசி குருசாமி' என்று புகழ்பெறப் போகிறவர் - எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆய்ந்து பரிந்துரைக்கும்படி 11 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்று அம்மாநாட்டில் அமைக்கப்பட்டது.

அக்குழு கூடவும் இல்லை; ஆயவும் இல்லை; ஆதரவாகவோ, எதிராகவோ முடிவு சொல்லவில்லை.

பாரதி திங்கள் இதழ் ஆசிரியர்

அம்மாநாட்டில், எனக்கு அடுத்து நெடிய, ஒல்லியான மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார்.

இடுப்பிலே கதர் வேட்டி; தொள தொள வென்ற கதர் சொக்காய். இக்கோலத்தில் வீற்றிருந்த அப்பெரியவர், காங்கிரசு தியாகி என்று தம்மை எனக்கு அறிமுகம் செய்து கொண்டார்.

''நான் காங்கிரசு ஊழியன்; நாராயணசாமி என்னும் பெயரினன். 'பாரதி' என்னும் திங்கள் இதழை நடத்திக் கொண்டு வருகிறேன்.

''கல்கத்தாவிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவரும் 'மாடர்ன் ரெவியூ'வைப்போல் 'பாரதி'யைத் தரமான இதழாக நடத்த விரும்புகிறேன். தாங்கள் யாரோ?'' என்று கேட்டார்.

''நான், அண்மையில், பொருளியல் சிறப்புப் படிப்பை முடித்தவன். எனக்கு வேலை தேடும் படலம் தொடங்யுள்ளது. தமிழ்ப் பற்று பற்றி இம்மாநாட்டிற்கு வந்துள்ளேன். தங்கள் ஊரைத் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேள்வி போட்டேன்.

''அதைச் சொல்ல மறந்துவிட்டேனே. என் ஊரின் பெயர் தேவாரம்; அது மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்திற்கு அப்பால் இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அருகில் இருக்கிறது. தங்கள் பெயர் என்னவோ''? என்று திரு நாராயணசாமி கேட்டார்.

என் பெயரைச் சொன்னேன். அடுத்த வினாடி, ''என்ன சாதி'' என்றார்.

சிரித்தபடியே, ''மனித சாதி'' என்றேன்.

''நானும் சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை. சும்மா தகவலுக்குக் கேட்டு வைத்தேன்'' என்று சொன்னவர். அதோடு விட்டுவிடவில்லை. அது அவருடைய குறையல்ல. அக்காலப் பழக்கம்.

சில மணித்துளிகளுக்குப் பிறகு, தமிழ் நாட்டிலுள்ள பெரிய மனிதர்களின் பெயரைச் சொல்லி 'அவர்களுக்கு உறவா'? என்று தொடர்ந்து சாதிக் கேள்வியைக் கேட்டபடியே இருந்தார்.

சூனாம்பேட்டை நிலக்கிழார் திரு அருணாசல முதலியார் முதல் திருநெல்வேலி மேடை தளவாய் குமாரசாமி முதலியார் வரை சொல்லி எனக்கு உறவா என்று கேட்டார்.

இவர்கள் யாரும் உறவு இல்லை என்று பொறுமையாகச் சொல்லி வந்தேன். என் பதில் பொய் என்று சொல்ல முடியாது. அவர் குறிப்பிட்டவர்களோ மிகமிகப் பெரியவர்கள். நானோ மிகச் சிறியவன்.

அடுத்து வெவ்வேறு சாதிப் பெரியவர்களின் பெயர்களைச் சொல்லி, எனக்கு அவர்கள் உறவா என்று விடாமல் கேட்டார். இல்லை என்ற ஒரே பதிலை எல்லாவற்றிற்கும் கூறினேன்.

பத்து மணித் துளிகளை வீணாக்கிய பிறகு, சலித்துப் போய்,

''எனக்கு எத்தனையோ சுயமரியாதைக்காரர்களைத் தெரியும். அவர்கள் சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை. ஆயினும், தனியாகக்

கேட்டால், பிறந்த சாதியைச் சொல்லிவிடுவார்கள். நீங்கள் ஏன் உங்கள் சாதியைச் சொல்வதில் இவ்வளவு அடம்பிடிக்கிறீர்கள்?'' என்று நாராயணசாமி கேட்டார்.

''அய்யா! நான் சுயமரியாதை இயக்கத்தவன். தாங்கள் குறிப்பிட்ட நண்பர்கள் மூத்த தலைமுறையாக இருக்கலாம். இளைய தலை முறையைச் சேர்ந்தவர்களாக இருப்பின் என்னைப் போலவே பதில் சொல்லியிருப்பார்கள்'' என்றேன்.

திரு நாராயணசாமி, என்னுடைய பதிலைக் கேட்டுச் சினங் கொள்ளவில்லை. இரு கைகளையும் பிடித்துக்கொண்டு குலுக்கினார். என்னை மனமார வாழ்த்தினார். அவருடைய நட்பு வளர்பிறைபோல் வளர்ந்தது.

பாரதிக்கு நான் 'ஜப்பானில் நவயுகம்' என்னும் கட்டுரையும் 'முதன்மையாளர்' என்னும் சிறுகதையும் அடுத்தடுத்து எழுதி யனுப் பியது நினைவில் இருக்கிறது. இரண்டுமே பாரதியில் சிறப்பாக வெளியாயின.

தொடர்ந்து எழுதச் சொல்லித் தூண்டினார். எழுதினேனா? என்ன எழுதினேன் என்பது நினைவில் இல்லை. ஏன்? என் வாழ்க்கையில் முதன்முதல் சலசலப்பைக் காண நேர்ந்தது.

மூன்று நான்கு ஆண்டுகள் வேலையில் இருந்தவர்களைக்கூட வீட்டுக்கு அனுப்பிய காலகட்டத்தில், நான் கல்லூரியில் தேர்ச்சி பெற்றேன்.

வேலையைப் பற்றி விளம்பரமே அரிதாக இருந்த காலம் அது. நான் வேலை தேடி அலைவதோடு, என்னைத் தேடி அலைவோர் தலைகாட்டிய பருவமும் ஆக இருந்தது?

49. பேராசிரியர் பிராங்கோ

சமபந்தி முறைக்கு முயற்சி

என்னுடைய மாணவப் பருவத்தின் இறுதி ஆண்டில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அதைச் சமாளிக்கப் புதுமையான முறையை மேற்கொள்ள நேரிட்டது.

நான் தங்கியிருந்த காலத்தில் விக்டோரியா மாணவா வடுதியில், தாவர உணவு உண்பவர்களுக்குள்ளேயே இரு பிரிவுகள் இருந்தன.

ஒரு பிரிவு பார்ப்பனர்களுக்கு; மற்றொன்று பார்ப்பனர் அல்லா தாருக்கு. இரண்டிற்கும் தனித்தனிச் சமையற்கூடம்; உணவுக்கூடம்.

ஒரோர் வேளை, பார்ப்பன மாணவர் எவராது, எங்கள் உணவுக் கூடத்திற்கு வந்து, எங்கள் பலகாரத்தை உண்பதுண்டு. ஏதாவதொரு நண்பனின் விருந்தாளியாகப் பதிவதுண்டு.

பார்ப்பனரல்லாதார் அப்படிச் செய்ய முடியாது. பார்ப்பனர்களின் உணவுக் கூடத்தில் நுழையக்கூடாது.

பல்லாண்டுகளாகத் தொடரும் இக்கொடுமையைப் பற்றி நாங்கள் கொதிப்படையவில்லை; பொறுத்துக் கொண்டு காலத்தை ஓட்டினோம். ஆனால்?

1932 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் பார்ப்பன உணவுப் பிரிவின் பிரதிநிதியும், சில பார்ப்பன மாணவர்களும் என்னிடம் வந்தார்கள்.

தாங்கள் கொண்டு வந்த மனுவை எனக்குக் காட்டினார்கள்.

பார்ப்பனப் பிரிவைச் சேர்ந்த அனைவரும் அதில் கையெழுத்து இட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.

அதைப் பின்பற்றி, நான் கையெழுத்திட வேண்டும்; அதோடு மற்றப் பார்ப்பனரல்லாத 'சைவ' மாணவர்களிடமும் கையெழுத்து வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

அந்த மனுவில் கண்டிருந்த வேண்டுகோள், கோரிக்கை என்ன?

மரக்கறி உண்போர் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட அனுமதிக்க வேண்டுமென்பது கோரிக்கை.

இரு சமையற் கூடங்களையும் இணைத்துவிட வேண்டுமென்றும் அம்மனு வேண்டிக் கொண்டது.

''பார்ப்பனரல்லாத மாணவர்களோடு உட்கார்ந்து சாப்பிட எல்லாப் பார்ப்பன மாணவர்களும் இசைவு தந்து விட்டார்களா?'' என்று அவர்களைக் குறுக்கு விசாரணை செய்தேன்.

''நம் விடுதியிலுள்ள எண்பத்தெட்டுப் பார்ப்பனர்களில், எண்பது பேர்கள் இசைவு தந்து விட்டார்கள். எட்டுப் பேர்கள் ஒப்பவில்லை. அதற்காக நாம் பிரிந்து உட்கார்ந்து சாப்பிடத் தேவையில்லை.

''அதே நேரத்தில் அந்த எட்டுப் பேரைக் கட்டாயப்படுத்தத் தேவையில்லை. அவர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வந்து விட்டோம்.

''எங்களுக்கு ஒரு சமையற்கூடமும் இரு உணவுக் கூடங்களும் உள்ளன. உங்களுக்கு ஒரு சமையற் கூடமும் ஒரு சாப்பாட்டுக் கூடமும் உள்ளன.

''எங்கள் சமையல் அறைக்கு அடுத்துள்ள உணவுக் கூடத்தை அந்த எட்டுப் பேருக்கு ஒதுக்கிவிடுவோம். அங்கே நாம் யாரும் போகமாட்டோம்.

''மற்ற இரு இடங்களிலும் நாம் எல்லோரும் கலந்து உண்போம்.

''பழமை விரும்பிகள் இதற்கு உடன்படுகிறார்கள். அந்த நிபந்தனை யோடு கையெழுத்திட்டுள்ளார்கள். கலந்து உண்ணலாம் என்று நாங்களே முன்வந்த பிறகு, தயக்கம் ஏன்?'' என்பது வந்தவர்களின் பதில்.

அவர்கள் என்னிடம் ஏன் முதலில் வந்தார்கள்? சிறிய, பெரிய தேர்தல் எதிலும் போட்டியிடாமல் - ஆனால், சூத்திரதாரியாகவே - இயங்கி வந்த என்னை, அவ்வாண்டு உணவுக்கூடப் பொறுப்பாளராக்கி விட்டார்கள்; ஒரு மனதாக அப்பொறுப்பை என்மேல் சுமத்தி விட்டார்கள்.

விடுதியில் இருந்தவர்களில் நான் மட்டுமே ஐந்தாவது ஆண்டாகத் தங்கியிருந்தேன். மூத்தவன் என்னும் முறையில் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை இருப்பதாக நினைத்தேன். அது, என்னை இப்படி ஒரு எதிர்பாராத வம்பிலே சிக்க வைக்குமென்று, அப்போது கனவிலும் நினைக்கவில்லை.

பார்ப்பன மாணவத் தோழர்களின் விருப்பப்படி அவர்கள் கொண்டுவந்த மனுவில் கையெழுத்திட்டேன். என் பிரிவில் இருந்த மற்றவர்களிடமும் கையெழுத்து வாங்கினேன். கரும்பு தின்னக் கூலி கேட்பார்களா? எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியோடு கையெழுத் திட்டார்கள். பிறகு,

பார்ப்பனப் பிரிவின் பொறுப்பாளரும் நானும், மேல் வகுப்பு மாணவர்கள் ஐந்தாறு பேருமாக எங்கள் விடுதிக் காப்பாளர் பேராசிரியர் பிராங்கோவைப் பேட்டி கண்டோம். பணிவோடு வந்த காரணத்தை விளக்கினோம்.

தனியாக உண்ண விரும்பும் எண்மரையும் அப்படியே விட்டுவிட்டு மற்றவர்களுக்கு மட்டும் ஒரே சாப்பாட்டுக் கூடமாக ஏற்பாடு செய்தால் போதும் என்றோம். மனுவைக் கொடுத்தோம்;

பேராசிரியர் பிடிவாதம்

பேராசிரியர் பிராங்கோ அதைப் பொறுமையாகப் படித்தார். உடனடி பதில் பளிச்சென்று இறுத்தார்.

என்ன பதில்?

''இப்போதுள்ள முறையை மாற்ற முடியாது. யார் யாரோடு கலந்து உண்ண வேண்டுமென்று சொல்வது உங்கள் வேலையல்ல.

''இதோ! சுந்தரவடிவேலு பார்ப்பனரல்லாத பிரிவின் பொறுப்பாளன் ஆனதற்காக, ஏதோ செய்துகாட்ட வேண்டுமென்று எண்ணி இப்படி ஒரு கலாட்டாவைத் தொடங்குகிறான் போலும்!

அதற்கு நீங்களும் துணைவந்துவிட்டீர்களா? போய் உங்கள் படிப்பைக் கவனியுங்கள்.

''நெ.து.சு.! நீ இதோடு இதைக் கைவிட்டுவிடு. இல்லாவிட்டால் விடுதியை விட்டு விலக்க நேரிடும்'' என்று மிரட்டினார். நான் அஞ்சவில்லை; அமைதியாக நின்றேன்.

உடன் வந்தவர்கள், இதில் முயற்சி எடுத்தது பார்ப்பன மாணவர்களே என்று அடக்கத்தோடு விளக்கினார்கள். தங்கள் வேண்டுகோளின் பேரிலேயே நான் கையெழுத்து இட்டதோடு மற்றவர்களையும் கையெழுத்திடச் செய்ததாகவும் எடுத்துரைத்தார்கள். என் பேரில் எவ்விதப் பிழையும் இல்லை; பழி சொல்வதானால் தங்களைத்தான் சொல்ல வேண்டும் என்றும் சொன்னார்கள்.

''இந்தக் கதையை நான் நம்பத் தயாராக இல்லை. நீ கட்டுப்பட்டு நடக்காவிட்டால் விளைவுக்கு என்னைக் குற்றம் சொல்லாதே!'' என்று என்னைப் பார்த்து மீண்டும் மிரட்டினார்.

''காலம் உண்மையைக் காட்டும் அய்யா! அப்போதாவது நான் இக்கோரிக்கைக்குப் பொறுப்பு அல்ல என்பது தெரியும்'' என்று பதில் உரைத்தேன். எல்லோரும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தோம்.

அந்த வெள்ளைப் பருவத்தில் உண்மையை எவரும் நம்ப மாட்டார்கள். உண்மையை மெய்ப்பிப்பதே அரிது. நடிப்புக்கு அடிமை உலகம் என்று எனக்குத் தெரியவில்லை.

பேராசிரியர் பிராங்கோவின் மிரட்டலை நான் காற்றோடு விட்டுவிடும் நிலையிலும் இல்லை. ஏன்?

ஐந்து திங்களில் பல்கலைக் கழகத் தேர்வு வரும். அத்தேர்வில் என் விடைத் தாள்களை மதிப்பிடப்போவது, இப்பேராசிரியரும் அவர் தோழர்களுமே.

அப்போது, அவர் என்மேல் பழிதீர்த்துக் கொள்ளக்கூடும். என் விடைத்தாளில் சுன்னம் போட்டாலும் அதைக் கேட்க நாதி இல்லை.

மூன்றாண்டுப் படிப்பும் வீணாகும் வகையில்தோல்வி முத்திரை குத்திவிடவும் கூடும். அது தவறினால், எனக்கு நன்னடக்கைச் சான்று வழங்க மறுக்கக்கூடும்.

சான்றிதழ் இல்லாவிட்டால், எல்லோருமே கொலைகாரனை ஒதுக்குவது போல் வெறுத்து ஒதுக்குவார்கள். எனவே, நாம் சும்மா இருக்கக்கூடாது.

'நான், சமபந்தி முறைக்குத் தூண்டுகோல் அல்ல' என்பதை விளக்கக்கூடியவர்களும் தென்படவில்லை.

எனவே, என்னையே எண்ணி, பெரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளானேன்.

அசைவப் பிரிவில் சேர்ந்தேன்.

கருத்தொன்று மின்னிற்று. அது சரியானது என்று தென்பட்டது. உடனே வெளியூர் பேருந்து நிலையத்திற்குச் சென்றேன். வாலாஜாபாத் வழியாகக் காஞ்சிபுரம் செல்லும் வண்டி ஏறினேன். வாலாஜாபாத்தில் இறங்கி, ஊர் போய்ச் சேர்ந்தேன்.

அப்போது என்னை நெய்யாடுபாக்கத்தில் எதிர்பார்க்காத என் தாய் திகைப்பில் ஆழ்ந்தார்; ஏதோ, என்னமோ என்று அச்சங்கொண்டார்.

ஒன்றும் இல்லை; பார்த்துவிட்டுப் போகவே வந்தேனென்று சொல்லி அமைதிப்படுத்தினேன்.

வயலுக்குப் போயிருந்த என் தந்தையைத் தேடிச் சென்றேன்; கண்டேன்; அவருடைய வியப்பை மாற்றினேன். மெல்ல, நான் மாட்டிக்கொண்டுள்ள வம்பைப்பற்றிக் கூறினேன்.

''அடுத்த நான்கைந்து திங்கள், என் படிப்பிற்கு மிக முக்கியமானவை. அப்படியிருக்க, நானாகத் தேடாவிட்டாலும் இப்படியொரு வம்பு வந்து என்னைக் கௌவிக்கொண்டிருக்கிறது? விடுதியைவிட்டு விலகினால், வெளியே படிப்புக்கு வசதியான இடம் கிடைப்பது அரிது. விடுதியில் அடங்கி இருந்தாலும் பேராசிரியர் தம் தப்பெண்ணத்தை மாற்றிக்கொள்ள மாட்டார். அது, என் தேர்வைப் பாதிக்கலாம். அதற்கு ஒரு பரிகாரம் தோன்றிற்று. அதைச் சொல்லி அனுமதி பெற்றுப்போக வந்துள்ளேன்.

''எங்கள் விடுதியில் அசைவ உணவுப் பிரிவு இருக்கிறது. அதில் நாள்தோறும் காய்கறி உணவும் உண்டு. அச்சமையல்காரர்களோடு பேசினேன். காய்கறி உணவைத் தனியாக எடுத்து வைத்து, எனக்குப் பரிமாறுவதாகச் சொன்னார்கள். தனிக் கரண்டியில் விழிப்பாகப் பரிமாறுவதாகவும் சொன்னார்கள்.

''இப்போதைய சிக்கலில், அவ்விடுதிக்கு மாற்றிக்கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். அப்படி மாறினால், உணவுக்கூடப் பொறுப்பாளர் பதவி என்னைவிட்டுப் போய்விடும்; விடுதிக் காப்பாளரின் வெகுளி அப்போதாகிலும் தணியலாம்'' என்றேன்.

''நீ, மரக்கறியே சாப்பிடுவதாக வாக்குறுதி சொல்லத் தேவை யில்லை. நீ நினைக்கிறபடி மாறிக்கொள்.

''ஆனால் உன்னுடைய அம்மா காதில் போடாதே. அப்படிக் கேட்டதும் மூச்சு நின்றுவிடும் உன் அம்மாவுக்கு. இது நம் இருவரோடு இருக்கட்டும். நீ சென்னைக்குப் போ. 'காஸ்மாபாலிடன்' பிரிவில் சேர்ந்துகொள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் படி'' என்று என் தந்தை விடை கொடுத்தார்.

உடனே சென்னைக்குத் திரும்பி வந்தேன். விடுதியில் உணவுக்கூடத்தை மாற்றிக் கொண்டேன். மாமிச உணவுக்கூடப் பரிசாரகர்கள் என்பால் தனிப்பற்றுக் காட்டினார்கள். மீனும் மாமிசமும் முட்டையும் சாப்பிடுபவர்களிடையே அமர்ந்து, காய்கறிகளை மட்டும் கொரிக்கும் கலையை அப்போது கற்கத் தொடங்கினேன்.

சில நாள்கள் சங்கடமாயிருந்தது. பிறகு, ஆறுதல் பெற்று விட்டேன். இந்தப் பக்குவம், பிற்காலத்தில், நான் இருபது தடவைகளுக்கு மேல், வெளிநாடுகளுக்குப் போனபோது, எனக்குப் பேருதவியாக இருந்தது.

1932 ஆம் ஆண்டு விக்டோரியா மாணவர் விடுதியில் மரக்கறி உணவு உண்போர் - பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் என்று வேற்றுமை இல்லாமல் - சமபந்தியாகச் சாப்பிடலாம் என்று ஆரம்பித்த முயற்சி அந்த ஆண்டு வெற்றி பெறவில்லை. அடுத்த ஆண்டில் அது வெற்றி பெற்றது. அந்த விடுதியில் பார்ப்பனருக்கு என்று இருந்த தனிச்சலுகை நீக்கப்பட்டது.

தேர்வில் வெற்றி பெற்றேன்

பல்கலைக் கழகத் தேர்வுகள் வந்தன. தேர்வுகள் தொடங்குவதற்கு முன்னாள் இரவு வழக்கம்போல, ஒன்பது மணிக்கு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துவிட்டேன்.

இரண்டொரு வினாடிகள் கழித்து, என் நண்பர் அகாலாலி அப்பக்கம் வந்தார். என் அடுத்த அறையிலிருந்த திரு தி.அ. இராமகிருஷ்ணனிடம் பேச்சுக் கொடுத்தார்.

இராமகிருஷ்ணன் ஓர் அச்சத்தை அவரிடம் வெளியிட்டார். அது என்ன?

''நெ.து.சு. வகுப்பில் கவனமாகப் பாடங்கேட்கிறார். விடுதியிலும் முறையாகப் படிக்கிறார். இருப்பினும் தேர்வுக்கு முன்னாள், இப்படி அமைதியாகத் தூங்க முடியுமா? ஒன்பது மணிக்கே படுத்துவிட்டாரே!

''ஒருகால், தேர்வு எழுதாமல் நின்று விடுவாரோ என்று அஞ்சுகிறேன். படுத்துச் சில வினாடிகளே ஆகின்றன. நாம் இருவருமாகச் சேர்ந்து எழுப்பிப் படிக்க வைக்கலாமா?'' என்று இராமகிருஷ்ணன் கேட்டார்.

''நெ.து.சு. தேர்வுக்கு அஞ்சமாட்டார். தமக்கு எவ்வளவு தெரியும் என்பதை நன்கு உணர்ந்தவர். அவருடைய தன்னம்பிக்கையை வீணாகக் கலைக்க வேண்டாம்'' என்று இலாலி பதில் சொல்லிவிட்டுப் போனார்.

அவர்கள் பேச்சு என் காதில் வீழ்ந்தது. நான் பதில் கூறவில்லை; கலவரப்படவுமில்லை. அமைதியாக உறங்கினேன்; வழக்கம்போல, ஐந்து மணிக்கு எழுந்து ஆயத்தமானேன்.

கடைசித் தேர்வு நடந்த நாள் மாலை, பேராசிரியர்கள் எங்களுக்குத் தேனீர் விருந்து கொடுத்தார்கள்.

ஒவ்வொருவரும் தாங்கள் பரிட்சையை எப்படி எழுதினார்கள் என்று சொல்லத் துடித்தார்கள்.

எதிர்பார்த்ததைவிட நன்றாக எழுதியவர்கள் சிலர்; எதிர்பார்த்த அளவு நன்றாக எழுதாதவர்கள் சிலர்.

நான் வாய்மூடிக் கொண்டிருந்தேன். பேராசிரியர் கள்ளுக்காரன் என்னைச் சுட்டிக்காட்டி, ''சுந்தரவடிவேலு ஏமாற்றமும் அடைய வில்லை, திடீர்ப்பரிசும் பெறவில்லை என்று ஊகிக்கிறேன்'' என்றார். நான் முறுவல் பூத்தேன்.

தேர்வு முடிவு வந்தது; நான் தேர்ச்சி பெற்றேன்; மகிழ்ந்தேன்.

கல்லூரி திறந்ததும் சான்றிதழ்கள் பெறச் சென்றேன். பேராசிரியர் கள்ளுக்காரன் என்னைப் பாராட்டிவிட்டு நல்ல சான்றிதழ் கொடுத்தார்.

இந்திய வரலாற்றுப் பேராசிரியர் அரங்காச்சாரி நல்ல சான்றிதழ் தந்தார்.

ஆனால், அதற்குமுன் எங்கள் அனைவர் பேரிலும் குறைபட்டுக் கொண்டார்.

என்ன குறை?

''போயும் போயும் உங்களுக்குப் பாடம் சொல்ல நேர்ந்ததே. நிறைய மதிப்பெண் பெற்றவர்கள் என்னும் அடிப்படையில் மாநிலக் கல்லூரியில் சேர்ந்த நீங்கள் தேடிச் சேர்க்காத புகழை, பச்சையப்பன் கல்லூரி மாணவர் தட்டிக்கொண்டு போய்விட்டார். அவர் பெயர் எனக்குத் தெரியாது. பாடம் சொன்னால் அப்படிப்பட்டவருக்குச் சொல்ல வேண்டும்.

''அக்கல்லூரி மாணவர்கள் எழுதிய கட்டுரைத் தாள்களை நான் திருத்தினேன். ஒரு மாணவர் எவ்வளவு சிறப்பாக எழுதியிருந்தார் தெரியுமா?

''பொருளடக்கத்தில் சில பேராசிரியர்களே பொறாமைப்படும் அளவுக்கு இருந்தது. அவருடைய ஆங்கிலநடை, ஆங்கிலப் பேராசிரியர்களுக்குக்கூட வருமா என்பது ஐயம்! இதுவரை அத்தகைய சிறந்த தாளைத் திருத்தியதில்லை.

''எனவே மூன்று கட்டுரைக்குப் பதில் இரு கட்டுரைகளே எழுதியிருந்தும் முதல் மதிப்பெண் அவருக்குக் கொடுத்தேன். எவ்வளவு கெட்டிக்கார மாணவர்! ஆனால் ஏனோ அவர் எல்லாத் தேர்வுகளும் எழுதவில்லை'' என்று மிகவும் குறைபட்டார்.

பேராசிரியர் செய்த தவறு

எங்களுக்கோ எங்களைப் பற்றியே சிந்தனை. அடுத்துப் பேராசிரியர் பிராங்கோவின் சான்றிதழ் பெறச் சென்றேன்.

என்னைப் பார்த்ததும் அவருடைய முகம் மாறிவிட்டது.

''நினைக்காமலே, நான் உனக்குத் தீங்கு செய்துவிட்டேன். இவ்வாண்டு தேர்வுக் குழுவிற்கு நான் தலைவர். முடிவுகளை ஒப்பிடும்போது, பொருளியல் சிறப்புத் தேர்வில் இருவர் தாங்களாகவே முதல் வகுப்பு பெற்றுவிட்டார்கள் என்பது தெரிந்தது. நீ மூன்றாவது இடத்தில் இருந்தாய்.

''நீ, 840 மதிப்பெண் பெற்றிருந்தால் தானாகவே உனக்கு முதல் வகுப்பு கிடைத்திருக்கும். ஆனால் உனக்கு 830 மதிப்பெண் மட்டுமே கிடைத்தது. நூற்றுக்கு ஒரு விழுக்காடு குறைந்தால் அதை மன்னித்து அடுத்த மேல் வகுப்பில் போடுவது, அதுவரை பின்பற்றிய முறை. அம்முறையை ஒரு குழு உறுப்பினர் நினைவுபடுத்தினார்.

''அதே நேரத்தில் என்னுடைய வரலாற்றுப் பிரிவில் எவருமே முதல் வகுப்பை எட்டவில்லை. அப்படியே விட்டுவிட்டால் எனக்கு இழுக்கு.

''எனவே, என் பிரிவில் இருவருக்கு முதல் வகுப்புக் கிடைக்கும் வகையில் முடிவுகளை 'மாடரேட்' பண்ணினோம். அவ்வாறு செய்ததன் மூலம் உன்னைப் பலி கொடுத்துவிட்டேன்.

''மரபு வழி அளவுகோலை உன்னைப் பொறுத்த வரையில் பின்பற்றவில்லை. நீ பாதிக்கப்படுகிறாய் என்று அப்போது தெரியாது. நான், அறியாமல் செய்த தவறால் நீ இரண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற நேர்ந்தது. ஆயினும், பல்கலைக் கழகத்தில் உனக்கே மூன்றாவது இடம்'' என்று ஆறுதல் கூறினார்.

இது அதிர்ச்சி ஊட்டியது; ஆத்திரம் ஊட்டவில்லை.

இரு பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளைத் தூக்கிவிட்டார்; என்னைக் காலை வாரி விட்டார், கிறுத்தவராகிய பிராங்கோ. பின்னாலே சிலரால் முதுகில் குத்தப்பட்டேன். அதற்கு முன்னோடியாக அப்போதே இப்படி நடந்துவிட்டது.

தகுதிக்குக் குறைவான முத்திரையைப் பெற்றுக்கொண்டு, நல்ல சான்றிதழ்களோடு, கல்லூரியைவிட்டு வெளி உலகிற்குள் நுழைந்தேன்.

பேராசிரியரின் செயலை நினைக்கும்போதெல்லாம், இருக்கும் போது ஒருவரைக் கடுமையாகத் தூற்றிவிட்டு, இறந்தபிறகு, அவர் சிறப்புகளைச் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் வடிக்கும் தமிழர் அவலம் நினைவுக்கு வருவதுண்டு.

50. வேலையோ வேலை

ஐ.சி.எஸ். படிக்கும் முயற்சிக்கு ஆபத்து

நினைத்தது ஒன்று; நடந்தது வேறு ஒன்று! என் தந்தையும் நானும் நினைத்தது, பொருளியல் சிறப்புப் பாடம் எடுத்தால், இங்கிலாந்துக்குச் சென்று, ஐ.சி.எஸ். தேர்வு எழுதலாம் என்று.

அப்படி நினைத்தபோது எங்கள் குடும்பத்துக்கு இருந்த பொருளியல் நிலை வேறு. அதற்கான படிப்பை முடிக்கும்போது நிலவிய சூழல் வேறு.

1930 ஆம் ஆண்டில், என்னைச் சீமைக்கு அனுப்பிவைக்கலாமென்று என் தந்தை இசைந்தபோது, நெல்லின் விலை பயிர் இடுவோருக்கு ஆதாயமாக இருந்தது. உழுதவன் கணக்குப் பார்த்தால், தாராளமாகக் கையிருப்பு இருக்கும் வகையில் விலைவாசி இருந்தது.

எனக்குத் தமக்கையோ தங்கையோ இல்லாமையால் திருமணச் செலவு சுமையும் இல்லை.

அதோடு, என் தந்தை, அக்கம்பக்கங்களில் நடைபெறும் நீர்ப்பாசன வேலைகள், சாலைப் பணிகள், பாலங்கள் ஆகியவற்றில் ஒப்பந்தப் பணி செய்து வந்தார். அவையும் ஆண்டுக்குச் சில ஆயிரம் ரூபாய்களைத் தேடித் தந்தன. இப்பணியில் மேலும் வளர முடியுமென்று என் தந்தை நம்பினார்.

எனவே, இங்கிலாந்து சென்று படிக்க வேண்டுமென்னும் என் விருப்பம், அவர் விருப்பமாகவும் மாறிற்று.

ஆனால், புறநிலைகள் வேறு போக்கில் வளர்ந்தன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுக்குப் பின், உலகமுழுவதிலும் பொருளாதார நெருக்கடி கருக்கொண்டு பெரிதாக உருவாகி, பல நாடுகளை அலைக்கழித்தது.

அது இந்தியாவையும தாக்கியது. இங்கேயும் பொருளியல் நலிவு பரவலாக ஏற்பட்டது. விலைவாசிகள் மளமளவென்று சரிந்தன.

அப்போது நெல்லைப் படிக் கணக்கில் விற்பது வழக்கம்.

நெருக்கடிக்கு முன்பு ஐந்நூறு படிக்கு அய்ம்பது, அறுபது ரூபாய் விலை. பின்னர், அதே அளவு நெல்லை முப்பது ரூபாய்க்கும் வாங்குவாரில்லை என்று ஆகிவிட்டது.

நெல் வணிகரிடம் நெல்லை அளந்துவிட்டு, பல திங்கள் காத்துக்கிடந்து, சிறிது சிறிதாகப் பணத்தைப் பெறவேண்டிய அவல நிலை உருவாயிற்று.

கிட்டத்தட்ட இரண்டாவது உலகப்போர் தொடங்கும் வரையில், விலைவாசி வீழ்ச்சி நீடித்தது என்று சொல்லலாம்.

எனவே எண்ணற்ற குடும்பங்களைப்போல் எங்கள் குடும்பத்திற்கும் பயிர்த் தொழில் வருவாய் குறைந்தது.

நாட்டைக் கௌவிய பணமுடையினால், புதுச் சாலைகள் போடுதல், ஏரிகளைச் செப்பனிடுதல் போன்ற ஆக்க வேலைகளில் சுணக்கம் ஏற்பட்டது.

எனவே, ஒப்பந்த வேலைகள் குறைந்தன; என் தந்தையாருக்குமே இவ்வாய்க்காலும் வறட்சி அடையத் தொடங்கிற்று.

இவற்றிற்கு மேலாக, என் தந்தையார் மேற்கொண்ட நடவடிக்கை ஒன்று தொல்லை கொடுத்தது.

ஒப்பந்தக்காரரும் பொறியியலாரும்

அக்காலத்தில் பொதுப்பணிக்கு 'டெண்டர்' போடுவோர், மதிப்பீட்டுத் தொகைக்கும் குறைவாக வேலையை முடிக்க முன்வருவது உண்டு.

சிலவேளை ஒப்பந்தக்காரர்கள் சிலர், ஓர் உடன்பாட்டிற்கு வந்து, அவர்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்து கொள்வார்கள்.

அப்பகுதியில் நடக்கும் பெரிய வேலைகளை யார் யார் எடுத்துக் கொள்வதென்ற அடிப்படையில் ஓர் இரகசிய உடன்படிக்கைக்கு வந்துவிடுவார்கள்.

அநேக சமயங்களில் அவ்வேலைகளை மேற்பார்வையிட வேண்டிய பொறியரே முன்வந்து அத்தகைய உடன்படிக்கையை ஊக்கப்படுத்துவதுண்டு.

அப்படி உடன்படிக்கைக்கு வந்தவர்கள், உண்மையில் போட்டியிட மாட்டார்கள்; போட்டி போடுவதுபோல் நடிப்பார்கள். அவ்வளவுதான்.

பெயரளவில், ஒவ்வொருவரும் சிறுசிறு விழுக்காடு குறைத்து வேலைசெய்வதாக விண்ணப்பிப்பார்கள்.

இரகசிய உடன்படிக்கையில், குறிப்பிட்ட வேலையை எவருக்கு விட்டுவிடுவதென்று முடிவு செய்கிறார்களோ, அவர் மேலும் சிறிது கழித்துக் கொண்டு, பணியைச் செய்து கொடுப்பதாக எழுதிக் கொடுப்பார். இப்படி 'டெண்டர்' என்பது பெயரளவில் நிற்கும்.

வேலைகளை எடுப்போர், சாதாரணமாகத் தாராளமாகப் பணம் பண்ண முடியும். ஏரி நிறைந்தால் சுற்றியுள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயரும்.

அதுபோல், ஒப்பந்தக்காரர்களுக்கு இலாபம் பெருகினால், பொறியியல் துறையினருக்கும் இதுவும் அதுவும் தாரளமாக வந்து சேரும்.

தங்களுக்குள் பேசிக்கொண்டு, கட்டுக்கோப்பாகச் சம்பாதித்துக் கொண்டிருந்த சூழலில், என் தந்தை நுழைந்தார். அது ஏற்கெனவே ஒப்பந்தக்காரர்களாக இருந்தவர்களுக்குச் சிவபூசையில் கரடி புகுந்ததுபோல இருந்தது.

என் தந்தையைச் சம்பாதிக்கத் தெரிந்த கூட்டணியில் இழுத்துக் கொள்ளத் தயங்கினார்கள்.

திரு ஆற்காடு இராமசாமி போன்றவர்களை என் தந்தை அறிந்தவராயிற்றே என்று மிரண்டார்கள். விலகி நின்றார்கள். இந்த நிலையில்,

காஞ்சிபுரத்தில், மருத்துவசாலைத் தெருவில், கால்நடை மருந்தகக் கட்டடம் ஒன்றைக் கட்ட முன்வந்தது, அப்போதைய சென்னை அரசு.

கட்டடத்திற்கு நாற்பத்தெட்டாயிரம் போல் செலவாகும் என்று மதிப்பீடு போட்டு இருந்தார்கள். ஒப்பந்தக்காரர்களைக் கோரும் அறிவிப்பு வந்தது. என் தந்தையும் 'டெண்டர்' கொடுத்தார்.

கிட்டத்தட்ட மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்துக் கொண்டு கட்டடத்தைக் கட்டி முடிப்பதாக எழுதிப் போட்டார். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

'டெண்டர்களை உடைத்துப் பார்த்தபோது, என் தந்தையின் 'டெண்டரே' மிகக் குறைந்த தொகை.

ஆகவே, அவ்வேலை என் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.

தந்தை, கட்டடவேலையை மேற்கொண்டார். தொல்லைகள் விளைந்தன. செங்கல் கொடுப்போரைக் கலைப்பார்கள்; கொத்தனாரைத் திடீரெனச் சொல்லாமல் நிற்கும்படி செய்து விடுவார்கள்.

தச்சுத் தொழிலாளியும் இதிலிருந்து தப்ப முடியவில்லை. இதற்கு மேலாக, மேற்பார்வையிட்ட பொறியர், ஆகாத பெண்டாட்டி கால் பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம் என்பதுபோல், எடுத்ததற் கெல்லாம் குறை கூறினார். அடிக்கடி கலைத்துவிட்டு, மீண்டும் அமைக்கச் சொன்னார்.

அத்தனை இடையூறுகளையும் தாண்டிக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்தார். இருந்தும் வழக்கத்திற்கும் நீண்ட காலம் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் காலந்தாழ்த்தினார்கள்.

கடைசியில் கணக்குப் பார்த்தபோது, கைப்பிடிப்புச் சில நூறுகள் மட்டுமே. ஆயிரக்கணக்கில் அல்ல என்று என்னுடைய தந்தையார்

ஆறுதல் அடைந்தார். ஆனால் பகைச்சூழல் சில ஆண்டுகள் வரை நீடித்தது.

இந்த நிலையில் என்னைச் சீமைக்கு அனுப்பிப் படிக்க வைப்பதைக் கைவிட நேர்ந்தது. உள்நாட்டிலே, வேலைதேடுவோம் என்று நானும் தந்தையும் எங்களை நாங்களே தேற்றிக் கொண்டோம்.

உறவினரின் எதிர்ப்பு

என் கதையைத் தொடர்வதற்குமுன், இவ்விடத்தில் ஓர் நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான், பொறியியற் கல்லூரியில் சேராமல், சிறப்புப் பாடம் படிக்கத் திட்டமிட்டபோது, என் நெருங்கிய உறவினர் ஒருவர் - மூத்தவர் - என்னிடம் அதைப்பற்றி வாதம் புரிந்தார்.

நான் இங்கிலாந்து சென்று படிப்பதை அவருடைய வைதீக உள்ளம் ஏற்கவில்லை. அதை அவர் ஒளிக்கவில்லை. என்னிடம் சொல்லி, என் மனத்தை மாற்ற முயன்றார்.

நான் இசையவில்லை. அதனால் அவர் மனம் புண்பட்டது போலும்! அவர், அதுமுதல் என்னோடு பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

மூன்றாண்டுகளுக்குமேல் ஓடின. கடைசியில் நான் வெளிநாடு போய்ப் படிக்கப் போவதில்லை என்பதைப் பிறர் வழியாகக் கேள்விப்பட்டபோது, அவர் மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்.

சினத்தைவிட்டு, என்னைத் தேடி வந்து, தம்முடைய மகிழ்ச்சியைக் கொட்டினார்.

கடல்கடந்து செல்லுவதும் ஆங்கிலேயர் சமைத்ததை உண்பதும் பெருங்குற்றங்களாக, அந்த உறவினர் கண்ணுக்குப் பட்டன. அவற்றைச் செய்யப் போகிறேன் என்று கருதி மூன்று ஆண்டு பேசாத அளவு வெகுண்டார். இதுவே அன்றைய தமிழ் உலகம்!

வேலை தேடும் படலம்

சுழன்று சுழன்று அடிக்கும் சூறாவளியில் நெடுந்தூரம் பயணஞ் செய்ய வேண்டிய நெருக்கடி வெடித்தால் எப்படியிருக்கும்? அத்தகைய நெருக்கடியில், நானும் என் தலைமுறையினரும் படிப்பை முடித்துவிட்டு, பட்டங்களைப் பெற்றுக்கொண்டு வேலை கொடுக்கும் உலகில் காலடி வைத்தோம்.

இங்கும் அங்கும் அலைந்தோம். இவரையும் அவரையும் தேடிச்சென்று, கண்டு அலுத்தோம். வேலையோ கானல் நீராக இருந்தது.

எங்கே சென்றாலும் 'இல்லை'; 'வேலை இல்லை'; 'வேலை காலி இல்லை' என்ற அறிவுப்புகளைக் கண்டோம்; அத்தகைய பதில்களையே கேட்டோம்.

சில இடங்களில் கிடைத்த பதில்கள் மேலும் அச்சம் ஊட்டும் வகையில் இருந்தன. அவை என்ன?

''பண நெருக்கடியினால் வேலைக் குறைப்பை மேற்கொள்ள நேரிட்டது. மூன்று நான்கு ஆண்டுகள் தொடர்ந்து வேலையில் இருந்தவர்களைக் கூட வீட்டுக்கனுப்பிவிட்டோம்.

''அவர்களும் வேறு வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்.

''எங்கள் அமைப்பில் எப்போதாவது வேலை காலியானல் வேலை நீக்கம் செய்யப்பட்ட அவர்களைத் தேடிக் கொடுக்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் வேலை கொடுத்த பிறகே வெளியாரைப் பற்றிச் சிந்திக்க முடியும். அந்நிலை அய்ந்தாறு ஆண்டுகளுக்குள் வருமா என்பது பெரிய கேள்விக்குறி.''

இப்படிக் கேள்விப்பட்டால் எப்படியிருக்கும்? இக்கால இளைஞர்களுக்கு இது நன்கு புரியும்.

என் தலைமுறையில் பட்ட வேலையில்லாத் திண்டாட்ட வேதனையைவிட இக்கால இளைஞர்கள் படும் வேதனை பெரியது; கொடியது; நஞ்சானது.

என் தலைமுறையில் இப்படி வேலை தேடி அலைந்தவர் களைவிடப் பத்துப் பங்கு பேர்கள் இன்று வேலைக்கு வாயைப் பிளந்துகொண்டு ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நாங்கள் காத்துக் கொண்டிருந்த காலத்தைக் காட்டிலும் நீண்ட காலம் இவர்கள் காத்துக் கொண்டிருக்க நேரிடுமோ என்று அஞ்சுகிறேன்.

''கொடிது; கொடிது பட்டதாரிகளுக்கு வேலை இன்மை'' இதை உணர்ந்தோர் அருகியுள்ளனர். எனவே, வேலை இல்லாத் திண்டாட்டத்தை; விரைந்து தீர்க்கும் அறிகுறிகள் என் கண்களில் படவில்லை.

முப்பதுகளில் வேலைக்கு அலைந்து கொண்டிருந்த எங்களில் பெரும்பாலோர், வேலையின்மையால் பட்டினி கிடக்கும் சூழலில் இல்லை.

விலைவாசி வீழ்ந்து கிடந்தது. பெரும்பாலான பட்டதாரிகள் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்.

அக்கால நடுத்தரக் குடும்பங்களில் 'கூட்டுக்குடும்ப' உணர்வு மேலோங்கியிருந்தது. குடும்பத்தில், வேலையிருந்த ஒருவர், இருவர், மற்றவர்களைக் காப்பாற்ற அவ்வளவு சுணங்கவில்லை.

எனவே, பலர் பல்லைக் கடித்துக்கொண்டு, எப்படியோ காலத்தை ஓட்ட முடிந்தது.

இக்காலப் பட்டதாரிகளில் பலர், எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், அரசுகள் வழங்கும பல்வேறு சலுகைகள், உதவிகளைக் கொண்டு, பல்கலைக் கழகப் படிப்பில் ஈடுபட்டவர்கள்.

பலருக்குப் படிக்கும் காலம்வரை சாப்பாட்டுக் கவலை இல்லை. ஏன்? பெற்ற உதவித் தொகையைக்கொண்டு சாப்பிட முடிந்தது.

படிப்பை முடித்து வீட்டுக்குச் சென்றால் பழைய சோற்றுக்கும் பஞ்சம். இது எண்ணற்ற பட்டதாரிகளின் நிலை.

சித்திரவதைக்கு ஆளாக்கும் வேலையில்லாத் திண்டாட்ட நிலையே, எருமையிலும் சாதுவான இயல்புடைய பலரைப் புலியிலும் கொடிய வன்முறைச் செயல்களுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

எல்லோரும் தங்களை வளர்த்துக் கொள்வதை மட்டும் நினைக்கும் காலச் சூழலில், வேலையில்லாது தவிக்கும் பட்டதாரியைக் காப்பாற்றுவோர் எவர்?

வேலையில்லாத, வேலைவர வாய்ப்பு இல்லாத காலம் என்று பலரும் சொன்னாலும் சும்மா இருக்குமா நம் உள்ளம்? இங்கும் அங்கும் அலையும். நானும் அவ்வாறே அலைந்தேன்.

திருவனந்தபுரம் பயணம்

வேலைதேடி, திருவனந்தபுரம்வரை போகவும் திட்டமிட்டேன். அப்போது திரு அபிபுல்லா என்பவர் திருவாங்கூர் இராச்சிய திவானாகப் பணிபுரிந்தார்.

அவர், வடாற்காடு மாவட்டத் தலைநகராகிய வேலூரைச் சேர்ந்தவர். அந்நகராட்சியின் தலைவராகப் புகழுடன் இருந்தவர்; பின்னர், சென்னை மாகாணத்தில் நிர்வாக சபை உறுப்பினராகி நல்ல பெயர் எடுத்தவர்.

எனவே, இந்து மன்னராகிய திருவாங்கூர் அரசர், இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த திரு அபிபுல்லாவைத் திவானாக நியமித்திருந்தார்.

வேலூரில் இருந்த என் உறவினர் சிலருக்கு அபிபுல்லா, நெருக்கமானவர். அவ்வுறவினர்களில் ஒருவராகிய திரு மாணிக்க முதலியார், என்னைத் திருவனந்தபுரம் அழைத்துக்கொண்டுபோய் திவானிடம் அறிமுகப்படுத்தி, வேலை வாங்கித்தர முன்வந்தார்.

''பொதுவாக நாட்டில் பண நெருக்கடி இருந்தாலும் மன்னர்களின் இராச்சியத்தில், திவான் மனம் வைத்தால், எப்படியும் வேலை கொடுக்கலாம்.

''திரு அபிபுல்லா, இளகிய மனத்தினர்; நட்புக்கு இனியவர்; உதவும் பண்பினர். எனவே எப்படியும் உயர்படிப்பிற்கு ஏற்ற வேலையைப் போட்டுக் கொடுப்பார்'' என்று திரு மாணிக்கம் உறுதியாக நம்பினார்.

எனவே, பயணத் திட்டம் போட்டோம். அவரும் நானும் சென்னையில் சந்தித்து, அங்கிருந்து திருவனந்தபுரம் செல்ல முடிவு செய்தோம். நாளும் குறிக்கப்பட்டது.

ஆனால் பயணம் தடையானது. ஏன்?

நாங்கள் திருவனந்தபுரத்தில் இருக்கத் திட்டமிட்ட நாள்களில், திவான் அபிபுல்லா, தில்லியில் இருப்பார் என்று என் உறவினர் மாணிக்கத்திற்குத் தக்கவர் மூலம் செய்தி எட்டிற்று.

எனவே பயணத்தைத் தள்ளிப்போடச் சொல்லி, வேலூரில் இருந்து செய்தி அனுப்பினார்.

தள்ளப்பட்ட பயணம் நடந்ததா? நடக்கவே இல்லை.

ஏறத்தாழ இருபத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகே, நான் திருவனந்தபுரத்தில் கால் எடுத்து வைக்க நேர்ந்தது.

அவ்வளவு காலம் கழித்து வேலை தேடிப் போனேனா? இல்லை! நாடு தேடிப்போனேன்.

நாஞ்சில் நாட்டைத் தமிழகத்தோடு இணைப்பது என்று முடிவு செய்யப்பட்டபோது, நான் சென்னை மாநிலத்தில் பொதுக்கல்வி இயக்குநர் பதவியில் இருந்தேன். இணைப்புக்கு முன்பு நாஞ்சில் நாட்டுக் கல்வி நிலையங்கள் நிலை, அவற்றிற்கு அரசு கொடுக்கும் உதவி, அங்குள்ளோர் பற்றிய ஊழிய விதி முறைகள், ஆகிய பல தகவல்களை, நேரில் திரட்டி வருமாறு சென்னை அரசு எனக்கு ஆணையிட்டது. அதற்குக் கீழ்ப்படிந்து, அங்குச் சென்றேன்.

அப்பொழுது, வேலைதேடி, திரு மாணிக்க முதலியார் தயவில் வர இருந்தது, அது தவறிப்போனது முதலியன என் நினைவில் மின்னின.

திவானைக் காணத் திட்டமிட்டது பலிக்காவிட்டாலும் திருவாங்கூர் மன்னரையே அம்முதல் பயணத்தின்போது காண நேர்ந்தது பூரிப்பை ஊட்டியது.

களாக்காய் கிடைக்காதவனுக்குப் பலாப்பழம் கிடைத்தாற் போல் இருந்தது. ஆனால் அதுவரை எவ்வளவு பேரால் பொறுமையாகத் தாங்கிக் கொண்டு இருக்கமுடியும்?

51. வேலை தேடி வீண் அலைச்சல்

சிவசங்கரரின் பண்பு

வேலைதேடி, திருவனந்தபுரம் போகும் திட்டம் நிறைவேற வில்லை. அன்றைய நெய்யாடுபாக்கத்திற்குக் காவாந்தண்டலம் அஞ்சல் நிலையத்திலிருந்து வாரம் ஒரு முறையே அஞ்சல் வந்து சேரும்.

அதில்வரும் செய்தித் தாள்களை ஆவலோடு எதிர்பார்த்துக் கிடப்பேன். வந்ததும், விளம்பரங்களைத் தேடிப் பார்ப்பேன், எந்த அலுவலுக்கும் ஆள் கேட்டு விளம்பரம் வரவே இல்லை. எத்தனையோ திங்கள் எதிர்பார்த்து ஏமாந்ததே மிச்சம்.

இப்படிச் சில திங்கள் சென்றபின், என் உறவினர் மா.அ. திருநாவுக்கரசு பி.ஈ.க்குத் திருமணம் வந்தது.

மணப்பெண், சேலம் மிட்டாதார் திரு. சிவசங்கரனுடைய தம்பி, திரு இராம சுப்பிரமணியம் அவர்களின் மகள்.

அத்திருமணம் சேலம் அஸ்தம்பட்டியில் மணமகள் இல்லத்தில் நடந்தது. என் தந்தை அந்தத் திருமணத்திற்கு என்னை அனுப்பி வைத்தார்.

நான் வேலூர் சென்று, மாப்பிள்ளை வீட்டாரோடு சேர்ந்துகொண்டு அவர்களுடன் சேலம் சந்திப்புக்குப் பகல் வண்டியில் பயணம் செய்தேன்.

காலம் கோடைக் காலம். இருப்பினும் பயணப் பரவசத்தினால் வெய்யில் தெரியவில்லை. மாலைப்பொழுது சேலம் சென்றடைந் தோம்.

அங்கே, வயதிலும் செல்வத்திலும் பெரியவரான திரு. சிவசங்கரரைக் கண்டேன். வியந்தேன், ஏன்?

செல்வச் செருக்கே இல்லை. அதோடு மூத்தவர் என்னும் முனைப்பும் இல்லை. பல வயது இளைய என்னோடு கலகலப்பாக அளவளாவினார்.

நான் பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றவன் என்று அறிந்ததும் என்னை அழைத்துக்கொண்டு போய், தம்முடைய தனி நூலகத்தைக் காட்டினார். கண்டேன்; திகைத்தேன். ஏன்?

பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் வெளியாகும் பொருளியல், சமூக இயல் நூல்கள் உடனுக்குடன் அவர் நூலகத்தில் சேர்ந்துள்ளன.

அத்தகைய நூல்களை அப்போதைக்கப்போதே அனுப்பி வைக்கும் படி, இரண்டு மூன்று வெளிநாட்டு நூல் விற்பனையாளர் களோடு நிலையான ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார்.

என் பல்கலைக் கழகத் தேர்வுக்குப்பின் வெளியான நூல்களையும் அவருடைய நூலகத்தில் கண்டது பாராட்டுக்குரியதாக அமைந்தது.

செல்வர்களிடையே அரிதாகக் காணும் பரந்த படிப்பு ஆர்வத்தை அவரிடம் கண்டு வியந்தேன். அவரோடு, மிகுந்த மதிப்புடன் உரையாடினேன்.

சூணாம்பேடு ஜமீன்தாரின் அறிமுகம்

அப்படி உரையாடும்போது, மேலே துண்டு மட்டும் போட்டுக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர் மடமடவென்று, பங்களா மண்டபத்துக்குள் நுழைந்தார்.

அவரைக் கண்டதும் திரு. சிவசங்கரன் எழுந்து வரவேற்றார். நானும் எழுந்து அடக்கமாக நின்றேன்.

வந்தவரோ எனக்குப் புதியவர். அவரிடம் என்னை ''இவர். உங்கள் மாவட்டத்துக்காரர். நெய்யாடுபாக்கம் துரைசாமி மகன்!'' என்று திரு. சிவசங்கரன் அறிமுகப்படுத்தினார்.

அடுத்தநொடி, எங்கள் மாவட்டத்துப் பெரியவர் என்னைப் பார்த்து.

''நீதானா சுந்தரசேகரத்தின் அக்காள் மகன்; பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றவன்'' என்று கேலியுடன் படபடப்போடு கேட்டார்.

''ஆமாங்க'' என்று பணிவோடு கூறினேன். அடுத்து,

''இப்போது என்ன செய்து வருகிறாய்?'' என்று கேட்டார்.

''வேலைக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றேன்.

பெரியவருக்கு வெகுளி வெடித்து வந்தது. ''பெரிய படிப்புப் படித்துவிட்டாய்! எங்கேயாவது எழுத்தர் வேலைக்கு முயன்றால் அது கிடைக்கலாம். உனக்கு அது போதாது? பெரிய வேலையாக வேணுமாக்கும்! இப்படி இருந்தால் எப்படி பிழைப்பாய்'' என்று பொரிந்தார்.

பெரிய படிப்புப் படித்ததாக, நான் நினைத்ததில்லை. சிறிய வேலை செய்யக்கூடாதென்று சுணங்கியதும் இல்லை.

அறிமுகமில்லாத பெரியவர் ஒருவர் இப்படிப் பேசியதையும் நான் அதற்கு முன் கேட்டதில்லை,

எனவே, நொடியில் என் முகம் வாடிவிட்டது. ஆனால், வாய் திறக்கவில்லை. பெரியவர் கண்டனத்தை முடித்ததும் சிவசங்கரர் தலையிட்டார்.

''இவ்வளவு படிப்பு; ஒழுங்காகப் படித்து, நல்லபடி தேர்ச்சி பெற்றவர்கள் நம்மில் சிலரே. அவர்களின் நினைப்பாவது உயர்வாக இருக்கட்டுமே. எடுத்த எடுப்பிலேயே, சிறியதோடு நிறைவு கொள்ளும்படி, உங்களைப் போன்ற பெரியவர்கள் சொல்லலாமா?

''உங்கப் பக்கத்து இளைஞனுக்கு நீங்கள்தான் முன் வந்து உதவவேண்டும். அது முடியாவிட்டால் அவன் தன்னம்பிக்கையை சிதைக்க வேண்டாம். அவனுக்கு வயது இருபத்தொன்றுதான்.

''ஆகவே, துணிந்து பெரிய பதவிகளையே நினைத்து முயலட்டும். நம்மவர்களுக்குப் பெரியதையே நினையுங்கள்; செய்யுங்கள்'' என்று அமைதியாக, இனிய குரலில் சிவசங்கரர் சொல்லவும், பெரியவர் திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினார்.

வந்தவர் யாரென்று எப்படிக் கேட்பதென்று தயங்கினேன். அப்பெரியவர் பல அடிபோகும் வரையில் காத்திருந்த மிட்டாதார் சிவசங்கரர், புன்முறுவலுடன் என்னைப் பார்த்து,

''அவர்தான், சூணாம்பேடு ஜமீன்தார், அருணாசல முதலியார். அவர் இயல்பு அப்படிப் பேசுவது. அவர் சொன்னதைப் பற்றி மனம் புண்படாதே'' என்று தேற்றினார்.

தமிழ்நாட்டின் அரசியலில் சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக அடிக்கடி தலையிட்டு, நிறையப் பணத்தைச் செலவிட்டு, குழப்பங்களை, குழுக்களை, கவிழ்ப்புகளை உருவாக்கிய இந்த ஜமீன்தாரை முதன் முறை சந்தித்தபோது, 'செல்வம் சொல்லுக்கு அஞ்சாது' என்னும் உண்மையை உணர்ந்தேன்.

எரிச்சல் ஊட்டும் வகையில் பேசிய அவரே, பின்னர் எளிதாக உதவியதை உரிய இடத்தில் காட்டுகிறேன்.

திருமலையில் நடந்த தொரைபதியின் திருமணம்

வேலைக்காக ஏங்கிக் கிடந்த பருவத்தில், மற்றோர் திருமணத்திற்கும் செல்லும்படி நேர்ந்தது.

சிறப்பு வகுப்பில் என்னுடன் படித்தவர் திரு க.ப. தொரைபதி என்பவர். அவருடைய தந்தை புகழ்பெற்ற மாவட்ட நீதிபதியாக இருந்தார்.

அவர் சித்தூரில் பதவியில் இருந்தபோது நான் அந்நகரத்திற்குச் சென்று அவர்களோடு தங்கியிருந்தேன்.

நண்பர் தொரைபதியும், அவரது தந்தை திரு. சி. பக்தவத்சலமும், தொரைபதியின் தம்பிகளும் என்னிடம் பழகிய அளவு நெருக்கத்தோடு வேறு எவரும் பழகியதில்லை என்பது மிகையல்ல.

திரு தொரைபதி, இளமையிலேயே தாயை இழந்துவிட்டார். எனவே அவர் வீட்டைக் கவனித்துக் கொள்வது 'நாயர்' சமையற்காரரின் பொறுப்பிலிருந்தது.

அவரைப் போன்ற பொறுப்பும் பணிவும் பாசமும் உடைய ஒரு சமையற்காரரையும் நான் கண்டதில்லை.

அவர்களோடு தங்கியிருந்தபோது, நாள்தோறும் சித்தூரின் மரம் செறிந்த நெடுஞ்சாலைகளில் நடந்து மகிழ்ந்தோம். எத்தனை எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டிமகிழ்ந்தோம்.

திரு தொரைபதி பின்னர், சட்டக்கல்லூரியில் படித்து, பி.எல். பட்டம் பெற்றார். வழக்கறிஞராகப் பதிந்துகொண்ட பிறகு, பல்லாண்டு பொறுக்காமல், உடனடி வந்த சிறிய ஏணிப்படியில் காலெடுத்து வைத்துவிட்டார்.

பூவிருந்தவல்லியில், மாதச் சம்பளத்தில் உதவி பப்ளிக் பிராசிக்யூடராகச் சேர்ந்தார். படிப்படியாக உயர்வதற்கு நெடுங்காலமாயிற்று.

திரு தொரைபதியின் நல்ல குணத்திற்கும் நேர்மைக்கும் உழைப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் அவர் நீதித்துறையின் பெரும் பதவிகளுக்கு உயர முடியாமற் போனதைப் பற்றி எண்ணும்போது என் உள்ளம் கலங்கும்.

அந்த இனிய நண்பர் தொரைபதியின் திருமணம் திருமலையில் நடந்தது. அத்திருமணத்திற்கும் போய் வருமாறு என் தந்தை பணித்தார். அவ்விதமே, சித்தூர் சென்று, மாப்பிள்ளை வீட்டாரோடு திருமலைக்குச் சென்றேன்.

திருப்பதி இரயில் நிலையத்தில் நள்ளிரவுபோல் இறங்கினோம். அப்போது நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. திருமலை ஏறுவதற்கு 'தோலி'களை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அக்காலத்தில் திருமலைக்குப் போக, சாலையோ பேருந்தோ கிடையாது. இரு ஆள்கள் தோள்களின் மேல் சுமந்து செல்லும் தோலி மட்டுமே இருந்தது. பலமான கொம்பில் தொட்டிலைக் கட்டி முன்னே ஒருவரும், பின்னே ஒருவருமிருந்து சுமந்து செல்வது தோலி. பொருட்களோ, நெடுந்தூரம் நடக்க முடியாத ஆள்ளோ மலையேற ஒரே வழி தோலிதான்.

நானும் இரண்டொரு இளைஞர்களும் ஆள்களுக்குச் சுமையாகச் செய்வதை விரும்பவில்லை; நடந்தே மலையேறினோம்; வழியில், இரண்டொரு முறை, தோலிகள் வருவதைச் சரிபார்க்க, சில மணித்துளிகள் நின்றோம் அவ்வளவே!

திருமலையை அடைந்ததும் எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த சத்திரத்திற்குள் நுழைந்து படுத்தோம்; மரக்கட்டைகள் போல் உறங்கினோம்.

பொழுது விடியும் வேளை - திருமண வேளை நெருங்கியபோது எங்களை உலுக்கி எழுப்பி, திருமணத்தைக் காண வைத்தார்கள்.

திருமணம் முடிந்ததும், சிற்றுண்டி உண்டுவிட்டு மீண்டும் உறங்கினோம். பிற்பகல் உணவருந்திவிட்டு, மலை இறங்கி வந்தோம். நடந்தே வந்தேன். அடுத்த சில நாள்கள், கால்கள் என் வசத்தில் இல்லை.

திருமலையில் நடந்த அத்திருமணம் நல்ல திருமணம். பதவிப் பேறு இல்லாவிட்டாலும் பாரியைப்பேறு திரு தொரைபதியுடையதாகும்.

தொரைபதியின் குடும்பம் அமைதியாக படாடோபமின்றிச் சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தொண்ணூறு வயதைத் தாண்டியும் பெரியவர் சி. பக்தவத்சலம், வாழ்ந்து வந்தார் என்பது தெம்பூட்டுகிறது.

பஞ்சாயத்து மன்றங்களின் தொடக்கம்

வேலைகளைப் பற்றிய விளம்பரங்கள் இல்லா விடினும், செய்திகள் காற்றுவாக்கில் வந்தன. அத்தகைய செய்தி ஒன்று, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்பதாகும்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் ஊராட்சிமுறை வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

அரசால் நியமிக்கப்பட்ட கௌரவ அமைப்பாளர்கள், பெரிய கிராமங்களுக்குச் சென்று, அவ்வூர்களில் ஊர் ஆட்சி மன்றங்களை (பஞ்சாயத்து மன்றங்கள்) அமைப்பார்கள்.

தொடக்கத்தில் பொதுமக்கள், அதில் அக்கறை காட்டவில்லை. ஊரிலுள்ள பெரிய மனிதர்களை அமைப்பாளரே தேடிப்பிடிப்பார். தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் என்னும் பொறுப்புகளைச் சுமத்துவார்.

அந்தப் பட்டியலை மேலிடத்திற்கு - மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவருக்கு - அனுப்பி வைப்பார். அவருடைய ஒப்புதல் பெற்று அறிவிப்பார்.

முதன்முறை, இப்படிப் பிடித்து வைக்கப்பட்டவர்களைக் கொண்டதே பெரும்பாலான ஊராட்சி மன்றங்கள்.

அடுத்து, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, நாள் குறிப்பிட்டு, பறைசாற்றிவிட்டு, உரிய நாள் 'தேர்தல்' நடக்கும். பல ஊர்களில் போட்டியிட எவரும் முன்வர மாட்டார்கள்.

தேர்தல் அதிகாரியே - பெரும்பாலும் அமைப்பாளரே நாலு பேரையும் கலந்துகொண்டு, சில பெயர்களைத் 'தேர்தல் உறுப்பினரா'க்கிவிட்டு வருவார். அப்புறம் தலைவர், துணைத்தலைவர் தேர்தல் நாடகமும் ஆடப்படும்.

இப்படி, பல பெரிய ஊர்களில் ஊராட்சி மன்றங்கள், பத்தாண்டுக்கு மேலாகச் செயல்பட்டபின் அவற்றைக் கண்காணித்து, தணிக்கை செய்து, சரியானபடி இயங்கவைக்க வேண்டுமென்னும் எண்ணம் கருக்கொண்டது; சிலகாலம் பேச்சாக இருந்த இக்கருத்து, பின்னர் செயல் உருவம் பெற்றது.

மாவட்டந்தோறும் ஒரு மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரியை நியமிப்பது என்பது திட்டம்.

மாவட்ட உடல்நல அதிகாரியைப்போல, மாவட்டப் பொறி யியலாரைப்போல, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி மாவட்ட ஆட்சிக்குழுவின் ஆணையின் கீழ் செயல்பட வேண்டும்.

ஆனால் அந்த அதிகாரிகளை, உள்ளாட்சி மன்றங்களின் தலைமை ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் லோகல் போர்ட்ஸ்) நியமிக்க வேண்டும்.

ஒரே நேரத்தில், பதினைந்து இருபது அதிகாரிகளை நியமிக்க விருப்பதால், பாதிப் பதவிகளையாவது, நேரே, பட்டதாரி இளைஞர்களுக்குக் கொடுக்கக்கூடும் என்று எங்கும் பேச்சாயிருந்தது.

வேலை தேடும் படலம்

அப்போது தலைமை ஆய்வாளராக இருந்தவர், திரு. தம்போ ஐ.சி.எஸ். ஆவார். அவர் யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்; பார்ப்பனரல்லாதார் பேரில் ஓரளவு பற்றுடையவர்; தமிழ்ப் பற்றும் உடையவர். திரு.வி. கலியாணசுந்தரனாருக்கு மிகவும் வேண்டியவர்.

இப்படிப்பட்ட, உறுதிப்படாத தகவல்களை வைத்துக்கொண்டு என் நல்லாசிரியர் புலவர் திரு நமச்சிவாயர் வழியாக, திரு.வி.க.வின் உதவியை நாடினேன். பரிந்துரை பெறுமளவுக்குத் தம்போ நெருக்கமானவரல்ல என்று திரு.வி.க. கூறிவிட்டார். அம்முயற்சி பலிக்காததைப்பற்றி நான் அயர்வு கொள்ளவில்லை.

வேலூரில் புகழோடு விளங்கிய என் உறவினர் திரு மா.ச. துரைசாமியை அணுகினேன். என் தந்தையின்பால் கொண்டிருந்த நட்பை எண்ணி; அவர் தீவிரமாக முயற்சி செய்ய முன் வந்தார்.

டாக்டர் சுப்பராயனின் சுயேச்சை அமைச்சரவையில் அமைச்சராக இருந்த திரு எஸ். முத்தய்யாவின் சட்டமன்றச் செயலராக இருந்தவர், திரு மாணிக்கவேலர். அவர் எம்.ஏ., பி.எல். பட்டம் பெற்றவர்; வேலூர்க்காரர்; என் உறவினருக்கு வேண்டியவர்.

திரு மாணிக்கவேலர் அவ்வமயம், சென்னை சிந்தாதிரிப் பேட்டையில், சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் கூவத்தைப் பார்த்தாற்போல் இருந்த பங்களாவில் குடியிருந்து வந்தார்.

இப்படி, பல பெரிய ஊர்களில் ஊராட்சி மன்றங்கள், பத்தாண்டுக்கு மேலாகச் செயல்பட்டபின் அவற்றைக் கண்காணித்து, தணிக்கை செய்து, சரியானபடி இயங்கவைக்க வேண்டுமென்னும் எண்ணம் கருக்கொண்டது; சிலகாலம் பேச்சாக இருந்த இக்கருத்து, பின்னர் செயல் உருவம் பெற்றது.

மாவட்டந்தோறும் ஒரு மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரியை நியமிப்பது என்பது திட்டம்.

மாவட்ட உடல்நல அதிகாரியைப்போல, மாவட்டப் பொறி யியலாரைப்போல, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி மாவட்ட ஆட்சிக்குழுவின் ஆணையின் கீழ் செயல்பட வேண்டும்.

ஆனால் அந்த அதிகாரிகளை, உள்ளாட்சி மன்றங்களின் தலைமை ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் லோகல் போர்ட்ஸ்) நியமிக்க வேண்டும்.

ஒரே நேரத்தில், பதினைந்து இருபது அதிகாரிகளை நியமிக்க விருப்பதால், பாதிப் பதவிகளையாவது, நேரே, பட்டதாரி இளைஞர்களுக்குக் கொடுக்கக்கூடும் என்று எங்கும் பேச்சாயிருந்தது.

வேலை தேடும் படலம்

அப்போது தலைமை ஆய்வாளராக இருந்தவர், திரு. தம்போ ஐ.சி.எஸ். ஆவார். அவர் யாழ்ப்பாணத்துக் கிறித்தவர்; பார்ப்பனரல்லாதார் பேரில் ஓரளவு பற்றுடையவர்; தமிழ்ப் பற்றும் உடையவர். திரு.வி. கலியாணசுந்தரனாருக்கு மிகவும் வேண்டியவர்.

இப்படிப்பட்ட, உறுதிப்படாத தகவல்களை வைத்துக்கொண்டு என் நல்லாசிரியர் புலவர் திரு நமச்சிவாயர் வழியாக, திரு.வி.க.வின் உதவியை நாடினேன். பரிந்துரை பெறுமளவுக்குத் தம்போ நெருக்கமானவரல்ல என்று திரு.வி.க. கூறிவிட்டார். அம்முயற்சி பலிக்காததைப்பற்றி நான் அயர்வு கொள்ளவில்லை.

வேலூரில் புகழோடு விளங்கிய என் உறவினர் திரு மா.ச. துரைசாமியை அணுகினேன். என் தந்தையின்பால் கொண்டிருந்த நட்பை எண்ணி; அவர் தீவிரமாக முயற்சி செய்ய முன் வந்தார்.

டாக்டர் சுப்பராயனின் சுயேச்சை அமைச்சரவையில் அமைச்சராக இருந்த திரு எஸ். முத்தய்யாவின் சட்டமன்றச் செயலராக இருந்தவர், திரு மாணிக்கவேலர். அவர் எம்.ஏ., பி.எல். பட்டம் பெற்றவர்; வேலூர்க்காரர்; என் உறவினருக்கு வேண்டியவர்.

திரு மாணிக்கவேலர் அவ்வமயம், சென்னை சிந்தாதிரிப் பேட்டையில், சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் கூவத்தைப் பார்த்தாற்போல் இருந்த பங்களாவில் குடியிருந்து வந்தார்.

திரு துரைசாமி சென்னைக்கு வந்து, என்னை அழைத்துக் கொண்டுபோய் திரு மாணிக்கவேலரிடம் நேரில் அறிமுகப்படுத்தி விட்டு, அவர் உதவியை நாடினார்.

திரு மாணிக்கவேலர் மரியாதையோடு வரவேற்றார். இனிமையாகப் பேசினார். விசாரித்து, ஆவன செய்வதாகக் கூறினார்.

ஐந்தாறு முறை, துரைசாமி எனக்காகச் சென்னைக்கு வந்தார்; மாணிக்கவேலரிடம் சென்றார்; உதவியைக் கோரினார். பேச்சிலே இனிமையிருந்தது; பயன் ஏதும் இல்லை.

திரு துரைசாமியின் ஆணைப்படி, நானாகவே சிலமுறை திரு மாணிக்கவேலரை அணுகிக் கோரினேன். எனக்கு எதுவும் எட்டவில்லை.

வட்டிக் கடையில் வருவாய் மிகுதி

ஓராண்டு காலம்போல, இதற்கு முயன்ற பிறகு, திரு துரைசாமி சலிப்படைந்தார். ஒரு முறை, எனக்குப் புதுவழி ஒன்றைக் கூறினார்.

''எதற்காக நீ, இப்படியெல்லாம் அலையணும்? இந்த வேலைக்குச் சம்பளமோ, மாதம் ரூபா நூற்றுஅய்ம்பதே!

''பேசாமல் நான் கொடுக்க இருக்கிற பணத்தை வைத்துக்கொண்டு என்னைப்போல் வட்டிக்கடை நடத்தினால், மற்றவர்கள்தான் உன்னிடம் வந்து நிற்பார்கள். வருவாயும் இதைவிடப் பலமடங்கு அதிகமாக இருக்கும். அப்புறம் உன் விருப்பம்'' என்றார்.

அன்று பல இலட்சங்களுக்கு அதிபதியாக இருந்த அவர், என் பொருட்டுப் பலமுறை சென்னைக்கு வரவும், உதவிகோரிப் போகவும் உடன்பட்டது பெரிய செயலாகும். அவருக்குச் சலிப்பு ஏற்பட்டது இயற்கை.

அவர் உள்ளூர நினைத்துக்கொண்டிருப்பதும் எனக்குத் தெரியும். அதற்கு என் புரட்சி உள்ளம் ஒப்பாது என்பதும் அவருக்குத் தெரியும். அந்நிலையில் நான் எப்படிச் சலிப்படைந்து வேலை தேடுவதை விட்டுவிட முடியும்?

திரு மாணிக்கவேலர் வழியாக, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி வேலைக்கு முயன்று கொண்டிருக்கையில், மற்றொரு பெரியவர் வழியாகவும் முயற்சித்தேன்.

அமைச்சர் பி.டி. இராசன்

திரு பி.டி. இராசன், அப்போது கூட்டுறவுத்துறை அமைச்சர். அவருடைய மைத்துனர் திரு சீனிவாசன் எனக்கு மிக நெருக்கமான நண்பர்.

முன்னர் திரு மீ. பக்தவத்சலம் வீட்டில் தங்கியிருந்த அந்த நண்பர் திரு பி.டி. இராசன் அமைச்சரான பிறகு அவரோடு அவர் வீட்டிலேயே, தங்கிப் படித்துக்கொண்டு இருந்தார்.

அவரைப் பார்க்க விடுமுறை நாள்களில் அமைச்சர் இல்லம் சென்று வருவேன்; புகழ்பெற்ற அக்குடும்பத்தின் விருந்தோம்பலைப் பெற்று மகிழ்வேன்.

இச்செலவு வளர்ந்தது; பல நாள்கள் அமைச்சரில்லத்தில் செலவிட நேர்ந்தது.

இடுப்புப்பிள்ளை முதல் அய்ந்து வயது தம்பி வரை என்னைத் தேடி ஓடிவரும் அளவிற்கு நெருக்கமாகிவிட்டேன். அக்குடும்பத்தில் ஒருவனைப்போல் என்னையும் நடத்தினார்கள்.

மிக நெருக்கமாகிவிட்ட எனக்கு திரு பி.டி. இராசனிடம் வேலை கேட்க நா எழவில்லை. அவர் மைத்துனர் சீனிவாசன் என்னை அழைத்துக்கொண்டு போனார். எனக்காகப் பேசினார். எப்படியும் எனக்கு உதவும்படி கோரினார்.

அமைச்சர் என்னிடம் சில தகவல்கள் கேட்டறிந்துகொண்டு உதவுவதாகச் சொன்னார். பொறுமையாக, மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தேன்.

சில திங்களுக்குப் பிறகு, சில நியமனங்கள் வெளியாயின. அவற்றில் திரு. பொன்னம்பலம் என்பவர், தென்னாற்காடு மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு பொன்னம்பலம் எனக்கு மூவாண்டு மூத்தவர். மூவாண்டுக்கு முன்னர் பட்டம் பெற்றவர். விக்டோரியா மாணவர் விடுதியில் அவர் இருந்தபோது எனக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார்.

இவற்றிற்கு மேலாக, அவருடைய தந்தை, நாமக்கல் வழக்கறிஞர், திரு. வேங்கடபதி, தன்மான இயக்கத்தின் தூண்களில் ஒருவராக இருந்தார்.

அவர் முன்னின்று, நாமக்கல்லில் சிறப்பான சுயமரியாதை மாநாட்டை நடத்தி, சாதாரண மக்களை விழிப்படையச் செய்வதில் துணைநின்றார்.

எனவே, எனக்குப் பதவி கிடைக்காமையை மறந்து, நான் பற்றுக் கொண்டிருந்த இயக்கத்தின் முன்னோடி ஒருவரின் மகனுக்கு - என் நண்பருக்கு - பதவி கிடைத்ததைப் பற்றிப் பூரித்தேன்.

எனக்கும் வாய்ப்பு வருமென்று எதிர்பார்த்து, அப்போதைக்கப் போது நினைவுபடுத்திக் கொண்டிருந்தேன்.

கேரள வழக்கறிஞர் ஒருவர் - பாலகிருஷ்ணன் என்னும் பெயரினர். அமைச்சர் பி.டி. இராசனின் இல்லத்தில் கூடாரமடித்தார்; நாள்கணக்கில் தங்கினார்.

அவர் மதுரையில் வழக்கறிஞராக இருந்தவராம். அத்துறையில் போதிய பணம் சம்பாதிக்க இயலாமையால் வேலைக்குப் போக முயன்றாராம்.

ஏதோ பெற முயன்றுவிட்டு, கடைசியில் மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி பதவியையாகிலும் பிடிப்பது என்று, பகீரத முயற்சியில் ஈடுபட்டு இருந்தாராம்.

அம்முயற்சியில் பகுதியே அவர் பி.டி. இராசன் இல்லத்தில் வந்து தங்குவது என்ற ரகசியத்தை நண்பர் சீனிவாசன் கண்டுபிடித்தார்.

எனக்காக முயன்றுகொண்டே இருந்தார். எல்லாப் பதவிகளுக்கும் ஆட்களை நியமித்த பிறகே, அவர் ஓய்ந்தார்.

தங்கவேலரின் முயற்சி

நான் மனம் உடையவில்லை; தொடர்ந்து அலைந்தேன். என்னை அழைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் திரு ஏ.கே. தங்கவேலர் அலைந்தார்.

காஞ்சிபுரத்திலிருந்து எத்தனை முறை, தம் செலவிலேயே, என்னைச் செங்கற்பட்டிற்கு அழைத்துக் கொண்டு போனார்! தம் செலவில் அழைத்து வருவார்.

வீட்டுப் பணத்தைச் செலவிட்டுத் தொண்டாற்றிய பழைய நீதிக்கட்சி மரபில் வந்தவர், தங்கவேலர்.

அவர் 1920 இல் இருந்து என் தந்தைக்கு நண்பர்; இரட்டையாட்சி முறையின்கீழ் நடந்த சென்னை மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் திரு ஆற்காடு இராமசாமி முதலியாருக்காகப் பாடுபட்டவர்களில் என் தந்தையும் தங்கவேலுவும் சேர்ந்தவர்கள்.

அப்போது இருவருக்கும் நட்பு ஏற்பட்டது. தொடர்ந்து ஆற்காடு இராமசாமி முதலியாருக்காகவே, ஒவ்வொரு தேர்தலிலும் இருவரும் வாக்குச் சேகரிப்பதில் முனைந்திருந்தார்கள்.

எனவே, நட்புப் பெருகிற்று. நட்பின் காரணமாகப் பலமுறை, என்னைச் செங்கற்பட்டு மே. வேதாசலத்திடம் அழைத்துச் சென்று உதவி கோரினார். சிலவேளை, சென்னைக்கே அழைத்துப்போய், திரு ஆற்காடு இராமசாமியிடம் அவர் உதவி கோரியதும் உண்டு. எதுவும் பலிக்கவில்லை.

காலம் ஓடிற்று; சோர்வு மிகுந்தது; வெறுப்பு வளர்ந்தது. பொறுப்பாகப் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கும் வேலை கொடுக்க இயலாத முறையின் மேல் எரிச்சல் மட்டுமா, வெறுப்பும் பொங்கிற்று.

52. வேலை இல்லாக் கொடுமை

இலவுகாத்த கிளிபோல், செய்தித் தாள்களில் வேலைக்கு ஆள் தேடும் விளம்பரங்களை எதிர்பார்த்து ஏங்கினேன். செய்தித் தாள்களில் அத்தகைய விளம்பரமே தென்படவில்லை.

கொடிது கொடிது வறுமை கொடிது. புத்தி தெரியாத சிறு வயதில் வறுமையின் வாட்டம் வளர்ச்சியைக் கெடுக்கும். வாலிபப் பருவத்தில் வழி அடைக்கும் வறுமை, சிந்தனையில் கொதிப்பை வளர்க்கும்.

மக்கள் அனைவருக்கும் வாழ உரிமையுண்டு. நாணயமாகத் தொழில்புரிந்து வாழ உரிமையுண்டு; அவ்வுரிமை நடைமுறைப் படுவதற்குத் தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பது, சமுதாயத்தின் கூட்டுப்பொறுப்பு ஆகும்.

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தாமல், பார்த்துக் கொள்வது அரசின் கடமை. அதற்காகச் சட்டதிட்டங்கள் ஏற்படுகின்றன.

வெளிநாட்டுப் படையெடுப்புகளில் இருந்து நாட்டைக் காப்பதும் அரசின் கடமை. அதற்கு வேண்டிய படையை, படைக்கலன்களை, விழிப்பான நிலையில் வைத்திருப்பது அரசின் பொறுப்பு.

சாலைகளை அமைத்தல் ஆட்சியின் வேலை. ஊர்க்காவல், குடிநீர் வசதி, விளக்கு வசதி, சுகாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஏற்பாடு செய்யும் அரசுக்கு மற்றோர் பொறுப்பும் உண்டு.

வேலைச் சந்தைக்கு வரும் ஆள்களைக் கணக்கிட்டு, அவர்களுக்கு உரிய காலத்தில், வேலை வாய்ப்புகள் கிட்டும்படி பார்த்துக் கொள்வது, இக்கால நாகரிக அரசுகளின் தலையாய கடமையாகும்.

நான் வேலைச்சந்தைக்கு வந்தபோது, வெள்ளையன் நம் நாட்டை ஆண்டு கொண்டிருந்தான்.

'எருது நோய் காக்கைக்குத் தெரியாது' என்பது பழமொழி.

ஆளப்படுவோரின் அவலம், ஆள்பவர்களுக்குத் தெரிவதில்லை.

அந்த அலட்சியப்போக்கு, முப்பதுகளில், பல இந்திய இளைஞர்களைத் தீவிரவாதிகளாக மட்டுமல்லாது வன்முறை யாளர்களாகவும் மாற்றிவிட்டது.

வேலை இன்மையை ஒழித்த சோவியத் நாடு

எத்தனை இருட்டடிப்பு செய்தாலும் மேனாட்டுப் போக்குகள், குறிப்பாக இரஷிய மக்கள் போக்கும் திசையும், நம் நாட்டவர்களுக்கும் தெரிந்தது.

தனியுடைமைக்கு மாற்றான பொதுஉடைமைச் சமுதாயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இங்குள்ளவர்களுக்கு விழிப்பை ஊட்டியது. எழுச்சியை ஏற்படுத்தியது.

வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழித்துவிட்ட சோவியத் நாட்டின் மேல் கவனமும், ஒழுங்காகப் படித்து, நன்றாகத் தேர்ச்சி பெற்று, பணிவோடு அலுவல் பார்க்கக் காத்திருக்கும் பல்லாயிரக்கணக் கானவர்களைத் திண்டாட விட்டு வேடிக்கைபார்க்கும் நம் பொருளியல் முறைமேல் கசப்பும் ஏற்பட்டன. அப்படிப் பாதிக்கப்பட்டோரில் நானும் ஒருவன்.

பொருளியல் பாடத்தில் சமதர்ம, பொதுஉடைமைக் கோட் பாடுகளைப் பற்றிக் கற்றபோது, அது வெறும் அறிவுபூர்வமானதாகவே நின்றுவிட்டது. ஆனால், வேலையில்லாது தவித்தபோது சோவியத் சமதர்மமுறை பற்றிய, என் சிந்தனை ஆழமாயிற்று.

வேலையின்மையும் வாட்டமும் உள்ள காலங்களிலும் இடங்களிலும் புரட்சிச் சிந்தனை எளிதாகப் பிறக்கும்; பொதுஉடைமைக் கொள்கை, பஞ்சில் தீப்பிடிப்பதுபோல் பற்றிக் கொள்ளும். இதைப் பட்டறிவிலிருந்து சொல்லுகிறேன்.

நான் வேலையில்லாது திண்டாடியபோது, தமிழ்நாட்டில் சமதர்மக் கோட்பாடு காட்டுத்தீபோல் பரவிக் கொண்டிருந்தது. ஆங்கில ஆட்சியோ அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தது.

சமதர்ம இயக்கமும் பெரியாரும்

தமிழ்நாட்டில் அன்று சமதர்மக் கோட்பாடு பரவுவதற்கு முதற் காரண மாக விளங்கியவர் எவர்? தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி ஆவார்.

அவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாம் ஆண்டு நவம்பர்த் திங்களில் மேனாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பினார்.

அப்பயணத்தில் அதிக காலத்தைச் சோவியத் நாட்டில் செலவிட்டார். அந்நாட்டின் கல்வி நிலையங்கள், அரசின் விவசாயப் பண்ணைகள், தொழிற் சாலைகள், நூலகங்கள், கலையரங்குகள் ஆகியவற்றை நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

மக்கள் இனம் சமத்துவமாக, கவலையற்று நல்வாழ்வு வாழ்வதற்கு, சமதர்ம முறையே ஏற்றது என்னும் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொண்டு பெரியார் ஈ.வெ.ராமசாமி தாயகம் திரும்பினார்.

பிறகு, இந்தியப் பொதுஉடைமை வாதிகளில் முன்னோடியாகிய சிங்காரவேலரைக் கலந்து பேசினார். ஈரோட்டில் 1932 டிசம்பரில், சுயமரியாதை ஊழியர் மாநாட்டைக் கூட்டினார்.

இரண்டு நாள்கள் கலந்துரையாடிய பின், சுயமரியாதை சமதர்மத்திட்டம் ஒன்றைத் தீட்டினார்.

அத்திட்டத்தைப் பொதுமக்களிடம் பரப்புவதென்றும், மாநில மாநாட்டைக் கூட்டி அதில் திட்டத்தை நிறைவேற்றுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித்தன்மை கொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வதே இலட்சியமென்று அத்திட்டம் அறிவித்தது.

எல்லாத் தொழிற் சாலைகளையும், இரயில்வேக்களையும், வங்கிகளையும், கப்பல், படகு, நீர்வழி, போக்குவரத்துச் சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

எல்லா விவசாய நிலங்களையும் காடுகளையும் மற்றத் தாவர சொத்துகளையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது என்பவை திட்டங்களாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்த ஆட்சி வேண்டுமே! அது எத்தகையதாக இருக்க வேண்டும்?

சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளையெல்லாம் மாற்றி, இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக் காரர்கள், என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டும் என்பது சுயமரியாதைச் சமதர்மத் திட்டமாகும்.

தமிழ்நாட்டில் புதிய எழுச்சி

மேற்படி திட்டம், தமிழ்நாட்டு ஏழை எளிய மக்களிடையே புதியதொரு பார்வையை உருவாக்கியது. சுயமரியாதை இயக்க மேடைகளிலும் மாநாடுகளிலும் சாதி ஒழிப்பு முழக்கத்தோடு, எல்லோரும் ஓர் நிறை என்னும் சமத்துவக் குரலோடு, சமதர்மக் கோட்பாடும் முரசொலிக்கப்பட்டது.

வேலை இல்லாத் திண்டாட்டத்தில் தத்தளித்த என் போன்ற இளைஞர்கள், சமதர்மக் கோட்பாட்டினை வெறும் அறிவு பூர்வமான மாற்றுக் கருத்தாக மட்டும் கொள்ளாமல், உணர்வு பூர்வமாக வாழ்க்கை முறையாக, ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அக்கால கட்டத்தில், எங்கள் எதிர்பார்ப்பு பெரிதாக இருந்தது. இந்தியா தன்னாட்சி பெறும் நிலையிலேயே, சாதி முறையையும், ஏழை செல்வர் முறையையும் வேரோடு கல்லி எறிந்துவிடுவோம் என்று நம்பினோம்.

அன்று நம்மை ஆண்ட ஆங்கில ஆட்சி, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு 'மீரத் சதி வழக்கு' என்ற பெயரில் பெரிய வழக்கு ஒன்றைத் தொடுத்தது.

டாங்கே, அதிகாரி, எம்.ஜி.தேசாய், ஸ்பராட் ஆகிய முப்பத்திரண்டு பேர்கள் இந்தியாவில் ஆங்கில ஆட்சியைக் கவிழ்க்கப் பயங்கர சதி செய்தார்கள் என்பது வழக்கு.

அவ்வழக்கு நான்கு ஆண்டுகள் நடந்தது. அப்போது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சிறையில் கிடந்தார்கள்.

இறுதியில் இருபத்தேழு பேர்களுக்கு வெவ்வேறு காலக் கடுங்காவல் சிறைத் தண்டனை கிடைத்தது.

அம்முடிவினைக் கோடிட்டுக் காட்டித் தலையங்கம் எழுதிய பெரியார்.

'27 பேர்கள் என்ன, 270 பேர்கள், இல்லை 2700 பேர்கள், அதற்கு மேலும் 27,000 பேர்களைக் கொன்றாலும் பொதுஉடைமைக் கொள்கை பரவுவதை எந்த அரசாலும் தடுக்க முடியாது' என்று எழுதினார். அது, எரிகின்ற நெருப்பில் நெய்யைக் கொட்டியதுபோல் ஆயிற்று.

'குடிஅரசு' போய் 'புரட்சி' தோன்றியது

'குடிஅரசி'ன் உள்ளடக்கத்தில் சமதர்மப் பகுதி அதிகமாக ஆக, அரசின் கெடுபிடியும் அதிகமாயிற்று. குடிஅரசுக்குக் காப்புப் பணமாக ரூபாய் 2000 கட்ட ஆணையிட்டது. பெரியார் அதற்கு உடன்பட வில்லை.

'குடிஅரசை' நிறுத்திவிட்டு 'புரட்சி' என்ற பெயரில் வார இதழைத் தொடங்கினார். பெயருக்கேற்ப அதில் சமதர்மப் புரட்சி மணம் வீசியது. சோவியத் சமதர்ம நாட்டின் ஐந்தாண்டுத் திட்டம், நீதிமுறை பற்றிச் சிறப்புக் கட்டுரைகள் தொடர்ந்து வந்தன.

இதற்கு இடையில் அனைத்திந்திய அரசு, இந்தியாவில் பொதுஉடைமைக் கொள்கை பரவாதபடி தடுக்க முடிவு செய்தது; அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தென்னிந்தியாவில் அடக்குமுறை பாணம், பெரியாரின் மேல் பாய்ந்தது.

'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலையங்கத்தில் அரச வெறுப்பும், பொதுஉடைமைப் பரப்புதலும் கலந்திருப்பதாகப் பெரியாரையும் அவரது தங்கை கண்ணம்மாவையும் கைது செய்து, அரசு வழக்குத் தொடுத்தது. இருவரும் முடிவில் தண்டிக்கப்பட்டார்கள்.

என் வீட்டில் திருமணப் பேச்சு இடைவிடாது கேட்டது 'ஏதாவதொரு வேலையில் நிலையாகச் சேர்ந்தபிறகே, திருமணம் செய்துகொள்வேன்' என்று நான் கூறியது எவருக்கும் பிடிக்கவில்லை. அது அவர்களுக்குத் தேவையில்லாத நோன்பாகத் தோன்றிற்று.

வேறு சாதியில்தான் திருமணம் செய்து கொள்வேனென்று சொல்லி, நான், அக்காலகட்டத்தில் உறவினர்களை உஷார்படுத்தவில்லை.

53. வேலையில் வகுப்புரிமை

வேலைக்கு வகுப்புரிமை முறை வேண்டும்

''தம்பீ! பெரிய படிப்பு படித்திருக்கிறாயாமே! உன் படிப்புக்கும் குணத்திற்கும் நல்ல வேலை கிடைக்கத்தான் போகிறது. எப்ப என்றுதான் தெரியவில்லை. எதற்கும் காலம் வரவேண்டாமா?'' என்று என்னைப் பார்த்துப் பலர் ஆறுதல் கூறுவார்கள்.

எனக்கோ பச்சைப் புண்ணில் உப்புத் தூவுவதுபோல் இருந்தது. பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்டேன்.

''தம்பீ! கவலைப்படாதே! அரசு அலுவல்களை, வகுப்புவாரி அடிப்படையில், பங்குபோட்டு வைத்திருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத இந்துக்கள் முறை வந்தாக வேண்டும். அப்போது உனக்கு வேலை கிட்டும்; சற்றுப் பொறுத்துக்கொள்; சம்பாதித்தால் தான் அடுத்த வேளை சாப்பாடு என்னும் நிலையில் நீ இல்லை. எனவே, கவலைப்படாதே'' இப்படி ஒத்தடம் கொடுத்தவர்கள், படித்தவர்கள்.

வேலைகளே இல்லாதபோது, வகுப்பு உரிமை இருந்தாலும் ஒன்று, இல்லாவிட்டாலும் ஒன்றே.

வேலைகள் காலியானால் அல்லது பெருகினால் அச்சமுதாயத்தில், அக்கால கட்டத்தில், வகுப்புரிமை ஆணைக்குப் பொருள் உண்டு.

'இருக்கிற வேலை காலியாகாது; புது வேலைகள் ஏற்படாது என்னும் பாலைச் சூழ்நிலையில், வகுப்பு உரிமை ஆணை ஏட்டுச் சுரைக்காயே!

ஏட்டுச் சுரைக்காயை நம்பும்படி படித்தவர்கள் பலர் எனக்கு அறிவுரை கூறிய போதெல்லாம், எனக்கு அவர்கள் பேரில் வெகுளியைவிட, பரிதாபமே மேலிடும்.

உண்மையான சூழ்நிலையை மறந்து, என்றைக்கோ பயன்படலாமென்னும் கற்பனையின்பால், காகித ஆணையின் பால், இத்துணை நம்பிக்கை வைத்துள்ளார்களே என்று பரிதாபப்படுவேன். எவரையும் நேருக்குநேர் புண்படுத்தாத என் இயல்பு - அவர்களோடு பகையை வளர்த்துக்கொள்ளாத அளவு என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

வகுப்புரிமை முறை வேண்டாம் என்று எவரும் எண்ணிவிட வேண்டாம். நம் நொண்டிச் சமுதாயத்திற்கு, இவ்வூன்றுகோல் தேவை; பல்லாண்டுகள் தேவை.

'அற்புதம்' ஒன்று நிகழ்ந்து எல்லோருக்கும் வேலை கொடுக்கும் அளவிற்கு வாய்ப்புகள் பெருகும் வரை, இந்த அளவு நியாயமாவது தொடரவேண்டும்.

இந்த வகுப்புரிமை முறை பற்றி, இன்றையத் தலைமுறை தெரிந்துகொள்வது நல்லது.

இந்திய சமுதாயம் சாதிகளின் குவியல். ஒருங்கிணைந்த அமைப் பல்ல. கட்டுமான தலத்தில், செங்கற்கள் ஒருபால்; மணற்குவியல் ஒருபால்; சுண்ணாம்பு ஒரு மூலையில்; மரப்பலகைகள் ஒரு பக்கம்; இரும்புக்கம்பிகள் ஒரு பக்கம், ஆணிகளும் மறைகளும் பாதுகாப்பான மூலையில், இப்படி இருக்கக் காணலாம்.

அதேபோல், நம் சமுதாயம், பல்வேறு சாதிப் பிரிவுகளாகத் தனித்தனியே குழுமியுள்ளது.

அடிமை வேலையில் மோகம்

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்னும் குறிக்கோள் தொடக்க காலத்தது.

பின்னர் மதிநுட்பம் உடையோர், இந்திய மன்னர்களின் அரசுகளில் கைகட்டிச் சேவகம் செய்ய முன் வந்தனர்.

ஆங்கிலேயர் இந்தியாவைப் பிடிப்பதற்கு முன்னரே முளைத்த அரச அலுவல் ஆசை, அன்னியர் ஆட்சிக்காலத்தில் தழைத்தது.

'கோழி மேய்த்தாலும் கும்பெனி கோழி மேய்க்க வேண்டும்' என்னும் நாட்டுப்பழமொழி, அப்போக்கினைக் காட்டுகிறது.

'கும்பெனி' ஆதிக்கம் மறைந்து, ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பிறகு அரசின் பெரும் பதவிகளில் இந்தியர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்னும் உரிமைக்குரல் எழுந்தது.

அனைத்திந்திய காங்கிரசின் தொடக்க கால மாநாடுகளில் இந்தியருக்குப் பதவிகோரும் முடிவுகள் முன்னின்றதை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

பதவிகள் கேட்பதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை. அவற்றிற்குரிய பயிற்சிகளைப் பெறத் தவறிவிட்டால்தான், தலை குனிய வேண்டும்.

ஆங்கில ஆட்சி, சில பெரிய பதவிகளையும் அலுவல்களையும் இந்தியருக்குக் கொடுக்கத் தொடங்கியது. ஆங்கிலக் கல்வி பெற்றிருந்தவர்கள் அவ்விடங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

பொதுமக்கள், தாய்மொழிக் கல்வியும் பெறவில்லை. எனவே, எந்த அரசின் வேலையையும் பிடிக்கவில்லை. சிலவேளை காவல்காரர் களாக, 'பங்கா' இழுப்பவராகச் சேர மட்டுமே முடிந்தது.

ஆங்கில ஆட்சி விழித்துக்கொண்டது

'சுற்றந்தழால்' நல்லியல்பு. 'சுற்றத்தை மட்டுமே அலுவல்களில் நுழைய விடுவது' 'தீய இயல்பு'. பால் நஞ்சாகிவிடுவதுண்டு.

அதுபோல, மேற்கூறிய நல்லியல்பு நஞ்சாகிவிட்டது. தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே எல்லாம் என்றாயிற்று. எடுத்துக்காட்டு ஒன்று.

நெல்லூர் மாவட்டத்தில், மாவட்டத் தண்டல்நாயகம் அலுவலகத்தில் ஒருவர் 'செரிஷ்டாதார்' ஆனார். அது ஒட்டகத்திற்கு இடம் கொடுத்ததைப் போல் ஆகிவிட்டது.

சில ஆண்டுகளில் நெல்லூர் மாவட்டம் முழுவதும் வருவாய்த் துறையில் நாற்பத்துமூன்று கேந்திரமான இடங்களில் தமது நெருங்கிய உறவினர்களை உட்கார வைத்துவிட்டார்.

அவர்கள் ஒருவருக்கு ஒருவர், கண்ணுங்காதுமாக இருந்தார்கள். அவர்கள் தயவில்லாமல் ஒன்றும் நடவாது என்னும் நிலை உருவாகிவிட்டது. ஆங்கில நிர்வாகிகள் பெயரோடு நிறைவு கொள்ள நேர்ந்தது. இதுவே பல துறைகளிலும்.

சென்னை மாகாண வருவாய்த்துறை விழிப்படைந்தது. மாவட்டத்தின் பல பிரிவினரும் அலுவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று, பொதுவான சுற்றறிக்கை விட்டது.

பலன் இல்லை.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அரை ஆண்டுக்கு ஒரு முறை, நியமனப்பட்டியலை (சாதிகளைக் குறிப்பிட்டு) அனுப்பும்படி சுற்றறிக்கை விட்டது.

பயன் இல்லை.

நிலையான பதவிகளிலும் தற்காலிகாக ஆட்களை நியமிக்கும் குறுக்கு வழியில் புகுந்தனர் கீழ்மட்ட அதிகாரிகள்

நீதிக்கட்சியின் ஆட்சி

இதற்கிடையில் 1917ஆம் ஆண்டு நீதிக்கட்சி தோன்றியது. சாதிகள் செறிந்த நாட்டில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் பதவிகளும் ஒதுக்கப்பட வேண்டுமென்பது அதன் இலட்சியம்.

1920திலும் 1923றிலும் நடந்த பொதுத் தேர்தல்களில் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடித்தது. அக்கட்சியின் அமைச்சரவை இருமுறை சென்னை மாநிலத்தை ஆண்டது.

தொடக்கக் கல்விச் சட்டம், இந்து அறநிலையச் சட்டம் போன்ற முற்போக்குச் சட்டங்களை உருவாக்கிய நீதிக்கட்சி, வகுப்புரிமைக் கொள்கையை முழுமையாகச் செயல்படுத்த இயலவில்லை.

நீதிக்கட்சிக்குப் பிறகு, ஆட்சிக்கு வந்தது, டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை. அவருடைய தலைமையில் அமைச்சர்களாக இருந்த அரங்கநாதரும், ஆரோக்கியசாமியும் விலகிவிடவும், திரு எஸ். முத்தய்யாவும், திரு சேது ரத்தினமும் அமைச்சர்களானார்கள்.

இந்த அமைச்சரவை அரசு அலுவல்களுக்கான வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணையைப் பிறப்பித்தது. பன்னிரண்டு இடங்களில் இரண்டு இடங்கள் பார்ப்பனருக்கு, ஓர் இடம் முஸ்லீம்களுக்கு, இப்படியே கிறுத்தவர்களுக்கு, ஆங்கிலோ இந்தியருக்கு, தாழ்த்தப்பட்டோருக்கு, ஆறு இடங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு என்று பல பிரிவினருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டும் என்பது ஆணை.

மேற்கூறிய ஆணைக்கு முதல் காரணமும் பெருங்காரணமும் திரு எஸ். முத்தய்யா ஆவார். எனவே, பெரியார் ஈ.வெ.ரா. அவ்வரைப் போற்றினார்.

அடுத்த ஓராண்டு காலத்தில், தமிழர் வீடுகளில் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு முத்தய்யா என்றே பெயர் வைக்கச் சொன்னார்.

நன்றி கொன்ற தமிழர்

தமிழர்களுக்கு எத்தனை நன்மை செய்தும் பயனில்லை என்பது வரலாற்றின் கசப்பான முடிவு. ஆயிரம் பெருன்மைகளைச் செய்தவரையே, அவர் காசளவு மதிப்பே உள்ள உதவியைச் செய்யத் தவறும்போது முதுகில் குத்துபவன் தமிழனே! இந்நிலைக்கு ஆளானார் திரு முத்தய்யா.

'எல்லாமே நாங்களாக இருக்க வாய்ப்பிருந்ததைக் கெடுத்து விட்டாரே முதலியார்' என்று மேல்சாதிக்காரர்கள் கொதித்துப் பொங்கியதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

கால் வைக்க இடம் கிடைக்காமல் திண்டாடிய, பார்ப்பனரல்லாதார் பாதி இடம் ஒதுக்கிய திரு முத்தய்யாவை உச்சிமேல் வைத்துப் போற்றியிருக்க வேண்டும். இரண்டும் செய்யவில்லை; மாறாக, அடுத்து வந்த பொதுத் தேர்தலில், தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

'பார்ப்பனர்களுக்கு மூன்று இடம் ஒதுக்குவதற்குப் பதில் பதினாறு இடம் ஒதுக்கிவிட்டார்' என்று புறங்கூறித் தோற்கடித்தார்கள். இதிலும் வேதனை என்ன தெரியுமா?

முத்தய்யா ஆணையாக்கியது நீதிக் கட்சிக் கொள்கையை! அக்கொள்கைக்காகப் பல்லாண்டு பாடுபட்ட, பல பார்ப்பனரல்லாதார்க்குக் கைகொடுத்து உதவிய நீதிக்கட்சித்

தலைவர்களில் ஒருவரே, வரிந்து கட்டிக்கொண்டு, முத்தய்யாவைத் தோற்கடித்தார்.

முத்தய்யா நிலைக்கு உயரத் தமக்கு வாய்ப்பு வராது என்று தெரிந்திருந்தும், முத்தய்யாவைத் தோற்கடித்த முதலியாரைப் பற்றி என்ன சொல்ல?

இந்து சமயத்திற்கு மெருகூட்டிக் காக்க முயன்ற காந்தியடிகளாரைக் கோட்சே என்னும் இந்துவெறியன் கொன்றதைப் பற்றி என்ன சொல்ல?

இந்தியச் சட்டமன்றத்திற்குத் தலைவராக உயர்ந்த முதல் தமிழராகிய சர் ஆர்.கே. சண்முகத்தைக் காலை வாரிவிட்ட செட்டியாரைப் பற்றி என்ன சொல்ல? தான் உயர முடியாது என்று தெரிந்தும் அப்படிச் செய்யலாமா?

அனைத்திந்திய நிலைக்குத் தான் உயர முடியாது என்பதை அறிந்திருந்தும், உலகப்புகழ் பெற்றுவிட்ட அனைத்து இந்திய காங்கிரசுத் தலைவராம் திரு காமராசைத் தோற்கடித்த, கடுகு உள்ளம் படைத்த பெரிய நாடாரைப் பற்றி என்ன சொல்ல?

54. தன்மான இயக்கத்தின் சாதனை

என்னுடைய வாழ்க்கையில் சிலஅவலப் பருவங்கள் உள்ளன; 1933 ஆம் ஆண்டின் பாதியிலிருந்து 1935 ஆம் ஆண்டின் பாதிவரை, வேதனை செறிந்த காலகட்டங்களில் ஒன்று.

வேலையில்லாது அலையும் வேதனை ஒருபால்; அதைக் கண்டு, தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் வலியப் பொழியும் இரங்கல் ஒருபால்!

என்னைத் தேடிக் கன்னிப்பெண் உடையார்களின் வருகை ஒரு பால்! காதல் முகிழாதிருப்பினும், பிறந்த 'சாதி'யில் திருமணம் செய்து கொள்வதில்லை என்னும் பாறை போன்று அடம்.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் காக்க வேண்டிய நெருக்கடி; ஏமாற்றமடைந்தோரின் எரிச்சலும் புகைச்சலும் ஒரு பக்கம்.

வாரத்திற்கு ஒரு முறை சேர்ந்து வரும் தமிழ் நாளிதழ்களைத் தவிரப் படிப்பதற்கு ஒன்றுமில்லாத பரிதவிப்பு; பட்டிக்காட்டுத் திண்ணைமேல், ஈ ஓட்டிக் கொண்டிருந்ததால், நேரம் போகாமை!

இத்தனையும் சேர்ந்த வெறுப்பும் கசப்பும் பெருக்கெடுத்து ஓடின.

இவை போதாதென்று, வெளியுலக அலைமோதல்கள் எனைத் தாக்கின; என் அமைதியைக் கெடுத்தன.

அவை எவை?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்திலே தொடங்கிய பெரியார் ஈ.வெ.ராமசாமியின் தன்மான இயக்கம், எழு ஞாயிறாக உயர்ந்தது. சாதிப் பிடிப்புகளில் கீறல்கள் வீழ்ந்தன; பல சாதியாரும் ஒன்றாக இருந்து உண்ணும் முறை விரைந்து பரவிற்று. இவற்றோடு முடிந்ததா? இல்லை.

கலப்பு மணங்கள் பெருகின; கலப்பு மணமே முற்போக்கு இளைஞர்களின் ஆடாத குறிக்கோளாயிற்று.

இதற்கும் மேலாக, சமய நம்பிக்கை ஆட்டங் கண்டது. திதி, திவசம் செய்தல் நிற்கத் தொடங்கின. குடிக்கணக்கு எடுத்தபோது இலட்சக்கணக்கான தமிழர்கள் 'சாதி' இல்லை, 'மதம்' இல்லை, என்று பதிந்து கொண்டார்கள்.

சுருங்கச் சொன்னால் முப்பது, நாற்பது ஆண்டுகளின் விளைவுகளை, ஒரு ஆறு ஆண்டுகளில் தன்மான இயக்கம் கண்டு எடுத்தது.

தன்மான இயக்கத்தின் பாதிப்புகளின் ஆழத்தையும் தன்மையையும் தமிழர்களில் மிகப் பெரும்பாலோர் சரியாக உணரவில்லை. உணர்ந்த சிலரும் இருட்டடிப்புச் செய்தே அதை அழித்துவிடலாம் என்று கனவு கண்டார்கள்.

எனவே, ஆயிரக்கணக்கில் உணர்ச்சிப் பிழம்புகளாக, சமுதாயப் புரட்சிப் பிழம்புகளாகக் கூடிய, தன்மான இயக்கக் கூட்டங்கள், மாநாடுகளைப் பற்றித் தமிழ்நாட்டு நாளிதழ்களும் பிற இதழ்களும் நாலு வரிச் செய்திகளும் வெளியிடவில்லை.

கறைச் சேற்றால் பகுத்தறிவுச் சுடரின் பேரொளியை உலகில் இருந்து மறைக்க முடியவில்லை.

இங்கிலாந்திலிருந்து மாதந்தோறும் வெளியான பகுத்தறிவு இதழ் ஒன்று, 'இந்தியாவில் பகுத்தறிவு இயக்கம்' என்ற தலைப்பில், ஓர் சிறப்பான கட்டுரையை வெளியிட்டது.

அதில், தென்னாட்டில், பெரியாரின் தன்மான இயக்கம் வளர்த்துள்ள பரவலான புரட்சிகரமான, பகுத்தறிவுச் சிந்தனையைப் பாராட்டி எழுதியிருந்தது.

இதற்கிடையில் 1930 ஆம் ஆண்டு பெரியாரின் கருத்தில் முகிழ்த்த சமதர்ம உணர்வு, ஈரோடு இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் வெளியாயிற்று.

'சமதர்மப்பணியே, தன்மான இயக்கத்தின் எதிர்காலப் பணியாக இருக்கும்' என்று திட்டவட்டமாகப் பெரியார் அறிவித்து விட்டார்.

எனவே அதற்குப் பிந்திய பகுத்தறிவு இயக்கக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் சமதர்மமும் சமத்துவத்தோடு கலந்து முழங்கிற்று.

விருதுநகர் சுயமரியாதை மாநாடு

அடுத்த மாகாண சுயமரியாதை மாநாடு விருதுநகரில் திரு ஆர்.கே. சண்முகம் தலைமையில் 1931 ஆகஸ்டில் நடந்தது. இம் மாநாடு இயக்க வரலாற்றில் மற்றோர் திருப்புமுனை என்லாம்.

ஏன்?

இம் மாநாட்டில்தான் முதன்முதலாக மதம் ஒழிப்பு முடிவு எடுக்கப்பட்டது.

விருதுநகர் மாநாட்டின் முதல் முடிவைப் பார்ப்போம்.

மனிதத் தன்மையைத் தடைப்படுத்துவதற்கு, மதங்களின் பேரால் ஏற்பட்டுள்ள, பழக்க வழக்கங்களே காரணமாயிருப்பதால் அப்படிப் பட்ட எல்லா மதங்களும் ஒழியும்வரை மனிதர்களுக்குள் சகோதரத்துவம் வளராதென்றும் இம்மாநாடு கருதுகிறது.

மதம் மறைய வேண்டுமென்பதற்கான காரணங்களைக் காட்டி முடிவு செய்தபின், அடுத்த முடிவை - அளந்து எடுத்தது. அது வருமாறு:

இந்திய நாட்டில் தோன்றியுள்ள மத வேற்றுமைகளும் பகைகளும் அழிய வேண்டுமானால், அறிவுள்ள இந்தியர்கள் முதலில் மத உணர்ச்சியைப் புறக்கணிக்க வேண்டுமென்று இந்த மாநாடு முடிவு செய்கிறது.

கூர்த்த மதியுடையோர் என்று கருதிக் கொள்வோர், பகுத்தறிவு வாதிகளை மடக்குவதாக நினைத்துக்கொண்டு 'பார்ப்பனரல்லா தாரிடையிலும் மேல்சாதி, கீழ்சாதி என்ற பேத உணர்வு இல்லையா? அதை ஏன் சாடுவதில்லை' என்று கேட்பது உண்டு.

விருதுநகர் மாநாட்டு முடிவு ஒன்றைக் கூர்ந்து கவனித்தால் விளக்கம் கிடைக்கும். அம்முடிவு இதோ.

தீண்டாமை இந்து சமூகத்திலுள்ள 'சகல சாதி'களையும் பிடித்த நோய். தீண்டாமை ஒழியவேண்டுமானால், 'பிராமணீயம்' ஒழிய வேண்டுமென்றும் இம்மாநாடு முடிவு செய்கிறது.

விருதுநகர் மாநில மாநாட்டையொட்டி மூன்றாவது சுயமரியாதை வாலிபர் மாநாடு நடைபெற்றது. அதன் முதல் முடிவினைப் பார்ப்போம்.

'சமதர்ம தத்துவமும் பொதுஉடைமைக் கொள்கையும் நாட்டில் ஓங்க வேண்டும் என்பதே நமது இலட்சியமாயிருக்கின்றபடியால் விதி, கடவுள் செயல் என்பன போன்ற உணர்ச்சிகள், மக்கள் மனத்திலிருந்து ஒழிக்கப்பட வேண்டும்.'

'மக்கள் யாவரும் ஒன்றுபட வேண்டுமானால், மதப் பிரிவுகளும் மத சம்பந்தமான பழக்கவழக்கங்களும் அடியோடு ஒழிய வேண்டும்.'

மேற்கூறிய இரண்டின் இயற்கையான விளைவாக, கீழ்வரும் மூன்றாம் முடிவு எடுக்கப்பட்டது.

'வருணாசிரமத்திலும் கடவுள் செயல் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருக்கிற யாராலும் மக்களுக்குச் சமத்துவமும் விடுதலையும் அடையும்படி செய்ய முடியாது என்று இந்த மாநாடு உறுதியாகச் சொல்லுகிறது.'

வகுப்புரிமை கோரும் இயக்கமாக முளைத்த தன்மான இயக்கம், சாதி ஒழிப்பு இயக்கமாக வளர்ந்து, சாதிகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் சமயக் கொள்கைகளை வேரறுக்கும் வெள்ளமாகப் பெருகி, சமதர்ம உணர்வை, சாதாரண மக்களிடை பரப்பும் புரட்சி இயக்கமாக உருப்பெற்றது.

பெரியாருக்குச் சோவியத் அரசின் அழைப்பு

இதற்குக் காரணமான பெரியாரின் மேல், பிற நாடுகளின் முற்போக்காளர், தீவிரவாதிகள் முதலியோரின் நாட்டம் பாய்ந்தது. பெரியார், சோவியத் நாட்டை வந்து பார்க்கும்படி அழைக்கப்பட்டார்.

இந்திய ஆதிக்க சக்திகள், பெரியாரை 'ஆங்கிலேயரின் அடிவருடி' என்று இடைவிடாது தூற்றியபோதிலும், ஆங்கில ஆட்சி பெரியாரை எடைபோட்டு வைத்திருந்தது.

பெரியார், இணையற்ற சுய சிந்தனையாளர்; புரட்சிச் சிந்தனையாளர்; அவர் மண்டைச் சுரப்பை, மிரட்டி அடைக்க முடியாது; பணத்தைக் கொட்டி அடைக்க முடியாது; பதவி மோகினியால் மயக்க முடியாது. அவர் கருத்துகள், கட்டுக்கடங்காத பிரளயம்.

எனவே, பெரியாரை, சோவியத் நாட்டைப் பார்த்துவிட்டு வரவிட்டால், புரட்சிப் பயிரைப் பரவலாக, வளர்த்துவிடக் கூடுமென்று அஞ்சியது, அன்றைய ஆங்கில ஆட்சி.

எனவே, சோவியத் நாடு செல்ல, அனுமதிக்கவில்லை. வேறு பல அய்ரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செல்ல மட்டுமே 'பாஸ்போர்ட்' வழங்கிற்று.

பெரியார் ஈ.வெ. ராமசாமி, திரு எஸ். இராமநாதனோடு, **1931** ஆம் ஆண்டு இறுதியில் சென்னையில் கப்பல் ஏறி, வெளிநாடுகளுக்குச் சென்றார்.

எகிப்து, கிரீசு, இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல், பிரான்சு, பிரிட்டன், ஜெர்மனி, துருக்கி ஆகிய நாடுகளைச் சுற்றிப் பார்த்தார்.

பின்னர், சோவியத் நாட்டுக்கும் சென்றார்; ஓராண்டு உலகப் பயணத்தில் மூன்று மாதங்களுக்குமேல், சோவியத் நாட்டில் சுற்றுப்பயணஞ் செய்தார்.

பாலர் பள்ளி முதல் பல்கலைக் கழகம்வரை, கலையரங்கம் முதல் பண்ணைகள் தொழிற்சாலைகள்வரை, மின் நிலையங்கள், நூலகங்கள் உட்படப் பலவற்றைக் கண்டு வந்தார்.

பெரியாருக்கு முன்பு 1927 இல் ஜவகர்லால் நேரு சோவியத் நாட்டைப் பார்த்து, அந்த நாட்டின் முன்னேற்றத்தை உணர்ந்து வியந்தார்; பரவசப்பட்டு எழுதினார்.

அடுத்து 1930 இல் ஒரு திங்கள்போல் சோவியத் ஒன்றியத்தில் பயணஞ் செய்த, வங்கக் கவிஞர், நோபல் பரிசு பெற்ற உலகப் புகழாளர், இரவீந்திரநாத் தாகூர், அந்நாட்டில் 'புதிய மனிதனும் புதிய நாகரிகமும் உருவாகி' விட்டதைக் கண்டு உணர்ந்து பூரிப்பும் புளகாங்கிதமும் அடைந்தார்.

தொடர் கட்டுரைகள் வழியாக, இந்தியர்களுக்கு, உலகத்தின் முதல் சமதர்ம, பாட்டாளி ஆட்சியின் சீரையும் சிறப்பையும் மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினார்.

இவ்விருவரைவிட அதிகம் துருவிப் பார்த்த பெரியார் ஈ.வெ. ராமசாமியும் சோவியத் நண்பராகத் திரும்பினார். சமதர்மத்தைத் தமிழ்நாட்டில் விரைந்து கொண்டுவரும் துடிப்போடும் உறுதியோடும் தாயகம் திரும்பினார்.

பெரியாரின் உறுதியும் துடிப்பும் சும்மா இருக்குமா? இராது! விளைவு? கொந்தளிப்பு!

55. பொதுஉடைமையே என் குறிக்கோள்

சுயமரியாதைச் சமதர்மக் கட்சி

பெரியார் ஈ.வெ.ராமசாமியின் போர்முரசாகிய 'குடிஅரசு' சாதியொழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகிய கட்டுரைகளோடு சமதர்மத்திற்கு ஆதரவான கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது.

சோவியத் மக்களின் முன்னேற்றம் பற்றியும், சோவியத் நீதிமுறை பற்றியும், சோவியத் நாட்டின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் 'குடிஅரசில்' தொடர் கட்டுரைகள் வெளிவந்தன.

சோவியத் நாட்டிலிருந்து திரும்பி வந்த சில வாரங்களில், பெரியார், ஈ.வெ. ராமசாமி அவர்கள் ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

மூத்த பொதுஉடைமை வாதியான, சென்னைத் தோழர் மா. சிங்காரவேலர், பெரியாரின் அழைப்பின் பேரில் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் கூறினார்.

இருநாள் கருத்துப் பரிமாற்றத்திற்குப்பின் தன்மான இயக்கத்தின் அரசியல் கிளையாகச் சுயமரியாதைச் சமதர்மக் கட்சியை ஏற்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. அக்கட்சியின் குறிக்கோளும் திட்டங்களும் முடிவு செய்யப்பட்டன. அவை வருமாறு:

1. பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித் தன்மைகொண்ட ஆட்சியிலிருந்தும் இந்தியாவைப் பூரண விடுதலை அடையச் செய்வது.

2. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளை யெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்குக் கொண்டு வருவது.

ஆட்சிமுறை பற்றி மேற்கூறிய இரு முடிவுகளையும் எடுத்த தன்மான இயக்கத்தவர்கள், சொத்துஉடைமை பற்றி எடுத்த முடிவுகளைப் பார்ப்போம்.

எல்லாத் தொழிற்சாலைகளையும் இரயில்வேக்களையும் பாங்கிகளையும் கப்பல், படகு, நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

எந்த விதமான பிரதிப் பிரயோசனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும காடுகளையும் மற்றத் தாவர சொத்துகளையும் பொதுமக்களுக்கு உரிமையாக்குவது.

குடியானவர்களும் தொழிலாளிகளும் லேவாதேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் செல்லுபடியற்றதாக ஆக்கி விடுவது.

அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்துவிடுவது.

தேசத்தின் பேரால் கொடுக்கப்படவேண்டிய எல்லாக் கடன்களையும் முழுமையாக ரத்து செய்வது.

தொழில் செய்பவர்கள் ஏழு மணி நேரத்திற்குமேல் வேலை செய்யக் கூடாது என்பதுடன் அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப் படுவது.

தொழிலாளிகளுக்குக் கூலியை உயர்த்தி அவர்களது சுகவாழ்க்கைக்கு வேண்டிய சவுகரியங்களையும் இலவச நூல் நிலையங்கள் முதலிய வசதிகளையும் ஏற்படுத்துவது; தொழில் இல்லாமல் இருக்கின்றவர் களை அரசே பராமரிக்கும்படி செய்வது.

இம்முடிவுகள், பரந்த நில அதிர்ச்சிபோல் செயல்பட்டன. தொழிற்சாலைகள், வங்கிகள், நீர்வழிப் போக்குவரத்துச் சாதனங்கள்; இந்தியர்கள் கைகளில் இருந்ததைவிட வெள்ளையர்கள் இடமே பலமடங்கு அதிகம் இருந்தன.

அவற்றைப் பொது உடைமையாக்குவது என்னும் இலட்சியம் இந்திய முதலாளிகளையும் வெள்ளை முதலாளிகளையும் உலுக்கிற்று.

இரயில்வேக்கள், பெரிதும் வெள்ளையர்களின் சொத்தாக இருந்தன. அவற்றை நாட்டுடைமையாக்குவது என்பது விடுதலை கோருவதைப் போன்றே, அதிர்ச்சியூட்டும் முடிவாகத் தோன்றியது.

விளைநிலங்களை நாட்டுடைமையாக்கும் குறிக்கோள், எண்ணற்ற இந்திய நிலமுடையோருக்குக் கிலியை ஊட்டியது. என் குடும்பத்தில் நிலம் உண்டு. அதைப் பறித்துக் கொள்ளும் குறிக்கோள், அடிக்கடி, உரையாடலுக்குக் கருப்பொருளாக அமைந்தது.

என் தந்தை இம்முடிவு பற்றிக் கலக்கம் கொள்ளவில்லை 'அப்படியொரு நிலை வரும்போது வரட்டும், நம் பிள்ளைகள் அனைவருக்கும் படிப்பும் பயிற்சியும் இலவசமாகக் கொடுத்து, வேலைகளையும் கொடுத்து, சம்பளம், மருத்துவ வசதி, வீடு ஆகியவற்றை அரசே கொடுக்குமானால், நமக்கென்று தனியாக நிலம் எதற்கு?

'இவ்வாண்டு விளைந்தது' அடுத்தாண்டு புயலில் அழிந்தது என்னும் 'திண்டாட்டம் தொலையட்டுமே'! இப்படி என் தந்தை நினைத்தார். என்நிலை என்ன?

பொதுஉடைமைக் கொள்கையே என் வாழ்க்கைக் குறிக்கோள் ஆனது

முன்னர், பொருளியல் மாணவனாக, தனியுடைமை, சமதர்மம், பொதுஉடைமைப் பொருளியல் முறைகளைப் பற்றி, விரிவாகப் படித்தேன்.

அவை பற்றி வந்த கேள்விகளுக்குத் தக்க விடையெழுதி, சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூன்றாம் இடத்தைப் பிடித்தேன்.

வெறும் கருத்தாக மட்டும் படித்த சமதர்மத்தை நான் பின்பற்றிய கொள்கைக்காரர்கள், குறிக்கோளாக ஏற்றுக்கொண்ட பிறகு, அது, எனக்குக் கருத்து மண்டலத்தில் மட்டும் மிதந்து கொண்டிருக்குமா? இராது.

ஆழ்ந்து சிந்தித்து நல்ல முடிவு செய்து, உணர்வு மண்டலத்திலும் கொள்கை மண்டலத்திலும் ஏற்றுக்கொள்ளவோ, தள்ளவோ வேண்டிய நிலைக்கு நான் தள்ளப்பட்டேன்.

நிலைக்கு ஏற்ற நினைப்பு என்பார்கள். வேலை தேடி அலைந்து, சலித்த என் உணர்வு, உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமை யாக்குவதை, சமதர்மப் பொருளியல் முறையைக் கொண்டு வருவதை, நோகாமல் ஏற்றுக் கொண்டது. சமதர்மமே என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகவும் மாறியது.

சற்றேறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்பு, நான் விரும்பி ஏற்றுக்கொண்ட பொதுஉடைமைக் கொள்கையில் எனக்கு என்றும் ஆட்டங்கண்டதில்லை. அது என் இடையறாத உயிர்மூச்சாக உள்ளது என்பது மிகையல்ல.

என்னுடைய நாற்பதாண்டு கால அரசு ஊழியத்தில், எல்லா நிலைகளிலும், மயக்கும் சூழ்நிலைகள் பெருகிக் கொண்டே வந்தபோதிலும், 'மண், பெண், பொன்' முதலியவற்றில் நான் நெருப்பாக இருந்ததை முன்னிலைப்படுத்தி பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் என்னைப் பாராட்டி, பத்தாண்டுகளுக்கு முன்பு எழுதினார்.

என்னைப் பாராட்ட நினைக்கிற பலர், இந்த என்னுடைய பற்றின்மையைச் சொல்லி மகிழ்வது எனக்குத் தெரியும்.

இந்த நெருப்பு நெறி, எப்படி என்னுடையதாயிற்று? எதனால், இன்றளவும் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது?

என்னுடைய ஒவ்வோர் அணுவிலும் இரண்டறக் கலந்துவிட்ட பொதுஉடைமை இலட்சியம், என்னுள் உறங்கிக் கொண்டிருந்த பொருள் பற்றை முற்றாதபடி செய்துவிட்டது.

இளமையில் என்னுள் வளர்ந்து வேரூன்றிவிட்ட, பொதுஉடைமைக் கோட்பாடு, காசின்மேல் பற்று ஏற்படாதபடி என்னைக் காத்து வளர்த்தது. நேர்மைக்குப் பெயர் பெற்ற குடும்பச் சூழல் துணைநின்றது.

ஒழுக்கம் உயர்வு தரும்

வேலைக்கு அலைந்து கொண்டிருந்த காலத்திலேயே சமதர்மத்தை வளர்க்கும் பணிக்கு உதவவேண்டுமென்னும் எண்ணம் முகிழ்த்தது.

மாதா மாதம் சம்பளம் வாங்கும் ஊழியரோ, தொண்டாகப் பொதுப்பணியாற்றும் தோழரோ எந்த அளவிற்குப் பயன்படுவார்?

சுற்றி உள்ளோர், உடன் சேர்ந்து உழைப்போர், தொடர்பு கொள்ளவேண்டிய நிலையில் உள்ளோர் ஆகியவர்களிடம் எவ்வளவு நம்பிக்கை பெற்றுள்ளாரோ அவ்வளவிற்கே அவர்கள் பயன்படமுடியும்.

ஒருவருடைய தொழில்திறனைக் காட்டிலும் சிறப்பாகப் பயன்படக் கூடியது, அவர்பால் மற்றவர்கள் வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கை ஆகும்.

செல்வர் ஈ.வெ.ராமசாமி மைனராக இருந்தவர். பொது வாழ்க்கைக்கு வந்த பிறகு எவரும் குற்றங்காண, சொல்ல, நினைக்க, வழியில்லாத அளவு ஒழுக்க நோன்புடன் இருந்தார் என்பது உலகறிந்த உண்மை.

இந்தச் சிறப்பே, புரட்சிகரமான கருத்துகளைப் பொழிந்து வந்த பெரியாரின் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் ஏராளமான தாய்மார்கள் தயங்காமல் வரும் நிலையை உருவாக்கிற்று.

எனவே ஒருவரின் ஊழியமோ, தொண்டோ, உரிய முழுப் பலனைப் பெறுவதற்குத் துணை, அவருடைய ஒழுக்கம், அதனால் பரவும் நம்பிக்கை முதலியன என்பது, இளமையில் என் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டது. இவை என்னை நேர்மை வழியில், ஒழுக்க நெறியில் செம்மையாக நடத்தி வந்தன.

பிற்காலத்திற்குப் பெரிதும் பயன்படப்போகும் சில நல்லுணர்வுகள் என்னுள் வேர்விட்டு முளைத்து வளர்ந்தது, அந்த அவலப் பருவத்தில் மின்னொளியாக விளங்கியது.

இந்த நூற்றாண்டின் முப்பதுகளின் தொடக்கத்தில் பல முதலாளித்துவப் பேரரசுகள், பொதுஉடைமைக் கொள்கையைப் பரவாதபடி தடுத்துவிடலாம் என்று மனப்பால் குடித்தன.

உலகத்தின் முதல் சமதர்மப் பாட்டாளி ஆட்சியை, குழந்தைப் பருவத்திலும் பதினான்கு வல்லரசுகளின் கூட்டுத் தாக்குதல்களாலும் அழிக்க இயலவில்லை என்பது வரலாறு.

அதையும் மறந்துவிட்ட பிரிட்டானியர்கள், தங்கள் ஆட்சியில் இருந்த இந்தியாவில் சமத்ர்மக் காற்றே வீசாதபடி செய்துவிட முடிவு செய்தார்கள்; இந்திய ஆட்சிக்கு ஆணையிட்டார்கள்.

அது சமதர்மத்திற்கு எதிராக அடக்குமுறைக் கருவிகளை முடுக்கிவிட்டது. சென்னை மாகாணத்தில், பெரியாரின் இயக்கத்தின் மேல் அடக்குமுறை முதலில் பாய்ந்தது.

'குடிஅரசு' அலுவலகம் சோதனை இடப்பட்டது. நாற்பதுக்கு மேற்பட்ட கடிதங்களையும் குறிப்புகளையும் காவல்துறையினர் கைப்பற்றிச் சென்றார்கள்.

பெரியார் ஈ.வெ.ராமசாமியும் அவருடைய தங்கை திருமதி கண்ணம்மாளும் (வெளியிடுபவர்) கைது செய்யப்பட்டார்கள். இருவர் பேரிலும் வழக்குத் தொடரப்பட்டது.

குற்றச்சாட்டுகள் என்ன?

அரச வெறுப்பு, பொதுஉடைமைக் கோட்பாடு இவ்விரண்டையும் பரப்பினதாக இருவரும் குற்றவியல் வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டார்கள்.

வழக்கின் முடிவில், இருவருக்கும் ஆறு மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகள், ஏராளமான தமிழர் உள்ளங்களில் கொந்தளிப்பை உண்டாக்கின. என் உள்ளத்திலும் கொந்தளிப்பை உண்டாக்கின; உறுதியை மேலும் வளர்த்தன.

பெரிய விலை கொடுக்காமல், பெரிய மாற்றங்களை உருவாக்க இயலாது. சொல்நயம், எழுத்தழகு ஆகியன சுவைக்கு ஏற்றவை; சூடேற்றத் தகுதியற்றவை.

எனவே பரவலாகத் தெளிவூட்ட வேண்டும். பெற்ற தெளிவு குளிர்ந்து போகாதிருக்க வேண்டும்.

தெளிவும் சூடும் பரந்த தன்னல மறுப்பாகக் காய்த்து, தலைகீழ் மாற்றக் கனிகளாக வேண்டும்.

இத்தகைய எண்ண மோதலில், வேலையில்லாத் திண்டாட்டப் பருவத்தைக் கழித்தேன்.

56. பத்திரிகையாளனானேன்

திராவிடன் இதழில் சேர முயன்றேன்

அலைச்சலிலும், உள்ள உளைச்சலிலும் ஏறத்தாழ இருபது திங்கள் நகர்ந்தன. அரசுச் சார்புடைய பதவி ஏதும் காலியாகும் வாய்ப்பில்லை எனத் தோன்றியது.

அந்நிலையில், நீதிக்கட்சி நடத்தி வந்த 'திராவிடன்' இதழின் ஆசிரியர் குழுவில் சேர முயன்றேன். அதற்காகப் பலமுறை திரு பி.டி. இராசனை அணுகினேன்.

திரு எஸ்.எஸ். அருணகிரிநாதரைக் கொண்டு திண்டுக்கல் சுப்பிரமணியத்தின் உதவியைப் பலமுறை நாடினேன். ஒன்றும் பலிக்கவில்லை.

'என் பெயரைச் சொன்னாலே, வருவதும் ஓடிப்போகும்'' என்று பலரும் பேசியது என் காதுகளில் வீழ்ந்தது.

பண்புடை வேந்தர் மட்டுமல்லாது, மற்றக் குடிமக்களும் செவிகைக்கும் சொல் பொறுக்க வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டேன்.

மாற்ற முடியாதவற்றைப் பொறுத்துக் கொள்ளும் முதற் பாடத்தை அப்போதே கற்றேன். அப்பாடம் பிற்காலத்தில் என் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்பட்டது.

நான் வேலையின்றி அலைந்துகொண்டிருந்த காலத்தில், சில எதிர்பாராத நன்மைகள் விளைந்தன. அவற்றில் ஒன்று புதிய நண்பர் ஒருவர் கிடைத்தது.

அவர் எவர்? திரு காஞ்சி கல்யாணசுந்தரம் என்பவர்.

காஞ்சி கல்யாணசுந்தரம்

காஞ்சி கல்யாணசுந்தரம் தொடக்கத்தில் பெரியாரின் இயக்கத்தில் இருந்தார். அறிஞர் அண்ணா தி.மு. கழகம் கண்டபோது அவரோடு அவ்வியக்கத்துக்குச் சென்றார். நம்நாடு இதழின் ஆசிரியராக இருந்தார். பின்னர் டாக்டர் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது நாடாளுமன்ற மேல் அவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆறு ஆண்டுகாலம் அப்பதவியில் இருந்தார். ஏறத்தாழ ஈராண்டுகளுக்கு முன் மாரடைப்பால் மறைந்தார்.

அவர் காஞ்சியில் பிறந்து வளர்ந்தவர்; பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்தவர். எனக்கு மூத்தவர். எனவே பள்ளிக்கூடப் பருவத்தில் எனக்கு அவரைத் தெரியாது.

நான் பட்டம் பெற்றபிறகு காஞ்சிக்குச் சென்றிருந்தேன். அவருடைய தாய் வழித் தம்பி, சிவானந்தம் என்பவர் எனக்கு நெருங்கிய நண்பர். திரு. சிவானந்தம் வீட்டில் திரு கல்யாண சுந்தரத்திற்கு நான் அறிமுகமானேன்.

பிந்தியவர், அப்போது, குமரன் அச்சகக் குப்புசாமியார் நடத்தி வந்த 'குமார விகடன்' இதழை ஆசிரியராக இருந்து நடத்திக் கொண்டிருந்தார்.

அவ்விதழின் தமிழ்நடை, கலப்படம் குறைந்ததாக இருந்தது. அவ்வழியில் அது முன்னோடியாக விளங்கியது.

அதில், நானும் இரண்டொரு கட்டுரைகள் எழுதும்படி செய்தார், திரு கல்யாணசுந்தரனார்.

அது, எங்கள் நட்பை வளர்த்தது. நாங்கள் இருவரும் கூடிப் பல முற்போக்கு இலக்கியங்களைப் படித்தோம்.

திரு காஞ்சி கல்யாணசுந்தரத்திற்கும் எனக்கும் நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட நட்பு தொடர்ந்து தழைத்து வந்தது.

இடையில், அவர் 'குமார விகடன்' ஆசிரியர் பதவியை விட்டு விட்டு, சென்னை நகை வணிகர் திரு கோவிந்தராஜுலு நடத்திய 'விநோதன்' இதழின் ஆசிரியர் குழுவில் சேர்ந்து சென்னையில் தங்கியிருந்தபோது, சிறிதுகாலம் அவர் அறையில் நான் தங்கியிருக்கிறேன். அதற்கு முன்பு, எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

தமிழ்நாடு பத்திரிகைத் துணை ஆசிரியர் ஆனேன்

ஒருநாள் இருவரும் தனித்தனிப் பெட்டியில் சென்னைக்கு வந்தோம். சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் கண்டோம். இருவரும் ஒன்றாகச் சென்று கவனிக்க வேண்டிய வேலைகளைக்

கவனித்தோம். பேருந்து வண்டியில் காஞ்சிக்குத் திரும்ப முடிவு செய்தோம்.

அக்காலத்தில் சென்னைக்கும் காஞ்சிக்கும் இடையே சில பேருந்துகளே ஓடின. ஒன்றிற்கு ஒன்று இடைவெளி அதிகம். பேருந்து நிலையத்திற்குச் சென்று காத்திருப்பதற்குப் பதில், டாக்டர் வரதராசுலு நடத்தி வந்த 'தமிழ்நாடு' நாளிதழின் அலுவலகத்தில் தமது நண்பர் ஒருவரைக் காண விரும்பினார், நண்பர் காஞ்சியார். நானும் உடன் சென்றேன்.

நாங்கள் போனபோது, டாக்டர் வரதராசுலுவே அங்கிருந்தார்.

டாக்டரைக் காணக் காஞ்சியாரை அனுப்பிவிட்டு, நான் தாழ் வாரத்தில் காத்திருந்தேன். ஏழெட்டு மணித்துளிகளில் காஞ்சியார் வெளியே வந்தார்.

தமிழ்நாடு

என்னை டாக்டர் பார்க்க விரும்புவதாகக் கூறி உள்ளே அழைத்துச் சென்றார்; டாக்டருக்கு அறிமுகம் செய்தார்.

நான் இருக்கையில் அமர்ந்ததும் டாக்டர் என்னைப் பார்த்து,

''நீங்கள் பொருளியல் படிப்பில் சிறப்புப் பட்டம் பெற்றதாகத் தெரிந்து கொண்டேன். அண்மையில் சட்டமாகிய 'ரிசர்வ் வங்கி' சட்டம் பற்றித் தமிழில் சுருக்கமாகச் சொல்லுங்கள்'' என்றார்.

'ரிசர்வ் வங்கி ஏற்படுத்துவது எதற்கு? அது என்னென்ன செய்யவேண்டும்?' இவை பற்றி, ஆங்கிலம் கலவாத தமிழில் எடுத்து உரைத்தேன். நான் சொல்லி முடித்ததும்.

''இப்போது நீங்கள் சொல்லியது சாதாரண ஆளுக்கும் புரியும். இதையே சிறிய கட்டுரையாக எழுதிக் கொடுத்து விடுங்கள். இதோ தாள். அதோ மூலையில் மேசை, நாற்காலி; அங்குப் போய் உட்கார்ந்து எழுதிக் கொடுங்கள். உங்கள் நண்பர் காத்திருப்பார்'' என்றார்.

மறுக்க மனம் வரவில்லை. ஒரு மூலையில் உட்கார்ந்து கட்டுரையை எழுதினேன். முடித்ததும் டாக்டர் வரதராசுலுவிடம் கொடுத்தேன்.

அதைப் படித்துப் பார்த்தார், அது அவருக்குப் பிடித்தது. அதை வெளியிடும்படி உரியவருக்கு ஆணையிட்டார். அப்படியே வெளியாயிற்று.

கட்டுரையை வெளியிட ஆணையிட்ட டாக்டர் வரதராசுலு, ''நீங்கள் சும்மாதானே இருக்கிறீர்கள்; வேறு வேலை கிடைக்கும் வரையில், இங்கே துணை ஆசிரியராக இருங்களேன். அதற்கு இசைந்தால் நம் இந்திய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவான கட்டுரைகளைத்

தமிழாக்கம் செய்யும் பணியை உங்களுக்கு ஒதுக்குவேன்'' என்று சொன்னார்.

தேடாமற் பெற்ற அவ் வாய்ப்பினை இழக்க மனம் வரவில்லை. எனவே, ஒப்புக்கொண்டேன். ஊருக்குச் சென்று துணிமணிகளைக் கொண்டு வந்துவிட்டு, வேலையில் சேர்ந்து விடுவதாகச் சொல்லி, விடைபெற்றுக் கொண்டேன்.

திரு கல்யாணசுந்தரமும் நானும் பேருந்தில் காஞ்சிபுரம் சென்றோம். அங்கிருந்து ஊர்போய்ச் சேர்ந்தேன்.

என் தந்தையிடம், வழியில் வலிய வந்த 'தமிழ்நாடு' துணையாசிரியர் பதவியைப் பற்றிக் கூறினேன்.

அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. எவ்வளவு சம்பளம் கொடுப்பார்களென்று கேட்டார். அதைப் பற்றிக் கேட்கவில்லையென்று சொன்னேன்.

''சம்பளம் கட்டையாகத்தான் இருக்கும். உனக்குப் பொழுதுபோக வேண்டும். இப்போதைக்கு அதை ஏற்றுக் கொள்; சென்னையில் நாள் இதழ் அலுவலகத்தில் வேலை செய்வது, எல்லா விளம்பரங்களையும் காணும் வாய்ப்பைக் கொடுக்கும். கூடிய விரைவில் வேறு நல்ல வேலையாகப் பார்த்துக் கொள்'' என்று அறிவுரை கூறினார்.

நான், 1934 டிசம்பர் 21ஆம் நாள், தமிழ்நாடு இதழின் துணை ஆசிரியராகச் சேர்ந்தேன். அப்போதும் நான் சம்பளத்தைப் பற்றிப் பேசவில்லை. அவர்களும் சொல்லவில்லை.

மாதம் முப்பத்தைந்து ரூபாய் சம்பளம்

ஆசிரியர் குழுவில் நான் ஒருவனே பட்டதாரி; கற்றுக்குட்டியாகிய என்னை உடன் வேலை செய்தவர்கள், பொறாமைக் கண்ணோடே பார்த்தார்கள். நான் அதைப் பொருட்படுத்தவில்லை; மூத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுக்கத் தவறவில்லை.

டிசம்பர் முப்பதாம் நாள் டாக்டர் வரதராசுலு என்னை அழைத்தார்.

''உங்கள் வேலை நன்றாக இருக்கிறது. ஆகவே சனவரி முதல் சம்பளம் போட்டுத்தர முடிவு செய்திருக்கிறேன். இப்போதுள்ள நிலையில் தங்கள் தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்க இயலாது. 'தினமணி' நமக்குப் போட்டியாகத் தொடங்கப்பட்டுள்ளது. அது நம் விற்பனையைப் பாதித்துள்ளது. மாதம் முப்பத்தைந்து ரூபாய் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போதைக்கு அதை ஏற்றுக் கொள்ளுங்கள்; பிறகு பார்க்கலாம்'' என்றார்.

என்ன சொல்லுவதென்றே எனக்குப் புரியவில்லை. 'படிக்கும்போது திங்கள் தோறும் எழுபத்தைந்து ரூபாய் செலவிட்டோம்; இப்போது

முப்பத்தைந்தில் காலந்தள்ள வேண்டும்' என்னும் சோகம் மின்னிற்று அதை வெளிக்குக் காட்டவில்லை. வழக்கம் போல ஆர்வத்தோடு பணி புரிந்தேன்.

நீண்ட ஆங்கிலப் பேச்சுகளையும் கட்டுரைகளையும் மொழி பெயர்ப்பதில் மகிழ்ச்சி கொண்டேன். விளங்காத மொழிபெயர்ப் பென்று எவரும் குற்றம்சாட்டாமல், நாள்கள் ஓடின. உடன் இருப்போரும் அன்பாகப் பழகினர்.

இப்படி வேலை செய்து கொண்டிருக்கையில், ஆரிய சமாஜத்தை நிறுவிய சாமி தயானந்த சரசுவதி அவர்களின் நினைவு நாள், சீனா கடைத்தெருவில் கொண்டாடப்பட்டது டாக்டர் வரதராசுலு தலைமையில் டாக்டர் சுப்பராயன் உரையாற்றினார்.

அக்கூட்டத்திற்கு நான் சென்றேன். 'தமிழ் நாடு' நாளிதழின் சார்பில் எவரும் அங்கு வரவில்லை என்பது புலனாயிற்று. எனவே, பேச்சுகளை, உன்னிப்பாகக் கவனித்தேன். சில சொற்களைக் குறித்துக் கொண்டேன். இரவு நான் தங்கியிருந்த அறைக்குத் திரும்பியதும் அந்நிகழ்ச்சியையும் உரைகளையும் சற்று விரிவாக எழுதினேன்.

அடுத்த நாள் காலை, அலுவலகத்தில் அதைச் சேர்த்தேன். அதை அப்படியே வெளியிட்டார்கள், என் மகிழ்ச்சியைப் பற்றிக் கேட்பானேன்!

பெரியாரின் அழைப்பு

சில வாரங்கள் ஓடின. தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் சார்பில் குத்தூசி குருசாமி பி.ஏ. என்னைக் காண்பதற்கு வந்தார்.

வால்டேர், இங்கர்சால், ரஸ்ஸல் போன்ற மேனாட்டு அறிஞர்களின் நூல்களைத் தமிழில் வெளியிடப் பெரியார் விரும்புவதாகவும் அதற்குத் தக்க ஆளைத் தேடிக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

எனக்கு உடன்பாடானால், மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் பெரியார் இடம் வந்துவிடலாம். ஈரோட்டில் செலவும் குறைவு. டாக்டர் வரதராசுலுவிடம் அய்யாவே பேசி, உடனே உங்களை விடுவிக்க ஏற்பாடு செய்துவிடுவார். நல்ல எழுத்துப் பணியாக இருக்கும் என்று திரு. குருசாமி என்னிடம் கூறினார். என் பதில் என்ன?

''நான் இராமசாமிப் பெரியாரை என் தலைவராகவும், குருவாகவும், வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். தலைவர் - தொண்டர் என்கிற அந்த நல்ல உறவை முதலாளி - அலுவலன் என்கிற உறவு பாழாக்கிவிடும். எனவே அய்யாவின் விருப்பப்படி அவரிடம் வேலைக்கு வரமுடியாமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகக் கூறுங்கள்.'' இதுவே என் பதில்.

ஈரோட்டில் நடந்த இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் நான் பெரியாருக்கு அறிமுகம் செய்யப்பட்டேன். பந்தியில் இருந்தபடியே சில மணித்துளிகள் அவரோடு பேசியது தவிர, அவரோடு நான் பழகியதில்லை.

இருப்பினும், என்னை அறிந்தவர் எவரோ சொல்லக் கேட்டு, என்னைத் தமது அலுவலகத்திற்குப் பெரியார் அழைத்திருக்கிறார். 'அப்படிச் சேர்ந்திருந்தால், நாக்குப் பிடித்திருப்பேனா? வளர்ந்து இருப்பேனா?' வெட்டிக் கற்பனைகள்தானே!

தந்தை பெரியாரின் அழைப்பினை ஏற்றுக் கொள்ளாமல் டாக்டர் வரதராசுலுவின் 'தமிழ்நாடு' இதழிலேயே தொடர்ந்து பணியாற்றினேன்.

தமிழ்நாடு நாளிதழ்

தமிழ்நாடு தொடக்கத்தில் வார இதழாக வெளிவந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு நாளிதழாயிற்று. இது தேசிய காங்கிரசுக்கு ஆதரவாக இருந்து அரும்பணியாற்றியது. இதன் நிறுவனரும் ஆசிரியருமாகிய டாக்டர் வரதராசுலு சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தில் முன்னணியிலிருந்தவர்களில் ஒருவர். அக்குருகுலத்தில் சமபந்திக் கல்விமுறை வேண்டுமென்று போராடியதன் விளைவாக, பிராமணர்களுடைய வெறுப்பைத் தேடிக் கொண்டார். அது ஓரளவு தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பாதித்திருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு தினமணி நாளிதழ் வெளிவரத் தொடங்கியது. தமிழ்நாடு இதழுக்குப் போட்டியை வளர்த்தது.

எத்தனை அருமையான வாய்ப்பு அக்கால நாளிதழ்களில் பணிபுரிதல்! இந்நூற்றாண்டின் இருபதுகளிலும் முப்பதுகளிலும் பொது வாழ்க்கையில் சில்லறைத்தனம் குறைவு. அப்போது வேழமும் வேழமும் போராடும் நிலை.

அரசியல் மோதல்கள் என்பவை, கொள்கை மோதல்களாக, கருத்துகளுக்குள் குத்துச்சண்டைகளாக இருக்கும்.

சிற்சிலபோது எவரோ ஒருவர், எழுத்திலோ, பேச்சிலோ சில்லரைத் தனமாகப் பேசி, தலைவர்களை மகிழ்வித்து வந்ததை இல்லையென்று சொல்லிவிட முடியாது.

இருப்பினும் அத்தகையோருக்கு அந்தந்தக் கட்சிகளில்கூட மதிப்பிராது. அவர்களுடைய தலைவர்கள், அவர்களுடைய மட்டரகமான பேச்சுக்களைக் கண்டிப்பார்கள்.

செய்தித்தாள்களுக்கு வரும் செய்திகள், பெரிதும் கொள்கைகளின் அடிப்படையில் இருந்த காலம். விரைவான விடுதலை, பாதுகாப்போடு கூடிய படிப்படி உரிமை வழங்குதல், சமத்துவத்தின்

மாண்பு, பொதுஉடைமையின் சிறப்பு, ஆகியவற்றைப் பற்றி அறிந்தவர்களின் ஆதரவுகளும் மறுப்புகளும் நிறைய வந்து கொண்டிருந்த காலம்.

எனவே, மொழிபெயர்ப்பிற்காக என்னிடம் வந்த நீண்ட பேச்சுகளும் கட்டுரைகளும் எனக்குச் சலிப்பூட்டவில்லை; மாறாக அறிவினைக் கூர்மைப்படுத்தின. இதைப் பார்த்தபோது எழுத்துலகிலேயே இருந்துவிடலாம் என்று எண்ணினேன்.

வருவாயைப் பற்றிச் சிந்தனை எழுந்தது.

'தமிழ்நாடு' இதழின் ஆசிரியர் திரு. வேங்கடராகலுக்கு அப்போது மாதச் சம்பளம் இருநூறு ரூபாய்.

நாளை ஒரு நாள் ஏதாவதொரு நாள் இதழின் ஆசிரியராக நான் உயரலாமே. அப்போது இருநூறு ரூபாய் சம்பாதிக்கலாம். அதற்கு மேலே சம்பளம் கொடுக்கும் வேலை அந்த நாளில் கிடைக்கும் என்பது உறுதியல்ல.

இருக்கிற வேலையோ அறிவோடு தொடர்பு உடையதாக இருக்கிறது. பொதுமக்களுக்கு அறிவைத் தந்து, ஆய்ந்து பார்க்கும் போக்கை வளர்ப்பதற்கு, இத்தொழில் பயன்படலாம்.

உள்ளது சிறத்தலே இயற்கை நியதி; அந்த நியதிக்குக் கட்டுப்பட்டதே பத்திரிகை உலகம். ஆகவே, உயர் எண்ணங்கள் பாய்ச்சும் வாய்க்கால்களாக இதழ்கள் பயன்படலாம்.

இவ்வேலையிலேயே தொடர்ந்திருந்தால், எனக்கும் அந்த நல்ல தொண்டில் பங்கு கிடைக்கும். ஆகவே, 'தமிழ்நாடு' நாளிதழில் தொடர்ந்து இருப்போம். இப்படி எனக்குள் தீர்மானமாக முடிவு செய்துகொண்டேன்.

சம்பளம் போதுமா?

அம்முடிவிற்கு வருமுன், முப்பத்து ஐந்து ரூபாய் சம்பளம் கட்டுபடியாகுமா என்பதையும் சிந்தித்துப் பார்த்தேன்.

என்னுடைய வாழ்க்கையில் என்றுமே படாடோபம் புகுந்ததில்லை; ஆடம்பரமான பட்டுப் பீதாம்பரத்தின்மேல் பற்றுக் கொண்டதில்லை.

சிறுவனாகக் காதில் கடுக்கண் போட்டுக் கொண்டிருந்தேன். அதுவும் பிடிக்கவில்லை. இரண்டொரு ஆண்டில் கழற்றிக் கொடுத்துவிட்டேன். மோதிரம் என்னைக் கவர்ந்தது இல்லை.

சிகரெட்டு, சினிமா, வெற்றிலைபாக்கு, பொடி ஆகிய பழக்கங்களும் என்னிடம் கிடையா. அந்த அளவுக்குச் செலவும் குறைவு.

என் பெற்றோரும் என் வருவாயை எதிர்பார்க்கும் நிலையில் இல்லை. சொத்துச் சேர்க்க ஆசையுமில்லை; நடைமுறைச் செலவுக்கு?

உணவுக்கும் உடைக்கும் உறையுளுக்குந்தானே. உணவுக்கு எவ்வளவு வேண்டும்? கணக்கிட்டுப் பார்த்தேன்.

சென்னைச் சட்டக் கல்லூரிக்கு எதிரில் 'மாடர்ன் கபே' தொடங்கிய புதிது. அன்று அது பலரும் தேடிப்போன புகழ்பெற்ற சிற்றுண்டிச்சாலை.

ஒரு கண்ணாடிக் குவளைக் காப்பி ஓரணா. அரைக்குவளையே பெரும்பாலோர் கேட்பது. அதன் விலை முக்கால் அணா. பெயர்தான் அரைக்குவளை; முக்கால் குவளை கிடைக்கும்.

தோசை அரையணா. இரண்டு இட்லிகள் அரையணா. காலைச் சிற்றுண்டிக்கு இரண்டணா போதும்; மாலைச் சிற்றுண்டிக்கும் அவ்வளவு போதும். பகல் இரவு உணவுகளுக்கு?

அதே 'மாடர்ன் கபே', 'பிராட்வே' தொடக்கத்தில் சாப்பாட்டுக் கடையும் நடத்தி வந்தது. நல்ல சுவையான மரக்கறி உணவு கிடைக்கும்.

அதில், பகலில் சாம்பாரும் மோர்க்குழம்பும் இருக்கும். இரவில் சாம்பாரோ, பொரித்த குழம்போ; அதோடு வற்றல் குழம்பு உண்டு. பருப்பு, பச்சடி, ஒரு பொரியல், ஒரு கூட்டு, ஒரு வறுவல், அப்பளம், ரசம், கோப்பைத் தயிர், மோர், ஊறுகாய் இத்தனையும் தாராளமாகப் பரிமாறுவார்கள்.

பதார்த்தமோ, சோறோ எவ்வளவு கேட்டாலும் போடுவார்கள். தயிர் ஒன்றுக்குத்தான் அளவு.

இந்தச் சாப்பாட்டுக்குக் கட்டணம் என்ன தெரியுமா? நாலணாதான்!

ஆனால் பத்து ரூபாய்க்கு அறுபது சீட்டுகள்; அவற்றைப் பயன்படுத்த இரண்டு திங்கள் கெடு உண்டு.

உணவு நன்றாயிருந்ததைப் போன்றே கவனிப்பும் கனிவாக இருந்தது. ஆகவே, பதினேழரை ரூபாய்களே, சாப்பாட்டுச் செலவிற்குத் தேவை.

உடைக்கு? மாணவப் பருவத்தில் ஆலைத்துணி உடுத்துவதை விட்டு, கதர்த்துணிக்கு மாறினேன்.

கதர் வேட்டி எனக்கு எளிதில் கிழிந்துவிடும். எனவே வேலையில்லாத பருவத்தில் மாற்றுத்துணி தேடினேன். ஆலைத் துணிக்குத் திரும்ப மனம் ஒப்பவில்லை. உறுதிக்குப் பெயர் பெற்ற ஈரோட்டுக் 'கதரை' தேர்ந்தெடுத்தேன்.

அவ்வகையில், நான்குமுழம் வேட்டி பதினைந்து அணா, ஜிப்பா துணி கஜம் ஐந்தணா. ஜிப்பாவுக்கு மூன்று முழம் தேவை. அதற்குத்

தையற்கூலி, அய்ந்தணா. ஆக, ஒன்றேகால் ரூபாயில் ஒரு கதர் ஜிப்பா கிடைக்கும்.

இதற்குமேல், எனக்கு நேர் இளைய தம்பி சிவானந்தம் இளமையில் வாணிகத்தில் மோகங் கொண்டுவிட்டான். எனவே, படிப்பைப் பள்ளியிறுதி வகுப்போடு நிறுத்திக்கொண்டான்.

முதலில் கொத்தவால் சாவடியில் எங்கள் உறவினர் மண்டியிலும், பிறகு எங்கள் இனிய நண்பர் திரு நாராயணசாமிச் செட்டியார் மண்டியிலும் சேர்ந்து அலுவல் பார்த்தான்.

இருபோதும் மண்டி மாடியில், என் தம்பிக்குத் தங்குமிடம் தந்திருந்தார்கள். நான் அங்குத் தங்கியிருந்தேன்.

ஆகவே, அந்நிலையில், 'தமிழ்நாடு' துணை ஆசிரியராகத் தொடர்வது என்னை எவ்வித நெருக்கடியிலும் தள்ளாது என்று முடிவு செய்தேன்.

செய்தித்துறையில் இருந்து, எழுத்துவன்மையால், தமிழர்களை விழிப்படையச் செய்து பெரிய அரசியல், சமூகவியல் பொருளியல் புரட்சிக்குக் காரணமாகிறவர்களில் ஒருவனாக இருக்கப் போகிறோமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்தேன்.

கற்பனை வானில் மிதந்து கொண்டிருந்தேன். கவலையின்றிக் காலம் ஓடிற்று.

57. அண்ணாவுடன் முதல் சந்திப்பு

காஞ்சி கல்யாணசுந்தரம் ஒருநாள் என்னிடம் வந்தார். ஏதேதோ பேசினார். நேரம் போகவில்லை. தம்முடைய நண்பர் ஒருவர் தங்கசாலைக்கு அடுத்த பகுதியில் குடியிருப்பதாகவும், அவர் காஞ்சிபுரத்தார் என்றும், நல்ல கெட்டிக்காரர் என்றும் சொன்னார். அவரைப் பார்க்கப் போகலாமென்று அழைத்தார்.

அக்காலத்தில், எனக்குப் புதிய புதிய நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் உண்டு. எனவே, நான் புதிய நண்பரைக் காணச் செல்வதற்கு உடன்பட்டேன்.

போகும் வழியில் அந்த இளைஞரைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தார். அவர் சின்னக்காஞ்சிபுரத்தார்; காஞ்சிபுரத்தில் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் படித்தார். அவர் சூடு அறிவு உடையவர்; நிறையப் படிப்பவர்.

பிறகு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பாட நூல்களுக்குமேலே ஏராளமான நூல்களைப் படித்திருக்கிறார்.

ஆங்கிலம் தமிழ் இரண்டிலுமே அந்த இளைஞர் படித்த நூல்களுக்குக் கணக்கில்லை.

படிப்பிலே சிறந்து இருப்பதைப் போன்றே நாவன்மையிலும் எழுத்தாற்றலிலும் ஒளிவிடுகிறார். கல்லூரி மன்றங்களில் அவர் பேச்சுகள் சுண்டி இழுக்கும் தன்மையன.

எல்லாவற்றைக் காட்டிலும் அவரிடம் பிடித்தது, அவர் நம் நீதிக்கட்சி மாணாக்கருக்குக் காட்டும் நன்னெறியைக் கடைப்பிடித்ததாகும். மாணவப் பருவத்தே அவர் படித்த அளவு அரசியல் நூல்களைப் படித்தவர்கள் இரார். ஆயினும் மாணவராக இருந்தபோது அரசியலில் கால் எடுத்து வைக்காமல் கடும் நோன்பு இருந்து வந்தார்.

படிப்பை முடித்த பிறகு, பொதுமேடைக்கு வந்துள்ளார். திருப்பூரில் செங்குந்தர் மாநாட்டில் அவர் பேசிய பேச்சைப் பாராட்டாதவர்கள் இல்லை. தலைவர் ஈ.வெ.ரா. மிகப் பாராட்டினார்.

காஞ்சி கல்யாணசுந்தரம் இப்படிப் படம் பிடித்துக்கொண்டு வந்தது எவரை? திரு கா.ந. அண்ணாதுரையைப் பற்றியே.

திரு அண்ணாதுரையின் வீட்டிற்குப் போகும் வழியில், நூல் விற்பனைக் கடை குறுக்கிட்டது. அதற்குள் நுழைந்தோம். புதிய இந்தியப்பதிப்பு ஒன்றைக் கண்டோம்.

அன்றுதான் அந்த ஆங்கில நூல் சென்னைக்கு வந்து சேர்ந்ததாம். அதைச் சுடச்சுட வாங்க நினைத்தேன். திரு காஞ்சியார் ஊக்குவித்தார். வாங்கினேன். விலை என்ன? ஒன்றரை ரூபாய்.

அது எவர் எழுதிய நூல் தெரியுமா? ஆங்கில எழுத்துலக மேதை பெர்னார்ட்ஷா எழுதியது. அந்நூலின் பெயர்? 'கடவுளைத் தேடி அலைந்த கறுப்புப் பெண்' என்பதாகும்.

அந்த நூலை வாங்கிக் கொண்டு திரு அண்ணாதுரையின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தோம். அவர் வீட்டில் இருந்தார். அவருக்கு என்னைக் காஞ்சியார் அறிமுகப்படுத்தி வைத்தார்.

அண்ணாவின் முடிவு

திரு அண்ணாதுரையின் கட்டுரைத் தாளைத் திருத்தியவர் எங்கள் மாநிலக் கல்லூரியில் இந்திய வரலாற்றுப் பேராசிரியராக இருந்த திரு அரங்காச்சாரியார் ஆவர்.

மூன்று கட்டுரைகள் எழுதுவதற்குப் பதில், இரண்டு கட்டுரைகளையே அண்ணாதுரை எழுதினாராம். இருப்பினும கட்டுரையின் உள்ளடக்கமும் ஆங்கில நடையும் அதுவரை காணாத அளவு சிறப்பாக அமைந்திருந்ததாம்.

எனவே, அவருக்கு முதல் இடம் கொடுக்கும் மதிப்பெண்களைத் தந்தாராம். அதைப் பேராசிரியர் எங்களிடம் பலமுறை சொல்லி இருக்கிறார்.

அதைச் சொல்லி, அண்ணாவை மகிழ்விக்க முயன்றேன். மகிழ்ச்சி தெரியவில்லை. காரணத்தை அவரே சொன்னார்.

அண்ணா, இறுதித் தேர்வில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல் இடத்தைப் பெறும் குறிக்கோளோடு நிறையப் படித்து ஆயத்தஞ் செய்து வந்தாராம். இருப்பினும் தேர்வின் முதல் நாள் வந்த கட்டுரை வினாத்தாள் ஏமாற்றத்தைக் கொடுத்ததாம். எதிர்பார்த்த கேள்வி எதுவும் வரவில்லை. அத்தனையும் எதிர்பாராத கேள்விகள்.

எவ்வளவு சமாளித்து எழுதியும் இரண்டு கட்டுரைகளை முடிப்பதற்குள் மணி அடித்து விட்டார்கள். கட்டுரைத்தாளில் எதிர்பார்த்த அளவு மதிப்பு எண் கிடைக்காது. அது, தேர்வின் மொத்த நிலையைப் பாதிக்கும்.

எனவே, அம்முறை தேர்விலிருந்து விலகிக்கொண்டு, அடுத்தமுறை எழுத முடிவு செய்தேன். அப்படியே செய்தேன். உங்கள் பேராசிரியர் எனக்கு முதல் இடம் கொடுத்தது வீணாகிவிட்டது என்று விளக்கினார்.

வேலைக்குப் போக வேண்டாம்

அடுத்து எங்கள் பேச்சு வேலைதேடும் பக்கம் திரும்பிற்று.

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு 'வேலை காலியில்லை' என்னும் அறிவிப்புப் பலகைகளையே காண நேரிடுமோ என்று கவலைப்பட்டோம்; விரைவில் நிலைமை நல்லபடி மாறும் அறிகுறிகளே இல்லையே என்று அங்கலாய்த்தோம். அந்நிலையில், 'தமிழ்நாடு' துணை ஆசிரியராகவே தொடர்ந்து வேலை செய்ய முடிவு செய்திருப்பதைக் கூறினேன்.

அண்ணா அதை வரவேற்றார். மேலும் ஒரு யோசனை, கூறினார். அதிலிருந்து கொண்டே, பொதுமேடைக்கு வந்து சமூகச் சீர்திருத்தத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென்றார்.

எனக்கு அவைக்கூச்சம் அதிகம். அதோடு பேசிப்பழகியதே இல்லை. என் இயல்புக்கு, 'காட்டாக் குத்துச்சண்டை' நடக்கும் இடங்கள் ஒத்துவரா.

ஆகவே அலுவலக வேலையோடு இருப்பதே எனக்கு அமைதி கொடுக்கும். முடிந்தால் 'தமிழ்நாட்டில்', இல்லாவிட்டால் ஏதாவது ஒரு அரசு ஊழியத்தில் தொடர்ந்து இருக்க விரும்புவதாகக் கூறினேன்.

அதை அவர் அப்படியே ஏற்றுக் கொண்டார் என்று சொல்ல முடியாது. ஆயினும் தம் எண்ணத்தை என்மேல் திணிக்கவில்லை.

தனியுறவில் எவர் பேரிலும் தம் கருத்துகளைத் திணிக்காத அவருடைய பண்பாடு அப்போது எனக்குப் புரியவில்லை.

அண்ணா என்ன செய்யவேண்டும் என்று, என் பங்கிற்கு ஆலோசனை கூறிவைத்தேன். என்ன ஆலோசனை?

''ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்திறமை பெற்றிருக்கிறீர்கள். இருமொழியிலும் கேட்டார் பிணிக்கும் நாவன்மையும் எழுத்து ஆற்றலும் இருக்கின்றன. அலுவலகங்களில் இவை மட்கி வீணாகிப் போகும். அரசு ஊழியத்திற்கோ, தனியார் அலுவலுக்கோ போகவேண்டாம்.

''விருப்பமான அரசியல் அல்லது சமூக இயல் அல்லது பொருளியல் இயக்கம் ஒன்றில் சேர்ந்து தொண்டாற்றுங்கள். இப்போதைக்கு அரைப் பட்டினியே பரிசாகலாம். எனினும் கால ஓட்டத்தில் நிறைவும் நிலையும் பெருகும். உத்தியோக விலங்கில் மட்டும் மாட்டிக்கொள்ள வேண்டாம். உங்களைப் போன்றவர்களுக்கு அது இடமல்ல. இவை என்னுடைய சிற்றறிவில் பட்டவை; தங்களிடம் ஒளிக்காமல் சொல்லிவிட்டேன்.''

கடவுளைத் தேடிய கருப்புப் பெண்

பட்டதாரி கா.ந. அண்ணாதுரையை நான் காஞ்சி கல்யாணசுந்தரத் தோடு சென்று பார்த்தபோது, என் கையில் பெர்னாட்ஷா எழுதிய ஆங்கில நூல் ஒன்று இருந்தது.

அன்றுதான் சென்னைக்கு வந்து சேர்ந்த அந்த இந்தியப் பதிப்பை, அண்ணா என்னிடமிருந்து வாங்கிப் புரட்டிப் பார்த்தார்; திருப்பித் தந்தார்.

அண்ணாவோடு மனம் விட்டு உரையாடிவிட்டு நாங்கள் இருவரும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். அவ்வமயம் அண்ணா, ''அந்த நூலை என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கள். இன்றே படித்து முடித்துவிட்டு, நாளைக் காலை, அதை உங்களிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

அப்படியே, 'கடவுளைத் தேடிய கறுப்புப்பெண்' என்னும் நூலை அண்ணாவிடம் கொடுத்துவிட்டு வந்தேன்.

'கடன் வாங்கிய நூலை விழிப்போடு திருப்பி அனுப்புகிற பழக்கம் நம்மவர்க்குக் குறைவு' என்பது என் மதிப்பீடு. 'அப்படியே அனுப்பாவிட்டால் என்ன? அதிக விலை இல்லை; மற்றொன்று வாங்கிக் கொள்ளலாம்' என்ற நினைப்பில் கொடுத்துவிட்டு வந்தேன்.

நடந்தது என்ன?

அடுத்த நாள் காலை, நான் 'தமிழ்நாடு' அலுவலகத்தில் இருந்தபோது, ஒருவர் என்னைத் தேடி வந்தார். அந்நூலைக் கொண்டுவந்தார்.

'அண்ணா இந்தப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார். அதை முழுவதும் படித்துவிட்டார். நன்றாக இருப்பதாகச் சொல்லச் சொன்னார்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

நான் மகிழ்ந்தேன். இப்படி ஏற்பட்ட எங்கள் தொடர்பு காலவோட்டத்தில் நட்பாகக் காய்த்து, தோழமையாகக் கனிந்தது. இக்கனிவைப்பற்றிப் பின்னர் உரிய இடங்களில் குறிப்பிடுகிறேன்.

58. பதவி போயிற்று

மனக்கோட்டை சரிந்தது

பத்திரிகை உலகில் தொண்டனாக விளங்கப் போகிறேனென்று மனக்கோட்டை கட்டியது சில திங்களில் மணல் வீடாகியது.

ஒரு நாள் டாக்டர் வரதராசுலு என்னை அழைத்தார். அது 1935 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இருபதாம் நாள். என்னடைய எந்த மொழிபெயர்ப்பில் குறை காணப்போகிறாரோ என்று அஞ்சியபடி, அவருடைய அறைக்குள் தயக்கத்துடன் நுழைந்தேன்.

அவர் என்னை உட்காரச் சொன்னார். உட்கார்ந்தபிறகு,

''நம் நாளிதழின் பொருள் நிலை பற்றி இதுவரை கேள்விப் பட்டீர்களா? நெருக்கடி முற்றுகிறது; எப்போது தீரும் என்று தெரியவில்லை'' என்று அவர் சொல்லியதும் அவர் தொடர்ந்து பேசாதபடி, நான் குறுக்கிட்டேன்.

''அய்யா! நான்தான், ஆசிரியர் குழுவில் கடைசியாகச் சேர்ந்தவன். ஆகவே தாங்கள் இசைவு தந்தால் நான் நாளை முதல் நின்றுவிடுகிறேன். தாங்கள் இதுவரை காட்டிய ஆதரவை மறக்க மாட்டேன்'' என்று கூறினேன்.

''துடிக்காதீர்கள். ஒரு மாதம் முன் அறிவிப்புக் கொடுக்க விரும்பு கிறேன்'' டாக்டர் வரதராசுலுவின் உரை முடிவதற்குள் மீண்டும் குறுக்கிட்டேன்.

''முன்னறிவிப்பைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நாளையே நின்றுவிட ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றேன். என் உரையில் எரிச்சலோ கசப்போ சேரவில்லை.

''மார்ச்சு முடியவாகிலும் இருங்கள்'' என்று அவர் சொன்னதற்கு இசைந்தேன். மேலும் பத்து நாள்கள் என் துணை ஆசிரியர் பதவி நீடித்தது.

திடீரெனத் தானாக வந்த அப்பதவி, தானாகவே, சட்டென்று போய்விட்டது. அது எனக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஆயினும் உள்ளம் உடையவில்லை. நான் கவலையில் மூழ்கவில்லை. என்னுடைய இயற்கை அத்தகையது என்று பொய் சொல்ல மாட்டேன். நான் படித்தவை எனக்கு ஊன்றுகோல்களாக உதவின.

'சென்றதினி மீளாது மூடரே' என்று தொடங்கும் பாரதியின் பாடல் எனக்கு மனப்பாடமாகியிருந்தது. அது மின்னியது.

ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கில ஞானி, 'சாந்திக்கு மார்க்கம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'மெய்யறம்', 'மெய்யறிவு' ஆகிய நூற்களை இயற்றினார்.

அவற்றைக் கப்பலோட்டிய தமிழறிஞர் வ.உ. சிதம்பரனார் தமிழில் மொழிபெயர்த்தார். தமிழில் வெளியான அந்நூல்களை நான் படித்து இருந்தேன். அவற்றின் கருத்துகளும் நினைவுக்கு வந்தன; என்னை ஒரு நிலைப்படுத்தின.

எனவே, 'வருவது வரட்டும்' என்று அவ்வேலை நீக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்தேன். மார்ச்சுத் திங்கள் இறுதியோடு 'தமிழ்நாடு' துணை ஆசிரியர் வேலையும் போயிற்று.

சோதனைக்கு மேல் சோதனை

அடுத்த சில திங்கள், பலவகையிலும் படாதபாடுபட்டேன். ஊருக்குச்சென்று வாழ்ந்தால், உலகத்திலிருந்து விலகி, கிணற்றுத் தவளையாகி விடுவேனோ என்று அஞ்சினேன்.

சென்னையில் தங்கி இருப்பதற்கு வேண்டிய பணவசதியோ குறைந்திருந்தது. ஏன்? நெல்லின் விலை வீழ்ந்திருந்த காலம் அது. ஆகவே குடும்ப வருவாய் குறையத் தொடங்கியது. அவ்வேளை செலவு பெருகிற்று.

அப்போது, ஒரு தம்பி, கல்லூரியில் சேர்ந்தான். அவன் செலவிற்கும் உயர்நிலைப் பள்ளியில் தங்கியிருந்த தம்பியின் செலவுக்கும் பணம் கண்டுபிடிக்க வேண்டும். ஆகவே நான் சென்னையில் காலங்கழிப் பதற்குப் பணம் கொடுப்பது என் தந்தைக்கு எளிதாக இல்லை.

அதோடு, எனக்குப் பெண் கொடுக்க விரும்பியவர்கள், என் தந்தையிடம் சென்று இதையும் அதையும் கொடுப்பதாகக் கூறினார்கள்.

ஒவ்வொன்றையும் எனக்கு உடனுக்குடன் தெரிவிப்பார். என் கருத்தை அறிந்துவரத் தூது அனுப்புவார். என்ன பதில் சொன்னேன்?

எந்த வாலிபனும் தனக்கென்று ஒரு வேலை தேடிக் கொள்வதற்கு முன், திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது என் கொள்கை. தான் சம்பாதித்து மனைவியைக் காப்பாற்ற முடியாதவன், பெற்றோர் சொத்தை நம்பித் திருமணம் செய்து கொள்வது சின்னத்தனம். மாமனாரிடம் வரதட்சணை பெற்று வாழ்வது இழிவு. அப்படி வாழ நினைப்பவன் மனிதன் அல்லன். பின் யார்?

கால்நடை மருத்துவமனைகளில் பராமரிக்கப்படும் காளைக்கு ஒப்பானவர்கள். அத்தகைய நிலைக்கு என்னைத் தாழ்த்திக் கொள்ள விரும்பவில்லை. இவற்றை வந்தவர்களிடம் வெளிப்படையாகச் சொல்லி அனுப்புவேன்.

இப்படி வந்ததையெல்லாம் தட்டிக் கழிக்கிறேனே என்று என் தந்தைக்கு எரிச்சல்; கவலையுங் கூட.

நான் சொன்ன காரணம் முழு உண்மையா? இல்லை, பாதி உண்மை! மறுபாதியை அப்போது நான் வெளிப்படுத்தவில்லை. அது என்ன?

நான் எந்தச் 'சாதி'யில் பிறந்தேனோ அந்தச் சாதிக்காரனாக வாழ்வதில்லை என்ற முடிவுக்குப் பதினாறாவது வயதிலேயே வந்துவிட்டேன். அதன் கிளை முடிவாக, என் சாதியில் திருமணம் செய்து கொள்ளுவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன்.

'காட்டைக் கடப்பதற்கு முன் கூச்சல் போடாதே' என்பது பழமொழி. இருபத்தொரு இருபத்திரண்டு அகவை வரையில் எந்தப் பெண்ணின் மேலும் காதல் கொள்ளாத நான், 'வேறுசாதியில்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று சொல்வது, தொல்லையைக் காலத்திற்கு முன்பு தேடிக்கொள்வதாக முடியும். எனவே இக்காரணத்தை எவரிடமும் சொல்லாமல் நழுவிக் கொண்டிருந்தேன்.

பட்டினியுடன் போராட்டம்

தமிழ்நாடு நாளிதழில் வாங்கிய மாத ஊதியம் முப்பத்தைந்தில், சில ரூபாய்கள் மிச்சப்படும். அவற்றைச் சேமித்து வைத்து இருந்தேன். அப்பணத்தைக் கொண்டு சில வாரங்களை ஓட்டினேன்.

அப்புறம் காப்பி குடிக்கவும் என் கையில் பணம் இல்லை. என் தம்பியிடம் சொல்லவும் நாணினேன். ஒரு நாள் முழுவதும் பட்டினி.

அதை ஒளிப்பதற்காக, கொத்தவால்சாவடி மண்டியிலிருந்து, சாப்பாட்டிற்குப் போவதுபோல், மூன்று வேளையும் வெளியே சென்றேன்.

பிராட்வேயில் அன்று 'லோன்சு சதுக்கம்' என்ற பெயரில் இருந்த பூங்காவிற்குச் சென்று சிறிது நேரத்தைப் போக்கிவிட்டு வருவேன்.

மண்டியில் அலுவலில் மும்முரமாக ஈடுபட்டிருந்த என் தம்பி, என்னைக் கூர்ந்து கவனிக்கவில்லை.

அடுத்த நாள் காலை மண்டியின் உரிமையாளர் திரு நாராயணசாமிச் செட்டியார் என்னிடம் பேச, என் அறைக்கு வந்தார். பேச்சுவாக்கில் என் களைப்பைப் புரிந்துகொண்டார்; காரணத்தையும் ஊகித்துவிட்டார்.

கீழே சென்று என் தம்பியிடம் சில ரூபாய்களைக் கொடுத்தனுப்பினார். தம்பி தானாக வந்து கொடுப்பதுபோல் கொடுத்த பணம் எனக்கு உதவியது.

அத்தொகை தீர்வதற்கு முன், என் தந்தை வந்தார். ஏதேதோ பேசினார். பல பெண்களின் தகவல்களைச் சொல்லி அவர்களைப் பார்த்து எவரையாவது தேர்ந்தெடுக்கும்படி கூறினார்.

பழைய காரணத்தைச் சொல்லி எரிச்சல் ஊட்டினேன். இருப்பினும் அவர், ஊருக்குத் திரும்பும்போது கொஞ்சம் பணங்கொடுத்துவிட்டுப் போனார். அது சில வாரங்களுக்கு வந்தது.

இதற்கிடையில், நான் சும்மா இருப்பதை அறிந்த தந்தை ஈ.வெ.ரா. பெரியார், மீண்டும் 'குடிஅரசு' அலுவலகத்தில் சேரும்படி திரு சா. குருசாமி வழியாக அழைத்தார்.

பழைய காரணத்தைச் சொல்லி மீண்டும் மறுத்துவிட்டேன்.

எவ்வளவு பிழைக்கத் தெரியாதவன் பாருங்கள்.

59. பஞ்சாயத்து அலுவலர் பதவி

வேலைக்கு மனு

தேடுவது கிட்டாது; தேடாதது வலிய வந்து நிற்கும். இது எண்ணற்றோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள். என் வாழ்க்கையிலும் அப்படிப் பல.

அரசு வேலைகளில் காலியே இல்லை. நீதிக்கட்சியின் நாளிதழாகிய 'திராவிட'னில் இடம் பிடிக்க முயன்றது வீணாயிற்று. தேடாத வேலை 'தமிழ்நாடு' இதழில் கிடைத்தது. நினைக்காத வேளை, அதுவும் கைநழுவிவிட்டது.

வேலை இல்லாது காத்துக்கிடந்தபோது என் தாய்மாமன் திரு சுந்தரசேகரன் திடீரெனச் சென்னைக்கு வந்தார். என்னைத் தேடி வந்தார். திருமணத் தூது வந்தாரோ என்று அஞ்சினேன். சில மணித்துளிகளில் அச்சம் அகன்றது.

தூது வந்தது திருமணத்திற்கு அல்ல; வேலைபற்றியே. என்ன வேலை? உதவிப் பஞ்சாயத்தார் அலுவலர் வேலை.

எங்கே? செங்கற்பட்டு மாவட்டத்தில்-

வேலை கொடுக்க வேண்டியவர் எவர்?

செங்கற்பட்டு மாவட்ட ஆணைக்குழுவின் தலைவர்.

அப்போதைய தலைவரின் பெயர் என்ன? திரு செ. முத்தய்யா, அவர் பட்டதாரி. பெரிய இடத்து மாப்பிள்ளை.

செங்கற்பட்டு மாவட்டத்தின் குறுநில மன்னர்களில் பெரிய குடும்பம் சூணாம்பேட்டை ஜமீன்தார் குடும்பம், அக்குடும்பத்தின் ஒரே மாப்பிள்ளை அவர்.

குடும்பத் தலைவர் திரு அருணாசலம், மைத்துனர் முத்தய்யாவை ஆணைக் குழுவின் தலைவராக்கி மகிழ்ந்தார்.

அந்த ஆணைக்குழுவின் உறுப்பினராகப் பல்லாண்டு தொண்டு புரிந்தவர் என் மாமா, திரு நெ.கோ. சுந்தரசேகரன். அவர் நீதிக்கட்சியின் தூண்களில் ஒன்றாக விளங்கியவர்.

செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்த திரு மண்ணூர் கிருஷ்ணசாமி (செட்டியார்)க்கு வாக்கு அளித்து ஆணைக்குழுத் தலைவராக்கியவர். அவருக்குத் துணையாக விளங்கியவர்.

அக்காலத்தில், தமிழ்நாட்டில், சில மாவட்ட ஆட்சிக் குழுத்தலைவர்கள் நிகரற்ற நிர்வாகிகளாக விளங்கினார்கள்.

கோவை, திரு கா.ச. இரத்தின சபாபதி, சேலம் எல்லப்பர், செங்கை, ம. கிருஷ்ணசாமி, தஞ்சை பன்னீர்செல்வம் ஆகியோர் அவர்களில் சிலர்.

திரு கிருஷ்ணசாமிக்குப் புகழ் ஓங்க ஓங்க அழுக்காறு என்னும் களையும் வளர்ந்தது. அவை அவதூறுகளாகக் கிளைத்தன.

புரட்சிகரமான சுயமரியாதை மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது, அவருக்குப் பகையை வளர்த்தது.

எனவே, நீதிக்கட்சியின் சார்பில், அவர் தலைவராக இருந்தது போதும் என்று நீதிக்கட்சி முடிவு செய்தது.

அவரோடு துணைத்தலைவராக இருந்த திரு கல்பட்டு ஜெயராம் அவர்களைத் தலைவராக்க முடிவு செய்தார்கள். அப்படியே நடந்தது.

என் மாமன் நீதிக்கட்சியிலேயே தொடர்ந்து தொண்டாற்றினார்.

புதிய தலைவரின் ஆட்சி நல்லவர் ஆட்சி; வல்லவர் ஆட்சி அல்ல. இப்போது, கீழே இருப்பவர்கள் நினைத்தால்தான் எதுவும் நகரும். கீழே இருப்பவர்களுக்குக் கையூட்டு இல்லாமல், மாவட்ட ஆட்சியின் அலுவலகத்திற்குப் போய்ப் பயன் இல்லை.

அவ்வேளை, நீதிக்கட்சியின் கட்டுக் குலைந்து இருந்தது. காங்கிரசின் கை ஓங்கி வந்தது. எங்கள் மாவட்டத்தில், காங்கிரசே, மாவட்ட ஆட்சிக்குழுவை இயக்கும் அளவு, அது ஓங்கவில்லை.

திரு ஜெயராமுக்குப் பதில் வேறொரு தலைவரைத் தேர்ந்து எடுக்கும் நிலை மூன்றாண்டில் உருவாகிவிட்டது.

திரு முத்தய்யா தலைவரானார்; திருவொற்றியூர் சண்முகம் துணைத் தலைவர் ஆனார்.

முந்தியவர், சுயேச்சை உறுப்பினர். பிந்தியவர், தன்மான இயக்கத்தில் இம்மாவட்ட முன்னோடி. காங்கிரசு இருவருக்கும் ஆதரவு தந்தது.

நீதிக்கட்சியின் சார்பில் ஆணையிடும் ஒருமித்த தலைமையில்லை. எனவே, அந்தப் பாரம்பரியத்தில் வந்த திரு சண்முகத்திற்கு என் மாமா துணையானார். அவர் கூட்டைச் சேர்ந்த திரு முத்தய்யாவுக்கும் வாக்களித்தார்.

புதிய ஆட்சிக்குழு வந்த காலத்தில், ஊராட்சிமன்றங்களை வளர்க்கவேண்டுமென்பதில், சென்னை மாகாண ஆட்சி முனைப்புக் காட்டியது.

எனவே, மாவட்டந்தோறும் சில உதவிப் பஞ்சாயத்து அலுவலர்களை நியமித்து, ஊராட்சி மன்றங்களை ஊக்குவிக்குமாறு சுற்றறிக்கை விட்டது.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிக்குழு, மூன்று அலுவலர்களை நியமிக்க முடிவு செய்தது. அம்முடிவை, உள்ளாட்சி மன்றங்களின் தலைமை ஆய்வாளர் ஏற்றதும், செயல்படும்.

மேற்படி முடிவினை எடுத்த கூட்டத்திற்குப் பிறகு, தலைவர் முத்தய்யா, உறுப்பினராகிய திரு. நெ.கோ. சுந்தரசேகரரை வலிய அழைத்தாராம்.

''மேற்படி வேலைகளுக்கு நாட்டுப்புற மக்களைத் தெரிந்தவர்கள் வந்தால் நல்லது. உங்கள் மைத்துனர் மகன் ஒருவன் எம்.ஏ. பட்டம் பெற்றுவிட்டுச் சும்மா இருக்கிறானாமே! அவன் இப்போதைக்கு இவ்வேலைக்கு வரட்டும். அவன் வருவது, அப்பணிக்கு நல்லது.

''உங்களை மாவட்டத்தில் பலருக்கும் தெரியும். அதனால், உங்கள் மருமகன், ஊர் ஊராகச் சென்று, ஊராட்சி மன்றங்களை நிறுவ முயன்றால் வெற்றி வாய்ப்பு அதிகமாகலாம்.

''முன்பின் தெரியாதவர்களைவிடத் தெரிந்தவர்கள் வருவதே தொடக்க காலத்திற்கு நல்லது. அவனுடைய மனுவை வாங்கிக் கொண்டு வந்து கொடுங்கள். நான் வாக்குறுதி கொடுக்கக்கூடாது.

''இருப்பினும் மூன்று வேலைகளில் ஒன்றை அவனுக்குக் கொடுப்பது கடினமாக இராது'' இப்படித் தூபம் போட்டிருக்கிறார்.

அச்செய்தியை அவர் என்னிடம் கொண்டு வந்தார். என் கைப்பட மனு எழுதிக்கொடுக்கும்படி வற்புறுத்தினார்.

அக்கால இளைஞர் எவரும் 'இது வேண்டாம்; அது வரட்டும்' என்று சொல்லும் நிலையில் இல்லை.

மூன்று நான்கு ஆண்டுகளாகக் காத்துக் கிடப்போர், முதலில் கிடைத்ததைப் பற்றிக்கொள்ள வேண்டும். பிறகு வாய்ப்பு வந்தால், பெரிய பதவிகளுக்குத் தாவலாம். இத்தகைய நிலையில் அவ் வேலையை ஒதுக்கக்கூடாது என்பது புலனாயிற்று. அதற்குச் சம்பளம் 45-3-75 என்பதும் குறையாகத் தோன்றவில்லை.

அவ் வேலையை நாடக்கூடாது என்பதற்கு வேறிரு காரணங்கள் எனக்குப் பட்டன.

நான் அதுவரையில், ஊர் சுற்றிப் பழகாதவன். செல்லமாக வளர்ந்து விட்டவன்; தூய கிணற்று நீரைக் குடித்து வந்தவன், அவ்வேலைக்குப் போனால் திங்களுக்கு இருபது நாள்கள் ஊர் சுற்ற வேண்டுமே! அதை என்னால் சமாளிக்க முடியுமா? கண்ட கண்ட ஊர்களில், சேறு கலந்த குளத்து நீரை - ஆடுமாடுகள் கழுவும் குளத்து நீரைக் குடிக்க மனம் ஒப்புமா? மனம் ஒப்பினாலும் உடலுக்கு ஒத்து வருமா?

இவை என்னைப் பற்றியவை. மற்றொன்று என் மாமாவின் உரிமை.

'எனக்கு வேலை கொடுத்துவிட்டு, உங்களைத் தமக்கு அடிமை யாக்க நினைக்கிறாரோ என்னவோ? அவர் மேற்கொள்ளும் முடிவுகளுக் கெல்லாம் நீங்கள் ஆமாம் சாமியாக இருப்பீர்கள் என்று எதிர்பார்க் கிறாரோ என்னவோ? என் வேலைக்காக, உங்கள் கொள்கையையும் உரிமையையும் இழக்க வேண்டுமா?' இக் கேள்விகளை என் மாமாவிடம் எழுப்பினேன்.

''உன் மனுவைத் தலைவரிடம் கொடுக்கும்போது, உன்னுடைய வேலைக்கும் என்னுடைய ஆதரவுக்கும் முடிச்சுப்போடக் கூடாது என்று தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்.

''உன் தகுதி பற்றிக் கொடுத்தால் கொடுங்கள். நானும் என் கொள்கை அடிப்படையில், முடிந்த அளவிற்கு, தங்கள் முடிவுகளை, நடவடிக்கைகளை, ஆதரிக்கிறேன்.

''சுந்தரவடிவேலுவிற்கு வேலைகொடுப்பதற்குக் கைமாறாக எல்லாவற்றையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பேன் என்று எதிர்பார்க்காதீர்கள்'' என்று சொல்லிவிடுவேன் என்று எனக்குப் பதில் கூறினார்.

அவருடைய கொள்கைப் பிடிப்பும் நாணயமும் பலரும் அறிந்தவை. எனவே அவர் ஆலோசனைப்படி, உதவிப் பஞ்சாயத்து அலுவலர் வேலைக்கு மனு எழுதிக் கொடுத்தேன்.

அதை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டுச் சென்றார். அண்மைக்காலத்தில் குடும்பத்தவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செயலை

யாகிலும் என்னால் செய்ய முடிந்ததே என்று நானும் மனநிறைவு கொண்டேன்.

என் மனுவை, தலைவர் முத்தய்யாவிடம் நேரில் சேர்த்து விட்டதாகவும் மூன்று திங்களுக்குள் நியமன ஆணை வருவது உறுதி என்றும் என் மாமா ஊரிலிருந்து எழுதியிருந்தார்.

அவ்வேலையை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து, அது வலியவரும் என்று நம்பி, நாள்களைக் கழித்தேன்.

பரிந்துரை மயம்

அப்போது திரு சா. குருசாமி - பிற்காலத்தில், தன்மான இயக்கத்தின் மூளை நரம்புகளில் ஒன்றாக விளங்கி, உயர்ந்த குருசாமி - உள்ளாட்சித்துறை தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் எழுத்தராக இருந்தார். அவரை நான் அறிவேன்.

எனவே, செங்கற்பட்டு மாவட்ட ஆணைக்குழுவின் மேற்படி பரிந்துரை ஒப்புக்கொள்ளப்பட்டதா என்று கேட்டறிய, சில முறை அவர் வீட்டுக்குச் சென்றேன்.

அதுபற்றி விழிப்பாயிருந்து தகவல் கொடுக்க ஒப்புக் கொண்டார். இரு பார்வைக்கு இடையே, எப்படியோ இருபது நாள்கள் கழியவிட்டு விட்டேன். அத்தனை இடைவெளிக்குப் பிறகு, திரு. குருசாமியைக் கண்டபோது,

''உங்கள் முகவரியைக் கொடுக்காமல் போய்விட்டீர்கள். எங்கே தகவல் அனுப்புவது என்று தெரியவில்லை.

''மூன்று பதவிகளை உருவாக்க ஒப்புதல் கொடுத்து, பதினைந்து நாள்களுக்கு மேலாகிறது. மேற்கொண்டு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

''எங்கள் அலுவலகத்தில் நாராயணசாமி முதலியார் என்று ஒருவர் பணிபுரிகிறார். அவர் டாக்டர் குருசாமி முதலியாருக்கு மருமகன் முறையாம். அந்த டாக்டர், உங்கள் முத்தய்யா குடும்பத்திற்கு மருத்துவராம். டாக்டர் பரிந்துரையின்மேல், அவரை ஒரு பதவியில் நியமித்துவிட்டார்கள்.

''இரண்டாவது இடத்திற்குக் காஞ்சிபுரம் டாக்டர் பி.எஸ். சீனிவாசன் என்வரின் மருமகனாம்; கிருஷ்ணன் என்ற பெயருடையவராம். டாக்டர் செல்வாக்கால் அவரையும் நியமித்துவிட்டாராம்.

''மூன்றாவது இடத்திற்கு யார் என்பது முடிவு ஆகவில்லை. இது கடைசிச் செய்தி. 'எங்கள் அலுவலகத்தின் தலைமை மேலாளர் திரு இராமச்சந்திர அய்யரே சொன்ன செய்தி. எனவே, உண்மையாக இருக்கும்.

''பாக்கியுள்ள இடத்திற்கு உடனே முயலுங்கள்.'' இப்படி ஆலோசனை கூறி அனுப்பி வைத்தார், திரு. குருசாமி. உள்ளூர எனக்கு ஏமாற்றம், மனுவைக் கேட்டுப் பெற்றுக்கொண்டபின் இப்படிச் செய்துவிட்டாரே என்று ஆற்றாமைப்பட்டேன்.

60. இவன் நல்ல பையன்

கடிதம் எழுதினேன்

'மூன்றில் இரண்டு பதவிகளுக்கு ஆள்களை நியமித்து விட்டார்கள். மூன்றாவது பதவியைப் பெற்றுத்தர, உடனே புறப்பட்டு வாருங்கள்' என்று என் மாமாவிற்குக் கடிதம் எழுதினேன்.

அதன்படி, அவள் சென்னைக்கு வந்தார். என் தந்தையும் உடன் வந்தார். எங்கே போனாலும் அவர்கள் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து போவார்கள். தனித்தனியே போய் வந்தது சில பொழுதே.

இருவரும் என்னை அழைத்துக்கொண்டு, மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவர் திரு செ. முத்தய்யாவிடம் சென்றார்கள். அவர் சென்னையில் இருந்தார்.

எங்கே இருந்தார்? கீழ்ப்பாக்கத்தில், தோட்டச்சாலையில் அமைந்துள்ள, 'பார்பிகன்' என்னும் பங்களாவில் இருந்தார். அது திருமதி முத்தய்யாவின் அண்ணார் திரு. அருணாசலம் அவர்களுடைய பங்களா.

நாங்கள் மூவரும் சென்றபோது, காலைநேரம். திரு முத்தய்யா, தாழ்வாரத்தில் சாய்மான நாற்காலியில் அமர்ந்திருந்தார். இரு பக்கங்களிலும் போடப்பட்ட நாற்காலிகளில் எங்களை அமரச் சொன்னார்.

அப்படி அமர்ந்ததும் 'சிற்றுண்டி சாப்பிடலாமா?' என்று கேட்டார். 'சிற்றுண்டியை முடித்துக்கொண்டே வந்துள்ளோம்' என்று பதில் கூறினார், என் தந்தை. எனவே, காப்பி கொண்டுவந்து கொடுக்கும்படி ஆணையிட்டார்.

இதற்கிடையில் என் மாமா, என்னை திரு. முத்தய்யாவுக்கு அறிமுகப்படுத்தினார். என் வேலைபற்றி வந்து இருப்பதாகக் கூறினார். உடனே, திரு முத்தய்யா, திரு. குருசாமி என்னிடம் சொல்லிய தகவலைச் சொன்னார்.

''இப்போது ஒரு பதவியே பாக்கியிருக்கிறது. அதற்குப் பலத்த போட்டி. உன் மருமகனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி, நான்தான் மனுவை வாங்கி வரச் சொன்னேன். என் நிலையை ஒளிப்பானேன்.

காங்கிரசு கட்சியின் ஆதரவு எனக்குத் தேவை. அதனால் டாக்டர் சீனிவாசன் மருமகனுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று.

''இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்தோடு நமக்குத் தொடர்பு உண்டு. அங்கு வேலையிலிருந்த நாராயணசாமி முதலியாரை வேலைக்கு எடுத்துக்கொண்டால், அத்தொடர்பு நல்லபடியிருக்கும். ஆகவே, அவரை நியமித்துவிட்டேன்.

''மூன்றாவது பதவிக்கு திரு சண்முகம் ஒருவரைப் பரிந்துரைத்துள்ளார். அப்பா கம்பெனி திரு கே. வேங்கடசாமி ஒருவரைப் பரிந்துரைத்துள்ளார். அப்பரிந்துரைகளை எப்படித் தள்ளிவிடுவது என்று தெரியவில்லை. அவர்கள் கைகளிலும் ஓட்டுகள் இருக்கின்றன'' என்று சொல்லி வரும் வேளை, சூணாம்பேடு ஜமீந்தார் திரு. அருணாசலம் அப்பக்கம் திடீரென்று வந்தார்.

ஜமீன்தாரின் கோபம்

நாங்கள் மூவரும் எழுந்து வணங்கினோம். திரு. அருணாசலம் என்னை அடையாளங் கண்டு கொண்டார்.

''உன்னைத்தானே முன்பு சேலம் ஜமீந்தார் பங்களாவில் பார்த்தேன்'' என்று கேட்டார்.

''ஆம்'' என்றேன்.

ஒரு பிடிபிடித்தார்.

''மூன்று மாதமாக என்ன செய்து கொண்டிருந்தாய்? மனுப் போட்டதும் வந்து பார்த்திருக்க வேண்டாமா? போகட்டும், கொஞ்ச நாள் பொறுத்தாகிலும் ஏன் வரவில்லை? பெரிய பட்டம் பெற்றுவிட்டதாக நினைப்பா? வேலை, வீடுதேடி வரவேண்டுமா?

''மாமனைக் கூப்பிட்டுக்கொண்டு வந்து இருக்கிறாயே! அவர் இல்லாவிட்டால் என்ன செய்வாய்? வீட்டிலேயே முடங்கிக் கிடப்பாயா?'' என்று மடமடவென்று பொரிந்து தள்ளினார்.

நான் ஊமையாக இருந்தேன். அது, அவருடைய சினத்தை அதிகப்படுத்தியது. மீண்டும்,

''உன் மாமன் இல்லாவிட்டால், என்ன செய்வாய்? ஏன்? பதில் சொல்லக்கூட முடியவில்லையா? அவ்வளவு பெரியவனா நீ?

இச்சுடு சொல்லைக் கேட்டதும் என் பதில் பீறிட்டது.

''பெரியவன் அல்ல. நான் பிறக்காவிட்டால், என்ன ஆகியிருக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்'' என்னும் பதில் கொட்டியது.

''பாரப்பா! இவனுக்கு எவ்வளவு கொழுப்பு? எப்படிப் பதில் சொல்லுகிறான் பார்த்தாயா? இப்பவே இப்படிப் பதில் சொல்பவன்,

வேலை வாங்கிய பிறகு எப்படி இருப்பான்?'' என்று திரு. முத்தய்யாவைப் பார்த்துக் கேட்டார். அவர் வாய் திறக்கவில்லை.

அடுத்த மணித்துளி, திரு அருணாசலம் திசை திரும்பினார்.

''அப்பா! நான் இப்ப மீஞ்சூர் பக்தவத்சலத்தைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறேன். இப் பையனைப் பற்றி அவரைக் கேட்டுப் பார்க்கிறேன். அப்புறம் இவனுக்கு வேலை கொடுக்கலாமா கூடாதா என்பதை முடிவு செய்யலாம்'' என்று மைத்துனர், திரு முத்தய்யாவுக்குச் சொல்லியபடியே, கார் ஏறிப் புறப்பட்டுவிட்டார்.

நாங்கள், விவேகத்தோடு ஊமையாகிவிட்டோம். அதற்குள் காபி வந்தது. அதைக் குடித்து முடித்ததும் தலைவர் முத்தய்யாவிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம்.

திரு கே. வேங்கடசாமி பங்களா 'பார்பிகனு'க்கு அருகில இருந்தது? அவரைக் கண்டு, தம் பரிந்துரையை வற்புறுத்த வேண்டாம், என்று வேண்டலாமென்று எண்ணம் மின்னிற்று.

அவரைவிட, திருவொற்றியூர் சண்முகமே என் மாமாவிற்கு அதிகம் நெருக்கமானவர். மேலும் அவர் ஆட்சிக் குழுவின் துணைத்தலைவர். அவரைப் பார்த்து, அவரது பரிந்துரையை வற்புறுத்தாதபடி பார்த்துக்கொள்வதே முதலில் செய்ய வேண்டியதென்று முடிவு செய்தோம்.

பக்தவத்சலனாரின் பரிந்துரை

பேருந்து நிலையத்திற்கு நடந்து செல்கையில் மாற்று யோசனை பளிச்சிட்டது. மயிலாப்பூருக்குச் சென்று மீஞ்சூர் திரு. பக்தவத்சலம் அவர்களின் உதவியைக் கோருவது நல்லது என்று தோன்றியது. முதலில் அதைச் செய்துவிட்டு மற்றதைக் கவனிப்பது என்று முடிவு செய்தோம்.

மயிலாப்பூருக்குச் சென்றோம். வடக்கு மாட வீதியில் இருந்த திரு பக்தவத்சலம் வீடு தேடிச் சென்றோம். அவ்வீடு எனக்குப் புதியது அல்ல.

நாங்கள் அவ்வீட்டிற்குள் நுழைந்ததும் திரு பக்தவத்சலம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கக் கண்டோம். அவர் எங்களை அமரச் சொன்னார். அமர்ந்ததும் என் மாமா, நாங்கள் எதற்காக வந்தோம் என்பதை விவரமாக எடுத்து உரைத்தார்.

திரு பக்தவத்சலம் ''சூணாம்பேட்டை ஜமீந்தார் இங்கே வந்தார்; அவர் போய்ச் சில நிமிடங்களே ஆயின.

''நீ எப்படிப்பட்ட பையன்'' என்று கேட்டார்.

''நல்ல பையன்'' என்று சொன்னேன்.

''உடனே, காலையில், அவருடைய பங்களாவில் நடந்ததைச் சொன்னார்.

''நல்ல பையனா மரியாதையில்லாமல் பதில் சொன்னான்?'' என்று கேட்டார்.

''உங்களைத் தெரியாதவர்களுக்கு உங்கள் கேள்விப் போக்கு எரிச்சல் ஊட்டும். அவனோ இளைஞன்: பளிச்சென்று பதில் சொல்லியிருக்கலாம். அவனை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். வாரா வாரம் என் மைத்துனர் சீனிவாசனைப் பார்க்க வருவான். அதனால் எனக்கு நன்றாகத் தெரியும். அவனைப் போல அவ்வளவு அடக்கமான, ஒழுங்கான, நாணயமான பையன்கள், பலர் இல்லை என்று சொன்னேன்.''

''அப்படியானால், உடனே போய், ஆட்சிக்குழுத் தலைவரிடம் சொல்லி விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டுப் போனார்.'' என்று திரு பக்தவத்சலம் கூறினார்.

திரு சண்முகமும் திரு. வேங்கடசாமியும் ஆளுக்கொருவரைப் பரிந்துரைத்து இருப்பதை திரு பக்தவத்சலத்திடம் கூறினார், என் மாமா.

''அவர்களை நீங்களே போய்ப் பாருங்கள்'' என்று சொல்லி அனுப்பினார்.

திருவொற்றியூர் சண்முகம்

முதல் பரிந்துரை ஆதரவாக இருப்பதை அறிந்துகொண்டு மகிழ்ச்சியோடு திருவொற்றியூருக்குப் புறப்பட்டுச் சென்றோம். அங்கே சென்றபோது, திரு சண்முகம் வெளியே சென்றிருந்தார். அவர் வரும்வரை காத்திருந்தோம். திரு சண்முகம் வந்ததும், அவரிடம் வந்ததைப் பற்றி என் மாமா பேசினார். எல்லாவற்றையும் திரு சண்முகம் பொறுமையாகக் கேட்டார் இறுதியில்,

''நான் ஒருவருக்குப் பரிந்துரை செய்திருப்பது உண்மை. அவர் எனக்கு நெடுநாளாக வேண்டியவர். இவ்விளைஞர் மனுப் போட்டிருப்பது தெரியும். இவர் இவ்வேலைக்கு வருவார் என்று நாங்கள் நம்பவில்லை. 'ஆனர்ஸ்' பட்டம் பெற்ற மனுதாரர் இவர் ஒருவரே. நம்மவர்க்குள், உயர் பட்டம் பெற்றவரை ஒதுக்கிவிட்டுச் சாதாரணப்பட்டம் பெற்றவரைத் தேர்ந்தெடுப்பது சரியல்ல. எல்லாரிலும் அதிகத் தகுதியுடைய இவருக்கே கொடுக்கும்படி தலைவரிடம் சொல்லிவிடுகிறேன். என் ஆளோ வெறும் பட்டதாரி; எழுத்தர் வேலை கிடைத்தாலும் மோசமில்லை. அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று மிகுந்த அன்புடன் கூறினார்.

விரைந்து தலையிடுமாறு வேண்டிக் கொண்டோம். திரு சண்முகமும் அதற்கு உடன்பட்டார்.

உடனே பகல் உணவுக்கு அழைக்கப்பட்டோம். அவரோடு பகல் உணவு உண்டோம். பிறகு திரு. சண்முகத்தின் காரில் சென்னைக்குப் புறப்பட்டோம். திரு. வேங்கடசாமியையும் பார்த்துப் பேசிவிட்டு, தலைவரைப் பார்க்கலாம் என்று சண்முகம் முடிவு செய்தார்.

அப்படியே கீழ்ப்பாக்கம் 'அப்பா தோட்டத்தில்' திரு கே. வேங்கடசாமியைக் கண்டோம். திரு சண்முகமே அவரிடம் எல்லாவற்றையும் எங்கள் முன் எடுத்துரைத்தார்.

திரு. வேங்கடசாமி தயங்கினார். தம்முடைய பரிந்துரையைப் பெற்றவரும் சாதாரணப் பட்டம் பெற்றவர்தான். சுந்தரவடிவேலுவின் தகுதி அவருக்கு இல்லை; எனினும் முந்தியவர் வேண்டியவர். அவரை விட்டுவிட்டால், நட்புக்குத் தீங்கு வரலாமென்று தயங்கினார்.

திரு சண்முகம் ''நன்றாகத் தேறிய நாட்டுப்புற இளைஞனுக்கு வாய்ப்புத் தராவிட்டால், அத்தகையோர் படிக்க வருவது குறைந்துவிடும். அதற்குக் காரணமாக நாம் இருக்கக்கூடாது'' என்று இதமாகப் பேசினார். கடைசியில் திரு. வேங்கடசாமி தம் ஆளுக்கே கொடுக்கவேண்டுமென்று அடம் பிடிப்பதில்லை என்று ஒப்புக் கொண்டார்.

பின்னர் திரு சண்முகம் எங்களைத் தலைவர் முத்தய்யாவிடம் அழைத்துப் போனார். அவரைக் கண்டதும்,

''இவ்வளவு நன்றாகத் தேர்ச்சி பெற்றவர் இந்தச் சிறிய வேலைக்கு வரமாட்டாரென்று நாம் நினைத்தது தவறாகிவிட்டது. இவரே அதிகத் தகுதியுடையவர். இவருக்கே வேலை கொடுங்கள், என் முந்திய பரிந்துரை கிடக்கட்டும்.

''திரு. வேங்கடசாமி ஒருவருக்குப் பரிந்துரை செய்திருக்கிறாராம். இந்த இளைஞருக்கு வேலை கொடுப்பதாயிருந்தால், அவரும் தம் வேண்டுகோளை வற்புறுத்துவது இல்லை, என்று ஒப்புக் கொண்டார். அவருடைய ஒப்புதலைப் பெற்றுக் கொண்டுதான் இங்கு வந்திருக்கிறேன். இனியும் தயக்கம் வேண்டாம். சுந்தரவடிவேலுவை நியமித்துவிடுங்கள்'' என்றார்.

அவ்வேளை, ஜமீன்தார் அருணாசலம் அப்பக்கம் வந்தார். தாம் திரு பக்தவத்சலம் அவர்களிடம் என்னைப் பற்றிப் பேசியதைக் கூறினார், ''பக்தவத்சலமே 'நல்ல பையன்' என்று சொல்லுகிறார். அதனால் இவனுக்குக் கொடுக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே பங்களாவிற்குள் போய்விட்டார்.

61. உதவிப் பஞ்சாயத்து அலுவலர் ஆனேன்

சண்முகனாரின் பரிந்துரை

திரு சண்முகம் திரும்பத் திரும்ப எனக்காகப்பேசவும் திரு. வேங்கடசாமியோடு பேசிவிட்டு, முடிவு செய்வதாக, திரு முத்தய்யா கூறினார்.

திரு சண்முகம் அங்கிருந்தபடியே திரு. வேங்கடசாமியோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றார். பிந்தியவர் அப்போது பங்களாவில் இல்லையென்று பதில் வந்தது.

அடுத்த நாள் காலை வந்து காண்பதாக முன்னறிவிப்புச் செய்தியைக் கூறினார். மறுநாள் மீண்டும் வந்து பார்க்கும் வரை எவ்வித முடிவுக்கும் வரவேண்டாம் என்ற தலைவரைக் கேட்டுக் கொண்டார். பிறகு அவரவர் வீட்டிற்குச் சென்றோம்.

மறுநாள் திரு சண்முகம் எங்களை அழைத்துக்கொண்டு திரு. வேங்கடசாமி வீட்டிற்குச் சென்றார். நடந்தவற்றை விவரமாக எடுத்துக் கூறினார்.

மூன்றாவது இடத்தை நிறைவு செய்வதில் காலதாமதம் செய்தால், எந்தப் பெரிய இடத்துப் பரிந்துரையாவது வந்து தட்டிக்கொண்டு போய்விடலாம். ஆகவே அதிகத் தகுதியுடைய சுந்தரவடிவேலுவுக்குக் கொடுப்பதானால், நான் குறுக்கே நிற்கவில்லையென்று, தலைவர் முத்தய்யாவுக்குச் சொல்லச் சொன்னார். திரு. வேங்கடசாமி அதற்கு உடனடியாக இசைந்தார்.

எல்லோருமாக அருகில் இருந்த, தலைவர் பங்களாவிற்குச் சென்றோம். திரு. வேங்கடசாமி எங்கள் கோரிக்கையை ஆதரித்துப் பேசினார். அப்புறம், எனக்கு வேலை போட்டுத் தருவதாகத் தலைவர் இசைந்தார்.

ஆணை வந்தது

சில நாள்களில், என்னை உதவிப் பஞ்சாயத்து அலுவலராக நியமித்த ஆணை வந்து சேர்ந்தது.

என் மாமாவிற்குத் தகவல் கொடுத்தேன். அவரும் என் தந்தையும் சென்னைக்கு வந்தார்கள்.

மூவருமாகச் சென்று தலைவர், துணைத்தலைவர், வேங்கடசாமி, பக்தவத்சலம் ஆகியோருக்கு நன்றி செலுத்தினோம்.

பிறகு, சென்னை சைதாப்பேட்டை, பனகல் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்த மாவட்ட ஆட்சிக்குழு அலுவலகத்திற்குச் சென்றோம்.

அங்கு ஆட்சிக்குழுச் செயலர், திரு அரங்கநாதனைக் கண்டு வணக்கம் செலுத்தினோம்.

அவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்; நல்ல நாள் பார்த்து வேலையில் சேர்ந்து கொள்ளும்படி கூறினார்.

எனக்கோ, என் தந்தைக்கோ 'நல்லநாளில்' நம்பிக்கை கிடையாது. ஆனால், அன்றே வேலையில் சேர்வதைத் தவிர்க்க எண்ணினோம். ஏன்?

உதவிப் பஞ்சாயத்து அலுவலருக்கு மேலதிகாரி, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி ஆவார். பிந்தியவரே முந்தியவருக்கு ஆணையிட வேண்டும்.

அப்போது செங்கற்பட்டு மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரியாக இருந்தவர், திரு தனசிங் என்பவர். அவர், இன்டர்மீடியட்டில் என்னுடன் படித்தவர்; என் நண்பருங்கூட; அவர் வெறும் இளங்கலைப் படிப்பில் சேர்ந்ததால், ஓராண்டு முன்னதாகக் கல்லூரிப் படிப்பை முடித்தார்.

திரு தனசிங் பிற்காலத்தில் இராஜாஜியின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த திரு முனுசாமியின் உறவினர். எனக்கு முன்பு மாவட்டப் பஞ்சாயத்து அலுவலராகவே வேலைக்கு வந்தவர்.

அவருக்கு அப்போது மாற்றுதல் ஆணை வந்திருந்தது; இரண்டொரு நாள்களில் புதிய அலுவலர் வந்து சேருவார் என்று கேள்விப்பட்டோம்.

சில நாள்கள் பொறுத்துக்கொண்டால், தன்னோடு படித்தவரின் கீழ் வேலை பார்க்கும் சங்கடம் நீங்கிவிடும், என்று எண்ணி, வேலையில் சேர்வதைத் தள்ளிப்போட முடிவு செய்தோம்.

'இன்றைக்குச் சேர்ந்தாலும் வரிசையில் மூன்றாவது. நான்கு நாள்களுக்குப் பிறகு சேர்ந்தாலும் அதேதான். வடிவேலுவின் மனம் புண்படவேண்டாம். நான்கு நாள்கள் பொறுத்தே சேரட்டும்' என்று, என் அப்பா எனக்கு ஆதரவாக முடிவு செய்தார்.

அம்முடிவோடு, அலுவலகத்தில் வேறு சில மேற்பார்வை யாளர்களைக் காண்பதில் நாட்டம் செலுத்தினோம். அவ்வேளை தூது ஒன்று வந்தது.

அலுவலில் சேர்ந்தேன்

எவர் அனுப்பிய தூது?

என் கல்லூரி நண்பர் திரு தனசிங் அனுப்பிய தூது. ஆம் அப்போதைய செங்கற்பட்டு மாவட்டப் பஞ்சாயத்து அலுவலர் அனுப்பிய தூது.

செய்தி என்ன?

அலுவலகத்தை விட்டுப்போகுமுன், தன்னை வந்து பார்த்து விட்டுப் போகும்படி செய்தி.

அதன்படி, திரு தனசிங்கைப் பார்த்தேன். அவரது அலுவலகம் எங்கே இருந்தது? பனகல் கட்டட வளைவில் இருந்தது; தெற்குப்புறத்தில் சிறிய ஓட்டுக் கட்டடத்தில் இருந்தது.

அங்கு, திரு தனசிங்கைக் கண்டபோது, என்னுடைய அப்பாவும் மாமாவும் உடன் வந்தார்கள். எல்லோரிடமும் தனசிங் இனிமையாகவும் மரியாதையோடும் நடந்து கொண்டார்.

நான் உடனே சேர்ந்துவிட்டால், என் வேலையின் அடிப்படைகளைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறினார். உடனே சேர உடன்பட்டேன். அப்பா இசைந்தார். எனவே, எதிர்பாராத விதத்தில் அன்றே அலுவலை ஏற்றுக் கொண்டேன். என் அலுவல் என்ன தெரியுமா?

என்னுடைய அலுவல்கள்

ஊராட்சி மன்றம் இல்லாத ஊர்களில் ஊராட்சி மன்றங்களை அமைத்தல். அம்மன்றங்களுக்கான தலைவர்கள், துணைத்தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரைப் பஞ்சாயத்துச் சட்டமுறைப்படி தேர்ந்தெடுக்கச் செய்தல்.

ஊராட்சி மன்றங்கள் உள்ள ஊர்களில் அவற்றை ஊக்குவித்தல்; அந்த அந்த ஊர்களில் குடிநீர், சாலைகள், தெருவிளக்குகள் ஆகியவற்றை அமைக்க ஏற்பாடு செய்தல்.

திருவிழாக் காலங்களில் துப்புரவு ஏற்பாட்டினைச் செய்வித்தல், இயங்கும் ஊராட்சி மன்றங்களின் வரவு செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்து அறிக்கை அனுப்புதல்.

இவ் வேலைகளைச் செய்வதற்காக நான் திங்களுக்கு இருபது நாள்கள் சுற்றுப் பயணத்தில் இருக்க வேண்டும். அக்காலக் கணக்குப்படி அய்ந்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஊருக்குச் செல்லும் நாள்களே பயண நாள்களாகக் கருதப்படும். இருபது நாள்கள் பயணத்திற்கு, பயணப்படி எவ்வளவு? திங்களுக்கு முப்பது ரூபாய்கள்.

அன்றைய நிலையில் அது குறைவல்ல. பேருந்துக் கட்டணம் சராசரி முக்கால் ரூபாய்க்கு மேற்படாது. சாப்பாட்டுச் செலவும் மிகச் சொற்பம். ஏன்? எங்கோ ஓரிடத்தில்தான் ஓட்டல் இருக்கும். காசு கொடுத்துச் சாப்பிடுவது அங்கேதான்.

மற்ற ஊர்களில் விரும்பி அளிக்கும் தண்டச்சோறு கிடைத்தால் உண்டு; இல்லையேல் பட்டினி.

உதவிப் பஞ்சாயத்து அலுவலருக்குத் தனியாக மேசை நாற்காலி உண்டு; பதிவேடுகள் உண்டு; அஞ்சல் தலைகள் போதிய அளவு வழங்கப்படும்.

கடிதப் போக்குவரத்தைப் பார்த்துப் பதிய எழுத்தர் உண்டா? இல்லை. ஊழியர் உண்டா? இல்லை. உதவிப் பஞ்சாயத்து அலுவலரே எல்லாம்.

வந்த கடிதங்களை உடைத்துப் படித்துப் பார்க்கும் அவரே அவற்றைப் பதிவு ஏட்டில் குறித்துக்கொள்ள வேண்டும். அதற்குரிய வரிசை எண்ணைப் போடவேண்டும். அதற்குரிய பதிலை எழுதுவது எவர்? உதவி அலுவலரே.

மாவட்ட அலுவலகத்தில் உள்ள தலைமை எழுத்தரைக் கலந்து ஆலோசித்து, பதில் எழுதும் பணியும் அதிகாரிக்கே. அதன் படிவத்தைக் கோத்து வைப்பதும் அவர் பொறுப்பு. பதில்களை அனுப்பும் அஞ்சல் செலவுக்கணக்குகளை எழுதி வைக்கும் பொறுப்பும் அவருடையதே.

அஞ்சலகத்திற்கு உறைகளைக் கொண்டு சேர்க்கும் வேலை மட்டும் அவரிடம் ஒப்படைக்கவில்லை. பின் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

கடைநிலை ஊழியரிடம்; ஆம். உதவிப் பஞ்சாயத்து அலுவலருக்குக் கடைநிலை ஊழியர் ஒருவர் மட்டும் உண்டு.

நானே அதிகாரியாக, நானே எழுத்தராக, நானே கணக்கராக முத்தொழில் புரிபவராக இயங்க வேண்டியிருந்ததைக் கண்டு மலைக்கவில்லை; வியந்தேன்!

திரு தனசிங், அலுவலகத் தலைமை எழுத்தர் திரு இராசகோபாலை அழைத்தார். எனக்கு அறிமுகஞ் செய்துவைத்தார்.

''நெ.து.சு. என் கல்லூரி நண்பர். அவரைப் பார்த்துக் கொள்ளுங்கள்; அவருக்கு அப்போதைக்கப்போது உதவி செய்யுங்கள்'' என்று ஆணையிட்டார்.

தவறான பாதை

பிறகு, எனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்கு, திருக்கடையூர் இராசகோபால் என்னை அழைத்துக்கொண்டு போனார். அங்கே அமர்ந்ததும் அவர்,

''அய்யா! நீங்கள் ஆனர்ஸ் பட்டம் பெற்றவர்கள். நானோ இண்டர்மீடியட்டுக்குமேல் போகாதவன். உங்களுக்கு ஆலோசனை கூறச் கூச்சமாக இருக்கிறது. இருப்பினும் அனுபவத்தை ஒட்டி, மேல் அதிகாரியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, யோசனை சொல்கிறேன்.

''ஊராட்சி முறை புதிது. பல தலைவர்கள், பெரிய மனிதர்களே ஒழிய, ஆட்சிப்பழக்கம் இல்லாதவர்கள். அவர்களிடம் இருந்து வரும் கடிதங்கள் எப்படியெல்லாமோ இருக்கும்; பல, முறையாக, திட்டவட்டமாக இரா.

''அக்கடிதங்களில் உள்ள ஆலோசனைகள், கோரிக்கைகள், எந்தெந்தச் சட்டப்பிரிவில், விதிமுறையில் வரும். அதற்கு ஆணையிடும் அதிகாரம் எவருடையது?

''இவற்றையெல்லாம் ஆய்ந்து, பதில் எழுத, முனையாதீர்கள். அப்படிச் செய்வதானால், காலதாமதம் நேரிடும்; பதில் போடச் சில நாள்கள் ஆகும். ஊரார் உங்களை மெத்தாதி, என்று இகழ்வாக நினைத்து விடுவார்கள்.

''மாறாக, கடிதம் வந்ததும் படிக்கக்கூட வேண்டாம். முதலில் அதைத் திருப்புங்கள். பின்புறத்தில் 'திருப்பி அனுப்பப்பட்டது' என்று எழுதுங்கள். அப்புறம் அதற்கு ஒரு காரணம் கண்டுபிடிப்பதற்காக, முன்பக்கத்தைப் பாருங்கள். அதிலும் அதிகநேரம் செலவழிக்காதீர்கள். சில மணித்துளிகளில் ஒரு காரணமும் தோன்றாவிட்டால், 'இதில் இடப்பட்டுள்ள கை எழுத்து, ஊராட்சி மன்றத் தலைவருடையதா?' என்றாகிலும் கேட்டு உடனே கடிதங்களைத் திருப்பிவிடுங்கள்.

''பெரும்பாலான ஊர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள்தான் தபால் கொடுப்பார்கள். நீங்கள், கடிதம் வந்த நாளே, பதில் எழுதியதைப் பார்த்து ஊரார் வியப்பில் மூழ்குவார்கள். நீங்கள் 'பச்சை மிளகாய்' என்று பெயர் எடுக்கலாம்' என்று திரு இராசகோபால் பெரும்பாலான அரசு அலுவலர்கள் பின்பற்றி வரும் வழியை எனக்குக் காட்டினார். நான் அதைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் பின்பற்றவில்லை.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டத்தைப் பஞ்சாயத்துத் தணிக்கைக்கு மூன்றாகப் பிரித்தார்கள், மதுராந்தகமும், செங்கற்பட்டு வட்டமும், காஞ்சிபுரம் வட்டமும் சேர்ந்தது ஒரு பகுதி. அதன் தலைநகரம் மதுராந்தகம் ஆகும். திருவள்ளூரும் பொன்னேரியும் சேர்ந்தது மற்றோர் பகுதி. அதன் தலைநகரம் திருவள்ளூர்.

பாக்கியுள்ள சைதாப்பேட்டை வட்டமும் திருப்பெரும்புதூர் வட்டமும் இணைந்து, மூன்றாம் பகுதி. அதன் தலைநகரம் சைதாப்பேட்டை.

மதுராந்தகமும் திருவள்ளூரும் வசதியான பகுதி. சைதாப்பேட்டை சற்றுத் தொல்லையானது. இதை எனக்குக் கொடுத்தார்கள். ஒரு வகையில் அதை நான் விரும்பினேன்.

சென்னையில் குடியிருந்தபடியே வேலை பார்க்கலாம். அப்போது சைதாப்பேட்டை சென்னையோடு இணைந்து இருக்கவில்லை; தனி நகராட்சியாகயிருந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராக விளங்கியது.

நான், சென்னையில் என் தம்பியின் அறையில் தங்கியபடியே வேலையைக் கவனித்தேன். தொடக்கத்தில் சில நாள்கள் சைதாப்பேட்டை அலுவலகம் சென்று வருவதோடு முடிந்தது. பிறகு?

62. பண்புள்ள ஊராட்சித் தலைவர்கள்

முதற்பயணம்

பயணம் செய்யத் தொடங்கினேன். முதற் பயணம் எப்பக்கம்? கோவூர், குன்றத்தூர் பக்கம். இரண்டு நாள் பயணம் புறப்பட்டேன்.

''குன்றத்தூர் ஊராட்சி, பேரூராட்சி. அந்த அலுவலகத்தில் இரவு தங்கலாம். ஆகவே இரண்டு நாள் பயணம் போய் வாருங்கள்'' என்று தலைமை எழுத்தர், திரு. இராசகோபால் கூறினார். அப்படியே புறப்பட்டேன்.

'பிராட்வே' பேருந்து நிலையத்தில் குன்றத்தூர் செல்லும் பேருந்தில் ஏறினேன். கோவூருக்குப் பயணச்சீட்டு வாங்கினேன். அப்போது தனியார் பேருந்துகளே ஓடின.

அக்காலத்தில் 'சூட்' அணிந்தவர்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு. எனக்குக் காரோட்டியின் வரிசையில் இடம்கொடுத்தார்கள்.

இவ்வரிசையில் காலியாக இருந்த மற்றோர் இடத்தில் எவரையும் உட்கார விடவில்லை. அது அதிகாரிக்குக் கொடுக்கும் மரியாதை என்று எண்ணினேன்.

உரிய நேரத்தில் வண்டி புறப்பட்டது. வழியில் பரங்கிமலை காவல் நிலையத்தண்டை நின்றது. அக்காலத்தில், பேருந்துகளை நடத்துவோர் வழியில் உள்ள காவல் நிலையங்களில் கையெழுத்திட வேண்டும். அதற்காக நடத்துவோர், உள்ளே சென்றார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அரைமணியாகியும் அவர் திரும்பி வரவில்லை. பேருந்து ஓட்டியிடம் நான் சண்டையிட்டேன்.

''நான் பொது அதிகாரி. என் வேலையாகப் போகவில்லை; பொது வேலையாகப் போகிறேன். இனியும் தாமதம் செய்தால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் செய்யப் போகிறேன்'' என்று கடுமையாக மிரட்டினேன்.

என்ன ஆயிற்று?

நான் கண்டனம் தெரிவித்தது வீண் போகவில்லை. பயணிகளில் ஒருவர் உள்ளே சென்றார். நடத்துபவரையும் மற்றொருவரையும் அழைத்துக் கொண்டு வந்தார்.

அந்த மற்றொருவர் கண்கள் கனல் கக்கின. அவர் என் பக்கத்தில் இருந்த இடத்தில் அமர்ந்தார்.

பேருந்து ஓடிற்று. அவர் சினம் தணியவேயில்லை. போரூரை அடைந்ததும் ஓர் வீட்டண்டை நின்றது.

அவ்வீட்டிலிருந்து ஓர் அம்மையார், வண்டியண்டை வந்தார். முன் வரிசையில் இடம் இல்லாததைக் கண்டு மிகுந்த ஏமாற்றம் அடைந்தார்.

இதற்குள் அடுத்த வரிசையில் இருந்த ஒருவர் எழுந்து இடம் கொடுத்தார்.

அம்மையாரை ஏற்றிக்கொண்டு வண்டி புறப்பட்டது. சாலை, மேடு பள்ளம் நிறைந்திருந்தது. அச்சாலையில் பயணம் செய்தால், குடல் வெளியே வந்துவிடும்போல் குலுக்கிற்று.

பதினைந்து இருபது மணித்துளிகள் எப்படியோ சென்றன. பேருந்து நின்றது, நடத்துநர் இறங்கி, என்னிடம் வந்தார்.

''அய்யா! இதுதான் கோவூர்; இதோ நேரே இருப்பது சன்னதித் தெரு'' என்று சொன்னார். நான் இறங்கிச் சென்றேன்.

அப்போது, அடுத்து அமர்ந்திருப்பவரின் முகத்தைப் பார்த்தேன்; அப்போதும் அவர் முகம் எள்ளும் கொள்ளும் பொரியும்படி இருந்தது.

'முதல் பயணமே, வம்போடு தொடங்குகிறதே!' என்னும் குறையோடு சன்னதித் தெருவை நோக்கி நடந்தேன். வழியில் தென்பட்டவரை, ஊராட்சி மன்றத் தலைவர் வீடெங்கே என்று கேட்டேன்.

கோவூர் ஊராட்சி மன்றத் தலைவர்

அவர் காட்டிய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே, திண்ணையின்மேல் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் என்னைக் கண்டதும் எழுந்து நின்று பணிவுடன் கும்பிட்டார்.

''என் பெயர், பள்ளிகொண்டான் பிள்ளை'' என்று கூறி, என்னைத் திண்ணையில் அமரச் சொன்னார்.

''நான், உதவிப் பஞ்சாயத்து அதிகாரி'' என்று என்னை நானே அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

சில மணித்துளிகளில் இளநீர் வந்தது; குடித்து, தெம்பு பெற்றேன்.

ஊராட்சி மன்றத்தின் கூட்டக் குறிப்புகள், வரவு செலவுக் கணக்கு, அஞ்சல்களின் கோப்பு, அஞ்சல் சேமிப்புக் கணக்குப் புத்தகம், ஆகியவற்றைக் கொண்டுவந்து வைத்தார்.

அக்காலத்தில் பல ஊராட்சி மன்றங்களுக்கு வரவு குறைவு. நிலவரியோடு வாங்கும் 'செஸ்'ஸை ஆண்டிற்கு ஒரு அல்லது இருமுறை வட்ட ஆட்சி அலுவலகத்தில் இருந்து அனுப்பிவைப்பது உண்டு.

பொதுக்குளம் அல்லது ஏரியில் மீன் பிடிக்கக் குத்தகை விடுவதுண்டு. அப்பணம் ஊராட்சிமன்றத்திற்கு வந்து சேரும். எப்போதோ ஒருவேளை புறம்போக்கு நிலங்களில் பட்டுப்போன

மரத்தையோ, மரங்களையோ ஏலம் விட்டு, அப்பணத்தையும் ஊராட்சிமன்ற நிதியில் சேர்ப்பதுண்டு.

பெரும்பாலான ஊர்களில் 'செஸ்' பணம் குறைவாகவே யிருக்கும். எங்கோ ஓர் ஊருக்குத்தான் ஆண்டிற்கு நூறு ரூபாய்க்குமேல் 'செஸ்' தொகை வரும். இதைவிட மீன் பிடிக்கும் குத்தகைப் பணமே பல ஊர்களில் அதிகமாக இருக்கும். இவற்றைக் கொண்டு, ஊராட்சி மன்றங்கள் தெருக்களை மேடு பள்ளம் இல்லாமல் பராமரிக்க வேண்டும்; தெருவிளக்குப் போட வேண்டும்; குடிநீர் வசதி செய்து தரவேண்டும்.

திருப்பெரும்புதூர் வட்டத்தில், பல ஊர்களில், பொதுக்குளத்தில் இருந்துதான் குடிநீர் கொண்டுவரவேண்டும்.

அக்குளத்திற்குக் காவலர் நியமிப்பது முன்னுரிமை பெறும். திங்களுக்கு ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை சம்பளம். பல ஊராட்சி மன்றங்களின் அக்கால நிதி நிலைமை அதற்குமேல் எவ்விதப் பொதுப்பணியும் செய்வதற்கு இடங்கொடுக்காது.

கோவூர் ஊராட்சி மன்றம், சிறிது தாராள வருவாய் உடையது. எனவே, தெருக்களை அப்போதைக்கு அப்போது செப்பம் இடுவது உண்டு.

தெரு விளக்குகள் போட்டிருந்தார்கள். அக்காலத்தில் சிற்றூர்களுக்கு மின்னொளி எட்டவில்லை.

கற்கம்பங்களையோ, தண்டவாளக் கம்பங்களையோ நட்டு அவற்றின் உச்சியின் மண்ணெண்ணெய்க் கூண்டுவிளக்குகளைப் பொருத்தி வைப்பார்கள்.

நாள்தோறும் காலையில் அவற்றைத் துடைக்கவும் மாலையில் விளக்கேற்றவும் பகுதிநேர ஊழியர்களை வேலைக்கு வைப்பதுண்டு.

ஊராட்சி மன்ற நிதியை அஞ்சல் சேமிப்பு வங்கியில் போட்டு வைத்து, தேவைப்படும்போது மட்டும் வாங்கிக் கொள்ள வேண்டும்.

கோவூர் ஊராட்சிமன்ற நடவடிக்கைகள் மனநிறைவைக் கொடுத்தன. அதன் கணக்கையும் கூட்டக் குறிப்புகளையும் தணிக்கை செய்துவிட்டு, மாலைப்பொழுது அருகில் உள்ள குன்றத்தூர் போய்ச் சேர்ந்தேன்.

பல ஊர்களில் இருந்ததைப் போல், கோவூரில் ஊராட்சி அலுவலகம், தலைவரின் வீட்டிலேயே இருந்தது.

குன்றத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர்

குன்றத்தூரிலோ அதற்கென ஒரு கட்டடம் இருந்தது. அங்குச் சென்று, சில பதிவேடுகளைப் பார்த்தேன்.

அந்த அலுவலகத்திற்கு எழுத்தர் ஒருவர் இருந்தார். அவர் மாலைப் பொழுது உலாவிவர, என்னை ஊருக்கு வெளியே சிறுகளத்தூர் பக்கம் அழைத்துச் சென்றார்.

இருட்டும் வேளை, குன்றத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு தெய்வசிகாமணி (முதலியார்) வந்தார். அவர் வயதில் மூத்தவர்; செல்வந்தர். அவர் என்னோடு சிறிது நேரம் உரையாடினார். பிறகு வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டார். அப்போது,

''இரவு உங்களுக்குத் துணையாக எழுத்தர் அலுவலகத்திலேயே தங்குவார். நான் காலையில் வருகிறேன்.

''இரவு உணவுக்கு மணஞ்சேரி முதலியார் வீட்டில் ஏற்பாடு செய்துள்ளேன். அவர் பரம்பரையாகப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்; வழிவழி சைவர். தாங்களும் சைவர் என்று கேள்விப்பட்டேன். அதனால், அவர் வீட்டில் ஏற்பாடு செய்து உள்ளேன். கூச்சப்பட வேண்டாம். எழுத்தர் உங்களை அங்கு அழைத்துப் போவார்'' என்று தெய்வசிகாமணி கூறினார்.

''நான் உணவைப் பொறுத்த மட்டிலுமே மரக்கறி என்று கட்டுப்பாடு வைத்திருக்கிறேன். ஆனால் எவர் வீட்டில் மரக்கறி உணவு கிடைத்தாலும் உண்பேன். தங்கள் வீட்டிலேயே ஏற்பாடு செய்திருக்கலாம்'' என்றேன்.

''அது எப்படிங்க!அசைவர்களாகிய எங்கள் வீட்டில் நீங்கள் சாப்பிடுவது, நாட்டுப்புறங்களுக்கு ஒத்துவராதுங்க. நாலு பேரையும் மதித்து நடப்பதே நல்லது'' இப்படிச் சொல்லிவிட்டு, விடைபெற்றுக் கொண்டார்.

அறுபது வயது மதிக்கத்தக்க அப்பெரியவரிடம் வாதாடுவது சரியல்ல, என்று சும்மா இருந்தேன்.

எதிர்பாராத சந்திப்பு

இரவு எட்டு மணிக்கு, எழுத்தர் என்னை அழைத்துக்கொண்டு மணஞ்சேரி முதலியார் வீட்டிற்குப் போனார்.

வீடு பெரியது; திண்ணையின்மேல் அய்ம்பது வயதைத் தாண்டியவர்போல் தோற்றமளித்த, திரு. முத்துக்குமாரசாமி (முதலியார்) உட்கார்ந்திருந்தார். அவர் கனிவோடு என்னை வரவேற்றார். என்னைப் பற்றிக் கேட்டார். கலகலப்பாக, அமுத்தல் இன்றிக் கேட்டுக் கொண்டே போனார்.

குடும்பத்தில் அவர் மூத்தவர். திரு. கந்தசாமி, திரு. சிவபாதம் என்னும் இரு தம்பிகள் அவருக்கு உண்டு.

அவர்களில் கந்தசாமி மணஞ்சேரியில் தம்மோடு இருக்கிறார். சிவபாதம் சைதாப்பேட்டையிலிருக்கிறார் என்று தம் குடும்பத்தைப் பற்றியும் கூறினார்.

அவ்வேளை, நடையில் இருந்து ஓர் அம்மையின் குரல் கேட்டது. 'சாப்பிட வாங்க' என்று அவர் அழைத்தார். பெரியவர், அந்த அம்மாளை அழைத்தார். தம் மகள் என்று அறிமுகப்படுத்தினார். அந்த அம்மாள் வெளியே வந்து 'வாருங்கள்' என்றார்.

அந்த அம்மாளைப் பார்த்தேன்; திடுக்கிட்டேன். ஏன்? அன்று காலை நான் பயணஞ்செய்த பேருந்தில், போரூரில் ஏறியவர் அவரே.

கலக்கத்தோடு, ''காலையில் நான் வந்த வண்டியில்தானே வந்தீர்கள்'' என்று கேட்டேன்.

''ஆம்'' என்றார் அந்த அம்மாள்.

திரு. முத்துகுமாரசாமி, ''போரூர் பத்ராசல முதலியார் வீட்டண்டைதான் அவர்கள் பேருந்தில் ஏறினார்கள்'' என்று சொல்லிக்கொண்டே, உணவு அருந்தப் போகச் சொன்னார். அவர் பத்தியச் சாப்பாட்டில் இருந்தாராம். ஆகவே என்னோடு சாப்பாட்டில் சேரவில்லை.

அவர் வீட்டுக் கூடத்தில் உணவு உண்ணும்போது, ஒருவர், உள்ளே நுழைந்தார். நுழையும்போதே, ''வாருங்கள், நீங்கள் வருவதற்கு முன்னரே, வந்துவிடலாமென்று பூவிருந்தவல்லிவரை சென்றேன். போன இடத்தில் சற்றுத் தாமதமாகிவிட்டது. அண்ணாராவது இருந்து வரவேற்க முடிந்ததே. நீங்கள் சாப்பிடுங்கள். இரண்டு நிமிடங்களில் நானும் வந்துவிடுகிறேன்'' என்று மொழிந்தார்.

எனக்கோ அதிர்ச்சி! திகைப்பு! ஏன்? காலையில் கோபக்கனல் வீச, என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரையே அப்போது கண்டேன்.

அவர் வீட்டிற்கு உணவிற்கு வர நேர்ந்ததே என்ற அதிர்ச்சி! இவ்வளவு விரைவில் அவர் வெறுப்பை விட்டுவிட்டு, மிகுந்த அன்போடு பழகுகிறாரே, என்ற திகைப்பு.

உணவு முடிந்ததும் திரு கந்தசாமி என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

''இன்று காலை, நான் பரங்கிமலை காவல் நிலைய ஆய்வாளரோடு பொழுது போகாமல் பேசிக் கொண்டு இருந்தேன். அப்போது யாரோ ஒரு பயணி நெடுநேரம் காக்க வைப்பதைப் பற்றி வெகுளியோடு பேசுவதாகச் சொன்னார். அப்படி யொருவரை இன்றுதான் காண நேர்ந்தது. உங்களுக்காக நான் விரைந்து வர வேண்டியிருந்தது. அது என் பெருமைக்கு இழுக்கு என்று வெகுண்டேன். நீங்கள் யார் என்பது

எவருக்கும் தெரியவில்லை. யார் என்று தெரிந்து கொள்ளாமல், மோத வேண்டாமென்று இருந்துவிட்டேன்.

''இன்று மாலை உங்களைப் பற்றித் தெரிந்துகொண்டேன். பஞ்சாயத்துத் தலைவர் நம் குடும்ப நண்பர். அவர் வழியாக, நீங்கள் நெய்யாடுபாக்கம் சுந்தரசேகரரின் 'மருமகன்' என்று தெரிந்து கொண்டேன். சினம் பறந்துவிட்டது'' என்று சொல்லிச் சிரித்தார்.

மணஞ்சேரி கந்தசாமியும் நானும் காலஞ்செல்லச் செல்ல, நெருங்கிய நண்பர்களாகி விட்டோம். திரு. டி.ஜி. சீனிவாசனை முதல் சந்திப்பில் பொருட்படுத்தாது இருந்தேன். பின்னர் நாங்கள் இருவரும் மிக வேண்டியவர்களாகி விட்டோம். அதைப் போன்றே மணஞ்சேரியார் நட்பும் வளர்ந்தது.

அரை மணிபோல், அவர்களோடு பேசியிருந்து விட்டு, அலுவலகத்திற்குத் திரும்பினேன். காலையில் அதே வீட்டில் நல்ல சிற்றுண்டி உண்டேன். அடுத்து, நான் போக வேண்டிய ஊர், இரண்டாங் கட்டளை என்பதாகும்.

இரண்டாங் கட்டளை ஊராட்சி மன்றத் தலைவர்

அவ்வூருக்குச் செல்ல, இரட்டை மாட்டு வண்டி கட்டியனுப்ப, திரு. முத்துக்குமாரசாமி முன்வந்தார் அந்த நாட்டுப்புறச் சாலையில் வண்டியில் செல்வதைவிட, நடந்து செல்வதையே விரும்பினேன். எனவே அவ்வூருக்கு நடந்து சென்றேன்.

இரண்டாங் கட்டளை ஊர்க்கோடியிலேயே, அவ்வூர் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டை அடையாளங் காட்டினார்கள். அவ்வீட்டிற்குச் சென்றேன். வீட்டுக்குரியவர் ஒரு மிராசுதார்; உயர்நிலைப் பள்ளிவரை படித்தவர். அவர் வீட்டில் இருந்தார்.

அவரைக் கண்டதும் என்னை நானே அறிமுகஞ் செய்து கொண்டேன். ஊராட்சித் தலைவராகிய அவர், என்னை உள்ளே அழைத்துச் சென்றார்; நாற்காலியில் அமரச் செய்தார்.

ஊராட்சி மன்றக் கணக்குகளையும் பிற பதிவேடுகளையும் என் முன் வைத்தார். அவற்றைத் தணிக்கை செய்யத் தொடங்கினேன். அவ்வேளை,

''நீங்கள் எங்கள் வீட்டில் சாப்பிடலாமா? நாங்கள் ரெட்டியார் இனம்'' என்றார், ஊராட்சித் தலைவர்.

''நான் யார் வீட்டிலும் உண்பேன். சாதிவேற்றுமை எனக்கு இல்லை'' என்றேன்.

''அப்படியானால், பகல் உணவை என் வீட்டில் முடித்துவிட்டு, வசதிப்படி அடுத்த ஊருக்குப் போகலாம்'' என்று சொல்லிவிட்டு,

தொழுவத்தின் பக்கம் சென்றார். நொடியில் இளநீர் வந்தது. அதைக் குடித்துக் களைப்பாறினேன்.

கணக்குத் தணிக்கை முடியவும், பகல் உணவு வேளை வரவும், சரியாக இருந்தது. இருவரும் கை அலம்பிக் கொண்டு, கூடத்தில் அமர்ந்தோம்.

சாப்பாட்டில் சங்கடம்

தலை வாழையிலை போடப்பட்டிருந்தது. அதில் அப்பளம், வாழைக்காய்ப் பொரியல், ஊறுகாய், பருப்பு ஆகியவை பரிமாறப் பட்டிருந்தன.

நாங்கள் உட்கார்ந்ததும் தும்பைப்பூ போன்ற சோறு பரிமாறப்பட்டது. வீட்டு நெய் ஊற்றப்பட்டது. பருப்புச் சோறு முடியும் வேளை வேலைக்காரப் பையன் குழம்பைக் கொண்டு வந்தான். அதில் வெள்ளைத் தலைகள் கண்ணில் பட்டன. ''என்ன குழம்பு?'' என்று வினவினேன்.

''முட்டைக் குழம்பு'' என்ற பதில் கிடைத்தது ''நான் மரக்கறி மட்டுமே உண்பவன், முட்டை சாப்பிடுவதில்லை'' என்று சொன்னதைக் கேட்டு, ரெட்டியார் முகம் வெளுத்துப் போயிற்று.

''எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன். எங்கள் வீட்டில் சாப்பிடு வேனென்றபோது, புலால் உண்பீர்களா வென்று நான் விசாரிக்கத் தவறிவிட்டேன். தயவுசெய்து மன்னியுங்கள்'' என்று அழமாட்டாத குறைாக வேண்டினார்.

''பரவாயில்லை. முட்டைக்கறி முதலியவற்றைப் பார்த்தால் எனக்கு குமட்டாது. அந்த அளவுக்கு மாணவர் விடுதியில் பக்குவம் பெற்று விட்டேன். எனக்குச் சாறு வரட்டும்; நீங்கள் முட்டைக் குழம்பு சாப்பிடுங்கள்'' என்று தேற்றி, வேண்டினேன்.

அவர் ஒப்பவில்லை. எனக்காக அவரும் சாறும் சோறும் உண்டார்; பிறகு, நல்ல, வீட்டு மோரும் சோறும் உண்டோம். வாழைப்பழமும் கிடைத்தது. அதையும் உண்டு மகிழ்ந்தேன். வெயில் தாழ அடுத்த ஊருக்குப் பயணமானேன்.

63. புயலுக்கு முன் அமைதி

முகலிவாக்கம் ஊராட்சித் தலைவர்

இரண்டாங்கட்டளையிலிருந்து புறப்பட்டு முகலிவாக்கம் என்னும் ஊருக்குப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கு ஊராட்சித் தலைவர் வீட்டை எளிதில் கண்டுகொண்டேன். அவரும் திண்ணைமேல் உட்கார்ந்திருந்தார்.

நான் யாரென்று அறிவித்ததும், அன்போடும் மதிப்போடும் வரவேற்றார். காப்பிக்கு ஏற்பாடு செய்தார். அது வருவதற்குள் கூட்டக் குறிப்பு நூலும் கணக்கும் கொண்டு வந்து வைத்தார்.

ஆண்டுக்கு ஒரு கூட்டமே நடந்தது. ஆண்டின் இறுதியில், அவ்வாண்டு வரவு செலவுக் கணக்கை மன்றக் கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்று, மாவட்டப் பஞ்சாயத்து அலுவலருக்கு அனுப்பி வைத்தார்.

என் தணிக்கைக்கு உட்பட்ட காலத்தில் நான்கு முறை செஸ் பணம் வந்தது. ஒவ்வொரு முறையும் சொற்பத் தொகையே, அவற்றின் மொத்தம் எந்தப் பயனுள்ள வேலைக்கும் போதாது. மொத்தப் பணம் அஞ்சல் சேமிப்பு வங்கியில் பாதுகாப்பாக இருந்தது.

இரு கூட்டங்கள் நடந்தன. இரண்டு ஆண்டுக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இரண்டு அஞ்சல்கள் அனுப்பப்பட்டன. அஞ்சல் செலவு இரண்டு போக, ஒரே ஒரு செலவினம் எழுதப்பட்டிருந்தது. அது என்ன?

ஊராட்சிமன்றத்தின் பயனுக்காக, ஓர் ஊற்றுப்பேனா வாங்கிய செலவு ரூபாய் மூன்று. இச் செலவு ஒரு சங்கடமான நிலையை உருவாக்கியது.

ஊராட்சி மன்றங்கள் உருவான சூழல்

ஊராட்சி மன்றங்கள் தொடங்கிய காலத்திலும், அதற்குப் பிறகு பத்துப் பதினைந்து ஆண்டுகள் வரையிலும், மன்றத் தலைவர் பதவிக்கோ, உறுப்பினர் பதவிக்கோ போட்டிபோட நாட்டுப்புற மக்கள் உற்சாகத்துடன் முன் வருவது கிடையாது.

தொடக்க காலத்தில் ஊராட்சி மன்றங்களை அமைக்க, கௌரவ அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அமைப்பாளர், தமது எல்லைக்குட்பட்ட சிற்றூருக்குச் சென்று, அங்கே பத்துப் பேரைக் கூட்டி, ஊராட்சி மன்றம் (பஞ்சாயத்து) அமைப்பார்.

பல ஊர்களில், அந்தப் பத்துப் பேரும் ஒரே நேரம் கூடுவதும் அரிது.

தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருக்கும்படி சிலரைக் கட்டாயப்படுத்தி, அவர்கள் பெயர்களை, கூட்டக் குறிப்பில் எழுதி, அதைப் பல வீடுகளுக்கு அனுப்பிக் கையெழுத்துப் பெறுவதும் உண்டு.

வரவு செலவுக் கணக்கு நூல், கூட்டக் குறிப்பு நூல் முதலியவற்றை அமைப்பாளர்களே முன் பணம் போட்டு வாங்கிக் கொண்டுபோய், பிடித்துவைக்கப்பட்ட தலைவரிடம் ஒப்படைப்பார்கள். ஊராட்சி மன்றத்தை அமைத்துப் பல திங்களான பிறகே, உரிய செஸ் பணம் வந்து சேரும்.

பல வேளை 'தலைவர்' தம் பணத்தை முன்பணமாக வைத்து, பதிவேடுகளின் விலையைச் செலவில் எழுதுவார்.

அக்காலத்தில், செலவினங்கள் பற்றித் திட்டவட்டமான விதிமுறைகள் இல்லை.

ஊராட்சி மன்றங்கள் முளைத்தால் போதும்; அவை ஆண்டுக்கு இரண்டொரு பொது வேலைகளையாவது செய்தால் போதும் என்னும் கண்ணோட்டத்தோடு சென்னை மாநில அரசின் உள்ளாட்சி மன்றத்துறை இயங்கியது.

பின்னர், மெல்ல மெல்ல, 'இச்செலவு செல்லும்; அச்செலவு செல்லாது' என்பதாக விதிமுறைகள் நுழைந்தன.

அவற்றின் தொகுப்புகள், தணிக்கையாளர்களாகிய எங்களிடம் கொடுக்கப்பட்டன. இவ்விதிகளுக்கு முன் நான் இட்ட செல்லுபடி நியாயமல்ல.

அதிகாரிகளில் சிறியவர்களாகிய நாங்கள் அதைச் சுட்டிக் காட்ட முடியுமா? பிற்காலத்தில் பல ஆட்சியாளர்கள் எவரோ போட்ட தேவையற்ற சட்டதிட்டங்களைக் காப்பாற்றுவதில் பிடிவாதம் காட்டிக் கெட்ட பெயர் எடுப்பதைப் பார்த்தேன்.

பேனா எழுப்பிய பிரச்சினை

முகலிவாக்கம் ஊராட்சியில் ஊற்றுப்பேனா வாங்கியபோது, இதுபற்றி எந்தவிதமாகவும் ஆணையில்லை. ஊற்றுப்பேனா வாங்க முடிவு செய்த கூட்டத்தில், அப்பகுதி அமைப்பாளர், திருமுடிவாக்கம் திரு சுந்தரராம அய்யர் கலந்து கொண்டிருக்கிறார்; குறிப்பின் கீழே கையெழுத்திட்டிருக்கிறார்.

அவர் எத்தகையவர் என்பது அப்போது எனக்குத் தெரியாது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட காலத்தில், அன்றைக்கிருந்த அல்லது இல்லாத விதிகளையொட்டி ஓர் அதிகாரி முடிவு எடுத்தால், அதைப் பின்னால் வருவோர் மாறிய சூழ்நிலையில், மாறிய கருத்தோட்டத்தால், கிளறுவதே சரியல்ல.

இப்படி எனக்குத் தோன்றியது. அதே நேரத்தில் மற்றோர் அய்யப்பாடு.

இப்போது என்னிடம் கொடுத்துள்ள விதிகளின்படி, ஊற்றுப்பேனா வாங்கும் செலவு ஏற்றுக் கொள்ளப்படாது. அதை என் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டாவிட்டால், நாளை மற்றொருவர் கிளறினால், நான் குற்றச் சாட்டுக்கும் பழிக்கும் ஆளாக நேரிடும்.

நிறையச் செலவுக் கணக்கு இருந்தால், அது கவனத்தில் வராமல் தவறிவிட்டது என்று பின்னர் விளக்கங் கூறலாம். அதற்கும் இடமில்லையே; எழுதியிருப்பதோ மூன்று செலவினங்கள் மட்டுமே. என்ன செய்வதென்று திகைத்தேன்.

தணிக்கைக் குறிப்பில், இதைச் சுட்டிக்காட்டி விடுவோம்; அதனுடன் அனுப்பும் கடிதத்தில், அப்போது இச்செலவு தடை செய்யப்படாததால், மேற்கொண்டு நடவடிக்கை வேண்டாம் என்று எழுதி அனுப்புவோம்.

இத்தகைய முடிவுக்கு வந்தேன். இதை மெதுவாக, ஊராட்சித் தலைவரிடம் தெரிவித்தேன்.

பண்புமிக்க தலைவர்

அவர் புன்னகை பூத்தார். ''அப்போதே நான் மறுத்தேன், அமைப்பாளர்தான், வற்புறுத்தினார். அவருக்கு ஒரு சொட்டு வரக்கூடாதுங்க. சுந்தரராம அய்யர் நாணயமானவருங்க. அந்தப் பணத்தை நான் வரவு வைத்துவிடுகிறேன். அப்போதாகிலும் தணிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாமா?'' என்று கேட்டார். அதற்கு இசைந்தேன்.

அரசு, அரசு சார்ந்த அமைப்புகளில் இப்படித்தான் தொடக்கத்தில், போதிய சிந்தனை செலுத்தாமல், எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காமல், முழு உரிமையுண்டு என்று முரசு கொட்டுவார்கள். காலவோட்டத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதும் தவறல்ல.

அவற்றை முன்னாளிட்டு செயல்படுத்த முயல்வதால் தேவையற்ற தொல்லைகளைப் பெருக்குகிறார்கள்.

முகலிவாக்கம் ஊராட்சி மன்றத் தணிக்கையோடு, இரு நாள் பயணம் முடிந்தது; உள்ளக்கொதிப்போடு தொடங்கிய பயணம், வம்புகளில் சிக்கிக் கொள்ளாது முடிந்தது; மனநிறைவோடு சென்னை திரும்பினேன்.

இரண்டொரு நாள்கள் தலைமை அலுவலகத்தில் தங்கினேன். தணிக்கை அறிக்கைகளுக்கு, கையெழுத்துப் படிகள் எடுத்தேன்.

வம்பு வந்தது

மாவட்டப் பஞ்சாயத்து அலுவலருக்கு அனுப்பிவிட்டேன். வேலை பாக்கியில்லை என்னும் பூரிப்போடு, அடுத்த பயணத்தைத் தொடங்கினேன். பூரிப்பு நிலைக்கவில்லை; வம்பு வந்து வழி மறித்தது.

பல்லாவரத்திற்கு அடுத்து 'கௌல் பஜார்' என்னும் சிற்றூர் இருக்கிறது. அவ்வூரிலும் ஓர் ஊராட்சி மன்றம் வலுவில் திணிக்கப்பட்டது.

எவர் எவரையோ பிடித்துத் தலைவராகவும் உறுப்பினர்களாகவும் 'அமைத்து'விட்டு வந்தார், கௌரவ அமைப்பாளர். தானே கனியாத பழத்தைத் தடியால் அடித்துக் கனிய வைக்க முடியுமா?

ஊராட்சி மன்றத் தலைவர் பெரிய மனிதர்; நல்லவர். ஆள் சேர்ப்பதில் வல்லவரல்லர். அவர், எவ்வளவு முயன்றும் ஊராட்சி மன்றம் உயிர் பெறவில்லை.

போதிய முன்னறிவிப்புக் கொடுத்துக் கூட்டம் கூட்டினாலும். போதிய ஆள்கள் சேர்வதில்லை.

'முடிவை எழுதி, குறிப்பு நூலை அனுப்பி வையுங்கள். அதில் கையெழுத்திட்டு விடுகிறோம்' என்ற சொல்லி அனுப்பி விடுவார்கள்.

சிற்றூரில் ஆதிதிராவிட உறுப்பினர்கள் பெரிய சாதிக்காரர் வீட்டண்டை வந்து கூடி மன்றத்தை நடத்துவது, அந்தக் காலத்தில் கனவில் மட்டுமே நிகழும். எனவே கூட்டம் கூடாமலே, கூட்டக் குறிப்பு எழுத அப்பெரியவரின் உள்ளம் இடந்தரவில்லை.

மொத்தத்தில் சில ஆண்டுகள் வரை அம்மன்றம் செயல்படவே இல்லை. அந்த மன்றத்தைக் கலைத்து விடலாம் என்று மன்றத் தலைவரே, மேல் இடத்திற்கு எழுதிவிட்டார்.

அக் காலகட்டத்தில், அவரை விட்டால் வேறொருவர் தலைவராகக் கிடைக்கவில்லை. எனவே, ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்டது.

கௌல் பஜார் ஊராட்சியின் நிதி, விதிப்படி அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் போட்டு வைக்கப்பட்டிருந்தது.

எந்தவூர் வங்கியில்?

பல்லாவரம் அஞ்சலக வங்கியில்; மொத்தத் தொகை எவ்வளவு?

அய்ம்பது ரூபாய்கள்.

ஊராட்சி கலைக்கப்பட்டதால், தலைவர், பதிவேடுகளை, மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்திற்குக் கொண்டுவந்து நேரில் சேர்த்துவிட்டார்.

பணத்தை என்ன செய்தார்?

கையாடல் செய்யவில்லை. வங்கிக் கணக்கை முடித்து முழுத் தொகையையும் திருப்பிக் கொடுக்கும்படி, கால தாமதமின்றி மனுப்போட்டு விட்டார்.

அது அவ்வளவு எளிதான செயலா? அஞ்சலகங்களின் தலைமை அலுவலகத்திற்கு எழுதி, முன்னனுமதி பெற்றே, கணக்கை முடிக்க வேண்டும்.

பல்லாவரம் அஞ்சல் அதிகாரி உடனுக்குடன் ஆவன செய்து விட்டார். என்றைக்கு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது என்று, உரியவருக்கு எழுத்து வழி பதில் கொடுத்துவிட்டார்.

இவை அனைத்தும் நான் வேலையில் சேரும் முன் நடந்தன.

நான் அலுவலில் சேர்ந்தபோது கண்டதென்ன? அஞ்சலக அதிகாரியின் அறிவிப்பையொட்டி, மூன்று நாள் தள்ளி, என்னை கௌல் பஜாருக்கு வந்து, பணத்தைப் பெற்றுக் கொண்டு போகும்படி, ஊராட்சித் தலைவரின் கடிதம் காத்துக் கொண்டிருந்தது.

அதில் குறிப்பிட்டிருந்தபடி, குறிப்பிட்ட நாள், பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் கௌல் பஜார் போய்ச் சேர்ந்தேன்.

பல்லாவரம் ரயில் நிலையத்திலிருந்து அவ்வூருக்கு - இரண்டு கிலோ மீட்டர் இருக்கும்; நடந்து சென்றேன்.

தலைவர் பணத்தை வாங்கிவர, பல்லாவரம் சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் வீட்டுத் திண்ணையில் காத்திருந்தேன். பேச்சுத் துணைக்குக் கூட எவரும் கிடைக்கவில்லை.

கடைசியாக முன்னாள் தலைவர் வந்து சேர்ந்தார்; வெறுங்கையோடு திரும்பினார். ஏன்? தலைமை அலுவலகத்தில் இருந்து எவ்வித ஆணையும் பல்லாவரம் அஞ்சலகத்திற்கு வந்து சேரவில்லை.

எனவே, கணக்கை முடித்துப் பணத்தைத் திருப்பித் தரவில்லை. இச் செய்தியோடு வந்து சேர்ந்தார்.

''எப்போது ஆணை வரும் என்று சொல்கிறார்கள்?'' என்று கேட்டேன்.

''அதைக் கேட்டேன்; அஞ்சலக அதிகாரி எனக்கு வேண்டியவராக இருந்தும் சரியான பதில் இல்லை. முதலில், சாதாரணமாக, எதிர்பார்க்கும் தவணைக்கும் ஏழு நாள் தள்ளியே நாள் குறித்திருந்தார். அது பொய்யாகிவிட்டதால், இப்போது, நாள் குறிக்க மறுத்துவிட்டார்'' என்று பதிலுரைத்தார்.

இது புது வகையான சிக்கல். என்ன செய்வது என்று திகைத்தேன்? சில மணித் துளிகளில், முன்னாள் தலைவரே வழி சொன்னார். என்ன வழி?

''பணம் என்றைக்கு வருமோ? நாளைக்கே வரலாம்; பத்து நாள்கள் பொறுத்தும் வரலாம்; திட்டமாகச் சொல்ல முடியவில்லையே! அப்படியிருக்க நீங்கள் எத்தனை நாள் இங்கே தங்கியிருக்க முடியும்?

''நீங்கள் ஊருக்குப் போங்கள். பணம் வந்ததும், காலதாமதமின்றி வாங்கி, அன்றைக்கே அங்கேயே மணியார்டரில் அனுப்பி விடுகிறேன்.''

இப்படி அவர் கூறினார். அது சரியாகப்பட்டது. அவர் நம்பிக்கைக்கு உரியவராகத் தென்பட்டார்.

எனவே, வேகாவெயிலில் அங்கு இருந்து புறப்பட்டு, பல்லாவரம் சென்றேன். அங்கு இரயில் ஏறி, சைதாப்பேட்டையை அடைந்தேன்.அலுவலகஞ் சென்று வேலை பார்த்தேன்.

பிழைக்கத் தெரிந்திருந்தால், நேரே சென்னைக்குச் சென்று ஓய்வு பெற்று இருக்கலாம். உழைப்பு என்னுடன் பிறந்த நோய் ஆயிற்றே!

மூன்றாம் நாள், நாற்பத்தொன்பது ரூபாய் எட்டணா, 'பண ஆணை' வழி வந்து சேர்ந்தது. அதைப்பெற்று முறைப்படி மாவட்ட ஆணைக்குழுவின் கணக்கில் கட்டிவிட்டேன். எட்டணா, பண ஆணைக்கான செலவு.

இவ்விவகாரம் சிக்கல் இல்லாமல், சரியாக, முடிந்ததைப் பற்றி கொண்ட மகிழ்ச்சி, நீர்மேற் குமிழி என்பது அப்போது தெரியாது.

கௌல் பஜார் ஊராட்சி கலைக்கப்பட்டது; அதன் பதிவேடுகளைப் பெற்றுக் கொண்டேன். கணக்குகளைத் தணிக்கை செய்தது, அதன்படி, மாவட்ட ஆணைக்குழுவிற்குச் சேர வேண்டிய தொகையை வாங்கிக் கொண்டது; இத்தகவல்களைக் கொண்ட அறிக்கையை எழுதினேன். அதன்படிவத்தைக் கையால் எழுதினேன்.

அதோடு, பணத்தைச் சேர்ப்பித்த இரசீதை இணைத்தேன். மாவட்ட ஆணைக்குழுவின் செயலருக்கு அனுப்பி வைத்தேன்.

அன்றைய வேலையும் பாக்கியில்லாமல் முடிந்தது என்னும் பூரிப்போடு, மாலை வீடு திரும்பாமல், திருவல்லிக்கேணி கடற் கரைக்குச் சென்றேன்.

நண்பர்கள் டி.டி. அய்யாசாமி, தே.சா. குஞ்சிதபாதம், தே. சா. பஞ்சாபகேசன் ஆகியோர் கூடும் இடத்திற்குச் சென்றேன்.

என் உறவினராகிய காஞ்சிபுரம் க.நா. விசுவநாதன் என்பவரும் வந்து சேர்ந்தார். நெடுநேரம் காற்று வாங்கிவிட்டு வீடு திரும்பினோம்.

'புயலுக்கு முந்தி அமைதி; தொல்லைக்கு முன்னே கும்மாளம்' என்று அன்று நினைக்கவில்லை.

64. செய்யாத குற்றத்துக்கு விளக்கமா?

மெமோ வந்தது

கெளல்பஜார் ஊராட்சி மன்றத்தைப் பற்றிய என்னுடைய விரிவான அறிக்கை சென்ற சில நாள்களில், எனக்கு ஒரு 'மெமோ' வந்து சேர்ந்தது.

மாவட்ட ஆணைக்குழுவினர் அலுவலகத்திலிருந்து ஆட்சிக் குழுவின் தலைவர் சார்பாகவே அது வந்தது.

மாவட்டப் பஞ்சாயத்து அலுவலர் திரு நரசா ரெட்டியார் ஆட்சிக் குழுத் தலைவருக்காக அதை என்னிடம் நேரில் கொண்டு வந்து கொடுத்தார்.

அவர்தான் என் கல்லூரி நண்பர், திரு தனசிங்கிற்குப் பதில் வந்து சேர்ந்தவர். அவர் நேர்மையாளர்; சுறுசுறுப்பாளர்; நல்ல உழைப்பாளி; விருந்தோம்பலுக்கும் பெயர் பெற்றவர்.

என்னிடம் நேரில் 'மெமோ'வைக் கொடுக்கும்போது, அவர் சங்கடப்பட்டார். உடன் இருந்த அலுவலகத் தலைமை எழுத்தரைப் பார்த்து,

''என்ன நாடார்! இப்படியொரு மெமோ வருகிறதே? மாவட்ட ஆட்சிக் குழுவின் தலைவர் பெரிய மனிதர், பட்டதாரி; அவர் பெயரில் இப்படியா தேவையற்ற 'மெமோ' வருவது? ஆட்சிக் குழுச் செயலர் அரங்காத நாயுடுஎன்ன செய்கிறார்? அவராவது இதைத் தடுத் திருக்கலாமே!'' இப்படி அவர் கூறியதற்குப் பதிலாக, தலைமை எழுத்தர்,

''நான் சொல்லக் கூடாதுங்க. இங்கே சூப்பரெண்டெண்ட் சுப்பிரமணிய அய்யர் நினைத்ததே சட்டம். தலைவர் முதலியார் அவர் நீட்டின இடத்தில் கையெழுத்துப் போட்டு விடுவார்'' என்றார்.

''இருக்கட்டும்! 'வெந்நீர் ஊற்றி வீட்டைக் கொளுத்த முடியாது' என்று தெலுங்கில் ஒரு பழமொழி உண்டு. அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று திரு நரசா ரெட்டியார் எனக்கு ஆறுதல் கூறி அனுப்பினார்.

வந்த மெமோ என்ன சொல்லிற்று?

'கௌல் பஜாருக்குச் சென்ற நீ, அங்கிருந்து பெற வேண்டிய பணம் வரும் வரையில் அங்கேயே தங்கியிருந்தால், பண ஆணைக்கான அரை ரூபாய் செலவைத் தவிர்த்திருக்கலாம்.

'அப்படிச் செய்யாததால், பொதுப் பணம் வீணாகச் செலவாகி விட்டது. பணம் வராமல் போயிருக்கவும் கூடும். முன்னெச்சரிக்கை யில்லாத செயலால் வீண் பணச்செலவு ஏற்படுத்தியதற்கு ஏன்

நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று ஏழு நாள்களில் விளக்கம் சொல்லவும்.' இப்படி அந்த மெமோ பேசிற்று.

மனம் நொந்தேன்

எனக்கு எப்படியிருந்தது?

பச்சைப் புண்ணில் மிளகாய்ப் பசையைப் பூசினாற்போல் இருந்தது.

ஆதாரமற்ற குற்றச்சாட்டின் வழியாக வலுச்சண்டைக்கு இழுக்கும் கலையை அதுவரை நான் அறிந்ததில்லை.

வருங்காலத்தில், வாழ்நாள் முழுவதும் அடுத்தடுத்து இத்தகைய சண்டைகள் ஊடே செல்ல நேரிடும் என்று அப்போது என் அறிவில் மின்னவே இல்லை.

'தமிழ்நாட்டின் எல்லாத் துறைகளிலும் எல்லா மக்களும், பிறர் செய்யாத குற்றத்திற்கு ஆயுள் தண்டனை கொடுக்க முனைந்து, தங்கள் வளர்ச்சியை அழித்துக் கொள்கிறார்கள்' என்பதையும் அன்று அறியேன்.

இத்தகைய தொல்லைகளுக்கு ஆளாகி ஆளாகியே, தமிழ்நாட்டில் பலமட்ட அலுவலர்களும் நைந்து, பொதுமக்கள் நலனைக் கருத முடியாதவர்களாகி விடுகிறார்கள் என்பதைப் பிற்காலத்தில் முழுமையாக உணரும் வாய்ப்புகளை நிறையப் பெற்றேன்.

1935 இல் செய்யாத குற்றத்திற்கு என்னிடம் விளக்கம் கேட்கும் மெமோவைப் பெற்றபோது, அதிர்ச்சி அடைந்தேன். தொடர்ந்து சில இரவுகள் தூக்கம் என்னை விட்டு அஞ்சியோடியது.

என் விளக்கம்

உரியபோது, விளக்கத்தை எழுதினேன். என்ன விளக்கம்?

''உதவிப் பஞ்சாயத்து அலுவலராகிய நான், திங்கள்தோறும் இருபது நாள்கள், அய்ந்து மைல்களுக்கு அப்பால் உள்ள ஊர்களுக்குச் செல்ல வேண்டும்.

'அதற்காக எனக்குக் கொடுக்கப்படும் மொத்தப் பயணப்படி திங்களுக்கு முப்பது ரூபாய்கள் ஆகும். அதாவது, சராசரி, நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாய் படியாகப் பெறுகிறேன்.

'பணம் வரும்வரை கௌல் பஜாரில் தங்கியிருந்தால், நாலரை ரூபாய் படிச் செலவாகப் பெற்றிருப்பேன்.

'அப்படி அவ்வூரில் தங்காவிடில் ஏற்படும் செலவு அரைரூபாய் மட்டும்தான் என்பது எனக்குத் திட்டமாகத் தெரியும்.

'தங்கினால் ஏற்படும் செலவோ, இருநாள் படியிலிருந்து பல நாள் படியாகவும் நீண்டு வளரலாம்.

'மிகக்குறைந்த செலவு, பண ஆணைச் செலவே என்று தோன்றியதால், அது மிகவும் சிக்கனமான முறை என்ற எண்ணத்தில் கௌல் பஜாரில் தங்காமல் வந்துவிட்டேன்.

'எத்தனை நாள்கள் ஆனாலும் எவ்வளவு சிறிய தொகையானாலும் போன ஊரிலே தங்கியிருந்து, பணத்தைப் பெற்றுக் கொண்டுதான் வரவேண்டும், அதுவே சரியான சிக்கனம், என்பது மேலிடத்து ஆணையானால் இனி அதை விழிப்போடு செயல்படுத்துவேனென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்' இப்படிப் பதில் எழுதினேன்.

'நீங்கள் சொல்வது சரிதான்' என்று மாவட்ட அலுவலர் கூறினார். அதை அப்படியே மாவட்ட ஆணைக்குழுவின் செயலருக்கு அனுப்பி விட்டார். விட்டது தொல்லை என்று நினைத்துக் கொண்டேன். எளிதில் விடுமா? சில நாள்கள் ஓடின. அலுவலகம் முழுவதும் 'கிசு கிசு' பேச்சு; தூற்றல்.

மரியாதைக் குறைவா?

'என்ன இருந்தாலும் அவரவர்க்கு உரிய மரியாதை காட்ட வேண்டாமா?

'விளக்கங் கேட்டது பொருளற்றது; அது பளிச்சென்று தெரிகிறது. இருந்தாலும் மாவட்ட ஆணைக்குழுத் தலைவர் பெயரில் அல்லவா மெமோ வருகிறது.

'அதைப் பார்த்ததும், நேரே சுப்பிரமணிய அய்யரிடம் போய் இருந்தால் அதோடு முடிந்திருக்கும்.

'அவரிடம் போக மனம் ஒப்பாவிட்டால், இரு பட்டங்கள் பெற்ற செயலாளர் நாயுடுவையாகிலும் போய்ப் பார்த்து இருக்கலாமே!

'நாலு பேர்களிடம் கைகட்டி நிற்கத் தெரிந்து கொள்ளாமல் எப்படி வேலை பார்ப்பது? அவருடைய முன்னோர்கள்போல ஊரோடு இருந்து, திண்ணையின்மேல் உட்கார்ந்தபடியே நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாமே!

'வேலைக்கு வந்தபின், இவரையும் அவரையும் பார்த்துச் சரிக்கட்டிக் கொள்ளக் கற்க வேண்டாமா?'

இப்படி, கடைநிலை ஊழியர்கள் முதல், கணக்கர்கள் வரையில் பேசினார்கள்; ஆணைக்குழு உறுப்பினர்கள் பேசினார்கள்; அப்படி யென்றும் இவரும் அவருமாகக் காற்றுவாக்கில் சொல்லிவிட்டுப் போனார்கள்.

எவரும் என்னிடம் நேருக்குநேர் சொல்லவில்லை; திருத்தவில்லை.

கற்பனைக் குற்றச்சாட்டுகள். தேவையற்ற ஊசியேற்றல். காது மூக்கு வைத்துத் தூற்றல், புறங்கூறல் ஆகியன தமிழ்நாட்டின் தலையாய குடிசைத் தொழில்; முதன்மையான பொழுதுபோக்கு!

பட்டறிவு, இதைப் பின்னர் எனக்குக் கற்பித்தது.

அன்று, அப்பட்டறிவின் அரிச்சுவடியைப் படிக்கத் தொடங்கினேன்.

என்னுடைய விளக்கம் ஏதோ பெருந்தவறு போலவும், மரியாதைக் குறைவானது போலவும் பேசப்பட்டாலும் அப்படி ஆணை வரவில்லை.

என்னுடைய பணியில் சுணங்காமல் செயல்பட்டு வந்தேன். அப்போது, கால்நடையாகவே நடந்து பழகியது, பிற்காலத்தில், இயக்குநராகத் தெருத்தெருவாக நடந்து, பொது மக்களைக் கவர்ந்து, அதைப் பகல் உணவுத்திட்ட உதவியாக முதலாக்கிக் கொடுத்தது.

என் பணி தொடர்ந்தது.

அக்காலம் எவரும் ஜீப்பை அறியார். பேருந்து சில நகரங்களுக்கே. அக் காலத்தில் பல ஊர்களுக்கு நல்ல வண்டிப் பாதையும் கிடையாது. எடுத்துக்காட்டாக மணிமங்கலம் போவதென்றால் படாதபாடு படவேண்டும்.

வண்டலூரில் இறங்கிப் போகவேண்டும்; வழியில் முக்கால் பகுதி, சகதியும் சேறுமாக இருக்கும். நடுவில் ஓடைகள்; வாய்க்கால்கள் பல.

மாட்டு வண்டி மட்டுமே செல்ல முடியும்;பேருந்து கிடையாது; சேற்றில் ஈருருளியில் எப்படிச் செல்வது?

மாட்டு வண்டிக்காரர் எவரும் மணிமங்கலத்திற்கு வாடகைக்கு வரமாட்டார். இரவு அங்கேயே தங்கி, மறுநாள் வரலாம் என்று கூப்பிட்டாலும் பத்து ரூபாய் வாடகை கேட்பார்.

எட்டுக்குக் குறைந்து வெயில் காலத்திலும் வரமாட்டார். அவ்வளவு கொடுத்தால் கட்டுப்படியாகுமா?

காரந்தாங்கல் என்னும் ஊர் வண்டலூருக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது. அதுவரை சென்று, கணக்குப் பார்க்கும் வேளை காலாறி, பிற்பகல் ஒருவரை அழைத்துக்கொண்டு போனால், மணிமங்கலம் போய்ச் சேர இருட்டிவிடும். அடுத்த நாள், மூட்டை வண்டி ஏதாவது கிடைத்தால், புதையல் கிடைத்த மாதிரியாகும்.

குன்றத்தூருக்கு அப்பால், திருமுடிவாக்கம், பழந்தண்டலம் என்னும் ஊர்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டியுள்ளன.

இக்காலத்தில் அவ்வூருக்குப் பேருந்திலேயே போகலாம்; அனகாபுத்தூர் வழியாகச் சாலை உண்டு. அப்போது அத்தகைய சாலை இல்லை.

குன்றத்தூரில் இறங்கி, வயல் வழியாக, பெரும்பாலும் வரப்பின் மேல் நடந்து செல்ல வேண்டும். வழியில் பல வாய்க்கால்களைக் கடக்க வேண்டும்.

இப்பயணமும் தொல்லையானது. போய்ச் சேர்ந்தபின் கவலையில்லை. உணவு கிடைப்பது உறுதி.

திருமுடிவாக்கத்தைத் தாண்டியே பழந்தண்டலம் போகவேண்டும்.

திருமுடிவாக்க ஊராட்சி மன்றத் தலைவர், திரு சுந்தரராம அய்யர். அவர் அதற்கு முன்னால் கௌரவ ஊராட்சி அமைப்பாளராக இருந்தவர்.

எனவே, அவருடைய கணக்குகள் முறைப்படியும் சரியாகவும் இருக்கும். அவர் வீட்டில் சாப்பிட உடன்படுவது சங்கடத்தில் மாட்டாது.

திருமுடிவாக்கத்தை யொட்டிய பழந்தண்டலத்தின் ஊராட்சித் தலைவர் ஒரு செல்வர்; அய்யங்கார். அவர் பெயர் இப்போது நினைவிற்கு வரவில்லை. அவருடைய வைதீக மரபு என் உணர்வுகளைப் புண்படுத்தவில்லை.

அவருடைய வீட்டில் சாப்பிடும் போதும் மானப் பிரச்சினை எழவில்லை. அவருடைய கணக்கிலும் வழக்கிராது.

மேடவாக்கம் என்னும் ஊருக்கு அக்காலத்தில் போய்வருவது, ஓர் அறைகூவலை ஏற்பதாகும். தாம்பரம் இரயில் நிலையத்தில் இறங்கி, சல்லி போடாத மண்சாலையில் போக வேண்டும். வாடகை வண்டி கிடைப்பதே அரிது. எனவே நடந்தே செல்ல வேண்டும்.

ஊராட்சி மன்றங்களைத் தணிக்கை செய்யச் செல்லும்போது, முன்னறிவிப் பின்றியே செல்ல வேண்டும்.

கால்கடுக்க நெடுநேரம் நடந்து, ஓர் ஊருக்குச் சென்றால், அவ்வேளை, ஊராட்சித் தலைவர் ஊரில் இல்லாவிட்டால் எப்படி இருக்கும்? அன்றிரவுக்குள் வரமாட்டாரென்று அறிவித்தால், பயணம் வீண்; பாடு வீண்; பயனற்ற பயணம் என்று விளக்கம் கேட்கும் கத்தி கழுத்திற்குமேல்,

இந்நிலையைக் கற்பனை செய்து பாருங்கள் ஒருமுறை அப்படி. நடந்தது.

தாம்பரத்தில் இருந்து புறப்பட்டு அலுத்து மேடவாக்கம் போய்ச் சேர்ந்தேன். ஒரு மணிக்குப் பிறகு, வெளியூர் சென்றிருக்கும் ஊராட்சித் தலைவர் வந்து சேர மூன்று நாள்களுக்குமேல் ஆகலாம் என்று தெரிந்தது.

வெட்டியாக, தாம்பரம் திரும்பிச் சென்னைக்குச் செல்வதா, மேடவாக்கத்தில் இருந்து சோளிங்கநல்லூர் செல்வதா என்று குழம்பினேன்.

திரும்பிப் போகும் தொலைவோடு கொஞ்சம் நடந்தால் சோளிங்கநல்லூர் போய்ச் சேர்ந்துவிடலாமென்று மேடவாக்கத்தார் ஒருவர் கூறினார்.

சிலர் அதற்கு ஒத்து ஊதினார்கள். அதை நம்பிப் புறப்பட்டேன். நடந்தேன்; நடந்தேன்; வரப்பு, ஏரிக்கரை என்று நாள் முழுவதும் நடந்தேன்.

அலுத்து வீழும் வேளை, ஞாயிறு மறையவும், நான் சோளிங்க நல்லூரைச் சேரவும் பிழைத்தேன். அந்த ஊராட்சி மன்றத் தலைவர் ஊரில் இருந்தார். அது எனக்கு உயிர் கொடுத்த மாதிரி அல்லவா?

65. தந்தையின் வெகுளி!

மனம் கலங்கினேன்

சோளிங்க நல்லூரில் இரவு தங்கினேன். அடுத்த நாள் முற்பகல், ஊராட்சி மன்றக் கணக்குகளைத் தணிக்கை செய்தேன்.

மன்றத் தலைவர், செல்வந்தர்; கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்திருப்பார் என்று தலைமை அலுவலகத்தில் கேள்விப்பட்டேன்.

எனவே நாயக்கர் வீட்டில் அச்சம் இன்றி உண்டேன்.

தணிக்கை முடிந்ததும், சோளிங்க நல்லூரிலிருந்து பலகை வாராவதிவரை படகில் பயணம் செய்தேன்.

அங்கிருந்து குதிரை வண்டி ஏறி, மயிலாப்பூர் கபாலி குளம்வரை சென்றேன். பிறகு, பேருந்து ஏறி வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன்.

இளமையின் வலிமை, நீண்ட நடைப்பயணத்தையும் பட்டினி யையும் தாங்கிக் கொள்ள உதவிற்று. அவை அவ்வளவு தொல்லை களாகத் தோன்றவில்லை.

ஆனால் பலர், என்னிடம் வலியக் கூறிய இரங்கலும் ஆலோசனை களும் உள்ளத்தைக் கலக்கின.

என் குடும்பத்தின் வளத்தையும் தொடர்புகளையும் தெரிந்த பலர்,

''அப்பா உனக்கேன் இந்தத் தலைஎழுத்து! ஊர் ஊராக நாடோடி போல் அலையணுமா? வேளைக்கு ஒருவகை உணவு உண்டால் உடம்பு என்னவாகும்! எவ்வளவு செல்லமாய் வளர்ந்தாய்? எவ்வளவு நல்ல மாணவர் விடுதியில் தங்கி உண்டாய்! விரைவில் இவ்வேலையை விட்டுவிடு.

''இருந்த இடத்தோடு அலுவல் பார்க்கும் வேலை கிடைக்காமல் போகாது. எதற்கும் நம் முயற்சி வேண்டும்'' என்று கூறும்பொழுது, நெருஞ்சி முட்படுக்கையில் புரட்டுவது போலிருக்கும்.

இருப்பினும் மின்னலோடு போட்டி போட்டுக் கொண்டு, புண் ஆறிவிடும். பற்றுதலோடும் துடிப்போடும் அதே பணியில் மூழ்கி விடுவேன்.

எப்படி அது இயன்றது?

உடல் நலத்திற்கு அடையாளங்கள் எவை? வேளா வேளைக்குப் பசி கிள்ளல்; அப்போதைக்கு அப்போது நீர் வேட்கை ஏற்படல்.

மனநலத்திற்கு அடையாளம் உண்டா? உண்டு. அது என்ன?

சிந்தனை! அது குறிக்கோளாக அரும்ப வேண்டும். குறிக்கோளுக் காகப் பாடுபடும் தொண்டாக மலர வேண்டும். தொண்டிலுள்ள பற்று முற்றி முற்றி, வெறியாகக் கனிய வேண்டும்.

நாட்டுப்புறத்தை விரும்பினேன்

நாட்டுப்புறத்தில் பிறந்து வளர்ந்தவன் நான். பட்டதாரியான பிறகும் நாட்டுப்புறத்தைக் கண்டு வெறுப்புக் கொள்ளாதவன் நான்.

எனக்குச் சிற்றூர்களின்மேல் ஏற்பட்ட பற்று, என்னுடைய இரண்டாவது இயற்கையாகியிருந்தது. அது என்னைப் பெருமளவு உந்திற்று.

எந்த அளவிற்குத் தெரியுமா?

வேலையில்லாத பட்டதாரியாக வேலை தேடி அலைந்து கொண்டி ருந்தபோது, அன்றைய திருவிதாங்கூர் இராச்சியத்தில் இருந்த, மார்த்தாண்டம் என்னும் ஊரில் கிராமச் சீரமைப்புப் பணிப்பயிற்சி கொடுக்கும் அமைப்பொன்றை கிறுத்துவக் கழகம் நடத்தி வந்தது.

அப்பயிற்சியில் சேர்ந்து கற்க அவாவினேன். அச்செலவிற்கான பணம் என் கையில் இல்லை.

என் தந்தையோ, உதவ மறுத்து விட்டார். பிறரிடம் கடன் கேட்டுப் பழக்கமும் இல்லை. காசில்லாக் குறையால் மார்த்தாண்டத்தில் பெற்றிருக்க வேண்டிய பயிற்சி, எனக்கு எட்டவில்லை.

அந்த ஏக்கத்தில் இருந்த எனக்கு, சிற்றூர் சீரமைப்புத் துறையில் பணியாற்றும் வகையில் பதவி கிடைத்தது பெருமகிழ்ச்சியை அளித்தது.

அதற்காகவே பிறந்திருப்பது போன்ற உணர்வு உந்திற்று.

'நல்லதைச் சாதிக்க வேண்டும்; சாதிக்க முடியும்' என்னும் வெறி இந்த வயதிலேயும் என்னை எங்கெங்கோ தள்ளிக்கொண்டு போகிறதே! அப்படியிருக்க, இருபத்து மூன்று, இருபத்து நான்கு இளமை துள்ளும் வாலிப வயதில் தொழில், தொண்டாகக் காட்சி அளித்ததில் வியப்பேது?

மேலும் அக்காலம்? திரும்பிய பக்கமெல்லாம் இலட்சியச் சுடர்கள் பளீர் என்று தென்பட்ட காலம்! 'எனக்கு எவ்வளவு' என்று பங்கு தேடுவோர் மூலையில் கிடந்த காலம்!

'நான் இன்னும் என்ன செய்ய?' என்று கேட்டபடியே, தொடர் சமுதாயத் தொண்டில் தங்களைக் கரைத்துக் கொண்டவர்கள் பளிச்சிட்ட காலம்!.

அச் சூழலும் என் தொண்டு வெறியைத் தூண்டிக்கொண்டே இருந்தது.

எனவே, உதவிப் பஞ்சாயத்து அலுவலர் பதவியில் கசப்போ வெறுப்போ கொள்ளவில்லை; சலிக்காமல் தொடர்ந்து பணியாற்றினேன்.

மற்றோர் ஊட்டத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

அக்கால ஊராட்சித் தலைவர்களுக்குப் பேச்சுக்கலை சிறிதளவும் தெரியாது; கள்ளங்கபடம் தெரியாது.

சில வேளை தவறு செய்துவிடுவார்கள். அதை மறைக்க ஏதேதோ, எவர் எவர் பேரிலோ சொல்ல மாட்டார்கள்.

பெரும்பாலோர் குறை காட்டும்போது, ''அப்படிங்களா? இப்போது எப்படி நேர்செய்வதென்று சொல்லுங்கள்; அப்படியே கழுவாய் தேடுவோம்'' என்பார்கள். அலுவலில் இருந்த சள்ளையை அந் நேர்மை போக்கிவிடும்.

இப்படி ஆர்வத்தோடு சில திங்களைக் கழித்தேன்.

சில ஊர்களுக்குத் தெருவிளக்குப் போட வழி செய்தேன்; குடிநீர்க் குளங்களைச் செப்பனிடச் செய்து குளிர்ந்தேன்.

தெருக்களில் இருந்த மேடுபள்ளங்களைக் குறைக்க உதவினேன். காலம் கலக்கமின்றி ஓடியது.

திருமணத்திற்கு என் பெற்றோர் வற்புறுத்தினர்.

இங்கும் அங்குமிருந்து பெண் கொடுக்கும் நோக்கத்தோடு சிலர் என்னைத் தேடி வந்தார்கள்.

இத்தொல்லையைச் சமாளிப்பது ஒன்றே கடினமாகத் தோன்றிற்று.

திருப்பெரும்பூதூர் மாற்றல்

இப்படி இருக்கையில், திடீரென எனக்கு மாறுதல் ஆணை வந்தது. இல்லை, என் அலுவலகத்தைத் திருப்பெரும்பூதூருக்கு மாற்றி ஆணை வந்தது. அது பெரிய அடி. எப்படிச் சமாளிப்பதென்று தெரியவில்லை.

மாவட்டப் பஞ்சாயத்து அலுவலர் திரு நரசா ரெட்டியாரை நெருங்கி ஆலோசனை கேட்டேன்.

''நீ தணிக்கை செய்ய வேண்டிய ஊர்களில் மாற்றமில்லை. சைதாப்பேட்டை வட்டத்திலுள்ள பல ஊர்களுக்கும் திருப்பெரும் பூதூர் வட்டத்தின் சில ஊர்களுக்கும் அங்கிருந்தபடியே, நேரே செல்ல முடியாது. அதற்கான வாகன வசதிகள் இல்லை.

''எனவே, சென்னை வழியாகவே பல நாள் பயணம் செய்ய வேண்டும்.

''அதைக் காட்டி, அலுவலகம் மாறிய பிறகும் சில திங்கள் சில இரவுகள் சென்னையிலேயே குடியிருக்க சலுகை கேள். அதை வாங்கித் தருகிறேன். இப்போதைக்கு அப்படிச் சமாளிப்போம். பின்னர் வளரும் சூழ்நிலைக் கேற்ப, என்ன செய்வது என்று மீண்டும் சிந்திப்போம்.

''தொடர்ந்து இதே வேலையில் இராமல், உயர் பதவிகளுக்கு முயற்சி செய். நானும் என்னால் ஆனதைச் செய்கிறேன்'' என்று வழிகாட்டினார்.

அதன்படி, திருப்பெரும்பூதூர் தேரடித் தெருவில், அலுவலகத்திற்காக ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்து கொண்டேன்.

அங்கே அலுவலகத்தை மாற்றிக் கொண்டேன். அதில் ஓர் அறைக்கு வாடகை கொடுத்துவிட்டு, அதை எனக்கென்று வைத்துக் கொண்டேன்.

உணவு? ஓட்டலில். அன்று அவ்வூரில் மரக்கறி உணவுச்சாலை ஒன்றே ஒன்று. அதில் கிடைத்த உணவோ மோசம். அரை வயிறு சாப்பிட்டு இளைப்பதைக் கண்ட இருவர், சில திங்கள் என் உதவிக்கு வந்தார்கள்.

ஓட்டலுக்குக் கொடுத்த பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் தம் வீட்டில் இருந்து அனுப்பிய உணவை உண்டு வந்தேன்.

அவர்கள் எவர்?

திருப்பெரும்பூதூர் பேரூராட்சி மன்ற அலுவலகத்தில் தலைமை எழுத்தராகப் பணிபுரிந்த திரு முத்துலிங்க முதலியார். அவர் வீட்டிலிருந்து உணவு அனுப்ப முடியாத சில திங்கள், அவ்வலுவலகத்தில் பணிபுரிந்த திரு. சின்னசாமி ரெட்டியார் உதவினார்.

இவ்விருவரும் உண்டி கொடுத்து, என்னைக் காத்தமைக்குக் கைம்மாறு பெறும் நிலைக்கு அவர்கள் ஆளாகவில்லை. அது, அவர்கள் நல்வாய்ப்பு.

அவ்விருவர் குடும்பங்களுக்கும் என் நன்றியை இப்போது எழுதி நிறைவுகொள்வதோடு இச்செய்தி முடிகிறது.

இருவரும் கைத்தூய்மை உடைய அலுவலர்கள் என்பதைச் சுட்டுக்காட்டுவது என் கடமை.

திங்களில் பத்து நாள், முன்பின் அறியாத சிற்றூர்களில் தங்கல்; பத்து நாள் திருப்பெரும்பூதூரில் தங்கல்; மற்ற நாள் சென்னையில் தங்கல், இப்படிச் சில திங்கள் ஓடின.

என் தந்தையின் சினம்

ஒரு நாள், சைதாப்பேட்டை பனகல் கட்டடத்தில் இருந்த மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சென்றேன்.

அலுவலர் திரு நரசா ரெட்டியார் இருந்தார். அவர் என்னைக் கண்டதும் புதிய இடத்தைப் பற்றிச் சிறிது நேரம் விசாரித்தார். பிறகு,

''உங்கள் தந்தையார் என்னோடு சண்டைக்கு நின்றார். பல முறை அவரைச் சாதுவாகக் கண்டிருக்கிறேன்.

''சில நாள்களுக்கு முன்புதான், அவருக்குக் கோபம் வந்தால், எவ்வளவுக்குப் போகுமென்பதைக் கண்டு கொண்டேன். அவருக்கு உங்கள்மேல் இருக்கும் ஆத்திரத்தையெல்லாம் என்மேல் காட்டி விட்டார்'' என்று சொன்னார்.

நான் பதற்றங்கொண்டேன். அவரைத் தொடர்ந்து பேசுவதற்கு விடவில்லை. நான் குறுக்கிட்டு,

''ஏதாவது மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டாரா, கூறுங்கள். நான் அவரை இங்கே அழைத்து வருகிறேன். மன்னிப்பு கேட்கச் செய்கிறேன்'' என்று பொரிந்தேன்.

''மரியாதைக் குறைவாகப் பேசவில்லை. உங்கள் பேரில் புகார் கூறினார். உங்கள் அலுவலகம் மாறிய பிறகும் நீங்கள் சென்னையிலேயே குடியிருக்கிறீர்களாம்.

''திருப்பெரும்பூதூரில் வேலை பார்க்கிறேனென்று சொல்லிவிட்டுச் சென்னையில் குடியிருப்பது பெருந்தவறு.

''அத்தவறு எப்படி உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறதோ! இப்போது அதை நானே புகாராக எழுதித் தருகிறேன். விசாரித்து, கடுமையான நடவடிக்கை எடுங்கள்'' என்று உங்கள் அப்பா கூறினார்.

''நீங்கள், சென்னையில், வேண்டியபோது தங்கலாமென்று கொடுத்திருக்கும் ஆணையைப் படித்துக்காட்டி விளக்கினேன். அதைக் கேட்டதும் அவருக்கு மேலும் கோபம் பொங்கிற்று.

''நீங்கள்தான் அவனைக் கெடுக்கிறீர்களா? அது தெரியாமல் உங்களிடமே புகார் செய்ய வந்தேனே!

''நீங்கள் கொடுக்கும் சலுகையால்தான், அவன் இப்படித் தலைகால் தெரியாமல் இருக்கிறானோ!'' என்று அவர் நொந்து கொண்டார்.

''உங்கள் பிள்ளை சுந்தரவடிவேலுவைப் போன்ற நல்ல பிள்ளையை இந்தக் காலத்தில் பார்ப்பது அரிது. எவ்விதக் கெட்ட பழக்கமும் கிடையாது; எந்தக் குறையும் கிடையாது.

''உண்மை தவிர வேறொன்றும் தெரியாது. ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டு. அப்படியிருக்க, நீங்கள் ஏதோ கோபத்தில் என்னிடம்

கூறியதுபோல், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லிவிட்டால், அவருடைய வேலைக்கே கேடு வரக்கூடும்'' என்று கூறி, நான் அவரை அமைதிப்படுத்த முயன்றேன். 'வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கட்டும். அப்பொழுதாவது அவனுக்குப் புத்தி வருகிறதா என்று பார்ப்போம்' என்று பொங்கினார்.

''அரும்பாடுபட்டு அவருடைய மனத்திலுள்ள உண்மையான காரணத்தைக் கிளறிக் கண்டுபிடித்தேன்.

''நீ திருமணம் செய்து கொள்ளாமல் காலங்கடத்துவது பற்றி அவருக்குப் பெருங்குறை. வேலை கிடைத்த பிறகும் தட்டிக் கழிப்பதால் ஆத்திரம். நல்ல இடங்களிலிருந்து பெண் கொடுக்க முன்வந்துள்ளார் களாமே!

''அந்த மூன்று நான்கு இடங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமே என்று ஆத்திரப்படுகிறார்.

''நீங்களாவது புத்தி சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு அவ்விடங்களையும் என்னிடம் கூறியுள்ளார். அவை உங்களுக்கும் ஏற்கெனவே தெரிந்த இடங்களாமே'' என்று கூறியபடியே, திரு நரசா ரெட்டியார் எனக்குப் பெண் கொடுக்க விரும்பியவர்கள் பெயர்களை வரிசையாகச் சொன்னார்.

''மன்னிக்க வேண்டும். அவர்களில் எவரையும் நான் திருமணம் செய்து கொள்வதாக நினைப்பில்லை. வேறு எங்கே திருமணம் செய்து கொள்வது என்றும் சிந்திக்கவில்லை.

''எங்கள் அப்பா, உங்களிடம் முரட்டுத்தனமாக நடந்ததை மறந்துவிடுங்கள்'' என்று அவரை வேண்டினேன். அவர் சிரித்தார்.

வெகுளி பொல்லாதது

அன்று நான் ஒரு புதிய பாடத்தைக் கற்றேன். அப்பாடம் வாழ்நாள் முழுவதும் எனக்குப் பயன்பட்டது.

அது என்ன?

'வெகுளி பொல்லாதது; தமிழன் வெகுளி மிகமிகப் பொல்லாதது; அது எல்லாக் கேட்டையும் செய்யவல்லது.

'எதையும் செய்ய விரைவது; வரம்பு அறியாதது; பத்துக் காசுகளுக்காகத் தலையைக் கொய்ய முனைவது; பெற்ற பிள்ளையைக் கூடப் பாழும் கிணற்றில் தள்ளும் கொடிய தன்மையது.

'எவ்வளவு சிறிய குறைக்கும் எவ்வளவு பெரிய தீங்கையும் செய்ய உந்துவது. விளைவுகளின் அளவை அறியாது, பாய்வது' இதை அன்று அறிந்தேன்.

என் தந்தையிலும் நல்ல தந்தை எவருக்கும் வாய்ப்பதரிது. என்னில் முற்போக்குச் சிந்தனைகளை விதைத்தது அவரே!

அவை செழித்து வளரக் காத்து நின்றதும் அவரே. நீதிக்குப் பெயர் பெற்றவர் என் தந்தை.

இருப்பினும் சினங்கொண்டபோது, சீறுவதற்கு எல்லையில்லை என்பதை முதன்முறை உணர்த்தினார். மற்றத் தமிழர்களும் அதே குட்டையில் ஊறினவர்கள்தானே!

அன்று நான், உரியவரிடம் உரிய ஆணையைப் பெறாமல் சென்னையில் தங்கியிருந்தால், என் வேலைக்கே தீங்கு நேரிட்டிருக்கலாம்.

நெறிப்படி நடக்கும் என் இயற்கையைப் பழக்கமாகவும் மாற்றிக் கொண்டதால் அல்லவா, நாற்பது ஆண்டு காலம் அரசு ஊழியம் என்ற செங்குத்தான சறுக்குப்பாதையில் தாக்குப் பிடித்து, முடியைக் காண முடிந்தது!

66. மழையும் காய்ச்சலும்!

ஊராட்சித் தலைவர் ஊரிலில்லை

பசி வந்திடப் பத்தும் பறந்துபோம். பள்ளிப்பருவத்தில் இதைப் படித்திருக்கிறேன். ஆனால் உணரும் வாய்ப்புக் கிட்டவில்லை.

எப்போது, முதன்முறையாக உணர்ந்தேன்? திருப்பெரும்பூதூரில் உதவிப் பஞ்சாயத்து அலுவலனாக அலையும்போது,

வேலையில்லாத பட்டதாரியாக ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தபோது கூட, ஒரே வேளைதான் பட்டினி கிடக்க நேர்ந்தது.

ஊர் சுற்றி வேலையின்போது, தொடர்ந்து சில வேளை பட்டினி கிடந்து துன்பப்பட்டேன்.

ஒரு நாள் காலை, திருப்பெரும்பூதூரில் சிற்றுண்டி அருந்தினேன். காலை எட்டு மணிபோல், பேருந்தைப் பிடித்து காஞ்சி செல்லும் வழியில் சென்றேன்.

சேந்தமங்கலத்திற்கு மேற்கே, கீரனல்லூர் செல்லும் வழியண்டை இறங்கினேன். அப்போது தூறல் தொடங்கிற்று. வழியில் தங்க இடம் இல்லை, குடையைப் பிடித்துக்கொண்டு கீரனல்லூரை நோக்கி நடந்தேன்.

மண்போட்ட சாலை; சகதியாக இருந்தது. அதைப் பொருட்படுத்தாது முன்னேறினேன். கீரனல்லூரை நெருங்கும் வேளை, முதியவர் ஒருவர் எதிரில் வந்தார்.

'கீரனல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஊரில் இருக்கிறாரா?' என்று கேட்டேன்.

''இருக்கிறார். சிறிது நேரத்திற்கு முன்பு திண்ணையில் உட்கார்ந்திருந்தார்'' என்று கூறிவிட்டுத் தம்வழியே சென்றார்.

பதினைந்து மணித்துளிகளில் கீரனல்லூரை அடைந்தேன். ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டைக் கேட்டுக்கொண்டு அங்குச் சென்றேன்.

அவ்வீடு பூட்டிக் கிடந்தது. அவர் எங்கே சென்றுள்ளார், என்று கண்டுபிடிக்க, என்னுடன் துணையாக வந்த கடைநிலை ஊழியர் முயன்றார். நான் திண்ணையின்மேல் காத்துக்கிடந்தேன்.

பலபேரிடம் வீணாக விசாரித்த பிறகு எவரோ ஒருவர் ''ஊராட்சி மன்றத் தலைவர், காஞ்சிபுரம் சென்றுள்ளார். அந்த அய்யங்காரை நீங்கள் வழியில் கண்டிருக்கலாமே!'' என்று கூறினார்.

ஊழியர் அச்செய்தியை என்னிடம் சொன்னார். காத்திருந்து பயனில்லை, அவர் திரும்பிவர இரண்டு மூன்று நாள்கள் ஆகலாம் என்பது தகவல்.

ஏமாற்றத்தோடு கீரனல்லூரில் இருந்து காண்டூர் நோக்கிப் புறப்பட்டேன். மழை முற்றிற்று; இருப்பினும் மெல்ல நடந்து, காண்டூரைப் போய்ச் சேர்ந்தேன்.

காண்டூரில் ஒரு பஞ்சாயத்துப் பள்ளி இருந்தது. அங்குச் சென்றேன். அது பூட்டிக் கிடந்தது. என்னுடன் வந்த ஊழியர் ஊராட்சித் தலைவரைத் தேடிச் சென்றார்; தலைவர் வீட்டிலிருந்த பள்ளிக்கூடச் சாவியைக் கொண்டு வந்தார். பள்ளியைத் திறக்க, உள்ளே சென்று உட்கார்ந்தேன்.

பள்ளிக்கூடத்தின் ஒரே ஆசிரியர், சில நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

ஊராட்சி மன்றத் தலைவர், நாட்டூர் சடகோபாச்சாரியரும் ஊரில் இல்லை.

இரண்டாவது ஊரிலும் எந்த வேலையும் செய்யாது திரும்பினால் எப்படி இருக்கும்? மேலே இருப்பவர்கள், அப்படி நிகழ்ந்ததை நம்புவார்களா?

நான் அவ்வூர்களுக்குப் போகாமலே, பொய்யான பயணக் குறிப்புகள் எழுதியதாக அல்லவா நினைப்பார்கள்?

இப்படிக் குழப்பத்தோடு உட்கார்ந்து இருப்பதைக் கண்டார், என் ஊழியர் முருகேசன். என்னைப் பொறுமையாக இருக்கும்படி கூறிவிட்டு, மழையில் மீண்டும் ஊருக்குள் சென்றார்.

அரை மணிக்குப் பின்பு, ஊராட்சித் துணைத் தலைவரோடு திரும்பி வந்தார். பிந்தியவர், தலைவர் வீட்டிலிருந்து, வரவு செலவுக் கணக்கோடு வந்தார்.

அக்கணக்கைத் தணிக்கை செய்தேன். வரவு செலவு சிலவே. அவற்றில் தவறு ஏதும் இல்லை. அதை ஏட்டில் பதிந்துவிட்டு அடுத்த ஊருக்குப் புறப்பட்டேன். அப்போதும் மழைவிடவில்லை.

சிறிது நனைந்தபடியே, மதுரமங்கலம் போய்ச் சேர்ந்தேன்.

என் சங்கடம்

அங்கு மாவட்ட ஆணைக்குழுவின் பள்ளியொன்று இருந்தது. அங்கே சென்றேன். அக்காலத்தில், எங்கள் கடமைகளில் ஒன்று, மாவட்ட ஆணைக்குழுவின் தொடக்கப் பள்ளிகளைப் பார்வையிட வேண்டியது.

அதைக் கவனிக்கும்படி என்னை விட்டு விட்டு, ஊழியர், ஊராட்சித் தலைவரைத் தேடிச் சென்றார்.

அவர் பெயர் குமாரசாமித் தேவர் என்பதாகும். அவரும் ஊரில் இல்லை. இச்செய்தி வருவதற்கு முன்பு பள்ளிக்கூடப் பார்வையை முடித்தேன்.

வருகைப் பட்டியின்படி வந்ததாகக் குறித்துள்ள பலர் பள்ளியில் இல்லை. வருகையைப் பொய்யாகப் பதிவு செய்து உள்ளார் என்று அய்யப்பட இடம் உண்டு.

மழை வலுத்திருப்பதால் பல பிள்ளைகள் பிற்பகல் வரவில்லையென்று தலைமையாசிரியர் விளக்கம் சொன்னார்.

என் நிலை தர்மசங்கடமானது. அக்காலச் சூழ்நிலையில் தலைமையாசிரியர் விளக்கம் சரியாக இருக்கலாம்.

நாட்டுப்புறத்துச் சூழலில் வளர்ந்த எனக்கு, பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளின் ஒழுங்கான படிப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பது தெரியும்.

அதேபோல் தங்கள் வேலையைக் காப்பாற்றிக் கொள்ளச் சிலர் உளமாரப் பொய் வருகை போட்டு, பள்ளிக்கூடம் தொடர்ந்து நடத்த நியாயப்படுத்திக் கொள்வதும் உண்டு.

இந்நிலையில் பார்வைக் குறிப்பு நூலில், வகுப்புவாரி வருகைப் பதிவு உண்மையில் இருந்தோர் பற்றிய தகவல்களை எழுதிவிட்டு, அடுத்த பணிக்குக் காத்திருந்தேன்.

என் ஊழியர், தேவர் வீட்டிலிருந்து ஒருவரை அழைத்துக்கொண்டு வந்தார். தேவர் வெளியூர் சென்றிருப்பதாகவும், திரும்பிவர மூன்று நாள்கள் ஆகலாம் என்றும் சொன்னார்.

சில நாள்களுக்கு முன்பு 'செஸ்' பணம் நூறு ரூபாய்கள்போல் வந்ததாகவும் அதைக்கூடப் பத்திரமாகப் பூட்டி வைத்துவிட்டுச் சென்றிருப்பதாகவும் அவராகவே, பேச்சுவாக்கில் வெளிப்படுத்தி விட்டார்.

அதன் உட்பொருள் அவ்விளைஞருக்குப் புலப்படவில்லை.

மதுரமங்கலம் அஞ்சல் நிலையத்தில் சேமிப்பு வங்கி இருந்தது. எனவே, வந்த பணத்தை அடுத்த நாளே வங்கியில் கட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது, கையாடல் குற்றச்சாட்டிற்கு இடமாகும்.

இது எனக்குப் பளிச்சென்று தெரிந்தது. தேவரை வழக்கு மன்றத்தில் நிறுத்த நேரிடுமோ என்று அஞ்சினேன். எனவே, பசி காதையடைப் பதையும் பொருட்படுத்தாது, அடுத்து எங்கே போவது என்று சிந்தித்தேன்.

திருப்பெரும்பூதூருக்குப் போகும் பேருந்து ஏற்கெனவே போய் விட்டது. அடுத்த நாள் பிற்பகல்தான் மறுவண்டி. ஆகவே, அங்கே காத்திருப்பது வீண் தொல்லை என்று தோன்றியது.

சிங்கல்பாடி என்னும் சிற்றூர்ப் பஞ்சாயத்தைப் பார்வையிடலா மென்று கருதினேன். எவ்வளவு தூரம் என்று கேட்டேன்.

'அதிக தூரம் இல்லை. இரண்டு கல் தொலைவுக்குமேல் இராது' என்று அங்கிருந்தவர்கள் கூறினார்கள். அதை நம்பி, சிங்கல்பாடியை நோக்கி நடந்தோம்.

கொட்டும் மழையில்

சில மணித்துளிகளில், மழை; அடைமழையாக மாறியது. வழியோ வரப்புகளின்மேலே. கால்வாய்கள் ஊடே. தொலைவோ இரண்டு கற்களுக்கு மேல்.

படாதபாடுபட்டு விளக்கு வைத்த பிறகு சிங்கல்பாடியைச் சேர்ந்தோம். அவ்வூரில் பஞ்சாயத்துப் பள்ளி ஒன்று உண்டு. அதன் ஆசிரியர், வெளியூரில் குடியிருந்தார். என்னுடைய ஊழியர் பக்கத்துக் குடிசையிலிருந்து பள்ளிக்கூடச் சாவியை வாங்கி வந்தார். பள்ளியைத் திறந்து, இரு பெஞ்சுகளை இணைத்துப் போட்டார்.

சிங்கல்பாடி, அன்று குடிசையூர். குடிசைகளில் அகல் விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. வெளியே கொட்டும் மழை; பெருங்களைப்புக்கு ஆளான நான், அயர்ந்து உறங்கப் படுத்தேன்.

''இரவு உணவுக்கு எழுப்ப வேண்டாம். விடியற் காலை, நாம் யாரென்று அடையாளங் காட்டாமல். ஊருக்குச் சென்று, ஒரு வெண்கலச் செம்பு பால் வாங்கிக் காய்ச்சிக் கொண்டுவா'' என்று ஊழியரிடம் சொல்லிவிட்டு உறங்கிவிட்டேன்.

காய்ச்சல் வந்தது

இரவெல்லாம் மழை விட்டுவிட்டுப் பெய்தது. பொழுது விடியத் தூக்கம் கலைந்தது. உடம்பு சுட்டது. நல்ல காய்ச்சல் கண்டிருப்பதை

உணர்ந்தேன். கண் விழித்துப் பார்த்த நான், ஊழியர் அருகில் நிற்பதைக் கண்டேன். அவர் என்னை நெருங்கினார்.

''அய்யா! பொழுது விடிய, பாலைத் தேடிச் சென்றேன். இவ்வூரில் எந்த வீட்டிலும் எருமையோ, பசுவோ இல்லை. எல்லா வீடுகளிலும் செம்மறி ஆடுகளே உள்ளன. ஆட்டுப்பால் மட்டுமே கிடைக்கும். பரவாயில்லை என்றால் செம்மறி ஆட்டுப்பால் வாங்கி வருகிறேன்'' என்றார்.

''பால் இல்லாவிட்டால், மோர் வாங்கிவா'' என்றேன்.

''அதிகாலையில் மாட்டுப்பால் கிடைக்காத ஊரில், மாட்டுமோர் எப்படிக் கிடைக்குங்க?'' என்றார்.

பசியில் எந்த அளவு அறிவு மழுங்கி விட்டது என்பதை உணர்ந்தேன். ஊழியரின் கிண்டலுக்கு ஆளாகிவிட்டதைப் பற்றி வெட்கப்பட்டேன்.

பல்லைக் கடித்துக் கொண்டு, அவருக்கு ஆணையிட்டேன். என்ன ஆணை?

கட்டை வண்டிப் பயணம்

''சிங்கல்பாடியிலிருந்து, கூடிய விரைவில் திருப்பெரும்பூதூர் போய்ச் சேர வேண்டும். எவ்வளவு கூலி கேட்டாலும் பேருந்து நிலையம் வரை வண்டி ஏற்பாடு செய்'' இது என் ஆணை.

சிறிது நேரத்தில் ஊழியர் முருகேசன் வேறொருவரோடு திரும்பி வந்தார். அவர் யார்? ஊராட்சித் தலைவர். வெளியூர் சென்றிருந்த அவர், நள்ளிரவு திரும்பி வந்தாராம்.

''பத்து மணி வரை பொறுத்தால், அரிசி வாங்கி வந்து, சோறாக்கிப் போட ஏற்பாடு செய்யலாம். காலையில் இந்த ஊரில் கூழோ பழஞ்சோறோ மட்டுமே கிட்டும்.

''இங்கு இருந்து பிள்ளைச்சத்திரமே கிட்டவூர். அங்கே பஸ் கிடைக்கும். அங்கே போகக் கூண்டுவண்டி இல்லை. கூண்டு இல்லாத கட்டைவண்டி இருக்கிறது. இப்போதே வேண்டுமானாலும் புறப்படலாம், வண்டிக் குச்சிகளின்மேல் பாய் கட்டி'' என்றார், ஊராட்சித் தலைவர்.

''ஆம் அய்யா! ஊர் முழுவதும் சுற்றிவிட்டேன். கூண்டுவண்டி இல்லை. பக்கத்தூர் சென்று கொண்டுவர நேரம் ஆகும்'' என்று முருகேசன் கூறினார்.

வேறு வழியில்லை; கட்டை வண்டியில் ஏறி, பிள்ளைச் சத்திரம் சென்றேன். மழை விட்டிருந்தது. வண்டியில் வைக்கோல் படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தேன். பிள்ளைச் சத்திரத்தை நெருங்கியபோது, முருகேசன் என்னை எழுப்பினார். நான் விழித்துக் கண்களைத்

துடைத்துக் கொண்டு தெளிவு பெறவும், வண்டி, அவ்வூர்க் கணக்குப்பிள்ளை வீட்டண்டை சென்று நின்றது.

வீட்டுக்குள்ளிருந்து ஒருவர் வெளியே வந்தார். திண்ணையின்மேல் பாயை விரித்துவிட்டு மின்னலென, வண்டியண்டை வந்தார். என்னை இறக்கி, இட்டுக்கொண்டு போனார். திண்ணையில் உட்காரும் வேளை,

காபி குடித்தேன்

''நான் கருணீகர் இனம். என் வீட்டில் காபி குடிப்பீர்களா?'' என்று கேட்டார்.

''காப்பியென்ன, உணவே எவர் வீட்டிலும் உண்பேன்'' என்ற நான் பதில் கூறவும், அவர் வீட்டுக்குள் பாய்ந்தார். மறுநொடி தலையணையொன்றைக் கொண்டு வந்து போட்டார். நான் படுத்துவிட்டேன்.

முருகேசன், நான் யார் என்பதை அவருக்குக் கூறினார். சில மணித்துளிகளில் உள்ளே சென்று, ஒரு வெண்கலச் செம்பு நிறையக் காபியைக் கொண்டு வந்து கொடுத்தார். மூன்று கோப்பை காபியிருக்கும்.

ஒரே மூச்சில் அவ்வளவையும் குடித்துவிட்டேன். மறுநொடி படுத்து விட்டேன்.

அரை மணி நேரம் கழிந்தது; பேருந்து ஒன்று வந்து நின்றது. எங்கே?

அருகில் இருந்த காவல் நிலையத்தண்டை. அவ்வூர்க் கணக்கப் பிள்ளை, நான் களைப்பாறுகையில் காவல் நிலையத்திற்குச் சென்றார்.

நான் யார் என்பதை எடுத்துச் சொன்னார். அடுத்த பேருந்து வண்டியில், எனக்கு எப்படியும் இடம் ஏற்பாடு செய்து திருப்பெரும் பூதூர் அனுப்பி வைக்கும்படி சொல்லிவிட்டு வந்தார்.

அது, மதிக்கப்பட வேண்டியவர்கள் மதிக்கப்பட்ட காலம். எனவே, பிள்ளைச் சத்திரம் காவல் நிலையம் எனக்கு இடம் ஏற்பாடு செய்து கொடுத்தது. நான் பேருந்து ஏறித் திருப்பெரும்பூதூர் போய்ச் சேர்ந்தேன்.

என் காய்ச்சல் அதிகமாகிவிட்டது. அகாலமாயினும் உள்ளூர் அரசு மருத்துவ நிலைய மருத்துவர் வந்து பார்த்து, மருந்து கொடுத்தார். காய்ச்சலோடு மூன்று நாள்களைக் கழித்தேன்.

திரு. முத்துலிங்கம், திரு. சின்னசாமி ரெட்டியார், திரு. பாபு ரெட்டியார், கடைநிலை ஊழியர்கள் லோகநாதன், முருகேசன் ஆகியோர் என்னைக் கண்ணினைக் காக்கும் இமையெனக் காத்தனர். நான்காம் நாள் காய்ச்சல் விட்டது. அதோடு முடிந்ததா?

67. என் முதல் பொதுக்கூட்டச் சொற்பொழிவு

மீண்டும் காய்ச்சல்

சிங்கல்பாடியில் காய்ச்சலில் வீழ்ந்த பிறகு, சில வாரங்கள் வரை, சாலைமேல் இருக்கும் ஊர்களுக்கு மட்டுமே சென்று வந்தேன்.

எப்போதும் அப்படியே செய்ய முடியுமா? அதுவும் பல சிற்றூர்களுக்கு மண்சாலைகூட இல்லாத அக்காலத்தில்?

எனவே நடைமிகுந்த இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

புறப்படும்போது வெயில் இருந்தது. முதல் ஊரைப் போய்ச் சேருவதற்குள் மழை பிடித்துக் கொண்டது.

எனவே, சேற்றிலும் தண்ணீரிலும் வயல்மேல் நடந்து சென்றேன். முதல் இரவு பேரிஞ்சம்பாக்கம் என்னும் சிற்றூரை அடைந்தேன்.

அதற்கு முன் இடைவேளை உண்டேன். ஆனால் இம்முறை அதிகம் நனைந்து விட்டேன்.

பேரிஞ்சம்பாக்கத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் உறங்க வேண்டியிருந்தது. இரவு பூராவும் கொட்டிய மழை, வீட்டிற்குள்ளும் வந்தது; கூரை வழியாக மூலையில் ஒழுகிற்று.

முன்னர் பட்டறியாத துன்பத்தைத் தாங்கிக் கொண்டேன்.

ஊராட்சி வரவு செலவுக் கணக்கு சரியாக வைக்கப்பட்டு இருந்தது.

அடுத்த நாள் அதைத் தணிக்கை செய்துவிட்டு, திருப்பெரும்பூதூருக்குத் திரும்பினேன். நெடுந்தூரம் ஈர வரப்புகளின்மேல் நடந்துவர நேர்ந்தது. மழையோ கொட்டு கொட்டென்று தொடர்ந்து கொட்டிற்று.

அன்றிரவு சிறிதுநேரம் மெய் மறந்து உறங்கினேன். நள்ளிரவுக்குப் பின் கடுமையான காய்ச்சல் கண்டது. கண்கள் நெருப்பாக எரிந்தன. பொழுது விடியுமட்டும் பொறுத்திருந்தேன்.

பொழுது புலரவும் பக்கத்து வீட்டுச் சின்னசாமி ரெட்டியார் காபி கொண்டு வந்தார். என்னைக் கண்டு திடுக்கிட்டார்.

என் உடம்பைத் தொட்டுப் பார்த்தார். 'கொதிக்கிறதே' என்று சொல்லிக் கொண்டே, உள்ளூர் மருத்துவரை அழைத்துவரப் பறந்து சென்றார்.

மருத்துவர், காலதாமதமின்றி வந்து சேர்ந்தார். உடம்பின் வெப்பத்தை அளந்தார். 104 டிகிரி இருந்தது. பிற சோதனைகளைச் செய்தபின், ''இவ்வேளைக்கு மருந்து கொடுக்கிறேன். காய்ச்சல் அதிகமாக இருப்பதால், சென்னை பொது மருத்துவமனையில் உடனே சேர்ந்து விடுவது நல்லது'' என்று ஆலோசனை கூறினார்.

சின்னசாமி ரெட்டியாரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, பேருந்து பிடித்துச் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

சென்னைப் பொது மருத்துவமனையில்

அங்கே பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அதற்கு முன்னர், மருத்துவமனையில் தங்கியது இல்லை. எனவே, இனந்தெரியாத அச்சத்தோடு மருத்துவமனையில் சேர்ந்தேன்.

என்னைச் சேர்ந்த கூடத்தில் பத்துப் பன்னிருவர் படுக்கைகளில் இருந்தார்கள். அதைப் பார்த்தபோது, ஆறுதல் அடைந்தேன்.

என் பகுதியைப் பார்த்த மருத்துவர், டாக்டர் சுந்தரம் என்பவர். அவர், நோயாளிகளிடம் பரிவோடு பழகினார்.

மூன்றாம் நாள் காலை என் காய்ச்சல் தணிந்துவிட்டது. வழக்கமான சோதனைகளைப் பார்த்தபிறகு, ''அளவுமீறிய அலுப்பால் காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. வேறு கோளாறுகள் ஏதும் இல்லை. ஆகவே, கவலைப்படாதீர்கள்'' என்று அவரே என்னைத் தேற்றினார்.

ஆனால் மேலும் ஒரு வாரம் மருத்துவ மனையில் தங்க வைத்து விட்டார். நல்ல ஓய்வு; நல்ல உணவு; நல்ல பரிவு; என்னுடல் தேறிற்று. ஒரே ஒரு குறை.

நான் மருத்துவமனையில் இருப்பதைப் புற்றி ஊரிலிருந்த என் தந்தைக்கு எழுதினேன்.

அக்காலத்திலும் எங்கள் ஊரில், வாரத்திற்கு ஒரு முறையே கடிதங்களைக் கொடுப்பார்கள்.

நான் கடிதம் எழுதியபோது, எங்கள் ஊரை அடுத்துள்ள செய்யாற்றில் பத்து நாள் பெரு வெள்ளம்; பாலாற்றிலும் ஏழெட்டு நாள்கள் வெள்ளம்.

ஆகவே நான் மருத்துவமனையில் இருந்தபோது தந்தையோ, மாமாவோ வந்து பார்க்க முடியவில்லை, ஆனால் ஓர் ஆறுதல் கிடைத்தது.

என் தாய்வழியில், எனக்கு அண்ணன் முறையான திரு. விசுவநாதன் என்பவர் காஞ்சியில் நெல் மண்டி வைத்திருந்தார்.

அவர் அடிக்கடி சென்னைக்கு வருவார். அவருக்குத் தகவல் தெரிந்து அவர், இருமுறை மருத்துவமனைக்கு வந்து பார்த்தார். 1933 முதல் 1940 வரை, அவர், எனக்கு உற்ற, நெருங்கிய தோழராகவும் உதவியாளராகவும் விளங்கினார்.

சென்னையில், திருவல்லிக்கேணிக் கடற்கரையில் திலகர் கட்டத்தில், நாங்கள் இருவரும் திரு. டி.டி. அய்யாசாமி, திரு. தே. ச. குஞ்சிதபாதம், அவர் தம்பி பஞ்சாபகேசன், இரயில்வே அஞ்சல்

பணித்துறையைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி, டாக்டர் நடேச முதலியாருக்கு வேண்டிய திரு. பக்கிரிசாமி ஆகியோரைக் காண்போம்.

மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்போம். உலக நிகழ்ச்சிகள் முதல், உள்ளூர்க் குழப்பங்கள் வரை எங்கள் பேச்சில் தீவிரமாக அடிபடும்.

சர்ச்சில், மகாத்துமா காந்தி முதல், உள்ளூர் அரசியல் தொண்டர் வரை ஆய்ந்து எடை போடுவோம்.

ஒவ்வொருவரும் உள்ளத்தில் பட்டதை ஒளிக்காமல் பேசுவோம். மாறுபட்ட கருத்துடையோர் புண்படுவது இல்லை. அத்தகைய பக்குவத்தை நாங்கள் பெற்றிருந்தோம்.

ஒரு முறை திரு. விசுவநாதன் காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோவிலில் இருந்து 'காஞ்சிபுரம் இட்லி' வாங்கி வந்து, கொடுத்து, எங்களைக் கெடுத்துவிட்டார். அதன் சுவையில் நாங்கள் தீராத பற்றுக்கொண்டு விட்டோம்.

அதன் விளைவு?

திரு. விசுவநாதன் எத்தனை முறை சென்னைக்கு வந்தாலும் காஞ்சிபுரம் இட்லியோடு வர நேர்ந்தது. ஆண்டுக் கணக்கில் இப்படியே விருந்தோம்பினார்.

அச்செலவை அவர் சிறிதும் பொருட்படுத்தவே இல்லை.

திருமணப் பேச்சு

நான் உடல் நலம் பெற்று, திருப்பெரும்பூதூருக்குத் திரும்பிய சில நாள்களில் அங்கு என்னைத் தேடி, ஓர் அரசியல் தியாகி வந்தார்.

உத்தமபாளையத்திலிருந்து, 'பாரதி' மாத இதழை நடத்தி வந்த திரு. நாராயணசாமி தான் அவர். 1933 இல் சென்னையில் நடந்த தமிழ் அன்பர் மாநாட்டில் பாரதி நாராயணசாமியைக் கண்டதைப்பற்றி ஏற்கெனவே எழுதியுள்ளேன்.

அது முதல் அவர் என்னோடு கடிதத் தொடர்பு கொண்டிருந்தார்.

அவருடைய தூண்டுதலால், நான் 'பாரதி'க்கு 'பாரதப் புதல்வனின் புலம்பல்', 'ஜப்பானில் நவயுகம்' போன்ற சில கட்டுரைகளையும் 'முதன்மையாளர்' என்றதோர் சிறுகதையையும் எழுதி அனுப்பியிருந் தேன். அவை உரிய காலத்தில் பாரதியில் வெளியாயின.

அவருக்கு, நான், சாதி உணர்வுகளைத் தலைமுழுகிவிட்ட மெய்யான சமத்துவ வாதி என்பது தெரியும். எனவே என்னிடம் திருமணம் பற்றிப் பேச வந்தார்.

தம்முடைய உறவினர் - செல்வர் - ஒருவருடைய பெண் பத்தாவது வரை படித்திருக்கிறாள். அப்பெண்ணின் பெற்றோர் முற்போக்குக்

கருத்துடையவர்கள். எனவே, கலப்புத் திருமணத்திற்கு உடன் படுவார்கள்.

தம்முடன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற நாயர் ஒருவருடைய மகள் பள்ளியிறுதி வரை படித்திருக்கிறாள். அவரும் முற்போக்குச் சிந்தனையாளர்; கலப்புத் திருமணத்தை விரும்புகிறார்.

எனவே, தம்முடன் சென்று, அவ்விரு பெண்களையும் பார்த்து, பிடித்தமான பெண்ணைச் சொன்னால், என் திருமணத்திற்கு ஏற்பாடு செய்வதாகப் பாரதி நாராயணசாமி கூறினார்.

கலப்புத் திருமணம், காதல் திருமணமாகவும் இருக்க வேண்டும். மணமகன் மேற்கொள்ள இருக்கும் ஊழியத்திற்குப் பொருத்தமான மனப்போக்கும் பண்பும் உடைய பெண்ணாக மணமகள் இருக்க வேண்டும்.

என்னைப் போன்றவனுக்கு ஏற்பாடு செய்யும் திருமணம் ஒத்து வருவது அருமை என்று எனக்குத் தோன்றியது.

எனவே, அமைதியாகப் பேசி, சமாதானப்படுத்தி, இரு பெண் களுக்கும் வேறு இடத்தில், மாப்பிள்ளை பார்க்கும்படி சொல்லியனுப் பினேன்.

அதனால், எங்கள் தொடர்போ நட்போ முறியவில்லை; பல்லாண்டு வளர்ந்து; பொது நடவடிக்கைகளுக்குப் பெரிதும் பயன்பட்டது.

பாரதி நாராயணசாமியிடம் இருந்த ஒரு போக்கு எனக்குப் பிடித்தது. காந்தியவாதியாக இருந்த அவர், காபி, தேனீர் முதலியன குடிக்கமாட்டாரே என்று அய்யப்பட்டேன். அவர் திருப்பெரும்பூதூர் வந்ததும்.

''என்ன பானம் வாங்கிவரச் சொல்ல'' என்று கேட்டேன்.

''எது எளிதில் கிடைக்குமோ அதைக் குடிக்கலாம். காப்பி வேண்டாம், மோர் வேண்டும் என்று அடம் பிடிப்பதன் வழியாக மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்க விரும்பவில்லை.

''மதுபானம் தவிர வேறு எது கிடைக்கிறதோ அதைக் குடிப்பேன். பானத்திற்காகச் சிந்தனையையும் நேரத்தையும் அதிகம் செலவிட விரும்பவில்லை'' என்றார்.

இவர் காந்தியடிகள் கட்டளைப்படி, கள்ளுக்கடை மறியல் செய்து சிறை சென்ற பிரம்மச்சாரி என்பதைக் குறிப்பிட வேண்டும்.

முதல் சொற்பொழிவு

பிறர் பேசுவதைக் கேட்டு அறிவு பெற்று வந்த நான், முதன் முதலாக எப்போது பேசத் தொடங்கினேன்?

திருப்பெரும்பூதூரில் உதவிப் பஞ்சாயத்து அலுவலராக இருந்த போது. அந்நெருக்கடி எப்படி வந்தது?

திருப்பெரும்புதூருக்கு எட்டு ஒன்பது கிலோ மீட்டர் தொலைவில் செங்காடு என்னும் சிற்றூர் இருக்கிறது.

அக்காலம் அவ்வூரில் பஞ்சாயத்துப் பள்ளியொன்று இருந்தது. அதன் தலைமையாசிரியர் ஓர் அய்யர்; நல்ல மனிதர்; நாணயமானவர்.

மாவட்ட ஆட்சிக்குழுவின் தொடக்கப்பள்ளியில் அய்ம்பத்து அய்ந்து வயதில் ஓய்வு பெற்றதும் இப்பஞ்சாயத்துப் பள்ளிக்கு வந்தார்.

அக்காலத்தில் பொதுவாக ஆசிரியர் சமுதாயமும் குறிப்பாகப் பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியர்களும் பட்டபாடு கொஞ்சமல்ல.

தொடக்கப் பள்ளிகளை மாவட்ட ஆட்சிக்குழுக்கள் - சில காலம், வட்ட ஆட்சிக் குழுக்கள் சிலகாலம் நடத்தும். அவற்றில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு - ஆட்சிக்குழுவின் நிதி நிலைமைக்கு ஏற்ப - இரண்டொரு திங்கள் முன் பின்னாகச் சம்பளம் வரும். ஆசிரிய சமுதாயத்தில் அவர்கள் நிலை பரவாயில்லை.

தனியார் நடத்திய தொடக்கப்பள்ளிகள் நிறைய உண்டு. அங்கு வேலை செய்த ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறையே சம்பள மானியம் வழங்க வேண்டும்.

இவ்விரு துறையினரும் தொடக்கப்பள்ளி நடத்த முன்வராத சிற்றூர்களில், தொலைவூர்களில், பஞ்சாயத்துப் பள்ளிகள் நடப்பதுண்டு.

பள்ளிகளே இல்லாத ஊர்களோ பதினாயிரக்கணக்கில் இருக்கும்.

பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் எப்போது கிடைக்கும்? முதல் ஆறு திங்கள் வேலை செய்த அறிக்கை ஆய்வாளரால் தணிக்கை செய்யப்பட்டு மேலிடத்திற்குப் போன பிறகே. மேல் இடம் எது? பஞ்சாயத்துகளின் தலைமை ஆய்வாளரின் அலுவலகம் ஆகும்.

பள்ளி ஆய்வாளர், தணிக்கை அறிவிப்பை மாவட்டக் கல்வி யதிகாரிக்கு அனுப்புவார். அவர் பஞ்சாயத்து இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்புவார். இதற்குள் எட்டு ஒன்பது மாதங்கள் ஆகிவிடும்.

பிறகு சம்பள மானிய ஆணை பிறப்பிக்கப்படும். அதைக் கொண்டுபோய், வட்டக் கருவூலத்தில் காட்டி, பணத்தைப் பெற்று வரவேண்டும்.

முதலில் ஒன்பது பத்துத் திங்கள் பாக்கியைப் பெறுவார்கள். பின்னர் திங்கள் தோறும் குறிப்பிட்ட நாளன்று வட்டக் கருவூலத்திற்குச் சென்று பணத்தைப் பெற்று வரவேண்டும்.

பயணச் செலவு ஆசிரியர் தலையில். துன்பங்களையெல்லாம் பொறுமையாக ஏற்கும்படி ஆசிரியர்களை ஆயத்தம் செய்து விட்டால், அவர்கள் வழியாக நாட்டு மக்களுக்கு எதையும தாங்கும் இதயம் வந்துவிடுமென்று, அக்கால நிர்வாகிகள் நினைத்தார்கள் போலும்.

செங்காடு பஞ்சாயத்துத் தொடக்கப் பள்ளியின் பெற்றோர் சங்க விழாவும் 'சுகாதார' விழாவும் சேர்ந்து கொண்டாடப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில், நான் கலந்து கொள்ள வேண்டுமென்று தலைமை ஆசிரியரும் ஊராட்சி மன்றத் தலைவரும் அடம்பிடித்தார்கள். எனக்குப் பேச வராது என்று சொல்லிப் பார்த்தேன்.

''வராதது ஒன்றும் இல்லை'' என்று ஊக்கப்படுத்தினார் அய்யர்.

''நாளை பெரிய அதிகாரியாகிக் கற்றுக்கொள்ளத் தவிப்பதற்குப் பதில், இப்போதே கற்றுக்கொள்வது எளிது. தண்ணீரில் இறங்கினால் நீச்சல் வரும். பேசத் தொடங்கினால், போடு போடுவென்று நாளை பேசலாம்'' என்று ஊராட்சித் தலைவர் உடுக்கை அடித்தார்.

என்னால் மறுக்க இயலவில்லை. தாட்சணியம் பற்றி ஒப்புக் கொண்டே மிகச் சிலவற்றுள் இது ஒன்று.

விழாவன்று துணிந்து பேசினேன். நாற்பது மணித் துளிகள்; மக்கள் நகரவில்லை. எனக்குத் தன்னம்பிக்கை பிறந்தது. பேச மறுத்து ஒளியத் தேவையில்லை, என்னும் உணர்வு பெற்றேன்.

என்னைப் பேச்சுத் துறையில் தள்ளிவிட்ட அவ்விரு நல்லாருடைய பெயர்களும் மறந்து போய்விட்டன. எவ்வளவு பெரிய தவறு. அதற்காக வெட்கப்படுகிறேன். பெயர் மறந்த அவர்களுக்கு என் நன்றி.

68. பாரதப் புதல்வனின் புலம்பல்

என்னைப் பேச்சு மேடைக்கு இழுத்துவிட்ட செங்காட்டுப் பெரியவர்களின் பெயர்களை மறந்துவிட்டதைப் போல், எழுத்துத் துறையில் இறக்கிவிட்டவர்களை மறக்கவில்லை.

அவர்களில் ஒருவர், உத்தமபாளையத்தைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர், தியாகி நாராயணசாமி ஆவார்.

அவர் நடத்தி வந்த, 'பாரதி' என்னும் திங்கள் இதழில். 1934ஆம் ஆண்டு சனவரித் திங்கள், முதற் கட்டுரை எழுதினேன்.

அதன் தலைப்பு - 'பாரதப் புதல்வனின் புலம்பல்' என்பதாகும்.

பாரதி - மாலை 5, மணி 10 இல் வெளியான அக்கட்டுரை இன்றைக்கும் பொருத்தமானதாக உள்ளது.

பாரதப் புதல்வனின் புலம்பல்

பாரதத் தாயே! நீ முன்னாள் பெற்று இருந்த உயர்வென்ன! இன்னாள் பெற்றுள்ள தாழ்வென்ன! சுதந்திரத்துடன் சுற்றித் திரிந்த நீ, இன்று அடிமைச் சிறையில் அவதிப்படுகிறாய். ஒழுக்கம், தத்துவம், இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம் முதலிய அருஞ்செல்வங்களை வரையாதளித்த நின் வள்ளன்மை எங்கே?

உன் பண்டைச் செழிப்பும் கொழிப்பும் எங்கே? எல்லாமிழந்து பண்டைச் சிறப்பிலேயே நின் தாழ்வை மறைக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டனையே!

நின் அன்றைய உயர்வுக்குக் காரணம் என்ன? இன்றைய தாழ்விற்கு வித்து என்ன?

அந்நியர் ஆட்சியும் சூழ்ச்சியும் நின் தாழ்வின் காரணம் என்பார் ஒரு சாரார்.

நின் ஜாதி மத பேதம் என்பார் மற்றோர் சாரார்.

இருவர் வாதத்திலும் உண்மை உள்ளது. எனினும், நிதானமாக யோசித்தால் வேறொரு முக்கிய காரணம் இருப்பதையும் அறிவோம்.

உன் உயர்வின் காரணம் உன் பண்டைப் புதல்வரின் 'மௌனம்.' தாழ்வின் காரணம் உன் இக்காலப் புதல்வரின் வெறும் 'வாய் வீச்சு.'

உன் பண்டைப் புதல்வர் ஆழ்ந்த ஆலோசனைக்காரர்களாகவும், தாங்கள் கண்ட முடிவுகளை வீண் படாடோபம் இன்றி உலகிற்கு வெளியிடுவோராயும் இருந்தனர். வெறும் ஆரவாரப் பிரியர்களல்லர். அருஞ்செயலாற்றும் வீரர்களாயிருந்தனர்.

அதனாலன்றோ இன்றைக்கும் பல நாட்டார் மெச்சி விரும்பிப் பின்பற்றும் அரும்பெருஞ் செயல்களைப் பல துறைகளிலும் இயற்ற முடிந்தது.

வெறுங் கூச்சலிடுவோர்களாகவோ, வாய் வீரர்களாகவோ மாத்திரம் இருந்திருப்பார்களானால் நீ அத்துணைப் பெருமைகளையும் அவர்களால் மெச்சப் பெற்றதும், உலக மக்களில் பெரும்பாலரது மதிப்பையும் வியப்பையும் கவர்ந்ததுமான புத்த சன்மார்க்கத்தை நீ ஈன்றளித்தது எதனால்?

நின் அரும்புதல்வனின் - ஒப்பிலா மணியின் ஆழ்ந்த சலியாத சிந்தனையாலன்றோ? வெறும் படாடோப வாயாடித்தனத்தால் அல்லவே!

அவ்விதமே தங்கள் சக்திகளை ஒன்று திரட்டி ஆழ்ந்த யோசனையிலும், உயரிய செயல்களிலும் சலியா உழைப்பிலும் செலுத்தி வந்த கர்மயோகிகள் பலரைப் பெற்றெடுத்தாய்.

அவர்களின் உழைப்பால், இந்நாள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் பல, காட்டுமிராண்டி வாழ்க்கை வாழ்ந்த அக்காலத்திலேயே பல துறைகளிலும் சிறப்புற்றனையே!

இன்று எஞ்சியுள்ள சிறப்பும் நின் புதல்வர்களாகிய விவேகானந்தர், காந்தி, ஜவஹர், போஸ், ராய், ராமன் போன்ற ஆழ்ந்த சிந்தனைக்காரர்களால் அன்றோ நிலைத்திருக்கிறது.

ஓய்வு உறக்கமின்றிச் சதா சொன்மாரி பொழியும் தேசாபிமானிகளால், சீர்திருத்தவாதிகளால் அல்லவே!

நின் பிந்திய புதல்வர்கள் அவ்வருங் குணங்களைக் கைவிட்டனர். வீண்பெருமையிலும், களியிலும், சுவைக்கு உதவா அற்ப காரியங்களிலும் தங்கள் மகத்தான ஜீவசக்தியைத் தூள் தூளாய் - பொடிப் பொடியாய்ச் சிதறவிட்டனர்.

நின் வீழ்ச்சிக்கு அடிகோலினர். சக்தி செத்துப் போய்விடவே நின் சீரும் அழிந்துபோயிற்று. பிற நாட்டினரின் மதிப்பும் மறைந்து போயிற்று. நீ பிற நாட்டினர் முகத்தில் விழிக்கவும் வெட்கித் தலைகுனிந்து செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

அன்று பளிச் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும் ஒளியையும் இன்று நினைக்கக்கூட முடியாத வேலைப்பாடும் அமைந்த சேலையுடுத்தி உலவினாய். இன்றோ காலச் சுழற்சியால், பொலிவிழந்து, மங்கி, கிழிந்த அதே சேலையைப் பல ஓட்டுகளுடன் கட்டிக்கொள்ள வேண்டிய கதி வந்துவிட்டதே!

ஒவ்வொரு தையலும் ஒரு காலத்தில் அச்சேலை மிக அழகுடன் விளங்கியதையும் அதைப் போன்ற பல அழகிய உடைகள் நின் தேகத்தைப் பெற்ற பண்டைச் சீரையும், தற்கால எளிமையையும் நினக்குக் காட்டுகின்றவோ? அதனால்தான் நீ வெட்கித் தலைகுனிகின்றனையோ?

நின் மனம் எத்தனை பாடுபடுகின்றதோ? என்ன என்னவெல்லாம் நினைத்துருகுகிறதோ? ஆ! நின் கண்கள் எத்தனை ஆற்றுப் பெருக்கை உகுக்கின்றனவோ!

அவர்கள் வழிவந்த நாங்களோ, ஓயா வாயாடிகளாய் விட்டோம். தாழ்வைக் கருதாக் கயவர்களாகிவிட்டோம். மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினையிழந்தோம். களியிலும், வீண் வாதத்திலும் அற்ப விஷயங்களிலும் சக்திகளைச் சிதறவிட்டோம்.

எங்களுக்கு ஆழ்ந்த யோசனை, சலியா உழைப்பு முதலியன குதிரைக் கொம்பாகி விட்டன. உருப்படியான நிர்மாண வேலைக்கு லாயக்கற்றவர்களாய்ப் பல சின்னஞ்சிறு கதைகள் பேசி வேடிக்கை மனிதர்களானோம்.

உன் நலத்தை அடியோடு மறந்து விடவில்லை. நின் சுதந்திரத்திற்காக எண்ணிறந்த மகாநாடுகள் கூட்டினோம். வீராவேசத்துடன் நீண்ட சொன்மாரிகள் பொழிந்தோம். சுவையற்ற திட்டங்கள் வகுத்தோம்.

சாதிமத பேதத்தை யறுக்க எவ்வளவு அழகிய உருக்கமான பிரசங்கங்கள் - வழிகள்! இந்தியனின் வறுமையைக் களைய எத்தனை பொருளாதாரத் திட்டங்கள் செய்தோம்! எத்தனை விதக் கிராமச் சீர்திருத்த முறைகள்!

அடைந்த உருப்படியான பலன் என்ன? வெகு வெகு சொற்பமே.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமோ? எத்திட்டம் சிறந்தது எனும் வாதப் போரிலேயே எங்கள் சக்தியெல்லாம் சிதறிப் போயிற்றே. பஞ்சிற் பற்றிய தீ 'பொஸ்' என்று கணநேரத்தில் எரிந்து தணிந்து விடுவதைப் போல் நிர்மாண வேலை எங்கிருக்கிறது!

நாட்டில் வகுக்கப்படும் எண்ணிறந்த திட்டங்களையும், கோலும் வழிகளையும் கவனித்தால் தேச முன்னேற்றத்தைவிடத் தாங்கள் ஒரு பெரிய திட்டத்தை வகுத்த பெரியோர்களாகக் கருதப்பட வேண்டு மென்ற எண்ணமே தலைசிறந்து விளங்குவதாய் ஐயமேற்படுகிறதே.

எல்லாரும் பேசாமடந்தைகளாக வேண்டும் என்பதல்ல என் கருத்து. தமது கருத்துகளையும், உள்ளக் கிடக்கைகளையும் மற்றவர்களின் மனத்திற் பதிய வைக்கப் பேச்சு தெளிவாக மனத்திற் தைக்கக்கூடிய பேச்சுப் பழக்கம் மிகமிக அவசியமே.

சபைக் கோழையைப் போன்ற பரிதாபகரமான பிராணி உலகத்திலேயே வேறு இல்லை. வீண் வெற்றுரை வீரனைப் போன்ற வெறுக்கத்தக்க பிராணியும் இல்லை. ஆகவே, பேச்சு கட்டுப்பாட்டிற்கு அடங்கியதாய், தக்க சமயத்தில் உதவுவதாய் இருக்க வேண்டும். அளவிற்கு மேற்பட்டதாய் - அனாவசியமாயிருத்தலாகாது.

நாங்கள், பொதுவாக மூன்று பிரிவுகளில் கட்டுண்டு கிடக்கிறோம்.

முதற்பிரிவு, பேச்சு வீரர்களை, பாட்டு வீரர்களை, நிர்மாண வேலைக்கு லாயக்கற்றவர்களைக் கொண்டது.

இரண்டாம் பிரிவினர் 'அவர் என்ன அருமையாகப் பேசினார்' என்று கூறிவிட்டு, அத்துடன் காரியத்தை மறந்து விடுபவர்கள். நாட்டைப் பற்றியோ பொது விஷயங்களைப் பற்றியோ கவலைப்படாத அசிரத்தையாளர்கள், 'எது எக்கேடு கெட்டாலென்ன' என்று இருப்பவர்கள், மூன்றாம் பிரிவினர்.

இப்பிரிவுகளுக்கப்பால் கர்மயோகிகளாய் - செயலாற்றுபவர்களாய் - உண்மைத் தேசபக்தர்களாய் - சீர்திருத்தவாதிகளாய் நின் புதல்வர்களில் பதினாயிரத்தில், லட்சத்தில், இல்லை கோடியில் ஒருவர் தான் உள்ளார். இதனாலன்றோ,

''நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி''

என்று எங்கள் புலவர் சிகாமணியும் சாட்டையடி கொடுத்தார். அந்த அடி ஏன் எங்கள் உடலில் உறைக்கப் போகிறது? நாங்கள்தான் காண்டா மிருகத்தின் தோலைப் போர்த்தவர்கள் ஆயிற்றே!

ரிஷிகள் வழிவந்து இன்று அடிமைகளாய், கோழைகளாய் வாழும் தோழர்களே! நாடு விடுதலை பெறவேண்டாமா? செழிப்புற வேண்டாமா? பண்டைச் சிறப்பையும் புதுமைச் செல்வங்களையும் பெறவேண்டாமா?

அப்படியானால் 'மோனம் என்பது ஞான வரம்பு' என்ற உண்மையை உணர்வோம்.

''பேச்சு வெள்ளி; பேசாமை பொன்'' என்பதை மனத்திலிருத்து வோம்.

ஆரவாரத்தை அகற்றுவோம். ஆழ்ந்து ஆலோசிக்கப் பழகுவோம்.

நிர்மாண வேலையில் சலியாதுழைப்போம்; பகட்டை நீக்குவோம்.

★ ★ ★

நான், திருப்பெரும்பூதூரில் உதவிப் பஞ்சாயத்து அலுவலராய் இருந்தபோது எந்த ஊராட்சித் தலைவரோடும் பகைமை வளர்த்துக் கொள்ளவில்லை. எல்லோருடைய நேசத்தையும் பெற்றிருந்தேன் என்று சொல்லலாம்.

நான் அவர்களில் ஒருவனாகவே பழகினேன்; அவர்கள் வீடுகளில், வேற்றுமை பாராட்டாது உண்டேன். சில வேளை அவர்கள் வீட்டுப் பிள்ளையைப் போன்று திண்ணைகளில் உறங்கினேன்.

அக்கால கட்டத்தில் என்னோடு பழகிய எவரும் என்னைப் பார்த்தும் பாராததுபோல் போனதில்லை; என் மேல் வெறுப்புக் கொள்ள நேர்ந்ததில்லை.

எனக்கு வேண்டியவர்கள்

இருப்பினும் சிலர் மிகவும் வேண்டியவர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலரைப் பற்றிச் சுருக்கமாகவாகிலும் குறிப்பிட வேண்டும்.

திருமுடிவாக்கம் சுந்தரராம அய்யர் எனக்கு மெய்யான நண்பர். எனக்கு அண்ணன்போல் இருந்தவர். சிறுகளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர், திரு. நாகரத்தினம் என்பால் பெரிதும் அன்பு கொண்டிருந்தார். எனக்கும் அவர்பால் அன்பு நிறைய உண்டு.

முதன்முறை சிறுகளத்தூருக்குச் சென்றபோது மணியக்காரரைத் தேடிச் சென்றேன். அவ்வூரில் சாதி இந்துக்கள் ஒரு தெருவில் குடியிருந்தார்கள். இருபது வீடுகளுக்கு மேலிராது. சைவ முதலியார் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

அவர், என் பதவியைப் பற்றிக் கேள்விப்பட்டதும், அன்பாக வரவேற்று உபசரித்தார். ''ஊராட்சித் தலைவர் வீடு ஒரு கல் தொலைவுக்கு மேல் இருக்கும். இருக்கிறாரா என்று பார்த்துவரச் சொல்லுகிறேன்'' என்று கூறி ஆளை அனுப்பினார்.

போனவர், வரவு செலவுக் கணக்கு, கூட்டக் குறிப்பேடு ஆகியவற்றுடன் வந்து சேர்ந்தார். தலைவர் அடையாறு சென்றிருப்பதாகச் சொன்னார்.

கணக்குகளைப் பார்த்தேன்; ஒழுங்காக இருந்தன. கையெழுத் திட்டேன்.

பிறகு, முதலியார் சொன்னார்:

''நாகரத்தினம் பத்தாவது வரை படித்தவர். சிறுசிறு ஏரி, கட்டட வேலைகளை ஒப்பந்தம் எடுத்துத் தொழில் புரிந்து வாழ்கிறார். கை சுத்தம் வாய் சுத்தம் உடையவர்; ஆதிதிராவிடர்; இவ்வூர்க் குடியிருப்புப் பெரியது இருநூறு வீடுகள் இருக்கும்.

''முதலில் நான் ஊராட்சித் தலைவராக இருந்தேன். நாகரத்தினம் முன்னுக்கு வந்ததும், நானே கூப்பிட்டு, அவரைத் தலைவராக்கி விட்டேன்.

''அத்தனை வீட்டுக்காரர் இருக்கையில், அவர்கள் பொறுப்பேற்பதே சரி. அதுவும் படித்த நல்ல பிள்ளை இருக்கையில், நாமாக விட்டு விட்டால் அவர்களும் நம்மை மதிப்பார்கள்'' என்றார்.

அப்பெரியவர் மணஞ்சேரி கந்தசாமி முதலியாரின் உறவினர். அவருடைய தெளிவைப் போற்றினேன்.

சிறுகளத்தூர் குடியிருப்பில், மாவட்ட ஆட்சிக்குழுவின் தொடக்கப் பள்ளியொன்று இருந்தது. அதைப் பார்வையிடும் சாக்கில் அங்கே சில முறை சென்றிருக்கிறேன்.

சிலவேளை திரு. நாகரத்தினம் அங்கு வந்து என்னைக் கண்டது உண்டு. அப்போதும் அவர் எனக்குக் 'காபி' கொடுக்கத் துணிந்ததில்லை.

யாரிடமும் எதையும் கேட்க நாவு எழாத நான், அவரிடம் மட்டும் எப்படிக் கேட்பேன்?

எப்போது போனாலும் சிறுகளத்தூரில் முதலியார் வீட்டில்தான் எனக்குச் சாப்பாடு.

மாத்தூர் கிருஷ்ணசாமி நாயுடு எனக்கு மிகவும் வேண்டியவர்; நல்ல பண்புடையவர். அவருடைய மகன், திரு. மா.கி. தசரதன், படித்துப் பட்டம் பெற்று, கல்லூரி முதல்வரானபோது, என் தம்பியொருவர் அந்நிலைக்கு வந்தது போன்ற மகிழ்ச்சியை அடைந்தேன்.

திரு. தசரதன், அண்ணாநகர் கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வராக இருந்தபோது, நான் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தேன்.

அவர் என்னைக் கல்லூரி விழாவொன்றிற்கு அழைத்தார். அழைப்பை ஏற்றுக்கொண்டு, நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன்.

எதிர்பாராத வகையில் என்னை அதிர்ச்சியடையச் செய்தார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நூல்கள் கொண்ட பேழையொன்றை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

என்னுள் வெகுளி பொங்கிற்று. தொடக்கப்பள்ளி ஆசிரியரைக்கூட, நாலு பேர்கள் முன்னிலையில் நான் கடிந்து கொண்டதில்லை; தனியாகவே கடிந்து கொண்டிருப்பேன்.

காரணம்?

ஆசிரியர் மரியாதை இழந்தால், அப்புறம் அவருடைய திறமை செயல்படாது. என் கடிந்துரைக்கு ஆளானவர்கள் ஆய்வாளர்கள் மட்டுமே இருக்க முடியும். அதுவும் சரியென்று வாதிட மாட்டேன்.

அவர்களிடம் சுடு நெருப்பாக இருந்ததால்தான் அவர்களும் என்னை எவ்வலையிலும் சிக்க வைக்கவில்லை. நானும் அவர்களில் ஒருவரையும் காவல்துறையின் புலனாய்வுக்கு விடவேண்டிய நிலைமை உருவாகவில்லை.

அவர்களும் இதற்கும் அதற்கும் ஆசைப்பட்டு மாட்டிக் கொள்ளவில்லை.

திரு. தசரதன் கொடுத்த சங்கத்தமிழ் இலக்கிய நூல்களைப் பேழை யோடு, சென்னைப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வழங்கிவிட்டேன்.

பென்னலூர் இராமலிங்கர் ரெட்டியார், கண்ணன்தாங்கல் நாயுடு, குத்தம்பாக்கம் நாயுடு, காண்டூர் சடகோபாச்சாரியார், எடையார்பாக்கம் நாயுடு ஆகியோர் எனக்கு மிகவும் பிடித்தவர்கள்.

69. நான் செய்த தவறுகள்

தண்டனை வாங்கிக் கொடுத்தேன்

நான் அப்பதவியில் இருந்தபோது இருவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க நேர்ந்தது. அதைப்பற்றி நான் பல இரவு கவலைப்பட்டதுண்டு.

பிச்சிவாக்கம் என்றோர் சிற்றூர் கூவத்திற்கு மேற்கே, மூன்று நான்கு கல் தொலைவில் இருக்கிறது. அவ்வூரின் ஆட்சி மன்றத் தலைவர் ஒருவர் முதலியார்; வழி வழி வசதி படைத்தவர்.

அவர் குடும்பத்தைக் கவனிப்பதில்லை. ஊரில் இருப்பதில்லை. இளம் மனைவியையும் பிள்ளைகளையும் வாடவிட்டுவிட்டு, கூவம் என்னும் ஊரில் தாசி வீடே கதியாக இருந்தார்.

பிச்சிவாக்கத்திற்குப் போக, கூவம் வரை பேருந்தில் செல்ல வேண்டும். அங்கிருந்து போக, கோடைகாலத்தில் வாடகை வண்டி கிடைக்கக்கூடும். மற்றக் காலங்களில், ஏரிக்கரைமேல், வயல் வரப்புகளின்மேல் நடப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

முதன்முறை நடந்தே செல்ல நேர்ந்தது. ஊரில் தலைவர் இல்லை. பக்கத்து வீட்டுப் பெரியவர் என்னை அமைதிப்படுத்தி, தங்கவைத்து, அடுத்த நாள் காலை அனுப்பி வைத்தார்.

அடுத்த முறை வருகிற நாள் குறித்து விட்டே சென்றேன். அப்போதும் தலைவர் கிடைக்கவில்லை. இரு பயணமும் வீணான பிறகு, பதிவு அஞ்சலில் அவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

மற்றொரு நாள் குறித்து, அன்று கணக்குகளை, பிச்சிவாக்கத்தில் காட்ட ஏற்பாடு செய்யும்படி அறிவிப்புக் கொடுத்தேன். அப்படிப் போனபோதும் அவர் இல்லை; ஆனால் கணக்குகளைப் பக்கத்து வீட்டில் யாரோ ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போய் இருந்தார்.

அவற்றைத் தணிக்கை செய்தேன். ஈராண்டுகளாக வந்த தொகைகளை, கணக்கில் வரவு வைத்திருந்தார். வேலைகள் ஏதும் நடக்கவில்லை. வந்த பணம் அஞ்சல் சேமிப்பு வங்கியில் வைக்கப்பட்டதா? இல்லை.

கணக்கோடு பணத்தைக் கொடுத்து விட்டுப் போயிருந்தாரா? அதுவுமில்லை. இந்தத் தகவல்களைக் கணக்கு ஏட்டில் பதிந்து விட்டுத் திரும்பினேன்.

என்னுடைய மாதாந்திர அறிக்கை மேலிடம் சென்றது. பிச்சிவாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மேல், பொதுநிதியைக் கையாடியதாக வழக்குப் போடும்படி கட்டளை வந்தது.

'பணத்தைக் கட்டிவிடத் தவணை கொடுக்கலாம். வழக்குமன்றம் செல்வது, மற்ற ஊராட்சித் தலைவர்களிடம் பீதியை உண்டாக்கும்' என்று நான் மேலிடத்துக்கு எழுதிப் பார்த்தேன். அது பலிக்கவில்லை.

சைதாப்பேட்டை கோட்டாட்சியர் முன்பு வழக்கு வந்தது. அப்போது நிர்வாகமும் நீதித்துறையும் இணைந்து இருந்தன. திரு வீரபத்ர பிள்ளை என்பவர் வழக்கை விசாரித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவருக்காக வழக்குரைஞர் திரு ஜகன்னாதன் என்பவர் வாதாடினார். நான் முதல் சாட்சி. வழக்கு மன்றத்தில்தான், பிச்சிவாக்கம் ஊராட்சித் தலைவரை முதன் முறையாகப் பார்த்தேன்.

குறுக்கு விசாரணை

என்னைக் குறுக்கு விசாரணை செய்யும்போது வழக்குரைஞர்,

''நீங்கள் பொய்யான நாட்குறிப்பு எழுதுவதில்லையா?'' என்று கேட்டார்.

எனக்கு உலகம் தெரியாத வயது. சினத்தோடு ''அவமதிப்பான இக்கேள்வியை ஆட்சேபிக்கிறேன்'' என்றேன்.

திரு வீரபத்ரபிள்ளை புன்முறுவல் பூத்தார். ''குற்றவியல் வழக்கில் இப்படித்தான் இடக்காகக் கேள்வி கேட்பார்கள். கோபப்படக்கூடாது. மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு'' என்றார்.

வழக்கின் முடிவில் அவருக்குப் பெரிய அபராதம் விதிக்கப்பட்டது. வந்திருந்த உறவினர் ஒருவர் அதைக் கட்டிவிட்டு, அவரை விடுவித்தார்.

மேற்கூறியவர், பொதுப்பணத்தைத் தீய நடவடிக்கையில் பாழாக்கிவிட்டவர். மற்றொருவர் நிலை வேறு.

பொதுப் பணத்தைக் கையாடியவர்

குன்றத்தூருக்கு அப்பால், திருப்பெரும்பூதூர் போகும் சாலையில் நல்லூர் என்னும் சிற்றூர் ஒன்றிருக்கிறது. அது ஏழ்மையான ஊர். அதன் ஊராட்சித் தலைவருக்குச் சில ஏக்கர் பூமியே உண்டு.

அவர் அப்பாவி மனிதர். அவருடைய பஞ்சாயத்திற்குச் சேரவேண்டிய பணம் வந்தபோது, ஊரில் பயிர்வேலைகள் மும்முரமாக நடந்தன.

அச்செலவிற்குப் பொதுப் பணத்தைப் பயன்படுத்திவிட்டார். இப்படிக் கையாண்டது அறுபது ரூபாய்களுக்குள்.

என் தணிக்கையின்போது, அவரே அப்படிக் கூறினார். அதை அப்படியே பதிந்தேன். ஆனது ஆகட்டுமென்ற அசட்டுத் துணிச்சலில். முப்பது நாள்களுக்குள் பணத்தை வங்கியில் கட்டிவிட்டு,

அறிவிக்கும்படி எழுதிவிட்டு வந்தேன். அந்தக் கெடுவுக்குள் ஈடுகட்ட அவரால் முடியவில்லை.

எனவே, பதிவு அஞ்சலில் அறிவிப்புக் கொடுத்து மிரட்டப்பட்டார். தவணை நீட்டிப்பிற்கு அது ஒரு சாக்கு.

அப்போதும் அவரால் அச்சிறு தொகையைச் சமாளிக்க முடியவில்லை. இறுதியில் அவரும் குற்றவாளிக் கூண்டில் நிற்க நேர்ந்தது. அவர் வயது அறுபதை நெருங்கிக் கொண்டிருந்தது.

வழக்கு மன்றத்தில் நான் சான்று கூற நேர்ந்தது. வழக்கை விசாரித்த திரு வீரபத்ர பிள்ளைக்கு அக்கிழவர்பால் பரிவு பிறந்தது.

''இளங்கன்று பயமறியாது. இவ்வதிகாரி இளம்பிள்ளை. அதனால் முன்பின் யோசிக்காமல் சட்டென்று வயதானவர்களையெல்லாம் வழக்கு மன்றத்தில் நிற்க வைத்து, உள்ளே தள்ளப் பார்க்கிறார்'' என்று, இடையே என்னைப் பற்றி விமர்சித்தார்.

குற்றவாளிக் கூண்டில் இருந்த அந்தக் கிழவர்,

''எசமான்! அவர் பேரில் நான் குற்றம் சொன்னால் என் கண் அவிந்து போகும். அவருடைய கருணை இல்லாவிடில், இந்நேரம் நான் கம்பி எண்ணிக்கொண்டிருப்பேன். அந்தப் புண்ணியவான் என்னைக் காப்பாற்ற எவ்வளவோ முயன்றார். என் பொல்லாத வேளை அவர் முயற்சி பலிக்கவில்லை'' என்று கையெடுத்துக் கும்பிட்டு, கண்ணீர் விட்டுக் கூறினார்.

''பரவாயில்லையே! வழக்கு மன்றத்தில் நிறுத்திவிட்டு, நல்ல பேரும் எடுக்கிறீரே!'' என்று நடுவர் கூறினார்.

வழக்கின் முடிவு என்ன? ''வழக்கு மன்றம் கலையும் வரை சிறை; பெருந்தொகை அபராதம். அதிலிருந்து பஞ்சாயத்துக்குரிய பணத்தை வங்கியில் சேர்த்துவிட வேண்டும்'' இம்முடிவைக் கேட்டதும் ஆயத்தமாக வந்திருந்த உறவினர் ஒருவர் பணத்தைக் கட்டினார். வழக்கு மன்றம் கலைந்தது. கிழவர் விடுதலையானார்.

பிறகு அவர் என்னைத் தேடி வந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக் கோரினார். அப்படியும் ஒரு மனிதர் இருந்தார்.

தவறு செய்தேன்

நான் திருப்பெரும்பூதூரில் பணியாற்றுகையில், சட்டமன்றப் பொதுத்தேர்தல் வந்தது.

அத்தொகுதியில் திருவொற்றியூர் சண்முகம், திருமதி விசாலாட்சி சாத்திரியும் போட்டியிட்டார்கள்.

பிந்தியவர் புதுமுகம். இந்தியத் தேசியக் காங்கிரசின் சார்பில் நின்றார்.

திரு சண்முகத்தைப் பற்றி எவ்வித அவதூறும் சொல்ல முடிய வில்லை. நல்ல பொதுத்தொண்டு ஆற்றியவர். வீட்டுப் பணத்தைச் செலவு செய்து பொதுத்தொண்டு ஆற்றிக் கொண்டிருந்தார். வழி வழி பெற்ற உணவுப் பழக்கத்தைக் கைவிட்டுவிட்டு, மரக்கறி உண்ணும் நோன்பினைக் கடைப்பிடித்தார். எளிய மக்களை மதித்தவர்.

'காங்கிரசின் சார்பில் கழுதையை நிறுத்தினாலும் வாக்களியுங்கள்' என்பதே அப்போதைய தேர்தல் முழக்கம்.

காங்கிரசு அலை வீசிய அக்கால கட்டத்தில், தொண்டு செய்து பழுத்த பலர் தோற்றார்கள். அதுவரை தொகுதி மக்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத பலர், காங்கிரசின் செல்வாக்கால் வெற்றி பெற்றார்கள். அப்பணியில் திரு சண்முகம் தோற்றார்; திருமதி விசாலாட்சி வென்றார்.

இந்தத் தேர்தலின்போது நான் ஒரு குற்றத்திற்கு ஆளானேன். தேர்தல்நாள் நெருங்கும்போது ஒரு மாலைப்போது திரு சண்முகம் திருப்பெரும்பூதூரில் என் அலுவலகத்திற்கு வந்தார்.

என்னைத் தனியாகக் கூப்பிட்டு ''இம் முடிப்பில் மூவாயிரம் ரூபாய்கள் ஒரு ரூபாய் நோட்டுகளாக உள்ளன. உங்கள் பொறுப்பில் வைத்திருங்கள். தேர்தல் நாளன்றோ அதற்கு முன் நாளோ இன்னின்னார் வந்து கேட்டால், சீட்டு வாங்கிக் கொண்டு கேட்ட பணத்தைக் கொடுங்கள்'' என்றார்.

சில பெயர்களை என்னிடம் சொன்னார். நொடிப்பொழுது தயங்கினேன். அவருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டவன். அவர் என்னைத் தம்மிடம் வேலை செய்யும் ஊழியராக நடத்தியதில்லை. தோழனாகவே நடத்தி வந்தார்.

பதினைந்து நாள்களுக்கு ஒரு முறையாகிலும் அவர் இல்லம் சென்று உணவருந்தத் தவறியதில்லை. அப்போது தன்மான இயக்கம் பற்றியே பேசுவோம். அப்படியிருந்தும் தேர்தல வேலையில் சிக்கித் தயங்கினேன்.

''நீங்கள் மாவட்ட ஆட்சிக்குழு ஊழியர். மாவட்ட ஆட்சிக் குழுத் தேர்தலில்தான் நீங்கள் தலையிடுவது தவறு. சட்டமன்றத் தேர்தலில் கூட வாக்குச் சேகரிக்க வேண்டாம்..இந்தப் பணத்தை வைத்திருந்து கொடுக்கும் உதவி செய்வது தவறல்ல'' என்றார். நானும் இசைந்தேன்.

அத்தவறைச் செய்தேன். பிறகே தெளிந்தேன். பிற்காலத்தில் கடும் பத்தியத்தை மேற்கொண்டேன்.

தொடர்பில்லாத ஒருவருக்காக மற்றொரு தவறு செய்தேன். கீழச்சேரி திரு தெய்வசிகாமணி முதலியார், பட்டதாரிகள் தொகுதியிலிருந்து சட்டமன்றத் தேர்தலுக்கு நின்றார். அவருக்காக, என் நண்பர்கள் இடையே தீவிரமாக வாக்கு வேட்டையாடினேன்.

திரு சண்முகம் கொடுத்துவிட்ட பணத்தில் அய்ந்நூறு ரூபாய்கள் போல் மிஞ்சின. அதை அவரிடமே ஒப்படைத்தேன். அக்காலத்தில் வாக்காளர்கள் யாருக்கு வாக்கு அளிக்க விரும்புகிறார்களோ அவர்களிடம் மட்டுமே பணம் வாங்குவார்கள். எட்டணா, ஒரு ரூபாயே கையூட்டு. ஆகவே, பணம் மிச்சம்.

70. திறமைக்கும் நேர்மைக்கும் இங்கு இடமில்லை

புலவர் பட்டம் பெற விரும்பினேன்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றிலிருந்து விடுபட்டாலும் மொழிப்பற்று, நாட்டுப்பற்று போன்றவை பலரை எப்படியாவது வளைத்துக் கொள்வது உண்டு.

நான் திருப்பெரும்பூதூரில் குடியிருந்தபோது என்னுள் ஓர் அவா கருவுற்றது. அதற்குக் காரணம் என் இனிய நண்பர்கள்.

காஞ்சிபுரத்தில் என்னோடு படித்த தாமல் கதிர்வேலு என்பவர் திருப்பெரும்பூதூர் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டு இருந்தார். அவருடைய நட்பும் துணையும் புதுப்பிக்கப் பட்டன.

அவரோடு, அதே பள்ளியில் திரு இராமலிங்கம் என்பவர் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

அவருடைய அண்ணார் திரு இராஜா நாயக்கர், வட ஆற்காடு மாவட்டத்தில் பெயர் பெற்ற தமிழாசிரியர்.

திரு மரியண்ணா என்னும் கத்தோலிக்கக் கிறுத்துவர் ஒருவர் அப்பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

நாங்கள் நால்வரும் கதிர்வேலுவின் வீட்டுத் திண்ணையில் மாலைப்பொழுது கூடுவோம். உடலோம்பலைக் கருதி நெடுந்தூரம் நடந்து வருவோம்.

எங்கள் திண்ணைப் பேச்சிலும் வழிநடைப் பேச்சிலும் அடிபடாத பெரியவர்கள் இல்லை; பெரிய நிகழ்ச்சிகள் இல்லை. உள்ளூர் ஆட்சி மன்றம் முதல் இந்திய அரசு வரை எடைபோடுவோம்.

ஏன்? பிரிட்டானியப் பேரரசும் மதிப்பிடப்படும். இலக்கியம் பற்றியும் அடிக்கடி உரையாடுவோம்.

திரு கதிர்வேலு பழுத்த பகுத்தறிவு வாதி; உள்ளம் உறுதி மிகுந்தவர்; படாடோபமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர். பெண்ணுரிமை பேணியவர். தமிழிலக்கியத்தில் புலமை உடையவர்.

தமது ஒரே மகள் மணிமேகலையைப் படிக்க வைத்து ஆசிரியை ஆக்கியவர். பிற்காலத்தில் அவர் மறைந்தபோது, மணிமேகலை தன்னந்தனியே கன்னியாக நின்றுவிட்டாள். ''நெ.து. சுந்தரவடி வேலுவிடம் சொல்; அவர் மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் செய்து வைப்பார்'' என்றாராம். நான் நிறைவேற்றவில்லை.

''சங்க காலத்தில் புனைந்துரை குறைவு; கட்டுக் கதைகள் மலிந்த பிற்கால இலக்கியம் தமிழையும் தமிழரையும் கெடுத்தது என்பது அவருடைய அழுத்தமான முடிவு. இது பற்றிய உரையாடலில் கதிர்வேலுவும் இராமலிங்கமும் அதிகம் பங்குபெறுவர்.

நானும் மரியண்ணாவும் சிற்சில வேளையே நுழைவோம்.

இவ்வுரையாடலில், என்னைத் தமிழ்ப் புலவர் சான்றிதழுக்குப் படிக்கும்படி கதிர்வேலு ஆலோசனை கூறினார்.

''வீட்டிலிருந்தபடியே படிக்கலாம். நானும் அவ்வப்போது பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்'' என்று இராமலிங்கம் ஊக்கப்படுத்தினார்.

திங்கள்தோறும் இருபது நாள்கள் வெளியூர் செல்ல வேண்டிய அலுவலில் உள்ள என்னால், புலவர் தேர்வுக்கு ஆயத்தம் செய்ய முடியுமா என்று சற்றுத் தயங்கினேன்.

இருவரும் அடிக்கடி தூண்டியதால், அது எனக்கு அறைகூவலாக அமைந்துவிட்டது. எனவே, சென்னைப் பல்கலைக்கழக வித்வான் (புலவர்) தேர்வுக்கான பாடத்திட்டத்தை விசாரித்துச் சொல்லும்படியும் அதற்கான நூல்களை விலைக்கு வாங்கித் தரும்படியும் சொல்லி அப்பொறுப்பைத் திரு இராமலிங்கத்திடம் ஒப்படைத்தேன்.

அப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பொதுமக்கள் அண்ட முடியாது. அங்கே தகவல் நிலையம் இல்லை. வேண்டியவர்கள் இருந்தால்தான் சாதாரணமான தகவலும் கிடைக்கும். எனவே, பாடத் திட்டத்தைக் கேட்டு அறிந்து வரவே கால தாமதம் ஆகியது.

அதில் கண்ட பல நூல்கள் விலைக்குக் கிடைக்கா என்ற அவலச் செய்தியைக் கொண்டு வந்தார். கிடைக்காததைப் படிக்க வைக்கவே பல்கலைக்கழகங்கள், இது அப்போது தெரியாது.

கிடைக்கக்கூடிய சில நூல்களையாவது வாங்கிப் படிக்கத் தொடங்கி விடுவதென்று முடிவு செய்தேன்.

அவ்வேளை நிகழ்ந்த புற நிகழ்ச்சிகள் சில ஓய்வைக் கெடுத்தன. என்னை இடம் பெயரச் செய்தன. புது வழி தேடச் செய்தன.

எனவே, தனியாகப் படித்து, புலவர் பட்டம் பெற வேண்டுமென்னும் என் அவா, சிதைவுற்றது. இப்போது அந்நிகழ்ச்சிகளுக்குச் செல்வோம்

கண்டிப்பானவர் என்பதற்காகக் கழித்துக் கட்டுவதா?

1937ஆம் ஆண்டு நடந்த சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பிடித்தது.

சிறிது கால தாமதத்திற்குப்பின் திரு சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியார் தலைமையில் அமைச்சரவை உருவாயிற்று. திரு பெ. கோபால் ரெட்டியார் உள்ளாட்சித்துறை அமைச்சரானார்.

அப்போது ஒவ்வோர் அமைச்சருக்கும் ஒரு பேரவைச் செயலர் உண்டு. திரு ரெட்டியாருக்கு திரு மீ. பக்தவத்சலம் பேரவைச் செயலராக இருந்தார்.

வார முடிவில், திரு பக்தவத்சலம் வீட்டிற்குச் சென்று, அவருடைய மைத்துனரும் என் இனிய நண்பருமான திரு தி.கோ. சீனிவாசனைக் கண்டு அளவளாவுவது என்னுடைய பொழுது போக்குகளில் ஒன்று.

திருப்பெரும்பூதூரில் பணியாற்றிய போதும் அப்பழக்கம் தொடர்ந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை சீனிவாசனைத் தேடிக் கொண்டு திரு பக்தவத்சலம் வீட்டிற்குள் நுழைந்தேன். அங்கு, திரு பக்தவத்சலம் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். நான் வணங்கினேன்.

''உங்களுக்கு ஒரு செய்தி இருக்கிறது. அமருங்கள்'' என்றார். உட்கார்ந்தேன்.

திரு பகத்வத்சலம் அவிழ்த்துவிட்ட செய்தி என்ன?

''உடுமலைப்பேட்டை நகராட்சி மன்றம் காங்கிரசு அரசின் நடவடிக்கையைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

''எனவே, அதைச் சிறிது காலத்திற்குக் கலைப்பதென்று முடிவு செய்துள்ளோம். அப்படிக் கலைக்கும்போது, ஒரு தனி அலுவலரின் பொறுப்பில் அதைவிட வேண்டும்.

''இப்போது அங்கிருக்கும் ஆணையர், நகரசபைத் தலைவர், கனகராஜுவுக்கு வேண்டியவர். அவரைத்தனி அலுவலராக நியமிப்பது. கனகராஜுவிடம் தனிப்பொறுப்பில் நகரசபையை ஒப்படைப்பதற்குச் சமமாகும். எனவே, வெளியார் ஒருவரை நியமிக்கக் கருதினோம்.

''உதவிப் பஞ்சாயத்து அலுவலர்களில், பதவி உயர்வுக்கு ஏற்றவர் எவராவது இருந்தால், அவரைப் பற்றிய தகவலை அனுப்பும்படி

உள்ளாட்சி மன்றத் தலைமை ஆய்வாளரைக் கேட்டோம். பணிமூப்பு அடிப்படையில் மட்டும் அல்லாது திறமை அடிப்படையில் பரிந்துரை கேட்டு இருந்தோம்.

''அவர் - திரு எஸ். அரங்கநாதன் ஐ.சி.எஸ். - உங்கள் பெயரை அனுப்பினார். 'மாகாணத்திலுள்ள எல்லா உதவிப் பஞ்சாயத்து அலுவலர்களிலும் நீங்கள் திறமையானவர், நேர்மையானவர்' என்று எழுதியுள்ளார்.

''எனவே, உங்களை உடுமலைப்பேட்டைக்குத் தனி அலுவலராக நியமிக்கலாமென்று, அலுவலகத்தில் இருந்து குறிப்பு வந்தது.

''அமைச்சர் திரு கோபால் ரெட்டியாரும் ஏற்றுக்கொண்டு, கையெழுத்திட்டு விட்டார். கோப்பைக் கீழே அனுப்புவதற்கு முன், என்னிடம் அத்தகவலைச் சொன்னார்.

''நான் தலையிட்டேன்.

''சுந்தரவடிவேலு எங்கள் ஆள்; எனக்கு மிக வேண்டியவர், அவருக்குப் பதவி உயர்வு கிடைப்பது, எனக்குத்தான் அதிக மகிழ்ச்சி.

''அவர் திறமையானவர், நேர்மையானவர் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை. உடுமலைப் பேட்டையில் காங்கிரசாருக்கும் நீதிக்கட்சியாருக்கும் கடுமையான போட்டி.

''நீதிக்கட்சிக் கோட்டையாகிய உடுமலைப் பேட்டை நகராட்சியைக் கலைத்தது போதாது. அடுத்து வரும் தேர்தலில் அதை நம் கட்சி கைப்பற்ற வேண்டும். அதற்குக் கட்சிக்குச் சாய்ந்து கொடுக்கக் கூடிய ஒருவர் தேவை.

''சுந்தரவடிவேலு விதிமுறைகளைப் பின்பற்றுவதில் கண்டிப்பானவர்; மனச்சாட்சிக்கு மாறாகச் சிறு செயலும் செய்ய மாட்டார். ஆகவே வளைந்து கொடுத்து, உள்ளூர்ப் பெரும்புள்ளிகளைக் காங்கிரசின் பக்கம் இழுக்கக்கூடிய ஒருவரைத் தேடி நியமிக்க வேண்டும். உங்கள் ஆணையை நிறுத்திவிடுங்கள்'' என்று அமைச்சருக்குச் சொன்னேன்.

''உங்களைத் தேடி வந்த பதவி, என்னால் பறிபோய் விட்டது. சண்டைக் களமாகிய உடுமலைப்பேட்டைக்கு நீங்கள் போவது நல்லதல்ல என்றுதான் நான் நிறுத்திவிட்டேன்'' என்று திரு பக்தவத்சலம் கூறினார்.

தலையில் இடி விழுந்ததுபோல் இருந்தது. உடுமலைப் பேட்டையில் பதவி, ஆணையர் பதவிகளில் கடைநிலை. ஊதியம் ரூபாய் நூறே. அது கூடத் தட்டிவிடப்பட்டது.

அதற்குச் சொன்ன காரணம், வாழ்நாள் முழுவதும் இடையூறாக வந்து நிற்குமே! இழுத்த இழுப்புக்குப் போகும் பக்குவம்

வராவிட்டால், அப்போது இருந்த சிறு வேலையிலேயே காலந் தள்ள நேர்ந்துவிடுமே!

பச்சோந்திப் பக்குவம் எப்படி வரும்? எப்போது வரும்?

இப்படிச் சிந்தனை துடித்தது சில மணித்துளிகள். அகத்தின் துடிப்பை முகத்தில் காட்டாமல் சமாளித்தேன்.

நண்பர் வெகுண்டார்

பின்னர், உள்ளே சென்று சீனிவாசனோடு உரையாடினேன். வழக்கம்போல் அங்கேயே பகல் உணவு உண்டேன். என்னை வழியனுப்பப் பேருந்து நிலையத்திற்கு வந்தபோதுதான், என் நண்பர் சீனிவாசனிடம் அவர் மைத்துனர் செய்த கெடுதியைக் கூறினேன்.

வெகுளாமல் இயந்திரம்போல் பேசினேன். ஆனால் சீனிவாசன் அதிர்ச்சி அடைந்தார்; ஆத்திரங் கொண்டார். அவரை அமைதிப்படுத்தி, திரு பகத்வத்சலத்தை மேலும் ஆத்திரமூட்டி விடவேண்டாமென்று வேண்டினேன்.

பல வாரங்கள் கழிந்தன. அக்காலத்தில், திருவள்ளூர் நகராட்சியல்ல; பேரூர் ஆட்சியாக இருந்தது. அதையும் கலைத்து அதற்குத் தனி அலுவலர் போடப் போவதாகப் பேச்சு எழுந்தது.

அந்த அலுவலருக்கு ஊதியம் திங்களுக்கு எழுபத்தைந்து ரூபாய்களே. அச்சிறிய வேலைக்காவது உதவுவார் என்று எண்ணி, திரு பக்தவத்சலத்தை நாடினேன். என் கோரிக்கையைப் பொறுமையாகக் கேட்டார்.

ஆனால் அவர் பழைய போக்கிலிருந்து சிறிதும் மாறவில்லை. திருவள்ளூர் வேலையும் எனக்கு ஒத்துவராது என்று சொல்லிவிட்டார்.

''திறமைக்கும் நேர்மைக்கும் இங்கு இடமில்லையா?'' என்று கேட்க வேண்டும்போல் இருந்தது.

எவ்வளவு பெரிய அதிகாரத்திற்கும் மண்டியிடாத இயல்பைப் பெற்றிருந்ததைப்போல், எவரிடமும் கடுமையாகப் பேசாத போக்கையும் கொண்டிருந்தேன் நான். எனவே, நெஞ்சில் நெருப்பைக் கட்டிக்கொண்டு, வாய் பேசாமல் ஊமையாகவே இருந்து விட்டேன்.

இவ்விரு தோல்விகளும் எனக்குக் கற்றுத் தந்த பாடம் என்ன? நேர்மையைக் காட்டியே, வளைந்து கொடுக்கமாட்டார் என்பதைச் சொல்லியே, என்னை ஒதுக்கி வைத்துக்கொண்டே வருவார் திரு. பக்தவத்சலம் என்பதாகும். அவருடைய போக்கு எனக்குத் தெளிவாகத் தெரியும்.

எனவே அவர் வேறு உயர்ந்த பொறுப்புக்குப் போகட்டும் என்று காத்திருந்து பயன் இல்லை என்பது தெளிவாயிற்று. எப்படி

உள்ளாட்சித் துறை அலுவல் வளையத்தில் இருந்து தப்புவது என்பதே கவலையாயிற்று.

ஆசிரியர் பயிற்சிக்குச் செல்ல முடிவு

சில நாள் கவலைக்குப்பின், வழி ஒன்று மின்னிற்று. அது என்ன? ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சியும் பட்டமும் பெறுவது; பின்னர் ஆசிரியராகப் போய் விடுவது. நேர்மையாளனுக்கு அங்கேதான் இடம் மறுக்கப்படாது என்று அப்போது எனக்குத் தோன்றிற்று.

நண்பர் கதிர்வேலுவிடம் தனியாக இதைச் சொன்னேன்.

''ஆசிரியர் பணியில் சேர்வதற்கு உச்ச வயது முப்பது, இப்போது உனக்கு இருபத்தைந்து. எனவே, அய்ந்தாண்டுத் தவணை கிடைக்கும். இப்போது தொழிலில் தேக்கம் இருந்தாலும் அய்ந்தாண்டுகளில் எப்படியும் வேலை கிடைத்து விடும்.

''மனச்சான்றுப்படி, பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு, நம் அறிவையும் வளர்த்துக் கொள்ளலாம். ஆகவே, தயங்காது உரிய நேரத்தில் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மனுப் போட்டுவிடு'' என்று கதிர்வேலு அறிவுரை கூறினார்.

அக்கால கட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம் பிடிப்பதும் கடினம். இடத்திற்கு விண்ணப்பம் போடுவோர், ஏதாவது ஓர் உயர்நிலைப்பள்ளியின் பரிந்துரையையும் உறுதிமொழியையும் பெற்றுத் தரவேண்டும்.

என்ன உறுதிமொழி? விண்ணப்பதாரரின் பணி, தங்கள் பள்ளிக்குத் தேவைப்படுவதால், அவர் பயிற்சி பெற்றுவந்ததும் அவரை, தங்கள் பள்ளியில் ஆசிரியராக நியமிக்க ஒப்புக் கொள்ளுகிறோமென்று உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

எவரிடம் அத்தகைய உறுதிமொழியைப் பெறுவது? திரு சா. குருசாமி அவர்களை அணுகினேன். அவர் தியாகராய நகரில் திரு. சி.தெ. நாயகம் அவர்களிடம் என்னை அழைத்துப் போனார்.

71. நீதிக்கட்சித் தலைவர் செ.தெ.நாயகம்

செ.தெ. நாயகம் செய்த உதவி

திருவாளர் செ.தெ. நாயகம், நண்பர் குருசாமியையும் என்னையும் அன்போடு வரவேற்றார். 'எது பற்றி வந்துள்ளீர்கள்' என்று வினவினார். திரு. குருசாமி என்னைச் சுட்டிக்காட்டி.

''இவர் பெயர் நெ.து. சுந்தரவடிவேலு. இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உதவிப் பஞ்சாயத்து அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எனக்கு வேண்டியவர்; நம்முடைய தன்மான இயக்கப் பற்றுடையவர். முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டிற்கும் இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிற்கும் பிரதிநிதியாக வந்து சிறப்பித்தவர்.

''நம் இயக்க முடிவுப்படி, சென்ற (1931) குடிக்கணக்கின்போது, தமக்குச் சாதியும் இல்லை சமயமும் இல்லை என்று எழுத்தில் அறிவித்தவர்.

''இவர் அரசு ஊழியத்தில் சேர விரும்புகிறார். மற்றத் துறைகளில் சேர்வதற்கு வயது கடந்துவிட்டது. கல்வித்துறை ஒன்றில் கிட்டத்தட்ட அய்ந்தாண்டு தவணை இருக்கிறது. எனவே, தம் செலவில் ஆசிரியப் பயிற்சிக்குச் செல்ல விரும்புகிறார்.

''ஏதாவதொரு பள்ளிக்கூடம் பரிந்து உரைப்பதோடு, பயிற்சி பெற்று வந்ததும் வேலை கொடுக்கிறோமென்று உறுதி கொடுத்தால் மட்டுமே, விண்ணப்பத்தைக் கவனிப்பார்களாம்.

''தங்களிடம் உரிமையோடு உதவி கேட்கலாமென்று எண்ணி, அழைத்து வந்திருக்கிறேன்''

இப்படி குருசாமி சொல்லிக் கொண்டிருக்கும்போது, குறுக்குக் கேள்விகள் கேட்காது, தயங்காது தமது முகவரி உள்ள ஒரு கடிதத்தாளை எடுத்தார். மடமடவென்று உறுதிமொழி எழுதிக் கொடுத்தார். கொடுத்தபோது,

''கல்வியைப் பெற்றுவிட்டால், நம் சமுதாயம் தலைகீழாக மாறிவிடும். நம்மவர்கள் பலர், ஆசிரியர்களாக வந்தால் கல்வி நம் கைகளுக்கு வரும்.

''பயிற்சியை முடித்த பிறகு, பிற இடங்களில் ஆசிரியர் வேலை கிடைத்தால் சரி; கிடைக்காவிட்டால், என்னிடம் வாருங்கள். இடம் காலியானால், என் பள்ளியிலேயே சேர்த்துக் கொள்ளுகிறேன்.'' என்று சொல்லியனுப்பினார்.

அதுவரை அவ்வளவு எளிதாக எவரிடமும் உதவி பெற்றதில்லை. அது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

திரு செ.தெ. நாயகத்தின் வீட்டை விட்டு வெளியேறிய பிறகு, அவர் ஏற்றுக் கொண்டிருக்கிற பிணைப்பைப் பற்றித் திரு. குருசாமிக்குச் சுட்டிக்காட்டினேன்.

என்ன பிணைப்பு?

கொடுத்திருக்கிற உறுதிமொழிப்படி எனக்கு ஆசிரியர் வேலை கொடுக்க இயலாவிட்டால், ஆசிரியர் கல்லூரிக்கு ஈடுப்பணம்

கணிசமான தொகை - கட்டுவதாக உறுதிமொழி தேவைப்பட்டது. அதையும் திரு நாயகம் கொடுத்துவிட்டார். அதை திரு. குருசாமிக்குக் கோடிட்டுக் காட்டி,

''அப்பெரியவர் இவ்வளவு வெள்ளை உள்ளம் கொண்டவராக இருக்கிறாரே'' என்ற வியப்பை வெளிப்படுத்தினேன்.

''ஆம்; உதவி செய்ய முன்வருவதில் தொல்லை தொக்கிநிற்பது அவருக்குத் தெரியும். அவர் உடையைப் பார்த்திருப்பீர்கள். அத்தனையும் வெள்ளை; வெள்ளை வேட்டி; வெள்ளைக் கோட்டு; வெள்ளைத் தலைப்பாகை. திரு நாயகம் புறத்திலும் தூயவர். அகத்திலும் தூயவர்.

''இனம் இனத்தோடே, என்று சொல்லுவதுண்டு. இவர் வெள்ளுடை வேந்தர் என்று போற்றப்பட்ட நீதிக்கட்சித் தலைவர் சர் பிட்டி. தியாகராயரின் தோழர். அவரோடு சேர்ந்து, நீதிக்கட்சியை நிறுவத் துணைநின்றவர். நீதிக்கட்சியின் செயலாளராக இருந்தவர்...'' இப்படிச் சொல்லிக்கொண்டு வருகையில் நான் குறுக்கிட்டேன்.

''திரு நாயகத்தை, கூட்டுறவுத் துறையின் ஓய்வுபெற்ற துணைப் பதிவாளர் என்று மட்டுமே நாங்கள் அறிவோம். அதற்கு முந்திய அவருடைய அரசியல் தொண்டைப் பலர் அறியமாட்டார்களே'' என்று கூறினேன்.

''ஆம்; அவர் விளம்பரத்தை விரும்பாதவர். மேலும் சமுதாய ஏணியின் மேல்படிக்கட்டுகளைச் சேர்ந்த சாதி வேற்றுமைகளை மறந்தவர்.

''தமது 'சைவப்பிள்ளை'களைப் பற்றிக் கவலைப்படுவதைக் காட்டிலும் ஆதி திராவிடர்களின் முன்னேற்றம் பற்றி அதிகம் சிந்திப்பவர்.

''எனவே, அவருடைய உறவினர்களுக்குப் பற்றுக் குறைவு. கீழ்மட்டத்தில் உள்ள மக்கள் தங்களுக்காகப் பாடுபடுவோரைப் போதிய அளவு போற்றிப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவர்கள்'' என்று விளக்கினார்.

செ.தெ. நாயகம்

திரு செ.தெ. நாயகத்தின் முழுப் பெயர் என்ன?

அவர் எங்கே பிறந்தார்?

செட்டிகுளம் தெய்வநாயகம் என்பதாகும்.

'திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமை'யைச் சேர்ந்த குலசேகரன்பட்டினத்திற்கு அருகில் உள்ள செட்டிகுளத்தில் பிறந்தார்.

எப்போது பிறந்தார்?

7-10-1878 இல் பிறந்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார்.

இளமைப் பருவத்திலேயே சமுதாயக் கண்ணோட்டம் பெற்றுவிட்ட திரு தெய்வநாயகம், சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர்,

நீதிக்கட்சியின் தொடக்கத்திலே பங்குகொண்டார். எல்லோரும் ஓர் நிறை என்னும் சமத்துவக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தார்.

தாழ்த்தப்பட்டவர், பின் தங்கியவர் நலனுக்காகப் பாடுபட்டார்.

நீதிக்கட்சியின் ஆங்கில நாளிதழாகிய 'ஜஸ்டிஸ்'சின் வளர்ச்சிக்கு உழைத்தார்.

பெண்கள் சமத்துவத்தைச் செயல்படுத்துவதில் பாடுபட்டார். தமது இரு மகன்களையும் மூன்று மகள்களையும் பட்டதாரிகளாக்கினார்.

இவ்விவரங்களைத் திரு. குருசாமி சொல்லிக் கொண்டு வருகையிலே, என் துடிப்பு அதிகம் ஆயிற்று.

''தமிழர் குடும்ப நலனை எப்படிக் காக்க வேண்டுமென்று, வழிகாட்டிய அவர் அரசு ஊழியத்தில் எப்படிப் போய்ச் சேர்ந்தார்'' என்று தெரிந்து கொள்ளத் துடித்தேன்.

''வகுப்புரிமைக்குப் போராடிய நீதிக்கட்சி செல்வாக்குப் பெற்ற போது, கூட்டுறவுத் துறையில் நேரடியாகத் துணைப்பதிவாளர் களைத் தேர்ந்தெடுக்கும் சூழல் உருவாயிற்று. திரு நாயகம் துணைப் பதிவாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்'' என்று குருசாமி கூறினார்.

திரு நாயகம், அப்படி நியமிக்கப்பட்டதால், முன்னணியில் இருந்த் பிரிவனருக்கு அவர் மேல் எரிச்சல். எப்போது பார்த்தாலும் அவர்மேல் குற்றம் சாட்டுவதிலேயே எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் முனைப்பாக வேலை செய்துகொண்டு இருந்தார்கள்.

''ஒரு தடவை, சென்னைச் சட்டமன்றத்தில் திரு நாயகத்தையும் மற்றோர் அரசின் அதிகாரியையும் பெயர் சொல்லிக் குற்றஞ் சாட்டும் நிகழ்ச்சி நடந்தது. என்ன குற்றச்சாட்டு?

''அவ்விருவரும் பொதுத் தேர்தலின்போது, நீதிக்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகப் பணியாற்றினார்கள், என்பது குற்றச்சாட்டு.

''அதைப்பற்றி விசாரணை செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது கோரிக்கை.''

ஆட்சியாளர்கள் அதற்கு என்ன நிலை எடுத்தார்கள்?

ஆட்சியில் இருந்த நீதிக்கட்சியின் சார்பில், திரு ஆற்காடு இராமசாமி முதலியார் பேசினார்.

''அரசு அலுவலர்கள், பொது ஊழியர்கள். கட்சிப் போட்டிகளில் நடுநிலை வகிக்க வேண்டியவர்கள். அதிலிருந்து விலகி எந்த வேட்பாளருக்காவது தேர்தலில் வேலை செய்திருந்தால், அது தவறான நடவடிக்கை; தடுத்து நிறுத்த வேண்டிய போக்கு. இதில் ஆளும் கட்சி தெளிவாகவும் உறுதியாகவுமிருக்கிறது.

''எனவே, மேற்கூறிய இரு அதிகாரிகளோடு, என் கவனத்திற்கு வந்துள்ள மற்ற இரு அதிகாரிகளும் இத்தகைய நடவடிக்கைக்காக விசாரிக்கப்பட வேண்டும்'' என்று பேசிய திரு ஆற்காடு இராமசாமி மற்ற இரு பெரிய அதிகாரிகளின் பெயர்களையும் சட்டமன்றத்தில் வெளிப்படுத்தினார். ''அவர்கள் எதிர்க்கட்சி வேட்பாளருக்காக வேலை செய்துள்ளதாகத் தகவல்'' என்றும் கூறினார்.

அது அதிர்ச்சி மருத்துவமாக முடிந்தது. எதிர்க்கட்சி பதறியது. விரைந்து பின்னடைந்தது.

''அரசின் கொள்கை சரியாக இருக்கிறது; அதை நாடறியத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது நல்லது. இது அதிகாரிகளுக்குப் போதிய எச்சரிக்கையாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இனி எந்த அதிகாரியும் யாருக்காகவும் தேர்தலில் தலையிட மாட்டாரென்று நம்புகிறோம். விவகாரத்தை, இப்போதைக்கு இதோடு முடித்து விடுவோம்'' என்று விசாரணையை வற்புறுத்தாமல் எதிர்க்கட்சி விட்டுவிட்டது.

இத்தகவலைத் திரு. குருசாமியிடமிருந்து கேள்விப்பட்டபோது எனக்குப் புல்லரித்தது.

நேரடியாகத் துணைப்பதிவாளராகத் தேர்ந்தடுக்கப்பட்ட திரு. செ. தெய்வநாயகம், அலுவலில் புலி; நேர்மையில் நிகர் அற்றவர்; எளிமையானவர்.

வேலை வாய்ப்புகள் அருகியிருந்த அக்காலத்தில், எப்போதாவது இரண்டொரு சிறு பதவிகளில் நியமிக்க வாய்ப்பு கிட்டும். தம் அதிகாரத்திற்கு உட்பட்டதாயின், அவ்வேலையைப் பார்ப்பனரல்லா தா ருக்கே - ஆள் கிடைத்தால், நலிந்த பகுதியினருக்கே கொடுப்பார். அவரை இயக்கிய வெள்ளைக்கார அதிகாரிகள் பரிந்துரைத்தாலும் மற்றவர்களுக்குக் கொடுக்க மாட்டார்.

தனி வாழ்க்கையில் ஒப்புயர்வற்றவர். இருவேளை மட்டுமே உண்பார். உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிற அய்யர்களிடம் உண்ண மாட்டார். அவரிலும் 'கீழானவர்'களாக மற்றவர்களால் கருதப்பட்டவர் கள் உணவை ஏற்பார்; அவர்களோடு உண்பார்.

தம்முடைய அய்ந்து மக்களையும் பட்டதாரிகளாக்கி, அவர்களை ஆசிரியத் தொழிலுக்கு அனுப்பிய அப்பெரியவர் சிக்கனமாக

வாழ்ந்தார்; சேர்ந்த சொத்து முழுவதையும் பொதுநன்மைக்கு எழுதிவைத்தார், எப்படி?

'கல்விப் பணி' என்னும் பெயரில் அறக்கட்டளையொன்றை நிறுவினார். தம் சொத்தை அதற்கு உயில் எழுதி வைத்தார். முழுக் கல்வி தந்து தம்மக்களை ஆளாக்கிவிட்டுவிட்டு, சொத்தைப் பொதுமையாக்கி விட்ட அவருடைய பாங்கு போற்றுதற்குரியதாகும்.

திரு. செ. தெய்வநாயகம் பன்னிரண்டு ஆண்டுகள் துணைப் பதிவாளராகச் சீரிய பணியாற்றிய பிறகு, அரசு ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றார். சிறிது காலம் சென்னைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக விளங்கினார்.

நீதிக்கட்சித் தொண்டைத் தொடர்ந்தார். தன்மான இயக்கத்தின் சுடர்களில் ஒன்றாக அருந்தொண்டாற்றினார்.

1938 ஆம் ஆண்டு கட்டாய இந்திப் பாடத்தை எதிர்த்து, தமிழ்நாட்டில் பெருங்கிளர்ச்சி நடந்தது. அதன் அடையாளமாகச் சென்னை தியலாஜிக்கல் உயர்நிலைப் பள்ளியின்முன் மறியல் நடந்தது; பல திங்கள் இடையறாது மறியல் நடந்த வண்ணம் இருந்தது.

அந்த இந்தி எதிர்ப்புப் போரின் முதல் சர்வாதிகாரியாக திரு. செ.தெ. நாயகத்தை, தந்தை பெரியார் நியமித்தார். அப்பொறுப்பை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுப் போராடி சிறை வாழ்க்கையையும் மேற்கொண்டார்.

கல்வி ஒளி தந்தவர்

நீதிக்கட்சி தோற்று, தளர்ந்திருந்த நிலையில், மக்களிடையே அதன் கொள்கைகளை மறுபடியும் பரப்பும் பொருட்டு நால்வர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவில் பெரியாரோடு டபிள்யூ. பி.ஏ. சௌந்தரபாண்டியனோடு, செ.தெ. நாயகமும் இருந்தார் என்பதைக் குறிப்பிடுவது என் கடமை.

திரு. செ.தெ. நாயகம் தம் பொருளைக்கொண்டு குலசேகரன் பட்டினத்தில், காலஞ்சென்ற தமது முதல் மனைவி நினைவாகத் 'தாயம்மாள் நடுநிலைப்பள்ளி'யைப் பராமரித்து வந்தார். அது இன்றும் சிறந்த முறையில் நல்ல கல்வித் தொண்டு ஆற்றி வருகிறது.

சென்னைத் தியாகராய நகரில் அவர் தொடங்கிய தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியாக வளர்ந்து இன்று மேனிலைப்பள்ளியாகச் செயல்படுகிறது.

இரு பாலாரும் படித்துவந்த தியாகராயநகர் பள்ளியிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு, தனியான பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் கிளைத்தது.

தூயவர் செ.தெ. நாயகத்தின் கல்விப் பணி ஆல்போல் தழைத்து இருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

அப்பெரியவரின் நூற்றாண்டு நிறைவு விழா 1978 அக்டோபரில் வந்தது. நல்லாசிரியர் நமச்சிவாயரை மறந்ததுபோல நாயகத்தையும் தமிழர்கள் மறந்துவிட்டார்கள்.

எத்தனை பெரிய சான்றோரை, தமிழ்த் தொண்டரை மறந்து விட்டோம்.

மறப்போம்! 'தமிழர் மறந்தார்' என்பதை மறப்போம்!

'சான்றோராம் செ.தெ. நாயகத்தை மறந்தார்' என்பதை மறப்போம்!

இந்தித் திணிப்பின் எதிர்ப்புப் போருக்கு, முதல் அணித் தலைவராக விளங்கியவரை மறந்ததை மறப்போம்!

இனி என் கதைக்குப் போவோம்.

ஏன்?

தமிழன் என்பதற்கு அடையாளம் எது? ஆதியும் அந்தமும் 'தான்' என்னும் முனைப்பே!

72. தன் கையே தனக்கு உதவி

தந்தையின் அதிர்ச்சி

திரு. செட்டிகுளம் தெய்வநாயகத்திடம் பரிந்துரையும் ஏற்பு உறுதி மொழியும் பெற்ற நான், உரிய நேரத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பத்தை அனுப்பி விட்டேன்; பதிலுக்குக் காத்துக்கிடந்தேன்.

இதற்கிடையில், ஊராட்சித் துறை அலுவலை விட்டுவிட்டு, கல்வித்துறையில் நுழைய நான் முயல்வதைப் பற்றி என் தந்தையாரிடம் கூறினேன்.

அவர் அதிர்ச்சியடைந்தார்.

நான் எந்தத் திருமண ஏற்பாட்டிற்கும் செவிசாய்க்காதிருப்பதைப் பற்றி எரிச்சல் கொண்டிருந்த அவருக்கு அச்செய்தி ஆத்திரமூட்டியது.

கடுஞ்சொற்களைக் கையாளவில்லையே ஒழிய, அம் மாற்றத்தை அவர் கடுமையாக எதிர்த்தார்.

இப்படி, ஒன்றிலிருந்து ஒன்றிற்கு உருண்டு கொண்டிருக்கும் போக்கு என் தந்தைக்குப் பிடிக்கவில்லை.

ஆசிரியர்களுக்கு அந்தக் காலத்தில் 'கிராக்கி' கிடையாது. ஊதியமும் கட்டை, அலுவலருக்கு உள்ள மதிப்பு ஆசிரியருக்குக் கிடையாது.

இவற்றை மனத்தில் கொண்டு, ஆசிரியர் பயிற்சிக்குப் போக வேண்டாம் என்று தந்தை தடுத்தார்.

இருக்கும் வேலை பிடிக்காவிட்டால் அல்லது அதில் பதவி உயர்வுக்கு வாய்ப்பு இல்லாவிட்டால் கவலைப் படத் தேவையில்லை; குடும்பத்தின் பயிர்த்தொழில், உள்ளூர் நெல் வாணிபம் ஆகியவற்றைக் கவனித்தால் நிறையச் சம்பாதிக்காலம் என்றும் எனக்கு ஆசைகாட்டிப் பார்த்தார்.

'பிழைக்கத் தெரியாத' இப் பிள்ளைக்கு இளமையிலேயே பணப்பற்று ஊன்றாமலே போய்விட்டது.

என்மேல் வெகுண்ட தந்தையார், சில திங்கள் என்னோடு முகம் கொடுத்துப் பேசாமலே இருந்தார்.

நான் கசப்புக் கொள்ள மறுத்துவிட்டு, என் வேலையைக் கவனித்தேன்.

ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்வானேன்

அக்காலத்தில் பொருளியல் பாடம் உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம் பெறவில்லை. எனவே, பொருளியல் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிக்கு இடம் கிடைப்பது அரிது! ஆனால், கூடாது என்று கண்டிப்பான விதிமுறை இல்லை.

எனவே, பூகோள பாடத்தை விருப்பப் பாடமாகக் கொடுக்கும்படி கோரி இருந்தேன்.

அந்தக் காலத்தில், பட்டப்படிப்பில் பூகோள பாடத்திற்கு இடம் வைக்கவில்லை. ஆகவே, பூகோள பட்டதாரிகளின் போட்டி இராதென்று தெரியும்.

அந்தத் துணிச்சலில், அதற்கும் சிறுவர் கல்விக்கும் விண்ணப்பம் போட்டுவிட்டு, நம்பிக்கையோடு இருந்தேன்.

நேரா நேரத்தில் பதில் வந்தது, எனக்குத் தேர்வு கிடைத்தது.

ஆங்கில மொழியும் பூகோளமும் கற்பிக்கும் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். துணைப்பாடமாக 'சிறுவர் கல்வி'யும் கிடைத்தது.

தேர்ந்தெடுத்தவர்கள் எவர்? சைதை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. கிருஷ்ணம்மா; இவர் தெலுங்குக் கிறித்தவர். குழுவில் பூகோளப் பேராசிரியர் திரு. நெ. சுப்பிரமணிய அய்யர்; ஆங்கிலத் துணைப் பேராசிரியர் ஸ்ரீமான் பாதர், சிறுவர் கல்விப் பேராசிரியை செல்வி அலெக்சாண்டர் ஆகியோர் ஆவர்.

இவர்களில் எவரும் எனக்கு முன்னர் அறிமுகம் இல்லாதவர்கள். எவருக்கும் நான் பரிந்துரையும் கொண்டுபோக வில்லை. இருப்பினும் நான் தேர்ந்து எடுக்கப்பட்டேன்.

குளிர்விக்கும் மழைக்கு முன்பு பொறுக்கவொண்ணாத புழுக்கம் இருப்பது உண்டு; மின்னலும் இடியும் அச்சுறுத்துவது இயற்கை.

சைதை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைத்த செய்தி வான் மழையாகக் குளிர்வித்தது.

அதைப் பயன்படுத்திக் கொள்வது எளிதல்லவே! இருக்கும் வேலையை உதறிவிட்டு வருவது அறிவுடைமையல்ல. விடுப்புப் பெற்றுப் போகும்படி, அலுவலில் பட்டறிவு நிறைந்த நண்பர்கள் கூறினார்கள். விடுப்புக் கணக்கைப் பார்த்தார்கள். எனக்கு இருந்த விடுப்பு மூன்று திங்களுக்கும் குறைவு.

அக்காலம் வரையில்தான் எனக்கு முழுச்சம்பளம் கிடைக்கும். மேலும் மூன்று திங்களுக்கு அரைச் சம்பளத்தோடு விடுப்புக் கொடுக்கலாமென்னும் விதியை ஒருவர் சுட்டிக்காட்டினார்.

பாக்கி உள்ள மூன்று திங்களுக்கு?

ஊதியம் இல்லாத விடுப்புக் கேட்கும்படி ஆலோசனை கூறினார்கள்.

விடுப்பைப் பொறுத்த மட்டிலும் மேற்கூறியபடி மூன்று வகை விடுப்புகளைச் சேர்த்துச் சமாளித்து விடலாம் என்று தோன்றியது.

அடுத்த சிக்கலை எப்படி அவிழ்க்க? அது என்ன சிக்கல்?

ஆசிரியர் பயிற்சி பெறும் காலத்தின் செலவை எப்படிச் சமாளிப்பது? இக்கவலை மின்னிற்று.

செலவினப் பட்டியல் போட்டுப் பார்த்தேன். கல்லூரியில் சம்பளம் இல்லை; கல்லூரியிலிருந்து உதவித் தொகையும் இல்லை. பிற்காலத்தில், ஆசிரியர் பயிற்சி பெறுவோர் அனைவருக்கும் திங்கள் தோறும் உதவித்தொகை அளிக்கும் முறை வந்தது.

'தம்பியர் பெற்ற இன்பம் யானுமே பெற்ற தன்றோ' என்று என் தலைமுறையினர் நிறைவு கொள்கிறார்கள்.

சம்பளம் இல்லாவிட்டாலும் தனிக் கட்டணம் உண்டு. அப்போது அது பெரிய தொகையல்ல.

அடுத்த செலவு சாப்பாட்டுச் செலவு அது எவ்வளவு?

ஓட்டலில் சாப்பிடுகிறேனா, விடுதியில் சாப்பிடுகிறேனா என்பதைப் பொறுத்துச் செலவு இருந்தது.

வெளியில் எங்காவது வாடகைக்கு அறை எடுத்துக்கொண்டு ஓட்டலில் சாப்பிட்டு வந்தால் செலவு குறைவாக இருக்கும். ஆனால் அன்றைய சைதாப்பேட்டை, சென்னை மாநகராட்சியோடு இணையாத தனி நகராட்சி.

அந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியில்லை. அன்றைய சைதாப்பேட்டை, கொசுவுக்கும் யானைக்காலுக்கும் பெயர் பெற்றது.

எனவே, தனி அறையில் தங்கி ஓட்டலில் உண்ணும் முறை கைவிடப்பட்டது.

'ஆசிரியர் கல்லூரி மாணவர் விடுதியில் தங்கி அங்கே உண்பதே சரி' என்னும் அன்பர்களின் அறிவுரையை ஏற்றுக்கொண்டேன்.

அதற்கு எவ்வளவு பிடிக்கும்? பாட நூல்கள், உடை ஆகியவற்றிற்கு எவ்வளவு செலவாகும்?

இப்படிக் கணக்குப் பார்த்ததில், என்னுடைய திங்கள் செலவு, முழுவிடுப்பு ஊதியத்திலும் அதிகம் என்பது புலனாயிற்று.

அந்த எச்சச் செலவுக்குப் பணம் கண்டு பிடிக்க வேண்டும். அரைச் சம்பள விடுப்பின்போது, தேடவேண்டிய தொகையோ மேலும் அதிகம். சம்பளமில்லாத விடுப்பின்போது, முழுச்செலவிற்கும் நிதி தேடியாக வேண்டும்.

அப்போது என் கையில் சேமித்த பணம் இல்லை. கடன் வாங்கும் பழக்கமும் என்னிடம் இல்லை. தந்தையோ, எனக்கு உதவ மறுத்து விட்டார்.

எனவே, என்னையே நம்பி, புது வழியில் நடைபோட வேண்டியதாயிற்று. அந் நெருக்கடியில் எது உதவிற்று?

இத்தகைய நெருக்கடியை எண்ணிப் பாராமல், எப்போதோ, எவரோ தூண்ட நான் மேற்கொண்ட செயல் கைகொடுத்தது. அது என்ன செயல்?

நான் செங்கற்பட்டு மாவட்ட ஆணைக் குழுவில், உதவிப் பஞ்சாயத்து அலுவலராகச் சேர்ந்தபோது, அப்பதவி அரசு ஊழியப் பட்டியலில் சேரவில்லை. ஊராட்சி ஊழியப் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

அத்தகைய பணியில் இருந்தோருக்கு ஓய்வு ஊதியத் திட்டம் இல்லை. மாறாகப் பிராவிடெண்ட் நிதித் திட்டமே இருந்தது.

வேலை உறுதி செய்யப்பட்ட அனைவரும் அத்திட்டத்தில் சேரவேண்டும்.

அதாவது உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து, தமது ஊதியத்தில் பதினாறில் ஒரு பங்கை, திங்கள் தோறும் கட்டி வரவேண்டும்.

வேலை வாங்கும் ஆட்சிக் குழுவும் அதே அளவு பணத்தை ஊழியரின் கணக்கில் போடவேண்டும்.

அலுவலரோ ஊழியரோ ஓய்வு பெறும்போது அப்படிச் சேர்ந்த தொகைகள், அவற்றிற்கான வட்டியோடு கொடுக்கப்படும்.

அக் காலத்தில் எங்களுக்குச் சம்பளம் மட்டுமா கட்டை? மேற் கூறிய சேமிப்புக் கணக்கிற்கு வட்டியும் மிகமிகக் கட்டை. அதுபோக,

ஊழியர் விரும்பினால், உறுதி செய்யப்படும் நாள் வரை காத்திராமல் வேலையில் சேர்ந்த நாள் முதல் இருந்தே சேமிப்புச் செய்யலாம்.

பதினாறில் ஒரு பங்கு சேமிப்பு கட்டாயம். ஆனால், ஊழியர் விரும்பினால் ரூபாய்க்கு இரண்டரை அணா (இப்போதைய பதினைந்து காசு) வரை சேமிக்கலாம்.

இவ்விரண்டிற்கும் நிர்வாக மன்றத்தின் முன்னொப்புதல் தேவை. அப்படி ஒப்புதல் பெற்றுச் சேமித்தாலும், ஆட்சி மன்றம் பதினாறில் ஒரு பங்கையே தமது பங்காகப் போடும். அதற்கு மேல் அதிகம் போடாது.

நண்பர் காட்டிய நல்வழி

நான் உதவிப் பஞ்சாயத்து அலுவலனாகச் சேர்ந்த சில நாள்களுக்குப் பிறகு திரு. மா.கி. திருநாவுக்கரசு என்பவரைக் காண நேர்ந்தது. அவர் எனக்குத் தூரத்து உறவு; நெருங்கிய நண்பர்; ஆசிரியர்; என்னுடன் உரிமையோடு உரையாடக்கூடியவர். அவர் எனக்கு நல்வழிகாட்டினார். என்ன வழி?

''உன்னுடைய கை ஓட்டைக்கை; பணம் கிடைத்தால் நொடியில் செலவு செய்து விடுவாய். வெற்றிலை பாக்கு, சிகரெட், பொடி, சினிமா ஆகிய எத்தகைய கெட்ட பழக்கமும் உனக்கு இல்லை என்பது எனக்குத் தெரியும். உன்னுடைய நண்பர்கள் எவரும் கெட்ட பழக்கமுடையவர் அல்லர். உன்னை உறிஞ்சக் கூடியவர் அல்லர்.

''இருப்பினும் விருந்தோம்பியே பணம் முழுவதும் செலவு செய்து விடுவாய். அது உன் இயல்பு. உன் தாத்தா கூட, வயிறு நிரம்பினாலும், பானை மூடமாட்டார். அவர் காலத்திற்கு, அவர் நாட்டுப்புற வாழக்கைக்கு அது சரி. உன் காலத்திற்கு, உன் பிற்கால வாழ்க்கைக்கு அது ஒத்து வராது.

''எனவே மாவட்ட ஆட்சிக்குழுவின் இசைவைப் பெற்று, நீயாகவே, இப்போதிலிருந்தே பிராவிடெண்ட் நிதியில் சேர்ந்து கொள்; பதினாறில் ஒருபங்கு கட்டுவதோடு நிறைவு கொள்ளாதே. விதிமுறை இடம்கொடுக்கும் ரூபாய்க்கு இரண்டரை அணா விழுக்காட்டில் கட்டிக் கொண்டு வா.

''அந்தச் சேமிப்பு உனக்கு ஓய்வு பெற்ற காலத்தில் கை கொடுக்கும். அது தவிர வேறொரு சேமிப்பும் உன்னிடம் தங்காது.'' இப்படிச் சேமிக்கும் வழியை எனக்குச் சொல்லித் தந்தார்.

அவர் எதையும் மிகைப்படுத்தவில்லை என்பது எனக்குப் புலனாயிற்று. நாளை வரும்போது பார்த்துக்கொள்வோம் என்று ஒதுங்கும் பொறுப்பற்ற போக்கு எனக்கு எப்போதுமே இல்லை.

எப்படியோ, எங்கிருந்தோ, கூரையைப் பிய்த்துக்கொண்டு பணம் வரும் என்னும் மூட நம்பிக்கைக்கு நான் ஆட்படவில்லை.

எனவே, நண்பர் திருநாவுக்கரசின் அறிவுரையை ஏற்றுக் கொண்டேன்.

தொடக்கத்திலிருந்தே பிராவிடெண்ட் நிதி கட்டத் தொடங்கினேன். அதில் சில நூறு ரூபாய்கள் சேர்ந்திருந்தன. அத்தொகையில் கடன் வாங்க இடம் இருந்தது. அது நினைவிற்கு வரவும் தெம்பு பெற்றேன்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் துணிந்து சேர்ந்தேன். சேமிப்புப் பணம் எனக்கு வழித்துணையாயிற்று.

இப்போது, பல்லாண்டுகளுக்குப் பின்னர் பழையனவற்றை நினைத்துப் பார்க்கிறேன். நண்பர் திருநாவுக்கரசு சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையானதை உணர்கிறேன்.

பதினைந்து ஆண்டுகள், பொதுக்கல்வி இயக்குநர், இந்திய அரசின் இணைக் கல்வி ஆலோசகர், தமிழ் நாட்டின் தலைமைக் கல்வி ஆலோசகர் ஆகிய பெரும் பதவிகளில் இருந்து விட்டு ஓய்வு பெறும்போது என் கையிலோ, வங்கியிலோ இருந்த மொத்தத் தொகை எவ்வளவு? சில நூறு ரூபாய்களுக்கும் குறைவு. ஆனால்?

திருநாவுக்கரசின் வழியை, கல்வித்துறைக்கு வந்த பிறகும் விழிப்புடன் பின்பற்றியதால், இருவரே கொண்ட என் குடும்பம். காலந்தள்ளும் அளவு பிராவிடெண்ட் நிதி சேர்ந்திருக்கிறது. அடிக்கடி அவரை நினைப்பதுண்டு. எப்படி நினைக்கிறேன்? என்னைத் தடுத்தாட்கொண்டவராக.

73. இந்தியை எதிர்க்கவும் ஏற்கவும் தயங்கினேன்

தமிழகத்தில் கொந்தளிப்பு

1938 ஆம் ஆண்டு ஜூன் கடைசி வாரம் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தேன்.

அப்போதே உலகப்புகழ் தத்துவ மேதையாக விளங்கிய டாக்டர் சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன், அதே பயிற்சிக் கல்லூரியில் படித்தவர் என்று தெரிந்துகொண்டேன். எவ்வளவு பெரியவர் படித்த இடத்தில் படிக்கிறோம் என்று பெருமிதங் கொண்டேன்.

வழக்கம்போல் நாள் தவறாமல், நேரந்தவறாமல் கல்லூரிக்குச் சென்று வந்தேன்.

வகுப்புகளில் இருக்கும்போது பாடங்களின் மேல்மட்டுமே மனம் ஒன்றி நிற்கும் பழக்கம் விட்டுப்போகவில்லை என்பதை உணர்ந்தேன். என் தன்னம்பிக்கை வளர்ந்தது.

சாதாரண மனிதன் முழுவதும் தன்வயமானவன் அல்லன்; அவன் சமுதாயத்தின் உறுப்பினன்; அதிலிருந்து பிரிக்க முடியாத உறுப்பினன்.

எனவே, சமுதாயத்தால் தாக்கப்படுபவன்; பாதிக்கப்படுபவன்.

சமுதாயத்தின் அமைதி, தனி மனிதனின் அமைதிக்கு உதவி. சமுதாயக் கொந்தளிப்பு தனி மனிதனின் உள்ளத்தில் அலைகளை எழுப்பும்.

சாதாரண இளைஞனாகிய நான் - சமுதாயத்தின் சிந்தனை நீரோட்டங்களில் இளமையிலேயே அக்கறை கொண்டு விட்ட நான் - ஆசிரியப் பயிற்சி பெறும்போது, பெரிதும் அலைக்கழிக்கப்பட்டேன்.

தமிழ்ச் சமுதாயம், அன்று கொந்தளிப்பில் மூழ்கியிருந்தது. புதிய புயல் ஒன்று அப்போது உருவாயிற்று.

பெரியார் ஈ.வெ. ராமசாமியாரின் தன்மான இயக்கத்தால் ஈர்க்கப்படாத தமிழர்கள்கூட, அலறி அடித்துக்கொண்டு எழுந்தார்கள்; மனம் கொதித்துக் கூடினார்கள்.

அக்கால கட்டத்தில், இரு தமிழர் கூடினால், சில மணித்துளிகளில், தொட்டது ஒன்றே ஒன்றைத்தான்; வாதிட்டது ஒன்றைப் பற்றித்தான்.

எந்த ஒன்றைப்பற்றி?

கட்டாய மொழி இந்தி

சென்னை மாகாண உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப்பாடமாக்குவது பற்றி.

இவ்விவகாரம் எப்படி எழுந்தது?

அனைத்திந்திய காங்கிரசின் திட்டங்களில் ஒன்று இந்தி மொழியை இந்திய நாடு முழுவதிலும் பரப்புதல். அதற்காகப் பல மாகாணங்களிலும் 'இந்திப் பிரசார சபை'கள் நிறுவப்பட்டன.

சென்னை மாகாணத்தின், தமிழ் நாட்டுப் பகுதியிலும் அத்தகைய அமைப்புகள் நிறுவப்பட்டன.

அக்காலக் காங்கிரசின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஈ.வெ. ராமசாமி அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தார்.

ஈரோட்டில் தாம் முன்னின்று தொடங்கிய இந்திப் பள்ளிக் கூடத்தை ஈராண்டு தம் சொந்தச் செலவில் நடத்தினார். அதோடு, பதினைந்து மாணவர்களுக்குத் தம் செலவில் உணவும் உறையுளும் அளித்தார்.

திருச்சியில், பீகாரைச் சேர்ந்த அபேதானந்தா என்பவரைக் கொண்டு இந்தி பரப்பும் சபை நிறுவியதைத் தொடங்கி வைத்தார்.

ஆனால் 1926ஆம் ஆண்டிலேயே ஈ.வெ.ராமசாமி, தமிழ் நாட்டில் இந்தியைப் பரப்புவதை வெளிப்படையாக எதிர்க்கத் தொடங்கினார்.

தமது 'குடி அரசு' 7-3-1926 ஆம் இதழில் எழுதிய கட்டுரையொன்றில்,

'இனிக்கொஞ்ச காலத்திற்குள் இந்திப் பிரசாரத்தின் பலனை நாம் அனுபவிக்கப் போகிறோம். பிராமணரல்லாதாருக்கு ஏற்பட்ட பல ஆபத்துகளில் இந்தியும் ஒன்றாய் முடியும்போல் இருக்கிறது' என்று எச்சரித்தார்.

அதோடு 1930ஆம் ஆண்டு, நன்னிலத்தில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் இந்தி எதிர்ப்பு முடிவொன்று ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

மறைமலையடிகளாகிய தமிழ் அறிஞர் 'இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழர் துன்புறுவர்' என்று கட்டுரை வாயிலாக விளக்கி வந்தார்.

இந்தி வகுப்பில் சேர்ந்தேன்

இருப்பினும் பல்லாண்டுகள்வரை இந்தி எதிர்ப்பு மக்கள் இயக்கமாகத் தழைக்காதிருந்தது. பெரியாரின் தன்மான இயக்கக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட நான்கூட, மாணவப் பருவத்தில் 1929 இல், சென்னையில் மேற்கூறிய அபேதானந்தா நடத்திய இந்தி வகுப்பில் சேர்ந்தேன்.

திரு. சி. சுப்பிரமணியம், திரு. அளகேசன் முதலியவர்களுடன் சேர்ந்து, இந்தி கற்றுக்கொள்ள முயன்றேன்.

எழுத்துகளைக் கற்று, நூறு சொற்களை எழுதும் நிலையை அடையும் வேளை படிப்பு முறிந்தது. ஏன்?

எங்கள் ஆசிரியர் அபேதானந்தாவிற்கு அழைப்பு வந்தது; எதற்கு?

சென்னையிலிருந்து பீகாருக்கு உடனே திரும்பி வந்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு வந்தது.

எங்கள் பாடத்தைப் பாதியில் விட்டு விட்டு, அவர் போராடச் சென்று விட்டார். இந்தியைப் பொறுத்தமட்டில் மறு வாய்ப்புக் கிட்டாமையால் நான் தற்குறியாகிவிட்டேன். ஆயினும்,

பல ஊர்களில், சிறுசிறு குழுக்காளவது, விரும்பி, இந்தியைப் படித்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில் அதன் இயற்கையான வளர்ச்சிக்குத் தீங்கொன்று வந்தது.

ஆச்சாரியார் அறிவிப்பு

சென்னை மாகாணத்தில், 1937 இல் அமைச்சரவை அமைத்த பிரதமர் இராசகோபாலாச்சாரியார், ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

பிற காங்கிரசு ஆட்சி மாகாணங்களில் நுழையாத, திட்ட மொன்றைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார்.

அத்திட்டம் என்ன?

சென்னை மாகாணத்தில் நடந்துகொண்டிருந்த பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கப் போவதாக அறிவித்தார்.

எப்போதிருந்து? 1938 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல்,

எந்தெந்த வகுப்புகளுக்கு? ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளுக்கு . அவ்வகுப்புகளில் படிக்கும் மாணவ-மாணவியர் அனைவரும், இந்தி மொழியைக் கட்டாயமாகப் படித்தாக வேண்டும்; அதில் தேர்வு எழுத வேண்டும்; அத்தேர்வில் போதிய மதிப்பெண் பெற்றால்தான், ஆறிலிருந்து ஏழாம் வகுப்புக்கும், ஏழிலிருந்து எட்டாம் வகுப்புக்கும், எட்டிலிருந்து ஒன்பதாம் வகுப்புக்கும் போகலாம்.

இத்திட்டத்தை முதலில் நூறு உயர்நிலைப் பள்ளிகளில் வெள்ளோட்டம் பார்க்கப் போவதாக அரசு அறிவித்தது. அந்த அறிவிப்பு வந்தபோது. நான் துணைப் பஞ்சாயத்து அலுவலராக ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன்.

சிற்றூர் ஒன்றில், ஒரு பெரியவர் இது பற்றி என்னிடம் பேச்சுக் கொடுத்தார். அவருக்கு அரசியல் ஈடுபாடு கிடையாது; படிப்பும் அதிகமில்லை.

திண்ணைப் பள்ளியில், பழைய கால முறைப்படி படித்தவர்; பிறகு முயன்று, தாமே பலவும் கற்றவர்; ஆழ்ந்த கூர்த்த மதியினரும் கூட.

அவர், செய்தித்தாளில் வந்த இந்தி கட்டாயப் பாட அறிவிப்பை என்னிடம் காட்டினார். காட்டிவிட்டு, இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்றார்.

மனிதர்களிடையே தீண்டாமையைக் கடைப்பிடிப்பதை வெறுப்பது போன்றே, மொழிகளிடையே தீண்டாமையைக் கடைப்பிடிப்பதையும் நான் வெறுத்தேன். இந்தியை விரும்பிக் கற்றுக்கொள்ள முயன்றேன்.

அது கைகூடாதது என்னுடைய குற்றம் அல்ல; அப்போது ஏற்பட்ட சூழ்நிலையின் கோளாறு. ஆகவே, இந்திப் பாடத்தை எதிர்க்கவும் மனம் வரவில்லை; ஏற்கவும் தயங்கினேன்.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டு வைத்தேன். அதைக் கெட்டிக்காரத்தனமென்று நினைத்துக் கொண்டேன்.

74. கட்டாய இந்தி எதிர்ப்புப் போர்

ஊரார் உரையாடல்

சிக்கல்களிலிருந்து நழுவி விடுவதைக் கெட்டிக்காரத்தனமாக நினைக்கும் படிப்பாளிகளைப்போல், அவர் நடந்து கொள்ளவில்லை; மழுப்பாமல் தயங்காமல் பதில் சொன்னார்.

''என் மனத்தில் பட்டதைச் சொல்லி விடுகிறேன். என் கருத்துத் தப்பாக இருந்தால் ஒரு காதில் வாங்கி, மறுகாதில் விட்டு விடுங்கள்.

''நாட்டில் படிப்பின் நிலை என்ன? பாதிப்பேர் படிப்பதே இல்லை, நாட்டுப்புறத் தொடக்கப்பள்ளியில் அய்ந்தாவது முடிய ஒரே மொழி - தாய் மொழி-மட்டுமே சொல்லிக் கொடுக்கிறார்கள். அது தவறு என்று சொல்ல மாட்டேன்.

''ஆனால், நகரங்களில், அதே தொடக்க நிலையில், மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலமும் சொல்லிக் கொடுக்கிறார்கள்'' நகரங்களில் குடிசையில் வாழும் குழந்தைகூட இரு மொழிகளைக் கற்றுக் கொள்ளக் காண்கிறோம்.

நாட்டுப்புறப் பிள்ளைகளில் எங்கோ, இரண்டொரு பிள்ளைகள் தனியாக, வீட்டில் ஆசிரியரை அழைத்து, ஆங்கிலம் கற்றுக் கொள்கின்றனர். அப்படிச் செய்ய முடியாத பெரும்பாலோர், உயர் நிலைப்பள்ளிக்குப் போனால், மூன்றாம் வகுப்பில்தான் சேர முடிகிறது.

''நகரத்துப் பிள்ளைகள் இருமொழிகளைக் கற்றுவிட்டு, ஆறாம் வகுப்பில் சேர்வார்கள்.'' அவர்களுக்கு இந்தி ஒன்றே புது மொழி.

''நாட்டுப்புறப் பிள்ளைகளுக்கோ தனிப்பாட ஆங்கிலம் சரியாக வந்து இராது. எனவே, ஆங்கிலத்தைக் கற்பதிலும் இந்தியைக் கற்பதிலும் ஒரே சமயத்தில் பாடுபட வேண்டும்; மற்றவர்களோடு கடுமையாகப் போட்டியிடவும் வேண்டும்.

''பிற எந்த மொழிக்காரருக்கும் இல்லாத ஒரு புதிய தொல்லை, தமிழ் மொழிக்காரர்களுக்கு உண்டு.

''இந்தி எழுத்து, ஒலி இரண்டுமே தமிழர்களுக்கு முழுக்க முழுக்கப் புதியன. பத்து வயது பிள்ளைகள் தலையில் புதிய நகரச் சூழ்நிலை, ஒரே சமயம் இரு புதிய மொழிச் சுமைகள் வீழ்ந்தால் அவர்கள் பிழைப்பார்களா? தேர்ச்சி அடைவார்களா?

''பெரும்பாலோர், தேர்ச்சி அடைய மாட்டார்கள். ஆறாம் வகுப்போடு படிப்பை மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஏர் உழ,

அளக்கும் வேலை பார்க்க, நிறுத்துப்போட, கூலி வேலைக்கு இறங்கி விட வேண்டியதே!

''நாட்டுபுறப் பிள்ளைகள் இக்காலப் படிப்பில் தழைக்காது பட்டுப்போகவே இத்திட்டம் பயன்படும்; வேறெந்த நன்மையும் விளையாது'' என்று கூறிக் கொண்டு போகையில், ஊராட்சி உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டார்.

அவர் தூய்மையான காங்கிரசுக்காரர். கதரைத் தவிர எதையும் அணியாதவர். அவர் தலையிட்டு,

''அப்படியா அண்ணா நினைக்கிறீர்கள். இந்திப் பாடம் வட இந்திய வேலைகளுக்குப் போக நம் பிள்ளைகளுக்கு உதவுமே'' என்றார்.

''இந்திய அரசில் வேலை வாய்ப்புகளைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியதே!

''எந்த அளவு படிப்பாளிகளுக்கு, அனைத்திந்திய அலுவல்களில் சேரும் வாய்ப்புகள் அதிகமென்று சிந்திப்போம்.

''பட்டதாரிகளுக்கு அத்தகைய வாய்ப்புகள் மிக அதிகம் எனலாம்.

''பள்ளியிறுதியோடு படிப்பை நிறுத்தியவர்களுக்கு அவ்வளவு வாய்ப்புகள் கிடைக்கா.

''எட்டாவதோடு நின்று விடுவோர்க்கு இந்திய அலுவல் வாய்ப்புகள் மிகமிகக் குறைவு.

''தமிழ் இளைஞர்கள், இந்திய அலுவல்களில் சேருவதற்கு உதவ நினைத்திருந்தால் பட்டப்படிப்பில் இந்திப்பாடத்தை நுழைப்பதே அதிகப் பலன் கொடுக்கும் நடவடிக்கையாகும்.

''தவறினால், உயர்நிலை வகுப்புகளில் மட்டுமே கற்றுக் கொடுக்கலாம்.

பட்டப் படிப்பில் ஆகட்டும், உயர்நிலைப் பள்ளியில் ஆகட்டும் தொடக்கத்தில் இந்தியை விருப்பப் பாடமாக்குவதே தந்திரம்.

''பயன் கொடுக்கக்கூடிய அவ்விரு மேல்நிலைகளை விட்டு விட்டு, நடுநிலைப் பள்ளி வகுப்புகளில் இந்தி மொழியைக் கட்டாயமாக்குவது இந்திய அரசுப்பணிகளில் சேர உதவாது.

''மாறாக, பொது மக்களின் பிள்ளைகளில் பலர், அய்ந்தாவது ஆறாவது வகுப்புகளோடு படிப்பிற்கு முழுக்குப் போட்டு விடும்படிச் செய்யும். இது நாட்டுக்கு நல்லது அல்ல.

''மக்கள் ஆயிரங்காலத்துப் பயிர்கள் என்பார்கள். எனவே கல்வித் திட்டம் தீட்டுகையில் இக்காலத் தொல்லைகளை, தேவைகளை நினைத்துக்கொண்டு அமைப்பது சரியல்ல. தொலைக் கண்ணோட்டத் தோடு அணுக வேண்டும்.

''ஆறு, எட்டுவரை வரப்போகும் இந்தி கட்டாயப் பாடம், பொது மக்கள் நலனுக்குக் கேடானது. கல்வியின் வேரில் வெந்நீர் ஊற்றுவதாகும்'' என்று பெரியவர் விரிவுரை ஆற்றினார்.

அதைப் பொறுமையாகக் கேட்ட காங்கிரசுத் தொண்டர், ''இராசாசிக்கு இது கூடவா தெரியாது போகும்'', என்று பெரியவரை மடக்க முயன்றார்.

பெரியவர் பொறுமை இழக்காது, ''இராசாசி மூதறிஞர் என்பதில் அய்யமில்லை. எனக்குத் தெரிந்தது அவருக்குப் புரியாது, என்று எண்ண முடியாது.

''நான் சுட்டிக்காட்டிய கேடுகளுக்கு நீங்கள் கூறும் பதிலில், பெரியவரிடமும் காங்கிரசிடமும் கொண்டுள்ள பக்தி மணம் மட்டுமே வீசுகிறது.

''எனக்குப் புரியாத ஏதோ ஆழமான உள் எண்ணம் பற்றியே இராசாசி இந்தி மொழியைப் பிஞ்சுகளின்மேல் கட்டாயப்படுத்துகிறார் என்று வேண்டுமானால், ஒப்புக்கொள்ளுகிறேன்.

''இத்திட்டம் பொது மக்களுக்கு நன்மையானதல்ல; கேடானது என்பது வெளிப்படை'' என்றார் பெரியவர்.

''உங்களுக்கு அரசியல் கட்சி ஈடுபாடு சிறிதும் இல்லை. எதையும் அதனதன் உண்மைத் தன்மையில் மதிப்பிட முயல்கிறீர்கள் என்பது தெரியும்.

''அப்படிக் கட்டாயப் பாடமாவதற்கு இன்னும் பல மாதங்கள் உள்ளன. அதற்கிடையில், மக்கள் கருத்துகள் பொங்குவது உறுதி. அதன் அடிப்படையில் செய்யவேண்டிய மாற்றங்களைச் செய்யாமலா போவார்கள்?'' என்று அமைதியாக நம்பிக்கையோடு காங்கிரசுத் தொண்டர் முடித்தார்.

பகை உணர்ச்சி இல்லை

அக்காலச் சமுதாயத்தின் ஒரு சிறப்பு - எல்லா இடங்களில் இல்லாவிட்டாலும் - பெரும்பாலான சிற்றூர்களில் சிறப்பாக இருந்தது.

அது என்ன?

கருத்து மாறுபாடு பற்றி, பகையணிகளாக நிறபது அன்று குறைவு. வெவ்வேறு கருத்துடைய சிற்றூர்களில், அடிக்கடி கூடி வாதிடுவார்கள்; கருத்துகளைப் பரிமாறிக் கொள்வார்கள்.

நேர் எதிர் கோணங்களில் நிற்பவர்களுக்கிடையிலும் இன்றைக்கு நான் காணுகிற அளவு காழ்ப்புணர்ச்சியை, வெறுப்பை அன்று கண்டதில்லை.

பிறர் மாற்றுக் கருத்தைப் பொறுத்துக் கொள்வதே நாகரிகத்தின் தொடக்கம். அதை நிறையப் பெற்றிருந்த தமிழ்ப் பொது மக்கள், விரைந்து அந்தப் பண்பாட்டைக் கைவிட்டு வருகிறார்கள் என்பது என் மதிப்பீடு.

இப்போக்கு, வெறித்தனத்தை வளர்த்து, மீண்டும் நம்மை விலங்கு நிலைக்குத் தள்ளிவிடும்.

அறிவாளிகளே கருத்துரிமைக்குப் பாடுபட முன்நிற்க வேண்டும். ஆனால் நம் பொல்லாத வாய்ப்பாக, இக்கால அறிவாளிகள், நொய்க்கஞ்சிகளாகயிருப்பதே சிறப்பு என்று ஏமாறுகிறார்கள்.

அரசியல் தலைவர்களுக்கோ, தேர்தல் வெற்றியொன்றே குறிக்கோள்.

ஆகவே ஒழுங்கை வளர்ப்பதற்குப்பதில் ஒழுங்கீனத்தை, காழ்ப்புணர்ச்சியை வளர்ப்பது அவர்களுடைய மலிவான நடவடிக்கை.

பொது மக்களுக்கு நன்னெறி காட்டுவோர் எவர்? பொறையுடைமையை வளர்ப்போர் எவர்?

காங்கிரசுத் தொண்டர் எதிர்பார்த்தபடி, அடுத்து வந்த சில திங்களில் கருத்து மழை பெய்தது.

இந்தி கட்டாயப் பாடம் வேண்டாம்; பாடச் சுமையை அதிகமாக்கும்; நாட்டுப்புற மக்களின் கல்வி வளர்ச்சியை நசுக்கும்; ஒடுக்கும். இது சாதாரண மக்களுடைய கருத்தோட்டம்.

அரசியல் கட்சிகளின் கருத்து

தமிழ் நாட்டு அரசியல் கட்சிக்காரர்களின் அணுகு முறை என்ன?

காங்கிரசுக்காரர்கள், கட்சிக் கட்டுப்பாடு, இந்திய ஒருமைப் பாட்டுக்குத் துணை; இந்தியைப் பரப்புதல் காந்தியாரின் ஆக்கத் திட்டங்களில் ஒன்று; பல்லாண்டுகளாகப் பரப்பி வரும் மொழி,'' என்றெல்லாம் கூறி, கட்டாய இந்திப் பாடத்தை ஆதரித்தார்கள்.

மாற்றுக் கட்சி அரசியல்வாதிகள், அதை ''மொழியாதிக்கம், தமிழைத் தாழ்த்தும் முயற்சி, தமிழர் படிப்பில் மண்ணள்ளிப் போடும் வேலை'' என்று கூறிக் கட்டாய இந்தியை எதிர்த்தார்கள்.

சாதி சமய வேறுபாடின்றிப் பல்வேறு பிரிவினரும் எதிர்த்தார்கள். காஞ்சி பரவஸ்து இராசகோபாலாச்சாரியார் வன்மையாக எதிர்த்தார்.

தமிழாசிரியர்கள் எதிர்த்தார்கள். 'ஆங்கில மொழி ஆதிக்கத்திலிருந்து விடுபடாத தமிழர், இந்தி ஆதிக்கம் என்னும் மற்றோர் கால்கட்டைப் போட்டுக் கொண்டால், சப்பாணி ஆகிவிடுவார்கள். அவர்கள் படிப்புக் கெடும்; அவர்கள் கையாளும் தமிழ் உருமாறும்' என்று பரவலாக எதிர்த்தார்கள்.

பொதுக்கூட்டங்கள், தனி மாநாடுகள் வாயிலாக, கட்டாய இந்தி எதிர்ப்பு வெடித்துக் கிளம்பியது. அதேபோல, பல உருவங்களில் விரைவாக ஆதரவும் திரட்டப்பட்டது.

1937 டிசம்பரில் திருச்சியில், தோழர்கள் டி.பி. வேதாசலம், கி.ஆ.பெ. விசுவநாதம் முதலியோர் முன்னின்று, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் 'தமிழர் மாநாடு' நடத்தியதைக் குறிப்பிட வேண்டும். அம்மாநாடு கட்டாய இந்தியைக் கண்டித்து முடிவு செய்தது. பின்னர்.

மாநில இந்தி எதிர்ப்பு மாநாடு

காஞ்சிபுரத்தில் 1936 பிப்ரவரியில் 'மாநில இந்தி எதிர்ப்பு மாநாடு' என்ற பெயரில் பெரியதோர் மாநாடு நடந்தது. தந்தை பெரியாரைப் பின்பற்றுபவர் இம்மாநாட்டை ஏற்பாடு செய்தார்கள்.

தோழர்கள் அ.க. தங்கவேலர், எஸ்.வி. லிங்கம் இருவரும் தீவிரப் பொறுப்பேற்று மாநாட்டை நடத்தினார்கள்.

சர்.கே.வி. ரெட்டி தலைமை தாங்கினார். சர்.எம்.கிருஷ்ணன் நாயர் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

அம் மாநாடு, தமிழர் தம் உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது. தமிழ் வளர்ச்சி பற்றி அக்கறை கொள்ளாதவர்களிடையிலும் தமிழ் ஆர்வத்தை வேகமாக வளர்த்தது.

அம் மாநாடு கட்டாய இந்திப் பாடத்தைக் கைவிடும்படி அரசைக் கோரும் முடிவினை மேற்கொண்டது.

அப்புறம், பல ஊர்களில் கட்டாய இந்திக் கண்டனக் கூட்டங்கள் நடந்தன.

தமிழ் மக்கள், இந்தி விரும்பிகள், இந்தி எதிர்ப்பாளர்கள் என்று இருவேறு அணிகளாகப் பிரிந்து, ஒருவரோடு ஒருவர் வெறுப்புக் கொண்டு நின்றார்கள். அப்போக்கு இன்றும் தணிந்த பாடில்லை எனலாம்.

காஞ்சிபுரம் மாநாட்டிற்குப் பின்னர் புதியதோர் போராட்ட முறை மேற்கொள்ளப்பட்டது. அது என்ன?

இந்தி எதிர்ப்புப் படை

திருச்சி நகரத்திலிருந்து, நூறு பேர்களைக் கொண்ட இந்தி எதிர்ப்புப்படை ஒன்று புறப்படுவது. அது சென்னை நோக்கிக் கால் நடையாகவே வருவது. வழியில் உள்ள ஊர்களில் கட்டாய இந்திப் பாடத்தை எதிர்க்கும் கொள்கையைப் பரப்புவது.

இத்திட்டத்தை, திருச்சியில் 'நகர தூதன்' என்னும் வார இதழை நடத்தி வந்த பேனா மன்னர், மணவை திரு. மலைசாமி அவர்கள் தந்தை பெரியாரிடம் கூற, அவர் ஊக்க, ஆர்வத்தோடு செயலுக்கு வந்தது.

இந்தி எதிர்ப்புப் படை, திட்டமிட்டபடி, குறித்த நேரத்தில் திருச்சியில் இருந்து புறப்பட்டது.

அப்படையின் தலைவர், இராவ் சாகேப் அய். குமாரசாமிப் பிள்ளை என்னும் தமிழ் அறிஞர் ஆவார். அப்படையில் திருமலைசாமி சேர்ந்து வந்தார். புகழ்மிக்க பேச்சாளர்களான பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பாவலர் பாலசுந்தரம், திருப்பூர் மொய்தீன் ஆகியோர் நடந்தே வந்தார்கள். திருமதி மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் அப்படையில் சேர்ந்து நடந்து வந்தார்கள்.

இம்மூதாட்டி, தன்மான இயக்கத்தில் பெருந்தொண்டு ஆற்றியவர்; பெண்கள் உரிமைக்கு ஆக்கப்பணி புரிந்து உள்ளவர். பல கலப்புத் திருமணங்களுக்குத் துணை நின்றவர்.

திருச்சிலிருந்து சென்னைவரை வெற்றிகரமாக நடந்தே வந்த அப்படையில் வீர உரைகளும் வழிநடைப் பாடல்களும் தமிழ்நாடு முழுவதையும் தட்டி எழுப்பியது.

அப்படைக்கு, வழிநெடுகிலும் பலர் உதவினார்கள், அதில் என்னுடைய ஆதரவாளர்கள் இருவர் இருந்தார்கள்.

தோழர் கயப்பாக்கம் முத்துலிங்க ரெட்டியார் என்னும் பண்பாளர், அப்போதைய செங்கற்பட்டு மாவட்ட ஆட்சிக் குழுவில் உறுப்பினர். எனக்கு ஆதரவானவர்; நல்ல காங்கிரசுக்காரர்.

அவருடைய தம்பி தோழர் புலம்பாக்கம் முத்துமல்லா, என்னுடைய கல்லூரிப் பருவம் முதல் என்னுடைய நண்பர், எனினும் இரண்டொரு ஆண்டு மூத்தவர், இவரும் காங்கிரசுக்காரர்.

அண்ணன் தம்பி இருவரும் அன்றும் சரி, இன்றும் சரி, கதர் உடையே அணிந்து வருபவர்கள்.

கட்டாய இந்திப் பாடம் அவர்களுக்கு உடன்பாடு அல்ல. 'சிறு வகுப்புகளில் அதைத் திணிப்பது தீங்கு என்பதை, கட்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கும் அவர்களும் புரிந்து கொண்டார்கள்.

மேற்கூறியவர்கள் இருவரும் இந்தி எதிர்ப்புப்படைக்கு, திண்டிவனம் முதல் செங்கற்பட்டுவரை, புரவலர்களாகச் செயல்பட்டார்கள்; பல உதவிகளையும் தாராளமாகப் புரிந்தார்கள்.

பல்வேறு பிரிவினரும் பரவலாக எதிர்த்தபோதும் அன்றைய மாகாண ஆட்சி மறு பரிசீலனை செய்யவில்லை. தேர்தல் வாக்குறுதிகளில் சேராத, பிற காங்கிரசு அமைச்சரவைகள் செய்யாத

கட்டாய இந்திப் பாடத்தை நடைமுறைப்படுத்துவதில் முனைப்பைக் காட்டினர்.

'ஆளுவது நாங்களா? தோற்றுப் போன பெரியார் கட்சிக் காரர்களா?' என்றே பல காங்கிரசுத் தலைவர்கள் நினைத்தது விபரீதம்.

அந்நினைப்பால் உந்தப்பட்டு, முன்னர் அறிவித்தபடியே, அடுத்த கல்வியாண்டில் குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பில் இந்தி கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்டது.

இதற்கிடையில் பல தமிழர்களும் பின்னின்று ஊக்க, தந்தை பெரியார் வழிகாட்டலில் இந்தி எதிர்ப்புப் போர் நடத்த முடிவு செய்யப்பட்டது இந்தியைக் கட்டாயமாக்கும் சென்னை தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளி முன் நாள்தோறும் சில தொண்டர்கள் மறியல் செய்வது' என்பது திட்டம்.

உண்ணா விரதம்

இதைத் தொடங்குமுன் பல்லடம் பொன்னுசாமி என்னும் தமிழ்ப்பற்றாளர் பிரதமர் இராசகோபாலாச்சாரியார் வீட்டின் முன் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். அவர் கைது செய்யப்பட்டார். சிறைத் தண்டனை பெற்றார்.

அடுத்து ஸ்டாலின் ஜெகதீசன் என்னும் இளைஞர் தியாகராய நகரில் திரு. செ.தெ. நாயகம் இல்லத்தில் தங்கி உண்ணா நோன்பினை மேற்கொண்டார்.

இவர் திரு. மீ. பக்தவத்சலம், திரு. பி.டி. இராசன், திரு. ஓ.வி. அளகேசன் ஆகியோருக்கு மிக நெருங்கிய உறவு. எனக்கு இனிய நண்பர்.

அவர் என்னைப் பார்க்க விரும்புவதாகப் பொது நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். பத்துப் பன்னிரண்டு நாள்கள் ஓடின. நான் போய்ப்பார்க்கவில்லை. ஏன்?

உண்ணா நோன்பு எனக்கு உடன்பாடல்ல, உண்ணா நோன்பு இருப்பவரைப் பார்ப்பது அதை ஆதரிப்பதற்கு ஒப்பாகும். இப்படிக் கருதியதால் பார்க்கப் போகவில்லை.

75. உண்ணா நோன்பின் மதிப்பைக் காப்பாற்றினேன்

ஸ்டாலின் ஜெகதீசன்

உண்ணா நோன்பிருந்த ஸ்டாலின் ஜெகதீசன் எலும்பும் தோலுமாகிவிட்டார்; உயிர் ஊசலாடுகிறது என்ற நிலை தென்பட்ட போது அவரைத் தியாகராய நகரில் இருந்து இராயப்பேட்டைக்குக் கொண்டு போய்விட்டார்கள்.

இராயப்பேட்டை காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள தெருவொன்றில் தோழர் என். சிவராஜ் என்னும் வழக்குரைஞர் குடியிருந்தார். அவர் ஆதிதிராவிட சமுதாயத்தின் தலைவர்களில் ஒருவர். அவர் சென்னை சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்து சிறப்பாகத் தொண்டு ஆற்றியுள்ளார்.

அவருடைய மனைவி திருமதி. மீனாம்பாள் சிவராஜ் கணவரைவிட அதிக சமுதாயத் தொண்டாற்றியவர். அம்மையார் தமிழில் சிறந்த பேச்சாளி. இருவருமே சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்து பொதுத்தொண்டு ஆற்றியவர்கள்.

அந்த அம்மையார், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, சென்னை மக்களைத் தட்டி எழுப்புவதில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டார்.

திருமதி. மீனாம்பாள் சிவராஜ் வீட்டிற்கே தோழர் ஜெகதீசனை அழைத்துப் போனார்கள். அவர் அங்கிருப்பது, காணவருவோருக்கு உதவியாக இருக்குமென்று கருதப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்ட ஆணைக்குழு அலுவலகத்தில் வேலை செய்த சில நண்பர்கள் தோழர் ஜெகதீசனை, இராயப்பேட்டைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள்.

அவர்களிடமும் என்னைக் காண வேண்டுமென்னும் விருப்பத்தை, திரு. ஜெகதீசன் சொல்லியனுப்பினார். செய்தி கொண்டுவந்த நண்பர்களும் பரிந்துரைத்தார்கள்.

'ஜெகதீசன் இறந்துவிட்டால், உன் வாழ்நாள் முழுவதும் அவரைப் போய்ப் பார்க்கவில்லையே என்பது உன் உள்ளத்தில் உறுத்தும்' என்று சுட்டிக்காட்டினார்கள். உள்ளம் இளகிற்று.

உண்ணா நோன்பியைச் சந்தித்தேன்

அடுத்த நாள் திருமதி. சிவராஜ் வீட்டிற்குச் சென்றேன், வரிசையில் நின்றேன், நகர்ந்து நகர்ந்து ஜெகதீசன் இருந்த அறைக்குள் நுழைந்தேன்.

அவர் உணர்ச்சி வயப்பட்டார்; கைகளைப் பற்றிக் கொண்டார்; தம் கண்பார்வையில் உட்காரும்படி சாடைகாட்டினார்; உட்கார்ந்து காத்து இருந்தேன்.

இரவு ஒன்பது மணிபோல் விடைபெற்றுக் கொண்டேன். அப்போதும் என் கைகளைப் பிடித்துக்கொண்டு மறுநாளும் வந்துபோக வேண்டினார். தொடர்ந்து மூன்று மாலை அங்குச் சென்றேன். அவரோடு தங்கிவிட்டு வந்தேன்.

என்ன கண்டேன்? உணர்ச்சிப் பிழம்பான ஆண்களும் பெண்களும் பெரியோரும் சிறியோரும் அமைதியாக வந்து வணங்கிவிட்டுப் போவதைக் கண்டேன். அவருடைய கால்களைத் தொட்டுக் கும்பிட்டவர்களுக்குக் கணக்கில்லை. இது எனக்குப் பிடிக்கவில்லை.

மறுபக்கம் பட்டினி கிடந்த ஜெகதீசனைக் காணச் சகிக்கவில்லை. அணுஅணுவாகச் சிதைக்கும் உண்ணா நோன்பு கொடுமையான சித்திரவதை என்பதை நேரில் பார்த்து உணர்ந்தேன்.

இப்படிப்பட்ட வேதனையான, தற்கொலையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப்பற்றி என்மேல் எனக்கு வெறுப்புப் பொங்கிற்று.

சில இரவுகள் தூக்கமின்றித் தவித்தேன். பிறகு நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டேன். அன்று இரவு ஒன்பது மணிக்குப் பிறகும் தோழர் ஜெகதீசனோடு இருந்தேன்.

பார்வையாளர்கள் இல்லை. வீட்டரசி பொதுக்கூட்டத்திற்குப் போய்விட்டார். நானும் அவரும் மட்டுமே இருந்தோம். அறை வாயிலில் காவற்பையன் உட்கார்ந்திருந்தான்.

எண்ணத்தை வெளியிட்டேன்

''இப்படிச் சித்திரவதைக்கு ஆளாக்கிக் கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை. இந்தியை எதிர்த்து நீங்கள் தற்கொலை செய்துகொள்ள முயல்கிறீர்கள். அதேபோல், வேறொருவர் இந்திக்கு ஆதரவாக நாளை உண்ணா நோன்புமிருக்கலாம்.

''இப்படிப்பட்ட பொதுத்திட்டங்கள் சிலருடைய கடுமையான, கொடுமையான நடவடிக்கை மூலம் முடிவு செய்யவிடுவது நல்லதல்ல.

''பொது மக்களுக்கு அறிவூட்ட உண்ணாநோன்பு வழியல்ல. வெறியூட்டவே அது உதவும். இதைப்பற்றி மறுபரிசீலனை செய்வதே எனக்குப் பிடிக்கும்'' என்று, மெல்ல மெல்ல தாழ்ந்த குரலில், கெஞ்சும் ஒலியில் சொல்லிவிட்டு விடைபெற்றேன்.

அடுத்த நாள் இரவும் நெடுநேரம் இருந்து அதே பாணியில் அவர் மனத்தை மாற்ற முயன்றேன் அவர் எவ்விதப் பதிலும் சொல்லவில்லை.

உள்ளத்தை உணர்ந்தேன்

மூன்றாம் நாள் இரவு ஒன்பது மணிக்குமேல், நிறுத்தி நிறுத்தி, மிக மெல்லிய குரலில் பதில் சொன்னார்.

''வயிற்றைப் பிடுங்குவது வேதனையாகவே உள்ளது. அதைத் தாங்க முடியாது துடிக்கிறேன்.

''ஆனால் நான் உண்ணா நோன்பைக் கைவிட்டுவிட்டால், எனக்குப் பெருத்த இழிவு வந்து சேரும். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைப் பெரிதும் பாதிக்கும்.''

இது அவருடைய கவலை!

பளிச்சென்று ஒரு வழி மின்னிற்று, அவர் காதோடு அதைப் போட்டேன். எவரிடமும் இதுபற்றிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொண்டேன்.

என் முயற்சி

அடுத்த நாள் விடுப்பு எடுத்துக் கொண்டேன். காலையில் திருவாளர் மீ. பக்தவத்சலம் அவர்களைக் கண்டேன். ஏதேதோ பேசிவிட்டு இந்தி எதிர்ப்பைப் பற்றி எடுத்தேன்.

உடனே அவர் உண்ணா நோன்பைக் கண்டித்தார். அவர் கூறியது எனக்கு முழுக்க முழுக்க உடன்பாடு. அதை வாய்விட்டுக் கூறினேன். ஜெகதீசன் படும் உடல் வேதனையை விளக்கினேன்.

அதைக் கைவிட்டுவிடும்படி செய்ய இழையளவு வாய்ப்பு இருக்கிறது. உண்ணா நோன்பைக் கைவிட்டதைச் சொல்லி ஆளுங்கட்சி மேடைதோறும் தூற்றுமே என்று அச்சப்படுகிறார் என்று குழைந்து கூறினேன்.

அவர் ஒன்றும் அரசியல்வாதியல்ல. ஆகவே அவர் ''பட்டினி கிடப்பதை நிறுத்தி விட்டால், அதைப் பெரிதாக்கி, அரசியல் ஆதாய தேடமாட்டோம். இது உறுதி'' என்றார்.

அடுத்த நடவடிக்கை பற்றி, அவரோடு முடிவு செய்யப்பட்டது.

பிறகு, குத்தூசி குருசாமியாரைத் தேடிச் சென்றேன். அவரிடம் ஜெகதீசன் தாங்க முடியாத் வேதனையில் தவிப்பதைக் கூறினேன்.

''தன்மான இயக்கத்திற்கு உண்ணா நோன்பு உடன்பாடு அல்ல! அப்படி ஒருவர், இயக்க உறுப்பினர் அல்லாதவர் தொடங்கியதைக் கண்டிப்பதோ, இருட்டடிப்பதோ உல்கியல் ஆகாது. அதனால்தான் நாள்தோறும் விளம்பரப்படுத்துகிறோம். பெரியாருக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை'' என்றார்.

எனக்குப் பிடி கிடைத்தது. நாங்கள் இருவரும் பெரியாரைப் பார்த்தோம்.

ஜெகதீசன் உடற்பாதையைத் தாங்க முடியாது தவிப்பதை விளக்கினேன்.

''பட்டென்று உயிர் போய்விட்டால், அது வேறு விஷயம். அப்போது அணு அணுவாகச் சிதையும் வேதனை நமக்குத் தெரியாது. இப்போது ஜெகதீசனைப் பார்க்கும்போது உணரமுடிகிறது.

'உண்ணா நோன்பை விட்டுவிட்டால் நல்லது. என்று நான் ஜெகதீசனிடம் கூறிவிட்டேன். அதற்காக என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

''நான் அறிந்த மட்டில், உண்ணா நோன்பை நிறுத்திக் கொள்ள, அவர் ஆழ்மனம் விரும்புகிறது. வாழ்நாள் முழுவதும் பழிச்சொல்லைக் கேட்க நேரிடுமே என்பதும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அது பாதிக்குமே என்று எண்ணியும் தயங்குகிறார்'' என்றேன்.

''ஆமாங்க! ஓர் உயிர் அநியாயமாகப் போகவேண்டாங்க. பொதுக்காரியங்களுக்கு இத்தகைய வழியைப் பின்பற்றக்கூடாது. இது என் கொள்கை'' என்று கூறிய பெரியார்.

''அது அய்யாவிற்கே தெரியும். இந்த நிலையில் என்ன செய்தால் ஜெகதீசன் உயிரைக் காப்பாற்றலாம்'' என்று என்னைக் கேட்டார்.

''அய்யா! பேரளம் மகாதேவ முதலியார், ஜெகதீசனுக்கு அத்தான் முறை; இருவருக்கிடையிலும் நல்லுறவு உண்டு. அவரை வரவழைத்து, அவரைக் கொண்டு ஜெகதீசனுக்கு வேண்டுகோள் விட உத்தேசம். அது பலிக்கலாம். அய்யா ஆதரவு இருந்தால்'' என்றேன்.

அய்யா பூரித்துப் போனார்,

''திரு. மகாதேவன் நம்ம இயக்கத்தவர்; பக்குவமாகப் போகக் கூடியவர். அவர் முயற்சி பலித்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி. நான் இன்றே நோன்பைத் தளர்த்தும்படி தலையங்கம் எழுதுகிறேன். தொடர்ந்து ஜெகதீசனைப் பார்த்துக் கொண்டிருங்க. அவருடைய மரியாதைக்கு இழுக்கு நேரிடாத வகையில் நோன்பை முடித்து வையுங்கள். அதனால் இந்தி எதிர்ப்பு இயக்கம் பாதிக்காதபடி நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, எனக்கு விடை கொடுத்தார்.

அப்படியே பெரியார் தலையங்கம் தீட்டினார்; பேசினார்; உண்ணா நோன்பிற்குக் கொடுத்த மதிப்பை வேறுபக்கம் பக்குவமாகத் திருப்பினார்.

திட்டமிட்டபடி, திரு. மகாதேவன் வந்து சேர்ந்தார். என்னை வந்து கண்டார். அவரிடம் பின்னணியை விரிவாகக் கூறினேன்.

அணுகு முறையைக் கோடிட்டுக் காட்டினேன். திரு. மீ. பக்தவத்சலத்தைக் கலந்துகொண்டு, நடவடிக்கையில் இறங்கச் சொன்னேன்.

திரு. மகாதேவன் அப்படியே செய்தார். அப்போதைக் கப்போது எனக்குத் தகவல் கொடுத்தார். நான் பெரியாருக்குத் தெரிவித்தேன்.

இரண்டு மூன்று நாள்களில் முயற்சி வென்றது. இந்தி எதிர்ப்பு இயக்கப் பொறுப்பாளர்களின் முன்னொப்புதலோடு, தமது குடும்பப் பெரியவரை மதிக்கும் வகையில் அவர் வேண்டுகோளின்படி, உண்ணா நோன்பை என் நண்பர் ஜெகதீசன் கை விட்டு விட்டார். இவர் இன்று கோவையில் வாழ்கிறார்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் இதனால் சிறிதும் பாதிக்கப்படவில்லை; அது தீவிரமாகத் தொடர்ந்தது.

76. பெரியார் சிறை புகுந்தார்

பள்ளி முன் மறியல்

கட்டாய இந்திப் பாட எதிர்ப்பு, பொது மக்கள் இயக்கமாக வளர்ந்தது. நாள்தோறும் அத்திட்டத்தைக் கண்டித்துப் பல ஊர்களில் பொதுக்கூட்டங்கள் நடந்தன. ஆளுங்கட்சியின் சார்பில் ஆதரவுக் கூட்டங்களும் நடந்தன.

1938 கல்வியாண்டின் தொடக்கத்தில் இந்தியை ஆறாம் வகுப்பில் திணிக்கும் உயர்நிலைப்பள்ளியொன்றின் முன் மறியல் செய்வது என்று தந்தை பெரியாரும் மற்ற இந்தி எதிர்ப்புத் தலைவர்களும் முடிவு செய்தார்கள்.

எந்தப் பள்ளி முன் என்பதே அடுத்த கேள்வி. சென்னை தங்கசாலைத் தெருவில் நடைபெறும் இந்து தியலாஜிகல் உயர்நிலைப்பள்ளிமுன் மறியல் செய்வதென்பது முடிவு.

குறிப்பிட்ட நாளன்று குறித்த நேரத்தில் திட்டமிட்டபடி உயர்நிலைப் பள்ளியின்முன் இந்தி எதிர்ப்பாளர்கள் நால்வர் வந்து நின்றனர். அவர்கள் எங்கோ சந்து பொந்துகளில் இருந்து திடுதிப்பெனப் பள்ளிக்குமுன் வந்து நிற்கவில்லை. மாறாக, யானைக் கவுனி காவல் நிலையத்தின் அருகில் இருந்து ஊர்வலமாக வந்தார்கள்.

அவர்களை ஆதரிப்போர் பலர் பின்தொடர்ந்து வந்தார்கள். வழி நெடுகிலும் அவர்கள் முழங்கிய முழக்கங்கள் எவை? 'கட்டாய இந்தி ஒழிக; தமிழ் வாழ்க' என்பனவாம்.

தியலாஜிகல் பள்ளியண்டை வந்து அடைந்ததும் உடன் வந்தோர் ஒதுங்கி நிற்பார்கள். மறியல் செய்வோர் மட்டும் பள்ளியின் நுழைவாயிலுக்கு முன்னே, ஒழுங்காகவும் ஓரமாகவும் நின்று, மேற்கூறிய முழக்கங்களைத் தொடர்ந்து முழங்குவார்கள்.

மூன்று நான்கு மணித்துளிகளில் காவல் துறையினர், மறியல் செய்வோரைச் கைதுசெய்து கொண்டுபோய் விடுவார்கள். கூடியிருந்து பொது மக்கள் 'கட்டாய இந்தி ஒழிக; தமிழ் வாழ்க' என்று முழக்கமிட்டபடி அமைதியாகக் கலைந்து போவார்கள்.

கைதானவர்களை, காவல்துறை அலுவலர்கள், குற்றவியல் வழக்கு மன்றத்தில் நிறுத்துவார்கள். அவர்களுக்குக் கடுந்தண்டனை, நீண்ட தண்டனை என்று பல தண்டனைகள் விதிக்கப்படும்.

வன்முறை ஏதும் நிகழாதபோதும் ஒருவருடைய உடலுக்கோ பொருளுக்கோ கேடு விளையாதபோதும் கடுமையான சிறைத் தண்டனை தந்தது, அச்சமூட்டுவதற்குப் பதில், பொது மக்களிடையே அரசின்பால் வெறுப்பையும் நீதிமன்றங்கள்மேல் நம்பிக்கை யின்மையையும் வளர்த்தது.

கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் பொறுப்புள்ள குடிமக்கள். அரசிற்கோ, பொது அமைதிக்கோ கேடு விளைவித்து விளம்பரந்தேட வேண்டிய நிலையில் இல்லாதவர்கள். எனவே, நாளைக்கு ஒரு முறையே மறியல் நடக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரு நாள் மறியல்காரர்கள் கைது செய்யப்பட்டால், அடுத்த நாள் காலை வரை அப்பள்ளிக்கோ, போக்குவரத்துக்கோ இடையூறு வராது.

சென்னையில் நடக்கும் கட்டாய இந்தி எதிர்ப்பு மறியலை முன்னின்று முறைப்படுத்த 'சர்வாதிகாரி' ஒருவர் நியமிக்கப்படுவார்.

சில நாள்களில் அவர் சிறைக்குள் தள்ளப்படுவார். அடுத்த சர்வாதிகாரி நியமன அறிவிப்பு வரும். அவர் சிறைப்படுத்தப் பட்டால் மூன்றாவது சர்வாதிகாரி சுட்டிக்காட்டப்படுவார்.

போராட்ட வீரர்கள்

திரு. செ.தெ. நாயகம் கூட்டுறவுத் துறையின் ஓய்வு பெற்ற துணைப்பதிவாளர் முதல் சர்வாதிகாரி. இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய ராஜாஜி அமைச்சரவையில் அமைச்சராக இருந்த இராமநாதனின் தம்பி மாயூரம் எஸ். சம்பந்தம் சர்வாதிகாரிகளில் ஒருவர். அறிஞர் அண்ணா, புவனகிரி நமச்சிவாயம், திருச்சி சைமன் இராமசாமி மற்றிருவர்.

பல ஊர்களிலிருந்தும் மறியல் தொண்டர்கள் சென்னைக்கு வந்து சேர்வார்கள். சிலவேளை பலர் வந்து சேர்ந்து விடுவார்கள். வந்தவர்கள் தங்கி உண்ண, போராட்டக்குழுவின் சார்பில் ஏற்பாடு செய்திருந்தார்கள். செலவுக்கான நிதி, பொது மக்களின் நன்கொடைகள் உண்டியல் தண்டல் வழியாகக் கிடைத்தது.

அக்குழுவின் கௌரவ காசாளராகத் திருமதி. குஞ்சிதம் அம்மையாரின் தந்தை திருவாரூர் சுப்ரமணியம் இருந்தார். இவர்

பெரியாரைப் போன்றே பணத்தை விழிப்பாகக் காக்கும் இயல்பினர்; கணக்கில் கண்டிப்பானவர். அய்ம்பது காசு செலவு செய்ய வேண்டிய இடத்தில் அய்ம்பத்தோரு காசு செலவு செய்ய மாட்டார். எனவே, பெரியாரின் நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவராக இருந்தார்.

கட்டாய இந்தி எதிர்ப்பு இயக்கம் பல தமிழர்களின் நாவன்மையை, எழுத்து வன்மையை உலகறியச்செய்தது; செயல் திறனை, ஆளுமையை, தியாக உணர்வை வெளிப்படுத்தியது.

தன்மான இயக்கம் அடையாளம் காட்டிய பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பூவாளூர் பொன்னம்பலனார், மூவலூர் இராமாமிர்தம் மாள், திருச்சி கே. எம் பாலசுப்ரமணியம், சா. குருசாமி, எஸ்.வி. லிங்கம், அறிஞர் அண்ணா போன்ற சிறந்த பேச்சாளர்களோடு, பாவலர் பாலசுந்தரம், திருப்பூர் மொய்தீன், திருப்பூர் எஸ்.ஆர். சுப்ரமணியம், சேலம் நெட்டோ, சித்தையன், நடேசன், குடியேற்றம் அண்ணல் தங்கோ, காஞ்சி மணிமொழியார், சாமிசண்முகானந்தா, சாமி அருணகிரிநாதர், ஈழத்து அடிகள் போன்றோர் மேடைகளில் இடிமுழக்கம் செய்யக் கண்டோம்.

கட்டாய இந்தி எதிர்ப்பு இயக்கம் வளர்த்த பேச்சாளர்கள் பட்டியல் நீளமானது. அவர்களில் சென்னையைச் சேர்ந்த சிலரை மட்டும் இங்கே குறிப்பதற்கு என்னை மன்னிக்கவும்.

சென்னையில் பாசுதேவ், ஆல்பர்ட் ஜேசுதாசன், சத்தியவாணிமுத்து, அமிர்தவாசகம், மதுரகவி முருகேசபாகவதர் ஆகியோர் சிலராவர்.

இந்தி எதிர்ப்புப் போர் 1938-39 கல்வியாண்டு முழுவதும் 1939-40 கல்வியாண்டில் பல திங்களும் தொடர்ந்து, மொத்தத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றார்கள்.

மறியல் தொடங்கிச் சூடுபிடித்தபின் தாய்க்குலமும் மறியலில் ஈடுபட்டது. டாக்டர் தருமாம்பாள் அம்மாள் அதற்கு உந்தாற்றலாக விளங்கினார்கள். திருமதி உண்ணாமலை அருணகிரிநாதர், திருமதி மலர் முகத்து அம்மையார், திருமதி தாமரைக் கண்ணிபோன்ற சிலருடைய பெயர்களே என் நினைவிற்கு வருகின்றன.

கூட்டங்களுக்குச் சென்றேன்

கட்டாய இந்தி எதிர்ப்புப் போர் நடந்த முதலாண்டில், நான் சென்னை, சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். வகுப்பில் ஒருமனப்பட்டுப் பாடங்கேட்பேன். எனவே, தனியே படிக்கும் தேவை மிகவும் குறைவு. மாலை வேளைகளை எப்படிச் செலவழிப்பேன்?

இந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்குப் போவதில் செலவிட்டேன். சென்னை திருவல்லிக்கேணி கடற்கரை, உயர்நீதிமன்ற கடற்கரை,

இராயபுரம் ராபின்சன் பூங்கா, சிவஞானம் பூங்கா. மூர் அங்காடிக்குப் பின்புறம் - இவ்விடங்களில் அடிக்கடி கூட்டம் நடக்கும்.

காசு செலவு செய்து அங்கெல்லாம் செல்வேன். கடைசிவரை கேட்பேன்.

திருச்சியிலிருந்து சென்னைவரை நடந்து வந்த கட்டாய இந்தி எதிர்ப்புப் படைக்கு, எழுபதாயிரம் மக்கள் திருவல்லிக்கேணி கடற்கரையில் வரவேற்கக் கூடியபோது, நான் கூட்டத்தில் இருந்தேன். அக்கூட்டத்தில்தான் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முழங்கினார்.

அக் கூட்டங்களின்போது என்னைத் தேடிச் சிலர் வந்து சேருவார்கள். புரசைவாக்கம் ந.ரா. சடகோபன், அவர் அக்காள் மகன் ராமானுஜம், திருமதி. சத்தியவாணிமுத்துவின் கணவர் முத்து, திருவாரூர் டி.என். இராமன், பெத்துநாயக்கன் பேட்டை சிவஞானம், கணேசன் ஆகியோர் கூட்டத்தோழர்கள். பலவேளை எழும்பூர்வரை நடந்து வந்து மின் இரயில் ஏற நேரிடும்.

தாலமுத்து, நடராசன்

இந்தி எதிர்ப்புப் போரில் பங்கு கொண்டவர்களில் தாலமுத்து, நடராசன் ஆகிய இருவர் சிறையிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள். அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்து என் அஞ்சலியைச் செலுத்தினேன்.

தாலமுத்துவின் மறைவு பற்றிச் சென்னைச் சட்டமன்றக் கூட்டத்தில் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் கேள்வி எழுப்பினார். பிரதமர் ராஜாஜியே சொல்லிழுக்குப் பட்டுவிட்டார். ''தற்குறி தாலமுத்து தேவையில் லாமல் சிறைப்பட்டு, இறந்தார்'' என்று சொன்னார். அது எண்ணற்ற தமிழர்களின் உள்ளங்களைப் புண்படுத்தியது.

தாலமுத்துப் போன்ற கோடிக்கணங்கானவர்களின் தற்குறித் தன்மையைப் போக்க, சுட்டுவிரலையும் அசைக்காத பிரதமர் ராஜாஜி இப்படி இழிவுபடுத்தியது பண்பாடல்ல; அப்புண் என் தலை முறையினர் பலருக்கு ஆறாமலே வதைக்கிறது. இன்றும் தற்குறித் தன்மையை ஒழிக்க, மெய்யான உயிரோட்டமுள்ள முயற்சிகள் இல்லையே!

பெரியார் ராமசாமி

மகளிர் அணி, இந்தி எதிர்ப்புப் போரில் குதிப்பதற்கு முன்பு, சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் 13-11-38 அன்று ஒரு மாநாட்டைக் கூட்டியது. டாக்டர் தருமாம்பாள் சூத்திரதாரி.

மறைமலை அடிகளாரின் திருமகள் திருவாட்டி நீலாம்பிகை அம்மையார் தலைமை தாங்கினார்கள்.

அம் மாநாட்டில் உரையாற்றும்படி, ஈ.வெ. ராமசாமி அழைக்கப்பட்டார். அவர் அப்படியே உரையாற்றினார்.

அம்மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் முறைப்படி வழங்கப்பட்டது. ஆனால் 1926 முதலே ராமசாமிப் பெரியார் என்று பலர் பொதுமேடைகளில் அவரை அழைப்பது வழக்கமாயிருந்தது.

மகளிர் மாநாட்டிற்குப்பின் பெரியார் ராமசாமி கைது செய்யப்பட்டார். 'பெண்களை இந்தி எதிர்ப்பு மறியலுக்குத் தூண்டினார். அத்தூண்டுதலால், சட்டம் ஒழுங்கைக் குலைக்க முயன்றார்' என்பவை பெரியார்மேல் சுமத்தப்பட்ட இரு குற்றச் சாட்டுகள் ஆகும். 1938 டிசம்பர் திங்கள் 5,6 ஆம் நாள்கள் அவ்வழக்கு நடந்தது.

வழக்கம்போலப் பெரியார் வழக்கு மன்றத்தில் எதிர் வழக்காடாமல், ஒரு வாக்கு மூலத்தை மட்டும் கொடுத்தார்.

அதில் 'தாம் தொடர்புடைய தன்மான இயக்கம், தமிழரியக்கம், நீதிக்கட்சி இயக்கம் ஆகிய அனைத்தும் சட்டத்தை மீறக் கூடாதென்னும் கொள்கையுடையது. அது மாற்றப்படவே இல்லை. மறியல் செய்தது டெமாண்ஸ்ட்ரேஷனே ஒழிய சட்டத்தை மீறத் தூண்டுவது அல்ல' என்று விளக்கினார்.

விசாரணை என்பது சடங்குதானே. அச்சடங்கின் முடிவில்.

'இவர் (பெரியார்) செய்த குற்றங்கள் இரண்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆண்டு கடுங்காவல்; ஒவ்வோராயிரம் ரூபாய் அபராதம். அபராதம் செலுத்தாவிடில் மீண்டும் அவ்வாறு மாதம் தண்டனை. இரு தண்டனைகளையும் இரண்டு தனித்தனி காலத்தில் அடைய வேண்டும்' என்று முடிவு கூறப்பட்டது.

அதைச் செங்கோல், என்று ஏற்கத் தமிழர்கள் மனம் ஒப்பவில்லை.

கிடைத்த சாக்கைக் காட்டி, பழி வாங்கும் முடிவு என்றே பொது மக்கள் தீர்மானமாகக் கருதினார்கள்.

தங்கள் கொதிப்பைக் காட்டும் வகையில் பல்லாயிரக் கணக்கானவர்கள், பார்ப்பனச் சிற்றுண்டி சாலைக்குச் செல்வதை விட்டு விட்டார்கள். அவர்களில் பலர் என் நண்பர்கள்.

பெரியார் பற்றித் திரு.வி.க.

அரசியல் பழி வாங்கும் தீய நிலை, இந்திய அரசியல் வானில் அடிக்கடித் தென்படக் காண்கிறோம்.

ஈ.வெ. ராமசாமி, காங்கிரசை விட்டு வெளியேறக் காரணமாயிருந்த தளம் காஞ்சிபுரம் மாநில மாநாடு ஆகும். அதற்கு மூலவராக விளங்கியவர் திரு. திரு.வி. கல்யாணசுந்தரனார் ஆவார்.

அதற்குப் பிறகும் இருவருக்கும் இடையே கருத்து மோதல்கள் நிகழ்ந்தது உண்டு. எப்போதோ சிலபோது, அவர்களிடையே பார்வையில் ஒருமை கண்டதுண்டு.

பெரியார் இயக்கத்தவர் அல்லாத - தொடர்ந்து காங்கிரசுக் காரராகவே இருந்த இராயப்பேட்டை முனிவர், திரு.வி.க., பெரியார் சிறைப்பட்டதைப் பற்றி, நெஞ்சுருகி எழுதிய 'நவசக்தி' தலையங்கம் நினைவு கூர்தலுக்கு உரியது.

திரு ஈ.வெ. ராமசாமி கடுங்காவல் தண்டனை ஏற்றுச் சிறைக் கோட்டம் நண்ணினார்.

வெள்ளிய தாடி அசைய, மெலிந்த தோல் திரங்க, இரங்கிய கண்கள் ஒளிர, பரந்த முகம் மலர, கனிந்த முதுமை ஒழுகத் தாங்கிய தடியுடன், அவர் சிறை புகுந்த காட்சி, அவர்தம் பகைவர், நொதுமலர், நண்பர் எல்லார் உள்ளத்தையும் குழையச் செய்திருக்கும் என்பதில் அய்யமில்லை.

'முதுமைப் பருவம்' காவல்! கடுங்காவல்! என்னே! இந்நிலையை உன்ன உன்ன உள்ளம் உருகுகிறது.

'நண்பர் ஈ.வெ.ரா.வுக்குச் சிறைவாசம் பழையது; மிகப் பழையது; புதியது அன்று! முன்னே, அவர் ஒத்துழையாமையில் ஈடுபட்டும் தீண்டாமையை முன்னிட்டும் மதுவிலக்கை, சமதர்மத்தைக் குறிக்கொண்டும் பலமுறை சிறை சென்று உள்ளார்.

'இம்முறை அவர் இந்தி எதிர்ப்புக் காரணமாகச் சிறை நுழைந்திருக்கின்றார். சிறைக்கோட்டம் அவருக்கு ஒரு விதத் தவக்கோட்டம் ஆயதுபோலும்!

''சிறைப் பறவையாகிய ராமசாமி வரலாற்றை விரித்துக் கூற வேண்டுவதில்லை.

''அவர்தம் வரலாற்றில் அறியக்கிடக்கும் நுட்பங்கள் பல உண்டு. அவைகளில் சிறப்பாகக் குறிக்கத்தக்கன - இடையறாச் சேவை, சமத்துவ நோக்கம், சுதந்திர உணர்ச்சி, நட்புரிமை, தாட்சண்யமின்மை, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமை, அஞ்சாமை, ஊக்கம், சோர்வின்மை, சலிப்பின்மை, எடுத்த வினையை முடிக்கும் திறன், கரவு - சூழ்ச்சியின்மை முதலியன.

''இவை அவர்தம் வாழ்வாக அரும்பி, மலர்ந்து, காய்த்து, கனிந்து நிற்கின்றன. இந் நீர்மைகள் அவரை அடிக்கடி சிறைபுகச் செய்கின்றன போலும்!.

''முதுமைப் பருவத்திலும் அவர் தலைசாய்த்துப் படுக்கையில் கிடந்து காலங் கழித்தா ரில்லை; அவர் தமிழ்நாட்டின் நாலா பக்கமும் சுழன்று சுழன்று இரவு பகல் ஓயாது கர்ச்சனை செய்து வந்தார்.

''ஓய்வு என்பதை அறியாது வீர கர்ச்சனை புரிந்து வந்த கிழச் சிங்கம் இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறது. சிறையில் தலை நிமிர்ந்து கிடக்கிறது.''

அக்காலத் தமிழ்ப் பெரியோர்களிடம் தனிச்சிறப்பு ஒன்று ஒளி விட்டது. அது என்ன? கருத்துகளை கொள்கைகளை விட்டுக், கொடுக்காத உறுதி! ஒருவருக்கொருவரைப் பகையாக நினைக்கும் கீழ்மைக்குப் போகாமை! பெரியாரும் ராஜாஜியும் மோதாத மோதலா? திரு.வி.க.வும் பெரியாரும் கருத்து மோதல்களில் திளைத்தது, காமராஜரும் பெரியாரும் கருத்து மண்டலத்தில் சாடிக் கொண்டது குறைவல்ல.

இருப்பினும் தனிப்பட்ட பகைவர்களாக அவர்கள் மாறிவிட வில்லை. ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பாளர்களாக விளங்கினார்கள்.

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி சிறைப்பட்ட பிறகும் கட்டாய இந்தி எதிர்ப்பு, வீறு குறையாமல் தொடர்ந்தது. அரசும் விட்டுக் கொடுக்கவில்லை.

அடுத்த கல்வியாண்டிலும் இந்தி முதல் மூன்று படிவங்களுக்குக் கட்டாயப் பாடமாக இருந்தது; முதல் தலைமுறை மாணாக்கரின் கல்வியைப் பாழாக்கிற்று.

கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டமும் நீடித்தது. நாட்டுக்கும் இரு சாரார்களுக்கும் தீமையான இந்தி வெறுப்பு உணர்ச்சி ஆழ வேரூன்றிக் கொண்டே இருந்தது.

பெரியார் இல்லாத மாநாடு

இதற்கிடையில் சென்னையில் தீவுத்திடலில், நீதிக்கட்சியின் பதினான்காவது மாகாண மாநாடு 1938 டிசம்பர் 29, 30, 31ஆம் நாள்களில் நடந்தது. மாநாட்டுத் தலைவர் எவர்? பெரியார் ஈ.வெ. ராமசாமி ஆவார்.

அதற்கு முந்திய மாநாடுகளுக்குத் தலைவர் பதவிக்கு இவர், அவர் என்று போட்டி இருப்பது உண்டு.

இம்மாநாட்டின் போது பெரியார் ஈ.வெ. ராமசாமியை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரோ, சிறையில் இருக்க நேர்ந்து விட்டது. எனவே, பெரியார் நேரில் கலந்து கொள்ளவில்லை.

மாநாட்டினர் என்ன செய்தார்கள்? பெரியார் உருவத்தை தலைமை நாற்காலியில் அமர்த்தினார்கள். பெரியார் வந்து இருந்தால் எப்படித் தலைவரை முன்மொழிதலும் வழிமொழிதலும் நடந்திருக்குமோ, அப்படியே நிகழ்ச்சிகள் நடந்தன. அது பெரியாரின் பெருமையினைக் கோடிட்டுக்காட்ட உதவிற்று.

பெரியார் சிறை புகு முன்பே தலைமை உரையை எழுதி அனுப்பியிருந்தார். அவ்வுரையை சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் படித்தார். அவ்வேளை பன்னீர் செல்வம் நெஞ்சை நெகிழவைக்கும் செயலொன்றைச் செய்தார். தமக்குச் சூட்டிய பெரிய மலர் மாலையை அவர் பெரியார் உருவத்தின் காலடியில் வைத்தார். கூடியிருந்த அய்ம்பதாயிரம் மக்களும் உள்ளம் உருகினர்.

உணர்ச்சி கொப்பளிக்க அனைவரும் எழுந்து நின்றார்கள். தமிழிலும் தெலுங்கிலும் ஒரே குரலில் உறுதி கூறினார்கள்.

என்ன உறுதி?

'மாபெரும் தலைவரே! தங்கள் உடல் சிறைப்பட்டிருந்தாலும் தங்கள் வீரத்திரு உருவத்தின்முன் நாங்கள் அனைவரும் எழுந்து நின்று ஒன்றுபட்டிருக்கிறோம்.

தங்கள் தலைமையில் நாங்கள், அனைவரும் சொல்வழி நின்று கட்சிவளர, மக்கள் வாழ, குறிக்கோள் நிறைவேற ஓயாது உழைத்து வெற்றிபெறுவோம் என உறுதி அளிக்கிறோம்' என்பதாகும். அப்படி உறுதி எடுத்தவர்களில் நானும் ஒருவன் என்பதை அடக்கத்தோடு குறிக்கிறேன்.

அம்மாநாட்டுத் தலைமை உரையில் பெரியார் ஆழமான சில கருத்துகளை வெளியிட்டார்.

பெரியாரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த இயக்கத்தவர்களுக்குப் பதிலாக அவ்வுரை அமைந்திருந்தது.

''உலக ஒற்றுமையை நான் வெறுப்பவன் அல்ல. உலக மக்கள் சமதர்ம வாழ்வை மேற்கொள்வதை வேண்டாமென்று கூறவில்லை. மக்கள் யாவரும் விகிதாசாரம் உழைத்து, அவ்வுழைப்பின் பயனை விகிதாசாரம் பகிர்ந்து, தத்தம் தகுதிக்கும் தேவைக்கும் அவசியமான அளவு அனுபவிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை.

''ஆனால் தேசியம் என்றும், தேச சேவை என்றும், தேசபக்தி என்றும், தேச விடுதலை என்றும், தேச ஒற்றுமை என்றும், ஆத்மார்த்தம் என்றும், பிராப்தம் என்றும் பல பல சொற்களைக் காட்டி மெய் வருந்தி, பாடுபட்டுப் பொருளீட்டும் பொதுமக்களை, கட்டின ஆடை கசங்காமல், மெய்யில் வெயில் படாமல் வாழ்க்கை நடத்தும் ஒரு சிறு கூட்டத்தார் வஞ்சித்து, ஏமாற்றி, வயிறு வளர்ப்பதை-ஏன்

உழைப்பாளிகளைவிட அதிக சுகமான வாழ்வு வாழ்வதை - அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன்.

''நம் நாட்டுத் தொழிலாளர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கம் வேறு, தொழிலாளர்கள் வேறு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

''இக்கருத்து மாறி, இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மையான எண்ணமும் உணர்ச்சியும் ஏற்படும்வரை இரண்டும் உருப்படா என்பதே என் அபிப்பிராயம்.

''பார்ப்பனரல்லாதார் என்கிற வார்த்தையும், தொழிலாளர் என்கிற வார்த்தையும் ஒன்றே என்பதை நாம் மறக்கவே கூடாது.''

பெரியாரின் தெளிவுரை, மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் கவர்ந்தது. பார்ப்பனரல்லாதார் இயக்கம், தொழிலாளர் இயக்கம் பற்றிய தெளிவைக் கண்ட இம்மாநாடு, நீதிக் கட்சியின் குறிக்கோள் பற்றியும் பாராட்டத்தக்க மாற்றத்தைக் கண்டது. ஈ.வெ.ரா. பெரியாரின் சிந்தனைச் சூடு அப்படிச் சமைத்தது.

அதுவரை நீதிக்கட்சியில் அரசியல் குறிக்கோள் என்ன? குடியேற்ற நாட்டு நிலை பெறுவது என்பதாகும். பதினான்காவது மாநாட்டில் குறிக்கோள் உயர்ந்து விட்டது. எப்படி?

'முழுத் தன்னாட்சி (முழுச் சுதந்திரம்) கட்சியின் நோக்கம்' என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இது ஏற்கெனவே, பெரியார் வழி நடத்தலில் 1932இல் ஈரோட்டில் உருவாக்கப்பட்ட சுயமரியாதைச் சமதர்மத் திட்டத்தில், குறிப்பிடப்பட்ட குறிக்கோளாகும் என்பதை நினைவு படுத்துகிறேன்.

அந்தச் சுயமரியாதைச் சமதர்மத் திட்டம் அனைத்துலக சமதர்மத் திட்டமாகிய உற்பத்திச் சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பெரு வணிகம், வங்கிகள் ஆகியவற்றைத் தேசிய உடைமை ஆக்குவதோடு சாதி ஒழிப்பையும் நோக்கமாகக் கொண்டது.

இத்திட்டத்தை 1935இல் நீதிக்கட்சி ஏற்றுக்கொண்டது.

77. எல்.டி. பட்டம் பெற்றேன்

இப்போது என் கதையைச் சொல்லுகிறேன். வெளி உலக நிகழ்ச்சிகளின்மேல் கவனம் செலுத்திய போதிலும் நான், ஆசிரியர் கல்லூரிக்குச் செல்வதில் தவறியதில்லை. எனவே 1939 சனவரி மூன்றாம் வாரத்தோடு நான் போதிய நாள்கள் சென்று விட்டேன்.

கல்லூரி முதல்வர், திரு. கிருஷ்ணம்மா என்னும் தெலுங்குக் கிறுத்தவரை அணுகினேன். அக்கால கட்டத்தில், சம்பளம் இல்லா விடுப்பில் நான் துன்பப்படுவதை எடுத்துக் கூறினேன்.

பல்கலைக் கழக விதிமுறைகளுக்குத் தேவையான நாள்கள் வருகை தந்ததைச் சுட்டிக்காட்டி, தேர்வுகள் வரையில் விடுப்புக் கேட்டேன்.

என் பழைய வேலையில் சேர்ந்து கொள்ளவும் இசைவு கோரினேன். சனவரி முடிய இருந்து விட்டுப் போகும்படி, அவர் ஆணையிட்டார். அப்படியே தங்கியிருந்தேன்.

பிறகு திருப்பெரும்பூதூர் சென்று துணைப் பஞ்சாயத்து அலுவராகப் பணியேற்றுக் கொண்டேன்.

அலுவலைப் பார்த்தபடியே பாடங்களைத் திருப்பிப் படித்தேன். உரியகாலத்தில் சில நாள் விடுப்பு எடுத்துக் கொண்டுபோய்த் தேர்வு எழுதினேன். தேர்வு முடிவுகள் வந்தபோது வெற்றி பெற்றதை அறிந்து மகிழ்ந்தேன்.

துணைப் பஞ்சாயத்து அலுவலர் ஒருவர், இரு பட்டங்கள் பெற்றால், அன்றைய சம்பள விகிதத்தின் உச்சமாகிய 75 ரூபாய் கொடுக்கலாமென்று அலுவலக விதி இருந்தது.

அதை அடிப்படையாகக் கொண்டு எனக்குத் திங்களுக்கு எழுபத்தைந்து ரூபாய் ஊதியம் கோரி மாவட்ட ஆட்சிக்குழுத் தலைவருக்கு முறையாக விண்ணப்பம் அனுப்பினேன்.

எல்.டி. என்பது பட்டமா?

அலுவலகத்தில் கீழ்நிலை எழுத்தர் ஒருவர் எல்.டி. என்பது பட்டம் அல்ல என்று எழுதி வைத்தார். எல்லோரும் கொக்கி போட்டுத் தலைவருக்கு அனுப்பி விட்டார்கள். தலைவர் பொதுக்கல்வி இயக்குநருக்கு - சர். மெவெரல் ஸ்டாதாமிற்கு - நேரடிக் கடிதம் எழுதி இதைப் பற்றி விளக்கம் கோரினார்.

'எல்.டி. என்பது பட்டமே' என்று இயக்குநர் எழுதினார். அப்புறம் என் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நான் ஆசிரியப் பயிற்சி பெற்ற பிறகு கல்வித்துறையில் சேரவிரும்பினேன். ஆனால், விண்ணப்பம் கோரும் விளம்பரம் பல திங்கள் வரை இல்லை.

நண்பர் அளகேசன்.

இதற்கிடையில், என் நண்பர் திரு. ஓ.வி. அளகேசனுக்குத் திருவெண்காட்டில் திருமணம் நடந்தது. மீஞ்சூர் பக்தவத்சலனாரின் மைத்துனி செல்வி பட்டம்மாளை மணந்து கொண்டார்.

நான் அத்திருமணத்திற்குச் சென்று இருந்தேன். பட்டம்மாளின் அண்ணன்கள் இருவரும் - தி. கோ. பாலசுப்பிரமணியம், தி. கோ. சீனிவாசன் - எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள்; மாப்பிள்ளை அவர்களுக்குப் புதியவர்.

எனவே அவரை, பெண் வீட்டாரோடு இருந்து அடையாளம் காட்டி, வரவேற்கும் வகையில் முன்னாளே வரும்படி எனக்கு அன்புக் கட்டளை யிட்டார்கள். அப்படியே சென்று உடன் இருந்து வரவேற்றேன்.

அந்தத் திருமணத்திற்குப் பிறகு, மாவட்ட ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல் வந்தது. அதில் திரு. அளகேசன் காங்கிரசின் சார்பில் போட்டி போட்டு உறுப்பினராக வெற்றி பெற்றார்.

அதன்விளைவாக, ஆட்சிக்குழுவின் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆலந்தூர் ஏ.எஸ். துரைசாமி ரெட்டியார் தலைவராகத்தே தர்ந்தெடுக்கப்பட்டார்.

இச்செய்தியைக் கேட்டதும் திரு. ஓ.வி. அளகேசன் அவர்களுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதினேன். அதில் அளகேசனை 'தங்களுக்கு' என்று குறிப்பிட்டேன்.

அவர் உடனே பதில் எழுதினார். 'அதில் இனிமேல் தங்களுக்கு என்று எழுதினால் பதில் எழுத மாட்டேன். பழையபடி நீ என்று எழுதினால் மட்டும் கடிதத்தைப் படிப்பேன்' என்று உரிமையுடன் எழுதினார்.

நான் அதோடு விட்டுவிடவில்லை. அதற்குப் பதில் எழுதினேன். என்ன பதில்?

''பதவிக்குரிய மதிப்பு வேறு; நட்புக்குரிய உரிமை வேறு தாங்கள் துணைத் தலைவராக இருக்கும் இவ்வமைப்பில் நான் ஊழியன். கடிதப் போக்குவரத்தில் இவ்வுறவின் அடிப்படையில் மட்டுமே எழுதுவேன்.

''நாம் வெவ்வேறு நிறுவனங்களில் இருக்க நேர்ந்தால், பழைய முறையில் ஒருவரை ஒருவர், 'நீ' என்று அழைப்பதைப் பற்றிச் சிந்திப்போம்'' இப்படி எழுதினேன்.

இருவரும் வெவ்வேறு நிறுவனங்களுக்குப்போன பிறகும் நீங்கள் என்று அழைப்பதையே கைக்கொண்டேன். அம்மரியாதையை அளகேசனோடு நிறுத்திக் கொள்ளவில்லை. மற்றவர்களையும் 'நீங்கள்' என்று மரியாதையோடு அழைக்கத் தொடங்கினேன்.

எவரையும் 'இவன்' என்று குறிப்பிடுவதில்லை. தமிழில் 'அவன் அவர்' என்ற சொற்களுக்குப் பதில் 'அவர்' என்ற சொல்லும் 'நீ'. நீங்கள் என்பதற்குப் பதில் நீங்கள் என்னும் ஒரே சொல்லும் இருக்கவேண்டு மென்னும் கருத்தைக் கொண்டுவிட்டேன். இப்பண்பாட்டை எப்படிக் கற்றேன்?

சென்னையில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி மாணவனாக இருந்தபோது, பெரியார் ஈ.வெ.ரா. வைப் பலமுறை, குத்தூசி குருசாமியார் வீட்டில் காணும் வாய்ப்புகள் கிடைத்தன.

அப்போதுபெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தம்மைச் சந்திக்க வரும் எல்லோரையும் மிகுந்த மரியாதையோடு அழைப்பதைக் கவனித்தேன்.

பெரியவர் சிறியவர் என்று பாராமல் எவர் வந்தாலும் எழுந்து வரவேற்கும் பண்பினையும் 'நீங்கள்' என்று குறிக்கும் நாகரிகத்தையும் பெரியாரிடம் இருந்து கற்று கொண்டேன்.

துணைத்தலைவர் அளகேசன், அலுவல்பற்றித் திருப்பெரும்பூதூர் வர நேர்ந்தது. முன்கூட்டியே எழுதி, ஒப்புதல் பெற்று, பகல் விருந்து அளித்தேன். பலரும் கலந்து கொண்டார்கள்.

இதில் மட்டும் ஊழியனாக நடந்து கொள்ளாது நண்பனாகவே உரிமை கொண்டாடினேன்.

78. எனக்கு உதவிய நல்லவர்கள்

பெரியார் விடுதலையானார்

1939 ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளிகள் திறந்தன. கட்டாய இந்திப்பாடம் மேலும் நூறு பள்ளிகளில் நுழைந்தது; கிளர்ச்சியும் தொடர்ந்தது.

இதற்கு முன்னர், பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெரியார் ஈ.வெ.ராவின் உடல் நிலை மோசமாயிற்று.

சிறை வாழ்க்கை அருடைய உயிருக்கே உலைவக்குமோ என்ற அச்சம் பொது மக்களிடம் பரவிற்று.

சென்னை மாகாண ஆட்சி, அன்றைய முதல் மருத்துவராகிய டாக்டர் குருசாமி முதலியாரை, பெரியார் ஈ.வெ. ராவின் உடல் நிலையைச் சோதிக்க அனுப்பி வைத்தது. மருத்துவர், பெரியார் உடம்பைச் சோதித்தார்.

பெரியார் அதிக நோய்வாய்ப்பட்டு இருப்பதாகவும், அவரை விடுதலை செய்வதே நல்லது என்றும் பரிந்துரைத்தார். ஆட்சி அதை ஏற்றுக்கொண்டது. பெரியார், எதிர்பாராத வகையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்திப் போராட்டம் எப்படி முடிந்தது?

கட்டாய இந்திப் போராட்டம் எப்படி முடிந்தது? கட்டாய இந்தி கைவிடப்பட்டதால் முடிந்தது. காங்கிரசு ஆட்சியே கட்டாய இந்தியைக் கைவிட்டதா? இல்லை. அப்படியானால் எப்படி எடுபட்டது?

1939 செப்டம்பரில் இட்லர், இரண்டாவது உலகப்போரைத் தொடங்கினான். அன்றைய இந்திய அரசு, ஆங்கிலேயரின் ஆட்சி. எனவே, இந்திய அரசு, இட்லருக்கு எதிராக, பிரிட்டனுக்கு ஆதரவாக, இந்தியா போரிடும் என்று திடீரென்று அறிவித்தது.

இந்திய மக்களின் கருத்தறியாமல் எடுத்த இம்முடிவை எதிர்க்கும் அடையாளமாக, மாநில காங்கிரசு ஆட்சிகள், பதவி விலகவேண்டுமென்று அனைத்திந்திய காங்கிரசு முடிவு செய்தது.

அதையொட்டி, திரு. இராஜகோபால ஆச்சாரியார் அமைச்சரவை விலகிவிட்டது. அப்புறம் ஆளுநர் கட்டாய இந்திப் பாடத்தை எடுத்து விட்டார்; விரும்புகிறவர்கள் மட்டும் படிக்கலாம் என்று ஆணை பிறப்பித்தார்.

விளைவு என்ன?

இளம்பிள்ளைகளுக்குக் கட்டாய இந்தி - அதை எதிர்த்துப் போராட்டம் - இவற்றின் விரிந்த விளைவு என்ன? 'அனைத்திந்திய பகுத்தறிவு, சமத்துவ சமதர்மக் கட்சி'யாக வளர்ந்திருக்க வேண்டிய தமிழ்நாட்டுச் சுயமரியாதை இயக்கம், அவ்வாய்ப்பினை இழந்தது.

பெரியார் சுயமரியாதை சமதர்மத் திட்டத்தை உருவாக்கியது அதனால் ஈர்க்கப்பட்டு திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஈரோட்டிற்கு வந்து தங்கி, பெரியாரோடு கலந்துரையாடினார். பெரியாரை அனைத்து இந்திய சமதர்மக் கட்சியில் சேர்ந்து பணிபுரியும்படி அழைத்தார். சாதியொழிப்பு, இந்தியாவின் தேவை. மூட நம்பிக்கையொழிப்பும் அப்படியே.

சமதர்ம முறை இந்தியாவின் எந்தப் பகுதிக்குத் தேவையில்லை?

சென்னை மாகாண நோய்களைக் களைவதிலேயே சிக்கிக் கொண்டதற்குப் பதில் பெரியார் இயக்கம், அனைத்திந்திய மாறுதலில் முனைந்திருந்தால், வட இந்தியாவில் நாள்தோறும் நிகழும் சாதிக் கொடுமைகள் குறைந்திருக்கும்.

அங்கும் சாதிக்கட்டுகள் தளர்ந்து, மூடநம்பிக்கைகள் குறைந்து, சமதர்ம உணர்வு அதிகரித்திருக்கும்.

இப்படிப்பட்ட நிலை உருவாகக்கூடாதென்றே, கட்டாய இந்தியை, தவறான பருவத்தினருக்குத் திணிக்கப்பட்டதோ?

நம் மேல் திணிக்கப்பட்ட கட்டாய இந்தி, எதிர்ப்பைக் கிளப்பி, வட இந்திய முற்போக்காளர்களும் சமதர்மிகளும் தமிழக முற்போக்காளர்களும் சமதர்மிகளும் ஒரே அணியில் நின்று செயல்பட முடியாதபடி ஒரு பிளவை ஏற்படுத்தி விட்டது.

இது தமிழ்நாட்டுப் பகுத்தறிவு வாதிகளுக்கு இழப்பு. வடநாட்டுப் பகுத்தறிவு வாதிகளுக்கும் இழப்பே.

என் இளமை வாழ்க்கையில் என்னை அலைக்கழித்த இத்திசை திருப்பலை இதோடு விட்டுவிட்டு, என் கதையைச் சொல்லுகிறேன்.

இளந்துணை ஆய்வாளர் பதவி

எல்.டி. பட்டம் பெற்று, திரும்பெரும்பூதூரில் துணைப் பஞ்சாயத்து அலுவலராக வேலை செய்துகொண்டிருக்கையில் பொதுக்கல்வி இயக்குநரின் விளம்பரம் ஒன்று வெளியாயிற்று.

அது இளந்துணை ஆய்வாளர் பதவிகளுக்கு ஆட்கள் தேவை என்றது. அதற்குத் தொடக்க ஊதியம் ரூபாய் அய்ம்பதே! நான் ஏற்கெனவே, எழுபத்தைந்து ரூபாய்கள் மாத ஊதியம் பெற்றுக் கொண்டிருந்தேன்.

இருப்பினும், உட்பூசல் நிறைந்த உள்ளாட்சித் துறையிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்னும் எண்ணம் உந்த, மேற்படி பணிக்கு விண்ணப்பித்தேன். அதற்கு அடிப்படைக் கல்வித் தகுதி, பி.ஏ. எல்.டி. மட்டுமே. நான் அதிகத் தகுதி (எம்.ஏ.எல்.டி) பெற்று இருந்ததால் தேர்ந்தெடுக்கப்படுவேன் என்று நம்பினேன்.

பல நாள்கள் ஓடின. நேர்முகப் பேட்டிக்கு அழைப்பு வந்தது. அதில் இயக்குநரே பேட்டி காண்பார் என்று இருந்தது. அப்போதைய இயக்குநர், சர். மெலெரெல் ஸ்டேதம், எனக்குக் கல்லூரி முதல்வராக இருந்தவர். அதுவும் எனக்குத் துணையாகும் என்ற நம்பிக்கை பெருகிற்று.

குறிப்பிட்ட நாள், உரிய நேரத்திற்கு முன்னே, இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்தேன். விண்ணப்பதாரர்கள், அகர வரிசையில் அழைக்கப்பட்டார்கள். 'என்' முறை வந்தது.

நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கூடிப் பொங்க, அழைப்பிற்காகக் காத்திருந்தேன். என்ன ஏமாற்றம்! அவ்வரிசையில் முன்னே இருந்தவர்களும் பின்னே இருந்தவர்களும் அழைக்கப்பட்டார்கள் நான் அழைக்கப்படவில்லை. எங்களை வரிசைப் படுத்தி அனுப்பிக் கொண்டிருந்த அலுவலகக் கண்காணிப்பாளரை, பதற்றத்தோடு அணுகினேன். என்னை ஏன் அழைக்கவில்லை என்று கேட்டேன்.

'துரை ஆணை' என்று பதில் கூறினார். அதைக் கேட்டதும் தலையில் இடி வீழ்ந்தாற்போல் இருந்தது. நாடி தளர்ந்தது. செய்வதறியாது மீண்டும் என் இடத்தில் வந்து அமர்ந்து காத்துக் கொண்டிருந்தேன்.

கடைசி ஆளாக, நான் அழைக்கப்பட்டேன். அவநம்பிக்கையை விரட்டிவிட்டு புன்முறுவலை வலிந்து வரவழைத்துக்கொண்டு, இயக்குநர் அறைக்குள் நுழைந்தேன்.

இயக்குநர் எழுந்து நின்று, கைநீட்டி என் கையைக் குலுக்கி விட்டு, என்னை அமரச் சொன்னார். கல்வித் துறையின் கடைசிப் படியில் உள்ள

வேலைக்கு விண்ணப்பித்த என்னையும் இவ்வளவு மரியாதையோடு வரவேற்றது, புல்லரிக்கச் செய்தது.

மற்றவர்களையும் அப்படியே வரவேற்றார் என்பதைப் பின்னர் தெரிந்து கொண்டேன். அப்படி மரியாதை செலுத்துவதை என் வாழ்க்கை நெறியாக உறுதிப்படுத்திக் கொண்டேன்.

நான், நாற்காலியில் அமர்ந்ததும், ''நற்பேறு இல்லாத கடைசி ஆளாக வந்திருக்கிறாய்'' என்று இயக்குநர் சிரித்தபடியே சொன்னார். அதிலுள்ள குறும்பைப் புரிந்து கொண்டேன்.

முன்னர், அவர் மாநிலக்கல்லூரி முதல்வராக இருந்தபோது, என்னை ஆனர்ஸ் வகுப்பில் கடைசி மாணவனாகச் சேர்த்ததை நினைவு படுத்தினாரென்பது புலனாயிற்று. உடனே சற்றும் தயங்காமல்,

''முன்பும் கடைசி இப்போதும் கடைசி. இருப்பினும் நற்பேறுக்குக் குறைவிராது'' என்று பதிலளித்தேன்.

''எழுபத்தைந்து ரூபாய் ஊதியத்தையும் அய்ந்தாண்டுப் பணிக் கணக்கையும் இழந்துவிட்டு, புதிதாகச் சிறிய வேலைக்கு ஏன் வருகிறாய்?'' என்று கேட்டார்.

''செய்யும் பணியில் நிறைவு தேவை. இப்போதுள்ள பணி, உள்ளாட்சி அழுத்தங்களுக்கு ஆட்பட்டது. எனக்கு அரசியல் அலைகளுக்குத் தக்கபடி ஆடத் தெரியாது. கல்வித் துறைக்கு வந்துவிட்டால், அரசியல் அழுத்தங்கள் அதிகமிராது என்று எண்ணுகிறேன். எனக்குப் பணம் ஒன்று மட்டும் பெரிதாகத் தோன்றவில்லை'' என்றேன்.

''சரி! கல்வித் துறையில் உனக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாகுக!'' என்று வாழ்த்தி அனுப்பிவிட்டார்.

எதிர்பார்த்தபடி, தேர்ந்து எடுக்கப்பட்டோர் பட்டியலில் நான் இடம் பெற்றேன். அன்றைய சென்னை மாகாணக் கல்வித்துறை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது.

மதுரைப் பிரிவில் புதிய இளந்துணை ஆய்வாளர்கள் பட்டியலில் எனக்கு மூன்றாவது இடம்.

முதல் இடம் திரு. கோவிந்தராஜராவ் என்பவருக்கு. இரண்டாம் இடம் திரு. சங்கரன் பிள்ளைக்கு. மூன்றாவதாகத் தள்ளிவிட்டதைப் பற்றி அப்போது குறைபட்டுக்கொண்டேன். அதுவே பின்னர் நன்மையாக உருவாகப்போவது அன்று யாருக்கும் தெரியாது.

ஒவ்வோர் நாளும் இளந்துணை ஆய்வாளர் நியமனத்தை எதிர்பார்த்தேன். முதல் இருவருக்கும் பட்டியல் வந்ததுமே வேலை கிடைத்துவிட்டது.

என்முறை வந்தபோது, விடுப்பு இடத்தில்கூட என்னைப் போடாமல், தட்டிக்கழித்தது மதுரைப் பிரிவு ஆய்வாளர் அலுவலகம். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மனம் புழுங்கிக் கொண்டிருந்தேன்.

நல்வழி காட்டிய நல்லோர்

அந்நிலையில் திருப்பெரும்பூதூரில் திருவிழா வந்தது. அதைக் காண ஏராளமான கூட்டம் வந்தது.

சென்னை அரசின் தலைமைச் செயலகத்தில் உதவிச் செயலராகப் பணி புரிந்த திரு. சங்கரலிங்கதாசும் பொதுக்கல்வி இயக்ககத்தில் மேற்பார்வையாளராகப் பணி புரிந்த திரு. ரகுபதியும் திருவிழாவிற்கு வந்தார்கள்.

வந்தவர்கள், என் நெருங்கிய நண்பர் திரு. சுப்பையதாசின் வீட்டில் தங்கினார்கள். சுப்பையதாசு, கூட்டுறவுத்துறையில் இளந்துணை ஆய்வாளராக இருந்தார். அம்மூவரும் யாதவ குலத்தைச் சேர்ந்த அன்பர்கள்.

திரு. சுப்பையா, விருந்தாளிகளிடம் என்னைப்பற்றிச் சொன்னாராம். என் கல்வி, நெறி, உறுதி, நேர்மை ஆகியவற்றைப்பற்றிக் கேள்விப்பட்ட அப்பெரியவர்கள், என்னைக் காண என் இடத்துக்கு வந்துவிட்டார்கள், என்னோடு அளவளாவினார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டுச் சில திங்கள் ஆனபிறகும் மூன்றாவது இடத்தில் நின்ற எனக்கு வேலை தராமல் காலந் தாழ்த்துவதைப் பற்றிக் குறைபட்டேன்.

''எம்.கே. வரதாச்சாரி அப்படித்தான் செய்வார். அந்த அலுவலகத்தில் மானேஜராகிய அவர் வைத்ததே சட்டம். நான் தலையிட்டு விரைவுபடுத்த முடியுமாவென்று பார்க்கிறேன்'' என்றார் திரு. ரகுபதி.

''வேலை கொடுப்பதில்காலதாமதம் ஆனாலும் தேர்ந்தெடுக்கப் பட்ட பட்டியலில் நீங்கள் இருப்பதால், கல்வித்துறை கீழ்நிலை அலுவலர்களுக்கான தேர்வுகளை எழுதுங்கள். அதில் வெற்றிபெறப் பாருங்கள்.

''அவற்றில் வெற்றிபெற்றதும் மேல்நிலைத் தேர்வுகளை (அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்களுக்கானது) காலந் தாழ்த்தாது எழுதுங்கள்.

''மாவட்டக் கல்வி அலுவலர் பதவி கிடைக்க எத்தனை ஆண்டுகளோ ஆகும் என்று எண்ணி, அதற்கான தேர்வுகளை எழுதுவதைத் தள்ளிப் போடாதீர்கள். எப்போதாவது சென்னைக்கு வந்தால், என்னை வந்து பாருங்கள்'' என்றார். சங்கரலிங்கதாசு கலகலப்பாகப் பேசி, எனக்கு ஊக்கமூட்டிவிட்டுச் சென்றார்.

செல்லும்போது, ''நீங்கள் பெரியார் கட்சிக்காரராம். அதனால் எங்களோடு கோவிலுக்கு வரச்சொல்லி அழைக்கவில்லை'' என்று கூறிவிட்டு, விடை பெற்றுக் கொண்டார்.

சில நாள்கள் ஓடின. அலுவல் பற்றிச் சைதாப்பேட்டைக்குப் போக நேர்ந்தது. சற்று முன்னதாகச் சென்று திரு. சங்கரலிங்க தாசை அவர் இல்லத்தில் கண்டேன். காப்பி கொடுத்துவிட்டு,

''வகுப்பு வாரி அடிப்படையில், பார்ப்பனரல்லாதாரை மாவட்டக் கல்வி அலுவலராக, நேரடியாகத் தேர்ந்து எடுக்கும் முறை எப்போது வருமென்று கண்டுபிடித்துள்ளேன். அடுத்த நேர் முகத் தேர்வுப் பதவி பார்ப்பனரல்லாதாருக்கு. குறைந்தது ஓராண்டில், அதிகமானால் ஈராண்டிற்குள் வரலாம். ''முன்னர் நான் கூறியபடி, எல்லா நிலைகளுக்குமான தேர்வுகளை அடுத்து அடுத்து எழுதிவிடுங்கள்'' என்றார். ''அப்படியே செய்கிறேன்'' கீழ்நிலையில் இருப்பவனை, மேல் நிலைத்தேர்வு எழுதுவதற்கு விடுவார்களா, என்று கேட்டு வைத்தேன்.

''மேல் நிலைக்குப் போனபின், எழுதுவதானால், கட்டணம் கிடையாது. அதற்கு முன்பே எழுதக் கட்டணம் உண்டு. கட்டணத்தைப் பொருட்படுத்தாது, தேர்வுகளை எழுதிவிடுங்கள்'' என்று மீண்டும் ஆலோசனை கூறியனுப்பினார். பக்கச்சொல் பதினாயிரம் பெறும் என்பது உண்மையாயிற்று.

இந்நாட்டு மரபுப்படி திரு. சரங்கரலிங்க தாசும் மற்ற இருவரும் ஒரு சாதியினர். நான் வேறொரு சாதிக்காரன். அவர்கள் வைதீகர்கள்; நான் பகுத்தறிவு வாதி. எங்களுக்குள் நீண்ட தொடர்பு இல்லை. இரு தாசுகளும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இருப்பினும் போற்றத் தக்க அக்கறையோடும் ஆர்வத்தோடும் எனக்கு நல்ல உதவி செய்தார்கள்.

பெரியவர் சங்கரலிங்தாசு தக்க நேரத்தில் நல்வழி காட்டினார். அந்த வழிகாட்டல் இல்லையென்றால், நான், நேர்முகத் தேர்வில், மாவட்டக்கல்வி அலுவலராகி இருக்க மாட்டேன்.

இப்போது பொதுக்கல்வி இயக்குநராகவோ, தலைமைக்கல்வி ஆலோசகராகவோ, துணைவேந்தராகவோ வளர்ந்திருக்க முடியாது.

நாற்பது, அய்ம்ப தாண்டுகளுக்கு முன் அலுவல் பார்த்த பல பார்ப்பனரல்லாதாருக்கு, உட்சாதி உணர்வு குறைவு; சமுதாயக் கண்ணோட்டம் பெரிது. பிற தம்பியரை வளர்ப்பதில் முனைப்பு அதிகம் பயன் கருதா உதவி புரிவதில் ஆர்வம் நிறைய. அவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் திரு. சங்கரலிங்கதாசு. அதில், முந்தியவருக்கு அடுத்தபடி, திரு. ரகுபதி.

79. இரகசியம் காத்தேன்

திரு. சங்கரலிங்க தாசின் அரிய ஆலோசனைப்படி நடந்தேன்.

இளந்துணைப்பள்ளி ஆய்வாளர் பதவிக்கு நியமனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையிலேயே, கல்வித் துறையின் கீழ் நிலை அலுவலருக்கான தேர்வுகளை எழுதினேன்.

ஒவ்வொன்றிலும் முதல் முறையிலேயே வெற்றியும் பெற்றேன்.

பின்னர், மேனிலை அலுவலர்க்கான தேர்வுகளை ஆர்வத்துடன் எழுதி, பெரிய பதவிகளுக்கு என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு இருந்தேன்.

ஆனால், இளந்துணை ஆய்வாளர் நியமனம் ஈராண்டுபோல் தள்ளிக் கொண்டே போயிற்று.

அலுவலகங்களில் அலுவலர்களைவிட, மற்றவர்கள் நினைத்தால் தான் எதுவும் நடக்கும் என்ற உண்மையை அப்போது புரிந்து கொண்டேன்.

நான் மாவட்ட அலுவலராகவோ, மாநகராட்சி அலுவலராகவோ, இயக்குநராகவோ, தலைமைக் கல்வி ஆலோசகராகவோ பணிபுரிந்த காலங்களிலும், அலுவலக எழுத்தர், கண்காணிப்பாளர் தயவில் எவரும் வாழத் தேவையில்லாத நிலையை உருவாக்கினேன்.

அதனால், பலருடைய எரிச்சலையும் புகைச்சலையும் தேடிக் கொண்டேன்.

திருப்பெரும்பூதூரில் தேர்தல்

நான் திருப்பெரும்பூதூரில் அலுவல் பார்த்தபோது, அவ்வூராட்சி மன்றத்தின் தேர்தல் வந்தது.

அது, பேரூர் ஆட்சி மன்றம். எனவே மாவட்டப் பஞ்சாயத்து அலுவலரின் நேரடிக் கண்காணிப்பில் இருந்தது.

இருப்பினும் ஊராட்சித் தலைவர் தேர்தலை நடத்தும்படி அரசிடமிருந்து எனக்கு ஆணை வந்தது.

உறுப்பினர்கள் கூடி தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உறுப்பினர்களிடையே இரு கட்சிகள்.

ஒரு கட்சி மற்றக் கட்சியை விழுங்கிவிடத் துடித்தது. இதனால், தலைவர் தேர்தலில் கடும் போட்டி இருந்தது.

தலைவர் தேர்தல் இரகசிய வாக்கு முறையில் நடக்க வேண்டும். வேண்டிய வாக்குப் பெட்டிகளைச் சைதாப்பேட்டை தலைமை அலுவலகத்தில் இருந்து பெற்று வரவேண்டும்.

தலைமையகம் இரு பெட்டிகளை ஆயத்தமாக வைத்திருந்தது. அவை போதா என்றேன். ஏன்?

தேர்தல்களில் திடீர்த் திருப்பங்கள் ஏற்படக் கூடுமென்று அப்போதே உணர்ந்திருந்தேன்.

ஒருவர் வேட்பாளர்; அவருடைய பெயரை முன் மொழிய ஒருவர், பின் மொழிய ஒருவர். ஆக மும்மூன்று பெயர்கள் ஒன்றாகி விட்டால், மூன்று வேட்பாளர்களுக்கும் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று சொல்லி, மூன்று பெட்டிகளை வாங்கி வந்தேன்.

இந்த அளவு முன் யோசனையே, உறுப்பினர்களிடையே என் மதிப்பை உயர்த்திவிட்டது. தேர்தலைச் செம்மையாக நடத்த முடிந்தது.

அய்யங்கார் ஒருவர் வெற்றிபெற்றார். அவர் பெயர் இப்போது நினைவிற்கு வரவில்லை.

மதுராந்தகத்திற்கு மாற்றல்

கல்வித்துறையின் கடைசி நிலைப்பணிக்குக் காத்துக்கிடந்தநான், திருப்பெருப்பூதூரிலிருந்து, மதுராந்தகத்திற்குத் துணைப் பஞ்சாயத்து அலுவலராக மாற்றப்பட்டேன்.

அப்பிரிவில், மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு வட்டம், காஞ்சிபுரம் வட்டத்தில் பாதி சேர்ந்திருந்தது.

மாற்றல், திடீரென வந்தது. இளமை தொட்டே எதற்கும் ஆயத்தமாக இருக்கும் இயல்பு வந்துவிட்டதால் சுணங்காமல், மூட்டை கட்டிக்கொண்டு, புதிய இடத்திற்குப் புறப்பட்டேன்.

புதிய இடத்து நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதற்கு முன், திருப்பெரும்பூதூரில் எனக்கு உதவியாக இருந்த இருவரைக் குறிப்பிடவேண்டும்.

அவர்கள் யார்? கடைநிலை ஊழியர்கள். முதலில் முருகேசன் என்பவர் என் ஊழியராக இருந்தார். அவர் மாறுதலாகிச் சென்ற பின் லோகநாதன் என்பவர் அடுத்து வந்தார்.

இருவரும் இளைஞர்கள். இருவரும் வஞ்சனையின்றி ஊழியஞ் செய்தனர்; நாணயமாகவும் இருந்தார்கள்.

அவர்களில் லோகநாதன் என்பவர் என்னைக் கண்ணினைக் காக்கும் இமைபோல் காத்தார் என்றால் மிகையாது.

நான் சாதி வேற்றுமை பாராட்டாமல் எல்லார் உணவையும் உண்ட சமத்துவப் போக்கால் லோகநாதன் கவரப்பட்டு, என்னிடம் மரியாதை மட்டுமல்ல, 'பக்தி'யே கொண்டிருந்தார்.

மதுராந்தகத்தில் எனக்கு ஊழியராக வாய்த்தவர் மேகவர்ணம் என்பவர். அவருக்கு அப்போது அய்ம்பது வயது போல் இருக்கும்.

அவரும் திறமையாகவும் நேர்மையாகவும் சுணங்காமல் தொண்டாற்றி, என் அலுவலை எளிதாக்கினார்.

எங்குச் சென்றாலும் கீழ்நிலை ஊழியர்களின் இதயத்தில் எனக்கு எளிதாக இடம் கிடைத்து வந்தது.

அப்பேறு, என் எல்லாப் பதவிகளிலும் கிட்டியது. அது, நினைக்க இனிக்கும் செய்தியல்லவா?

ஒப்பற்ற ஒழலூர் பஞ்சாயத்து

மதுராந்தகத்தில் அலுவல் பார்த்தபோது திரு. ஒ.வி. அளகேசன் ஊராகிய ஒழலூர் பஞ்சாயத்து என் மேற்பார்வையில் இருந்தது.

அதன் தலைவர் யார்? திரு அளகேசனின் உறவினராகிய திரு. முத்துக்குமாரசாமி முதலியார் ஆவார்.

அரசியலில் இருவரும் வெவ்வேறு கட்சியினர். இருப்பினும் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்ந்தார்கள்.

ஒழலூர் பஞ்சாயத்து சுறுசுறுப்பான பஞ்சாயத்துகளில் ஒன்று. அது சென்னை மாகாணத்திலேயே முதன் முதல் மேனிலைத் தொட்டி கட்டி, குடிதண்ணீர் வசதி செய்த ஊராட்சி ஆகும்.

ஒழலூரில் குளத்து நீரே குடி நீராகும். கிணற்று நீர் அருந்துவதற்கு ஏற்றதல்ல. எனவே, ஊரில் குளத்திற்கு வேலியிட்டுப் பாதுகாத்தனர்.

பொறியின் துணையால், குளத்து நீரை மேனிலைத் தொட்டிக்கு இறைத்து நிரப்பினர். அதிலிருந்து குழாய் அமைத்துக் குடிநீர் கொடுத்தனர்.

வீடு தோறும் குழாய் இல்லை; குளத்தங் கரையில்தான் குழாய். எல்லாச் சாதியாரும் அங்குச் சென்று, குடிநீர் பிடித்துக்கொண்டு போவார்கள்.

ஒழலூர் ஊராட்சி ஒன்றியக் கணக்குகளின் ஆண்டுத் தணிக்கைக்குச் சென்றேன். ஓரிரு நாள்களில் திரும்பிவிடலாமென்று எண்ணிச்சென்றேன்.

இரவு பகலாகத் தணிக்கை செய்தும் மூன்றாம் நாள் இரவு நெடுநேரம் கழித்தே வேலை முடிந்தது.

ஊரில் 'அப்பு நாட்டான்' கிணறு என்ற பெயரில் ஒரு கிணறு இருந்தது.

ஊரார் குளியல் முதலிய தேவைகளுக்கு அதையே நம்பி வாழ்ந்தார்கள். ஊராட்சி மன்றம், அதை ஆழப்படுத்த முடிவு செய்தது. உரியவர்களிடம் ஒப்புதல் பெற்றது.

ஆழப்படுத்தியபோது பாறை குறுக்கிட்டது; வேலை நீண்டது.

ஒப்பந்தக்காரரை நாடாமல், ஊராட்சி மன்றமே நேரடியாக வேலை வாங்கிற்று.

ஒவ்வொரு நாள் செலவிற்கும் துல்லியமாக, விரிவாக இரசீதுகள் வாங்கி வைத்திருக்கக் கண்டேன்.

அந்த ஒரு வேலைக்கு மட்டும் ஆயிரத்து அய்நூறு பற்றுச் சீட்டுகள் போல் தணிக்கை செய்ய நேரிட்டது.

ஊராட்சி மன்றம் வேறுசில பொதுப் பணிகளையும் செய்திருந்தது.

அவற்றின் கணக்குகளையும் தணிக்கை செய்தேன்.

ஆண்டுத் தணிக்கை அறிக்கை என்ன காட்டிற்று?

கிணறு தோண்டிய வகையில், திட்டமிட்ட தொகைக்கும் அதிகமாகச் செலவாகிவிட்டது. பிறவேலைகளில் திட்டத்தொகையில் அதிகம் மிச்சமாகியுள்ளது.

ஒப்பந்தக்காரர்களிடம் விடாமல், ஊராட்சி மன்றமே நேரடியாக வேலை செய்யும்போது, திட்டத் தொகையில் பத்தில் ஒரு பங்கு பணமாவது மிச்சமாக வேண்டுமென்று அரசு விதிமுறைகள் கோடு காட்டின.

ஒழலூரில் பல பணிகளில் அதற்கும் அதிகமாக மிச்சமாகியிருந்தது.

ஒன்றில் எச்சமான செலவு நிலையையும் பிறவற்றில் அதிகம் மிச்சமான நிலையையும் படம் பிடித்துக்காட்டியது என் அறிக்கை. பொறுப்போடு நிதி செலவிடப்பட்டது என்று முடித்தேன்.

ஊராட்சித் தலைவரின் நேரடி, விழிப்பான கண்காணிப்பு இருந்த இடங்களில் எல்லாம் மிச்ச நிலையைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன்.

அன்று ஊராட்சித் தலைவர்களில் மிகப் பெரும்பாலோர் பொது நிதியில் கைவைக்கத் தேவையில்லாத செல்வர்களாக இருந்தார்கள்.

சில செல்வர்,மேற்பார்வையினைத் தங்கள் ஊழியர்களிடம் விட்டிருந்தார்கள். அவர்களில் சிலர் போதிய விழிப்புக் காட்ட வில்லை. பொதுப் பணத்தை மிச்சப்படுத்துவதில் அக்கறையில்லை.

இரகசியம் கூற மறுத்தேன்

ஒழலூரில் திரு. அளகேசன் விருந்தாளியாக அவர் வீட்டிலேயே தங்கி இருந்தேன்.

மாவட்ட ஆட்சிக்குழுவின் துணைத்தலைவராக இருந்த அளகேசனிடம், பஞ்சாயத்துத்துறை இருந்தது.

இருப்பினும் அவர் என்னை அரசின் ஊழியனாக நடத்தவில்லை; தோழனாகவே நடத்தினார்.

நானும் அவரிடம் உரிமை கொண்டாடவில்லை; அவருக்கு உரிய மதிப்பைக் கொடுக்கத் தவறியதில்லை.

ஒரு முறை ஒழலூரில் அவர் வீட்டுத் திண்ணையின்மேல் இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

நான், அளகேசனுக்கு முன்பு மாவட்ட ஆட்சிக்குழுவின் துணைத்தலைவராக மிகுந்த செல்வாக்குடன் இருந்த திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்ததைப்பற்றிப் பேச்சு வந்தது.

அதைப்பற்றி மகிழ்ந்த அளகேசன், பேச்சுவாக்கில், இரகசியம் ஒன்றைப் பற்றிக் கேட்டார்.

என்னுடைய பதில் மின்னல் என வெளிப்பட்டது.

''அய்யா! இன்று சண்முகம் அவர்களின் இரகசியத்தை உங்களுக்குச் சொல்லத் தொடங்கினால் நாளை உங்கள் இரகசியத்தை அடுத்தவருக்குச் சொல்லிப் பிழைக்கும் ஈனபுத்தி வந்து விடும்'' என்றேன்.

அதை அளகேசன் நல்லவண்ணம் ஏற்றுக்கொண்டார்; அதிர்ச்சியடையவில்லை; கசந்து கொள்ளவில்லை. பழைய நட்போடும் நேசத்தோடும் தொடர்ந்து என்னிடம் பழகி வந்தார்.

உத்திரமேரூர் பஞ்சாயத்தில் பிளவு

இந்நிலையில், உத்திரமேரூர் பஞ்சாயத்தில் உறுப்பினர்களிடையே கடும் பிளவு ஏற்பட்டது.

தலைவர் திரு. இராமசாமி அய்யரும், துணைத்தலைவர் திரு.ஆராவமுது அய்யங்காரும் அவர்களோடு இருந்த சில உறுப்பினர்களும் ஒரு பிரிவு.

திரு. வரதாராஜுலு நாயுடுவும் வேறு சிலரும் ஒரு பிரிவு.

நாயுடு கட்சி சிறுபான்மை.

இரு பிரிவினரும் கீரியும் பாம்பும் போலச் சண்டையிட்டுக் கொண்டார்கள்.

சிறுபான்மையினர் புகார் மனுக்களை அனுப்பியபடியே இருந்தார்கள். நாள் தவறாமல், குற்றச்சாட்டுகள் மேலதிகாரிகளுக்குப் பறந்து கொண்டிருந்தன.

சாதாரணமாக அந்தக் குற்றச்சாட்டுகளை, அப்பஞ்சாயத்தைத் தணிக்கை செய்யும் பொறுப்பையுடைய மாவட்டப் பஞ்சாயத்து அலுவலர் மட்டுமே விசாரிக்கலாம்.

தலைவர் இராமசாமி அய்யரும் துணைத்தலைவர் ஆராவமுது அய்யங்காரும் தீவிர காங்கிரசுக்காரர்கள். குற்றச்சாட்டுகள் மாவட்டம் முழுவதும் விளம்பரமாகிவிட்டன.

மாவட்ட ஆட்சிக்குழு காங்கிரசின் கையில் இருந்தது. விசாரிக்க வேண்டிய மாவட்டப் பஞ்சாயத்து அலுவலரோ ஆட்சிக் குழுவின் மேற்பார்வைக்கு உட்பட்டவர்.

எனவே, அவர் மேல் செல்வாக்குக் குவியலாமென்று, அரசு நினைத்தது போலும். பிராந்திய ஊராட்சி மன்றங்களின் ஆய்வாளராக இருந்த திரு. அரங்கசாமி முதலியாரையே விசாரணைக்கு அனுப்பியது.

அவர் நல்ல பெயர் எடுத்த அதிகாரி. அவர் உத்திரமேரூருக்குச் சென்றார். செல்லும்போது மாவட்டப் பஞ்சாயத்து அலுவலர் உடன் சென்றார்.

திரு. முதலியார், விசாரணையைக் குற்றவியல் நடுவரின் பாணியில் தொடங்கினார். அத்தோரணை விசாரிக்கப்பட்டவர்களுக்குப் பிடி கொடுத்துவிட்டது. திரு. ஆராவமுது அய்யங்கார் முறைத்துக் கொண்டார்.

''உங்களைப்போல ஆறு பேருக்குச் சம்பளம் கொடுக்கும் நிலையில் நாங்கள் வசதியுடன் இருக்கிறோம். நீங்கள் முன்கூட்டியே ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டீர்கள். உங்கள் விசாரணை நடுநிலைமையில் இராது. எனவே நாங்கள் விசாரணையில் பங்கு கொள்ள முடியாது'' என்று சொல்லிவிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டார்.

அப்படியே மாகாண அதிகாரிக்கும் அரசுக்கும் தந்தி கொடுத்து விட்டார். விசாரணை நடத்த முடியவில்லை.

பிராந்திய ஆய்வாளர் திரும்பினார்.

பிறகு, எவரைக்கொண்டு விசாரிப்பது என்று சிந்தித்தார்கள்.

மாவட்டப் பஞ்சாயத்து அலுவலரும் முன் கூறிய நிகழ்ச்சியின் போது திரு. அரங்கசாமியோடு இருந்ததால், அவர் விசாரிக்கப் போகவேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. கழுவுக்கேற்ற ஆளாக நான் தென்பட்டேன்.

சில நாள்களுக்குப் பின்னால், புகார் கோப்புகள் என் கைக்கு வந்து சேர்ந்தன. முடிந்த அளவு விரைவாக விசாரித்து அறிக்கை கொடுக்கும்படி ஆணையும் உடன் வந்தது.

யானையும் யானையும் மோதும் போது, சுண்டெலி குறுக்கிடும் நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

எனினும் அலுவல்களில் விருப்பு வெறுப்புகளையோ, என் தனி வாழ்க்கைக் கொள்கைகளையோ சிறிதும், புகவிடாது, பயிற்சி பெற்று வந்த எனக்கு இந்தப்பொறுப்பு, அச்சம் ஊட்டவில்லை.

80. மாவட்டத் தலைவரின் மிரட்டல்

அளகேசன் பரிந்துரை

உத்திரமேரூர் பேரூராட்சி நிர்வாகத்தின் பேரில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட கோப்பு என் கைக்கு வந்து சேருவதற்கு முன்னரே, வதந்தி ஒன்று என் காதிற்கு எட்டிற்று. அது என்ன?

மேற்படி குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணையை என்னிடம் ஒப்படைக்க உரியவர்கள் முடிவு செய்தவுடனேயே, திரு. ஆராவமுது அய்யங்காருக்கு அச்செய்தி எட்டிற்றாம். அவர் தமக்கு மிகவும் நெருக்கமான மாவட்ட ஆட்சிக்குழுவின் துணைத்தலைவரான திரு. அளகேசனை அணுகினாராம். தமக்கு ஆதரவாக என்னிடம் பரிந்துரைக்கும்படி அளகேசனிடம் வேண்டினாராம். அது பலிக்கவில்லையாம். பரிந்துரைப்பதற்குப் பதில், ஆலோசனை கூறி அனுப்பி விட்டாராம்.

என்ன ஆலோசனை? 'சுந்தரவடிவேலு நடுநிலைமையாளர்' இரு தரப்பையும் பொறுமை யாகக் கேட்கும் இயல்பினர். விருப்பு வெறுப்புக்கு ஆள்படாமல், எவருடைய தயவிற்காகவோ, அச்சுறுத்தலுக்காகவோ நெறி பிறழாமல் நீதி வழங்கக்கூடியவர்.

எனவே, எவருடைய பரிந்துரையையும் தேடி அலையாதீர்கள். நீங்களே அவரைப் போய்ப் பாருங்கள். உங்கள் நிலையை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லுங்கள்.

'மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டிருந்தாலும் பொறுமையாகக் கேட்பார்; மனச்சான்றின்படியே நியாயமாக முடிவு செய்வார்.

இப்படித் திரு. அளகேசன், திரு. ஆராவமுது அய்யங்காருக்கு வழி காட்டி, அனுப்பி வைத்தாராம்.

இம்மாதிரிப் பல இடங்களிலும் பேச்சு அடிப்பட்டது. அது மெய்யா? பொய்யா? அப்போதும் நான் கண்டுபிடிக்கவில்லை; பின்னரும் தெரிந்து கொள்ளவில்லை.

'வடகோடு உயர்ந்தாலென்ன? வான் பிறைக்குத் தென்கோடு சாய்ந்தால் என்ன?' என்று எண்ணி இருந்தேன்.

விசாரணைக்குச் சென்றேன்

குற்றச்சாட்டுகள் கொண்ட கோப்பை ஆதிமுதல் அந்தம்வரை படித்தேன். மீண்டும் படித்து, குற்றச்சாட்டுகள் பட்டியல்களை ஆயத்தம் செய்தேன்.

அவ்வப்போது, எந்தக் குற்றச்சாட்டிற்காகிலும் பதிவு ஆதாரங்களோ, ஆள் ஆதாரங்களோ கூறியிருந்தால், அதையும் குறித்துக் கொண்டேன்.

நல்ல மாணவர், தேர்வுக்கு ஆயத்தமாவதுபோல் நான் புலன் விசாரணைக்கு ஆயத்தமானேன்!

ஏன்? எவர்மேலோ குற்றச்சாட்டுகள் கூறப்படும். அவற்றை விசாரித்தல், அவரைத் தொல்லைப்படுத்துவதைவிட, விசாரிப்பவரையே அதிகம் காய்ச்சும். விசாரிப்பவரே அதிகம் புடம் போடப்படுவார்.

குற்றச்சாட்டுகளின் கோப்பு வந்ததும் என்னுள் கேள்விகள் பிறந்தன. என்ன கேள்விகள்?

வந்த சூட்டோடு, அக்கோப்பை எடுத்துக்கொண்டு, விசாரணைக்கு விரைவதா? பல நாள்கள் ஆறப்போட்டுப் பிறகு விசாரணைக்குச் செல்வதா?

உடனே விரைவதும் நல்லதல்ல; காலதாமதம் செய்வதும் சரியல்ல.

முந்தியது, சாக்குக் கிடைக்குமா வென்று காத்திருந்தான் என்று என்மேல் பழி கூற ஏதுவாகும்.

பல நாள் தாமதித்தால் தொடை நடுங்கி என்னும் அவதூறுக்கு ஆளாக நேரிடலாம். இப்படி எனக்குத் தோன்றிற்று.

எனவே, விசாரணைக்குப் பத்து நாள்கள் முன்னறிவிப்புக் கொடுத்து, உத்திரமேரூர் பஞ்சாயத்துத் தலைவருக்குப் பதிவு அஞ்சலில் கடிதம் அனுப்பினேன்.

நான்கைந்து நாள்களில் அவரிடம் இருந்து கடிதம் வந்தது.

விசாரணைக்காக நான் குறிப்பிட்ட நாள்களில் அவரும் துணைத்தலைவர் ஆராவமுது அய்யங்காரும் வெளியூர்களில் இருக்கவேண்டியுள்ளதாகவும் அதனால் விசாரணை மேலும் சில நாள்களுக்குத் தள்ளிப் போடுமாறும் கேட்டிருந்தார்.

அதற்கு இசைந்தேன்; வேறு நாள்களைக் குறித்துத் தகவல் கொடுத்தேன்.

அக்காலத்தில் மதுராந்தகத்திலிருந்து உத்திரமேரூர் செல்ல ஒரே ஒரு பேருந்து வண்டியே இருந்தது.

அது காலையில் மதுராந்தகத்திலிருந்து புறப்படும். இரவு எட்டு மணிபோல் மதுராந்தகம் வந்து சேரும்.

அப்பேருந்து வண்டி, விசாரணைக்கு ஆட்படவேண்டிய திரு. இராமசாமி அய்யருடையது.

அதில் இடம் கிடைக்காவிட்டால் விசாரணைக்குக் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர முடியாது.

அதேபோல் உத்திரமேரூரிலிருந்து திரும்பி வந்துசேர முடியாது.

விசாரணைக்குப்பின் உத்திரமேரூரில் இருந்து வரமுடியாமல் சிக்கிக்கொண்டால் தங்குவதற்கு இடம் கிடையாது. பஞ்சாயத்து அலுவலகத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தயவில் தங்க வேண்டியிருக்கும்.

பாதுகாப்புடன் தங்கினேன்

இவற்றைச் சமாளிப்பது எப்படி என்று முன்கூட்டியே திட்டமிட்டேன்.

நாடகாசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரின் உறவினர் திரு. குழந்தைவேலு உத்திரமேரூரில் அப்போது துணைப்பதிவாளராக வேலை பார்த்துவந்தார்.

நான் காஞ்சிபுரத்தில் எட்டாவது ஒன்பதாவது வகுப்புகள் படித்துக் கொண்டிருக்கையில் நான் குடியிருந்த வீட்டிலேயே அவர் குடியிருந்தவர். ஆங்கிலப் புலமை மிக்கவர். அவ்வப்போது என் பாடங்களைத் தெளிவுபடுத்தி என்னை ஊக்குவித்தார்.

அவருக்கு எழுதினேன். உத்திரமேரூரில் தங்கும் மூன்று நாள்களுக்கு அவருடைய உதவியைக் கோரினேன்.

குறிப்பாகத் தங்குமிடமும் காவலும் வேண்டி எழுதினேன்.

திரு. குழந்தைவேலு அதற்கு ஏற்பாடு செய்தார். வங்கி மாடியொன்றில் தங்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு எனக்குத் தகவல் கொடுத்தார்.

அவருடைய கடைநிலை ஊழியர்கள் இருவரை எனக்குக் காவலாக இரவில் தங்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் தேவைப்பட்டால் தாமும் என்னுடன் தங்குவதாகவும் எழுதியிருந்தார்.

இவ்வளவு முன் ஏற்பாடுகளைச் செய்து கொண்டேன்.

குறிப்பிட்ட நாள் என்னுடைய கடைநிலை ஊழியர் மேகவர்ணத்தை அழைத்துக்கொண்டு உத்திரமேரூர் போய்ச் சேர்ந்தேன்.

பேருந்து நிலையத்தில் தமது ஊழியர்களோடு காத்திருந்த திரு. குழந்தைவேலு, என்னை முதலில் தமது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்.

சிறிது நேரங்கழித்துப் பஞ்சாயத்து அலுவலகத்திற்குத் தக்க துணையுடன் அனுப்பி வைத்தார்.

அங்கே தலைவரும் துணைத் தலைவரும் என்னை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களோடு புகார்களை எழுதிய உறுப்பினர்களும் இருந்தனர்.

அவர்கள் தங்கள் முகவரிகளைக் கொடுத்து இருந்ததால், அவர்களுக்கும் முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டே அங்குச் சென்றேன்.

விசாரணை தொடங்கிற்று. முதலில் சின்னஞ்சிறு புகார்களை ஆய்ந்தேன். அவற்றிற்கு ஆதரவாகப் புகார் செய்தவர்கள் காட்டிய சான்றுகளைப் புரட்டிப் பார்த்தேன்.

அவற்றில் சில, குறைகளே ஒழிய, குற்றங்கள் அல்ல.

அம்முடிவை வெளிப் படையாகவே கூறியபோது, மனுஎழுதியவர் களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது; ஆயினும் மறுக்க இயலாது அமைதி காத்தனர்.

பஞ்சாயத்தின் பதிவேடுகளில் உரிய குறிப்புகளைக் கண்டபோது, ஆங்காங்கே, அவற்றைத் தணிக்கை செய்ததை என் கைப்பட எழுதி அதில் கையெழுத்திட்டேன்.

முதல் நாள், விசாரணை முடியும்போது, நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் துடிக்கும்படி எக்குற்றச்சாட்டும் மெய்ப்பிக்கப் படவில்லை.

அன்றிரவு வங்கி மாடியில் தங்கினேன். பகல் உணவும் இராச் சாப் பாடும் துணைப்பதிவாளர் திரு. குழந்தைவேலு வீட்டிலிருந்து வந்தன.

இடைவேளை காப்பி, சிற்றுண்டிச் சாலையிலிருந்து வாங்கிக் கொண்டேன்.

முதல் இரவு, என் ஊழியர்மட்டும் அல்லாது, திரு. குழந்தைவேலுவின் ஊழியர்கள் இருவரும் எனக்குக் காவலாக இருந்தார்கள். எனவே, அச்சம் இன்றி அமைதியாக உறங்கினேன்.

இரண்டாம் நாள் விசாரணையிலும் அதிகக் குற்றங்கள் வெளியாக வில்லை; சிற்சில தவறுகள் தென்பட்டன.

அவற்றைக் குறித்துக் கொண்டேன். அதற்கான ஏடுகளில் எண்களை எழுத்தாலும் எழுதிக் கையெழுத்திட்டேன்.

மூன்றாம் நாள் விசாரணையும் 'சப்'பென்று தொடங்கிற்று; புரட்டுகள் புலனாகவில்லை. எதிர்க் கட்சியினருக்கு ஆற்றாமை; ஆள்பவர்களுக்குத் தெம்பு கொப்பளித்தது. அதன் விளைவு?

பிற்பகல் விசாரணையைத் தொடங்கும்போது, ஆராவமுது அய்யங்கார் தம் இயல்பைக் காட்டிவிட்டார்.

''நாங்கள் பஞ்சாயத்திலிருந்து பணம் சம்பாதிப்பதாகச் சொல்லு பவர்கள், 'தேவடியாள்'களுக்குப் பிறந்தவர்களாகவே இருக்க வேண்டும்'' என்று உரக்கக் கத்தி, வலுச்சண்டைக்கு இழுத்தார்.

அதே நொடி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் துள்ளி எழுந்தார்கள்.

''என்ன சொன்னாய்?'' என்று கத்திக் கொண்டே அய்யங்கார் மேல் பாய்வதுபோல் நின்றார்கள்.

மின்னலெனக் குறுக்கிட்டேன்.

''பொய்க் குற்றஞ் சாட்டுகிறவர்கள் அப்படித்தான்; மெய்ப்பிக்கிறவர்கள் அப்படி அல்ல'' என்று நான் சொல்லவும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

குற்றச்சாட்டுகளில் ஒன்று, 'புதிதாகக் கட்டிய பொதுக்குளத்தின் படிக்கட்டுகளை அளக்கும்போது, உள்ளதற்கும் அதிகமாகக் கணக்கு எழுதி, அதற்கான பணத்தை ஏப்பம்விட்டுவிட்டார்கள் என்பதாகும்.

மற்றக் குற்றச்சாட்டுகளையெல்லாம் ஆய்ந்த பிறகு, கடைசியாகக் குளத்தண்டை போனோம். அதன் அளவைப் பற்றிய முழுத் தகவல்களையும் பஞ்சாயத்து அளவைப் பதிவில் இருந்தபடியே நகல் எடுத்துக்கொண்டேன்.

பிறகே குளத்தண்டை சென்றேன். பஞ்சாயத்து நிர்வாகிகள் காட்டியதை எல்லோர் முன்னிலையிலும் அளந்து பதிந்து கொண்டேன்.

அதோடு விசாரணை முடிந்தது, அப்போது மாலை அய்ந்து மணி.

எச்சரிக்கையாக இருந்தேன்

இரவு எட்டு மணிக்குத்தான் பேருந்து புறப்படும். பேருந்து நிலையத்தில் மின்விளக்குகிடையாது. இரண்டு 'பெட்ரோமாக்ஸ்' விளக்குகளே உண்டு. அவை அடிக்கடி நின்றுபோகும். அப்போது பேருந்து நிலையம் இருளில் மூழ்கிவிடும்; எதுவும் நடக்கலாம்.

விசாரணையை முடித்த நாள், முன் இருட்டு நாள். இரவு பத்துமணிக்குப் பிறகே, நிலவொளி வரும். இது என் மனத்தில் உறுத்திற்று.

பேருந்தும் திரு. இராமசாமி அய்யருடையது. பேருந்து நிலையமும் அவரது இயக்கத்திற்கு ஏற்பச் செயல்படுவது.

அன்றிரவு விளக்குகளை அணைத்து விட்டு, கும்மிருட்டில் குண்டர்களை விட்டு, குற்றச்சாட்டுக் கோப்பையும் விசாரணைப் பதிவுகளையும் கொண்ட பெட்டியைப் பறித்துக் கொண்டால், என்ன செய்வது என்ற அச்சம் என் உள் எப்படியோ மின்னிற்று. விழிப்பே அச்சக் கொல்லியல்லவா?

உடனே சூழ்ச்சியொன்று செய்தேன். என்ன சூழ்ச்சி?

அலுவலகப் பெட்டியிலிருந்த கோப்புகளை எடுத்துவிட்டேன். அதற்குள் நாளிதழ்களையும் அழுக்கு உடைகளையும் நிரப்பிக் கனமாக்கினேன்.

கோப்புகளை மடித்து நீண்ட உறையில் இட்டு, என் ஊழியரின் பாதுகாப்பில் வைத்தேன்.

அவர் அதைத் தன் கோட்டுக்குள் வைத்துக் கொண்டார்.

வண்டி புறப்படுவதற்கு அரைமணி நேரம் முன்னதாகவே பேருந்து நிலையத்தை அடைந்தோம். அங்கே காத்துக்கொண்டு இருந்தோம்.

வண்டி வந்து நிற்கும்போது, சொல்லி வைத்தாற்போல் இரு விளக்குகளும் அணைந்துவிட்டன. பயணிகள் இப்படியும் அப்படியும் அலைமோதினார்கள்.

'மேகவர்ணம், பெட்டி பத்திரம்' என்று உரக்கக் கூறியபடியே நின்றேன். நடத்துநர், 'பஞ்சாயத்து அதிகாரி முன் இருக்கைக்கு வரவும்' என்று கத்தினார்.

பெட்டியை என் காலடியில் வைப்பதுபோல் பாசாங்குசெய்து விட்டுப் பின்னால் உட்கார்ந்த மேகவர்ணம் தன் காலடியில் வைத்துக்கொண்டார்.

வண்டி புறப்படுமுன், இரண்டு முறை மேகவர்ணம் பெட்டியைக் கவனித்துக் கொள் என்று கூறி நடித்தேன்.

நான் எதிர்பார்த்ததுபோல இரண்டு மூன்று குண்டர்கள் மேகவர்ணம் வரிசைக்கு நேர், கீழே நின்று கொண்டிருந்தார்கள்.

ஏற்கெனவே, நான் மேகவர்ணத்தை விழிப்பூட்டியிருந்தேன். அதையொட்டி அவர் வரிசையின் நடுவில் உட்கார்ந்துகொண்டு பெட்டியைக் கால்களால் அழுத்திக்கொண்டு குனிந்து கைகளையும் அதன்மேல் ஊன்றியிருந்தார்.

எப்படியோ பெட்டி தப்பிற்று. அது களவு போவதற்கு முன் பேருந்து புறப்பட்டது. வழியிலே பிறர் மறிப்பார்களோ என்றுகூட நினைத்தேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. பாதுகாப்பாக வீடு போய்ச் சேர்ந்தோம். விசாரணைக்காகப் பட்ட பாட்டைவிட அதிகம் அறிக்கையை எழுதுவதில் படவேண்டியிருந்தது.

குற்றச்சாட்டுகளை மீண்டும் இருமுறை படித்தேன், அவற்றை நினைவில் வைத்துக்கொண்டு, நேரில் சேகரித்த தகவல்களைக் கொண்டு மறுபடியும் உரைத்துப் பார்த்தேன்.

ஆதாரமில்லாதவை என்று சிலவற்றைத் தள்ளிவிடலாம்; பிழையென்று சிலவற்றைக் கருதலாம்; குற்றங்கள் என்று இரண்டு மூன்றைக் கொள்ளலாம். இம் முடிவுகளுக்கு வந்தேன்.

அவற்றை எழுதவேண்டும். அந்த அறிக்கைக்கு இன்னொரு படியும் எடுக்கவேண்டும்.

என் அலுவலகத்தில் எழுத்தர் கிடையாது. ஆகவே நானே என் கைப்பட எழுதவேண்டியிருந்தது.

அய்ம்பது முழுப் பக்கங்கள் கையொடிய எழுதினேன். அதைப் படித்துப் பார்த்துச் செப்பஞ்செய்தேன். அப்படிச் செப்பஞ்செய்கையில் சொற்களை அளந்து போடக் கற்றுக்கொண்டேன்.

அவ்வறிக்கையோ, இரகசியமானது. எனவே, தட்டெழுத்தர் ஒருவருக்குக் கூலி கொடுத்து, படி எடுக்கக்கூடாது, மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தில் கொடுத்துப்படியெடுக்கலாமாவென்று பஞ்சாயத்து அலுவலரைக் கலந்து ஆலோசித்தேன். 'படியெடுத்து முடிவதற்குள் பலருக்கும் தெரிந்துவிடும். எனவே, நீயே எழுதிவிடு' என்றார். அவ்வேலையைச் செய்து முடிப்பதற்குள் போதும் போது மென்று ஆகிவிட்டது. அப்படிச் செய்து முடித்ததும் சைதாப் பேட்டைக்குச் சென்று அதை உரிய அலுவலரிடம் சேர்த்தேன். 'நம் பொறுப்பு முடிந்தது; மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்தால் நமக்கென்ன? என்று தாமரையிலைத் தண்ணீராக இருந்தேன்.

பல ஊர்களுக்குச் சென்று, அன்றாட வேலைகளைக் கவனித்தேன்.

மிரட்டலும் பாராட்டலும்

என்னுடைய அமைதியைக் கலைக்கத் தந்தி ஒன்று வந்தது.

''மாவட்ட ஆட்சிக்குழுவின் தலைவரான ஆலந்தூர் திரு. துரைசாமி ரெட்டியார், என் அறிக்கை சரிதானாவென்று தணிக்கை செய்யும் பொருட்டு உத்திரமேரூருக்குச் செல்கிறார்.

''அந்தத் தணிக்கையின்போது, நான் அவருடன் இருக்க வேண்டும். இரண்டு மூன்று நாள்கள் தொடர்ந்து இருக்கவும் நேரிடலாம்.

''அதற்கும் ஆயத்தமாக அங்குச் செல்லவும்'' இப்படித் தந்தி வழி ஆணை வந்தது.

ஆணைப்படி சென்றேன். குறித்த நேரத்தில் ஆட்சிக்குழு மாவட்டத் தலைவரை, உத்திரமேரூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் கண்டேன்.

விசாரணையைத் தொடங்குமுன், திரு. துரைசாமி எல்லோர் முன்னிலையிலும் என்னைப் பார்த்து மிரட்டினார்.

''குற்றஞ்சாட்டப்பட்ட இருவரும் செல்வர்கள்; மக்களின் மதிப்பைப் பெற்றவர்கள்; அவர்களால் தேர்ந்து எடுக்கப்பட்டுப் பதவியில் இருப்பவர்கள்.

''யாரோ, சாதாரண ஆள்கள், அவர்கள்மேல் குற்றஞ்சாட்டினால் அதற்கு இவ்வளவு பெரிய அறிக்கையா?

''உம் அறிக்கையில் நான் தவறுகள் கண்டு பிடித்துவிட்டால் அது உம் வேலைக்கு வேட்டாகும்'' என்றார்.

அம்மிரட்டலுக்கு நான் அஞ்சவில்லை. மடியில் கனமிருந்தால் அல்லவா வழியில் அச்சம் ஏற்படும்!

மேலும் ஏடுகளை, கணக்குகளை எவ்வளவு விழிப்பாகப் பார்க்க முடியுமோ அவ்வளவு விழிப்பாகப் பார்த்த பிறகே அறிக்கையை எழுதினேன்; ஒரு பாற் சாயாது எழுதினேன் என்னும் முழு நிறைவோடு இருந்த என்னை அம்மிரட்டல் சிறிதும் அசைக்கவில்லை.

''அய்யா! என் கடமையை மட்டுமே செய்திருக்கிறேன். என் அறிவுக்கு எட்டிய அளவு விழிப்போடு ஆய்ந்து பார்த்திருக்கிறேன்; துருவித் துருவிப் பார்த்த பிறகே சான்றுகளின் அடிப்படையிலே, இவ்வறிக்கையை எழுதியுள்ளேன். என்னையும்மீறி, பிழைகள் புகுந்திருந்தால், அதற்கான விலையைக் கொடுக்காமல் தப்ப முடியுங்களா?'' என்று கூறினேன்.

என் குரலில் நம்பிக்கையும் உறுதியும் இருந்தது; சீற்றம் இல்லை.

திரு. ரெட்டியார், என் அறிக்கையை வைத்துக்கொண்டு பஞ்சாயத்துப் பதிவு ஏடுகளோடு ஒப்பிடத் தொடங்கினார். நாற்பது அய்ம்பது மணித்துளிகள் நகர்ந்தன, அப்புறம்.

''அடேயப்பா! பெரிய ஆளாயிருக்கிறாயே! எத்தனை இடங்களில், கணக்கில் உள்ளதைத் திருத்த முடியாதபடி எழுத்தால் எழுதிக் கையெழுத்திட்டு இருக்கிறாய்!'' என்று தம் வியப்பைத் தெரிவித்தார்.

நான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறிப்புகளுக்கு அப்படிக் கையெழுத்து இட்டிருந்தேன். அக்கணக்கையும் வைத்திருந்தேன். அதைக் கூறினேன். அவர் அசந்து போய்விட்டார்.

பிற்பகல், என்னை விடுவித்துவிட்டார். நான் ஊர் திரும்பினேன். அவர் இரு நாள்கள் தணிக்கை செய்தாராம். என்ன முடிவுக்கு வந்தார்?

உதவிப் பஞ்சாயத்து அலுவலரின் அறிக்கையில் கண்டுள்ளவை அனைத்தும் உண்மையே என்று முடிவு செய்தார், அப்புறம்?

உத்திரமேரூர் பஞ்சாயத்துத் தலைவரும் துணைத்தலைவரும் இத்தகைய பொறுப்பிற்கு முதன்முறை வந்தவர்கள். ஆகவே, அவர்களால் ஆன அதிகச் செலவை, அவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும். குறைகளைத் திருத்திக்கொள்ள ஆறு திங்கள் கொடுப்போம். அவர்களைப் பதவிகளிலிருந்து நீக்கவோ, பஞ்சாயத்தைக் கலைக்கவோ தேவையில்லை. இப்படி மாவட்ட ஆட்சிக் குழுவிற்கு அவர் பரிந்துரைத்தார்.

அதைக்குழு ஏற்றுக்கொண்டது. என் நேர்மையும் திறமையும் மெய்ப்பிக்கப்பட்டன.

81. நான் கொண்ட காதல்

மேடுபள்ளங்கள் நிறைந்ததே நிலம். பல்வகை மக்களைக் கொண்டதே உலகம்.

உத்திரமேரூர் நிகழ்ச்சியைக் கொண்டு தவறாக மதிப்பிடக் கூடாது.

எல்லாம் ஊழல் மயம் என்ற முடிவுக்கு வருதல் ஆகாது.

கண்ணை உறுத்தும் கரும்புள்ளி, பெரிய வெண்சட்டையில் சிறுதுளி, என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஊழல் ஒழிக்கப்பட வேண்டியதே ஒழிய, மக்கள் பேச்சில் நிறைந்திருக்க வேண்டிய ஒன்றல்ல.

தன் ஆட்சி பெற்ற இந்தியாவில் ஊழல் பேச்சுக்கு அளவுக்கு மீறிய மதிப்புக் கொடுப்பது, ஒரு புற்று நோயாக வளர்ந்துவிட்டது.

எனவே, நான் கண்ட வேறு நிலைகளையும் இளைய தலைமுறைக்குக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பஞ்சாயத்துத்துணை அலுவலராகப் பணியாற்றியபோது எவ்விதக் குற்றச்சாட்டுகளுக்கும் இடமில்லாத வகையில் பல ஊராட்சி மன்றங்கள் இயங்கின.

திருப்பெரும்பூதூர் கோட்டத்திலாவது, இரு ஊராட்சித் தலைவர்களைக் கையாடல் குற்றத்திற்காக, வழக்கு மன்றத்தில், நிறுத்தி வைக்க நேர்ந்தது.

அப்படிப்பட்ட நிலை, மதுராந்தகப் பகுதியில் ஏற்படவில்லை. ஏன்?

திருப்பெரும்பூதூர் கோட்டத்தைக் காட்டிலும் செங்கற்பட்டு மதுராந்தகம் பகுதிகளில் வளம் அதிகம்.

மேலும், அக்காலத்தில் ஊராட்சித் தேர்தல்களில் போட்டிச் செலவு குறைவு. உள்ளூர்ப் பெரியவர்களையே வேண்டி விரும்பி, தலைவராகவோ உறுப்பினர்களாகவோ பிடித்து வைப்பார்கள்.

அப்படிப் பிடித்து வைக்கப்பட்டவர்களும் பெரிய மனிதர்களாகவே நடந்து காட்டினார்கள்.

மொத்தத்தில் ஓரளவு பொதுக்கல்வியும் பெரிய அளவு நாணயமும் கொண்டவர்களே தலைவர்களாக இருந்தார்கள்.

எனவே, என் வேலையில் தொல்லைகள் மிகவும் குறைவு; உளைச்சல்கள் எப்போதோ சிலவே.

ஒழுங்குள்ள சூணாம்பேடு

சூணாம்பேடு என்பது அன்று பெரிய ஜமீன். அவ்வூரிலும் ஊர் ஆட்சி மன்றம் இருந்தது. அதை நான் தணிக்கை செய்ய நேர்ந்தது.

அவ்வூர் ஜமீன்தார், திரு. அருணாசல முதலியார், தாம்தலைவராக இருப்பதற்குப் பதில் தம் ஜமீன் நிர்வாகியைத் தலைவராக்கி வைத்திருந்தார்.

அவர் ஜமீந்தாரின் உறவினர் அல்லர்; வேறு பிரிவைச் சேர்ந்தவர்.

பெரியவர்கள் நிழலில் பணிபுரிவோரில் பலர், பெரிய பாதுகாப்பு இருக்கிறதென்ற அசட்டுத் துணிச்சலில், தவறுகள் செய்வது உண்டு.

சூணாம்பேடு ஊராட்சித் தலைவரும் அப்படியிருப்பாரோ என்று அய்யப்பட்டேன். அப்படியிருந்துவிட்டால், எப்படிச் சமாளிப்பது என்ற கவலையோடு அவ்வூர் போய்ச் சேர்ந்தேன்.

அந் நிலக்கிழாரின் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்து ஊராட்சிக் கணக்கை இரு நாள்கள் தணிக்கை செய்தேன்.

கண்டது என்ன? எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்ததைக் கண்டேன்.

கணக்குகள் ஒழுங்காக இருந்தன. அதிலும் அதிகமான சிறப்புத் தென்பட்டது. பொதுநிதி சிக்கனமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

பல பொது வேலைகளில், திட்ட மதிப்பீட்டிற்குக் குறைவாகவே செலவு ஆகியிருந்தது.

ஊராட்சி நேரில் வேலைகளை நடத்தும்போது, நூற்றுக்குப் பத்து மிச்சமாக வேண்டுமென்பது எதிர்பார்ப்பு. மிச்சமோ, இருபது, இருபந்தைந்து என்று இருந்தது.

பொது நிதியை அவ்வளவு அக்கறையோடும் சிக்கனத்தோடும் செலவு செய்ததைப் பற்றி மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். அந்தத் தலைவர் பெயர் மறந்துவிட்டதே என்று வருந்தினேன்.

இதே நிலையைப் பற்பல ஊராட்சி மன்றங்களில் கண்டேன். ஆனால், ஒரு அக்கப்போர் வந்தது. அதைக் கவனிக்கும்படி மேலிடத்துக் குறிப்பும் வந்தது. அது எவ்வூர் நிர்வாகத்தைப் பற்றியது? திருக்கழுக்குன்றம் பேரூர் ஆட்சி நிர்வாகம் பற்றியது.

அவ்வூராட்சியின் தலைவர், தமக்கு வேண்டியவர்களுக்கே வேலை கொடுக்கிறார்; தகுதி திறமை பற்றிக் கவலைப்படுவேதே இல்லை. அவர் மீது இப்படி ஒரு குற்றச்சாட்டு. இதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று கண்டறியும்படி, எனக்கு ஆணை வந்தது. அதையொட்டி, முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு, திருக்கழுக்குன்றம் சென்றேன்.

அவ் வூராட்சித் தலைவர் யார்?

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை என்னும் சீரிய பள்ளியை நடத்தி வந்த வா.தி. மாசிலாமணி முதலியாரின் மூத்த அண்ணன் ஆவார்.

அவர் பெயர் திரு. பாலசுந்தர முதலியார் என்பதாகும்.

குற்றங்காணப் போன எனக்குப் புதிய வழிகாட்டல் ஒன்று கிடைத்தது.

திரு. பாலசுந்தரனாரிடம் அவர் பதவிக் கால நியமனக் கோப்புகளைக் காட்டும்படி கோரினேன்.

அவற்றைக் காட்டும்படி அவர் எழுத்தருக்கு ஆணையிட்டார்.

எழுத்தர் காட்டிய ஒவ்வொரு கோப்பையும் துருவிப் பார்த்தேன். நியமனங்களில் குறை காண முடியவில்லை.

அவருடைய நியமனங்களில் மிகப் பெரியது எழுத்தர் நியமனமே. அதற்கு அக்கால ஊதியம் ரூபாய் முப்பதே. வேறு படிகள் கிடையா.

அவ்வேலைக்கு நான்கைந்து பேர்கள் விண்ணப்பித்து இருந்தார்கள்.

அதில் ஒருவரை அவர் தேர்ந்தெடுத்து இருந்தார். அது ஒரு சார்புத் தேர்வா, தகுதித் தேர்வா என்பதே நான் கண்டறிய முயன்றது.

இந்தக் கேள்விகளை, மெல்ல அவரிடம் கேட்டேன்.

அவர் பதில் என்ன?

'விண்ணப்பம் போட்டவர்கள் அனைவருமே பள்ளி இறுதி தேறியவர்கள். ஆகவே எல்லோரும் தகுதியடைவர்கள்.

''நான் தேர்ந்தெடுத்தவர் எப்படித் தகுதியில்லாதவர்?'' என்று கேட்டார்.

''இவரைவிட அதிக மதிப்பெண் பெற்றவர் ஒருவர் இருக்கிறாரே'' என்று அவரை மடக்கினேன்.

''உண்மை. முதலில் எல்லோரையும் நேரில் பேட்டி கண்டேன். அதில் தெரிந்து கொண்டது, அதிக மதிப்பெண் பெற்றவர் ஏதோ வேறு வழியின்றி, இங்கு எழுத்தர் பணிக்கு வருகிறார்; வேறிடத்தில் வேலை கிடைத்தால், இதிலிருந்து ஓடிவிடுவார் என்பதாகும்.

''என்னைவிட அதிகம் படித்த அதிகாரியாகிய தங்களுக்கு யோசனை சொல்வதாகத் தயவு செய்து நினைத்து விடாதீர்கள். உங்கள் வயதிற்கு மேற்பட்டது என் பட்டறிவு.

''அந்த அடிப்படையில் நான் தெரிந்து கொண்டது. 'நாம் விரும்பும் குதிரையைக் காட்டிலும் நம்மை விரும்பும் கழுதை நல்லது' என்பதே!

'நான் தேர்ந்தெடுத்துள்ள எழுத்தர், எனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது ஒரு குறையல்ல. அவர் இவ்வேலையை விரும்புகிறார். எனவே, நீங்கள் கேட்ட கோப்புகளையெல்லாம் சட்சட்டென்று காட்ட முடிந்தது'' என்றார்.

''நல்ல வேலையின் வாயிலாக தன்னைத் தேர்ந்தெடுத்ததை அந்த எழுத்தர் நியாயப்படுத்தி விட்டார்'' என்று எழுதி அனுப்பிவிட்டேன்.

திரு. பாலசுந்தரனாரின் வழி காட்டலை மறக்கவே இல்லை.

கொள்கை மீது காதல்

மதுராந்தகம் துணைப் பஞ்சாயத்து அலுவலராக இருந்த காலை, உலக வழக்குப்படி என்னுடைய 'பிரிவை'ச் சேர்ந்த பல ஊராட்சித் தலைவர்களோடு உறவு ஏற்பட்டது.

அதுமட்டுமா? அப்போது தூத்துக்குடி நகராட்சி ஆணையராக இருந்த திரு. வ.ந. சுப்பராயனை விடுமுறையில் வல்லிபுரம் வந்திருந்த இடத்தில், அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

அவர்களுக்கு என்னை மிகவும் பிடித்து இருந்தது. வெற்றிலை போடல், சிகரெட் பிடித்தல் முதலிய எவ்விதப் பழக்கமும் இல்லாத என்னைப் பற்றி, அவர்கள் பெருமைப் பட்டார்கள்.

ஆனால், திருமணம் செய்துகொள்ளாமல் தட்டிக் கழிக்கிறேனே என்றும் ஏக்கப்பட்டார்கள்.

சிற்சிலர், உறவுப் பெண்களைக் கொடுக்கலாமென்றும் குறிப்புக் காட்டினார்கள். நான் ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டுவிட்டேன். ஏன்?

எவரிடமாவது காதல் கொண்டிருந்தேனா? இல்லை.

எந்தக் கன்னியின்பாலும் காதல் கொள்ளவில்லையே ஒழிய, ஒரு கொள்கையின் மேல் தணியாக் காதல் கொண்டிருந்தேன். அக்கொள்கை என்ன?

'நான் பிறந்த சாதிக்கு உரியவனாக வாழ்வதில்லை; மனித சாதியைச் சேர்ந்தவனாகவே வாழ்வது' என்னும் கொள்கைக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேன்.

சாதித் திருமணத்தைப் போக்கி, சமத்துவத் திருமணத்தை என்னுடைய மூச்சாக்கியது எவர்?

தந்தை பெரியார்; அவருடைய தன்மான இயக்கம்.

அவரும் அவருடைய இயக்கமும் தோன்றியிராவிட்டால் நான் எப்படியிருந்திருப்பேன் என்று எண்ணிப் பார்க்கிறேன். சிரிப்பு பொங்குகிறது! ஏன்?

உலகத்தோடும் காலத்தோடும் ஒட்டி ஒழுகத் தெரியாத, இறுமாப்புக் கொண்ட சிவபிரானின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறந்தவர்கள் என்று கிழங்கள் சொல்வதைக் கிளிப்பிள்ளையைப் போல் சொல்லிக் கொண்டு, திண்ணையின் மேல் உட்கார்ந்து இருக்கும் பண்ணையாராக இருந்திருப்பேன்.

பல இலட்சம் 'சாதிப்புழுக்களை' மனிதராக மாற்றிய உயிரியல் உளவியல் வித்தகர் தந்தை பெரியார் ஆவார்.

அவரது பெருவாழ்வு, நீண்டதுமட்டுமல்ல! நிறைந்ததுங்கூட. எதனால் அது நிறைந்தது?

புரட்சிகரமான சிந்தனைகளால், தொண்டுகளால், சாதனைகளால்.

இவற்றின் இமயமாக விளங்கிய பெரியார், காட்சிக்கு எளியர்; பேச்சுக்கு இனியர்; பழகுதற்கோ? பரிவுடைய சிறந்த பண்பாளர்.

புரட்சிப்பார்வை, பெரியார் ராமசாமியோடு பிறந்தது. அவர் பள்ளிப் பருவத்திலேயே, கொடுமையான சாதிக் கட்டுகளை உடைத்தெறிந்தார்.

பல சாதி மக்களோடும் புழங்கினார். பல சாதியினர் வீடுகளில் மகிழ்ச்சியுடன் நீர் அருந்தி, சாதிப் பிரிவுகளை ஏதிர்த்துப் புரட்சி செய்தார்.

அப்புரட்சிப் போக்கு, பிள்ளைக் குறும்பாக நின்றுவிடவில்லை. பொதுத் தொண்டாக ஓங்கிப் பெருகிற்று.

ஈரோட்டிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பரவிய பயங்கர 'பிளேக்' நோய் ஒழிப்புப் பணியாக ராமசாமியின் தொண்டு ஊற்று எடுத்தது.

ஈரோடு நகர மன்றத் தலைவர் பதவியாக வளர்ந்தது. மேலும் இருபத்தெட்டு கௌரவப் பதவிகள் என்னும் சிற்றோடைகள் அவர் தொண்டில் சேர்ந்தன.

அவ்வேளை, காந்தியடிகள் அரசியல் வானில் எழு ஞாயிராகத் தோன்றினார். இந்திய தேசிய காங்கிரசை மக்கள் இயக்கமாக்கினார். விடுதலை முழக்கம் திக்கெட்டும் ஒலித்தது. பல இரும்பு மனிதர்களை அது ஈர்த்தது.

இயற்கையில் உரிமை உணர்வு உடைய ஈ.வெ. ராமசாமி, காந்தி அடிகளின் காங்கிரசில்சேர்ந்தார்; அனைத்தையும் மறந்து விட்டுக் காங்கிரசு இயக்கத்தை வளர்ப்பதில் முனைந்தார்.

உரிமை உணர்வு, சுதேசி உணர்வு, சமத்துவ உணர்வு ஆகிய மூன்றையும் தமிழ்நாடு முழுவதும் விதைத்தார்.

தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராகவும் தலைவராகவும் வளர்ந்தார்.

அதற்காகப் பெரும் விலை தந்தார். இருபத்தொன்பது பதவிகளையும் துச்சமாக உதறித் தள்ளினார்.

காந்தியடிகள், வழக்கு மன்றங்களை ஒதுக்கச் சொன்னார். ராமசாமி செம்மையாகச் செய்து காட்டினார்.

காலாவதியாகும் தருணத்தில் இருந்த பாண்டு பத்திரங்களை வசூல் செய்யவும் வழக்கு மன்றம் செல்ல மறுத்தார்.

அதனால் அக்கால அய்ம்பதாயிரம் ரூபாய்களை ஆனந்தத்துடன் இழந்தார்.

அது மட்டுமா?

மதுவிலக்குக் கொள்கையைப் பின்பற்றித் தம் தென்னந் தோப்பிலிருந்த அய்ந்நூறு தென்னை மரங்களை இரவோடு இரவாக வெட்டச் செய்தார். எவ்வளவு பெரிய தியாகம்!

முதல் கள்ளுக்கடை மறியலைத் தொடங்கியவர் பெரியார்.

அவர் மனைவி நாகம்மையாரும் தங்கை கண்ணம்மாளுமே கள்ளுக்கடை மறியலில் பங்கு கொண்ட முதல் இந்தியப் பெண்கள் ஆவார்கள்.

மறியலில் பெரியார் சிறைப்பட்டார்.

அது மட்டுமா? இராச வெறுப்பிற்காகவும் சிறைப்பட்டவர் ராமசாமி.

தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்த ராமசாமிக்கு வைக்கத்தில் இருந்து அழைப்பு வந்தது. அதை ஏற்று அங்குச் சென்றார்.

போராட்டமொன்றிற்குத் தலைமை தாங்கி நடத்தினார்.

அது என்ன போராட்டம்?

பொதுத் தெருக்களில் எல்லாச் சாதியரும் நடக்கும் உரிமை பெறவேண்டும் என்பதற்காகப் போராட்டம்.

இதிலும் நாகம்மையாரும் கண்ணம்மாளும் பங்கு கொண்டார்கள்.

பெரியார் இருமுறை சிறைப்பட்ட பிறகு வெற்றி பெற்றார்.

வைக்கம் வீரராம் இராமசாமிக்கு இந்திய விடுதலையே சிந்தனையாயிருந்தது. இந்தியர்களுக்குள் ஒற்றுமையின்மையே விடுதலையைத் தாமதப்படுத்துவதாக உணர்ந்தார்.

வகுப்புரிமையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டால் ஒற்றுமை வளரும்; வலிமை பெருகும்; விடுதலை விரைந்து வந்து சேரும். இது பெரியார் மதிப்பீடு.

எனவே, காங்கிரசில் சேர்ந்தது முதல் வகுப்புரிமை ஆதரவ கிட்ட இடைவிடாது முயன்றார்.

ஆறாண்டிற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசவும் இடங் கொடாதிருந்த காங்கிரசை விட்டுத் தீரத்துடன் விலகினார். அது பெரிய தியாகமாகும்.

வெளியே வந்ததும் தன்மான இயக்கத்தைத் தொடங்கினார். சூறாவளிப் பயணங்களை மேற்கொண்டார்.

கல்லடியையும் சொல்லடியையும் பொருட்படுத்தாது சாதி ஒழிப்பு, சமத்துவ உணர்வு முதலியவற்றை மக்கள் அறிவில் ஊற வைத்தார்.

எல்லோர்க்கும் வாழ்வளிக்க வகுப்பு உரிமை மட்டும் போதாது; சமதர்ம வாழ்க்கை முறை தேவை என்பதை 1930லேயே கோடிட்டுக் காட்டினார்.

பெரியாரைப் போலச் சமதர்மத் தொண்டினைச் செய்தவர் தமிழகத்தில் இல்லை என்பது மிகையல்ல.

அதற்காக அவர் சிறைப்பட்டதும் வியப்பல்ல. கொள்கைக்காக இன்னல்படுவது அவர் இயற்கை.

வாழ்நாள் முழுவதும் மக்களிடையே பகுத்தறிவை வளர்க்கவும் அவர்களைச் சமத்துவ மக்களாக்கி, எல்லோரும் வாழும் நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் பாடுபட்ட பெரியாரின் கொள்கையை மணந்து கொண்ட எனக்கு, 'என் சாதி'யில் பெண்பார்க்கும் எண்ணமே கசப்பாயிருந்தது.

82 . வேண்டப்படுபவன்

என்பால் அன்பு கொண்டோர்

என்னுடைய பிரிவைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர்கள் என்னிடம் அன்பாக இருந்ததோடு, என்னுடைய சாதி ஒழிப்புப் புத்தியைப் பொறுத்துக் கொண்டார்கள். அது அவர்களுடைய பண்பாட்டைக் காட்டியது.

அதோடு, அன்று கோடைக்கால எழு ஞாயிறாக ஒளிவிட்ட தன்மான இயக்கம் விளைவித்த, மாற்ற முடியாது இருந்த மனமாற்றத்தையும் அது காட்டிற்று.

தன்மான இயக்கம் வேரூன்றித் தழைப்பதற்கு முன்பு, 'சைவ முதலியார்கள்', 'அசைவ முதலியார்கள்' வீடுகளில் நீர் அருந்தவும் மாட்டார்கள்.

அசைவ முதலியார்கள் எவ்வளவு பெருநிலையில் இருப்பினும், சைவர்கள் வீட்டில் விருந்துக்கு அழைக்கத் தயங்குவார்கள்; விரும்பவும் மாட்டார்கள்.

சாதிக்கட்டுப்பாடு அவ்வளவு அதிகமாக இருந்த காலம் அது.

அக்கட்டுப்பாட்டைப் பின்பற்றாத என்னிடமும் உள்ளன்போடு பழகிய 'சைவர்கள்' பலராவர்.

அவர்களில் சிலரையாவது இங்கே குறிப்பிடுதல் என் கடமை.

ஒழலூர் முத்துக்குமாரசாமி, வல்லிபுரம் வைத்தியநாதர், பாலூர் விசுவநாதர், மாணாமதி சுப்பராயன், சிறுகுன்றம் சுப்பராயன், திருவானைக்காவல் இராசசேகரன் ஆகியோர் என்நினைவில் பசுமையாக உள்ளனர்.

மதுராந்தகத்தில் நான் தங்கியிருந்தபோது, எனக்குப் பெருந் துணையாக விளங்கியவர் பொலம்பாக்கம் திரு. முத்துமல்லா என்பவர்.

அவர், என் காலத்து மாணவர். சென்னையில் இராமகிருஷ்ண இல்லத்தில் தங்கிக் கல்வி கற்றவர்.

அவ்வாழ்க்கை, வழி வழி பெற்ற ஒழுக்கத்தையும் பண்பையும் முத்துமல்லாவிடம் கட்டிக்காத்தது.

அவர் குணசீலர்: பழகுதற்கு இனியவர்; ஜமீந்தார் மரபிலே வந்தாலும் ஆடம்பரமற்ற தோற்றமுடையவர்.

செல்வத்தால் முளைக்கும் செருக்கோ பிற தீய பழக்கங்களோ இல்லாதவர்.

அவரோ, அவரிடம் வேலை பார்ப்போரோ அடிக்கடி ஏதாவதொரு வேலை பற்றி மதுராந்தகம் வந்து செல்வதுண்டு.

அந்தச் சமயங்களில் முத்துமல்லா பெரும்பாலும் என்னை வந்து பார்த்துப் பேசிவிட்டே போவார். அவ்வப்போது சுவையான தின்பண்டங்கள் அவர் வீட்டிலிருந்து வரும்.

என் மதுராந்தகம் வாழ்க்கையை இனியதாக்கியது அவருடைய நட்பு. அது இன்றும் தொடர்கிறது.

அண்மையில் முத்து விழாக் கண்ட, கயப்பாக்கம் திரு. முத்துலிங்கர், மல்லாவின் அண்ணார்.

அவர் என்னிலும் பன்னிரண்டு ஆண்டு மூத்தவர்; தன் தம்பிகளிடம் காட்டும் பரிவினை என்பால் காட்டினார்.

இப்படிப் பெருமளவு நிறைவோடு பணியாற்றி வருகையில் சிறிய சிக்கல் ஒன்று வந்தது.

காஞ்சிபுரம் வட்டம் ஆற்பாக்கம் ஊராட்சியின் தலைவர் திரு. திருமாகறல் முதலியார் என்பவர்.

அவர் என் நெருங்கிய உறவினர், தாய் மாமன் திரு. சுந்தர சேகரனை எதிர்த்து, மாவட்ட ஆட்சிக்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டார்.

அவ்வூர், என் கண்காணிப்பில் வந்தபோது, அங்கே, பொது மக்களுக்குள் சிறு கீறல் வீழ்ந்தது. அது புகார்க் கடிதமாக வெளிப்பட்டது.

அப்படி நடந்தது மாவட்டக்குழுவின் பொதுத் தேர்தலுக்கு முன்,

அப் புகாரை விரைவில் விசாரித்து, குறை காணும்படி, என் குணத்தை அறியாத உறவினர் ஒருவர், என் காதைக் கடித்தார்.

அப்படியொருவரை முதுகில் குத்த என் மனம் ஒப்பவில்லை.

எனவே, தேர்தல் முடிந்த பிறகே, விசாரணைக்குப் போனேன். குற்றம் ஒன்றும் கண்டிலேன்.

பாவமில்லாவிடத்தும் பழி சொல்லிற்று சிற்றூர் உலகம்.

எனக்கு வந்த கடிதம்

இளநிலை பள்ளித் துணை ஆய்வாளர் பதவிக்கு என்னை நியமிக்கும் ஆணைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தேன்.

அது வரவில்லை. ஆனால், எதிர்பாராத ஒருகடிதம் வந்து சேர்ந்தது.

ஒருநாள் அஞ்சல் கட்டை, வழக்கம் போல், ஆவலோடு பிரித்தேன்.

அஞ்சல் உறை ஒன்றைக் கண்டேன்.

அதன் மேல், என் முகவரி, முத்து முத்தான கையெழுத்தில் இருந்தது. பழக்கமில்லாத கையெழுத்து; துடிப்பைப் பெருக்கிற்று.

அக்கடிதத்தை உடனே உடைத்தேன்; படித்தேன். என் கண்களை நம்ப முடியவில்லை; மீண்டும் படித்தேன். நம்பிக்கை முளைக்கவில்லை.

மூன்றாம் முறை படித்த பிறகே, அக்கடிதம் மெய்யாக இருக்கலாம் என்று எனக்கு நானே உறுதி கூறினேன்.

ஏன்- அக்கடிதத்திற்குப் பதில் எழுத வேண்டிய முகவரியும் இருந்தது.

என்னை வியப்பில் ஆழ்த்திய அக்கடிதம் ஆங்கில மொழியில் இருந்தது. அது, 'அன்புமிக்க அய்யா' என்று தொடங்கியது. அப்புறம்?

''பழக்கமில்லாத ஓர் இளம்பெண் இப்படி உங்களுக்குக் கடிதம் எழுதுவதற்காக மன்னிப்புக் கோருகிறேன். அதைக்கொண்டு, என்னைப்பற்றித் தவறாக நினைக்க வேண்டாமென்று கோருகிறேன்'' என்று ஆழமாகப் பீடிகை போட்டுக் கொண்டது, பிறகு?.

''நான் எனக்காக இக்கடிதத்தை எழுதவில்லை. என் தோழிக்காக எழுதுகிறேன். என் தோழியின் ஒப்புதலோடு இதை எழுதுகிறேன்.

''நீங்கள் என்னையோ, என் தோழியையோ அடையாளங் கண்டு கொள்வீர்களா என்றுகூட அய்யப்படுகிறேன்.

''ஒவ்வொரு முறையும் உங்கள் கண்களில் நாங்கள் பட்ட நொடியில் நீங்கள் வேறு பக்கம் திரும்பிவிட்டீர்கள்; எங்களை ஏறிட்டுப் பார்க்கவில்லை என்பதே எங்கள் மதிப்பீடு.

''மாறாக நாங்கள், சற்றுத் தொலைவில் இருந்தபடியே பல முறை உங்களைக் கவனித்து இருக்கிறோம்.

''உங்கள் உரையாடல்களும் எங்கள் காதுகளில் வீழ்ந்தது உண்டு. அவற்றில் இருந்து நீங்கள் சமுதாயம், பொருளியல் பற்றி முற்போக்குக் கருத்துடையவர் என்று எங்களுக்குத் தோன்றியது?

''சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க அவாவுகிறீர்கள் என்று புரிந்தோம்.

''ஒரு முறைக்குப் பலமுறை, நீங்கள், உங்கள் நண்பரிடம் அப்படிக் கூறியதைக் கேட்டதால்தான் என் தோழிக்குத் துணிச்சல் வந்தது. இருப்பினும் தானே எழுதத் தயக்கம்.

''என் தோழி தங்களை மணக்க விரும்புகிறாள். அக்கருத்தினை உங்களுக்குத் தெரிவிக்கவே, இக்கடிதத்தை நான் எழுதுகிறேன்.

''இவ்விழைவு உங்களுக்கு ஏற்புடையதாயின், தயவு செய்து எனக்குப் பதில் எழுதுங்கள்.

''பிறகு தோழியின் பெற்றோர்களின் காதுகளில் எப்படிப் போட வேண்டும் என்று தாங்கள் நினைக்கிறீர்களோ, அப்படிச் செய்யலாம்.

''எக்காரணம் பற்றியும் இவ்வாய்ப்பினை நீங்கள் விரும்பாவிட்டால் தயவு செய்து என்னையும் என் தோழியையும் மன்னித்து விடுங்கள்.

''எங்கள் அடக்கமின்மையை மறந்து விடுங்கள். தயவுசெய்து இது கிணற்றில் போட்ட கல்லாக இருக்கட்டும்' என்று தொடர் பீடிகை போட்டபின், ஆளை அடையாளங்காட்டியது, கடிதம். எப்படி?

''என்னுடைய தோழி என்னோடு தாவர இயல் ஆய்வில் ஈடுபட்டுள்ளாள். இன்னும் சில திங்களில் அந்தத் திட்டம் நிறைவுறும்.

''ஆய்வு முடிந்த பிறகு, திருமணம் செய்து கொள்ளலாமென்று எண்ணம்.

''தோழி தாவரவியலில் ஏற்கெனவே, பி.எஸ்.ஸி. (சிறப்பு) பட்டம் பெற்றிருப்பதும் ஆய்வுக்குத் துணையாகும் பொருட்டு, ஜெர்மன் மொழியை முறைப்படி கற்றுக் கொண்டிருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

''ஆய்வு நிச்சயமாக வெற்றி பெறும். அதற்கான எம்.எஸ்.ஸி. (ஆய்வு) பட்டம் கிடைப்பதும் உறுதி.

''இச்சிறப்புகளையுடைய என் தோழி எவர்? உங்கள் இனிய நண்பர், திரு. சா. குருசாமியின் மைத்துனி ஆவார். அவர் பெயர் காந்தம்மா.

''ஒரு முடிவிற்கு வருவதற்கு முன், மேற்கொண்டு ஏதும் தெரிந்து கொள்ள விரும்பினால், தயவு செய்து எழுதலாம்.

''நான் இக்கடிதத்தை எழுதியது தவறாகப்பட்டால், தயவு செய்து எங்களை மன்னித்துவிட்டு எங்கள் எண்ணத்தை மறந்து விடக் கோருகிறேன்'' என்று கடிதம் முடிந்தது.

இப்படியொரு நிலையை நான் நினைத்துப் பார்க்கவேயில்லை.

கூச்சம் நிறைந்த என் இயல்பு என்னைக் காதல் வெள்ளத்தில் தள்ளிவிடும் என்று நான் கனவும் கண்டதில்லை.

என் சாதியொழிப்பு உணர்வை அறிந்த இரண்டொருவர், சில படித்த பெண்களின் பெயர்களை என்னிடம் சொல்லியதுண்டு. என் சார்பில், பெண் கேட்க முன் வந்ததும் உண்டு.

அவற்றை நான் சிறிதும் பொருட்படுத்தியது இல்லை, ஏன்?

மனைவியின் மாண்பு

மனைவி, மனைத்தக்க மாண்புடையவளாக இருத்தல் இன்றியமையாதது.

அப்படியிருந்தால் மட்டுமே, இல்லறம் இன்பமாக இருக்கும்.

குடியானவர் மனைவி, உழைப்பதற்குச் சுணங்கினால், அந்த வீடு இருள் சூழ்ந்த வீடாகிவிடும்.

விருந்தோம்ப அலுத்துக் கொள்ளும் மனைவி, நிலக்கிழாரின் மனைக்குத் தக்கவள் ஆகாள்.

எளிதில் சலித்துக் கொள்ளும் மனையாள், பொது வாழ்க்கை யோனுக்குத் தக்க துணையாகாள்.

எப்போதும் சிரித்தபடியே தோன்ற மறுப்பவள். 'தூதுவரின்' மனைக்குப் பொருந்தாள்.

எனவே, எவர் எத்தகைய வாழ்க்கை நடத்தத் திட்டமிடுகிறாரோ அத்தகைய வாழ்க்கைக்குத் தக்கவரையே மனைவியாகக் கொள்ளல் தகும்.

நானோ, இளமைப்பருவத்திலேயே, சில குறிக்கோள்களுக்கு என்னை ஒப்படைத்து விட்டேன்.

சாதியற்ற சமத்துவ சமுதாயத்தோடு நின்றுவிடவில்லை என் விழைவு.

எல்லோர்க்கும் எல்லாம் வழங்கவல்ல சமதர்மத்தையும் என் வாழ்க்கையின் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டேன்.

முன்னர் என் நண்பர்கள் சொல்லிய பெண்கள் சராசரி இந்தியப் பெண்களுக்குமேல் உயரமாட்டார்கள். அதாவது நகை தாங்கிகளாக வாழ்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளக் கூடுமென்று பட்டது.

எனவே, முன்னர் வந்த பெயர்களைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை. பணிவோடு மறுத்து விட்டேன்.

இப்போது, தோழி வழியாகத் தெரிவித்த காதலை ஏற்பதா? புறக்கணிப்பதா?

வியப்பில், உணர்வுப் பொங்கலில் முடிவு செய்வது, தொலை நோக்கு ஆகாது என்று மனத்தில் பட்டது.

எனவே, இரண்டு மூன்று நாள்கள் வரை என்ன பதில் எழுதுவது என்று முடிவு செய்யவில்லை.

என் பதில்

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, ஒரு தெளிவு பிறந்தது.

உள்ளதை மட்டுமல்லாது விழைவதையும், அதாவது என் குறிக்கோளையும் ஒளிவு மறைவின்றிக் கூறிவிடுவது. அதற்குப் பிறகும் என்னை மணக்க விரும்பினால், அப்போது முடிவு எடுப்பது பொருத்தம் என்று தோன்றியது.

அதையும் சில நாள் ஊறுகாய் போட்டு வைத்தேன். பிறகு?

பதில் எழுதினேன். என்ன பதில்?

''எங்கள் பழமையான சங்க இலக்கியத்தில் தலைவி தலைவன் மேற்கொள்ளும் காதலை, தோழியொருத்தி வழியாகச் சொல்லியனுப்புவதே மரபு என்று கற்றிருக்கிறேன்.

''அதனால் உம்முடைய கடிதம் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தவில்லை. அதே நேரத்தில் என்னை வியப்பில் மூழ்க வைத்தது.

''உம் தோழி, என்னைப்பற்றி எவ்வளவு புரிந்து கொண்டிருக் கிறாரோ எனக்குத் தெரியாது.

''நான் சாதி உயர்வு தாழ்வில் நம்பிக்கை அற்று இருப்பதைப் போன்றே, செல்வர் ஏழை என்னும் வேறுபாட்டிலும் பூற்றற்று இருக்கிறேன்.

நான் பிறவிபற்றி, சமுதாய ஏணியின் உச்சிப் படிக்கட்டில், இல்லாவிடினும் அதற்கு அடுத்து நிற்பதை, குற்றமாகவே கருதுகிறேன்.

''அதே போன்று எவரோ, எப்போதோ ஏற்படுத்தி விட்ட பொருளியல் முறை எனக்கு உதவியாக இருப்பதால், அதைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வதும் குற்றம் என்பது என்னுடைய உறுதியான முடிவாகும்.

''அப்படியானால், சாதியில் மேல் கீழ் பாராட்டாத ஒருவனோடு வாழ்க்கை நடத்துவதைப் போன்றே, செல்வத்தைப் பொருட்படுத்தாத, குவிக்க இசையாத ஒருவரோடு வாழ்க்கை நடத்த நேரிடும் என்பதை உம் தோழி உணர்ந்திருக்கிறாரோ என்னவோ?

''சமதர்ம சமுதாயத் தொடக்கத்தில் இருக்கக்கூடிய தனியாள் பொருளைக் காட்டிலும் அதிகமான செல்வம் என்னிடம் இருப்பது உண்மை.

'ஆனால் அது ஒழிய வேண்டுமென்று விழைகிற நான், அதைக் கொண்டு சராசரி மனிதனைக் காட்டிலும் வளமான வாழ்வு வாழ விரும்பவில்லை.

''சாதிவிட்டு வேறு சாதியில் திருமணம் செய்து கொள்ள விழையும் உம் தோழி, அதனால் தம் உறவினர்களின் தொடர்பை இழக்க நேரிடும்.

''அதோடு என்னை மணப்பதால் எளிய வாழ்க்கையையும் மேற்கொள்ள நேர்ந்தால் வருந்த மாட்டாரா?

''என் பெற்றோர் செல்வத்தை நம்பி வாழக்கூடாதென்ற உறுதிபூண்டுள்ள என் எதிர்காலம் எப்படியிருக்கும்?

''இன்று திங்களுக்கு எழுபத்தைந்து ரூபாய் ஊதியம் பெறுகிறேன். விரைவில் கல்வித் துறையில் இளந்துணை ஆய்வாளனாகப் போகலாம். அப்போது ஊதியம் அய்ம்பது ரூபாய்களாகும்.

''கல்வித் துறையின் கடைசிப் படிக்கட்டில் காலெடுத்து வைத்தால், மெல்ல உயரப் பல்லாண்டுகள் பிடிக்கும்.

''அப்படியென்றால், உம் தோழியும் என்னைப் போன்றே எளிய சிக்கன வாழ்க்கை நடத்த வேண்டும்.

''இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த பிறகு தான் என்னை மணக்க விரும்புகிறாரா?

''இளமையை மட்டும் கருத்தில் கொண்டு, மண வாழ்க்கையை ஏற்பது சரியல்ல. நீண்ட வாழ்க்கை வாழக்கூடும் என்று எண்ணி, முழுமையையும் மனக் கண்களில் கொண்டுவந்து, சிந்தித்து முடிவுக்கு வருவதே முறை.

''இதை உம் தோழிக்குச் சொல்லி, தேவைப்பட்டால் பதில் எழுதவும்'' இப்படிக் கடிதம் எழுதினேன்.

83. காந்தத்தைச் சந்தித்தேன்

எனக்கு வந்த பதில்

சில நாள்கள் சென்றன. என் கடிதத்திற்குப் பதில் வந்தது. எழுதியது எவர்? அதே தோழி தான்.

கடிதத்தின் உள்ளடக்கம் என்ன?

நான் என்னைப்பற்றி எழுதிய தகவல்கள் அவருடைய தோழிக்குத் தெரியும். பெரிய மனிதனாவேனென்றோ, பணக்காரன் ஆவே னென்றோ எதிர்பார்த்து என்மேல் விருப்பம் கொள்ளவில்லை.

''உங்கள் முற்போக்குக் கொள்கைக்காகவே உங்கள்மேல் பற்று ஏற்பட்டது. நீங்கள், வெற்றிலை, சிகரெட் போன்ற எவ்விதப் பழக்கத்திற்கும் அடிமையாகவில்லை என்பதையும் கவனித்திருக் கிறோம். இளமையின் குறும்பால், உங்களை முழுமையாக மதிப்பிடாமல், உங்கள்பால் பற்றுக் கொள்ளவில்லை.

'எனவே, காந்தம்மாவைப் பொறுத்த மட்டில் நீங்கள் வாழ நினைக்கிற எளிய வாழ்க்கைக்கு இசைந்தே, என்னை எழுதச் சொன்னார்.

'நீங்கள் காந்தம்மாவை நேரில் கண்டு பேச உடன்படுவீர்களா? அப்படிப் பேசினால், உங்களுக்கு உண்மை நிலை புலப்படலாம்.

'நேரில் பேச விரும்பினால் ஏதாவது ஒரு வேலை நாளில், சென்னை பல்கலைக்கழக தாவர இயல் ஆய்வுக்கூடத்திற்கு வந்து காணலாம். காலை பத்து மணி முதல் மாலை அய்ந்து மணிவரை அங்கிருப்போம்.

'இது அளவுக்கு மீறிய உரிமை கொண்டாடுவதாகத் தோன்றினால், எங்களை மன்னிக்க வேண்டுகிறோம்.'

மேற்படி கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். ஆனால் உடனே பதில் எழுதவில்லை. எழுதும்முன் ஆழ்ந்து சிந்தித்தேன். பல கோணங்களில் இருந்து சிந்தித்தேன்.

காந்தம்மாள் குடும்பம்

எளிய வாழ்க்கைக்கு உடன்படுவது உண்மையாக இருக்குமா? சாதாரண, நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த காந்தம்மாவிடம் படாடோபத்தைப் பார்த்ததில்லை.

அவருடைய அக்காள் குஞ்சிதமும் தங்கை வெங்கடேச அம்மாளும்கூட ஆடம்பரமாக இருந்ததைக் கண்டது இல்லை. மூவரில் எவருமே நகைதாங்கிகளாகக் காட்சியளித்ததில்லை.

மூவரும் தந்தை பெரியார் அறிவுரைப்படி, நகைப் பித்தும் சேலைப் பித்தும் இல்லாதவர்களாகத் தோன்றினார்கள். எனவே, எளிமை - அக்குடிப் பண்பு, வளர்ப்பு முறை என்று ஊகித்தேன்.

அது மட்டுமா? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பது முதல், குத்தூசி குருசாமியின் மாமனாரான, திருவாரூர் சுப்பிரமணியன் வீடுதான், சுயமரியாதை இயக்க முன்னணி வீரர்கள் பலருக்குச் சென்னையில் தங்குமிடம். திரு. சுப்பிரமணியம் பிடில் வாசிப்பதில் சிறந்தவர். சுயமரியாதை இயக்கத்தவரான பிறகு அதை விட்டுவிட்டார்.

'தமிழர் தலைவர்' என்னும் தலைப்பில் பெரியார் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் சாமி சிதம்பரனார். அதற்குக் காரணமானவர் குருசாமி. அதை வெளியிட்டது தமிழ் நூல் நிலையம். அதன் உரிமையாளர் திரு. சுப்பிரமணியம்.

வீட்டுக்கு விருந்தினர்கள் வரும்போது வீட்டிலுள்ள நகையொன்று அடகுக் கடைக்குப் போகும்; பல நாள்களுக்குப் பிறகே மீட்க நேரிடும். அதைப் பற்றி வீட்டுப் பெண்மணிகள் எவரும் முகங்கோணியது இல்லை, முணுமுணுத்தது இல்லை என்று நண்பர்கள் கூறியது, அவ்வப்போது என் காதுகளில் வீழ்ந்தது உண்டு.

எனவே, பிற்காலத்தில் அப்படி ஒரு நிலையேற்பட்டால் காந்தம்மா கலகம் செய்யமாட்டாரென்று நினைத்தேன்.

மற்றொன்றையும் எண்ணிப் பார்த்தேன். அது என்ன? மனைத்தக்க மாண்பு இருக்குமா என்பதே.

குடியானவரை மணப்பதற்கு இருக்க வேண்டிய மாண்பு ஒரு வகை; அரசியல் தலைவருக்கு மனைவியாக நினைப்பவருக்குத் தேவையான மாண்பு பிறிதொரு வகை. சாதாரண அரசு ஊழியரின் மனைவிக்குத் தேவைப்படும் மாண்பு மற்றொரு வகை.

அலுவல் பற்றி வருவோரிடம் அடக்கமாகப் பதில் கூறுவாரா என்பதை எண்ணினேன். சாந்தமே உருவானவர் காந்தம் என்று தோன்றியது.

சரி, எதிர்பாராத வகையில் நான் பெரிய அலுவலராகி விட்டால், அப்போது தொடர்பு கொள்வோரிடம் பண்போடு நடந்து கொள்ளத் தெரியுமா என்பது அடுத்த சிந்தனை. என்னிலும் அதிகம் கற்றுப் பண்பட்டிருப்பதால் பெருநிலைக்கும் ஏற்ற மாண்பு இருக்கும் என்று முடிவு செய்தேன்.

மற்றோர் அய்யப்பாடு என்னுள் எழுந்தது. அது என்ன?

நான் சிறிய அலுவலராகவே இருந்து விட்டால், இவ்வளவு படித்த காந்தம், வீட்டு வேலைகளை மனமுவந்து செய்வாரா, நொந்து கொள்வாரா?

இதற்கும் பளிச்சொன்று பதில் மின்னிற்று. என்ன பதில்?

சுப்பிரமணியத்தின் பெண்கள் மூவருமே படித்தவர்களாக இருப்பினும் வீட்டு வேலைகளைச் செய்ய எவரும் தயங்கியதில்லை.

ஆசிரியர் பணியில் சேர்ந்து, சம்பாதித்துக் கொண்டிருந்த குஞ்சிதம் உட்பட எல்லோருமே தாயார் தங்கம்மாளுக்கு உதவியாகப் பரிமாறுவதற்கோ இலைகளை எடுத்துப் போடுவதற்கோ, பிற வேலைகளைச் செய்வதற்கோ பின்னடைய மாட்டார்கள்.

சிலவேளை இதை நேரில் கண்டிருக்கிறேன். பலவேளை- அதுவும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின்போது - பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மாயூரம் எஸ்.வி. லிங்கம், பூவாளூர் அ. பொன்னம்பலனார், சாமி சிதம்பரனார் போன்றவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதை நான் கேட்க நேரிட்டதுண்டு.

அக் காலகட்டத்தில், அறிஞர் அண்ணா அடிக்கடி குருசாமி வீட்டிற்கு அதாவது சுப்ரமணியம் வீட்டிற்கு வருவதுண்டு.

அப்படி வருகையில் ஓய்வு கிடைத்தால் அண்ணா, சுப்பிரமணியம், குருசாமி, குஞ்சிதம் ஆக நால்வரும் நெடுநேரம் சீட்டாடிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்கு வேண்டிய தேனீர் போட்டுக் கொண்டே இருப்பது தங்கம்மாவின் வேலை. ஊற்றிக் கொண்டு வந்து கொடுப்பது பெண்களின் பொறுப்பு. இவற்றையும் கேள்விப் பட்டிருந்தேன்.

இரண்டொருமுறை வேலையாள் வராதபோது, அந்தப் பெண்கள் வீடு பெருக்கும்போது பார்த்திருக்கிறேன்.

எனவே வீட்டு வேலை செய்ய வேண்டியிருந்தால், அதை இழிவாகக் கருதமாட்டாரென்று எனக்கு நானே பதில் சொல்லிக் கொண்டேன்.

அதற்குப் பிறகும் பல நாள் பதில் எழுதாமல் இருந்தேன். அப்புறம் எழுதிய பதிலில், நான் கூடிய விரைவில் சென்னைக்கு வரும்போது, நேரில் வந்து காண்பதாக, அறிவித்திருந்தேன்.

பல நாள்கள் ஓடின. பிறகு நேரில் காண நாளும் நேரமும் குறித்து எழுதினேன். அக்கடிதமும் தோழிக்கே; அந்நேரம் பொருத்தமானது என்று பதில் வந்தது.

குறிப்பிட்ட நாள், குறிப்பிட்ட மணித்துளி புகழ் வாய்ந்த சென்னைப் பல்கலைக் கழகத் தாவர இயல் ஆய்வுக் கூடத்திற்குள் நுழைந்தேன்.

காந்தம்மாவும் தோழியும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். அங்கு வேறு யாரும் இல்லை. வாருங்கள் என்று வரவேற்றார்கள். நீண்ட அகன்ற ஆய்வு மேசையின் ஒரு பக்கம் அவர்கள் உட்கார, மறுபக்கம் நான் அமர்ந்தேன். அப்போது மாலை நாலரை மணி.

சில மணித்துளிகள் உப்புச் சப்பில்லாத கேள்விகள்.

'எப்போது சென்னைக்கு வந்தீர்கள்? எதுவரை இங்கே தங்குவீர்கள்? சென்னையில் எங்கே தங்குகிறீர்கள்?' இத்தகைய கேள்விகளுக்குப் பிறகு, என் குடும்பத்தைப்பற்றிக் கேள்விகள்.

அந்நிலையில், தோழி எழுந்து சென்று நழுவிவிட்டார். எனவே என் பெற்றோர்களை, உறவினர்களைப் பற்றிய நீண்ட விசாரணை நடந்தது.

என் நிலையை விளக்கினேன்

''என் தந்தை, தன்மான இயக்கக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். தாய், வைதீக, மரபுவழி வந்த அம்மை.

''இருப்பினும் திருமணம் என்று வரும்போது நான் கலப்புத் திருமணம் செய்து கொள்வதற்குத் தந்தை ஒருபோதும் உடந்தையாக இருக்க மட்டார் என்பது என் அச்சம்.

''பல நல்ல பெண்களை நான் ஒதுக்கி விட்டேன் என்பது அவருடைய கருத்து. அதனால் என்மேல் மிகுந்த கோபமும் எரிச்சலும் கொண்டு இருக்கிறார்.

''என் தம்பியர் மூவருடைய எதிர்காலம் பற்றியும் அவர் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அவர்கள் என்னைப் போன்றவர்கள் அல்லர். சாதுவானவர்கள். எனவே கலப்புத் திருமணத்திற்கு முன்வராது போகலாம்.

''நான் உறவு விலக்கத்தை எதிர் பார்த்தே கலப்புத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளேன். அப்படிச் செய்யும்போது, என்னைவிட என் தம்பிகள் நிலையே சங்கடமாகலாம். இவற்றை எல்லாம் எண்ணி, என் தந்தை என்னுடைய திருமணம், பிறந்த முதலியார் சாதியிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

''அவர் விருப்பம் நிறைவேறாது. நான் பதிவுத் திருமணம் செய்து கொண்டு பின்னர் செய்தித் தாள்களில் அறிவித்து விடவே எண்ணியுள் ளேன்'' என்றேன்.

'எப்போது திருமணத்தை வைத்துக் கொள்ள உத்தேசம்?'' என்கிற கேள்வி அடுத்து எழுந்தது.

''மாவட்ட ஆணைக்குழுவின் ஊழியனாக - பஞ்சயாத்து அலுவலாராக - இருக்கும்போது இப்படிப்பட்ட திருமணம் செய்து கொண்டால்; பழகியவர்களில் சிலராவது என்னைப் புண்படுத்த வெறுக்க- பகைக்க நேரிடலாம்.

''இளநிலை ஆய்வாளர் பதவி கிடைத்தால் அநேகமாகப் பிற மாவட்டங்களில்தான் வேலை பார்க்க நேரிடும்; பழகியவர்களோடு மோதும் நிலை ஏற்படாது'' என்று கோடு காட்டினேன்.

அப்போது, சிற்றுண்டி வந்தது. அதை உண்டோம்; எட்டி இருந்தே உண்டோம். பிறகு, ''ஆய்வு முடியட்டும்; அதற்குள் எனக்கும் புதிய பதவி கிடைத்து விடலாம்.

''அப்பொழுது மற்றதைப்பேசிக்கொள்ளலாம். இப்போதைக்கு இது எவருக்கும் தெரிய வேண்டாம்'' என்று கூறிவிட்டு, நெருங்காமலே விடை பெற்றுக் கொண்டேன்.

84. இரண்டாவது உலகப் போர்

கல்வித் துறைப் பணி

எதிர்பார்த்தேன்! ஏங்கினேன்! எதை? எதற்கு?

இளந்துணை ஆய்வாளராக என்னை நியமிக்கும் ஆணையை எதிர்பார்த்தேன். துணைப் பஞ்சாயத்து அலுவலர் பதிவியிலிருந்து விலகும் வாய்ப்பிற்கு ஏங்கினேன். அத்தகைய விலகல் வாய்ப்பு, இரட்டிப்புபலன் கொடுக்கக் கூடியதாகத் தோன்றியது.

உள்ளாட்சிகளைப் பாழ்செய்து வந்த கட்சிப் பூசல்கள் என்னைத் தாக்குவதற்கு முன்னரே, தப்பி வெளியேறிவிடலாம் என்பது மட்டுமே, முதலில் என் எதிர்ப்பார்ப்பு.

திருமண வாய்ப்புக்கும் அது துணையாகும் என்று தோன்றியபோது, எதிர்பார்த்துக் கொண்டிருந்த அலுவல் இப்போது மேலும் கவர்ச்சி யுடையதாகத் தோன்றிற்று.

'புகழ் என்னும் நல்லாள் தேடுவாரை விட்டு ஓடுவாள். பொருட்படுத்தாதவரைத் தேடித்தேடி வருவாள்' என்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஒருவர்.

நான் தேடிய கல்வித் துறையின் கடைசி நிலைப்பணியும் என்னை நெருங்க நெடுநாள் அஞ்சியது. ஆணை பிறப்பிக்க வேண்டியவர் மதுரைப் பிரிவுப் பள்ளிகளின் ஆய்வாளராகிய திரு. ஜி.எல். லோபோ என்பவர்.

அந்தக் காலத்திலும் பல ஆணைகள், செல்வாக்குடையோர் பரிந்துரைக்குப் பின்னரே நகரும். எனவே, கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்களின் உதவியை நாடினேன்.

அவரிடம் வேலை பார்த்த அய்யங்கார் ஒருவர் மதுரைப் பிரிவு அலுவலகத்தின் நிர்வாகி திரு. எம்.கே. வரதாச்சாரிக்குப் பரிந்துரைத் தார். அடுத்தடுத்து நினைவு படுத்தினதாகத் தகவல். ஆனால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

இரண்டாவது உலகப்போர்

இதற்கிடையில் 1939 ஆம் ஆண்டிலேயே இரண்டாவது உலகப்போர் தொடங்கிவிட்டது. பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள் ஓரணியில் நின்றன. போர் தொடுத்த ஜெர்மனிக்குத் துணையாக, இத்தாலி, ஜப்பான் ஆகியவை எதிரணியில் நின்றன.

ஜெர்மானிய நாட்டின் சர்வாதிகாரி, இட்லர், 'ஜெர்மானியர்கள் ஆரிய இனத்தவர்; உயர்ந்த இனத்தவர்கள். ஆகவே உலகையாள உரிமை உடையவர்கள்' என்னும் நச்சுக் கருத்தினைத் தூவிப் பயிரிட்டிருந்தான்.

ஜெர்மானியப் படைகளை விரிவு படுத்திக் கடுமையான பயிற்சி கொடுத்த பின்னர் போரைத் தொடங்கினான். உலகம் முழுவதையும் பிடிக்கத் திட்டம் இட்டிருந்தான்.

இதை எதிர்பாராதிருந்த சில நாடுகள் மளமளவென்று சரிந்தன. பிரான்சு வீழ்ந்தது. பிரிட்டனுக்கு ஆபத்து மூண்டது. பிரிட்டனுக்கு வாழ்வா, சாவா என்னும் பயங்கர நெருக்கடி 'சட்' என்று உருவாயிற்று.

'ஆண்டிக்கு ஏன் அம்பாரக் கணக்கு?' என்று எண்ணித் திகைக்கிறீர்களா? சற்றுப் பொறுத்து இருங்கள்.

நெடுங்காலத்திற்கு முன்னர் நடந்ததாகக் கூறப்படும் குருச்சேத்திர பாரதப் போரின்போது தெற்கில் தொலைவில் ஆண்ட தமிழ் மன்னன், படைகளுக்குச் சோறளித்ததாகப் படித்திருக்கிறோம்.

அன்றைக்கே, போர் என்பது போரிடும் இரு சாராரை மட்டு மல்லாது, மற்றவர்களையும் பாதித்தபோது இருபதாம் நூற்றாண்டுப் போர்கள் எவர் எவரையெல்லாமோ பாதித்தன; குழந்தை குட்டிகளைப் பாதித்தன. பிறக்கப் போகும் குழந்தைகளுக்கும் கேடு விளைவித்தன. இது நேரடி விளைவு. அதன் பின்விளைவுகள் எத்தனையோ!

அலுவல்களில் இருப்போர் பலர், பட்டாளத்தில் சேர்ந்து விடுவார்கள். எனவே பல இடங்கள் கலியாகும். உனக்கு விரைவில் கல்வித்துறை வேலை கிடைக்கும். அது மட்டுமல்ல; பதிவு உயர்வுகளும் துரிதமாகலாம்' இப்படி என்னிடம் கூறியவர்கள் உண்டு.

அத்தனை பேருமே நல்வாக்குச் சொல்லும் குடுகுடுப்பைக் காரர்களாக இல்லை; சிலருடைய கணிப்பு வருமாறு:

''போர் வந்து விட்டது; சண்டைச் செலவிற்கே முன்னுரிமை தருவார்கள். எனவே மற்றச் செலவினங்களில் கடுமையான வெட்டு வரலாம்.

''சிக்கனம் செய்ய வேண்டுமென்பதற்காக. இருக்கிற பதவிகளைக் கூட குறைக்கக்கூடும். அதனால் நீ கல்வித் துறையில் சேர்வது தள்ளிப் போகலாம். அந்த வாய்ப்பே கை தவறிப் போக நேரிடலாம்.

''நாங்கள் இப்படிச் சொல்வதைப் பற்றி வருத்தப்படாதீர்கள். எதற்கும் ஆயத்தமாயிருப்பதே நல்லது என்பதற்காகச் சொல்லுகிறோம்'' இப்படிக் கூறியவர்களுக்குக் குறைவில்லை.

உரிமையோடு கிண்டல் செய்யக் கூடிய என் நண்பரிகளில் சிலர்.

''ஏனப்பா! உன் பெயரையும் என் பெயரையும் சொன்னால் வருவதுகூடத் திரும்பி ஓட்டமாக ஓடிவிடுமே! நமக்கு அவ்வளவு அதிர்ஷ்டக் கட்டை!'' என்று பரிதாபப்படுவார்கள்.

மூச்சுவிடும் காற்றிலே இரண்டறக் கலந்து, இந்திய சமுதாயத்தை எலும்பற்ற கோழைகளாக, செயலற்ற பொருள்களாக மாற்றிவிட்ட, 'அதிர்ஷ்டக் கட்டைக் கோட்பாடு' அடிக்கடி என் காதுகளில் வீழ்ந்தது.

அத்தகைய பேச்சுகளைப் பொருட்படுத்தாது உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொள்வேன்.

'ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்று, பிள்ளைப் பருவத்தில் படித்தது அவ்வப்போது நினைவிற்கு வரும்; ஊன்று கோலாகி, நடத்திச் செல்லும்.

ஆசிரியர் பயிற்சியில் காந்தம்மாள்

அப்படி ஊர்ந்து கொண்டிருக்கையில் காந்தம்மா, ஆய்வுப் பணியை முடித்து விட்டார். அதற்கான கட்டுரையையும் படைத்து விட்டார்.

அடுத்து என்ன செய்வது?

அன்றைக்கும் அது எளிதில் பதில் கூறவியலாத சிக்கலான கேள்வியாகும்.

அக்காலத்தில் கல்லூரிகள் மிகமிகச் சிலவே. அவற்றில் பதவிகள் காலியாவது பல ஆண்டுகளுக்கு ஒரு முறையே.

ஆசிரியப் பயிற்சி பெற்று எல்.டி. பட்டம் பெற்றவர்களே, கல்லூரி ஆசிரியர்களாகப் பணிபுரிய முடியும் என்பது அக்கால விதிமுறை.

எனவே, காந்தம்மா ஆசிரியப்பயிற்சியில் சேரவேண்டுமென்று அவருடைய பெற்றோர்கள் விரும்பினார்கள்.

இக்காலத்தைப் போல, அன்று பெண்களுக்குப் பல வேலை வாய்ப்புகளில்லை. மருத்துவப் பணி, ஆசிரியப்பணி இவ்விரு வாய்க்கால்களையே தேட வேண்டும். வேறு வாய்ப்பின்மையால் காந்தம்மா வெல்லிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரிக்கு மனுப்போடப் போவதாக, தோழியின் கடிதத்தின் வாயிலாக, எனக்குத் தகவல் வந்தது. அந்நடவடிக்கைக்கு ஒப்புதல் கூறிப் பதில் அனுப்பினேன்.

அக்காலத்திலும் ஆசிரியப் பயிற்சிக்குப் பெண்களுக்குக்கூட இடம் கிடைத்தல் கடினம்.

வெல்லிங்டன் சீமாட்டி கல்லூரியின் அன்றைய முதல்வர் செல்வி ஜெராடு என்ற ஆங்கில அம்மையாரை அடுத்து அடுத்துப் பார்த்து, தொடர்ந்து நச்சரித்து வந்ததால், காந்தம்மாவிற்கு இடம் கிடைத்தது, மகிழ்ச்சியோடு பயிற்சி பெறத் தொடங்கினார்.

தோழர் குருசாமி வீட்டிற்கு அவ்வப்போது சென்று வரும் பழக்கம், என் அலுவல் பற்றி ஏற்பட்டது. பின்னர், கொள்கை அடிப்படையில் வளர்ந்தது.

காந்தம்மாவை ஆய்வுக் கூடத்தில் கண்டு பேசிய பிறகு அப்படியே தொடர்ந்தது. அது குறையவும் இல்லை; கூடவும் இல்லை.

நான் அங்கே இருந்து தோழர் குருசாமியோடு உரையாடும்போது நானும் காந்தமும் ஏதிலார் போலப் பொது நோக்கினைக் கையாள்வோம்.

என் வாழ்க்கை ஆமையென நகர்வதால், உலகமும் அதே நடையில் செல்லுமா? செல்லாது; செல்லவில்லை.

பிரிட்டனுக்கு இந்திய அரசு ஆதரவு வைசிராயின் அறிவிப்பு

இரண்டாம் உலகப்போர் மூண்டது; கோடி கோடி மாந்தரின் அழிவிற்குக் காரணமாயிருந்தது. இந்திய அரசியலில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அப்போரில் இந்திய அரசு, பிரிட்டனுக்கு ஆதரவாக நிற்கும் என்று அறிவிக்கப்பட்டது.

எவரால் அறிவிக்கப்பட்டது?

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் தலைவராக இருந்த வைசிராயால் அறிவிக்கப்பட்டது.

வைசிராயின் அறிவிப்பு முறையா? இக்கேள்வியே இந்திய அரசியல் கடலில் கொந்தளிப்பை எழுப்பிற்று.

இந்திய மக்களையும் அவர்களுடைய பிரதிநிதியாக அமைச்சு நடத்தியவர்களையும் கலந்துகொண்டு, அவர்களுடைய இசைவைப் பெறாது அப்படி அறிவித்தது முறையல்ல என்பது அனைத்திந்திய காங்கிரசின் நிலை.

காங்கிரசின் கட்டளைக்கு ஏற்பப் பல மாநிலங்களிலும் நடைபெற்று வந்த காங்கிரசு அமைச்சரவைகள், பதவிகளிலிருந்து விலகிவிட்டன. மாநிலங்கள் ஆளுநர்கள் ஆட்சிக்கு வந்தன.

சென்னை மாகாண ஆளுநர், ஆறாவது முதல் எட்டாவது வகுப்பு வரை கட்டாயம் இந்தி படிக்க வேண்டும் என்ற திட்டத்தை எடுத்து விட்டார். விரும்புகிறவர்கள் மட்டுமே படிக்கலாம்; அதற்கு உதவியாகும் பொருட்டு, ஏற்கெனவே நியமிக்கப்பட்ட இந்தி ஆசிரியர்கள் அவ்வப்பள்ளிகளில் தொடர்ந்து பதவிகளில் இருப்பார்கள் என்பது ஆளுநரின் ஆணை.

அம்மாற்றம், தமிழ்ப் பொது மக்களிடையே நிறைவை வளர்த்தது.

நீதிக் கட்சியின் பதினாறாவது மாகாண மாநாடு

இரண்டு ஆண்டு காலம் கட்டாய இந்தி எதிர்ப்பில் சிக்கியிருந்த நீதிக்கட்சிக்குத் தன் கவனத்தைப் பிற நடவடிக்கைகளின்மேல் திருப்ப முடிந்தது.

கட்சியின் 16ஆவது மாகாண மாநாடு திருவாரூரில் கூடியது. நீதிக்கட்சியின் தலைவராக விளங்கிய பெரியார் ஈ.வெ. ராமசாமி தலைமை தாங்கினார். 1940ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3, 4 தேதிகளில் நடைபெற்ற அம் மாநாட்டிற்குத் திரு. பொலம்பாக்கம் முத்து மல்லாவும் நானும் சென்று வந்தோம்.

உள்ளாட்சித் துறை ஊழியர்கள்கூட அரசியல் மாநாடுகளில் கலந்து கொள்வது முறையல்ல. இந் நெறி அன்று புரியாததால், மாநாட்டிற்குச் செல்லும் தவறுக்கு ஆளானேன்.

கூட்டம் பெரிது; பேச்சுகள் சிறந்தன. விருந்தோம்பலைப் பற்றிக் கேட்கத் தேவையில்லை. உணர்வுகள் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடின.

முதல் மூன்று முடிவுகள் இரங்கலைத் தெரிவித்தன; எதற்கு? சிலருடைய மறைவுக்கு.

நீதிக்கட்சியின் தூண்களில் ஒருவராகவும் தஞ்சை மாவட்ட ஆட்சிக்குழுவின் தலைவராகவும் பல்லாண்டு சட்டமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் விளங்கியவர் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம். அவர் புகழ்பெற்ற செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இருப்பினும் எளியோராடும் இனிமையாகப் பழகும் இயல்பினர் சமுதாய ஏணியின் கீழ்ப்படிக்கட்டுகளில் கிடந்து தவித்த தாழ்த்தப் பட்டோர் படிப்புப் பெற உதவியவர்.

தஞ்சை மாவட்டத்தில் அக்காலத்தில் சமுதாய எழுச்சியை ஊட்டியவர்களில் சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் முன்னே நின்று வழி காட்டி வந்தவர்.

அவர், லண்டனில் இருந்த இந்தியா மந்திரியின் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

அப்பொறுப்பினை அவர் ஏற்றுக் கொள்வது பார்ப்பனரல்லாதார் நலத்திற்கு நல்லது என்று கருதப்பட்டது.

எனவே, அவர் லண்டனுக்குப் பயணமானார். சென்னையிலிருந்து பம்பாய்வரை இரயிலில் சென்ற சர். பன்னீர்செல்வம் அங்கிருந்து வானவூர்தியில் லண்டனுக்குப் புறப்பட்டார்.

அது ஓமான்கடலைக் கடக்கும்போது, கடலுள் வீழ்ந்து விட்டது. தமிழ்ச்சமுதாயம் தமது சிறந்த பாதுகாவலர் ஒருவரை இழந்து தவித்தது.

சர். பன்னீர் செல்வம் மறைவைக் குறித்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உருக்கமான பாடலொன்றைப் பாடினார்.

மாலையிட்ட மங்கை நல்லாளை, மணவாளர் மார்புறத் தழுவும் வேளை உயிர் நீத்தது போன்றிருந்ததாகப் பாடினார்.

அந்த இரங்கற் படாலில்,

'சிங்கத்தை முறியடிக்கும்
திறம் இல்லையென்றாலும்
சிங்கந்தான் பொங்குற்றே
வீழ்ந்த தென்றால்
நரிமனம் பூரிக்காதோ'

என்று அவர் பாடியது தமிழர் உள்ளங்களையெல்லாம் உருக்கின.

திருவாரூரில் நடந்த நீதிக்கட்சியின் 16ஆவது மாகாண மாநாட்டில் சர். ஏ.டி. பன்னீர்செல்வத்தின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தபோது எண்ணற்றோர் கண்கள் குளமாயின.

அவர்களில் பலர் அப் பெரியவரோடு நெருங்கிப் பழகியவர்கள்; அவர் தயவால் நன்மை பெற்றவர்கள்.

மாநாட்டில் இருந்த என் கண்கள் குளமாவானேன்? அவரோடு பழக்கம் இல்லாவிடினும் உணர்ச்சியால் கட்டுண்டு. அவரைச் சென்னை மையப் புகை வண்டி நிலையத்தில் இருந்து வழியனுப்பி யவர்களில் நானும் ஒருவன்.

மாநாட்டின் இரண்டாவது இரங்கல் முடிவும் என் உள்ளத்தை உலுக்கியது. தாலமுத்து, நடராசன் என்ற இரு காள்முளைகள், கட்டாய

இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்றார்கள். சிறையில் நோய்வாய்ப் பட்டார்கள். அடுத்து அடுத்து மாண்டார்கள்.

அவ்விரு தியாகிகளில் இறுதி ஊர்வலத்தில் நானும் நடந்து சென்று அஞ்சலி செலுத்த வாய்த்தது.

அவர்கள் பற்றிய இரங்கலைத் தெரிவிக்கும்போது என் கண்கள் அருவிபோல நீரைச் சொரிந்தன.

மூன்றாவது இரங்கலில் மூவர் இடம் பெற்றனர். சென்னை இராகவலு, திருவாரூர் குப்புசாமி, அமீது என்பவர்கள் மறைந்து விட்டார்கள்.

மூவரில் முதல்வர் எனக்குப் பழக்கமானவர்; சென்னையில் இந்தி எதிர்ப்புத் தொண்டர்களுக்குத் திருப்தியாகப் பணியாற்றியவர். செல்வருங்கூட.

அவர் இப்போதைய அண்ணா சிலைக்கு அருகில் இயங்கி வந்த கோமள விலாஸ் ஓட்டலுக்குக் காப்பி சாப்பிட வருவார். அங்குதான் அவருடன் பழக்கம்.

சாதியொழிப்பைப் பற்றி அடிக்கடி பேசுவோம். ஆதிதிரா விடச் சமுதாயத்தைச் சேர்ந்த அவருக்கு, சமுதாயச் சமவெளியை உருவாக்கு வதில் இருந்த ஆர்வம் இயற்கையானது. தன்மான இயக்கத்தில் தொடக்கத்தில் பல்லாண்டுகள் 'தாழ்த்தப்பட்டவர்கள்' தாராளமாகப் பங்கு கொண்டார்கள். அவர்கள் ஒதுங்கி இருக்கவில்லை.

அவர்களில் செயல் வீரராகத் திகழ்ந்த இராகவலுவின் மறைவு என்னைத் துக்கத்தில் ஆழ்த்தியது.

85. திருவாரூர் மாநாட்டு முடிவுகள்

1940 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் நான்காம்நாள் திருவாரூரில் பெரியார் ஈ.வெ. ராமசாமியின் தலைமையில் நடந்த நீதிக்கட்சியின் பதினாறாவது மாகாண மாநாட்டில் நிறைவேறிய மூன்று முடிவுகளைப் பற்றி, ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

மேற்கொண்டு முப்பது முடிவுகள் நிறைவேறின. அவற்றை எல்லாம் தொடர்ந்து எழுதி, உங்களைத் தொல்லைப் படுத்த மாட்டேன்.

இருப்பினும் சிலவற்றை உங்கள் நினைவிற்குக் கொண்டுவருவது வரலாற்று உண்மையின் கட்டாயமாகிறது.

பாட நூலில் தூய தமிழ்

திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டின் இருபத்தைந்தாவது முடிவு:

''இம்மாநாடு, உயர்தரக் கலாசாலைகளில் போதிக்கப்பட்டுவரும், பூகோளம், விஞ்ஞானம், சரிதம் ஆகிய பாடங்களை வடமொழி கலவாத தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக வெளிவரும் பாட புத்தகங்களைக் கொண்டே போதிக்க வேண்டுவதுடன், அதற்கென ஏற்படுத்தப் பட்டிருக்கும் கமிட்டியிலும் பார்ப்பனரல்லாத தமிழ்ப் புலவர்களை நியமிக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது,'' இது, உண்மையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பற்றியதாகும்.

இம்முடிவில், பிறமொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இது முந்திய தலைமுறையின் பழகு தமிழ். வளரும் தமிழ், கூடியமட்டில் தனித்து இயங்க வேண்டுமென்பது வரும் தலைமுறையின் குறிக்கோளாகும். அதற்கு வழிவிடுவது மேற்படி முடிவாகும்.

'ஸ்ரீ'க்குப் பதில் 'திரு'

இன்று 'திரு' என்னும் சொல்லை அநேகமாக எல்லோரும் பயன்படுத்தக் காண்கிறோம். என்றுமே அப்படி வழக்கில் இருந்ததா? இல்லை.

சென்னை மாகாணத்தில் 1937 இல் காங்கிரசு ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு, பற்பல அடைமொழிகளால் பெரியவர்களை அழைத்து வந்தோம்.

காங்கிரசு ஆட்சி அரசின் அஞ்சல்களில் எல்லோர்க்கும் 'ஸ்ரீ' என்னும் சொல்லைப் பயன்படுத்தும்படி ஆணை இட்டது.

இதுவும் எதிர்ப்பைக் கிளப்பிற்று. இதைப் பற்றித் திருவாரூர் மாநாட்டின் முடிவு வருமாறு:

''தமிழ் நாட்டு மக்களுக்கு மரியாதை வார்த்தைக்காக 'ஸ்ரீ' என்கிற ஆரிய வார்த்தையை வைத்து, தமிழை அலட்சியப்படுத்தி, தமிழர்கள் மனத்தையும் காங்கிரசு ஆட்சியார் புண்படுத்தியிருப்பதால், அதை மாற்றி 'திரு' என்கிற வார்த்தையைச் சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரை வேண்டிக் கொள்கிறது''

இதிலும் சில பிறமொழிச்சொற்கள் இருப்பது அன்றைய நடைமுறையின் தன்மையாகும்.

அரிஜனுக்குப் பதில் ஆதிதிராவிடர்

அக்காலத்தில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் சமுதாயத்தின் கடைசிப் படிக்கட்டுகளில் இருந்து தவித்த தாழ்த்தப்பட்டோர்க்கு, பெரியாரின் இயக்கமே பெரிய பாதுகாவல். தாழ்த்தப்பட்டோருக்காக

அவ்வியக்கம் போராடிய அளவு, வேறு எவ்வியக்கமும் போராட வில்லை. இது மிகையல்ல.

எனவே, திருவாரூர் மாநாட்டில் 'தாழ்த்தப்பட்டோர்' பற்றி மூன்று முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் ஒன்று அவர்களை எப்படி அழைப்பது என்பது பற்றியதாகும்.

''திராவிட நாட்டு ஆதிதிராவிட மக்கள் 'அரிஜனங்கள்' என்ற பெயரால் அழைக்கப்படுவதை மாற்றி, 'ஆதிதிராவிடர்'கள் என்ற பெயராலேயே அழைக்கப்பட வேண்டுமென்று சர்க்காரையும் பொது மக்களையும் வேண்டிக் கொள்கிறது'' என்பதாகும்.

மற்றோர் முடிவு மாநில, மைய சட்டமன்றங்களுக்கு ஆதிதிரா விடர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியது.

தனித் தொகுதியை எதிர்த்துக் காந்தி அடிகள் உண்ணாவிரதம்

இலண்டனில் நடந்த வட்ட மேசை மாநாட்டில், டாக்டர் அம்பேத்காரும் வேறு சில 'ஒதுக்கப்பட்டோர்' தலைவர்களும் பொதுத்தேர்தல்களில் தங்களுக்குத் தனித்தொகுதி முறை வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

அண்ணல் காந்தியார் அதைக் கடுமையாக எதிர்த்தார். 'தனித்தொகுதி முறை சில ஆயிரம் ஆண்டுகளாக ஆறு கோடி இந்தியர்களை ஒதுக்கி வைத்திருக்கும் கொடுமையை அரசியல் அமைப்புப்படி உறுதிப் படுத்தி விடும்; எல்லா இந்தியர்களும் இணைந்து வாழும் நிலைமை முளைப்பதற்கே வழியில்லாமற் செய்துவிடும்' என்பது காந்தியாரின் அச்சம்.

எனவே, தனித் தொகுதி கோரிக்கையை எதிர்த்தார்.

இருப்பினும் ஆங்கில ஆட்சி, தனித்தொகுதி முறையை ஏற்றுக் கொள்ளும் சூழல் உருவாவதாகக், காந்தியாருக்குப் புலப்பட்டது.

அதை எதிர்த்து, காந்தியடிகள், உண்ணாநோன்பினை மேற் கொண்டார்.

தனித்தொகுதி முறையைக் கைவிட்டு விட்டு, காந்தியாரின் உயிரைக் காப்பாற்றும்படி, டாக்டர் அம்பேத்காருக்கு இந்தியாவின் எல்லா மாநிலங்களில் இருந்தும் ஏராளமான தந்திகள் பறந்தன; செய்தித் தாள்கள் வாயிலாகக் கோரிக்கைகள் குவிந்தன.

இந்திய விடுதலை இயக்கத்தின் தலைவராம் காந்தியாரின் இன்னுயிரைக் காப்பாற்றும் பொருட்டு, அண்ணல் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் உரிமையைப் பாதுகாப்பதை விட்டுக் கொடுத்தார். காந்தியடிகள் உண்ணாநோன்பினைக் கை விட்டார்.

அப்போது ஏற்பட்ட உடன்படிக்கைக்குப் பெயர் பூனா உடன் படிக்கை என்பதாகும்.

அது தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதிக்குப் பதில் 'ஒதுக்குத் தொகுதி'க்கு வழி செய்தது.

வேறுபாடு என்ன?

இவ்விரு முறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?

தனித் தொகுதி முறையில், வேட்பாளர் தாழ்த்தப்பட்டோராக இருப்பதோடு, வாக்காளர்கள் அனைவருமே தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பார்கள்.

ஒதுக்குத் தொகுதியில் வேட்பாளர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்டோர் களாக இருப்பார்கள். வாக்காளர்களோ எல்லாச் சாதிகளையும் சமயங்களையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

தனித்தொகுதி முறை கிடைத்திருந்தால், தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள் 'சாதி இந்துக்களை' நாடாமலே, தேர்ந்தெடுக்கப்படும் நிலை இருக்கும்.

தங்கள் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படும் நிலை இருக்கும் போது தங்கள் பிரிவினர்களுக்காக, உறுதியாகவும் உரத்தும் சட்ட மன்றங்களில் குரல் கொடுக்கும் வாய்ப்பும் பெருகும்.

மாறாக, ஒதுக்குத் தொகுதியில் பிறருடைய வாக்குகளையும் பெற்று வெற்றி பெறவேண்டிய நெருக்கடியில் உள்ள உறுப்பினர்கள், கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ளும் தாட்சணிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

எனவே, சாதிக் கலவரங்கள் மூண்டு, பழங்குடி மக்கள், அடி உதைபடும்போது, கொலை செய்யப்படும்போது, கற்பழிக்கப்படும் போது, ஒதுக்குத் தொகுதி உறுப்பினர்கள் பெயரளவில், கண்டனங் களை, குறைபாடுகளை வெளிப் படுத்திவிட்டு, வெறும் வாக்குறுதிகளுடன் நிறைவுகொள்ள வேண்டியவர்களாகி விடுவார்கள், என்பது அப்பேத்காரின் மதிப்பீடு.

இவ்விரு நிலைகளையும் கருத்தில் கொண்ட திருவாரூர் மாநாடு,

''ஆதிதிராவிடர் சமுதாயத்திற்குச் சர்க்காரால் அளிக்கப்பட்ட தனித்தொகுதி காப்புமுறை, பூனா ஒப்பந்தத்தால் அழிக்கப்பட்டு, அச் சமுதாயத்துக்குச் சரியான பிரதிநிதி வர முடியாமல் செய்யப்பட்டு விட்டதால், இனிவரும் தேர்தல்கள் யாவற்றிற்கும் தனித்தொகுதி முறையையே ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது'' என்று கூறியது.

காந்தியார் கோட்சேயால் சுட்டுக் கொல்லப்படாமல் இருந்து இருந்தால், அவர் மேலும் பல்லாண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கக் கூடும்.

அப்போது அவர், தீண்டாமை, அதன் துணைத் தீங்குகள் முதலியவற்றை எதிர்த்துப் போராடி, பெருமளவு முனை மழுங்கச் செய்திருக்கலாம்.

அவர் மறைந்ததால், அம்பேத்கார் அஞ்சியபடி, ஒதுக்குத் தொகுதி போதிய காப்பாக இல்லாமல் போய்விட்டது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ எண்ணிக்கை, ஆதிதிராவிடர் களுக்கும் திராவிடர்களுக்கும் மிகவும் குறைவாக இருப்பதால், மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றபடி, பதவி ஒதுக்கீடுகளை உயர்த்தும் படியும் ஓர் முடிவு செய்யப்பட்டது.

திருவாரூர் மாநாட்டின்போது, சென்னை மாகாணத்தின் நான்கு மாவட்டங்களில் மட்டுமே மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. மதுவிலக்கு முறையை எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்தும்படி அம்மாநாடு வற்புறுத்திற்று. அப்போது, நான் கொண்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை.

கலப்புத் திருமணமே சாதிகள் ஒழிய வழி

சாதிமுறை, இந்தியாவில் மட்டுமே நடைமுறையில் இருக்கிறது. இந்தக் கொடுமை, பார்ப்பனரல்லா தாரிடையேயும் ஊடுருவியுள்ளது. அதைப்பற்றியும் திருவாரூர் மாநாட்டில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அது என்ன?

''ஆரியச் சூழ்ச்சியாலும் ஆரிய சமய ஆதாரங்களாலும் திராவிட சமூகத்திடை நுழைக்கப்பட்ட சமுதாய உயர்வு தாழ்வு வேற்றுமைகளை வேரோடு களைந்தெறிய வேண்டுமென்றும் திராவிடர்களுக்கு உள்ளாகவே, இன்று காணப்படும் உயர்வு தாழ்வுகளும் நீக்கப்பட வேண்டுமென்றும், இந்த வித்தியாசங்களை ஒழிப்பதற்காகத் தகுந்த வழிகளைக் கையாளத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் இம்மாநாடு வற்புறுத்துகிறது'' என்பதாகும்.

இதையொட்டிய உரைகளில் கலப்பு மணம் வலியுறுத்தப் பட்டது.

'கொண்டால், கொடுத்தால் உறவு' என்பது பழமொழி. ஆகவே பல சாதிகளுக்கிடையில் கொள்வினை கொடுப்பினை நடக்க வேண்டு மென்று முழங்கப்பட்டது. அது மீண்டும் என் நெஞ்சில் ஆழப்பதிந்தது.

கையில் இருக்கும் 'நோட்டுகள்', 'கள்ள நோட்டுகள்' என்று தெரிந்த உடனே, அவற்றைக் கொண்டுபோய் உரிய அதிகாரியிடம் ஒப் படைப்பதே முறை அதைப் புழங்கவிடுவது தவறு.

அந்நோட்டுகளைத் திருட்டுத்தனமாக அச்சிட்டவர், 'நான் அல்ல' என்று சொல்லிவிட்டு வாளாவிருப்பது நாணயமான செயல் அல்ல என்று என் எண்ணத்தில் பட்டது.

ஆரியர் புகுத்தியது என்று பழி சொல்லிவிட்டு, நாம் சும்மாயிருப்பது தவறு என்று எண்ணினேன்.

அது எப்படிச் செயல்பட்டது என்று கூறுவதற்கு முன்னர், இந்த மாநாட்டில் நடந்த சிரிப்பிற்கிடமான நிகழ்ச்சி யொன்றைக் குறிக்க விரும்புகிறேன்.

சோழவள நாட்டின் விருந்தோம்பலைப் பற்றிக் கேட்க வேண்டுமா? சிறப்பான விருந்துகளை உண்டோம்.

திருவாரூர் நகராட்சித் தலைவராக விளங்கிய, பா.வா. கோபால்சாமி முதலியார் என்பவர், தம் செலவில் ஒவ்வோர் வேளையும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு விருந்தளித்தார்.

ஒரு பகல் உணவின்போது, நான் அவருடைய விருந்தில் கலந்து கொள்ள நேர்ந்தது. அப்பெரியவரே வந்திருந்து நீண்ட பந்திகளைக் கவனித்தார்.

சுவையான உணவு வகைகளை வயிறு நிறைய உண்டேன். பரிமாறுவோர் பலாப்பழப் பாயாசத்தை இருமுறை திணித்தார்கள்.

இரண்டாம் முறை குடித்து முடிக்கும் வேளை, பா.வா. கோபால்சாமி முதலியார் என் எதிரே வந்து நின்றார்.

என்னை அவரக்குத் தெரியும். எவ்வளவு சொல்லியும் கேட்காது, மூன்றாம் தொன்னை பாயாசத்தை ஊற்ற வைத்தார். அங்கிருந்து நகரமால் நின்றபடியே என்னைக் குடிக்கவும் வைத்தார். திக்கு முக்காடியபடியே குடித்தேன்.

சில மணித்துளிகளில் விருந்து முடிந்தது. நான், கைகழுவும் வேளை, அதிகமாக உண்டதால், வாந்தியெடுத்து விட்டேன்; பலருடைய பரிதாபத்திற்கு ஆளானேன்.

பா.வா. முதலியாரும் என்னிடம் வந்து, ''மருத்துவரை அழைத்து வரட்டுமா?'' என்று கேட்டார். ஆனால், மருந்து இல்லாமலே சமாளித்ததேன்.

திருவாரூர் மாநாட்டின்போது, 'என் சாதி' என்று சொல்லப்பட்ட பல நண்பர்களைக் கண்டேன்.

பெரும்பாலோர் என் திருமணத்தைப் பற்றிக் கேட்டு நச்சரித்தார்கள்.

இங்கும் அங்கும் ஏற்ற பெண்கள் இருப்பதாகச் சொல்லி, எனக்கு உதவ முன் வந்தார்கள்.

என்னுடைய ஊமைத்தனம் அவர்களிடம் எரிச்சலை வளர்த்தது. இப்படி எரிச்சல் கொண்டவர்கள் நாளுக்கு நாள் பெருகக் கண்டேன்.

திருமணத்தைத் தள்ளிபோடப் போட, என் மேல் எரிச்சல் கொள்வோர் எண்ணிக்கை பெருகும்.

பள்ளி ஆய்வாளர் பதிவி கிடைக்கும் மட்டும் தள்ளிப் போடுதல் கடல் அலை ஓய்ந்த பிறகு தலை மூழ்கலாம் என்று தள்ளிப் போடுவதற்கு ஒப்பாகக்கூடும்.

ஆனது ஆகட்டும் என்று முன் முடிவு செய்துள்ளபடி, காந்தம்மாவைக் காலந் தாழ்த்தாது மணஞ்செய்து கொள்வது அறிவுடைமை என்று தோன்றியது.

இத்தகைய கருத்துகளோடு திருவாரூரிலிருந்து மதுராந்தகம் வந்தேன்.

சில நாள்கள் என் திருமணம் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

பிறகு, குத்தூசி குருசாமியாருக்குக் கடிதம் எழுதினேன்.

அவருடைய மைத்துனி காந்தம்மாவைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் உரியவர்கள் ஒப்புதல் கேட்டு உடனே தெரிவிக்கும் படியும் வேண்டிக்கொண்டேன்.

86. பெரியார் ஒப்புதல் பெற்றேன்

பெரியாரைக் கண்டேன்

நான் தோழர் சா. குருசாமிக்கு எழுதிய கடிதத்தில் ஏற்கெனவே, நான் காந்தம்மாவின் ஒப்புதலைப்பெற்றதைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

நாள்கள் சில நகர்ந்தன. அண்ணன் சா. குருசாமியிடமிருந்து பதில் வந்தது. ஆவலோடு உறையை உடைத்துப் பார்த்தேன். என்ன பதில் வந்தது?

'உங்கள் கடிதத்தை வீட்டில் அனைவரிடமும் காட்டினேன். எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கும் என்று தோன்றவில்லை. எனினும் தந்தை பெரியாரைக் கலந்து ஆலோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வரலாம் என்று நினைக்கிறோம். தந்தை பெரியாருக்கு இது பற்றித் தகவல் கொடுத்திருக்கிறேன். பதில் கிடைத்ததும் எழுதுகிறேன்.'

உப்புச் சப்பு இல்லாத பதிலாகத் தோன்றிற்று,

காலம் முறைப்படி நகர்ந்தது. சில நாள்களில் மற்றோர் கடிதம் வந்தது.

அது என்ன சொல்லிற்று.

'தந்தை பெரியார் சென்னைக்கு வருகிறார். ஒரு நாள் மட்டுமே தங்குகிறார். அப்போது உங்களைக் கண்டு, பேச விரும்புகிறார்

வசதிப்படுமானால், அன்று காலையே, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலையில் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு வாருங்கள்'

இப்படி எழுதிய சா.குருசாமி, பெரியார் சென்னையில் இருக்கும் நாளைக் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பிட்ட நாளன்று, காலை எட்டு மணிக்கெல்லாம் சிற்றுண்டி அருந்திவிட்டு, திருவல்லிக்கேணி போய்ச் சேர்ந்தேன். பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் குருசாமியின் வீட்டில் இருந்தார். பல தோழர்கள் உடன் இருந்தார்கள்.

இயக்கப் பணிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பகல் உணவுக்கு முன்பு, சிறிது நேரம் வெளியில் அலுவல் பற்றிச் சென்று வந்தார்.

உணவருந்தும் போதும் சில தோழர்கள் இருந்ததால், என் திருமணம் பற்றிய பேச்சை எடுக்கவில்லை.

மாலைவரை தனிமை கிடைக்கவில்லை. ஈரோட்டு இரயிலுக்குப் புறப்படும் நேரம் நெருங்குகையில், பெரியார் அவர்கள் என்னைப் பார்த்து,

''தம்பீ! தனியாகப் பேசவேண்டும் என்று இவ்வளவு தொலைவு வரவழைத்தேன். என்னமோ! தாட்சணியம் வந்தவர்களுக்குப் பதில் சொல்லி அனுப்பவதிலேயே பொழுது போய்விட்டது. உங்களுக்கு இடைஞ்சல் இல்லையென்றால், என்னோடு அதே இரயிலில் அரக்கோணம்வரை வரலாமா? நான் தனியாகத்தான் திரும்புகிறேன். வண்டியில் பேசி முடிவு செய்யலாமா?'' என்று பெரியார் கேட்டார்.

பெரியார் அவர்களின் பேச்சுக்கு மறுப்புச் சொல்லவில்லை. அவரோடு இரயில் ஏறினேன். அப்போது மூன்றாம் வகுப்பு என்று ஒன்று உண்டு.

புகைவண்டியில் முடிவுசெய்தோம்

எவ்வளவு பொருள் வசதி இருந்த போதிலும் பெரியார், மூன்றாம் வகுப்பில்தான் சுற்றுப் பயணம் செய்வார்.

ஒரு முறை நண்பர் ஒருவர், ''அய்யா! இப்படிப் போகலாமா? குறைந்தது இரண்டாம் வகுப்பிலாவது போகலாமே'' என்று கெஞ்சினார்.

''நான்காம் வகுப்பு இல்லாததால், மூன்றாம் வகுப்பில் போகிறேன். சராசரி மனிதன் அனுபவிப்பதைவிட அதிகம் அனுபவிப்பது சரியல்ல'' என்று பெரியார் பதில் சொன்னார்.

அத்தகைய பெரியாரோடு நான் சென்னை மையப் புகைவண்டி நிலையத்திலிருந்து, அரக்கோணம் சந்திப்புவரை பணம் செய்தேன்.

வண்டி புறப்பட்டதுமே பெரியார் அவர்கள் பேச்சைத் தொடங்கினார்.

''எஸ்.ஜி. (சா. குருசாமி) எழுதியிருந்தார். படித்ததும் மெத்த மகிழ்ச்சி. உங்களைப் பற்றிக் காந்தம்மா வீட்டில் எல்லோருக்கும் நல்ல மதிப்பு.

''நீங்கள் காந்தம்மாவை மணம் செய்துகொள்வதற்கு உங்கள் பெற்றோர் இசைவார்களா?'' என்று பெரியார் பரிவுடன் கேட்டார்.

''இசைய மாட்டார்கள்'' என்றேன்.

''அப்புறம் எப்படி?''

''என்னையே நம்பித்தான் திருமண ஏற்பாடு செய்யவேண்டும்'' என்றேன்.

''அப்படிச் செய்தால் எந்த உறவினர்களாவது வருவார்களா?''

''என் சுற்றத்தாரில், என் தந்தையே மிக முற்போக்குவாதி; அவரே ஒப்புக்கொள்ளாதபோது மற்றவர்கள் துணை வருவார்களென்று எதிர்பார்க்க முடியாது'' என்றேன்.

''ஆமாம்! உங்கள் அப்பா ஏன் ஒப்புக் கொள்ள மாட்டாரென்று அஞ்சுகிறீர்கள்? உறவில் ஏதாவது பெண் பார்த்து வைத்திருக்கிறாரா?'' என்று பெரியார் என்னை மடக்கினார்.

''இப்போது இல்லை; முன்பு பணக்கார உறவினர் ஒருவர். பத்தாவது வரை படிக்க வைத்த பெண்ணை, நிறையப் பணத்தோடு எனக்குக் கொடுக்க முன்வந்தார். எங்கள் உறவில் அவரே பெரியவர். அதை மறுத்துவிட்டேன்.

''அதனால் என் தந்தைக்கு என் மீது சினம். பிறகு என் சாதியில் பல பெரிய இடங்களில் இருந்து பெண் கொடுக்க முன் வந்தார்கள்.

''பணமும் வேண்டாம்; செல்வாக்கும் வேண்டாமென்று சொல்லிக் கொண்டு இருக்கிற என் மேல், அவரைப் போன்ற சூழ்நிலையில் வளர்ந்தவர்களுக்கு அடங்காத வெகுளி ஏற்படுவது இயற்கை'' என்று அடக்கத்துடன் கூறினேன்.

''நான் எவர் வழியாகவாகிலும் அவருக்குத் தூது அனுப்பிப் பார்க்கட்டுமா? பெற்றோர் இசைவு பெற்றுக் கலப்புத் திருமணம் செய்து கொண்டால், மேலும் சிறப்பாக இருக்குமே!'' என்றார்.

என் முடிவு

''மன்னிக்கணும் அய்யா! நீங்கள் சொல்வது மெய்யே. ஆனால், என் தந்தையிடம் அது பலிக்காது. என் விருப்பம் அவர் காதுக்கு எட்டினால், எப்படிப் போய் முடியுமென்று சொல்ல முடியாது'' என்றேன்.

''அப்ப, அவர்களுக்குத் தெரிவிக்காமல் ஏற்பாடு செய்துவிடலா மென்று நினைக்கிறீர்கள்?'' இப்படிப் பெரியார் அவர்கள் கேட்டார்.

''ஆம்! காதும் காதும் வைத்ததுபோல் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். திருமணத்தைப் பதிவு செய்வதோடு நிறுத்திக் கொள்ளலாமென்று நினைக்கிறேன்'' என்றேன்.

''அந்த யோசனை தவறானது அல்ல. ஆனாலும், குஞ்சிதம் திருமணத்தைப் போல் காந்தம் திருமணத்தையும் சிறப்பாகச் செய்து வைத்தால் நம் கொள்கை பரவ வாய்ப்பாகும்.

''அக்காவின் திருமணத்திற்குச் செலவு செய்ததுபோல தங்கையின் திருமணத்திற்கும் குறைந்தது ஈராயிரம் ரூபாய்களாவது, நானே செலவு செய்து திருமணத்தைச் சிறப்பாகச் செய்து வைக்கிறேன். அதற்கு ஒப்புக்கொள்ளலாம் அல்லவா!'' என்றார் பெரியார்.

''அய்யா! தங்களுக்குக் குறுக்கே சொல்லுகிறேன் என்று தயவு செய்து நினைக்க வேண்டாம்!

''பதினோரு ஆண்டுகளுக்கு முன்பு குஞ்சிதம் குருசாமி திருமணமே, இயக்கத்தின் சார்பில் நடந்த முதல் கலப்புத் திருமணம்; புரோகிதமற்ற திருமணம்.

''அன்றைக்கு ஓரளவு விளம்பரம் சரிதான். அதற்காகத் தாங்கள் இரண்டாயிரம் ரூபாய்கள் செலவு செய்ததும் பொருத்தமாக இருக்கலாம்.

''அதற்குப் பிறகு எண்ணற்ற கலப்புத் திருமணங்களும் புரோகித ஒழிப்புத் திருமணங்களும் நடந்துவிட்டன.

''என் பிரிவைச் சார்ந்தவர்கள் பன்னிரண்டு பேர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

''சீர்திருத்தத் திருமணம் சிக்கனத் திருமணமாகவும் இருக்க வேண்டும் என்று அய்யா அடிக்கடி சொல்லுவீர்களே! அதை நடைமுறைப்படுத்த எனக்கு நல்ல வாய்ப்புக் கிட்டியிருக்கிறதே! இதை நழுவ விடலாங்களா!'' என்று பணிவுடன் வினவினேன்.

''நீங்கள் சொல்கிறது புரிகிறது. வெறும் பதிவுத் திருமணமாக முடிக்க விரும்புகிறீர்கள். நண்பர்களுக்காவது அழைப்புக் கொடுக்க வேண்டாமா? எவ்வளவு பேருக்கு அழைப்பு அனுப்ப எண்ணம்?'' என்று பெரியார் கேட்டார்.

''அழைப்பு அச்சடிப்பதாகவோ, அனுப்புவதாகவோ இல்லை. ஒரு நாளைக்குமுன் அய்ந்தாறு அன்பர்களை நேரில் அழைப்பேன். அதற்குக் காரணங்கள் இரண்டு.

''ஒன்று, அழைப்புப் போனால், பல உறவினர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு தொல்லை கொடுப்பார்கள்.

''நான் உறவினர்களிடமும் பரிவு உடையவன். அதனால், நான் கடைசி நேரத்தில் ஊசலாடக் கூடாது.

''அடுத்த காரணம் நான் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கை, என் தாய் தந்தையர் உள்ளத்தைப் புண்படுத்தும். அவர்கள் இருவர் பேரிலும் நான் அளவு கடந்த அன்பு கொண்டிருக்கிறேன். என் தாயின் நிலையை நினைத்தால் வேதனையாக இருக்கிறது.

''அவர் என்னைப்பெற்ற இன்பத்தைத் தவிர வேறு எவ்விதப் பயனும் என்னால் இதுவரை பெறவில்லை.

''இளமையின் இயற்கையால் திருமணச் சிக்கல் ஏற்பட்டிருந்தால் அதைச் சமாளிப்பது ஒருவகை.

''நானோ கொள்கையின் அடிப்படையில் செயல்படுகிறேன்.

''சாதி மனிதனாகப் பிறந்த நான், சாதியற்ற மனிதனாக வாழ்வ தென்று முடிவு செய்துவிட்டபின், கலப்புத் திருமணம் இன்றியமையாத தாகும்.''

''இதனால் எனக்கு மனநிறைவு ஏற்படும் அளவு பெற்றோர்களுக்கு வேதனையை விளைவிக்கிறேனென்ற கவலையும் கலந்துள்ளது. அவர்கள் வருத்தத்தைப் பெருக்கும் வகையில், அழைப்பினை அனுப்ப என் மனம் ஒப்பவில்லை'' என்று தீர்மானமாகக் கூறினேன்.

''சங்டம்தான்! பெற்றோரிடம் பாசம் மிகுந்திருக்கும்போது இது தவிர்க்க முடியாத பெரிய சங்கடமே!

''சரி! உங்கள் விருப்பப்படியே அழைப்புக்கூட இல்லாமல், பதிவுத் திருமணமாகவே ஏற்பாடு செய்து விடுவோம். ஒரு சிறிய யோசனை; தாலி மட்டும் கட்ட ஒப்புக்கொள்ளுங்கள்'' என்றார் பெரியார்.

''அந்த அடிமை அடையாளம் எதற்குங்க! அய்யா வழியை முழுமையாகப் பின்பற்ற நினைப்பவனுக்கு வேறு பக்கம் கைகாட்டுகிறீர்களே!'' என்றேன்.

''அந்தச் சமதாயம் பெரிதும் ஏமாற்றப்பட்ட சமுதாயம். தாலி கட்டும் அள்வு இசைந்தால் சிறிது நிறைவு இருக்கும்.

''குருசாமி திருமணத்தில் நான் சொன்னேனென்று குஞ்சிதத்திற்குத் தாலி கட்டினார். இரண்டொரு ஆண்டுக்குப் பிறகு குருசாமி கருத்துப்படி குஞ்சிதம் குருசாமி அதைக் கழற்றி வைத்துவிட வில்லையா?

''அதைப்போல காந்தமும் செய்து விடலாம். திருமணத்தின்போது தாலிகட்டுவதற்கு இசையுங்கள்'' என்றார்.

''மன்னிக்கணும் அய்யா! தாலிகட்டுகிற வேலையும் வேண்டாம். பி' கு கழற்றுகிற வேலையும் வேண்டாம்.

''தனித் திருமணச் சட்டத்தின்படி எங்கள் இருவருடைய திருமணங் களையும் பதிவு செய்வதற்குமேல் ஒன்றும் செய்ய வற்புறுத்தாதீர்கள், அய்யா!.

''அவ்வேளை, தாங்கள் தயவுசெய்து உடன் இருக்க வேண்டும். தங்களுக்கு வசதியான நாளைச் சொல்லுங்கள்; அன்று பதிவு; செய்து விடலாம்.''

''நாள் கிழமை பார்க்கப் போவது இல்லை, மகிழ்ச்சி'' என்று சொல்லிக்கொண்டே தம்முடைய சொக்காய்ப் பையில் இருந்த நாள்குறிப்பை எடுத்துப் புரட்டிப் பார்த்தார்.

''சட்டப்படி, பதிவுத் திருமணத்திற்கு ஒரு திங்கள் முன்னறிவிப்பு வேண்டும். நான் இன்னின்ன நாள்களில் சென்னைக்கு வர இயலும். அந்நாள்களில் ஒரு நாளை முடிவு செய்துகொண்டு, தகவல் கொடுங்கள். நான் வந்து விடுகிறேன். கடைசியாக ஒன்று,

''பெண்ணுக்கு என்ன நகை போடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேள்வியில் முடித்தார் பெரியார் அவர்கள்.

''அய்யா நான் என்னைக் கொடுப்பது போதாதா? எந்தவிதச் சிறிய நகையும் போட ஒப்பமாட்டேன். பெண் வீட்டாரிடமிருந்தும் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. புது வேட்டி, புதுச்சேலை முதலி யனவும் தேவையில்லை'' என்று அழுத்தமாகக் கூறினேன்.

பெரியார் என்னைப் பொறுத்தருளினார்.

''சரி; உங்கள் விருப்பம்; பெண் வீட்டாரோடு கலந்து கொண்டு, நான் குறிப்பிட்ட நாள்களில் ஒன்றில் திருமணத்தைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்துவிடுங்கள். அதற்கு உரிய முன் அறிவிப்பைப் பதிவாளருக்குக் கொடுத்து விடுங்கள்'' என்று பெரியார் கூறினார்.

சிறிது போதில் அரக்கோணம் வந்துவிட்டது. புகைவண்டி நின்றது.

தந்தை பெரியார் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு போய் செங்கற்பட்டுக்குப் போகும் வண்டிக்காகக் காத்திருந்தேன்.

87. மாப்பிள்ளை அழைப்பு

பாராட்டுக் கூட்டத்திற்கு இசைந்தேன்

அரக்கோணத்தில் இருந்து பொழுது விடியப் புறப்படும் வண்டியில் செங்கற்பட்டுவரை சென்றேன்.

அங்கு வண்டி மாறி, மதுராந்தம் சென்று அடைந்தேன். அப்புறம்?

பெரியாரோடு கலந்துரையாடியதன் சுருக்கத்தைத் தோழர் குருசாமிக்குத் தெரிவித்துக் கடிதம் எழுதினேன்.

பெரியார் கொடுத்த தேதிகளை அறிவித்தேன். அதில் ஒரு நாளைக் கோடு இட்டு அந்நாளில் திருமணப் பதிவை வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினேன்.

சில நாள்களில் பதில் வந்தது. பெரியாரிடமிருந்து விரிவான கடிதம் வந்ததாக அது அறிவித்தது.

அந்தக் கடித்திலும் பெரியார் சென்னைக்குவர வசதிப்படும் நாள்களைக் குறித்து எழுதியிருந்தாராம்.

அதோடு, திருமணம் பதிவான இரண்டொரு நாள்களில் எங்களுக்குப் பாராட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்யும்படியும் எழுதி இருந்தாராம்.

பாராட்டுக் கூட்டத்தைப் பற்றி நான் எழுத மறந்துவிட்டேன். ஏன்? இளமை தொட்டு எனக்கு என்னைப்பற்றிய சிந்தனை குறைவு. என்கருத்துகள், கொள்கைகள் பற்றியே என் சிந்தனைகள் சுழலும். அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்குத் தூண்டில் முட்களாக, என்னைப் பாராட்டுவதை, பிற்காலத்தில் அடிக்கடி, நான் ஏற்றுக் கொண்டது உண்டு. அவற்றால் நான் மகிழ்ந்தது சிறிதே. அவற்றைப் பொதுநலத்திற்கு ஆதாயமாக்கியதே என்னுடைய வரலாறு.

அதைக்கூட அறியாத தமிழர்கள் என் மீது அழுக்காறு கொண்டு பொருமியது உண்டு. இன்றும் பொருமுவார் உண்டு. அது எனக்கு அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. ஏன்?

தமிழரின் அழுக்காறு வரம்பற்றது என்பதை என் இளமைப் பருவத்தே உணர்வதற்குப் பல வாய்ப்புகள் இருந்தன. எனவே அதற்கான விலையை நானும் கொடுக்க நேரிடும் என்று எனக்குத் தோன்றியது.

அதற்கு என்னை நானே பக்குவப்படுத்திக் கொண்டிருந்தேன். பெரியார் ஆலோசனையில் ஒன்றை நான் ஏற்றுக்கொண்டதைத் தோழர் குருசாமிக்குத் தெரிவிக்கத் தவறிவிட்டேன்.

நான் ஏற்றுக்கொண்ட பெரியாரின் ஆலோசனை என்ன?

''கலப்புத் திருமணம் சாதி ஒழிப்புக்கு உயிர் நாடி. அத்தகைய திருமணங்கள் நடப்பதை நன்றாக விளம்பரப்படுத்த வேண்டும்.

''அதுவும் பட்டதாரிகள் அப்படிச் செய்வதைப் பெரிதுபடுத்தினால், மேலும் பலர், அந்த எதிர்நீச்சலுக்குத் துணிந்து வருவார்கள்.

''கலப்புத் திருமணம் செய்து கொள்வோரைப் பாராட்டக் கூட்டம் நடத்தினால் அது பிறருக்கு ஆர்வம் ஊட்டும். இயக்கக் கொள்கையைப் பரப்பும் பொருட்டு, நீங்கள் பாராட்டுக் கூட்டத்திற்கு ஒப்புக் கொள்ளுங்கள்'' என்று பெரியார் அவர்கள் பயணத்தின் போது என்னிடம் கூறினார்.

எத்தனைக்குத்தான் 'முடியாது' என்று சொல்ல முடியும்? பாராட்டுக் கூட்டத்திற்கு இசைந்தேன். பெரியார், அதை மறக்காமல் தெரிவித்திருக்கிறார்.

திருமணத்தில் சிக்கல்

தோழர் குருசாமி, காந்தம்மாவும் அவர் வீட்டார் அனைவரும் திருமணப் பதிவிற்கு உடன்படுவதாக எழுதினார்.

கூடிய விரைவில் நான் நேரில் சென்னைக்கு வந்தால், திருமணப் பதிவாளருக்கு முறைப்படி முன் அறிவிப்பு கொடுத்துவிடலாம் என்று கடிதத்தில் குறிப்புக் காட்டினார்.

நீண்ட நாள்கள் தாமதம் செய்யவில்லை. முன்கூட்டித் தகவல் கொடுத்து விட்டுச் சென்னைக்குச் சென்றேன்.

வழக்கம் போல என் தம்பி சிவானந்தம் வேலைசெய்த கடையில் தங்கினேன்.

அங்கிருந்து திருவல்லிக்கேணி நெடுஞ்சாலைக்குச் சென்றேன். தோழர் குருசாமியை அவரது இல்லத்தில் கண்டு விரிவாகப் பேசினேன்.

அப்போது காந்தம்மா வெல்லிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரியின் மாணவி. ஆசிரியப் பயிற்சியில் சேரும் மாணவிகளுக்கு ஒரு நிபந்தனையிருந்தது.

அது என்ன?

பயிற்சி முடியும்வரை மாணவி, திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று எழுத்து வாயிலாக உறுதி அளிக்க வேண்டும்.

காந்தம்மாவும் அவ்வுறுதி அளித்து விட்டே ஆசிரியப் பயிற்சியில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

இது எனக்குத் தெரியாது.

எங்கள் திருமணத்தைப் பற்றிப் பெரியாரோடு பேசி அவர் ஒப்புதல் பெற்றது செப்டம்பர் திங்களில்.

ஆசிரியப் பயிற்சியோ ஏப்ரல் திங்களில்தான் முடியும். அதுவரை திருமணத்தை ஒத்திப்போட, பெண் வீட்டார் விரும்பவில்லை.

முயற்சி திருவினையாக்கும். முயற்சியில் நம்பிக்கையுடைய என் மாமனார் திருவாரூர் சுப்பிரமணியம் தம் மூத்த மகள், ஏற்கெனவே ஆசிரியையாகப் பணிபுரிந்து கொண்டிருந்த திருமதி. குஞ்சிதத்தை அழைத்துப்போய் வெல்லிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரி முதல்வர், செல்வி ஜெராட், என்னும் ஆங்கில மாதுடன் பேசினார்.

அந்த அம்மையார், பொறுமையாகக் காது கொடுத்தார்.

அவருக்குச் சட்டதிட்டம் தெரிந்த அளவு, மனித இயலும் இந்திய வாழ்க்கை முறையும் தெரிந்திருந்தது.

ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற ஓர் இந்தியப் பெண்மணிக்குத் தக்க கணவன் கிடைப்பதில் உள்ள அருமைப்பாடும் நன்கு தெரியும். எனவே, வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்னும் போக்கிலே பேச்சை முடித்து விடவில்லையாம்.

சிந்தித்துச் சொல்வதாகப் பதில் கூறி அவர்களை அனுப்பினாராம்.

சில நாள்களுக்குப்பின் என் மாமனார், மீண்டும் கல்லூரி முதல்வர் செல்வி ஜெராட்டைக் கண்டார்.

''இத்தகைய அனுமதி கொடுப்பது, வழக்கமில்லை. இருப்பினும் இம்முறை விதிவிலக்குத்தர எண்ணுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில், திருமணம் செய்து கொண்டாலும் 'ஆசிரியைப் பயிற்சி முடியும் வரை கருவுறுவதில்லை' என்று உறுதியளிப்பதாயின், அனுமதி கொடுப்பேன். அவ்வுறுதியை மீறினால், கல்லூரியிலிருந்து நீக்க நேரிடும்'' என்று கனிவையும் கண்டிப்பையும் கலந்து கொடுத்தார் கல்லூரி முதல்வர்.

வேறு வழியின்றி அதற்கும் உறுதி அளித்து, திருமணம் ஒப்புதல் பெற்றதாகக் கேள்விப் பட்டேன்.

திருமணமாகியும் பிரம்மசாரி

திருமணம் பதிவானாலும் இல்வாழ்க்கையைத் தள்ளிவைக்க வேண்டும் என்பது புரிந்தது. ஏமாற்றமோ, அதிர்ச்சியோ கொள்ளவில்லை.

'எதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டும்' என்று சாரண இயக்கம் எனக்குக் கற்றுத் தந்திருந்தது.

'திருமணமாகியும் பிரம்மசாரி' என்னும் நாட்டு வழக்கும் தெரியும்.

அதுவரை அது நமக்கல்ல, என்று எண்ணி இருந்தேன்.

அவ்வேளை, அந்நோன்பு எனக்கும் என்பது புலப்பட்டது. 'பிற்கால வாழ்க்கையில், எத்தனையோ நோன்புகளை மேற்கொள்ள வேண்டி யிருக்கும்; அவற்றிற்கு இது ஒத்திகை' என்பது மட்டும் அப்போது தெரியாது.

கல்லூரி முதல்வர் விதித்த கட்டுப்பாட்டைக் கண்டு மிரளவில்லை. ஏற்கெனவே முடிவு செய்தபடி, திருணமத்தைப் பதிவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்தோம்.

அடுத்த நாள், கடற்கரைப் புகை வண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள திருமணப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றோம்.

'தனித் திருமணச் சட்டம்' என்று ஒன்று உண்டு. அதன்படி திருமணத்தைப் பதிவு செய்து கொள்வோர், வெவ்வேறு சமயங்களை, சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; சமய நம்பிக்கை அற்றவர்களாகவும் இருக்கலாம். அச்சட்டத்தை யொட்டி, முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு வந்தோம்.

வீட்டில் பேசிக் கொண்டிருக்கையில், எனக்கு எத்தகைய உடை எடுக்கலாம் என்று கேள்வி பிறந்தது.

''நான் பட்டு அணிவதில்லை; சரிகைக் கரை வேட்டி கட்டு வதில்லை; கைத்தறி ஆடையே அணிவது வழக்கம். இருப்பினும் திருமணத்தையொட்டி எனக்குப் புத்தாடை எடுக்க வேண்டாம். உங்கள் பெண்ணுக்கு ஏதாகிலும் எடுத்துக் கொடுப்பதில் நான் குறுக்கே நிற்மாட்டேன்'' என்று பதில் கூறினேன்.

'வாழ்வில் ஒரு நாளாகிய திருமண நாளின் நினைவாக, எனக்கு ஒரு நல்ல 'சூட்' தைத்துக் கொடுக்க விரும்பினார்கள். அதற்கு இசைய வைத்து விட்டார், குத்தூசி குருசாமியார்.

திருமண முன்னறிவிப்பைக் கொடுத்த பிறகு, நான் என் வேலையைப் பார்க்க மதுராந்தகத்திற்குத் திரும்பி விட்டேன்.

என் ஏற்பாடு, கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது. எவரிடமும் என் திருமணத்தைப்பற்றிச் சொல்லவில்லை.

அரசு ஆணை வந்தது

அப்படிச் சில நாள்கள் ஓடின. எதிர்ப்பார்த்து எதிர்பார்த்து, கடைசியில் மறக்கவும் முயன்ற வேளையில் அரசு ஆணை ஒன்று வந்தது.

என்னை, செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டாரத்தின் கல்வித் துறை இளந்துணை ஆய்வாளராக, நியமித்த ஆணை அதுவாகும்.

அது நிலையான இடமல்ல. அங்கிருந்தவர் விடுப்பில் சென்றதால் ஏற்பட்ட தற்காலிகப் பணியாகும்.

இருப்பினும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கல்வித்தொண்டு, அதிலும் நாட்டுப்புறங்களில் கல்வித் தொண்டு செய்யக் கிடைத்த அவ்வாய்ப்பினைப் பெரிதாக மதித்தேன்.

இருந்த வேலையிலிருந்து சம்பளமில்லாத விடுப்புப் பெற்றுக்கொண்டு, புதிய அலுவலில் சேர முடிவு செய்தேன்.

அதற்கு அனுமதி கோரி, மாவட்ட ஆட்சிக்குழுவிற்கு விண்ணப்பித்தேன். அந்த அலுவலகத்திற்கு நேரில் சென்று வேண்டினேன்.

என்னை உதவி ஊராட்சி அலுவலர் பணியிலிருந்து விடுவிப்பதில் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை. உரிய ஆணையைத் தந்தார்கள்.

என் இடத்தில் என் கல்லூரி நாள்கள் தொட்டு எனக்கு நெருங்கிய நண்பராக விளங்கும் திரு.டி.எம். கண்ணபிரானை நியமித்தார்கள். அது எனக்கு மிகவும் உதவியாயிற்று.

நான் குறிப்பிட்ட நாளில், அவர் என்னிடம் பணியை ஏற்றுக் கொண்டார். குறிப்பிட்ட இடத்திற்கு வந்து, அலுவலைப் பெற்றுக் கொண்டார்.

இதற்கிடையில், நான் அலுவலக ஏடுகள், அறிக்கைகள் ஆகியவற்றைக் கடைசி நாள்வரை எழுதி முடித்தேன்.

அவற்றைப் பாதுகாப்பாக ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினேன். வீட்டையும் பெட்டியையும் என் கடைநிலை ஊழியர் திரு.மேகவர்ணத்திடம் ஒப்படைத்தேன். அவருக்கும் என் திருமண ஏற்பாடு தெரியாது.

மாப்பிள்ளை அழைப்பு

மதுராந்தகம் பகுதியில் ஒருவருக்கு மட்டும் காதும் காதும் வைத்தாற் போல் அச்செய்தியை முன்னரே அறிவித்தேன்.

அவர் எவர்? பொலம்பாக்கம் முத்துமல்லா ஆவார். அவருக்கு முழு விவரத்தையும் சொன்னேன்.

அவர் திருமணத்தன்று என் மாமனார் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்.

திருமணத்திற்கு முன் நாள் பிற்பகல் இரயில் ஏறி, மாலைப் பொழுது சென்னையை அடைந்தேன்.

எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் தோழர்கள் குத்தூசி குருசாமியார், பூவாளூர் பொன்னம்பலனார் ஆகிய இருவரும் வந்து என்னை அழைத்துக்கொண்டு போனார்கள்.

அதோடு முடிந்தது என்னுடைய 'மாப்பிள்ளை அழைப்பு!'

88. சாதியற்ற மனிதனானேன்!

பொழுது புலர்ந்தது. திருமண நாள் வந்தது; அது பஞ்சாங்கம் பார்த்த திருமண நாள் அன்று.

உரியவர்களின் வசதிக்கேற்பக் குறிப்பிட்ட நாள் வந்தது.

மேளம் கொட்டவில்லை. இசை பொழியவில்லை, இருப்பின் என்?

தமிழர்தம் மானங்காக்க முரசு கொட்டிய தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி திருமண இல்லத்திற்கு வந்து சேர்ந்தார். பெரியாரின் பெரியார், ஈ.வெ. கிருஷ்ணசாமி உடன் வந்தார்.

ஈ.வெ. கிருஷ்ணசாமி

இவரைப் பற்றி இங்கே சில சொல்லுதல் பொருந்தும். திருவாளர் ஈ.வெ. கிருஷ்ணசாமி சித்த மருத்துவர். தமது செலவில் இலவச மருத்துவம் செய்த நல்லவர்; வைதீக வைணவர்.

பின்னர் பெரியாரின் வழியில் - பகுத்தறிவுப் பாதையில் - தொடர்ந்து நடை போட்டவர். பெரியாருடைய சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்.

1933 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பெரியாரும் அவரது தங்கை கண்ணம்மாளும் கைது செய்யப்பட்டார்கள்.

அரச வெறுப்பு

பொது உடைமைக் கொள்கையைப் பரப்பியதாகக் குற்றம் சாட்டப்பட்டார்கள். எதிர்பார்த்தபடி இருவருக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது.

பெரியாரின் பொறுப்பினை ஏற்றுப் புரட்சி என்னும் வாரஇதழுக்கு ஆசிரியராக ஈ.வெ.கி. செயல்பட்டார்.

'பெரியார் பெற்ற தண்டனை பற்றிப் பொங்கும் தமிழர்கள், அவ்வுணர்ச்சிக்குச் செயல் உருவம் கொடுக்க வேண்டும். ஊர் தோறும் சமதர்மச் சங்கங்களை அமைப்பதின் வாயிலாக அடக்கு முறைக்குப் பதில் கொடுக்க வேண்டும்' என்னும் கருத்துப்பட, தன் பெயரில், தலையங்கங்கள் தீட்டி வந்தார்.

இயக்கத் தொண்டர்களை அரவணைத்து ஊக்கப்படுத்தினார்.

பெரியார் சிறைப்பட்டிருந்தபோது சென்னையில், நாத்திக மாநாடு நடந்தது. தோழர் மா. சிங்காரவேலர் தலைமை ஏற்றார். காஞ்சிபுரம் நாத்திக குப்புசாமி என்பவர் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். 31-12-1933 இல் நடந்த அந்த மாநாட்டில் ஈ.வெ.கி. கலந்து கொண்டார்.

அப்போது அமைக்கப்பட்ட நாத்திகக் கழகத்தில் துணைத்தலைவராக இருந்து செயல்பட்டார்.

பெரியாரின் பெரியாராகிய ஈ.வெ.கி. தன்மான இயக்கத்திற்கும் சமதர்ம இயக்கத்திற்கும் பகுத்தறிவு வளர்ச்சிக்கும் போற்றத்தக்க தொண்டாற்றினார்.

சமதர்மக் கருத்துகளைப் பரப்பியதற்காக, ஈ.வெ. கிருஷ்ணசாமியும் சிறைப்பட்டார். தம்பியின் வழியைப் பின்பற்றி அல்லல் பட் பெருமகனார், ஈ.வெ.கி. ஆவார்.

திருமணத்திற்கு வந்தோர்

தன்மான இயக்கத்தின் செயல் வீரர்களில் இருவராக விளங்கியவர் கள் மாயூரம் எஸ்.வி. லிங்கமும் பூவாளூர் அ. பொன்னம்பலனாரும்.

அவர்கள் என் மாமனார் திருவாரூர் சுப்பிரமணியத்திற்கு மிகவும் வேண்டியவர்கள். அவர்கள் முன்னாளே வந்து சேர்ந்தார்கள். பெண் வீட்டார் சார்பில் இன்னும் எவர் வந்தார்?

காந்தம்மாவின் தாய்மாமன் திரு சண்முகசுந்தரம், தஞ்சை மாவட்டம் திருக்கறுகாவூரில் இருந்து வந்தார். கல்லூரித் தோழியர் சிலர் வந்தனர்.

சென்னையிலே தங்கியிருந்த உறவினர்களாகிய திருவாளர்கள் தி. இரா. ஸ்ரீதரன், தி.இரா. முரளிதரன் அவர்களுடைய பாட்டானர் திரு. கோபாலகிருஷ்ணபிள்ளை ஆகியோர் வந்தனர்.

தந்தை பெரியார் வந்தது தமிழ் நாடே வந்திருப்பது போன்ற மகிழ்ச்சியை ஊட்டியது.

என் சார்பிலும் சிலர் வருகை புரிந்தார்கள். ஏற்கெனவே கூறியது போல் பொலம்பாக்கம் முத்துமல்லா வந்தார். என்னிடம் மதுராந்தகம் கோட்ட துணைப் பஞ்சாயத்து அலுவலர் பதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டிய திரு டி.எம். கண்ணபிரான் வந்தார். மீஞ்சூர் திரு. பக்தவத்சலம், சர்.பி.டி. ராசன், திரு.ஓ.வி. அளகேசன் ஆகியோரின் மைத்துனரும் எனக்கு நெருங்கிய நண்பருமான திரு. தி. கோ. சீனிவாசன் வந்தார். திரு. பா. ச. கைலாசமும் வந்திருந்து மகிழ்வூட்டினார்.

என் உறவினர் எவராவது வந்தார்களா? ஆம் வந்தார்கள்.

அப்போது என் மூத்த தம்பி சிவானந்தம் சென்னையில் ஒரு மளிகைக்கடையில் வேலை பார்த்து வந்தான். அடுத்த இரு தம்பிகளாகிய நடராசன், திருநாவுக்கரசு ஆகியோர் முறையே கிண்டி பொறியியல் கல்லூரியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் மாணவர்களாக இருந்தார்கள். நேரில் அழைத்ததின் பேரில் அவர்கள் வந்தனர்.

திருமணம் நடந்தது

25-10-1940 வெள்ளிக் கிழமையன்று காலை 10 மணி அளவில் சென்னை மாவட்டப் பதிவாளர் அலுவலத்திற்குப் புறப்பட்டோம். அந்நாளில் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே பதிவு செய்து கொள்ள முடியும்.

எங்களோடு குஞ்சிதம், குருசாமி, ஈ.வெ. கிருஷ்ணசாமி, பெரியார், பொன்னம்பலனார், லிங்கம் மற்றும் சிலர் புறப்பட்டார்கள்.

கார் ஏறும் வேளை பெத்து நாயக்கன் பேட்டைத் தோழர்கள் சிலர் வந்து சேர்ந்தார்கள். பெரியார், பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தால் சமாளிக்க முடியாத கூட்டம் கூடிவிடும் என்று தடுக்க முயன்றார்கள்.

பெரியார் முதலில் ஒப்பவில்லை. 'தங்கள் விருப்பம்' என்றேன். சில மணித்துளிகள் உரையாடிய பிறகு பெரியார் வீட்டிலேயே காத்திருக்க உடன்பட்டார்; நாங்கள் சென்றோம்.

அறிஞர் அண்ணா தமிழக முதல் அமைச்சரான சில திங்களுக்குள் சுய மரியாதைத் திருமணச் செல்லும்படிச் சட்டத்தை நிறைவேற்றினார்.

இப்போது எல்லா நிலைப் பதிவாளர் அலுவலகத்திலும் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளலாம்.

அன்று மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் உரிய பதிவேடுகளில் காந்தம்மாவும் நானும் கையெழுத்திட்டு எங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொண்டோம். திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி சாட்சிக் கையெழுத்திட்டவர்களில் ஒருவர்.

பதிவுப்பணி முடிந்ததும் அனைவரும் வீடு திரும்பினோம்.

வழியில் அன்று பூந்தமல்லி நெஞ்சாலை என்று அழைக்கப்பட்ட இன்று பெரியார் ஈ.வெ.ரா. நெஞ்சாலை என்று அழைக்கப்படும் சாலையில் உள்ள தாஸ் சகோதரர்கள் என்னும் புகைப்பட நிலயைத்திற்குச் சென்றோம். திருமண நாளன்று மணமக்கள் இருவரும் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்புவது இயற்கைதானே!

தாஸ் பழைய காலத்துப் புகைப்படக்காரர். பற்பல கோணங்களில் இருந்து நோட்டம் பார்த்து, பின்னர் படம் எடுத்தார். அதற்கு இருபது மணித்துளிகள் போல் செலவாகிவிட்டது.

இதனால் காந்தம்மாவும் நானும் திருவல்லிக்கேணி நெடுங் சாலையில் இருந்த மாமனார் வீட்டிற்குத் திரும்பக் காலதாமதம் ஆயிற்று.

நாங்கள் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்ததும் பெரியார் எங்களை நோக்கி,

புதுப்பெண்ணும் மாப்பிள்ளையும் எங்கே இவ்வளவு நேரம் தலைமறைவாகப் போய்விட்டீர்களென்று கிண்டலாகக் கேட்டார்.

''புகைப்படம் எடுத்துக் கொள்ள'' என்றேன்.

''அதற்கா? இவ்வளவு நேரம் இப்போது நொடியில் படம் பிடித்துக் கையிலேயே கொடுத்து விடுகிறார்களே! படத்திற்கு எவ்வளவு கட்டணம்'' என்றார்.

மூன்று ரூபாய்கள் என்றேன். பெரியார் நொடிப்பொழுதில், வெகுண்டார்.

''என்னங்க! பணக்கொழுப்பு! மௌண்ட் ரோடில் ரூபாய்க்கு மூன்று படம் கிடைக்கும். நீங்கள் ஒரு படத்திற்கு மூன்று ரூபாய் என்று ஏற்பாடு செய்து கொண்டா வருவது? அநியாயம்; பணத்தை இப்படியா இறைப்பது?'' என்று அனல் கக்கப் பேசினார்.

என் அதிர்ச்சியை எப்படிச் சொல்ல? பெரியாரை முதன் முறை கண்டபோது நாலாணவிற்கு ஆப்பிள் வாங்கிக் கொடுத்ததற்காக வெகுண்டு இடித்து உரைத்தார். இப்போது மூன்று ரூபாய் செலவிற்காக இப்படிக் கோபிக்கிறாரே' என்று கலக்கங்கொண்டேன்.

பூவாளூர் பொன்னம்பலனார் குறுக்கிட்டுத் தடுத்து ஆட்கொண்டார்.

''என்ன அய்யா! தாங்கள் இத்திருமணத்திற்காக ஈராயிரம் ரூபாய் செலவு செய்ய முன் வந்தீர்கள். மாப்பிள்ளை, அச்செலவை மிச்சப்படுத்தி விட்டார். இந்த மூன்று ரூபாய் போனால் போகட்டும்'' என்று உரைத்தார். அது பெரியாரின் சினத்தைத் தணித்தது.

குடிஅரசில் திருமணச் செய்தி

எங்கள் திருமணப் பாராட்டுக் கூட்டச் செய்தி 3-10-40 நாளிட்ட குடி அரசில் வெளியாயிற்று.

எங்கள் திருமணப் புகைப்படத்தை வெளியிட்டு, கீழே 15-10-40 ஆம் தேதி ரிஜிஸ்டர் திருமணம் செய்து கொண்ட தோழர்கள் நெ.து. சுந்தரவடிவேல் எம்.ஏ., எல்.டி., அவர்களும் டி.எஸ். காந்தம் Bsc (Hons) Msc. அவர்களும்'' என்று எழுதி, செய்தியையும் வெளி யிட்டிருந்தது.

காந்தம் - சுந்தரவடிவு திருமணம்

பாராட்டுக் கூட்டம்

பெரியார் தலைமையில் நடைபெற்றது

சென்னை கோகலே ஹாலில் 27-10-40 மாலை 5.30 மணிக்குத் தோழர்கள் சுந்தரவடிவேல்-காந்தம் ஆகியவர்களின் ரிஜிஸ்டர் திருமணப் பாராட்டுக்கூட்டம் நீதிக்கட்சித் தலைவர் தமிழ் நாட்டுப்

பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைமையில்மிகச் சிறப்பாக நடைபெற்றது. பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி தோழர் அ.பொன்னம்பலனார், எஸ்.வி. லிங்கம் ஆகியவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் தலைவர், முன்னுரையாக மணமக்களைப் பாராட்டியும், ரிஜிஸ்டர் மணத்தின் சிறப்பைக் கூறியும் விரிவாகப் பேசினார். குமாரராஜா எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் மணமக்களைப் பாராட்டியும் சீர்திருத்தம், பொருளாதாரச் சிக்கனம் பற்றி விளக்கிக் கூறி, சுயமரியாதை இயக்கம் தமிழர்களை இத்தகைய சீர்திருத்த உணர்ச்சியைப் பெறும்படி செய்து வருகின்றதென்றும், பெரியார் அவர்களின் சமூகச் சீர்திருத்த வேலைகளைப் பெரிதும் தமிழர்கள் ஆதரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தோழர் அ.பொன்னம்பலனார் அவர்கள், புதுவைத் தோழர் பாரதிதாசன் அவர்கள் (தமிழ்க் கவி) மணமக்களைப் பாராட்டிப் பாடிய தமிழ்ப் பாடல்களைப் படித்து மணமக்கட்குக் கொடுத்து, மலர் மாலைகள் சூட்டினார்.

அதன்பின் தோழர்கள் எஸ். முத்தையா முதலியார், நெல்லை வள்ளல் சிவஞான தேசிகர், டி. சண்முகம்பிள்ளை, டி.ஏ.வி. நாதன், சி.டி. நாயகம் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டியும், ரிஜிஸ்டர் மணத்தின் சிறப்புக்களைப் பற்றியும் கூறிச் சடங்குகள் ஒழித்தல், ஆடம்பரமான வீண் செலவுகளைக் குறைத்தல் பற்றியும் விரிவாகப் பேசினார்கள். மணமக்களிருவரும் ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்றி கூறினார்கள். பெரியார் முடிவுரையாக ஒரு மணி நேரத்திற்குமேல் சமூகச் சீர்த்திருத்த அவசியம் பற்றிப் பேசினார்கள். தோழர் அ. பொன்னம்பலனார் நன்றி கூற இரவு 8 மணிக்கு இக்கூட்டம் இனிது முடிந்தது. இக் கூட்டத்திற்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்திருந்தார்கள்.

நினைவில் நிற்கும் தலையங்கம்

எங்கள்திருமணத்தை ஒட்டி அருமையான ஒரு தலையங்கமும் குடி அரசில் வெளியானது.

குடியரசு

ஈரோடு 1940 நவம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை

காந்தம் - சுந்தரவடிவு வாழ்க்கை ஒப்பந்தம்

தோழர் டி. சுப்பிரமணியம்பிள்ளை அவர்களின் புதல்வியும் தோழர் குஞ்சிதம் குருசாமி அம்மையாரின் தங்கையும் ஆன தோழர் காந்தம் Bsc (Hons), Msc. அவர்களுக்கும், தோழர் சுந்தரவடிவு M.A., L.t.

அவர்களுக்கும் திருமணம் சென்னையில் பதிவுத் திருமணமாக 25-10-40 ஆம் தேதி நடந்தது என்ற செய்தியும் அத்திருமணத்தைப் பாராட்ட 27-10-40 ஆம் தேதி மாலை சென்னை கோகலே மண்டபத்தில் பெரியார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டதென்றும் பல பிரபல தலைவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்தினார்கள் என்ற செய்தியும் வேறு பக்கத்தில் வருவதைக் காணலாம்.

மாப்பிள்ளை தொண்டைமண்டல வேளாள சைவ வகுப்பைச் சேர்ந்தவர். பெண் சாதாரண வேளாள அசைவ வகுப்பைச் சேர்ந்தவர்; இருவரும் கல்வியில் கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள்.

இத்தகையர்வளுடைய வாழ்க்கை ஒப்பந்தம் திராவிட சமூகத்திற்கு மலையின் மீதிட்ட விளக்குப்போல் விளங்கும் என்றே கருதுகின்றோம்.

இத் திருமணத்தில் சாதாணரமாகச் சீர்திருத்தம் திருமணம் என்று சொல்லிக் கொண்டு செய்யப்படும் திருமணங்களில் நடப்பதுபோன்ற தாலி கட்டுதல், மாலை மாற்றுதல்கூட நடைபெறவில்லை என்பதிலிருந்து இது எவ்வளவு சிக்கனமாகவும், சீர் திருத்தமாகவும் நடைபெற்றிருக்கிறதென்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டியதாகும்.

இத்திருமணம் ஒரு ஜாதிக் கலப்புமணம். ஒரு தொண்டமண்டல வேளாள சைவ வகுப்பைச் சேர்ந்தவர், சாதாரண வேளாள அசைவ வகுப்பைச் சார்ந்த பெண்ணைத் தமது வாழக்கைத் துணைவியாகச் சேர்த்துக் கொண்டடிருக்கிறார். இத்தகைய ஜாதி கலப்பு மணங்களும் பல கடந்த 20, 30 வருடங்களாக நடந்து வருகின்றன வென்றாலும், பிரஸ்தாப ஜாதிக் கலப்புத் திருமணத்தைப் போன்று இரண்டு அல்லது மூன்று திருமணங்கள்தான் நடைபெற்றிருக்கின்றன.

எனவே, மற்ற வகுப்புகளைவிடத் தொண்டமண்டல சைவ வேளாள வகுப்பு மட்டிலும் எவ்வளவு வேகமாக ஆமைபோல் சீர்திருத்தப் பாதையில் நகர்ந்து வருகிற தென்பதை மட்டிலும் இது சமயம் எண்ணிப் பார்க்கக் கோருகிறோம்.

இம்மாதிரி ஜாதி விட்டு ஜாதி மட்டும் கலப்புத் திருமணம் செய்து கொண்டால் போதாது, உண்மையிலேயே திராவிட சமூகம் ஒரு வர்க்கமாக (நேஷனாக) விளங்க வேண்டுமானால் திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எம்மதத்தைப் பின்பற்றுபவர்களானாலும் கலப்புமணம் செய்து கொள்ளும் பழக்கம் தோன்ற வேண்டும். இது ஒன்றும் இந்நாட்டுக்குப் புதிய வழக்கம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. பண்டைத் தமிழகத்தில், இத்தகைய திருமணங்கள், அதாவது, ஒரு மதத்திலுள்ளவர் மற்றொரு மதத்திலுள்ளவருடன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து இல்லற வாழ்க்கை நடத்தி வந்ததைப் பழந்தமிழ் நூல்களிலிருப் பதை யாவரும் காணலாம்.

திராவிட நாட்டைச் சேர்ந்த ஒரு பிரிவு என்று சொல்லப்படும் இலங்கையில் உள்ள இலங்கை வாசிகளான சிங்களவர்களில் ஒரு மதத்தினர் மற்றொரு மதத்திலுள்ளவர்களைத் திருமணம் செய்து வருவதை இன்றும் காணலாம். ஆகவேதான் இன்று சிங்களவர்கள் ஒரே வர்க்கமாகக் காணப்படுகின்றனர். அதற்கறிகுறியான குணங்களும் அவர்களிடத்தில் தென்படுகின்றன.

இந்நாட்டிலும் இத்தகைய எண்ணற்ற திருமணங்கள் நடைபெறக்கூடும். ஆனால் அதற்குத் தடையாக இருப்பவை என்ன என்று எண்ணிப்பார்ப்பவர்களுக்கு மதக்கட்டுப்பாடும், ஜாதிக் கட்டுப்பாடும், சட்டக்கட்டுப்பாடும் என்பவைகளேயாகும்.

மக்களுக்கு ஏற்பட்ட பகுத்தறிவின் காரணமாகவும், சுயமரியாதை இயக்கப் பிரச்சாரத்தின் காரணமாகவும், பெரியாரின் அருமுயற்சியின் காரணமாகவும் மக்கள் மனத்தில் உள்ள மதக்கட்டுப்பாடும் ஜாதிக் கட்டுப்பாடும் சிறிது சிறிதாகத் தகர்த்து ஏறியப்பட்டு வருகிறது. ஆனாலும் சட்டக்கட்டுப்பாடு தகர்க்கப்படுவதற்குச் சட்டத்தினால்தான் ஆகும்.

கலப்புமணம் செய்து கொள்பவர்களுக்குச் சொத்துரிமை பாத்தியதை இருக்காது என்ற அச்சம் நம் மக்கள் மனத்திலிருந்து வந்தது. இப்பொழுது அந்த அச்சத்திற்கு அவ்வளவு இடமில்லை என்றே கருதவேண்டி இருக்கிறது. ஏன், அவ்வாறு சொல்லுகிறோம் என்றால், ஷை திருமணத்தை முன்னிட்டு 27-10-40 ஆம் தேதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியார் பேசுகையில்,

''கலப்பு மணம் செய்து கொண்டால் சொத்து இல்லையென்றும், சட்டப்படி செல்லாது என்றும் சொல்லுவதுகூடச் சரியல்ல. பார்ப்பனப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டாலோ அல்லது பார்ப்பன ஆணைக் கல்யாணம் செய்துகொண்டாலோ மாத்திரம்தான் அது செல்லாதாம். அதைத் தவிர மற்றப்படி பார்ப்பனரல்லாதார் 'இந்துக்கள்' தங்களுக்குள் எந்த ஜாதியில், யாரை மணம் செய்து கொண்டாலும் அது செல்லுபடியாகும். ஆதலால் அதைப் பற்றிய சந்தேகம் யாருக்கும் வேண்டாம்'' எனக் குறிப்பிட்டிருப்பதினாலேயாகும்.

திராவிடர்கள் இந்துக்கள் எனச் சொல்லிக்கொள்ளக் கூடாது எனத் திருவாரூரில் நடைபெற்ற 15 ஆவது ஜஸ்டிஸ் மாநாட்டில் தீர்மானம் செய்திருப்பதால் பார்ப்பனரல்லாதார் 'இந்துக்கள்' தங்களுக்குள் எந்த ஜாதியில் யாரை மணம் செய்து கொண்டாலும் என்றிருப்பதை 'பார்ப்பனரல்லாதார்', 'திராவிடர்கள்' தங்களுக்குள் எந்த மதத்தில் யாரை மணம் செய்துகொண்டாலும் எனச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே நமது அவா.

அவ்வாறு சட்டம் திருத்தப்பட்டால்தான் திராவிட சமூகம் - திராவிட வர்க்கம் ஒரு நேஷனாக விளங்க முடியும்.

இத்தகைய திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்பட்ட வேண்டுமானால், திராவிட நாட்டு ஆட்சி திராவிடர் கைக்கு வரவேண்டும். எனவே, திராவிட நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் எனக் கோரப்படுவதின் முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்று என்பதை வாசர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

கடைசியாக, காந்தம் - சுந்தரவடிவு திருமணமானது எதிர் காலத் திராவிடர்கள் ஒரு வர்க்கத்தினர் என்ற தளையின் கீழ்க் கொண்டு வருவதற்குப் பெரிதும் வழிகாட்டியாயிருக்கும் என நம்புகிறோம்.

மேலும் இத்திருமணமானது நல்ல தகுதியும், நேர்மையும், ஒத்த கல்வியும் ஒருங்கே சேர்ந்த மணமக்கள் திருமணமாகும். தமிழ்ச் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் ஆணும் இவ்விதத் தகுதி பெற்று, இம்மாதிரி முறையிலேயே திருமணங்கள் நடந்தேறும் பேற்றைப் பெற்று வாழும் ஒரு நிலை ஏற்படுமனால் அதுவே திராவிடர்களின் உச்சநிலையாகும்.

எனவே பெற்றோர்கள் மற்றக் காரியங்களுக்காக வீணில் பணம் செலவு செய்வதைவிடத் தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகப் பணம் செலவு செய்வதில் கவலை செலுத்தி, திராவிட சமூகத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்காலத்தில் எனக்கு, கல்வித் துறை பொதுக்கல்வி இயக்குநர் பதவி கிடைத்த போதும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி இயைந்த போதும், மேற்கூறிய 'குடியரசு' தலையங்கத்தை நினைவில் கொண்டேன்.

அதன் விருப்பப்படி எல்லா ஆணும் பெண்ணும் உயர்கல்வித் தகுதிபெற வழிவகை செய்வதற்காக என்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டேன்.

புரட்சிக் கவிஞரின் வாழ்த்துப் பாடல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தம் வாழ்த்துப் பாடலில் 'வைதிகத்தின் முதுகு எலும்பை ஒடிததுக் கைத்தடியாக வைத்துள்ள பெரியாரின் தொண்டின் விளைவே, காந்தம்-சுந்தர வடிவேலு திருமணம்' என்று பாராட்டியிருந்தார்.

'சாதி'யில் பிறந்த மனிதனாகிய நான் சாதியற்ற மனிதனாகி விட்டேன்.

89. மாவட்ட அலுவலரின் உரை

கல்வித்துறையில் காலெடுத்து வைத்தேன்

ஆயரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்தைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை அன்று காந்தம்மாவைக் கைப்பிடித்தேன்.

அடுத்தநாள் - சனிக்கிழமை - கல்வித்துறை ஏணியில் காலெடுத்து வைத்தேன்; கடைசிப் படிக்கட்டில்தான் கால்வைத்தேன்.

திருமணத்திற்குப் புறப்படுவதற்கு முன்பே, இளந்துணைப் பள்ளி ஆய்வாளர் நியமன ஆணை என் கைக்குக் கிட்டியது. அதை முன்னரே குறித்துள்ளேன்.

திருமண நாள் அன்று பிற்பகல் சென்னையிலிருந்தபடியே மதுராந்தகம் உதவிப் பஞ்சாயத்து அலுவலர் பதவியை என் நெருங்கிய நண்பர் திரு. டி.எம். கண்ணபிரானுக்கு ஒப்படைத்தேன்.

சனிக்கிழமை பொழுது புலர்ந்ததும் பொன்னேரிக்குப் புறப்பட்டுச் சென்றேன். அங்குள்ள பள்ளித் துணைஆய்வாளர் அலுவலகத்திற்குப் போனேன். ஆய்வாளர் திரு. சுந்தரம் அய்யரிடம் இளந்துணை ஆய்வாளராகச் சேர்ந்தேன். அவர் அன்போடு வரவேற்றார்.

அப்பதவி, பல திங்களாகக் காலியாக இருந்தது. அதனால், பல பள்ளிகள் ஆய்வு செய்யப்படாமல் இருந்தன.

தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் ஆண்டுக்கு ஒரு முறை முழுத் தணிக்கைக்கு உட்பட வேண்டும்.

அதுபோக ஆய்வாளர் தமது பார்வையில் உள்ள ஒவ்வோர் பள்ளியையும் ஆண்டுக்கு இருமுறை திடீரெனப் பார்வையிட வேண்டும்.

ஆண்டுத் தணிக்கையை முன்னறிவிப்புக்குப் பிறகே நடத்தலாம்.

பார்வையிடுதலோ, தகவல் கொடுக்காமல் நிகழவேண்டும். இரு பார்வையிடுதலுக்கும் இடையே சில திங்கள் செல்ல வேண்டும்.

சனவரி முதல் டிசம்பர் வரையிலான ஆண்டு முழுவதற்குமான தணிக்கைத் திட்டத்தை ஆண்டின் தொடக்கத்திற்கு முன்பே ஆயத்தம் செய்து, மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி ஒப்புதல் பெறவேண்டும்.

இத்தகைய நடைமுறையின் வாயிலாகத் தொடக்கப்பள்ளிகள் மெய்யாகவே நடக்கின்றன என்று உறுதிப்படுத்திக் கொள்வோம்.

பொன்னேரியில் நான் அலுவலில் சேர்ந்தபோது தணிக்கைப் பாக்கியைக் காட்டினார், திரு. சுந்தரம் அய்யர்.

பொன்னேரி வட்ட நிலப்படத்தை வைத்துக் கொண்டு, 'எங்கே தொடங்கலாம்; எப்படித் தொடரலாம்' என்று ஆலோசனைகள் கூறினார்.

அலுவலகத்திற்குத் திரும்பாமல் தொடர்ந்து சில நாள்கள் பயணம் செய்வதற்கு வழிகளைச் சொன்னார்.

அதில் உ ள்ள சிக்கல் என்ன?

இரவு நேரத்தில் எந்தப் பள்ளியில் தங்குவது என்பதே சிக்கல்.

பல பள்ளிகள் கூரைகள் பழுதாயிருக்கும். மழைக் காலத்தில் அவற்றுள் உறங்க முடியாது.

அதோடு, அப்பகுதியில், பல ஊர்களில், உணவுக் கடைகள் இல்லை.

ஆசிரியர்கள் பலர் வெளியூர்களில் இருந்து பள்ளிக்கு வந்து போவார்கள். இவற்றைச் சமாளிக்க வழி சொன்னார்.

'வீடு கிடைக்கும்வரை அலுவலகத்திலேயே தங்கியிருக்கலாம்' என்று யோசனை கூறினார்.

அதற்கு மேலிடத்து இசைவு தேவை. அதற்காகச் சிறுதொகை குடிக்கூலி கொடுத்தால் போதும். ஏதுமறியாத என்னை அவர் ஆற்றுப்படுத்தினார்.

என்னுடைய மனுவைப் பெற்று அதை ஆதரித்துப் பரிந்துரைத்தார். சில நாள்கள் அலுவலகத்தில் ஒரு பகுதியில் தங்கயிருந்தேன். பின்னர் ஊருக்குள் ஓர் அறைக்கு மாறினேன்.

உணவுச்சாலை உணவு, மோசமாக இருந்தது. திருப்பெரும்பூதூரில் என்னோடு நெருங்கிப் பழகிய திரு மரியண்ணா அப்போது பொன்னேரி உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்த்து வந்தார். அவர் வீட்டில் உணவிட்டுக் காப்பாற்றினார்.

வேலையில் சேர்ந்த அன்று மாலையே, ஆய்வாளரின் ஒப்புதலோடு புகை வண்டியேறி, சென்னை திரும்பினேன்.

அடுத்த நாள் என் திருமணத்தைப் பாராட்டும் கோகலே மண்டபக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

அரசு ஊழியர்க்கு அரசியல் எதற்கு?

திங்கட் கிழமை பொன்னேரிக்குத் திரும்பியதும் ஒரு பள்ளித் தணிக்கைக்குச் சென்றேன். முன்கூட்டியே திட்டமிட்டபடி அன்றிரவு அலுவலத்திலேயே தங்கியிருந்தேன்.

ஆய்வாளர் சுந்தரம் அய்யரும் மேலிடத்து ஒப்புதலோடு அலுவலகத்திலேயே குடியிருந்தார்.

இரவு உணவுக்குப் பிறகு இருவரும் தாழ்வாரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஆய்வாளரின் குடும்பமும் திருவல்லிக்கேணியில் இருந்தது. அவரது மனைவியார், என் திருமணம் பற்றிக் கேள்விப்பட்டு அதைப்பற்றி அவருக்குத் தகவல் கொடுத்து விட்டார்.

ஆய்வாளர் மெல்லப் பேச்சைத் தொடங்கினார். ஒளிப்பதற்கு என்ன இருக்கிறது? நடத்ததைச் சொன்னேன்.

ராஜாஜி குடும்பத்தில் நடந்த கலப்புத் திருமணத்தைக் குறிப் பிட்டார். அதில் குற்றம் ஏதும் இல்லை என்று முடிவு சொன்னார்.

சிறிது நேரம் ஏதேதோ பேசினார். பிறகு என்னை ஆழம் பார்க்க முயன்றார்.

''நீங்கள், சத்தியமூர்த்தி பேச்சையும் ஆற்காடு இராமசாமி முதலியார் பேச்சையும் கேட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

''நான், இருவர் பேச்சுகளையும் பலமுறை கேட்டிருக்கிறேன். என் மதிப்பீட்டில் இருவரில் முதலியாரே நாவன்மை படைத்தவர். சத்தியமூர்த்தி நாட்டுரிமை பற்றிப் பேசுவதால் எளிதில் ஒளிவிடுகிறார்.

''ஏன்? நான் சொல்வது சரிதானே!'' என்று, ஆய்வாளர் சுந்தரம் அய்யர் கேட்டார்.

நொடியில் விழித்துக் கொண்டேன். ''அய்யா! நீங்களும் நானும் அரசுக்கு ஊழியம் செய்து வாழ வந்துள்ளோம். நமக்கு எதற்கு அரசியல் வழக்கு?

''அலுவலகத்தில் அரசியல் பேசுவது நல்லதல்ல. நம் வீடுகளில் தங்கியிருக்கும்போது மட்டும் அரசியல் பேசுவோம்! அதுவும், நம்மால் வழி நடத்தப் படவேண்டிய ஆசிரியர்களிடம் பேசுவது எனக்கு உடன்பாடல்ல.

''தயவுசெய்து, இனி என்னிடம் அரசியல் பொதுவாழ்க்கைப் புள்ளிகளைப் பற்றிக் கேள்வி கேட்காதீர்கள்'' இப்படிச் சொன்னேன்.

என் சொல்லில் சூடு இல்லை; ஆனால் உறுதி இருந்தது.

ஆய்வாளர் என்மேல் சினங்கொள்ளவில்லை; மாறாகப் பாராட்டினார்.

அப்புறம் அரசியல் பேச்சே எடுத்ததில்லை. ஆயினும் எதற்காகவும் முகம் சுளிக்கவில்லை.

என் தணிக்கை, பார்வையிடுதல் பணியில் முழு மூச்சாக இறங்கினேன். பசி நோக்காது நெடுநடை பாராது அதைச் செய்து வந்தேன்.

நவம்பர்த் திங்கள் பொன்னேரி மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளின் ஆண்டுத் தணிக்கைக்காக, மாவட்டக் கல்வி அலவலர் சைவப்பழம் திரு. சச்சிதானந்தம்பிள்ளை பொன்னேரிக்கு வந்தார்.

சச்சிதானந்தரின் கண்டிப்பு

ஆய்வாளரும் நானும் அவருடைய பணியைப் பங்கிட்டுக் கொள்ள உடன் சென்றோம். அது எங்கள் கடமையில் சேர்ந்தது, எனக்குச் சில பொறுப்புகளை, சில பாடங்களைத் தணிக்கை செய்யும்படி ஒதுக்கினார்கள்.

நான் காலையில் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றபோது மிடுக்கான ஆங்கிலேயரின் உடையில் சென்றேன்.

பள்ளி தொடங்கிய சிறிது நேரத்தில் மழை கொட்டு கொட்டு என்று கொட்டிற்று. பள்ளித் திடல், தெருக்கள் எங்கும் பெருவெள்ளம்.

பகல் உணவிற்குப் போனபோது எப்படியோ சமாளித்தேன். பிற்பகல் மீண்டும் மழை கொட்டும் அறிகுறி தென்பட்டது. எனவே பூட்சையும் கால்சட்டையையும் கழற்றிவிட்டேன். வெண்மையான வேட்டி அணிந்து பள்ளிக்குத் திரும்பினேன்.

என்னைக் கண்ட சச்சிதானந்தர் கண்கள் சிவந்தன.

''வந்தால், முழு சூட்டில் வரவேண்டும். இல்லையோ, தார்பாச்சிக் கட்டிக்கொள்; அதோடு தலைப்பாகை அணிந்து கொள். இப்போது வந்துள்ள உடையில் பள்ளித் தணிக்கைக்கு வரவேண்டாம்'' என்று உறுதியோடு உரைத்தார்.

என்செய்வேன்? திகைத்தேன்.

தலைமையாசிரியர் ஒற்றை மாட்டு வண்டியை அழைத்தார் .அதில் ஏறி வீடு திரும்பினேன். உடையை மாற்றிக் கொண்டேன். பூட்சை அணியாமல், வண்டியில் வைத்தேன். பள்ளிக்குத் திரும்பினேன்.

கால்சட்டையை முழங்கால் அளவு மடித்துக்கொண்டு, நீரில் நடந்து, ஆசிரியர் அறைக்குச் சென்றேன்; ஆடையைத் திருத்திக் கொண்டேன். பூட்சை அணிந்து கொண்டேன். தணிக்கையைத் தொடர்ந்தேன்.

இரு நாள்கள் தணிக்கை செய்தோம். இறுதியில் நான் எழுதிக்கொடுத்த குறிப்புகளைக் கண்டு மாவட்டக் கல்வி அலுவலர் நிறைவு கொண்டார்.

நான் எதிர்த்து ஏதும் பேசாமல், கட்டளைக்குக் கீழ்ப் படிந்தது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

சச்சிதானந்தரின் பேச்சு

அடுத்த நாள் காலை மீஞ்சூர் தொடக்கப்பள்ளி, ஆசிரிய மையத்தின் கூட்டத்தில் திரு. சச்சிதானந்தர் கலந்து கொண்டார். அவர் உரை நீண்டு இருந்தாலும் அருமையாகவும் இருந்தது.

''பெங்களூர் விரைவு வண்டி பறந்து ஓடுகிறது; தடம் புரளாமல் ஓடுகிறது. ஆண்டுக் கணக்காக ஆபத்தின்றி ஓடுகிறது. நாம் மகிழ்ச்சியோடு பயணம் செய்கிறோம். அது எப்படி முடிகிறது?

''இருதண்டவாளங்களும் வளையாமல் நெளியாமல் விலகாமல் தாழாமல் உறுதியாக நிலைத்து நிற்பதால்; வழி நெடுகிலும் அதே இடைவெளியில் இழையளவும் மாறுபடாமல் இருப்பதால் இயல்கிறது.

''நேர்மை, வாய்மை என்னும் இரு உறுதியான இணைமாறாத, தண்டவாளங்களின்மேல், நம்முடைய வாழ்க்கைப் பயணம் சொல்லுமானால், நம் வாழ்க்கையும் மகிழ்ச்சியாக நடக்கும்'' இது சச்சிதானந்தரின் நீண்ட உரையின் சுருக்கமாகும்.

அந்த நல்லார் வாய்மொழி என் நெஞ்சில் பதிந்தது; என்னில் இரண்டறக் கலந்தது; என்னை நல்வழியில் இயக்கிற்று; இன்றும் இயக்குகிறது. நாளையும் இயக்குமென்பது, வெள்ளிடை மலையாகும்.

அக்கூட்டத்தில், அவர் முன்னர் சில சொல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

எப்படியோ அவை அச்சம் இன்றிப் பேசிய என்னை அப்பெரியவர் மிகவும் வியந்து பாராட்டினார்.

காலத்தினாற் செய்த அந்த உதவி எனக்கு ஞாலத்தினும் பெரிதாகத் தோன்றியது.

90. பள்ளிகளின் நிலை

ஊர் ஊராக அலைந்தேன்

இளந்துணை ஆய்வாளருக்கு நெடுந்தொலைவில் - எளிதில் போய்ச் சேர முடியாத ஊர்களில் உள்ள பள்ளிகளை ஒதுக்குவதே மரபு.

அவ்வகையில், பொன்னேரி வட்டத்தில் சாலை வசதி பெறாத பள்ளிகள் பல எனக்குக் கொடுக்கப்பட்டன.

அக்காலத்தில், இன்றைக்கு இருக்கும் அளவு பள்ளிகள் இல்லை.

எனவே, பொன்னேரி இளந்துணை ஆய்வாளருக்கு அவ்வட்டத்திலேயே போதிய வேலை இல்லை.

அடுத்துள்ள திருவள்ளூர் வட்டத்தைச் சேர்ந்த பள்ளிகள் சிலவும் என் கண்காணிப்பிற்கு ஒதுக்கப்பட்டன.

'தணிக்கை பாக்கி பெரிதாக இருப்பதற்கு நான் என்ன செய்ய' என்று தட்டிக் கழிக்கும் போக்கு, நழுவிக் கொள்ளும் போக்கு எனக்கு ஏற்படவில்லை.

எப்படியும் எல்லாப் பள்ளிகளையும் தணிக்கை செய்து முடிப்பதற்காக ஊர் ஊராக அலைந்தேன்.

பல ஊர்களுக்குப் பள்ளியைத் தொடங்கும் நேரத்திற்கு முன்பே போய்ச் சேருவேன். பிள்ளைகள் வருவதற்கு முன்பு, பதிவேடுகளைத் தணிக்கை செய்வேன். அவை பற்றிய குறிப்புகளை எழுதுவேன்.

பிள்ளைகள் வந்ததும் பாடங்களில் தேர்வு நடத்துவேன். எந்தெந்த வகுப்புகளில் எவ்வெப் பாடங்களில் நல்ல தேர்ச்சி, எவற்றில் சுமாரான தேர்ச்சி, எவற்றில் மோசமான நிலை, என்று விவரமாக எழுதவேண்டும்.

அதை முடித்துவிட்டு, நடையும் ஓட்டமுமாக அடுத்த ஊர் பள்ளியைப் பார்வை இடவோ, தணிக்கை செய்யவோ செல்வேன்.

அவ்வூரில் தணிக்கையானால் பள்ளி கலைவதற்கு முன்பு, மாணாக்கர் தேர்ச்சியினை மதிப்பிட்டு அவர்களை வீட்டுக்கு அனுப்புவேன்.

பிறகு, பதிவு ஏடுகளைத் தணிக்கைசெய்து குறிப்புகளை எழுதுவேன்.

பள்ளித் தணிக்கையும் பார்வையும் எனக்கு முழுமையாகப் புதியன அல்ல. ஓரளவு அவற்றில் பழகி இருந்தேன்.

எப்படி?

துணைப் பஞ்சாயத்து அலுவலராக இருந்தபோது ஊராட்சித் தொடக்கப் பள்ளிகளையும், மாவட்டக் குழுவின் தொடக்கப் பள்ளிகளையும் பார்வையிடுவது என் கடமைகளில் ஒன்றாக இருந்தது.

அப்பணியைச் செம்மையாக ஆற்றும் பொருட்டு முன்னோர் எழுதிய பார்வைக் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தேன். ஓரளவு ஆழமாகக் கற்றேன்.

பார்வையின்போது எவ்வெவற்றைக் கவனிக்க வேண்டும்?

இருக்கவேண்டிய ஆசிரிய ஆசிரியைகள் பணியில் இருந்தார்களா?

மாணவர் வருகைப் பட்டியில் வந்ததாகக் குறிக்கப்பட்டவர்கள், பார்வையின்போது பள்ளியில் இருந்தார்களா?

வந்ததாகக் குறிக்கப்பட்டவர்களைவிட இருப்போர் எண்ணிக்கை குறைவாக இருப்பின், காரணம் என்ன?

கால அட்டவணைப்படி பாடங்கள் நடந்து கொண்டிருந்தனவா?

பள்ளிக்கூடம் துப்புரவாக இருந்ததா? மேற்கூறியவற்றைப் பார்த்து, குறிப்பு எழுதவேண்டும்.

ஆண்டுத் தணிக்கையின்போது, இவற்றோடு நிற்கக்கூடாது.

ஆண்டின் பாடங்கள் ஒழுங்காக நடந்தனவா? அவற்றைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் அதற்கான பாடக் குறிப்புகளைச் செம்மையாக அவ்வப்போது ஆயத்தஞ் செய்தாரா?

பாடம் சொல்லியதன் பலன் என்ன? கட்டுரைகள் ஒழுங்காக எழுதப்பட்டனவா? திருத்தப்பட்டனவா?

மொத்த முயற்சியின் விளைவாக, மாணாக்கர் அடைந்துள்ள உண்மையான தேர்ச்சி நிலை எவ்வளவு?

இவற்றையெல்லாம் மதிப்பிட்டுப் பூர்த்திசெய்ய, நீண்ட நான்கு பக்க 'படிவம்' ஒன்று உண்டு.

அதைப் பூர்த்தி செய்துகொண்டு வருவதோடு, பள்ளியில் உள்ள தணிக்கைக் குறிப்பு நூலில் விரிவாக எழுதிவிட்டு வர வேண்டும்.

பிறகு, தணிக்கை அறிக்கைக்குத் தெளிவான படியெடுத்து மாவட்டக் கல்வி அலுவலருக்குத் திங்களுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கவேண்டும்.

தணிக்கை அறிக்கை எழுதும் முறை பற்றி, துணைப் பஞ்சாயத்து அலுவலராக இருந்த தொடக்கத்தில் நான் நாட்டம் செலுத்தவில்லை.

ஆனால் இளந்துணை ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பித்த பிறகு அதில் கவனம் செலுத்தினேன்.

பல ஆய்வாளர்களின் அறிக்கைகளைப் படித்துத் தெரிந்துகொண்டே ஆய்வாளராகச் சேர்ந்தேன்.

அந்த முன் ஆயத்தம் தணிக்கை வேலைச் சிக்கலைப் போக்கிற்று.

பள்ளிகளின் அன்றைய நிலைமை

ஆனால், அன்றைய சமுதாயச் சூழல், மக்கள் மனப்போக்கு, முதலியன வேதனையூட்டின.

இன்றைக்கே ஆசிரியர்கள் பள்ளி ஊரில் குடியிருப்பது அருமை; அன்றைக்கோ, கேட்க வேண்டாம்.

உள்ளூர்க் குடியிருப்பு வியப்பிற்கு உரியது. எனவே பார்வையின்போது எல்லோரும் இருப்பது புதுமை.

பார்வைக்குப்பின் வருவோர், பார்வை நேரம் காலைப்போதாயின் அரைவேளை விடுப்பும் மாலைப்போதாயின் முழுநேர விடுப்பும் எடுத்துச் சமாளிப்பர்.

அந்த நாளில் சிற்றூர்களில் அஞ்சல் கிடைப்பது அன்றாடம் அல்ல; வாரத்திற்கு ஓரிரு முறைகள்.

இதுவும் அவர்களுக்குத் துணையாகும். முன் தேதியிட்டு எழுத உதவிற்று.

பிள்ளைகள் வருகை எப்படி? பட்டியல்படி இருக்க வேண்டியவர்கள் இருக்கமாட்டார்கள். பலர் குறைவாக இருக்கக் காண்போம்.

ஆய்வாளர் கேட்பதற்கு முன்பே, ஆசிரியர்கள் விளக்கம் கூற முன்வருவார்கள். என்ன விளக்கம்?

தண்ணீர் குடிக்கப் போயிருக்கிறார்கள்; சிறுநீர் கழிக்கப் போய் இருக்கிறார்கள். இத்தகைய விளக்கங்கள், அடியோடு பொய் என்பதற்கில்லை.

பள்ளியில் குடிநீர் பெற ஏற்பாடு செய்த பள்ளியோ ஆயிரத்திற்கு ஒன்றாகவே இருந்தது.

சிறுநீர் கழிக்க ஒதுங்கிடம் கிடையாது. இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

இன்றைக்காவது எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கழிவறைகள் உள்ளன என்று சொல்லமுடியுமா? முடியாது.

பெண்கள் பள்ளிகளில்கூட இந்தக் குறை உண்டு!

துப்புரவு பற்றியும் சுகாதாரம் பற்றியும் ஏட்டிலே படித்து நிறுத்திவிட்டால் நாடு நாறாமல் போகுமா?

பல பெற்றோர்கள், பள்ளிக்கு வந்த பிள்ளைகளை மூடும் நேரம் வருவதற்கு முன்பே, வீட்டு வேலைக்கு அழைத்துக் கொண்டு போய்விடுவார்கள்.

பள்ளிப் பருவத்தே, பச்சைக் குழந்தைகளை வேலை வாங்கிப் பாழாக்கினது, அக்காலத்தில் அதிகம்.

வருகைப் பதிவுக்கும் இருப்பதற்கும் உள்ள எண்ணிக்கை வேறுபாடு, ஆய்வாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே எரிச்சலை, பகையை வளர்க்கப் பெரிதும் பயன்பட்டது. நிலையைத் திருத்தச் சிறிதே பயன்பட்டது. ஏன்?

பெற்றோர்க்குப் பொறுப்புணர்ச்சியை ஊட்டுவோர் இல்லை. பள்ளிகளில் வசதிகளைச் செய்து கொடுப்போர் இல்லை.

உள்ளூர் ஆதிக்கவாதிகள் ஆசிரியர்களை மொட்டைக் கடிதங்கள் எழுதப் பயன்படுத்த முயல்வதுண்டு.

ஆசிரியர்கள் அதற்கு இசையாவிட்டால் அவர்கள் பேரில் புகார் செல்லும்.

கொடுமையோ கொடுமை

அன்று தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கிள்ளுக்கீரைகள்; அல்லலுக்கு ஆளாகாமல் தப்புவதற்குக் கண்டவர்களின் காலில் விழ வேண்டும்.

ஆசிரியர்களின் ஊதியம் எப்படி? சொல்ல வெட்கக்கேடு. இக்கால ஊதியத்திற்கும் அக்கால சம்பளத்திற்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாட்டுக்கு ஒப்பானது.

உள்ளாட்சித்துறை, நகர் மன்றம் ஆகியவற்றில் வேலைசெய்து எட்டாவதோடு பயிற்சி பெற்ற தொடக்கநிலை ஆசிரியர்களுக்குத் திங்கள் ஊதியம் ரூபாய் பதினைந்தில் தொடங்கும்.

அத்தகையோருக்கு ஊராட்சிப் பள்ளியில்தான் வேலை கிடைத்தது என்றால் அவருடைய ஊதியம் ரூபாய் பன்னிரண்டேதான்!

தனியார் பள்ளியின் தொடக்க நிலை ஆசிரியர் ஊதியம், எவ்வளவு? பன்னிரண்டு ரூபாய்கள்.

அச்சிறு ஊதியம் எப்போது வரும்? ஊராட்சிப்பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆண்டுக்கு ஒரு முறையே நிதி உதவி வரும்; பெரும்பாலான ஆசிரியர்கள் அப்போதுதான் சம்பளம் பெறுவார்கள்.

வட்ட, மாவட்ட ஆட்சிக் குழுவின் பள்ளிகளில் வேலை செய்தவர்களின் சம்பளம் எப்போது கிடைக்கும்?

பலவேளை சில இடங்களில் திங்கள்தோறும். பல இடங்களில் நிதி வந்து சேரும்போதே.

பல திங்கள் ஊதியத்தைச் சேர்த்துக் கொடுத்தபோது, அதில் ஒரு பங்கை வட்ட ஆட்சித் தலைவர் பிடித்துக் கொண்ட கொடுமைகளும் உண்டு.

வட்ட நிலையில், உள்ளாட்சித் தலைவர் சிலவேளை தடியடிக்காரராக இருப்பார்.

அவரை எதிர்த்துப் போராடத் திராணியில்லாத தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஆற்றாது அழுதார்கள்.

அது வட்டக்குழுக்களை (தாலுக்கா போர்டுகளை) அழித்தது. கல்விச் செல்வத்தை அழித்தது.

தாலுக்கா வாரியத் தலைவர்களில் பலர் இப்படிச்சுரண்டியதும், பலர் பெண் ஆசிரியைகளிடம் தகாத முறையில் நடக்க முயன்றதும் மாநிலம் முழுதும் அவப்பெயரை ஏற்படுத்தின. அப்போதைய அரசு தாலுக்கா வாரியங்களை ஒழிக்கச் சட்டம் செய்தது.

கொடுமையால், ஆதிக்கத்தால் கல்விப் பயிர் கருகிப்போய்க் கொண்டிருந்த காலத்தில் நான் கல்வித் துறைப்பணிக்கு வந்தேன்.

அவை மெல்ல மெல்லத் தேய்ந்த வரலாறு பின்னர் வரும்.

பயிர்கள் அதிகப்படி நீரால் சாவியாவது உண்டு. இன்றைய கல்விப் பயிர் அதிகச் செல்லம் தருவதால், செல்ல நீர்ச் சாவியாகும் அவலநிலைக்கு விரைந்து போவதாகப் பலரும் குறைபடக் கேட்கிறேன்.

அது மெய்யா? பொய்யா?

தொடக்கப் பள்ளிகளின் புறநிலை எப்படியிருந்தது?

மாட்டுத் தொழுவங்களோடு போட்டிபோட்ட பள்ளிக் கட்டடங்கள் ஏராளம்.

மண் தரை மேல், விரிப்புகள்கூட இல்லாது மாணவர்கள் குப்பை கூளங்கள் நிறைந்த மண் தரையில் உட்கார வேண்டிய நிலையில் இருந்த பள்ளிகள் எண்ணற்றன.

ஒட்டடையும், அழுக்கும் சொத்தாகக் கொண்ட பள்ளிகள் பற்பல.

பொங்கலுக்கு முன்பு, குடிசைகளைக் கூடச் செப்பனிட முயலுவதைப் போன்று ஆண்டுத் தணிக்கை அறிவிப்பு வந்ததும், தனியார் நிர்வாகிகள் ஊர்ப் பெரியவர்களைக் கெஞ்சிக் கூத்தாடி கூரைவேய்ந்து பள்ளிகளை ஓரளவு பழுதுபார்த்து வைப்பார்கள்.

அதற்குப் பிறகும் நிரையாக இல்லை என்று சாக்குக் காட்டி, கொடுக்கும் நித உதவியில் பிடித்தம் செய்து மகிழும் ஆய்வாளர் 'புண்ணியவான்களும்' பலர் ஆவார்கள்.

பொதுத்துறைப் பள்ளிகள் எப்படியிருந்தன. அத்தொகுதி ஆட்சிக்குழு உறுப்பினருக்குச் செல்வாக்கு இருந்தால் ஓரளவு கவனிக்கப்படும். இல்லாவிடில் மோசமான நிலையே.

எவர் வயிற்றிலும் அடிக்கவில்லை

நான் எப்படி நடந்து கொண்டேன்? எவர் வயிற்றிலும் அடிக்கவில்லை என்று சொல்ல எனக்கு உரிமை உண்டு. ஆய்வாளராக இருந்தபோது மட்டுமா? பணிக்காலம் முழுவதும் அப்படியே பொறுப்புடன் இயங்கினேன்.

'எஞ்ஞான்றும் தன்னை வியவற்க' என்பதே பண்பட்ட வாழ்க்கை முறை. இதை உணர்ந்த பிறகும் இப்படி என்னை முன்னிலைப்படுத்தலாமா?

கெடுக்காமலும் வயிற்றில் அடிக்காமலும் வழி நடத்தும்படி இளைய தலைமுறைக்கு அறிவுறுத்துவது என் கடமை.

குறைகளை நான் மறைத்ததில்லை. அதே நேரத்தில், அவ்வூர் சமுதாயச் சூழலையும் சுட்டிக்காட்டி, கெடுக்காமல், உயிர் வாழ விட்டேன்.

பத்துத் திங்களாக நடைபெறாத பள்ளி

திருவள்ளூர் வட்டத்தில், கண்ணிகைப்பேர் என்ற ஓர் ஊர் உள்ளது. அவ்வூர் ஆதிதிராவிடர் குடியிருப்பில், அவர்களுக்கு என்று ஒரு தொடக்கப் பள்ளியிருந்தது. சிறு திருத்தம் அப்படி ஒன்று இயங்கியதாக அலுவலகப் பட்டியல் சொல்லிற்று.

அதைத் தணிக்கை செய்யும் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. 1940 ஆம் ஆண்டில் அந்தப் பள்ளி ஒரு முறைகூட எவராலும் பார்வை இடப்படவில்லை.

எனவே முதலில் திடீரெனப் பார்வையிட எண்ணினேன்.

அதற்கருகில் உள்ள பள்ளியொன்றைத் தணிக்கை செய்யச் சென்றபோது, கண்ணிகைப்பேருக்குச் சென்றேன்.

நேரே கிராம அதிகாரியின் வீட்டிற்குச் சென்றேன். அவர் வீட்டில் இருந்தார். ஆதிதிராவிடப் பள்ளிக்கு அவரிடம் வழி கேட்டேன்.

''அங்கே எவரும் போகிற பழக்கம் இல்லை. நான் ஆள் அனுப்புகிறேன். ஆசிரியரையும் பிள்ளைகளையும் இங்கே அழைத்து வரச் சொல்லுகிறேன். இந்தத் திண்ணையில் உட்கார்ந்தபடியே, தணிக்கை செய்துவிடுங்கள். அவர்கள் தெருவில் நிற்பார்கள்,'' என்று சொல்லி உதவ முன் வந்தார்.

நான் அதற்கு உடன்படவில்லை. வேறு வழியின்றி, அவருடைய ஆளை என்னுடன் அனுப்பினார்.

குடியிருப்பை நெருங்கும்போது, எதிரில் சிலர் வந்தனர். ''பள்ளிக்கூடம் எங்கே?'' என்று கேட்டேன்.

இடிந்து வீழ்ந்த குடிசையைக் காட்டினார்கள். வீழ்ந்த கூரை கலைக்கப்படாமல் இருந்தது. மண்சுவர் கலைந்திருந்தது. மேலும் துருவிக் கேட்டேன்.

''பத்துத் திங்களாய்ப் பள்ளியே நடக்கவில்லை'' என்று சொன்னார்கள்-

''ஆசிரியர் செங்குன்றத்தில் இருந்து வந்து பள்ளியை நடத்துவார். உதவிப்பணம் காலாகாலத்தில் வரவில்லையாம்.

''அதனால் பத்து மாதமாக இந்தப் பக்கமே வரவில்லை. பிள்ளைகள் பழையபடி ஆடுமாடு மேய்க்கப் போய்விட்டார்கள்'' என்றார்கள்.

திங்கள்தோறும் அப்பள்ளியின் சார்பில், அது உண்மையில் நடந்தது போல் வருகைப்பதிவு முதலிய தகவல்கள், ஆய்வாளர் அலுவலகத் திற்கு வந்தன.

அதை வெளிப்படுத்தாமல் அவர்களைக் கிராம அதிகாரி இல்லம் வரை அழைத்துக் கொண்டு போனேன்.

அவர் முன்பும் ''பள்ளி நடக்கவில்லை'' என்று கூறினார்கள்.

அப்படியே எழுதி வாங்கிக்கொண்டு அடுத்த ஊருக்குப் போனேன்.

சில நாள்கள் ஓடின. ஒரு நாள் காலை பொன்னேரி அலுவலகத்திற்கு ஒருவர் வந்தார். என்னை வணங்கினார்.

தாம் 'கண்ணிகைப்பேர் குடியிருப்புப் பள்ளி'யை நடத்திக் கொண்டிருந்தவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

நான், கேள்வி கேட்க இடம் வைக்காமல் மடமடவென்று பேசினார்.

''நான் ஆதிதிராவிடன்; எட்டாவது படித்து முடித்ததும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தேன், ஈராண்டு அக்கறையாகவே படித்தேன். என் பொல்லாத வேளை தேர்வில் ஒரு பகுதியில் தவறிவிட்டேன்.

''அடுத்த தேர்வு எழுதுவதற்குப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது, கண்ணிகைப்பேர் குடியிருப்பில் ஒரு தனியார் பள்ளி தொடங்கும்படி சிலர் ஆலோசனை கூறினார்கள். குடியிருப்புக்குள் சாதி இந்துக்கள் வரமாட்டார்கள்.

''ஆகவே ஆதிதிராவிட ஆசிரியரே அங்குப் பள்ளிக்கூடம் நடத்த இயலும். தேர்வில் வெற்றிபெற்ற ஆதிதிராவிட ஆசிரியர் எவரும் கிடைக்கவில்லை.

''எனவே, எனக்கு ஓராண்டிற்கு, விதிவிலக்கு அளித்து ஆசிரியர் நிர்வாகியாக இருந்து, தொடக்கப்பள்ளியை நடத்த உரிமம் கொடுத்தார்கள்.

''அப்படியே பள்ளியைத் தொடங்கினேன். ஆண்டு முடிந்தபிறகு, ஊதியம் மான்யமாக வந்தது; ஆனால் தேர்வில் மீண்டும் தோல்வியடைந்தேன்.

''கெஞ்சிக் கூத்தாடி, மற்றோர் ஆண்டு பணிபுரியச் சலுகை பெற்றேன்.

''அவ்வாண்டு இறுதியில் தேர்வில் தோற்றேன். மூன்றாம் ஆண்டுச் சலுகைக்கு மனுப்போட்டேன்.

''அதை எதிர்பார்த்துப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த எண்ணினேன். ஆனால், பள்ளிக் கட்டடம் இடிந்து வீழ்ந்து விட்டது. வாங்கின கடனை அடைக்க முடியவில்லை; அதனால் மேற்கொண்டு கடன் வாங்க முடியவில்லை; இத்தனை தொல்லைகளைச் சமாளிக்க முடியாமல், பள்ளியை நடத்தாமல் நிறுத்தி விட்டேன்.

''ஆயினும் பள்ளி நடப்பது போல, மாதந்தோறும் கணக்கு அனுப்பிக் கொண்டு இருந்தது பித்தலாட்டமே. அய்யா பார்த்து ஏழை ஆதிதிராவிடனைக் காப்பாற்றுங்கள்.

''இவ்வாண்டிற்கு அரசின் உதவி வேண்டாம் அய்யா. என்னை, மோசடி செய்தேன் என்றுபோலீசில் மட்டும் ஒப்படைத்து விடாதீர்கள்'' என்று மன்றாடினார்; கெஞ்சினார்.

இரண்டொரு வினாடிகள் சிந்தனையில் ஆழ்ந்தேன். பளிச்சென்று என் அறிவில் தெளிவு ஏற்பட்டது.

காவல்துறையிடம் ஒப்படைத்தால்; எப்போது எப்படி முடிவாகுமோ!

'ஓராண்டு அரசு உதவித்தொகை பெற்றிருக்கிறார். அதைப் பெறவும் மோசடி செய்து இருந்தாலும் அதை மெய்ப்பிப்பது எளிதாயிராது.

'அவ்வுதவித் தொகையைப் பரிந்துரைத்து வாங்கித் தந்த ஆய்வாளர் ஆசிரியருக்கு ஆதரவாகவே இருப்பார்.

'அந்நிலையில் வழக்கு எந்த வழியில் திருப்பம் பெறுமோ! போனது போகட்டும் என்று பழையதை மறந்துவிட்டு, என் காலத்தில் புரட்டு ஏதும் இல்லாதபடி பார்த்துக் கொள்வதே நல்லது'

இப்படித் தோன்றியதால் ஆசிரிய நிர்வாகியிடம் ''என்னிடம் வாய்வழிக் கூறியதை எழுதிக்கொடும்'' என்றேன்.

அப்படியே எழுதிக்கொடுத்துவிட்டு ''என்னைச் சிறைக்கு மட்டும் அனுப்பி விடாதீர்கள்'' என்று மீண்டும் கெஞ்சினார்; கண்ணீர் வடித்தார்.

அது நடிப்பாக இருந்தால்தான் என்ன? இருப்பதை வளர்க்க, போனதை மறப்பது இன்றியமையாத தேவை என்று எண்ணினேன். அவருக்கு மேற்கொண்டு தொல்லை வராது என்று சொல்லி அனுப்பினேன்.

அப்பள்ளிக்கு மேற்கொண்டு பணம் போகவில்லை. அது பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டது.

91. புயலாகப் பணிபுரிந்தேன்

வெள்ளத்தில் அகப்பட்டேன்

நான் என் பணியில் புயல்போல் இயங்கினேன். ஒரு நாள் அனுப்பப்பட்டுப் பள்ளியைத் தணிக்கை செய்துவிட்டு, மாலை நான்கு மணிக்குமேல் காட்டூரை நோக்கி நடந்தேன். அவ்வூருக்கு நல்ல பாதை கிடையாது.

நவம்பர்த் திங்களாகையால் நாள் முழுதும் சிறு தூறல் போட்டபடியே இருந்தது. சிறு தூறல் முற்றாது என்ற நம்பிக்கையில் இருந்த குடையை நம்பித் தைரியமாகப் புறப்பட்டேன்.

என்னுடன் என் கடைநிலை ஊழியர் வந்தார். அவர் என்னிலும் பல்லாண்டு மூத்தவர். 'வில்லி' என்று அழைக்கப்படும் பிரிவைச் சேர்ந்தவர்.

அப்பக்கத்து ஊர்கள் அனைத்தும் அவருக்குத் தெரியும். ஒன்றரை மணி நேரத்தில் காட்டூர் போய்ச் சேரலாம் என்று அவர் சொன்னதால் அவருடன் அவ்வூருக்குச் சென்றேன்.

புறப்பட்ட சில மணித்துளிகளில், மழை 'சோ'வென்று கொட்டியது. அக்கம்பக்கத்தில் தங்க இடம் இல்லை.

எனவே, தொடர்ந்து முன்னேறினோம். குறுக்கிட்ட ஆரணி ஆற்றில் இறங்கி நடந்தோம். ஆற்றின் நடுவே மட்டும் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. ஆழம் அதிகம் இராது என்ற நம்பிக்கையில் என் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு போனார்.

வெள்ளம் காலை வாருவதுபோல் விரைந்து ஓடிற்று. இருவரும் கைகோத்து நடந்ததால் சமாளித்தோம்.

மேலும் நான்கு அடிகள் கடந்து விட்டால், வெள்ளத்தைத் தாண்டிவிடுவோமென்ற மகிழ்ச்சியோடு, காலெடுத்து வைத்தேன். நொடிப்பொழுதில் கழுத்தளவு வெள்ளத்தில் தத்தளித்தேன்.

என் ஊழியர் வில்லி சட்டென்று கைகொடுத்தார். என்னைப் பள்ளத்தில் இருந்து தூக்கினார்.

மின்னலின் விரைவில் செயல்பட்டு என்னைக் காப்பாற்றினார்.

அதை உணர்வதற்குமுன், மணற்பரப்பில் காலெடுத்து வைத்தேன்.

ஆற்றில் வெள்ளம் பெருகக் கண்டேன். ஆனால் நான் எப்படியோ பிழைத்தேன். அப்பப்பா இப்போது நினைத்தாலும் எப்படியோ இருக்கிறது. தொல்லை அதோடு முடியவில்லை.

மழை முற்றிற்று. எங்கும் காரிருள் சூழ்ந்தது. இடை இடையே மின்னல் கீற்றுகள் பளிச்சிட்டன; சான்றோர்கள் வழிகாட்டுவதைப் போன்று.

மின்னலின் வெளிச்சத்தை நம்பி, வயல்களின்மேல் மெல்ல நடந்தோம்.

குடை பிடித்து இருந்தும் முழுக்க நனைந்து விட்டேன்.

இளமைப் பருவம் தாங்கிற்று.

அடிமேல் அடியெடுத்து வைத்து நகர்ந்த நாங்கள் நெடுநேரத்திற்குப் பின் ஏரிக்கரையொன்றை அடைந்தோம். அச்சமூட்டும் சூழ்நிலை.

கால் பாவமுடியாத சறுக்கல் நிலம்; ஒரு பக்கம் கரிய பனைமரங்கள்; அவற்றிற்கு இடையே முட்புதர்கள். அங்கங்கே பாம்புப் புற்றுகள்.

மறுபக்கம் வீழ்ந்தால் ஏரி நீரில் விழவேண்டும். இருட்டில் பரந்து கிடந்த ஏரி, கடல்போல் தோன்றிற்று.

ஊழியர் 'இதோ சிறிது தூரமே; பல்லைக் கடித்துக்கொண்டு வாருங்கள்'' என்று தெம்பூட்டிக் கொண்டே வந்தார்.

நீண்ட ஏரிக்கரையின் சகதியில் எப்படியோ நடந்து கீழே இறங்கினோம். ஓரளவு நம்பிக்கை பிறந்தது. மேலும் வரப்புகளின் மேல் நடந்து காட்டூரை அடைந்தோம்.

ஊர்த்தெரு சேறும் நீருமாக இருந்தது. திண்ணை மாடங்களில் அகல்விளக்குகள் மினுக்கின. பல வீட்டுத் திண்ணைகள் காலியாக இருந்தன.

சுழன்று அடிக்கும் மழையைப் பொருட்படுத்தாது, எவரோ ஒருவர் தம் திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

தெருவில் நடந்த எங்களைப் பார்த்து, அவரே குரல் கொடுத்தார்.

''யாருங்க நீங்கள்! இந்தக் கொட்டும் மழையில் இவ்வளவு இருட்டில் எங்கே போகிறீர்கள்?'' என்றார்.

ஊழியர் நான் யார் என்பதைச் சொன்னார். பள்ளியை நோக்கிச் செல்வதைத் தெரிவித்தார்.

அவர் உடனே திண்ணையை விட்டு இறங்கி வந்தார்; எங்களோடு நடந்தார். வழியில் ஆசிரியரைக் கூப்பிட்டுப் பள்ளிச் சாவியை எடுத்து வரச் செய்தார்.

தொடக்கப் பள்ளிக்குள் நுழைந்தோம். காட்டுரார் என் ஊழியரைக் கடிந்து கொண்டார்.

''அய்யாவுக்கு இவ்வழி புதிது. மழைக்காலத்தில் கடப்பது, அதுவும் மாலையில் கடப்பது எவ்வளவு பெரிய ஆபத்து என்பது தெரியாது! நீ இந்தப் பக்கத்து ஆள். உனக்குக் கூடவா தெரியவில்லை? அடைமழையிலா அழைத்து வருவது?'' என்று வெகுண்டார்.

நாங்கள் இருவரும் ஊமைகளாகி விட்டோம்.

வழிகாட்டியவர் தம் வீட்டிற்கு விரைந்தார். கால் மணி நேரத்தில் உணவைக் கொண்டு வந்தார். உண்டு களைப்பை ஆற்றிக் கொண்டோம்.

காலைச் சிற்றுண்டியும் கொண்டு வருவதாகக் கூறிவிட்டு எங்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.

நடந்த அலுப்புத் தீர நிம்மதியாக உறங்கினேன். பொழுது விடிந்ததும் நானாக எழுந்திருக்கவில்லை.

ஊழியர் எழுப்ப எழுந்தேன். உப்புமாவும் காப்பியும் வந்தன. உண்டு நிறைவு கொண்டேன்.

உப்பளம் கண்டேன்

அப்பள்ளியைப் பார்த்துவிட்டு அங்கிருந்து, மீன் துறையால் நடத்தப்பட்ட மீனவர் தொடக்கப் பள்ளிக்குச் சென்றேன். அன்று மழை ஓய்ந்திருந்தது.

நீண்ட நடைக்குப்பின் அப்பள்ளியை அடைந்தேன். அப்பள்ளியில் மீன்வலை பின்னுதல் மாணவர்களுக்குக் கைத்தொழிலாகக் கற்பிக்கப் பட்டது.

பயனுள்ள கைத்தொழிலைச் சேர்த்து இருந்தது ஒன்றே அங்குள்ள சிறப்பு; மற்றப்படி பிற பள்ளிகளில் கற்பிக்கும் பாடங்களே கற்பிக்கப்பட்டன.

அந்தப் பள்ளியைப் பார்த்தபின் ஊர் திரும்ப வேண்டும். ஆனால் அடுத்த நாள், ஞாயிற்றுக்கிழமை. எனவே, ஆய்வாளரிடம் உரிமை பெற்றுக் கொண்டு சென்னைக்குச் சென்றேன்.

அதற்காக அத்திப்பட்டு புகைவண்டி நிலையத்திற்கு நடந்து போகையில், வழியில் உப்பளங்களைக் கண்டேன். அதற்கு முன் நான் உப்பளங்களைக் கண்டதில்லை. அது எனக்குப் புதுமையான காட்சியாக இருந்தது.

காந்தியார் நடத்திய உப்புப் போராட்டம் நினைவுக்கு வந்தது. வல்லவருக்குப் புல்லும் போர்க்கருவி. காந்தியாருக்கு அன்று மலிவாகக் கிடைத்த உப்புகூட போராட்ட மையமாயிற்று. நமக்கோ, தன் பெண்டு, தன் பிள்ளை எல்லாமாக இருந்ததால், கோடிக்கணக் கானவர்கள் வேடிக்கை பார்ப்பதோடு நின்று விட்டோம். இந்நினைவுகள் எழுந்தன.

புகார்க் கடிதம்

நான் பொன்னேரி, இளந்துணை ஆய்வாளராக இருந்தபோது மறக்க முடியாத புகார்க் கடிதம் ஒன்று எனக்கு வந்தது. அதுவும் பதிவு அஞ்சலில் வந்தது. புகார் என்ன?

''எங்கள் ஊர் ஓராசிரியர் பள்ளிக்குப் புதிய ஆசிரியர் ஒருவர் வந்திருக்கிறார். அவர் சரியாகப் பாடம் சொல்வதில்லை. இவருக்கு முந்தி இருந்தவரும் சரி, அவருக்கு முந்தியிருந்தவர்களும் சரி, பூகோள பாடத்தை எவ்வளவு சிறப்பாக நடத்தினார்கள் தெரியுமா?

''முதலில் உள்ளூர் பூகோளத்தில் தொடங்குவார்கள். அப்புறம் தாலுக்கா பூகோளத்தைச் சொல்லிக் கொடுப்பார்கள். அடுத்து? ஜில்லா பற்றி விரிவாகச் சொல்லுவார்கள்.

''பிறகு, மாகாணம், நாடு, கண்டம், உலகம் பற்றிய பூகோளத்தைப் படிப்படியாகக் கற்பிப்பார்கள். நானும் அப்படியே படித்திருக்கிறேன்.

''இப்போதுள்ள ஆசிரியர் அப்படிச் சொல்லிக் கொடுப்பதில்லை. பெல்லாரிச் சிறுவர்கள், காங்கோச் சிறுவர்கள், எஸ்கிமோ சிறுவர்கள் என்று ஏதேதோ கதைகளைச் சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்துகிறார். அப்புறம் படிப்பு எப்படி வரும்?

''நம் பிள்ளை கெட்டுவிடக் கூடாதே என்று எண்ணிப் பள்ளிக்குப் போய் ஆசிரியரைக் கண்டு கேட்டேன். அவர் எந்த விளக்கமும் சொல்ல மறுத்தார்.

''எனக்குச் சம்பளம் படியளக்கும் பிரசிடெண்ட் கேட்கட்டும்; அல்லது ஆய்வாளர் கேட்கட்டும். பாடத்தைப் பற்றிக் கேட்க நீங்கள் யார்? என்று மதியாமல் பேசிவிட்டார்.

''என்னை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை. அவரை ஒழுங்காகப் பாடம் சொல்ல வைத்தால் போதும்'' என்று புகார் எழுதியிருந்தார்.

அது மொட்டைக் கடிதம் அல்ல. உண்மையான பெயரும், சரியான முகவரியும் உடைய கடிதம்.

இதிலே கண்டு இருக்கும் புகார் உண்மைதானா? அதற்குப் பள்ளி ஆசிரியர் பொறுப்பாளியா?

92. நீதி எங்கே?

குற்றச்சாட்டு சரியா?

பூகோள பாடத்தைப் பழைய முறைப்படி சொல்லிக் கொடுக்காமல், கதையாகச் சொல்லிக் காலங்கழிக்கிறார் என்னும் குற்றச்சாட்டு மெய்யா பொய்யா என்பது எனக்கு வெளிச்சமாகிவிட்டது.

அது போதுமா?

பொறுப்புள்ள பெற்றோர்களுக்குத் தெரியவேண்டாமா? அது பற்றிப் புகார் செய்தவருக்காகிலும் விளக்கிக்கூறி இருக்கவேண்டும்.

தொடக்கப்பள்ளி ஆசிரியரும் அதைச் செய்யவில்லை. ஏன்?

பொதுமக்களைப் பொருட்படுத்தாது இருத்தல் நம் நெடுநாளைய போக்கு. மக்களைப் புல்லாக ஒதுக்குதல் இந்நாட்டுத் தீங்கு, அன்னியர் ஆட்சிக் காலத்திலும் அத்தகைய அகந்தை குறையவில்லை; மாறாகக் கூடிற்று. முப்பத்தேழு ஆண்டு தன்னாட்சியும் நிலைமையைச் சிறிதும் மாற்றவில்லை.

அரசு ஊழியர்கள் பொதுமக்களின் ஊழியர்கள்; பொதுமக்களை மதிக்க வேண்டிய ஊழியர்கள். பொதுமக்களின் நலனுக்காகவே உழைக்க வேண்டியவர்கள். பொதுமக்களின் எல்லாப் பிரிவினரின் நம்பிக்கைக்கு உரியவர்களாகச் செயல்பட வேண்டியவர்கள்.

இவ்வுணர்வுகள், முப்பத்தேழு ஆண்டு மக்கள் ஆட்சிக்குப் பிறகும் பரவித் தழைக்கவில்லை. அப்படியிருக்க, நாற்பதாண்டுகளுக்கு முன்பு, நாலெழுத்து கற்று, நாலு பணம் கையில் ஒழுங்காகப் பார்த்த ஆசிரியர், ஊர்க்குடியானவரை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

சரி! ஆய்வாளராகிய நான் என்ன செய்தேன்? புகார் செய்தவருக்குக் கடிதம் எழுதினேன். ஒரு நாளையும் மணியையும் குறிப்பிட்டு,

அவ்வேளை என்னை அவ்வூர்ப் பள்ளியில் வந்து காணும்படி தெளிவாக எழுதினேன்.

அக்கடிதத்தை எழுதிய நாளுக்கும் குறிப்பிட்ட நாளுக்கும் போதிய இடைவெளி இருந்தது.

திட்டமிட்டபடி, குறிப்பிட்ட பள்ளிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

பள்ளியைப் பார்வையிட்டுக் கொண்டு இருக்கையில், புகார் செய்தவர், என்னுடைய கடிதத்தோடு வந்து சேர்ந்தார். தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பெஞ்சின்மேல் உட்காரச் சொன்னேன். முதலில் உட்கார உடன்படவில்லை. இரண்டாம் முறை கூறியபின் உட்கார்ந்தார். அப்புறம்?

புதிய பாடத்திட்டம்

புதிய பாடத் திட்டங்களைக் கொண்ட பதிப்பு ஆசிரியரிடம் இருந்தது. அதை வாங்கினேன். புகார் கூறி வந்தவரிடம் கொடுத்தேன்.

ஒரு பக்கத்தைக் காட்டி, படித்துப் பார்க்கச் சொன்னேன். படித்தார்.

சில வினாடிகளில் அவர் கண்கள் வியப்பைக் காட்டின. பூகோள பாடத்திட்டத்தை முழுமையாகப் படித்தார். பிறகு முன்பக்கத்திற்கு வந்தார்.

பொதுக்கல்வி இயக்குநர் ஒப்புதல் பெற்ற பாடத்திட்டம் என்று தெளிவாக அச்சடிக்கப்பட்டிருந்தது.

அதைப் படித்து முடித்ததும்.

''வாத்தியார் அய்யா, அன்றைக்கே, இதைக் காட்டியிருந்தால், உங்களுக்கு வீணாகப் புகார் எழுதியிருக்க மாட்டேன். இத்தனை நாள் பொருமலுக்கும் இடம் இருந்திராது.

''யாரோ பெரிய அதிகாரிகள், மற்றவர்கள் வீட்டுப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு விளையாடுகிறார்கள் என்பது இப்போதுதான் விளங்கிற்று. தெரியாமல் ஆசிரியர் மேல் பழி சொல்லிவிட்டேன். பழியோரிடம் பாவம் ஓரிடம் என்பது மெய்யாகிவிட்டது.

''தங்களுக்கு இத்தொல்லை கொடுத்ததற்கு மன்னித்து விடுங்கள். வாத்தியார் அய்யாவும் இதை மறந்துவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார்.

''நல்லதுங்க! குழந்தைகளுக்குப் பிற குழந்தைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளவே விருப்பம் எழும். ஆகவே, முதலில், பன்னாட்டுக் குழந்தைகளைப் பற்றிக் கதை வடிவில் சொன்னால், அந்நாடுகளைப் பற்றி ஆர்வம் பிறக்கும்.

''பிறகு பூகோள பாடம் விரிவது கவர்ச்சியாக இருக்குமென்று எண்ணி, இப்படிப் பாடத்திட்டம் தீட்டியுள்ளார்கள்'' என்று விளக்கினேன்.

''நன்றிங்க அய்யா!'' என்று கூறிவிட்டு, விடைபெற்றுக் கொண்டார். அவர் சென்றுவிட்ட பிறகு,

ஊருடன் பகைக்காதீர்

உடம்பு பெரிது; உள்ளங்காலில் முள் தைத்த இடமோ சிறிது. அச்சிறியதைப் பற்றிக் கவலைப்படுவானேன் என்று கவனக்குறைவாக நடப்பது பெரும் கேடாகலாம். உள்ளூர்ப் பகை, கூடியவரையில் விலக்க வேண்டியது.

''நாலு மணித்துளிகள் செலவிட்டு, அவருக்குப் பாடத்திட்டத்தைக் காட்டியிருந்தால் புதிய நண்பர் ஒருவர் உங்களுக்குக் கிட்டியிருக்கலாம்.

''சிறு துரும்பும் பல்குத்த உதவும். குடியானவர் நட்பு எதற்குப் பயன்படுமென்று ஏமாறாதீர்கள்.

''ஊருடன் ஒன்றி வாழக்கற்றுக் கொள்ளுங்கள்'' என்று ஆசிரியரிடம் கூறினேன். அடுத்த ஊர்ப் பள்ளிக்குப் பயணம் ஆனேன்.

1940 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பம்பரம்போல் சுழன்று வேலை பார்த்தேன். முப்பது பள்ளிகளின் ஆண்டுத் தணிக்கையையும் நாற்பத்து நான்கு பள்ளிகளின் பார்வையையும் முடித்தேன்.

ஒரே திங்களில் இவ்வளவு வேலை செய்தவர்கள் இல்லையென்று, அலுவலக எழுத்தரும் ஆய்வாளரும் என்னிடம் வலியப் பாராட்டினார்கள்.

தொடக்கம் நன்றாயிருக்கிறதே, என்று எண்ணி என்னுள் மகிழ்ந்தேன்.

நவம்பர்த் திங்கள் முடிந்ததும் அத்திங்களின் நாட்குறிப்புகளுக்குப் படி எடுத்தேன். தணிக்கை அறிக்கைகளுக்கும் படிகள் எடுத்தேன். ஆய்வாளர் வழியாக மாவட்டக் கல்வி அலுவலருக்கு அவற்றை அனுப்பி வைத்தேன். இது ஆய்வாளரின் கடமைகளில் ஒன்று.

பிறகு டிசம்பர் திங்களுக்கான தணிக்கையிலும் பார்வையிலும் மூழ்கினேன்.

குறைகளைத் திருத்துங்கள்

முதல் சனிக்கிழமை அன்று மாலை சென்னைக்குச் சென்றேன். அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை மாவட்டக் கல்வி அலுவலர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் வீட்டிற்குச் சென்றேன்.

அவர் இல்லம் தியாகராய நகரில் இருந்தது. அவரை அங்குக் கண்டு வணங்கி, என்னுடைய ஒரு திங்கள் சாதனையைத் தெரிவித்தேன்.

அவருடைய மகிழ்ச்சியை அவரது கண்களில் கண்டேன்.

மெல்ல வேண்டுகோள் ஒன்றை வெளியிட்டேன்.

அதைக் கேட்டபின், அப்பெரியவர்,

''என்ன! என் நீண்ட பணிக்காலத்தில், இப்படிக் கோரிய எவரையும் நான் கண்டதில்லை. நீர்தான் முதன்முதலாக இப்படி வேண்டிக் கொள்ளுகிறீர். இது நல்ல பண்பாகவே தோன்றுகிறது'' என்று வியப்போடு பதில் கூறினார்.

''அப்படிங்களா அய்யா! நான் இளையவன்; வேலைக்குப் புதியவன்; எந்நிலையிலாவது, இருபத்தேழு ஆண்டுகள் இந்தக் கல்வித் துறையில் பணியாற்ற வேண்டியவன். அதனால்.....'' என் பேச்சு முடியவில்லை.

அதற்குள் திருவாளர் சச்சிதானந்தம் பிள்ளை குறுக்கிட்டார்.

''மீண்டும், இப்படியொரு இளைஞரை இப்போதே முதன்முறை காண்கிறேன்'' என்று சொல்லி, தமது வியப்பைக் காட்டினார். அப்படி என்ன கேரினேன்?

''அய்யா! நான் ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளை அனுப்பி விட்டேன். திங்கள்தோறும் அனுப்பிக்கொண்டு இருப்பேன். அவற்றைத் தாங்கள் பார்த்து மதிப்புரை வழங்க இருக்கிறீர்கள்.

''நிறை இருந்தால், எழுத்து வாயிலாகத் தெரிவித்து விடுவீர்கள். 'குறைகள் அதிகமாக இருந்தால், அவ்வளவையும் சுட்டிக் காட்டினால் தொடக்க நிலையில் உள்ளவனுக்கு வேலைக்கே தீங்கு வரலாம்; எடுத்துக் காட்டாமல் விட்டால், குறையை மறைத்த குற்றம் வரும்; தர்ம சங்கடமாயிருக்கிறதே' என்று தாங்கள் வேதனைப்படக்கூடும்.

''நான் திங்கள்தோறும் தாங்கள் குறிப்பிடும் நேரம், இங்கு வந்து தங்களைக் காண்கிறேன். எந்தெந்தக் குறைகளைக் கோப்பில் பதியாமல், நேரில் சொல்லித் திருத்தலாமோ, அவற்றை என்னிடம் சொல்ல வேண்டுகிறேன்.

''அப்படி உதவி செய்தால் அப்போதைக் கப்போது சீராவேன். என்னுடைய செயல் நேர்த்தி அதிகமாகும். நான் திறமையில் வளர்ந்துகொண்டே இருக்க வாய்ப்பாக அமையும். அப்படி வளர்வது நான் பணியாற்றும் கல்வித் துறைக்கும் நல்லதாகும்.

''தயவு செய்து இத்தகைய உதவியைச் செய்யுங்கள் அய்யா'' மேற்கூறியதே, என் புதுமையான வேண்டுதல்.

அந்த வேண்டுகோள், நான் கையாண்ட தந்திரமல்ல. அது என் இயல்பை ஒட்டியது. செயல்திறமையின் வளர்ச்சிக்கு வரம்பு இல்லை. அது எல்லா வயதிலும் வளர்ந்துகொண்டே இருக்கக்கூடும். அத்தகைய நம்பிக்கையால் பிறந்தது அவ்வேண்டுகோள்.

அது, உண்மையான உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிறந்தது; இன்றும் என்னோடு இருக்கும் இயல்பு.

இப்போதும் பொழுது போகாத வேளை, என் பழைய எழுத்துகளைத் திரும்பப் படித்துப் பார்ப்பது உண்டு.

அவ்வேளை, 'அவ்வெழுத்துக்கள் மேலும் கூர்மை பெறலாம்; தெளிவு பெறலாம்; வலிமை பெறலாம்' என்று உணர்வதுண்டு. அது, பின்னர் வரும் எழுத்துப் பணிக்கு, செழுமை சேர்க்க உதவுவதை உணர்கிறேன்.

நான் இன்றும் அறிவில், தெளிவில், பண்பில், சமாளிக்கும் திறனில் வளர்ந்துகொண்டு இருப்பதாகவே கருதுகிறேன். அகந்தை என்று ஒதுக்காதீர்கள். எழுபத்திரண்டு வயதில் வளர்ச்சியா என்று சிரிக்காதீர்கள்!

முதல் திங்களிலேயே மிகப்பெரிய தணிக்கை சாதனை புரிந்துள்ளேன். இந்த இனிய நினைப்பில், மகிழ்ச்சியோடு ஆண்டுத் தணிக்கையை நடத்திக் கொண்டிருந்தேன்.

நீதியே இல்லையா?

டிசம்பர் இருபதாம் நாள் வாக்கில், அஞ்சல் ஒன்று வந்தது. அது அதிர்ச்சி தந்தது. அது என்ன?

நவம்பர்த் திங்கள் நான் செய்த தணிக்கைகள் பற்றிய அறிக்கைகளின் மேல் மதிப்புரை; அது என்ன சொல்லிற்று?

நிறைய வேலை செய்ததைப் பற்றி ஒன்றுமே பாராட்டுச் சொல்லவில்லை. ஆனால் குறைகாண முயன்றது.

உண்மை தானாகப் பேசாது போலும். நல்லதைச் சுட்டிக்காட்டு வதற்கும் வேண்டியவர்கள் தேவை போலும்.

''பள்ளிப் பார்வைகளைப் பொறுத்த மட்டிலும் நான்கு பள்ளிகளில் முந்திய பார்வைக்கும் இப்போதைய பார்வைக்கும் இடையே, போதிய காலம், கழியவில்லை. மூன்று பள்ளிகள் நவம்பர்த் திங்களில் தான் முதன் முறையாகப் பார்வையிடப் பட்டன.

இரண்டும் பெரிய குறைகள்.

''சரியானபடி திட்டமிடாத, முறைகேடான, இப்பார்வைகள் கண்டிக்கத் தக்கன. வருங்காலத்தில், இப்படி நடந்தால் தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இளந்துணை ஆய்வாளர் எச்சரிக்கப்படுகிறார்.'' இப்படி வந்தது மதிப்பீட்டு ஆணை.

படித்தேன்; தலை சுற்றிற்று; நீதியே இல்லையா என்ற கேள்வி மின்னிற்று. கேட்க முடியுமா? அழவேண்டும்போல் இருந்தது. அழுது பயன்? மீண்டும் கண்டனத்தைப் படித்தேன்.

அவ்வாணை அனுப்பிய மண்டலப் பள்ளிகளின் ஆய்வாளர் மிரட்டலுக்குப் பெயர் பெற்றவர். குற்றம் காண்பது ஒன்றையே அறிந்தவர். ஏதாவது நிறையைக் கண்டபோதும் அதை உள்ளக் கிணற்றில் போட்டுவிட்டுக் குறைபோலத் தோன்றுவனவற்றை மிகையாக்கி மிரட்டும் புலி அவர் என்பது கல்வித் துறையிலுள்ள அனைவருக்கும் நன்கு தெரிந்ததே.

அவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும், என்று என் மனம் என்னைத் தேற்ற முயன்றது.

மேலும் மண்டல ஆய்வாளர் அலுவலகங்களை 'மானேஜர்களே' ஆட்டிப் படைத்தார்கள் என்பது அந்தக் காலத்தில் நிலவி வந்த அக்கப்போர்.

'மிரட்டல் புத்தியும் உருட்டல் திறமையும் இணைந்தால், நீதி மயங்கத்தான் செய்யும்' என்று எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொள்ள முயன்றேன்.

'அக்டோபர்வரை, மூன்று பள்ளிகளை முதல்முறையாகக் கூடப் பார்க்காது தள்ளிப்போட்டது, முன்பிருந்தவர்கள் குறையே ஒழிய என் குறையல்ல' என்று பதில் எழுதினால் என்ன?

இப்படியொரு எண்ணம் மின்னிற்று. அடி மனம் 'சண்டையை வளர்க்காதே' என்றது, அடுத்த நொடி.

'உன் கடமையை உண்மையாகச் செய்! பொறுப்பாகச் செய்! வந்தது வரட்டும்! 'நன்றும் தீதும் பிறர்தர வாரா!' இப்படியொரு இதமான சிந்தனை.

காலம் மெல்லப் புண்ணை ஆற்ற உதவிற்று. ஓயாத தணிக்கை வேலை புண்ணை நினைக்க நேரம் விடவில்லை.

'புண்பட்டவர்கள் வேலையில் மூழ்கிவிடுவது நல்லது' என்பது நான் இளமையில் கற்ற பாடம்.

93. திடீர் மாற்றல்

ஆசிரியர்களின் அன்பைப் பெற்றேன்

'கற்றபின் நிற்க' என்பது பொதுமறை. அதைப் பின்பற்ற முயன்றேன்.

முதல் திங்களிலேயே எவரும் செய்யாத அளவு பணி செய்திருந்தும் முன்னே இருந்தவர்கள் புரிந்த தவறுகளுக்கு என்னைக் குறை சொன்னதால் ஏற்பட்ட புண்ணை ஆற்றிக்கொள்ளும் பொருட்டும் டிசம்பர்த் திங்களிலும் அலைந்து அலைந்து, தணிக்கை செய்தேன்; பள்ளிகளைப் பார்வையிட்டேன்.

ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்குச் சென்றேன்; உரையாற்றினேன்.

ஆசிரியர்களின் நல்லெண்ணத்தைத் தாராளமாகப் பெற்றேன்.

என்னை இயக்க வேண்டியவர், அடிப்படையில்லாத குறையைக் கற்பித்துத் தொல்லை கொடுப்பினும் என்னால் வழி நடத்தப்பட வேண்டிய ஆசிரியர்கள், பெருமதிப்புக் கொண்டிருந்ததை உணர்ந்தது, நன் மருந்தாக இருந்தது.

'வாழ்க்கை வசந்தமும் அல்ல, புயல் சீறும் கார்காலமும் அல்ல! இலையுதிர் காலமும் அல்ல! இத்தனையும் இணைந்தது! வெவ்வேறு அளவில் இணைந்தது! ஒரே நேரத்தில் பலவும் இணைந்தது!' எனவே, 'மண்டை உள்ள வரை சளி உண்டு. வாழ்க்கை உள்ளவரை தொல்லை உண்டு' என்பது உலக வழக்கு.

நான் மட்டும் பொது விதிக்கு விலக்காக முடியுமா? முடியாது.

நாட்டை விட்டுக் காடேகி, கடுந்தவம் புரிவோர், எதிரிட்டுச் செல்ல வேண்டிய சிறுமைகள் ஒருவகை.

நாட்டில், நாட்டு மக்களில் ஒருவனாகச் சாதாரண வாழ்க்கை வாழ்பவனும் எதிரிட்டு வெல்லவேண்டிய சின்னஞ்சிறு கவலைகள் பலவாகும்.

சாதனையில் முதல் என்று என்னை நானே பாராட்டிக் கொண்டிருக்கையில், மூத்த ஆய்வாளர்களின் பட்டறிவினைத் துணையாகக் கொண்டு, திறமையை வளர்த்துக்கொண்டு, முதல் தரமான ஆய்வாளனாக விளங்கத் துடிக்கையில், இரண்டாவது இடியொன்று எதிர்பாராமல் என்மேல் வீழ்ந்தது.

டிசம்பர்த் திங்களின் மூன்றாவது சனிக்கிழமை, முற்பகல்; ஓர் ஆசிரிய மையக் கூட்டத்தில் பேசினேன்.

பிற்பகல், மற்றோர் மையக்கூட்டத்தில் உரையாற்றினேன். அடுத்த நாள் விடுமுறை அல்லவா? வழக்கம்போல் சென்னைக்குச் செல்ல முயன்றேன்.

சென்னை நெல்லூர் நெடுஞ்சாலையின்மேல் இருப்பது சோழவரம் என்னும் ஊர். அவ்வூர் பேருந்து நிலையத்தண்டை அமர்ந்திருந்தேன். எதற்காக?

சென்னை செல்லும் பேருந்துக்காக.

பேருந்து வந்ததா?

நெடுநேரம் வரவில்லை.

பிறகு? இரண்டொன்று நிற்காமலே விரைந்தோடின. ஏன்? ஏற்கெனவே, புளி அடைப்பதுபோல் ஆட்களை ஏற்றிக்கொண்டு வந்ததால்.

வெளிச்சம் விரைந்து, மிக விரைந்து குறைந்தது! இருள் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தது.

அந்நிலையில், என்னை வழியனுப்பக் காத்திருந்த ஆசிரியர். எனக்கு மாற்று ஆலோசனை கூறினார்.

''அய்யா! இப்போதே இருட்டிவிட்டது. அடுத்த பேருந்து எப்போது என்று சொல்ல முடியாது. அகாலத்தில் பயணம் செய்ய வேண்டாம்.

''தயவு செய்து, இன்றிரவு, இவ்வூர்ப் பள்ளியில் தங்கிவிடுங்கள். நொடியில் உணவுக்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன். பொழுது விடிய ஒரு பேருந்து வரும்; அதில் எப்படியும் இடம் கிடைக்கும்.

''காலை எட்டு ஒன்பது மணிக்குள் வீடுபோய்ச் சேர்ந்துவிடலாம்'' என்று மெல்லச் சொல்லிக் கொண்டிருந்தார்.

இரவு தங்கினால், ஆசிரியர் தயவில் உணவுபெற நேரிடும். அப்புறம் மெல்ல மெல்ல உரிமை கொண்டாடத் தொடங்கிவிட்டால் எப்படி எப்படிப் போய் முடியுமோ?'' இப்படிக் குழம்பிக் கொண்டிருந்தேன்.

அவ்வேளை, பொன்னேரியில் இருந்து ஒரு தூதர் வந்தார். சில மீட்டர் தொலைவில் அடையாளம் தெரிந்தது.

ஆம், பொன்னேரிப் பள்ளி ஆய்வாளரின் கடைநிலை ஊழியர் ஈருருளியில் என்னை நெருங்கினார்.

'நல்ல செய்தியாக இராது' என்று நினைத்தேன். இமைப்பொழுதில் என் நினைப்பு உறுதியாயிற்று.

தஞ்சைக்கு மாற்றல்

வந்தவர், என்னிடம் ஒரு கடிதத்தை நீட்டினார். பதற்றத்தோடு அதை உடைத்துப் பார்த்தேன். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை.

சமாளித்துக்கொண்டு இரண்டாம் முறை படித்தேன்.

அது என்ன சொல்லிற்று?

ஆணையிட்டது.

என்ன ஆணை?

''இளந்துணை ஆய்வாளராகிய நெ.து. சுந்தரவடிவேலு பொன்னேரிப் பதவியை இன்றே திரு. அமிர்தலிங்க தேசிகரிடம் ஒப்படைக்க வேண்டும். உடனே தஞ்சாவூர் சரகத்தில் இளந்துணை ஆய்வாளராகச் சேரவேண்டும்.

''புதிய இடத்தில் சேர்வதற்கான வழக்கமான காலத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. உடனே தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டும்'' என்பது ஆணை.

'அரசு ஊழியம், தேள் கடிகளைப் பொறுத்துக் கொள்வது' என்பதை மட்டும் முன்னர் தெரிந்து கொண்டிருந்தேன்.

'அநீதிகளையும் ஏற்றுக் கொண்டால்தான், அரசு ஊழியத்தில் இருக்க முடியும்' என்ற அரிச்சுவடியையும் அன்று கற்க நேரிட்டது.

நெடுங்காலம் காலியாக இருந்த ஓர் இடத்தில் சேர்ந்த ஒருவரை இரண்டு திங்களுக்குள் வேறு இடத்திற்கு மாற்றுவது ஊழியருக்குத் தொல்லை; பணித்தொடர்பிற்குக் கேடு; தேவையற்ற பயணப்படிகளாகப் பொதுப்பணம் பாழ்.

மேலும், 'இன்று இங்கு இருப்போர், நாளை எங்கிருப்பாரோ என்னும் விபரீதச் சுழலில், எந்த ஆய்வாளர் எந்த ஆசிரியரை வேலை வாங்க முடியும்?' ஓடுகாலுக்கு வேலை வாங்க வேண்டுமென்ற முனைப்புதான் முளைக்குமா?

அரசு ஊழியருக்கு அநீதி

தன்னாட்சி இந்தியாவின் அரசு ஊழியம் பயனற்ற ஊழியமாக மாறிவிட்டு இருப்பது எதனால்?

எப்பணியில், எவ்வளவு காலம் விட்டு வைப்பார்கள் என்னும் உறுதி இன்மை முதற்காரணம்.

அரசு ஊழியர்களை, பொம்மலாட்டப் பொம்மைகளாக மாற்றுவதில், அடுத்து அடுத்து வரும் ஆட்சிகளுக்குள், தலை தெறிக்கும் போட்டி! ஊமைக் குடிமக்கள் நிறைந்த நாட்டில் அப்போட்டியில், இமாலய வெற்றிகளைக் குவித்தல்.

அமைப்புகளுக்கு அப்பாற்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக் கனல், சான்றோர்களைக் கூடச் சுட்டுப் பொசுக்க வழி செய்துவிட்டு, காலந்தள்ளும் ஆட்சியாளர்கள் கொடிகட்டிப் பறத்தல்.

இவையும் பிறவும் உச்சமட்ட அலுவலர்களைக்கூட, மாட்டு வண்டியின் முன்பளு, பின்பளுவாக இருக்கும் உளநிலைக்குப் பக்குவப்படுத்திவிட்டன.

இந்நோய் புதியதல்ல; பழையது. வெள்ளைக்காரன் ஆட்சியின் போது தீய்ந்த அருகம்புல்லாக இருந்தது; தன் ஆட்சித் தாயகத்தில் நன்கு வேர்விட்டுத் தழைத்து நிற்கிறது.

மாறுதல் ஆணையை நான் படித்து முடித்ததும் அதைக் கொண்டு வந்தவர், மேற்கொண்டு செய்தி சொன்னார்.

''புதிய அய்யா, மாலை வண்டிக்குப் பொன்னேரி வந்து சேர்ந்துவிட்டார். அவரே மாறுதல் ஆணையைக் கையில் கொண்டு வந்து கொடுத்தார். அவர் இன்றே பணியில் சேர்ந்தாக வேண்டும்.

''வெளியே போயிருந்த பெரிய அய்யா (ஆய்வாளர்) வரத் தாமதமாயிற்று. அவர் வந்து ஆணையைப் பார்த்ததும் என்னை சைக்கிளில் உங்களிடம் அனுப்பினார்.

''நல்ல வேளை, நீங்கள் சென்னைக்குப் புறப்படுவதற்கு முன் இங்கு வந்தேன்.

''சென்னைக்குப் போகாமல், நேரே பொன்னேரிக்குத் திரும்பி வரட்டும். தேசிகரிடம் வேலையை மாற்றிக் கொடுத்து விட்டுச் செல்லட்டும் என்று அய்யர் சொல்லிவிட்டு வரச் சொன்னார்'' என்று தகவல் கொடுத்தார்.

எனக்குத் துணையாக நின்று கொண்டிருந்த ஆசிரியர் பதறினார்.

ஆசிரியரின் கோபம்

திருட்டுப் புரட்டுச் செய்தவர்களை விடுவிக்கத்தான், புதிய அலுவலர், ஆணையும் கையுமாக வருவார். சாதாரண மாமூல் மாறுதலுக்குப் போதிய முன் அறிவிப்பு வேண்டாமா?

''நான்கு மணிக்கு வந்து, ஆறு மணிக்குள் இடத்தைக் காலிசெய் என்பது பெரிய அநீதிங்க.

''இது உலகப்போர் நடந்து கொண்டு இருக்கிற காலம்; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களோ சட்டமன்றமோ இல்லை. எனவே அதிகாரிகள் அட்டகாசத்திற்கு அளவில்லை. அவர்கள் 'வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டையாக' இருக்கிறது.

''இப்படியே அடிக்கடி மாற்றுவது, பொன்னேரிக்குச் சாபம் ஆகிவிட்டது. இங்கே இருக்க இசைவோரை விட்டு வைப்பதில்லை; விரும்பாதவர்களைப் போட்டுப் போட்டு, ஆண்டுக்கு நான்கு ஆய்வாளர்களைக் காண வைக்கிறார்கள்.

''அய்யா! அளவுமீறிப் பேசுவதாகத் தயவுசெய்து நினைக்காதீர்கள்.''

- ''திருவொற்றியூர் சண்முகம், மாவட்ட ஆட்சிக்குழுத் துணைத் தலைவராக இருந்தவர். ஆட்சியாளருக்குப் போர் ஆதரவிற்கு அவரைப் போன்றவர்களுடைய உதவி தேவை. இப்போது அவர் சொல்வதை அதிகாரிகள் கேட்பார்கள். அவரைப் பிடித்து மாறுதல் ஆணையை மாற்றிவிடுவோம்.

''நாளைக் காலை நானே உங்களை அவரிடம் அழைத்துக் கொண்டு போய், இதை முடித்துக்கொடுக்கிறேன். நீங்கள் பொன்னேரிக்குச் செல்ல வேண்டாம்; பதவியைப் புதியவரிடம் ஒப்படைக்க வேண்டாம்'' என்று வேண்டினார்.

திருவொற்றியூர் சண்முகம் எனக்கு வேண்டியவர் என்பதை நான் அவரிடம் காட்டிக் கொள்ளவில்லை.

ஆணைக்குக் கட்டுப்படுதல்

எனக்குச் சபலமும் ஏற்படவில்லை. சரியோ தவறோ, எனக்கென்று சில முறைகளை நான் முடிவு செய்து வைத்துக் கொண்டிருந்தேன்.

எவரோ, சிலரோ, பலரோ பிழைப்பதற்கான வாய்ப்புகள் அல்ல பொதுத்துறை அலுவல்களும் பணிகளும்.

பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய சில பல தொண்டுகளைத் திறமையாகவும் காலத்தோடும் ஆற்றுவதற்கே அவை உள்ளன.

எனவே, பொதுமக்கள் நலனே முன்னே நிற்க வேண்டும். பணியாளர் வளமும் வசதியும் முக்கியமல்ல.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு செம்மையாகச் செயல்பட விரும்பும் எவரும் கற்றுக்கொள்ள வேண்டிய முதற்பாடம், கட்டுப்படுதல். ஆணைகளுக்குக் கட்டுப்படுதல், கசப்பான ஆணைகளுக்கும் கட்டுப்படுதல் என்பதாகும்.

கட்டுப்படக் கற்றுத் தேர்ந்தவனே, மற்றவர்களை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தி வழிநடத்த இயலும்.

என்னுடைய மாறுதல் ஆணையைப் பிறப்பித்தவருக்கு, அதற்கான உரிமை உண்டு. போதிய அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும் என்பதும் ஓரளவு நீதி. 'சேரும் நாளை' வெட்டியதும் கொடுமை. அதனால், அதற்குக் கீழ்ப்படியாதிருக்க எனக்கு உரிமை இல்லை என்பது என்னுடைய அப்போதைய முடிவு.

என் பணிக்காலம் முழுவதும் அடுத்து அடுத்து அநீதிக்கு ஆளான போதும் இம்முடிவின் அடிப்படையே எனக்கு எதையும் தாங்கும் இதயந் தந்தது.

அதைப் பெற்றிராவிட்டால், ஒவ்வொரு முறையும் எதிர்ப்பு தெரிவித்து இருப்பேன்; செல்வாக்கைப் பயன்படுத்தியிருப்பேன்; சிலபோது வெற்றியும் பெற்றிருக்கலாம்; அவ்வெற்றிகள் எனக்கு வேண்டுமானால் பயன்பட்டிருக்கலாம்; ஆனால் பொது நன்மையைக் கெடுத்திருக்குமே!

தியானத்தில் அமர்வோன், அனைத்தையும் மறந்து, ஒன்றே ஒன்றை மட்டுமே ஆழ்ந்து கவனத்துடன் சிந்திப்பதால்தான் சித்தனாகிறான்.

94. தஞ்சைப் பயணம்

அமிர்தலிங்கரை நம்பினேன்

அரச ஊழியத்தில் இருப்பவன், எள்ளளவாவது பயன்பட விரும்பினால், 'பொதுநலன், மேலும் பொதுநலன், தீதில்லாப் பொதுநலன்' என்றே தியானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

சாதியானாகப் பிறந்த நான், தந்தை பெரியாரால் மனிதனாக உருவாக்கப்பட்டதன் விளைவு, மேற்கூறிய 'உலகியல் சேராத முடிவுகள்' என்றால் உண்மை.

எனவே, ஆசிரியரின் ஆலோசனையை ஏற்கவில்லை. எவருடைய உதவியையும் பெற்று, மாறுதலை மாற்றி, ஆணை பெறவும் ஒப்பவில்லை.

பொன்னேரிக்குத் திரும்பிச் சென்று, பதவியைத் தேசிகரிடம் ஒப்புவித்துவிட முடிவு செய்தேன்.

பேருந்துக்காகக் காத்திருந்தோம்.

நல்ல வேளை, அது வந்தது. அதில் ஏறிச்சென்றோம். ஆனால் அது பென்னேரிக்குச் செல்லவில்லை. கூட்டுச் சாலையில் இறக்கிவிட்டுச் சென்றது.

அங்கிருந்து என் கடைநிலை ஊழியர், ஆய்வாளர் ஊழியர், நான் ஆகிய மூவரும் பொன்னேரியை நோக்கி நடந்தோம்.

டிசம்பர் கடைசிக் காலக் குளிரில், நான்கு கிலோமீட்டர் தொலைவு நடந்து சென்றோம். இரவு எட்டரை மணிக்குமேல், ஆய்வாளர் அலுவலகத்தைச் சென்றடைந்தோம்.

திரு. அமிர்தலிங்க தேசிகர், என் வருகைக்காகக் காத்திருந்தார். அலுவலக உதவியாளர், பதவி மாறுதலுக்கான படிகளை ஆயத்தமாக வைத்திருந்தார்.

''அய்யா! உங்களுக்குத் தொல்லை கொடுத்துவிட்டேன். என் விடுப்பு முடிவதற்கு முன்பே, காலாகாலத்தில், நியமன ஆணைக்கு விண்ணப்பித்து விட்டேன். மண்டல ஆய்வாளர் அலுவலகத்திற்கு நடையாக நடந்தேன்.

''கடைசிவரை காலம் கடத்திவிட்டு, என்னைப் பொன்னேரிக்குப் போகும் ஆணையைக் கையில் கொடுத்து, உடனே சென்று, நெ.து. சுந்தரவடிவேலுவை விடுதலை செய்துவிடு'' என்று அலுவலக நிர்வாகி திரு. வரதாச்சாரியார் சொன்னார்.

''எனக்குக்கூட, சென்னைக்குத் தெற்கே போட்டிருந்தால் பிடித்திருக்கும். என்ன பண்ணுவது? இதுவும் போய்விட்டால் கடைகோடிக்குத் தள்ளி விடுவார்களோ என்று அஞ்சி வந்துள்ளேன்'' என்று விளக்கம் சொன்னார்.

அவர் கூற்று மெய்யாக இருப்பினும் பொய்யாக இருப்பினும் ஒன்றே.

பதவி மாற்ற அறிவிப்பில், கையெழுத்திட வேண்டிய இடங்களில் கையெழுத்திட்டோம். 'சென்றதினி மீளாது' என்று என்னை நானே தேற்றிக் கொண்டேன். அப்போது ஆண்டுத் தணிக்கை அறிக்கைகளுக்குப் படிகள் எடுக்க வேண்டுமென்பது நினைவிற்கு வந்தது. அத்திட்டங்களுக்கான நாள்குறிப்பிற்கும் படி எடுக்க வேண்டும்.

அலுவலக உதவியாளரிடம் கொடுத்து வைத்திருந்த தணிக்கை அறிக்கைகளை வாங்கினேன். ஒன்றா? இரண்டா? இருபது அறிக்கைகள்.

இரவோடு இரவாக உட்கார்ந்து படி எடுத்துவிட முடிவு செய்தேன். கண்ணாடி விளக்கு நிறைய மண்ணெண்ணெய் ஊற்றச் சொன்னேன்.

உணவு ஆறிப்போகிறது என்று நினைவுபடுத்தவும் உண்பதற்கு முன்னுரிமை கொடுத்தேன்.

இரவு உணவை விரைந்து முடித்தேன். தணிக்கை அறிக்கைகளைப்படி எடுப்பதற்கான வெற்றுப் படிகளைக் கொடுக்கும்படி கேட்டேன்.

அலுவலக உதவியாளர், போதுமான படிகளைக் கொடுத்தார். அவ்வேளை?

''அய்யா! பகலெல்லாம் அலைந்திருக்கிறீர்கள். கூட்டுச்சாலையில் இருந்து நடந்து வந்திருக்கிறீர்கள். இப்போதே மணி ஒன்பதைத் தாண்டிவிட்டது, நீங்கள், நாளை இரவே இரயில் ஏறித் தஞ்சாவூர் போக வேண்டும்.

''பொழுது விடியவிடிய படி எடுத்தாலும் இருபதையும் முடிக்க முடியாது. நான் ஒன்று சொல்லலாமா? அடுத்த சில நாள்கள் பள்ளிகளுக்கு விடுமுறை. அப்போது நான் அலுவலகத்திலேயே இருப்பேன். அடுத்த அய்ந்தாறு நாள்களில் இவற்றிற்கெல்லாம் நானே படி எடுத்து விடுகிறேன். உரிய நேரத்தில், மேலிடத்திற்கு அனுப்பி விடுகிறேன். நீங்கள் கவலைப்படாமல் படுத்து உறங்குங்கள். விடியற்காலை எழுந்து இரயில் பிடிப்பதற்கு உதவியாக இருக்கும்'' என்று அமிர்தலிங்க தேசிகர் மிகுந்த பரிவுடன் கூறினார்.

நம்ப வேண்டிய நெருக்கடியில் நான் இருந்தேன். அப்போது, அலுவலக உதவியாளர், ஒத்து ஊதினார். தேசிகருக்குத் தானும் உதவி செய்வதாக உதவியாளர் கூறினார்.

நன்றாகப் பழகுவதாலேயே, வாக்குறுதியைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பினேன். ஏமாந்தேன். படியெடுக்க உட்காராமல் உறங்கிவிட்டேன்.

விடியற்காலை நான்கு மணிக்கு என் கடைநிலை ஊழியர் என்னை எழுப்பினார். விழித்ததும், ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தபடி, புகைவண்டி நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். பயணச்சீட்டு வாங்கி வந்தார்; வண்டி ஏற்றினார்.

ஆற்று வெள்ளத்தில் அடித்துப் போகாதபடி என்னைக் காத்த ஊழியரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டேன். அவரைக் கடைசி முறையாகக் காண்கிறேன் என்று அப்போது உணரவில்லை.

சென்னையை அடைந்தேன். கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு, வெளியே வந்தேன். 'டிராம்' வண்டிகள் ஓடின. 'அமில்டன் வாராவதி' வண்டியில் ஏறி வீடு போய்ச் சேர்ந்தேன்.

மாறுதல் செய்தியைக் கேட்டு வீட்டில் இருந்தோர் அதிர்ச்சி அடைந்தனர். அதை மாற்றமுடியாது என்று நான் உரைக்கவும் வேதனைப்பட்டனர்.

பூவாளூர் பொன்னம்பலனார்

அவ்வேளை, எனக்குக் கைகொடுக்க ஒருவர் அங்கு இருந்தார்.

அவர் யார்?

பூவாளூர் அ. பொன்னம்பலனார் என்ற பெயரினர். நீண்ட சைவ மரபினைக் கொண்ட வேளாளர் செட்டியார் வீட்டில் பிறந்தவர். செல்வச் செழிப்பில் வளர்ந்தவர். இளமைப் பருவத்தே தமிழை, அதிலும் சிறப்பாகச் சைவத் தமிழைக் கரைத்துக் குடித்தவர்.

இளமை தொடங்கும்போது, பூவாளூர் பொன்னம்பலனார், சைவப்பழமாக விளங்கினார். நெற்றியில் நீறும் கழுத்தில் உருத்திராட்சமும் அவரை விட்டு நீங்காச் சின்னங்கள்.

பொன்னம்பலனாரின் இளமைப்பருவம், இந்திய விடுதலை இயக்கத்திற்குப் பயன்பட்டது.

தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி காங்கிரசு இயக்கத்தில் இருந்து அரும்பணியாற்றியபோது, பொன்னம்பலனார் பெரியாரின் அன்புக்குரிய தொண்டர்.

அவர், பொடி போடுதல், சிகரெட் புகைத்தல், வெற்றிலை பாக்குப் போடுதல் போன்ற எவ்வித வேண்டாத பழக்கமும் இல்லாதவர்.

அத்தகைய பொன்னம்பலனார் பெரியாரோடு காங்கிரசு இயக்கத்தில் இருந்து விலகிவிட்டார்.

தன்மான இயக்கத்திற்குத் தம்மை ஒப்படைத்து விட்டார்.

தன்மான இயக்கத்தின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவராக விளங்கிய பொன்னம்பலனாருக்குப் போட்மெயில் என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு.

பொன்னம்பலனாரின் உரைகள், உண்மையில் சொற்பொழிவுகளே. அவரைப் போன்று விரைவாகப் பேசக்கூடியவர் எவரும் தன்மான இயக்கத்தில் இல்லை.

வளத்திலே பிறந்து, புலமையிலே உருவாகி, பேச்சிலே சிறந்து, எவர் கையையும் எதிர்பார்க்காமல் வாழும் நிலையில் இருந்த பொன்னம் பலனார் பழகுவதற்கு மிகவும் இனியவர்.

எவரையும் கண்டால், தாமே முன்வந்து அறிமுகப்படுத்திக் கொள்வார்; கலகலப்பாக உரையாடுவார்; உதவி செய்ய முனைவார்.

பூவாளூர் பொன்னம்பலனாரே, சைவப்பழமாகவும் கதரையன்றி வேறொன்றும் அணியாத காங்கிரசுக்காரராகவும் விளங்கிய குத்தூசி குருசாமியாரைத் தன்மான இயக்கத்தவராக்கினவர். பின்னர் பெரியாருக்கு அறிமுகப்படுத்தியவர். அவரது குடிஅரசு வார இதழில் துணை ஆசிரியராகச் சேர்த்துவிட்டவர்.

என் சகலர் குருசாமியும் பொன்னம்பலனாரும் மிக நெருங்கிய நண்பர்கள். ஆகவே அவர் சென்னைக்கு வந்தால் குருசாமியார் மாமனார் வீட்டில்தான், மற்றும் சில தன்மான இயக்கத் தொண்டர்களைப்போல, தங்குவது வழக்கம்.

மாறுதல் செய்தியோடு நான் அவ்வீட்டிற்குச் சென்றபோது, பொன்னம்பலனார் அங்கு இருந்தார். அது எனக்கு மிகவும் உதவியாயிற்று.

''அத்தான்! தஞ்சாவூருக்குத் தானே போட்டிருக்கிறார்கள். அது மிக நல்லது ஆயிற்று. அங்கே எனக்குப் பல நண்பர்கள் உண்டு. பள்ளித் துணை ஆய்வாளராக இருப்பவர் டி.எஸ். கல்யாணசுந்தரம்பிள்ளை என்பவர்.

''அவரது தந்தையார் சோமசுந்தரம் பிள்ளை, மாகாண சட்டமன்றத்தில் நியமன உறுப்பினராக இருந்தவர். உயர்ந்த பண்பும் நம்மவருக்குத் துணை நிற்கும் உணர்வும் கொண்டவர்.

''திரு கல்யாணசுந்தரம் பிள்ளையிடம் வேலை பார்ப்பது உங்களுக்குப் பாதுகாப்பாகவே இருக்கும்.

''இரவு வண்டிக்கு நானும் உங்களோடு வருகிறேன். உங்களைக் கொண்டுபோய்த் தஞ்சாவூரில் சேர்த்து, கல்யாணசுந்தரத்திடம் ஒப்படைத்து வேண்டிய உதவிகளைச் செய்யச் சொல்லுகிறேன்.

''நானும் தஞ்சையில் இரண்டொரு நாள்கள் தங்கி, நீங்கள் தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பி வருகிறேன். மகிழ்ச்சியோடு புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார்.

பொன்னம்பலனாரின் செயல்நேர்த்தி, புகழ்பெற்றது. அவர் ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டால், பொடிக் கூறுகளைக்கூட, கவனித்துச் செயல்படுவார்.

ஆகவே, என் வீட்டார் நிறைவோடு பொன்னம்பலனாரின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள்.

தஞ்சைப் பயணம்

அங்கு நான் தங்கியிருந்த சில மணிகள் விரைந்து பறந்து விட்டன. பொன்னம்பலனாரும் நானும் எழும்பூர் சென்று இன்று 'இராமேசுவரம் விரைவு வண்டி' என்று அழைக்கப்படும் அன்றைய 'போட் மெயிலில்' புறப்பட்டோம்.

குறுகிய கால அறிவிப்பில், பயணச்சீட்டு பெற முடிந்த நாள் அது.

புகைவண்டி தஞ்சையை நெருங்கும்போது பொன்னம்பலனார் என்னை எழுப்பிவிட்டார்.

இருவரும் அமைதியாகத் தஞ்சைக் கூடலில் இறங்கினோம்.

''அத்தான் இவ்வூரில் போகவர ஒற்றை மாட்டுவண்டி மட்டுமே உண்டு. கல்யாணசுந்தரம் வீடு தெற்கு அலங்கத்தில் இருக்கிறது; சற்றுத் தொலைவு. மாட்டு வண்டியிலேயே போவோம்'' என்று பேச்சுக் கொடுத்தார்.

நிலையத்தை விட்டு வெளியே வந்தோம். ஒற்றைமாட்டு வண்டிக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். பொன்னம்பலனார் ஒரு வண்டியை அமர்த்தினார். அதில் ஏறிச்சென்றோம். வழியில் சில பழக்கடைகள் திறந்து இருந்தன.

அவற்றைக் கண்டதும் வண்டியை நிறுத்தினார். பழக்கடைக்குச் சென்றார். இரண்டு சீப்பு பேயன் பழங்களையும் ஒரு செண்டு கதம்பத்தையும் வாங்கிக்கொண்டு நொடியில் வந்து விட்டார்.

''ஆய்வாளரிடம் பழம் கொண்டுபோனால் அவர் சினந்து கொண்டால் என்ன செய்வது?'' என்றேன்.

''நீங்கள் கொண்டு போனால் சினந்து கொள்ளலாம். நான் நெருங்கிய நண்பன். நான் கொடுக்கும் இரு சீப்புப் பழங்களுக்காக எரிச்சல் கொள்ளமாட்டார்'' என்று ஆறுதல் சொன்னார்.

கல்யாணசுந்தரம் வீட்டை அடைந்தோம். அப்போதும் விடியற்காலை வரவில்லை. எனவே வீடு மூடி இருந்தது. இருவரும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து காத்து இருந்தோம்.

95. ஓராசிரியர் நலப்பள்ளி

விடியற்காலை அய்ந்தரை மணி இருக்கும். ஆய்வாளர் திரு. கல்யாணசுந்தரம் வீட்டுக்கு வேலைக்காரப் பெண் ஒருத்தி வந்தாள். எங்களைக் கண்டாள். திகைத்தாள்.

அக்குறிப்பை அறிந்த பொன்னம்பலனார், ''நாங்கள் அய்யாவைப் பார்க்க வெளியூரில் இருந்து வந்திருக்கிறோம். அவரை எழுப்ப வேண்டாம். அவர் வழக்கப்படி எழுந்திருக்கட்டும். அப்புறம் சொன்னால் போதும். அதுவரை நாங்கள் காத்திருப்போம்'' என்று கூறினார்.

அப்பெண், வீட்டுக் கதவைத் தட்டினாள். வீட்டரசியார், கதவைத் திறந்தார். உள்ளே சென்ற பெண் அம்மையாரிடம் யாரோ இரு ஆண்கள், வந்து காத்திருப்பதாகக் கூறினாள் போலும்.

கல்யாணசுந்தரத்தின் வாழ்க்கைத் துணைவியார் வெளியே வந்து, எங்களை விசாரித்தார். நாங்கள் யார் என்று தெரிந்து கொண்டதும், தெருப்பக்க அறையைத் திறந்தார். அங்கே தங்கும்படி கூறினார்.

அம்மாள் உள்ளே சென்றபொழுது,

''அய்யாவை எழுப்பிவிடாதீர்கள். எங்களுக்கு ஒன்றும் அவசரம் இல்லை'' என்று பொன்னம்பலனார் கூறினார்.

ஆய்வாளர் கல்யாண சுந்தரம்

அரைமணி சென்றது. உயரமான மனிதர் ஒருவர் வீட்டிற்குள் இருந்து வந்தார். அறைக்குள் நுழைந்தார். கணீரென்ற குரலில் ''தம்பிதான் புதியவர்! கூச்சப்பட்டு சும்மா இருந்தால், நீங்கள் ஏன் புதியவர் போல், இப்படிக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். வந்தவுடனேயே, கதவைத் தட்டி என்னை எழுப்புவதற்கு ஏன் தயங்கினீர்கள்?'' என்று உரிமையோடு பொன்னம்பலனாரைக் கடிந்து கொண்டார்.

ஆய்வாளர் என்னை வரவேற்றார். எனக்கு வேலை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதாக, அவராகவே கூறித் தெம்பு ஊட்டினார். பிறகு?

காலைக் கடன்களை முடித்தோம். குளித்தோம். ஆய்வாளர் கல்யாணசுந்தரத்தோடு சிற்றுண்டி உண்டோம்.

சில திங்கள் நான் மட்டும் தனியாக இருக்க வேண்டும் என்னும் சூழ்நிலையைப் பொன்னம்பலனார் எடுத்துக் கூறினார்.

நான் அப்படித் தங்க அறை ஒன்றை ஏற்பாடு செய்வதாக ஆய்வாளர் மிகுந்த அன்புடன் கூறினார்.

அலுவலக நேரம் நெருங்கியதும் ஆய்வாளர் என்னை அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்குச் சென்றார்.

அங்கே இரண்டாவது இளந்துணை ஆய்வாளராகச் சேர்ந்தேன். திரு. ஏ.டி.பி. சரவணசாமி என்னும் கிறுத்தவர், முதல் இளந்துணை ஆய்வாளராக இருந்தார். அவர் என்னிடம் அன்போடு பழகினார்.

ஆய்வாளர், அவ்வட்டத்தில் என் ஆய்வுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொடக்கப் பள்ளிகளைப் பற்றிப் பொதுவாக விளக்கினார். எப் பள்ளிகளில் எவற்றைப் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

''நீங்கள் குருசாமியின் சகலர் என்பது இங்குப் பலருக்குத் தெரியும். உங்கள் வாயைக் கிளறி, ஆழம் பார்ப்பதற்கு முயல்வார்கள். ஒருவருக்கும் பிடி கொடுக்காதீர்கள்'' என்றும் கூறினார்.

இரண்டு நாள்கள் ஆய்வாளரின் விருந்தாளியாகத் தங்கியிருந்தேன்.

இதற்கிடையில் பொன்னம்பலனார் நான் தங்குவதற்கு இடத்தைத் தேடி அலைந்தார். ஆய்வாளர் ஆணைப்படி, சில ஆசிரியர்களும் அப்பொறுப்பை எடுத்துக்கொண்டு தேடினார்கள். விரைவில் வெற்றியும் கிட்டியது.

நிக்கல்சன் கூட்டுறவு வங்கி மாடியில் ஓர் அறை கிடைத்தது. அங்குக் குடிபெயர்ந்தேன்.

அதற்கு எதிரில் மரக்கறி உணவுச்சாலை இருந்தது. அங்கே உணவுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள்.

இந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, பொன்னம்பலனார் இயக்க வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

நான் தணிக்கை வேலையைத் தொடங்கினேன். கிறுத்துமசு விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறந்தன. நான் திடீர்ப்பார்வையைத் தொடங்கினேன்.

நான் தஞ்சையில் பணியேற்றுக்கொண்ட அன்றே, அலுவலக எழுத்தர், உடனே கவனிக்கப்பட வேண்டிய இரு கோப்புக் கட்டுகளை என்முன் வைத்தார்.

இரண்டையும் முழுமையாகப் படித்துப் பார்த்தேன். இரண்டிலுமே ஒரு திங்களுக்கு முன்னரே, முடிவு எடுத்து இருக்க வேண்டுமென்பது புலனாயிற்று.

அப்படி முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் இரண்டாவது இளந்துணை ஆய்வாளர் பதவியில் எவரும் இல்லை. அத்தவக்கம் தொடர்ந்தால் எனக்குத் தொல்லை வரும் என்பது புரிந்தது.

'தொடங்குகிறபோதே இப்படியா தொடங்க வேண்டும்?' என்று என் உள்ளம் கலங்கிற்று. அப்படி என்ன கெ[illegible] தொ[illegible]க்கம்?

தொடக்கமே மூடுவிழா

தஞ்சை - திருச்சி இருப்புப் பாதையில் தஞ்சைக்கு அடுத்த ஆலக்குடி புகை வண்டி நிலையத்திற்கு அருகில் கல்விராயன்பட்டி என்று ஓர் ஊர் உள்ளது.

அவ்வூரில் ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக ஓராசிரியர் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. அது சில ஆண்டுகள் நடந்தது. அப்புறம்?

மாணாக்கர் வருகை ஓராசிரியருக்கும் போதாத அளவு குறைந்து விட்டது. தொடர்ந்து மூன்று நான்கு பார்வைகளின்போது மாணவர்களின் குறைந்த அளவு வருகைகூட இல்லை.

எனவே, அப்பள்ளியை நடத்துவதில் பயனில்லை எனக் கல்வித்துறை கருதிற்று.

நடந்து கொண்டிருக்கும் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கு முன், விளக்கம் கேட்டு ஒரு திங்கள் முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பது கல்வித் துறையின் விதியாகும்.

அதையொட்டி முன் அறிவிப்புக் கொடுத்து, அந்தப் பள்ளியின் அங்கீகாரத்தை ஏன் எடுத்துவிடக்கூடாது என்ற ஆதிதிராவிட நலத்துறையிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

அத்துறை அலுவலர், அதைப் பள்ளியின் ஆசிரியருக்கு அனுப்பினார். அவருடைய விளக்கம் என்ன?

''இவ்வூர் ஆதிதிராவிடர்கள்; கல்வி பற்றிய சிந்தனையே இல்லாதவர்கள். இவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் எவரும் இல்லை.

''தற்குறித் தன்மையில் மூழ்கியிருப்பதைப் போன்றே, வறுமையிலும் ஆழ்ந்துள்ளார்கள். அன்றாடக் கஞ்சிக்கே அல்லல்படும் இவர்கள் எத்தனை முறை சொன்னாலும் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை.

''ஆடு மாடு மேய்த்தால் அரை வயிறு கஞ்சியாவது கிடைக்கும் என்கிறார்கள்.

''இந்நிலையில், வருகையைப் பெருக்க வாய்ப்பில்லை'' என்று விளக்கினார்.

அதை ஆதிதிராவிட நலத்துறை அப்படியே கல்வித் துறைக்கு அனுப்பிவிட்டது. 'அப்பள்ளியை உடனே மூடு' என்று ஆணையிட வேண்டிய நிலையை எட்டியாயிற்று.

தஞ்சையில் என் முதற்பணி, மூடும் பணி என்பது எனக்குக் கசப்பாயிருந்தது. மூடாமல் எப்படிச் சமாளிப்பது என்று எழுத்தரைக் கேட்டேன்.

''நலத்துறையே எதிர்ப்புச் சொல்லாதபோது, நீங்கள் என்ன செய்ய முடியும்? மூடவேண்டிய பள்ளியை மூடாமல், காலம் கடத்தினால், ஆசிரியர் சம்பளம் வாங்கிக்கொண்டே இருப்பார்; நேரத்தில் நடவடிக்கை எடுக்காமல் அரசின் நிதியைப் பாழாக்கின குற்றத்திற்கு நீங்கள் பதில் சொல்ல நேரிடும்'' என்று எழுத்தர் எச்சரித்தார்.

''பதினைந்து ரூபாய்தானே மாதச் சம்பளம்'' என்றேன்.

''ஒரு ரூபாய் ஆனாலும் வீண் செலவுதானே. அதற்கு மேலிடத்தில் நடவடிக்கை எடுப்பார்களே!'' என்று மிரட்டினார். கடைசியாக.

''பிடிக்காத ஊருக்கு எந்த ஆசிரியரையாகிலும் போட்டால், அவர் இப்படித்தான் பள்ளியை மூடிவிட வழிசெய்துவிட்டு, மாறுதல் பெற்றுக் கொள்வார்!'' என்று என் காதைக் கடித்து விட்டுப் போய்விட்டார் எழுத்தர்.

அன்றிரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. நோய்வாய்ப்பட்ட குழந்தையைக் காப்பாற்ற விழித்திருக்கும் தாயைப் போன்று விழித்திருந்தேன்.

என்ன செய்தால், அப்பள்ளியை மூடாமல் நடத்தும் சூழ்நிலை உருவாகும் என்பதே என் ஏக்கம்.

வழி பிறந்தது

இரண்டுநாள் ஏக்கத்திற்குப் பிறகு, வழி மின்னிற்று. அதைப் பின்பற்ற முடிவு செய்தேன். அதைப் பற்றி எவரோடும் கலந்து ஆலோசிக்க வில்லை; எவர் இடமும் மூச்சு விடவில்லை.

ஒரு நாள் காலை, என் ஊழியர் ரங்கராசுவை அதிகாலையில் வரும்படி கட்டளையிட்டேன். அப்படி வந்ததும் ஒரு சூடுக்குடுவை (பிளாஸ்க்) நிறையக் காப்பியை வாங்கிவரச் சொன்னேன்.

வாங்கி வந்ததும், என்னோடு வரும்படி கூறிவிட்டு, தஞ்சைப் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றேன்.

திருச்சிக்குச் செல்லும் பயணிகள் வண்டி காத்திருந்தது. ஆலக்குடிக்கு இரு பயணச்சீட்டுகள் வாங்கிவரச் சொன்னேன். அவற்றைப் பெற்றுக்கொண்டு, அந்த ரயிலில் பயணமானோம்.

ஆலக்குடியில் இறங்கியதும், கல்விராயன்பட்டிக்கு அழைத்துப் போகச் சொன்னேன். ரங்கராசு வழிகாட்ட அங்குப் போய்ச் சேர்ந்தேன்.

கல்விராயன்பட்டி நலப் பள்ளியை நெருங்கும்வேளை, பள்ளி திறந்திருக்கக் கண்டேன். விரைந்து பள்ளிக்குள் நுழைந்தேன். அங்குப் பிள்ளைகள் பத்துப் பேர்கள்கூட இல்லை.

'பில்லை' போட்ட என் ஊழியரைக் கண்டதும் ஆசிரியர் என்னைக் கல்வித்துறை ஆய்வாளர்களில் ஒருவர் என்று அடையாளங்கண்டு கொண்டார்.

நாற்காலியைவிட்டு எழுந்திருந்து வணங்கி, விலகி நின்றார். நான் நாற்காலியில் அமர்ந்தேன்.

அப்பொழுது நான் கல்வித்துறை இளந்துணை ஆய்வாளன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

பிறகு, ஆசிரியரைப் பார்த்து, ''உம்மிடம் குவளை யிருக்கிறதா?'' என்றேன்.

''எசமான்! கண்ணாடிக் குவளை இருக்கிறது'' என்றார்.

''அதை எடுத்துப் போய் கழுவிக் கொண்டு வாரும்'' என்றேன்.

ஆசிரியர் பதைத்துப் போனார். ''எசமான்! நான் ஆதிதிராவிடக் கிறுத்தவன். என் குவளையை எசமானிடம் கொடுக்கலாமா?'' என்று நடுங்கினார்.

''சொல்லுகிறபடி செய்யும்'' என்றேன்.

மரப்பெட்டிக்குள் வைத்திருந்த கண்ணாடிக் குவளையை எடுத்தார். அருகில் இருந்த வாய்க்காலில் ஓடிக்கொண்டிருந்த நீரில் கழுவிக் கொண்டுவந்தார்.

என் கட்டளைப்படி குவளையை மேசைமேல் வைத்தார்.

சூடுகுடுவையின் மூடியைக் கழற்றினேன். பிறகு?

''இதற்குள் இருக்கும் காப்பியைக் குவளையில் ஊற்றும்'' என்றேன்.

நான் பள்ளிக்குள் நுழைவதைக் கண்டதும் குடியிருப்பிலிருந்து சில பையன்களும் பெண்களும் ஓடி வந்தார்கள்.

வயது முதிர்ந்த ஆண்களும் பெண்களும் பள்ளியைச் சுற்றி நின்றபடி வேடிக்கை பார்த்தார்கள். ஆசிரியர் காப்பியைத் தொட அஞ்சினார்.

''நீரும் மனிதர்தான்; காப்பியை ஊற்றிக்கொடும்'' என்று உறுதியாக ஆணையிட்டேன்.

வேதனையோடு, ஆசிரியர் கீழ்ப்படிந்தார். நான் காப்பியைச் சிறுகச் சிறுகக் குடித்து முடித்தேன்.

வந்திருந்தோர், வியப்பில் ஆழ்ந்தார்கள். ஆய்வாளர், ஆதிதிராவிடர் கையால் காப்பி வாங்கிக் குடித்ததை அவர்கள் கண்டதே இல்லை.

இதைப் பற்றி என்ன சொல்வதென்று தெரியாமல் எல்லாரும் திருதிருவென விழித்தார்கள்.

96. ஆதிதிராவிடர்கள் அனுபவித்த கொடுமைகள்

தீண்டாமைக் கொடுமை

நான், கல்விராயன்பட்டி நலப்பள்ளியில், ஆதிதிராவிட ஆசிரியருடைய கண்ணாடிக் குவளையில் அவர் காப்பி ஊற்றிக் கொடுத்ததைக் குடித்ததைப் பார்த்த முதியவர்கள் ஏன் திருதிருவென விழித்தார்கள்?

அக்கால ஆதிதிராவிடர்கள் அநேகமாகக் கூலிகள். அவர்கள் ஆண்டை - நிலமுடையோர் - வயலில் அதிகாலையில் இருந்து வேலை செய்துவிட்டு, நடுப்பகல் உணவுக்காகத் தத்தம் ஓலைப் பட்டைகளைத் தரையில் வைத்துவிட்டு எட்டி நிற்பார்கள்.

ஒவ்வொரு பட்டையிலும் பண்ணையார் கட்டளைப்படி சோறோ, கூழோ போட்டு நிரப்புவார்கள். அப்போது பட்டைக்கு உரிய ஆதிதிராவிடர் அருகில் இருந்தால் தீட்டாகிவிடும்.

எது தீட்டாகிவிடும்?

கஞ்சி ஊற்றும் சாதியாரான இந்து தீட்டாகிவிடுவார்.

ஆதிதிராவிடர் பட்டையை ஏந்தி நின்றால்கூட, அவருடைய 'தீண்டாமை' பட்டை வழிப்பாய்ந்து, அதிலிருந்து தாவி, இடைவெளியைக் கடந்து, பரிமாறும் ஆளைப் பிடிக்கக் கொள்ளுமாம்.

இப்படியொரு நம்பிக்கையா என்று நகைக்காதீர்கள்.

சாதி ஏற்றத்தாழ்வு, அதன் அடிப்படையில் தீண்டாமை, நெருங்காமை, ஒருவர் தொட்டதை இன்னொருவர் தொடாமை, ஒன்றாயிருந்து உண்ணாமை போன்ற வேதனையான நடைமுறைகள் ஈராயிரத்து அய்ந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக, இந்திய மக்களை மிதித்து நசுக்கி வருகின்றன.

ஆதிதிராவிடர்கள் ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்டிருப்பது மட்டுமா அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை?

அவர்கள், வேட்டியை முழங்காலுக்குக் கீழே தொங்கும்படி கட்டிக்கொண்டு நடமாடக் கூடாது.

ஆதிதிராவிடப் பெண்கள் இரவிக்கை அணியக்கூடாது.

எவ்வளவு கரடுமுரடான வழியில் நடந்தாலும் எவ்வளவு சுடுமணலில் நடந்தாலும் செருப்பு போட்டுக் கொண்டு நடக்கக்கூடாது.

ஈர் உருளியில் போகக்கூடாது. ஊரில், 'பெரிய சாதிகள்' வாழும் தெருக்களின் வழியே சொல்லக்கூடாது.

சாதி இந்துப் பிள்ளைகள் படிக்கும் பொதுப் பள்ளிகளில் மற்றவர்களோடு கலந்து உட்காரக் கூடாது.

வெறும் பிறவி பற்றி இத்தனை கட்டு திட்டங்கள்; இழிவுகள்.

தெரிந்தோ தெரியாமலோ, ஆதிதிராவிடர் ஒருவர் மேற்கூறிய கட்டுப்பாடுகளில் ஒன்றை மீறிவிட்டால் என்னவாகும்?

அவரை இழுத்து வந்து மரத்தில் கட்டிவிடுவார்கள்.

பலவேளை, ஆதிதிராவிடர்களே, ஆண்டையின் ஆணைக்கு அஞ்சி, தங்களில் ஒருவரை இப்படி மரத்தில் கட்டிப்போடுவார்கள்.

அப்புறம்? கட்டப்பட்டவரை புளிய மிளாரால் அடிப்பார்கள்; குருதிகொட்டக் கொட்ட அடிப்பார்கள்; கதறக்கதற அடிப்பார்கள்.

சில வேளை பண்ணையார்களின் - மேல்சாதிக்காரர்களின் வெறியுணர்ச்சி அப்போதும் குறையாது.

மரத்தில் கட்டப்பட்டவரின் மனைவியை இழுத்துவரச் செய்வார்கள். அவள் கையில் செருப்பைக் கொடுப்பார்கள். அதனால், கட்டப்பட்டிருக்கும் கணவனை அடிக்கச் செய்வார்கள்.

அடையாளச் செருப்படியா? இல்லை. வலிவாகவே அடிக்க வேண்டும்.

ஆண்டை அல்லது கங்காணி எத்தனை முறை சொன்னாலும் அத்தனை முறை மனைவி தன் அருமைக் கணவனை அடித்தாக வேண்டும்.

இல்லாவிட்டால்? அவளுக்கு இவ்வளவு தண்டனை கிடைக்கும்.

ஒவ்வொரு சிற்றுண்டிச்சாலை ஒவ்வொரு தின்பண்டத்திற்குப் பெயர் பெற்று இருப்பது உண்டு.

அதுபோல, மனிதனை மனிதன் கொடுமைப்படுத்தும் கலையில் தஞ்சைத் தரணிக்கொரு தனிச்சிறப்பு உண்டு. அதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஆண்டையின் ஆத்திரத்திற்கு ஆளான பண்ணையாளுக்குச் சாணிப்பால் ஊற்றும் கொடுமை, முற்காலத்தில் அன்றாட நடைமுறை.

அப்படி என்றால் என்ன?

குற்றம் சாட்டப்பட்டவரைக் கட்டி வைப்பார்கள். சாணத்தை நீரில் கரைத்துக் கொள்வார்கள். கரைத்த சாணிக்குப் பெயர்தான் சாணிப்பால்.

கட்டப்பட்டவரை ஓங்கி அடிக்க, அவர் வாயைத் திறக்க, அவ்வாயில் சாணிப்பாலை ஊற்றுவார்கள்.

அவர் குடித்தால் ஆயிற்று. உமிழ்ந்தால், மீண்டும் அடிவிழும். இப்படிப் பொறுக்கவொண்ணா அடிகளைக் கொடுத்துச் சாணிப்பாலை விழுங்கவைக்கும் சித்திரவதை சோழவள நாட்டின் கலைகளில் ஒன்று.

தமிழ்ப் பண்பாட்டின் அழுகிய பகுதி இந்து மக்களைப் பிற சமயங்களுக்குப் பிடித்துத் தள்ளிய கொடுமை. இக்காட்டுமிராண்டி நடவடிக்கை பெரும் அளவு குறைந்துவிட்டது. அடியோடு தொலைந்து விட்டதா? இல்லை.

நாம் மக்கள் நிலைக்கு உயர்ந்துவிட்டோம் என்று இன்றும் சொல்ல முடியவில்லையே.

இழிவையும் கொடுமையையும் நூறு தலைமுறைகளாகத் துய்த்து விட்டதால், ஆதிதிராவிடர்கள் இக்கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளப் பக்குவப்பட்டுவிட்டார்களோ என்னவோ? இவற்றை எதிர்த்துக் குரல் எழுப்பவும் திராணி அற்றுக் கிடந்தார்கள்.

எல்லோரும் மக்களே. எல்லோரும் அன்புக்கு உரியவர்களே. எல்லோரும் பாதுகாப்பிற்கு உரியவர்களே.

எல்லோரும் மனிதர்களாக நடத்தப்பட வேண்டும். எல்லோரும் நல்வாழ்வு வாழ உரிமை உடையவர்கள். இத்தகைய கருத்துகள் அவர்கள் காதுகளில் வீழ்ந்தால் போதும். நவீன தானியங்கிக் கதவுகளையொப்ப அவர்கள் சிந்தனை மூடிக் கொள்ளும்.

'அது அது அவனவன் செய்த வினை; அவன் எழுதியனுப்பியபடியே எல்லாம் நடக்கும்; அன்று எழுதியவன், இன்று அழித்துவிடவா போகிறான்?

'ஆறு நிறைய வெள்ளம் போனாலும் நாய் நக்கித்தானே குடிக்க வேண்டும்?' இப்படி இமைப்பொழுதில் கொடுமைக்கு ஆளான ஆதிதிராவிடர்களே ஆறுதல் கூறுவார்கள்.

தாங்கள் நாய்கள் அல்ல - நக்கிக் குடிக்க! தாங்கள் மக்களாக இருப்பதால் அள்ளிக் குடிக்கவும், மொண்டு குடிக்கவும், வைத்திருந்து குடிக்கவும் இயலும், என்னும் எண்ணத்திற்கே இடம் கொடுக்கவே மறுத்து இருந்தவர்கள். பொதுத் தெருவே நடப்பதற்கோ, பிற மக்கள் அருகில் நிற்பதற்கோ, உரிமை கொண்டாடவும் முடியாத ஆதிதிராவிடர்களுக்கு, ஆதிதிராவிடர் ஊற்றிக் கொடுத்த காப்பியை நான் அருந்தியது அதிர்ச்சியைத் தந்தது.

அடுத்த கணம் அச்சமூட்டியது. இந்த விபரீதத்தால், தங்களுக்குப் பெருந்தீங்கு விளையுமோ என்று அஞ்சினார்கள்.

அதை என் ஊழியர் அரங்கராஜுவிடம் தெரிவித்தார்கள். அவர் என்ன செய்வார்? 'இறுக்கு' ஆய்வாளருக்கு அறிவுரை கூற முடியுமா?

ஊராருடன் உரையாடல்

என் 'புரட்சி'யை வேடிக்கை பார்த்தவர்கள், இமைப்பொழுதில் அச்சத்தை விட்டார்கள். என்பால் அன்பு கொண்டார்கள்; பரிவு கொண்டார்கள்.

பலரையும் கூட்டி வந்து விட்டார்கள். அப்படிக் கூடியவர்களில் மூன்று நான்கு பேர்களே கிழவர்கள். மற்றவர்கள் எல்லாம் கிழவிகள்.

அனைவரையும் பள்ளிக்குள் அழைத்தேன். தயங்கினார்கள். இரண்டு மூன்று முறை அழைத்த பிறகே உள்ளே வந்தார்கள். அவர்களோடு கலந்து உரையாடினேன். அதுவும் புதுமை. அதன் சுருக்கம் இதோ.

''பாட்டிங்களே! உங்கள் வீடுகளில் படிக்கும் வயது பிள்ளைகள் இல்லையா?''

''ஏஞ்சாமி, ஆண்டவன் அதற்கு ஒன்றும் குறை வைக்கவில்லை, சாமி.''

''அய்ந்து வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பையன்களும் பெண்களும் வேலைக்குப் போகிறார்களா?''

''ஆற்றிலே தண்ணீர் விடும்போது, சிறிசும் பெருசுமா பலருக்கும் வேலை இருக்கும். மற்றப்போது - நெடுநாள் வேலையிராது.''

''வேலையில்லாத சிறுவர் சிறுமியர் என்ன செய்வார்கள்?''

''கண்டபடி, திரிந்து கொண்டிருப்பார்கள். பசி வேளைக்குக் கஞ்சி தேடி வருவார்கள். இருக்கிறதைக் குடித்துவிட்டு மறுபடியும் ஊர் சுற்றப்போய் விடுவார்கள். அத்தனையும் வீட்டில் அடைந்து கிடந்தால் குடிசையில் குந்தவும் இடம் இருக்காது சாமி'' என்றார்கள் பாட்டிகள்.

''நீங்கள் எம்.சி.ராஜா என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா?''

''தெரியவில்லைசாமி!''

''சகசானந்தசாமி என்றாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

''இல்லைங்க சாமி?

''என். சிவராஜ் என்ற பேராவது தெரியுமா?''

''கேள்விப்பட்டதில்லை எசமான்.''

''இவர்கள் உங்களவர்கள். உங்களுக்காகப் பாடுபடுபவர்கள். படித்தவர்கள்; அவர்களில் சிவராஜ் என்பர், சட்டம் படித்துப் பட்டம் பெற்றவர்.

''உங்கள் பிள்ளைகளையும் படிக்க வைத்தால், அவர்களைப் போல, சிலவேளை, அவர்களைவிடப் பெரியவர்களாக வரலாம், அது உங்களுக்கு நல்லதுதானே!

''சும்மாத் திரிகிற பையன்களையும் பெண்களையும் ஆகிலும் பள்ளிக்கு அனுப்பி வையுங்களேன்'' என்றேன்.

''ஆண்டிக்கு ஏன் சாமி இலைக்கணக்கு? பிள்ளைகள் முன்னுக்கு வருகிறார்களோ இல்லையோ! அது அது அவர்கள் தலை எழுத்து. நீங்கள் கண்கண்ட தெய்வம் போல வந்திருக்கிறீர்கள். எங்களை மதித்துப் பேசுகிறீர்கள். எட்டி நில் என்று சொன்னதையே இதுவரைக் கேள்விப்பட்டு இருக்கிறோம். இப்படி, கிட்ட நின்று பார்ப்பது இதுதான் முதல்முறை. எங்களை மதிக்கிற உங்கள் எண்ணம்தான் என்ன?'' என்று ஒரு பாட்டி கேட்டார்.

வீட்டுக்கொரு பிள்ளையை அனுப்புங்கள்

வந்திருக்கிற ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு பிள்ளையையாவது பள்ளியில் சேர்க்கணும். ஒழுங்காக வரும்படி பார்த்துக் கொள்ளணும்.

''நடவு அறுவடை காலத்தில் பள்ளிக்கு விடுமுறை விடச் சொல்கிறேன். அப்போது வயல் வேலைக்கு இட்டுக் கொள்ளலாம். அதுவரை ஊர் சுற்றுவதற்குப் பதில், ஒழுங்காகப் பள்ளியில் வந்து படிக்கும்படி பார்த்துக் கொண்டால் போதும்'' என்றேன்.

மூதாட்டிகள் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். பிறகு அப்படியே ஆகட்டும் சாமி!'' என்றார்கள்.

''வாத்தியார் அய்யா! கேட்டுக் கொள்ளுங்கள். காலையில் பள்ளி நேரத்துக்கு முன்பு, குடியிருப்புக்குள் போய் வாருங்கள். இப்பாட்டிகள் இங்கும் அங்கும் இருப்பார்கள். பிள்ளைகளை அனுப்பும்படி நினைவுபடுத்துங்கள். ஒரு திங்கள் இப்படிச் செய்த பின் முன்னேற்றம் ஏற்படுகிறதா என்று பார்ப்போம்'' என்று ஆசிரியருக்கு ஆணையிட்டேன்.

ஆசிரியர் நாள்தோறும் ஊருக்குள் சென்று, பெரியோர் துணையை நாடி, வருகையைக் கூட்ட இசைந்தார்.

வழக்கமான பார்வைக் குறிப்பை எழுதினேன். பொதுமக்கள் வாக்குறுதியைப் பற்றி எழுதினேன். வருவோர் எண்ணிக்கையை வளர்க்க ஒரு திங்கள் நீடிப்புத் தவணை கொடுக்கலாம் எனக் குறித்தேன். அதைக் கூடியிருந்தவர்களுக்குப் படித்துக் காட்டினேன்.

பிறகு, தஞ்சைக்குத் திரும்பினேன். உரிய அலுவலகக் கோப்பில், நடந்தவற்றை எழுதி, மேலும் ஒரு திங்கள் தவணை கொடுக்கும்படி பரிந்துரைத்துக் குறிப்பு எழுதினேன்.

'கொடுக்க முடியாது' என்று பதில் வருவதற்குள் ஒரு திங்கள் ஆகிவிடுமென்பது என் மதிப்பீடு.

மறுப்பு ஆணையோடு, எனக்கு ஒரு குட்டுக் கொடுத்தால் என்ன செய்வது என்று சிந்தனை மின்னிற்று. ஏழைகளின் ஏற்றத்திற்காக, அந்த அடியைப் பொறுத்துக் கொள்வோம் என்று, துணிவை ஊட்டிக் கொண்டேன்.

முயற்சியில் வெற்றி

பதில் வரக் காலதாமதம் ஏற்பட்டது. அதற்கு முன் கல்விராயன் பட்டியிலிருந்து விரிவான கடிதம் வந்தது.

''வருகை வளர்ந்துவிட்டது. அது அப்படியே இருந்தால் இரண்டாவது ஆசிரியர் தேவைப்படுவார். மேலுமொரு திங்கள் கவனித்துவிட்டு, பிறகு கோரிக்கையை அனுப்புவேன்?'' இது கடிதத்தின் சுருக்கம்.

மீண்டும் அப்பள்ளியைத் திடீரெனப் பார்வையிட்டேன். வருகை உயர்ந்து இருந்ததை நேரில் கண்டேன். பள்ளியை எடுக்கத் தேவையில்லை என்று மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தொடர் கடிதம் எழுதினேன்.

பள்ளியின் வருகை குறையவே இல்லை. மேலும் ஓரளவு கூடிற்று. இரண்டாவது ஆசிரியருக்குப் பரிந்து உரைத்தேன்.

சற்றுக் காலதாமதமானாலும் இரண்டாவது பதவி கொடுக்கப்பட்டது.

மூடுவிழாவை நெருங்கிய ஒரு அரிஜன நலப் பள்ளியைக் காப்பாற்றிய மகிழ்ச்சியில் குளித்தேன்.

அது இன்றும் இயங்குகிறது. மூன்று ஆசிரியர்கள் பள்ளியாக.

97. ஆதிதிராவிடப் பள்ளியில் ஆண்டுவிழா

ஆரம்ப ஆசிரியர் முத்துசவரி

நான், தஞ்சையில் தனியாக வாழ்ந்து இருந்த காலம்; ஓர் இரவு உணவுச் சாலையில் உணவு அருந்திவிட்டு, வெளியேறும் வேளை, தெருவோரம் நின்றுகொண்டிருந்த ஒருவர்.

'கும்பிடுகிறேன் எசமான்' என்று தலைதாழ்த்தி வணங்கினார்.

நான் நடந்தபடியே கையெடுத்து வணங்கினேன், அவரைப் பார்த்து

''நீர் யார்?'' என்று வினவினேன்.

''எசமான், நான் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்'' என்று விடையளித்தார்.

''சரி, என்னோடு வாரும். அறைக்குச் சென்றபின் பேசிக்கொள்ளலாம்'' என்று ஆணையிட்டபின், நிக்கல்சன் வங்கியின் மாடிக்குச் சென்றேன்.

உடன் வந்த ஆசிரியர், மாடிப்படியண்டை வந்ததும்,

''அய்யா! நான் ஆதிதிராவிடக் கிறுத்தவன்; அய்யா அறைக்குள் வருவது சரியாக இராது. இங்கிருந்தபடியே எசமானிடம் ஒரு சொல் சொல்லிவிட்டுப் போகட்டுங்களா?'' என்றார்.

''வழியில் நின்று பேச முடியாது. மேலே போன பிறகுதான் பேசுவேன். நீர் என் பின்னால் வாரும்'' என்று சொல்லிவிட்டுப் படியேறினேன்.

என் அறையைத் திறந்து மின்விளக்கைப் போட்டேன்.

அப்போதும் ஆசிரியர் அறைக்குள் வரத் தயக்கங்காட்டினார்.

நான், கண்டிப்பாகக் கூறியபின், அவர் உள்ளே நுழைந்தார்.

பிறகு, ''நீர் எந்தப் பள்ளியில் வேலை செய்கிறீர்? எதற்காக என்னைத் தேடி வந்தீர்?'' என்று கேட்டேன்.

''நான் ஆதிதிராவிட நலப்பள்ளி ஒன்றில் தொடக்கநிலை தலைமையாசிரியராகப் பணியாற்றுகிறேன். பெயர் முத்துசவரி.''

''புதிய எசமான் வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். தாங்கள், பெரியார் வழியைப் பின்பற்றுபவர் என்றும் சொன்னார்கள்.

''தாழ்த்தப்பட்ட எங்களுக்குப் பெரியாரே காவல்; கண்கண்ட தெய்வம்.

''அந்த வழியில் செயல்படும் புதிய ஆய்வாளர் அய்யாவைக் கண்டுவிட்டுப் போக வந்தேன். அவ்வளவுதான்'' என்று விளக்கம் சொன்னார்.

''எந்த ஊர்ப் பள்ளியில் வேலை செய்கிறீரென்று சொல்லவில்லையே'' என்று அவரை மடக்கினேன்.

''மேலப்புனவாசல் குடியிருப்பில் உள்ள நலப்பள்ளியின் தலைமையாசிரியர் நான்'' என்று பதில் கூறினார்.

''அப்படியா? உங்கள் பள்ளியில் போதிய மாணாக்கர் வருகை இல்லை; அதனால் இரண்டாவது ஆசிரியர் தேவையில்லை. அப்பதவியை எடுத்துவிடலாமென்று உங்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறதா'' என்று குறுக்குக் கேள்வி கேட்டேன்.

''வந்ததும் வராததுமாக அய்யா இதைக்கூடத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே!'' என்று வியப்போடு கூறினார்.

''அதுதான் என் வேலை. அது கிடக்கட்டும். இரண்டாவது ஆசிரியரும் தொடர்ந்து வேலை செய்கிற வகையில், வருகையை அதிகப்படுத்தக் கூடாதா?'' இது, நான் விடுத்த அறைகூவல்.

''அதைப் பற்றிப் பேசலாம் என்றே துணிந்து வந்தேன். அய்யாவே அந்தப் பேச்சை எடுத்துவிட்டீர்கள்.''

''பெரியார் தொண்டர் ஒருவர் ஆய்வாளராக வந்திருப்பதைக் கேள்விப்பட்டதும் ஒரு எண்ணம் உதித்தது. அய்யா கோபித்துக் கொள்ளாமல் இருந்தால் சொல்லுகிறேன்'' என்று பணிவான குரலில் கூறினார்.

''சும்மா சொல்லும்'' என்றேன்.

''என் பள்ளி தங்கள் தணிக்கைக்கு உட்பட்டது. தங்களையும் தங்கள் மேலதிகாரி, ஆய்வாளர் அய்யாவையும் எங்கள் பள்ளிக்கு அழைத்துக்கொண்டு போய், பெற்றோர் கூட்டமும் பள்ளிக்கூட ஆண்டுவிழாவும் சேர்த்து நடத்தலாம்'' என்று தோன்றிற்று.

''பெரிய ஆய்வாளரும் தங்கமானவர். நீங்கள் இருவரும் வந்து பேசினாலாவது எங்கள் மக்களுக்குக் கண் திறக்கக்கூடும்.''

''நான் வரவேண்டியது கடமை. பெரிய ஆய்வாளர் திரு டி.எஸ். கல்யாணசுந்தரம் (பிள்ளை) கூட உங்கள் முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவர். அதனால் அவரையும் எப்படியாவது அழைத்துக் கொண்டு போகலாம். நாங்கள் இருவர் வருவது மட்டும் போதும்'' என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆதிதிராவிடர்களின் நண்பர்கள்

''அப்பக்கத்துப் பொதுமக்களுக்குப் பிடித்த பெரிய மனிதர்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும். அவர்களுக்கு முக்கியப்பங்கு கொடுத்துப் பேசவைத்தல் நல்லது. அப்படிச்

செய்யமுடியுமா? ஊர் வம்பு பேசாமல், பேசவேண்டியதைப் பேசக்கூடியவர்கள் தெரிந்தால் சொல்லும்'' என்றேன்.

''தங்கள் பேச்சுக்குக் குறுக்கே சொல்ல மாட்டேன்.''

''திரு. சுயம்பிரகாசம் என்று ஒரு வக்கீல் அய்யா இருக்கிறார். அவரும் இப்பக்கத்தில் சுயமரியாதை இயக்கத்தில் சுறுசுறுப்பாக வேலை செய்கிறவர்.

''அவர் முக்குலத்தோராயினும் ஆதிதிராவிடர்களைத் தாழ்ந்தவர்களாக நடத்துவதில்லை. மாவட்ட ஆட்சிக்குழு உறுப்பினராய் இருந்து எங்கள் முன்னேற்றதிற்கான திட்டங்களை ஆதரித்தவர்; நன்றாகப் பேசுவார்.

''அய்யாவுக்குச் சரியென்று பட்டால் அவரை ஆண்டுவிழாவுக்கு அழைத்துப் பார்க்கிறேன்'' என்றார்.

''திரு. சுயம்பிரகாசத்தைப் பற்றி எனக்குக் கேள்வி உண்டு. நேரடித் தொடர்பு கிடையாது. உங்களைத் தாழ்ந்தவராகக் கருதாதவரை நீங்கள் நிறையப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவரைக் கூப்பிடுவது நல்லது.

''உங்களுக்கு அவரை நன்றாகத் தெரியுமா? நீங்களே அவரிடம் ஒப்புதல் பெற்றுவிடுவீர்களா?'' என்று கருத்தும் கேள்வியுமாகக் கூறினேன்.

''வக்கீல் அய்யாவுக்கு மிக வேண்டியவர்கள் எனக்குத் தெரியும். அவர்கள் வழியாக முயல்கிறேன்'' என்றார் முத்துசவரி.

''நல்லது. இன்னொரு பெரியவரைச் சொல்லும்'' என்றேன்.

''அய்யா! கரந்தட்டாங்குடியில் இன்னொரு வக்கீல் அய்யா இருக்கிறார். அவர் அய்யா உமாமகேசுவரம்பிள்ளைக்கு உறவினர். அவரும் எங்கள் மக்களுக்கு உதவியானவர்'' என்று முத்துசவரி, சொல்லிக்கொண்டு இருக்கையிலே, அவர் பேச்சில் குறுக்கிட்டேன்.

''பல மாவட்ட ஆட்சிக்குழுக்களில் செயலாளர் பதவியில் இருந்துவரும் புகழ்பெற்ற வக்கீல் திரு. வேதாசலம் அவர்களையா குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேள்வி தொடுத்தேன்.

''அவரேதான் எசமான், அவரை அய்யாவுக்குத் தெரியுமா? அவரை அழைக்கலாமா?'' என்று ஆவலுடன் கேட்டார் ஆசிரியர் முத்துசவரி.

''அவரேதான். அவரைப் பற்றியும் கேள்வியே ஒழிய அவரோடு நேரடி நட்புக் கிடையாது. அவர் சமுதாயத்தின் கீழ்ப் படிகளில் உள்ளவர்கள்பால் பரிவு கொண்டவர் என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவரையும் அழைத்துக்கொண்டு போகமுடிந்தால் பிரமாதமாக இருக்கும்'' என்றேன்.

''அய்யா உத்தரவு கொடுத்தபடி ஏற்பாடு செய்துவிட்டு வந்து தகவல் கொடுக்கிறேன். அய்யா எப்போது வரமுடியுமென்று, இரண்டொரு நாள்களைக் குறிப்பிடுங்கள். அந்நாள்களை அவர்கள் இடம் கூறி அழைக்கிறேன்'' என்றார் தலைமை ஆசிரியர்.

''விழாநாளை' விருந்தினர்களே முடிவு செய்யட்டும். அவர்கள் வரும் நாளில் நாங்களும் வந்து விடுகிறோம். ஆனால் பெரிய ஆய்வாளருக்கு முன்னதாகத் தெரிவித்து அழைக்க வேண்டும்'' என்று முத்துசவரிக்குச் சொல்லியனுப்பினேன்.

முத்துசவரி, திருவாளர்கள் கல்யாணசுந்தரம், சுயம்பிரகாசம் வேதாசலம் ஆகியோரிடம் விழாவுக்கான நாளும் இசைவும் பெற்று வந்தார்.

மேலப்புனவாசல் நலப்பள்ளியின் ஆண்டு விழாவும் பெற்றோர் சங்கக் கூட்டமும் சிறப்பாக நடந்தன. எதிர்பார்த்ததைவிட நல்ல கூட்டம்.

மேலப்புனல்வாசல், திருவையாறுக்கு வடமேற்கே சில கல்தொலைவில் இருக்கிறது. திரு சுயம்பிரகாசம் எங்களைக் காரில் அழைத்துக் கொண்டு போனார்.

ஊர்க்கோடியில் தாரை தப்பட்டைகளோடு, மக்கள் குழுமியிருந்தார்கள். அந்தப் பண்டைய இசைகள் முழங்க, நாங்கள் ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போகப்பட்டோம்.

தேர்தல் காலங்களில், வாக்குச் சீட்டுகளை நாடிச் செல்வோர் கூட, அக்காலத்தில் ஆதிதிராவிடக் குடியிருப்பிற்குள் சென்று சிறிது நேரம் தங்குவது அரிது.

ஆனால் நாங்களோ குடியிருப்பில் மூன்று மணி நேரத்துக்குமேல் தங்கி இருந்தோம். அங்குள்ளோரை எட்டி நிற்க விடவில்லை. சூழ்ந்து உட்கார, நெருங்கி உட்காரச் செய்தோம்.

நாங்களும் விலகி, 'மடி'யாக உட்காரவோ, நடக்கவோ இல்லை. ஊர்வலத்தில் வந்த சிறுவர்களை உற்சாகமாகத் தட்டிக்கொடுத்ததும் உண்டு.

இத்தகைய 'அக்கிரமத்தை' சாதாரண மனிதர்கள் கூட்டத்தில் செய்திருக்க முடியாது. செய்திருந்தால் அவர்களுக்கு அடிஉதை கிடைப்பதைவிட, குடியிருப்பைச் சேர்ந்தவர்களுக்கே அதிகத் தண்டனை கிடைத்திருக்கும்.

கரந்தை, தமிழ்ச் சங்கத்தின் உயிராக விளங்கிய உமாமகேசுவரன் பிள்ளையோ அவரோடு உறவுடைய - தோழமை உடையவர்களோ செய்தால், மற்றவர்கள் முணுமுணுக்க மட்டுமே முடியும்; அதைத் தடுக்க முடியாது.

அன்று வேங்கைகளாக விளங்கிய சுயம்பிரகாசம், வேதாசலம், மற்றோர் அப்பக்கப் பெரியவர் ஆகியவர்களோடு நாங்கள் சென்று, தங்கி, பேசிவிட்டு வந்ததால், குடியிருப்புக் குடிசைகள் தீக்கிரை யாகாமல் தப்பின. அம்மக்களும் அடி உதைக்கு ஆளாகவில்லை.

நாங்கள் அனைவருமே, அவர்களுக்கு நெருக்கமானவர்கள் போல் நடந்தது, புனவாசல் குடியிருப்பு மக்களின் பரிவை எங்கள்பால் திருப்பிற்று.

'பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவோம்' என்று முழங்கச் சொன்னபோது, ஆர்வத்தோடு முழங்கினார்கள். பலன் உண்டா?

98. இல்லாத பள்ளி

''பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவோம்.'' இப்படி மேல் புனவாசல் குடியிருப்பில் வாழ்ந்தோர் முழங்கினார்களே; அதன்படி நடந்தார்களா?

ஆம்; நடந்தார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றினார்கள்.

அடுத்த நாளே செயல்படத் தொடங்கினார்கள். பள்ளிக்குப் பிள்ளைகளின் வருகை கூடிற்று. ஏழு நாள்களுக்குள் இரு ஆசிரியர் களுக்குப் போதுமான அளவிற்கு வருகை உயர்ந்துவிட்டது.

ஒரு திங்களில் மூன்றாவது ஆசிரியர் தேவைப்படும் அளவு பள்ளியில் மாணவர்கள் வருகை பெருகிவிட்டது.

மூன்றாவது ஆசிரியர் போட முடிந்ததா? முடிந்தது.

சில திங்களுக்குள், உரிய அலுவலகத்திற்கு எழுதி, மூன்றாவது ஆசிரியர் பதவிக்கு ஒப்புதல் பெறப்பட்டது.

ஈராசிரியர் பள்ளியை ஓராசிரியர் பள்ளியாக மாற்றியிருந்தால், சில திங்களில் இல்லாவிடினும், சில ஆண்டுகளிலாவது, அதுவும் எடுபட்டிருக்கும்.

மாறாக ஆள் குறைப்பைத் தடுத்து நிறுத்தி மூன்றாவது ஆசிரியரையும் பெற்றுத் தந்தது. அந்தப் பள்ளியின் தொடர்வளர்ச்சிக்கு உதவிற்று.

பிற்காலத்தில், ஏழைப்பங்காளர் காமராசர், கல்விமடை திறந்து விட்டபோது மேல்புனவாசல் நலப்பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்து விட்டது.

வாழ்க்கையில், துன்பம் சூழ்கையில் தற்கொலை செய்து கொள்வதைப் போன்ற பெரும் தீங்கு, அமைப்புகளை - சிறப்பாக, கல்வி அமைப்புகளை - மூடுவது என்ற பாடத்தை அப்போது கற்றுக் கொண்டேன்.

உயிரோடிருந்தால், கல்வி நிலையங்கள் என்றோ ஒரு நாள் வளம்பெறும்; பயன்படவேண்டிய வகையில் பயன்படும் என்ற படிப்பினையை என் பணியின் தொடக்க காலத்திலேயே கற்றுக் கொண்டதால் நான் பெரும் பதவிகளில் இருந்தபோது கல்விக் கூடங்களை மூடாமல் வளர்ப்பதிலேயே ஈடுபட முடிந்தது.

மரபைக் கெடுத்தேன்

தஞ்சையில் இளந்துணை ஆய்வாளனாக இருந்த காலை நான் சில 'விபரீத'மான செயல்களைச் செய்தேன்!

'சோழ வளநாடு சோறுடைத்து.' இது வெறும் பேச்சு வழக்கல்ல. உண்மையான வழக்குங்கூட.

அதோடு, தஞ்சை மாவட்டத்தில் அய்யரோ, அய்யங்காரோ குடியிராத சிற்றூர்களைக் காண்பதும் அரிது.

எனவே, மற்றவர்கள் வீடுகளில் சாப்பிடாத முறையைப் பின்பற்றுபவர்கள்கூட எந்த ஊரிலும் பட்டினியாகத் திரும்ப நேரிடாது.

பள்ளி ஆய்வாளர் வந்தால் ஆசிரியர் வேறு சாதியைச் சார்ந்தவராயினும் எந்த அய்யர் வீட்டுக்காவது வேண்டுகோள் விடுப்பார்.

உணவு வேளையாக இருந்தால் உணவும், பிறவேளையாக இருந்தால், சிற்றுண்டியும் காப்பியும் வந்து சேரும்.

அப்படி ஊருக்கு ஊர் உணவு கிடைத்த அங்கும் 'வாழத் தெரியாதவன்' நான். தஞ்சையைவிட்டுப் புறப்படும்போதே, வேண்டிய சிற்றுண்டிப் பொட்டலத்தோடும் சூடுகுடுவை நிறையக் காப்பியோடும் புறப்படுவேன்.

கைவீசிக் கொண்டு நடப்பதற்குப் பதில் இவற்றைச் சுமந்து செல்ல வேண்டியதைப் பற்றி, என் ஊழியர் அரங்கராசு கவலைப்பட்டதில்லை.

'எங்கள் மாவட்டத்தின் மரபையே கெடுத்துவிடுகிறார்' என்று வேதனையோடு பலரிடம் முணுமுணுத்ததாகப் பிறகு ஒரு சமயம் கேள்விப்பட்டேன்.

ஆய்வாளர் 'ஓசி'ச்சாப்பாடு உண்டால் ஊழியருக்கும் அப்படியே கிடைக்கும். என்னால், அவருக்குக் கிடைத்து வந்தது நின்றுவிட்டது.

நம் சமுதாய முறையும் அலுவலக முறையும் இப்படித் தவறான அடிப்படையில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

நேர்மையாளர் பதவிக்கு வந்தால் அவருடன் ஊழியம் செய்பவர்கள் வெறுக்கிறார்கள்; புகார் சொல்லுகிறார்கள்.

ஆனால் என்னுடைய ஊழியர் அரங்கராசு மொட்டைக் கடிதாசி எழுதும் வழக்கம் இல்லாதவர். எனவே அவரால் எனக்குத் தொல்லை வரவில்லை.

ஆசிரியர்களின் அவலம்

அந்தக் காலத்தில், மான்யம் பெறும் தொடக்கப்பள்ளிகளை நடத்துவது ஆதாயமான தொழில்.

நிர்வாகத்திறனும் தொழில்நுட்பமும் குழைவும் இருந்தால், ஒருவரே அய்ந்தாறு பள்ளிகளை நடத்துவார்.

அய்ம்பது அறுபது ஆசிரியர்களை வேலைக்கு வைத்து வேலை வாங்குவார்.

அன்று ஆசிரியர்களுக்கு என்ன ஊதியம்? மான்யப் பள்ளிகளில் தொடக்கநிலை ஆசிரியருக்கு ஆண்டுக்கு நூற்று நாற்பத்து நான்கு ரூபாய்களே. இடைநிலை ஆசிரியருக்கோ, இருநூறு ரூபாய்கள் ஆண்டு ஊதியம்.

மேற்கூறிய சொற்பத் தொகைகளும் ஆண்டுக்கொரு முறையே கொடுக்கப்படும். அதில் வெட்டு இல்லாது பெற, ஆய்வாளர் தயவு வேண்டும்.

ஆசிரியர் நியமனத்தில் முன் பணம் - கையூட்டு - வாங்குவோர் இருந்தனர்.

ஆண்டு ஊதியம் வரும்போது, அதில் கழிவு பிடித்துக் கொள்ளும் நிர்வாகிகள் செயற்பட்டார்கள்.

நல்ல நிர்வாகம் கிடைக்கும் வரை, பயிற்சி பெற்ற ஆசிரிய ஆசிரியைகள் காத்துக் கொண்டிருக்க முடியுமா?

முடியாது. வீட்டில் சாப்பாட்டிற்கு இருந்தாலும் காத்திருக்க முடியாது.

ஏன்?

பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி முடிந்த மூன்றாண்டுக்குள், குறைந்த அளவு பதினெட்டுத் திங்கள் பணி செய்து முடிக்க வேண்டும். முடிக்கத் தவறினால், பயிற்சிக்கான செலவு என்று பெருந்தொகையை அக்காலத்திற்குப் பெருந்தொகையை - அரசிற்குத் திரும்பக் கட்டிவிட வேண்டும்.

அப்படிக் கட்ட வேண்டிய காலம் நெருங்கியதும் கெடுபிடிகள் செய்து சொத்தை, ஏலம் போட்டுப் பணத்தைத் தண்டிவிடுவார்கள். அந்தக் காலத்தில் வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவு - இப்போது சில ஆண்டுகளாக இருப்பதைப் போல.

ஆகவே எப்படியாவது ஒரு மான்யப் பள்ளி நிர்வாகியைப் பிடித்து, எதையாவது கொடுத்து இடம் பிடிக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளானார்கள்.

நிர்வாகிகள் வருகையை இப்படியும் அப்படியும் சரிசெய்து, ஆய்வாளர்களைச் சரிக்கட்டி, கூடுதல் ஆசிரியர்களைப் போட ஒப்புதல் பெறுவார்கள்.

வேலைக்குச் சேர்ந்தவிட்டால் போதாது.

ஆசிரியப் பயிற்சிச் சான்று இதழில் ஆசிரியர் பணி இன்ன தேதியிலிருந்து இன்ன தேதி வரை, சரியாக இருந்தது என்று ஆய்வாளர் எழுதி, தேதியும் அலுவலக முத்திரையும் பொறுக்கிக் கையொப்பமிட வேண்டும்.

பணியை மதிப்பிட, பள்ளிக்கு நேரில் வந்து போக வேண்டும். அப்படி வராமற் போனால், பணிக்கான சான்று போய்விடும். ஆசிரியர் தவியாகத் தவிப்பார்.

தொல்லை கொடுப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தார்களோ என்று தோன்றுகிறதா? ஆம்; அப்படியே!

இம்முறை பிற்காலத்தில் ஒழிக்கப்பட்டது. இக்கொடுமையை ஒழித்ததில் எனக்கும் பங்கு உண்டு.

இயங்காத பள்ளி

தஞ்சை வட்டத்தில் ஒரு நிர்வாகி என்னுடைய தணிக்கைக்கு உட்பட்டு இரு மான்யப் பள்ளிகளை நடத்தி வந்தார்.

அதே வட்டத்தில் வேறு ஆய்வாளர்களின் மேற்பார்வையில் இரண்டு மூன்று பள்ளிகளை நடத்தி வந்தார்.

அவர் 'கைகாரப் பேர்வழி' என்று பலரும் என்னை எச்சரித்தார்கள்.

அவர் நடத்திய பள்ளிகளில் ஒன்று, ஒரு குக்கிராமத்தில் ஆதிதிராவிடக் குடியிருப்பில் இருந்தது.

நம் சமுதாய முறைப்படி உச்சியில் இருப்பதாகக் கருதப்பட்ட ஒருவர், கடைசிப் படிக்கட்டில் இருப்பவர்கள் நடுவே பள்ளியை நடத்தினார்.

சமத்துவ உணர்வின் உந்தலா? இல்லை.

பணத்தாசை யாரையும் எங்கும் கொண்டு போகும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

அப்பள்ளிக்கு வடக்கிலும தெற்கிலும் காவிரியிலிருந்து வரும் ஆழமான வாய்க்கால்கள் உண்டு. பழக்கமில்லாதவர்கள் அவற்றை எளிதில் கடக்க முடியாது.

விரைந்தோடும் அந்த நீரில் இறங்கி நடக்கத் திறமை வேண்டும். ஆய்வாளர்கள் அவற்றிற்கு அஞ்சி, நிர்வாகிக்கே முன்னதாகத் தகவல் கொடுத்துவிட்டுத் தான் போவார்கள்.

முன் அறிவிப்பின்றிப் பார்வையிட வேண்டுமென்பது, ஏட்டோடு நிற்கும்.

அப்படித் தகவல் கொடுத்தால், நிர்வாகி குறிப்பிட்ட நேரம், தக்க ஆள்களோடு, வாய்க்கால் கரையில் நிற்பார். ஆய்வாளரைப் பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு போவார். பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பி வைப்பார்.

சுருக்கமாச் சொல்லுவது என்றால் நிர்வாகியின் தயவு இல்லாமல் ஆய்வாளர் எவரும் அப்பள்ளியைப் பார்த்துவிட்டு, திரும்பி வரமுடியாது.

ஆதிதிராவிடக் குடிஇருப்பிற்குள் நுழைந்தால் தீட்டாகிவிடும் என்று கருதிய ஆய்வாளர்கள் பலர் அக்காலத்தில் இருந்தார்கள்.

அப்படிப்பட்டவர் தணிக்கையின் கீழ் பள்ளி வந்துவிட்டால் நிர்வாகிக்கும் ஆசிரியருக்கும் கொண்டாட்டம்.

சில பையன்களையும் இரண்டொரு பெண்களையும் குடியிருப் பிற்கு வெளியே கொண்டுவந்து காட்டி, தணிக்கைக் குறிப்புகளைப் பதிந்து கொண்டு போய்விடுவார்கள்.

பொய்மை இரு சாராருக்கும் வசதி.

இப்படிப்பட்ட மான்யப் பள்ளியை நேரில், திடீரெனப் பார்த்துவிட முயன்றேன். என் ஊழியரை அழைத்துக் கொண்டு இரயில் ஏறினேன்.

இறங்க வேண்டிய புகைவண்டி நிலையத்தில் இறங்கினோம்.

அதற்கு நானா பக்கங்களிலும் பல பள்ளிகள் இருந்தன. அவற்றில் எதைப் பார்க்கப் போகிறோமென்று ஊழியருக்குக் குறிப்புக் காட்டவில்லை.

வாய்க்காலில் இறங்கினேன்

வண்டியில் இருந்து இறங்கியதும் பார்வையிட வேண்டிய பள்ளியின் பெயரைத் தெரிவித்தேன்.

''எசமான் அந்த வழி பொல்லாத வழிங்க. பள்ளிக்கு நூறு கஜத்தில் ஆழமான வாய்க்கால் ஓடுதுங்க. நாம் தனியே கடக்க முடியாது.

''கரையில் நின்று குரல் கொடுத்தால், பள்ளி ஆசிரியர், நீந்தத் தெரிந்த இருவரை அழைத்து வந்து, நம்மைக் கூட்டிக் கொண்டு போவார். அப்படிப் போய்ச் சேருவதற்குள், போதிய பள்ளிப் பிள்ளைகளும் சேர ஏற்பாடு செய்துவிடுவார்.

''திடீர்ப் பார்வை என்பது அங்கே செல்லாது'' என்று விளக்கம் சொன்னார்.

எழுந்த வெகுளியை அடக்கிக் கொண்டேன், ''பரவாயில்லை; வழிகாட்டிக் கொண்டு முன்னே போகவும்'' என்று உறுதியாக ஆணையிட்டேன்.

வரப்புச் சேறுகளைச் சமாளித்து நடந்தோம். ஒரு மணிக்குமேல் நடந்தபின், வாய்க்கால் கரையை அடைந்தோம்.

உடனே ஊழியர் அரங்கராசு,

''எசமான்! பள்ளிக்கூடம் வீழ்ந்து கிடக்கிறது. அங்கே எவரும் இல்லை. குரல் கொடுத்துப் பார்க்கிறேன். ஊரார் எவராவது வரட்டும்; அப்புறம் வாய்க்காலில் இறங்கிச் செல்வோம்'' என்று என்னை எச்சரித்தார்.

நான் கேட்கவில்லை. இடுப்பளவுக்கு மேல் நீர் இல்லை என்று, என் கண் அளவை சொல்லிற்று. அந்தத் துணிச்சலில் வாய்க்காலில் இறங்கினேன். ஊழியரும் இறங்கிவிட்டார்.

இருவரும் ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிடித்தபடி காலை அழுத்தி வைத்து நடந்தோம்.

அப்பாடி! எதிர்க்கரை சேர்ந்தோம்! பள்ளியண்டை சென்றோம்.

எங்களைக் கண்டதும் ஆங்காங்கே உட்கார்ந்திருந்த ஏழெட்டுப் பெரியவர்கள் கூடிவிட்டார்கள்.

நான் யார் என்பதை அரங்கராசு தெரிவித்தார். பெரிய கும்பிடு கிடைத்தது. பள்ளியைப் பற்றிக் கேட்டேன்.

''இதைத் தொடங்கும்போது அய்யர் சொல்லியனுப்பினார். எங்க ஆசிரியர் ஒருவர் வந்து, எங்களோடு பேசினார். எங்களால் முடிந்த வரைக்கும் மண்சுவர் எழுப்பி, ஓலைக்கூரை போட்டு, பள்ளியைக் கட்டிக்கொடுத்தோம். மூன்றாண்டு நடந்தது; சில பையன்கள் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டனர்.

''ஆனால் சென்ற காற்று மழையில் கட்டடம் வீழ்ந்து தரைமட்டமாகிவிட்டது. எங்கள் குடிசைகள்கூடத் தண்ணீரில் போய் விட்டன. அதனால் எங்களால் பள்ளிக்கூடத்தைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க முடியவில்லை.

''பத்து மாதமாகப் பள்ளி நடப்பது இல்லை. ஆசிரியர் அவங்க ஊரில் நின்றுவிட்டார். அய்யர், அவ்வளவாவது செய்தார். அதற்கு மேல் எங்களுக்குக் கொடுப்பினை இல்லை எசமான்.'' இது கலந்துரையாடலின் சுருக்கம்.

அவர்கள் சொன்னதை எழுதினேன். அவர்களுக்குப் படித்துக் காட்டினேன்; கையெழுத்திடச் சொன்னேன்.

இருவர் கையெழுத்திட்டார்கள். எமொ' டுப் பேர்கள் மை ஒத்தினார்கள்.

இதற்குள் இளநீர்கள் நான்கு கொண்டு வந்து விட்டார்கள்; அன்புடன் வெட்டிக் கொடுத்தார்கள்; குடித்தோம். ஊர் திரும்பினோம்.

பள்ளி நடைபெறுவதாகப் பதிவு

தஞ்சைக்குப் பிற்பகலே வந்து சேர்ந்தோம். அப்பள்ளி பற்றித் திங்கள்தோறும் வரும் கணக்குக் கோப்பைப் பரிசீலனை செய்கு பார்த்தேன்.

கடந்த பத்துத் திங்களும் அப்பள்ளி நடந்ததுபோல, வருகைக் கணக்கு, ஆசிரியர் விவரம் முதலியன உரிய நாளில் வங்து கோக்கப்பட்டிருந்தன.

அந்தப் பத்துத் திங்களில ஒருமுறை திடீர்ப் பார்வையும் நடந்ததாக எழுத்து வழி தகவல் இருந்தது.

எது உண்மை? ஊரார் சொன்னதா? பள்ளியின் திங்கள் கணக்குச் சொல்வதா?

ஏழை சொல் அம்பலம் ஏறுமா? முன்னிருந்த ஆய்வாளர் பார்க்காமலே, பார்வையிட்டதாகக் குறிப்பு எழுதியிருப்பாரா? எழுதியிருந்தாலும் அதை என்னால் மெய்ப்பிக்க முடியுமா?

மெய்ப்பிக்க இயலாவிட்டால், அது என்னைக் கடுமையாகத் தாக்கும்.

இப்படிக குழமபினேன். எங்கே சென்றாலும் இப்படி வம்ப வங்து நிற்கிறதே என்று ஏங்கினேன்.

மூன்று நாள்கள் படாத பாடுபட்டேன். ஆய்வாளர் ஊரில் இல்லை. அலுவலர்கள் அப்பக்கத்துக்காரர்கள். அவர்களே நிர்வாகிக்கு உடந்தையாக இருந்தால்? இப்படி அய்யப்பட்டு எவர் இடமும் எதைப் பற்றியும் பேசாமல் தவித்துக் கொண்டு இருந்தேன்.

மானியம் வேண்டாம்

திடீரென, ஒருநாள் காலை நிக்கல்சன் மாடித் தாழ்வாரத்தில் ஒருவரைக் கண்டேன். அவர் எனக்குப் பெரிய கும்பிடு போட்டு விட்டு, ஒரு நீளத் தாளை நீட்டினார்.

அதை வாங்கிப் படித்தேன். என் கண்களை நம்பமுடியவில்லை.

இருமுறை படித்தேன். அப்புறம் வந்தவரைப் பார்த்தேன்.

''தாங்கள் என் பள்ளியைத் திடீரெனப் பார்வையிட்டதாகத் தகவல் வந்தது. பெரியவர்கள் இடம் சாமர்த்தியமாகப் பேசுவதைவிட உண்மையாகப் பேசுதல் நல்லது என்று எண்ணினேன்.

'பள்ளி, பத்து மாதங்களாக நடக்காதது உண்மை. நடப்பதுபோல் நாளை கணக்கு எழுதி அனுப்பிக்கொண்டிருந்தது பொய். ஆசிரியரின் 'புரொபேசன்' முடியணுமே என்று அப்படிச் செய்தேன்.

''எங்களுக்கு உதவ வேண்டுமென்பதற்காக ஆய்வாளரும் வந்து பார்க்காமலே, பார்த்ததுபோல, பதிவுகளை உண்டாக்கிவிட்டார்.

''அய்யா வந்து கண்டுபிடித்துவிட்டீர்கள். இனியும் மறைத்துப் பயன் இல்லை. கிணற்றில் பாதாளக்கொளுசைப் போட்டு இழுத்தால், அதில் என்னென்ன வெளியே வருமோ? நான் இன்னும் நான்கு பள்ளிகளைச் செம்மையாகவே நடத்துகிறேன். அவற்றைக் காப்பாற்றிக் கொண்டால் போதும்.

''அதனால்தான், நானே உண்மையை எழுதிக்கொடுத்து விட்டேன். பள்ளிக்கு மானியம் வேண்டாமென்றும் எழுதிக் கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து, 'அங்கீகாரத்தை எடுத்து விட்டு' வேறு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், மன்னித்து விடுங்கள். எனக்காக மட்டுமல்ல; என்னை நம்பிய ஆய்வாளருக்கும் உதவியாக இருக்கும்'' என்று நிர்வாகி மிகவும் பணிவுடன் வேண்டிக் கொண்டார்.

அவர் பெயர் பசுமையாக நினைவில் இருக்கிறது. ஆனால் வேண்டுமென்றே சொல்லாமல் விடுகிறேன்.

ஏன்?

அவர், பிற்காலத்தில் அதிகமான பொறுப்புகளை மேற்கொண்டு உள்ளார். பயனுள்ளவகையில் செயல்பட்டுள்ளார். நாடு தழுவிய பரிசினைப் பெற்றுள்ளார். அவரைப் பழிப்பானேன்? யாரையும் பழிக்க நான் இவற்றை எழுதவில்லை.

இல்லாத பள்ளியின் விவகாரம் எளிதாகத் தீர்வதைப்பற்றி மகிழ்ச்சி கொண்டேன். அப்பள்ளியின் அங்கீகாரத்தை நீக்கிவிடும்படியும், அவ்வாண்டு மானியத்தில் ஒரு காசும் கொடுக்கத் தேவையில்லை என்றும் மாவட்டக் கல்வி அலுவலருக்குப் பரிந்துரைத்தேன்.

அப்படியே ஆணை வந்துவிட்டது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த நிர்வாகி வளர்ந்துள்ளதைக் கேள்விப்பட்டேன். ஒரு படிப்பினை மின்னிற்று.

அது என்ன?

'தன்னெஞ்சறிவது பொய்யற்க', 'யானைக்கும் அடிசறுக்கும்' எப்படியோ, செய்த தவறு தெரிந்துவிடும்போது, சூழ்ச்சித்திறனை நம்பாது, நேர்மையின் வலிமையை நம்பி, தவறை உளமார ஒப்புக் கொள்ளுவதே எதிர்கால வளர்ச்சிக்குப் பெரும் துணை.

அந்தப் போக்கே அவரை, வளர்த்து இருப்பதாகப்பட்டது.

99. நம்பிக்கைத் துரோகம்

ஸ்ரேயஸ் மாணவர் விடுதி

நான் தஞ்சையில் பள்ளித் துணை ஆய்வாளனாக இருந்தபோது, அம்மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அதிகம் இல்லை.

தஞ்சை, கும்பகோணம், மாயூரம், நாகை, பட்டுக்கோட்டை போன்ற பெருநகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. நாட்டுப்புறங்களுக்கு அவை எட்டவில்லை.

அக்காலத்தில், ஆதிதிராவிட இளைஞர்களின் கல்வி அதிகம் வளரவில்லை. அவர்களுடைய உயர்நிலைக் கல்வியை வளர்க்கும் தனி முயற்சி குறைவு.

இருப்பினும், தஞ்சை நகரில் மட்டும் ஓர் ஆதிதிராவிட மாணவர் விடுதி சிறப்பாக நடந்து வந்தது.

அதை, தஞ்சை மாவட்ட ஆட்சிக்குழு நிர்வகித்து வந்தது. அதன் பெயர் என்ன?' ஸ்ரேயஸ் விடுதி' என்பது.,

அவ்விடுதியின் ஆண்டுவிழாவில் கலந்து கொள்ளும்படி கல்வித்துறையின் கடைசிப் படிக்கட்டிலிருந்த என்னை அழைக்க வந்தார்கள்.

அன்றே, ஆதிதிராவிடர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டதைப் பற்றி மகிழ்ச்சியடைந்தேன்.

இன்று சென்னையில் பல அரசுப் பணிகளிலிருந்து கொண்டு 'அம்பேத்கார் திருச்சபை'யை நடத்தும் பழங்குடி மக்கள் என்னைப் புரவலனாகக் கொண்டு உள்ளார்கள்.

அன்றைய சமத்துவ உணர்ச்சி, இன்றும் என்னிடம் இயங்குவதற்கு இது அடையாளம் அல்லவா?

என்னை ஆண்டுவிழாவிற்கு அழைக்க வந்த அன்பர்களிடம், 'இது என்ன புதுப்பெயராக உள்ளதே?' என்று என் வியப்பைக் காட்டினேன்.

என் அறியாமையைக் கண்டு உள்ளூர நகைத்தார்களோ, இல்லையோ தெரியாது. அவர்கள் பொறுமையாகப் பதில் சொன்னார்கள்.

''மராட்டியர்கள் நம்மை ஆண்டதை நினைவுபடுத்துவது இம் மராட்டியப் பெயர். 'ஸ்ரேயஸ்' என்ற மராட்டிய மன்னர் பல ஊர்களில் சத்திரங்களைக் கட்டி, அவற்றை நடத்த, சொத்தையும் எழுதி வைத்தார்.

''அதைக்கொண்டு, வழிப்போக்கருக்குச் சோறு போட்டு வந்தார்கள்.

''மாவட்ட ஆட்சிக்குழு ஏற்பட்டபோது, சத்திரப் பராமரிப்பு அக்குழுவிடம் வந்தது. ஏ.டி. பன்னீர்செல்வம் அக்குழுவின் தலைவரானபோது. நெடும்பலம் என்.ஆர். சாமியப்பா போன்றவர் களின் ஆதரவோடு, சத்திரச் சாப்பாட்டை நிறுத்தாமல் படிக்கும் பிள்ளைகளுக்குச் சோறு போடவும் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்தார்.

''சில ஊர்ச் சத்திரங்களில் இப்படிச் செய்தபிறகும் வருவாய் மிஞ்சிற்று. அதைக் கொண்டு தஞ்சையில் ஆதிதிராவிடர்களுக்கென்ற தனியாக விடுதியே அமைத்துவிட்டார்.

''பன்னீர்செல்வம் மடை மாற்றியதால், எத்தனையோ ஆதிதிராவிட ஏழைப் பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

''பெரிய சாதிக்காரர்கள் மட்டும் சாப்பிட்டதுபோய், எங்களுக்கும் கிடைக்கச் செய்தபோது, எவ்வளவு தூற்றல், எதிர்ப்பு, அம்மம்மா! அவற்றைப் பொருட்படுத்தாத அந்த இரும்பு மனிதர்களால் எங்களுக்குக் கண்திறந்து இருக்கிறது'' என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்கள்.

நன்றி மறவாத ஜமாலி

அதை நினைந்து எழுதும்போது, இன்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இசுலாமியத் தம்பி ஒருவர், உளமுருகிச் சொன்னது நினைவிற்கு வருகிறது.

அவர் சொன்னது என்ன?

''நான் திருவையாறு மன்னர் கல்லூரியில் படித்துத் தமிழில் வித்துவான் நிலை அடைந்தேன்.

''அக்கல்லூரியில், நெடுநாள் வடமொழி வகுப்புகள் மட்டுமே நடந்தன. பின்னர், பலத்த எதிர்ப்புகளுக்கிடையில் மாவட்ட ஆட்சிக்குழு தமிழ் வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்தது.

''திருவையாறு தமிழ்க் கல்லூரியில் தமிழ் படிக்கச் சேர்ந்த முதல் முஸ்லீம் நானே. அதற்கு முன் அக்கல்லூரியில் முஸ்லீம்களைச் சேர்ப்பதே இல்லை. பெரியாரின் அதிர்ச்சி மருத்துவம் மனமாற்றத்தை ஏற்படுத்தியது. நான் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். நான் பெற்றுள்ள தமிழ்ப் புலமை அங்கே பெற்ற புதையல்!''

இப்படிச் சொன்ன இளைஞர் - முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் - இலப்பைக் குடிக்காடு ஜமாலி என்ற பெயரினர்; நல்ல பேச்சாளர்; நல்ல பண்பாளர்; இனிய நண்பர்.

இவர், ஓர் அய்ந்தாண்டு காலம் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததாக நினைவு.

இவர் அரசியல் காட்டாற்றில் நீந்த முயன்றார். அரசியலுக்கு வேண்டிய 'சூது' இல்லாமையால், யார் யாரோ பெரியவர்களாகும் தலைமுறையில், எங்கோ ஒதுங்கிவிட்டார்.

ஒரு முறை இலப்பைக் குடிக்காட்டில் ஜமாலியின் வீட்டு மாடியில் தங்கி, விருந்து உண்டதை நினைந்து நிறைவு கொள்ளுகிறேன்.

இப்போது, ஸ்ரேயஸ் மாணவர் விடுதிக்குச் செல்வோம்.

அறவுணர்வு, மாந்தரின் உயிர் மூச்சாக இருக்க வேண்டிய ஒன்றாகும். அந்த உணர்வு அற்றுப் போகும்போது, மக்கள் மாந்தர் நிலையை இழக்கிறார்கள்; மரத்தின் நிலைக்கு மாறுகிறார்கள்.

மாந்தர் இனம் உள்ளவரை இருக்கவேண்டிய அறவுணர்ச்சி, எல்லாக் காலத்திற்கும் ஒரே உருவைக் கொள்ளுதல் ஆகாது. காலத்தின் தேவைக்கேற்ப, புதுப் புதுக் கோலம் பூணுவது முறை.

எவ்வகை வண்டியும் இன்றி, ஏராளமானோர் நடந்தே வெளியூர் செல்லும் நிலையில் இருந்த முற்காலத்தில், சுமைதாங்கிகள் தேவைப்பட்டன. இன்று அத்தேவை மிக மிகக் குறைந்து விட்டது.

எனவே, அறவுணர்ச்சி, ஆங்காங்கே பேருந்து நிற்குமிடங்களில் பயணிகளுக்குக் குடைகளாக எழும்புகின்றன.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்த, தேசியகவி பாரதியார்,

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்....
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'

என்று, அற உணர்வினை மடைமாற்றஞ் செய்யச் சொன்னார்.

சோறு போட்டுக் காத்தல் குறை உடையதல்ல. ஆனால் தொழில் புரிய உதவுவது நிறைவானது. இதை உணர்ந்து தமிழ் மக்கள், ஒரு பத்து ஆண்டுகாலம், கல்வி வளர்க்கும் அறத்தின் பால் முனைப்பாயிருந்தார்கள். அந்த நாளும் வந்திடாதோ?

ஸ்ரேயஸ் மாணவர் விடுதி ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். விடுதி மாணவர்கள் என்னுடன் அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். அடேயப்பா அவர்களிடையே பொங்கிய பூரிப்புக்கு எல்லையில்லை.

நம்பி மோசம் போனேன்

துணிந்து, வளர்ச்சிக்கான ஆக்கப்பணி செய்கிறேனென்ற மகிழ்ச்சியில் இருந்தேன். அதைக் கெடுக்கும் 'நாட்டுக்குண்டு' ஒன்று வந்து வீழ்ந்தது.

அது என்ன?

பொன்னேரி ஆய்வாளர் அலுவலகத்தில், பள்ளித் தணிக்கை அறிக்கைகளின் மூலங்களை விட்டு வந்தேனல்லவா?

சில மணித் தவணையில் பதவியை வேறொருவரிடம் ஒப்படைக்க வேண்டியிருந்ததால், அவற்றின் படிகளை நானே எடுத்துக் கொடுக்க இயலவில்லை என்பது நினைவிற்கு வருகிறதா?

அவற்றின் படிகளை எடுத்து, உரிய காலத்தில், மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி விடுவதாக, அமிர்தலிங்க தேசிகரும் ஆய்வாளர் அலுவலக உதவியாளரும் சொன்னதை நம்பி வந்து விட்டேன் அல்லவா?

அவர்கள் என்னிடம் சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை.

அத்தனை அறிக்கைகளையும் அப்படியே கட்டி வைத்திருந்தார்கள்.

மாவட்ட அலுவலகத்தில் இருந்து, அறிக்கைகளை அனுப்பும்படி நினைவுக் கடிதம் வந்ததாம்.

உடனே செயல்பட்டார்கள். எப்படி?

அறிக்கைகளின் மூலங்களைச் சேர்த்துக்கட்டி, மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டார்கள்.

மூல அறிக்கைகளை எழுதிய நெ.து.சு படிகளை எடுத்துக் கொடுக்காமல் போய்விட்டதால், மூலங்களை மட்டும் அனுப்பி வைப்பதாக, மேலதிகாரிக்கு எழுதி அனுப்பினார்கள்.

மாலை ஆறு மணிக்கு நெடுஞ்சாலையில் காத்துக் கொண்டிருந்த என்னிடம் மாறுதல் ஆணையைக் கொடுத்துப் புதிய ஆய்வாளரைப் பதவியில் சேரவைத்தது, உலகறிந்த செய்தி.

எனினும், மாவட்டக் கல்வி அலுவலகம் என்பேரில் குறை கண்டது.

அத்தனை அறிக்கைகளையும் தஞ்சை மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பியது. அவற்றின் படிகளை எடுத்து அனுப்பும் படி நெ.து.சு.வுக்கு ஆணையிடுவதோடு, 'அவர் முன்னரே அப்படிச் செய்யத் தவறியதற்கு, ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கம் கேட்டு, வாங்கி, அனுப்பவும்' என்று தஞ்சை மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஒரு கடிதம் வந்தது.

கணவனே விரட்டும்போது அண்டை வீட்டுக்காரர்களுக்கு இளக்காரந்தானே.

உண்மையான நெருக்கடியை அறிந்த செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அலுவலகம் விரட்டியதோடு, தஞ்சை மாவட்ட அலுவலகமும் சேர்ந்து கொண்டது. அங்கிருந்து எனக்குக் கடுமையான கடிதம் வந்தது.

அதுவும் நன்மைக்கே. பிற்காலத்தில் பலரால், முதுகில் குத்தப் படுவதையும் உண்மைக்குப் புறம்பான கடுஞ்சொற்களால் தாக்கப் படுவதையும் சமாளித்துக் கொள்ளப் பயிற்சியாக அது அமைந்து

இருந்ததை அறியாது, அன்று அல்லல்பட்டேன். தூக்கம் வராது கண்விழித்துக் கிடந்தேன்.

இவ்வளவு சிறிய காரியத்தில் அமிர்தலிங்கம் முதுகில் குத்தி விட்டாரே என்று கொந்தளித்தேன்.

தஞ்சை அலுவலகத்தில் அதை வைத்து என்னைக் கேலியாகப் பேசுவதை நினைத்துப் புழுங்கினேன்.

வைராக்கியம் பிறந்தது. இரவோடு இரவாக அத்தனை அறிக்கைகளையும் படி எடுத்து முடித்தேன்.

'பொன்னேரி பதவியை மாற்றிக் கொடுக்க எனக்கு முன் அறிவிப்பு இல்லை. அந்நெருக்கடியோடு, சேர்க்கைக் காலம் எடுத்துக் கொள் ளாமல், உடனே தஞ்சைக்குச் செல்லும்படி அவசர ஆணை வந்தது.

'குறிப்பிட்ட நாளன்று காலை எட்டு மணிக்குத் தொடங்கிய வேலை இரவு எட்டு மணிக்கே முடிந்தது.

'இதற்கிடையில், நடந்ததோ பத்துக்கல்; கலந்து கொண்டதோ இரு ஆசிரியர் மையக் கூட்டங்கள்; ஒவ்வொன்றிலும் ஒரு மணிநேர உரையாற்றல்.

'இவற்றிற்கும் மேலாக, புதிதாக வந்த ஆய்வாளர் மட்டுமன்றி, நிலையாக உள்ள உதவியாளரும், படிகள் எடுத்து அனுப்புவதாக வாக்குறுதி தந்தார்கள். அதை நம்பி மோசம் போனேன்.

'ஆகவே, நான் கவனக் குறைவாகவோ, பொறுப்பைக் கழிக்கும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை.

'ஒரு திங்களில், சராசரி நடக்க வேண்டிய தணிக்கைகளைவிட, அதிகமான தணிக்கைகளை 1940 நவம்பர், டிசம்பர் திங்களில் நான் நடத்தியுள்ளேன். அது என் பொறுப்புணர்ச்சியைக் காட்டும் நான் ஏதும் தவறு செய்யவில்லை' என்று விளக்கம் எழுதி அனுப்பினேன்.

என் விளக்கத்தை செங்கற்பட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்

ஏற்றுக் கொள்ளப்பட்டதா?

'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்பதே அரசு அலுவலின் மூச்சு. இளநில எழுத்தர் எழுதும் நஞ்சைத் தொட எல்லோருமே அஞ்சுவர்.

வெள்ளைக்காரன் ஆண்டபோது மாகாண அரசை இளநிலை எழுத்தரும், இந்திய அரசை மேனிலை எழுத்தருமே நடத்தினார்கள்,' என்று கிண்டல் செய்வதுண்டு. அதில் உண்மையும் இருந்தது.

பெரிய அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்று கேட்கத் தோன்றுகிறதா?

தாங்கள் தனி அக்கறை கொண்டிருந்தவற்றில் மட்டும் குறுக்கிட்டுக் குறிப்பு எழுதுவார்கள். மற்றவற்றில், கொக்கி போடுவார்கள்.

என் விளக்கமும் அப்படியே முடிவு செய்யப்பட்டது

முடிவு ஆணை என்ன சொல்லிற்று?

'விளக்கம் சரியில்லை. ஆனாலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இம்முறை விட்டு விடுகிறோம்.

எப்படி இருக்கிறது கெட்டிக்காரத்தனம்?

100. தனிக்குடித்தனம்

புண்பட்டேன்

நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவதாக வந்த மேலாணை எனக்கு மகிழ்ச்சி ஊட்டவில்லை. மாறாக என் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது.

ஏன்? நான் தவறு ஏதும் செய்யவில்லை என்பதால்.

'வேலையின் அளவோ, தரமோ கவனிக்கப்படுவதில்லை. பதவிகளில் இருப்பவர்களுக்கு வேண்டியவர்களாகி விடும் கலை தெரிந்தால் போதும்,' என்று நண்பர்கள் சிலர் எனக்குக் கருத்துரை வழங்கினார்கள்.

அவர்கள் எனக்கு ஆறுதல் கூற முயன்றார்களா? அல்லது எத்திப் பிழைக்கும் வழிகாட்ட முயன்றார்களா?

எனக்கு நேர் மேலதிகாரியாகிய திரு. டி.எஸ். கல்யாண சுந்தரம் எனக்கு நன்மருந்தாக இருந்தார்.

''தம்பி! இதற்கெல்லாம் வருத்தப்படாதீர்கள். உங்களுக்குக் கல்வித் தகுதி அதிகம்; உழைப்பதற்கு அஞ்சமாட்டீர்கள்; வேலைத் திறனும் நிறைய. அப்படிப்பட்டவர்களைக் கண்டால், பொறாமை எழுவது இயற்கை. அதுவே, அவர்களைத் தொல்லை கொடுக்கத் தூண்டும்.

''இவற்றிற்கு மேலாக, கல்வித் துறை அலுவலகங்களின் சூத்திரதாரிகளாக இயங்கும் எவரையும் நீங்கள் போய்ச் சரிக்கட்டிக் கொள்ளவில்லை. பொறாமையும் எரிச்சலும் சேர்ந்து, அநீதியான ஆணையை அனுப்பியுள்ளன. அதைப் பொருட்படுத்த வேண்டாம்'' என்று திரு. டி.எஸ். கல்யாணசுந்தரம் கூறியது மனத்துக்கு இதமாக இருந்தது.

அம்மணமக்கள் வாழ்வாங்கு வாழ்வதைப் பற்றி அவ்வப்போது கேள்விப்பட்டு மகிழ்கிறேன்.

தனிக் குடித்தனம்

கும்பகோணத்தில் என்னுடைய தேர்வு மேற்பார்வை, சிக்கல் ஏதுமின்றிச் செம்மையாக நடந்து முடிந்தது.

மனநிறைவோடு தஞ்சைக்குத் திரும்பிய எனக்கு மகிழ்வூட்டும் செய்தி காத்திருந்தது. அது என்ன?

என் மனைவி காந்தம்மா எல்.டி. தேர்வுகளை எழுதி முடித்து விட்டார். தஞ்சைக்கு வர ஆயத்தமாயிருக்கிறார்; குடித்தனத்திற்கு வீடு பார்த்துத் தகவல் கொடுத்தால், உடனே புறப்பட இயலும் என்பது செய்தி.

வீடு பார்க்கும் பணியில இறங்கினேன். இன்றைக்கிருக்குமளவு, வீட்டுப் பஞ்சம் அன்று இல்லை; எனினும் வீடு எளிதாகக் கிடைப்பதும் அரிது.

நண்பர்கள் உதவியால் இரண்டொரு நாள்களில் தஞ்சை கணபதி நகர்ப்பகுதியில் தனி வீடு கிடைத்தது.

மாவட்டப் பதிவாளராக இருந்த திரு. சுப்பிரமணியபிள்ளை என்பவரின் பங்களாவின் வளைவிற்குள் தனியாக இருந்த மாடி வீடு கிடைத்தது.

இத் தகவலை மனைவிக்கு எழுதினேன். உடனே, முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, என் மனைவியும் மாமியாரும் தஞ்சை வந்தடைந் தார்கள்.

மாமியார் சில வாரங்கள் எங்களோடு தங்கியிருந்து உதவினார்.

உள்ளூரில் உதவி உண்டா? உண்டு.

நான் நிக்கல்சன் வங்கி மாடியிலிருக்கும்போதே, திரு. பால கிருஷ்ணன் என்பவர், வலிய வந்து என்னைக் கண்டார்; என் நண்பரானார்.

அவ்வப்போது மாலை நேரங்களில் என் அறைக்கு வந்து அன்போடு உரையாடிவிட்டுச் செல்வார்.

சிலவேளை, அவரோடு இரத்தினசாமி என்பவரும் வருவார். இவர்கள் இருவரும் அப்போது காவல்துறையின் கீழ்ப்படிக்கட்டில் இருந்தவர்கள்.

அவர்கள் யாரோ? நான் யாரோ?

முன் பழக்கம் உண்டா? கிடையாது.

இருப்பினும், எங்களைப் பிணைத்து வைத்தது எது?

'உணர்ச்சி ஒருமை, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்று வள்ளுவர் கூறினார் அல்லவா? அதற்கு எடுத்துக்காட்டு எங்கள் நட்பு ஆகும்.

அவ்விருவரும் தன்மான இயக்க உணர்வு உடையவர்கள். அவ்வுணர்வு பற்றிப் பல்வேறு தவறான கருத்துகள், அறிஞர் களிடையேயும் உலவுகிறது.

எனவே தொடக்க காலம் முதல், தன்மான உணர்வுடையவனாக வாழ்ந்த நான் அவ்வுணர்வு எது என்று விளக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் சமம்' இதுவே தன்மான இயக்கக் கொள்கையாகும். அத்தகைய உணர்வைப் பொதுமக்கள் மூச்சாக்கும் பணியே, தன்மான இயக்கப் பணியாகும்.

ஆதிதிராவிடராகிய இரத்தினசாமியும் யாதவராகிய பால கிருஷ்ணனும் சமத்துவ நிலைக்குத் துடிப்பது இயற்கை.

அந்நிலைக்குத் தன்னை ஒப்படைத்து விட்ட ஒருவனிடம் அவர்கள் பாசம் கொள்வதும் இயற்கை.

அவ்வகையில் எழுந்தது எங்களுடைய நேசம், அது வாழ்நாள் நேசம். மழைக்காலக் காளான் அல்ல.

என் மனைவி தஞ்சைக்கு வந்து குடித்தனம் கட்டியபோது இதுவும் அதுவும் தேடி வாங்கிவர, மேற்கூறிய இரு தோழர்களும் பெரிதும் உதவினார்கள்.

திருமதி. பாலகிருஷ்ணனும் இரண்டொரு முறை வந்து, என் மனைவியோடு பேசி, வழிகாட்டினார்.

தனி வீட்டில் குடிபுகுந்த பின்னரும் பாலகிருஷ்ணனும் இரத்தின சாமியும் எங்களை வந்து பார்த்து அன்புடன் பேசிவிட்டுப் போவார்கள்.

எங்கள் பேச்சு விலைவாசி பற்றியா?

இல்லை.

எங்கே நிலம், மனை, வாங்கிப் போடலாம் என்பது பற்றியா? இல்லை.

எந்தப் பள்ளியில் எவரைச் சேர்க்க வேண்டுமென்பது பற்றியா? இல்லை.

எவர் எவ்வளவு கையூட்டுப் பெறுகிறார் என்பது பற்றியா? அதுவுமில்லை.

பின் என்ன?

காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட முறைகள்; பொதுமக்களின் கல்விக் குரல்வளையைப் பிடித்து நசுக்குவது போல் ஆறாம் வகுப்பு

முதல் எட்டாம் வகுப்பு முடிய - அதுவரையில் மட்டுமே - கட்டாய இந்திப் பாடத்தைச் செயல்படுத்தியது பற்றி.

தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தப்பணி, சாதிக் கலைப்பின் இன்றியமையாமை. அதிலுள்ள இடர்ப்பாடுகள், இப்படிப்பட்டவை குறித்து ஊர் பேர் தெரியாத நாங்கள் உரையாடுவோம்; ஊக்கம் பெறுவோம்.

சின்னவர்களும் சிந்திக்க முன் வந்த பொற்காலம் அது.

அக்காலச் சிந்தனையாளர்களில் பதர்கள் குறைவு; மணிகள் நிறைய.

இந்தியாவில், பிற்காலத்தவர் நம்ப மறுக்கும் அறவோர், காந்தியடிகள் பிறந்தார்; மண்ணாங்கட்டிகளாக இருந்த இந்தியர்களை மனிதர்களாக்க, உரிமையுடைய மனிதர்களாக்க முயன்றார்; ஓரளவு வெற்றியும் பெற்றார்.

பெற்ற வெற்றி ஓரளவே என்பது காந்திக்குக் குறையல்ல; நம் குறை.

அதேபோல், தந்தை பெரியாருக்கு இணையான, சீரிய சிந்தனையாளரை, தன்னேரில்லாத சூறாவளியை, தொண்ணூற்று அய்ந்தாம் அகவையிலும் ஊர் ஊராகச் சென்று முழங்கிய அரிமாவை, தொண்டில் பழுத்த பழத்தை - உலகம் எளிதில் காண்பதில்லை.

இருவருடைய தொண்டும் அருமையானவை, தேவையானவை.

எனினும் நம்மியல்பில் உள்ள, களர்த் தன்மை, முழுப் பயனுக்குக் கேடாக நின்றது எனலாம்.

முழு ரூபாய் பலன் பெறவேண்டியவர்கள் இருபது முப்பது காசு பலன் பெற்றது போல்தான்.

ஓயாது சுற்றுப்பயணம் செய்து வந்த பெரியார் ஈ.வெ.ராமசாமி, தஞ்சையில் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வரப்போவதாக அறிவிக்கப்பட்டது. அது எங்களுக்குச் சிறிய பொறுப்பினைக் கொடுத்தது.

அது என்ன?

101. என் கருத்தைப் பெரியார் ஏற்றார்

குருசாமி இல்லமே பெரியார் தங்குமிடம்

தந்தை பெரியார், சென்னை எழும்பூர், ஈ.வெ.கி. சம்பத் சாலையிலுள்ள பெரியார் திடலில் தங்குவாரென்பது பலருக்குத் தெரியும்.

பெரியார் அத்திடலை வாங்குவதற்கு முன்பு எங்கே தங்குவார்?

சென்னை, மீரான் சாயபு தெருவில் அவர் வாங்கி இருந்த மாடிவீட்டில்.

அதற்கு முன்பு?

குத்தூசி குருசாமியார் வீட்டில். திருவல்லிக்கேணியில் வாழ்ந்த குத்தூசியாருடன், அவரது மாமனார், மாமியார் மைத்துனிகள், மைத்துனர் எல்லோரும் குடியிருந்தார்கள்.

பின்னர் நானும் அக்குடும்பத்தில் ஒருவனாக வாழ்ந்தேன்.

தந்தை பெரியார்,குத்தூசி குருசாமியார் வீட்டில் தங்கும்போது பெரும்பாலும் அங்கேயே உணவு அருந்துவார். அவர் உடன் வருவோரும் அங்கேயே உணவு அருந்துவார்கள்.

என் மாமியார் தங்கம்மாள், சமையலில் திறமையானவர். மரக்கறி உணவு, மாமிச உணவு இரண்டையுமே மிக நன்றாகச் சமைப்பார்.

அந்த அம்மாள் சமைக்கும் புலால் உணவு பெரியாருக்கு மிகவும் பிடிக்கும். எந்த அளவிற்குத் தெரியுமா?

நானும் என் மனைவி காந்தம்மாளும் 1972 இல் ஒருமுறை, சென்னையில் தங்கியிருந்த பெரியாரைப் பார்ப்பதற்குச் சென்றோம்.

அப்போது; எங்களிடம் சமையல் வேலை பார்த்த சிறுவன் சேதுராசனும் எங்களுடன் வந்தான்.

அவன் அறைக்குள் நுழைந்து, பெரியாரை வணங்கினான். அவனைப் பெரியாருக்கு அறிமுகப்படுத்தினேன்.

பளிச்சென்று, பெரியாருக்குப் பழைய நினைவுகள் வந்து விட்டன. என் மனைவியைப் பார்த்து,

''உங்க அம்மாள் வைக்கும் ஆட்டுக்கறிக் குழம்புபோல் சுவையானதைச் சாப்பிட்டு எவ்வளவோ காலம் ஆகிவிட்டது'' என்று ஆவலுடன் சொன்னார்.

அடுத்தநாள், என் மனைவி, தேர்ச்சி பெற்ற சமையல்காரர் ஒருவரை அழைத்து, மாமிச உணவைச் சமைக்கச் செய்து, அதில் பெரியாருக்குப் பிடித்தமான உணவை அனுப்பி வைத்தார்.

அதற்கு முன் நாள் நாங்கள் பெரியாரிடம் விடைபெற்றுக் கொள்கையில், வெளியே நின்ற சேதுராமனைக் கூப்பிட்டார். அந்தச் சிறுவனுக்கு ஒரு கைத்தறி ஆடையைப் போர்த்தி,

''அய்யா! அம்மாவை, நன்றாகப் பார்த்துக்கொள்'' என்று, நெஞ்சம் நெகிழச் சொல்லி அனுப்பினார்.

தஞ்சையில் பெரியார்

1941இல் முற்பாதியில், பெரியார் தஞ்சை பொதுக்கூட்டத்திற்கு வரத் திட்டமிட்டபோது, என் மாமியார் எங்களோடு தங்கியிருந்தார்.

எனவே, மாமனாரிடமிருந்து கடிதம் வந்தது. பெரியாருக்கு எங்கள் வீட்டில் உணவுக்கு ஏற்பாடு செய்யவும், அவருக்குப் பிடித்தமான உணவை ஆயத்தஞ் செய்யவும் எழுதியிருந்தார்.

பூவாளூர் பொன்னம்பலனாரிடமிருந்து மற்றோர் கடிதம் வந்தது.

''பெரியார், கூட்டத்தன்று மாலைதான் தஞ்சைக்கு வந்து சேருவார். நேரே கூட்டத்திற்குச் செல்வார். கூட்டம் முடிந்ததும் உங்கள் வீட்டிற்கு வருவார். இரவு சாப்பாடும் உங்கள் வீட்டில்தான்.

''அவரோடு மூன்று நான்கு பேர்கள் வரலாம். அனைவரும் அன்றிரவு உங்கள் வீட்டில்தான் சாப்பிடுவார்கள். இரவு உங்கள் வீட்டில் தங்கிவிட்டு, மறுநாள் காலை புறப்படுவார்கள்.''

இத்தகவல்கள் கிடைத்தன. அதற்கு ஏற்றபடி, உணவு ஆயத்தமாயிற்று.

பெரியாரை வீட்டுக்கு அழைத்து வரவேண்டுமே. அதன் பொருட்டு, பொதுக்கூட்டத்திற்குச் சென்றேன். கூட்டத்திற்குள் செல்லாமல் எட்டி ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தேன்.

என்னை அடையாளம் கண்டுகொண்ட மாயூரம் எஸ்.வி. லிங்கம் என்னிடம் வந்தார். ஏமாற்றம் ஊட்டும் ஒரு செய்தியைக் கூறினார்.

''அய்யாவிற்கு இரண்டு நாள்களாகக் காய்ச்சலும் வயிற்றுப் போக்கும் இருக்கிறது. அய்யாவுக்கு மருந்து கொடுத்த மருத்துவர், அவரை வெளியூர் செல்லக் கூடாதென்று தடை விதித்தார்.

''மருத்துவருக்குப் பக்குவமாகச் சொல்லிவிட்டு, அய்யா பொதுக் கூட்டத்திற்கு வந்துள்ளார். இப்போதும் காய்ச்சல் 102க்கு மேல் இருக்கிறது.

''அய்யா, 'அர்ரூட்' கஞ்சி மட்டுமே சாப்பிடலாம். அதற்கு ஏற்பாடு செய்து விடுங்கள்'' என்றார்.

என் இல்லத்தில் பெரியார்

உடனே வீட்டிற்குச் சென்றேன்; கஞ்சி போட ஏற்பாடு செய்தேன்.

பொதுக்கூட்டம் முடிந்ததும் பெரியார், பொன்னம்பலனார், லிங்கம், உள்ளூர் நண்பர்கள் இருவர் ஆகியவர்களுடன் என் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

வந்தவர்களுக்கு இலை போட்டுக் கொண்டு இருக்கையில், நான் பெரியாரோடு உரையாடினேன். அப்போது,

''அய்யா! தாங்கள் இரண்டு நாள்களாகக் காய்ச்சலாக இருப்பதை இப்போதுதான் கேள்விப்பட்டேன்.

''தாங்கள் எங்கள் வீட்டில் விருந்து உண்ண வேண்டுமென்பதில் ஆர்வந்தான். அதைவிடத் தாங்கள் உடல்நலத்தோடு இருக்க வேண்டும் என்பது அவசியம்.

''அதனால், தாங்கள் விரும்பும் உண்வை மாமியார் பாடுபட்டு சமைத்த போதிலும் தங்களுக்கு மட்டும் இவ்வேளை, கஞ்சி கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டேன்; தயவுசெய்து மன்னிக்கணும் அய்யா'' என்றேன்.

அருகில் இருந்த பொன்னம்பலனார், ''சமைத்த கறியை அப்படியே வைத்து இருந்து, காலையில் போகும்போது, உணவு எடுப்பில் கொடுத்தனுப்புங்கள். நாளைப் பகல் உணவுக்காவது அய்யாவுக்குப் பயன்படட்டும்'' என்றார்.

பெரியார், வேறு என்ன செய்ய முடியும்? அவர் எப்போதும் மருத்துவர் கட்டளையை மதிப்பவர்; அதன்படி நடப்பவர். எனவே, பொறுத்துக் கொண்டார். விருந்துக்கு அழைத்துவிட்டு, பட்டினி போட்ட என்மேல் எரிச்சல் படவில்லை.

பெரியார், கஞ்சியைக் குடித்தார். பொன்னம்பலனாரும் உள்ளூர் நண்பர்களும் பெரியாருக்கு சமைத்த தனி உணவைச் சுவைத்து உண்டார்கள்.

எஸ்.வி. லிங்கம், குத்தூசி குருசாமியாரைப் போல, என்னைப் போல, உணவுப் பழக்கத்தில் பழைய குடும்ப மரபை விடாமல் பின்பற்றினார். மரக்கறி உணவை உண்டார். பிறகு?

தந்தை பெரியாரோடு பேசிக்கொண்டிருந்தோம். உடல்நலம் பற்றி, பொதுக்கூட்டம் பற்றி, சில மணித்துளிகளே பேசினோம். அப்புறம்?

என் இயல்பு

என் அன்றைய நிலைக்கு மீறிய பேச்சில் ஈடுபட்டேன்.

உலகில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வோர் இயல்பு உண்டு.

என் இயல்பு என்ன?

பெரியவர்களிடம், வள்ளுவர் நெறியைப் பின்பற்றுவேன். 'அகலாது, அணுகாது, தீய்க்காய்வார் போல்க' என்ற கட்டளையை நோன்பாகவே மேற்கொள்வது என் இயல்பு.

என் தந்தையிடமும் அந்நெறியையே பின்பற்றிய நான், பெரியார் உரையாடும்போது, உடன் இருந்தாலும் கேட்டுக்கொண்டு இருப் பேனே ஒழியக் குறுக்கிட மாட்டேன்.

என் இயல்பிற்கு மறுபக்கம் ஒன்று உண்டு. நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல், என்னிடமும் இரு இயல்புகள் இருந்து வருகின்றன.

வாய் திறந்தால், வாய்மையே வெளிவரும். எவரோடு பேசுகிறோம் என்பதையே மறந்து, உண்மையைப் பிறந்த மேனியில் வெளிப் படுத்துவேன்.

இனிய சொற்களால் ஒப்பனை செய்து மூடிக்காட்டும் கலை எனக்குத் தெரியாது. அப்பட்டமான உண்மையே என்னிடம் இருந்து வெளியாகும்.

எக்காலத்திலும் இத்தகைய இயல்பைப் பெரும்பாலோர் வெறுப்பர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் இதைவிடப் பெரிய தீங்கை ஒருவர் தம் வாழ்வில் பெற முடியாது.

பலர், குட்டுப்பட, குட்டுப்படக் கெட்டிக்காரர்களாகி விடுவார்கள்.

எரிச்சல் ஊட்டுமென்று அய்யப்பட்டால், அதைப்பற்றிப் பேச மாட்டார்கள்.

அத்தகைய கெட்டிக்காரத்தனத்தை நான் கற்றுக் கொள்ளவே இல்லை.

பெரியார், அண்ணா, காமராசர் போன்ற உண்மை நாடிகளோடு, நெருங்கி இருந்துவிட்டதால், குட்டுப்பட்டு மாற எனக்கு வாய்ப்பே இல்லாமற் போய்விட்டது.

பெரியாருக்கு ஆலோசனை

அது இருக்கட்டும்; தஞ்சையில் என் வீட்டில் பெரியாரோடு பேசிய பொருளுக்குச் செல்வோம்.

''அய்யா! புத்தருக்குப் பிறகு, தாங்கள்தான் மக்கள் சமுதாயத்தின் சிந்தனைகளை, வாழ்க்கை முறைகளை, அடிதெரியக் கலக்கி வருகிறீர்கள். 1930 ஆம் ஆண்டின் குடிக் கணக்கிலேயே, தமிழ்நாட்டில் சில இலட்சம் பேர்கள், 'சாதி இல்லை' 'சமயம் இல்லை' என்று அறிவித்த பெருமை தங்களுக்கும் தன்மான இயக்கத்திற்கும் சேரும்.

''இத்தனை கலப்பு மணங்கள், சடங்கு ஒழித்த வாழ்க்கை ஒப்பந்தங்கள், ஏன் - ஒரே பந்தி உணவு ஆகியவற்றை இதுவரை எவரால் செய்ய முடிந்தது?

''சாதியொழிப்பிலும் மூட நம்பிக்கையிலும் சமதர்மக் கொள் கையைப் பரப்புவதிலும் தங்கள் இயக்கம் வெற்றி நடைபோட்டு வருகிறது.

''இந்தச் சூடு அதிகமாகும் என்று நலிந்தோரும் தாழ்ந்தோரும் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

''தெருவில் 'உருண்டபடியே' பிச்சை எடுப்பது நின்று விட்டது.

''தங்கள் காலத்தில் சமத்துவமும் சமதர்மமும் வந்துவிடுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், பெரும் புரட்சிக்குத் தலைமை தாங்கி வரும் தாங்கள், அண்மையில் கட்சிக்குத் தலைவராகிவிட்டதைப் பற்றி என்னைப் போன்ற எண்ணற்றவர்களுக்குக் குறை.

''வகுப்பு உரிமைக்கும் நேர்மையான ஆட்சிக்கும் போராடும் நீதிக்கட்சிக்குத் தலைவராகத் தகுதி உடையவர்கள், சிலராவது இருப்பார்கள்.

''தாங்கள் தொடங்கி நடத்தி வரும், சமுதாய, பொருளியல் புரட்சிக்குத் தலைமை தாங்க, தாங்கள் மட்டுமே இருக்கிறீர்கள்.

''தங்களை நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதால், புரட்சிக் கப்பலை கீழே அறுத்துவிட்டார்களோ, என்று அய்யப்படுகிறேன்.

''வகுப்புரிமை உடனடித் தேவை. எவ்வளவு துல்லியமாக வகுப்புரிமை வழங்கினாலும் அது முழுமையான பரிகாரம் ஆகாது. சமதர்மம் நடைமுறையாகும்போதே எல்லோர்க்கும சமவாழ்வு கிட்டும். அதை வெற்றிகரமாக உணர்த்திக்கொண்டு வந்த தாங்கள், நீதிக்கட்சிக்குக் கவனத்தை மடைமாற்றி விட்டதால், சமதர்மப் பணிக்கும் சாதிக் கலைப்புப் பணிக்கும் இடையூறு ஏற்படாதா அய்யா?

''மற்றவர் அண்ட அஞ்சும் புரட்சிகரமான பொறுப்பையும் தலைமையையும் இழக்கலாமா அய்யா?

''நீதிக்கட்சித் தலைமை, தன்மான இயக்கத் தலைமைக்கு ஈடாகத் தோன்றவில்லை'' என்று, பொதுத்தொண்டில் புடம் போடப்பட்ட, அறுபத்திரண்டு வயது பெரியாரிடம், இருபத்தொன்பது வயதும் நிரம்பாத, இளைஞனாகிய நான் தைரியமாக உளறினேன்.

என் கருத்தைப் பெரியார் ஏற்றார்

நான் கட்சிக்காரன் அல்ல; கொள்கைக்காரன். இதைப் பெரியார் உணர்வார்.

'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

இக்குறள் நெறியைப் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் கொண்டு சென்று படிக்காத மக்களின் காதுகளிலும் முழங்கியவர் பெரியார். அவர் சொல்லியவண்ணம் செய்து வருபவர்.

எனவே, கல்வித்துறையில் இளந்துணைப் பள்ளி ஆய்வாளர் என்னும் கடைசிப் படிக்கட்டில் நின்ற நான் உளறியதைக் கேட்டு எரிச்சல் கொள்ளவில்லை.

அரசியல் பற்றி நீங்கள் பேச வேண்டாம் என்று மட்டந்தட்ட வில்லை. மாறாக, தன்னிலை விளக்கத்திற்கு அருமையான வாய்ப்பாக, அதைப் பயன்படுத்தினார்.

''ஆமாங்க! அய்யா சொல்வதில் உண்மை இருக்குதுங்க.

''அரசியல் கட்சி நடத்துவதைவிடத் தொல்லையானது சமுதாய, பொருளியல் மாற்றத்திற்கு இயக்கத்தை நடத்துவது.

''நம் சூழ்நிலையில் பிந்தியதில் முழுக்க முழுக்க எதிர்நீச்சலே அடித்தாக வேண்டும். எப்படியோ, என் பின்னாலே, அய்யா பொன்னம்பலம், லிங்கம் போல, ஆயிரக்கணக்கானவர்கள், எதற்கும் துணிந்து வருகிறார்கள்.

''பதினைந்து ஆண்டு பாடு வீண் போகவில்லை. ஊர் தோறும் சாதிக் கலைப்பிற்கு சமதர்மப் பொருளியல் முறைக்கு ஆதரவாளர்கள் உருவாகிவிட்டார்கள்.

''அதைத் தொடர்ந்து வளர்த்துப் போராடி, தனி நாடு பெற்று, சமதர்ம அரசு ஆக்கிவிட வேண்டும். அதில் சாதிக்கு இடம்இராது. இதிலிருந்து சிறிதும் மாறக்கூடாது.

நான் வெளியிலிருந்து நீதிக்கட்சித் தலைமையை விரும்பி வேண்டி ஏற்றுக்கொள்ளவில்லை. எப்படி ஆச்சு என்று அய்யாவுக்குத் தெரியுமோ?

''நம் சுயமரியாதை இயக்க வேலை தீவிரமாகிக் கொண்டிருந்தது. அப்பப் பார்த்து, எந்த மாநிலத்திலும் இல்லாததை - கட்டாய இந்திப் படிப்பை - ஆச்சாரியார் திணித்தார்.

''சும்மா இருந்தால், நம் பிள்ளைகள் படிப்பில் மண் விழும்; எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. எல்லோரும் என் மேலேயே அந்தப் பொறுப்பைச் சுமத்தினார்கள்.

''இந்தி எதிர்ப்பில் என்னை உள்ளே தள்ளிவிட்டார்கள். அரசுக்கு எதிராகப் போராடும் எனக்குத் தலைமைப் பதவியைக் கொடுப்பது போராட்டத்தில் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்ற நினைத்து அப்படி முடிவு செய்தார்கள்.

''அய்யா பன்னீர்செல்வம் போன்றவர்கள் என்னிடம் வாதாடி அடம் பிடித்தார்கள். இந்திப் போருக்கு அவர்கள் உதவி மிகத் தேவை. அவர்களை உதறிவிட முடியுமா? வகுப்புரிமைக்குத் துணை நிற்பவர்களாயிற்றே!

''அரசால் சிறைப்படுத்தப்பட்ட நான், இப்போது நண்பர்களாலும் சிறைப்படுத்தப்பட்டதாகவே, அடிக்கடி நினைக்கிறேன்.

''நீதிக்கட்சி வேலை, சிந்தனையை, நேரத்தை, உழைப்பை ஓரளவு பங்குபோட்டுக் கொள்ளும். அது தன்மான இயக்க வேலைக்கு இடையூறு ஆகும்.

''அதனால் முடிந்த அளவு விரைவில் அப்பதவியை எவரிடமாவது ஒப்படைத்துவிட்டு நம் அடிப்படைப் போராட்ட வேலைக்குத் திரும்பிவிட வேண்டுமென்றே நானும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

எனக்குத் தெளிவு வந்தது. பெரியார் என்றால் அவரே பெரியார்.

என்னைக்கூட 'அய்யா' போட்டுப் பேசும் அவரன்றோ பண்பாளர் என்று எண்ணிப் பூரித்தேன்.

102. தன்னிறைவு வாழ்க்கை

என் வருவாய்

தந்தை பெரியாரை விருந்துக்கு அழைத்து, அவருக்கு வேண்டியவற்றை ஆயத்தம் செய்தபிறகு, அவருக்குக் கஞ்சி மட்டுமே கொடுத்தனுப்பிய நான் சிறியேன். மிகச் சிறியேன், உலகத்தின் கண்ணோட்டத்தில்.

கொள்கையாளனுக்கும், வாய்மையாளனுக்கும், நேர்மையாளனுக்கும், அறிவாளிக்கும், நல்லவனுக்கும், வல்லவனுக்கும் ஆங்காங்கே யாகிலும் நாட்டில் மதிப்பு இருந்த காலம் அது.

இருப்பினும், பணத்தை மதிக்காத காலம் என்று சொல்லிவிட முடியாது.

அப்படிப்பட்ட காலத்தில், பெரியாருக்கு வேண்டிய செல்வர்கள் பலர், தஞ்சையில் இருப்பினும், என் வீட்டிற்கு வந்து, உண்ண ஒப்புக் கொண்டது அவருடைய பெருந்தன்மை.

அவரது இயக்கம் வளர்ந்ததற்கான இரகசியம் அதனுள் அடங்கியுள்ளது.

பெரியாருக்கு விருந்து ஆயத்தம் செய்தது, எனக்குப் பெரும் சுமையா? இல்லை. அதுபற்றிச் சிறிது சொல்ல வேண்டும். அது அக்காலப் பொருள் நிலையை விளக்கிக் காட்டும்.

இளந்துணை ஆய்வாளனாகிய எனக்குத் திங்கள் ஊதியம் ரூபாய் அய்ம்பதே. சம்பளத்துக்குமேல் கிம்பளம் இல்லை. அப்படிக் கிம்பளம் வாங்கும் போக்கும் எந்நாளிலுமில்லை.

ஆனால், அரசு கொடுத்த கட்டைப் பயணப்படியில், திங்கள் தோறும் அய்ந்தாறு ரூபாய்கள் மிஞ்சும்.

என் வருவாய் அய்ம்பத்தாறு ரூபாயென்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

வீட்டில் ஒரு பகுதிக்கு அல்ல, தனி வீட்டிற்கு இல்லை, பங்களா வளவிற்குள் சிறு பங்களாவுக்கு, நான் கொடுத்த வாடகை பத்தே ரூபாய்.

இத்தகையவற்றில் அக்கால மக்களிடம் இன்றைக்கு இருப்பதைவிட அதிகப்படியான நியாய உணர்வு இருந்ததாக என் மதிப்பீடு.

இக்காலத்தில் மக்கள் அனைவரையும் பிடித்தாட்டும் 'திடீர்ப் பணக்காரராகும்' நோய், நாற்பதாண்டுகளுக்கு முன் மிகமிக அரிதாக இருந்தது.

பண்டங்கள் விலை மலிவு

வீட்டு நுகர்பொருள்களின் விலை எப்படி? ரூபாய்க்கு நான்கு படி அரிசி கிடைத்தது. மட்ட அரிசி, அய்ந்தாறு படியும் கிடைக்கும்.

வீட்டெதிரில் கறந்த பால் படி ஆறு அணா முதல் எட்டணா வரை; வீசை நெய் மூன்று ரூபாய்கள்.

அதில் கலப்படம் இராது. நல்லெண்ணெய் விலை அதற்கும் குறைவு. பருப்பு வகைகள் மலிவாகக் கிடைத்தன.

ஓரணாவிற்கு - இக்கால ஆறு காசுக்கு - அன்று தஞ்சையில் பத்து முந்திரிப் பருப்புகள் கிடைக்கும்.

எந்தக் காய்கறி விலையும் அச்சுறுத்தாது. மூன்று காசுக்கு மூன்று முள்ளங்கி. இன்றோ அறுபது காசு. ஒன்றரைக் காசுக்கு ஒரு முருங்கைக்காய். நாலு காசுக்குக் கீரை வாங்கினால் நல்ல சாப்பாட்டுக்காரர் நால்வருக்குப் போதும்.

இளநீர் விலை என்ன தெரியுமா? ஓரணா. இன்றைய கணக்கில் ஆறுகாசு.

ஓட்டல் பண்டங்கள் விலை எப்படி? இரண்டு இட்லிகள், அதை மூழ்கடிக்கும் அளவில் சாம்பாரோடு அரையணா - அதாவது இப்போதைய மூன்று காசுகள். காப்பி கோப்பை ஆறு காசுகள்.

வண்டிச்சத்தம் எப்படி? இரயில் பயணக் கட்டணத்தைக் காட்டுகிறேன்.

விரைவு வண்டியில், முதல் வகுப்புக் கட்டணம் மைலுக்கு ஓரணா. அதாவது, சென்னையிலிருந்து மதுரைக்குப் பயணக்கட்டணம் பத்தொன்பது ரூபாய்.

சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்குப் பேருந்துக்கட்டணம், நெடுங்காலம் எழுபத்தைந்து காசுகளாக, இருந்தது. பிறகு சில ஆண்டுகள் ஒரு ரூபாய் அளவே இருந்தது.

எளிய மக்களின் தின்பண்டம் அரிசிப் பொரி; அதன் விலை? படி அரையணா (அதாவது, மூன்று காசுகள்) அதுவே மழைக்காலத்தில் ஓர் அணா ஆறு காசுகள்.

அஞ்சல் அட்டை அரையனா; அதாவது மூன்று காசுகள். அஞ்சல் உறை ஓர் அணா. அதவாது ஆறு காசுகள். அவை அதிக விலை என்று விடுதலைப் போராட்ட வீரர்கள் மேடைதோறும் குற்றம் சாட்டினார்கள்.

வெள்ளைக்கார ஆட்சி போனால், அணாவிற்கு (ஆறு காசிற்கு) நான்கு அஞ்சல் அட்டைகளும் இரண்டு அஞ்சல் உறைகளும் விற்கச் செய்வோமென்றார்கள். அலுவலர்களின் சம்பளம் திங்களுக்கு

அய்ம்பது ரூபாய்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்பது காங்கிரசு மாநாட்டு முடிவுகள். இந்தியர்களைப் பணத்தாசை கௌவாது என்று தப்புக் கணக்குப் போட்டார்கள்.

இந்தியா உரிமை பெற்ற பிறகு அப்படிச் செய்ய முடிந்ததா? இல்லை.

விலை ஏற்றம்

பிற அடிப்படைப் பொருள்களின் விலைகளையாவது கட்டுப்படுத்த முடிந்ததா? இல்லை என்பது உலகறிந்த உண்மை; வேதனையான உண்மை; கசப்பான உண்மை; விலையேற்றம் உலகளாவிய நோய் என்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

பலரும் சன்னி கண்டு படுத்திருக்கிறார்கள் என்பது எப்படி அந்நோயாளிக்கு ஆறுதலாகும்? மருந்தாகும்?

சோவியத் நாடு போன்ற சமதர்ம நாடுகளில், நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அடிப்படை நுகர் பொருள்களின் விலைகள் ஒரே சீராக உள்ளன.

அவற்றிற்குள் போலந்து நாட்டில், அடிப்படைத் தேவைப் பொருள்களின் உற்பத்தியைப் போதி அளவு பெருக்காததால், பற்றாக்குறை ஏற்பட்டதையும், பற்றாக்குறையின் தொடர் அழுத்தம் விலைவாசிகளை உயர்த்தியதையும், அதன் விளைவாக ஊதிய உயர்வுப் போராட்டம் வெடித்ததையும் கண்டோம்.

இந்தியா போன்ற தனியுடைமை நாட்டில், உணவுப்பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தி பெருகியுள்ளது.

முதல் அய்ந்தாண்டுத் திடடத்தின் தொடக்கத்தில் அய்ந்து கோடி டன் உணவு உற்பத்தி ஆயிற்று. அது இருபது கோடியாக உயர்ந்தது.

மக்கள் தொகை இரண்டு பங்குபோல் உயர, உணவு உற்பத்தி அய்ந்து பங்குபோல் பெருகிய பிறகும், விலைகள் ஏறிக்கொண்டே போவானேன்?

பல காரணங்கள் உண்டு.

'சுண்டைக் காய் கால்பணம் சுமை கூலி முக்கால் பணம்' என்பது இன்றைக்கு மிகப் பொருத்தம்

தன்னிறைவு பெற்ற ஊர்கள்

முன்னே, அக்கம் பக்கத்திலே விளைந்த பல காய்கறிகள், இப்போது நெடுந்தொலைவிலிருந்து, வண்டிச்சத்தம் செலவு செய்து, அவைகளைக் கொண்டு வந்தால்தான் கிடைக்கும்.

எடுத்துக்காட்டாக, என் ஊராகிய நெய்யாடு பாக்கத்தைப் பார்ப்போம். நாற்பது அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு, எல்லோருடைய வீட்டுப் புறக்கடையிலும் வாழை இருக்கும்; இலையும் காயும் பழமும் விலைபோட்டு வாங்காமலேயே தாராளமாகக் கிடைக்கும்.

எங்கள் ஊரிலிருந்து சந்தைக்கோ, அடுத்த ஊர் கடைக்கோ போவது மண்ணெண்ணெய், வெள்ளைச் சர்க்கரை, உருளைக் கிழங்கு. உப்பு ஆகியவைகளை மட்டும் வாங்கவே.

நாற்பது அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை மொத்தத்தில் பெரும்பாலான தமிழ்நாட்டு ஊர்களின் நிலை, தன்நிறைவே. தனி ஆள் தன் நிறைவு அல்ல; ஊர்த் தன்னிறைவு.

விலை ஏற்றம்

இன்றோ அது தலைகீழாக மாறிவிட்டது; நாள்தோறும் உண்ணும் பொருள்களைக் கொண்டுவர, அக்கால நாட்டுப்புற மக்கள், இக்கால நாட்டுப்புற மக்கள் கொடுக்கும் அளவு 'சத்தம்' கொடுக்கவில்லை. இன்றைய காய்கறிகளின் விலையின் பாதிக்குமேல் கொண்டுவர ஆகும் கூலியே.

நகர்ப்புறங்களிலும், தாமே தம் வீட்டு பங்களாத் தோட்டங்களில் காய்கறிகளைப் பயிரிட்டுக் கொண்டவர்கள், முன்பு அதிகம்; இப்போது குறைவு; இன்னும் சில ஆண்டுகளில், அரியராவர் என்று அஞ்சுகிறேன்.

நம் மக்கள் போக்கை மாற்றாவிட்டால் விலையேற்ற வெள்ளம் நாட்டை மூழ்கடித்துவிடும். அதைப் பொதுமக்கள் எப்படித் தடுக்கலாம்?

பழையபடி, வீடுதோறும் குடிசைதோறும் காய்கள் விளைய வேண்டும்.

அதற்கு அரசு திட்டம் தீட்ட முயன்றால், ஒரு ரூபாய் மதிப்புள்ள காய்களைப் பயிரிட நூறு ரூபாய், கண்ணில் படாமல், செலவாகிவிடும்.

பத்தாயிரம் செலவாகும் சிறிய திட்டத்தைத் தீட்டினாலும், எத்தனை எழுத்தர்கள், நடுநிலை - உயர்நிலை அலுவலர்கள் கொக்கி போடவேண்டும் தெரியுமா?

பத்துப்பேர் கொக்கி போட்டதோடு முடியாது. உலகில் இருந்து விலகி மக்கள் நாடியையே தொட்டறியாத, கற்பனையில் சிந்திக்கும் தில்லி திட்டக்குழுவினர், அதைத் தட்டிப் பார்த்து, ஒப்புதல் கொடுப்பதற்குமுன், ஒரு டன் காகிதமாகிலும் செலவாகும்; நூறு பேர்களுடைய நேரமும் எழுத்தும் செலவாகும்.

இல்லந்தோறும் பயிரிடுவீர்

எனவே, தாய்நாட்டில் பற்றுடையவர்கள் என்ன செய்ய வேண்டும்? ஒவ்வொருவரும் செயல்படும் அணில்களாக மாறவேண்டும். எதில் எதிலோ பொழுது போக்குவதை விடாவிடினும், குறைத்துக்கொண்டு இல்லந்தோறும் காய்கறி, கீரை வகைகள் பயிரிட வேண்டும். ஊக்குவிக்க வேண்டும்.

ஒவ்வோர் ஊரும் தன் காய்கறித் தேவைகளில் கால், அரை பங்கையாவது, நிறைவேற்றிக் கொண்டால், அவற்றை நெடுந்தூரம் சுமந்து செல்ல நேரிடாது. அதற்கான செலவு குறைவதால் விலை வீழும்.

காந்தியடிகள் கற்பித்த தன்நிறைவுக் கோட்பாடு, பலர் நினைப்பதுபோல் பத்தாம்பசலிக் கொள்கையன்று.

அதே நேரத்தில், அது சொல்லுக்குச் சொல், வைதீகப் பொருள் கூறி, உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வாதாட வேண்டிய கருத்தும் அன்று.

அது ஓரளவு ஒவ்வொருவரும் பின்பற்றக்கூடிய எளிய செயல்முறையாகும்.

நகரங்களில் உள்ள பங்களா வாசிகளுக்கு காந்தியை விரும்பினாலும் வெறுத்தாலும் அவரவர் தேவைக்குப் பயிரிட்டுச் சாப்பிடுவது விபரீதமல்ல; மற்ற வேலையை விட்டுவிடாமலே, ஓய்வுநேர உதவியாகச் செய்யலாம் என்பதை உணர்ந்தால், அகவிலை நோய் முற்றாமலாவது இருக்கும்.

வீணான விழாச்செலவு

உலகில் விழாக்களுக்குச் செலவு செய்யக் கடன்பட்டுக் கெட்டவர்கள் இந்தியர்கள் ஆவர்.

அவர்களில், முதற் பரிசுக்கு உரியவர் எவர்? நாமே; தமிழர்களாகிய நாமே.

இந்தியர்களில் பெரும்பாலோர் இந்துக்கள். பக்தியில் தமிழ்நாட்டிற்கு அப்பால் வாழும் இந்துக்கள், நமக்கு இளைத்தவர்கள் அல்லர்; திருமணம் முதலிய சடங்குகளைச் செய்வதில், நமக்குச் சளைத்தவர்கள் அல்லர்.

சமயத் திருவிழாக்களைக் கொண்டாடுவதில், அவர்கள் நம்மிலும் ஆர்வம் குன்றியவர்கள் அல்லர்.

தமிழருக்கு இருக்கும் பக்தியைவிட மற்ற இந்துக்களின் பக்தி, தரம் குறையாவிட்டாலும், நாம் அழிக்கும் பொருள் அளவு அவர்கள் அழிப்பதில்லை.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் அளவு, பரப்பும், உயரமும் கொண்ட கோயில்கள் இந்தியாவின் பிற பகுதிகள் அனைத்தையும் சேர்த்தாலும் இல்லை.

நாம் செலவு செய்யும் அளவு விழாச் செலவை, பிற பகுதி இந்துக்கள் செய்வதும் இல்லை.

வட இந்தியர்களின் திருமணச் செலவு நம் அளவா? இல்லை. மாலை ஆறு மணிக்குத் திருமணம் என்பார்கள். மூன்று மணிக்கு துணிப்பந்தல் எழுப்புவார்கள். அய்ந்தாறு மணிக்குள் வைத்துவிடுவார்கள். கேரள இந்துக்கள் திருமணச் செலவுகூட, நம்மிலும் கட்டுப்பட்டது.

நாம் செய்யும் அளவு செலவு தேவைதானா? இப்போது மூன்று நாள் திருமணம் என்ற முட்டாள்தனம் இல்லை. இரண்டு நாள் திருமணம். அதில் மாப்பிள்ளை அழைப்பு வேறே! அதோடு வரவேற்பு என்று காசைக் கரியாக்குவதில் இன்றும் குறையவில்லையே. இதில் நம்மை மிஞ்சுவார் இல்லை.

புரோகிதமற்ற திருமணம் செய்து கொள்வோர்கூட மாப்பிள்ளை அழைப்பு தடபுடலை விடாவிட்டால், மக்கள் எப்போது திருந்துவார்கள்?

புரோகிதமற்ற திருமணம்; ஆனால் வரதட்சணை வாங்கும் திருமணம் என்றால், இச்சமுதாயம் கடைத்தேறுவது எப்படி? எப்போது?

தீபாவளி, பொங்கல், கிறுத்துமசு போன்றவை ஆண்டுதோறும் வரும்பண்டிகைகள் திடீர் விபத்துகளுமல்ல; விழாவுமல்ல. காலம் காலமாகப் பழகிப்போன, இப்பண்டிகைகளுக்கும் ஊழியர்களுக்கு முன்பணம் கடனாகக் கொடுக்க வேண்டியிருக்கிறதே!

இப்படி வாழலாமா?

சிக்கன வாழ்க்கை

போகாறு அகலாக்கடை என்ற வாழ்க்கை நெறியைப் பெரியாரிடம் நான் கற்றிருந்ததால், ஆகாறு சிறிதே ஆயினும் அய்ம்பத்தாறு ரூபாய்களில், குடித்தனம் பண்ண முடிந்தது. விருந்தளிக்கவும் முடிந்தது; கடன்படாமலும் நிம்மதியாக வாழ முடிந்தது.

அரசு, பற்றாக்குறை வரவு செலவுக் கணக்கைத் தொடர்ந்து போட்டு, ஒவ்வோர் ஆண்டும் துண்டு விழும் அளவிற்கு 'நோட்' அச்சடித்துக் கொள்வதும், தனியாள் - பக்தனோ - பகுத்தறிவாளனோ - வரவுக்கு மீறிச் செலவு செய்வதும், அடுத்தடுத்து எதிலாவது கடன் வாங்குவதும் பெருந்தீங்கு. இது எனக்குத் தெரிந்தால் போதுமா?

103. காந்தம்மாவுக்கு வேலை கிடைத்தது

மாவட்டக் கல்வி அலுவலர் அவமதித்தார்

இருவேறு உலகத்தின் இயற்கை, ஒளியும் இருளுமாக மாற்றி மாற்றி வைப்பதுதான்! ஒளி பொழியும் பகலே நீடிக்காது. அதை அடுத்து இரவு வரும்; காரிருள் சூழும் இரவு வரும். அதுவும் நிலைத்து நிற்காது விலகியே தீரும்.

பெரியார் ஈ.வெ.ராமசாமி எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியது, பெறற்கரிய பேறு. அப்பெருமையினை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். அம்மகிழ்ச்சி சில நாள்களில் அறுபட்டது. ஏன்?

அப்போது, தஞ்சை மாவட்டக் கல்வி அலுவலராக இருந்தவர் திரு அப்பர் சுந்தரம் என்பவர். ஒரு விடுமுறை நாளன்று அவரிடமிருந்து ஓராள் வந்தார்.

அந்தப் பணியாளர் என்ன செய்தி கொண்டு வந்தார்?

நான் அன்று மாலை, தவறாமல் மாவட்டக் கல்வி அலுவலரை அவரது பங்களாவில் காணவேண்டும் என்பது. இது வாய்வழி ஆணைதான். இருந்தாலும் நான் அதை நிறைவேற்றாமல் இருக்க முடியுமா?

தொலைவில் உள்ள பங்களாவில் குடியிருந்த அவரைக் காணச் சென்றேன்.

அவர் பங்களா இருந்த இடம் நடக்கும் தூரமல்ல. அன்று பேருந்து வசதியில்லை. எனவே, மாட்டு வண்டியில் பயணம் செய்து குறிப்பிட்ட நேரத்திற்கு அங்குப் போய்ச் சேர்ந்தேன்.

பங்களாக் கதவு மூடி பூட்டப்பட்டு இருந்தது. என்னை அழைத்த கல்வி அலுவலர் பங்களாவின் வராந்தாவில் உட்கார்ந்திருந்தார். அவரோடு எவரோ பேசிக் கொண்டிருந்தார்.

பங்களா நுழைவாயிலில் வண்டியைக் கண்டதும், அவர் பணியாள் ஒருவரை வரவழைத்து, வாயிலுக்கு அனுப்பி வைத்தார். கதவைத் திறந்துவிட வருகிறார் என்று எண்ணினேன்.

அப்படி நடக்கவில்லை.

''அய்யா! இப்போது எவரையும் பார்க்க இயலாது'' என்று பணியாள் கண்டிப்பாகக் கூறினார்.

நான் யார் என்று அறிவித்துவிட்டு, ''நான் பார்வையாளனாக வரவில்லை. அய்யாவின் ஆணைப்படியே வந்துள்ளேன். இந்நேரம் வரும்படி அய்யாவே சொல்லி அனுப்பினார். இதை அய்யாவிடம் நினைவுபடுத்தும்'' என்றேன்.

பணியாள் சென்றார்; சொன்னார்; திரும்பி வந்தார்.

என்ன பதில் கொண்டு வந்தார்?

''பார்க்க இயலாது'' என்னும் பழைய பதிலையே கொண்டு வந்தார். அரசு ஊழியத்தில் சேர்ந்துவிட்டதால் இன்னும் என்ன பாடுபட வேண்டியிருக்குமோ என்று கலங்கினேன்.

'பொறுத்தார் பூமியாள்வார்' என்னும் பழமொழி நோய் தணிக்கும் மருந்தாக மின்னிற்று. உணர்வினை அடக்கிக்கொண்டு வீடு திரும்பினேன்.

அவமதிப்புக்குக் காரணம்

அடுத்த நாள் அலுவலகத்திற்குள் நுழைந்தேனோ இல்லையோ, பலர் துக்கம் விசாரிக்கச் சூழ்ந்து கொண்டார்கள். ஊர் வாயை மூட உலைமூடி ஏது?

''அப்போதே நினைத்தேன்! நீங்கள் பெரியாரை உங்கள் வீட்டிற்கு அழைப்பது சரியல்ல. அது உங்கள் வேலைக்குக் கேடாக வரும். அதைச் சொன்னால், நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்களோ என்று பேசாமல் இருந்து விட்டேன்'' என்று ஒருவர் இழுத்தார்.

மற்றொருவர் அவர் பேச்சில் குறுக்கிட்டார். அவர்,

''பெரியார் தங்கள் வீட்டுக்கு வந்த மறுநாளே, மொட்டைக் கடிதங்கள் போய் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்த ஊர் அப்படிப்பட்ட ஊருங்க. என் வாயால் அச்செய்தியைப் பரப்ப விரும்பவில்லை. பொறுத்துப் பார்ப்போம் என்று இருந்தேன்'' என்றார்.

மூன்றாவது ஆள்,

''மொட்டைக் கடிதம் பற்றிக் கேட்கவென்றால், பள்ளித் துணை ஆய்வாளர் வழியாகவே, உங்களுக்குச் சொல்லி அனுப்பியிருப்பார். நேராகச் சொல்லி அனுப்பியதில் இருந்து, அதைப்பற்றி இராது, என்று ஊகிக்கலாம்.

''உங்களுக்கு நெருக்கமான பெரியாரின் பரிந்துரையும் தயவும் எதற்காகிலும் கல்வி அலுவலருக்குத் தேவைப்படலாம். அதைத் தேடவே, உங்களை அழைத்து இருக்கலாம்'' என்று என்னைப் பெருமைப்படுத்த முயன்றார்.

''அப்படியிருந்தால், நுழைவாயிலுக்கு வெளியே இருந்தபோதே, திரும்பிப் போகச் சொல்லியிருக்க மாட்டார்.

''ஏதாவது மொட்டைக் கடிதம் பற்றிக் கேட்கவே அழைத்திருப்பார் என்று தோன்றுகிறது'' என்று அச்சமூட்ட முயன்றார், இன்னும் ஒருவர்.

'மௌனம் கலகநாசம்' என்பது தெரியும். எனவே ஊமையாகிவிட்டேன்.

மாவட்டக் கல்வி அலுவலர் மீண்டும் அழைப்பாரென்று எதிர்பார்த்தேன்; ஏமாந்தேன். அவர் அழைக்கவில்லை. புதிர் விடுவிக்கப்படவில்லை.

காந்தம்மாவுக்கு வேலை கிடைத்தது

எதிர்பார்த்த மற்றொன்று வந்து சேர்ந்தது.

அது என்ன? நியமன ஆணை.

யாருக்கு நியமனம்? என் மனைவிக்கு நியமனம். என்ன பதவிக்கு நியமனம்? ஆசிரியை பதவிக்கு.

என் மனைவி ஆசிரியைப் பயிற்சியை முடிக்கும் தருணம்,

சென்னை தியாகராயநகர், சாரதா வித்யாலயத்திற்குப் பட்டதாரி ஆசிரியைகள் தேவைப்பட்டார்கள்.

அப்பள்ளியின் சார்பில், சகோதரி சுப்புலட்சுமி அம்மையார், வெல்லிங்டன் சீமாட்டிப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றார். பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த பலரைப் பேட்டி கண்டார்.

அம்மையார், தாவர இயலுக்கு என் மனைவி காந்தம்மாவையும், கணக்கிற்கு திருமதி பத்மலோசினி இராதாகிருஷ்ணனையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

உயர்நிலைப்பள்ளித் தாளாளர், திரு. வாசுதேவாச்சாரியார் உரிய ஆணையை அனுப்புவார் என்று சொல்லி விட்டுப் போனாராம். எனவே, என் மனைவி நியமன ஆணையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போவதற்கு'ப் பழகிவிட்ட நான், வேறு வகைக்கு என்னுடைய மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன்.

ஆனால் என் மனைவியின் எதிர்பார்ப்பு நிறைவேறியது. நியமன ஆணை வந்தது. அப்பதவி நிலையான பதவி. அந்தத் தகவல் எங்கள் மகிழ்ச்சியை மேலும் இரட்டிப்பாக்கியது.

என் மனைவிக்கு ஆணை வந்ததுபோல, திருமதி. பத்மலோசினிக்கும் வந்தது. அந்த அம்மாள் அவ் உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்தபின், அரசு ஊழியத்தில் போய்ச் சேர்ந்தார்.

திறமையும் நேர்மையும் இருந்தும் வாய்ப்புகள் குறைந்த காலத்தில் கல்வித் துறையில் பணிபுரிந்த பத்மலோசினி அம்மாள், பெண்கள் பள்ளி ஆய்வாளர் நிலையளவு உயரவே வழி கிடைத்தது.

தகுதியிருந்தும், பதவி உயர்வுகள் நிறையக் கிடைக்காவிடினும், மாணவிகளின் பெற்றோர்கள் நன்மதிப்பைத் தொடர்ந்து பெற்று வந்தார், பத்மலோசினி.

பண்டிதை கிருஷ்ணவேணியின் நெருங்கிய உறவினராகிய பத்மலோசினி என் மனைவிக்குப் பள்ளிப்பருவம் முதல் நெருக்கமானவர்.

'பத்மலோசினியுடனேயே ஆசிரியைப் பயிற்சி பெற்றேன். அவரோடு ஒரே உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியப் போகிறேன்' என்று என் மனைவி காந்தம்மாள் மகிழ்ந்தார்.

என் நிலை என்ன? சாரதா வித்யாலயத்தில் என் மனைவிக்கு வேலை கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சி.

அதே வேளை ஏக்கம்! ஏன்?

'என் மனைவி சென்னைக்குப் போய்விட்டால், எனக்கு அந்நகருக்கு மாறுதல் கிடைக்குமா? எவ்வளவு காலம் பொறுத்துக் கிடைக்கும்?' இப்படிக் கவலைப்பட்டேன்.

இதைப்பற்றி முன்னரே, அண்ணன் குத்தூசி குருசாமி யாரோடு கலந்து பேசி உள்ளோம். 'காந்தம்மாவுக்குச் சென்னையில் வேலை கிடைத்தால் தயங்காது, அந்த வேலையை ஒப்புக் கொள்வது' என்ற முடிவுக்கு வந்திருந்தோம்.

முன்னரே முடிவுசெய்து இருப்பதாலேயே, மனைவியைப் பிரிந்து தனித்து வாழ்தல் இன்பமாகிவிடுமா?

வேறு வழியின்றி, என் மனைவி சென்னைக்குச் சென்றார். சாரதா வித்யாலயத்தில் ஆசிரியைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

நான் மீண்டும் வாடகை அறைக்குக் குடிபெயர்ந்தேன்.

அலுவலக வேலையை ஆழமாகக் கற்றேன்

கல்வித்துறையின் கடைசித் தொண்டனாக நான் இருந்தபோது, பெற்ற பட்டறிவு எனக்குப் பெரிதும் உதவிற்று. எத்துறையில் வேலை செய்தாலும் அத்துறையின் கீழ்மட்ட வேலைகளில் நல்ல தேர்ச்சி பெற்றுவிட்டால், மேல் பதவிகளுக்கு உயர நேரும்போது, பெரிய பொறுப்புகளை எளிதில் சமாளிக்கலாம். இந்தத் தெளிவு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்படவில்லை. ஆனால் வேலையில், மேல் கீழ் என்று பாராமல், மனம் ஒன்றிச் செம்மையாகச் செய்யும் என் இயல்பு, எனக்குக் கை கொடுத்தது.

தஞ்சையில் இருந்தபோது, இருவகையான, நுட்பமான, 'நச்சு வேலை'களை நான் கற்றுக்கொள்ள முடிந்தது.

ஒன்று, தனியார் தொடக்கப்பள்ளிகளுக்கு ஓராண்டிற்கான மான்யத் தொகைகளை முடிவு செய்தல்; சரிபார்த்தல். அதன் பட்டியல்களில் தணிக்கை பார்க்க வேண்டிய தகவல்களோ பல. அக்காலத்தில் கணக்கீட்டைக் கூடியவரையில் சிக்கலாக்கி வைத்திருந்தார்கள்.

மாவட்டக் கல்வி அலுவலகத்தில் அமர்ந்து, நூற்றுக்கணக்கான பள்ளிகளின் விவரங்களைத் தணிக்கை பார்த்தலில் தேர்ச்சி பெற்றேன்.

அத்தேர்ச்சி, பிற்காலத்தில், நானே மாவட்டக் கல்வி அலுவலகராகச் செயல்பட்டபோது, பெரிதும் துணைநின்றது.

கல்வித்துறை ஆண்டுதோறும் சேகரித்து வெளியிட வேண்டிய புள்ளி விவரப் பட்டியல்கள் பலவாகும். அவற்றிற்கான அடிப்படைத் தகவல்களை ஒவ்வோர் பள்ளியிலிருந்தும் ஆய்வாளர்கள் பெறுவார்கள். அத்தனையையும் கூட்டிப்போட்டு மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்புவார்கள்.

பல வட்டாரங்களில் இருந்து வரும் பட்டியல்களைச் சேர்த்து, முறையாக மாவட்டப் பட்டியல்களை ஆயத்தஞ் செய்யவேண்டும்.

அன்று இருந்த இருபத்து நான்கு மாவட்டக்கல்வி அலுவலர்களும் அனுப்பும் பட்டியல்களை இணைத்து மாகாணப் பட்டியல்கள் கல்வி இயக்கத்தில் ஆயத்தம் செய்யப்படும்.

மாவட்ட நிலையில் பட்டியல்கள் போட்டுத்தர அழைக்கப்பட்ட அய்ந்தாறு ஆய்வாளர்களில், நானும் ஒருவனாக இருந்தது நல்லதாயிற்று. அந்தப் பயிற்சி, பிற்காலத்தில் உதவும் என்பது அப்போதைக்குத் தெரியாது.

ஆனால், முப்பது நாற்பது நாள்கள்வரை, காலை பத்து மணிக்கே தொடங்கி, மாலை ஆறு ஆறரை மணிவரை கூட்டல் கணக்கிலேயே மூழ்கியிருந்ததால் பகல் முழுதும் என் மனைவியின் பிரிவைப் பற்றி நினைக்கவே நேரமில்லை. அது என்னைக் காப்பாற்றியது.

தொல்லையான அவ்வேலை நன்மையான நல்ல பழக்கத்தை என்னிடம் ஏற்படுத்திவிட்டது. அலுவலில் மூழ்கி, கவலையை மறக்கும் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

திட்டமிடாது ஏற்பட்ட அப்பழக்கம் அல்லவா, பயங்கரமான சோகக் கடலிலேயே மிதக்கும் என்னை, பல ஆண்டுகளாக வாழவைத்து வருகிறது.

துன்பம் சூழ்கையில் ஏடு எடுத்து எழுதித் தப்பிப் பிழைத்தும் நடமாடுகிறேன். எதன்பொருட்டு? எவருக்காக? எனக்குப் புரியவில்லை.

பட்டறிவின் பலன்

பன்னிரண்டு ஆண்டுகள் பறந்த பிறகு, திரு கோவிந்தராஜுலு பொதுக்கல்வி இயக்குநராக விளங்கினார்.

அவ்வேளை, திரு. டாக்டர் எம்.வி. கிருஷ்ணராவ் அவர்கள் கல்வி அமைச்சர். அப்போது சட்டமன்றத்தில் குறுகிய அறிவிப்புக் கேள்வி ஒன்று எழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் சொல்லுவதற்கான, புள்ளி விவரங்களை அமைச்சர் இயக்குநரிடம் கேட்டார்.

இயக்குநர், புள்ளி விவரங்களைப் பார்க்கும் 'ஜாம்பவான்' திரு. சுப்பிரமணியத்தைக் கேட்டார்.

அப்புள்ளிவிவரங்களை மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து திரட்ட வேண்டுமென்று சொல்லிவிட்டு அதற்காக, உடனடி நடவடிக்கை எடுப்பதாக அரசுக்குப் பதில் எழுதிக்கொண்டு இயக்குநரிடம் வந்தார்.

திரு. கோவிந்தராஜுலுக்கு அவை நிறைவு கொடுக்கவில்லை. துணை இயக்குநராகிய என்னை அழைத்தார். உடனே தகவல் திரட்ட ஏதாவது செய்ய முடியுமாவென்று கேட்டார்.

''தயவுசெய்து, அலுவலக யோசனை ஒட்டிய பதிலை அமைச்சருக்கு அனுப்ப வேண்டாம். நான் சில மணிகளில் தகவல்களைச் சேகரித்துக் கொடுக்கிறேன்'' என்றேன்.

புள்ளிவிவரப் பட்டியல்களைப் பார்க்கும் அலுவலக மேற்பார்வை யாளரை அழைத்தேன். உரிய பட்டியலின் எண்ணிக்கையையும் தலைப்பையும் சொல்லி, அதைக் கொண்டு வரும்படி கூறினேன்.

பதினைந்து மணித் துளிகளில் இருபத்து நான்கு பட்டியல்களோடு வந்து சேர்ந்தார்.

அவற்றை வாங்கி, எண்களை நான் சொல்ல, அவர் எழுதிக் கொண்டு வந்தார்.

இறுதியில் அவர் கூட்டிச் சொன்னதை நான் சரி பார்த்தேன்.

அக்கணக்கை இயக்குநரிடம் கொண்டுபோய்க் கொடுத்தோம்.

அடித்தள, அற்ப வேலைகள் எனக்குத் தெரிந்திருப்பதைப் பற்றி அலுவலகம் முழுவதும் பேசத் தலைப்பட்டார்கள்.

அலுவலக எழுத்தர்களும் மேற்பார்வையாளர்களும் என்னை அதிகமாக மதித்தார்கள். விளைவு?

நான் பொதுக்கல்வி இயக்குநராக இருந்த பதினோர் ஆண்டுகளில், எவரும் ஏனோதானோவென்று பதில் சொல்லி ஏய்க்கவில்லை. இதைச் சொல்வது என்னுடைய பெருமைக்காக அல்ல.

இயற்கை அறிவு மிகுதியாயிருப்பினும், அது பட்டறிவால் பெறும் நிர்வாக அறிவுக்கும் அலுவல் ஆற்றலுக்கும் ஈடாகாது. பட்டறிவைக் கடுமையான 'சின்ன' வேலைகளில் பெறவேண்டும்.

பிந்தியதை எவ்வளவு அதிகமாக வளர்த்துக் கொள்கிறார்களோ அவ்வளவுக்கு எதிர்காலத்திற்கு ஏற்றம்.

இப்பாடத்தை என்னுள் புதைத்து வைத்துவிடக் கூடாது; சமுதாயத்தோடு பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்னும் அவா உந்தியதால் 'பொடி' வேலைகளைப் பற்றி, இங்கே சற்று விரிவாகக் குறிப்பிடுகிறேன்.

104. குஞ்சிதம் குருசாமி

எடுத்துக்காட்டான எஸ்.கே. சாமி

நானும் என் மனைவியும் தஞ்சையில் குடியிருந்தபோது, என் சகலர், தோழர் குத்தூசி குருசாமியும் அவரது வாழ்க்கைத் துணைவியார் திருமதி குஞ்சிதம் குருசாமியும் வந்தார்கள். இரண்டு நாள் தங்கினார்கள்.

பின்னர், கும்பகோணத்திற்கு அடுத்த சாக்கோட்டைக்குச் சென்றார்கள்.

என் மனைவியும் நானும் அவர்களுடன் சென்றோம்.

சாக்கோட்டையில் சுயமரியாதைச் சங்கத்தின் சார்பில் படிப்பகம் ஒன்று செம்மையாக நடந்து வந்தது. அதன் ஆண்டு விழாக்களும் முறையாக நடந்தன.

அத்தகைய ஆண்டு விழா ஒன்றில் பங்கேற்று, உரையாற்றவே இருவரும் சென்னையிலிருந்து வந்தனர்.

அப் படிப்பகத்தை உள்ளூர்த் தோழர்கள், கண்ணினைக் காக்கும் இமை எனக் காத்து வந்தார்கள்.

நாங்கள் சென்ற ஆண்டு விழா, சிறப்பாக நடைபெற்றது. கூட்டம் பெரிதாகவே இருந்தது; அவையோர் அக்கறையோடு கேட்டார்கள்.

புதியன தெரிந்துகொள்வதில் அம் மக்களுக்கு இருந்த ஆர்வம், ஒட்டுவார் ஒட்டியாக இருந்தது.

சாக்கோட்டை சுயமரியாதைப் படிப்பகத்தின் மூளையாக நாடிநரம்புகளாகச் செயல்பட்ட ஒருவர், நினைவுக்கு வருகிறார். அவர் பெயர் எஸ்.கே. சாமி.

அவர் என்ன பெருநிலக்கிழாரா? இல்லை. தொழில் அதிபரா? இல்லை. பட்டதாரியா? இல்லை.

அவர் நிலைதான் என்ன?

மாவட்ட ஆட்சிக்குழுவின் தொடக்கப் பள்ளியில் இளநிலை ஆசிரியர்.

அவரது பள்ளிப்படிப்போ, சாதாரணம். பல்துறை அறிவோ ஏராளம்.

அக்கால, தன்மான இயக்கத்தார், செய்தித்தாள்களையும் பிற மாத, வார இதழ்களையும் படிப்பதில், ஆய்வதில் முனைப்பைக் காட்டினார்.

அதற்குத் தோழர் எஸ்.கே. சாமி சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

புரட்சிகரமான சிந்தனைக்கு உரியவராகிவிட்ட அவர்பால் பகை எழவில்லையா? எழுந்தது.

அவர் பின்பற்றிய வழி, பலருக்கு எரிச்சலை ஊட்டியது.

அவரும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர் என்று நினைப்பு.

பகுத்தறிவுக் கருத்துகளை அடிக்கடி மேடையேறி வெளிப் படுத்துவார்.

அக்கம்பக்கத்தில் அவருடைய செல்வாக்கு வளர்ந்தது. அதனால் அழுக்காறு கொண்டவர் அநேகர்.

பல அழுக்கு ஓடைகளும் இணைந்து, மாவட்ட ஆட்சிக்குழுவின் தலைவரிடம் மோதின; சாமியைச் சாக்கோட்டையை விட்டு மாற்றும்படி நெருக்கின.

அன்று பொதுப் பதவிகளில் இருந்தவர்களில் பலர். 'நொய்க்கஞ்சி' இயல்பு அற்றவர்கள். தஞ்சை மாவட்ட ஆட்சிக் குழுத் தலைவர் தோழர்களைக் கலந்து நடவடிக்கை எடுப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். அதன்படி கட்சிக்காரர்களைக் கலந்தாலோசித்தார்.

தோழர்கள் என்ன சொன்னார்கள்?

ஆசிரியர் எஸ்.கே. சாமி, பணிபுரிவதில் எப்படி இருக்கிறார் என்று கண்டுபிடிக்கச் சொன்னார்கள்.

அந்த ஆய்வு காட்டியது என்ன?

அவர் பாடங் கற்பித்தலில் புலி. பள்ளிக்கு வருவதில் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டார்.

பள்ளி தொடங்குவதற்கு முன்பே, பள்ளியில் இருப்பார். முடிந்தபின், வேலைகளை முடித்துவிட்டே செல்வார். தம்மோடு வேலை செய்பவர்களிடம் இனிமையாகவே பழகுவார். பள்ளியைப் பட்டிமன்றமாக்க மாட்டார்.

விடுமுறை நாள்களில்தான், பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்ப அங்கும் இங்கும் எஸ்.கே. சாமி செல்வார்.

இத்தகவல்களைக் கண்டுபிடித்த பின், கலந்து பேசினார்கள்.

''பணியாளர் எவரும் தம்முடைய திறமையான பணிக்கு மட்டுமே, ஆட்சிக் குழுவிற்குப் பொறுப்பு.

''தம் சொந்தக் கருத்துகளுக்கு எந்த நிர்வாகிக்கும் விளக்கம் சொல்லத் தேவையில்லை.

''எஸ்.கே. சாமி, சுயமரியாதைக்காரராக இருப்பது, அவரது உரிமை.

''தமது தீவிர கருத்துகளைக் காரணங்காட்டி, ஆசிரியப் பணிக்கு ஊறுசெய்யாத வரையில் சாமியின்மேல் நடவடிக்கை எடுப்பது சரியல்ல.

''அப்படிப்பட்ட திறமையாளரைச் சுறுசுறுப்பாளரை, ஒரே இடத்தில் விட்டுவைப்பது விவேகம். அவரைப் பல ஊர்களுக்கும்

மாற்றி, பல ஊர்களையும் கெடுக்கவிடக்கூடாது'' என்று முடிவு செய்யப்பட்டது.

குருசாமி உரை

ஆண்டு விழாவில், சா. குருசாமியின் உரை, மழுகைம்போல ஒளிவிட்டது.

''அய்யருக்கு, திருப்பதி வெங்கடேசப் பெருமாள் மேல் பக்தி ஏற்பட்டால், அவர் நடுத்தெருவில் உருண்டபடியே கத்துவதில்லை. நம்மவருக்குப் பக்தி ஏற்பட்டால், உடல் தேய உருளுவார்!

''சாதகப் பொருத்தம் பார்த்து, நல்ல நாளைத் தேடிப் பிடித்து, பரம்பரைப் புரோகிதர் மந்திரம் சொல்ல, திருமணம் செய்து கொண்டவர்களில் எத்தனையோ பேர்கள் விதவைகளாகியுள்ளார்கள். இவற்றைப் பொருட்படுத்தாமல் ராகு காலத்தில் திருமணம் செய்து கொண்ட சீர்திருத்தக்காரர்களில் அத்தனைபேர் விதவைகளாக வில்லையே! அது ஏன்?

இப்படிக்கேட்டு, குருசாமி அவையோர் சிந்தனைக்கு உரமூட்டினார்.

திருமதி குஞ்சிதத்தின் உரையில் இடிமுழக்கம் இல்லாவிடினும் உறுதி இருந்தது. அவையச்சம் இன்றி, சொற்களுக்குத் தடுமாறாமல், அவர் ஆற்றிய உரையைக் கேட்க, ஏராளமான பெண்கள் குழுமி இருந்தனர்.

''ஆண்களைப் போன்றே பெண்களும் எல்லா உணர்வுகளும் உள்ளஉயிர். எனவே, ஒரே வகையான மதிப்பை இரு பாலாருக்கும் வழங்குங்கள். பெண்களையும் ஆண்கள் அளவு படிக்கவையுங்கள். பெண்கள் நகைப் பித்திலிருந்து விடுபட உதவுங்கள்'' என்றார்.

அப்போது தோழர் குருசாமி, கடலூரில் உதவிப் பஞ்சாயத்து அலுவலராக இருந்தார். அவ்வமயம் திருமதி குஞ்சிதம் அங்குள்ள கிறுத்துவப் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரிந்தார். புகழ்பெற்ற ஆசிரியையாக விளங்கினார்.

அவர்கள் இருவருக்கும் புதுவையில் வாழ்ந்த பாரதிதாசன் நண்பரானார். அடிக்கடி மூவரும் கூடி உரையாடுவர்.

கவிதை பிறந்த கதை

பாரதிதாசன் கவிதைகளில் வரும் பெண் குழந்தைக்குத் தாலாட்டு எப்படிப் பிறந்தது?

அவர்கள் மகள், ரஷியா குழந்தையாக இருந்தபோது, பகுத்தறிவுக்கு ஒத்த தாலாட்டைப் பாடித் தருமாறு பாரதிதாசனைக் கேட்டார்கள்.

கவிதை பெருகிற்று. ஆண்குழந்தைத் தாலாட்டுத் தொடர்ந்து வந்தது.

புரட்சிக் கவியாம் பாரதிதாசனின் சிறப்பினை, அவரது கவிதைகளின் முதல் தொகுப்பைக் குஞ்சிதம் அம்மையார் வெளியிட்ட பிறகே, பொதுமக்கள் அவரை உணரத் தலைப்பட்டார்கள்.

எட்டணா விலை போடப்பட்ட அந்த நூலை, குருசாமியார் எனக்கு அன்பளிப்பாக வழங்கினார். அதுபற்றிக் கருத்துரை வழங்குமாறு கேட்டார்.

பாரதிதாசன் நூலுக்கு அணிந்துரை தந்தேன்

பெருக்கெடுத்து ஓடும் மலையருவியின் வேகம், மின்னலினும் விரைந்து தாக்கும் கூர்மை, உண்டதும் உயிர்ப்பிக்கும் உயிர்ப் பண்பு, பனிநீரின் தூய்மை, கொம்புத் தேனின் இனிமை, மயக்கும் மலர் மணம், தாழா நகைச்சுவை இவற்றின் இன்பச் சேர்க்கையே புரட்சிக்கவி பாரதிதாசனின் கவிதைகள். நாம் இப்பேராற்றில் மூழ்கி, அக அழுக்கை அகற்றி இவ் 'விச்சி நீரை' (அறிவை வளர்க்கும் நீரை) உண்டு வலிமை பெற்று, இவ்வின்பத்தேன் குடித்து இன்புற்று வாழ்வோமாக!

அதை அனுப்பும்போது நான் இளந் துணைப் பள்ளி ஆய்வாளனாகி விட்டேன். எனினும் அடுத்த பதிப்பில் அதைச் சேர்த்து வெளி யிட்டார்கள்.

வெளியிட்டவரும் செல்வர் அல்லர். கவிஞரும் அன்று.

நூலுக்கான செலவை முன்பணமாகத் தந்து உதவியவர் எவர்?

கீழ்மருதூர் நாராயணசாமி என்பவர்.

அவர் கடவுள் நம்பிக்கை உடையவர்; சைவப்பற்று மிக்கவர்.

அத்தகையவர், புரட்சிக் கவிதைகளை வெளியிட உதவிய பண்பு சிறந்தது; பாராட்டுக்கு உரியது.

தாலியைக் கழற்றி விட்டார்

குஞ்சிதம் அம்மையாரும் குருசாமியும் இரட்டையர்கள்போல வாழ்ந்தார்கள்.

குருசாமி பாய்ந்தோடும் மின்னாற்றல்; அம்மையோ, மின் கம்பியினைக் கட்டுப்படுத்தும் மேல்கட்டு. இருவருமே கொள்கை வேள்கள்.

பட்டதாரியாகும் வரை வைதீகத்தில் வளர்க்கப்பட்ட அம்மையார், பின்னர் முழு நாத்திக ராகிவிட்டார்.

இவர்கள் திருமணம் தந்தை பெரியாரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை முன்னரே குறித்துள்ளேன்.

திருமணத்தின்போது பெரியார் வற்புறுத்தலின் பேரில், குஞ்சிதத்திற்குத் தாலி கட்டினார் குருசாமியார்.

பெண்களுக்குத் தாலி கட்டுவது, ஆண்கள் ஆதிக்கத்தின் சான்று; பெண்கள் அடிமைப்பட இசைவதற்கு அடையாளம். இது பெரியாரின் கருத்து.

இக்கருத்தினைக் குருசாமியார் உணர்ச்சி பொங்க, பொது மேடைகளில் எடுத்து உரைப்பதைக் குஞ்சிதம் சிலமுறை கேட்டார்; மனமாற்றம் கொண்டார். குருசாமியின் ஒப்புதல் பெற்று, தாலியைக் கழற்றி வைத்துவிட்டார்.

'பெண்கள் நெற்றியில் குங்குமம் அணிவது சமய மரபு' என்பது பெரியார் கட்சி. அதையும் குத்தூசி குருசாமி வன்மையுடன் கண்டித்து வந்தார்.

அவர் மனைவி, சமய அடையாளத்தை அணிவது, அவருக்குப் பழியுண்டாக்கும் என்று அம்மையார் நினைத்தார். எனவே, குங்குமம் அணிவதைக் கைவிட்டார்.

இவ்விரு மாற்றங்களுக்காக எவரையும் துன்புறுத்தாத, புதிய தன் கொள்கை முறைக்காக அம்மையார் கொடுத்த விலையோ, அம்மா பெரிது!

குஞ்சிதம் வேலை இழந்தார்

பாதி நாள் வெளியூர்களில் பட்டினி கிடக்க வேண்டிய வேலை அக்கால உதவிப் பஞ்சாயத்து அலுவலர் வேலையாகும்.

கடலூரில், அப்பணி புரிந்து வந்த குருசாமிக்கு 'டைபாயிட்' காய்ச்சல் கண்டது; உயிருக்கு உலையாகுமோ என்னும் அளவிற்கு நோய் முற்றிற்று.

அவர் குணம் அடைந்ததும், அந்த வேலையை உதறிவிட்டார்; பழையபடி சென்னையில், ஊராட்சி மன்றங்களின் தலைமைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலை பார்க்க வந்தார்.

திருமதி குஞ்சிதம் அம்மையாரும் கடலூர் பணியை விட்டு விட்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னை, மயிலாப்பூரில் இப்போது சர். சிவசாமி அய்யர் பெண்கள் மேனிலைப் பள்ளியாக நடப்பது, அப்போது 'தேசிய உயர்நிலைப் பள்ளி' என்ற பெயரில் நடந்துவந்தது.

அப்பள்ளியில் வரலாற்று ஆசிரியையாக, திருமதி குஞ்சிதத்திற்கு இடம் கிடைத்தது.

மாணவிகள், பெற்றோர்கள், உடன் பணியாற்றும் ஆசிரியைகள் முதலியோரின் நன்மதிப்பைப் பெற்றார்; நிறைவோடு பணி ஆற்றிக் கொண்டிருந்தார்.

அந்நிலையில் கயவர்களில் ஒருவன், பள்ளி நிர்வாகத்திற்கு மொட்டைக் கடிதம் எழுதினான்.

'திருமதி குஞ்சிதம் பெரியார் கட்சிக்காரர்; பொட்டு அணியாதவர்; தாலியைக்கூட அணியாதவர். அப்படிப்பட்டவரை அப்பள்ளியில் வைத்திருக்கலாமா' என்று கேட்டான்.

நிர்வாகத்தினர் மெத்தப் படித்த மேதைகள். படிப்பு வேறு விவேகம் வேறு என்பதற்கு எடுத்துக்காட்டாகி விட்டனர். நடவடிக்கை எடுக்க முனைந்தனர். என்ன செய்தனர்?

ஒரு நாள், திருமதி குஞ்சிதத்தைத் தலைமையாசிரியை அழைத்தார்.

''ஏன் அம்மா! உங்களுக்குத் திருமணம் ஆகியிருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஆம்! பிள்ளைகளும் உண்டு'' என்றார்.

''உம் தாலியைக் காட்டு பார்க்கலாம்'' இது தலைமையாசிரியரின் ஆணை.

''நான் தாலி அணிவதில்லை?''

''ஏன் அணிவதில்லை?''

''ஆண்கள், பெண்களை அடிமைப்படுத்துவதன் அடையாளம் தாலி என்பதால், அந்த அடிமை அடையாளத்தை எடுத்து விட்டேன்.''

''ஏன் அம்மா பொட்டு வைத்துக் கொள்வது இல்லை?''

''அதுவும் சமயச் சின்னம் என்பதால் தள்ளிவிட்டேன்.''

''சரி! வகுப்பிற்குச் செல்லலாம்'' என்று, எப்போதும்போல இனிமையாகச் சொல்லி, திருமதி குஞ்சிதம் குருசாமியை அனுப்பிவிட்டார். ஆனால்?

அடுத்த நாள், வேலை நீக்க ஆணை வந்து சேர்ந்தது. இச் செய்தி மாணவிகளுக்கு எட்டிற்று; அவர்களுள் - பார்ப்பன சாதியினரும் கொதிப்படைந்தார்கள்; நிர்வாகிகள் சிலரைக் கண்டு வாதாடினர்.

அவர்கள் இசைவு பெற்று, திருமதி குஞ்சிதம் வீடு தேடி வந்தார்கள். நடந்ததைக் கூறினார்கள்; மீண்டும் வேலைக்கு வர வேண்டினார்கள்; ஒப்புதல் தந்தால், மாற்று ஆணை பெற்று வந்து, தருவதாக மன்றாடினார்கள்.

அம்மையார் ஒப்பவில்லை. மாணவிகள் ஏமாற்றத்தோடு திரும்பினார்கள்.

அடுத்த நாள் மீண்டும் வந்தார்கள். பழங்களும் நினைவுப் பரிசும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு வணங்கிச் சென்றார்கள். இளைய தலைமுறையாவது திறமையை, நேர்மையைப் போற்றிற்று.

அதிரடிக்கு எதிரடி

இச்செய்தியைக் கேட்ட பெரியார் ஈ.வெ. ராமசாமி வெகுண்டார்; வன்மையாகக் கண்டித்து எழுதினார், அதோடு முடிந்ததா கதை? இல்லை.

ஈரோடு, மகாஜன உயர்நிலைப்பள்ளி, அப்போது பெரியார் ஈ.வெ. ரா.வின் மேலாதிக்கத்தில் இருந்தது.

உரியவர்களிடம் சொல்லி, வைதீகக் கோலத்தோடு பள்ளிக்கு வந்துகொண்டிருந்த மூன்று பார்ப்பன ஆசிரியர்களுக்கு, அதைக் காரணம் காட்டி வேலை நீக்க ஆணை பிறப்பிக்கச் செய்தார்.

வேதனையான போக்கு அல்லவா இது? என்றைக்கோ, எவரோ மூட்டிய இறுமாப்புத் தீ, அதில் எழுப்பும் பகைப் புகை பரவிக் கொண்டே இருக்கலாமா?

'குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு,' என்கிற போக்கு எத்தனை காலம் தொடர்வது?

பிறவி இழிவு என்கிற கொடுமையைப், பிறர் மேல் திணிப்பதால், இந்த நாடு இசுலாமிய நாடாகும் நிலை உருவாகிப் போகலாமென்பதை மீனாட்சிபுர மின்னல் காட்டிய பிறகும், உயர்வு தாழ்வுகளை நிலைநிறுத்தும் சிந்தனையிலே சுழல்வது, சமுதாயத் தற்கொலையல்லவா?

சாக்கோட்டைச் சுயமரியாதை படிப்பக ஆண்டுவிழா நிகழ்ச்சிக்கு வாருங்கள்.

என் உரை

எதிர்பாராது, அவ்வூர்ப் படிப்பக ஆண்டு விழாவிற்குச் சென்ற என்னையும், உரையாற்றும்படி வற்புறுத்தினர்.

தட்டமுடியாது உரையாற்றினேன்.

''மனித வாழ்வு என்பது வயிறார உண்பதும், போதுமளவு உடுத்துவதும், பாதுகாப்பாக உறங்குவதும், குழந்தை குட்டிகளைப் பெறுவதும் மட்டுமே என்று ஏமாற வேண்டாம்.

''அறிவு வாழ்க்கையே, மக்கள் வாழ்க்கை. அறிவைப்பெற, கல்வி முதல் வாய்க்கால்; கேள்வி அடுத்த வாய்க்கால், இரண்டையும் தேடிக் கொள்ளுங்கள்.

''கல்வி பெறும் மதகு, எழுத்தறிவு ஆகும். அந்நுழைவாயில் மிகப் பெரும்பாலோர்க்குத் தொலைவிலேயே உள்ளது. தற்குறிகளாக இருப்போர் எப்படி மானவாழ்வு வாழ இயலும்?

''தற்குறிகள் நிறைந்த எந்தச் சமுதாயம் முன்னேறியுள்ளது? எந்த நாடு முன்னேறியுள்ளது?

''அறிவிலும் வளத்திலும் முன்னே நிற்கும் நாடுகள், அநேகமாக எல்லோருக்கும் எழுத்தறிவு பரவியுள்ள நாடுகளாகவே இருக்கக் காண்கிறோம்.

''படித்த சுயமரியாதைக்காரர்கள், படிக்காத சுயமரியாதைக்காரருக்கு எழுத்தறிவு ஊட்டக் கங்கணம் கட்டிக்கொள்ளுங்கள்'' இது என் சாக்கோட்டைப் பேச்சின் சாரம் ஆகும்.

105. முதியோர் கல்வி

தற்குறித்தன்மை

மக்கள் உருவில் பிறந்தவர்கள், சிந்தனையில், பேச்சில், பண்பில் மக்கள் நிலையை அடையவேண்டும்.

அதற்கு வழி என்ன? எழுத்தறிவைப் பெறுவதே வழி.

'எழுத்தறிவைப் பெற்றால் போதுமா? எழுத்தறிவு பெறாதவர்களில் பண்பாடு உடையவர்களைக் காணவில்லையா? சான்றோரைக் காணவில்லையா?' என்று கேட்போர் உண்டு.

இவை குதர்க்கமான வாதங்கள். பிறிதினோய் தன்னோய் போல் நோக்கும் அளவு முதிராத, பிஞ்சு மூளைகளில் பிதற்றல்கள் ஆகும்.

வளமிருந்தும் வாடி வேதனைப்படுவது மக்கள் இனத்திற்குத் தேவையற்ற தொல்லையாகும்; அறிவின்மையாகும்; கோழைத் தனமாகும்.

படிக்க முடியாத குழந்தை பிறந்தது இல்லை; படிக்க முடியாத வயதுவந்தோர் உலகில் இல்லை.

மக்கள் கூட்டம் தேவையற்று, பயனற்று, பலப்பல தொல்லைகளில், இழிவுகளில் தவித்துக் கொண்டிருக்கிறது.

அத்தகைய இழிவுகளில், மிகப்பொல்லாத இழிவு, வெறுக்கத்தக்க இழிவு நீட்டோலை வாசிக்க இயலாது நிற்றல்; அதாவது தற்குறித் தன்மை.

எழுத்தறியாமையில் தள்ளப்பட்ட ஆள், தன் வளர்ச்சியின்றி அல்லல்படுவதோடு, ஒரு நாளைக்கு நான்கு முறையாவது இழிவுபடுத்தப்படுகிறார்.

தற்குறியாள் இதைப் பார்க்கிறார்; என்னவென்று தெரியாது திகைக்கிறார். அதைப் பார்க்கிறார். வள்ளலார் படம் என்று மட்டும் புரிகிறது.

'பசித்தோர் முகம் பார்' என்று அடையாளங்கண்டுகொள்ள முடியாது அல்லல்படுகிறார்.

அவரும் மனிதர்தானே! முகத்தில் உள்ள கண்கள் புண்களாகத் தோன்றுகின்றன; நெஞ்சுக்குள் அழுகிறார்.

ஒருவரா அப்படி அழுகிறார்? அநேகமாக வீட்டிற்கு வீடு அப்படி அழுவோர் உண்டு; நெடுங்காலமாக உண்டு.

இந்திய மக்களில் மிகப் பெரும்பாலோர் நிலை, இத்தகைய இழிநிலையே.

காந்தி அடிகள்

வெள்ளையன் வருவதற்கு முன்பு அதே இழிவு. துரைமார் வந்த பிறகும் அதே சீழ். அதே கேவல நிலை.

பிறிதினோயைத் தன்னோய் போல் நோக்கிய கருணை உள்ளம் இந்தியாவில் தோன்றியது. அண்ணல் காந்தியடிகளாக மலர்ந்தது.

இந்தியர்களின் வறுமையைக் கண்டு இளகிய அப்பேருள்ளம், இனவெறியைக் கண்டு பொங்கிய அந்த சமத்துவ உள்ளம் - பணம், பொருள், பொன், புகழ், பதவி என்று வெறிபிடித்து அலையும் மக்கள் இடையே -

இப்பற்றுகள் ஏதும் அற்றுப் பாடுபட்ட தூய உள்ளம், நம்மவரின் தற்குறித் தன்மைபற்றியும் நினைந்து நினைந்து, உருகி உருகி வேண்டிற்று.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரவியுள்ள எழுத்தறியாமை பற்றி மகாத்மாகாந்தி அவர்களின் கூற்றினை நினைவுகொள்வோம்.

''நம்மோடு பிறந்து, நம்மோடு இருந்து, நம்மோடு துன்பப்பட்டுக் கிடக்கும் உடன்பிறப்புகளில் நூற்றுக்கு எண்பது ஆண்களும் பெண்களும் எழுத்தறிவின்றித் தற்குறிகளாக இருப்பது, இந்தியாவிற்கு இழிவு! படித்த இந்தியர்களுக்குப் பாவம் ஆகும்!'' என்றார்.

படித்த ஒவ்வொருவரும் படிக்காத ஒருவருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுங்கள் என்றார்.

அதோடு நின்றாரா? இல்லை.

நம் நாட்டின் மறுமலர்ச்சிக்காக - நல்வாழ்விற்காக - அளித்த பதினான்கு ஆக்கத்திட்டங்களில் ஒன்றாக, முதியோர் எழுத்தறிவிப்பைச் சேர்த்தார்.

அவ்வப்போது நினைவு படுத்தினார். அண்ணல் அடுத்த படியேறினார்! சொல்லிய வண்ணம் செய்து காட்டினார்.

காந்தியார், தம் வாழ்க்கைத் துணைவியாம், அன்னை கஸ்தூரிபாய்க்குத் தாமே எழுத்தறிவு கற்றுத் தந்தார்; மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

நாமோ, விழுங்கு உணவை விழுங்குதற்கும் உணர்ச்சியற்றுக் கிடந்தோம்.

காந்தியடிகள் விரும்பிய வாய்மையை, தூய்மையை, தீண்டாமை ஒழிப்பை, தன்னிறைவை, பேச்சளவோடு நிறுத்திக் கொண்டதைப் போன்று, முதியோர் எழுத்தறிவையும் வெட்டிப்பேச்சுக்கு மட்டுமே பயன்படுத்தினோம்.

அதைச் செயல்படுத்தப் போதிய நாட்டம் செலுத்தவில்லை. தற்குறித் தன்மை மேலும் மேலும் தொடர்ந்தது.

வேறு பக்கம் பார்ப்போம். தன்மான இயக்கம் எழுத்தறியாமை இழிவைப் பற்றியும் சிந்தித்தது.

பல மாநாடுகளில், முதியோர் எழுத்தறிவுக்கு ஏற்பாடு செய்ய வலியுறுத்தி, முடிவு எடுத்தது.

முன்னர் காணாத ஆர்வமே, எழுச்சியே உடலாக, உயிராக, உள்ளுணர்வாக விளங்கிய அன்றையத் தன்மான இயக்கம் எத்தனைதான் செய்யமுடியும்?

பொறுப்பான இந்தப் பணியினுக்குக் கவர்ச்சியிராது; இதில் காரம் சேராது. இருக்கிற இடம் தெரியாது, அமைதியாக, இந்த அடிப்படைப் பணியினைப் பல ஊர்களில் தொடங்க, விடாப்பிடியாகத் தொடர்ந்து நடத்திச் செல்லக் கூடியவர்கள், புரட்சி இயக்கத்தில் அரிதாக இருப்பது இயற்கை.

இந்த இயற்கையால் தன்மான இயக்கம் எழுத்தறிவுப் பணியில் இறங்காமலே போய்விட்டது.

தற்குறித் தன்மை தொலையவில்லை. ஆங்கிலேயர் ஆட்சி அகன்ற பின்னரும் அது தொலையவில்லை.

சென்னை மாகாணத்தில் முதியோர் கல்வி

அன்னிய ஆட்சியின் மாலைப்பொழுதில் சென்னை மாகாணத்தில் முதியோர் கல்வித் துறையில் தொடங்கிய ஒரு பெரும் வெள்ளோட்டத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வது பொருத்தம்.

சென்னை மாகாண முதலமைச்சராக ஓமந்தூர் இராமசாமியாரும், கல்வி அமைச்சராக, கோவை தி.சு. அவினாசிலிங்கனாரும் விளங்கியபோது, மாவட்டம்தோறும் பல இடங்களில் முதியோர் எழுத்தறிவு நிலையங்கள் தொடங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

உயர் தொடக்கநிலைப் படிப்போடு நின்றவர்கள், தொடர்ந்து அறிவுபெறும் பொருட்டு, சில 'ஜனதா கல்லூரிகள்' தொடங்கவும் ஆணை பிறந்தது.

சட்டென்று நூற்றுக்கணக்கான எழுத்தறிவு நிலையங்கள் எழுந்தன; முதியோர் கல்லூரிகள் முளைத்தன.

ஆனால், அனைத்தும் மறைந்தன; முன் பின்னாக மறைந்தன.

'எண்ணெய்ச் செலவே ஒழிய, பிள்ளை பிழைத்த பாடு இல்லை' இது நாட்டில் வழங்கும் வழக்கு.

அதற்கேற்ப அன்று அரசின் பணம் அரசு ஊழியருக்குச் செலவாயிற்றே ஒழிய, மக்கள் எழுத்தறிவும் பெறவில்லை; தொடர் அறிவும் பெறவில்லை.

முதல் வெள்ளோட்டம் தோற்றதால், நீடித்த தீமை நுழைந்தது.

நம் உணர்வில் அவநம்பிக்கை, ஆற்றாமை, ஒன்றும் செய்ய முடியாது என்னும் சொத்தைகள் வந்துவிட்டன.

ஓமந்தூரார், அவினாசியார் தொடங்கியவை தவறானவையா? இல்லை. தேவையற்றவையா? இல்லை. ஆனால், ஏன் பட்டுப் போயின?

அணுவளவு வேலையானாலும் மலை அளவு தொழிலானாலும் அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, சில முன்னேற்பாடுகள் தேவை.

அம்முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளாமல், வேலையைத் தொடங்குவது தோல்வியில்தான் முடியும்.

தோல்வி ஏன்?

சமைக்க வேண்டுமா? அடுப்பைத் தேட வேண்டும். அதில் போட்டு எரிக்கும் பொருளைப் பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். போதுமா?

உலையில் வைக்கும் சமையற் பானையைத் தேடிக் கழுவிக் கொண்டு வர வேண்டும். அடுப்பை மூட்டி, பானையை அதன்மேல் வைத்து அரிசியை அள்ளிப்போட்டால் சோறு கிடைக்குமா?

கிடைக்காது.

அடுப்பில் உலைவைக்க வேண்டும்; நன்னீரை ஊற்றிக் காயவைக்க வேண்டும்; போதிய அளவு சூடேறிய வெந்நீரில், அரிசியைப் போட்டு, வேகும் வரை துழாவ வேண்டும். அடுத்து அடுத்து எரியும் நெருப்பைத் தூண்டி விடவும் வேண்டும்.

அப்படிச் செய்தால் உண்ணும் சோறு கிடைக்கும்.

வராத விருந்தாளி வந்துவிட்டார்; பெரிய விருந்தாளி வந்து விட்டார்; அவருக்கு விரைவில் உணவளிக்க வேண்டுமென்ற துடிப்பில், மேற்கூறியவற்றைச் செய்யத் தவறினால், விருந்து அளிக்கச் சோறு கிடைக்காது.

சரியான, தேவையான, முதியோர் எழுத்தறிவு, முதியோர் தொடர் கல்வி போன்ற முன்னோடி முயற்சிகள் வீணாகிப் போனது எதனால்?

ஆத்திரங்காரணமாகப் போதிய ஆயத்தம் செய்யத் தவறியதால்; அக்காலகட்டத்தில் மடை திறந்துவிட்ட கல்வி மாற்றங்களும், புதிய கல்வி வளர்ப்பு முயற்சிகளும் இன்றியமையாதவை.

கல்வியினைச் சரியான வழியில் திருப்புவன. அவற்றில் ஒன்றுகூட தவறானது அல்ல. வீணானது அல்ல.

இருப்பினும் அத்தனையும் படுதோல்வி அடைந்தன. முன்னேற் பாடுகளைப் போதிய அளவு செய்யத் தவறிவிட்டதால், அத்தகைய நிலைக்குள் வீழ்ந்தோம்.

இந்தியப் பெரியோர்களிடம் இரண்டறக் கலந்திருக்கிற, மற்றோர் தீய இயல்பும் உயிரூட்டமான அம்முயற்சிகள் மறைந்து போனதற்குக் காரணம் ஆகும். அது என்ன?

இந்தியாவில் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் முன்னர் ஆட்சியில், நிர்வாகத்தில் இருந்தவர்கள் செய்த வேலைகளை அழிப்பது, மாற்றுவது, பின்னால் தள்ளிவிட்டுப், புதிய வெளிச்சங்காட்டிகளை உருவாக்குவது ஒன்றே பின்னர் வருவோருடைய பெரும்பணியாக இருப்பதை, தன்னாட்சி இந்தியாவின் வரலாறும் மெய்ப்பிக்கிறது.

அதே கட்சி ஆட்சி தொடர்ந்தாலும் முன்னர் இருந்த அமைச்சர், தொடங்கியதைத் தூக்கியெறியாவிட்டால், தன் முத்திரை பதியாது என்னும் வெம்பிய சிந்தனைகளே நாட்டைக் கெடுக்கின்றன.

இப்போக்கும் தேவையான நன்முயற்சிகளைக் கல்லி எறிந்தது.

எனவே 'நாடு தழுவிய தற்குறித்தன்மையைச் சிதைக்கத்தக்க முயற்சிகள் தேவை' என, இன்றைக்கும் சொல்ல வேண்டிய நிலையில் தத்தளிக்கிறோம்.

இழிவு நீங்க எழுத்தறிவு தேவை

எழுத்தறிவு பெறுதல், இழிவு நீக்க முயற்சிகளின் ஒரு கூறு; வளர்ச்சியின் வேர்; வையத்துள் வாழ்வாங்கு வாழக் கற்றுத் தரும் கருவி.

இதை உணர்ந்த சோவியத் ஆட்சி, பிற வளங்களை உருவாக்கு வதற்கு முன்பே, உள்நாட்டுப்போர் மும்முரமாக நடக்கையிலேயே, பதினான்கு வெளிநாடுகள், சோவியத் மண்ணில் போராடிக் கொண்டு இருக்கும்போதே, நாடு தழுவிய முதியோர் எழுத்தறிவு இயக்கத்தைத் தொடங்கி, முடுக்கிவிட்டது; தொடர்ந்து விடாமுயற்சியுடன் முனைப்பாகச் செயல்படுத்தியது.

தந்தை பெரியார், 1932 இல் சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோதே, அங்குள்ள அனைவரும் எழுத்தறிவு பெற்றுவிட்ட நிலையைக் கண்டு மகிழ்ந்தார்; இங்கு வந்து சுட்டிக் காட்டினார்.

சோவியத் நாட்டைப் பின்பற்றி, மக்கள் சீனமும் முதியோர் எழுத்தறிவுக்கு முன்னுரிமை கொடுத்தது.

குறுகிய காலத்தில் தன் நாட்டில் உள்ள எல்லோரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக வளர்த்துவிட்டது.

இச்சிறப்பினை - நற்சாதனையை - டாக்டர் ஜெ. சி. குமரப்பா என்ற காந்தியவாதி, தமிழர்,அய்ம்பதுகளின் பாதியில், சீனாவிற்குச் சென்று, நேரில் கண்டு வந்து நமக்குச் சொன்னார்.

சமதர்ம நாடுகள் மட்டுமா எழுத்தறிவில் முனைப்பைக் காட்டின? பிற நாடுகளும் காட்டின. பிரேசில் நாடு கண்ட வெற்றி பாராட்டுக்கு உரியதாகும்.

எழுத்தறிவு என்பது என்ன? சாதாரணக் குடிமகன் - குடிமகள் வழங்கும் சொற்களை எழுதும் ஆற்றல் பெறுதல்; அதே போன்று வீட்டுக் கணக்கெழுதும் அளவு எண் அறிவு பெறுதல்.

இவை எவர்க்கும் எளியன; முதியோர்க்குச் சிறியன; அவர்தம் ஆற்றலுக்கு உள்ளடங்கியன.

முதியோர்க்கு அச்சொற்கள் பழையன; அவை உணர்த்தும் பொருள்கள், கருத்துகள் பழக்கமானவை.

சொல்லும் கருத்தும் தெரிந்திருக்க, அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை எவை? எழுத்துகள்; அச்சொற்களை எழுதிக் காட்டும் எழுத்துகள்.

எனவே, முதியவர்கள், சில திங்களிலேயே அடிப்படை எழுத்தறிவைப் பெற்றுப் பயன் காணமுடியும்.

எழுத்தறிவின் நாற்றுகளை ஒரு திங்களிலேயே பெற்றுவிட முடியும் என்று பிரேசில் நாடு, சில ஆண்டுகளுக்கு முன்னர்தான், உலகம் அறிய மெய்ப்பித்துக் காட்டியது.

எண்ணாயிரம் ஆண்டு நீரிற்கிடந்தாலும் உள்ளீரம் பற்றாத பொருள் உண்டு. நாமும் அத்தகையோரோ?

ஏட்டில் திட்டம் தீட்டி, நாட்டில் வறுமையைப் பெருக்கினோம்.

ஏட்டில் முதியோர் கல்விக் கணக்கு எழுதி மகிழ்கிறோம்.

106. எழுத்தறிவுத் திட்டம்

கோப்பில் கிடந்த எழுத்தறிவுத் திட்டம்

எழுத்தறிவின் இன்றியமையாமை, அது துடைக்கும் இழிவுர அதனால் விளையும் நன்மை பற்றி, மற்றப் பெரியவர்கள் உணரவில்லை என்று எண்ணி விடவேண்டாம்.

பேரறிஞர் அண்ணாதுரை, அதுபற்றி உணர்ந்திருந்தார்; அதற்காவன செய்ய முயன்றார்; முதியோர் எழுத்தறிவுச் சோதனையை நடத்திப் பார்க்க, நிதி ஒதுக்கிவிட்டே மறைந்தார்.

1968 ஆம் ஆண்டு மே திங்கள் தமிழக முதல் அமைச்சர், அறிஞர் அண்ணா அலுவல் பற்றித் தில்லிக்கு வந்தார்.

அப்போது நான் தில்லியில் கல்வி அமைச்சகத்தில், இணைக் கல்வி ஆலோசகராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன்.

முதியோர் எழுத்தறிவுப் பிரிவு என்னிடம் இருந்தது.

'உழவருக்குப் பயன்படும் எழுத்து அறிவு' த்திட்டம் ஒன்று கோப்பிலேயே ஊசலாடிக் கொண்டிருந்தது.

நான் தில்லியில் பொறுப்பு ஏற்றதும், அந்தக் கோப்பின்மேல் தனி அக்கறையும் ஆர்வமும் காட்டினேன்.

அத்திட்டத்திற்குத் திட்டக்குழு ஒப்புதல் கொடுக்கவேண்டும்; பிறகு நிதித்துறையின் 'செலவினக் குழு' இசையவேண்டும்.

முதல் குழு கட்டை போட்டுக் கொண்டிருந்தது. ஆகவே திட்டம் இரண்டாவது குழுவிற்கு அனுப்பப்படவில்லை.

அந்நிலையில்தான், அது என் பொறுப்புக்கு வந்தது.

திட்டக்குழுவின் கல்வி ஆலோசகராயிருந்த டாக்டர் ஜோஷி என்பவர் அதற்கு முன், வடமாநிலம் ஒன்றில் - பஞ்சாபில் - கல்வி இயக்குநராக இருந்து அனுபவம் பெற்றவர்.

அப்போது, சென்னை மாகாணத்தில் விரைந்து பரவிக் கொண்டிருந்த இலவசப் பகல் உணவுத் திட்டம், சீருடை இயக்கம், ஊராரைக் கொண்டு பள்ளிகளைச் சீரமைக்கும் இயக்கம் ஆகியவற்றை நேரில் கண்டு அறிந்து கொண்டவர். அதனால் என்னிடம் பெரிதும் நம்பிக்கையுடையவர்.

எனவே, நானே அவரிடம் வலிய சென்றேன்; 'உழவர் எழுத்தறிவு'த் திட்டத்தைப் பற்றிக் கலந்துரையாடினேன்; அவருக்கிருந்த அய்யங் களுக்கு விளக்கம் கூறினேன்.

சிறுபணப் பாதுகாப்பு மாற்றங்களோடு, அந்தத் திட்டத்தைப் பரிந்துரைக்க இசைந்தார்.

சில நாள்களில், திட்டக் குழுவின் ஒப்புதல் வந்தது.

பின்னர் 'செலவினக் குழு'விற்குச் சென்றேன்.

அக்குழுக் கூட்டத்திலிருந்த நிதித்துறைச் செயலரும் பிறரும் எனக்குப் புதியவர்கள்.

அவர்கள், ஏறத்தாழ இரண்டு மணி நேரம் திட்டத்தின் கூறுகளைப் பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்தார்கள். பல கேள்விகளை எழுப்பினார்கள்.

அத்தனைக்கும் நானே விடை கொடுக்க நேர்ந்தது. இறுதியில் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்திட்டத்தின் சாரம் என்ன?

முதல் ஆண்டில், மூன்று இந்திய மாநிலங்களில் ஒவ்வோர் மாவட்டத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவை தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ்வரும் மாவட்டமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அறுபது சிற்றூர்களில், 'உழவர் எழுத்தறிவு மையங்'களைத் தொடங்கி நடத்த வேண்டும். மையத்திற்கு இருபது பேர்களாவது இருக்க வேண்டும்.

பாட காலம் ஆறு திங்கள். அக்காலத்தின் இறுதியில், முதிய மாணவர்கள் எழுத்துஅறிவு பெற்றார்களா என்று பார்க்க வேண்டும்.

பெற்றிருந்தால் அதற்கான சான்றுஇதழ் வழங்கிவிட்டு, அதே மையங்களில் புதியவர்களைச் சேர்த்து, கற்றுத் தரவேண்டும்.

ஓராண்டின் இறுதியில் மைய அரசு அமைக்கும் குழுவொன்று, முதியோர் எழுத்தறிவுத் திட்ட நடைமுறையை ஆய்ந்து பார்க்கும்.

மதிப்பீடு நிறைவாயிருந்தால், அடுத்த ஆண்டில் அத்திட்டம் முப்பது மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

அய்ந்தாண்டுகளில், நூறு மாவட்டங்களில் உழவர் எழுத்தறிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அடுத்த கேள்வி, முதலில் எந்த மூன்று மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பது என்பதாகும்.

அப்போதைய இந்தியக் கல்வி அமைச்சகச் செயலாளர் திரு. பிரேம்கிருபாலிடம் நேரில் சென்றேன்.

தமிழ்நாட்டிற்கு ஒரு மாவட்டத்தை ஒதுக்கும்படி ஆலோசனை கூறினேன்.

அவரும் என்னிடம் நிறைய நம்பிக்கை உடையவர். எனவே, ஒப்புக் கொண்டார்.

அன்றையத் தமிழ்நாட்டில், தஞ்சை மாவட்டமும் கோவை மாவட்டமும் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ்ச் செயல்பட்டு வந்தன.

அவ்விரண்டில் எதைப் பரிந்துரைப்பாய் என்று கிருபால் கேட்டார். அதைத் தமிழக அரசின் முடிவுக்கு விடுவது நல்லது என்றேன். அதையும் தட்டாமல் ஏற்றுக் கொண்டார்.

''தமிழ்நாட்டை 'உழவர் எழுத்து அறிவு' இயக்கத்தில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு இதற்கு இசையவேண்டுகிறோம்.

''அதோடு எந்த மாவட்டத்தில் அதைச் செயல்படுத்தலாம் என்பதை மாநில அரசே முடிவுசெய்து தெரிவிக்க வேண்டுகிறோம்.

''உழவர் எழுத்தறிவு திட்டத்திற்கு ஆகும் முழுச் செலவையும் அய்ந்தாண்டு காலத்திற்கு, இந்திய அரசே ஏற்றுக் கொள்ளும்'' இப்படியொரு கடிதத்தைத் தமிழக அரசுக்கு அனுப்பினோம்.

சென்னை மாகாண நிர்வாகம் திறமைக்குப் பெயர் பெற்றது.

அதே போன்று திட்டங்களை, கோப்புகளை அமுத்தி வைப்பதற்கும் நெடுங்காலமாகப் புகழ்பெற்றது.

அதை மெய்ப்பிக்கும் கோர அழுத்தங்களை, பின்னர் தக்க இடங்களில் விவரமாகக் குறிப்பிடுவேன்.

'உழவர் எழுத்தறிவு' திட்டம் பற்றி இந்திய அரசு எழுதிய கடிதத்திற்குச் சென்னையிலிருந்து பல மாதங்களாகப் பதில் இல்லை; நினைவுக் கடிதங்களும் தூக்கத்தைக் கலைக்கவில்லை.

அண்ணாவின் அழைப்பு

அந்நிலையில்தான் முதல் அமைச்சர் அண்ணாதுரை தில்லிக்கு வந்தார். இந்தச் செய்தி நாளிதழ்களில் வெளியாயின.

உடனே, திரு. பிரேம்கிருபாலிடம் சென்றேன். முதல் அமைச்சரைக் கண்டு அந்தத் திட்டம் பற்றி, இசைவுபெற உரிமை கொடுக்கும்படி வேண்டினேன்.

அவர் மகிழ்ச்சியோடு அளித்தார்.

முதல் அமைச்சர் அண்ணாதுரை அவர்களைத் தில்லி, 'தமிழக இல்லத்'தில் கண்டேன்.

தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழெட்டுப் பேர்கள் இருக்கும்போதே, என்னோடு பேசினார்.

எதற்காக வந்தேன், என்பதை நான் கூறியதும், தமது செயலாளர் திரு. சொக்கலிங்கத்தைக் கூப்பிட்டார்.

''நாளை நாம் ஊர் திரும்பியதும், 'உழவர் எழுத்தறிவு' திட்டத்திற்கான ஒப்புதலை, தந்தி மூலம் தில்லிக்குத் தெரிவிக்க வேண்டும். நான் சொன்னேன் என்று சொல்லி அனுப்பிவிடுங்கள். தயக்கம் வேண்டாம்'' என்றார்.

என் மகிழ்ச்சிக்கோர் எல்லை இல்லை. மகிழ்ச்சி வெள்ளம் ஆளை அடித்துக்கொண்டு போகுமென்பது தெரியவில்லை. அடுத்து நொடி நான் எதிர்பாராத பெரியதொரு திருப்பம் ஏற்பட்டது.

முதல் அமைச்சர் அண்ணாதுரை என்னைப் பார்த்து,

''நீங்கள் கேட்பதற்கு நான் இசைகிறேன். நான் கேட்பதற்கு நீங்கள் தடை சொல்லாமல் இசையுங்கள்.

''நீங்களே, சென்னை மாநிலத்திற்குத் திரும்பி வந்து உழவர் எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்துங்கள்.

''இந்திய அரசின் திட்டமோ, ஒரு மாவட்டத்தில் வெள்ளோட்டம் பார்க்கும் சுருக்கமான நடவடிக்கை.

''நான் நினைத்துக் கொண்டிருப்பது பெரிய திட்டம், அதை நிறைவேற்றி வைக்க நீங்கள் சென்னைக்கு வாருங்கள்.

''எனக்கு, என் கட்சிக்கு வாக்களித்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் தற்குறிகள்; அவர்கள் அனைவரும் நம்மவர்கள்; கைநாட்டுகள் என்கிற இழிவை நாமே குத்தகை எடுத்துக் கொண்டுள்ளோம்.

''என் கட்சிக்கு வாக்களித்த அவர்களை மறுபடியும் கண்டு வாக்களிக்கும்படி கோருவதற்குமுன், அவர்கள் அனைவருக்கும் எழுத்தறிவாவது கொடுத்து விடவேண்டும்.

''அப்போதுதான் நான் அவர்களிடம் உங்கள் பிள்ளைகளுக்குக் காமராசர் கொடுத்த கல்வி வாய்ப்பை அப்படியே காப்பாற்றி இருப்பதோடு, உங்களுக்கும் எழுத்தறிவு கொடுத்து விட்டேன் என்று உற்சாகத்தோடும் உரிமையோடும் பேசலாம்.

''பொதுமக்கள் நீங்கள் சொன்னால் கேட்பார்கள். தமிழ்நாட்டில் எழுத்தறிவு இயக்கத்தை நடத்த வந்துவிடுங்கள்'' என்று அழைத்தார்.

மாட்டேனென்பேனா? இந்திய அரசின் அய்ந்து அழைப்புகளை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு ஆறாம் முறை, அப்போதைய கல்வி அமைச்சர் டாக்டர் சாக்ளாவே நேரில் அழைத்ததால், தாட்சண்யப்பட்டு அங்குச் சென்றேன்.

அவர் சில திங்களில் அயல்துறை அமைச்சராகிவிட்டார். அவர் இல்லாதபோது எனக்கு அப்பணியில் பற்று அற்று விட்டது.

அறிஞர் அண்ணா, எவரை எதற்குப் பயன்படுத்த வேண்டுமென்று அறிந்தவர். என்னைக் கல்வித் தொண்டிற்கே பயன்படுத்துவார் என்பது தெரியும்.

எனவே, முதல் அமைச்சரின் அழைப்பை நொடியில் ஏற்றேன்.

''அய்யா! தங்கள் அரசு, என்னைத் திருப்பி அனுப்பும்படி எழுதப்போகிறதா? அல்லது நானே என் பழைய பதவிக்குத் திரும்பிப்

போகிறேனென்று எழுதிக் கொடுத்து விடவா?'' என்று நடைமுறை விளக்கம் கேட்டேன்.

''நாங்கள் எழுதலாம். அப்படிச் செய்தால், இந்திய அரசோடு ஒத்துழையாமைக் கடைப்பிடிக்கிறோம் என்று நினைத்துவிடக் கூடாதென்று யோசிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கையிலேயே,

''இன்னும் மூன்று திங்களில் என் ஈராண்டுப் பதவிக்காலம் முடிகிறது. அவ்வேளை, நான் சென்னைப் பதவிக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதாக எழுதிக் கொடுத்து விடுகிறேன்'' என்றேன்.

மறுநாள் உழவர் எழுத்தறிவுத் திட்டத்திற்குத் தந்தி வழியாகத் தமிழக அரசின் இசைவு வந்தது.

நான் ஒப்புக்கொண்டபடி, சில திங்களில் சென்னைப் பதவிக்குத் திரும்பினேன்.

என்னைத் தலைமைக் கல்வி ஆலோசகராகவும் கூடுதல் செயலாளராகவும் நியமித்த, முதல் அமைச்சர் அண்ணாதுரை அய்ந்நூறு எழுத்தறிவு மையங்களைத் தொடங்க நிதி ஒதுக்கினார்; அது நடைமுறையாவதற்கு முன் மறைந்து விட்டார்.

ஆயினும், அய்ந்நூறு எழுத்தறிவு மையங்கள் தொடங்கப்பட்டன. அவை நன்கு செயல்பட்டன. எதிர்பார்த்ததைவிட நல்ல தேர்ச்சி கிடைத்தது.

அண்ணல் காந்தி அடிகள் இன்னும் சில ஆண்டு உயிர் வாழ்ந்திருந்தால் தீண்டாமை பெருமளவு தொலைந்திருக்கும்; மீனாட்சிபுரம் நடந்திருக்காது.

அறிஞர் அண்ணா அறுபத்து ஒன்பதில் மறையாதிருந்தால் தமிழ்நாட்டில் எல்லோரும் எழுத்தறிவு பெற்றிருப்பார்கள்.

107. என் இலட்சியம்

என் இலட்சியம்

பசு அசை போடுகிறது; பொழுது போக்கிற்காகவா? இல்லை, உடலில் உரம் ஏற்றிக் கொள்ள அது தேவை.

பசுவின் வலிமையால், அதற்கு எவ்வளவு ஆதாயம்? மற்றவர்களுக்கு எவ்வளவு பயன்? மற்றவர்களுக்கே அதிகப் பயன். பசுவிற்கு உயிர் வாழும் ஆதாயம்.

மக்களுக்குப் பால் கிடைக்கும் நன்மை. பிறருக்குப் பயன்படவே பசு உயிர் வாழ்கிறது; அவ்வப்போது அசை போட்டு உயிர் வாழ்கிறது.

பசுவைப் போன்று நானும் அசைபோட்டேன். வரலாற்று உணவில் சில உருண்டைகளை அரைத்துக் கொடுத்தேன். அதனால், 'பகுத்துண்டு வாழும்' முழு மனநிறைவு எனக்கு.

அறிஞர்களை - நல்லவர்களை - அடையாளம் கண்டு கொள்ளும் நிறைவான மகிழ்ச்சி, கற்போருக்கு.

புது உணவு படைக்கட்டுமா?

'மூவாசைகளை விடு' இது ஆன்றோர் வாக்கு. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னைப் பற்ற வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஆனால், பேரவாக்களுக்கு ஆட்பட்டேன்.

'நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்' இது பாரதியார் தமக்கு வகுத்துக் கொண்ட பெருவழி.

பதினாறு; பதினேழு வயதில் இவ்வைர வரிகளைப் படித்தேன். பசுமரத்து ஆணிபோல் நெஞ்சில் பதிந்துவிட்டன. உணர்வில் கலந்துவிட்டன.

கவிதையாற்றல் என்னுள் முளைக்கவில்லை. எனவே, பிறஇரண்டும் முளைத்தன; தாராளமாகத் தழைத்தன.

பெரிய பொறுப்புகளை எட்டிப்பிடிக்க வேண்டும்; அவற்றைக் கொண்டு இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும். மகாகவி பாரதி கட்டளையிட்டபடி 'வீடுதோறும் கலையின் விளக்கம்' ஒளிர ஆவன செய்யவேண்டும்.

'என்னருமைத் தமிழ் நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்பதற்குப் பெருந்துணையாக நிற்கவேண்டும்.'

'பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடர் எல்லாம் விழிபெற்றுப் பதவிகொள்ள' ஊன்றுகோலாக நிற்கவேண்டும்.

இவ்வகையில் சமுதாய நலனுக்கான கருவியாக வாழவேண்டும் என்னும் அவா, என்னுள் நிறைந்தது.

உயர்ந்த குறிக்கோள், சீரிய சிந்தனைகள், நல்ல கருத்துகள் முதலியன, எளியோர் வாயிலிருந்து வரும்போது, மக்களால் கொள்ளப்படுவ தில்லை.

பெரும்நிலையில் இருப்போர் வாயில் இருந்து அவை வெளிப் படின், ஏற்றுக் கொள்ளப்படும்; ஓரளவாவது செயல்படுத்தப்படும்.

இது உலகத்து இயற்கை.

இதை இளமையிலேயே புரிந்து கொண்டவன் நான்.

மாவட்டக் கல்வி அலுவலராக விரும்பினேன்

எனவே, இளந்துணை ஆய்வாளனாக இருக்கும் நிலையிலிருந்து, மாவட்டக் கல்வி அலுவலராக அவாவினேன்.

அப்படியொரு நிலை வந்தால், பெரிதும் பயன்படுவேனென்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருந்தேன்.

அதற்கு உரமிடுவதுபோல், 'உடையவர் சாத்துமுறையைக் காண' திருப்பெரும்பூதூர் வந்த திருவாளர் சங்கரலிங்க தாசு அவர்கள் எனக்கு 'ஆரூடம்' சொல்லிவிட்டுப் போனார்.

அந்த நல்லவர் வழிகாட்டியபடி, பள்ளித்துணை ஆய்வாளர் பதவிக்குவேண்டிய தேர்வுகளில் ஒன்றன்பின் ஒன்றாகத் தேர்ச்சி பெற்றேன்.

அடுத்து,

மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கான மேல்நிலைத் தேர்வுகளுக்கு ஆயத்தமானேன்; பாடுபட்டுக் கற்றேன்; ஒன்றன்பின் ஒன்றாகத் தேர்வுகள் எழுதினேன்; அவற்றில் வெற்றி பெற்றேன்.

அலுவல் பணியின் பளு, தேர்வுகளுக்கு ஆயத்தம் செய்யும் நெருக்கடி ஆகியவை, என் தனிமைத் துன்பத்தை மட்டுப்படுத்தி வைத்திருந்தன.

அத்துன்பம் நெடுநாள் தொடர்ந்ததா? இல்லை. சில திங்களில் விலகிற்று.

எப்படி?

கூட்டுக்குடும்பம்

ஒவ்வொருவர் குருதியிலும் ஒவ்வோர் இயல்பு உண்டு. யாரிடமும் அழுத்திக்கேட்கத் தெரியாத போக்கு, எங்கள் குடும்பத்திற்கு வழி வழி வந்தது.

என் மாணவர் பருவத்தில்கூட, என் பெற்றோரிடம் 'இது வேண்டும்; அது வேண்டும்' என்று இரண்டு முறை கேட்கவோ, அடம்பிடிக்கவோ நேர்ந்தது இல்லை. எதனால்?

சாலப்பரிவோடு, என் தாய், என் தேவைகளை முன்கூட்டியே நிறைவேற்றினார். இன்ன சிற்றுண்டி தேவை என்றால் போதும்; எப்படியோ செய்து கொடுத்துவிடுவார்.

பணத் தேவைகளை, அப்பாவிடமே ஒரே முறை சொல்வேன். பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி திறக்கும் நாளை, குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பு நினைவுபடுத்துவேன்.

அவ்வமயம். எவ்வளவு பணத்தோடு செல்லவேண்டும் என்னும் கணக்கை, அப்பா கேட்டுத் தெரிந்துகொள்வார்.

அந்த நிதியைத் தேடுவது அவர் பொறுப்பு; வாலாஜாபாத் வரை போக மாட்டுவண்டியே சாதனம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் அவர் வேலை.

காலை மூன்று மணிக்கே, வெந்நீர் போட்டு, என்னை எழுப்பி, குளிக்க வைப்பது தாயின் பணி.

நேரத்தில் இட்டிலி அவித்து, உண்ண வைத்து, வழியனுப்புவது அம்மாவின் அன்புப் பொறுப்பு.

குறிப்பறிந்து, எனக்கு வேண்டியதை நேரத்தில், செல்லமாகச் செய்து கொடுப்பதால், நான், மெல்ல மெல்லக் கேட்கும் குணத்தையே இழந்துவிடுவேன் என்பதை அந்நல்லோர் அறியார்.

பிள்ளைத்தனத்தில் இருந்த எனக்கு இது தெரியாமற் போனது வியப்பல்ல.

நான் கேட்காதிருப்பது, ஆணவத்தால் என்று பலரும் நினைப்பது அவர்களுடைய குறையல்ல.

நான் கேட்கத் தெரியாதவன் என்பதை என் அருமை 'அண்ணன்' சா. குருசாமி (குத்தூசி) அவர்கள் நன்கு புரிந்து கொண்டவர்கள்.

நான் காந்தம்மாவைத் திருமணம் செய்துகொண்ட பிறகு, என் பெற்றோர் ஆற்றிய பணியை, காந்தம்மாவின் பெற்றோர் ஏற்றுக் கொண்டனர்.

'இது இல்லையே; அது இல்லையே' என்று நான் புழுங்க, எனக்குச் சிறிதும் வாய்ப்பே வைக்கவில்லை.

'தீபாவளிக்கு இவை இவை; பொங்கலுக்கு இன்னவை தேவை' என்று வரிவிதிக்காத 'அப்பாவி' மாப்பிள்ளையை, அவர்கள் கண்ணெனக் காத்தனர். அவர்களுக்கு அவ்வளவு வசதி ஏது?

குருசாமியும் அவரது வாழ்க்கைத் துணைவி, குஞ்சிதமும் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால், அவர்கள் தனிக் குடித்தனம் பண்ணவில்லை.

குஞ்சிதத்தின் பெற்றோரோடு, ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள்.

மகளும் மருமகனும் பெற்று வந்த ஊதியம் தனிக் கணக்கில் போகாது; தனிப்பெட்டிக்குள் பதுங்காது.

குடும்பச் செலவுக்காகப் பொதுக் கணக்கில் சேர்ந்துவிடும்.

பின்னர், அக்கூட்டுக் குடும்பத்தில் நானும் ஒருவனாகச் சேர்ந்து விட்டேன்.

அப்போது, பல திங்கள்வரை, நான் ஒருவனே ஊதியம் பெற்று வந்தேன்.

மூவர் ஊதியத்தில் என்னுடையதே மிகவும் குறைந்தது.

இருப்பினும் நானே வீட்டின் செல்லப்பிள்ளை; மாமியாருக்கு மட்டுமல்ல, என் சகலருக்குந்தான்.

எனவே, என்னையும் என் மனைவியையும் நன்றாகப் பராமரித்தார்கள்.

அதோடு, என் கைச்செலவிற்குத் தாராளமாகவே, நான் கேட்காமலே கொடுப்பார்கள். அக்கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறை இன்றும் நீள்வது, மிகவும் மகிழ்ச்சியூட்டுகிறது.

கணக்குப் பார்த்துச் செலவு செய்யும் நெருக்கடி, அண்மைக்காலம் வரை என்னை நெருங்கவில்லை.

மாற்றலுக்குப் பரிந்துரை

கேட்கத் தெரியாத தம்பியாகிய எனக்காக, அண்ணன் குத்தூசி குருசாமியார் கேட்கத் தொடங்கினார்.

என்னை, தலைநகரமான சென்னைக்கு மாற்றித்தரும்படி, கல்வித்துறைக்குப் பரிந்துரை தேடினார்.

அக்காலத்தில் நாடி வந்தவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல், தங்கள் செலவில், பிறருக்கு உண்மையாகவே உதவிய, பொதுவாழ்க்கை வள்ளல்கள், மாவட்டத்திற்குப் பத்து, இருபது பேர்களையாவது காணமுடிந்தது.

அத்தகையோர் ஒரு கட்சியினர் அல்லர்; வெவ்வேறு கட்சியினர்.

அவர்களில் இருவர் சர். ஏ.டி. பன்னீர்செல்வமும் நெடும்பலம் என்.ஆர். சாமியப்பாவும் ஆவார்கள்.

இருவரும் வழிவழிச் செல்வர்கள்; அரசியலில் பெரும் பொறுப்புகளில் திறமையுடன் இருந்தவர்கள்.

அந்நிலையிலும் காட்சிக்கு எளியவர்கள்; கடுஞ்சொல் அறியாதவர்கள்; நேசக்கரம் நீட்டத் தயங்காதவர்கள்; கலகலப்பாகப் பேசுபவர்கள். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வந்தவர்கள்.

இத்தனைக்கும் மேலாக விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள்.

இருவருமே, குத்தூசி குருசாமிக்கு மிகவும் வேண்டியவர்கள்.

அதிகாரத்திலும் வயதிலும் மூத்த அவ்விருவரிடமும் குத்தூசியார் உரிமையோடு தோழமையோடு பேசுவார்.

பன்னீர்செல்வம் விமான விபத்தில் அகால மரணமடைந்ததால் திரு. எம்.ஆர். சாமியப்பாவிற்கு, பரிந்துரைப்பணி அதிகமாயிற்று.

அண்ணன் குத்தூசியார் அவரை அணுக, அவரும் தலையிட்டார்.

சென்னையில் உள்ள பொதுக்கல்வி இயக்கத்தோடு தொடர்பு கொண்டார். உரிய துணை இயக்குநரைக் கொண்டு, மதுரை மண்டலக்கல்வி அதிகாரிக்குப் பரிந்துரை செய்ய வைத்தார்.

பரிந்துரை பலித்தது. தஞ்சையில் இருந்து என்னைத் தலைநகரான சென்னைக்கு மாற்றும் ஆணை வந்தது.

பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் திரு. என்.ஆர். சாமியப்பா விடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றை இங்கே குறிப்பது பொருத்தம்.

'தம் சாதி உயர்வு' என்ற உணர்விலே ஒன்றிய அய்யர்களாகக் கருதப்படும் மரபிலே வந்தவர், சாமியப்பா. ஆனால் அத்தகைய ஆணவத்தில் இருந்து அடியோடு விடுபட்டவர்.

எல்லாச் சாதியினரோடும் நெருங்கிப் பழகக்கூடியவர்.

அவரால் பல சாதி இளைஞர்கள் பதவிபெற்றார்கள்; பல இடங்களில் பணிபுரிந்து வந்தார்கள்.

அவ்வூர்ப் பொது நிகழ்ச்சிகளுக்காகச் சாமியப்பா அங்குச் செல்லும்போது, அவர்கள் கூட்டத்திற்கு வந்து, அவரைக் காண்பது வழக்கம்.

அவ்வேளைகளில், சாமியப்பா நடந்துகொண்ட முறை நம் சமுதாயத்திற்குப் புதிது. வியப்பிற்கு உரியது.

சாமியப்பா, அநேகமாக, ஒவ்வொருவர் தோளிலும் கை போட்டுப் பேசுவார். அதோடு ஒவ்வொருவரோடும் தனியே ஒரு மணித்துளியாவது 'குசுகுசு' என்று ஏதோ இரகசியம் பேசுவார்.

சாமான்ய நிலையில் இருப்பவர்களுக்கு அத்தகைய தனிமைப்பேச்சு 'அமிழ்தமாக' வேலை செய்யும்; பாதுகாக்கும் கேடயமாகப் பயன்படும்.

108. சென்னைக்கு மாற்றல்

உமாமகேசுவரம்பிள்ளை மறைவு

நான் தஞ்சையிலிருந்து சென்னைக்கு மாற்றுதல் ஆகிவருமுன், அதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சி யொன்று ஏற்பட்டது.

மனிதன் சமுதாயத்தில் வாழ்பவன் அல்லவா? சமுதாயத்தில் ஏற்படும் பல்வேறு நிகழ்ச்சிகளால் மனிதன் பாதிக்கப்படுவது இயற்கை.

நான் தஞ்சையில் தங்கியிருந்தபோது, என் அமைதியைக் குலைத்த பேரிழப்பு ஒன்று ஏற்பட்டது.

அது என்ன?

ஒரு பெரியவரின் மறைவு. அவர் பெயர் என்ன?

தமிழ்வேள், உமாமகேசுவரம்பிள்ளை.

அவர் எனக்கு அறிமுகமில்லாதவர்.

இருந்தால் என்ன?

அவர் தமிழ் வளர்த்த பெரியவர் ஆயிற்றே.

தமிழ் வளர்த்த பெரியவர்கள் பலர் உண்டு. இந்நூற்றாண்டிலும் உண்டு.

அவர்களில் திரு. உமாமகேசுவரம் அவர்களுக்குச் சிறப்பு இடம் உண்டு.

ஏன்?

திரு பிள்ளையவர்கள், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவ முன்னின்றவர்.

பிற தமிழ்ச் சங்கங்களைப் போன்றது அல்ல கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

பல தலைமுறைகளுக்குத் தொடரக் கூடிய தமிழ்ப் பணிக்கு வேராக நிற்பது, இந்தத் தமிழ்ச் சங்கம்.

தொன்மை வாய்ந்த தமிழ் மொழியைக் காத்து, ஆய்ந்து, வளர்க்க முற்காலத்தில், மதுரையம்பதியில், மூன்று தமிழ்ச் சங்கங்கள் இயங்கின.

அவற்றை மன்னர்கள் ஆதரித்து, ஊக்குவித்து வளர்த்து வந்தார்கள்.

தமிழ் மன்னர்கள் நிலைகுலைந்து ஆட்சி இழந்தபோது, தமிழ்மொழியும் நிலைகுலைந்தது; கொழுகொம்பற்ற கொடியாகத் தவித்தது. வெறும் வீட்டு மொழியாகத் தமிழ் குறுகியது.

என்னே, காலத்தின் கோலம்!

நெடுந்தொலைவிலிருந்து வந்து, நம்மை அடிமையாக்கி ஆண்ட ஆங்கிலேய ஆட்சியின் பிற்காலத்தில் உணர்வு துளிர்க்கத் தலைப்பட்டது.

அவ்வெளிப்பாட்டில் ஒன்று, இராமனாதபுரம் பாண்டித்துரை தேவர் 'மதுரையில் நிறுவிய தமிழ்ச் சங்கம்.

அந்த வழியினைப் பின்பற்றித் தஞ்சையையடுத்த கரந்தையில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் சிலர் கூடி, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள்.

அவர்களில் முன்னே நின்றவர் திரு. உமாமகேசுவரம்பிள்ளை.

அச்சங்கத்தின் சார்பில், கரந்தையின் தமிழ்க் கல்லூரி தொடங்கப் பட்டது.

அக்கல்லூரிக்கு, பெரும்புலவர் வேங்கடசாமி நாட்டார் தலைமை யேற்றுப் புகழ் மரபினை அமைத்துத் தந்தார்.

ஒரு காலகட்டம் வரை, கரந்தைக் கல்லூரி, தமிழ் உணர்வாளர்களை, தமிழ் அறிஞர்களை ஈர்க்கும் காந்த மையமாகச் சிறப்படன் விளங்கியது.

காந்தியண்ணல் வாழ்நாளில் சபர்மதியும் சேவா கிராமமும் எப்படியோ - பெரியார் காலத்தில் ஈரோடும் திருச்சியும் எப்படியோ, அண்ணா காலத்தில் காஞ்சி எப்படியோ - அப்படிப்பட்டதோர் நிலையைக் கரந்தை பெற்றிருந்த காலம் ஒன்று இருந்தது.

அக்காலகட்டத்தில அங்குத் தமிழ்க் கற்பித்தவர்கள் மெய்யான ஆசிரியர்கள்; பாடம் சொல்லுவதை வெறும் பிழைப்பாகக் கொள்ளாமல், உயிர்க்கு இனிய மொழித் தொண்டாகவும், நெஞ்சம் நிறைந்த சமுதாயத் தொண்டராகவும் கருதிச் செயல்பட்டார்கள்.

அவர்கள் குறியெல்லாம் தங்களுடைய ஆழ்ந்த, அகன்ற, நுண்ணிய, தமிழ் அறிவை வரும் தலைமுறைகளோடு பங்கிட்டுக் கொள்வதாக இருந்தது.

ஊனைச் சுருக்கி, உள்ளொளி பெற முயல்வார்போல், பணத்தை மறந்து, தமிழ் ஒளியை வளர்ப்பதில் முனைப்பாக இருந்தார்கள், அத்தமிழ்ப் புலவர்கள்.

அத்தகைய கரந்தைத் தமிழ்க் கல்லூரியை, தமது வாழ்நாள் முழுவதும் உமாமகேசுவரனார், கண்ணினைக் காக்கும் இமையெனக் காத்து வந்தார்.

அத்தமிழ்வேளுக்குத் தமிழும் சைவமும் இரு கண்கள். இரண்டிலும் ஆழ்ந்து தோய்ந்த அறிஞர்.

அவருக்குப் பொதுவாழ்க்கை ஈடுபாடும் நிறைய இருந்தது. அவர் நீதிக்கட்சியைச் சார்ந்தவர்.

அப்பெரியவர், காசிப் பயணத்தை மேற்கொண்டார்; சில உற்ற நண்பர்களோடு சென்றார்.

அவர் மரபு வழி மாறாத இந்து என்பது இதனால் புலனாகிறது.

அப்பெரியவர் வட இந்தியாவில் சில ஊர்களைப் பார்த்த பிறகு, காய்ச்சலில் படுத்தார்; படுத்தவர் குணமாகவில்லை.

சென்ற நண்பர்களும் அவர் தங்கி இருந்த இல்லத்தவர்களும் பட்டபாடு அனைத்தும் பாழாயின. திரு. உமாமகேசுவரம்பிள்ளை மறைந்தார்.

அவர் மறைவு பற்றி, கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் இரங்கற் கூட்டமொன்று நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். உரைகளைக் கேட்டு உருகினேன்.

உமாமகேசுவரம்பிள்ளை, சுயமரியாதை மாநாடுகளிலும் கலந்து கொண்டவர். தந்தை பெரியாருக்கு வேண்டியவர்.

எனவே, 'நாத்திகர்' என்று பொறுப்பற்றவர்களால் தூற்றப்பட்டவர்.

அப்படிப்பட்டவர், காசி யாத்திரை சென்றார்; கங்கை நீரில் மூழ்கினார்; புனித நகர்களைக் கண்டார்; இவற்றை நண்பர்கள் விவரித்தபோது, என் சிந்தனை வேலை செய்தது.

'வயது முதிர்ச்சியைப் பாராது நீண்ட காசிப் பயணத்தை திரு. உமா மகேசுவரம்பிள்ளை மேற்கொள்வானேன்!

'வழி வழி வந்த சைவ சமயத்தின் பழமைப் பிடிப்பு அல்லவா?

'ஆழ்ந்த, பழமை மாறாத, சமய நம்பிக்கையாளராகிய பிள்ளை அவர்கள், சுயமரியாதை இயக்க மாநாடுகளில் கலந்து கொண்டது பொருள் ஆதாயத்திற்கா? புகழ் விரும்பியா? பதவியை நாடியா? இல்லை.

'அம் மாநாடுகளுக்குச் செல்லாதிருந்தால், மேற்கூறிய அனைத்துமே அவருக்குக் குவிந்திருக்கும். அது தெரியாத அப்பாவியல்ல அவர்.

'பின் அவரை உந்தியது ஏது?

'மான உணர்ச்சி; தன்மான உணர்ச்சி; சமுதாய மான உணர்ச்சி; மொழி மான உணர்ச்சி ஆகியவை ஆகும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கிறது தமிழ்ப் பண்பாடு.

''பிறவியிலேயே கீழ்த்தரம்; உரிமையற்ற மக்கள்; தொடக்கூடாதவர்கள்; நேரே வழிபடத் தகுதியில்லாதவர்கள்.

'நீங்கள் கீழ்ச்சாதியாக இருப்பது போலவே உங்கள் தமிழும் கீழானது; வீட்டுப் பேச்சுக்கு மட்டுமே பொருத்தமானது தமிழ் என்கிறது நடைமுறைச் சமுதாயம்.

'தமிழ்ப் பண்பாட்டிற்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே எழும் முரண்பாடு, மானத்தோடு, பிறர்க்குத் தாழாது வாழத்துடிக்கும் உரிமைத்துடிப்பு ஆகியவை அவரை வேறு தோற்றத்தில் காட்டின.'

இப்படிச் சிறகடித்துப் பறந்தது, எனது அன்றைய சிந்தனை!

பிற்காலத்தில், என் தொடர்புகள் வளர வளர, ஒரு பேருண்மையைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அது என்ன?

மாறான தோற்றமளிக்கும் தமிழர்களில் சிலர் அல்ல - பலர் அல்ல - ஏறத்தாழ ஒரு கோடி மக்களாவது கடவுள் நம்பிக்கையாளர்கள்.

ஆனால் அவர்கள் - இன்றைய சாதி முறையை வெறுக்கிறார்கள்.

அந்த உளைச் சேற்றில் இருந்து கரையேற முடியாது அல்லல் படுகிறார்கள்.

பாரதி காட்டிய 'எல்லோரும் ஓர் நிலை' என்னும் மட்டத்திற்கு வளர முயல்கிறார்கள்.

அவர்களைப் பிறவி பற்றி இழிவுபடுத்திக்கொண்டே வருவது சமயத்தின் இன்றியமையாத கூறு என்றால் அவர்கள் நாத்திகர்களாக மாறாவிட்டாலும், பிற சமயத்தவர்களாகி விடுவார்கள்.

அப்படி மாறாது இந்துக்களாகப் பெயர் அளவில் இருப்பவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் சின்னமாய் இராது, பிளவுபடுத்தும் ஆப்புகளாகத் தம்மை அறியாமலே செயல்பட்டுவிடும் கேடு நேர்ந்துவிடும்.

ஒரே சமயத்தைப் பின்பற்றுபவர்களை ஆயிரம் சாதிகளாகப் பிரித்து, அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து, அக்கற்பனையைப் போற்றிக் காப்பது, எப்படிச் சமயத்தின் சிறப்பாக முடியும்?

மதுரை மண்டலப் பள்ளி ஆய்வாளர் எனக்கு அனுப்பிய, மாறுதல் ஆணையைப் பெற்றுக்கொண்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தேன்.

அப்போது, சென்னையில் இரு தொடக்கப் பள்ளி ஆய்வாளர்கள் மட்டுமே இருந்தார்கள்.

ஒருவர் தென் சென்னை ஆய்வாளர்; மற்றொருவர் வடசென்னை ஆய்வாளர்.

அக்கால கட்டத்தில், பெண்களுக்கு என்று தொடக்கப்பள்ளிகளும் நடந்தன.

அவற்றைக் கண்காணிக்க அம்மையார் ஒருவர் ஆய்வாளராக இருந்தார்.

சென்னையில் பணி

என் பதவி, தென்சென்னை ஆய்வாளர் அலுவலகத்தோடு இணைந்தது.

ஆயினும் வடசென்னைப் பகுதியில் இருந்த பள்ளிகளும் என் கண்காணிப்பில் விடப்பட்டன.

முந்திய வட்டார ஆய்வாளர் பெயர், கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

பிந்திய வட்டாரத்தில், சாம்பசிவம்பிள்ளை ஆய்வாளராக இருந்தார்.

இருவருமே என்பால் அன்பு காட்டினார்கள். இருவரிடமும் நான் பொறுப்போடும் ஒரே மாதிரியான மரியாதையோடும் நடந்து கொண்டேன்.

நான் சென்னைக்கு மாறுதலாகி வந்தபோது இரண்டாவது உலகப்போர் நடந்து கொண்டிருந்தது.

அய்ரோப்பாவில் இட்லர் மூட்டிய அப்போர், மேற்கே பரவி, சில நாடுகளை ஏப்பம் விட்டுக் கிழக்கேயும் முற்றும் நிலை உருவாகி விட்டது.

அந்நிலையில் நான் சென்னைக்கு வந்தது நல்லதற்கு அல்ல, என்று என்னிடம் வாய்விட்டுக் கூறி, பச்சாதாபம் காட்டியவர்கள் பலர் உண்டு.

அப்போது உருவான நெருக்கடி, ஒரு வகையில் எனக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது என்றே கூறவேண்டும்.

இட்லரின் போர்முரசு

அதைக் கூறுவதற்கு முன்னர், அப்போர் பற்றிச் சில சொல்லுகிறேன்.

பிரிட்டன், பிரான்சு போன்ற சில அய்ரோப்பிய நாடுகளில் வாழ்ந்தவர்கள், கடல் கடந்து சென்று இந்தியா, இலங்கை, இந்தோசீனா போன்ற பல நாடுகளை அடிமைப்படுத்தி ஆண்டுவந்தார்கள்.

அயல் நாடுகளை ஆளுவதில் பிரிட்டானியர் தட்டிக்கொண்டது பெரும்பங்கு.

டச்சுக்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் பிடித்துக்கொண்ட அளவு, ஜெர்மனியின் கைகளில் சிக்கவில்லை.

இதுபற்றி ஜெர்மானியருக்குக் 'காண்டு'; அழுக்காறு.

அய்ரோப்பியப் பேரரசுகளை உந்திய நாடு பிடிக்கும் போட்டியே முதல் உலகப் போரை வெடிக்க வைத்தது.

அப்போர் நான்கு ஆண்டுகள்வரை நீடித்து, கோடிக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டது.

கணக்கிட முடியாத பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியது.

ஆனால் அப்போரால், மக்கள் இனத்தின் சிக்கல் ஏதும் தீர்க்கப்படவில்லை.

அதன் குறிப்பிடத்தக்க விளைவுகள் இரண்டே.

ஒன்று 'ஜார்' ஆண்ட இரஷ்யாவில், 1917ஆம் ஆண்டில், அக்டோபர் புரட்சி வெடித்து, வெற்றிபெற்று, புதிய சோவியத் சமதர்ம பாட்டாளி ஆட்சிமுறை உருவானது.

மற்றொன்று ஜெர்மனியில் மன்னர் ஆட்சி வீழ்ந்து; பின்னர் மக்களின் பேரால் வளர்ந்த ஆதிக்க ஆட்சி.

இட்லர் மக்களிடம் இனவெறியை ஊட்டி வளர்த்தார்.

'ஜெர்மானியர் ஆளப் பிறந்தவர்கள்; உலகம் முழுவதையும் கட்டியாளப் பிறந்தவர்கள். மற்றவர்கள் கைகட்டி உழைத்து வாழப் பிறந்தவர்கள்.

'அவ்வரலாற்றுக் கடமையை ஆற்ற, ஜெர்மானியர் ஆயத்தமாக வேண்டும்; தேவையான படைப் பயிற்சியைப் பெறவேண்டும்; கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'தலைவனைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றப் பழகிக்கொள்ள வேண்டும்' தேவையான படைப் பயிற்சியைப் பெறவேண்டும்; என்பதாக, பல்லாண்டு பறைசாற்றினார்.

மக்கள் உள்ளங்களில் போர் வெறியை வளர்த்தார். ஆட்சியைக் கைப்பற்றி ஜெர்மானியருக்குப் போதுமான கடுமையான பயிற்சி கொடுத்தபிறகு, இரண்டாவது உலகப் போரில் குதித்தார்.

இட்லரும் தமக்குச் சில கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டார்.

இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும், ஜப்பானியத் தலைவர் டோஜோவும் மண்ணாசை உந்தப், போர் வெறி கொண்டு இட்லரின் சதியில் சேர்ந்தார்கள்.

மூவரும் உலகம் முழுவதையும் வென்று, தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்வது என்று ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

அவர்களுடைய உலகளாவிய போர்த்திட்டப்படி சர்வாதிகாரி இட்லர் போர்முரசு கொட்டினார்.

செக்கோஸ்லாவியாவைப் பிடித்தார். பெல்ஜியத்தைப் பிடித்தார்; பிரான்சைப் பணிய வைத்தார். பிரிட்டனைத் தாக்கினார்; நினைத்தபடி பிடிக்க முடியவில்லை.

பிரிட்டானியர், இட்லருக்கு ஈடுகொடுத்துப் போராடினர். அப்பகுதியில் போர் நீண்டது.

இட்லர் வேறு சில அய்ரோப்பிய நாடுகளைப் பிடித்துவிட்டு, சோவியத் நாட்டைத் திடீர் என்று தாக்கினார்.

முன் அறிவிப்பின்றித் தாக்கினார்; சோவியத் நாட்டோடு செய்து கொண்டிருந்த அமைதி உடன்படிக்கையை உதறிவிட்டுத் திடீரெனத் தாக்கினார்.

தனது படைகளில் சிறந்தவற்றைச் சோவியத் நாட்டைப் பிடிக்க அனுப்பினார். மிக அதிகப்படியான, பல்வகைப் படைகளையும் சோவியத் நாட்டின் மேல் முடுக்கிவிட்டார்.

ஆறு வாரங்களில் சோவியத் நாட்டைப் பிடித்துவிடலாம் என்று மனப்பால் குடித்தார்.

அது பலிக்கவில்லை.

ஆயத்தமாயிராத போதிலும் சோவியத் மக்கள் துணிந்து நின்றார்கள்; கூடி எதிர் நின்று போராடினார்கள்.

நான்கு ஆண்டுகள் போராடினார்கள்.

ஈராயிரம் மைல் நீளக் களங்களில் போராடி வென்றார்கள்.

சோவியத் நாட்டை வென்றுவிடலாம் என்று கனாக்கண்ட இட்லர், பிறகு பெர்சியா வழியாக, இந்தியாவை நோக்கிப் பாய்வதற்காகத் திட்டத்தைத் தீட்டிக் கொடுத்திருந்தார்.

இந்திய நாடு, ஆங்கில ஆட்சிப் பிடியில் இருந்து, ஜெர்மானியப் பிடிக்குள் வரும் என்று இட்லர் கனவு கண்டார்.

ஆங்கிலேயர் மேல் கொண்டிருந்த ஆத்திரத்தில் அப்படியாவது நடந்து தொலையட்டும் என்று எண்ணிய இந்தியர்களும் இருந்தார்கள்.

கிழக்கே, டோஜோவின் தலைமையில் இயங்கிய ஜப்பானியர் மஞ்சூரியாவைப் படையெடுத்துப் பிடித்தார்கள்.

தாய்லாந்து, கம்போடியா, மலேசியா போன்ற நாடுகளைப் பிடித்து முன்னேறி இந்திய மண்ணையும் பிடித்துக் கொள்வார்கள் என்ற அச்சம் தலைகாட்டிற்று.

எனவே, சென்னை போன்ற பெருநகரங்களில், 'விமானத் தாக்குதல் பாதுகாப்பு' முறை மேற்கொள்ளப்பட்டது.

ஆங்காங்கே, நிலத்தடியில் பதுங்கும் கூடங்கள் கட்டப்பட்டன.

பொதுமக்கள், எப்போது அவற்றிற்குள் பதுங்கிக் கொள்ள வேண்டும். எப்படிப் பதுங்கி இருக்கவேண்டும்; எந்த அடையாளம் கிடைத்தால், அங்கிருந்து வெளியே வரலாம்.

இத்தகைய தகவல்களைப் பள்ளிச் சிறுவர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவருக்கும் தெரிவிக்கவும் அவற்றிற்கான பயிற்சிகளைக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

109. பேச்சாளனானேன்

பாதுகாப்பு அணி

விமானத் தாக்குதலின்போது, பொதுமக்களைப் பாதுகாக்கும் முறைகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, ஒரு தனி அணி உருவாக்கப்பட்டது.

அதில் சேர்ந்தவர்கள், பெரும்பாலும் வெவ்வேறு முழுநேர அலுவல்களில் இருந்தவர்கள்.

இளமையோடு இருந்த அரசு ஊழியர்கள், அதில் சேரவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி நானும் நடந்து கொண்டேன்.

தஞ்சையிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்த நான் மீண்டும் மாமனார் திரு. சுப்பிரமணியம் குடும்பத்தில் ஒருவனாகி விட்டேன். குத்தூசி குருசாமியாரின் குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்தேன்.

அவர்கள் வீடு திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் இருந்தது; முந்நூற்று நான்காம் எண்; வசதியான வீடு.

அவ்வீட்டில் குடியிருந்த குத்தூசியாரும் நானும் விமானத் தாக்குதல் பாதுகாப்பு அணியில் சேர்ந்தோம்.

அதை எங்கள் சமுதாயக் கடமையாக முழு மனத்துடன் கருதினோம்.

நான், அறுவர் கொண்ட சிற்றணிக்குத் தலைவன். குருசாமியார் மூன்று சிற்றணிகளுக்கு மேலாளர்.

பொதுமக்களைக் கலவரப்படுத்தாமல், ஆங்காங்கே அருகில் இருந்த, பதுங்குமிடங்களில் ஒதுங்க வைப்பது அணியின் முதற் கடமை.

எங்காவது தீவிபத்தோ, காயம் படுதலோ, நிகழ்ந்துவிட்டால், உரியவர்களுக்குத் தகவல் கொடுப்பதோடு, முதல் உதவி செய்யும் அணியினருக்கு அவற்றை உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

எனவே, அந்த அணிப்பயிற்சியில் முதல் உதவிப் பயிற்சியும் சேர்ந்திருந்தது. எல்லாப் பயிற்சிகளையும் வெற்றிகரமாகப் பெற்றேன்; நல்ல மாணவனாகவே தேர்ச்சி பெற்றேன்.

முதல் உதவிப் பயிற்சி கொடுத்தவர் ஒரு பள்ளி ஆசிரியர்; என் அளவு படித்தவர் அல்லர். எனினும் அத்துறையில் அனுபவம் உள்ளவர்; பழுத்த பழம்.

அவரிடம் பாடம் கேட்க நேரிட்டதைப் பற்றி எனக்கு வெட்கமோ, வேதனையோ பிறக்கவில்லை. அது பற்றி மனக்குறை சுரக்கவில்லை.

உலக வழக்கப்படி, ஆய்வாளருக்கு மட்டம் இளநிலை ஆசிரியர். அவரிடமும் கூச்சமின்றிப் பயிற்சி பெற்றது, என்னிடம் நல்ல உணர்வு வளர்ந்தது.

என்னை அறியாமலே, அப்போக்கு வளர்ந்தது.

அப்போக்கு என்ன?

எல்லா நிலையினருக்கும் செவிசாய்த்தல்; எல்லோரிடமும் ஏதாவதொன்றைக் கற்றுக்கொள்ள முயலுதல்.

இப்போக்கே, எனக்குப் பிற்காலத்தில் பெருந்துணையாக நிற்கும் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

''எல்லாம் அறிந்தவர் இல்லை; யாதும் அறியாதவரும் இல்லை; எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது'' என்ற தெளிவைப் பெற்று, பல நிலையினருடன் தோழமையோடு பழகக் கற்றுக் கொண்டேன்.

விமானத் தாக்குதல் இல்லாதபோதுகூட, சிலவேளை, அது பற்றிய ஒத்திகை பார்க்க வைத்தார்கள்.

அவ்வேளைகளில் எனக்கு ஒதுக்கப்பட்ட நாலைந்து தெருக்களில், பதுங்கும் ஒத்திகை முதல்தரமாக இருப்பதாக மேற்பார்வையாளர்கள் மதிப்பிட்டனர்.

படிக்காத சாமான்யர்களும் எனக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தது எதனால்?

'கீழோராயினும் தாழ உரை' என்பதை நான் பின்பற்றியதால்.

அப்பண்பு அன்றே என் மூச்சாகிவிட்டது. அது எப்படி?

அதற்குள்ளேயே, நான் முதிர்ந்த சமத்துவவாதியாகி, வளர்ந்து விட்டேன்.

பாதுகாப்பு அணியில் சேருவதற்கு முன்பு நான் ஆற்றிய உரைகளோ, பெரும்பாலும் ஆசிரியர்களின் நடுவில்.

அவர்கள் எதிர்பார்ப்பது எதை? தங்கு தடையற்ற பேச்சை.

நான் பல தலைசிறந்த பேச்சாளர்களின் உரைகளைக் கேட்டதால், என்னாலும் திணறாமல் பேச முடிந்தது.

தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும்படி, பொதுமக்களைப் பக்குவப்படுத்தவும் பள்ளிச் சிறுவர் சிறுமியர்களைப் பக்குவப் படுத்தவும் அருவிபோல் சொற்களைக் கொட்டுவது பயன் தராது என்பது வெளிப்படை.

புதிய பாணி

ஆகவே, என் பேச்சில் மாற்றுமுறை காணவேண்டிய தேவை ஏற்பட்டது.

அந்த நெருக்கடியில், புதுப்பாணி ஒன்றைக் கையாண்டேன். சிறுசிறு சொற்களைக் கொண்டே - சிற்றொடர்களைக் கொண்டே கேள்வி கேட்டல்; பதில்களை வரவழைத்தல்.

பிற பிள்ளைகளிடம் வேறு பதில்களைத் தூண்டுதல்.

அவற்றில் எது சிறந்தது என்பதை அவர்களே உணரச் செய்தல்.

இப்படிக் கேள்வி பதில்கள் வாயிலாக வலியுறுத்த வேண்டிய வழிமுறைகளை மாணாக்கர் உள்ளங்களில் வைத்தல்.

இத்தகைய கலந்து உரையாடல் பாணியை வெள்ளோட்டம் பார்த்தேன்.

சிறுவர்கள் புரிந்து கொள்வது, நிறைவு கொள்வது, தெரிந்தது.

அந்த முறையில் தொடர்ந்தேன். சென்னை மாநகர இளங் குருத்துகளின் உள்ளங்களைக் கவர்ந்தேன்.

பொதுமக்கள் என்னைப் பற்றிப் பேசத் தலைப்பட்டார்கள். என் உரைகளை மிக ஆவலுடன் கேட்க வந்தார்கள்.

அப்படியா! அப்போதே பொதுமக்களிடம் பேசும் வாய்ப்புகள் கிட்டினவா என்று வியக்காதீர்கள்.

போர் ஆதரவுக் குழு

அக்காலத்தில் ஒவ்வோர் நகரிலும் மாவட்டத்திலும் 'போர் ஆதரவுக் குழு' அமைக்கப்பட்டது.

அவற்றின் சார்பில், பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பிரிட்டானியக் கூட்டணியினர் போரில் ஏன் வெற்றிபெற வேண்டும் என்று விளக்கப்பட்டன.

அவ்வெற்றிக்குப் பொதுமக்கள் எவ்வெவ் வகையில் உதவலாம் என்று எடுத்து உரைக்கப்பட்டது.

நுகர் பொருள்களை எவரும் அளவிற்குமேல் சேர்த்து வைக்கக்கூடாது; வணிகர்கள் பொருள்களைப் பதுக்கி வைத்தல் ஆகாது; மக்கள் பீதி கொள்ளக்கூடாது என்பவைகளும் அறிவுறுத்தப்பட்டன.

சிற்சில பேச்சாளர்கள் மாறுபட்ட கருத்துடைய உள்ளூர் அரசியல்வாதிகளைத் தாக்கி நீட்டும் நிலைக்குத் தாழ்ந்து போனார்கள். என்றாலும், மொத்தத்தில் மக்களுக்குப் பயன்படும் வகையில், சென்னை மாநில 'போர் ஆதரவுப் பேச்சுகள்' இருந்தன என்று சொல்லலாம்.

சென்னை மாநகரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் திருவாளர்கள் ஆல்பர்ட் ஜேசுதாசன், பாசுதேவ், என்.சங்கரன் ஆகியோர் பேச்சாளர்களில் முன்னணியில் இருந்தார்கள். அவர்கள் சென்னையில் புகழ் பெற்றவர்கள்.

குத்தூசி குருசாமியும் அவரது துணைவியார் குஞ்சிதமும் அடிக்கடி கூட்டங்களில் பேசுவார்கள்.

அவர்களோடு, மாநகராட்சி, தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. கே. கல்யாணசுந்தரம் என்பவர் அடிக்கடி செல்வார்; மேடைகளில் பேசுவார்.

அவர் இருந்த ஆசிரிய மையக்கூட்டத்தில் நான் ஒரு முறை பேசினேன்.

அவ்வுரை அவரை ஈர்த்ததாம். எனவே, என்னை, போராதரவுப் பொதுக்கூட்டங்களுக்கு அழைக்கலாம் என்று, அவர், மேற்படி பெரியவர்களிடம் பரிந்துரை செய்தாராம்.

அவர்கள் உடனே செயல்பட்டார்கள்.

பொதுமேடையிலும் பேசினேன்

ஒரு நாள் மாலை ஜேசுதாஸ் என்னைத் தேடி வந்தார்; பொதுமேடைப் பேச்சுகளில் கலந்துகொள்ள அழைத்தார்.

நான் உடனே ஒப்புக் கொண்டேன்.

எதனால்?

அரசு ஊழியனின் கடமைகளில் ஒன்று, போராதரவு முயற்சி என்பதால் அல்ல. போராதரவு என் நம்பிக்கைக்கு ஒட்டியதாக இருந்தது.

'கெட்டபோரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காட்டிய வழி, எனக்கு மிகவும் பிடித்தமானது.

அதுவே அன்றும் இன்றும் எனது வாழ்க்கையின் குறிக்கோள்.

எனினும், அன்றையச் சூழலில், இருக்கிற பிரிட்டானியப் பேரரசு அழிந்து, புதிய ஜெர்மானியப் பேரரசு உருவானால் அது, இரும்பு விலங்கைக் கழற்றிவிட்டு, எஃகு விலங்கை வாங்கி மாட்டிக் கொண்டதாகவே முடியும்.

இந்தியாவின் விடுதலை தள்ளிப் போகும் என்பது என் கருத்து.

மக்கள் ஆட்சிக் கொள்கைக்காகப் போராடுவதாக, உதட்டள விலாவது சொல்லும் பிரிட்டானியர் கொடுக்க முன் வராத, ஆட்சி உரிமையை, -

'நாங்கள் மற்றவர்களை அடக்கி ஆளப் பிறந்துள்ளோம்' என்று நினைக்கும், சொல்லும் ஜெர்மானிய இன வெறியர்கள், எளிதில் கொடுத்துவிடுவார்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை.

இந்தியாவிற்குப் புதிய அயல்நாட்டு எசமானர்கள் வந்துவிடக் கூடாது என்பது என் விருப்பம்.

எனவே, நான் உளமாரப் போர் ஆதரவுப் பணியில் தீவிரமாக ஈடுபடும் நிலையில் இருந்தேன். அழைப்பினைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டேன்.

சில நாள்கள் சென்றன வேண்டிய முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு அன்பர்கள் வந்தார்கள்.

என்னைப் பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

சென்னையில் ஏழைகள் குடியிருக்கும் பல பகுதிகளில் நான் பேச நேர்ந்தது.

அரசியல் பேச்சாளர்கள், காங்கிரசைத் தாக்குவார்கள்.

என் பேச்சில் எவரையும் தாக்க மாட்டேன்.

போர் பற்றி நான் புரிந்து கொண்டதை, மக்களுக்கு எடுத்துரைப்பதோடு நிறுத்திக் கொள்வேன்.

என் பேச்சை வரவேற்றனர்

தொடக்கத்தில் என் பேச்சிற்கு வரவேற்பு அதிகம் இல்லை.

மெல்ல மெல்ல, என் அணுகுமுறை பலருக்கும் பிடித்து விட்டது.

அதனால், எனக்கு கிராக்கி அதிகம்.

என் நல்வாய்ப்பு அப்பெரியவர்கள் என்னிடம் அழுக்காறு கொள்ள வில்லை; என்னைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மாவட்டக் கல்வி அலுவலரின் எரிச்சல்

இதற்கிடையில் படைநல நிதி திரட்டும் முயற்சியொன்று சென்னையில் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது, 'சர்ஜன் ஜெனரலாக' இருந்த டாக்டர் செரியன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

திருமதி தாராசெரியன், திருமதி. மேரிகிளப்வாலா, திருமதி. கிருஷ்ணமூர்த்தி முதலிய பல பிரமுகர்கள் அக்குழுவில் உறுப்பினர்கள்.

இவர்கள், சென்னை, மலைச்சாலை, அரசினர் தோட்டத்தில் ஒரு கண்காட்சியை நடத்தினார்கள்.

அதில் நாள்தோறும் கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

கலை நிகழ்ச்சிகளில் ஒன்று, பொம்மலாட்டம். 'அல்லாவுதினும் அற்புத விளக்கும்' என்னும் அரபுக் கதையைப் பொம்மலாட்டதின் வழியாகக் காட்டினார்கள். அது ஒவ்வோர் மாலையும் நடந்தது. மாலை தோறும் இரண்டு மூன்று காட்சிகள் நடக்கும்.

அப்பொம்மலாட்டத்தின்போது உடனுக்கு உடன் கதையைத் தமிழில் சொல்லக்கூடிய ஒருவர் வேண்டும்.

இந்தப் பணிக்குப் பெரியவர்கள், என்னை நினைத்தார்கள்.டாக்டர் செரியன் என்னை ஏற்றுக்கொண்டார்.

அப்போது பொதுக்கல்வி இயக்குநராக இருந்த சர் மெவரல் ஸ்டாதம், டாக்டர் செரியனின் நெருங்கிய நண்பர்.

எனவே, இயக்குநரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்; குறிப்பிட்ட பதினைந்து நாள்களும் மாலை நேரம் என்னை அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

இயக்குநர் மறுப்பாரா? மறுக்கவில்லை; உடனே இசைந்தார். என்னை அனுப்பிவைக்கும்படி, இயக்குநர், துணை இயக்குநர் முகமதுவிடம் கூறினார்.

அவர், சென்னை மாவட்டக் கல்வி அலுவலரிடம் தொலை பேசியில், வாய்வழி ஆணையிட்டார்.

அப்போதைய சென்னை மாவட்டத்திற்கு கல்வி அலுவலர் ஒருவரே.

அவர் எவர்?

முன்னர், செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அலுவலராக இருந்து, என்னை ஆதரித்த திரு. சச்சிதானந்தம் அவர்களே.

அவர் எனக்குச் சொல்லியனுப்பினார். 'ஏதோ, என்னவோ' என்ற அச்சத்தோடு அவரிடம் சென்றேன்.

''உங்களுக்கு டாக்டர் செரியனைத் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியாது'' என்றேன்.

அவர் என் சொல்லை நம்பவில்லை என்பது அவர் முகத்தில் தெரிந்தது.

''டாக்டர் செரியனுக்கு நீங்கள் அறிமுகமாகாதவர் என்றால், உங்களைப் பெயர் சொல்லி - அதுவும் தலைப்பெழுத்துக்களையும் சொல்லி - பதினைந்து நாள்கள், மாலை நான்கு மணிக்கு வந்து உதவும்படி, இயக்குநரிடம் எப்படிக் கேட்டார்?'' என்று மடக்கினார்.

அது எனக்கும் புதிராகவே இருந்தது. திகைத்தேன். தழதழத்த குரலிலே,

''அய்யா! நான் தங்கள் நேரடி ஆணைக்கு உட்பட்டவன்; தாங்கள் போகச் சொன்னால் போகிறேன்; இல்லை என்றால், போகாமலிருந்து விடுகிறேன்'' என்று பணிவோடு கூறினேன்.

''சென்னையில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டுவிட்டு, உங்களைக் குறிப்பிட்டு, வரச் சொல்வானேன்? அத்தனை நாள்கள் நீங்கள் தொடர்ந்து சென்று கொண்டு இருந்தால் அலுவல் கெட்டுவிடுமே.

''அதைச் சொல்லி மறுத்தால், போர் ஆதரவு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுகிறேன், என்ற பழி வந்துவிடும்; மேலிடத்து ஆணையை நிறைவேற்றி விடுவதே நல்லது.

''அவர்கள் விரும்புகிறபடி நாள்தோறும் சென்று உதவுங்கள். ஆனால், உங்கள் அலுவலில் குறையோ, தவக்கமோ, ஏற்படக் கூடாது. அதை ஒழுங்காகச் சமாளித்துக்கொண்டு, இப்பணியையும் செய்யுங்கள்'' என்றார்.

என்னை அழைத்ததைப் பற்றி என் மேலதிகாரி ஏன் அவ்வளவு எரிச்சல் கொண்டார் என்பது எனக்கு விளங்கவில்லை. விளங்காத பலவற்றோடு வாழ்ந்து ஆகவேண்டுமே!

அதற்கு முதற் பயிற்சிபோல் அது அமைந்தது.

குறிப்பிட்ட நாள்களில், நான் கலைக்கூடம் சென்றேன். பொம்மலாட்டத்திற்கு விளக்கம் கூறினேன்; புதுத்திறமை ஒன்றைப் பெற்றேன்.

அப்பணிக்குச் சென்றபோது, முதல்நாள் அன்றே சிற்றுண்டி அருந்த 'காசுச்சீட்டுகள்' கொடுத்தார்கள்.

பொருட்காட்சிச் சாலைக்குள் செயல்பட்ட சிற்றுண்டிச் சாலையில், சீட்டுகளைக் கொடுத்துவிட்டு, வேண்டியதை வாங்கி உண்ணலாம்.

இப்படிச் சொல்லி என்னிடம் ஒரு கட்டுக் காசுச் சீட்டுகளைக் கொடுத்தார்கள்.

மரியாதைக்காக அதைப் பெற்றுக் கொண்டேன்; ஆனால் பயன்படுத்தவில்லை. காட்சியின் இறுதிநாள் அக்கட்டுகளை உரியவரிடம் கொடுத்தேன்.

இரு கப் காப்பிகளுக்கு மட்டுமே சீட்டுகளைப் பயன்படுத்தியதைக் கண்டு அவர் திகைத்தார்.

''உங்கள் செலவில் இப்பணியைச் செய்ய வேண்டுமா? ஏன் இப்படிக் கூச்சப்படுகிறீர்கள்?'' என்று உரிமையோடு கேட்டார்.

பலவேளை, பேசாமல் இருப்பது நல்லது. அவ்வேளை, அவ்வழியைப் பின்பற்றினேன்.

இதற்கிடையில், ஒருநாள் பொருட்காட்சிக்கு வந்த திரு. ஜேசுதாசன் என்னோடு கலகலப்பாகப் பேசினார்.

அப்போது, தாமே என் பெயரை, தமது மைத்துனர் டாக்டர் செரியனிடம் சொல்லியதாகக் கூறினார். அப்போதுதான் எனக்குப் புதிர் புரிந்தது.

அதை என் மேலதிகாரியிடம் சொல்லி நிறைவு கொண்டேன்.

110. பலரின் எரிச்சல்

மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு விளம்பரம்

சென்னை, தெற்குப் பகுதியின் இளந்துணை ஆய்வாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது, எதிர்பார்த்த விளம்பரம் வந்தது; எதிர்பாராத விளம்பரம் ஒன்றும் வந்தது.

முந்தையது என்ன?

மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, எம்.ஏ, எல்.டி. பட்டங்கள் பெற்ற, பார்ப்பனரல்லாத இந்துக்கள் மனுச் செய்யலாம் என்று விளம்பரம் வெளியாயிற்று.

மனுதாரர், முப்பது வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனை.

நேரடித் தேர்வுக்கு வருவோர்; ஏற்கெனவே, எந்த அரசுப் பதவியிலும் நிரந்தரமானவராக இருத்தல் ஆகாது என்பது மற்றோர் நிபந்தனை.

இப்படியொரு விளம்பரம் வந்தது.

எனக்கு, பட்டத் தகுதியிருந்தது; வயதுத் தகுதியும் இருந்தது. மூன்றாவது தகுதி, தற்செயலாக, திரு வரதாச்சாரி புண்ணியத்தால் கிட்டியது.

என் முறைக்கு வந்த பிறகு இளந்துணை ஆய்வாளர் பதவிகள் காலியானபோது எல்லாம் உடனுக்குடன் நிரப்பாமல் அவர் தட்டிக் கழித்தார்.

உடனுக்குடன் நிரப்பி இருந்தால் என்னுடைய 'பிரபேசன்' முடிந்திருக்கும்; மாவட்டக்கல்வி அலுவலர் பதவிக்குத் தகுதியற்றவனாகி இருப்பேன்.

வேண்டுமென்றே, பதவிகளைக் காலியாக வைத்திருந்து என்னை ஒதுக்கி வைத்தது, எண்ணாமற் செய்த பேருதவியாக அமைந்தது.

பிறர் செய்யும் தீங்கும் சிலவேளை நல்லதாக முடியலாம் என்ற பாடத்தை அப்போது கற்றேன்.

அதை எண்ணிப் பிற்காலத்தில் அவ்வப்போது, பலர் செய்த தீங்குகளைப் பற்றிக் குமைவதைத் தள்ளிவிட்டேன்.

இரண்டாவது விளம்பரம் எதுபற்றி?

கல்லூரி விரவுரையாளர் பதவிபற்றி. அப்பதவியும் அம்முறை, பார்ப்பனர் அல்லாத இந்துக்கு உரியது.

படிப்பு, வயது, நிலையான அரசு ஊழியத்தில் இல்லாமை போன்ற தகுதிகள் எனக்கு இருந்தன.

முந்தைய பதவிக்கு மாதச் சம்பளம் 190 ரூபாய். பிந்தியதற்கு 100 ரூபாய். இரண்டிற்கும் மனுப்போட்டேன்.

விண்ணப்பம் செய்வோர், அண்மைக் காலச் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

என்னோடு, மாநிலக் கல்லூரியில் பொருளியல் (சிறப்பு) பாடம் படித்துக் கொண்டிருந்த, என் நெருங்கிய நண்பர் திரு. அகாஇலாலி என்பவர், அய்.சி.எஸ். தேர்வு பெற்றுப் புதுதில்லியில் இந்திய அரசின் செயலகத்தில் பணி ஆற்றிக்கொண்டு இருந்தார்.

அவருக்குக் கடிதம் எழுதிச் சான்று இதழ் கேட்டிருந்தேன்.

அவர், உடனே, அனுப்பி வைத்தார். அது பயன்பட்டது.

தில்லிக் கருத்தரங்கு

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அதே, அகா இலாலி, தில்லியில் பாகிஸ்தானின் தூதுவராக அமர்ந்திருந்தார்.

அப்போது, 'அனைத்து ஆசியா முழுமைக்குமான கல்வித் திட்டக் கருத்தரங்கு' தில்லியில் நடந்தது.

இருபத்தொன்பது நாள்கள் நடந்த அக்கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்றது யார்? எளியேன்.

எப்படிக் கிடைத்தது அந்த பெறற்கு அரிய வாய்ப்பு?

பிரதமர் நேருவின் கைப்பட, இந்தியத் தூதுக்குழுவின் தலைவராக என்னை எழுதியதால் அவ்வாய்ப்புக் கிட்டியது.

அதைப் பற்றி உரிய இடத்தில் விரிவாக எழுதுவேன்.

இப்போது குறிப்பிட விரும்புவது, அந்தக் கருத்தரங்கிற்குச் சென்றபோது, என் மனைவி காந்தம்மாவை உடன் அழைத்துச் சென்றேன்.

தூதுவர் அகாஇலாலியும் அவர் மனைவியும் எங்கள் அழைப்பைப் பொருட்படுத்தி, நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு வந்து, காலைச் சிற்றுண்டி அருந்திச் சென்றார்கள்.

முன்கூட்டியே சொல்லி வைத்து, மசால் தோசையை உண்டு மகிழ்ந்தனர்.

அப்போது அவரிடமிருந்து தெரிந்துகொண்ட ஒரு தகவல், புல்லரிக்கச் செய்தது. அது என்ன? பாகிஸ்தான் பிரிந்து போய் கராச்சியில் புது ஆட்சி அமைத்தபோது, போதிய இடவசதி இருந்ததா? இல்லையாம்.

உட்கார நாற்காலிகள் இருந்தனவா? அவற்றிற்கும் கடுமையான பற்றாக் குறையாம்; பெரிய அதிகாரிகள் கூடப் பெட்டிகளின்மேல் உட்கார்ந்து, மற்றோர் பெட்டியின்மேல் வைத்து எழுதினார்களாம். அப்படியல்லவா நாட்டுப்பற்றுச் செயல்பட வேண்டும்?

இருபதாண்டுப் பாய்ச்சலில் இருந்து திரும்புவோம்.

அதிகாரிகளுக்கு எரிச்சல்

நான் பெரிய பதவிகளுக்கு மனுப்போட்டதே பலருடைய எரிச்சலைக் கிளப்பிற்று.

சிலர் மட்டந்தட்டத் துடித்தார்கள். வாய்ப்புப் பொத்தென்று வீழ்ந்தது.

எப்படி?

இரண்டாம் உலகப்போர் முற்றியபோது, சப்பானியர் மளமளவென்று கிழக் கித்திய நாடுகள் சிலவற்றைப் பிடித்துக் கொண்டனர்.

பர்மா அவர்கள் கைவசமாயிற்று. அங்கு இருந்த இந்தியர்கள் அகதிகளாகத் தப்பி வந்தனர்.

பர்மாவைப் பிடித்துக்கொண்ட சப்பானியரால் இந்தியா தாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்நிலையில், சென்னை மாநகரில் இருந்த பல அரசு அலுவலகங்கள் சென்னைக்கு வெகுதொலைவில் உள்ள ஊர்களுக்கு மாற்றப்பட்டன.

சென்னையிலுள்ள கல்வி நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன.

அந்நிலையில் சென்னையில் பள்ளி ஆய்வாளர்கள் இருக்கத் தேவையில்லை.

இளந்துணை ஆய்வாளனாகிய என்னை மதுரை மாவட்டம் பெரியகுளத்திற்கு மாற்றியிருப்பதாக மதுரை மண்டல ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து ஆணை ஒன்று பறந்து வந்தது.

இருபத்திநான்கு மணிகளில், அம்மாறுதல் நடைமுறைக்கு வரவேண்டும் என்று கண்டிப்பான கட்டளை அது.

இந்த ஆணை என் கைக்குக் கிட்டுவதற்கு முன்பே, மற்றோர் ஆணை விரைந்து வந்தது.

மாற்றல் நிறுத்தப்பட்டது

மாறுதல் ஆணையை அப்போதைக்கு நிறுத்தி வைப்பதாகப் பொதுக்கல்வி இயக்குநர் ஆணை பிறப்பித்தார்.

ஏன் அப்படிச் செய்தார்?

'விமானத் தாக்குதல் பாதுகாப்புப் பணியில், அதைப் போன்ற சில போர் ஆதரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்களைச் சென்னையிலிருந்து மாற்றக்கூடாதென்று உயர்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாம்.

அதை உடனே நடைமுறைப்படுத்தும் துடிப்பில் இயக்குநர், மண்டல ஆய்வாளரின் ஆணையை நிறுத்தினார்.

அக்காரணம், மதுரையிலிருந்தவருக்குத் தெரியப் பல நாள்கள் ஆயின.

அதுவரை, நான், என் செல்வாக்கைப் பயன்படுத்தி, பெரியகுளத்திற்கு மாற்றியதைத் தடுத்துவிட்டேன் என்று அவர் பொருமினார்.

என் வேலை பற்றித் தேவையற்ற காரசாரமான கடிதங்கள் வந்தன. நானோ கிணற்றில் வீழ்ந்த கல்லாக இருந்தேன்.

சப்பானிய அச்சுறுத்தல் நெருங்கியபோது திருவல்லிக்கேணி போன்ற கடல் ஓரப் பகுதிகளில் இருந்த பல குடும்பங்கள், வெளியூர்களுக்குச் சென்றன.

பலர், பல்லாவரம் போன்ற பகுதிகளுக்குக் குடியேறிவிட்டனர்.

இந்திய அரசுப் பணியில் குருசாமி

அப்போது திரு. சா. குருசாமிக்கு இந்திய அரசின் வணிகத்துறை அமைச்சகத்தில் வேலை கிடைத்தது. எப்படி?

அவ்வமயம் இந்திய அரசின் வணிகத்துறை அமைச்சராகத் திரு. ஆற்காடு இராமசாமி முதலியார் இருந்தார். அவருக்குக், குருசாமியை நன்றாகத் தெரியும்.

சமயக் கருத்துகளில் இருவருக்கும் மாறுபாடு உண்டு. எனினும் அவருக்குக், குருசாமியின் எழுத்தாற்றல், செயல்திறன், நேர்மை, நாணயம், சலியாத உழைப்பு ஆகியவை தெரியும்.

எனவே, தமது அமைச்சகத்திற்குத் தற்காலிகமாக மாற்றிக் கொடுக்கும்படி குருசாமியை, பெயர் சொல்லி சென்னை மாகாண ஆட்சிக்கு எழுதினார்.

அந்த அழைப்பை மறுக்கமுடியாது குருசாமி, இந்திய அரசின் அமைச்சகத்திற்கு மாறிப்போனார்.

சிவசாமி அய்யர் பள்ளியில் வேலைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் திருமதி. குஞ்சிதம் குருசாமி, மாநகராட்சி உயர்தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியை பதவியைப் பெற்றார்.

அம்மையார், நீண்ட விடுப்பு போட்டுவிட்டுக் கணவர் குருசாமியோடு தில்லிக்குச் சென்றுவிட்டார்.

அந்நிலையில், எனக்குப் பெரியகுளத்திற்கு மாற்றும் ஆணை வந்ததால், சில மணிகள் வரை என் வீட்டில் உள்ளோர் மகிழ்ந்தார்கள்.

'குண்டு போடும் நெருக்கடி நகரத்தில இருந்து விலகி இருக்கலாம்' என்று எதிர்பார்த்தார்கள்.

மாறுதலை நிறுத்தி வைத்த ஆணை வந்ததைப் பற்றி வீட்டில் மூத்தவர்களுக்கு வருத்தம்.

அதை மென்று விழுங்கிக் கொண்டு சென்னையிலேயே சற்று எட்டிப்போய் விடவிரும்பினார்கள்.

தியாகராயநகரில், பாண்டி பஜாருக்கு அருகில், மின் நிலையத்திற்கு எதிரில், ஒரு வீடு காலியாயிற்று.

திருவல்லிக்கேணி வீட்டைக் காலி செய்துவிட்டு, அங்குக் குடியேறினோம்.

அப்போது வீட்டுப் பொருள்கள் பலவற்றை மூட்டைகட்டி, மதுராந்தகத்திற்கு அப்பால் உள்ள, புலம்பாக்கம் திரு. முத்துமல்லா என்பவர் வீட்டிற்கு, பாதுகாப்பிற்காக அனுப்பி வைத்தோம்.

குண்டு வீழுமோவென்று அஞ்சிக் கிடந்தபோது அழைப்பு வந்தது.

பேட்டிக்குச் சென்றேன்

விரிவுரையாளர் பதவிக்குப் பேட்டிகாண அழைக்கப்பட்டேன்.

அரசு ஊழியர்களைப் பொறுக்கும் குழு பேட்டி கண்டது.

பேட்டிக்காக, பதினைந்து பேர்களுக்கு மேல் காத்திருந்தோம்.

முன்பின் தெரியாதிருந்தும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டோம்.

பேட்டிக்கு முன்னரே, எனக்கு ஒன்று வெளிச்சமாயிற்று.

அது என்ன?

படிப்புத் தகுதியில் என்னைவிடத் தரமானவர்கள் எவரும் பேட்டிக்கு வரவில்லை; ஆனால் இரண்டொரு ஆண்டுகளாவது, கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக இருந்தோர் அய்ந்தாறு பேர்களுக்குமேல் இருப்பது புரிந்தது.

அந்நிலையில், விரிவுரையாளர் பதவி எனக்குக் கிடைப்பது அரிது, என்றும் தெளிவாகத் தோன்றிற்று.

எனினும் நான் மனந் தளரவில்லை.

இப்போது பெறும் பேட்டிப் பழக்கம் பின்னர் வரும் பேட்டிகளுக்கு ஒத்திகையாகப் பயன்படலாம் என்னும் எண்ணத்தில் மகிழ்ச்சியோடு பேட்டிக்குச் சென்றேன்.

111. மாவட்டக் கல்வி அலுவலருக்கான பேட்டி

விரிவுரையாளர் பதவிக்கு என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை.

நான் அதைவிடப் பெரியது ஒன்றை நினைத்துக் கொண்டிருந்தேன். எனவே அதிர்ச்சியடையவில்லை.

நாள்கள் சில கழிந்தன.

ஜப்பானியக் கப்பல் ஒன்று இந்தியாவை நெருங்கிற்று; வங்கக்கடலில் இருந்தபடி, அந்த நாள் சென்னை மாகாணத்தின் வடபகுதியில் இருந்த காகினாடா என்ற துறைமுகப் பட்டினத்தின்மேல் குண்டு வீசியது.

அச்செய்தியைக் கேட்ட, சென்னை மாநகர மக்கள் பதைத்தார்கள்.

அடுத்து, சென்னையின் மேல் பகைவர் குண்டு விழுமென்று அஞ்சினார்கள்.

அச்சம் கெளவிய அப்போது, விமானத் தாக்குதல் பாதுகாப்பு அணியைச் சேர்ந்தோர், அணியுடையில் மட்டுமே எப்போதும் வெளியே செல்ல வேண்டும் என்று அரசு அறிவித்தது.

எப்போதும் ஆயத்த நிலையில் இருக்கும்படி ஆணைஇட்டது.

அப்படி அரசு அறிவித்த அன்றே, மாவட்டக்கல்வி அலுவலருக்கான நேர்காணல் பேட்டி நடந்தது.

வெடிகுண்டை எதிர்பார்த்த நிலையில், இரும்புத் தொப்பியோடும் அரைக்கால் சட்டையோடும் பாதுகாப்பு அணி உடையில் பேட்டிக்குச் சென்றேன்.

காத்திருந்த இடத்தில், அறுவர் மட்டுமே இருந்தோம்.

அய்வர், ஆசிரியப் பணியில் இருந்தார்கள். நான் ஒருவனே வகுப்பு அறைகளுக்கு அப்பால், நிர்வாகப் பணியில் செயல்படுவேன்.

குண்டுவிழாமல் இருந்தால், நான் தேர்ந்து எடுக்கப்படுபவன் என்ற நம்பிக்கையோடு அமர்ந்திருந்தேன்.

அகர வரிசையில் அழைக்கப்பட்டோம். என் முறை வந்தது; உள்ளே நுழைந்தேன்; பொதுப்படையாக வணங்கினேன்; நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்கள்; இருந்தேன்.

அக்காலத்தில், அரசு ஊழியர்களைப் பொறுக்கும் ஆணையத்தில் மூவர் இருந்தனர். தலைவர், திரு. ஆல், அய்.சி. எஸ். உறுப்பினர்கள் இருவர். அவர்கள் பெயர் என்ன? திரு. எம். இரத்தினசாமி, திரு. அனந்தாச்சாரி.

திரு. ஆல், விமானப் பாதுகாப்பு அணியில் பெரிய பொறுப்பில் இருந்தார். மாவட்டக் கல்வி அலுவலரைத் தேர்ந்தெடுக்கும் பேட்டியின் போது அவர் வரவில்லை.

அதை உணர்ந்ததும் அவநம்பிக்கைக் கோடு மின்னிற்று.

அடுத்தநொடி, திரு. அனந்தாச்சாரி, கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

என்ன வேலையில் இருக்கிறேன்? அதற்கு முன்பு எப்பணிபுரிந்தேன்? அந்தந்த வேலைக்கான ஊதிய அளவு என்ன? இவை கேள்விகள்.

இவற்றிற்குப் பதில் சொல்லத் திறமையா வேண்டும்? உரிய பதிலை அமைதியாக உரைத்தேன்.

தாக்கும் கேள்வி

இமைப்பொழுதில், தாக்கும் கேள்விகள் வெடித்தன. தயக்கமின்றிப் பதில்களும் வெளிப்பட்டன.

''இளைஞரே! நீர் எவ்வளவு சிறியது கிடைத்தாலும் போதுமென்ற நிறைவு கொள்வீர் என்று தோன்றுகிறது. அப்படித்தானா?''

''உண்மையல்ல அய்யா.''

''பொருளியல் சிறப்புப் பட்டத்தில் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது இடத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்; இருப்பினும் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்திற்கு, 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராக ஒப்புக்கொண்டீர்.

''அதைவிட்ட பிறகும் திங்களுக்கு நாற்பத்தைந்தே கிடைக்கும் உதவிப் பஞ்சாயத்து அலுவலராக இசைகிறீர்.

''அதிலிருந்து மாறும்போதும் அய்ம்பது ரூபாய் ஊதியமே உள்ள, இளந்துணை ஆய்வாளர் பதவியை ஏற்றுக் கொள்கிறீர். உமக்குப் பெரியவற்றின் மேல் நாட்டம் இல்லை என்பதை இவை காட்டவில்லையா?''

''இம்மதிப்பீடு சரியல்ல; காலத்தை வீணாக்கக்கூடாது என்று அவ்வப்போதைய சூழ்நிலை கொடுக்கும் பதவியை ஏற்றுக்கொண்டாலும், அதுவே போதுமென்று இருக்க விரும்பாமல் அல்லவா அடுத்த வேலைகளுக்கு மாறிக்கொண்டே இருக்கிறேன்?''

''என்ன இருந்தாலும், நீர் மாதம் அய்ம்பது ரூபாய்களுக்குமேல் ஊதியம் பெற்றது இல்லையே?''

''கட்டை ஊதியம் என்பது உண்மை; நான் என்னுடைய வேலையின் நேர்த்திக்குத்தான் பொறுப்பு; நிறையச் சம்பளம் பெறாதது என் குற்றமல்ல; நல்ல சம்பளம் கொடுக்கத் தெரியாத இன்றைய சமுதாயத்தின் குற்றம்.''

இப்படிப் பதில் கூறுகையில், என் குரலில் பணிவு இல்லை. வெகுளி இருந்தது. கூறி முடித்ததும் அதை உணர்ந்தேன். நான் அமைதிப் படுவதற்கு முன், திரு. இரத்தினசாமி குறுக்கிட்டார்.

''மாவட்டக் கல்வி அலுவலர் பதவிக்கு உம்முடைய தனியான தகுதி ஏதேனும் உண்டா?'' என்று அவர் கேட்டார்.

அது, மூழ்கப் போகும் வேளை, தோணி கிடைத்ததுபோல் இருந்தது.

''நான் ஆய்வாளர் பதவியில்தான் இருக்கிறேன். அப்பதவியில் நீடிக்க, சில தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும்; அத்தேர்வுகளை விரைந்து முடித்து, வெற்றி பெற்றுள்ளேன்.''

''மேலும் மாவட்டக்கல்வி அலுவலருக்கான தேர்வுகளில் ஒன்றைத் தவிர மற்றவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளேன். இவ்வண்ணம் பெரிய பொறுப்புகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பது என் தனித்தகுதி'' என்றேன்.

''எத்தனை ஆண்டுகளாக, நீர் மக்களோடு தொடர்புடைய புறப்பணிகளைப் புரிந்து வருகிறீர்?''

''அய்ந்தாண்டுகளாக.''

''இந்தக் காலத்தில் எவரோடாகிலும் மோதிக் கொள்ள நேர்ந்ததா?''

''இல்லை''.

''அப்படியென்றால், மறறவாகளோடு ஒத்துழைத்து, மற்றவர்களையும் ஒத்து உழைக்கச் செய்து இயங்கி வந்துள்ளீர் எனலாம்?'' என்றார்.

''ஆம் அய்யா!'' என்றேன்.

திரு. இரத்தினசாமி மேற்கொண்டு ஏதும் கேட்கவில்லை.

தன் கையில் இருந்த கோப்பொன்றை அடுத்து அமர்ந்திருந்த, பொதுக்கல்வி இயக்குநர், திரு. மெவரல் ஸ்டேதம் அவர்களிடம் நீட்டினார்.

இயக்குநர், இரண்டொரு மணித்துளிகள் கோப்பைப் புரட்டினார். தாம் ஏதும் கேட்க விரும்பவில்லை என்றார்.

அது என் காதில் விழவும் என் நாடி நரம்புகள் தளர்ந்து விட்டன.

இயக்குநர் என்பால் சீற்றங்கொண்டு இருப்பார் என்று கருதினேன்.

திரு. அனந்தாச்சாரி மீண்டும் கேள்விகளைக் கேட்டார்.

''உமக்கு நிலபுலம் இருப்பதாகவும் அது அய்ம்பதாயிரம் ரூபாய்களுக்கு இருக்கலாமென்றும் மனுவில் குறித்திருக்கிறீர். அது குறைந்த மதிப்பீடாகத் தோன்றுகிறதே'' என்றார்.

''அதில் குறித்துள்ள நிலப்பரப்பு சரியானது. விலை மதிப்பு சரியாக இருக்குமென்று சொல்லமுடியாது. எங்கள் ஊரில் நிலத்தை விற்பதும் வாங்குவதும் அடிக்கடி நிகழ்வதில்லை. ஆகவே இப்போதைய மதிப்பீடு தெரியாது'' என்று பணிவோடு சொன்னேன்.

''ஓர் இலட்சத்திற்குக் குறையாது. உங்கள் பக்க நிலவரம் எனக்குத் தெரியும். நீ நினைத்துக் கொண்டிருப்பதைவிட, நீ அதிகப் பணக்காரன்'' என்றார். கேட்டு மகிழ்ந்தேன்.

வெளியே வரும்போது, பணியாளர் பொறுக்கு ஆணையகத்தில் அலுவலராக இருந்த திரு. டி.டி. அய்யாசாமியைக் காணும்படி நேர்ந்தது.

அவர் பேட்டி பற்றிக் கேட்டார்.

''அனந்தாச்சாரியின் கேள்விக்கு, எரிச்சல் ஒலியில் பதில் சொல்லிவிட்டேன்; இயக்குநர் கேள்வியே கேட்கவில்லை; சினங்கொண்டார் போலும். நான் தேர்ந்தெடுக்கப்படுவேனா என்பது கேள்விக்குறி; இருக்கிற வேலைக்கே இடையூறு வரக்கூடாதே என்று கலங்குகிறேன்'' என்று ஒப்பாரி வைத்தேன்.

''சிறிய வேலைக்கல்ல பேட்டி; பெரிய பதவிக்கே, மாவட்ட அலுவலர் பதவிக்கே உன்னைப் பேட்டி கண்டார்கள். மாவட்டப் பொறுப்பில், சில வேளை வெடுக்கென்று பதில் சொல்லியே, நிலைமையைச் சமாளிக்க நேரிடலாம். அது, உன்னால முடியுமா என்று அளக்க, எரிச்சலூட்டும் கேள்வியைக் கேட்டிருக்கலாம். உளந்தளரத் தேவையில்லை; நல்லது நடக்கட்டும்'' என்று ஆறுதல் கூறி அனுப்பினார்.

பேட்டிக்குப் பின், ஜப்பானியக் குண்டின்மேல் என் நினைவு பாய்ந்தது. அதே நினைப்பில் நாள் முழுவதும் கழிந்தது.

நல்ல வேளை, சென்னையின்மேல், அன்றோ பின்னரோ குண்டு விழவில்லை.

வெற்றி கிடைத்தது

குண்டு வெடிப்புப் பேச்சாளர் ஒருவர், மேற்கூறிய பேட்டிக்கு அடுத்த நாள் மாலை, தியாகராயநகரில் நான் தங்கியிருந்த பங்களாவிற்கு வந்தார்.

அவர் காரை விட்டு இறங்கியதும் என்னைக் கண்டு கொண்டார்.

''ஏன், ஐயா! நீ அதிருஷ்டசாலிதான். உன்னை மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுத்து விட்டார்களாமே! கேள்விப்பட்டேன். மிக்க மகிழ்ச்சி!

''உங்க அப்பாவைப்போல, சொன்ன சொல்லைக் காப்பாற்றுகிற ஒழுக்கமான அதிகாரியாக இருக்க வேண்டும்.

''கல்வித்துறை 'அவங்க' கையிலே; ஏமாந்தே, கவிழ்ந்துவிடுவே!'' இப்படி மடமடவென்று, உலாவியபடியே சொற்களைப் பொரிந்தார்.

அவருடைய உரத்த குரலைக் கேட்டு, பின் தோட்டத்தில் இருந்த என் மாமனார் விரைந்து வந்தார்.

நாற்காலி ஒன்றை இழுத்துப்போட்டு, உட்காரும்படி வந்த பெரியவரை வேண்டினார். 'காப்பி' கொண்டு வரட்டுமா என்று வேண்டினார். பெரியவர், அவற்றிற்குப் பதில் சொல்லவில்லை.

''உம்பாடு அதிருஷ்டம்; எங்க சாதிக்கு அதிருஷ்டம் இல்லை. உங்க மாப்பிள்ளை பெரிய பதவிக்குப் போகப் போகிறார். எங்க சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருந்தால், எங்களுக்குப் பெருமையாக இருந்திருக்கும். விரைந்து மயிலாப்பூர் போக வேண்டும்'' என்று சொல்லியபடியே வெளியே சென்று, தம்முடைய காரில் ஏறிப் போய்விட்டார்.

அப்பெரியவர் யார்? புகழ்பெற்ற சூணாம்பேட்டை ஜமீன்தார் திவான் பகதூர் அருணாசல முதலியார்.

112. என் மகிழ்ச்சிக்கு அளவேது?

வெற்றி உறதியாயிற்று

''சென்னையின்மேல் குண்டு விழுமோ! அது நான் இருக்கும் பக்கம் விழுமோ! எனக்கோ, என்னைச் சார்ந்தவர்களுக்கோ தீங்கு வராமல் இருக்க வேண்டுமே!''

இப்படி நினைத்துக் கொண்டிருந்த என்னிடம் ஒரு இனிக்கும் செய்தியை வலிய வந்து சொல்லிவிட்டுப் போனார் குறுநிலக்கிழார்.

அதை நம்ப விரும்பினேன்; அது மெய்யாவென்று தெரிந்து கொள்ளத் துடித்தேன். எவரிடம் கேட்பதென்று தெரியாது தவித்தேன்.

அடுத்த நாள் காலை, திரு. அய்யாசாமியைத் தேடிச் சென்றேன். முந்திய மாலை முதலியார் கூறியதைக் கூறி, ''உண்மையாக இருக்குமா'' என்று கேட்டேன்.

''உண்மையாக இருக்கட்டும்'' என்ற வாழ்த்தினாரேயொழிய வேறு குறிப்பு ஏதும் காட்டவில்லை. மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினேன்.

''தேர்ந்தெடுக்கப்பட்டேன்'' என்ற செய்தி உறுதிப்படவில்லை; மறுக்கப்படவும் இல்லை.

இப்படிச் சில நாள்கள் கழிந்தன.

ஒரு நாள் பேராசிரியர் இராமநாதன் பிள்ளை என்னைத் தேடி வந்தார். அப்போது நான் வீட்டில் இல்லை.

வீடு திரும்பியதும் தகவல் கிடைத்தது. அடுத்த கணமே பேராசிரியரைத் தேடிச் சென்றேன்; கண்டேன்.

''நான்கைந்து நாள்களுக்கு முன்பே, நல்ல செய்தி கேள்விப்பட்டேன். உடனே வந்து சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். நேரம் ஒழியவில்லை.

''இன்று காலை, கல்லூரிக்குப் போகும் வழியில் உங்கள் வீட்டிற்கு வந்தேன். நீங்கள் இல்லை. மற்று எவர் இடமும் சொல்ல வேண்டாம் என்று வந்துவிட்டேன்'' என்று பேச்சை நீட்டினார்.

''என்ன செய்தி அய்யா!'' என்ற ஆவல் பொங்கக் கேட்டேன்.

''உங்களை மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்'' என்று சொன்னார்.

''இது தங்கள் வாழ்த்தா? பலித்துவிட்ட விழைவா?'' என்று கேட்டேன்.

''அப்பதவிக்காகப் பேட்டி நடந்த அன்று மாலை, பொதுக்கல்வி இயக்குநர், துணை இயக்குநர் திரு. வி.ஆர். அரங்கநாத முதலியாரைக் கண்டாராம்.

''நம்மிடம் இளந்துணை ஆய்வாளனாகப் பணிபுரியும் ஒருவரை, இன்று மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்து எடுத்துள்ளோம். அவர் நல்ல பெயர் எடுப்பார் என்று எதிர்பார்க்கிறேன்'' என்று இயக்குநர் கூறினாராம்.

''முதலியார், வீடு திரும்பும்போது என்னிடம் வந்து, அந்தச் செய்தியைச் சொன்னார். சிறிது நேரத்தில், சூணாம்பேட்டை

ஜமீன்தாரை நான் காண நேர்ந்தது. கேள்விப்பட்ட செய்தியை என்னால் அடக்கி வைக்க முடியவில்லை. அவரிடம் சொல்லி விட்டேன்.

''உங்களவர் ஒருவர் மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்'' என்று அவரிடம் கூறினேன்.

''அவர் பெயரென்ன?'' என்று கேட்டார். உங்கள் பெயரைக் கேட்டதும்,

''அவனும் குருசாமியும் (குத்தூசியார்) சாதிவிட்டுப் போய்விட்டார்களே! எப்படி எங்களவர் ஆவார்கள் என்று சொன்னபோது, எனக்கு ஏமாற்றமாக இருந்தது'' என்று பேராசிரியர் இராமநாதன்பிள்ளை கூறினார்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு, அவர் கொடுத்த காப்பியை அருந்திவிட்டு, விடைபெற்றுக் கொண்டேன்.

இவர் தாவர இயல் பேராசிரியர். இவர் நீண்ட காலம் அரசின் கல்வித்துறையில் கல்லூரிப் பிரிவில் பணிபுரிந்தார். அரசுக் கல்லூரி முதல்வராக இருந்து ஓய்வு பெற்றபின் மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும், மயிலாடுதுறைக் கல்லூரியிலும் முதல்வராக நற்பணியாற்றினார். மயிலாடுதுறை ஆண்கள் கல்லூரி தொடங்கி நிலைபெற உறுதுணையாக இருந்தார். இவர் சில ஆண்டுகள் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் உதவித் துணைவேந்தராக இருந்தார். அதற்குமுன் பல ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்தார்.

இரண்டு வாரங்களுக்குமேல் ஓடிவிட்டன; கிணற்றில் கல் போட்டது போல் இருந்தது; மேற்கொண்டு எவ்விதத் தகவலும் இல்லை.

அந்நாள்களில், மூன்று நான்கு முறை திரு. அய்யாசாமியைப் பார்த்தேன்.

'தெரிந்தால், நானே வந்து சொல்லுகிறேன், சாமி! இதற்காக நீ எதற்கு அலைய வேண்டும்'' என்றார்.

கடைசிமுறை, போர்க்கால எச்சரிக்கையாகத் தெருவிளக்குகள் நிறுத்தப்பட்டிருந்த இரவு, வீட்டுச் சாளரங்களில் வெளிச்சம் வராதபடி அடைத்து இருந்தபோது, அய்யாசாமி பேசாமல், என் கையைப் பிடித்துக் குலுக்கினார்; வாய் திறக்கவில்லை.

குறிப்புத் தெரியாமல் குழப்பத்தோடு வீடு திரும்பினேன்.

அரசு ஆணை வந்தது

அடுத்த நாள் அலுவலகம் சென்றேன். அலுவலகம் பொதுக்கல்வி இயக்ககத்தின் ஓர் அறையில் இருந்தது.

அன்று வந்த அஞ்சலில் ஆணை ஒன்று இருந்தது. நெஞ்சம் படபடத்தது; படித்துப் பார்த்தேன்.

'உடல்நலச் சான்று இதழ்' பெற்று அனுப்பும்படி சென்னை மாகாண அரசுப் பணியாளர்கள் பொறுக்கு ஆணையகம் கட்டளை இட்டு இருந்தது.

அத்தகவலை என் மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யரிடம் கூறி, ஆணையைக் காட்டினேன்.

அவர் மகிழ்ந்தார். அடுத்து அறையில் இருந்த வடசென்னைப் பள்ளி ஆய்வாளர் திரு. ரெட்டியிடமும், மற்றோர் பக்க அறையில் இருந்த பெண்கள் தொடக்கப் பள்ளி ஆய்வாளர் செல்வி பாரிஜாதம் நாயுடுவிடமும் மகிழ்ச்சியோடு கூறினார்.

திரு. ரெட்டியும் செல்வி நாயுடுவும் பார்ப்பனரல்லாதார் என்பது வெளிப்படை. தத்தம் வேலையில் நிலைபெற்றுவிட்டதால், நேர்முகத் தகுதியை இழந்தவர்கள்.

அப்படிப்பட்டவர்கள் என் பேரில் அழுக்காறு கொள்வார்களோ, என்று முதலில் அஞ்சினேன்.

செல்வி நாயுடு தாமே தேர்ந்து எடுக்கப்பட்டதைப் போன்று மகிழ்ந்தார். 'சாக்லெட்' வாங்கிவரச் செய்து எல்லோருக்கும் வழங்கினார்.

திரு. ரெட்டியும் மகிழ்ந்தார்; ஆனால் காப்பிக்கான பாலில் இரண்டு சொட்டு பிரை மோர் சிந்துவதுபோல் சொல் இழுக்குப் பட்டார்.

''வேலு! இதற்குள் மகிழ்ச்சி கொள்ளாதே! வாய்க்கு எட்டியது கைக்கு எட்டாமற் போவதும் உண்டு'' என்று திரு. ரெட்டி சொன்னார்.

செல்வி நாயுடு மூத்தவர் என்ற முறையில் ரெட்டியாரைக் கடிந்து கொண்டார்.

அந்த அம்மையார், பிற்காலத்தில், பல பதவி உயர்வுகளைப் பெற்று இந்திய அரசில் சமூக நலத்துறையில் பெரும் பதவியில் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெற்று இருக்கிறார்.

அம்மையாரின் வெற்றியின் இரகசியம், அவரது 'நல்லதே நினைக்கும்' சிந்தனை என்றால் மிகையல்ல.

கட்டளைப்படி, பெரிய அரசு மருத்துவர் கேப்டன் வெங்கடாசலம் பிள்ளையிடம் சென்று உடல் நலச்சான்று இதழைப் பெற்றேன்.

மருத்துவர் கருணையின் அடிப்படையில் அதைக் கொடுக்கவில்லை.

''உன் உடல்நிலை மெய்யாகவே நன்றாக இருக்கிறது'' என்று சொல்லியபடியே, மிகுந்த மகிழ்ச்சியோடு மருத்துவச் சான்றிதழ் தந்தார்.

சான்றிதழை அனுப்பிவிட்டு, ஏறத்தாழ ஒரு திங்கள்போல் காத்திருக்க நேர்ந்தது; சலிப்புத் தட்டியது.

மாவட்டக் கல்வி அலுவலர் பதவியைப் பற்றி மறக்க முயன்றேன்.

அந்த நிலையில், ஒரு நாள் முற்பகல், சென்னை சூளைப்பகுதியில், ஒரு சிறுவர் தொடக்கப்பள்ளியை ஆண்டுத் தணிக்கை செய்து கொண்டிருந்தேன்.

திரு கிருஷ்ணமூர்த்தி அய்யர், அன்று மயிலாப்பூரில் ஒரு தொடக்கப் பள்ளியைத் தணிக்கை செய்து கொண்டிருந்தார். ஆய்வாளருக்கு வந்த அஞ்சல்கள் அந்தப் பள்ளிக்குக் கொண்டு போகப்பட்டன.

பள்ளித் தணிக்கையின்போதே பிரித்துப் பார்த்தார்.

என்னை மாவட்டக் கல்வி அலுவலராகத் தேர்ந்தெடுத்திருப்பதாக ஓர் அரசு ஆணை கூறிற்று. அது பொதுக்கல்வி இயக்குநர் வழியாக வந்திருந்தது.

கோவையில் பணி

அதை அனுப்பிய இயக்குநர், நான் நான்கு திங்கள் முன் பயிற்சிக்காக, கோவை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் போய்ச் சேரவேண்டும் என்று கட்டளை இட்டிருந்தார்.

இயக்குநர் அலுவலகத்தின் ஓர் அறையில் அலுவல் பார்த்த என்னிடம் எவரும் இதுபற்றி மூச்சு விடவில்லை.

குற்றம் மற்றவர்களுடையது அல்ல; உரியவர்களிடம் நாள்தோறும் சென்று, கால்கடுக்க நிற்காதது என் குற்றமே.

ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அய்யர், அரசு ஆணையை, அடுத்த நொடியே, ஆள் வழியாக, சூளைப் பள்ளிக்கு அனுப்பி, என்னிடம் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

அய்யர் என்னைப் பாராட்டி எழுதி அனுப்பி இருந்தார். அதோடு எனக்கு ஆலோசனையும் கூறியிருந்தார்.

''எதிர்காலம் பற்றி நமக்குத் தெரியாது. ஒருநாள் தாமதம்கூட இடையூறாகவோ, நன்மையாகவோ முடியலாம்.

''அடுத்த வண்டியேறி, கோவைக்குச் சென்று, புதிய பதவியில் சேர்வது நல்லது. எனவே, உங்களை விடுவிக்க ஆணை போட்டிருக்கிறேன்.

''உடனே, அலுவலகம் சென்று, அதற்குரிய நமூனாவில் பதவியை என்னிடம் ஒப்படைத்ததாகக் கையெழுத்துப் போட்டு விடுங்கள். பிறகு, நான் கையெழுத்திட்டு, மேலுக்கு அனுப்பிவிடுகிறேன்'' என்று எழுதியிருந்தார்.

வாழ்த்தினைப் பெற்றேன்

என் மகிழ்ச்சிக்கு அளவேது? அப்போதும் கடமை நினைவிற்கு வந்தது. நேரே, மயிலாப்பூர் சென்று அவருடைய வாழ்த்தினைப் பெற்றேன்.

சென்னை இளந்துணை ஆய்வாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்தேன். அடுத்த நாளே சென்னைப் பதவியை ஒப்படைத்தேன்.

அதற்குமுன், சென்னை மாவட்டக் கல்வி அலுவலரைக் கண்டு அவருக்கு வணக்கம் செலுத்தினேன். திரு. சச்சிதானந்தம் பிள்ளை வாழ்த்தினார்.

அடுத்து, பொதுக்கல்வி இயக்ககம் சென்றேன். அன்று இயக்குநரும் மூன்று துணை இயக்குநர்களும் ஊரில் அலுவலகத்தில் இருந்தனர்.

முதலில் திரு. முகமதைக் கண்டு வணங்கினேன்.

'பாராட்டு' என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி விடைகொடுத்தார்.

பின்னர் திரு. வி.ஆர். அரங்கநாத முதலியாரைக் கண்டேன்.

மகிழ்ச்சியைத் தெரிவித்தார்; முன்னரே தெரியுமென்றார்; உதவி தேவைப்படும் போதெல்லாம் எழுது என்றார்.

மூன்றாவதாக, திரு. சி.எல் லோபோவைக் கண்டு வணங்கினேன்.

''தணிக்கை, உன் முதற் பணி; அப்படி என்றால் விரைந்து குறைகாணக் கற்றுக் கொள்.

''எவ்வளவு நல்ல பள்ளிக்குச் சென்றாலும் எவ்வளவு கெட்டிக்காரத் தலைமை ஆசிரியரைத் தணிக்கை செய்ய நேர்ந்தாலும், இரண்டு மூன்று மணித்துளிகளில் ஏதாவது, குறை சொல்லவேண்டும். அப்படி யொன்றும் பளிச்சிடாவிட்டால் அதற்காகத் தயங்காதே!

''தலைமையாசிரியர் மேசையின் கீழே கையை வை, அநேகமாக, தூசி கையில் படும். படாவிட்டாலும் பரவாயில்லை. தூசியாக இருப்பதாகச் சொல்.

''உம் மேசையையே துப்புரவாக வைத்துக் கொள்ளாத நீர் பள்ளியை எப்படி நன்றாக வைத்திருக்கப் போகிறீர் என்று பொரிந்து தள்ளும்.

''அப்படிச் சில மணித்துளிகள் ஆர்ப்பரித்தால் போதும்; அப்புறம் எல்லோரும் அடங்கி ஒடுங்கிக் கிடப்பார்கள். எனவே, குறை காணக் கற்றுக் கொள்'' என்று சொல்லி அனுப்பினார்.

மெவரல் ஸ்டேதத்தின் பாராட்டும் அறிவுரையும்

கடைசியாகப் பொதுக்கல்வி இயக்குநர் சர் மெவரல் ஸ்டேதத்தைக் கண்டு, அவரது வாழ்த்தைக் கோரினேன்.

அவர் என்னைப் பாராட்டி வாழ்த்தினார். அறிவுரையும் கூறின
''உனக்கு நீண்ட அறிவுரை தேவை இல்லை; ஆனால் ஒன்று;

''உன் பதவிக்காலம் பல ஆண்டுகளுக்குத் தொடரும். அப்போது நல்லவர்கள், அல்லாதவர்கள், இரண்டுங் கெட்டான்கள் ஆகிய மூன்று வகையினரிடம் நீ வேலை வாங்க வேண்டியிருக்கும்.

''அச்சூழலில் பெரும்பாலான அலுவலர்கள் செய்கிற தவறு என்ன தெரியுமா?

''நல்லவர் அல்லாதவர்களையும், இரண்டுங்கெட்டான்களையும் மிரட்டி உருட்டி, வேலை செய்ய வைக்கும் முயற்சியில் முனைவதே ஆகும்.

''அத்தவறை நீ செய்யாதே. நல்லவர்கள் மேல் நாட்டம் செலுத்து; அவர்களைத் தட்டிக்கொடு; அவர்கள் முழுமையாக இயங்க உதவு; ஆற்றலின் வரம்பைத் தொடும் அளவு ஊக்கப்படுத்து. அத்தகைய இரண்டொருவர் செய்யும் நற்பணி, உன் அலுவலில் உனக்குத் தேவையான வெற்றியைக் குவிக்கும்.

''இதற்கிடையில், இரண்டுங்கெட்டான்களில் சிலராவது திருந்தி விடுவார்கள்; அரும்பாடுபட்டு உன் நம்பிக்கையைப் பெற முயல்வார்கள்.

அல்லாதவர்கள், கால வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்படுவார்கள். அவர்களைப் பொறுத்துக் கொண்டால் போதும். விழிப்பாக இருந்து அவர்கள் தீங்கு செய்யாதபடி மட்டும் கண்காணித்துக் கொண்டால் போதும்'' என்று இயக்குநர் கூறினார்.

அவரோ அன்னியர்; நம் மக்களோடு மக்களாக இணைந்து வளராதவர்.

அவர் பேச்சைக் கேட்டு நடப்பதா, அல்லது நம்மில் ஒருவராகிய, நம் மக்களின் நல்ல, தீய இயல்புகளை, நெளிவு சுளிவுகளை அறிந்திருக்க வேண்டிய, திரு. லோபா காட்டிய வழியைப் பின்பற்றி நடப்பதா?

இப்படிக் குழம்பிக் கொண்டிருந்த என்னிடம் இயக்குநர் ஓர் இரகசியச் செய்தியைச் சொன்னார்.

பொதுக்கல்வி இயக்குநர், புதியவனாகிய என்னிடம் காட்டிய நம்பிக்கை புல்லரித்தது.

முதல் பாகம் முடிந்தது

நினைவு அலைகள்

டாக்டர் நெ.து.சுந்தரவடிவேலு

சாந்தா பதிப்பகம்